ஸ்ரீ:
ஸ்ரீ கண்ணன் துணை

வில்லி பாரத வசனம்

அல்லது

மகா பாரத வசன சாங்கிரகம்

" கம்ப நாடர் " ஆசிரியர்

ஸ்ரீஜத், மோ. வே. கோவிந்தராஜய்யங்கார்

அவர்களால் வரையப்பட்டது.

பிரசுரம்
வாஸன் புஸ்தகசாலை
சென்னை
காபிரைட்] 1929 [விலை ரூபா 3

சென்னை
ஆனந்த விகடன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது
1929ஷு 2000 பிரதிகள்

17-1

விஷய சூசிகை

ஆதி பர்வம்

குருகுலச் சருக்கம்

சம்பவச் சருக்கம்

திரௌபதி மாலையிட்ட சருக்கம் பக்கம்.

இந்திரப்பிரத்த சருக்கம்

அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்

காண்டவ தகனச் சருக்கம்

சபாபர்வம்

இராஜசூய யாகச் சருக்கம் — பக்கம்.

சூதுபோர்ச் சருக்கம்

ஆரணிய பருவம்

விராடபருவம்

உத்தியோக பருவம்

துரோண பருவம்

பதினுன்காம் போர்ச் சருக்கம் பக்கம்.

பதினைந்தாம் போர்ச் சருக்கம்

கன்ன பருவம்

சல்லிய பருவம்.

பதினெட்டாம் போர்ச் சருக்கம்

ஸௌப்திக பருவம்



C V Morgan

ஸ்ரீ:

வில்லி பாரத வசனம்

அல்லது

மகா பாரத வசன சங்கிரகம்

விநாயகர் துதி.

"நீடாழி உலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வங்கூரெழுத் தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ."

தமிழ்த் தாய் வணக்கம்.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோர் என
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்."

பரமன் தோத்திரம்.

"ஆக்கு மாறய னாமுத லாக்கிய உலகம்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னாமவை வீந்தநாள் மீளப்
பூக்கு மாமுதல் எவனவன் பொன்னடி போற்றி."

நூன் முகம்.

மகா பாரதக் கதை யென்பது, பண்டை இந்தியாவிற் சிறந்திருந்த சந்திர வம்சத் தரசர்களில் உயர்ந்தோர் பலரைச் சிறப்பித்துச் சொல்வது. அவர்களிலும் பலர் விசேஷச்சிறப் படைந்திருக்கப், பாண்டவரையும் அவர்களது எதிரிகளான கௌரவர் நூற்றுவரையும், இக் கதை, மிக விளக்கமாகச்

சொல்வதனல், ஜன சமுதாயத்துக்கு நன்மை தீமைகளை யெடுத்துக் காட்டுவதும் நன்மை புரிந்தார் நலனடைந்ததையும் தீமை செய்தார் தீங்குற்றதையும் விளக்கிக் காட்டுவதும், அன்றியும் "பொறுத்தார் பூமியாள்வர் பொங்கினர் போயிறப்பர்" என்னும் பழமொழியை வற்புறுத்துவதும் இக்கதையின் முழு நோக்கங்களாகும்.

ஆதிபர்வம்

குருகுலச் சருக்கம்.

சந்திர தேவனை யாதியாக் கொண்ட குலத்திற் பரம்பரையாகப் பிறந்தோர் சந்திர வம்சத்தவரென அழைக்கப்படுகின்றனர்கள். சந்திரன் மகனாகிய புத பகவானுக்கு, மனுவின் புத்திரனாகிச் சாபத்தினாற் பெண்ணுருவம் பெற்றிருந்த இளை யென்பவளிடத்தில் தோன்றிய புரூரவன் என்னும் பேரரசன், இக்குலத்தினை விளக்கிப் புகழ் பூண்டான். அசுரரால் அபகரிக்கப் பெற்றுத் துணை காணாது மிக வருந்தியிருந்த ஊர்வசி யென்னும் தேவ மாதினை இப்புரூரவன் மீட்டுக் கொணர்ந்து, அவளுடன் இன்போடிருந்து அவள் வயிற்றில் ஆயு என்றொரு மன்னனை யளித்தான். வேள்வியிலும் கேள்வியிலும் சிறந்த ஆயு மன்னனுக்கு நகுஷன் என்னும் ஒரு மன்னவன் பிறந்து, புகழாலும் பலத்தாலும் இந்திர பதவியைப் பெற்றும், அகம்பாவத்தாலும் காமதாபத்தாலும் பாம்பாகச் சாபம் பெற்றுப் பூமியில் வீழ்ந்தான். இந் நகுஷன் மகன் யயாதி. இவனது இரண்டு மனைவிகளில், விடபர்வாவின் மகளாகிய சன்மிஷ்டை யென்னும் தீதுதீர் கற்பினள்

வயிற்றில் பூரு என்னும் மன்னவன் பிறந்து, தந்தை யயாதிக்குச் சாபத்தால் நேர்ந்த கிழப்பருவத்தைத் தான் வாங்கிக் கொண்டு தன் இளமைப் பருவத்தைத் தந்தைக்குக் கொடுத்துச் சிறப்பும் அரசும் பெற்றுயர்ந்தான்.

பின்னர், இக்குலத்தில் பரதனென்றொரு மன்னவன் பிறந்து பாரினிற் சிறந்துயர்ந்து விளங்கினான். இப்பரதனைப் பற்றியே இக்குலத்துக்குப் பரத குல மென்னும் பெயரும், இக்கண்டத்துக்குப் பரத கண்ட மென்னும் பெயரும் விளங்கின என்றும் சொல்வர். இம் மன்னவன் பரத சாஸ்திரத்திலும் இசை நூலிலும் சிறந்து விளங்கினான். இக்குலத்தினிற் பிறந்து அவனியாண்டளித்த ஹஸ்தி யென்பவன் பெயரினால் ஹஸ்தினாபுரமென்னும் நகரம் ஏற்படுத்தப்பெற்றது. இந்த, சந்திர வம்சத்தவரைப் பின்னர் கௌரவர் என்னும் பெயராலும் அழைத்தார்கள். அப் பெயர், இக்குலத்திற் பிறந்து சிறந்தவனாகிய குரு என்னும் மன்னவன் வம்சத்தார் என்பதைக் குறித்துளது.

சந்தனு சரிதம்.

இங்ஙனம் சந்திரபரம்பரை பரத வம்சம் குருகுலம் என்னும் சிறப்புகள் பெற்ற இந்த வம்சத்தில் சந்தனு என்னும் அரசன் பிறந்து உலகை யாண்டு வந்தான். இவன் ஒரு நாள் வேட்டை மார்க்கம் சென்று கங்கைக் கரையை யடைந்தான். கங்கையாற்றின் சிறப்பையும் வெள்ளத்தின் பரப்பையும் பார்த்துக் கொண்டிருந்த மன்னனுக்கு, ஆங்கிருந்தவளொரு மங்கைபால் மனம் பரவிற்று. அவள் பூமடந்தையோ, மலைமடந்தையோ, நாமகளோ, நதிமங்கையோ என ஐயமுற்றுப் பின் மானுடப் பெண்தான் என நிச்சயித்து அருகில் நெருங்

கிப் பேசினன். விதி வசத்தால், மங்கைக்கும் மன்னன் பால் மகிழ்ச்சியும் மயக்கமும் தோன்றின. மனம் இளகி, "மாமலரோன் சாப மிவ்வழிக் காட்டியது போலு" மென்று மன்னனுக்கு இசைந்து நின்றாள். ஆசை மீறி யணுகி நின்ற அரசனைப் பார்த்து, மங்கை கூறுவாள்:—"மன்னரே! பயந்து மெய் நடுங்கும்படியாக என்ன வென்ன நான் செய்வேனோ, அவற்றை யெல்லாம் பொறுத்துக் கொண்டு, காரணங்களை வினவாம லிருப்பீராயின், உம்முடன் கூடி வாழ்ந்திருப்பேன்; இது தவறி, யென்னை வெறுத்து மறுத்துக் காரணங் கேட்ட வன்றே, நானும்மை வெறுத்துப் பிரிந்திடுவேன்; இஃது எனது விரதம்; இதற்குக் கை தருவீரா?" என்றாள். மன்மத னால் தோல்வியுற்ற மன்னவனும், மங்கை சொல்லுக்கிசைந்து அவளை யுடன்படுத்தினன்.

மன்னனும் மங்கையும் பலபகல் மருவிவாழ்ந்தனர். மங்கை யொருமைந்தனைப் பெற்றனளென்று மகிழ்ந்த காலையில், மைந்தனை யவள் நீரி லெறிந்து மறைத்து விட்டாள். கண்டு உளம் நடுங்கிய மன்னவன் முன் சொன்னவாசகங்களை நினைத்து ஒன்றும் செய்ய இயலாமல் மனம் புழுங்கினனாயினும், மங்கைக்குத் தோன்றாத வண்ணம் அடக்கிக்கொண்டு, முன் போலவே மகிழ்ந்து மருவியிருந்தான். பின்னரும், சில ஆண்டுகளில், ஒன்றொன்றாக ஆறு குழந்தைகளைப் பெற்று வளர்த்துப் புனலில்தள்ளி மறைத்து விட்டாள். மன்னன் ஆறாத்துயரங் கொண்டும் ஆணை கெடாதவண்ணம் அவளுடன் வாழ்ந்து வந்தான்.

'எட்டாவது மைந்தனாக ஒரு குழந்தையை யீன்றெடுத்தாள் தன் மனைவி' என்று கேட்டவுடனே மன்னவன் பதைத்துச் சென்று, அக்குழந்தையை அவள் கைப்படாவகை

யெடுத்துக் கொண்டு, அன்புடன் கூறுவானாயினான்: "இக் குழந்தையையும் கொன்றுவிடாமல் என் வம்சத்தை நிலை நிறுத்த வேண்டுகிறேன்; நீ என்னை வெறுத்தாலும் இக் குழந்தையை நான் விரும்புகிறேன்; மன்னன் மறுத்தான் என்று மனங் கொள்ளாமல் மனம்பொறுத்துக் கொள்" என்று வேண்டிக் கொண்டான். கங்கையாகிய அந் நங்கை கூறுவாள்:—"பித்துக் கொண்ட பார்த்திப! நன்று! நன்று!! எழு குழந்தைகளைக் கொன்றபோது என் செய்தாய்? இன்று நின்று இரங்குகின்றாய்! நீ மகா கொடியவன்!! எழுவரைக் கொன்ற மாபாவியாகி விளங்கும் நீ இன்று புண்ணியவானாகி விட்டாய் போலும்!!! விடு குழந்தையை" யென்றாள். அறிவு கொண்ட மன்னவன், "நீ யார்? பாலரைப் புனலிற் போட்ட காரணம் யாது? இவற்றை விவரமாகச் சொல்" என்று மங்கையை வினவினான்.

கங்கை வரலாறு கூறுதல்.

"கங்காதேவி ஒரு காலத்தில், தாமரைவாஸனாகிய நான்முகன் ஸபைக்குப் போயிருந்தாள். அங்கு வந்திருந்த தேவர்களை யவள் வணங்கும் போது, வாயுபகவானது செயலால் பெருங் காற்றடிக்கவே, கங்கையின் கலை யொதுங்கி யழகிய அவயவம்தோன்றிற்று. சபையோர் வெட்கிக்கண்புதைத்தார்கள். அச்சமயம்வருணதேவன்மாத்திரம் கண்ணைமூடிக்கொள்ளாமல் இந்நல்லுதவி புரிந்த வாயுபகவானை முழுமனதுடன் வாழ்த்தி நின்றான். இவையனைத்தையும் அறிந்த பிரமன்காமக் களி கொண்ட வருணனை நோக்கிக் கோபித்து "நீ பூமியிற் பிறந்திடுவாய்" எனச் சபித்தனர். மற்றும் கங்கையையும் பார்த்து "நீ இவ்வருணதேவனது நினைவின்படியே புவியிடை மடந்தையாகத் தோன்றி அவனை மணந்திருந்து மீள்க"

என்று கூறிவிடுத்தனர். பாரிலும் தனக்கொரு பதவியிருப்ப தால் வேறு செய்தலறியாத கங்கையும்-என் செய்வாள்?-புவி யிடை யிறங்கி வந்தாள். அவள் வரும்போது எதிரே ஒளி மழுங்கினவர்களாகி அஷ்டவசுக்களும் தோன்றி நின்றூர்கள். நின்றவர்கள் கங்கையைப்பார்த்து, "எங்கள் மா நதியே! ஏன் இங்கு இழிந்து வருகிறுய்!" என்று கேட்க, அவர்கட்குக் கங் கை அயனிட்ட சாபச் செய்தியைக் கூறினுள். தாங்கள் ஒளி யிழந்த காரணத்தை யந்த அஷ்டவசுதேவதைகளும் கூறலுற் றனர்: "எங்கள் அன்னையாகிய கங்கையே! எங்களில் ஒருவ ஞன இவன் தன் மனைவி சொல்லுக்கிணங்கித் தகாத தொன் றைச் செய்திட எங்கள் துணையை நாடினுன். விதி வசத்தால் நாங்கள் இசைந்தோம். நாங்கள் எட்டுப் பேரும் கள்வராக வேடம் புனைந்து, தேவர் வணங்கும் திருபாதத்தையுடைய வசி ஷ்டன் மனையினில் வாழ்ந்துள்ள பசுவினைக் கவர்ந்துகொண்டு வெளியே வரும்போது, முனிவர் கூட்டங்களால் உணர்ந்து கொண்ட வசிஷ்டர், குறுக்கிட்டுப் பசுவை மீட்டுக் கொண்டு, "நீர் உம்பதமிழந்து மண்ணுளோர் சம் பதம் பெறுக" என்று சபிக்கவே, நாங்கள் நடுங்கி, "ஐயோ என் செய்வோம்! மறுபடியும் எம்பதத்தை யெப்போது பெறமுடியும்? இவனு க்கு உடம்பட்டு நிரபராதிகளாகிய நாங்களும் இக்கேட்டை யடைந்தோமே; சிறிது இரக்கம் காட்டி எமக்கு மறுசாபம் கொடுத்திடுங்கள்" என்று வேண்டி நின்றேம். வசிஷ்டர் கோபம்மாறி, எங்களைப்பார்த்து, "உடந்தையாயிருந்த நீங்கள் எழுவரும் மானிடப் புன்பிறவி யெடுத்து மீளுதிர்; இவனே செய்த குற்றத்துக்காகப் பூமியிற்பிறந்தும் இன்பமற்று அநேக நாள் இருந்து வாழட்டும்" என்று கூறிப் போந்தனர்; சுவர்க்க வாஸமும் இன்பமும் மேன்மையும் நாங்கள் எண்மரும் இழந் துளோம்; என் செய்வோம்?" என்றனர். அப்போது கங்கை

"நீங்கள் அஞ்சவேண்டாம், நான், புத்திரராக உங்களைப் பெற்று, ஏழுபேரை மாத்திரம் பூமியில் செயல்புரிவதன் முன்னம் பிறப்பை நீக்குகின்றேன்; இவ்வொருவர் முனிவ ரிட்ட சாபப்படியே புவியிடைப் பலநாள் இருக்கட்டும்" என்று சொன்னாள். அவ்வசுக்களே இவ்வெட்டுப் புதல்வர் களும் ஆவர்; வருணனும் கங்கையும் யாவரென்பதும் நீர் அறிவீர் அன்றோ?" என்று அக்கங்கையாகிய மங்கை கூறினாள்.

"அறிவில்லாதிருந்த எங்களது பிறப்பின் வரலாற்றை யுணர்த்திய கங்கையே! அவ்வெழுவருடன் இறவாது நின்ற இக்குழந்தையை யென் செய்வது?" என்று கேட்ட அரச னைப் பார்த்து, கங்கை, "இக்குலத்தில் இவனலாது உயர்ந் தவர் இல்லை யென்னும் புகழுடன் இவன் இருப்பான்; ஆனால் வசிஷ்டரது சாபத்தால், இவன் சிற்றின்ப சுகந்தரும் இல்ல றம் பெறாது வாழ்வான்" என்றனள்; "அப்படியாயின், இக் குலம் விளங்கும்படியாக இவனுடன் இன்னொரு மைந்தனைப் பெற்றளித்து முடிகொடுத்து நாமிருவரும் பொன்னகர் போம் வரை உதவி புரிந்திடுவாய்" என்று சந்தனு கங்கையை மன் றாடினான். "அது முடியாதது; நீர் சென்று மணிமுடி தரித்துப் புவியாண்டுச் சிலநாளிருந்து வரலாம்; இப்புதல்வனை யான் அழைத்துப்போய்த் தக்க பருவத்தில் உம்மிடம் தந்து செல்கிறே" னென்று சொல்லிப் புதல்வனுடன் ஆற்றில் மறைந்து போயினாள்.

காங்கேயன் என்னும் பீஷ்மன் சபதம்.

குழந்தையுடன் கங்கையைப் பிரிந்த மன்னவன், நாடடைந்து அரண்மனையில் தன்னில்லத்தில் கங்கை யுரு

வத்தை யழகுற வெழுதி முன்வைத்துப் பார்த்துப் பார்த்துக் களி கொள்வான்; அவளது வாக்கியங்களை நினைத்து நினைத்து உள்ளம் குளிர்வான்; குழந்தையுடன் மறைந்ததைக் குறித்து மாழ்கி நிற்பான்; இங்ஙனம் கங்கையினது பிரிவாற்றுமல் பலவாறும் வசமிழந்திருந்தான். விவாக காலத்தில் அன்புடன் மணந்த மங்கையர் பலரையும் கூட மன்னவன் நோக்குவதில்லை; "கங்கையைப் பின்னும் எப்படிப் பெறுவது?" என்று ஏங்கி நிற்பான்.

ஒரு தினத்தில் அமைச்சரும் போர்வீரரும் புடைசூழ வேட்டையாட வனஞ்சென்ற மன்னவன், சிறுபோழ்து வேட்டையாடிக் களைத்துக் கங்கையையும் குழந்தையையும் நினைத்து மனங்கசிந்து, "மற்றோர்கால் தரிசனம் தருவேனென் றேகினவள், இன்று நேர்வளோ?" என்னும் எண்ணத்துடன் கங்கையாற்றங்கரையை யடைந்து நின்றான். முன்னர்த்தா னவளை யெதிர்கண்ட சோலையையும் தடத்தையும் அருகில் அடித்துவரும் தென்றலையும் தாமரை முதலிய மலர்களையும்கண்டு அவளது அவயவங்களின் அழகினை யவற்றினிடம் கண்டு வருந்தி யிருந்தான். "இப்பேரழகுடையவள்; இவ்வின்பந் தந்தவள்; இப்படிப் பிரிந்து போயினளே" என்று வருந்தி யாற்றின் பெருக்கிற் கண்வைத்து நிற்கும்போது, வில்லும் அம்புங் கொண்டு திரண்ட தோளொடும் விரிந்த மார்பொடும் ஒரு வீரன் மன்னனெதிர் தோன்றி நின்றான்.

"இவனென்ன? சிவபெருமானே! முருகப்பிரானே! மன்மதன் தானே! இந்திர குமாரனே! இவனில் உயர்ந்தவர் இல்லெனும்படி நின்ற இக் குமாரன் யாரோ?" என அவ் வீரனைப் பார்த்துப் பார்த்து மயங்கி நின்றான் மன்னவன். கண் மயக்கத்தாலும் மனமயக்கத்தாலும் தன்னழகு அவ்வீ

னுருவத்திலிருப்பதை யுணரவே இல்லை. அவனைத் தந்தை தான் என்றறியாத வீரன், தன்னைக் கருத்துடன் நோக்கிய அம் மன்னன் மேற் கோபங்கொண்டு, வில்லை வளைத்து நாணேற்றி மோகன பாணமொன்றைத் தொடுத்து அவன் மார்புற எவி, இந்திர தனுவுடன் இந்திரன் மறைந்ததுபோல அலையுடன் பொருந்திய சலத்தினில் மறைந்து போய் விட்டான். மார்புறப் பொருந்திய கணையினால் மன்னன் மாழ்கி வீழ்ந்ததையும் மகன் மறைந்து போயதையும் கண்ட கங்கை மனமுருகி யழகுடைப் பெண் வடிவு கொண்டு மைந்தனுடன் நதியினில் தோன்றி மலர்க்கொடிபோல் ஒசிந்தோடிக் கனிவா யார மன்னனைக் கூவி யழைத்து, மலர்க்கையாற் பிடித்து மார்புற வணைத்துக் கொண்டு, களைப்பினை நீக்கித் தந்தையை வணங்கிய மைந்தனைக் காட்டிக் கையினிற் கொடுத்து இவை யிவை சொன்னாள்.

“அரசரே! கேளும்; இவன் உம் மைந்தனே; தேவவிரதன் என்பது இவன் பெயர். கலைகள் யாவும் கற்றுணர்ந்துள்ள வசிஷ்டரது அருளால் வழக்கமும் ஒழுக்கமும் நன்கு பெற்றிருக்கின்றான். பரசுராமன் பொன்னடி வணங்கி வில்வித்தை வாள்வித்தை முதலிய வித்தைகள் பயின்றுளான். புத்திரரைப் பெற்றவரில் ஒருவரும் பெறாத மகிழ்ச்சியை நீரே பெற்றிருக்கின்றீர். இக்குழந்தையை யேற்றுக்கொண்டு புவியினில் யாவரும் பெறாத புகழும் வாழ்வும் பெற்றுப் பொன்னென வாழ்ந்திடுவீர்” என்று சொல்லிக்கொண்டே, ஒரு சொல்லுக் கோரடியாகப் பெயர்ந்து மின்னொளி மறைவதுபோல் நீரிடை மறைந்து போயினாள்.

மனைவியைக் கண்டு மீளவும் பிரிந்த அவ்வருத்தம் தனயனைக் கண்ட தன்மையால் நீங்கிப் போகவே, மன்னன்

மிகக் களித்தவனாகி, மைந்தனை வாரியணைத்துத் தேரின் மீதேற்றிப் பட்டணத்து ஜனங்கள் எதிர்வந்து நல்வரவு கொண்டாட அரண்மனை போய்ப் புகுந்தான். வசிஷ்டரிடமும் பரசுராமனிடமும், ஞானக் கலைகளும் போர்க்கலைகளும் கற்றுத்தேர்ந்த காங்கேயனென்னும் மைந்தனுந் தானுமாகப் பகைவரும் வணங்கித் தொழுது போற்றும்படியாகப் பூமியைப் பரிபாலித்து வந்தனன் சந்தனுமன்னவன்.

ஒருபோது, இளவரசனிடம் அரசாட்சியை யொப்பித்துக் காட்டிடை வேட்டையாடும் பொருட்டு வந்த சந்தனு மன்னன், யமுனை யென்னும் காளிந்தி நதியின் கரைக்கு வந்து சேர்ந்தனன். அக்கரையின் பக்கத்தி லிருக்கும்போது, ஒருவிதமான திவ்ய பரிமளம் வீசுதலை யுணர்ந்து, அஃது என்னவென்று அறிவதற்கெண்ணி, அம்மணம் வீசும் பக்கத்தை நாடிச்சென்றான். ஆங்குச் செம்படவர்தலைவனால் வளர்க்கப்பெற்று, அழகும் பருவமும் விநயமும் சிறந்துள்ளவளான பரிமளகந்தியைக் கண்டு மனங்கசிந்து நின்றான். அப்பெண்ணைப் பார்த்து, மன்னவன் ''நீ யார் மகள்? இங்கு ஏன் நிற்கின்றனை?'' என்று கேட்கவே, அவள் கைகுவித்து வணங்கி நின்று, ''நான் மாலுமிமகள்; தந்தையின் கட்டளையால் இங்கு இருக்கிறேன்; விரும்பினால் படகிலேற்றி அப்பக்கம் கொண்டு விடுவேன்'' என்றனள்.

அவளது மேனி அழகிலும் பேச்சின் விநயத்திலும் பரிமளத்திலும் மயங்கிய மன்னன், உள்ளம் உருகி அப்பெண்ணைப் பெற்றவன்பா லணுகி நின்று, தன் தேர்ப்பாகனைக் குறிப்பினால்நோக்கினான். அரசனதுஉள்ளக்குறிப்பினை யுணர்ந்துகொண்ட பாகன், பெண்ணைப்பெற்ற பரதவர்பதியைத்

தனியழைத்துச் சென்று, "உன்மகளை மன்னவன் மணம் செய விரும்புகின்றான்; இது நின் பெருந்தவமோ! பெண் செய் தவமோ! நின்குலம் செய்தவமோ; ஆகலின், மறுக்காமல் பெண்ணைக் கொடுத்து மன்னவன் அருளினைப் பெற்றுக் கொள்" என்றான். "பூருவின் குலத்திற் பிறந்த கோமகன், என் புன்குல மகளைப் பொருந்துதல் எவ்வாறு? ஆயினும் அரசனது ஆணையை மறுக்க அஞ்சுகின்றேன்; எனினும், அரசனது ஆட்சியைக் கைக்கொண்டு உலக மாளுதற்குக் கங்கைமகன் தேவவிரத னொருவனிருக்கின்றானே. என் மகளை யரசன் மணந்து கொண்டால், அவள் வயிற்றில் பிறக்கும் குமாரன் கதி யென்னவாகும்? இக் கேள்விக்குத் தக்கபடி மன்னவன் இசைந்தால், பெண்ணை நான் மன்னனுக்குக் கொடுப்பேன்" என்று மாலுமி சொன்னான். இக் கொடுஞ் சொல்லை மன்னவன் கேட்டு உளம் நடுங்கி, "ஆஹா! மைந்தனுக்குள்ள சாபம் பலித்திடுமோ?" என்று பயந்தவனாகித் தேரின் மீதேறி நகர்போய்ச் சேர்ந்தான்.

காளிந்தி மங்கையாளிடம் வைத்த காதல் முற்றுப்பெறாததினால், மன்னவன் மெலிந்துவருதலைக் குறிப்பினால் மைந்தன் தேவவிரதன் அறிந்து கொண்டு, அதன் உண்மையைச் சாரதியால் தெரிந்தவனாகிக் கடற்புறத்தரசனான அந்த மாலுமியிடம் சென்று, "நீ யெனக்குப் பாட்டன்; எனக்குத்தாய் கங்கையல்லள்; நின்மகளே; இன்றுஉன்மகளை என்தந்தைக்கு மணம் செய்து கொடுப்பின் நீ வேண்டுவது யாது? இந்தப் பூவுலகாட்சியை நான் விரும்பவில்லை; உன் மகள்வயின்பிறக்கும் என் தம்பிகளே யாளட்டும்; மகளை மன்னனுக்கு மணஞ் செய்து கொடுத்தருள்" என்று சொல்லி, யாவரையும் தேவரையும் பார்த்து,

"விரதமுற்றியவா றனைவருங் கேண்மின்
மெய்யுயிர் வீடுமன் றளவும்
சாதமுற்றிய மெய்த்தாதுவும் மூலத்
தழலுடன் மீதெழுந் தகைத்தே
இரதமுற்றிய சொன்மாசப் பெருந்தவருக்
கில்லையென் றியம்புநற் கதியும்
சுரதமுற்றிய வென்றந்தை தன் பொருட்டால்
பெறுவலென் றின்னதுஞ் சொன்னான்."

"தேவர் அறிய மூவர் அறிய யாவரும் அறிய, நான், எனது தந்தையின் விவாகத்தின் பொருட்டு, என் விவாகத்தை வெறுத்துளேன்" என்று பீஷ்மம் கூறிநின்றான்.

இப்படிப் பெருந்தியாகியாகிப் பீஷ்மங்கூறிநின்ற மன்னன் மைந்தனைக் கண்ட வேந்தரும் முனிவரும் பாலரும் பாவையருமே யன்றித் தேவரும் வியந்து பூமழைபொழிந்து, பீஷ்மன் என்னும் சிறப்புப் பெயரும் அளித்து வாழ்த்தினார்கள்.

தாஸபூபதியும் தன்மகளை மணக்கோலத்துடன் அழைத்துக் கொண்டு, முனிவரும் பந்துக்களும் சூழ மன்னனிருப்பிடம் வந்து, மணமகளை மன்னவனிடம் நிறுத்தி வணங்கி நின்றான். பீஷ்மனும் தந்தையை யடியுற வணங்கிய போது, சந்தனு, மகனை யெடுத்தணைத்து மார்புறத்தழுவி உச்சி மோந்து நின்று, "முன் ஒரு காலத்தில் தன் தந்தையாகிய யயாதி மன்னனுக்குத் தனது பேரிளமையைக் கொடுத்துப் புகழெய்திய நங்குல மன்னவனும் உனக்கு ஸமானமாக மாட்டான்; மக்கள் தந்தையர்க்குதவும் உதவியைக் காட்டிலும் நூறு மடங்கு எனக்கு நீ உதவியிருக்கின்றாய்; மைந்தர்க்குத் தந்தைகள் செய்யும் உதவியிற் சிறிதும் உனக்குநான்

உதவத்தவம் புரியவில்லை; எனினும், உனக்கொருவரம் கொடுக்கின்றேன்; இதனைப் பெற்றுக் கொள்; அதாவது, நீ உன் மனதினால் துறக்கம் வேண்டும் என்று எண்ணினாலல்லாது, உன் உயிர்மேல் முந்துறக் காலன் வந்தணுகான்'' என்று முடிவிலா ஒருவரம் அளித்துப் போற்றினான். யாவரும் மகிழ்ந்து மன்னனையும் மைந்தனையும் வாழ்த்தினர்.

பரிமளகந்தி வரலாறு.

மகளை மன்னன்பால் நிறுத்தி வணங்கிநின்ற பரதவர் குலத்தலைவன், மன்னனைப் பார்த்து, "எம்பெருமான் கேட்டருள்க! உமக்கே இசைந்த தவம் புரிந்த இப்பெண்ணை இலக்குமி யென்பதல்லாமல் வலைஞர் மகளெனக் கருதவேண்டாம்; விவரம் சொல்கிறேன்: வசுவென்றுபேருடைய சேதிகுலத்து மன்னவன், ஒருகால், இந்திர னளித்த விமானமீதேறி விசைந்து, ஆகாய வீதியிற் போய்க்கொண் டிருக்கும்போது, தன் மனைவியை நினைத்து மையல் மிகக்கொண்டனன்; உடல் கெழுமி நேசமோடு இருதயமுருகு மக்கணத்தினில், நினைவிலாதுவீழ்ந்த அவனது வீரியம் காளிந்திநதியிடைச்சேர்ந்தது; அந்நதியினில், ஒரு முனிவரது சாபத்தினால் ஒரு தெய்வப் பெண் மீனாகப் பிறந்து வருந்திக்கொண் டிருந்தாள்; அம்மீனுருவப் பெண், நீரிடைவந்த அந்த வீரியத்தை இரையென விழுங்கினாள்; அவள் வயிற்றில் அது கருக்கொண்டு முதிர்ந்து வருங்காலத்தில், வலைஞர் அம்மீனினை வலையினிற் பிடித்து அரிந்த வேளையில் அம்மீன் வயிற்றில், ஒரு பாலகனும் இப்பெண்ணு மிருந்தார்கள்; வசுராசனிடம் இவ்விருவரையும் காட்டி நிற்கவே, அம்மன்னன், மீனவன் எனப் பெயர் கொடுத்து மைந்தனை மாத்திரம் ஏற்றுக்கொண்டு, இப்பெண் மகவை என்னிடமே திரும்பக் கொடுத்துவிட்

டான்; நானும் இன்றளவும் இவளை யென்மகளெனவே வளர்த்து வந்தேன்; என்ருலும், மன்னர்குலத்து மகளாத லின், தனது இயல்புக்கேற்ற மன்னவர் குலத்தையே மீண் டும் போயடைந்தாள்'' என்று அவள் குலமுறையை யாரும் அறியச் சொல்லினன். மன்னனும் அவளை மாநிலம் புகழ மணவினை செய்து ஏற்றுக் கொண்டனன். சந்தனு வருணனு தலால், முன்னம் கங்கையாள் வந்து கலந்தனள்; பின்னர்க் காளிந்தியாள் வந்து கலந்தனள்; எனும்படி மங்கையும் அவ னுடன் மகிழ்ந்து பலநாள் வாழ்ந்தனள். பரிமளகந்திக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். சித்திராங்கதன் விசித்திர வீரியன் என்று அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அழகும் வயதும் வளரக் கல்வியிலும் வளர்ந்து தேறினுர்கள்; சந்தனு வும் வயதினுல் மெலிந்து மெய்ம்மறைந்து வான்எய்தினன். பூவுலகாட்சியைத் தம்பியர்க்களித்து, பீஷ்மன் அரசு செலுத்தி வந்தான்.

மைந்தர்கதியும் மணவினையும்.

சித்திராங்கதனும் விசித்திரவீரியனும் தமையன் வீடு மனது பலத்தினுல் வாழ்ந்து வருங்காலையில், "எங்கள் நாமத் தை இம் மானுடன் தரிப்பதா?" வெனுங் கோபத்தினுல், ஒரு கந்தர்வன், இரவினில் வந்து சித்திராங்கதனைக் கொன்று போயினுன். முடி சூடிய மைந்தன் இறந்துபட்டானெனத் தாய் மயங்கியதால், காங்கேயன் இளையவனுக்கு முடி சூட் டிச் சிறப்புச் செய்தான். இளையவனும் வீடுமனது வாய்மை யையே துணையாகக்கொண்டு பூபதியாயினுன்.

அக்காலத்துக், காசி மன்னனுக்குக் கன்னியர் மூவர் மணப் பருவ மடைந்திருந்தனராதலால், "தேசில் மிக்க மன்னவர் சேரலாம்'' என்று சுயம்வர ஓலை விடுத்தான்.

வண்டுகள் வந்து மொய்த்துக் கொள்வதுபோல, மங்கையர் மூவரையும் மணக்க மன்னர் பலர் வந்து கூடினார்கள். "பெண்களால் வரிக்கப்பெற்ற மன்னவர்களை வலிகெடுத்து, அப்பெண்களையென் தம்பிக்குச் சேர்த்துவே" னென்று, வில்லொடும் தன் இளைய வேந்தொடும் வீடுமனும் காசிநகர் வந்து சேர்ந்தான். "பலத்திலும் பணத்திலும் சிறந்த பீஷ்மன் வந்து விட்டான்; இனி நமக்கேது?" என்று மன்னவர் பயந்தனராயினும், சுயம்வர மண்டபத்து வந்து கூடாமலிருக்கவில்லை. மன்னவர் யாவரும் குழுமியிருக்கும் சுயம்வர மண்டபத்தில், மன்னர் தொல்குல மரபுப்படியே பணமங்கையர் மூவரும் வந்து தோன்றினார்கள். கையில் மாலையைக்கொண்டு அம் மங்கையர் மூவரும் சுயம்வர மண்டபத்துக்கு வந்தும், வீடுமனது வலிமையைக் கண்டு கலங்கி, யின்னது செய்வதென்று தோன்றாமல் மயங்கி நின்றனர். மற்றை வேந்தர் யாவரும் பார்த்து நிற்கப் பீஷ்மன், மங்கையர் மூவரையும் தனது தேரிலேற்றிச் சேனையும் தானும் இளவலோடுபுறப்படும்போது, ஒருங்கு சேர்ந்து எதிர்த்த மன்னரைப் புறங்காட்டி யோடும்படி யடித்துத் தன்னகரம் சேர்ந்தான்.

அம்பா, அம்பிகை, அம்பாலிகையென்னும் பெயருடைய அப் பெண்மக்கள் மூவரில், அம்பா யென்பவள், "சமரின் முந்திய சாலுவன்மேல் என் மணம் பற்றியுள்ள" தென்று சொல்ல, "வீரராகிய எமக்கு, மற்றொருவனைப் பற்றிய மங்கையைக் கொள்வது இயற்கையல்ல" வென்று சொல்லி, அம்பையைச் சாலுவன்பாற் போக்கி, மற்றிருவரையும் இளவலாகிய விசித்திரவீரியனுக்கு நகர்சிறக்க மணஞ் செய்வித்தான். சாலுவனை நோக்கிச் சென்ற அம்பை, அவனை யெய்தித் தன் கருத்தினை வெளியிடலும், அம்மன்னவன், "பகைவர் கவர்ந்த பாவையை மெய் தொடல் எமக்குரிய தன்று"

என மறுத்திட்டான். மறுபடியும் வீடுமனிடமே வந்து மீளவும் மணம் வேண்டி நின்றனள். பின்னும் வீடுமன் அவளை மறுத்துத் தள்ளி விட்டான்.

அம்பையின் கதி.

என்ன செய்வாள் அம்பை? இருபக்கமும் வெறுக்கப்பட்டு, ஒரு துணையும் காணப்பெறாதவளாகிக் காசி சென்று தந்தை பாதத்தில் வீழ்ந்து நொந்து கதறினாள். காசி மன்னவன், மகளுக்குற்ற வருத்தத்தை நினைத்து மனம் வருந்தி, விநயத்துடன் மற்றொருமுறை வீடுமனிடம் தூதனுப்பினான். மன்மதனை வென்று தவம் புரியும் வீடுமன், சிறிதும் அச்சொல்லை மனத்தில் வாங்கிக் கொள்ளாமல், மூன்றாம் முறையும் மறுத்து அனுப்பி விட்டான். பின்னர்த் தந்தையாகிய காசிபன், ஒரு யோசனை செய்து, தன் மகள் அம்பைக்கு ஈது உரைக்கலுற்றான்: “மண்டலாதிபர் வார்த்தைகளை மறுத்து விட்டாலும், குரு வார்த்தையை ஒருகாலும் பீஷ்மன் மறுக்கமாட்டானாகையால், நீ, பரசுராமரது பாதாரவிந்தங்களைப் பிடித்துக்கொண்டு முறையிட்டுக் கொள்” என்று சொல்லிச், சேனையுடன் மகளையும் பரசுராமன் பால் அனுப்பினான்.

“காசிராசன் மகளாம் ஒரு பெண் காணவந்திருக்கிறாள்” என்று காவலர் உரைக்கக் கேட்ட மழுவாளவனாகிய பரசுராமன், அப் பெண்ணை அழைத்து வரச் செய்து, “என்ன காரியம்?” என்று கேட்டனன். முனிவரை முறைப்படி வணங்கி நின்ற மங்கை, வீடுமன் மறுத்த செய்தியையும் பெண்ணாகப்பிறந்த தன் கதியையும்சொல்லி, “எப்படியேனும் வீடுமனுக்கு என்னை மணம்செய்து வைத்தல் வேண்டு”

மென்று மன்றாடினாள். மழுவால் அநேக குல மன்னவரை யழித்த பரசுராமன், அம் மகளுடன் தேரின்மீதேறி அத் தினாபுரி சேர்ந்தார். தனக்கு வில் வித்தை கற்றுக்கொடுத்த ஆசிரியர் வந்திருக்கின்றாரென மகிழ்ந்து, அவரைத் தன் தேரின்மீதேற்றி ஊர்வலம் செயச் சிறப்புச்செய்து, "நீங்கள் இவண் வந்த வாறென்ன" வென்று வினவலும், "இதோ! இப் பெண்!! அம்பை! நின்னை மன்றல் பெற உரியவள்; இவளை மனைவியாக ஏற்றுக்கொள்" என்று உவகையுடன் ஆசிரியர் சொன்னபோது, "தனது தந்தையின் பொருட்டுத் தான் கூறிய சபதத்தையும், அதில் தான் தவறாதிருக்கும் தனது கடமையையும் சொல்லி, "இக்காரியம் அடாதது தொன்று; இதனை நான் செய மனம் ஒருப்படேன்? ஈதொன்றொழிய என் உயிர் வேண்டு மென்னினும் இப்போதே கொடுக்கிறேன்" என்று விநயத்துடன் சொல்லி விட்டான்.

வீடுமன் மறுத்துச் சொல்லிடலும், வீரியன் புயங்கள் ஆயிரத்தையும் அறுத்தவனாகிய பரசுராமன் கோபம் மிகக் கொண்டு, வில்லை வளைத்துப் போர் செய்யத் தொடங்கினான். ஆசிரியனது கோபத்தைக் கண்டு பயந்து வீடுமன், அவன் பொன்னடியில் வீழ்ந்து முறையிடவும் கேளாமல், பரசுராமன் சினம்மீறிப் போர்க்கு ஆரம்பித்தலும், "விரதத்தில் வழுவி நான் நரக மடைதலைக் காட்டிலும், சத்தியத்துக்காகப் போரிற் புகுந்து மடிந்து வீரசொர்க்கம் அடைதலே மேல்" எனக் கருதித் தானும் தன் ஆசிரியனுடன் போர் செய்வான் எழுந்து நின்று வில்லினை நாணேற்றி யம்புகளைப் பொழிந்தான். இரண்டு நாட்கள் இடை விடாமல் போர் புரியு மளவையில், பரசுராமன் வலிகுன்றி மடங்கிப் போய்த் தனது ஊர் புகுந்தனன். பல்வேறு அரசர்களும் போற்ற நதி மைந்தனாகிய பீஷ்மனும் தன்நகர் சேர்ந்தான். காசிபன் மகள்

கதியற்றுத் திரும்பிப்போய்த் தன்தந்தை சொற்படியே வன மடைந்து மாதவந் தொடங்கினள். அருந்தவத்தின் பயனாக ஒரு இயக்கிதன் அருளைப் பெற்றுப் பெண்ணுருவ மகற்றி போரிற் சிறந்த யாகசேனன் என்னும் மன்னனிடத்தில் சிகண்டி யெனும் ஆணுருவத்துடன் தோன்றி வளர்ந்து கொண்டிருக்கிறாள். விசித்திர வீரியன் இருவர் மங்கைய ருடன், பன்னெடுநாள் இல்லறம் புரிந்து அரசாண்டிருந்து, நோய்க்கரசெனும் பெருநோயால் காலன் வாய்ப்பட்டு நீங்கி னான்.

சம்பவச் சருக்கம்.

அரிய கங்குலின் அன்னைதன் வடிவுகொண் டலகை யாகிய நங்கை
பரிவு பொங்க வந்தெடுத் தணைத்துவந் துளம்பரிந் துடன்பா ராட்ட
உருகு மாமுலைப் பாலுட னவளுயி ருண்டமு முருகார் மெய்
கரிய கோவலன் செய்யதாள் மலர்களென் கருத்தை விட்ட கலாவே.

இறந்துபோன விசித்திர வீரியனுக்குச் செய்யவேண்டிய கிரியைகள் யாவும் செய்து முடித்தபின்னர், இந்த சந்திரவம் சம் இதனோடு முடிந்து போவதோ என்று பீஷ்மன் மயங்கி நின்று வருந்தி யிருக்கும்போது, அன்னையாகிய பரிமளகந்தி சொல்லுற்றாள். "மைந்த! காங்கேய!! கேட்பாய்!!! மகன் விசித்திரவீரியன் இறந்த பின்னர், நமது சந்திரகுலம், வம்ச விருத்தியில்லாமல் அழிந்து போகும் நிலைமையிலிருக்கின்றது. இக்குலத்தை இப்படி பார்த்திருப்பது உரியவர்களாகிய நமக்கு அழகாகமாட்டாது. மநுதர்மப்படியே தேவரான் முறையிலா வது வம்சத்தை விருத்திக்குக் கொண்டுவரல் வேண்டும். நான் சொல்லும் முறைப்படி நீ நடந்தால், தந்தையின் குலத்தை யும் காத்துத் தாயின் சொல்லையும் பரிபாலித்தவன் ஆவாய்.

மறுக்நிடாது செய்வாயென்று நம்புகிறேன். உனது கொழுந்தியராகிய தம்பி மனைவிகள் அம்பிகை அம்பாலிகைகளிடத்தில் உனது அருளினல் புத்திரர்களை யுண்டாக்கவேண்டும். குலவிருத்திக்காகத் தாயாகிய நான் உன்னை வேண்டிக்கொள்வது இது தரும மாகும்'' என்று சொன்னுள்.

அன்னை கூறிய வாசகத்தைக் கேட்ட தேவவிரதனுகிய பீஷ்மன், இடி முழக்கத்தைக் கேட்ட பெரிய நாகம் போல்நடுங்கி இருகைகளாலும் செவிகளை பொத்திக்கொண்டு, “மறுபடியும் கங்கையாற்றினுள் மறைந்தால் தான் எனது விரதமும் பிழைக்கும் போலிருக்கின்றதே'' யென்று மனங் கலங்கி யீதுரைக்கின்ருன்: “தாயே! ஆண்மக னெருவனுக்கு எவற்றினும் உயர்ந்தது ஒழுக்கமேயாகும். ஒழுக்கமே பெருமை தருதலால், உயிரைக் காட்டிலும் அதனைமேலாக மதித்துக் காப்பாற்றல் வேண்டும். கொண்ட விரதத்தைக் கடைபோகும் வரைக் கைவிடாது காப்பாற்றினல் தான் ஒழுக்கம் சிதரு திருக்கும். ஒரு முறை மனந்தளர்ந்து ஒழுக்கத்துக்குக் கேடு வரச்செய்தால், அது முடிவில் அழிந்தேபோம் என்பதில் ஐயமில்லை. எத்துயர் வரினும் எக்குடி கெடினும் ஒழுக்கத்தின் நின்றும் கெடுவரோ உயர்ந்தோர்; விரதத்தினின்றும் விலகுவரோ வீரர்; மாட்டார்; ஆகையால் என்னை யித்துயரினின்றும் விடுவித்தல் வேண்டுகின்றேன். மாதாவின் வார்த்தையை மைந்தன் மறுத்தான் என்னும் பழிக்கு என்னை யாளாக்காதிர்கள். குலம் புத்திரப் பேறில்லாமல் முடிந்தொழிகின்றதே யென்றவருத்தம் உங்கட்குத்தானு? எனக்கில்லையா? இதற்காக விரதத்தைக் கெடுத்துக் கொள்ளல் வேண்டுமா?. தாங்கள் இப்போது எனக்கு எடுத்துச்சொன்ன தர்மமுறைப் படியே நடத்தி நமது குலத்தையும் விருத்திக்குக் கொண்டு வரக் கூடிய உபாயமிருக்கின்றது. அதனைப்பெரியாரிடம்

கலந்து ஆலோசித்து முடித்திடலாம். நீங்கள் கவலையை யொழித்திடுங்கள். பாசுராமனது மழுப்படையினுல் மனு குல மன்னவர் மடிந்து குலம் நசித்துப் போனபோது, பழுதில்லாத அக்குலத்து மங்கையர்கள் முனிவரர் அருளினுல் மக்களைப் பெற்றுக் குலத்தைப் பெருக்கினர் என்று சொல்லு கிருர்கள்; அந்த முறைமையும் தர்மத்துக்கு ஒத்ததேயாகும். அம்முறையை அநுசரித்துக் கருமத்தை முடித்தலே தர்ம மாகும்'' என்று பீஷ்மன் அன்னைக்குச் சொன்னுன்.

வியாஸன் பிறப்புக்கூறல்.

இச் செய்தியைக் காங்கேயன் சொல்லக்கேட்ட பரிமள கந்தி பின் வருமாறு கூறுகின்ருள்: "மைந்த! காங்கேய!! முன்நாள் நடந்துள தொன்றைச் சொல்லுகின்றேன்; கேட்பா யாக!!! சூரியன் மகளாகிய காளிந்தி நதியின் பக்கத்தில், நான் எனது பாலிய பருவத்தில் படகோட்டிக் கொண்டிருந்த போது, பராசர முனிவர் வந்து என் இளமைப் பருவத்தை யும் என் தேகத்தில் வீசிக்கொண்டிருந்த புலால் நாற்றத்தை யும் மாற்றிப் பேரழகையும் பரிமளத்தையும் தந்து என்னைக் கூடி அக்கணமே ஒரு மகனையும் அருளிப் போனுர். அம் மகன் பிறக்கும் போதே முஞ்சியுடனும் முப்புரி நூலுடனும் தோன்றிப் பொன் போலும் சடையுடன் நின்று என்னை வணங்கித் தாயென அழைத்து, "எப்போது என்னைக் குறித்து நினைக்கின்ருயோ, அப்போது நான் தோன்றி யுனது கருத்தின்படி நடக்கின்றே''னென்று சொல்லிப் போனுன். அவன்தான் வேதங்களை வகுத்திட்ட வியாஸனென்று இப் போது அழைக்கப் படுகின்ருன். அவன் ஏகிய பின், எனக் குப் பாலியமும் வந்து சேர்ந்தது. அந்த வியாஸன், உன் தம்பி மனைவியரிடம் வரின் பலித்திடு மன்ருே நமதுஎண்ணம்?

அதனால் நீ சொன்ன முறையும் நான் கூறிய வொழுங்கும் கெடாதல்லவா?'' என்றனள்.

அம்பிகை யம்பாலிகைகள் மகப்பெறல்.

தாயுரைத்த சொல்லுக்குத் தனயனும் சம்மதித்திருந்தான். பரிமளகந்தி வியாஸனை வரும்படி நினைத்தாள். மனத்திலிருந்து குதித்தனர்போல, வியாஸ முனிவரும் வந்து தோன்றினர். தாயை வணங்கி நின்ற முனிவரைப் பார்த்துக் காளிந்தி மங்கை, "புத்திரரில் உயர்ந்தோய்! என் மகன் விசித்திரவீரியன் இறந்தொழிந்தமையால், பழுது பட்டது இக்குருகுலம்; தேவரன் முறைமையில் நின்பார்வையால் இனி செழித்து வளர்ந்திடல் வேண்டும். தாய் சொல்லைத் தவிர்த்திடாமல், கடலுலகத்தை யாண்டிடும் மைந்தரை யளித்திடுவாய்'' என்று சொன்னாள். முனிவரும் தாய்பணித்த பணியைத் தலைமேற் கொண்டு இருமுறையினும் ஒத்ததீதெனச் சம்மதங் காட்டி நின்றார்.

பின்னர், காளிந்தி நங்கையாகிய பரிமள கந்தியானவள், பொற்றாலியிழந்து புலம்பிக் கொண்டிருக்கும் மருமக்களிருவரையும் தேற்றி, குல விருத்தியின் அவசியத்தையும் முன்னுளோர் முறைமையையும் எடுத்தியம்பி யன்னவர் இசையுமாறு வற்புறுத்திச் சம்மதிக்கச் செய்தாள். சம்மதம் கொடுத்த இரு மருமக்களும், இருட்டினில் தமது தமது அறையினில், தாமிழந்த அக்கணவனை மனத்தை விட்டகற்றாது நினைத்துப் படுத்திருந்தார்கள். அவ்வமயம், தாய் பணித்துள தலைப்பணியை மறுத்திடாதியற்றுதற் கொப்புக் கொண்ட வியாஸமாமுனிவரும் மூத்த கொழுந்தியளாகிய அம்பிகையிருப்பிடம் சார்ந்தார். அம்மாது தனது கணவனை

நினைத்து வருந்திக் கொண்டிருந்தவளாயினும், மாமிதன் ஆணையை மறுத்திடற் கஞ்சினவளாகலின், முனி வரவைக் கண்டவுடன் மயங்கிக் கண்களைப்புதைத்து நாணியிருந்த னள். பாராசரன் பயந்த முனிவராகிய வியாஸர் விருப்பு வெறுப் பற்றுத் தாய்ப்பணியையும் குலப்பெருக்கையும் கருதிவந்தவ ராகையால், அந்நினைவின்படியே அப்பெண்ணிடம் கருவினைப் பதித்துத் தாயிடம் சென்று நிகழ்ந்ததையுரைத்துப், "புத்திரன் பதினாயிரம் யானைப் பலத்துடன் பிறப்பானாயினும், மங்கை கண் புதைத்திருந்தமையால், கட்புலன் பெறுமற் புவியினிற் பிறந்திடுவன்" என்று சொன்னார்.

இதனைக் கேட்டுக் குறைநீங்கப் பெறாத அன்னை மகிழ்ச்சி கொள்ளாமல், மறுபடியும் தன்மூத்த புதல்வனாகிய முனி வனை வேண்டி, மற்றொரு மருமகளாகிய அம்பாலிகை யிடம் ஒரு நற்புதல்வனை யளித்திடுவாயென நவின்றாள். வியாதனும் மறுத்திடத் துணியாது நன்றென நின்றான். அம்பாலிகையை மனந்தேற்றி யம்பிகை கண் புதைத்திருந் தமையாலுற்ற கேட்டினை யுரைத்துத் தைரியங் கொடுத் துச் சம்மதிக்கும்படிச் செய்து, அம்முறையை வியாஸருக் குரைத்து ஏகி அவண் புத்திரப்பே றருளும்படி பணித்தாள்.

அன்னைசொற்படியே அம்பாலிகையிடத்து முனிவனேக லும், அவள் அம்முனிவரைக்கண்டு நாணி நலங்குறைந்து நடுங்கினளிருந்தாள்; புத்திரப் பேற்றினை மட்டுமே குறித்து வந்த அம்முனிவரும் வேறொன்றையும் கருதாது கருவினைப் பதித்திடும்போது, அப்பெண் மனம் மறுகி மேனிபாலென வெளுத்திட இருந்தனள்; இப்பெற்றியையறிந்த முனிவனும், இதுவும் தீங்கானது கண்டு தன் தாயிடம் சென்று நிகழ்ந் தவை கூறி, "யம்பாலிகையிடம் உலகினை யொருகுடைக்கீழா

ளும் முறையுடைப் புத்திரன் தோன்றுவன்; ஆனால், மேனி பாலென வெளுத்திருப்பன்" என்று விளம்பித் தாயை வணங்கிப் பின் தமது தவவனம் சார்ந்தார்.

முனிவனேகிய பின், சில காலங்கட்கெல்லாம், அம்பிகைக்கும் அம்பாலிகைக்கும் முறையே கண்ணிலாதவனும் வெளுத்த மேனியனுமாகிய இரண்டு மைந்தர்கள் பிறந்தார்கள். மக்கள் பிறந்ததன்மையைக் கேட்டும் கண்டும் மனங் களிப்புறாது, காளிந்தி மங்கையாகிய ஸத்தியவதி மனம் மறுகி நின்று, ஒருவாறு உள்ளந்தேறி, வியாதனை மறுபடியொருமுறை வரும்படிச் செய்து, அம்பிகையிடத்து மற்றுமொருமுறைப் புத்திரப் பேற்றை யருளென விடுத்தாள். எதற்கும் மும்முறை முடிவெனக் கருதிய மாமுனிவன், விருப்பு வெறுப்பற்றவனாகலின், மனத்திலொன்றும் பாசம் பற்றாத நிலையில் ஈசன் செயலையும் குலத்தின் நலத்தையும் தாயின் பணியையுமே தலைப்பட்ட தருமமாக்கொண்டு அம்பிகையின் அஃமளிபோ யடைந்தான்.

அம்பிகையோ, மாமிதன் பணியையும் மன்பெருங் குலத்தினது பெருமையையும் மதித்தனளாயினும், முனிவர்தம் மருங்கடைவதற்கு நாணி, தனது தோழியிலொருத்தியை அழகுற அலங்கரித்துத் தனது அறையினில் விடுத்தாள். பாக்கியம் மிகப் பெற்ற அம்மாது, மயங்காது மிகமலர்ந்த முகத்துடன் முனிவனை யணுகி மனங்கலந்திருந்தபோது, முனிவன் அம் மாதின் மெய்யுறத் தோய்ந்து கருவினைப் பதித்துக் காலையில் தாயினைப் பணிந்து நின்று இதனைச் சொன்னார்:—

"அம்பிகைப் பெண் தனது தோழியை யலங்கரித்து விடுத்தனள். அத் தோழியே பாக்கியம் பெற்றனள். அவள் மலர்ந்த முகத்துடன் மனந்தளரா திருந்தபடியினால், அன்ன

வள் வயிற்றில், தேவரும் வியந்திடும் தருமகுணமுள்ள வோர் புதல்வன் பேரழகுடன் பிறந்திடுவான். அவனது நாமம் விதுரன் என்பது. இனி யென் புணர்ப்பினால் மக்களாசையை யொழித்திடு.'' என்று சொல்லித் தாயை மும்முறை வலம் வந்து வணங்கியேகித் தன் தபோவனம் சார்ந்தார்.

அவருரைத்தபடியே தோழியும் அழகிற் சிறந்த விதுரன் என்னும் மகனை ஈன்றெடுத்தாள்.

புத்திரர் மூவரும் பயின்று வளர்தல்.

அம்பிகைக்கும் அம்பாலிகைக்கும் தோழிக்கும் பிறந்த மூன்று குழந்தைகளும் ஒரே பார்வையில் பெரிய ராணியாலும் அந்தப்புர மங்கையராலும் நன்று போற்றி வளர்க்கப் பட்டார்கள். அம்பிகைமைந்தன் கண்பெறுதவனாக இருப்பினும் பலத்திலும் பிறப்பிலும் முதன்மை பெற்றிருந்தவனாதலின், மற்றையிருவராலும் வணங்கப்பெற்று வளர்ந்தான். இவன் பெயர் திருதராஷ்டிரன் என்பர். அம்பாலிகை மைந்தன் பெயர் பாண்டு. இவன் மேனி வெளுத்திருந்தானாயினும் அரசர்க்குரிய திறமனைத்தும் வாய்ந்துள்ளவனாக இருந்தனன். ஆகையினால், மற்றையிருவரும் இவனது செயலை மதித்து வந்தார்கள். தோழியின் புத்திரனாகப் பிறந்தும் அரசமகனாகவே அதிகவுரவத்துடன் வளர்க்கப் பெற்றுவந்த விதுரன், பிறப்பினும் கல்வியும் ஒழுக்கமுமே சிறந்தன என்பதைக் காட்டுவான் போல அறிவிலும் ஆசாரத்திலும் மேம்பாடடைந்து வளர்ந்து வந்தான். அவனது யுக்தி புத்திகளை மெச்சி மற்றைய இருவரும் இவனது யோசனைப்படியே அனைத்தும் நடத்திவந்தனர்.

இப்படி மூன்று புத்திரர்களும் மூன்று சுடர்கள் போல எங்கும் ஒளி பரப்பி ஆற்றலையும் அறிவையும் ஆசாரங்களையும்

வளர்த்து வந்தார்கள். நகரத்தாரனைவரும் இவருடன் கலந்து இவர் சொற்படி நடந்து கல்வி கேள்விகளில் திருந்தினர்கள். சத்யவதிக்குண்டான சந்தோஷத்துக்கு அளவே கிடையாது. எங்ஙனமேனும் குலம் நாசமடையாது முன்னுக்குவரும் முயற்சியில் தளராத பீஷ்மரும் புத்திரர் வளர்ச்சியில் மனஞ்செலுத்தினர். மூவர்க்கும் கல்வி கேள்வித்துறைகளையும் போர்த்திறங்களையும் பீஷ்மரே ஆசிரியராக இருந்து கற்றுக் கொடுத்தனர். கல்வியிற்றேர்ந்து போர்த்திறன் வாய்ந்து பிரஜைகள் மனங்களித்துப் பாராட்டும் தன்மையுடன் புத்திரர் வயதிலும் பொறுப்பு வாய்ந்தவர் ஆனதால், புத்திரரிடம் அரசினை யொப்பித்தலைக் கருதிப் பீஷ்மர், முனிவரும் பிறரும் மன்னரும் மறையோரும் மனங்களித்திட, நல்ல மங்கலம் பொருந்திய நாளில், நகரத்தாரது பெருங் கூட்டத்தினிடையே, அம்பிகை மகனை திருதராட்டிரனை யரியாஸனத் தமர்த்தி விதிப்படியரசினை யளித்து மங்கலமுடியும் சூட்டுவித்தான். பாண்டுவைச்சேனைத் தலைவனாகவும் விதுரனை மந்திரியாகவும் அமைத்து, நகரம் புகழத் தானிருந்து மேல் பார்த்துக்கொண்டு அரசியல் நடத்தி வந்தான்.

திருதராட்டிரன் மணவினை பெறல்.

மக்கட்கு விவாஹகாலம்வந்து பொருந்தியதனால், நதி மைந்தனாகிய பீஷ்மன், உலகையாளும் உறுதியை நினைந்து, காந்தார தேசத்ததிபதிமகள் காந்தாரியை அம்பிகை மகனுக்கு அளித்திடல் வேண்டுமென்று வற்புறுத்தி அம் மன்னனுக்குத் தூது அனுப்பினன். சந்திரவம்சத்திற் பிறந்த குலப் பெருமையும் செல்வமும் வன்மையுமுடையவனாயினும், கண் இல்லாதவனாயிற்றேயென்று, தந்தை தாயர் வருந்தினர்களாயினும், அருந்ததிக் கற்புடைய காந்தாரியானவள், இதுவிதியளித்ததென்று

உளங்கனிந்து மன்னன் திருதராட்டிரனுக்கே மாலையிடச் சம்மதித்திட்டாள். "இமைத்த கண்ணினைத் திறந்து இனி யொருவரையும் நோக்கிடேன்" என்னும் விரதத்துடனிருந்த காந்தாரியைத் தந்தை தாயர்கள் நன்கு அலங்கரித்து அஸ்தினபுர மன்னவனாகிய அம்பிகை பாலன் திருதராட்டிரனுக்கு, மன்னரும் மறையவரும் துன்னரும் முனிவரும் புடைசூழ நல்ல மங்கள ஹோரையில் மணவினை முடிப்பித்தார்கள். மன்னனும் மங்கையும் மதனனும் இரதியும் போல மகிழ்ந்தினிதிருந்தார்கள்.

குந்திதேவி கதை.

குந்திபோஜரில் சூரன் என்னும் மன்னவனுக்குப் பிரதை யென்னும் பெயருடன் பேரழகினளாக ஒரு பெண் பிறந்து வளர்ந்து கொண்டிருக்கின்றாள். அவள் புத்தியிற் கலைமகளெனவும் அழகினில் திருமகளெனவும் கற்பினில் அருந்ததியெனவும் பொறுமையில் பூமிதேவியெனவும் உலகம் புகழும் படியிருக்கின்றாள். அவளையே பாண்டுவுக்கு மனைவியாக்கல் வேண்டுமென்று காங்கேயன் கருதினான். குந்தி யென்னும் பெயருடைய இந்தப் பிரதையின் இளமைப் பிராயத்தில் நடந்ததொரு செயலினை யீண்டுக் குறித்திட லவசியமாகும்.

"பிரதை, இளமட மயிலென இளமைப் பிராயத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, மாதவத்தினிற் சிறந்த தூர்வாஸ மாமுனிவர் தோன்றி நின்றார். அவரைக்கண்ட பிரதை யறிவுடையவளாதலால், அடிபணிந்து தந்தை யேவலால் அம்முனிவற்குப் பணிவிடை புரிந்து வந்தாள். கழங்கு பந்து அம்மனையாடலும் சோலையிற் சென்று மலர் பறித்தாடலும் நீரில் குளித்தாடலுமாகிய இளமைப் பருவத்தாடல்களையெல்

லாம் மறந்து, காலை மாலை மாறாது முனிவர்க்குச்செய்யவேண் டியபணியையே முதன்மையாக்கொண்டு பிரதைசெய்து வந்த மையால், முனிவர் மனங்களித்து அந்தப் பெண்ணுக்கு ஒரு மந்திரத்தை யுபதேசித்து, "இம்மறையினை மனனம் செய்து தேவரில் யார் யாரை நீ நினைப்பையோ அவரவர் உன் முன் தோன்றித் தம்மை யொப்பதோர் மகவையும் உனக்களித்து ஏகுவர்" எனச் சொல்லி யாசீர்வதித்துப் போயினர். பிரதை யும் செவ்விய மனத்துடன் மந்திரத்தினைப் பெற்றுக்கொண்டு மனைக்கு வந்து சேர்ந்தனள்.

வெள்ளிய நிலா வெழுந்து விளங்கிக்கொண் டிருக்கும் ஒரு நாளில், பிரதை தனது மனையின் மாடிகை மண்டபத்தில் வீற்றிருந்தபோது, மனங்களித்திடப் பெருநிலா வெழுந்தமை பார்த்து, முனிவன் உபதேசித்துச்சென்ற மந்திரத்தின பயனை யறிந்திடப் பேரவாத் தோன்றினபடியால், இத்தண் கதிர்ச்சந் திரனியக்கத்தினிடையில், செங்கதிர்ச் சூரியன் சேர்வனோ வென்னும்எண்ணத்துடன்,சூரியதேவனைநினைத்தனள்.பானு வும், பாவை நினைத்திடும் முன்னே மந்திரவலியினால் தோன்றி மங்கையின் மருங்குநின்றான். செம்பொனுடையும், கவசகுண் டலங்களும் திகழ்கின்ற மணிமுடியு முடையவனாகிப் பவள மேனியுடன் தன்னருகு நிற்கின்ற சூரியபகவானைக் கண்ட நங்கையும் மனம் நாணி யொதுங்கி நின்றனள். மந்திர பாக் யத்தையும் நாணத்தையும் விநயத்தையும் நங்கைபாற் கண்ட சூரியன், அவளது மலர்க்கரங்களைப்பிடித்துத் தன் மார்புறத்த ழுவ வந்தபோது, "கன்னி! கன்னிநான்!! என்கைதொடேல்!! பெண்களின் கற்பு நீ அறிவாய்" என்று சொல்லி மெய்குலைந்து உளம் நடுங்கி அப்புறம் விலகிநின்றாளை, மித்திரன், "மந்திரத் தினால் என்னை நீ யழைத்த காரணமென்னை? வெங்கதிர் மேனி யையும் வேகத்தையும் தணித்துக்கொண்டு உன்முன் நான்

விருப்புடன் தோன்றியபோது, மறுத்திடல் அழகன்று; மறுப் பையாயின் உனக்கு இம் மந்திரமோதிய முனிவன்தன் குலத் தையும் என்னை யிங்கு வரும்படிச் செய்த உன்குலத்தையும் எரிந்து பாழ்படும்படிச் செய்திடுவேன்,'' என்று கோபித்து உரைத்தனன்; நங்கையும் செய்வதறியாமல்நடுங்கி நின்றனள். உன்னைப் பெற்றவன் கோபிப்பான் என்று பயப்படவேண் டாம்; எனக்கு உடம்படு முணர்வினால் என்னை யணைந்து கூடி னால், இவ்வுலகத்துப் பெரும்புகழ்பெறும் மைந்தன் தோன்றி டுவான். அழகிலும் ஆற்றலிலும் என்னிலும் பன்மடங்கு உயர்ந்திருப்பான்'' என்று சூரியன் கூறலும், ஏந்திழை மன மிளகிப் பூரித்த நினைவுடன் நிற்க, மதனனும் மலர் வசந்த னும் அவள் மனநிற் புகுந்து நிலைமாறிடச் செய்ய, அரிவை யும் அருக்கனை யணைவுறு மறிவுடன் ஆகாங்கொண்டு அயல் நின்றனள். செங்கதிர் மேனி வெண்கதிர் மேனியாய் மாறித் தினகரனும், அம் மங்கையைத் தன் அங்கையார அணைத்து மார்புறப் பொருத்தி அமளியிற் கிடத்தினான்.

கர்ணன் பிறந்து வளர்தல்.

மனமகிழ்ந்ததும் சூரியன் வந்ததும் மணந்ததும் வரங் கொடுத்ததும் மறைந்துபோனது மெல்லாம் கனவெனும்படி யாயிடக் கன்னியும் கவலையுற்றிருந்தாள்; எனினும், சூரியன் பதித்துச் சென்ற கரு வளர்ந்து மங்கையும் பேரழகு படைத் தவளாகிப் பெருகி வளர்ந்தனள். பருவம் வந்த காலையில் பிர தையும் மாசிலாமணிபோலும் பேரொளியுடையதோர் மைந் தனைப் பெற்றெடுத்தனள். குழந்தை பிறந்தவுடனே, சூரியன் அருளினால், சூரன் மகளாகிய குந்திக்கு முன்னைய கன்னிப் பருவமே வந்து கலந்தது. அழகிய மணிக் கவசகுண்டலங் களுடன் வந்து தோன்றிய குழந்தையை வாரி மார்புடன்

அணைத்து மடியினிற் கிடத்தினளாயினும், தனது மரபுக்கு வழுவு நேராதிருத்தல் வேண்டி அஞ்சினவளாதலின், அக் குழந்தையை யகற்றிட மனந் தேர்ந்தாள். குழந்தையை அழகிய பெட்டகத்தினில் அமைதியின் அடக்கம் செய்து யாவருமறியாதபடி எடுத்துச் சென்று, பூரித்துப் பெருகியோடும் கங்கா நதியிடை விடுத்து வீடு சேர்ந்தாள்.

கங்கையாகிய நங்கையும், பொற் பெட்டகத்துடன் குழந்தையைத் தன்னிடம் சூரன் மாமகள் குந்தி யொப்பித்துச் சென்றனளாதலின், அக்கடமையைச் சிரத்தினிற் கொண்டு தன் அலைகளாகிய கரங்களால் வாரியெடுத்துத் தாங்கித் தாலாட்டிச் சூதநாயகன் பதியினிற் கொண்டுபோய்ச் சேர்த்தாள். அவ்வமயம், ராதையெனும் மனைவியுடன் ஆற்றின் கரையை யடைந்திருந்த சூதநாயகன், மிதந்துவரும் பேடகத்தினுள் குழந்தையைக் கண்டு வாரியெடுத்து மார்புடன் அணைத்து மகப்பேறிலாத நமக்கு மாபெருங் கடவுள் அளித்தது இம்மணியெனப் போற்றி மனைக்குக் கொண்டு போய்ப் பெற்ற மகவினும் பெருமடங் கதிகமாகப் பல விழாக்களும் நடத்தி யாவரும் களித்திட வாழ்ந்திருந்தான்.

"அதிரதன் திருமனையினில் விழைவுடனரும் பியபனிக்கற்றை
மதியெனும்படி வளர்ந்து திண்டிறல்புனை மழுவுடைவராமன்
பதயுகந்தொழூஉ வரிசிலைமுதலிய பல படைகளுங்கற்றுக்
கதிரவன் றருகன்னனென்றுலகெலாங் கைதொழுங்கவின்பெற்றான்"

இங்ஙனம் அதிரதனாகிய சூதன் மாமனையினில் அழகும் ஆற்றலும் அறிவும் மேம்பட மதியெனும்படி வளர்ந்து, பருவ காலத்தில் பல படைத்திறங்களும் மழுவுடைப் பரசுராமன் பாற் பெற்றுச் சூரியன் தந்த கவசகுண்டலங்களுடன் பொலிந்து, யாவரும் ஏற்றிடச் சிறந்து, பாவலர் நாவலர் முத

வியோர் போற்றிடப் புரவலர் பொன் விருதுகள் அளித்திட விரவலர்யாவரும் வெருவியோடிட இரவலாளர்தம் பாக்கியமா மெனச் சிறந்து கர்ணன் எழிலொடும் விளங்கினன் இருக் கின்றான்."

பாண்டு மணவினை கொள்ளல்.

குந்தியைப் பெற்றவனான குந்திபோசரிற் சூரனென்பவன், மகளுக்குரிய விவாஹ பர்வம் வந்துளதை யுன்னி, மன்னவர்க்கெல்லாம் சுயம்வர வோலை விடுத்தனன். மங்கையின் அழகு குணம் ஆதியவற்றைப் பலரும் சொல்லக் கேட்டுள்ளவர்களாதலின், அரசிளங்குமரர் பலர் குந்திபோச நகரத்துக்கு வந்து கூடினர். ஆகாயத்திற் பல கிரஹங்களும் உருவத்திற் சிறந்து உதிக்குமாயினும், குமுத மலர் சந்திரோதயத்திலேயே மலர்வதுபோல, குந்தியாகிய நங்கையும் இயற்கையாக அமைந்துள்ள அன்பின் வழியே தொடர்ந்தவளாக மன்னன் பாண்டு தனக்கே மணம் பொருந்தும் நேயங் கொண்டாள். சுயமாகவே வரித்துப் பாண்டுவிற்கே மணமாலை சூடி மணந்ததனால் மற்றை மன்னவர் மனமாழ்கித் தம்தம் பதிக்கேகலுற்றார்கள். குந்திக்கும் பாண்டுவுக்குப் மங்கலமாக மணவினையும்நடந்தேறியது. மன்னன் பாண்டுவினுடைய அறிவையும் ஆற்றலையும் அமைதியையும் கண்டுகளித்த மத்திர ராஜன் தனது புதல்வி மாத்ரியையும் பாண்டுதனக்குப் பாணிக்கிரஹணம் செய்து கொடுத்தான்.

குந்தி மாத்ரியென்னும் இரு மனைவியரோடும் கலந்து, பாண்டு, பல்லோர்தொழப் படைத்தலைமைவகித்து, அண்ணனும் மன்னனுமாகிய திருதராட்டிரனுக்குக் கண்ணும் கருத்துமாமென இருந்து, மன்னுயிர் தமக்கும் இன்னுயிராகி வாழ்ந்

திருந்தான். ஒரு காலத்தில் வேட்டையாடும் நிமித்தம் சேனைகள் சூழப் புறப்பட்டுக் காடடைந்து காட்டு மிருகங்கள் பலவற்றை ஓட்டி வதமாடிக்களைத்துக் களைதீருமாறு ஓர் சோலைப் புறத்துத் தங்கியிருந்தான். அவ்வமயம், மன்னன் எதிரில் ஆணும் பிணையுமாகிய மானிரண்டு கூடிக் களித்துக்கொண்டிருந்தன. மன்னன் விதிவசத்தாற் பரவசனாகி மயங்கி, ஆண் மான்பேரில் கணையொன்றை யேவிக் கீழே வீழ்த்தினான். அம்பு பாய்ந்து அலறிக் கீழே வீழ்ந்த ஆண்மானின் உருவத்திலிருந்து இந்தமன் என்னும் ஒருமுனிவன் எழுந்து மன்னனைச் சினந்து "நான் வேடமாறிக் காமநல மனுபவித்துக் கொண்டிருந்த காலையில், நீ கணையேவி வீழ்த்த தன்மையினால், நீயும் காமநல மனுபவிக்கும்போது என்போலிறந்திடுவாய்" என்று சாபம் கூறி மண்ணில் வீழ்ந்திறந்தான். பிணையா யுருக் கொண்டிருந்த முனிவன்பத்தினியும் கணவனைப் பிரியும் துயர் ஆற்றாதவளாகிச் செந்தழலில் வீழ்ந்து மன்னன் காண உயிர் போயிறந்தாள்.

எதிர்பாராது விதிவசத்தால் சாபம் நேர்ந்தவுடன், மன்னன் பாண்டு வேறொரு வழி தேறாதவனாகித் தன் காதலிய ரிருவருடனும் நெடுங்கானஞ் சேர்ந்து தவஞ் செய்யலானான். பொன்னாபரணங்களும் மணியாரங்களும் துறந்து பீதாம்பரத்தை நீக்கி, முனிவர்க்குரிய வேடம் புனைந்து தீண்டற்கரிய திருமேனியனாகிப் பெருமாதவம் பூண்டிருந்தான். புறப் பகைவரோடாடிப் புறங்கண்டு பொருத வினையெல்லாம் மாறி, அகப் பகையாகிய இந்திரியங்களை யெல்லாம் அடக்கும் நெறியில் நின்று நீள் தவம் செய்யலுற்றான். பாழிப்பணைத்தோள் துணையாகத் தனியாழி செலுத்தி யுலகையாண்ட பாண்டு மன்னன், பற்றற்ற யோகப்படை துணையாகத் தனி ஞானஞ் செலுத்தி மோகப் பகையை வெல்லும் முறைபற்றி நின்றான். நாரியரிரு

வரோடும் இதுவரை காமக் கனலை வளர்த்திருந்த கருத்தை மாற்றி, பின்று, அம்மங்கையிருவரோடும் ஓமக்கனலைவளர்த்து உண்மை யுணர்வைக் கண்டான். இவ்வாறு உயர் தவமே நாடோறுஞ் செய்து முதிர்ந்த ஞானம் பெற்ற பாண்டு மன்னன், ஒரு நாள் சூரன் மகள் குந்தியை நோக்கி யிது கூறலானான்:—

குந்தி மகட்பேறு

"வியாஸ பகவான் அருளைப் பெற்று நல்வரங்கொண்டு காந்தாரி, நூறு புத்திரரைத் தருங் கருப்பமொன்று தரித்திருக்கின்றாள். ஆடல் பாடல் முதலானவற்றிற்கும் அரசுக்குமாகப் புதல்வர் பலரைப் பெற்றுப் புவியில் நல்வாழ்வு பெற்று காந்தாரி நலத்தோடு வாழ்வாள். மழலைச் சொற்கள் கலந்து கொஞ்சும் குழவியைப் பெறாதார்க்கு இப் பூமியின்கண் இல்லறத்தில் இன்பமேது? மெய் தானம் வண்மை தழல் வேள்வி நாளும் செய்தாலும் ஞாலத்தவர் நற்கதி சென்று சேரார்; மக்கள் முகம் மன்னும் பார்வை யெய்தாதொழியில் இவண்பெறுமின்பமேது? மற்றும், பாலகரைப் பெறாதவர் மெய்ம்மையாகத் தென்பாலவரான பிதிர்க்கள் பசி தீர்க்கமாட்டார்; என்பாலுற்ற சாபத்தினால் இடர்ப்பட்டு நிற்கும் நான், உன் அருள் உண்டாகுமானால் உய்வேனன்றி வேறில்லை" யென்று உறுதி கூறினான் குந்திக்குப் பாண்டு மன்னன்.

குந்தி, கணவன் வார்த்தையைக் கேட்டவுடன், மிகவும் நாணத்தை யடைந்து, "சொல்லத்தகாத வார்த்தையை யென்னிடம் ஏன் சொல்லுகின்றீர்கள்? நற்குடியிற் பிறந்த மாதர்கட்குத் தம் கணவனைத் தவிர மற்றவரிடம் மனம் நாடுமோ? பெண்ணொருத்தி தனது பிறந்த குலத்தையும் புக்க குலத்தை

யும் காப்பது கற்பெனும் ஓராயுதத்தினலன்றோ? அவ்வாயுதம் அழிவுறுமாயின், உலகில் நல்லகுல மென்பது எது? அவ் வார்த்தையை யின்னெருமுறை யென் செவிப்படக் கூறல் வேண்டாம்'' என்று வினயத்துடன் மறுமொழி கூறினள்.

பாண்டு மன்னன், தனக்கு நேர்ந்த கடிய சாபத்தையும் தன் பரம்பரை புத்திரனில்லாக் குறைவால் அழிய இருப்பதை யும் மனத்திலெண்ணித் துணிவுகொண்டு, குந்திக்குப் பின்னும் வேண்டும் நல்லுரைகள் பல கூறி அவசியமானபோது கண வன் சொற்படி நடந்து குலத்தை மேம்படுத்திய உயர் கற்பின் மங்கையர் பலர் தன்மைகளை யெடுத்துக் காட்டி அவள் மனத் தைச் சமாதானப் படுத்திச் சம்மதிக்கச் செய்தான்.

கணவன் சொல்லைக் கடவாது நிற்கும் கற்பினளாதலினு லும் பூர்வாசார மிருந்தபடி யென்று கணவனுரைத்தபடியா லும் இது கணவனது ஆணையாகையினுலும் மறுப்பதற் கஞ்சி னவளாதலின், இச் சமயத்தில் பிறமானுடரை நாடி மனம் புண்பட்டு நோவாதிருக்கும்படி முன்னரே பெற்றுவைத்த பெரும் பாக்கியம் போன்றுள்ளதாகிய துர்வாஸ முனிவர் அருளிய மந்திரத்தின் நினைவு வரவே, மனந்தேறிக் கணவனை வணங்கிப் பின் வருமாறு கூறலானுள்: "நாத! நான் கன் னியாயிருந்த காலத்தொருபோது தவத்திற் சிறந்த துர்வாஸ முனிவர்க்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்றிருந் தேன்; ஓராண்டளவும் அவர்க்கு நான் மனம் கோணுப்பணி செய்திருந்ததற்காக, அப்பெரியவர் அன்புடன் எனக்கு ஒரு மந்திரம் உபதேசித்து ஆசிர்வதித்துப் போனர். "பெரியோர் செயலெல்லாம் பின் நிகழப் போவதை முன்னரே கருதிச் செய்ததாகும்'' என்று நான் கேட்டதுண்டு; "இப்போது நமக்கு நேர்ந்திருக்கும் இன்னலை அம் மகான் முன்னரே

யுணர்ந்து எனக் கிவ்வரம் அருளிப் போயினர்'' என்பதை யிப் போதுதான் நான் உணர்கிறேன்; 'அம் மந்திரத்தை உரு வேற்றி யெந்தத் தேவரை யான் நினைத்தாலும் அவர் தம் முருவுடன் என்முன் தோன்றி என்னிடம் தமை யொப்ப தோர் மகவையும் பதித்துச் செல்வர்' என்று அவர் குறித் துப் போனர். அடியாட்குப் பொன்னும் புகழும் உடலும் உயிருமாகிய தாங்கள் ஏவுவதால், தங்கள் ஆணையைச் சிரமேற் கொண்டு அம் மறையை யுருவேற்றித் தெய்வத்தை நினைக் கின்றேன்'' என்று மிக நாணத்துடன் மொழிந்தாள்.

மன்னவனும் மனங்களித்து அநுமதி கொடுத்தான். குந்தி, புனலாடிப் புனிதையாகி மந்திரத்தை யுருவேற்றி மனத் தில் தரும ராசனை நினைத்தாள். நினைக்கு முன் அப்பெருமன் தோன்றிப் பெண்ணரசியைக் கட்டி யணைத்துத் தனது கரு வினைப் பதித்துச் சென்றான். குந்திதேவி பல நக்ஷத்திரங்க ளுடன் கூடிய சந்திரன் உதயம் பெற்ற அந்தி மாலை போலும் அழகு மிகுந்திருந்தாள்.

தர்மன் பிறப்பு.

"சிவமுற முகூர்த்தம் வாரம் தினம்திதி கரணம் யோகம்
நவமென வழங்கு கோளும் நன்னிலை நின்ற போதில்
அவனியை யொருகோ லோச்சி யாளுமென் றறிவின்மிக்க
தவநெறி முனிவர் கூறப் பிறந்தனன் தருமன் மைந்தன்"

"உதிட்டிரன் பிறந்த காலை உலகினி லுயர்ந்தோர் யாரும்
வதிட்டனை முதலா வெண்ணு முனிவரும் வானு ளோரும்
நிதிப்பயன் பெற்றார் போல நேயமோ டுவகை கூர்ந்தார்
மதித்தநன் னிமித்தம் யாவும் மங்கலம் நிகழ்ந்த வன்றே"

திதி வார நக்ஷத்திர யோக கரணங்களும் ஹோரை லக் னங்களும் நிமித்தங்களும் நல்லனவாக நிற்கும் போது, பூமி

யைப் பொதுவறப் புரக்கும் புகழ் பூண்ட தரும ராஜனாகிய யுதிஷ்டிரன் உற்பவித்தான். சந்திரோதயத்தைக் கண்ட சலதி போலப் பாண்டு மன்னன், மிகக் களித்துக் கண்பனி துளிப்ப நெஞ்சம் கனிந்துருக மேனிபுளகிக்க வரம்பிலாத மகிழ்ச்சி கொண்டிருந்தான். குந்தி தேவி துயர மெல்லாம் அற்றுப் பேருவகைக் கடலிலாழ்ந்தாள். இச்செய்தி கேட்டு உலகினில் உயர்ந்தோ ரெல்லாரும் வஸிஷ்டன் முதலிய முனிவர் பல ரும் தேவருலகவாஸிகளும் நல்ல நிதியைப் பெற்றவர்போல மகிழ்ந்து நல்லாசிகள் கூறினார்கள். அன்றைக்கு நல்ல நிமித் தங்கள் தோன்றி, பூமிக்குப் புண்ணியநாள் தோன்றினதென் றுணர்த்தி நின்றன. மகிழ்ச்சியடையாதார் பலரிலர். ஒரு சிலர் உண்டு; அவர் யாரென்னிற் பின் கண்டு கொள்க.

காந்தாரி கருச் சிதைதல்.

பெரும் பெயர் வியாஸனது பேரருள் கொண்டு காந்தாரி, கருப்பங் கொண்டனளாயினும், "பொறுமை யில்லார்க்குப் புண்ணியமும் பலனளியா" தாகையினால், "குந்திதேவி மக வினைப் பெற்றுத் துயரம் நீங்கி உலகம் புகழவிருக்கின்றாள்" என்னும் வார்த்தை தன் செவிப்படும் போதெல்லாம் மனம் மறுகி வயிறு கொதித்து மேனி வெயர்த்து மாழ்கி நின்றவ ளாதலால், தன் வயிற்றிலிருக்கும் கரு முதிருமுன்னர், "இப் பாழுங் கரு, இன்னுமா முற்றவில்லை; என் ஓரகத்தி யொரு மக வைப் பெற்றினிதிருக்க, நான், இக்கருவைச் சுமந்து எத் துணை நாள் இப்புவியினில் இருத்தல் வேண்டும்; பாரோர் நகைக்க என் பார்த்திவன் நாண இப்பாழுங் கரு இப்படி ஊமைபோ லிருக்கின்றதே" என்று கோபம் பொங்கிப் பொறுமையால், ஒரு கல்லைக்கொண்டு உதரம் உட்குழம்பு மாறும் உதிரம் வெளிப்படுமாறும், ஓங்கிப் பல இடி இடித்துக்

கொண்டாள். கர்ப்பம் சிதைந்து, பையொடு ரத்தமும் பொங்கிப் பார்மிசை வீழ்ந்தது. சந்தியில் மேற்கிற் செக்கர்வானம் சேர்ந்ததுபோலத் தரையெல்லாம் ரத்தம் சேர்ந்து செக்கச் செவேரென்ருயிற்று. அந்தப்புரமும் அரண்மனையும் அமர்க் களம்போலப் பொங்கிப் பேரொலி யெழுந்தது. திருதராட்டிரன் வெட்கித் தலைகுனிந்தான்.

குலத்தலைவர் பீஷ்மர் என் செய்வார்! "அருமை யுடையார்க் கெப்போது மிப்படித்தான் வாழ்வின் பயனறும். பொருமை யுற்ருர்க்குப் புவியிருப்பில் நலமேது?" என்று மாழ்கி வியாஸ பகவானை நினைவினில் வரச்செய்தார். வியாஸர் வந்து விஷய மறிந்துகொண்டார்.

கருப்பிண்டம், கைகால் முதலிய உறுப்புக்கள் தனித் தனியே கிளைக்குமுன், சிதைவுறுமாயின், ஒவ்வொரு சிதைவும் ஒவ்வோர் உருவாக மாறும்படிச் செய்யும் வகை தெரிந்தவராகலால், மனந் தளர்ந்துவிடாமல், உடனே சிதறிய கோசத் தசைகளைக் கூறுகூருகப் பிரித்து நூறெண்ணி நூறு தாழிகளில் நிறைத்து வெண்ணெய் முதலிய மருந்து வகைகள் சேர்த்து நிரல் நிரலாகச் சீதோஷ்ணப் பாங்குடைய அறைகளில் வைத்துக் காப்பாற்றினுர், வேண்டுறு கல்வியாளன் வியாதமா முனிவனென்பார். பின்னும் சிதறிய தசைகளையும் பழுதுருது சேர்த்து, இதிற் பெண்ணுவதற்குரிய பங்கு மிகுந்திருப்பதாலிது பெண்ணுருப் பெறுமென்று கழியாது சேர்த்து, முன்போல் அமைத்துக்காத்தார். பின்னர்க் கருப்பெற்ற காந்தாரியை நோக்கிக் "கற்புடையாய்! கருப்பம் கையற்றுப் போயதென்று கவலைப்படாதே; வெவ்வேருகச் செய்யப்பெற்ற தசைகள் யாவும் பக்குவம்பெற்று வளர்ந்து நல்லுருவுடன் தோன்றும்; இந்த நூறு சிதைவும் நூறு புதல்

வாக மாறும்; இதோ இருக்கின்ற இச்சதைக்கூறு ஒரு பெண்ணுருக்கொள்ளும்; ஆனால் ஆத்திரம்கூடாது; பொறுத்திருத்தல்வேண்டும்; இவைகள் உருக்கொண்டு தோன்றுமளவும் கையால் தொடவேகூடாது; என் சொல் வழுவுறாமல் காத்துவரக் கடவாய்'' என்று சொல்லிப் பீஷ்மனையும் வேறாக அழைத்துச் சொல்லிப் போனார்.

கூறுபடுத்தி யடக்கம் செய்யப் பெற்ற நூறும் ஒன்றுமான சதைகள் யாவும், கருவயிற்றிருப்பது போலவே, வெண்ணெயும் மருந்தும் பெய்த கலங்களிற் சேமமாக இருந்து வளர்ந்தன. காந்தாரியும், முட்டைகளைப் பாதுகாக்கும் பாம்புபோலிருந்து பரிவுடன் காத்து வந்தாள்.

வீமன் பிறப்பு.

காந்தாரி செய்தி யாவுங் கலங்காது கேட்ட பாண்டு மன்னன், 'முனிவர் அருளால் பின்னும் புதல்வர் நூற்றுவரைப் பெற இருக்கின்றாள் காந்தாரி' என்பதைக் குறிக்கொண்டவனாகித் தளர்ந்து, தன்னொரு புத்திரன் தருமகுணமுடையான், அந்நூற்று வருடன் நிற்க இயலாமலிருந்தழிவனோ வென்று நடுங்கி, மற்றும் புத்திரரைப் பெற விரும்பினான். ஒரு நற்போதில் யாதவன் மகளாகிய குந்தியை யருகழைத்து வைத்துக் கொண்டு, இதங்கூறி இரங்கிப் பணித்தனன். மாதரசியும் மனமிளகி ஆதரங் கூறினள். 'நூற்றுவராயினும் ஆயிரவராயினும், எதிர்ப்பரேல், ஆற்றலடக்கியாள வல்ல மைந்தனொருவனைப் பெறுதற்குக் காற்றினுக் கிறைவனே தகுதியுள்ளான்' என்று உணர்ந்து, நீராடி பூச்சூடிச் சாந்தணிந்து நல்லுடை யுடுத்து நன்மங்கலப் போதில் மந்திரத்தை யோதி,

வாயு பகவானைச் சிந்தித்திருந்தாள். பொங்கித் திரிந்து எங்கு முள்ளவனுகலின், வாயு, மாது நினைத்த மறுகணமே, மணக் கோலம் பூண்டு மன்மத பாண முண்டவன்போல மங்கையின் மருங்கணைந்தான். தேவர்களை யிருமுறை கண்டு பழகியுள்ள மையால் குந்தி, நடுக்க மேதுங் கொள்ளாமல், மனத்துற மதித்து முகத்தினை மலர்த்தி, மணமகன் வரவு கண்ட மண மகள் போலக் களித்திருந்தனள். காற்றுக் கிறைவனும் கனங்குழை யணங்கனை மார்பிடை யழுந்தத்தழுவிப் பர வச மாக்கித் தன் கருவினை யவள் வயிற்றிற் பதித்துப் "முன் னம் அஞ்சனை வயிற்றிற் பதித்த அநுமனே யாவ"னென்று ஆசியுரைத்து நேசம் காட்டி மறைந்தனன்.

மங்கை குந்தியும் முன்னர்ப் பெற்ற கருக்களினும் இது பன்மடங்கு வலிதெனும்படிச் சுமையினுலுணர்ந்து பொறுத் திருந்தனள். மனமும் மெய்யும் வன்மை கொள நின்றனள். அங்கமெல்லாம் பொங்கப் பொலிந்தனள். இஃதோர் அற் புத வலியுடை அருமை மகவாகவே வெளிவருமென்று சிந் தித்திருந்தனள்.

"தண்பரி மளமென் சாயற் றந்தையுந் திசைக டோறும்
எண்பெற முயிர்கட் கெல்லாம் இதமுறு பொலிவின் வீச
நண்புடை யனலன் றானும் நலமிகு நண்பு தோன்றப்
பண்புற வலம்வந் தோங்கிப் பரிவுடன் விளக்கஞ் செய்தான்."

கருப்பதித்த தந்தையாகிய வாயு, எவ்வுயிர்கட்கும் இத முறும்படி தனது கலைகளை வீசிக்கொண்டிருக்கும் நற்சமயத் தில், மங்கை குந்தி தேவி, அஞ்சனை யளித்த பொற்றோள் அநுமனே இவனென்றெண்ண, வெஞ்சின வீமன் தன்னைப் பயந்தனள்.

சுயோதனன் முதலியோர் பிறத்தல்.

"அன்னநா ளனிலன் மைந்தன் பிறந்தன னாக வற்றை
முன்னைநா ளருக்கன் வேலை முழுகிய முகூர்த்தந் தன்னில்
இன்னநா ளுருவம் முற்றி யெழில்பெறு மென்று முன்னோன்
சொன்னநாள் வழுவு றாமல் சுயோதனன் தோன்றி னானே."

வீமன் பிறந்த நாளுக்கு முன்னாளின் இரவின் போது, அதாவது சூரியன் அஸ்தமித்த முகூர்த்தத்தில், இன்ன நாளில் இன்ன போதில் கரு உருவம் முற்றி யெழில் பெற்று உதிக்குமென்று முன்னவனாகிய வியாதன் மொழிந்த அப்போதே, வழுவுறாமல், நூறு கருக்களில் முதற் கருவிலிருந்து சுயோதனன் என்னும் பேருடைய துரியோதனன் காந்தாரிக்கு முதற் புதல்வனாகத் தோன்றினான். "அரண்மனையில் மன்னற்கு மகன்தோன்றினான்" என்றால் மன்பதைகள் களித்தாடலைக் கேட்கவும் சொல்லவும் வேண்டுமோ? அதிலும், கருச் சிதைந்து போயதென்றும் அக்கருக்களின் சிதைவுகளை வியாதன் பண்படுத்திச் சென்றனன் என்றும் அறிந்து பரபரப்புடனிருந்து மேல்விளைவை எதிர்பார்த்திருக்கும் பிரஜைகள், "மன்னற்கு மகன் பிறந்தான்" என்பதைக் கேட்பாராயின், அவர் கொண்ட பெருங்களிப்பினை யாவரே உணர்த்த வல்லார்? மங்கல வாத்தியங்கள் கடல்போல் முழங்கின; அவ்வொலிகளோ ஊளையிடும் நரிகள் கூக்குரலால் ஒடுங்கின; பிரஜைகளின் கண்களிலிருந்தும் மனக் களிப்புக்கு அறிகுறியாகப் பனித்துளி தோன்றும் போது, விண்ணினின்றும் எங்கு நோக்கினும் காணும்படியாக இரத்தத் துளிகள் வீழ்ந்தன; கிரகங்கள் நிலை மாறி நின்றிருந்தன; அதன் பலனாகத் தீமைகள் பலவுந் தோன்றின; நாடோறும் அத்தீமைகள் வளர்ந்து வருவன போலவே, மற்றைய கருச்சிதைவுகளும் முற்றி நாளுக்கொரு சிறுவராகத் தோன்றி நூற்றுவர் மைந்தரும் பின்னர் ஒரு

மகளுமாக நூற்றொரு நாளும் பெற்றுப் பெற்று மன மகிழ்ந் திருந்தாள், பிரஜையின் பாக்கியங் கேட்டுப் பொருத காந்தாரி யென்பாள். கண்ணிலாத திருதராட்டிரனும் மணியின்றிய மற்றும் நூற்றொரு கண்களையும் பெற்றனன்போல ஆனான். குலப் பெருமையே பெருமையாக்கொண்ட குலத்தலைவன் வீடுமனும், குலத்தின் குறியா விக்குழந்தைகள் தோன்றின வென்று மகிழ்ந்து ஆவன செய்தற்குவேண்டிய புரிந்து, திரு நாட்களும் கொண்டாடி நகரத்தவர் யாவருங் களிகூற நற் பெயர்களு மிட்டனன். இங்ஙனம் துரியோதனன் முதலிய நூறு புத்திரரும் துச்சளை யென்னும் மாதும் பேரரசன் பெரு மக்கள் என்னும்படி பெட்புடன் வளர்ந்து வருகின்றார்கள். பின் னிய புதல்வராலும் பிறந்த மென் புதல்வியாலும் பெருமகிழ்வு கொண்ட காந்தாரியானவள், நூறு இதழ்களாலும் செம் பொன் கன்னிகையாலும் பொலிந்து விளங்கும பொற்றாமரை போலப் பொலிந்திருந்தாள்.

அர்ச்சுனன் பிறப்பு.

பல புத்திரர்களைப் பெற்றுக் களிக்கப் பாண்டு விரும்பின னாதலால், பன்முறையும் குந்திதேவியைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். முயற்சி பல செய்து சில பொருளையே பெறும் பண்பே சிறந்த இவ்வுலகத்தில், முயற்சி யின்றியே வேட்ட பொருள் கிடைக்குமாயின் விரும்பாதவரு முள ரோ? கல்விப்பொருள் செல்வப் பொருள்களிற் சிறந்த மக் கட் பொருள்களன்றோ மன்னன் பாண்டு பெறும் பொருள் கள். மக்கட் பேற்றினும் பெரும்பேறு இம்மாநிலத்திலேது? மக்கட்பேறும் பக்குவத்துடன் கிடைத்திடுமாயின், மனங் கொள்ளாதார் யாவருளர்? அதிலும், ஆற்றலும் அறிவும் தேற்றமும் தெளிவும் ஏற்றமாக்கொண்ட எழில்பெறு மக்க

ளாகக் குந்திபெறுவாள் எனின், பாண்டு மனம் வெறுத்தி டுமா? நூற்றொரு நாடிகளையும் ஐந்து இந்திரியங்களன்றோ செலுத்தி யாட்டுகின்றன? நூற்றொருவர் கௌரவரை யாட் டப் பாண்டுவுக்கு ஐந்து மக்களல்லவோ வேண்டுவது? புத்தி ரர் இருவருடன் பொறுத்திருத்தலில் யாங்ஙனம் பாண்டு மன மிருக்கும்? மக்களைப் பெறுமளவும் குந்தியைத் தூண்டலில் மனந்தாழ்ப்பனு? ஆதலால் குந்தியைப் பன்முறையும் வேண்டி யநுமதித்தனன். "ஆசைக்கோ ரளவில்லை அகில மெல்லாம் கட்டியாளினும்" மாசுற்ற மனத்தினுக்கு அமைதிபிறத்த லேது? ஆசை மிகுதியா லொன்றைப் பெற்றவர், மன மடங் காது மற்றும் பெற முயல்வர். மறு முறை முயிற்சியில் பெரும் பலனையே கருதுவர். போகப் போக மேம்பட்ட பொருளையே விரும்புவது உலகியற்கை யாதலின், குந்தி, முதலில் தரு மமும் கருமமும் கல்வியும் அமைதியும் நிறைந்த தனயனை விரும்பி யதற்குரிய தெய்வத்தால் தரும புத்திரனைப் பெற்று மகிழ்ந்தாள். பின்னர், ஆற்றலே மிகுந்து தோற்றமே பொலிந்து காற்றினைப்போல எங்கும் திரியும் எல்லாம் பொறுக் கும் பெருவலி கொண்ட உருவினை நினைத்துத் தேயுவின் நண் பன் வாயுவைக் கருதியேமனோ வென்னப் பீமனைப் பெற் றாள். மூவுல காட்சியை முறையினிற் கொள்ளத் தனமும் கனமும் பொருந்திய புதல்வனைப் பெறுவேன் என்னப் பெரு மனங் கசிந்து, நன்னீராடிப் பொன்மலர் சூடி அவமன மொழித்துத் தவமனங்கொண்டு தேவாதிபதி தேவேந்திரனை மனங் கொண்டேத்தி மறையை யோதினாள். மனந் தெளி ந்து முகம் மலர்ந்து அவயவமெல்லாம் அழகுறப் பொலிந்து, இந்திரற் கேற்ற சுந்தரம் பெற்றனள். எப்போதும் இன்பத் திலே விளையாடிக் கொண்டிருக்கும் இந்திரற்கு, ஒரு பெண் தன்னை நினைந்து தவங்கிடக்கின்றாளென்னுமிது தரிக்கும்

படியாமோ? இந்திரன் நினைத்து இருந்தவமிருக்கும் குந்திக்கு நேரே குதித்தனன் உடனே. பீதாம்பரமும் பொன்னுபரணமும் தலையில் முடியும் கலையில் நிறைவும் வில்லும் தோளும் வேலும் கையும் வீர கண்டையும் மார்பினுரமும் விளங்கத் தோன்றி விரும்பி வந்தனன். முன்னவர்போல முரணுரு வில்லாது இன்னவன் தோன்றிய எழில்தனைக் கண்டு, மனங் களி கூர்ந்து மங்கை குந்தியும், காமக்கனியெனக் கட்டியணைத்தனள். ஏந்தினன் இந்திரன் தாங்கிய கையுடன் தையலைத் தழுவி அமளியிற் கிடத்தி அருங்கலையுடனே அணைந் தனன் பன்முறை. இன்பக் கடலில் இறங்கிய மாது அன்பேயுருவாய்த் தன்பெருந் தேவுடன் கூடிக்கூடிக் குலவிக் குலவி ஆடியாடி யகங்களி கூர அவனே தானாய்த் தானே யவனாய் உருமாறின்றி ஒருருவாகிப் பெருங் களிப்புடனே பெற்றனள் போகம். கலவியிற் களைத்துத் தளையவிழ் மலர் போற் சோர்ந்து தாழ்ந்து மன்னையும் மறந்து தன்னையும் மறந்தாள். இங்ஙனம், காமக்களியாடிய கனங்குழை தன் பால், தன் பெருங் கருவினைத் தந்தனனுகி, நனவோகனவோ நான் கண்டதென்று, நங்கையு மேங்க நடந்தனன் இந்திரன். என்றும் நேரா வின்பத்தி லாழ்ந்த பொன்தரு கொடியெனும் பூவை குந்தியும், அதுவே நினமாய்க் கருவினைத் தாங்கிப் பொன்போல் மேனி பொருந்தி விளங்கப் பருவ காலத்துப் பார்த்தனை யீன்றனள்.

“எங்குநன் னிமித்தஞ் செல்ல இருநில மகிழ்ச்சி கூரப்
பங்குனி நிறைந்த திங்க ளாதபன் பயிலு நாளில்
வெங்குனி வரிவில் வாழ்க்கை விசயனும் பிறந்தான் வென்றிப்
பங்குன னென்னும் நாமம் பகுதியாற் படைத்திட் டானே.”

“கற்பக மலர்கள் சிந்திக் கடவுளர் கணங்க ளாட
வெற்பக முனிவ ரீண்டி மங்கல வேதம் பாடப்

பொற்பக முழவு விம்மப் புரிவளை முழங்கி யார்ப்ப
நற்பக லிதுவென் றெல்லா வுலகமும் நயந்த வன்றே."

எங்கும் நல்ல நிமித்தங்கள் தோன்ற மாநிலத்தார் மகிழ்ச்சி மிகுந்திருக்க, பங்குனி மாதத்துப் பூர்ணிமையிலே நல்ல ஹோரையில் பங்குனன் எனும் நாமத்தை யுடைய விஜயன் பிறந்தான். கடவுட்கு அதிபனான பெருங் கடவுளா மிந்திரனே இந்தப் பார்த்தனுகையால், கடவுளர்களெல்லோரும் கற்பக மலர்கள் சிந்தினர்கள். முனிவர்கள் கூடி மங்கல வேதம் பாடினர்கள். சங்கொலிகள் பொங்கி யொளித்தன. இத்தனை நன்னிமித்தங் கண்டு உலகமும் களித்தது. "விளையும் பயிர் முளையிலே காணும்" என்னும் பழமொழிக் கேற்ப, இம்மகவினது அழகும் அறிவும் ஆற்றலும் தேற்றமும் உடலாலும் உவகையாலும் பொருந்தி யிருத்தல் தேறித் தாயும் தந்தையும் மாத்திரையும் மற்றை மங்கையரும் போற்றிக் களித்துப் புனித நீராட்டி அயினிநீர் தெளித்து அன்புடன் வளர்த்தார்.

நகுல சகதேவர் பிறப்பு.

பின்னரும் மன்னன் பாண்டு, குந்தி பெற்ற பாக்கியம் மற்றொரு மனைவியாகிய மாத்ரி பெறுதிருக்கும் பழியினை நோக்கி, அவளும் களிக்குமாறு ஒருபாயம்செய்தான். மக்கள் மூவாலும் மகிழ்ந்து பேருவகை பூண்டு சித்தம் செழித்திருக்கும் சமயம் பார்த்துக், குந்தியின் அருகே சென்று குணங்களைப் பேசிப், புத்திரர் விளையாட்டிலும் சிறிது பேணியிருந்து, உவகை காட்டிப் பின்வருமாறு கூறினள்.

அருங்குலக் கற்பினுக் கணி யென விளங்கும் ஆருயிர் நங்காய்! குந்தி!! உன் மாற்றவளாகிய மாத்ரியின் மனநிலையிருந்தவாறென்னே!!! மாற்றாளாகிய நின்னை மதியாதிருக்

கின்ருளா? அன்று முதல் இன்று வரை நின்னை மூத்தவ ளெனவே மதித்துக் கூடிக்குலாவி யிருக்கின்றனளேயன்றி, ஒரு சமயமாவது மறந்தேனும் மாறு பேசியிருக்கின்ருளா? இருவரை மனைவியராக் கொண்டவர் அடையும் துன்பத்தில் ஒரு சிறிதேனும் நான் அடைந்ததேயில்லை. இந்த நன்மை யெல்லாம், மாத்ரியின் நற்குண நற்செய்கைகளாலும், நீ அவளிடம் காட்டும் ஆதரவினுலுமல்லவா நான் பெற்று மகிழ்ந்திருக்கிறேன். தனக்கென ஒரு வாழ்வும், தனக்கென ஒரு சுகமும் தனக்கென ஒரு பொருளும் வேண்டுமென் றெண்ணுதினிது உவந்திருக்கும் மறுமனைவி மாத்ரி யொருத்தியே யன்றி, விரல்வைத்தெண்ண இவ்வுலகில் மற்றியார் இருக்கின்ருர்கள்? அவள் மனங்கலங்கி யிருந்ததை யொருதினமேனும் நான் கண்டதில்லை. உன் மக்களைத் தன் மக்களாகப் பாவித்தினிது கொண்டாடித் தாலாட்டிச் சீராட்டி வளர்க்கின்ருள். தனக்கென ஒரு குழந்தை யில்லையே யென்னும், பெண்மக்கட்குள்ள இயற்கையானதொரு தோஷமும் இவளிடத்திற் கண்டிலோம். விருப்பு வெறுப்பற்ற நிலையில், கணவனையும் அவன் விரும்பிய மூத்சதாரத்தையும் அவள் மக்களையும் போற்றிப் புனைந்து ஆதரித் தன்புகாட்டுவது, மாற்றவளாகிய தனது கடமையென் றல்லவோ நினைத்திருக்கின்ருள்! அவளாக ஒன்றையும் விரும்பாதவளா யிருப்பினும், அவள் மூலமாக ஒரு மகவையேனும் பெற்றுக் களிப்பதற்கு எனக்கு விருப்பமிருக்கின்றது. அக்களிப்பைப் பெருதது எனக்கொரு குறையாகவு மிருக்கிறது. இந்த என் குறையும் எனக்குச் சொந்த உயிராகிய உன்னுலல்லாமல் வேறு யாரால் நீங்கப் போகின்றது? ஆகையால், என் மனங்களிக்கும்படியும் உன் மக்கள் சிறக்கும்படியும், உனக்குப் புகழ் பெருக்கக்கூடிய ஒரு உதவியை நீ என் பொருட்டு அவட்குச் செய்யவேண்

டும். அவ்வுதவியையும் அன்புடன் ஏற்றுக்கொள்ளும்படியாக அவளை நான் வேண்டிக்கொள்கிறேன். அதனை நீ அவசியம் அன்புடன் அளித்திடல்வேண்டும். அஃது யாதெனில், நீயும் ஊஹித்திருப்பாய்; நானும் சொல்லுகிறேன்; நீ யறிந்த குரு மந்திரத்தை யவட்குக் கற்பித்து உருவேற்றி மனம்பொருந்தச் செய்யவேண்டியதுதான். பின்னர், அவள் தனக்கு நேர்ந்த தேவதையி னருளைப்பெற்று மகிழட்டும்; இக்கடமையை யென்பொருட்டு நீ செய்தே தீரவேண்டும்'' என்று சொன்னான்.

கணவனது உரையைக் கேட்ட அக்கற்புடையாளும், ''ஆருயிர்க் காதலரே! என்னுயிர்க்கொரு பகுதியாகிய என் தங்கை மாத்ரியை எவ்வகையிலும் மனங் களித்திருக்கும்படிச் செய்ய வேண்டுவது எனது கடமையல்லவா? இதற்கொருவர் தூண்டலும் வேண்டுமோ? அன்றி அவள்தான் விரும்பிக் கேட்டலும் வேண்டுமோ? என்னிடத்தில் அவள் காட்டும் அன்பிற்கும் ஆதரவிற்கும் நான் என்னுயிரையே அவட்கு அளித்தலிலும் உரிமையுடையேன். மக்கட் பேற்றின் மகிழ்ச்சியா லிக்கடமையை மறந்துளேன். மாத்ரி நற்குணவதியாகலின், குறிப்பேனும் காட்டினாளில்லை. மனம்வேறுபட்டிருந்தால்தானே குறிப்பேனும் காட்டியிருப்பள்! நான் மறந்திருந்ததே மடமையாகும். ஆனாலும், மடமங்கையாதலாலும் மாற்றவளாதலாலும் விருப்பு வெறுப் பற்றவளாதலாலும், நானே அவளிடம் நேரிற் குறித்திட நாணுகின்றேன். தாங்கள், அவளைச் சம்மதிக்கச் செய்து, எங்களிருவரையும் வைத்துக் கொண்டு எனக்கு உத்தரவு செய்யுங்கள்; நான் அந்த மறையை யவள் காதிலும் ஓதுகின்றேன்'' என்று மறுமொழி கூறினாள்.

மன்னன், மனம்மாறில்லாத மாத்ரியை யழைத்து வேண்டுவன கூறித் தன்னிச்சையை நிறைவேற்றும்படியாக இரந்து வேண்டினன். முன் குறித்தபடியே குந்திமாதேவியும் மறையவரருளிய மந்திரத்தினை, மங்கல ஸ்நானம் பெற்று சுமங்கல அணிகள் பூண்டு வந்தருகில் நின்ற, அந்தச் சுந்தரி மாத்ரிக்கும் உபதேசித்தாள். நற்செய்கையிற் பழகிய நற்குணவதியும் நன் மனத்திலேற்று உருவேற்றி இருவர் மைந்தரை வேண்டி, இரவி தன் புதல்வரிருவர் தேவரையும் நினைத்து அமளியிலிருந்தாள். அக்கணமே அச்வினி தேவதைகள் இருவரும் தோன்றி ஒருவர்போல இன்புறக் கலந்து இரட்டைக் கருவினைப் பதித்துப் போனயிர். பருவரல் யாதுமில்லாப் பாவை போன்றாளும், பருவப் போதினில் பாலகர் இருவரைப் பெற்றெடுத்தாள்.

"இறைவனும் மகிழ்ந்து பின்னும் யாதவிக் குரைப்ப அந்த
மறையினை முறையிற் பெற்ற மத்திர ராஜன் கன்னி
குறைவற இருவர் வேண்டுங் குமரரென் றுன்னி நின்றாள்
நிறையுடை யிரவி மைந்த ரிருவரு நினைவின் வந்தார்."

"மருவருங் குழவி யாயு மறையினல் வரிசை பெற்ற
இருவரு மொருவர் போல இன்புற மணந்த போதில்
பருவர லியாது மில்லாப் பாலக ரிருவர் சேரக்
கருவினைத் துதித்தார் யாருங் கண்ணெனக் காணு நீரார்."

"சசிகுல நகுல னென்றும் தம்பிசா தேவ னென்றும்
விசயனோ டெண்ணும் வீமன் மேதகு தரும னென்றும்
அசைவறு சிங்க சாப மனையவ ரைவ ராலும்
வசையறு தவத்தின் மிக்கான் மகிழ்ச்சியால் வாழ்வு பெற்றான்."

இங்ஙனம் புத்திரர் ஐவரையும் பெற்றுப் பாண்டு மன்னன், வசையற்ற தவத்திற் சிறந்தவனுகி மகிழ்ச்சி மேற்

கொண்டு வாழ்ந்திருந்தாள். புத்திரர் ஐவர்க்கும் தருமன் பீமன் அர்ச்சுனன் நகுலன் சகாதேவனென்னும் நாமங்களைப் பெரியோர் மதிக்கப் பொறித்து வளர்த்து வந்தான். ஐந்து புத்திரரும் ஞானேந்திரிய பஞ்சகம்போல், தாய்க்கும் தந்தைக்கும் களிப்பூட்டி வளர்ந்தார்கள். தாதியர் இடுப்பிலும் தந்தை மார்பிலும் தாயர் கைகளிலுமான தன்மையில் வளர்ந்து தளர்நடையும் கிளி மொழியும் பழகிக் குழலையும் மதலையும் பேசிச் சிறுதேர் உருட்டி விளையாடி மங்கையர் சிற்றில் சிதைத்துப் புலிமுதல் விலங்கோடாடி வேதியர் வீதிதோறும் சென்று விளையாடலுற்றார்கள்.

பருவம் வந்தகாலைச் செய்தவத்தையுடைய முனிவர்களாற் சடங்கியற்றிச் சிகையுடன் முப்புரிநூலும் பூண்டு வித்தைகள் பயிலவாரம்பித்து, மெய்யானதவம் விளையும்படியாகக் குற்றமில்லாமற் பதினாறு கலைகளேயுடைய சந்திரனிலுமேம்பட அறுபத்துநான்கு கலைகளும் நிறைந்து பொருந்தினார்கள். அறிவில் மாத்திரமன்றி அழகிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கினார்கள். நற்குலத்திற் சற்புத்திரர் உதித்திடுவாராயின், அக்குலமும் அம்மனையும் செல்வமும் சீருஞ்சிறந்து விளங்கிடுமென்றால், பார்த்திவரிற் சிறந்த பாண்டவர் பிறந்த குலத்தையும் மனையையும் பற்றிப் பேசல்வேண்டுமோ? முன்னிலும் பன்மடங்காகக் குலமும் கோத்திரமுஞ் சிறந்து, அறவோரும் அந்தணரும் மறவோரும் மற்றவரும் நாடோறும் மனையிற்கூடி அளவளாவிச் செல்லும் வழக்கம் மிக்கதாயது.

பாண்டு இறத்தல்.

சந்தணச்சேறும் தண் பனிநீரும் மெய்யிற் கலந்தணிந்து நன்மலரும் சூடி யாவருங் களிகொண்டாடச் சீதமதி வெண்ணிலாவும் இதம்பெறக் குளிர்ந்த தென்றற்காற்றுங் காட்டி,

ஓருயிர் இரண்டு மெய்யாய் உருகுவார் உருகும்படியாக, மன்மதனுக்குமகுடஞ்சூட்டி மகிழ்ச்சி செய்யும் வசந்தகாலம் வந்தது. துறந்த முனிவரையும் மோகமூட்டிப் பெண்பாற் பற்றுறச்செய்யும் வசந்தகாலத்தில் பாவையரிடம் அன்பு வைத்தார், வனிதையர் வசமிழந்திருத்த லுண்டோ? பரந்தெழுகின்ற மாம்பூக்களின் பராகங்களெல்லாம், மன்மதன் தெளித்த மோகனப் பொடிபோற் காவெங்கும் பரந்திருந்தன. முன்னம் தாளினால் பருகிய நீரை மீளவும் செந்தழலாக்கி இந்திரஜாலம் காட்டினவோ வென்னும் படியாக, அசோக மரங்களும் மாமரங்களும் செம்மலர்களைப் பூத்துப் பொலிந்தன. நிலாவெழுந்து வெள்ளென விளங்கி யிருக்கும் காவெல்லாம், வண்டுகள் புதுமையான ரீங்காரம் செய்து புது மணம் பொருந்தி யுலாவிக் கொண்டிருந்தன.

வசந்த ருதுவின் விளைவினாலும் மன்மதன் விளையாட்டாலும், புன்னகை பொருந்திய மாத்ரியின் பொன்னெனும் பொலிவினாலும், நன்னல முறுதலெண்ணி நலம் திகழ் பாண்டு மன்னன், முன்னை வெம்முனிவன் கூறிய சாபமும் மறந்து, மாத்ரியை யருகழைத்து, இன்ப மாற்றங்கள் பல பேசி விளையாடி யிருந்தான். அருமையான தளிர்களை மூக்கினாற் கொய்து, அலகுடன் அலகு சேரும்படியாகக் காவில் குயில்கள் சேவலும் பேடுமாக விருந்து இன்பம் நுகர்தலைக் கண்டு, மெய் புளகித்து மனங் களிக் கடலில் வீழ மயங்கி மதி மறந்து பொருந்திய காதலோடும் பொன்னெனும் மாத்ரி யோடும், மன்னன், மாதவிப் பந்தர் சேர்ந்தான்.

"பஞ்சின்மெல் லடியி னாளும் கணவனும் பழங்கண் ணோட்டம்
நெஞ்சினை நலிய மேன்மேல் விரயமுற் றுருகி யாங்கண்
எஞ்சிய கால மெல்லாம் என்செய்தோம் என்றென் றெண்ணி
வெஞ்சிலைய நங்க வேத முறைமையால் மேவி னாரே."

காமக் களிச் சலதியிற் படிந்தார் கடைபோகு மளவும் திளைப்பரானதால், மன்னனும் மங்கையும் மாதவிப் பந்தரிற் கூடி, ஈருருவும் ஒருருவாகப் பின்னி, உள்ளமும் பிரிவுறாமல் உணர்வது மொன்றே யாகிக் கலவியாங் கள்ளுண்டார்கள், கள்ளுண்டார் பின்னும் மேன்மேல் கள்ளுண்டல் இயற்கை போல, காமக் கள்ளுண்ட மங்கையும் மன்னனும் கூடிக் கூடிக் குலவினர்கள். கலவியின்ப மேம்பட மகிழ்ச்சி முற்றி மாத்ரி கணவனது மார்பின்மேல் அயர்ந்து வீழ்ந்தாள்; மங்கைதன் பார்வை யமுதமும் செவ்வா யூறு மமுதமும் உண்டு திளைத்து மயங்கினவனாகப் பாண்டுவும், போர்க்குரிய மன்மத பாணத்தாலிறந்தான் போலச், சோர்ந்து வீழ்ந்தான்.

மங்கையின் இதழ் அமுதத்தால் மன்னன் இறந்தான் என்றது வியப்பாகுமோ? ஏனெனில், பயப்படத் தகுந்த தீவினைப் பயன் வருங்காலத்து நல்லமுதமும் நஞ்சாக மாறி விடும்; உரிய நல்வினைப் பயன் வருங்காலத்து தீய நஞ்சும் சிறந்த அமுதாகி விடும். முன்னர் முனிவனிட்ட சாபத்தின் முடிவினாலே, மன்னவன் தனக்கு இந்த மாத்ரி வாயமுதம் நஞ்சாய்த் துன்னியது; ஆதலாலே துஞ்சினான் பாண்டு மன்னன்.

பாண்டு விற்குக் கிரியை புரிதல்.

இங்ஙனம் மாதவிப் பந்தரின் அமளியின்மேல மன்னன் சோர்ந்து வீழ்ந்திறந்து, கண்மணி திறவாதிருத்தலே, காமப் போரின் களைப்பு நீங்கி யெழுந்த மாத்ரி யுணராமல், "மன்னனும் தன்போற் சோர்ந்து அயர்ந்தான் போலும்; எழுந்திடுவான்" என்றென்றெண்ணிக் காத்திருந்தாள். காலமும் வளர்ந்ததாகக் காவலன் எழாமை கண்டு மெய் தொட்டுப் பயின்றபோது, "உயிர்த்திலன், விழித்திலன், உணர்ச்சியு மில்லான்" என்று சந்தேகித்து வீழ்ந்தனள்; அரற்றினாள். அய

லவர் எவரும் கேட்டார்; மயங்கிக் கலக்கத்துடன் அழு தழைத்தயர்ந்த மாத்ரியின் குரலைக் கேட்டு, முந்திய கடுவினை முடிந்ததோ என்று மாழ்கி யாவருங் கூடினார்கள். குந்தி தேவியும் கலங்கித் தன் குமாரரோடு வந்தாள். "வந்தது முனிவனிட்ட வெஞ்சாப"மென்று மன்னன் மேனியில் வீழ்ந் தாற்றினாள்; புரண்டாள்; எழுந்தோடினாள்; நிலை கலங்கி வீழ்ந் தாள்; அயர்ந்தாள் அழுகுரலைக் கேட்டு வந்தடைந்த அற வோர்கள் யாவரும், அவர்கள் அழுகையை நிறுத்தி, மங் கையையும் மைந்தரையும் தேற்றி, மேலே செய்வினைக்குரிய யாவுஞ் சேகரித்து ஐவரையுங் கொண்டு ஈமவிதி செய்தார் கள். மன்னனை விட்டுப் பிரிய மனம் பொருத மாத்ரி மங்கை, ஈமத்தழலில் வீழ்ந்து ஏந்தலுடன் சேர்ந்தாள். இரு வர்க்கும் ஒருசேரத் தனையர் மற்றைய கடன்களையும் முடித் தார்கள். தங்கை தன் கணவனுடன் வானுயர் கற்பகம் புகவே, குந்தி தன் மைந்தருடன் கூடிக் கருமங்களாற்றித் தன்மனை புகுந்தாள். காசிபன் முதலாக அங்கு வந்து கூடி யிருந்த வேதியர்கள், ஐவர் புத்திரர்களை யன்னையொடும் மழைத்தேகி அஸ்தினபுரியிற் சேர்த்தார்கள்.

ஐவரும் அஸ்தின புரியி லிருத்தல்.

தம்பி யிறந்ததையும் ஐவர் வந்ததையும் திருதராட்டிரன் கேட்டு மனம் மாழ்கி, அடியில் வீழ்ந்து பணிந்த ஐவரையும் ஆர்வங் கொண்டு மார்புறத் தழுவி யாசி கூறினான். பீஷ்ம னும் விதுர மன்னனும் பாண்டுவை நினைந்து நினைந்து துக் கித்தனராயினும், மக்களைவரையும் பெற்ற மகிழ்ச்சியாலமைந் தார்கள். தாயாதர் ஐவர்க்குற்ற தன்மையைக் கேட்ட கௌரவர் நூற்றுவரும் வந்துதேற்றி யன்பொடு வரவேற்றுத் தழுவிக் குலவியிருந்தார்கள். அவர்கள் நூறு பேரும் இவர்

கள் ஐந்து பேரும் பொய்கையிற் பொருந்திய குமுத மலர் களும் தாமரை மலர்களும் ஒப்ப விளங்கி யிருந்தனர்.

தனது மங்கை, தலைவனை யிழந்து தவிக்கின்றாளென்னும் செய்தி கேட்ட, குந்தி போச மன்னன் தன் கிளைஞரோடும் அத்தினாபுரி வந்து சேர்ந்தான். அந்த யாதவ குலத்திற் பிறந்து வளர்ந்தவராகலால், அவனது பந்துக்களி லிருவராகப் பலராமனும் கிருஷ்ணனும் வந்துற்றார்கள். மாண்ட மன்னனுக்கு மாழ்கி, மாத்ரிக்கு வருந்திப், பின்னர்க் குந்தியையும் அவள் கோமைந்தர்களையுந் தேற்றி, புண்ணிய மெல்லாஞ் சொல்லிப் பூமியாள் முறையும் வகுத்தார். பாண்டுவின்ற முதற்புதல்வன் தருமராசனைநோக்கிக், ''கடல் சூழ்ந்த உலகனைத்தும் கட்டியாள் முறையும் செய்வோம்; கவல வேண்டாம்; இனத்துளார் மனத்தவராக இம்பரிற் பெறாத பொருளுண்டோ? அஞ்சல் வேண்டாம்; அனைத்தும் கைகூடு'' மென்றுத் தேற்றினார்கள். திருதராட்டிரனும் பீஷ்மனும் விதுர ராசனும் வந்த வேந்தரை யுபசரித்து, அவர் சொற்கடவாதவாறு மைந்தரையு மேற்றுக் கொண்டார்கள். சுயோதனனும் மற்றைத் தம்பிமாரும் அனையவர் ஐவரோடும் நீரோடு நீர் சேர்ந்தது போலக் குழுமிக் கூடி விளையாடினார்கள்.

பதிவந்த விருந்தினரைப் பாங்குடன் உபசரித்துத் துதிபெறு மொழிகள் சொல்லித் தூய நல்லமுது மூட்டி மகிழ்ச்சியாய் விருந்து செய்தார்; ''நூற்றுவரைவர் என்னும் இப்புதல்வரை வெல்லுங் கோளார் இப்பூதலத்திலரே யாவர்? ஒருகால் தோன்றுவரேனும் உங்கள் துணையுண்டு வலியு முண்டு; இவர்கள் சுமை உங்கள் சுமையே'' யென்று பீஷ்மனும் விதுரனும் குந்தி போசருக்குக் கூறி வேண்டிய பரிசும் நல்கி அவர் பதிக்கு அனுப்பினார்கள்.

கண்ணிலா மன்னன், ஐந்து கண் பெற்றான்போல, பாண்டவ ரைவரோடும் பழகிப் பெரு மகிழ்ச்சி கொண்டிருந் தான்.

வாரணாவதச் சருக்கம்.

"அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி யேத்துவாம்"

கௌரவர் நூறு பேரும் பாண்டவர் ஐந்து பேரும், ஒரு கொடியிலிருந்து வளர்ந்துவரும் காய்கள்போல அவ ரவர் ஊற்றத்துக்கு ஏற்றபடி வளர்ந்து வந்தார்கள். பள்ளி யிற் பழகும் போதும், நீர் முதலிய ஆடும் போதும், பற்பலச் சிறார்களுடன் பழக்கங் கொள்வது இயற்கை யாதலின், குந்தி தேவியின் கன்னிப் பிராயத்து மைந்தனாகிச் சூத நாயகன் வீட்டில் வளர்ந்து வந்த கன்னனும், இவர்கட்கு நட்பினனாகி அமைந்தான். காந்தாரிக்கு உறவினனாகிய சுபல தேசத் திளங் குமாரனான சகுனி யென்னும் சௌபலனும் மன்னன் மக்களுடன் சேர்ந்து பழகுறலானான்.

நட்பென்பதும் மனத்து உறவென்பதும் குலத்தையும் குடும்பத்தையும் தாண்டிக் குணத்தையும் மனப் பழக்கத்தை யுமே பற்றி உறவு கொள்ளும்; அதாவது, வெவ்வேறு குலத் தினராயினும் வெவ்வேறு குடும்பத்தாராயினும் குண வொற் றுமை யுடையவராயின், அன்புடன் பழகி யார்வம் மிகக் கொள்வது உலக இயற்கை; இச் செயல்களைக் கண் கூடா கக் கண்டிருக்கிறோமன்றோ? இதற்குச் சான்றாயினார் பாண்ட வரும் கௌரவரும் என்பது இச் சருக்கத்துச் சரித்திர

மாகும். நாளடைவில், சுயோதனன் முதலிய நூற்றுவரும் பாண்டவரிடத்திற் காட்டிலும் கர்ண சௌபலரிடத்தில் அன்பு மிகக் கொண்டொழுகினார்கள். கர்ணனும் சகுனியும் பாண்டவரிடம் இயற்கை அழுக்காறு கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஏனெனில், தர்ம ராஜன் பிறப்பாலும் குணத்தாலும் சத்யத்தினாலும் பொறுமையினாலும் பெரியோரது நன்மதிப்பினாலும் தலைமை பெற்றுள்ள தன்மையால் அவனிடம் பொறாமை கொண்டனர். வீமன் மிருக பலமுடையவனாகி யாரையும் எவ்விளையாட்டாலும் தோல்வியுறச் செய்து அடங்காத் தன்மையும் கர்வமும் சுதந்திரமும் சேர்ந்துள்ளவனாகை யால், தமக்கு எவ்வகையிலும் சிறப்பெய்தாததது கண்டு, அவனிடம் அசூயை கொண்டொழுகினார்கள். விஜயன் பேச்சிலும் நடையிலும் யுக்தியிலும் யோசனையிலும் அழகிலும் அறிவிலும் சிறந்து, கண்டார் களிக்க விநயத்துடன் இருந்த தன்மையினால், இவனிடமும் பொறாமை யியற்கையிலேயே நிகழ்ந்துள்ளது. அன்றியும், கர்ணன் தனக்கு ஒரு ஆதிக்கம் ஏற்படுத்திக் கொள்ளற்காகக் குறுக்கு வழியில் எதிலும் ஓர் யுக்தியைப் போதித்துக் கௌரவரைத் தன் வசஞ் செய்யும் போதெல்லாம், அர்ச்சுனன் இடைப் புகுந்து அவ்வழியைத் தக்க நியாயங்களாற் கண்டித்துக் காட்டிக் கர்ணன் கட்சியை வீழ்த்தி விடுவானாகையால், கர்ணனுக்குப் பார்த்தனிடம் அடங்காக் கோபமும் தீராப் பகையும் உள்ளத்தில் சனித்திருந்தது. துரியோதனன் செல்வச் சிறப்பிலும் மன்னன் தலைமகன் என்னும் பெருமையிலும் தொண்ணூற்றொன் பதின்மருக்கு மூத்தோன் என்னும் மேம்பாட்டிலும் ஆடையாபரணங்களின் ஆடம்பரத்திலும் தன்னையே யாவரினும் மேலாக மதித்துத் தலை நிமிர்ந்துள்ளவனாகையால், புத்தியிலும்

யுக்தியிலும் சிறிது தாழ்ந்துள்ள போதும், தன் மதிப்பே மதிப்பாகத் தலை நிமிர்ந்து நடப்பானாகி, யார் கட்சி எப்போது மேம்படுமோ அந்தக் கட்சியைச் சேர்ந்து கொள்வான். பாண்டவர் ஐவர்களால் விளையாட்டிலும் வினையிலும் தனது கட்சி தோற்றுப்போய்ச் சிறுகாலம் கலங்கி யிருப்பானாலும், ஆடம்பரப் பிரியனாகையால், அக்கலக்கத்தைத் தீர்க்கமாகக் கொள்ளாது மறந்து விடுவான். ஆனாலும், இவனுக்கு எவ்வகையிலும் வீமனே எதிர்நின்று தோல்வியுறச் செய்துவந்த படியால், வீமனிடம் ஒரு சிறிது அழுக்காறு சுயோதனன் மனத்தில் தோன்றி முளைத்திருந்தது; என்றாலும், தந்தையும் பாட்டனும் தாயும் சிற்றப்பனும் நன்மதிப்புக் காட்டும் பாண்டவர்க்குத் தீங்கு செய்வதை மனத்திலே நினைத்தானலன். அண்ணன் போன வழியே தம்பியர் அனைவருமாதலால், அவர்களும் பாண்டவர்களிடம் நட்பினர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். எனினும், துர்யோதனனுக்கு அடுத்துள்ள தம்பியும் வலக்கை போன்றுள்ளவனுமாகிய துற்சாதனன் என்பானுக்கு மாத்திரம் பாண்டவரிடம் ஒருவகைப் பொறாமை யூறிக் கொண்டிருந்தது. இங்ஙனம் பொருந்திய குணம் செயல்களுடன் பாண்டவர் ஐவரும் கௌரவர் நூற்றுவரும் கர்ண சௌபலர்களும் ஆடலும் ஓடலும் கல்வியும் கேள்வியும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். சகுனிக்குக் கௌரவர் சார்பே இயற்கையாயது.

கர்ண சௌபலர்கள் தம் எண்ணமே குறியாக்கொண்டு, துற்சாதனனைக் கையிற் போட்டு மெள்ள மெள்ளச் சமயம் நேர்ந்துழி யெல்லாம் துர்யோதனன் மனத்தமைதியைக் கெடுத்துப் பீமனிடம் பகை முதிருமாறு செய்து கொண்டு வந்தனர். விளையாட்டையும் வினையாகக் கொண்டு வீமனை வீழ்த்தவே சமயம் நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வச்

சமயம் நேரும்போதெல்லாம் துரியோதனனுக்குத் தூண்டு தலும் செய்து வந்தார்கள். ஒரு நாள் நூற்றேழு பேரும் கங்கை நீரில் விளையாடிப் பன்னெடு நேரம் கழிந்தபின் களைத்துக் கரையேறி யுணவு வகைகளைக் கொண்டு, தத்தம் பொன்னிற மனைகளிற் புகுந்து, அயர்வுடன் அவரவர் அமளியிற் படுத் துறங்கினர்; அன்றைய நீர் விளையாட்டில், துர்யோதனுக்கு மிகத் தோல்வியும் வீமனுக்கே எவ்வகையிலும வெற்றியும் நிகழ்ந்துள்ளபடியால், வீமனிடம் இயற்கையாலும் செயற்கையாலும் வெறுப்பும் வெகுளியும் கொண்ட சுயோதனன் கலங்கிய மனத்தினோடே பள்ளியறைப் புகுந்தான். நித்திரையும் சரிவர நேரவில்லை. இவனைப் போலவே அச் செயலில் வன்பு கொண்ட நெஞ்சினராகிய துற்சாதனன் கர்ணன் சகுனி மூவரும் தூங்காதிருந்தனர். துஷ்ட சதுஷ்டர்களும் சேர்ந்து உலகமும் ஒலியடங்கி யோசனையும் ஒன்று படுமாயின் விளைவது தீமை யென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? நால்வருங் கூடினர். நன்கு கலந்தாலோசித்தனர். வீமனை வீழ்த்தும் வகை யேதெனக் கருதினர். விழிப்பில் அவனை யேதும் செய்யத் தம்மாலியலாதெனத் தெளிந்தனர். அவன் அயர்ந்து நித்திரை கொள்ளும்போது அப்படியே அப்புறத் தகற்றல் வேண்டுமெனத் தீர்மானித்தனர். நால்வர் ஒன்று பட்டால் நடவாததும் உண்டா? அதிலும் இவர் துஷ்ட நால்வர்; காலமோ இரவு; யாவரும் தூங்கி யெங்கும் ஒலியடங்கி யிருக்கின்றது; நற்புத்தி போதிப்பவரோ ஆங்கில்லை; கொண்டதே கொள்கை யென்று சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தனர்.

வீமன், மனோவலியும் தோள்வலியும் மிகக் கொண்டு நினைத்தபடி யெல்லாம் வெற்றி பெற்றவனாயினும் விருப்பொடு வெறுப்பிலும் மனத்தைப் பழக விடாது காத்துவரும்

இயற்கைக் குணம் பொருந்தினவனாதலால், மனக் கலக்கமும் எதிர்கால நோக்கமும் சிறிதேனு மில்லாமல், மலை போலும் உணவை வயிறாரவுண்டு களித்து மலை யெனுஞ் சரீரத்தை மலர்ப்படுக்கையிற் கிடத்திய உடனே அயர்ந்து நித்திரை போயினன். அப்புறம் இப்புறம் திரும்பவேயில்லை. ஆழ்ந்த நித்திரையில் வீழ்ந்து விட்டான்.

வஞ்சகர் நால்வரும் நெஞ்சினில் துடிப்புடன், நகர்ந்து சென்று, வீமன் துஞ்சும் அமளிபால் தொடர்ந்து வந்தனர். கயிறும் கட்டிலும் கையுடன் கொணர்ந்தனர். வாசுகி யென்னும் பாம்பைக் கொண்டு மந்தர மலையைக் கட்டிக் கடலில் வீழ்த்தியது போலக் கயிறு கொண்டு வீமனைப் பெயரா வண்ணம் நால்வருஞ் சேர்ந்து நன்றாகக் கட்டிக் கட்டிலில் தூக்கிப் போய்க் கங்கையின் மடுவில் வீழ்த்தினர். வீழ்த்தியபோது வீமன் விழித்துளனாயினும், கட்டுண்டு நீரிற் கிடந்தமையால், விரைவி லொன்றும் அவர்க்குச் செய்ய இயலாதிருந்தான். எனினும், தன்னுடைப் பெருமூச்சு கொண்டு உடலினைப் பருக்கச் செய்தனன். அப்போதே உடலைச் சுற்றிய கயிறெல்லாம் துண்டுகளாகத் தெறிபட்டுதிர்ந்து போயின. விடுபட்ட நாகம்போற் சீறிக் கொதித்தனன். விரைவினிற் கரையினை யேறிச் சேர்ந்தனன். ஆயினும் மனங் கலங்காமல், "ஒருவாறு அத்துஷ்டர் நால்வரே இதனைச் செய்துளா" ரென்பது தெளிந்து, "பயங்கொளிகள்" என்று மனத்தினில் அசட்டை காட்டி நகர்க்குச் செல்வேனென நடந்தனன். மீண்டு உயிர் பிழைத்துத் திரும்புவனாயின், "உடனெதிர்த்து உடலை மிதித்துக் கொன்றிடுங்கள்" என்று துர்யோதனனால் ஏவப்பெற்று ஆங்கு ஒளித்திருந்தத வீரரனைவரும் நாற்பக்கமிருந்தும் நடந்தோடிவந்து, வீமனைப் பிடித்துத் தாக்கினர். வீரர் அனைவரையும் தனது வெறுங் கைகள்கொண்டே மூட்

டுப்பூச்சிகளை நசுக்குவதுபோல் ஒருவரொழியாது நசுக்கி, மனத்திற் கறுவிளைத்துக் கோபத்துடன் ஏகினான். ஒளித்திருந்து செயலறிந்த துஷ்டர் நால்வரும் தம் செயல் அவலமானதும் வீரர் எல்லாம் மடிந்தமையுங்கண்டு, கோபமுடைய வீமனிடம் நெருங்குதற்குப் பயந்து ஒருவர்பின் ஒருவராக ஓடிப்புகுந்து படுக்கையில் ஒளித்தனர். வீமனும் துணைவருடன் தனக்கமைத்துள படுக்கையறைபுக்கு அமளியிற் றூங்கினான்; மறுநாள்முதல் உட்பகை மிகுந்து, உள்ளெழுந்த கோபத்துடன் உறவு கொண்டாடுவாராயினர்.

மற்றொருநாட் பகலில், நீரிடைக் கழுக்களை நிறுத்தி மறைத்துவைத்து, வீமனுடன் சேர்ந்து ஆறு பாய்ந்து விளையாடுவமென்று ஐவருடன் நூற்றுவரும் கர்ண சௌபலர்களும் அணைந்துவந்தனர். உள்ளந்தெளிந்தாருக்கு உட்பகையும் அற்பச் சூழ்ச்சிகளும் தோன்ற மாட்டா. சிலர் சேர்க்கையால் ஒருகால் தோன்றுமாயினும் நிலைத்திருக்கமாட்டா. வஞ்ச நெஞ்சு படைத்துள்ளார்க்கு, வெளிப்பட உறவுகாட்டி உள்ளூறப் பகைமைகொண்டு அற்பச் சூழ்ச்சிகள் செய்து விளையாட்டினையும் வினையாற்றிற் கொண்டுமுடித்து எப்போதும் ஏதம் விளைத்துக்கொண்டே யிருப்பது இயற்கையாகும். துஷ்ட நால்வரைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அதுவும் வீமன் விஷயத்திலா? நினைப்பதெல்லாம் தீங்கே; செய்வதெல்லாம் சூழ்ச்சியே. சாது ப்ரக்ருதியையுடைய பாண்டவர்க்கு இச்சூழ்ச்சி நினைவில் வருதற்கு நியாயமே இல்லை. ஆதலால், தெளிந்த மனத்துடன் ஆடல் குறித்துக் கூடுவாராயினர். குறித்த விளையாட்டின்படி வீமனும் துர்யோதனனும் ஆற்றிற்குதித்து ஆடும்போதினில் தன்னை யொருபுறஞ் செலுத்தித் தான்மாத்திரம் தொடாமல் தயங்கிநின்ற துர்யோதனன் செய்கைகண்டு நீரிடைமூழ்கி யாங்கமைக்கப்

பெற்ற சூழ்ச்சியை யறிந்து, பக்குவமாகவே இருந்து பக்கங்களில் ஆடிக் கரையேறி யன்னவர் சூழ்ச்சியை யவலப் படுத்தினன்.

பின்னொருகால், வீமனது திறத்திற்கு மெச்சி யாவரும் விருந்து கொள்வதென நல்விருந்தமைத்து, வீமனும் தாமும் விலகியிருந்து விருந்துணக் கொள்ளும்போது, வீமனுக்கெனச் சமைத்துள்ளே விடந்தோய்ந்த உணவுகளைக் கொணரச் செய்து படைத்து, அவன் உண்டு மயங்கியபோது கீழே கிடத்திக்கயிற்றினற் பிணித்து, மனமொத்த மெய்காவலர் பலரைக்கொண்டு கங்கை மடுவிலே வீழ்த்திவரச்செய்தார்கள். மனமற்றுச் செயலற்றுப் பீமனும் கங்கையிலாழ்ந்து போயினன். கடலிடை வீழ்ந்த மலைபோலவே, குன்றெனத் தோன்றிய வீமனது பெருத்த தேகம், ஆற்றிலிருந்து மேலெழாமல், பாதலத்திலாழ்ந்து போயது. ஆங்குப் பாதலத்தடியில் ஆடிக்கொண்டிருக்கும் பாம்பின் பிள்ளைகள், "ஈதொரு மலையோ" வெனக் கிட்டித் தம்விடங்கொண்ட பற்களால் சரீரத்தைத் தீண்டின. பாம்பின் பற்கொண்ட கொடுவிடம் பாய்ந்து வீசவே, வீமன் மேனியிற் சேர்ந்துள்ள சிறுவிடம் தீய்ந்துபோய், பெருமருந்துண்டு நீங்கிய பெரும் பிணியாளன் போல, மெய்ப்பிணி நீங்கிப் போய்ச் சூரியன்போல் விளங்கிக் கண்கள் திறந்து சுற்றும் நோக்கினன். அரவின்சிறூர்கள் ஆச்சரியமும் அச்சமும் உடன் கொண்டு தமர்க்குத் தலைவனாகிய வாசுகியினிடத்தில் இவன் வரவுணர்த்தினர்கள். "மாசுணத்தின் விடங் கொண்டும் மரித்திடா தொளிரும் மானுடன் யா"ரென வாசுகி வியந்து, அருகழைத்துச் சரிதமுணர்ந்து, வாயுவின் புதல்வனென்று உளந்தேறி, தங் குலத்துக்குக் கருணையாளனான காற்றின் புத்திரனாகலின், பொற்குடத் தமுதமளித்து நன்கு உபசரித்துதவிகள் செய்தான். வெங்கனலா

லெரிந்து போயுள்ள வெய்ய வான்புலம், தண்முகில் மழையி னால் தழைத்திடல் போல், அமுதுண்ட வீமன் அழகுற்ற மைந்தனன். அமுதுண்டு பெருகிய யொளியுடன் விளங்கிய வீமன் சரீரம் ஆயிரம் யானைகட் குரிய பலத்துடனமைந்து பொலிந்திட, எட்டு நாட்கள் ஆங்கு இருந்து வளர்ந்தனன்.

வீமனை நதியிடை வீழ்த்த பாவியும், "விட்டது நம் சனி" யென வியந்து, அவன் திரும்பாமை கண்டு, அகங்களி கூர்ந்து அரண்மனை போய்ச் சேர்ந்தனன். தினகரனைப் பொருகடல் தள்ளிப் பொலிகின்ற மாலையில் தோன்றும் நக்ஷத்திரங்கள் போல், வீமன் நதியிடைப் புகுந்த அன்று மாலையில் நகரெங் கும் விளக்கொளி பரந்திருக்கவும், மாலை கடந்தும் மைந்தனைக் காணுகவளாகிக் குந்திதேவி மைந்தனைத் தேடுவாளாயினள்; உதிட்டிரன் உணர்ந்திலன்; அர்ச்சுனன் அறிந்திலன்; தம்பிய ரிருவரும் தன்மை தெரிந்திலர்; இதென்ன மாயமோவென்று மயங்கினர்; வீமனதாற்றலில் அழுக்காறுடைய சுயோதனன் சூழ்ச்சியோ ஈதென மனதிற் கொண்டனர். தம்மாலியன்ற வரை எங்கும் தேடினர்; கண்டிலா ராகையாலிரவெலாம் புழுங் கியிருந்து மறுநாட் பகலினில், மன்னற்கும் பாட்டற்கும் உணர்த்தினர். நகரினும் வனத்தினும் ஆற்றிலும் மலையிலும் ஆட்கள் அனுப்பித்தேடினர். பயனொன்றும் பெறுதவராயினர். நூற்றிரண்டவரும் துக்கம் காட்டினர்; சில பகல் கழியச் சிறு வன் வருவானெனத் தாய்க்கும் சகோதரர்க்கும் துணிவு கூறி னர்; என்செய்வாள் குந்தி? ஏங்கியிருந்தனள்.

எட்டு நாட்களிருந்து இளைப்பாறினவுடனே, தன்ன கர்க்குத் திரும்ப மனங்கொண்ட வீமனது எண்ணந் தெரிந்த வாசுகி மன்னன், தமது விமானமீ தவனை யேற்றி, முன்வந்த நீர் வழியே கொண்டு போய்க் கங்கையின் கரை சேர்ப்பித்தனன். நதியினில் வீழ்ந்து நலங்கெட்ட வீமன்,

மீளவும் அந்நதியிலிருந்தே நலங்கொண்டு தோன்றி, சூரிய ளுல் விளங்கும் தாமரையும் சந்திரனு லொளிபெறுவானமும் போல மலர்ந்து ஒளி மிகுந்திருந்தான். தனது பிரிவினுல் தளர்ந்து வாடிய தாயர் சோதரர் வேதியர் விதுரன் வீடு மனுதியர் மனங் களித்திடக் காட்சி கொடுத்தான்; வேதியர் முதலினோர்க்கு மகிழ்ச்சியாயினும், ஞாதியர், முதலினோர் நடுங்கி யேங்கினர். குந்தியின் ஆசியும் குலவு நல்லுரைகளுங் கொண்டு வளர்ந்து, வெளியில் நட்பும் ஒளிவில் பகையும் கொண்டுள துரியோதனுதியரிடத்து உறவாடலை விட முடியாதவாகி, ஒரு மனையிலிருந்து பாம்புடன் பழகுவார் போலவே மிகவும் கவனத்துடன் ஐவரும் காலங் கடத்தி வந்தார்கள். சிறுகச் சிறுக இருதிறத்தாரும் மனம் கசந் திருக்கும் தன்மையை வீடுமன் விதுரர் அறிந்து கொண் டனாயினும், அவ் வெறுப்பை யகற்றவாவது கர்ண கௌபலர்களைப் பிரிக்கவாவது முடியாதவர்களாகி, வித்தை யின் தெளிவினுல் வேற்றுமை நீங்கலாமெனக் கருதி, நல் வித்தைகள் நாளும் கற்பித்திடும் நல்லாசிரிய னொருவனை நாடி யிருந்தனர்.

ஆசிரியரிடம் வில் முதலியன பழகல்.

கௌதம முனிவரிடத்தில் வில் வாள் முதலிய படைக் கலம் யாவும், விடுக்கும் படுக்கும் முறையும் நன்ருகத் தான் பயின்ற தன்றி மாணவர்க்கும் நன்கு பயில்விக்கும் அந்தக் கௌதமாது பெயரனுன கிருபாச்சாரியர் என்பவனைத் தேடி யழைத்து வந்து உபசரித்து, விதுரரும் பீஷ்மரும், நூற்று வருடன் ஐவர்க்கும் போர்க்குரிய கல்வியனைத்தும் புகட்டி வைத்தனர். ஆசிரியரும் ஆற்றலும் தேற்றமும் அறிவும் அமைந்துள்ளவராதலால், மக்கள் தம்மில் மாறு பாடின்றி

யாவரிடத்தும் ஒரு நோக்கத்துடனே யிருந்து பயிற்று வித்தனர். ஆசிரியர்க்கு வேற்றுமையில்லை யாயினும், கல்வியை ஏற்கும் மாணவரது அறிவு ஆற்றல்களின் வேற்றுமைகளால், யுக்தி புக்திகள் ஏற்றத்தால், கல்வியின் திறம் மாணவர்க்குள் வேற்றுமைப் பட்டுத்தான் நிற்கும். சூரியனொளி எவ்விடத்தும் எப்பொருளினும் ஒரு படியே வீழுமாயினும், அதனை யேற்கும் பொருள்களின் வேறு பாட்டினால் பயனும் வேறாயிருக்கக் காண்கிறோ மல்லவா? கருங் கல்லினும் காந்தங் கல்லிலும் ஒரு படியாகவே சூரியனொளி வீழ்ந்திடுமேனும், காந்தக்கல் அடையும் பயனைக் கருங்கல் அடைந்திடல் இல்லையல்லவா? ஆசிரியர் கிருபாச் சாரியாராயினும், அவர் கபட மற்றவராயினும், ஒரு படியே பழக்கினாராயினும், அறிவு ஆற்றல் யுக்தி புத்தியின் மாறு பாட்டினால், ஐவர் அடைந்த பயனைக் கௌரவர் அடைந்திட வில்லை. ஆகையினால் பரிவுடன் இவர் பயிற்றி வந்தனராயினும், வேறொரு ஆசிரியனை விரும்பி, யிருந்தனர். இருள் நீங்கிய தன்மையில் சந்திரனை யுலகம் நயந்த தாயினும், சூரியன் வரவையே எதிர் பார்த்திருத்தல்போல், இவரினும் மேம்பட்ட ஒருவரை ஆசிரியப் பதவியி லமைக்கப் பீஷ்மரும் விதுரருடன் கலந்தாலோசித்தனர்.

துரோணாசாரியர் வரலாறு.

ஸாஹித்யம் ஸங்கீதம் பரத நாட்யம் முதலிய கலைகளிலும், வில் வாள் முதலிய போர்க் கலைகளிலும் சிறந்து நல்லாசிரியராக அமைந்துள்ள ப்ரத்வாஜ முனிவரது மைந்தர் துரோணரென்பார். பரத்துவாச முனிவர்க்குத்தேவமாதாகிய மேனகையால் தோன்றிய காம தாதுவில் தோன்றியவர் இந்தத் துரோணர். இவர் துரோண கும்பத்திலிருந்து

தோன்றிய படியால் இப் பெயரால் அழைக்கப் படுகிறார். பதினான்கு வித்தைகளையும் பெற்றவனிடத்திலிருந்தே கற்று ஏழ்கடலும் பூரித்தனபோல் கல்விகளாலும் கேள்விகளாலும் நெஞ்சு பூரிப்புடையவராகி, ஏழுலகத்தாரும் வியக்கும்படியாக ஆயுதப் பயிற்சியிற் சிறந்த பரசுராமனைப் பலகாலடுத்து ஆயுதங்களின் விடுமுறை தொடுமுறை படுமுறைகளில் நன்றாய்ப் பழகித் தேறியிருந்தார். இக்காலத்தில் துரோணர்க்குச் சமானம் யாருமிலர் எனும்படி உலகப் பிரஸித்தியும் பெற்றிருந்தார். நல்லாசிரியரைத் தேடித் தரும் பொருட்டு வீடும னேவலாற் சென்ற தூதுவராலுணர்ந்து, தர்ம சிந்தையும் ஒழுங்கான வாழ்க்கையுமுடைய துரோணாசாரியார் அத் தூதுவர் வழி காட்ட, கற்புடை மனைவியோடும் கையிற் சிறு குழந்தை யோடும் அத்தின புரியைச் சேர்ந்தார்.

நல்லா சிரியர் துரோணா சாரியர் வந்துள்ளமை தெரிந்து பீஷ்ம விதுரர்கள் எதிர்சென் றழைத்து உபசரித்து நல்லாஸனத்திலிருத்தினர். மாதவரும் மன்னற்கும் பீஷ்மர் முதலானவர்க்கும் நல்லாசிகள் கூறி மகிழ்ந்தனர். வந்த ஆசிரியர்க் குரியதாக, அரண்மனை போன்ற தொரு பெரிய மாளிகையும் அதனைச் சுற்றிய சோலையும் அமைத்துக் கொடுத்துக் குடியேற்றினார்கள். தனது கற்பின் மனையாளொடு குடியேறிய ஆசிரியர் துரோணாச்சாரியர், தமது சரிதத்தொரு பகுதியை யொரு நாள் சொல்வாராயினர். "நான் என் ஆசிரியனிடத்தில் கல்வி பயிலும்போது, அங்கே யாகஸேனன் என்னும் அரசிளங் குமானும் கல்விப் பயிற்சிக்கு வந்து சேர்ந்தான்; நாங்களிருவரும் நட்பினரானோம்; அங்கிவேச னென்பவரிடத்துப் பல்கலையும் இருவருங் கூடியே பல நாட் பழகித் தேறினோம்; எங்கட்கு

வித்தை யேறி வந்தன போலவே, நட்பும் எங்கட்குள் ஏறி முதிர்வடைந்தது. ஓருயிர்போலப் பழகி யிருந்தோம். ஒருகால், யாகஸேனன் என்னைப்பார்த்து, நட்பின் மேம்பாட்டினால், கூறுவான்; "என் தந்தை யிறந்து நான் அரசினை யேற்றுக் கொண்டவுடன், என் அரசிற் பகுதி கொடுத்து உன்னை யாதரிப்பேன்; கைவிடமாட்டேன்; உயிருள்ளளவும் இன்றைக்குப் போலவே என்றைக்கும் கூடி யிருப்போம்" என்று உறுதிமொழி கொடுத்துக் கூறினான்; "நீ நட்பிற்குரியாய்; ஆதலினாலும் நாமிருவரும் ஓருயிரும் ஈருடம்புமாகப் பழகியுள்ளோ மாதலாலும், உன் வார்த்தையை நன்றெனவே மதிக்கிறே" னென்று நானும் மறுமொழி யளித்தேன்; சில நாட்களில், அவன் அரசமுறைக்கேற்ப இளவரசு கைக்கொள்ளத் தன்னகருக் கேகினான்; நானும் எங்கள்முறைக் கேற்ப தவஞ்செய்திடுவான் வனத்துக் கேகினேன்; தனத்திலாசையின்றித் தவமே தனமாக் கொண்டு வனத்தில் விரத வேள்விகளிற் பழகியிருந்தேன்; விதியின் வசத்தாலும் விதித்த முறைமையினாலும், பிரமசரிய நிலையின்நீங்கி யடுத்த நிலையாகிய இல்லறத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று என் உறவினர்கள் வற்புறுத்திய தன்மையால், உங்கள் கிருபாச்சாரியருக் கிளையாளான இக்கற்பின் மங்கையை மணந்தேன்; எங்கள் இல்வாழ்க்கையில், எங்குல தெய்வமான பரமசிவன் பேரருளால் இம்மகவினைப் பெற்று மகிழ்ந்தோம். வனவாழ்க்கையைக் கொண்டுள்ள எங்களிருவராலும், இக்குழந்தை வறுமையுடனே வளர்ந்தான்; ஐந்து வயதளவும் இப்படியே இவனை வளர்த்தோம்; குழந்தையின் அறிவையும் ஆற்றலையும் மதித்து, இவன்தாய் மிகக் கலங்கிக் குழந்தையை நன்குகரிகத்தொடு வளர்த்த வேண்டுமென்று நவின்றாள்; ஏனெனில், இக்குழந்தை மாவின்பாலே யல்லா

மல் ஆவின்பால் கண்டறியான்; மெல்லடகுகளே யுணவன்றி நல்லுணவு பெற்றிலான்; கந்தையான உடைகளன்றி அந்த மான உடைகள் உடுத்தறியான்; ஆகையினால், பெற்றவட்குப் பிள்ளையிடம் மனம் பித்தாகையால் துக்கம்கொண்டு ஏங்கி நின்றாள்; மனைவிவருத்தம் மனைவாழ்க்கையில் இன்பந்தரா தாகையால், நானும், எனக்கு அந்த யாகஸேனன் கொடுத்த வாக்கினை யுண்மையென நம்பி, அவனிருந்தாட்சிபுரியும் நகர் சேர்ந்து என் வரவு கூறினேன்.

“என் முகத்தைக் கண்டும் என் குரலைக் கேட்டும்” அம் மன்னன் உணர்ச்சி காட்டாதவனாகி, “நீர் யார்” என்றான்; நான் நடுங்கி, செல்வத்தின் தன்மை யிதுவோ என நினைந்து, முன்னைய செய்திகளைமொழிந்து நின்றேன்; “மன்னன் யான் முனிவன் நீ; எனக்கும் உனக்கும் நட்பென்பது எப் படிக்கூடும்? இது முழுப்பொய்” என்று ஏசி நகைசெய்தான்; அங்ஙன மேசிய யாகஸேன மன்னனாகிய துருபதனைப் பார்த்து, “சொன்ன வார்த்தையில் நீ சோர்ந்துள்ளாய்; ஆனால் நான் சோரமாட்டேன்; நீ முன்னம் புகன்றபடியே உன் புவியில் பாதியும் கொள்வேன்; மற்றும் நேரும் சமரில் நினைத் தேரிற்கட்டிக் கவர்வேன்; இது மெய்; பின்னர்க் கண்டிடு வாய் என்று சொல்லி யவன் பதியகன்று வந்துளேன்” என்று துரோணர் தமது சரிதப்பகுதியைச் சொல்லி முடித்தார்.

அவர் வந்து சேர்ந்தவாறும் விரதமும் சபதமும் கேட்டுப்பீஷ்மரும்விதுரரும்மனமகிழ்ச்சியும் வெகுளியும் கொண்டு, மக்களை வருவித்து அவரிடம் தனுர் வித்தை முதலியன பயிற்றத் தீர்மானித்தனர். க்ஷத்திரிய வீரர்களாகையால். “ஒரு மன்னன், கொடுத்த வாக்கை முடியாதிருந்ததுடன், குழந்தையுட

னும் மனைவியுடனும் ஒரு கற்றுணர்ந்த முனிவர் தன்னரண் மனைகிட்டிய போது உபசரித்து விடாமல், நிற்க வைத்துப் பேசியேசி யவமதித்ததையு'' முணர்ந்து, துருபத மன்ன னிடம் வெறுப்பும் சினமும் கொண்டிருந்தனர். இவரது ஏவ லிற் கிருபாச்சாரியருடன் வந்து வணங்கிய மைந்தர்கள் நூற்றைவரையும் நல்லாசிரியத் தலைவராகிய துரோணாசாரிய ரிடம் ஒப்பித்து, "இவர்க்குத் தந்தையும் தாயுமாக இருந்து, கல்வியும் போர்த் திறமும் நல்லொழுக்கமும் ஒற்றுமையும் கற் பிப்பது உங்கள் கடமையாகும்'' என்று சொல்லியதோடன்றி, "இவர்க்குப் போர்த்திறம் கற்பித்து இவரைத் துணையாகக் கொண்டு உங்கள் சபதத்தையும் முடித்துக் கொள்ள நாங்கள் சம்மதிக்கிறோம்'' என்று அநுமதியும் அளித்தார்கள். அதுவு மல்லாமல், அவரையொரு முனிவரென்றே கருதி யிருந்து விடாது, இன்றுமுதல் அன்னவரையும் அவ்வரசுக்கு ஒரு பாத்தியஸ்தராகவும் சம்மதித்துத் தேற்றினர்.

"முனிநீ யையா இதற்கு முன்ன மின்று முதலா
இனியிவ் வுலகுக் கரசா யெம்மி லொருவ ராகிக்
குனிவில் வலிபா லமருங் கோடி யென்று கொடுத்தான்
பனிவெண் குடையு நிருபர்க்குரிய வரிசைபலவும்"

அங்ஙனமே மக்களையும் அரசமரியாதைக் கேற்ற வரிசைகளை யும் பெற்று அகமகிழ்ந் திருந்தார்.

மக்கள் வித்தையில் விதந்து நிற்றல்.

அன்று முதலாக வரிவெஞ்சிலை முதலிய ஆயுதவகைக ளெல்லாம் தருமன் சுயோதனன் முதலிய யாவரும் ஒரு திறத் திற் பழகி யவரவர் திறத்திற் கேற்றவாறு தேறிவந்தனர். "சிலைக்கு விஜயன்'' ஆகலின், நகரத்தவர்களும் மற்றவர்களும்

"வில்லுக்கு இராகவன் போலும் விஜயனேயாவான்" என்று புகழ்ந்து போற்றி, யவன் திறத்தினில் மகிழவே, சுயோதனன் முதலியாருக்குப் பார்த்தனிடம், முன்னிருந்த பொறாமை பன்மடங்கு மிகுந்து நின்றது; என் செய்வது? இரவிக்கு முன் மின்மினிகள் எதிர்த்து நிற்கமுடியுமா? இதற்காக இரவியிடம் மின்மினிகள் அசூயை கொண்டிருந்தால் யாது பயன்? கல்வியும் ஆற்ற முடையாரிடத்தில் தான் யாவர்க்கும் இயற்கையில் அன்பு ஜனிக்கும்; அதிலும் ஒரு நல்லாசிரியர்க்கு யுக்தியும் புத்தியும் அறிவும் ஆற்றலு மமைந்த மாணவனிடம் அன்பு உதிப்பது இயற்கை யன்றோ? துரோணர்க்கும், எல்லாரினும் பாண்டவரிடத்திலும், அவரிலும் அர்ச்சுனனிடத்தும் பேரன்பு உதித்தது; இவனே தமக்குத் தக்க மாணவன் என்றும், இவனே தமது சபதத்தை முடித்துக் கொடுப்பவ னென்றும் மதித்துக் கவுரவம் காட்டிவந்தார். "நெஞ்சுறவருங் கலைகள் கற்குமவர் தம்மளவில் நேய மகிழாதவர்கள் யார்? ஒருவரு முலகிலில்லை.

ஏகலைவன் கதை.

ஏகலைவன் என்றொரு வேடன் இருந்தான். வேடர்க்கு இயற்கையிலேயே சாதிமரபாக விற்றிறம் அமைந்திருத்தலுண்டு. அவ்வேடர்களினும் இவன் சிறந்துளான்; கொண்ட லக்ஷ்யம் குறித்தெய்து வீழ்த்தும் திறமையில் நன்றாய்ப் பழகியிருந்தான். சித்திரம்போல அம்பெய்து திறமும் கண்பழக்கத்தாலும் கைப்பழக்கத்தாலும் மேன்மைதரும் பழக்கத்தையும் மனனுறக்கொள்ளல்வேண்டும். அதற்கும் யுக்தி சூக்ஷ்மம் வேண்டும். இவை பொருந்திய நற்பழக்கமுமுடையான் ஏகலைவன். இயற்கையறிவு எத்துணை யிருப்பினும், அது, நல்லாசிரியர் பழக்கத்தால்வரும் செயற்கை யறிவுடன் பொருந்திய

போதுதான் சிறப்புறும். ஆதலால், இவ்வுண்மையை யறிந்த ஏகலைவன், "நல்லாசிரியர் இவர்தா" மென உலகம் மதித்துள தாதலின், துரோணாசாரியரைக் குருவென மதித்து அவர்தம் உருவினைத் தன்னில்லத்தினிற் சமைத்துப் பூசித்து விற்றிறம் பழகி வந்தான். "நம்பினார்க்கு நம்பியுதவுவான்" எங்கும் நிறைந்த எல்லாம்வல்ல இறைவனே வித்யாரூப னாகையால், எவ்வுருவில் எந்நாமமிட்டுப் பூசித்தாலும். அவர் உறுதியும் நன்மையும் பொருந்திய மனமுடையவராயின், அவர் கருத்தின் பொருளையவர் நம்பிய உருவத்தின்மூலம் கொடுத்திடுவனென் பது, ஏகலைவன் மாட்டு நன்றாய்ப் பலித்துளது. "வில்திறத்தில் இவனுக்கு ஒப்பு இவ்வுலகிலில்லை" யெனும்படி சிறந்துள்ளவ னானன். தமது மாணவன் அர்ச்சுனனுக்கு ஒரு ஒப்பு உலகி லிருத்தல் கூடாதென மதித்தனரோ என்றெண்ணும்படியா கத் துரோணச்சாரியர், ஒருசமயம், ஏகலைவன் இல்லஞ் சென்று நன்கு உபசரிக்கப்பெற்றும், குருதக்ஷிணையாக அவ னது வலக்கைப் பெருவிரலைப் பெற்றுக்கொண்டனர். அவ னும் குருபக்தியிற் சிறந்தோனாதலின், மயங்காது சம்மதித்தே கொடுத்தனன். வல்லவனுக்குப் புல்லுமாயுதம் அன்றோ? தெய்வபக்தியும் குருபக்தியும் சிறந்தவர்க்கு ஆகாத கரும முண்டோ? அவர்கள் எதனையும் ஈந்துவக்கும் இயற்கை யுடையவரன்றோ? கடவுளும் கடவுட்டன்மை வாய்ந்தவரும் மகிழ்வதுவே தனதின்பமாகவும் பிறப்பின் பயனாகவும் கருதி யுள்ள மகான்களில் ஏகலைவனும் ஒருவனானன்.

விஜயன் வில் திறம்.

"விஜயனே வில் வலத்திற் சிறந்திருக்கிறான்" என்று உலகம் புகழ்தலையும், விஜயனை ஆசிரியர் மிக மதித் துக் கவுரவம் பாராட்டுதலையும், விஜயனொருவன் பொருட்டே

ஏகலைவன் வலக்கை விரலைக் கண்டித்ததின் உண்மையினையும் மாணவரிற் சிலர் வெறுத்து உள்ளூறக் கலகம் விளைத்தலை யுணர்ந்த முனிவர், விஜயனது வில் திறத்தை யாரு மறியக் காட்டிடல் வேண்டு மென்று தீர்மானித் திருந்தார். பாட சாலையின் தோட்டத்தி லொரு நாள் அனைவரும் பயிற்சி செய்து கொண்டிருக்கும் போது ஆசிரியர் தமது மோதிர மொன்றை நீர் ஆழ்ந்த கிணற்றி லெறிந்து, "இதனை யம்பெய்து எடுத்துத் தருவீ" ரென்று ஏவலும், கர்ணன் முதல் எண்ணத் தகும் வீரரெல்லோரு முயன்று கை விட்டனர்; அவ் வமயம் முடிவாகப் பார்த்தனே, புங்கமொடு புங்கமுற வெய்து, எடுத்துக் கொடுத்தனன். மற்றும், "அதோ நிற்கும் அம்மரத்தினுற்ற இலைத் தொகைகள் யாவுந் துளையுறும்படியாகப் பாண மெய்யுங்கள்" என்று ஏவினர்; ஏனைவீரர் ஏங்கி நிற்கும் வேளையில் பற்குநனே பல பகழிகள் ஏவி யெல்லா இலைத் தொகைகளையும் துளைப் படுத்தினன். ஒரு நாளில், ஆசிரியர் நீராடும் போது நீர்ப்படி துறையில் அவர் காலை ஓர் முதலை கவ்விக்கொண்டது; ஆசிரியர் கதறினர்; பள்ளியிற் பயின்று கொண்டிருக்கும் மாணவர்க்குச் சொல்லி யனுப்பினர்; எல்லா மாணவர்களும் வெறுங்கையுடன் சென்று விடுவிக்க முயன்று கொண்டிருந்தார்கள். இதனை வெளியிலிருந்து வந்த பார்த்தனுக்குத் தெரியப் படுத்தினர்கள்; அவன் உடனே, தானிருந்த இடத்தி லிருந்தே பாண மேவி முதலையைத் துணித்து வீழ்த்தினன். "முன்ன மொரு முதலையைக் கொன்று கஜேந்திரனைக் காப்பாற்றினர் கொண்டனிறக் கடவுளாகிய நெடுமால்; இன்று இம் முதலையைக் கொன்று என்னைக் காத்தான் இந்தக்கரிய நிறத்த காண்டீபன்; ஆதலால் இவனெனக்குக் காப்புக் கடவுளே யாவான்" என்று யாவரு

மறிய அர்ச்சுனனை யாசிரியர் புகழ்ந்து போற்றி மார்புடனணைத்துத் தழுவிக் கொண்டு, தாம், சிறந்தவற்றுட் சிறந்ததாக மதித்துவைத்திருந்த கணையொன்றைக் காணிக்கையாகவும் கொடுத்தருளினார், அன்று முதல், ஆசிரியர், அவனை மாணவனென்னும் உறவினினின்றும் உயர்த்தித் தமக்குரிய மித்திரனெனவே கொண்டு உயிரும் மனமும் போற் பழகி வந்தார். "இது நல்வினை வயத்தின் வழியாகும்; மற்றவர்க்கு வருவதாமோ?" இந்த நல்ல செய்தி ஊரெங்கும் பரவலும் பார்த்தனை வாழ்த்தாத நாவில்லை யென்றே சொல்லும்படி நகரமாந்தர் யாவரும் விஜயனது வீரப் பேச்சையே பேசியிருந்தனர்.

மாணவர் பயிற்சித் திறம் காட்டல்.

குருகுலக் குமரர்களது பயிற்சித் திறத்தைக் காட்டுவதற்கென்று ஒரு நாள் சோதனை நாளாகக் குறித்து அதனை விதுரருக்கும் வீடுமருக்கும் தெரிவித்தார் ஆசிரியர். அந்நாளைப் பறையறைவித்து நகரெங்கும் தெரிவிக்கச் செய்தார்கள். பல்லோரிருந்து பண்புடன் காணும்படியானதோர் வெளியிட மொன்றை யலங்கரித்தனர். மாணவரும் தமது திறத்தைக் காட்டிப் புகழ்பெறு நாளைக் கருதி யிருந்தனர். அந்த நாளும் வந்தது. ஆண்மையிலும் வீரத்திலும் விற்போரிலும் மற்போரிலும் வாட்போரிலும் சிறந்த மறவரும் மன்னவரும் மற்றும் பலரும் குழுமினார்கள். அரண்மனையிலிருந்து அரசர் பலரும் கூடினார்கள். ஆண்களேயன்றிப் பெண்களிற் பலரும் தமக்கிட்ட தவிசிலிருந்தனர். பயிற்சியரங்கில் நாட்டியிருக்கும் கடவுளுக்குப் பூஜை நிவேதனங்கள் செய்து விஜய லக்ஷ்மியையுந் தொழுது மாணவரை வகையுற வகுத்துத் தனித்தனி யாகவும் ஜதையாகவும்

திறங் காட்டும் முறையையும் ஒழுங்கு படுத்தி ஆசிரியர், சபையோர் யாவரையும் வேண்டிக் கொண்டு மாணவரை யேவினர்.

பாண்டு மைந்தன் தருமன் முதலாக வீரமாணவர்கள் பலரும் எழுந்து வில்லாசிரிய ரிருவரையும் முதலில் வணங்கிப் பின் பீஷ்ம விதுரர்களையும் வணங்கித் தமது பயற்சியை யாரம்பித்தார்கள். தருமன் முதலில் வந்து நின்று தனது வில் திறத்தையும் வாள்திறத்தையும்காட்டி நின்றான். அப்படியே ஒவ்வொருவரும் பயின்று காட்டினர். வண்மை நுண்மை சலம் நிச்சலமென்னும் நான்கு வகையிலும் ஆசிரியர் கற்பித்தபடியே யன்றித் தமது யுக்தித் திறத்தையுங் கலந்து அவரவர் தமதாற்றலையும் கரவேகத்தையும் காட்டிச் சபையோரை மகிழ்வித்தார்கள். வீரர் கூட்டத்தினின்றும் கரகோஷம் ஓயாமலெழுந்த வண்ணமாக இருந்தது. இங்ஙனம் ஆயுத வகை யநேகங்களையும் யானை யேற்றம் குதிரை யேற்றங்களையும் பயின்று காட்டினார். மன்னரும் மறவோரும் வில்லாசிரியரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். "உலகத் துயர்ந்த வில் லாசிரிய" ரென்பது உமக்கே தகும் என்று போற்றினார்கள். இனி ஜதைகளைக் கவனித் திடுவோமென்று சபையோர் பணித்திட ஆசிரியர் வீமனையும் துரியனையும் தூண்டி விட்டார்.

ஒத்த வலியோர் வலமும் ஒத்த திறலோர் திறமும் சபையோர் சித்த முறக்காட்டலே பயிற்சித் தினத்தின்படியாகு மாதலால், ஒத்த திறமுடைய வீமனையும் துரியோதனனையும் ஆசிரியர் ஏவினார் போலும். இதனைச் சபையோரும் சம்மதித்தனர். பீஷ்ம விதுரர்களும் ஒப்புக்கொண்டார்கள். பீம துரியர்களும் மனமகிழ்ந்து எழுந்து நின்றனர்.

கர்ண சகுனியரும் துற்சாசனன் முதலிய தீய சோதரர் களும் அச்சமும் கறுவும் கொண்டிருந்தனர். பாண்டவர் நால்வரும் குந்தியும் அத்துணை மகிழ்ந்திருக்கவில்லை; யாவ ரும் கரகோஷம் செய்திடக் களத்தில் எழுந்து நின்ற வீரர் இருவரும் கையிற் கதை யேந்தி நின்றனர். இரண்டு மத யானைகள் இரண்டு மரா மரங்களுடன் எதிர்த்து நின்றன போலும் காட்சியிருந்தது. இரண்டு புலிகள் பாய்ந் தெதிர்ப் பதுபோ லெதிர்த்தார்கள். இடசாரி வலசாரி திரிந்து கதை வீசி மோதினர்கள். இரண்டு கதைகளும் இடி இடித்த ஒலி கொடுத்துத் தாக்குண்டன. விலகு மண்டலங்களும் சேரு மண்டலங்களும் கலந்து மோது மண்டலங்களும் தெரிந்து ஒழுங்காகவே மண்டலந்திரிந்து தாக்கினர்கள். இருவரும் சம பலத்தவராகவே சிறிது நேரம் விளையாடி னர்கள். பின்னர்க் கதைகளைக் கீழே யெறிந்து விட்டு மற் போரில் முனைந்தார்கள். பலவகைப் பிணிப்புகளும் விலக்குக ளும் பயின்று கொடியும் கொடியுமெனப் பிணித்து விழுதலும் எழுதலும் காட்டி மோதித் தாக்கினர். துற்சாதனனும் சகுனி யும் குதித்து குதித்துத் தமையனுக்கு உற்சாகங் காட்டிப் பல் நெறித்தும் கை குவித்தும் கூத்தாடி நின்றார்கள். கர்ணன் பல்லைக் கடித்து நின்றான். ஆசிரியர் மகிழ்ந்து உத்ஸாகக் குறி ஒலித்தார். பாண்டவரும் குந்தியும் பரபரப்புடன் இருந்தனர். தருமனும் வீடுமனும் விதுரரும், விளையாட்டு வினையாய் விடு மோவென சந்தேகித்தனர். அர்ச்சுனன் சமயத்தை எதிர் பார்த்து வில்லில் நாணேற்றினன். போரும் விளையாட்டில் நின்று வினையாகவே மாறியது. துரியனிதுவேசமய மென்று வீமனைக் கொல்லவும் வழி தேடினன். அதனைக் குறிப் பினு ணர்ந்த வீமன் முனைந்து நின்றான். வீமன் முனைந்து நின்றன னயின், எமன்வரினும் முடியுமா? பலமுறை மன்னன் மகன்

கீழே வீழ்ந்து எழுந்து நின்றான். உக்ரம் மிகப் பொலிந்தது. உதடுதுடிக்கலாயது. மீசை படபடத்தது. தேகவலி குன்றியதாயினும் ஆத்திரம் அடங்கவில்லை. மறுபடியும் வீமன் மீது பாய்ந்து விழ்ந்து தாக்கினான். ஓர் பிடியில் அவனை வீமன் பிடித்துப் பூமியில் மோதப்போனான். அவ்வமயம் ஆசிரியர் மகன் அசுவத்தாமன் அருகிருந்து விலக்கி மன்னன் மகனை விடுவித்தான்; முதலிற் படபடத்துத் திமிறினனாயினும், துரியன் பின்னர் ஆற்றிடவே அமைந்து நின்றான். வீமனோ கைகளைப் பிசைந்து நின்றனனாயினும் வெட்கித் தலை குனிந்தான். மன்னன் மகனென்றும் பாராமல், ஒரு பிச்சைக்காரன், ஒண்ட வந்தவன், பல் லோரறிய என்னை - வீமன் - அவமதித்தனனே என்று துரியன் மனங்கொதித்தான். பெரியோரறிய மங்கலமாகத் திறமை காட்டப் புகுந்த பயிற்சி விளையாட்டு வினையாக மாறி அமங்கலமும் நேரும்படியான நிலைக்கு வந்துவிட்டதே யென்று வீமன் நாணினான். துரியனைக் கர்ண சகுனியரும் துற்சாதனன் முதலியோரும் சூழ்ந்து திறங்கூறிக் கொதித்துக் குதித்தார்கள். வீமன் யாவரும் சமீபத்தில் நெருங்க முடியாத வண்ணம் விழித்து நின்றான். நல்ல வேளையாய் அமர்க்களமாகாமல் ஆசிரியன் மகன் தடுத்தனனே யென்று அவனை யாவரும் மகிழ்ந்து துதித்தார்கள்.

பின்னர், நிகழ்ச்சி முறை யாரம்பிக்கப்பட்டது. இந்திர குமாரனாகிய வில் விஜயன் ஆசிரியர் திருவுளக் குறிப்பறிந்து சபை மத்தியில் வந்து நின்றான். ஆசிரியர்கட்கும் பெரியோர்கட்கும் மன்னர்கட்கும் மறவோர் தமக்கும் மற்றுளோர்க்கும் மாபொடு வணக்கஞ் செய்து, யானை யாளி பாம்பு கருடன் அக்கினி மேகம் மாருதம் இடியாதிய அஸ்த்ர வகைகளையேவிச் சபையோர் மகிழ அற்புதம் காட்டி யெய்து நின்றான். வாளிகளின் விநோதங்களையும் அவற்றின் விடு முறை

ப்டு முறைகளையும் சபையோரறிந்து கரகோஷம் செய்தனர். மறவரும் மன்னவரும் உத்ஸாக வார்த்தைகள் கூறிக் கொண் டேயிருந்தனர். ஆசிரியருடைய கண்சைகையையுணர்ந்து, அருக்கன் மகன் கர்ணன் அவைக்கு முன் எழுந்து வந்தான், அவன் வந்தது சிங்கம் பாய்ந்து வந்தது போலிருந்தது. சபையை முறைப்படி வணங்கி, இந்திர குமாரன் முன்ன ரென்ன வென்ன செய்து காட்டினனோ அவற்றையெல்லாம் தானும் காட்டி நின்றான். அவையிலிருந்த மன்னர்கள் அதி சய முறும்படியாகப் பல்வகைக் கைத்திறங்களையும் அதிகம் காட்டி "இணையில் வீரன் இவனே" என்று கூறும்படி நின்று விளங்கினான். விஜயன் சிறிது நாணி நின்றான். துரி யன் முதலானோர் களித்தாடினார். உத்ஸாகம் மிகுந்தபடி யால், ஆசிரியர் ஏவுதற்கு முன்னரே, அவையோரறிய அருக்கன் மைந்தன் அர்ச்சுனனை அறை கூவி போருக் கழைத்தான். விஜயன் ஆசிரியரை நோக்கினான். அவரும் அநுமதியளித்தார். பாண்டவர் மகிழ்ந்தனர். வீமன் கண் காட்டிப் பல் நெறித்து உதடு மடித்து நின்றான். பீஷ்ம விது ரர் பயந்தனர். ஆசிரியன் மகன் அசுவத்தாமன் எது விளை யுமோ வென்னும் குறிப்பொடு கவனித் திருந்தான். "என் னுடன் பொருதற்கு நீ யொருதுணையா? அவை யோரையும் ஆசிரியரையும் பசிற்சிக் களமிது என்பதையும் மதியாமல், கர் வித்து என்னைப் போருக் கழைத்திட நீ எத்திறத்தில் சிறந் துளாய்" என்று பார்த்தன் சீறிச் சபை முன் வந்து வில்லில் நாணேற்றி நின்றான். "இம் முனைந்த போரில் நின் முடி துணித்துச் சினந்தணிந்து அரங்க பூசை செய்கின்றேன்" என்று வீரங் கூறிக் கர்ணன் பொருதற்கு ஆரம்பித்தனன். அதிருகின்ற மேகம் போற் கர்ஜித்து அர்ச்சுனன் மீது சீறிப் போர் செயற்கு உருத்து நின்ற கர்ணனை நோக்கிப், பற்குன

னும் பதரூது! பாணந்தொடுத்து "இவற்றைத் தடுப்பாயாக" என்று வில்லை வளைத்துப் பல விதக்கணைகள் தொடுத்து விட்டான். "ஒரு சூதன் மைந்தன், மேதினிக் கெல்லாம் நாதன் மைந்தனோடு பொருதற் கியலுமோ? "இதற்கு வேத விதி யுண்டோ?" வென்று கிருபாச்சாரியார் வினவி நின்றார். இதனைக் கேட்ட மன்னன் மகன் சுயோதனன் கொதித்தெழுந்து,

> "கற்றவர்க்கும் நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
> யுற்றவர்க்கும் வீரரென் றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
> கொற்றவர்க்கும் உண்மையான கோதில்ஞான சரிதராம்
> நற்றவர்க்கும் ஒன்றுசாதி நன்மைதீமை யில்லையால்"

> "அரிபிறந்த தன்றுதூணில் அரனும்வேயி லாயினன்
> பரவையுண்ட முனிவனுமிப் பாத்துவாசன் மைந்தனும்
> ஒருவயின்கண் முன்பிறந்த தொண்சரத்தி னல்லவோ
> அரியவென்றி முருகவேளு மடிகளும் பிறந்ததே."

படித்தவர்க்கும் அழகுடைய பெண்கட்கும் வள்ளன்மையிற் சிறந்தவர்க்கும் வீரருக்கும் நல்வாழ்வுடைய வெற்றி வேந்தர்க்கும் மெய்யாகிய உயர் ஞானம் பெற்றவர்க்கும் ஒன்றிய சாதியில் நன்மை தீமை உயர்வு தாழ்வு பேசுதல் கூடாது. அன்று விஷ்ணு தூணிற் பிறந்தார். சிவபிரானும் ஒருகால் மூங்கிலினின்றும் முளைத்தார். அகத்தியனும் இதோ இருக்கின்ற நம் ஆசிரியர் துரோணரும் கும்பங்களிற் பிறந்துளார்கள். ஷண்முகக் கடவுளும் எங்கள் பாட்டனார் பீஷ்மரும் நீரிலிருந்தல்லவோ தோன்றினர்கள். ஆகையினால் ஒருவரது உயர்வு தாழ்வை மதித்திடல் நியாயமன்று; செய்தொழிலால் கல்வித் திறமையால் வீரச்செயலால் மதித்தல் வேண்டுமென்று பல நல்லுரைகள் கூறி, இழிந்த அழுக்குகளுடன் பொருந்தியிருக்கும் பொன்னையுருக்கி யோடவைத்துச் சுத்தமெனக்

காட்டிச் செம்பொன்னுடன் சேர்த்துக் கொள்வதுபோலத் தாழ்ந்த சூதன் மகனென்று தள்ளிவைத்த இழிவு நீங்கத் தன்னோடழைத்துச் சேர்த்துக் கொண்டு, அவனுக்கு அந்த அங்கதேச ஆதிபத்தியத்தையு மருளி, வேந்தெலாம் வியக்க முடியும் சூட்டித் தானிருந்த சிம்மாஸனத்துக்குச் சமமான ஆஸனமும் கொடுத்துத் தானுமவனும் சோதரரென உறவு கொண்டாடினன். சபை கலைந்து யாவரும் ஏகினர். அன்று முதல் கன்னனும் மன்னன் மகனும் இசைந்து குபேரனும் சிவனும் போலக் குலவி நின்றார்கள்.

யாகஸேனனைத் தேரிற் கட்டி வருதல்.

"வம்மினாதி குருகுலம் தழைக்கவந்த மைந்தர்காள்
தம்மின்நாளையேயெமக் களிக்கநின்ற தக்கிணை
எம்மினொருத்தன் வேறியாக சேனனென்றுளான்
நும்மினுடி யவனையிம்பர் ஞோதல்செய்து கொணர்மினே."

"ஆதிக் குருகுலம் அழிந்து பாடாமல் தழைக்கவந் துற்பவித்துச்சிறந்திருக்கும் மைந்தர்களே! கௌரவ பாண்டவர்களே!! கேளுங்கள்!!! நீங்கள் நூற்றுவரும் கௌரவரும் கன்னனுடன் சேர்ந்து, எம்மிடம் இத்தனை நாட்கள் போர்ப்பயிற்சி முதலியன பயின்றமைக்குக் குரு தக்ஷிணை தரல் வேண்டியதுண்டன்றோ? நீங்கள் நூற்றறுவருமோ தற்போது, எண்ணுகின்ற ஆயுதங்கள் யாவையும் ஆனை, குதிரை, தேர் முதலிய வாகனங்கள் செலுத்தும் முறையையும் சேனையுடன் சென்று பகைவரைச் செகுக்கவல்ல வீரத்தையும் பெற்றுத்தேர்ந்து சிறந்திருக்கின்றீர்கள். இவ்வுலகினில் உங்கட்கு நிகரில்லை யென்னும் படியும் ஆண்மையும் திறமும் அமைந்திருக்கின்றீர்கள். குருகுலத்தின் ஆட்சியை யொப்புக் கொள்ளும் பக்குவத்திலு மிருக்கின்றீர்கள்; ஆகையினாலே இனி ஆசானிடமிருந்து விலகி உங்

கள் உங்கள் திறத்திற்பழகி வெளியுலகப் பழக்கமுங் கொண்டு மேன்மையடைய வேண்டியவர்களே நீங்கள்; ஆதலால், குரு தக்ஷிணையாக நான் கேட்கும் பொருளைக் கொணர்ந்து கொடுத்தல் வேண்டும். குரு குலமாகிய பெருங்குல மைந்தர்களாயும் மன்னற்கு வணங்காமுடிபடைத்த சக்ரவர்த்தி குமார்களாயும், அஞ்சா நெஞ்சுபடைத்த கங்கைமைந்தன் பௌத்திரர்களாகியுமிருக்கும் உங்களிடம் தக்ஷிணையாக நான் கேட்கப் போவது சாமான்யப் பொருளென்று நீங்கள் எண்ணியிருக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன். பொன்னையும்பொருளையும் வேண்டி. நான் இங்கு வந்து சேரவில்லை. புகழொன்றையே நாடி வந்திருக்கிறேனென்பதை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். என்னை மதியாது அவமதித்த சிறுமன்னன் மகனோடு கூறிவந்த சபதம் முடித்தற்கே யிங்குவந்து சேர்ந்தேனென்பது உங்கள் நினைவிலிருக்கலாம். ஒருவனுடைய வாழ்வில் மானமொன்றே போற்றத் தகுந்தது; எனது இழக்கப் பட்ட மானத்தைப் பெறுதற்கென்றே, இத்துணை நாள் தவங்கிடத்தல்போல் உங்கட்கு ஆசிரியனாக அமைந்து இருந்தேன். ஏகலைவனிடம் பெரு விரற் காணிக்கை பெற்றதும் உங்களிலொருவருக்கேனும் ஒப்பாக வேற்றொருவனிருந்து, அம் மன்னனுக்கு உதவி புரியாதிருத்தல் வேண்டுமென்னும் துணிவைப் பற்றியதேயாகும். ஒரு கான வேடனைக் கொண்டு அம் மன்னவனையவமதித்தல் பெரியோர் மதிப்புக்குப் புறம்பாகுமென்று அவ் வேடன் உதவியை நான் நாடவில்லை; அம் மன்னனுக்கு மேலான வணங்காமுடி மைந்தர்களாகிய உங்களாலேயே அவனுக்குத் தண்டனையளித்தல் சிறப்பாகும். ஆதலால், இன்றே நீங்கள் படையெடுத்துச் சென்று, அக்கெடு மன்னனுக்கும் எச்சரிக்கை செய்து அவன் ஊரைவளைத்து முற்றுகை போட்டு அவனது வீரர்களையும் புறங்கொடுத்தோடும்படிச் செய்து, அம்

மன்னனைக் கொன்று விடாமற் சிறைபிடித்துத் தேர்க்காலிற் கட்டி என்முன் கொணர்ந்து நிறுத்த வேண்டுகிறேன். இது தான் குருவாகிய எனக்கு மன்னரும் வீரர்களுமாகிய நீங்கள் அளித்திட வேண்டிய குரு தக்ஷிணையாகுமென்று துரோணர் உக்ரமும் வீரமும் பொருந்தக் கூறினர். மாணவர்க்கெல்லாம் ஆத்திரம் பொங்கியது. வீரக்கிளர்ச்சி பெற்றெழுந்தார்கள். இப்போதே இக்காரியத்தை முடித்துத் தருவோமென்றாரக் கங் காட்டினர்கள். சேனைகள் திரட்டக் கட்டளையிட்டார் கள். விதுரரும் பீஷ்மரும் "முன்னரே இது ஒப்புக்கொள்ளப் பெற்ற உறுதி தானே" யென்று மேலும் உத்ஸாகங் காட்டிப் பேசினர்கள்.

சேனைகள் திரண்டன; ஆனைகள் பிளிறின; மற்றவர்கள் வீராவேசம் கொண்டனர்; அறவர்கள் ஆசிபடித்துப்பேசினர்; பொங்கொலி முழக்கினர்; மங்கையர் வாழ்த்தினர். போர் ஒலி சொலிப்பத் தாரோடுந் தொடர்ந்து நூற்றறுவரும் தலைமை வகித்துச் சென்றார்கள். முன்னரே துருபத நாட்டிற்குச் செய்தி யெட்டிற்று. மன்னன் யாகஸேனன் மருண்டான். என்ன விளையுமோ வென்றேங்கினன். க்ஷத்திரியனுகையால் வலங்கொண்டெழுந்தான். சேனையைப்பெருக்கினன்; சேனைத் தலைவரை முடுக்கினன். இதற்குள் குருகுலச் சேனை வந்து நகரை வளைத்துக் கொண்டது. வாயிலைத் திறந்து வீரத்துடன் போர்க்கு வந்து சேனையுடன் எதிர்த்து நின்றான். சேனைவீரர்க் கும் சேனைவீரர்க்கும் ஆனைவீரர்க்கும் ஆனைவீரர்க்கும் குதி ரைப் படைக்கும் குதிரைப் படைக்கும் தேர் வேந்தர்க்கும் தேர் வேந்தர்க்குமாகப் போர்முனைந்து முதிர்ந்து நடந்தது. யாகஸேனன் வீராகிய சோமகர்க்கும் முடுகு சேனை சூழ வந்த குருகுலக் கோமகர்க்குமாகப்போர்முனைந்து நடக் கவே, தூறுகொண்டு கணைபொழிந்து சோமகேசர் பொருத

லால், நூறு கொண்ட குமார் ஆகிய கௌரவர் யாவரும் கள்ள சகுனிகளுடன் பின்னிடைந்து தம்மூரை நாடி ஓட ஆரம்பித் தார்கள். பின்னின்று சேனைகளைச் செலுத்தி நின்ற பாண்ட வர் பதைத்துக் குருவினிடம் மொழிந்து வந்த உறுதியை மாறி இப்படி யோட்டம் பிடித்தல் நாணமாகுமென்று அவர்களோ டினும் சேனைகளைத் திரட்டி யுற்சாகப்படுத்தி முன்னிருந்து பொரத் தூண்டினர். தலைவரில்லாது சேனை தயங்கி நிற்கவே, "அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்! முந்துங்கள்! முந்துங்கள்" என்று வீரமுழக்கம் காட்டிக் கொண்டு, தனஞ்சயன் போர் முனைப்பில் வந்து தோன்றினன். கௌரவர் பின்னிடைந்து குரு குலச் சேனை சிதறிய சமயம் பார்த்து யாகஸேனன் அவ ரைப் பின்னும் தூரத்தும் பொருட்டு தன் சேனையின் முன் அணியில் நின்றிருந்தவனுகையால், தற்போது விஜயனுடன் நேருக்கு நேர் நின்று பொருதக் கூடிய நிலையில் வந்து நேர்ந் தனன்.

"தூறுகொண்டு கணைபொழிந்து சோமகேசர் பொருதலால்
நூறுகொண்ட குமார்தங்கள் நகரிமீள நோக்கினர்
மாறுகொண்டு விசயன்வீசு வண்ணவாளி வலையினல்
வீறுகொண் டெதிர்ந்தமன் விலங்கரீடு பட்டதே."

விஜயன் கணைமாரி பொழிந்து சோம கேசரைத் துணித்து மெய்க்காவலுந் தானுமாக நின்ற யாகசேன மன் னனை விளித்துப் போருக்கு அறை கூவி நின்றான். வீரத்துட னும் மிக்க வேகத்துடனும் தேர் செலுத்தித் துருபதன் பார்த்தனுக்கு நேர் நின்றான். யுத்தம் பல நாழிகை வரை யிருவர்க்கும் துவந்துவமாக நடந்து கொண்டிருந்தது. முடி வில் அர்ச்சுனன் முனிந்து சரமழை பொழிந்து மெய்க்காவ லரைப் பொருது கொன்று வீழ்த்திச் சாரதியையுந்தள்ளி, மன்னன் யாகசேனன் கையிலிருந்து சாபசனத்தையு

மொடித்துத் தள்ளினன். நாணறுந்து வில்லொடிந்து சாரதியும் போய்க் குதிரைகளும் வீழ்ந்த தேரில் ஒற்றையாக நின்ற யாகசேனன் நாணித் தலைகுனிந்து நின்றான். இந்திர குமாரன் விரைவினிலிறங்கித் தானே சென்று அம்மன்னனை யீர்த்து வந்து குருபணித்த படியே தேர்க்காலிற் கட்டித் தனது சேனை நின்றாரவாரிக்கச் சோதரர் களிக்கத் தன் சேனைகளைத் திரும்பச் செய்து அத்தினபுரத்தை நோக்கி விரைந்து ஏகினன்.

பாஞ்சால தேசத்துக்குப் படையொடு குமாரர்களை யனுப்பி வெற்றியை எதிர்பார்த்திருந்த பீஷ்ம விதுரரும் துரோணச்சாரி கிருபாச் சாரியரும் கணந்தோறும் விளையும் செய்தியை யறிந்து தெரிவிக்கும்படி யொற்றரை யனுப்பி யிருந்தார்களாகலின், சோமகரும் தம்கோமகரும் எதிர்த்ததையும் கௌரவர் நூற்றிரண்டு பேரும் முதுகு காட்டி யோடித் திரும்பியதையும் பாண்டவர் மாத்திரம் மிகுந்த சேனையுடனெதிர்த்து நின்று போராடிக் கொண்டிருந்ததையும் கேட்டு வீரமும் வெட்கமும்ஊர முன் கொண்டு நூற்றுவரது வீண்டம்பச் செயல்களையும் பாண்டவரது அமைதி யடக்கங்களையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, பார்த்தன் அப்பார்த்திவனைத் தேர்க் காலிற் கட்டிச் சிறை பிடித்து வருகின்றானென்னும் சந்தோஷச் செய்தி யெட்டியது. யாவரும் களித்தார்கள். துரியன் முதலியோர் அந்தப் பக்கம் தலையும் காட்டாதெங்கோ ஒளிந்தனர். பாண்டவர் நால்வரும் படைகளுடன் முன்னம் வந்து வெற்றியைப் பேசிப் பெரியோரையும் ஆசிரியர்களையும் வணங்கி நின்றார்கள். விஜயன் விஜய லக்ஷ்மியுடனும் தேரிற் கட்டப் பெற்றுத் தோல்வியுற்ற மன்னனுடனும் வந்து சேர்ந்து, யாகசேனனைக் கட்டவிழ்த்து முன்னர்ச் செலுத்திக் குருவின் பாதத்தில் வீழ்த்தித்

தானும் வணங்கி, "இதோ இந்தக் குரு தக்ஷிணையை யேற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி வீரத்துடன் நின்றான், துருபதன் எழுந்து வெட்கித் தலை குனிந்தான்.

காற்பெரு விரலாற் பூமியைக் கிளரிக்கொண்டு வெட்கத்துடன் நின்ற பாஞ்சால மன்னனைப் பரத்துவாச முனிவர் மகனாகிய துரோணர் பார்த்து,

"முறுவல் கொண்டு கண்டசாப முனியும் நாண வெம்மைநீ
உறுவ தொன்று முணர்கலா துரைத்த புன்சொ லறிதியே
மறுவிலந்த ணாளன்யானும் மன்னனீயும் வாசவன்
சிறுவன்வென் றனைப்பிணித்த சிறுமையென்ன பெருமையோ"

"அன்றெனக்கு நீயிசைந்த அவனிபாதி யமையுமற்
றின்றுனக்கு நின்றபாதி யான்வரைந்து தருகுவன்
குன்றெனக்கு விந்திலங்கு கொற்றவாகு வீரனே
உன்றனக்கு வேண்டுமென்ன உயிரும்வாழ்வு முதவினான்"

மலை போலுயர்ந்து விளங்கும் தோள்களைப் படைத்த துருபதனே! பின்னே வெம்மையை யுறுவோமே யென்னும் முன் யோசனையில்லாமல், முன்னே யென்னை யவமதித்துக் கூறிய வார்த்தையை யறிவாயல்லவா? நானோ ஒரு வலியற்ற அந்தணன்; நீயோ படையும் குடையும் பொருந்திய பார்த்திவன்; இன்று இந்திரன் மகனாகி இலங்கும் விஜயனென்னும் சிறுவனுக்குத் தோற்றுச் சிறைப்பட்டு வந்த இது உனக்குப் பெருமையாகுமா? அப்போது நாவடக்கிப் பேசும் வகை யறியாதிருந்து இப்போது நாணித் தலை குனிந்து நிற்கின்றாய். இன்று உனது நாடு என் நாடாயிற்று; உன் அரசு முற்றும் என்வசமாயிற்று; ஆயினும், அன்று நமது ஸங்கேதப் பிரகாரம் நீ எனக்குத் தரச்சம் மதித்த உன் நாட்டிற் பாதியே யெனக்குப் போதரும்; மிகுந்த பாதி நாட்டை நானின்றுனக்கு அளிக்கின்றேன். உனது உயிரையும் வாழ்வையும்



இவ்வெல்லோருமறிய உனக்கு அளித்திருக்கின்றேன். உன் னூர் போகலாம்'' என்று கூறிச் சொன்ன சபதம் முடித்துத் துலங்கி நின்றார்.

யாகசேனன் வேள்வி செய்தல்.

ராகுவால் மறைக்கப்பட் டொளி மழுங்கி வெளிப்பட் டிலங்கும் வெண்மதிபோல், துரோண ரேவலால், சிறைவிடப் பெற்ற யாகசேனன், குருகுலத்தார் தம்பதியை நீங்கி, விஜய னது வெற்றியையும் பல்லோர் காணத் தானகப்பட்ட சிறை யையும் நினைந்து நினைந்து உருகி உருகி ஊர்போய்ச் சேர்ந் தான். நகரெங்கும் ஒலியடங்கி யிருந்தது. சேனைக் காவ லரும் மந்திரியரும் வீரரும் ஒன்றுஞ் சொல்ல மாட்டாது நாணி நின்றார்கள். அரசன் மனைவி அந்தப்புரத்தினுக்கு மன்னனை யழைத்துச் சென்று ஆறுதல் கூறினாள். முற்பகற் செய்யின் பிற்பகல் விளையு மென்பதை மன்னன் ஓர்ந்தான். சிலநா ளிங்ஙனம் கழியப் பின்னர், அரசு முன்போல நடக்கத் தொடங்கியது. மன்னனும் மாமண்டபம் வரலுற்றான். மாதவர் பலரைக் கூட்டித் தொழுது பூசித்தான். பரிகாரங்கள் பல செய்து மனத்தழுக்கை மாற்றிக்கொண்டான். விஜய லக்ஷ்மியையமைத்து விழாக் கொண்டாடினான். என்றாலும், வெற்றி பெற்ற வில் விஜயன் உருவமும் அவன்பால் தனக் குத் தோன்றிய அன்பும் தனது தோல்வியைக் கண்டு அவ மதித்துப் பேசிய துரோணருருவமும் அவர் பால் தனக்குத் தோன்றிய வன்பும் மறக்க முடியாதவனாக இருந்தான். பற் குனனை மணக்கப் பெண் மகளொருத்தியும் முனிவனைக் கொல்ல முரண்மகனொருத்தனும் தனக்கு வேண்டுமெனத் தன்மனத்தி லெண்ணினான். அதனை விரைவிற் பெறு தற்கு வேள்வியே செய்வதென விரும்பினான். அத னால் அது செய்து தரும் தக்காரைத் தேடலானான்.

முடிவில் உபயாஸன் யாஸன் என்னும் பேருடைய சோதரரைக்கண்டு, அவர் தவமும் திறமும் அறிந்து, வணங்கித் தன் குறிப்பை யுணர்த்தினன். இருவோரும் இசைந்தார்கள். நகர் சேர்ந்து நீர்க்கரையில் வேள்வி யியற்றுதற்குரிய சாலை யும் சாமக்கிரியைகளும் சேர்த்துப், பல பண்டிதர்களையும் வேதியர்களையும் அழைத்து யாகத்தை மிகக் கவனத்துடன் செய்து வந்தான். ஓராண்டு விடாமல் நெறிதவறாமல் மந்த்ர லோபமும் தந்த்ரலோபமுமின்றி யாகம் நடந்தேறியது. மன் னனும் மனைவியும் பூரித்துக் களித்தார்கள். ஒளிபெற்று விளங் கினார்கள். முடிவில் ஓமத்தழலில் மகவருளாகுதியை உபயா சன் வழங்கினன். அவ் வோமத்தழலினின்றும்,

"வலையம்பிறழ முடிதயங்க மணிகுண்டலம்பே ரழகெறிப்பச்
சிலையும்கையும் மெய்யும்வயந் திகழ்போர்வாயிரக் கவசமுமாய்க்
கொலைவெஞ்சிங்கக் குருளை பொலன்குன் றின்புறத்துக் குதிப்பது [போற்
தலைவன்களிக்கத் தடந்தேர்மேல்தனயனொருவன் தலைப்பட்டான்."

கிரீடமும் வாகு வலயங்களும் குண்டலங்களு மணிந்து கொண்டு பேரழகுடையவனாகிய ஓர் குமாரன், கையிற் சிலை யும் மெய்யில் வைரக் கவசமும் பூண்டு, பொற் குன்றிலிருந்து ஒரு சிங்கக் குருளை புறப்பட்டதுபோல் தேரின் மீது தோன்றி நின்றான். மன்னனும் மாதவரும் ஆச்சரியப் பட்டார்கள். அரசன் மனைவி மகிழ்ந்து நின்றாள். பிரஜைகள் யாவரும் பெருங் கோஷம் செய்தார்கள். மங்கல நாதங்கள் ஒலித்துத் திகழ்ந்தன. வீரோதயன் வந்துதித்தானென்று மன்னன் பார்க் குந்தோறும் மகிழ்ந்து சிறந்தான். மகவை மடிமேலிருத்திப் பல கால் உச்சி மோந்து முத்தங் கொடுத்தான். உள்ளங்களித்த மன்னன், பின்னும் வேண்ட முனிவர் மறுபடியும் வேள்வித் தழலை விளங்கச் செய்து, மன்னன் விருப்பினை நாடி மந்திரங்

கூறி அதற்குரிய ஆகுதியும் வழங்கலாயினர். ஆவதற்கும் அழிவதற்கும் அறவோர் ஏவ நிற்கும் விதியுமல்லவா ? மந்திரத்தாலும் தந்திரத்தாலும் இம்மண்ணுலகையே ஆக்கவும் காக்கவும் நீக்கவும் வல்ல திறத்தினராகலால், மற்றோர் பெண்மகவும் அருளுதற்கென்று பூர்ணாகுதியும் பொன் தழலிற் சேர்த்தார்; அவ்வேள்வித் தழலினின்றும், மின்னுங் கொடியும் நிகர் மருங்கல் வேய்த்தோள் முல்லை வெண்முறுவல் பொன்னும் பிறந்தாள். அவளெழுந்து தோன்றியவுடன், ஆகாயத்திலிருந்து ஓர் அசரீரிவாக்கானது,

"மண்மேலொருத்தி யரக்கர்குலம் மாளப் பிறந்தாள் வாமநுதற்
கண்மே னின்று மிவள் பிறந்தாள் கழற்காவலர்தங் குலமுடிப்பாள்
எண்மேலென்கொ லினியென்றுங் கெவருங்கேட்க வொருவார்த்தை
விண்மேலெழுந்த வன்புரிந்த வேள்விக் களத்தினிடை யம்மா."

"அன்று அரக்கர் குலத்தைத் தொலைவிக்க மண்மேலொருத்திதோன்றிச் சீதையெனப் பேர்பெற்றுத் திகழ்ந்தாள். இந்தப் பாஞ்சாலி துஷ்ட அரசர் குலந்தொலைக்க இந்த வேள்வித் தீயில்தோன்றி விளங்கினாள்" என்று விண்ணில் வாக்கும் மண்ணில் வாக்குடனெழுந்தது. தாமரைத் தடாகத்தெழுந்த பொன்னியைப்போல் தீக்கொழுந்தினின்றும் தோன்றிவெளி நின்ற தேஜோமயமான பெண்ணரசை வாரியெடுத்து மடிமீதிருத்தி மன்னன் மனைவ்மனம் களித்து வாழ்த்தி மங்கல சாந்தி செய்து முத்தங் கொடுத் துச்சிமோந்து மகிழ்ந் திருந்தாள். யாகசேனன் பாண்டவராலும் பரத்துவாசன் மகனாலும் தோல்வியைப் பெற்றாலும், அது காரணமாக யாகத்திலிருந்து ஆணும் பெண்ணும் அழகாகப் பெறுதற்குப் பாக்கியமும் பெற்றிருந்தான் என்று எல்லோரும் வியந்து வாழ்த்தினார்கள். யாக காரியமும் நிறை வேற்றப் பெற்று, வேதியர்க்கும் எச்சாதியர்க்கும் மற்றோர்க்கும் வேண்டும் பரிசுகள் கொடுத்

தனுப்பினர்கள். உபயாஸர்க்கும் யாஸர்க்கும் வெறுக்க வெறுக்க வெறுக்கையளித்து, வீழ்ந்து வீழ்ந்து நமஸ்கரித்து, பன்னிப் பன்னி புகழ்பேசி மன்னனும் மனைவியும் மந்திரியரும் பிறரும் வழியனுப்பினர்கள்.

"முற்றோன்றியதன் குலமுதலான் முரட்போர் முனிக்கு முடிவும் அவன்
பிற்றோன்றியவக் கன்னிகையால் விசயன் றனக்குப் பெருநலமும்
உற்றோர்ந் துள்ள மிகத்தருக்கி யுவந்தாங்கமைந்தான் உயர்மதத்தாற்
பெற்றோன் பெறற பேறுமகப் பெற்றார் தம்மிற் பெற்றார்யார்"

என்று நகரெங்கும் பிரஜைகள் சொல்லிக்கொண்டாடினர்கள். வீதியெங்கும் விழாவேநிரம்பியது. வேள்வியிற்றோன்றிய த்ருஷ்டத்யும்நனும் த்ரௌபதையும் மென்மேல் வளர்ந்து வனப்பும் வன்மையுமிகுந்து, மன்னன் மனையிலுள்ளாரன்றி மற்றோரெவர்க்கும் மகனும் மகளுமாகித் திகழ்ந்து வளர்ந்தார்கள்;

மன்னன் மகன் திருடத்தியும் நன்கலைவளர்ந்துயரும் தண்மதியைப்போல் அழகிலும் ஆற்றலிலும் அறிவிலும் வளர்ந்து தந்நகர்ப் புரோகிதரிடமும் ஆசிரியரிடமும் பல கலைகள் பயின்றனனாயினும், அமையாது, துரோண முனிவரிடம் சென்று வணங்கி விற்கலையும் பொற்கலையும் வேதக்கலையும் பெறவேண்டி நின்றான். இவனே தன்னையுளுக்கு எமனாக வருவனெனத் தெரிந்தும், வள்ளன்மையுடையார் தம் வழக்கு உடையாராதலினால், அவனை நல்வரவேற்று அருகிருத்தி, அன்று மன்னன் மக்கட்கியாது எப்படி எப்படிக் கற்பித்தனரோ, அவற்றை யவற்றை யப்படியே கற்றுக்கொடுத்து, வீரத்திறலோர் பலருள்ளும் இவனுமொருவன்றானென்னப் பெருஞ் சீரும் பெருவலியும் படைக்குமாறு பயிற்றுவித்தார்.

"மாண மிவனாற்றனக்கென்ப துணர்ந்துங் குருவுமருதளித்தார்
அரணி யிடத்திற் செறிந்தன்றோ வதனைச் செகுப்ப தழலம்மா"

என்றென்று யாவரும்வியப்பக் குருவும் புகழ்பெற்று விளங்கினார். அவனும் கலைகள் பல கற்றுக் குருவணக்கஞ் செய்து குருநாடு நீங்கித் தன்னாடு சென்றான்.

இந்த வணக்கம் நிகழ்ந்து விளங்கும் குருவும் கிருபாசாரியரும் விதுர வீடுமரும் புத்திரர் நூற்றுவரும் பாண்டு மைந்தர் ஐவரும் கன்ன சௌபலரும் புடைசூழ மன்னன் திருடராட்டிரன், பல மன்னர்களும் திறையளந்து வணங்குந்தாளுடையவனாகி, இரு கண்ணிலனாயினும் பல்கோடிக் கண்கள் பெற்று மகிழ்ந்தவன் போலப் பொன்னும் பொருளும் புத்திரரும் மித்திரரும் பழையோரும் உழையோரும் குறைவின்றியே இருந்து உலகாண்டு வந்தான்.

தருமனுக்கு முடி சூட்டிடல்.

மைந்தர் பலத்திலும் நலத்திலும் வளர்ந்து ஆளுந்திறத்துக்கு ஆய்விடுவாரானால், இளவரசென்ன இரு முடி சூட்டி ஆட்சியை யவர்வயி னளித்து மூத்த அரசர்கள் ஒதுங்கியிருத்தல், மன்னர் குலத்துத் தொன்னெறி வழக்கு. ஆகலான், மூத்த அரசனான திருதராட்டிரன் பீஷ்ம விதுரருடன் கலந்து தருமனுக்கு மணிமுடி சூட்டும் செய்தியைத் தீர்மானித்தான். அனங்கனை வென்ற அழகும் விறலும் வீரமும் நீதியும் நிறையும் நுண்ணூற் கேள்வியும் நிறைந்த தர்மனே பிறப்பிலும் சிறப்பிலும் உயர்ந் திருப்பதால் இவனே முடி சூடிப் பாராளும் பாத்தியமுடையவனென்று மன்னவரும் மன்பதையும் ஏற்றவரும் நூற்றுவரும் சம்மதிக்க, நகாலங்கரித்து சகல மங்கல வாத்தியங்களுடன் ஊர்வலம் வரச் செய்து, உம்பருமுவப்ப உலகோர்களிக்க, "இந்த நிலக்கிவன் இளவரசென்றுங் கந்தண் மதிக் குடை முடியொ டளித்தான்." முன்னரே அரசியல் முறைகளிற் பழகிக் கரும

மியற்றி வந்தவனுகலான், தரும புத்திரன், தந்தை முதல் மூத்தோர் மனத்துக் கிசைந்து முந்தை யோர் முறையில் வழுவாது, அரசியலே யணிபெற வகுத்து அதிகாரத்துக்கு வரம்புக ளமைத்துத் "தந்தையினும் மிக்கவன் தருமராஜன்" எனும்படி மக்கட் பணியாற்றி மகிழ்ந்தான். பாண்டு மன்னன் இருந்து பரிபாலித்த யாண்டெனை யாவரும் இன்புற்றமர்ந்தனர். தானமும் தருமமும் வானமும் வெய்யிலும் வகையுடனேங்கின. வையம் மன்னுயிராக, அவ்வையம் உய்யத்தாங்கும் ஒருவனென ஆட்சி புரிந்து வந்தான்.

தந்தை முதலிய மூத்தோரும் நகரத்தவரும் மற்றை நலமுடையோரும் கூடிய சபையில், ஏதும் சொல்லவும் செய்யவும் மாட்டாமல், துன்மதியான சுயோதனன் தருமன் முடிசூடற்கு ஒப்புக் கொண்டா னென்றாலும், மனத்துள் கபடம் மிகப் பூண்டு மயங்கியே இருந்தான். நாடு சிறந்து நலம் மிகுந்து யாவரும் இன்புற்றுத் தருமனைப் புகழும்போதெல்லாம் மனங் கொதித்திருந்தான். தனது துஷ்ட மந்திரிகளுடன் கலந்து பன்முறை யாலோசித்தான். இவ்வைவரையும் தொலைத்தா லன்றித் தன்கைக்கு ஆட்சி வராதெனத் தீர்மானித்தான். தொலைக்கும் வழி யெதுவாயினும், அவர் விலக்கி வெளியேறி விடுகின்றார்களே யென்று சிந்தித்தான். முடிவாகக் கலந்தாலோசித்து வழியொன் றெண்ணித்தேறித் தானே தனியனுகத் தன் தந்தை யருகு சேர்ந்தான்.

தந்தையை வணங்கித் "தந்தாய்! உன்பதம் யாவும் உதிட்டிரனுக்கே, மன்பதை யோடு வழங்கினை நீயே; அன்பதில்லாத அவன் தம்பியர் மதத்தால் என்பதங் குன்றி இருந்துளேனன்றே? தந்தை மகற்கு ஆற்றும் நன்றி யிதுதான் போலும்! புத்திரனைப் போற்றி வளர்ப்பது இதற்குத்தானே! நானேயே என் வாழ்வு நீங்கி நல் வனம் அடைதல் நன்றாகும்.

இப்படி ஏமாற்றம் செய்வீர்களென்று முன்னரே அறிந்திலேன். சபையோ ரறியச் சம்மதித்தேனாயினும், இது நீதியன்றென இப்போது தெரிகின்றது. எமக்குரியதை யாங்கள் பெற முயல்வோம்; என்ன சொல்கிறாய்'' என்றான்.

"குழந்தாய்; சுயோதனா! இந்த அரசும் ஆட்சியும் என் தம்பி பாண்டுவிற்கே உரித்தாயது. எனக்குப் பெரு மதிப்புக் கொடுத்து முடி சூட்டியதே யன்றி, யதுமுறையானபடி யன்று; கண்ணிலாதார்க்கு மண்ணரசில்லை. இதுதான் அரசின் முறை. பாண்டுவின் அரசு பாண்டு மைந்தரே பெறற்குரியார். அன்றியும் தருமன் மூத்தவன். குருகுலத் திளங் குமரர்களுள்ளும் அழகும் அறிவும் ஆற்றலும் அமைதியுமுடையான். பொறுமையும் பெருமையும் வாய்ந்தவன். சனங்களாலும் இனங்கள் பாலும் நன்மதிப் புடையான். வீணில் அசூயையில் ஆழ்ந்து தாழ்ந்து போகாதே. ஐவருடனே உடலு முயிருமாமெனப் பழகி இனி திருந்து உனக்குற்ற அதிகாரத்தையும் இழந்து விடாமலிரு'' என்று போதித்தான். "எனக்குக் கன்ன சௌபலர்களும் பின் பிறந்த தம்பியர்களுமினி துடனிருக்க, உவகையிலாதாரோடு கூடி வாழ்ந்திருத்தல் அமையாது; எங்கள் இருதிறத்தாரையும் பிரிந்தே வாழும்படி செய்ய வேண்டுகின்றேன்; அவருடன் கலந்து ஒருபோதும் வாழேன்; நாளையே எங்களைப் பிரித்து வாழச் செய்யும் வழியைத் தேடுங்கள்; பகைமையை முற்றவிட்டு வேடிக்கை பார்த்திருத்தல் வேண்டாம்; சொன்னேன்; சொன்னேன்; மும்முறையுஞ் சொன்னேன்'' என்று கோபத்துடனும் வீரத்துடனும் பேசி விரைவினில் மறைந்து விட்டான்.

என்ன செய்வான் குருட்டு மன்னன்? முரட்டுப் புதல்வரைப் பெற்று முரண்பட வளர்த்துத் துணிவற்றுக் கிடக்

கின்றவனாதலின், விதுர வீடுமரை யழைத்து வரச் செய்து, துரியன் வந்து துணிவுடன் பேசிய வனைத்தும் மொழிந்து, "ஈண்டினி யென்செய்வ தெண்ணுங்கள்" என்று சொன்னான். பின் விளைதலையோர்ந்தும், இந்தக் கெடுமதிகள் வழிக்குவாரார்; வேறு யோசித்துப் பயனில்லை; இருதிறத்தாரும் பிரிந்திருத்தலே யாவர்க்கும் வாழ்வு தரும்; துரியன் முதலியோர் திருந்தப் போவதில்லை. கூடியிருப்பின் கொடுமையே செய்வர்; ஆதலால் அதுவே காரியம்" என்று சம்மதி கொடுத்துப் போயினர்.

வாரணாவத நகரம்.

விதுரனும் பீஷ்மனும்போன பிறகு, துரியோதனன் கர்ண சகுனிகளுடனும் துற்சாதனனுடனும் வந்து, வணங்கிக் கொஞ்சிப் பேசிக் கெஞ்சி மொழிந்து தந்தையைத் தன் வயமாக்கிப் புரோசனன் என்னும் மந்திரியை யழைக்கச் செய்தான். வந்த மந்திரியும் மைந்தனுமாகத் தந்தை திருதராட்டிரன் தனியிடம் சென்று சிந்தையிலுள்ளவற்றை யெல்லாம் தீரயோசித்துத் தீமை பொருந்திய மனத்துடையவராகிக் குந்தி மக்களின் உயிரையே கொள்ளை கொளற்குக் குறித்தன பேசி முடித்தனர். வேதியர் நிறைந்து வேதவொலி சிறந்து நாராயண முனிவர் முதலிய பெரியோர் இருந்து தவஞ்செய்யப் பெற்று யாத்திரை க்ஷேத்திரமாக இருக்கும் வாரணாவத மென்னும் நன்னகரத்தில் அழகியதாகிய அரண்மனை கட்டி, அதில் ஐவரையுங் குடி யேற்றி வரிசை பல தந்து ஆட்சித் திறத்தையும் அமைத்துக் கொடுத்தலே தகுதி யெனத் தீர்மானித்து, நல்ல சிற்பிகளைக்கொண்டு அந்நகரில் அரண்மனையும் கட்டுவித் தமைத்தனர். "எப்பொருளால் மனையியற்றினர்? எதற்கவ்வணம் செய்தனர்" என்பதை யறிந்தவர் யாரே.?

பின்னர்த் தருமனையழைத்துத், "துரியோதனன் துஷ்ட புத்தியுடையோனாதலால், உங்களுடன் கூடி வாழ இயைந்திலன், நீங்கள்; ஆட்சிக் கொரு கேடும் வந்துறாதபடி, வாரணாவதத்தில் அமைக்கப் பெற்ற அரண்மனையில் தனியிருந்து, புரோசனனை மந்திரியாக்கொண்டு எவ்வரிசைகளும் பெற்று இனிது வாழ்ந்திருங்கள்" எனப் போதித்துத் தம்பியரோடும் அனுப்பி வரிசைகளும் கொடுத்துக் குடியேற்றி விட்டான். "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை" யெனும் பெருவழக்கைச் சிரமேற்கொண்ட பாண்டவரும் தாயுடனும் மந்திரியுடனும் வாரணாவத நகரம் போய்ச் சேர்ந்தார்கள். சென்று சிவபிரானைத் தரிசித்து மனையேறி இருந்து வாழ்ந்தார்கள். வேந்தர் குழாம் தொழ அரசின் முறையையும் செலுத்திவந்தார்கள்.

விதுர மன்னன் விறலும் வீரமும் புத்தியும் யூக்மும் பொருந்தினவனாகலால், இங்ஙனம் விலகிய இடத்தில் வீடமைத்துத் தம்முள் ளொருவனை அமைச்சனையே அமைச்சனாக்கித் தருமனாதியரை விலக்கினமைக்கு ஏதோ காரணமிருந்திருத்தல் வேண்டுமென்று ஊகத்திலுணர்ந்து, சிற்பிகளுடன் சிற்பியாகத்தன் னொருவனை யனுப்பியுளவறிந்து, அம்மாளிகை யரக்கினாலாய மாளிகை யென்றும் மேற் பூச்சிலும் அலங்காரத்திலும் அரண்மனையாக்கப்பட்டிருக்கின்றதென்றும் தெரிந்து,இச்சூழ்ச்சி, அம்மனைக்குத் தீயிட்டுப் பாண்டவரைக் கொல்லும் வழியே யாகும்; இதிற் பெருமன்னனும் சேர்ந்துளானாகலின், இதனை வெளிப்படுத்தப்படாதெனமனத்துள் வைத்து, தருமனாதியர் சமயத்திற் றப்பிப் போகும் படியாகத் தனி வழியும் தூணும் அமைத்திடச் செய்து சமயம் நோக்கியிருந்தான். ஒற்றரைக் கொண்டு ஒவ்வொரு போதும் உளவறிந்து வந்தான்.

புரோசனனென்னும் மந்திரியை யெவ்வகையிலோ சந்தேகித்துப் பாண்டு மைந்தர், பகலிலும் இரவிலும் நித்திரை பெருமலே காத்து வந்தனர். இதனையுணர்ந்த துரியோதன ஞதியர், ஐந்து வேடர்களையும் தாயையும் அனுப்பிச் சமயம் பார்த்து அரக்கின் மாளிகைக்குத் தீயிட்டு விலகும் படியாய் அமைத்தனுப்பினர். இச்செய்தி தெரிந்த விதுரன் ஒரு கம்மியனையனுப்பி வீமனிடம் தனியே இச்செய்தியைக் கூறிச் சூக்ஷ்ம வழியையும் தூணையும் காட்டி இரவில் அதன் வழியாக விலகிக் காடடைந்து வேற்று நகரம் சென்றிடுமாறு சொல்லியிருந்தான். வீமன் அதிபலவானும் மனவுறுதி கொண்டவனுமாதலால், அந்த நாட் பகலெலலாம் அறிவுடனிருந்து இரவில் யாவரும் மந்திரியும் நித்திரையிலிருக்கும் போது, குறித்த தூணினை விலக்கி வழி போவதறிந்து, தமையன் தம்பியரையும் தாயரையும் சாக்கிரதைப் படுத்தி வெளியேற்றித் தான் வெளியேறும் போது, வேடரிடும் முன்னே வேடரோடு மந்திரியும் மாளும் படியாகத்தானே அவ்வரக்குமாளிகைக்குத் தீயிட்டு வெளியேறினன். மாளிகை தீக்கிரையாயது. மந்திரியும் வேடரும் தாயுடன் மாண்டுகருகினர். இச்செய்தி அத்தினபுரிக்கு எட்டினவுடன் யாவரும் கலங்கினர்; குந்தியும் மைந்தரும் மாண்டன ரென மயங்கிப் புலம்பினர்; அவர்களுடன் வெளிக்குத் துக்கங்காட்டினர் கௌரவரும். வாரணுவதத்துக்கு வந்து கருகிய உருவங்களைக் கண்டு தாயும் மக்களும் ஒழிந்தன ரென்றே களித்தனர். ''பகைவரை யொழித்தோம்; இனி நமக்குக் குறைவில்லை''யெனக் குதித்தனர்; புவியெலாம் நமதேயா மெனத் தேறினர்.

பீஷ்மரும் துரோணரும், ''எல்லாம் இந்தக் கௌரவர் வஞ்சகச் செயலாகவே இருத்தல் வேண்டு'' மென்று ஊஹித்து, ''இங்ஙனம் தர்மதேவதைகளைச் சூழ்ச்சியால் மடிவித்த தன்

மையால் தெய்வ அருளற்றுத் துரியோதனன் குடியோடும் மடிவது நிச்சயம்; இது என்றாவது நிகழத்தான் போகிறது; கண்டகர் உய்ந்தவர் கிடையாது'' என்றேங்கி மயங்கினர்; மாழ்கினர்; கலங்கினர். அர்ச்சுனனில்லாதது துரோணருக்கு ஒருகை யிழந்த தன்மையாயிருந்தது; அச்வத்தாமன் தக்க நண்பர்களைப் பிரிந்த துயராற்றாமல் நாளுந் தேய்ந்தான்; ஓய்ந்தான். ஆனால், விதுரர்மாத்திரம் உண்மையறிந்தவராகையால், அவ்வுண்மையை ஒருவருக்குந் தோன்றாது மறைத்திருந்து “இது விதிவசத்தாலும் தெய்வ கோபத்தாலும்நேராமல், கபடமுள்ள மனிதர் வஞ்சகச் செயலாகவே நேர்ந்திருக்குமானால், தெய்வந்துணையிருந்து தர்மதேவதைகட்குச் சமானமாகிய பாண்டவர்களைக் காத்திருத்தல் கூடும்; ஆகையினால் தர்மனாதியர் எங்ஙனமோ தப்பிப் பிழைத்திருத்தல் வேண்டும் என்று என் நெஞ்சு துணிகின்றது'' என்று நினைவுறுத்திக் கொண்டிருந்தார்.

மன்னவனும் மன்னவன்மக்களும், இளவரசன் தர்மன் விதிவசத்தாலிறந்துபோயினமையின், அடுத்ததம்பியும் கௌரவர்கட்கு முன்னவனுமாகிய சுயோதனனே இளவரசுக்குரியானென விளம்பரப்படுத்தி யாசாட்சியைக் கைப்பற்றினர்.

வேத்திர கீயச் சருக்கம்.

“சீதநாள் மலர்க்கோயில் மேவுஞ் செந்திருவினையகன் தேவநாயகன்
வேதநாயகன் பூதநாயகன் விரத நாயகன் விபுத நாயகன்
போதகாதிபன் முதலைவாயிடைப் பொறைதளர்ந்துமுன்பொதுவிலே
தாதிமூலமே யென்னமுன்வருமாதி நாயகன் அடிவணங்குவாம் [நினைந்

இடிம்பி இணக்கம்.

தோள்களிலும் கைகளிலும் முதுகிலும் சோதரர்களும் தாயுமாக இருக்கச் சுமந்து கொண்டு மனங்களித்துத் துணி

ந்து செல்லும் பீமசேனன், குருடன் மக்கள் செய்துள்ள கோரவஞ்சனையை நினைந்து நினைந்து நெஞ்சு கொதித்துக் கறுவுள்ளம் பொருந்தினவனாகிக் குகைவழியே இருட்டினிற் சென்று, பொழுது விடியாத தருணத்தில் ஒரு பெருவனத் திடை போய்ச் சேர்ந்தான். எங்கும் இருண்டிருந்தது. பெருமரங்களிருந்தமை நன்கு தெரிந்தமையால் பெருங்கா டென உணர்ந்து கொண்டனன். இன்னும் பொழுது விடிய நாழிகை யெத்துணையுள்ள தென்னவும் அறிந்து கொள்ள முடியாதவனாக இருந்தான்; ஆகையால், அகன்றுள்ள அந் தப் பெருவனத்திடையிருந்ததோர் அழகிய புல் தரையில் அன்னையையும் அண்ணன் முதலியோரையும் இருந்து நித் திரை புரியுமாறு இணக்கஞ் செய்து கிடத்தி விட்டு வனத் தைச் சுற்றித்திரிந் தறிந்து வரலாமெனப் புறப்பட்டான்.

வனத்தில் சுற்றிவரும் போது, ஆங்கோரிடத்தில் அவ் வனத்தில் வாழும் மடந்தையோ என்று கண்டார் கருதுமாறு சர்வாங்க சுந்தரியாகிப் பெருந்தேக முடைய வளாகிய ஓராக்கி தென்பட்டாள். பெருந்தேக முடைய வீமன் அப் பெருந்தேக முடையவளைக் கண்டான். யாரோ அரக்கிதா னென்பது முணர்ந்து கொண்டான். அச்சமாவது கோபமா வது கொண்டானல்லன். அவளும் பீமனைக் கண்ணுற்றாள். மானுடனென்றே மதித்துக் கொண்டாள். எனினும், கோப மாவது பிடித்துத் தின்னும் ஆத்திரமாவது கொண்டாளல்லள். அன்பின் தொடர்பு, பிறப்புகளைத் தொடர்ந்து பிறவிதோறும் பின்பற்றி நிற்கு மாகலான், குலம் மாறியும் உலகம் மாறியும் கூடத் தொடர்ந்து பற்றக் காண்கின்றோம். எத்துணையோ தெய்வப்பெண்கள் மானுடமக்களையும் எத்துணையோ மானு டப் பெண்கள் தேவப்பிறப்பினரையும் பின்பற்றிச் சென்று வாழ்ந்தகதைகளைச் சரித்திரங்களில் கேட்டுளோம். வீமனும்

அப்பெண்மகளும் மானுடனும் அரக்கியுமாயினும், அன்பு தொடர்ந்து உள்ளம் நெகிழுமாயின், பிறப்பின் மாறுபாட்டி ஞல் பேதம் தோன்றிடுமோ? தோன்ருது. ஆதலின், இரு வர் மனங்களும் நெகிழ்ந்திருந்தனவே யல்லாமல், கொதித்தி டவில்லை; மயங்கி நின்ற ஆண்மகனுகிய வீமனிடத்தில் அப்பெண்ணணங்கு நெருங்கி வந்து நாணத்தொடு நின் ருள். மக்களைப் பிடித்துத் தின்னும் குலத்திற் பிறந்த இவட்கு நாணமுந் தோன்றுமா? ஏன் தோன்ருது? நாண மென்பது, பருவந் தோன்றிய காலையில் பெண்ணுலகத்து க்கே பொதுவில் தோன்றக் கூடிய ஓரியற்கை மன நெகிழ்ச் சியன்ருே? அன்பின் வழியும் பர்வத்தின் நெருக்கமும் ஒத் துளதாயின், நாணம் முதலியன தோன்றுதல் இயற்கையே.

அணுகிநின்ற அம்மங்கையைக் கண்ட வீமன், உள் மனம் நெகிழ்ந்து, வெளிமனத்தில்விரைவு காட்டி, "பெண்ணணங்கே, நீ யார்!! இவ்வனத்திடை யிப் பேரிருளில் என்ன செய்கிருய்? அரக்கியுருவில் அழகு பெற்றிருக்கின்ருய்! இவ்வனதேவ தையோ அன்றி ஒரு தேவமாதாகிய நீ இவ்வஞ்சவுருக் கொண்டிருக்கின்ருயோ?" என்று வினவிநின்ருன். "இக்காட் டில் இப்பேரிருளில் துணிவுடன் தனியாக வந்து தோன் றிய தீரசுந்தர புருஷனுகிய தாம்யார்" என்று நாணத்தொடும் புன்முறுவலொடும் மொழிந்தனள் நங்கையாகிய இடிம்பி.

"உன்னுடைய செய்தியின் உண்மையைக் கேட்டு உள் ளம் தெளிந்த பின்னர்த்தான் எனது வருகையைத் தெரிவிப் பேன்" என்று உறுதியாகக்கூறிய வீமனது மறுமொழியைக் கேட்டுக் காலங்கடத்த மனமிலாது, இடிம்பி "மானனையாய்! ஊன் உகந்து தின்றிடும் இடிம்பன் என்னும் போரரக்கன் இவ்வனத்தில் இருக்கின்ருன்; மானுடரின் மெய்க்கந்தம்

தெரிந்து, உங்கள் வரவறிந்து நின்று, உளவறிந்து வா என்னை யேவினன். என் முன்னவனாகிய அன்னவன் ஏவலால், மலைந்து பொருது கொன்று உங்களைக் கொண்டேக நான் இங்கு வந்துளேன். மலைகளைப் போலத்தோன்றிப் பொன்னழகெறிக்கும் இரண்டு புஜங்களையுடைய மார்பரே! உம்மைக் கண்டவுடன் என்னங்கம் பூரித்து உம்மைத் தழுவ நினைத்துத் தங்கி நின்றதால், வந்த குறிப்பினை விடுத்து, உம்மை வந்தடுத்துளேன்; இல்லையென்றெனை யொதுக்கிடாமல் ஏற்றுக்கொள்ளுவீர்'' என்று சொல்லி யடியிணை வீழ்ந்து மன்றாடினாள். இன்னது செய்வதென்று தோன்றாமல், மங்கைபால் வைத்த நேயமொருபுறமிழுக்கவும், அரக்கியுடன் உறவு கொள்வதா என்னும் குலத்துமான மொருபக்க மிழுக்கவும் மனந் தெளியாது மயங்கி நின்றான்; மங்கையைக் கண்ணுறுகிறான்; மேலே நோக்குகிறான்; அரக்கன் வருவனோ வென்று இடமும் வலமும் திரும்பிப் பார்க்கின்றான்; தாய் தம்முனை நினைந்து தாழ்கின்றான். ஆதலின் மறு மொழி யொன்றும் கூறாது மயங்கியிருந்தான்.

அண்ணன் விரைந்து வருவனேயென்னும் பயமும் அக்கட்டழகனிடம் வைத்த காதலும் ஈர்க்கும் நெஞ்சினளாகிய இடிம்பி, "கேண்மை கெழுமிய ஆண்மையிற் சிறந்த அழகரே! தெரிவையர்க்கு உளங்கூசும் ஆசை நோய் கூறலென்பது மாதர்கட்குள் ஆகுமன்றி யாடவர்க் குணர்த்தலாகுமோ? ஏழைபடும் துயரினைக் கண்டும் தாழ்த்தலாகுமோ? நீண்ட காலம் நான் இங்கு நின்றிடின் மனம் பொறாமல் அம்மாய வரக்கன் ஓடி வந்து கோபத்துடன் என்னைக் கொல்வான்; அன்றி, யும்மையுங் கொன்று தின்றிடுவான்; ஆதலால், இருவரு மிணைந்து ஒரு கணத்திலே இவ்விட் மிருந்து ஓடிப்போய் ஒரு குன்றிலிருந்து உய்த்திடு

கவாம்; காலம் தாழ்த்திருத்தல் தகுதியன்று; உமது ரோலினைப் பிடித்துக் கெஞ்சுகின்றேன்'' என்று பின்னரும் அடியினில் வீழ்ந்தனள். அடியில் வீழ்ந்துகிடக்கும் மங்கையைத் திண்ணிய கைகளாலெடுத்து நிறுத்தி, "பெண்ணே! இடிம்பி!! எமனையும் ஆற்றலழிக்கும் மொய்ப்புடைய என் முன் இவ்வரக்கனே யன்றிப் பல அரக்கர்கள் சேர்ந்து வந்தெதிர்ப்ப ரெனினும் பயமொன்றும் கிடையாது.

"இரக்கமின்றியே எரிவனத்திடை
யிளைஞ ரெம்முன்யா யிவரை விட்டெமைப்
புரக்கவல்லளென் றொருமடந்தைபின்
போவதாடவர்க் காண்மை போதுமோ
வரைக்கண் வாழ்வுகூர் நம்முன் எம்முனே
மலையவெண்ணிமேல் வந்தபோதுபார்
அரக்கனுகிலென் அவுணனுகிலென்
அவனையோர்கணத் தாவிகொள்வனே."

இரக்கம் யாதுமில்லாமல், இந்தப் பெருங் கானகத்தினிடையே, எனது தாயும் தமையனும் தம்பியுமானவர்களைத் தனியே படுக்க வைத்து விட்டு, என்னைக் காக்க வல்லவள் இம் மடந்தை யென்றெண்ணி யொரு பெண்ணைப் பற்றிப் பின் தொடர்ந்து போவது ஆற்றலமைந்துள்ளவோ ராடவனுக்கு ஆண்மையாமோ? இயற்கையையுடைய உன் தமையனெதிர் வந்து நின்று போர் புரிவனுகில், அப்போது என் பலத்தைப் பார்! அரக்கானுலென்ன! அவுணரானுலென்ன!! எதிர் மலைந்தபோது இமைப்போதி லவன் ஆவியைக் கொள்வேன்; பயப்படாதே'' என்று சொன்னான்.

இடிம்பன் வதம்.

மனித வாஸனையைத் தொடர்ந்துபோ யம்மானுடனை யிழுத்துவா வென்றனுப்பப்பட்ட தங்கை யிடிம்பி, இது

காறும் வந்தமைபோல் விரைவில் வந்திடாமல் காலந் தாழ்த் திருக்கின்ருள்; என் நிகழ்ந்ததோ ? வலியுடைய மானுடராக இருந்து தங்கைக் கேதாகிலும் கேடு சம்பவித்ததோ என்று கலக்கமும் கோபமுங் கொண்டு ஓடி வந்து, இடிம்பன், இவ் விருவரும் பேசி நின்றதை யொண்டி நின்று கேட்டிருந்தவ னுதலால், வீமனுரைத்த சொல்லைக் கேட்டவுடன் பதைத்து, "அரக்கனுகிலென் அவுணனுகிலென்" என்ன! என்ன!! இந்த ஒரு மானிடப்பதர் அரக்கரையும் அவுணரையும் ஆவி கொள்ளுமாமே! வெகு நன்ருயிருக்கிறது!! என்று பட படத்து இடியிடித்து, "அடே யாரடா!

"வாரடாஉனக்கியாது தானர்தம் மஙவடுக்குமோ
வானமாதர்தோள்
சேரடா மலைந் துயிரை மெய்யினைத்தின்று தேவரூர்
சேருவிப்பன்யான்
போரடா துன்னே டாளியேறுபுன்பூனை தன்னுடன்
பொரவினைக்குமோ
பாரடா வெனுண்மை யரக்கர்கைப்பட்ட போதில்யார்
பாரில்வவகினர்"

ஓஹோ! குட்டியிடம் கொஞ்சலா! மயக்கமா!! மானுடப் பதரே!!! உனக்கு அரக்கர் மடந்தையை யணைதல் அடுக் காது; ஒரு கணத்தினிற் போய் அரமடந்தையை யணைய லாம்; இதோ அனுப்புகின்றேன்; அனுப்புகின்றேன்; அணுப் போன்ற உன்னுடன் அரக்கனுகிய யான் போர் குறித்துப் பொருதல் அழகன்று; ஆளி ஒரு பூனையுடன் போர்க்கு எழுமா? பார் என் ஆண்மையை யிப்போது!! உனது மெய்யினைத் தின்று உன் உயிரைத் தேவரூர் சேர்ப் பிக்கின்றேன்" என்று சொல்லி யுடன்று வீமன்மே லுருத்து வந்தான்.

கண்ட இடிம்பி கலங்கிக் காதலும் பயமும் கலந்த நெஞ்சினளாகித், தமையன் வன்மையைத் தெரிந்தவளாதலால், அண்ணன் காலிடை வீழ்ந்து கெஞ்சினுள். துரியன்மேலெழுந்த கோபத்துடன் தினவெடுத்த தோள் கொண்டு நின்ற வீமனுக்கு இஃதோர் நற்சகுனமாகத் தோன்றியதால், தன்மேல் வீழ்ந்த அவ்வரக்கனை யொரு பந்தெனத் தாங்கிப் பிடித்து வீசி யெறிந்தான். வெகு தூரத்துக் கப்பால் வீழ்ந்த அரக்கன், கோபமீறி யெழுந்து அருகு நின்றதொரு மரத்தைப் பறித்தேந்திக் கொண்டு ஓடி வந்தான். மரத்தை வேறொரு மரத்தினலடித்துக் கீழே வீழ்த்தியரக்கன் மேற் பாய்ந்து மோதித்தாக்கினுன். சமவலிவுடைய இருவரும் பொருது வீழ்தலும் எழுதலும் மோதலும் தாக்கலுமாக உக்ரத்துடன் போர்புரிந்தார்கள். அவ்விருவரும் பாய்ந்து பாய்ந்து மலைந்தெதிர்க்கு மளவில், இடிம்பிபார்த்து பயமும் களிப்பும், பற்கடித்தலும கைந்நெறித்தலும் காட்டிப் பீமனது ஆண்மையையும் தேகத்தின் திண்மையையும் கொண்டு அண்ணன் அழியினும் அவனைப் பொருளாக எண்ணுத நிலையி லிருந்தனள்.

உக்ரம் கொண்டவீமன், அரக்கனை பிணித்துப் பிடித்து அடித்து இடித்து மோதித்தாக்கி யோர் மரமெனச்சாய்த்து மேலேறிக்குத்தின போதும் அரக்கன் வீறிட்ட போதும் இரக்கம் காட்டாளாகி வீமனது புயங்களையும் மார்பையுமே பார்த்துக் கொண்டு காதற் கண்ணுடன் நின்றுள். என்னே! காதலினியக்கம்!! பலநாட்பழகி தனக்குப் பெருந்துணையா யிதுவரையிலிருந்த கூடபிறந்த அவனையுங் கருதாது கணத்தின் முன் கண்ணுற்றதோ ராடவனையே கருதி நின்றுவிட்டனளே! ஈதென்ன மயக்கம்! மயக்கமா? பன்னெடுநாள் பல பிறப்புக்களிலே பலவுருக்களிலே பழகிநின்ற மனப்

பழக்கமன்ருே அன்புருவாக ஈண்டுத் தொடர்ந்து நின்றது. இடிம்பன் பழக்கம் அவட்குச் சில நாட்பழக்கம்; வீமன் பழக்கமோ பல நாட்பழக்கம். இடிம்பன் பழக்கம் இப் பிறப் பின் பழக்கம்; வீமன் பழக்கமோ முற்பிறப்பின் பழக்கம் போலும்; இடிம்பன் உறவு தேகத்தை மாத்திரம் பற்றியது; வீமனுறவோ மனத்தையும் பற்றியுள்ளதாகலின் இடிம்பி, அன்புருவாயமைந்து அருகு நின்ருள்.

இடிம்பியின் மணவாழ்க்கை.

வீமனும் அரக்கனும் மலைந்த காலையில், இடித்த இடிக ளும் அடித்த அடிகளும் மரங்களை மடமடவென்று ஒடித்த ஓசைகளும் ஒருவர்க் கொருவர் தாக்கிய ஒலிகளும் பாண்ட வர்களையும் தாயையும் தூக்கத்தினின்றும் எழுப்பிவிட்டன. பதறியெழுந்தனர்; வீமனைப் பார்த்தனர்; காணூர்; பதைப் புடன் யாவரும் ஓடினூர்; இடி முழக்கம் போன்ற அடிமுழக் கமும் கர்ஜனையும் தோன்றிய இடமும் நோக்கியோடிப் பார்த் தார். வீமனையும் கீழ்வீழ்ந்து கீச்சிட்டலறும் அரக்கனையும் அருகு நின்ற அழகும் இளமையும் பொருந்திய அரக்கியை யும் கண்ணுற்றுக் கலங்கினராயினும், உடனே களித்து நின்ருர்கள்.

“வன்திற லிடிம்பனை வயக்கையா லுடல்
ஒன்றிரண் டாகுமா றுடன்ற மைந்தனை
அன்றுகண் டனளியாய் அரியின் பேடுதன்
கன்றுதிண் கரிபொரக் கண்ட தென்னவே”

வலியதிறலுடைய வோ ரரக்கனுகிய இடிம்பனைத் தள்ளி யேன்மிதித்து வெற்றி பொருந்திய கையால் குத்திக்குரல் கீச்சிடவும் இரத்தம் பீறிடவும் வதைத்த வலிமையை நேரிற் கண்ட தாயாகிய் குந்தியான்வள், மதயானையின் மத்தகத் தைக் கீறி யுதிரத்தை யுறிஞ்சிடும் தன் குருளையைக் கண்ட

பெண்சிங்கத்தைப் போலும் பெருமகிழ்ச்சி கொண்டனள். சோதரர்களும்இவனொருவன் துணையேகொண்டு,நாம் துஷ்ட கௌரவரை யொழித்திடலா மென்றுள்ளங்களித்து அவனை யணைத்துப் போற்றினார்கள். ஐவரையும் பார்த்து நின்ற இடிம்பி அரக்க ரியற்கை யாவும் அழிந்து, ஓர் மானுட மடந்தையைப் போல நாணும் மடனும் தோன்ற நின்றனள். ஐவராற்றலையும் அழகினையும் தெளிவையும் தேறி, "யாரோ க்ஷத்திரிய வீரர்கள்; ஏதோ காரணம் பற்றி இவ்வனத்தில் மறைந்து ஒழுகுகின்றார்கள்" என்ற அளவே ஊகித்திருந் தாள். வீரர்களும் இடிம்பன் உடலை யங்கேயே கிடத்தி அப்பு றம் தாயுடன் ஏகினர். நங்கையும் அண்ணன் சரீரத்தைப்பற் றியாதும் கருதாது, வீமனையே பின்தொடர்ந்தாள். அவ்வன த்துக்குத் தலைவனான இடிம்பன் இறந்துபட்டொழிந்ததனால், அவன் உடலை, அவனைக் கண்டு அஞ்சிப் பழகிவந்த வனமிரு கங்கள் கண்டு, தமக்குரிய இயற்கையின்படி உபசரிக்கட்டும் என்று காட்டிக் கொடுப்பான் போலச் சூரியனும் கிழக்குத் திசையில் ஒளி யேற்றி வந்தான்.

தாயொடு நின்றபோதும் தமையனுடன் பேசியகாலை யும் தம்பியோடு விளையாடும் போதும் தன்னை விட்டு நீங்கா மலே தொடர்ந்து நின்று காதற் குறிப்புடன் நாணியிருக்கும் இடிம்பியை நெருங்கித் தொடவும் முடியாமல் காதலொளி யினால் கண்மயங்கிக் கருத்தலைந்து நிற்கும், வீமன், ஒரு போது அவள் தன்னைத் தொடரும்படியாகத் தனியிடம் சேர்ந்தான்; மங்கையும் மகிழ்ந்து சென்றாள்; தம்பியர் நோக் கித் திகைத்தனர்; தமையன் நகைத்து நின்றார்; தாய் அவா றியாது பின் தொடர்ந்து நிகழ்வதை யறியச் சென்றாள். நின்ற பீமனைத் தொடர்ந்த நங்கை யிடிம்பியானவள், சரே லென அவனையணைந்து கொண்டு, "அண்ணலே! இன்னுமா

தாமதம்? ஒரு பெண் படும் அவஸ்தையை யுணர வேண்டாமா? ஆண்மகனாகிய நீர் பொறுத்துச் சகித்திருக்கின்றீர் போலும்; பெண்ணியல்பாற் பொறுக்கக் கூடாது தவிக்கின்றேன். இன்னமும் பரீக்ஷை வேண்டாம். உமது நிழல் போற் கூடியிருப்பேன். ஒரு போதும் உமதனுமதியில்லாமற் பிரிய மாட்டேன். உமது திருவடிகளைப் பிடித்துக் கொள்கின்றேன். உம்மை விடமாட்டேன்'' என்று பின்னும் தழுவிக்கொண்டாள். ஆசை மிக்கொண்டும் குலமானத்தைக் கருதினவனாகிப் பீமன், அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு, ''மாய்ந்த வரக்கன் துணைவியே, கேள்! இறந்து பட்டதமயனிடமும் இரக்கங் காட்டாமல், என்னைப் பின் பற்றிவந்த நின் இயற்கையையும் காதலையும் அறிந்துளேன்! என் செய்வேன்? நீயோ அரக்கர் பாவை; நானோ மானுடன். எம் குலத்துக்கு மூத்தவனாகிய தர்மனுக்கே இன்னும் மணம் முடியவில்லை. அண்ணன் பிரமசரிய நிலை நீங்காதிருக்கத் தம்பி இல்லறத்தைக் கைக்கொள்ளுதல் குலத்துக்கிழுக்காகும்; ஆதலால் இது இசையாத காரியம்; அந்த எண்ணத்தை யொழித்து விட்டு விலகிப்போ; மற்றும் என்னைத் தொடர்ந்து வருவையானால், என் தம்பியர் இருக்கின்றார்கள்; முன் உலகத்தில் இராமனைத் தொடர்ந்து நின்ற ஓர் அரக்கி அவன் தம்பியாற் பட்டபாட்டை நீ யறிவாய்; ஆகையால் போய்விடு'' என்று கையை யுதறிக்கொண்டு ஓடி வந்தான். ஒண்டிக் கேட்டிருந்த தாயெதிர்ப் பட்டாள்; திடுக்கென நாணித் தலை குனிந்து நின்றான். உடனே யவ்விட மிடிம்பி தோன்றி, மாமியை வணங்கிக் காலைப்பிடித்து முகம் பார்த்து ஒன்றுஞ் சொல்லவியலாது நின்றாள்.

பெண்ணின் இயற்கையையும் காதலையும் நன்கறிந்தவளாகலின், குந்தி, இடிம்பியின் குறிப்பையும் குணத்தை

யும் காதலொளியையும் கண்டு மனமிளகி, அவளுடன் வீமனைப் பின் தொடர்ந்து தருமனிட மேகித், தருமனுக்கும் குறிப்பாக உண்மையையுணர்த்திச் சம்மதிக்கச் செய்து, வீம னைப் பார்த்து "குழந்தாய்! மறுத்துரைப்பது கடனன்று; மாந் தருக்கு அறத்தியல்பு யார்கணும் அமைதல் வேண்டும்; உன் மேல் மிகக்காதல் கொண்டுள்ள இவளை நீ உறத்தகும்; கழித் திடின் பாவமுஞ் சேரும்; அண்ணனு மமைந்துளான். மறை வழக் கொடுபட்டமணமாயின், அவளிடம் நீ சொல்லிக்கொண் டிருந்தபடி குலமானத்தைக் கவனித்திடலாம்; இது கந்தர் வரியல்புடைய மணமாகப் பொருந்தலாம்; கன்னியைக் கெ டுக்க நினையாதே; ஒரு தலைக் காமமாகாதபடி, உன்னுள்ளும் அவள் பாலெழுந்த காதலை யொளிக்காதே; இந்தா! இவ ளைக் கைப்பற்று" என்று சொல்லி இருவரையும் இசைவித் தாள். காதலரிருவரும் நாணிக் கரங்கள் பற்றிக் காடுசேர்ந் தார்.

வியாதன் வரவு.

"அன்னையுந் தம்முனும் அறைந்த வாசகம்
முன்னையின் மறையென முடியிற் சூடினன்
மின்னையு முடன்கொடு போந்து மேவுநீர்
தன்னையுங் கண்டதில் திளைத்துத் தங்கினர்"

அத்தின மவ்வனத்திலிருந்து எழுவருமாகக் காலம் போக்கினர். இடிம்பி மாமியிடம் வணக்கமும் காவலனிடம் காதலும் கொழுந்தர்களிடம் நாணமும் கொண்டு வேண்டுவ புரிந்திருந்தனள். திக்கற்றவர்கட்குத் தெய்வம் வேளையில் வந்து உதவிக்கொண்டிருக்கும். கடவுள் பெரியவ ருருவத்தில் திரிந்து பக்தர்கட்கு வேண்டுவ புரிந்து விலகுதல் இயற்கை; தர்மதேவதைகள், "இவ்வனத்தில் தங்கிப் பின் எங்குப் போ வது என்ன செய்வது?" என்று தயங்கிக் கொண்டிருக்கும்

போது, அவ்வனத்துக்கு வியாதமாமுனிவர் வந்து அவர் முன் தோன்றினர். தாயும் தனயரும் தங்கள் மூதாதையைத் தாழ்ந்து வணங்கிப் பணிவுடன் நிற்றலும், முனிவர் அவர்கட்கு நல்லாசிகள் கூறி வீற்றிருக்கும்படி சொல்லித் "தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் மாத்திரம் போனது'' போல நீங்கள் அத்தின புரியையும் வாரணுவத்தையும் விட்டு நீங்கியது தெய்வ கிருபைதான்; நல்லோர்க்கு ஆக வேண்டிய நலம் பழுதாகாது; ஆங்கு விதுரனுருவில் தெய்வமிருந்து உங்களைக் காத்திருக்கும் போது, வஞ்சகர் எண்ணம் வலியுறுமா? வாரணுவத மாளிகை கருகிய விடத்தில் அம்மனைக்கு அவராலேவப் பெற்றுத் தீயிட வந்து மறைந்திருந்த வேடருந்தாயுந் தீந்து கருகியிருந்த உருவங்களைக் கண்டு நீங்கள் அறுவரும் மாண்டு போயதாக மயங்கிக் களித்திருக்கிறுர்கள் துஷ்டர்கள்; அத்துஷ்டர்களில் ஒருவனுன புரோசனமந்திரி வீமனிட்டதீயால் மாளிகையுடன் கருகிமாண்டான். ஒரு வினைக்கு ஒரு பலி கொடுத்தே அவர் களித்திருக்கின்றுர்கள். நீங்கள் கலங்கவேண்டாம். இந்த வனம் தனிவனம்; அரக்கர் மிகுந்த வனம்; நாளையிதை விட்டு இதனை யடுத்துள்ளதாகிய சாலிகோத்திர வனத்திற் சில நாள் தங்கியிருந்து பிறகு பிராம்மண வுருவு கொண்டு வேத்திரகிய நகாஞ் சேருங்கள். அங்குப் பல நாள் தங்கியிருந்த பிறகு, நீங்கள் மங்கலம் பெறுவீர்கள்'' என்று உறுதிகள் பல சொல்லி யாசிகள் கூறி அகன்றுர்.

கடோற்கசன் பிறப்பு.

அற்றைப் பகலிரவு அங்குத் தங்கியிருந்து, அறுவரும் இடிம்பியுடன் மறுநாள் புறப்பட்டு நெடு வழி நடந்து, முனியுரைத்த வண்ணம் சாலிகோத்திர வனம் போய்ச் சேர்ந்தார்கள். வேள்வியின் புகைகளும் வேத கோஷமும் சூழ்ந்திடு சோலையும் துறையுறு நதியும் ஆள்வினை வேடரும் அறத்

துறை மாந்தரும் தாழ்ந்திரா மாங்களும் தங்கிய தவ்வனம். அங்குப் போய்ச் சேர்ந்து தனியிடத்நிற் சாலையமைத்துக் கொண்டு தத்தம் கருமங்கள் இயற்றித் தாய்க்குப் பணிவிடை செய்து வந்தார். தக்கவர் பெரியோர் வாழ் சோலைகள் சென்று மிக்கன கேள்விகள் விதந்து பெற்றனர். மறை யவர் பலரொடும் பயின்று, அவர் தம், நிறைதரு நியமங்கள் நன்கு கற்றனர். குந்தியை யிரவு நன்பகலுங் கோதிலா வந்தனை புரிதலின் மகிழிடிம்பியும் வெந்திறல் வீமனும் விழைந்து, வள்ளியும் கந்தனு மெனப் பெருங் காதலாடினர். கஸ்தூரி கமழும் காடுகளிலும் காழகில் நிறைந் தொளிர் கானகங்களிலும் தேன் மிகுந்த மாமுடைச் சோலைகளிலும், நீர் மிகுஞ் சுனையுடைக்குன்றுகளிலும், இளைக்காத காமக்களி யில் திளைத்து ஒரு நாட் காலத்தை ஒரு கணமாகக் கழித்து, ஓராண்டின்பத்தை யொரு நாளிலனுபவித்து, மானும் கலை யும் போலவும், மாமுங் கொடியும் போலவும், ஓடியாடி கூடிக் குலாவி வேட்கை மிஞ்ச விழைந் திருந்தனர். மங்கைக்கு வயிறும் கனத்தது; வீமன் நாணினன். சோதாரும் தாயும் குளிர்ந்து மகிழ்ந்தனர். நங்கை யிடிம்பியும் நல்ல வேளை யில் கடோற்கசன் என்னும் காளையை யீன்றெடுத்தனள். நிறத்திற்றிகழ்ந்துள்ள இருட் கூட்டம்போல் நீண்டு மிகுதியா யுள்ள புறந்தருமுரோமங்கள் பூண்டு மலை போன்ற தோள் களுங் கொண்டு கேட்பவர் அஞ்சத்தக்க குரலும் வாய்ந்து வந்து தோன்றினன். தந்தையரையும் தாயரையும் வணங்கி நின்றான்.

"காதிய திறனர காசுரன்றனை
ஆதிவெங் கோலமன் றளித்த வாறுபோல்
மேதினி மதித்தபோர் வீம னல்கிய
சோதியம் புதல்வனும் தொழுது சொல்லுவான்"

"நிறையுடைத்தந்தைகளாகிய நீங்கள் நினைத்தபோது, உங்கள் உறை விடத்துக்கு வந்து உரிய செய்குவேன்; இறைவர்களே! இனி யெனக்கும் என் தாய்க்கும் விடையருளுவீர்கள்; எங்கள் வனம் காத்திட நாங்கள் ஏகல் வேண்டு" மென்று யாவரிடமும் விடை பெற்றுத் தாயும் தனயனுமாக ஏகினார்கள். வீமனும் சிறிது மயங்கிப் பின்னர்த் தேறினான். அன்று அவ்வனத்திருந்து நீங்கி, வியாதர் குறித்துப் போனபடி, வேதியர் உருவமைந்து வேத்திர கிய நகரஞ் சென்றார்கள்.

வேத்திர கீய நகரம்.

மகனொடும் இடிம்பியைப் பிரிந்து, அந்தணருருக் கொண்ட ஐவருந் தாயும், நெடு வழி நடந்து, காடு மலைகளையும் கடு வழிகளையுங் கடந்து வேத்திரகிய மாநகர மென்னும் வேதியர் வாழும் நகரைப் போய்ச் சேர்ந்தார்கள். வேத பாட சாலை சாஸ்திர பாட சாலைகளும் கோயில்களும் குளங்களும் நிரம்பி, கடவுளர்க்கு பூஜையும் விழாவும் நித்த நியமங்களும் நிறைந்தது அந்நகர். அந்நகர்க்கு அணித்தாக அழகிய ஆறும், ஆற்றின் இரு கரைகளிலும் வயல்களும், கிராமத்துக்குத் தென்புறமுள்ள ஆற்றுக்கப்பாலுள்ள வயல்களைத் தாண்டிச் சென்றால், காடும் பின்னர் மலையும் உள்ள இடம் அது. பிராம்மணத் திருமேனி கொண்டு கிராமத்துக்குள் நுழையவும், இவர்களது தேஜஸைக் கண்டு, வேதியர் நல்வரவு கூறி உபசரித்தார்கள். நான் முன்னே நான் முன்னே என்று ஆதித்தியம் செய்ய முன் வந்தார்கள். ஒவ்வோரகத்தில் ஒவ்வொரு நாள் வைத்துக்கொள்வதாக ஒப்புக் கொண்டனர். ஐவரும், ஒரு வேதியர், தம்மில்லத்துக்கு அழைத்துப்போய், வாஸஞ் செய்தற்கு நல்ல அறைகளை அமைத்துக் கொடுத்து உபசரித்தனர். ஐவரும் தாயும் சந்தோஷமாக அங்குப்

புகுந்து நல் ஃவளையிற் குடியேறினர்கள். அந்த வீட்டுக்கு உரியவளாகிய வேதியர் மனைவியும், மிக நல்லவளாகையால், குந்தியை மிக்க அன்போடு வரவேற்று உபசரித்து அளவளாவிக் கொண்டிருந்தாள். அவ்வூரில் மிக்க உபசாரம் பெற்று வாழ்க்கை நடத்தி வந்தார்கள். ஒவ்வொரு வீட்டாரும் ஒவ்வொரு நாள் ஆதித்தியம் செய்து உபசரித்தது மாத்திர மல்லாமல், பகற் காலங்களிலும் மாலைக் காலங்களிலும் கூட இவர்களை விட்டுப்பிரிய மனமிலாதாராகிக் குலவி வாழ்ந்திருந்தார்கள். அவ்வூரில், அக்காலம் ஒரு அதிசயம் நடந்தது. அஃது இன்னதென விரிப்போம்.

பகாசுரன் கதை.

ஐவரும் ஏறிக் குடியிருந்த அந்த மனைக்குரிய வேதியன் மனைவி, முன்னங் குறித்தபடி ஸாது ப்ரக்ருதியுடையவள். குந்தியிடம் மிக்க அன்பு பூண்டவள். வந்த நாள் முதல் குந்தியைச் சகோதரியாகப் பாவித்து வந்தாள். வேண்டியபோது உதவி பல செய்து வந்தனள். எதுவாயினும் குந்தியிடம் சொல்லாமல் ரஹஸியமாக வைத்திருக்க மாட்டாள். நல்ல விரத முடையவள். நிறைந்த செல்வ முடையவள். அழகிலுங் குறைந்தவளல்லள். இவள் ஒரு நாட்போது, உத்ஸாக மற்றிருந்தாள். குந்தியும் அவளிடம் மாறு பாட்டை யறிந்து மனங் கலங்கியிருந்தாள். முற்பகல் வேளையில், குந்தி மைந்தர் ஆதித்யம் பெற்று வருதற்கு வெளியே சென்றிருந்தபோது, அவ்வம்மை யழுதுகொண்டிருந்தாள். குந்தி திடுக்கிட்டு நடுங்கினாள்; கலங்கினாள். "எந்த நாளும் மிக மகிழ்ச்சியுடனிருந்து, நாம் வந்து கூடிய இந்த நாளில் இவ்வம்மைக்கு ஏதோ துன்பம் வந்தது போலும்; நம்மைப் பற்றிய வினை இவ்வம்மையையும் பிடித்

துக் கொண்டதோ! என்ன செய்வோம்? சென்று விசாரிப்போம்'' என்று தேறி, அந்த அம்மாளிருக்குமிடம் போய் சேர்ந்தாள். பலவாறு உபசாரம் செய்து ஸமாதானப்படுத்தியும் அவள் அழுகையை விடாமலிருக்க, 'நிகழ்ச்சியைச் சொல்லுங்கள்; கேடுண்டாயின் நிவர்த்திக்கக் கூடுமானல் நிவர்த்திப்போம்; என் புத்திரர்கள் தவமும் அறிவும் உடையவர்கள்; மனோ பலமும் தேக பலமும் பொருந்தியவர்கள். அவர்களாலியலாதது, இவ்வுலகிலும் அவ்வுலகிலேனும் கிடையாது, தாராளமாகச் சொல்லுங்கள்'' என்று வற்புறுத்தினாள்.

"சகோதரி போன்ற அம்மையே! இந்த நகரத்துக்கு அருகில், ஆற்றுக்கு அப்புறத்திலுள்ள தொரு மலையில் ஏக சக்கர வனத்தில் பகன் என்னும் அரக்கன் ஒருவன் இருக்கிறான். எமன் போன்ற உருவுடையான். கோரைப் பற்களும் குண்டு வயிறும் உடையவன். மாமிச பக்ஷணத்தில் மிகப் பிரியன். அதிலும் நர மாமிசமென்றால் அவனுக்கு பரமான்னம் போலும். அவன் தினந்தோறும் இந்நகர்க்கு வருவதும், ஆடு மாடுகளையும் மனிதர்களையும் கானவிலங்கைப்போல் பிடித்துக் கிழித்து உண்பதும் வழக்கமாயிருந்தது. கான விலங்காயினும் பசிக்கு வேண்டியதைக் கொள்ளும்; அதற்கு மேல் திருப்தியடைந்து விடும். தினந்தோறும் உபத்திரவம் செய்யாது; இவ்வரக்கன் தினம் வந்து மலை மலையாகக் கொன்று தின்று விடுவான். நகர ஜனங்கள் பகலிரவு தூக்கமில்லாமல், அவன் வருமுன் எங்கேனும் ஓடி யொளிந்து தப்புவதுண்டு. தப்பமுடியாதவர்கள் பலர் உயிரிழந்து மாண்டார்கள். இப்படி எத்தனை நாட்கள் காலம் போக்க முடியுமென்று, நகரப் பெரியோர்கள் ஒரு நாள் கூட்டங்கூடி யாலோசித்துப் பல பேர்களாகக் கூடி அவ் வரக்கனிடம் தைரியத்

துடன்போய் விண்ணப்பம் கொடுத்துச் சம்மதிக்கச் செய்து ஒரு ஒப்பந்தம் பெற்று வந்தார்கள்; அந்த ஒப்பந்தமாவது; "இப்படிப் பல பேரையும் ஒரு சில நாட்களிலே தின்று விட்டால், பின்னர், உனக்கு ஆகாரம் குன்றி, வேறு நகரத்தைத் தேட வேண்டியிருக்குமே; ஆகையால், நீ நகரத்துக்குள் நுழைந்து பலரையும் பயமுறுத்த வேண்டாம்; நாங்கள், நாள் தவருமல், மனைக்கொரு பங்காக வைத்துக் கொண்டு, இரண்டு காளைகளும், அவைகளிழுத்துவரும் வண்டி நிறையச்சோறும், வண்டியை யோட்டிவரும்ஒருமனிதனும் உனக்கு ஆகாரமாக விடுக்கின்றோம்; பகல் பதினைந்து நாழிகைக்கு அவசியம் நாடோறும் தவருமல் அனுப்புகிறோம்" என்று பேசி வந்தார்கள். அவனும் சம்மதித்து அப்படியே தின்று வருகிறான். கிராமத்தார் வீடு தவருமல் நாடொறும் தவணைப்படி ஒவ்வொரு வீட்டாரும் அனுப்பி வருகிறார்கள். இன்றைக்கு எங்கள் மனைத்தவணை யென்று, இப்போதுதான் கிராமக் காவலன் வந்து சொல்லிப் போனான்; என்ன செய்வேன், இந்தப் பாழும் விதிக்கு? சில வீடுகளில் கிழவர்களிருந்ததுண்டு; நாளைச் சாவதையின்றே யொழியட்டு மென்று தள்ளி விட்டுச் சுகமே யிருக்கிறார்கள்; நான் என்ன செய்வேன்? அந்த பாக்கியம் நான் கொடுத்து வைக்க வில்லையே; இதோ இருக்கின்ற இவள் என் புதல்வி ; வயதானவள்; மற்றொருவனுக்கு மனைவி; இவளையனுப்ப எமக்குப் பாத்தியமில்லை; இதோ இவன் ஒரேகுமாரன் எனக்கு; அவன் ஒருகுழந்தை; நல்லவயது வந்து வளர்ந்திருக்கின்றான்;அவனையனுப்பி விட்டால் எங்குல விருத்திக்குவேறு மகனில்லை; என் கணவர் தர்மமுனிவர்; அவரில்லை யெனில் குடும்பம் அடியோடழிந்து போம்; என்ன செய்வேன்? நான் சென்று விட்டால் இவ்வளவு பேரையும் காப்பாற்றுதற்கு வேறு யாருமில்லையே"

என்று சொல்லிக் கதறினாள்; கலங்கினாள்; வீழ்ந்தழுதாள். அவளைச் சமாதானப் படுத்தி யழுகையை நிறுத்திக் குந்தி சொல்ல ஆரம்பித்தாள்:

"தாயே! இதற்கு இனித்தாங்கள் கவலையுற வேண் டாம்; இனி இந்த நகரத்தைப் பற்றிய கேடுகாலமே ஒழிந்த தென்றுகூட வைத்துக் கொள்ளலாம்; அந்த பகாசுரனையே யொழித்திடும் வழியை நாம் தேடுவோம்; என் புத்திரர்களது ஆற்றலை முன்னமே நான் உங்கட்குத் தெரிவித்திருக்கின் றேன்; அவர்களில் இரண்டாவது குமரானிருக்கின்றானே, திண்ணிய தோள்களும் அகன்ற மார்பும் உடையவன்; அவன் உருத்தெழுந்து நின்றானாயின், மலையையும் பொடியாக்கும் பெருவலி யுடையவன்; அவன் அந்தப்பகனைக் கொல்ல வல்ல வன்; ஆகையினால் அவனையின்று அனுப்புவோம்; இன்றைக்கு உங்கள் முறையாகையால் வண்டியும் காளைகளும் வண்டி நிறையச் சோறும் ஆயத்தப்படுத்துங்கள்; தினந்தோறும் இரையையனுப்புகிற வேளைக்கு என் மகன் - அவனையனுப்பு கிறேன். ஆதித்யம் பெற்று அதற்குள் மனைவந்து சேர் வார்கள்; உங்கள் கவலையின்றேயொழிந்த தென்றே கருதுங் கள்; எழுந்திருங்கள்; எல்லாம் ஆயத்தப் படுத்துங்கள்; எழுந் திருங்கள்" என்று விரைந்து கூறினாள். கேட்டஸாத்வியாகிய அந்தஅம்மை மனந்தளர்ந்து "குடியிருக்க வந்தவரைக் கொலை சூழ்வதா? இந்தப் பழி ஏழேழு ஜன்மங்களிலும் எங்கள் குடும் பத்தையே விடாது பற்றிக்கொண்டிருக்குமே! இது அடாது; இது அடாது" என்று பயந்து பின்னரும் வேண்டுவதைகூறப் "புத்திரன் பலத்தைப் பற்றிச் சந்தேகிக்கவே வேண்டாம்; அரக்கனைக் கொன்றதை நான் என் கண்ணாரப் பார்த்திருக் கின்றேன். என் மகனைப் பலிகொடுக்க வெண்ணி யனுப்பி அவனும் இறந்தாலன்றோ உங்களைப் பழிசுற்றும்; அவன்

அரக்கனை ஸம்ஹரிக்கவே இங்கிருந்து புறப்படுகின்றானாகை யால், இது பழியுமில்லை; பாவமுமில்லை; நகரமாந்தரைக் காப்பாற்றிய புண்ணியமுமாகும்; ஆதலால் ஐயங்கொள்ளாமலெழுந்தருளுங்கள்'' என்று வற்புறுத்தினாள். நாகரிகம் தெரிந்த அவள் மகளும் தைரியம் சொல்லவே, அம்மை யெழுந்து பெருஞ் சமையல் செய்து எல்லாம் சித்தப்படுத்தினாள். வெளியிலிருந்து மனைவந் தேறிய கணவற்கும் மகனுக்கும் தங்கள் தவணை நாளைக்குறித்துச் சொல்லிக் குந்தி சொன்ன செய்தியையும் சந்தோஷமாகக்கூறினாள்; அவர் பயப்பட்டுப் "பழியாகுமே'' என்று கதறியபோது, குந்தி சென்று ஆறுதலும் தேறுதலுஞ் சொல்லிச் சம்மதிக்கச் செய்தாள். யாவரும் சம்மதிக்கச் சாமான்களும் தயாராயின. புத்திரர்களும் வந்தார்கள். குந்தி சமாசாரத்தைச் சொல்லி வீமனை யேவினாள்; வீமனும் சம்மதித்துப் பெருவிருந்து கிடைக்கு மென்று களித்தான் ; அதற்குள் கிராமச்சேவகனும் வந்து சேர்ந்தானாகையால் வண்டியும்மாடுகளும் தயாராகவந்து நின்றன. பெருஞ்சோற்றுமலையும் வண்டியில் நிரம்பியது; ஊராரும் கூடிவிட்டனர்; வீமன் வெகு களிப்புடன் ஏறி எல்லோர்க்கும் நல்லன சொல்லிப் பகனைக் கொன்று வருகிறேன்; பயப்படாதீர்கள்'' என்று சொல்லி, ஏக சக்கர புரத்துக்குப் புறப்பட்டான்; ஐவர் தவிர மற்றவர்க்கு நம்பிக்கை பூர்ணமாக இல்லை; "ஒரு மாநுடன் அரக்கனைக் கொல்வதாவது! இது வீண் பேச்சு'' என்று பேசினார்கள். சிலர் ஏசினார்கள். சிலர் "எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? யார் கண்டார்கள்? இவ்வைவரும் யாரோ? எந்தத் தேவதைகள் இப்படி யொளிந்து வாழ்கிறார்களோ? யார் கண்டார்கள்?'' என்று சொல்லிக்கொண்டார்கள். "அநுபவிக்கமுடியாத கஷ்டம் நேர்ந்த போது சுகந் தோன்றுவது இயற்கை; இந்த நகரத்தாரைப் பற்றியிருந்த கஷ்டம் நீங்கக் கடவுளே

இந்த உருவில் வந்திருந்தாலும் இருக்கலாம்'' என்று சிலர் பேசினர்; தர்ம முனிவர் தவனை யின்று. தர்மமே சொரூப மெடுத்து வந்த அந்தப் பெரியவர் மிகவும் ஸாது; பக்தர்; அவரைக் காப்பாற்றவே பகவான் இங்கு வந்திருக்கிறார் என்றும் பலபேர் பலவாறும் சொல்லிக் கொண்டார்கள்.

பகாசுரன் வதம்.


வீமன் வண்டியொடு சென்றான். ஆறு கடந்தான். மலை கடந்து ஏக சக்கர நகரினருகுபோய் வண்டியை நிறுத்தினன். கூட வந்த கிராமச் சேவகர்கள் திரும்பி விட்டார்கள். வீமன் சோற்று மலை மீதேறி உட்கார்ந்து, அதனைச் சிறுகச் சிறுகக் கரைத்துக் கொண்டிருந்தான்; பாதி வயிறு நிரம்பியது; மேலும் வாரி வாய் மடுத்தான். இதற்குள் பகன் "என்ன நாழிகை யாயிற்று; வண்டியை யோட்டி வரும் ஆள் வந்து அழைப்பது வழக்கம்; இன்று இந்நேரமாகியும் வாக்காணேனே'' என்று சிந்தித்துக் கோபம் மூண்டு, குகையிலிருந்து வெளி வந்து பார்த்தான்; வண்டியையும், வண்டிச் சோற்றி லொருவன் மண்டி போட்டிருந்து உண்டு கொண்டிருப்பதையும் கண்டான்; கதித்தான்; குதித்தான்; ஓடி வந்தான்; வரும் போதே, "யாரடா! என் சோற்றுக்குப் பங்காளியாக வந்தவன்? மானுடப்பதரே!! பசியா? சோறுண்கிறாயா? உள்ளேபோன சோற்றுடன் உன்னை விழுங்கப் போகிறேனே; அதற்குள் என் இந்த சிரமம் நீ எடுத்துக் கொள்ளுகிறாய்'' என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்தான். "பெரும் பசியா யிருக்கின்றது; இரு, வருகின்றேன். இதனையும் உண்டு வருகின்றே''னென்று சோற்றை யெடுத்து வாயில் போட்டுக்கொண்டே யிருந்தான் வீமன். அரக்கனுக்குக் கோபம் மேலிட்டு, அருகிற்சென்று வீமன் முதுகில்

ஓரடிவைத்தான்; உடனே, வீமன், "அப்பாட! நன்ருய்க் குத்து; உடம்பு வலியும் தீரட்டும்; சோறும் கலங்கிக் குடலுக் குள் இறங்கட்டும்; விலாப் பக்கங்களிலும் குத்து" என்று சொல்லிக்கொண்டே பின்னும் ஒழிக்கின்ருன் சோற்றை. அரக்கன் மிகக் கோபத்துடன் பீமனைப் பிடித்திழுத்தான்; அதற்குள் வண்டிச்சோறும் அநேகமாக முடிந்தது; "அப் பாட" என்று எழுந்து தேகத்தை வளைத்தொரு சோம்பல் விட்டுக் குதித்தான் கீழே வீமன்.

இருவரும் கைகலந்தார்கள். மலையும் மலையுமாமென மலைந்தார்கள். ஒருவரை யொருவர் தூக்கிப்போட்டார்கள். குதித்தார்கள்; கதித்தார்கள்; இடித்தார்கள்; அடித்தார்கள்; பன்னினர்கள்; பின்னினர்கள்; கட்டிப் புரண்டார்; காலால் உதைத்தார்; கைகளால் அடித்தார்; மெய்களால் மோதினர்; வெகுநேரம் போர்புரிந்து, முடிவில் வீமன், அடிபட்டு இடி பட்டு மிதிபட்டு உதைபட்டு வலி குறைந்திருந்த பகாசுரனைத் தூக்கிக் கீழேபோட்டு, மலைபோன்ற அவனது மார்பில் ஏறி வீற்றிருந்து, நெஞ்சை யிறுக்கிப் பிடித்துக் கைகொண்டு மார் பிடைக் குத்திக் கொன்று உயிரை வாங்கினன். அரக்கன் பெருங் குரலெடுத்துக் கத்தினன். மலை செவிடுபட்டது. காடெல்லாம் கலங்கிற்று. நகர்வரையிலும் கேட்டது. வேடிக் கையைப் பார்ப்போமென்று முன்னரே வந்து ஒளிந்து நின்று பார்த்தவரும், ஒலியைக் கேட்டு ஓடி வந்தவருமாகப் பலர் கூடியிருந்தார்கள். பகன் இறந்து பிணமாகவே, யாவ ரும் வந்தருகு சேர்ந்தார்கள். வீமன் அரக்கனது உடல் மலைமேலிருந்தும் கீழிறங்கித் தேகத்தைத் துடைத்துக் கொண்டு நின்ருன். எல்லோரும் போற்றிப் புகழ்ந்தார்கள். சிலர் பிரமித்து நின்ருர்கள். சிலர் இவன் தெய்வமோ என் ருர்கள். எமதேவனே எம்மைக் காக்கவும், பகனைக்கொல்ல

வும் வந்தனனே என்றார்கள். ஐவரிடத்திலும் க்ஷத்திரியக் களைகள் காண்கிறோம்; இவனொரு க்ஷத்திரிய வீரனே யென்றனர். "ஆமாம்; எத்தனை க்ஷத்திரியர்கள் பகனைக்கொல்லும் சாமர்த்தியம் படைத்தாரை நீ கண்டாய்; அங்ஙன மிருந்திருந்தால், இத்துணை நாள் நமக்குக் கஷ்டமிருந்திராது; இல்லை இல்லை; இவன் தேவனே" என்றார்கள். இங்ஙனம் பேசிக்கொண் டிருக்கும்போது, வீமன், வண்டியுடன் காளைகளை நகரத்துக்கு விரட்டிவிட்டு ஆற்றில் மூழ்கி நன்றாய்த் தேகத்தைச் சுத்தம் பண்ணிக்கொண்டு ஊருக்குப்போனான்.

கூட்டத்தார் வந்து சொல்லத் தெரிந்துகொண்ட நகரத்தார் ஒரு பெருங் குழுவாக எதிர்வந்து வீமனைப் போற்றிப் புகழ்ந்து அழைத்துப் போனார்கள். வீமன் அஞ்சா நெஞ்சுடன் புன்னகைகாட்டி வீடுசேர்ந்து தாயையும் தமையனையும் தர்ம முனிவனையும் வணங்கிநின்றான். வாழ்த்துக்கூறினார்கள்; யாவரும் ஆச்சரியப்பட்டார்கள். ஆரவாரித்தார்கள். பெண்கள் பலர்வந்து பீமனைக்கண்டு போனார்கள். "அம்மாடி! இந்தப் பிள்ளை யொரு ராக்ஷஸனைக் கொன்றுவிட்டானே!! என்ன ஆச்சரியமிது!!!" என்று சொல்லிப் போனார்கள். "பெற்றவள் பாக்கியமே பாக்கியம்! உலகம் போற்றும் ஒரு மகனைப் பெறுவது பாக்கியந்தானே" என்றார்கள். "ஒருவரா? ஐந்துபேர்கள்; ஒவ்வொருவரும் வீரர்போ லிருக்கிறார்கள்; அவர்களுடைய சாமர்த்தியத்தையும் பார்க்கப்போகிறோம்; அல்லது கேட்கப் போகிறோம்" என்று சிலர் சொல்லிக் கொண்டார்கள். மனைக்குரிய அம்மைவந்து, குந்தியையும் புத்திரரையும் புகழாத நேரமில்லை. "எங்கள் குடியைக் காத்த தெய்வங்களே நீங்கள்" என்று பன்னிப் பன்னிச் சொல்லிக்கொண் டிருந்தாள். எங்குப் பார்த்தாலும் வீமன் பேச்சே! கதையெல்லாம் ஐவர் கதையே! பேசுவதெல்லாம்



குந்தியின் பாக்யமே; இங்ஙனம் பெரும் புகழ்கொண்டு, மேலும் தக்க உபசாரங்களையும் உபகாரங்களையும் அந்நகரிற் பெற்று, ஐவரும் தாயும் வெளியேறிப் போக நாள் பார்த்திருந்தனர். "பகன் அழிந்த சமாச்சாரம் அத்தினபுரிக்கெட்டுமாயின், தமது ரஹஸ்யம் வெளிப்படு" மென் றஞ்சினார்கள்.

திரௌபதி மாலையிட்ட சருக்கம்.

"உரலும் வேதமுந் தொடர நந்தகோனுட
 னசோதை கண்டுருக வாழ்வுகூர்
தரணி மீது செங்கையுமா முழந்தாளும்
 வைத்து வைத்தாடு மாயனார்
விரவிநின்ற மாமருதி னூடுதா மெத்தெனத்
 தவழ்ந் தருளி மீளவும்
புரியு நீள்கடைக் கண்ணும் வண்ணமும்
 போற்றுவார்கள் மெய்புளக மேறுமே.

பாஞ்சால நகரம் புகுதல்.

இங்கு, வேத்திரகீய நகரத்திலிவர்கள் இப்படி யிருந்திடும்போது, அங்குத் துருபதன் நகரத்தில், "பங்கமில்லாத பாண்டு மைந்தர்களைவரும் தாயுடனே, வாரணவத நகரத்தில் அரக்கு மாளிகையில் மாண்டார்கள்" என்று உலகமெல்லாம் பேரொலியாகப் பேசிக்கொண் டிருந்தமை கேட்டு, உள்ளம் மாழ்கி, யாகசேனன் இருந்து யோசித்துச் செய்த சூழ்ச்சியைச் சொல்ல வாரம்பிப்போம்.

தனது மகள் திரௌபதியானவள் மற்றைய மானுடப் பெண்கள் போலில்லாமல், யாகத்தினின்றும் தனது கருத்துக் கிசையுமாறு தோன்றிய தன்மையையும், அவள் தோன்

றியபோது அசரீரிவாக்கு எழுந்ததன்மையையும், சிரத்தினுல் வணங்கிக் கேட்டபோது ஆசாரியனுரைத்த தன்மையையும் கலந்தாலோசிக்கும்போது, "உரமுடையவர்களாகிய பாண்டு மைந்தர்கள் இறந்து போகவில்லே; எங்கோ மறைந்து வசிக்கின்ருர்க"ளென்பது உறுதியே யென்றெண்ணித் "தன் மகள், தான் கருதியவாறு தனஞ்சயற்கே உரியவளாவாள்" என்னும் துணிவுடனிருந்தான்.

"ராஜ கன்னிகையாகிய என்மாது திரௌபதி, மன்னிளங் குமரர் புடைசூழ்ந்திருக்கும் மண்டபத்துக்கு வந்து, ஸ்வயமாகத் தன்னுல் வரிக்கப்பட்டவற்கே மாலேயிடுவாள்" என்று ஸ்வயம்வர வோலே யெழுதி எல்லாத் தேயத்து அரசிளங்குமரர்கட்கும் அறிவித்திடச் செய்தான். சூழ்ச்சியிற் சிறந்த துருபதேயன், ஒவ்வொரு தேசத்திற்கும் ஓலே கொண்டுபோய் ஒற்றர் சாற்றிவரலும், குறித்தநாட்கு முன்னமே எல்லாத் தேசத்து இளங்கோக்களும் பாஞ்சால நகரம் வந்து கூடினுர்கள். ஒவ்வொரு இளங்கோவும் தனது சேனேயுடன் வந்திருந்தான். பாஞ்சால நகரத்தினின்றும் வேத்திர கீய நகரம் வந்த வேதியனெருவன், இம்மங்கலச் செய்தியைச் சொல்ல, அதனேக் கேட்ட பாண்டு மைந்தர், தாயுடன் கலந்தாலோசித்து, மற்றும் பல வேதியருடனும் புறப்பட்டு, பாதசாரிகளாகவே பல் நெடுங் காதங்கள் நடந்து வந்தார்கள்; அவ்வமயம், வியாஸ பகவான், எதிர்த் தோன்றி, வணங்கின மைந்தர்க்கு ஆசி கூறி, "நல்ல வேளேயாக முன்னரே புறப்பட்டு வாழ்வு பெற்றீர்! உமது செய்கைகளேயும் மறைந்து வாழிடத்தையு மறிந்து கொள்ள முடியாமல், திரௌபதியைப் பெற்ற யாகசேன மன்னன், மயங்கி நிற்கின்ருன்; அவன் உங்களுடைய

கேண்மையைப் பெற்றுய்வதற்காகவே, யாகஞ் செய்து அப் பெண்ணைப் பெற்றனன்; உங்களை யடையும் பொருட்டு, இப்போது தக்க சூழ்ச்சி யொன்றும் செய்திருக்கின்றான்; அந்தச் சூழ்ச்சியில் வெற்றி உங்கட்கே தான் கிடைக்கப் போகின்றது; விரைந்து போங்கள்; நாளையே முகூர்த்த நாளாகும்; இரவு பகலெங்குந் தங்காது நடவுங்கள். இந்த வேஷத்தைத் திரௌபதியை மணந்திடும் வரையில் மாற்றிக் கொள்ளாதீர்கள். பார்ப்பன மக்களாகியே இருந்து, சூழ்ச்சி யில் வென்று, மேலும் ஆவன புரிந்து, விவாஹத்தின்போது உருவத்தை வெளிக் காட்டலாம்; அது வரை வெளிப்படல் வேண்டாம்'' என்று சொல்லிப் போனார்.

ஐவரும், கங்கை யாற்றை யடைந்தபோது, இவர்கள் செலவைத் தடுப்பான் போலச் சித்திராங்கதன் என்னும் கந் தர்வன் தோன்றிப் போர் தொடுத்திடவே, இந்திரன் புதல்வ ஞன அர்ச்சுனனால் தோல்வியுற்று வணங்கி நின்றான்; பின் னர், அவன் துணையாக விரைவில், அக்கங்கை யாற்றைக் கடந்து சென்று, வழியில் தௌமிய முனிவரைக் கண்டு, அவரை வணங்கி நட்புக்கொண்டு, அவரொடும், அவரொடு கூட வந்த வேதியர் பலரொடும் கூடி விரைந்து நடந்து பாஞ்சால நாட்டைக் குறுகினார்கள். சூரியனும் உதயமாயி னான். பறவைகளார்ப்பப் பேரிகளொலிக்க மலர்கள் மலர்ந்து விளங்கப் பாஞ்சால நாடு இவர்களை பல வாத்ய கோஷங்க ளோடும் வரவேற்றது போலிருந்தது. கானமும் பூங்காவும், இனிய மலர்த்தேனொடு தென்றல் வீசி யிவர்களது நடை யிளைப்பை யாற்றின. பொய்கைகளில், தாமரை முகை இதழ் விரிக்கும் சமயம் பார்த்து உள் நுழைந்து தேனைக் குடித்திடல் வேண்டிய ஆசைமேலீட்டால், பல வண்டுகள்,

அத்தாமரை முகையைச் சுற்றிக் கொண்டிருக்க, அயற் புலத்திலிருந்து ஒரு வண்டு வந்து, அம் மலரினுள் நுழைந்து தேனுண்டு போயதைக் கண்டு, உளம் பூரித்துப் போனர். இதனல், சூழ்ந்திருக்கும் மன்னர்கட்குக் கிட்டாமல் திரௌபதி தமக்கே கிட்டுவாளென்னும் எதிர்காலப் பயனையறிந்து கொண்டார்கள். பொய்கையில் மாங்கனி யொன்று வீழ, அதனைப் பல மீன்களும் சுற்றித் தமக்குத் தமக்கெனப் போரிடும்போது, நீர் கிழிய வோடி வந்ததொரு வாளை மீன், அதனைக் கவ்வித் தன்ன தாக்கிக் கொண்டதையும் பார்த்து, முன்கூறிய பலனையே யுறுதிப் படுத்திக் கொண்டார்கள். இங்ஙனம் காட்சிகளைக் கண்டு கண்டு மெய் புளகித்து, உள்ளங் களிகூரச் சென்று துருபத மன்னன் நகரைச் சேர்ந்தார்கள்.

> "மங்கல முழவம் விம்ம மன்னுபல் லியங்க ளார்ப்பச்
> சங்கின முழங்க வெல்லாத் தானையும் பரந்து சூழ
> எங்கணு நெருங்கி வைகு மிராசமண் டலங்க ளோடும்
> துங்கவேற் றுருப தன்றன் தொல்லைமா நகரி புக்கார்."

பற்பல தேயத் தரசர்களும் தங்கள் தங்கள் படைகளுடன் வந்து கூடியிருப்பதால், அந்நகரம் பெருங் கூட்டத்தையும் உலகத்துள்ள பற்பல பொருள்களையும் தன்னுள்ளடக்கி யிருந்தது. ஆகையால், யுகாந்த காலத்தில், எல்லாவுயிர்களையும் எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி யிருக்கும் மாயன் உதரம் போன்றுள்ளதாகிய அந்நகரிற் புகுந்தார்கள். நகரத்திலிலங்கியிருக்கும் மாடிகைகளின் மேன் மண்டபந் தோறும் கட்டப் பெற்றிருக்கும் கொடிகள் ஆடுஞ் செயலானது, "திரௌபதிக்கு மண நாள் இன்றுத் தான்; ஆகையினல் எல்லோரும் வாருங்கள்" என்று அழைப்பதுபோ லிருந்தது.

ஐவருந் தாயும், வீதிகள் தோறும் காட்சிகளைக் கண்ணுற்றுக் கடந்து சென்று, சிங்கம் பசுவின் தோல் போர்த்துச் செல்வதுபோல், தங்கள் மாறு வேடத்துடனே ஒரு குயவனது வீட்டை யடைந்தார்கள். அம்மனையகத்தில் தங்கள் தாயை யிருக்கவைத்துத் தங்கட்குத் துணையாய் வந்த வேதியரொடுங் கூடி, ஸ்வயம் வரத்துக்காக வந்து வேந்தர் காத்திருக்கும் மண்டபத்தினைச் சேர்ந்தார்கள்.

திரௌபதியின் நிலைமை.

திரௌபதியானவள், வந்துற்ற அரசர்களை யெல்லாம் பேரும் ஊருங் குறித்துத் தாதியர் சொல்லிக்கொண்டிருக்கப், பாண்டு மைந்தர் ஐவர் பேருங் குறிபாதது கண்டு, கலக்க முற்றவளாயிருந்தாலும், "ஆதியிற் குந்தி மைந்தர் ஐவர்க்கும் உரியளாவாள்" என்று ஓதிய விதியினாலும், சோதிடர் சொன்னதாலும் விதியும் சோதிடமும் பொய்யா தாகையால், "தோன்றுவர்; தோன்றுவர்" என்று தாதிகள் தேற்றத் தேறித்தளர்ச்சி தீர்ந்திருந்தாள். மாலையுடன் மன்மதன் போன்றுள்ள பார்த்தனுருவைப் படத்திற்றீட்டிக் கொடுக்கப் பார்த்துப் பார்த்து மனங் களித்தவளாகையால், அவ்வுருவை எப்போதும் சிந்தித்த மன முடையவளாகி, எங்கும் அவ்வுருவையே கண்டு திகைத்திருந்தாள். "அன்றைக்கு யாகாக்கினியிற் பிறந்த போது, அன்பினாலென் தந்தை குறித்த அந்த விஜயனது மார்பிலன்றி, மற்ற வோர் மன்னன் மார்பில் மாலை சூட்டும்படி நேருமானால், மீண்டும், தோன்றிய அக்கினியிலேயே புகுந்திடுவேன்" என்று மனத்தில் திடம் செய்து கொண்டாள். மங்கல முகூர்த்தம் கிட்டி விட்ட தாகையால், மங்கையை யழைத்து வரல் வேண்டு மென்று மன்னவரும் மறையவரும் கூறத், தாதிகள்

திரௌபதிக்கு மங்கல ஸ்நானஞ் செய்வித்து, தக்க ஆடையா பரணங்களா லலங்காரஞ்செய்து, ஸ்வயம்வர மண்டபத்துக்கு அழைத்து வந்தார்கள்.

ஆங்கு, ஒவ்வோர் தேயத்து அரசிளங் குமாரும், வரிசை வரிசையாகத் தங்கள் செல்வமும் அழகுக் தோன்றத் தங்களை நன்ருக அலங்கரித்துக் கொண்டு, வீரந் தோன்ற வீற்றிருந்தார்கள். ஒரு பக்கம் வேதியர்களும் சிறுர்களும் உட்கார்ந்திருந்தார்கள். மற்றைப் பக்கங்களில் மற்றவர்களும் பெண்களும் வேலைக்காரர்களும் வந்திருந்தார்கள். காமுகர் நெஞ்சிற் காமவேள் கலகம் தோன்றும்படியாக சித்திரப் பதுமை போன்ற நங்கையைத் தாதிகள் அழைத்துக்கொண்டு மன்னரவைக்கு நடுவில் வந்தார்கள். பாவையைக் கண்ணுற்ற பார்த்திபச் சிறுவரெல்லாம், அழற்பட்ட நெய்யைப்போ லானுர்கள். மங்கை திரௌபதி ஒரு முறை மன்னரவையை யும் மறையவர் கூட்டத்தையும் மற்றவ ரிருக்கைகளையும் நன் ருய்ச் சுற்றி நோக்கி யோர் வெண் முறுவல் பூத்து நின்ருள்.

“மங்குலின் மங்குல் மூடி வயங்கொளி மறைந்து தோன்ருச்
செங்கதிர்ச் செல்வன் போலச் சீர்கெழு வடிவ மாறி
அங்கவ ரிருந்த தன்மை யறிந்ததோ செறிந்த பொய்கைப்
பங்கயம் போன்ற தாலப் பரிவுறு பாவை பார்வை.”

ஐவரும் வந்து தோன்றியிருப்பதை நங்கையின் மனமும் கண் களும் கண்டு கொண்டன போலும். உள்ளத்தையுள்ள மறி யும்; உருவத்தைக் கண்களறியு மன்ருே?

மச்சேந்திரத்தை வீழ்த்தல்.

மங்கையைக் கண்டவுடனே மனத்திற் கடுங் காதல் கூர, “எனக்குத்தான் எனக்குதான்” என்றெண்ணி யிருக்

கும் வேந்தர்களை நோக்கி, நங்கைக்கு மூத்தவனாகிய திட்டத் துய்மன், நினைக்கவுமரிதாகிய தொன்றைக் கூறுவானாயி னான்:—

"சிலையிது சிலீ முகங்க ளிவைகடுந் திரிகை வேகத்
திலமுகத் துழலு கின்ற எந்திரத் திகிரி நாப்பண்
நிலையிலா இலக்கு மஃதே நெஞ்சுற யாவ ரெய்தார்
கலைவலீ ரவர்க்கே யந்தக் கன்னியு முரிய ளென்றான்."

"மன்னர் மைந்தர்காள்! இது வில்; இவைகள் பாணங் கள்; கடுமையிற் சுழலும் வேகத்தையுடைய அதோ மேலே பொருத்தியிருக்கும் விசையுடைய சக்கரத்தின் மத்தியில் நிலை யிலாமற் சுழன்று கொண்டிருக்கும் மீனாகிய லக்ஷ்யம் அது; அந்த லக்ஷ்யத்தின் நெஞ்சிற் படும்படியாக யாவர் கணை யெய்வரோ அவர்க்கே யெனது தங்கை திரௌபதி யுரிய ளாவாள்" என்று சொல்லி யுட்கார்ந்தான்.

இச்சொல்லைக் கேட்ட வேந்தரிற் பலர் திடுக்கிட்டழிந் தனர். சிலர் நாணங் கொண்டு தலை குனிந்தனர். சிலர் எப் படியும் எய்து பார்ப்போ மென்னும் பேதைப் புத்தியையும் கொண்டனர். அச்சமயம், தாதியர்கள் திரௌபதியை மன் னரவைக்கு நேரே யழைத்து வந்து, வந்துற்ற அரசாது பேரும் ஊரும் புகல்வாராயினர். இது மன்னரது ஸ்வயம்வர மரபாகும்.

"இப்பேருலகில் செல்வத்திலும் சிறப்பிலும் ஏற்றமுடை யார் வேறில்லை; யானே யென்ன மதித்திருக்கும், இவரே துர்யோதன மன்னன்; அவரைச் சூழ்ந்திருப்போர் அவ ருடைய தம்பிமார் நூற்றுவர்கள்; அவர்க்கு மிக அணித் தாக வலக்கைப் புறத்திருப்பார் அவர்க்கு அடுத்த தம்பியாகிய

துற்சாதனன். இவர் தாம் காந்தார தேசத்துக் குமாராகிய சகுநி யென்பார்; தக்கோராடாச் சூதுக்கும் நிலை வஞ்சனைக் கும் இவர்க்கு நிகர் இவ்வுலகத்தில்லை. பேரறிவாற் பெரும் போர் வலியால் பிறப்பால் மெய்த்தேசால் பல படையால் திண் தோள் வலியால் மிகுந்திருக்கும் இவரே, செஞ்சிலைக் கையா சான் மகனாகிய அசுவத்தாமன். இரதிபோல் விளங்கும் பெண்ணாரமுதே! இவர் கண்டாய்! கன்னராசன்; உண்மைக் கிவரே, வலிக்கிவரே, உறவுக்கிவரே, உரைக்கிவரே, திண்மைக் கிவரே, நெறிக்கிவரே, சிலைக்கிவரே,வண்மைக்கிவரே யென்று பேருலகம் சொல்லும் புகழுடையார். அதோ விளங்குகின் றாரே அவர் தாம் எதுகுலத் துதித்த அலாயுதனாகிய பலராமர். அவரது அருகில் வீற்றிருந்து கபட நாடகம் நடித்துக்கொண் டிருக்குமிவர் தாம், எதுகுல திலகமென வந்துதித்தும், பிருந்தா வனத்திற் பொது வருடன் வளர்ந்த கள்ளமா மாய னாகிய கண்ண பிரான். அவரையடுத்து வீற்றிருக்குமவர், கண்ணற் கினைய சாத்தகி யென்பார். அதோ கண்ணன் தன்னை யவமதித்த எண்ணமில்லா மன்னன் சிசுபாலன். அவர்க்கிசைவுடையாராகிக் கண்ணனைத் துவாரகைக்கு ஓட் டிய தடந்தோள் வீரன் சராசந்தன். அதோ பகதத்தன் தன்னை வெல்வார் யாரென்னத் தருக்குடனே வீற்றிருக்கின் றான். இவன் சல்லியன். அவன் நீலன். அவர் தமிழ் வேந்தர் மூவர், இங்ஙனம், பதினெண்புவிக்கும் பதியாய எல்லா அர சரும் நின்பொருட்டால் இங்கு வந்தெய்தி யிருக்கின்றார்கள். இவரில் யார் அந்த மச்சேந்திரத்தைப் பேதிக்கும்படியாகக் கணையேவுவாரோ அம்மன்னர்க்கே உன் கைமாலையைச் சூட்டி மணப்பாயென்று சொல்லினாள்.

பல அரசர்கள் பின்னிடைந்துபோகச் சில அரசர்கள், சிலையி னருகு சென்று திரும்பினாரும், சிலையைப் புரட்டிப்

பார்த்து நீங்கினரும், புரட்டித் தூக்கிப்பார்த்து நகர்ந்தாரும், தூக்கி நிறுத்த நோக்கி விலகினரும், நிறுத்தி நாணை யேற்ற மாட்டாது விழுந்தேகினருமாகச் சென்றனர். இச்சமயம் மறையவர் கூட்டத்தின் மத்தியிற் பாண்டுமைந்தர் ஐவரும் உருமாறி வந்து வீற்றிருப்பதையுணர்ந்து அண்ணற்கு உணர்த்தினர் கண்ணபிரான். வில்லினைச் சல்லியனெடுத்து நாணேற்ற முடியாமற் சடக்கென வீழ்ந்தான். சராசந்தனும் சல்லியனைப்போலாகிப் பின் தொடர்ந்தான்; ஆனால் நாணை மார்பளவுங் கொண்டுவந்தான். அடுத்து நீலன், நாணொடு தனு ஒரு சாணெனக் கொணர்ந்து தடுமாற்றத்துடன் வீழ்ந்தான். துரியனோ, நாணை நான்கு விரலென்னுமாறு கொணர்ந்து வில்லுந் தானுமாகிக் கீழே வீழ்ந்தான். கன்னன் நாண் வில்லுக்கு மயிர்க்கடை யென்னுமாறு கொணர்ந்தான்; "கன்னனே, நாணைப்பூட்டி எந்திரத்தையும் வீழ்த்துவான்" என யாவரும் பிரமித்து நிற்கத் தலை கிறுகிக் கீழே வீழ்ந்து மயங்கிப்போனான். இங்ஙனம் மன்னர் குலத்து வீரரெல்லோரும் வில்லுக்காற்றாராகி வீழ்ந்தபோது, அவை யாவ மடங்கி வெட்கி யிருந்தது. "இந்தப் பூதலமே, வீரரில்லாதிருக்கின்றது போலும்" என்றான் திட்டத்துய்மன்.

அப்போது, கோபமும் வீரமும் பொங்கத் தாங்கமாட்டாமல், வேதியர் கூட்டத்தின் நடுவிலிருந்து ஒரு வீரன் எழுந்து,

"மன்மரபிற் பிறந்திருதோள் வலியா லிந்த
மண்ணாளு மவர்க்கன்றி மறைநூல் வாணர்
தொன்மரபிற் பிறந்தவரு மிலக்கு வீழ்த்தாற்
சூட்டுமோ தொடையலிளந் தோகை யென்னத்

தன்மரபுக் கணிதிலக மானவீரன் தகவன்றே
மன்றலுக்குத் தாழ்வொ வென்றான்
வின்மரபிற் சிறந்த நெடுவில்லை யீசன்
மேருகிரி யெடுத்ததென விரைவிற் கொண்டான்"

"மன்னர் மரபிற் பிறந்து மண்ணாளுமவர்க்கல்லாமல், மறையவர் குலத்து வந்தவருமெடுத்து இலக்கு வீழ்த்தால், மங்கை மாலை சூட்டுவாளோ?" என்று கேட்கத், திட்டத்துய்மன், "என் அவ்வீரன் அந்தக்குலத்துக்கு அணிதிலகமன்றோ? ஆகலாம்" என்று சொன்னான். உடனே, ஈசன் மேருவில்லை யெடுத்ததுபோல நெடுவில்லைக் கையிலேந்தி விரைவில்நாணைப் பூட்டினான். வில்லெடுத்ததும் நாணேற்றினதும் விரைவினால் யாருங் காணமலிருந்து, இஃதென்ன ஆச்சரியமெனப் பிரமித்திருந்த போழ்து, மச்சேந்திரம் பேதித்து இலக்கும் வீழ்ந்து நின்றது. உடனே நங்கையும் உலகுக்கொரு வீரனாகிய அவ்வேதியச் சிறுவன் கழுத்தில், தன்கையில் வைத்திருந்த தேஞ்சார நறுங்கழுநீர்ச் செய்ய மாலையைச் சூட்டினாள்.

"அந்தரதுந் துபிமுழங்கச் சங்கமார்ப்ப
ஆனகதுந் துபிமுதல்வ ளதியாக
வந்திருந்த பேரவையை மதியாளுகி
மாலையிடு பசுஞ்செம்பொன் மாலையோடும்
சந்திரனுமு ரோகணியு மென்னமுன்னர்த்
தான்வளைத்த தடஞ்சிலைக்கைத தலத்திலேந்தி
இந்திரகு னுவுமெழுந்தாங் கேகலுற்றான்
இருபுறமுந் துணைவர்வர இணையிலாதான்"

மன்னர் போர்க்கு வந்து புறங்காட்டல்.

பாராளு மன்னரெல்லாம் பரிபவித்துப் பார்ப்பானொருவன் சிலை வளைத்து அம்பெய்து எந்திரத்தை யீர்த்துத்தள்

ளிப் பாவை யவள் மாலைசூடிப் பற்றிப்போதல் பார்த்திருத்த லாமோவென்று குருடன் மைந்தன் குவவுத் தோள்தட்டி யார்த்தான். தம்பியரும் பின் எழுந்தார். சகுனி கன்னர் சார்ந்தெழுந்தார். சிசுபால சராசந்தர் சேர்ந்து வந்தார். மற்றைய மன்னரிற் பலரும் மலைந்து நின்று, வழி மறித்து, "ஒரு பார்ப்பான் க்ஷத்திரியன் மகளைக் கொண்டுபோதல் பொறுக்கோம்; பொர நின்றோம்" என்று வில்வளைத்துச் சரம் வளைத்து வம்புக்கு நின்றார்கள். வேதியச் சிறுவரையும் மங்கையையும் சூழ்ந்து நின்ற வேதியர்கள் வெம்பிப் பொங்கித் தத்தம் கைத்தண்டேந்திச் சண்டைக்கானார். அப்போது அர்ச்சுனன், கன்னியைப் பார்த்திருக்கச் சோதரர்க்குச் சொல்லி, வேதியரைச் சமாதானப்படுத்தி யப்புறப்படுத்தி, வெகுண்டு நின்று சிலைவளைத்து மன்னரெதிர் வந்து நின்றான். வீமனும் தம்பிக்குத் துணையாகத் தொடர்ந்து நின்றான். நாற்புறமும் மன்னர் வளைந்து எதிர்த்துப் போராடினர். சிலை விஜயன், ஒரு வில்லோடு உருத்து நின்று இருகரங்களாலும் சரமாரி பெய்துகொண்டிருந்தான். வீமன் வில்லேந்தி வெம் போர் விளைத்து மன்னர் திமை வளைத்து எதிர்த்தான். "இவ ரென்ன? இறுதிக்காலத்து ருத்திரரோ இங்கு வந்தார். ஏதேது! நம்மாலே இனிப் பொருதல் ஆகாது" எனப் பல ரும் ஓடினர்கள். பக்கத்துற்றார், தெறித்து வீழ்ந்து நெஞ் சொடிந்து நீங்கிப்போனார். மற்றுஞ் சில்லோர், வென்றாலும் தோற்றாலும் வசையே வெம்போர் வேதியரோடுற்றாலென்று வெருவிப்போனார். கன்ன சகுனிகள் தங்கள் மன்னர்பிரான் தம்பியரோடெங்குற்றாரெனக் காணப்போனார். சிசுபாலசரா சந்தர்கள் இது சிறுமை யெனத் திரிந்து சென்றார். இங்ங னம் வீரர் மறைந்திட, நின்ற மன்னர், "இவர்கள் மார்பினால் முனிவரல்லர்; வீமார்ச்சுனர்களே வேடம்புனைந்து வந்திருக்கி

ஞர்கள்'' என்று பேசிக்கொண்டார்கள். கண்ணபிரான், மன்னர்களை விலக்கி, வீமார்ச்சுனர்களைச் சமாதானப்படுத்தி யனுப்பினர். யாவரும் விலகினர். மன்னரெல்லாம் மறைந்து போனர். வேதியர் தம் வீடுசேர்ந்தார். ஐவருங் கன்னியொடு, அன்னையிருந்த குலாலனது இல்லஞ் சேர்ந்து, "அன்னையே! "இன்று பெற்றனம் ஓரையம்; என் செய்வதிதனை'' யென்றார். உள்ளிருந்த அன்னை, செய்தி யென்னவென்றுணராமலே, "தேவர் தெள்ளமுதென்ன மக்காள்! நீங்கள் ஐவிருமதனைச் சோ விருந்தருந்துங்கள்'' என்ருள்; மாலைவேளையாகலின், பின்னர், வெளியே வந்து, "கொண்டுவந்தது ஒரு கொம்பனை யாள்'' என்று கண்டு, "என் நினைந்தேன்; என்ன சொன் னேன்; என் செய்தேன்'' என்றென்றேங்கிக் கலங்கி நின் ருள். ஐவரும் தமதன்னையை வணங்கிக் "கலங்க வேண் டாம்; நின்சொல் வேதமாகும்; இது நின் நினைவு அன்று; தெய்வத்தின் நினைவேயாகும்; எங்கள் நெஞ்சிலும் அந் நினைவே இருந்த'' தென்ருர். உலகெல்லாம் கீர்த்தி பரப்பிய கிரீடியைப் பயந்த குந்தி, "விதிவழியிது'' வென்றெண்ணி, மங்கையை வரவேற்று மகிழ்ச்சி செய்தாள். பெண்ணைப் பெற்றுப்போன பிராமணச் சிறுவர் பின்னே, ஒற்றரையேவி யுண்மை தெரிந்து யாகசேனன், மனங்களித்து ஐயம் தீர்த்து மற்றை நாள் வந்து, அவர்களைக் கொற்றம் பொருந் திய தன்னரண்மனைக்குக் கூட்டிப் போனன். தான் நினைத் துப் பெற்றபடியே பெண்ணைக் கைப்பிடித்த விஜயனைக்கண்டு மகிழ்ந்தான். சோதிடமும் சாத்திரமும் விதியும் பொய்யில்லை யெனத் துணிந்தான்.

"மன்னரெல்லாம் மயங்கி நிற்க மாமலைபோற் சிலை வளைத்து மச்சத்தையடித்து வீழ்த்தி, என் மாமகளைக் கைக் கொண்ட காளை தனக்கு, என் பெண்ணை யின்றே மணம்

செய்விப்பேன்" என்று யாகசேனன் கூறத், தருமன், "இப் பெண்ணணங்கை யாங்களைவரும் வேட்டும்" என்றான். மன்னன் கலங்கி நின்றான். "ஒரு பெண்ணை ஐவர் மணத் தல் ஒழுங்காமோ? ஒருப்படேன்" என்று சொன்னான். "இவ்வையத்தை நீக்குக நீக்குக" வென்று சொல்லிக் கொண்டு, வியாதமாமுனி மன்னன் முன்னந் தோன்றிப் பாண்டு மைந்தர், இவ்வைவருக்கும் இப்பெண்ணை மன்றல் செய்வித்தற்கு இயற்கையைச் சொல்வேன் கேள்" என்று, பண்டைக் கதை யொன்றைப் பரிந்து கூறலானார்.

திரௌபதியின் பூர்வ வரலாறு.

"கேளாய்! யாகசேனா!! யாகாக்கினியினின்றும் தோன் றிய இப்பெண்ணாணங்கு முற்பிறப்பில் 'நளாயினி' என் னும் பேருடையாள். தவத்திற் சிறந்த மௌத்கல்லியர் என்னும் முனிவரை மணந்து கொண்டாள். காதலுடன் கலந்த கன்னியினுடைய கற்பையும் அன்பையுஞ் சோதித் தல் வேண்டி, முனிவர், பெருமூப் பெற்றுத் தொழு நோய ராய் இப்பெண்ணை நாளும் வாதித்து மகிழாத மனை வாழ்வு நடத்தி வந்தார். கற்பினாள், கணவனையே தெய்வம் தவம் பொன் பொருள் உடல் உயிர் என நினைத்துப் பத்தி பூண்டவ ளாகலின், கணவனுண்டமிச்சிற் புறத்து விரலழுகி வீழவும், அதனைக் குச்சித்தலின்றியே விரும்பி நுகர்ந்து, வேண்டுவ பணி செய்து வந்தாள். இடையிடையே கொடுங் காம நோய் கொண்டு, இச்சித்த இன்பம் நுகராமற் படியே இளைத்த மெய்யினளானாள். மௌத்கல்யர், இவளது அன் பையும் ஆதரவையும் கற்பையும் கண்டு களித்து, அந்நோயை நீக்கிப் பிணியாலழிந்த தன் தோற்றம் மாற்றி, காளையுருக்

கொண்டு, மன்மதனழகு பெற்றுப் "பெண்ணே! உனக்கு மிக கற்புடைய அருந்ததியு மொப்பாகாள்; உன்னைச் சோதித்திடவே இந்நோய் கொண்டு உன்னை வருத்தினேன். ஐய மொழிந்தேன். இனி நாமிருவரும் வேண்டு முருக்களைக் கொண்டு, நீ நினைத்த போகத்தை நின் மனங் களித்திட நுகர்வோம்" என்று சொல்லித் தன்னேரிலாத மனை வாழ்வைத்தாங்கி நின்றார்.

"குன்றும் நதியும் மரனும் பைங்கொடியுமாகித்
துன்றும் துணையாய்ப்பல தோற்றங்க டோறுமெய்தி
நின்றுஞ் சரித்து மரும்போகம் நெடாது துய்த்தார்
என்றும் பிரியாதிரு வேருமிதய மொத்தே."

இரண்டு பேரும் பற்பல ரூபங்களில் துணைபெற்று நின்று, நடந்தும் இருந்தும் கிடந்தும் நின்றும் பல்வகையான காம நுகர்ச்சிகளை யநுபவித்துக் கொண்டிருந்தார்கள். மாதராள் மெய்புளக மேற்று மகிழ்ந் திருந்தாள்.


இப்படிப் பல பிறப்பெடுத் தெடுத்துத் துணையாகவே தோன்றித் தோன்றிப் போகந் துய்த்தவள் ஒரு கால், இந்திர சேனை யென்னும் பெண்ணாகத் தோன்றினாள். அவரும் ஏற்ற தோன்றலாயினார். எனினும், போக நுகர்தலில் மனப் பாச மற்றுத் தொல்லையறு மாதவத்தை முன்னி நின்றார். கணவன் தவத்தைக் குறித்து அகன்று போதலும் மங்கை சகிக்க மாட்டாதவளாகி வருந்தியபோது, 'தையலொரு பாகனைக் குறித்துத் தவஞ்செய்திடுவையாயின் முன்னியது பெறுவாய்'' யென்று அவர் மொழிந்துபோனார். மங்கையும் பாகனைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தனள். ஐந்து முகத்தை யுடைய சங்கர பகவான் இந்திர சேனையின் எதிர்த் தோன்றி,

எண்ணம் யாதென்று வினவ, அன்னாள், ஐந்து சொற்களாற் "கணவன் வேண்டும்" என்று கூறலும், அப்பெரியோனும், ஐந்தான சொற்களாலே "கொடுத்தேன்" என்று, இவள் ஐந்தான போகத்தை அடைந்திடும் குறிப்பறிந்து வரம் கொடுத்து நின்றார். முன்னின்ற தேவன் மொழிப்படியே அவள் கங்கை மூழ்கி எழுந்தபோது, அவ்வழியே சென்ற இந்திரன், சிவபெருமான் நின்றதையும் மதியாமல், அப்பெண்ணின் அழகில் மோகித்து அருகு சென்றிடலும், "இவனுக்கென்மேன்மை யெனச்" சிவபெருங்கடல் முனிந்து பார்த்தார். உடனே இந்திரன், எஞ்சினான்போல் பூமியில் எவரும் பார்த்து நகையாடிடப் புலம்பி வீழ்ந்தான். ஒன்றும் உதவாத நிலையில் இந்திரன் வீழ்ந்து வருந்தியபோது, சிவபிரான் மீண்டும் வந்து, அந்த இந்திரற்குப் பிலமொன்றிலடைந்து கிடக்கும் மற்றுமிந்திரர் நால்வரை வெளிப்படுத்திக் காட்டினார். ஐந்து இந்திரர்களும், கடவுளைப் போற்றி வணங்கி நின்றனர். "இந்திர சேனையின் மறு பிறவியில், நீங்கள் ஐவரும் அவட்குக் கணவராகக் கடவீர்" என்று பணித்துப் போயினார். தர்ம ராஜன் வாயு பகவான் அச்வினி தேவதைகள் இவர்கள் தம்மால் வந்த இந்நால்வரும், அந் நான்கு இந்திரர்களாவார். இந்தச் சிலை வீரனாகிய விஜயனே தேவர்க்கெல்லாம் பெருமனாகிய இந்திரனாவான். இந்த மாதாகிய திரௌபதி, தொல்லையரு மாதவத்திற் சிறந்த இந்திர சேனையாகிய அம்மாது. ஆகையினால், இவள் விதிப்படியே இவ்வைவர்க்கு முரியளாவாள். நீ, இவருள் முன்னவனாகிய தருமனுக்கு முன்னர் மங்கையைப் பாணிக்கிரஹணம் செய்து கொடு; ஐவருடனும் அவள் கூடிக் கலந்து வாழ்வாள்" என்று துருபத மன்னனும் உறவினரும் தெளியுமாறு, பண்டைக் கதையினுண்மையைத் தெரிவித்துப் போனார்.

மணவினை.

மன்னனும் மயக்கந் தீர்ந்தான். மங்கை தெளிந்து மகிழ்ந்தாள். நல்லஹோரையில் வியாதன் குறித்தபடியே, தருமனுக்குத் தன் ஒரு மகளை நயந்தளித்தான் நலம் மிகுதியுமுடைய பாஞ்சால மன்னன். தௌமிய முனிவர் சடங்கு நடத்தத் தருமனுந் தையலொடு மங்கல அங்கியை வலஞ் செய்து, அழலிற் பொரி சிந்தி அன்னவள் கரத்தைப் பிடித்தான். இவ்வாறே மற்றை நான்கு நாட்களிலும், சடங்கு செய்து தீவலம் வந்து பொரி சிந்தி முறையே நால்வரும் கைப்பற்ற ஐவர்க்கும் உரியளானாள். ஒருவர் கைப்பிடித்து, அன்று அவருடனிருந்து, மறுநாள் எரியின் மூழ்கி யெழுந்து மற்றவர் கைப்பிடித்து மறுநாளுமிருந்து, இப்படியே தினமொருகால் தீயில் மூழ்கி யெழுந்தே பரிசுத்தையாகி, அவ்வவர்க்குரிய உருவமும் தேசும் பெற்று விளங்கி மனை வாழ்வு பூண்டாள், மங்கைகளில் திலகமானதிரௌபதியாம் மடமான்.

"பாண்டு மைந்தர் மற்றும் வெளிப்பட்டு மங்கையைக் கவர்ந்தனர். அவர்க்கு இவனும் இணங்கினான்." என்னும் பொருமை கொண்டு, கௌரவர் பெருத்த சேனையுடன் வந்து துருபதன்மேற் போர் தொடுத்து நின்றார்கள். முன்னமொரு முறை ஆசிரியர் பொருட்டு வந்து யாகசேனனுடன் போருக்கு நின்று தோற்றோடினது பொய்யென்றென்னும்படி, இன்றும் யாகசேனன் மகன் திட்டத்துய்மனாலும் மருமக்களாலும் துரத்தப்பட்டு ஓடினார்கள். எடுத்த வினைகளிலெல்லாம் தொடுத்த தோல்வியே நாம் கொள்ளத் தோகை திரௌபதியன்றியே, விஜய மங்கையும் ஐவர் கைவசமாயினளே யென்று வெம்மி வெம்மி மன மாழ்கினர்; வம்பும் துன்பும் வழக்கெனக் கொண்ட துன்ப வாழ்க்கைத் துரியோ



தன்னுநியர். சாலும் வஞ்சகச் சகுனி யொடு எண்ணிய நாலு பேர்களும் நஞ்சு கொண்ட பல்லும் வாலும் மெய்யும் வருக் கங்களாகவும் நின்று பகைமையானது குலத்தையழிக்கும் வெவ்விடப் பாம்பாக நின்றது. முந்திய போரில் அவ் வேந் தர் முதுகிட்டுப் போனபின், அந்த மாநகரில், ஐவரும் மாம னும் நிட்டத்துய்மனும் கண்ணனும் வந்து அன்புடன் வைகினர்.

இங்ஙனம் பாண்டவரிடம், பகை குறித்த நாள் முதல் தனயர்கட்குத் தோல்வியும் பழியும் பாவமுமே மிக்கதைக் கண்டு அம்பிகை மகனான திருதராட்டிரன், ஊர்வம்புக்கு உலே மூடி யாமென ஒரு சூழ்ச்சி கருதி வீடும விதுரர்களால் பாண்டவ ரைவரையும் வருவித்து, உபசரித்து உவகை பேசி நாடு முற்றும் காண நலம்பல நல்கினன். வஞ்ச நெஞ்சு கொஞ்சமுமில்லாத நம் கொற்றவரைவரும் பெரியோர் சொற் படி கடவாது, முன்னர் இருந்ததுபோல அவருடன் அத் தினபுரியி லிருந்தனர்.

இந்திரப் பிரத்த சருக்கம்.

"வேதமும் வேதம்விளம்பு மெய்ப்பொருளும்
அப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும்
அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகம் படைத்தளித் தழித்து
ஞானமாய கிலமும் நிறைவுற்
ருதியுநடுவு முடிவுமாய் நின்ற
ஆதியானடியிணே பணிவாம்."

தருமன் முடி சூடல்.

அத்தினபுரத்தில் ஐயிருபதின்மரும் ஐவருங் கலந்து தம்மில் ஒத்தவராகிப் பகைவர் நடுக்கங் கொண்டலற நலங் கொண்டு மகிழ்ந்து வாழ்ந்துவரும் நாளில், சகுனி முதலான பலரையும் மந்திரியரையும் பீஷ்ம விதுரர்களையும் கூட்டிக் கலந் தாலோசித்துத் திருதராட்டிரன் தருமராஜனுக்கு மணி முடி சூட்டுதல் தீர்மானித்தான். "செழும் முரசு உயர்த்த வேந்தனாகிய தருமனுக்கு இன்று திரு அபிஷேக நாளென்று" நன்னாளொரு நாளில் முழுமுரசறைந்து, அலங்காரங்கள் செய்த முடிபுனை மணமிகு மண்டபத்தில், முரச வாத்தியங் கள் மிக ஒலித்திடக் கங்கை முதலாகிய எத்துறை நீர்களும் நிறைத்து, வலம்புரி முழங்கிட முனிவர் ஆசிகள் கூற ஆடவர் திலகனாகிய தருமனை மனைவி திரௌபதியுடன் மணிக எழுத்திய ஆஸனத் தமர்த்தி விதிப்படி மந்திரப் புனித நீரால் அபிஷேகம் செய்வித்துத் தொல் மரபோர் சூடிய மணி மகுடத்தையும் சூட்டுவித்தார். வேதியர் ஆசிகள் கூறினர். விண்ணவர் மலர் மழை பொழிந்தனர். பல்வகை வாத்யம் முழங்கின. பாவையர் பல்லாண்டிசைத்தனர். வியாதன் தௌமியன் முதலோர் சுத்த நீரும் மங்கலாக்ஷதையும் தெளித்தனர். திட்டி கழித்து நீராஞ்சனம் சுழற்றினர். ஒற்றையோ டிரட்டை வலம்புரி முழங்கின. ஒரு குடை மதியென நிழல் வீசவும், தம்பியர் மன்னவர் முன்பின் வரவும், மடவார் குழுப்பொரி சிந்த வாழ்த்தெடுப்பவும், புரசை யானையின் மீதேறி மற்றை நால்வருந் தற்சூழத் தருமராஜன் மாநகர் வலம் வந்தான். மண்டபம் வந்தபின், பெரியோரை வணங்கி யாசிகள் பெற்று யாவர்க்கும் தகும்படிப் பரிசுகள் நல்கி மன்னவர்க்கு விடை கொடுத்தருளிக் கோநகரிருக்கை

யடைந்து மன்பதை யாட்சி கைக்கொண்டு மகபதியிவனென வாழ்ந்து வந்தான்.

இந்திரப் பிரத்தமா நகரம்.

ஆட்சி கைக்கொண்டு அரசு புரிந்திடுமோர் நாள், பெரியப்பன் ஏவல் கொண்டு, கண்ணன் முதலிய கிளைஞரும் வயிரத்தேர் முதல் சேனையும் தம்பி நால்வரும் புடைசூழப் புறப்பட்டுத் தம் முன்னோர் முன்னராண்டிருந்து அழிந்துபோயிப்போது பேய் வளமெனப் பேர் படைத்துப் பிறங்கும் நீள் வனத்திடைப் புகுந்து, கண்ணுற்று, அதனை முன்னகர் போல் நன்னகராக்கி யாங்கு வாழ்ந்திடுவதெனத் தீர்மானித்தான். முந்தையோர் முறை பிறழாது முன்னையரசு கைக்கொண்டு நடத்தும் முரசுடை வேந்தன். அவ்வனத்துக்குப் பெயர் காண்டவப் பிரத்தம். அதனை நகரமாக்கிட நினைத்தார்கள். இவர்க்கு, அங்கண் மாஞாலம் முழுவதுங் கொடுத்தற்கென்று ஆயர் தம்பதிக் குலவிளக்கா யவதரித்த மாமாயனாகிய கண்ணன், கடவுளர் நாயகனாகிய இந்திரனை யிக்குறிப்பொடும் நினைத்தார். அவன் தெய்வத் தச்சனாகிய விசுவகர்மனுடன் ஆங்குத் தோன்றினன். தோன்றி வணங்கியம்மாதவனெண்ணத்தை யறிந்த வாசவன், விசுவகர்மனை நோக்கி, அமராவதியினும் அளகாபுரியினும் மற்றைத் தேவர்கள் நகரினும் மிகு அழகுடைத்தாய் ஓர் நற்பதி இவ்வனத்தியற்றெனப் பணித்தான்! மாயனெண்ணமும் மகபதியேவலும் கொண்ட விசுவகர்மன், மனத்தினுனினைத்தலும், அக்காடழிந்து மரங்கள் மறைந்து மனையும் மண்டபங்களுமாகிப் பூநனைப் பொய்கையும் குளங்களுந் தோன்றி வாவியும் தடங்களு மருவி அறச் சாலையும் ஆலயங்களு மமைந்து உலகிலெல்லாப் பொருளும் உறைவதற்கிடமாகிக் கோமண்டபங்

களும் குலவு நந்த வனங்களும் குறைவற விளங்கித் தோன்றிய தொரு தனிப்பெரு மாநகரம். சுற்றும் மதில்களும் அகழ்களும் பொலிந்தன. வயல்களும் காக்களும் செறிந்தன. அந்நகரைக் கண்டு அதிசயமிக்கு, "இனி, இந்நகரே நாமிருந் தரசாளும் நன்னகர்; கௌரவர் குழுவுடன் அத்தினபுரியிருந் தமைவுடன் வாழ, நாமிப்பதியிருந்து தப்பறக் காப்போம்'' என்று தருமன் பணித்தான். திருதராட்டிரனும் விதுர வீடுமரும் செயலை வியந்தேற்றனர். கௌரவர் களித்தனர்.

"பரிமளமதுப முரல்பசுந் தொடையற்பாண்டவரை வருங்கடவு
ளெரிவலம் புரிந்துமுறை முறைவேட்ட இன்னெழி லிளமயிலன்றி
வரிசையினணுகியுரிமையால வனிமயிலையும் மன்றலெய்தினர்போல்
புரிவளை தரனஞ்சொரிபுன லகழிப்புரிசை சூழ்புரங்குடி புகுந்தார்."

பெரியோருடைய உத்தரவு பெற்றுப் பாண்டவரைவரும் திரௌபதியும் மாபெருஞ் சேனையுடன் நல்ல முகூர்த்தத்தில் நன்னகரத்திற் குடியேறினர். இந்திரன் தயவாலியற்றப் பெற்ற நகரமாகலினதற்கு இந்திரப் பிரத்த மேனப் பெயரிட்டார். சிற்பிக்குத் தகுபரிசுகள் நல்கி யுபசரித்தனுப்பினர். வாசவனும் முனிவரும் நல் வளங்கள் பெற்றுத் தன்னகரடைந்தார். தாய் மொழி கேட்டும் தம்பியர் இனமொழி விரும்பியும் வெய்மொழி வெய்த்தோள் வல்லி திரௌபதி இதமொழி தொடர்ந்தும் சூய்மொழித் தருமராஜன் அந்நிலம் அரசு செய்தான்.

அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்.

''எக்கடலும் எக்கிரியும் எவ்வுலகும் உலகிற்
றக்கபல யோனிகள் சராசர மனைத்தும்
மிக்கவிதியால் விதிசெய் விதியினை விதிக்கும்
செக்கமல நாபிமுகில் சேவடி துதிப்பாம்."

நாரதர் தோன்றி நலமுரைத்தல்.

இந்திரப் பிரத்தத்திருந்து இதமுறச் செங்கோல் நடத்தி வருநாளில், மன்னர்க்கு இதங்கூறுந் தொழிலும் யாழு முடைய முனிவராகிய நாரதர் தோன்றினர். அவரை வணங்கி யன்புடனேற்று ஆஸனத்தமர்த்தி அளவளாவியிரு ந்தபோது, வரமிகு கற்பினளும் மாமியும்வந்து முனிவரை வணங்கி நின்றார்கள். அப்போது, முன் நிகழ்ந்த செய்தி யொன்றை முனிவர் சொல்லலானர். முராரியையும், முராரி நாபியில் தோன்றிய தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முக னையும், புராரியையும் பல்கால்புரிந்து பூசனைசெய்த பெருந் தவத்தின் மிக்காராய்ச் சுந்தன் உப சுந்தன் என்னு மிரண்டு அசுரர்களிருந்தனர்கள். அண்ணனும் தம்பியு மிக்க ஆதரவு கொண்டு இணைபிரியாத் துணைவர்களாக இருந்தார்கள். மலை களிலும் பெருவனங்களிலும் எங்கும் திரிந்து தவத்தினரைத் தின்று கொழுத்துத் தருக்கி யிருந்தார்கள். இவர்களுடைய நட்பின் உறுதியாலும் இருப்பாலும் உலகம் யாவும் பயத்தி லாழ்ந்திருந்தன. ஒரு சமயம், மூவுலகாட்சியையுடைய இந்தி ரன் இவரது கையினின்றும் எவ்வுலகத்தோரையும் மீட்டிட வும், இவரிருவரையும் வீட்டிடவும், ஒருபாயம் சொல்லித் திலோத்தமையை யனுப்பினன். ஆடையும் அணியும் புனைந்து அழகே உருவமாகியம்மடமாது, இவர்கள் திரிந்துகொண் டிருந்த வனத்தில், ஆடிப்பாடி ஓடி விளையாடிக்கொண்டிருந் தாள். கட்டழகியைக் கண்ணுற் கண்டவுடன், அசுரர் இரு வர்க்கும் காதல் மிக்கது. பெண்ணிடம் காதல் தோன்றி மனங்கசிந்திடின், பின்னர், அண்ணனேது தம்பியேது, அன்னையேது, அத்தனேது; வணக்கமேது, இணக்கமேது. அப்பெண்ணே பெருந் தெய்வமாய் விடுமன்றோ? இப்பெண் எனக்கென்றான் சுந்தன்; உனக்கில்லை யெனக்கே யென்றான்

உபசுந்தன். வழக்கு மிக்கது. வார்த்தைகள் தடித்தன. கை கலந்தனர். மெய்யிற்குத்தினர். தையல்பொருட்டுச் சண்டை தொடுத்தனர். பூண்தகு பொலிவினுள் தன் பொருட்டு அமர் பொருதுதம்மில் மாண்டனர் என்னும் வார்த்தை மாநிலம் அறியுமன்றோ? ஆகலால், "நீங்கள் ஐவீரும் விதியால்வேட்ட இம்மாதின்மீது நேயமுள்ளவ ராயினும், இடையில் கலகம் நேராவாறு ஒரு நியமம்கொண்டு உறைதல்வேண்டும். என்ன வெனிற் கூறுவேன்; ஓவியம்போன்ற உங்கள் மனையாள் திரௌபதியை நீங்கள் ஓராண்டுக் கொருவராக வகித்துச் சுகித்திருத்தல்வேண்டும். அங்ஙனம் மேவி, இம்மங்கை ஐவரி லொருவர்க்கு மனைவியாக வதிந்திருக்கு மந்நாளில், அவ் விருவரும் கூடியிருக்கும்போது மற்றொருவர் பார்த்திடல் கூடாது. பார்த்திடின், அவ்வாண்டின் ஆறு இருதுக்களிலும் புண்ணியப் புனல்களாடி மீள்வதே உறுதியென்று நியமமும் செய்துகொள்ளல் வேண்டும். இதனால் உங்கட்குள் வரம்பு மிகுந்து ஒற்றுமைக்கும் பங்கம் நேராது. இதனை விதியெனக் கொண்டு வாழுங்கள்" என்று பணித்து உடன் விசும்பிற் போனார். அவர் சொன்ன நாள் தொடங்கி ஐவரும் அங்ங னமே நியமம் பூண்டு அன்ன நாள்முதல் தருமனுதியாகக் கன்னியை வேட்டுக் காமவினை நலன் கருதியுண்டு, அவனி பர் யாரும் போற்றத் தொல்குல மரபு கோணுது, அறநெறி யாற்றிச் செங்கோல் செம்மையிற் செலுத்திவந்தார். இங்ங னம் வாழ்ந்திடுநாளில் நேர்ந்ததோர் செய்தியைக் கூறுவோம்.

அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை.

தனது ஆட்சியின்கீழ் வாழும் குடிகட்குத் துன்பம் பயம் வறுமைநோய் பகை களவு கொலை யிவையேதும் எய் தாமற் செய்து குடிகள் சாந்தத்துடனும் ஒற்றுமையுடனும்

வாழும்படி அரசு செலுத்திவரு நாட்களிலொருநாள், "முறை யோ முறையோ" எனக் கதறிக்கொண்டு ஒரு முனிவர் வாயிலில் வந்து சேர்ந்தார். கடை காவலர் வந்து இச்செயல் கூறலும் விஜயன் கடிதின் வெளிவந்து, வேதியரைத் துய ராற்றி விளைவேதெனக் கேட்டான். அந்தணன், "இறையே! வில் வேடுவர் பலர் வந்து என் பசுக்களைக் கவர்ந்தேகினர்" என்றான். "அஞ்சாது மனைக்குப் போங்கள். உங்களது பசுக்கூட்டங்களை யொன்று தவிராமல் கொணர்ந்து தருகின் றேன்" என்று கூறித் தனது காண்டிப வில்லை யெடுப்பதின் பொருட்டு அரண்மனை யேகலும், ஆங்குத் தருமனுடன் மஞ்சார் பொழிலில் விளையாடிக்கொண்டிருந்த மங்கை திரௌ பதியின் பாதங்களைக் கண்டனன். கண்டு மெய்ந்நடுங்கினவ னாகி மனந்தளர்ந்து மேனி கருகி யுட்சென்று வில்லை யெடுத் துக்கொண்டு வெளிவந்து, வெகுதூர வழி நடந்து வில் வேடுவரை யெதிர்த்துத் துமித்து பசுநிரைகளை மீட்டு அந்த ணன் இல்லத்திற் சேர்த்துப் பின் நகர் வந்து தமையனை வணங்கி நியமப்படிப் புனலாடிடப் புறப்பட்டான்.

உலூபி திருமணம்.

ஆடம்பரமான அரசன் உடைகளை மாற்றி வேதியர் வேடம்பூண்டு, வழிச்செல்லும் மறையோருடன் கூடிக் காடும் தருநதியும் பல கடந்து கங்கையாடுந் துறையைச் சேர்ந்து, அங்கு நியமம் பெறுவிதிகள் செய்துகொண்டிருந் தான். அப்போது அக்கங்கைத் துறையில், சேஷன் உலக மாகிய பாதலத்து வாழும் அரவின் மகளிர் பலர் நீர் விளையா டிக்கொண்டிருந்தார்கள். அம்மங்கைகள் பலரில் அழகிற் சிறந் தவளாகிய உலூபிப் பெயருடைய ஒரு மாதின்மேற் காதலுற் றுச்செயலற்று அவளைப் பின்தொடர்ந்து, பிலத்தின் வழியே

சென்று, தன் அழகாலும் ஆற்றலாலும் மயங்கித் தன் பால் அநுராகம் மிகுந்த அவளை மணந்து கூடிச் சிலகாலம் வாழ்ந்திருந்தான். காதலனும் காதலியும் கணத்தினும் பிரியாது காம சலதியில் மூழ்கித் திளைத்தனர். சின்னாட்களில், உலூபிப் பெயரினள், அர்ச்சுனன் போலு முருவினையுடைய அராவானை—யீன்றெடுத்தனள். நாகாதிபன் தனது மகள் உலூபின் மைந்தனது அழகினைக் கண்டு மகிழ்ந்து ஏற்றுக் கொள்ள, மன்னனிடமும் மங்கையிடமும் விடைபெற்றுப் பிலத்தின் வழியே தொடர்ந்து கங்கைக் கரையேறி மீண்டும் புண்ணியப் புனலாடுவான் போந்தான். மற்றும் வேதியர் பலருடன் கூடிக் காளிந்தி முதலிய நதிகளில் மூழ்கி நித்த நியமங்களாற்றிப் பல தலங்களினும் சென்றான். காடும் மலையும் கடுவனங்களுங் கடந்து, தென்திசை திரும்பித் தண்டகத்தினூடே புகுந்து, பல நதிகளிலும் தீர்த்தமாடி விரதங்கள் முடித்துத் தென்னாட்டினை யணுகித் திருவேங்கடமென்னும் திருப்பதியைச் சேர்ந்தான். அங்குச் சில நாட்கள் தங்கியிருந்து அரவணையானைப் பத்தித் திறனுடன் பணிந்து, பின் அத்திக்கினூடே வந்து, பச்சைக் கொடி விடையோனொருபாகந் திறைகொண்டாளாகிக் காமக்கொடியம்மை வளரும் கச்சிப்பதி யடைந்தான். சில நாட்கள் ஆங்குப் பத்தி செய்து, அங்கிருந்து அருணாசலம் போய் அன்புடன் தொழுது பின், திருக்கோவிலூர் முதலிய பதிகளைத் தரிசித்துத் திருவதிகை வீரட்டானம் திருவகீந்திரபுரம் முதலிய பல தலங்கள் தரிசித்துத் திருச்சிற்றம்பலம் சேர்ந்து பொன்னம்பலநாதன் கழல் பொற்போடு பணிந்தான். பின்னர்த் தென்னரங்கன் திருப்பதிசேர்ந்து, காவிரிப் புனலாடி யாண்டிருந்துப் புறப்பட்டு, வளவனுகிய சோழன்பதி முதலாகப் பதிதோறும் பெருகியோடும் தோயங்

களிற் படிந்து, இளவண் தமிழ் எழுதிய எடு முன்னெதி ரேறிய வைகையாற்றின் துறை சூழ்ந்த புறவங்கள் செறிந்துள்ள மதுரை யென்னும் கூடற்பதி புகுந்தான்.

சித்திராங்கதை திருமணம்.

மலையிலிருந்து இளம்வாடை வீசும் பருவங்களிலெல்லாம் கொன்றை மலர் மணத்தையும், தென்றல் வீசும் பருவமெல்லாம் சந்தணத்தின் மணத்தையும் உடையதாகிய நான் மாடக்கூடல் மாநகரிலிருந்தரசாளும் பாண்டியனை யர்ச்சுனன் வேதியருடன் சென்று பார்த்தான். தென்னவன் வட நாட்டு வேதியர்தம் வரவென நன்கு உபசரித்து, அவைக் கண் ஆஸனத்திருத்திச் சிறப்புச் செய்தான். வேதிய ரொப் பப் பாண்டியனுக்கு ஆசிகள் பல கூறிப்பாண்டு மைந்தனி ருந்தவேளையில், "எந்நிலத்தீர்! எப்பதியீர்! எங்குச் செல்லுகின்றீர்!" என்ன மீனவன் கேட்க, கன்னியைக் கண்ணுற்றூட வந்தன மென்றான், உடன் வந்த வேதியருடன் உலூபி நாதன். நந்தவனத்துச் சாலையி லிவர்க்கு வசதிகள் செய்து கொடுத்துச் சிலநாள் தங்கிப் போம்படி வேண்டிக்கொண்டான் பாண்டி மன்னன். உடன்வந்த வேதியருடன் அப்பூங்காவில் விஜயனிருந்தபோது, தாதியரும் சேடியரும் தன்னைச் சூழப் பரண்டியன் மகள் சித்திராங்கதை விளையாடற் காங்கு வந்தாள். பச்சென்ற திருமுகமும் செவ்விய இதழும் வெள்ளிய முறுவலும் கருவிழிகளும் மடமொழியும் நாணும் பூணும் நுண்ணிடையுமுடைய அக்கன்னியைப் பார்த்தான். கண்ணுற்று மனத்தடங்கா மையல்கொண்டு, எனக்கொத்த பிறப்பினள்போலு மிவள் என்று நெஞ்சிலாதரம் மீதூற நெடிதவளை நோக்கி நின்றான். புத்திரர் வேறில்லாமல் பெருந்தவத்தான் சித்திர வாஹனன் என்னும் பாண்டியன் பெற்

றெடுத்த அப்பெண்ணரசி, அப்பூங்காவில், தனது அவயவங் கட்குச் சமானமாகிய மலர்கள் பலவும் பத்திரங்களும் கொய் துக்கொண்டு அடுத்து நின்றதொரு குன்றின்மேலிவர்ந்து நின்றாள்.

வேடம்போட்ட வேதிய ருருவத்தை மாற்றித் தன்னுடைய வேந்துருவத்தை யேற்றுக்கொண்டு, பொன்னுருவமென மலர்ந்து பொலிந்ததொரு சண்பகமரத்தின் நிழலில், மின்னலைப்போலும் நுண்ணிய இடையை யுடைய அந்த ராஜகன்னிகை, மேலிருந்து நோக்கும்படி நேரே நின்றான். குன்றிலேறிப் பல காட்சிகளைக் கண்ணுற்ற மடமங்கை, நாற் புறமுஞ் சுற்றிப்பார்த்துச் சண்பகத்தின் மரத்தின்நிழல், சிலை மதனனும்படி நின்றவனைக் கண்ணுற்றாள். செந்திருவைப் போன்ற சித்திராங்கதையும் திருமாலைப்போன்றுள்ள விஜயனும் சிந்தை யொன்றாகிக் கண்களுந் தடையின்றி உறவாட மகழ்ச்சிகூர்ந்து, வெந்துருவமிழந்த மன்மதன் மீளவும் வந்து இரதியுடன் மேவுவது போலக் கண்கள் தம்மால் காமவின் பக் கனியின் தேறலை நுகர்ந்தன. சேடியரைக் காணுத சித்திராங்கதை காதல் காட்டிய வழிதொடர்ந்து கடிதேகி அவன் நின்ற சண்பகத்தின் மற்றொருசார் தனித்து நின் றாள். கண்களுறவாகியதால் வாக்குறவை வேண்டாத காதலர்கள், தம்மைத் தாமுணராமல் நாணமும் ஆண்மையும் நயந்திழுக்க அணுகிச்சேர்ந்து, பரவசராய் முன் பலகாட் பழகினர்போல் முகத்தோடு முகஞ் சேர்த்துத் தழுவிக்கொண்டு செந்துவர் வாயமுதத்தைப் பருகினார்கள். அமுதுண்ட பெருங் களியால் அடங்காத பெருங் காமம் இருவரையும் பற்றியீர்க்க ஆங்கோர் கொடி வீட்டைக் கண்டதனுட் சேர்ந்து காமனு மிரதியுமெனவே, ஒத்த பருவத்தினாதலின் ஒத்த காதலானுடன் கூடிப் பல

காற்கடவுளர்க்குங் கிட்டாத காமந் துய்த்தார். கூடியிரு வரும் ஒருவரென இதயங் கலந்ததற்பின், "தான் தீர்த்த யாத்திரைக்கு வந்ததும், தான் அத்தினபுரத்துப் பாண்ட வருள் அர்ச்சுனனென்பதும் அம்மங்கை யறியக் கூறிச் சேடியரும் பிறரும் ஐயுறுவராகலான் நீ இனியேகென்ன, நெடுங்கண்ணுள், காதற் கண் களிப்ப நோக்கி விலகிப் போய்ச் சேடியர்க்கு நிகழ்ந்த வெலாம் மகிழ்ந்துருகிச் சொல்லி விட்டாள்.

கட்டழகனிடம் காம நுகர்ந்து வசமிழந்த கன்னி பின் னும், அம்மதுவை நுகராளிபோல் ஆசைமேற் கொண்டு விரக தாபந் தலைமீதேறித் தாங்காது தளர்ந்தபோது, தாதியர் அப் பாண்டியன் மகளை அமளி சேர்த்து தபனிநீர் முதலிய தெளித்துச் சந்தனத்தை வாரிப் பூசிக் காம்பரிந்த மலர்களை மேற் படுக்கையாக்கி காமதாபம் தணிந்திடுமாறெல்லாம் செய் தார்.

"தங்கள் மலைச்சந்தனத்தைத் தழற்குழம்போ
விதுவென்னுந் தாபந் தோன்றத்
தங்கள் கடல்தண் முத்தைக்கண் முத்தால்
நீராக்கும் தக்கோராய்ந்த
தங்கள் தமிழ்க்குழ லிசையைத் தன்செவிக்கு
விடமென்னும் தபனன் ஏ*த்
தங்கள் குலக்கலை மதியைத் தபனனென்னும்
என்பட்டாள் தனிபொருதாள்."

பூசிய சந்தனம் பின்னும் தேகமெல்லாம் எரித்திட இது வென்ன அக்கினிக் குழம்பு போலிருக்கின்றதே என்பாள்; கட்டழகனை நிரந்தரங் கூடிக் குலவப் பெறாத அபாக்கியத் தால் சோர்ந்து கண்ணீருதிப்பாள். அக் கண்ணீரின் உஷ்

ணத்தால் வெண் முத்து மாலை நீராகும். இனிய தண்தமிழ்ப் பாட்டுக்களைக் கேட்டும் வெறுத் தொதுக்குவாள். இரவி லுதித்த சந்திரனை இவனென்ன இரவி போலு மென்பான். இங்ஙனம் விரக தாபத்தா லிரவெல்லாம் நித்திரை கொள்ளாம லிருந்து துயரம் அநுபவித்தாள். இரவியும் தோன்றினான். இரவெனும் பெருங் கடலு மார்ப்பொழிந்தது.

பொழுது விடிந்தவுடன், பூவை படுந் துயரம் பொறுக் காத தாதியர்கள், இது ஒளித்திடும் இரகஸியமன்று. பூவை யைப் பொருந்தியவனும் ஒத்த குலமும் வாழ்வும் பொருந்திய வனே. இதனை மன்னனுக் கறிவித்து மணம் பொருந்தச் செயல் வேண்டு மெனத் துணிந்து, மங்கையைப் பெற்ற தாய்க்கு அறிவித்து அவள் மூலம் மன்னன் பாண்டியற்கும் தெரியச் செய்தார்கள். மன்னன் களித்து, இது தவப் பய னால் நேர்ந்ததாகும். நமது மகள் வாழ்வுக் கென்றே இந்தத் தீர்த்த யாத்திரை ஈசனாலேற் பாடாயிருத்தல் வேண்டு மென்று உளம் மகிழ்ந்து உவந்திருந்தான்.

பாண்டியன் மகள் கொடுத்த பகரொணாமையலினால் பாண்டு மைந்தன், வடிவமும் மனமும் வேறாகிப் பொழுது விடியு மளவும் பொங்கு காம தாபத்தால் பொறை வருந்திக் காமனெய்த அம்பால் தோன்றிய புண்வழியே தென்றலேற ஆற்றாது மனம் பதைத்து மாழ்கியிருந்தான். பொழுது விடிந்து சூரியனைக் கண்டவுடன் மனந்தேறிப் பூசுரருடன் நதி நீராடி நியமஞ் செய்து முன்னை நாளைப்போலப் பிராமண வடிவுடனே பாண்டியன் அவைக் களத்தேகியிருந்தபோது, மதுரை வேந்தன், முகக்குறிப்பால், பாண்டு மைந்தன் இவ னென்றேயறிந்து, அர்ச்சுனனை யருகழைத்துத் தழுவித் தன் னோடும் அரியாஸனத் திருத்தி யாருங்கேட்க, “அஞ்சவேண்

டாம்! நான் பயந்த நங்கை சித்திராங்கதை நினக்கே யுரியாள்; நுங்கள் இருவர் மனமும் பொருந்த மணந்திடலாம்; ஆயினும், மற்றொரு விஷய மிதிற் சொல்லவேண்டி யிருக்கின்றது; முன்னமொரு பாண்டியன், குலத்துக்கொரு மகவிலாதயர்ந்து மாதேவனைக் குறித்துத் தவஞ் செய்து அவர் அருளால் ஒரு மகளைப் பெற்றுத் தடாதகை யெனப் பேரிட்டு வளர்த்துப் பின்னர் அந்த மாதேவர்க்கே மணஞ்செய்து கொடுத்து மகிழ்ந்தான்; அவர் தம்மால் தனது குலந் தழைத்திட வோர் மகளைப் பெற்று இப்பாண்டியனும் சாவளியைப் பரக்கச் செய்தான். நானும் அவ்வண்ணமே மகப்பெருதயர்ந்து, நங்கள் குலச் சந்திரன் தன் அருளினாலே இம்மகளைப் பெற்றேன். சந்திர குலந் தழைத்திட வந்தருளிய ச்ந்தனுவின் வம்சத்துப் பாண்டு மைந்தனுனக்கு இப்பெண்ணை மணஞ் செய்விக்கின்றேன். இவளிடந் தோன்றும் இளஞ் சந்திரனை யெனக் களித்து, இப்பாண்டியன் குலத்தை யீடேற்ற வேண்டுகின்றேன்'' எனக் கேட்டான். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோன்ற இவ்வார்த்தையைக்கேட்ட பார்த்தன் மனம் பூரித்து, இஃதோரிடைக் கொள்ளை யாமென்று எண்ணந் தேறி அச்சொல்லுக் கிசைந்திருந்தான்.

பாண்டியன், மகட்கு வதுவையென மணவோலை நாற்புறத்து மன்னர்க்கும் சேரசோழற்கும் எழுதிவிட, மன்னர் குலத் துறவினரும் மாமறையரும் முனிக்கணமும் வந்துகூட மங்கள வோரை தன்னில், பதினெட்டு வாத்தியமும் முழங்க மறை யொலி சிறக்க வேதியாசி கூறப் பாவையர் பல்லாண்டிசைப்ப மங்கைக்கும் மைந்தற்கும் மணக்கோலஞ் செய்வித்து மணவணிமா மண்டபத்தில் மகிழவைத்தார்.

"இந்திரனும் சசியுமென இறையோனு
முமையுமென எம்பிரானும்
செந்திருவு மெனக் காமதேவு மிரதியுமென
வெஞ்சிலைவ லோனும்
சந்தணிபூண் முலையாளுஞ் சதுர்மறையோர்
சடங்கியற்றத் தழல்சான்றாகத்
துந்துபியின் குலமுழங்கச் சுரிசங்கின்
குழாந்தழைக்கத் துலங்க வேட்டார்."

அன்று முதல் நெடுங்காலம், அண்ணலும் அழகியும் இணை பிரியா தன்புமீறி, தண்ணறும் பூஞ்சோலையினும் தடங்காவி னிடங்களினும் பளிங்கு மாடங்களினும் நீராடற் றுறைகளி லும் நெகிழ்ந்த காமத்தண் மதுவை நனியார நுகர்ந்து நுகர்ந்து உடலிரண்டு முயிரொன்றுமெனக் கலந்து உவகை கூர்ந்தார். பன்னெடுநாள் நெடும்போகம் பயின்ற பின்னர்ப் பாண்டியன் மாமகளாரும் பார்த்தனுருவே யாமென்னப் பப்புருவாகன் என்னும் சந்திரனைப் பெற்றுத் திகழ்ந்தாள். மைந்தன் பிறக்க மனங்களித்த பாண்டியனும், கோதானம் பூதானம் சோடசமாதானங்கள் செய்து கொண்டாடித் தன் குலத்துக் கொரு விளக்காமென்னக் கொண்டான். "நின்னா லென் மரபு விளங்கிற்" றென்று நன் மருகனைத் துதித்து நயம் பொருந்தப் பலவுரைகள் நவின்றான். பார்த்தனும், மாமனிடமும் மங்கையிடமும் விடைகொண்டு மைந்தனையுங் கண்ணுற்று மகிழ்ந்து போற்றித் தன் தீர்த்த யாத்திரையை தொடர்ந்து போனான்.

யாத்திரை முடித்துத் திரும்பல்

அங்கிருந்து புறப்பட்டுத் திரு வழுதிவளநாட்டுத் திருப் பதிகள் தீர்த்தங்கள் யாவுந் தரிசித்துத் தோய்ந்து தென்பால் திருமலையும் கைதொழுது சிந்தித்துப் பின்,

"கன்றிய வெங்கரன் முதலோர் களத்தில் வீழக்
 கவிகுல நாயக னிதயங் கலங்கி வீழ
ஒன்றுபட மர மேழும் உததி யேழும்
 ஊடுருவச் சரந் தொடுத்த ஒரு வில்வீரன்
துன்றி யெழுபது வெள்ளங் குரங்கின் சேனை
 சூழ்போத வாய்த்த திருத் துணைவ னோடும்
சென்ற வழியின் றளவுந் துளவ நாறும்
 சேது தரிசனஞ் செய் தான்திறல் வல்லோனே."

ஸ்ரீராம ஸேதுவையுந் தரிசித்து, அகத்தியன் வாழ்பொதி யத்தை வணங்கி யேத்தித் திருக்கோணக் குன்றினையும் நினைந்து போற்றித் தன்பொருளெனப் பாபநாசத்துறை படிந்து அந்த நதியின் கரையே போய்ப் பரசுராம க்ஷேத்தி ரத்தினூடே புகுந்து சேரன்பதிகள் யாவுங்கண்டு மனங் களித்து மேலைக் கடலையும் பார்த்தான்.

அந்த நெடுந்திசையிலுள்ள தீர்த்தங்களி லாடுநாளில், முன்னாள் இந்திரனது சாபத்தால் முதலைகளாகித் தவித்துக் கொண்டிருந்த ஐந்து அரம்பையர்கள்வாழ் ஐந்து தடங்களி லுந் தோய்ந்து அவர் தம் சாபம் மாற்றி முந்திய வுருவங்களை யம்மங்கையர்கள் எய்திடச் செய்து, கடலிற் சேரும் நதிகள் பலவும் போய் நீராடிப் புனிதனாகிக் கோகர்ணப் பதியைக் குறுகினான். அந்த கோகர்ணமென்னும் பழம்பதியில், தன் னோடுந் தொடர்ந்து துறையாடிப்போந்த மறையவரை யிரு த்தி மகிழ்ந்து போற்றித் தான் தனியே நடந்துசென்று துவாரகாபதியைக் கூடினான்.

அர்ச்சுனன் கபட ஸந்யாஸம்.

மறையவரைப் பிரிந்தவுடன், காஷாயந் தரிந்து முக்கோ லும் ஏந்திக் கபட ஸந்யாஸி வேஷங் கொண்டு, அந்தத் துவா

ரகைக்கு அணித்தாவுள்ள ரைவதகம் என்னும் மலையை யெய்தி யாங்கு ஒரு ஆலமரச் சோலையைச் சென்றடைந்தான். மேகங்கள் குமுறி யெழுந்து சந்ததத் தாரையாக மழையைப் பொழிய ஆரம்பித்தன. ஆலமரச் சோலையிலிருந்த வண்ணம் ஆலோசிக்கின்றான். "நான் கருதி வந்த காரியமோ, வசுதேவன் மகள் சுபத்திரையைக் குறித்துளது. தற்போது அக்குடும்பத் தலைவனோ பலராமன். அவன் என் கருத்துக்கிசைய மாட்டான். சுபத்திரையோ எனக்கு ஒத்த காதலுடையாள். இதனை முடிக்கு மாற்றல் கண்ணபிரானுக்குத்தானுண்டு; ஆகையாலிது விஷயமாக அவரைத்தான் கலந்து பேச வேண்டும்." என்றிவ்வாறெண்ணி யெண்ணிக் கண்ணனது நினைவையே கருத்துட் கொண்டான். கண்ணனோ, திண்ணிய மனமுடைப் பக்தர்கள் எண்ணின எண்ணியபடி முடித்துக் கொடுக்கும் தண்ணளியுடையார். மற்றும் அர்ச்சுனனுக்கு உறவினர்; அன்றியும், அர்ச்சுனனிடம் காதல் கொண்டுள்ள சுபத்திரைக்குத் தமையன். ஒத்த காதலர் தம் உண்மைக் காதலின் தன்மையைத் தெரிந்துள்ளவர் ஆதலால், தக்க மனமுடை யருச்சுனன், முக்கோற்பகவனாகித் தன்னையே மிகவும் நினைவிற் கொண்டிருக்கின்றானென்பதுணர்ந்து, வந்து உதவுவார்போல், உடனே அவன் முன்னுறத் தோன்றி நின்றார். யதி வேடத்துடனிருந்தவனை யந்நிலைக்குரிய மரியாதையைக் காட்டும் பொருட்டுக் கண்ணன் அவனை வணங்கலும், தான் கொண்ட வேடத்துக்குத் தக்கபடி விஜயனும் பல ஆசிகள் கூறி அளவளாவியிருந்தபோது, தான் வந்த காரியத்தைத் தனித்துச் சொன்னான். கண்ணனுங் கேட்டுள மகிழ்ந்து சூழ்ச்சி யொன்றைக் கருதிப் பின்னர்க் காலையிலே வருவேனென்று சொல்லி விடைகொண்டு மீண்டு துவாரகையிற் போய்ச் சேர்ந்தார்.

கண்ணபிரானது சூழ்ச்சியினால், மறுநாள் சூரியோதய மாவதற்கு முன், துவாரகா நகரத்தில் வாழ்கின்ற ஜனங்க் ளெல்லோரும் சேர்ந்து, இந்திர விழாவின் கொண்டாட்டத் துக்காக அக்குன்றின் புறத்து வந்து சேர்ந்தார்கள். யாதவர் களிலும் போசர்களிலும் குறித்த மன்னர் குலத்தினரும், அக் குலமாதர்களும் சூழ்ந்திருக்கப் பலராமனும் வந்து சேர்ந் தான். இவர்களுள் ஒருத்தியாகப் பச்சைமேனி இளநகை யாள் சுபத்திரையும் வந்திருந்தாள். ஆங்குள்ள ஆலமரச் சோலையிலே ஓரிடத்தில், அருந்தவத்தின் வீற்றிருக்கும் அக் கபட சந்நியாசியைக் கண்ணுற்று, அவருடைய திருமேனியி லெழுந்து வீசும் பேரொளியால், "இவர் யாரோ ஒரு பெரிய மகான்" என்னப் போற்றியவரை வலம்வந்து நமஸ்கரித்து வாழ்த்தும் பெற்று அகன்றார்கள். பின், மைக்கோல முகில் வண்ணனாகும் மாயன், தன்னை மனவணக்கம் புரிவானைத் தாம் வணங்கி முறைப்படியே ஆசியேற்றார்.

கண்ணனும் கபட வண்ணனும் தனியிருந்து பேசச் சமயம் வாய்த்த வேளையில், சுபத்திரை யப்பெரிய குன்றின் சூழலில் ஓர் பக்கம் வெளிப்படலும், அவளது காட்சியை யர்ச்சுனன் கண்டு, மையல் மீக் கொண்டு மனம் பதைத் தான். இந்நிகழ்ச்சியை யறிந்த பரந்தாமன், அவனைப் பார்த்து, "சுவாமி திருவுள்ளக் குறிப்பை யெம்மனோர்கள் அறிந்தா விசையமாட்டார்கள்; இங்கு யாரும் அறிவுறாமற் பக்குவமாய் அவளைக் கவர்ந்துகொண்டு நுங்கள் பதியேகல் வேண்டும்; இதுவே காவலர்க்குக் கடமையுமாகும்" என்று மனங் கசியக் கூறிச் சுபத்திரையைக் கூவிப் "பெண்ணே! இந்த மெய்ம்மையான தவமுனிவர்க்கு இரண்டு பருவ காலங் கள், தகுந்தபடி பணிகள் செய்துவந்தால், நீ நினைத்துள்ள

நின் கணவனை விரைவில் அடைவாய்" என்று அவட்குப் பணித்திட்டார்.

சுபத்திரை திருமணம்.

முனிவருடன் துவாரகை சேர்ந்து, கண்ணனருளிய படியே சுபத்திரை அம்முனிவர்க்குப் பணிசெய்து வந்தாள். இரவில் முனிவர் ஒரு மனையிற் படுத்திருந்தார். சுபத்திரையும் சேடியரும் மற்றோர் மனையிற் படுத்திருந்தார்கள். தினமும் தன் மனத்துள்ள காமக்கொடியாகிய கன்னி பகலெல்லாம் தனக்குப் பணியாற்றிவரப் பார்த்தபோதெல்லாம் பார்த்தன், காமதாபத்தால் கடுமயக்கங் கொண்டவனாயினும் சமயம் பார்த்துப் பொறுத்துப் பொறுத்து "இன்றிரவு காமவாதைக்கு என் செய்வேன், என் செய்வேன்" என்று ஏங்கி ஏங்கி, இப்படியே பல நாட்கள் கழித்துவந்தான். ஒரு நாள் கன்னிகை, அந்தக் கபட சந்நியாசியின் உருவத்தை நன்றாகக் கவனித்து, இத்தனை நல்லிலக்கணமும் படைத்து இவ்விளவயதிற் றுறவு பூண்டு யோகியான இப்பெரியவர் யாரோ வென்ன மயங்கித் தானறியாதவர்பால் தன்னிலொரு நேயந் தூண்டச் சேடிகளுடனருகு சேர்ந்தாள். இது முன்னை வினை கூட்டி வைக்கும் முயக்கோ! அன்றிக் கபட வேஷத்துடன் அக்காளை மனத்தால் நினைந்துவந்த பெருந்தவத்தின் பயனோ! யாமறியோம். இருபேரும் அளவளாவ ஆரம்பித்தார்கள்.

மங்கை:—யாதவரே! தாம் எங்கும் புனலாடுதற் கேகினீரெனினும், தாம் தங்கி வாழும் நகரந்தான் யாது?

முனிவர்:—பெண்ணாமுதே! எங்கண் மாநகர் இந்திரப் பிரத்தம்.

மங்கை:—ஆகா! அப்படியா!! நல்லது!!! ஆங்கு எங்கள் உற வினர்களாகிய தர்மராஜர் பீமசேனர் நகுல சகா தேவர்கள் இவர்கள் தாயுடன் சௌக்யமா?

முனிவர்:—மிகவும் சௌக்யமே. மின்னொளியார் பெண்ண ணங்கே! எல்லாரையும் பற்றி வினவின நீ, விஜ யனைப்பற்றி மாத்திரம் வினவாத காரண மென் னையோ?

தோழி:—(இக்கேள்விக்கு மறுமொழி கூறுமல், நங்கை நாணி நிற்க) பெரியவரே! எங்கள் நாயகி சுபத்தி ரை, அந்தப் பற்குநனையே பிராண நாயகராக வரித்துள்ளாள் ஆகலான், அவரை மறைத்தனள் போலும். அவர் தாம் அவள் உள்ளத்திலே எப் போதும் குடியிருந்து, இங்கேயே இருக்கின்றுர் அன்றே!

முனிவர்:—ஆமாம்; அது நிசமே! பாங்கி! நீ சொன்ன படியே அவர் இங்குத்தான் இருக்கிறுர்.

தோழி:—முனிவரே! பற்குநர் தீர்த்த யாத்திரையிற் புறப்பட் டிருக்கிறுர் என்று சொல்லிக் கொள்ளுகிறுர்களே! அடிகளும் தீர்த்த யாத்திரை சென்று வந்திருக் கிறீர்களே! அம்மகான் எங்குள்ளாரிப்போதெனத் தெரியுமோ அடிகட்கு?

முனிவர்—அதைத்தான் முன்னரே குறித்துள்ளேனே! விஜ யன் தீங்கிலன். பல திசைகளிலுஞ் சென்று புன லாடிப் புனிதனுகி, இச் சுபத்திரை யென்னும் பேரழகியின் பொருட்டு, இப்பதி புகுந்து, தற்

போது இவ்விடத்தில் நம் மெதிரில் வீற்றிருக் கின்ருன்.

என முனிவருரைத்த மொழியைக் கேட்டலும், சுபத்தி ரைக்கு முகம் வெயர்த்தது; உதடு துடித்தன; மேனி புள கித்தது; தலை நாணிக் குனிந்தது; பதியிடத்தில் பெண்கட் குப்படும் பாடெல்லாம் உண்டாயின. இம்மெய்ப் பாட்டை யும் அவள் உளக்குறிப்பையும் மேனி நடப்பையும் விஜயன் கண்டானுகலின், ஐயமும் நாணமுங் கொள்ளாது, தனது தகவுடைக் கையினுல் அவள் வளைக்கரம் பற்றி யிழுத்தணைத் தான். உடனே சேடிகள் தவிர்ந்து புறம் போனுர்கள். அர்ச் சுனன் மங்கையை யணைத்தேகி யொரு மாதவிப் பந்தரிற் புகுந்தான். சேடிகள் இச்செய்தியைத் தேவகிக்கு அறிவுறுத் தினுர்கள். மற்றியாருமறிந்தாரிலர். யாரும் அறிவுருவகை யிற், கண்ணபிரான், சூழ்ச்சிசெய்து, பலராமன் முதலிய யாத வர் பலரையும் விழாக் கொண்டாடும் பொருட்டு அழைத்துச் சென்று அகற்றி வைத்தார். இது கற்பின் பொருந்திய தெய்வ மணமாகலின், சடங்கியற்றியே மங்கையை யாவருங் காண மணத்தல் எண்ணினுன் விஜயன். நகரில் யாதவரில் யாருமில்லை யென்பதனை யுணர்ந்து விஜயன், தன் பிதாவாகிய இந்திரனை நினைந்தான். மங்கையும் தனது இளைய சகோதர னை கண்ணபிரானை நினைந்தாள். இருவரும் தத்தம் மனைவி யருடன் வந்துற்றனர். இந்திரனும் புலோமசையும், அந்த மணமக்கள் இருவோரையும் தமது ஆடை யணிகளைக்கொண் டலங்கரித்தார்கள். சங்கேதப்படியே கண்ணபிரான் ஆணை யை முன்னிட்டு வேதியரிற் சிலர் வந்தார். மங்கல வாத்தியங் களும் வந்துற்றன. வேதியர் சடங்கியற்ற மங்கலவாத்தியம் முழங்க, மங்கையை மால் விஜயன், முற்றப்படி யக்கினி சாக்ஷியாகவே மணந்திட்டான். கபட வேஷம் நீக்கிக்

காளை யுருக்கொடு நின்ற, மணமகனை நோக்கிக் கண்ண பிரான், மைத்துனன் முறையில், "கபட வேஷக்காரிய மைத்துனரே! காரிகையார் பொருட்டு இன்னும் என்ன வென்ன வேஷங்கள் புனைந்துகொள்ள நினைந்திருக்கிறீரோ? அன்றோர் கன்னிக்காக அந்தணர் வேஷம்பூண்டீர்; இன்று இக் கன்னிக்காக, இந்த மாமுனி வேடமும் கொண்டீர். வேடம் மாறியே பெண்களை வேட்பது நும் மரபுபோலும்" என்ருர். மணமக்கள் புன்னகை காட்டி நின்றனர். கண்ணன் அர்ச்சுனற்குச் சைகை காட்டி மலைக்குத் திரும்பிப் போனர். இந்திரனும் தந்திரமாய்ப் புலோமசையுடன் புறப்பட்டுப் போனன். மற்றெல்லோரும் அகன்று போனர்கள். மண மக்களிருவரும் தனித்தனர்.

பலராமன் கோபித்தெழுதல்.

இரவி உதிக்கு முன்னரே இந்நகரைவிட் டகலல் கருதி, மாதவன் குறித்த வண்ணம், சுபத்திரை ரதஞ் செலுத்த அர்ச்சுனன் தனது நிஜ வுருவுடன் ரதத்திலேறி இந்திரப் பிரத்தத்தை நாடி யேகினன். எதிர்த்த காவலரைத் துகைத்து இரதத்தைவிடச் செய்தான். அதற்குள் கண்ணபிரானுற் செய்தியுணர்ந்த பலராமன், கதித்தெழுந்து கடுங்கோபனுகிப் படைதிரட்டிப் பற்குனனை விரைவினிற் பின்தொடர்ந்து போர்க்கு நின்ருன். படை வருதல் கண்டஞ்சிய மங்கையை மனந் தேற்றி, "அஞ்சாதே! ரதம் செலுத்து!! படைகளை யான் முறியடித்து முடுக்குகின்றேன்" என்று சொல்லி, எதிர்த்துவரும் வீரரை எதிர்த்து வென்று பலராமன் நாணத்துடன் பார்த்து நிற்கத்தான் நில்லாம லேகித் தன்னகரியிற் புகுந்தான். "இனிக் கொதித்தும் குதித்தும் பயனில்லை," யென்று பலராமனைத் தேற்றிப் பரந்தாமன், பாண்டவர்க்குத்

தூதும்பாய் உபசாரம் சொல்லிப் பாண்டவரைவருடன் தாயையும் அழைத்துவந்து, சம்பந்திகள் மனங்களிக்க, மன்பதைகள் கண்களிக்க, மறையோர்கள் ஆசிகூறப் பலராமன் முதலிய யாதவர் பார்த்திருக்க வேதவிதிப்படியும் தங்கள் மரபுப்படியும் மறுமுறையும் மணம் செய்வித்து மறு மகிழ்ச்சியும் செய்துப் பரிசுக ளீந்து, அவர் நகருக் கனுப்பினார்கள்.

பாண்டு மைந்தர்களனைவரும், பின்னர்ச் சிலவாண்டுகள் அரசியலை நன்கு நடத்திவந்தார்கள். அந்நாளில் விஜயனுக்கு யாதவ குலப் பெண்ணாகிய சுபத்திரையின் வயிற்றில், அபிமன்யு என்னும் மகன் பிறந்தான். சிங்கக் குருளை போல அபிமன், தந்தையை யொத்து, “விளையும் பயிர் முளையிலே” என்றவாறு இளமைப் பருவம் முதல், தந்தையின் அழகும் அறிவும் ஆற்றலும் அமைதியும் அஞ்சாமையும் பொருந்தி வளர்ந்தான். அக்கினியிற் பிறந்தவளாகிய திரௌபதியின் வயிற்றில், பாண்டு மைந்தரைவர்க்கும் ஐந்து குமாரர்கள் பிறந்து, பூதங்களைந்திலும் குண மைந்தும் பொலிந்தன போல உபபாண்டவர்களாக விளங்கியிருந்தார்கள். குலமுயரக் குடியுயரக் கோலுயரப் பாண்டவர்க் குதித்த அவ்வாறு குமாரர்களும் ஒற்றுமையும் உபகாரச் செயலும் வீரமும் பொருந்தி, ஆறு ருதுக்கள் போற் பிரஜைகட்கும் தந்தையர்க்கும் மந்திரியர்க்கும் தந்திரியர்க்கும் இன்பம் அளித்து வந்தார்கள். இவர்களில், மதுசூதனன் மருமகனாகிய அபிமன்னன் “வெம்போர் விருது”க் கொருவனென்று உலகோர் புகழ்ந் தேத்தும்படி சிறப்பின் வளர்ந்தான். இங்ஙனம் தனம் தானியம் குலம் குணம் அதிகாரம் ஆதிக்கியம் மனைவி மக்கள், இடம் பொருள் ஏவல் கல்வி கேள்வி அறிவு ஆற்றல் என்று சொல்லக் கூடிய உலக போகத்துக்கு வேண்டியவெல்லாம் பெற்று வாழ்க்கையிற் சிறந்து உலகத்திற் கண்

கண்ட தெய்வங்கள் ஐந்தெனப் பாண்டவர், இருந்து வந்தார்கள். வசந்த காலத்தில் நடந்ததொரு சரித்திரம் குறிப்போம்!

காண்டவ தகனச் சருக்கம்.

"தேடிய அகலிகை சாபந் தீர்த்த தாள்
நீடிய உலகெலாம் அளந்து நீண்டதாள்
ஓடிய சகடிற உதைத்துப் பாம்பின்மேல்
ஆடியுஞ் சிவந்ததாள் என்னை யாண்டதாள்."

வசந்த கால விளையாட்டு.

வசந்த காலம் வந்தது. பசுந்தன் சோலைகள் தோறும் தென்றற் காற்று வீசிக் கொண்டிருந்தது. அத் தென்றற் காற்றின் பின்னே, மலர்கள் தோறும் வண்டுகள் சுழன்று சுழன்று ரீங்காரத் தொனியுடன் ஓடிக் கொண்டிருந்தன. சோலையின் மரங்களிலுள்ள புதிய புதிய தளிர்களைக் குயில்கள் தமது அலகுகளினால் கோதிக் கொண்டிருந்தன. செவ்வல்லியும் செந்தாமரையும் பொய்கைகளிற் பூத்திருந்தன. நெடுங் கிளைகளின் மலர்களினிருந்து தேன் சொரிந்து கொண்டிருந்தன. இவைகளெல்லாம் சேர்ந்து இரதியும் மதனனும் தென்றலந் தேர்மேலேறிக் கொண்டு பவனி வருகின்றனரோ என்னும்படியிருந்தன. இக்காலத்து ஓரறிவு முதல் ஐயறிவு வரையிலிருக்கும் ஜீவராசிகளெல்லாம் பெண்ணொடு ஆணும் ஆணொடு பெண்ணும் கூடிக் குலவிக் கொண்டிருந்தன. பல சொல்லிப் பன்னுவானேன்! முற்றத் துறந்த முழு யோகிகளையும் போகத்திலழுத்தும் காலமாக இருந்தது, என்றால், இல்லறத்தில் தோய்ந்திருக்கும் இன்ப நுகர்ச்சியையுடைய உயர்தர மக்களைப் பற்றிப் பேசல்

வேண்டுமோ! இந்திரப் பிரத்தத்தில் அர்ச்சுனன் தனது காமக்கிழத்திகளுடனும் கண்ணபிரான் தமது காமக் கிழத்திகளுடனும் கலந்துவந்து, பூங்காக்களையும் தண்புனற் சோலைகளையும் தமக்கு வாசஸ்தலமாகப்பெற்று, நீர் விளையாடிப் பூக்கள் கொய்து தத்தம் மங்கைகளுடன் உண்டாடிக் களித்து அவ்விளவேனிற் காலமெல்லாம் பொழுது போக்கிப்,

"பாண்டு மதலையும் காதற் பாவையரும் துழாயோனும் பாவைமாரும்
ஈண்டுபெருஞ் சனத்துடனே யிவ்வண்ண மிடந்தோறு மினிதினாடி
ஆண்டுவரி சிலைமதனும் அவன்படையுஞ் சேவிப்ப அழகு கூர
மீண்டுதம் மனைதோறும் நிரைநிரை வாள்விளக்கேந்த மேவினாரே."

அக்கினி பகவான் தோற்றம்.

இளவேனிற்கால மகன்றபின்பு முதுவேனிற்காலமாகிய க்டுங் கோடைக்காலம் வந்துற்றது. அந்தக் கோடையில் எங்கும் நீரென்னும் தோற்றமே யில்லாமல் நிலம் வறண்டு போயிருந்தது. நீர் காணவேண்டுமானால், கடல்நீரும் ஜீவர்களின் வெயர்வை நீரும் மணற்றடங்களில் ஊறி ஊறி யிறைக்கின்ற சிறு புனலும் தர்மராஜனது அருளாகிய புனலுமல்லால் வேறில்லை. அந்தந்த ருதுக்கள் கடவுளாணையால் அவ்வக் காலங்களில் தோன்றி உலகப் பொருள்களை யாக்கலும் காக்கலும் நீக்கலும் செய்யும் தொழிலுடையன வன்றோ? எனெனில், சீவர்கள் சிலகாலம் மழையையும் சிலகாலம் காற்றையும் சிலகாலம் தாபத்தையுமே துணையாகக் கொண்டு வாழ்கின்றார்களாகலின் என்பர். இவ்வுண்மையுணராதார், ஒவ்வொரு காலத்தையும் தமக்கு வெறுப்பு வந்த காலத்து நிந்திக்கின்றார்கள். இங்ஙனமாய அக்கோடை மாறப் பின்னர்க் கார்காலம் வந்துற்றது. அந்தக் கார்

காலத்து சுபத்திரையின் மணவினைக்குப் பின் இணைபிரியா நட்புற்ற அர்ச்சுன கிருஷ்ணர்கள், ஓர் போது, கானமுகில்கள் இரண்டு ஓரிடத்தில் கூடியிருந்தனவோ வெனும்படி அழகு தோன்றக் கலந்திருந்தனர்.

அப்போது, அக்கினி பகவான் முப்புரிநூலும் நெஞ்சடைக்காடும் சுற்றிய ஆடையுமுடைய ஒரு வேதிய வுருக்கொண்டு, அவரிருந்த சுழலுக்குள் வந்து சேர்ந்தார். அருமறையாளரைக் கண்டவுடன் அரசர்களிருவரும் எழுந்து வணங்கி யாசிகள் பெற்று மூவரும் வீற்றிருந்தபோது, "எனக்கு மிக்கப் பசியாயிருக்கின்றது; வயிறார உண்டு களை தீர அன்னமிடுவீர்களா நீங்கள்?" என்று அந்தண னியம்பினான். "உமக்குரிய போஜனத்தை யிக்கணத்திலேயே நீர் களித்துண்ணுமாறு அளிக்கின்றோம்; உமக்கு எத்தகைய போஜனம் வேண்டும்? இயம்புவீர்" என்று கேட்டார்கள், ஏனெனில், "அரியவாயினும் வழங்குதற் கேற்றன அல்லவாயினும் தம்மிற் பெரியவாயினும் அதிதிகள் கேட்டன மறுப்பரோ பெரியோர்" ஆகலின் இரண்டு வள்ளல்களும் ஒப்புக்கொண்டார்கள். உண்மையும் வாய்மையும் மெய்ம்மையும் பொருந்தியுள்ள இரண்டு வள்ளல்களு முரைத்த சொற்களைக் கேட்டவுடன், அக்கினிபகவான், "வீரவள்ளல்களே! வாக்களித்ததை மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றேன். நான் அந்தணனல்லன்; அந்தணன் உருக்கொண்டு வந்த அக்கினி, எனக்கு, என் பசி தீரும்படியாக உங்களால் கொடுபட வேண்டிய உணவானது இக்காண்டவ வனமேயாகும். இதனை நான் அருந்த முயற்சிக்கும்போதெல்லாம் மேகவாகனனாகிய இந்திரனனவன் மேகங்களை யேவி மழை பொழிவித்து, நான் உண்ணாதிருக்குமாறு செய்திடுகின்றான்! எனக்குப் பசி சிறிதும் மாறவில்லை; ஆக

லான் வள்ளல்களாகிய உங்கள் காவல் கொண்டு காண்டவ வனத்தை வயிருரவுண்ண விரும்புகின்றேன்.'' அந்த வனத்தில் நால்வகையான ஸ்தாவரங்களும் தானவர் களும் அரக்கர்களும் உரகர்களும் கொடு விலங்கினங்களுடன் சூழ்ந்திருக்கின்றனர். அவற்ருேடு எனக்கு அவ்வனத்தைப் போனகமாகத் தரல் வேண்டும். மற்றும் அங்குக் கூர்மை யான விஷப் பல்லுடைய தக்ஷகனென்னும் அரவரசன் தன் குடும்பத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ருன். அவ் வனத்தை யுண்ணப் புகுந்து யான் வாய் வைத்திட்ட வுடனே, புருகூதனுகிய இந்திரன் தனது தக்ஷக நண்பனைக் காக்கும் பொருட்டு எழு மேகங்களையு மேவிப் புனல் சொரிந் திடச் செய்து அவித்திடுகின்ருன். அவனைப் போர் முனை யில் விலக்கி யெனக்குணவளிப்பது நுங்கள் கடனே'' யென்ருன்.

என்ற போதினில், "உன்னிச்சைப்படியே உன் உண வைக் கொடுத்திட்டோம்; சென்று கொள்'' எனத் தனஞ் சயன் கூறலும், மகிழ்ந்து அவனுக்கு, "மன்றலந் துழாய் மாயவன் அருளினுல் வடிக்கணை மாளாமல் நெடுங்கிய தூணி யும் வில்லும் இரதமும் வெள்ளைப் புரவிகள் நாலும் கொடுத் தான்; அந்த ரதம் வானரக் கொடியுடன் பொலிந்திருந்தது. பாகன் செலுத்த அந்த ரதத்தின் மீதேறிக் காண்டீபத்தைக் கையிலெடுத்துக் கவசமு மணிந்து மிக உத்ஸாஹத்துடன், வில்லில் நாணேற்றி எண்திசா முகங்களும் செவிடு படும்படி யாக வில் நாணினைத் தெறித்து போருக்கமைந்து நின்ருன்.

வனம் பற்றி யெரிந்தது.

"ஆழிவா யொருவடவையின் முகத்திடை யவதரித்தனனென்ன
ஊழிவா யுலகனைத்தையும் உருக்குமா றுடன்றனனென்ன

வாழிவாழி யென்றருச்சுனன் காத்தையும் வார்சிலையையும் வாழ்த்திப்
பாழிமேனியை வளர்த்தனன் பாவகன் பவனனும் பாங்கானன்."

அக்கினி பகவான் மிகவும் குதூகலம் கொண்டு, தனது ஏழு நாவினையும் திறந்து காண்டவ வனத்தைத் தஹிக்கலுற்ருன். கொழுந்து விட்டு அவ்வனத்தினைப்பற்றி அக்கினி யெரிந்திடும்போது, தன் தோற்றமானது, கடலில் வடவையினிடத்தில் தோன்றியது போலவும், யுகமுடிவில் உலகமனைத்தையும் அழிக்கும் போதும் கோபத்துடன் தோன்றி யெழுந்தது போலவும் இருந்திடத் தோற்றி நின்று, "அர்ச்சுன! வாழி!! வாழி!!!" என்று அவன் காவேகத்தையும் சரவேகத்தையும் வாழ்த்தி நின்று, தனது முழு மேனியையும் பாக்க எடுத்துக் கொண்டு எரிந்து விளங்கினன்; மிக்க துணைவனுகிய வாயு பகவானும் அக்கினி பகவானுக்குப் பரிந்து வீசினன். இந்திரனது நந்தவனம் போன்ற அப் பெருங் காட்டை யக்கினி சூழ்ந்து நின்ற தோற்றமானது, ஒரு பெருங் கடலைப் பவள மலை யொன்று சூழ்ந்து முற்றுகையிட்டதுபோலிருந்தது. பெருந் தீப்பற்றி யெரிந்து கொண்டிருக்கும்போது, அவ் வனத்துள்ள பச்சை மாங்களும் புகை கொண்டு எரிந்து கரிந்து சாம்பராயின. அங்கு வாழும் துஷ்ட மிருகங்களும் சாது மிருகங்களும் ஓடி ஓடிச் சுற்றிச் சுழன்று தங்குதற்கிடம் காணுமல் மீண்டும் அவ்வக்கினிக்கே இரையாயின. மிருகங்கள் கரிந்துபோன புகைகள் மேலெழுந் தோற்றமானது, அக் காட்டில் வாழ் மிருகங்களெல்லாம் அக்கினிபகவானது பரிசத்தால், உடலோடு நேரே வானநாட்டுக்கு ஏறுவனபோன்றிருந்தன. எங்கு பார்த்தாலும் கறும்புகையுடன் நெருப்புப் பொரிகளே சிந்திக்கொண்டிருந்தன. அத் தோற்றமானது, வெகுநாட்களாகத் தன் ஆயிரங்கண்கட்கும் அகப்படாமல் அந்தக் கறுத்த நீண்ட வனத்தைப் புக-

லிடமாகக் கொண்டு ஒளிந்து நின்ற இருட்கூட்டங்களை யெல்லாம், சூரிய பகவான் கண்டு உட்புகுந்து அவற்றையெரித்து வெளிப்படுத்திக் கொண்டிருந்த தன்மையைக் காட்டி நின்றது.

இங்ஙனம் அவ்வனத்துற்ற ஓரறிவுயிர் முதல் ஐயறிவுடைச் சீவர்கள் வரை கருகிச் சாம்பராகும்படி எரித்தபோது, தானவர் அரக்கர் முதலான துஷ்டர்களும் ஓடி ஓடிக் கூவிக் கூவி நெருப்பில் வீழ்ந்து மாண்டனரென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

அர்ச்சுன இந்திரர் யுத்தம்

வனம் பற்றித் தீச்சுடர் தோன்றப்பெற்று ஊழிக்காலம் போலிருந்தவேளை, இந்திரன் கண்ணுற்றான். வனம் எரிந்து அதனால் தோன்றிய புகைகளைப் பெற்று, மேகக் கூட்டங்கள் முன்னிலும் பன்மடங்கு கறுத்துப் பெருத்து விளங்கினவாகலால், இந்திரன், அம்மேகங்களை யேவி முன்னிலும் பன்மடங்காக மழையினைப் பெய்து அக்கினியை யணைத்திட ஏவினான். அம்மேகங்கட்குத் துணையாகப் பல தேவரையும் ஏவித் தானும் தனது வெள்ளையானைமீதேறிப் போர்க்களம் வந்து நின்றான். சப்த மேகங்களும் தமது திறல்களிற் சிறிதும் தாழ்க்காமல் பெருமழை பொழிந்திடலும், எங்கும் நீராகிப் பட்ட மரங்களும் துளிர்த்திடுமோ என்னுமாறு எங்கும் சீதளமேறின. இந்திரன் ஏறிய யானையின் ஒலியும் வானவர்கள் எழுப்பிடுமொலியும் சேர்ந்த மாரியின் ஒலியுமாய் வனத்தில் ஒலி மிக்கு அக்கினிவா யடங்கிடப் பெருத்தன. மூண்ட வெங்கனலை இடிகளால் முருக்கி யெமது கால் கைகளால் நெருக்கி எங்களாண்டவன் இந்திரனது வாகனமாகிய ஐராவதத்தினது துதிக்கைபோன்ற மழைத்தாரைக

ளால் நெருப்பினை யவித்துப் பாண்டவன் பாணமெறிந்தா லும் கண்ணன் பர்வதத்தை யேந்தி நின்றாலும் நாங்கள் தடுத்து இக் காண்டவ வனத்தைக் காப்போம் என்று மேகங் கள் கர்ஜித்தனபோல எங்கும் இடி முழக்கம் மிகுந்தன. இங்ஙனம் பெய்த மழைத் தாரைகளால், அக்கினியின் ஏழு வாய்களும் மூடி அவன் முகம் சிலிர்த்திடுமேல், அவனுக்குத் துணையாமாறு கொடுத்த வரத்தினைக் காத்தவராகோமென்று, அர்ச்சுனன் உடன்று வில்லினிற் பகழிகள் தொடுத்து, வானத்தின்மீது பெருவிதானமொன்றமைத்து, அவ்வனத் தைச் சூழுறக் கவிகைபோல் நிறுத்தி, மேலுறும் மழைத் துளிகளிற் சிறிதும் காண்டவ வனத்திடைச் சொட்டவும் விடாமல், கண்ணன் அன்று கோவர்த்தன மலையினை யெடுத்து ஏழு மேகங்களினின்றும் கோக்களையும் கோபாலர் களையும் காத்ததுபோல, காண்டவ வனத்திடை யிருந்த அக்கினியைக் காத்தான். ஏழு மேகங்களும் எப்படிப் பொழி யினும், அவற்றின் ஒரு சிறு துளியேனும், அக்கினிபகவானி டம் சென்றதில்லை. இந்திரன் பார்த்தான். வெகுண்டான். அக் கினி பன்மடங் கதிகமாகிக் கதித்தெழுந் தெரித்தான். செவ் விய ஜ்வாலைகள் கொழுந்து விட்டெழுந்தன; அத்தோற்றம், அர்ச்சுனன் பாணம் கொண்டமைத்த மேல்விதானத்துக் குப் பவளத் தூணங்கள் அமைத்தன போன்றிருந்தன. அவ்வனத்துள்ள தக்ஷகன் என்னும் பாம்புக் கரசனைக் கூவித் தேவர் நீ பிழைத்துப் போவதே கருமமென்றிசைத்தார். அவன் தனதொரு மகளொடும் மகனொடும் போந்தான். அக்கினி அவன் தனி மகளினைக் கரித்தான். தாமேகுதற்கும் வழியிலாது அர்ச்சுனன் அமைத்த விதானத் தாற்றடைப் பட்டு அம் மாசுணங்கள் வகையறியா திருந்தன. இந்திரன் அறிந்து தனது நண்பனான் தக்ஷகனுற்ற துயரினைப்பொறாது

மெய் கலங்கித் தனது யானையின் மும்மதப் பொழிவாலும் தன்கை வாருணாஸ்திர மழைப் பொழி வாலும், காத்தளித் தனன். உடனே அர்ச்சுனன், தனது சிறந்த எரிக்கணை களை யேவி அவ்வாருணக் கணையையும் தகித்து மாசுணந்தீயு மாறு செய்தான். தனது தாயின் வாயினொடு தனது வாலும் தீந்திடக்கண்டலமரும் அச்வ சேனனை யிந்திரன் காக்குமாற் றலைப் பொறுக்காம லிங்ஙனம் செய்து, தந்தையினும் தன யன் சதமடங்கு வலியன் என்பதைக் காட்டி நின்றனன். இந்திரன் விடுவித்த தன்மையால் வீடு கண்ட தக்ஷகன் மகன், விரைவில் வெளியேறி யர்ச்சுனனுக்குப் பகைவர் யாரெனக் கருதிக் கன்னனைச் சென்று தேர்ந்தடைந்தான். இதுவே, கன்னனிடம் வளர்ந்திருந்ததென் றுலகம் சொல் லும் நாகாஸ்திரமாகும். தக்ஷகன் மகன் தப்பி யோடினு னெனினும், இந்திரன் தக்ஷகனைக் காணுமல், களிற்றை யேவினான்; மேகங்களைக் கடிந்தான்; கணைகளைச் சிந்தினான்; தாழ நின்று போர் செய்யும் தன் மகன் அர்ச்சுனனைக் கோபித்து நின்றான். மேகக் கூட்டங்கள் இளைத்துப் போயின. கண்டு தான் வில்லொடும் நேரே போர் செயற்கு உருத்து நின்றான். கண்ட வானவரும் உடன் துணை நின் றார். தேவரும் முப்பத்து மூவரும் மேல் நின்று இந்திரனுக் குப் பக்க பலமாய்ப் போர் செய்யும் வேலை, எல்லாத் தேவர்க் கும் இரண்டு மானுடர்க்கும் பெரும் போராக முடிந்தது. அர்ச்சுனன் உருத்து நின்றெய்த பாணங்களினால் அழிந்து சூரியனொதுங்கினான். அஷ்ட வசுக்களில், பீஷ்மனாக மாறிய எகுலனொழிய மற்றை எழு வசுக்களும் ஓடினார். அச்வினி தேவதைகள் பறந்தார்கள். எமனுமாற்றாதிரிந்தான். வருண னும் கடல் வறத்தல் கண்டழிந்தான். சந்திரனும் குபேர னும் நிருதியும் இவ்விருவருடன் எப்படிப் பொருவோம்

என்று ஓடினர். இந்திரனிருந்தான். வலியொழிந் தழிந்தான். தனயனுடன் போர் செய்ய மாட்டா னிளைத்திட்ட போது, கடவுளர் இந்திரனைப் பார்த்து, "உனது நண்பன் தக்ஷகன் தப்பியோடி விட்டான்; குரு நிலம் போய்ச் சார்ந்தான். அவன் குமாரனும் உம்மால் பிழைத்தனன். தூமக் கொடியனுகிய அக்கினியோ மேகங்களுக் கவியாமல் நின்று ஜ்வலிக்கின்றுன். மானுடரிருவரோ நானும் நாரணனு மாவார்கள். இவர்களை யாம் வெல்லுதலரிது; இனி நாமும் தப்பி யோடவே இனிது" என்று ஒரு வழியுரைத்தார். இதைக் கேட்டு இந்திரன் ஆமென இசைத்தான். உடனே சூரியனைக் கண்ட இருள்போல், எண் திசா முகங்களினும் மேகங்கள் ஒழிந்தன. இந்திரன் ஓடிப்போ யொளித்தான். நரனும் நாரணனுமாக நின்ற மானுடரிருவரும் கண்டதிசயித்தார்கள். அர்ச்சுனன் வில் வலிகண்ட வானவரும் வானவர்க்கரசனும் நாரதன் முதலிய முனிவரும் வாழ்த்திப் "பூமியிலொருவர் உனக்கினி வில்லில் நிகர்ப்பவரில்லை" யென்று போற்றியகன்றுர்கள். காண்டவ வனத்தில், தக்ஷகனுக்கு அழகிய வீடமைத்துக் கொடுத்த மயனென்னும் தச்சனை யக்கினி பகவான் பற்றி யெரித்திடும்போது, அவன் அலமந்து, "அர்ச்சுனு! அபயம்" என்று விஜயன் காலிடை வந்து வீழ்ந்தான்; பெரியவர் குணம் பெற்றோன்; ஆதலால், அவனை யக்கினி வாயினின்றும்மீட் டுயிர் அளித்தான். அக் காண்டவ வனம் தீப்பற்றி யெரிந்தபோது, அங்கிருந்த ஜீவர்கள் அனைவரினும் தப்பிப் பிழைத்தவர்கள்; இம்மயனும் தக்ஷகனும், தக்ஷகன் மகனும், கருநிறக் குருவி யிவைகள் நான்குமேயாகும். இக் குருவினங்கள் எவையெனில், முன் ஒரு சாதகப் புள் இறந்துவிட, மந்த பாலனென்னும் முனி

வன், அதன் உடலிற் புகுந்து அதன் பேட்டுடன் கூடி நான்கு முட்டைகளை யுண்டாக்கினான். அம்முட்டைகளி னின்றும் தோன்றிய நான்கு குருவிகளே இவைகள். அம் முனிவன் வேண்டுகோளினால், அவற்றை யக்கினி தகியா தொழித்தனன். அக்கினி யென் பசி தணிந்ததென் றிசைத் தான். அர்ச்சுனனையும் கண்ணனையும் நகரத்து ஜனங்கள் மகிழ்ந்து எதிர் அழைத்துச் சென்று போற்றினார்கள்.

ஆதிபர்வம் முற்றியது.

சபாபர்வம்

இராஜசூயயாகச் சருக்கம்

“ பாண்டவர்கள் புரிந்ததவப் பயனாகி
யவதரித்துப் பகைத்து மேன்மேல்
மூண்டவினை முழுவதுவும் முளைதோறும்
முரண்முருக்கி முகில் புகாமல்
காண்டவமுங் கனல்வயிற்றுக் கனல்தணிய
கருவித்துக் காக்கு மாறே
பூண்டருளெம் பெருமானைப் போற்றுவா
ரெழுபிறப்பு மாற்றுவாரே.”

மாமணி மண்டப மியற்றல்

காண்டவ வனத்தை யக்கினிக்கு இரையாக்கி ஏழு மேகங்களின் வன்மையையும் தடுத்து இந்திரன் தன் தோல்வி கண்ட கண்ணனும் அர்ச்சுனனும் சென்று இந்திரப் பிரத் தத்தை சேர்ந்து யாவரும் போற்ற மகிழ்ச்சியுடன் வாழ்ந் திருந்தார். அப்போது அவர்களால் காப்பாற்றப்பெற்ற மய னென்னும் தச்சன், இவர்களிடம் வந்து வணங்கி ஒரு விண்ணப்பம் செய்துகொண்டான். உங்களால் நான் உயிர்பிழைத்தேன் ; அதற்குக் கைம்மாறாக ஒன்றியற்ற வெண்ணுகின்றேன். நீங்கள் கைம்மாறு வேண்டாத மனப் பான்மை உடையவர்களாயினும், நன்றி மறவாத நிலை யுடன் நானிருந்து வளர்தற்காக நான் புரியும் புன்செயலையும் நன் செயலாக் கொள்ளவேண்டுகின்றேன். நீங்கள் குரு குலம்போல் எக்குலமும் காக்கின்றீர்கள். பகைவர் மாளும் படியாக உலகாளும் செங்கோன்மையை யுடைய குருபதிக் குச் செழுமையானதொரு, மாமணிமண்டப மியற்றித் தா விரும்புகின்றேன். அதனை யெத்திசையிற் சிற்பிகளும்

அம்மா வென்று அதிசயிக்குமாறு அமைக்கின்றேன். அதற்கு வேண்டும் உபகரணங்கள், இருக்குமிடம் சொல்லுகின்றேன். வருவித்தல் வேண்டும். மேல் நாளில் இவ்வுலகாண்ட விட பருவன் என்னும் அசுர குல வேந்தர் வேந்தன், தரிய லரைக் கொன்று திறை கொணர்ந்த நக்ஷத்திர மணி வரிசைகள் போன்று ஒளி வீசும் பல மணிகள் விந்து வெனும் பொய்கையி லிருக்கின்றன. அவை யென்றும் கெடாத மணிகள். அவைகளே இதற்கு உபகரணங்களாகும். அவற்றைக் கொணருமாறு ஆணையிட வேண்டுகின்றேன்'' என்று சொன்னான்.

உடனே, கண்ணனும் அர்ச்சுனனும் கருதியபடியே தருமராஜ னேவ ஒரு நொடியிற் பல சேனையாட்கள் சென்று கொணர்ந்து சேர்த்தார். மயனும், மேன்மேலும் பல அடுக்குகள் அமைத்துப் பசும் பொன்னாற் சுவர் செய்து மரகதத் தூண்களால் வீதிகளமைத்துச் சுருங்காமல் பவளத்தால் உத்திரஞ் சமைத்து நல்ல நாளில் மண்டப மியற்றிச் சுதர்மை யெனும் இந்திரன் சபை மண்டபத்தினும் மேலாகச் சமைத் தமைத்தான். மனத்தினாலும் சாஸ்திர முறையாலும் தனது தோளாற்றலாலும் தன் துணைவரோடும் ஆலோசித்துத் தெரிந்து தனது எண்ணத்துக் கேற்ப, பல ஆண்டுகளினுஞ் செய்தற்கரிய அச்செழு மணி மண்டபத்தைப் பதினான்கு திங்களிற் செய்தமைத்தான்; மற்றும் தனத்தால் மிஞ்சிய தம்பியர்களாகிய வீமனுக்கும் அர்ச்சுனற்கும் தனது சொந்தப் பரிசுகளாகத் தண்ட மொன்றும் தேவ தத்தமென்னும் சங்க மொன்றும் கொடுத்தான். அந்த மண்டபத்தில், நல்ல ஹோரை நாளில், அத்தபதி வேண்டியபடியே தனது தம்பிமாரொடும் கண்ண பிரானுடனும் தருமராஜன் போய்ப் புகுந்தான்.

ராஜ சூய யாகத் திருப்பணி யோசனை.

ஆங்குத் தம்பியர்கள் நால்வருடனும் தண்டுழாய் மாலைக் கண்ணபிரானுடனும் மற்றை மன்னர் முனிவருடனும் அமைந்திருந்தபோது, நாரத முனிவர் தோன்றினர். யாவரும் எழுந்து மலர் தூவி யுபசரித்து வணங்கி மகிழ்ச்சியுற "தாங்கள் இங்கு இவ்வெளிமையில் வந்து தரிசனம் தந்திட வெத்தவம் செய்தேனோ" என்று சொல்லிச் சந்தோஷித்தான் தருமராஜன். தம்பிகளும் தனித் தனியே முனிவர்க்கு உபசாரம் பேசினர்கள். நாரதர், அவர்கட்கு மிக்க ஆசிகள் கூறி, மீண்டும் உபசார வார்த்தைகளால் அவர் மனங் களிப்பித்து, "இம்மாட கூடம் அளகையினும் அழகமைந்து உயர்ந்திருக்கின்றது" எனச் சொல்லி மகிழ்ச்சி கூர்ந்தார். யாவரும் வணங்கி யேற்றூர்கள்; அப்போது நாரத முனிவர், "அப்பா! தருமராஜ!! 'புத்திரர்கள் செழித்திடு நாட்களில், மண்ணுளோரும் விண்ணுளோரும் வியக்கும்படி ராஜ சூய யாகம் செய்திடுமாறு தூண்ட வேண்டு' மென உன் பிதா பாண்டு என்னிடம் சொல்லி யிருந்தார்; அதனைத் தெரிவிக்கத்தான் இங்கு வந்தேன்" என்று சொல்லி யவரிடம் விடை பெற்றுத் தமது மற்றை வேலைகளையும் கருதித் தவமுனிவர் ஏகி விட்டார். தந்தையர் விருப்பத்தை முடித்திடல் வேண்டுவது தனயர்கள் கடனுகு மென்னும் தரும வேந்தரைப் பார்த்துத் தார்விஜயன் இது கூறுகின்றுன். நாமேதமியற்றுதற்காக மன்னர்களை முற்றும் வருவித்து, அவரைப் பந்தனத்தில் வைத்திருக்கின்றுன் மகதபதியாகிய ஜாராசந்தன். அவ்வரசர்களும் அவனுடன் போருக் காற்றூராகியவன் நகரில் சிறையிலிருக்கின்றூர்கள். அந்த ஜாராசந்தனை வெல்லுதற்கு வாயு புத்திரனுகிய அண்ணன் பீமசேனனைத் தவிர யாருமில்லை; அதனை யிப்போதே முடித்திடல் வேண்டுகின்றேன். அம்

மன்னவனை வலியடக்கி மற்றை மன்னவரை விடுவித்தாலன்றி, மன்னவர் போற்றும் ராஜ சூயம் நம்மாற் செய்யப் பெற்றதாக மதித்தல் கூடாது'' என்று கூறி முடித்தான். யாவரும் கண்ண பிரானும் கேட்டார்கள். அனைவரும் அதுவே யாமென்றார். உடனே கண்ணபிரானும் பீமார்ச்சுனர்களும் மகத தேசத்தைக் குறித்துப் புறப்பட்டார்கள்! மூவருமாக நெடுங் கானத்தை யிரண்டு நாட்களிற் கடிதிற் கடந்துபோய்க் கிரிவிரஜமென்னும் மகத தேசத்தின் ராஜதானி நகரத்தை யடைந்தார்கள். மூவரும் மூன்று முனிவர்போல் வேடங்கொண்டு, மகதேசன் அரண்மனைக்குட் சென்று வாயிலையும் கடந்து தமது வரவை மன்னனுக்குச் சொல்லும்படி காவலர்க்குத் தெரிவித்தார்கள்.

ஜராசந்தன் போர்

“தங்களைக் காணும்பொருட்டு வாயிலில் முனிவர் மூவர் வந்திருக்கிறார்க''ளென்று காவலர்கள் தெரிவித்திட, மன்னன் ஜராசந்தன் அவர்களை எதிர்கொண்டழைத்து நல்வரவேற்றுப் பொன்னாசனத் திருத்தினான். மன்னன் விதிப்படி நமஸ்கரிக்க, அவர்கள் மூவரும் வந்த வடிவத்துக் கொப்பாக அவனுக்கு ஆசியும் கூறினார்கள். அம்மூவரது தடந்தோள்களிலும் மன்னர்க்குரிய காட்சியும் விற்குறியு மிருந்திடக் கண்டு ஜராசந்தன், “நீங்கள் முனிவரல்லீர்! நீங்கள் யார்? எதற்காக வந்துள்ளீர்கள்?'' என்று வினவலும், கண்ண பிரான் அவனைப் பார்த்து, “நான் விது குலத்து யாதவன்; இவரோ குருகுலத் தலைவனுக் கிளையோர்; ஒருவன் காற்றின் மைந்தன்; மற்றொருவன் இந்திரன் குமாரன்; நாங்கள் மூவரும் இந்நகர் பார்த்தலில் ஆசைப்பட்டு இவண் வந்தோம்; உன்னோடு அமர் குறித்தும் வந்துளோம்'' என்று

உண்மையைக் கண்ணபிரான் உரைத் தருளினர். தோள் வலியால் எட்டுத் திக்குகளையும் வென்று ஜயக்கொடி நாட்டிய அஞ்சாநெஞ்சு படைத்த ஜராஸந்தன், பெருநகை புரிந்து, "என் தோள் தினவெடுத்திருக்கின்றது. நல்லவேளையாக வந்து சேர்ந்தீர்களே ; உம்மிஷ்டப்படி போர்செய்வோம் ; ஆயின், என் வலிக் குடைந்து பதினெண் முறையும் முதுகிட்டு ஓடி யொளிந்த உன்னேடும் பொருத உவந்திலேன் ; இந்த விஜயன் மிக்க சிறுவன் ; ஆதலினல், பீமன் என்னேடும் போர் செயற் குரியான் ; அங்ஙனம் செயற்குரியனயின், அவனை யொரு நொடிப்போதில் விண்ணேற்றிடுவேன்" என மறுமொழி தந்தான். ஆமென வீமனும் எழுந்து தோள்தட்டி நின்றான். உடனே, மகத மன்னன், மந்திரியரையும் சுற்றத்தவரையும் அழைத்துத் தனயனுக்கு அவரெதிரே முடிசூட்டி யாசியல் நல்கிப் பீமனேடும் போர் செய்யப் புகுந்தான். இருவரும் இரண்டு மதயானைகள் போல் மோதி மிதித்துப் பற்றி யிழுத்து வாரியெறிந்து எழுந்து தாக்கினர்கள். உலகமெல்லாம் நடுக்கங்கொண்டது. நீண்டகாலம் பொருதபோது இரண்டு வீரரும் தனித்தனியே தளர்ந்தார்கள். வீழ்ந்தார்கள். எழுந்தார்கள். முடிவில் ஜராசந்தன் வலியற்றுக் கீழே வீழ்ந்து உருமினன். உடனே பீமன், அவன்மீதேறி யமர்ந்து மார்புறக் குத்தி இரண்டு கைகளாலும் அவன் உடலைத் தூக்கிக் கீழ் மோதிப் பின்னர், இரண்டு கால்களையும் இரண்டு கைகளாற்பற்றி, இரண்டு கூறுகளாக்கிக் கிழித்து நேர் போட்டான். பாவி தொலைந்தனன் என்று துணிவு கொள்ளும்போது, பிளவுபட்டஇரண்டு கூறுகளும் ஒன்றெனச் சேர்ந்தன. மறுபடியும் கிழித்தெறியப் பின்னரும் கூடின. இப்படிப் பன்முறையானபோது, கண்ணன் கைச்செய்கையால், இரண்டாகக் கூறுபடுத்தி நேரே

கூறுகளைக் கிடத்தாமல், மாறிப்போடுமாறு குறிப்பினால் உணர்த்தினர். அங்ஙனம் செய்திட அழிந்தனன் மகத மன்னன் ஜராஸந்தன். கண்டவர் கேட்டவர் யாவரும் வீமனைப் புகழ்ந்து வியந்தார்கள்.

ஜராஸந்தன் வரலாறு.

கண்ணனை நோக்கி வில் விஜயன் "இன்றைப்போரில் ஜராஸந்தன் இறந்தும் கூறுகள் கூடியதும், அவன் வரலாறும் எமக்குத் தெரிய உணர்த்த வேண்டு"மென்று சொல்லப், பரந்தாமன், "இந்த மகத குலத்தில் பிருகத்ரதன் என்னும் மன்னனிருந்தான். அவன் மகவிலாதயரு நாளில், சண்ட கௌசிகப் பேருடைய தவத்தினரை வணங்கி வேண்ட, அம் முனிவர் ஓர் கனி கொடுத்து 'இதனைப் பெண்டிர் உண்டால், மகவு தோன்றும்' எனச் சொல்லிப் போனர்; மன்னன் அக்கனியைத் தனது மனைவியர் இருவர்க்குமாகக் கொடுத்தான். அக்கனியை இரண்டாகப் பகிர்ந்து இரண்டு மனைவியர்களும் உண்டார்கள். கனியின் பயனக இருவரும் கர்ப்பம் தரித்தார்கள்; ஆயினும், அந்த ஒரு கனிக்கு ஒரு புத்திரனைத் தான் முனிவர் அளித்துச் சென்றார்; ஆகையினால், அக்கனியிரண்டு கூருகி இரண்டு வயிறுகளிற் சென்றபடியே, இருவர் கர்ப்பத்திலும் இரண்டு கூருகவே வளர்ந்தது; எனினும் பிரஸவ காலத்தில், ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு கூறினைத்தான் பெற்றார்கள்; இந்த அதிசயப் பிறப்பினால், தனக்குப் பயனில்லை என்பது மன்றி இந்தப் பிறப்பால் உலகத்துக்கு உத்பாதமும் விளையுமென்று கருதித்தெருவிடையெறிந்திடச் செய்தான். அசுரரில் ஒருவனே, இவ்விரண்டு கூருகப் பிறந்தவன்; எறியப்பட்ட இரண்டு கூறுகளையும் பசியால் வருந்திய அரக்கி ஜரை யென்பாள், எடுத்துச் சேர்த்தபோது,

அவை யொன்றாகிக் குழந்தையாகிவிடவே, அவள் அரசனை யழைத்துக் குழந்தையைக் கொடுத்து, 'இதற்கு ஜாராஸந்தன் என்று பெயர் வைத்துக் காப்பாற்றிக்கொள்' என்று ஈந்து போனாள். ஆகையாலின்றும் அந்த இரண்டு கூறுகளும் நேரே சேர்ந்ததால், கூடின; மாறுபட விருந்தால் கூடா" என்று அவன் கதையைக் கண்ணபிரான் சொன்னார். இருவரும் களித்தார்கள். பின்னர், அந்த ஜாராசந்தன் நரமேதம் நடத்தற்கென்று பிடித்துச் சிறையில் அடைத்துவைத்திருந்த எண்ணாயிரம் மன்னர்களையும் விடுவித்தார்கள். அந்த அரசாட்சியை இறந்தவன் மகனுக்கே முடிசூட்டிக் கொடுத்து விட்டுத் தமது பதியை நோக்கிப் பயணமாகி தர்மராஜன் எதிர்கொண்டழைக்கப் பதி சேர்ந்தார்கள்.

நால்வரும் திக்கு விஜயம் செய்து வரல்.

"கருதற்கரிய நிதியனைத்தும் கவர்ந்தோர் காட்டக் கண்டுவந்த
முரசக்கொடியோன் முன்வேத மொழிந்தோன் முதலா முனிவரும்
அரசக்குழாமு மீண்டிய பேரவையிற் கடவு ளாசீன்ற
வரிவிற்குமரன் மாதிரங்கள் வெல்வானேகும் வகையுரைத்தான்."

யாகஞ்செய்தற்கு வேண்டிய பொருள்களை கொணர்ந்திருக்கக் கண்ட தருமராஜன் மிகக் களித்துச் சபையில் வீற்றிருக்கும்போது, வியாஸரும் மற்ற முனிவரும் மன்னவரும் கூடியுள்ளவர் கேட்கத் திக்குகளை வென்று வரவேண்டிய காரியத்தைப்பற்றி வில்விஜயன் பேசலானான். வேதமுறைப்படியே இந்த ராஜசூய யாகத்தைச் செய்ய ஆரம்பித்த நாம், திக்கனைத்துஞ்சென்று அங்குள்ள மண்ணவர் விண்ணவர் முதலிய வேந்தர்களை வென்றுவர வேண்டிய காரியமிருக்கின்றது. அதற்கு இப்போதே புறப்படல் வேண்டும். அதன்பொருட்டுக் கிழக்குத் திசைக்கு எனது மூத்தவராகிய பீமசேனரும் வடக்கு திசைக்கு யானும் மற்ற இரு திக்குகட்கும்

மற்றை யிருவருமாகச் சேனைகளுடன் புறப்பட்டுச் சென்று வென்று வருகிறோம். இதற்குப் பெரியோர்களும் மன்னவர்களும் அநுமதி கொடுத்தருள வேண்டுகின்றோம்'' என்று விண்ணப்பம் செய்துகொண்டான். அவ்வண்ணமே யாக வென யாவரும் மகிழ்ந்து சம்மதித்தார்கள். உடனே, வலிய பெருஞ் சேனைகளுடன் புறப்பட்டுக் குறிப்பின்படியே அவ்வத் திசைகளை நோக்கி நால்வருஞ் சென்றனர். நால்வரையும் நான்கு திசைகட்கும் அனுப்பிவிட்டுக் கண்ணபிரான் துவாரகைக்குப் புறப்பட்டார்.

நான்கு அக்ஷௌஹிணிப் படைகளுடன், பீமன் கிழக்குத் திசையை நோக்கிப் புறப்பட்டுச் சென்று, வங்கதேசம் கலிங்கதேசம், குலிங்கதேசம் முதலிய தேசங்களிலுள்ள மன்னவரை முறுக்கி வெற்றிமாலை சூடினான். வலியுடையோமென்று கர்வித்துத் துணிந்து போர்செய்ய வந்தவர்களைப் போர் முனையில் வென்று, அண்ணன் தருமனுக்கே அவர்களடிமையெனச் செய்தும், போர்க்கு வாராமல், காணிக்கையுடன் அபயம் என்று புகுந்தவர்களை நட்பினராகக் கொண்டும் வெற்றிகொண்டு காணிக்கையாகக் கொள்ளப்பட்டனவும் கவர்ந்துகொள்ளப்பட்டனவுமான நிதிக்குவைகளை மலைபோலும் யானைகளினேற்றிவந்து, இப்புவியில், பாண்டு மைந்தர்க்கு ஈடும் எடுப்பும் எவருமில்லை யென்று எல்லோரும் போற்றிக் கொண்டாடும்படியாகச் சென்ற இடங்களிலெல்லாம் ஜயஸ்தம்பம் நாட்டி நகர் வந்து சேர்ந்தான். வடக்கிற் சென்று பார்த்தன், தான் செல்லும் திசையிலுள்ள மன்னவர்களைப் பணிந்து திறை கொணர்ந்து கொட்டிடும்படி முறுக்கிக் கைலாசமும் இமயமுமாகிய மலைகளினுஞ் சென்று அங்குள்ளார்களை வென்று வெற்றிக் கொடி நாட்டிக்கின்னரர் கந்தருவர் முதலிய விண்ணவர்களும் வலிய

ழிந்து திறை கொணர்ந்து கொடுக்கப் பெற்றனன். விந்தியம் ஏமகூடம், நிடதமலை, கந்தமாதனம், நீலசைலம் என்று புகழ்ந்து போற்றப்படும் கிரிக்குலங்களிலும் போய் அங்கு வாழ்வோரையும் முறியடித்துத்தனம் திரட்டி மேருமலைக்கு அப்புறத்தும் நணுகினன். அந்தத்திசைக் கண் அரசாக இருந்த உத்தர குருக்களின் மேன்மையை யடக்கியே "எத்திசைக்கும் இவனன்றி வீரரிலர்" என்னுமாறு இசை சூடியே அங்கங்கு ஜயஸ்தம்பங்களை நாட்டிக் குவிந்த நிதியுடன் திரும்பித்தன்னகர் மேவினன். யானைகளும் இரதங்களும் குதிரைகளும் உயர்ந்த மணிக்குவைகளும் பசும் பொன் மலைகளும் கோடிக்கணக்கிற் கவர்ந்து கொண்டு வந்து சேர்த்தனன்.

மேலைத்திக்கிற் சென்ற நகுல மன்னனும், வடக்கே சென்று வெற்றித்தனத்துடன் வந்த அந்த வீரனினும் இவன் சிறந்துளானென்று போற்றும்படி, அடாத மன்னரைப்போர் வென்று பணியும் படிச் செய்து அவர் பொருள்களைக் கவர்ந்தும், அடுத்த மன்னவர்களை நட்பினராக்கியவர்கள் அளித்த திறைப்பணங்களைப் பெற்றும், இங்ஙனம், மாளவம் கர்ப்பரம் திரிகர்த்தம் முதலிய அத்திசைத் தேசங்களைத் தன் மூத்த தமையனு ராட்சிக்குட் படுத்தி வெற்றி மாலை சூடி ஜயஸ்தம்பங்களும் நாட்டினன். அத்திசைக்கணுள்ள துவாரகைக்கும் சென்று கண்ணனைத் தொழுது அவராற் புகழப் பெற்றுத் திரவியக் குவைகளுடன் இந்திரப்பிரத்தத்துக்குத் திரும்பி வந்து தருமராசனை வணங்கினன்.

தென் திசைக்குச் சென்ற சகாதேவன், நால்வகைப் படையுடன் போய், இரண்டு கடல் கட்கும் இடையான தேசங்கள் அனைத்தையும் வென்று அத் திசைமன்னவர் அளந்த திறை நிதிகளைப் பெற்றுப் போம்போது, நீலனென்னும்

ஓராசன் எதிர்த்துப் போருக்கு நின்ருன். இருவரும் போர் முனையில் நின்றபோது, அந் நீலமன்னவன் படைகளழிந்து ஆயுதங்கள் சிதறித்தான் மட்டிலும் தனித்து நின்றிட்டதன் மையைக் கண்டு பயந்து, ஒரு வேதியன் உருக் கொண்டு, சகாதேவன் முன்னர் வந்து நின்ருன். வந்த முனிவரைக் கண்ட மன்னவன் அந் நீலமன்னன், நீலமாநி நவநிதியங்க ளும் கொடுத்து வணங்கினுன். பின்னர், அவ்வழியேசென்று,

"சென்னிநாடு குட கொங்குநாடு திறை
கொண்டு தென்னனுறை செந்தமிழ்க்
கன்னிநா டுறவுடன் புகுந்து மணிநித்திலக்
குவைகள் கைக்கொளா
மன்னிநாடு கடல் கொண்ட கைம்முனிவன்
வைகுமாமலயம் நண்ணினுன்
மின்னிநா டுறவிளங்கு வெஞ்சமர
வீரவாகை பெறுவேலினுன்."

சோழ நாடு குட நாடு கன்னி நாடு முதலிய நாடுகள் சென்று திறை பெற்றும் பொதியமுஞ் சென்று வணங்கியத்திக்கினில் வீரக்கொடி நாட்டி நிதிக்குவைகளைப் பெற்றுத் தன்னுடன் வந்த கடோற்கசனைத் தென்னிலங்கைக்குஞ் சென்று சமர் செய்து வாவென்றனுப்பினுன். அவன் அங்குச் சென்று போர் முரசம் முழங்கவே, மன்னனுகிய விபீஷணன், "நீ யாரப்பா! எங்கே வந்தாய்!! என் போருக்கு நிற்கிருய்?" என்று சமாதானத்துடன் கேட்டார். "நான் பாண்டுவின் பேரன்; இடிம்பனது மருமகன். என்பெயர் கடோற்கசன். குருகுல மன்னராகிய எனது பெரியப்பன் தர்மராஜன் அஸ சற்குரிய ராஜசூய யாகம் செய்கிருர். அதன் பொருட்டு நான்கு திசைகட்கும் நான்கு தம்பியர்களையும் வெற்றியும்

செல்வமும் பெற்று வரும்படி யனுப்பினர். இந்தத் தென் திசைக்கு அவருடைய மிக்க இளைய தம்பியும் எனது சிற் றப்பனுமாகிய சகாதேவ மன்னன் வந்திருக்கிறார். அவருக் குத் துணையாக வந்துளேன் நான்'' என்று சொன்னான். உடனே விபீஷணர் மகிழ்ந்து நட்புக் கொண்டு நிதிக்குவை கள் கொடுத்து உபசரித்தனுப்பினர். உடன் கொண்டு திரும்பி இளையதாதையை வணங்கிப் பின் யாவருமாகத்தமது பதி சேர்ந்தனர். தருமராஜன் மகிழ்ந்து, மறையவர் முனிவர் மற்றும் மந்திரியர் யாரையும் மழைத்து, யாகத்துக்கு வேண் டுவன செய்யச் சொன்னர்.

இராஜ சூய யாகம்.

வியாஸமா முனிவர்க்கும் பிறர்க்கும், மற்றை மன்னவர் க்கும் ஓலை விடுக்குமாறு செய்தனர். முன்னர் நாரதமா முனி வரையே யனுப்பிக் கண்ணபிரானை யழைத்து வரும்படிச் செய்தார்கள். உலூகமாமுனிவரைத் தூதாகப் போக்கி வியாஸ பகவான் முதலிய முனிவர்களை யழைத்து வரச் செய் தார். மன்னவர்க்குத் தூதர்களிடம் ஓலை கொடுத்தனுப்பினர். விதிப்படி யாவரும் வந்து சேர்ந்தார்கள். மன்னவர்களும் முனிவர்களும், மயனமைத்த மண்டபத்தைக் கண்டு வியந்து போற்றினர். முனிவர்களது ஆசீர்வசனங்களையும் மன்னவர் திறைப் பொருள்களையும் பெற்று ஐவரும் மகிழ்ந்திருந்த போது, கண்ணபிரானது வரவினை யுணர்ந்து, நரபதி தானும் மற்றை நால்வருஞ் சென்று நீலமேனி வண் ணனை யுவகையுட னெதிர்கொண்டழைத்தார்கள். கூடவந்த பலராமனையும் நாரதமாமுனிவரையும் முறைப்படி பூஜை செய்து வரவேற்றார்கள். திக்குகள் எட்டையும் வென்ற

தம்பிகள் இரு பக்கங்களிலுமிருப்ப, தர்மன் தேர்மீதும் கண்ணன் யானைமீதுமாக இடையிற் போகப் பவனியாகத் திருவீதி வலம்வந்தார்கள். கண்ணபிரானுக்கும் குருகுலப் பேரண்ணலுக்கும் தெருக்களில் ஆடவர்களும் பெண்டிர்களும் நன்கு உபசாரங்கள் செய்து பல்லாண்டு பாடிப் போற்றினர்கள். வேதகோஷங்களோடும் வாத்திய கோஷங்களோடும் திருவீதி பவனிசென்று ஐவருடனும் முனிவருடனும் கண்ணபிரான், குந்தி வாழ்கோயில் புகுந்தார்.

குருகுலம் வாழும்படியாக ஐவரையும் பெற்றளித்த பெருந் தவமுடைய மாதும், ஐவரிடமும் ஐந்து புத்திரர்களைப் பெற்றுக் குலம் பெருகுமாறு செய்துப் பாரதம் முடிக்க வந்த அக்கினியிற் பிறந்தவளாகிய திரௌபதியும் மற்றும் சுபத்திரை முதலிய பெண்களும் கண்ணனைப் பூசித்து உபசரித்தார்கள். பின்னர், அரச னவைக் களத்துக்குப் போய்க் கண்ணபிரானைச் சிங்காஸனத் திருத்தி உரிய சிறப்புகளெல்லாம் செய்தனர்; வந்திருந்தவர் யாவர்க்கும் பீமன் முதலிய நால்வரும் எண் திக்குகளிலும் சென்று வென்று கொணர்ந்த பொன் பொருள் மணி முதலிய அற்புத வஸ்துக்களைக் காட்டினர்கள். மகதேசன் மகனும், மற்றும் அந்த எண்ணயிரம் மன்னர்களும் துரியோதனனும் மற்றைப் பூருவின் குலத்துளாரும் வந்து சேர்ந்தார்கள். இந்திரப் பிரத்தத்துக்கும் இந்திரபுரத்துக்கும் வித்யாஸமில்லை யென்னும்படி முனிவர்கள் கூட்டங்களும் பொன்னும் பொருள்களும் ஒளியும் ஒலியும் நிறைந்து விளங்கியது. எங்கும் வாத்திய கோஷங்கள் மிகுந்தன. அந்தணராகியுள்ளோர் யாகவேதிகையினிடம் போய்ச் சேர்ந்தார்கள். அந்த யாகமண்டபமானது கடவுளர்க் கமைத்த யாக தலமாக நன்கு விளங்

கிற்று. மெய்ஞ்ஞானிகளும் யோகியரும் அருந்தவ முனிவரும் நெருங்கிப் பிரமனது உலகம் போலவுமிருந்தது.

வியாஸ பகவான், மேதினி பதிகளாகிய பாண்டு மைந்தரை யொரு புடைத்தனியே அழைத்து ஒரு வார்த்தை சொல்லலுற்றார். "ஐந்து இந்திரர்களாகிய நீங்கள் ஐவீரும், சங்கர பகவானுடைய ஏவலால், அக்கினியிற் றோன்றிய கன்னியை மணஞ் செய்து கொண்டீர்கள்; அவளுக்கு ஓராண்டுக்கு ஒருவர் நாயகராக இருந்து குலவினீர்கள். எனினும், அப்பெண் தற்போது, யாகத்துணையாகத் தரும புத்திரற்கே உரியவளாக இருந்து, தர்ம புத்திரரை யாக காரியத்துக்கு அநுமதி கொடுக்கும் உத்தம பத்தினியாக இருக்கின்றாள். ஆதலின், மற்றை நால்வரும், இன்றை நாள் முதல் தருமனைத் தந்தையாகவும் திரௌபதியைத் தாயாகவும் கொண்டு, குந்தியும் பாண்டுவுமாம் எனப் போற்றல் வேண்டும்" என்று அவர்கட்கு அநுமதி கொடுத்து விட்டு, அவ்விருவர்க்கும் மங்களக் கோலஞ் செய்யச் சொன்னார். உடனே மின்னனார் பலர் வந்து திரௌபதியை யலங்கரித்தார்கள். தர்மராஜனும் உரியதாகிய அலங்காரங்களைச் செய்து கொண்டனர்.

தருமராஜன், இனியாகம் செய்ய யாக மண்டபத்துக்குப் போக வேண்டியிருத்தலால், வந்துள்ள யாவர்க்கும் மனம் கோணாதவாறு உபசாரஞ் செய்தற்பொருட்டுத் தம்பியர் நால்வரையும் வேண்டிக் கொண்டு, கண்ணபிரானையும் பீஷ்மரையும் திருதராட்டிரனையும் விதுரரையும் வணங்கி யாசிகள் பெற்றுப்போய் யாக வேதிகைக்கு நேராகத் தனது பக்கத்தில் திரௌபதி வர, வேதவாணர் யாவர்க்கும் வணக்கஞ் செய்து வீற்றிருந்து யாகம் செய்ய ஆரம்பித்தார்.

வியாஸர் முதலிய பெரியோர் சடங்குமுறை காட்ட அவர் சொற்படியே வேதிகையின் நாற்புறங்களிலு முள்ள புற்களை யும் தொட்டுக் காவல் மந்திரமுஞ் சொல்லி, மூன்று தீக்களை யும் தேவர் முகங்களாகக் கொண்டு, சுருவையால் நெய்முக ந்து ஓமம் செய்தார். அங்ஙனம், யாதொரு லோபமுமில்லா மல் மந்திர தந்திரங்களைப் பூரணமாகச் சொல்லியும் செய்தும் ஏழு நாட்கள் வரை யோமம் செய்தார்.

ஏழு நாட்களிலும், நான் மறையுறைத்த அம்முறையால் வழங்கிய ஆகுதிகளால் இமையவரானோர்க் கெல்லாம் அவி யுணவு அருளி, யக்கினி பகவானை மும்முறை வலம் வந்து முடியுற வணங்கித் திறைப்பொருள்களாக அரசர் கொணர் ந்து கொடுத்த பொருள்களனைத்தும் வாரித் தானத்திலும் தியாகத்திலும் செலவு செய்தார். ஏழு நாட்களும் அந் நகரி லடங்கியிருந்த பல்வகைக்கூட்டங்களால், அந்நகர் விஷ்ணுவின் உதரமோ வென்னும்படி எப் பொருள்களையும் அடக்கியிருந் தது. எவ்வுலகத்துத் தேவரும் முனிவரும் காட்சிக் கொடுத்த தன்மையினல், இமயத்தில் பிரமன் செய்த யாகசாலை போல வேவிளங்கியிருந்தது. பின்னர் நீராடிவந்தார். நாரதன் முத லோர் வாழி பாடினர்; புலவோர் மங்களம் பாடினர்.

முனிவர்க் கெல்லாம் ஷோட சோபசாரம் செய்து பின் னர்க், கண்ணபிரானை மனனுற வணங்கிக் கங்கைமைந்தனு கிய பீஷ்மரைப் பார்த்துத் தரும பூபதி ஒரு வார்த்தை சொன்னர். "பிதாமகப் பெரியோரே! சூரியன் சந்திரன் அக்கினி குலங்கள் முதலிய பல்வகைக் குலத்திலு முற்ப வித்த அரசர் தமக்குள், யாவர்முன் பூசை பெறுதற்குத் தக்கவர்? இதனை நன்கு கலந் தாலோசித்துச் சொல்ல வேண்டுகின்றேன்" என்று வணங்கிக் கேட்டார். கங்கை

மைந்தன் தருமனையும் மற்றை மன்னரையும் வியாஸர் முத லிய முனிவரையும் நோக்கி, "இவ்விஷயம் மன்னவரே! மறையவரே!! பெரியோர்களே!!! மிகவும் ஆலோசித்துச் செய்யவேண்டிய தொன்ருகலின், மன்னவர் குலத்துதித்த மணிமுடி வேந்தர் யாரையும் அவர் தம் குலத்துப் பெருமை யையும் நன்குணர்ந்த வியாஸர்போன்ற தவத்திலும் ஞானத் திலும் உயர்ந்த பெரியோர்களே நிச்சயித்துச் சொல்லவேண் டியதாகலின், அப்பெரியார்களே இதற்கு ஒரு விதாயம் சொல்லி, "அக்ரபூஜைக்குரியார் யாரெனச் சொல்ல வேண்டு கின்றேன்" என்று மிக விநயத்துடன் சொன்னர்.


சிசுபாலன் வதம்

அப்போது வியாஸபகவான், தருமராஜரைப் பார்த்து, "அரசே! மேகத்தைப்போல் மேனியும் குளிர்ச்சியும் கருணை யும் ஸமபாவனையும் கடமையும் உடைய கண்ணபிரானே, மன்னவர்க்குள் அக்ரபூஜைக்கு உரியவராவார்; ஆதலால், அவருக்கே நீ செய்திடலாம்" என்று சொன்னர். ஸபையி லிருந்த யாவரும் மாமுனிவர் சொன்னதே யொத்ததாகும் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆயின், சிசுபாலன் என்னும் சேதி மன்னன் மாத்திரம் மனம் வெந்து உடல் கருகிக் கண் சிவந்து எழுந்து சொன்னன்:—

"பூபாலரவை யகத்துமுற் பூசைபெறுவார் புறங்கானில்வாழ்
கோபாலரோ வென்றுருத்தங் கதிர்த்துக் கொதித்தோதினன்
காபாலி முனியாதவெங் காமணிகரான கவினெய்தியேழ்
தீபாலடங்காத புயவீர கயமன்ன சிசுபாலனே."

"சூரன் குலத்தோர் குபேரன் குலத்தோர் சுடர்ப்பாவகப்
பேரன் குலத்தோர்கள் முதலோரிருந்தார்கள் பெயர்பெற்றபேர்
வீரங்கொலோ வாகுசாரங்கொலோ செல்வமிச்சங்கொலோ
பூரம்புராகி புவிக்கென்று முதுவோர்கள் போதுவோர் கொலோ"

"வெகு நன்றாயிருக்கிறது. சூரிய சந்திர அக்கினிகளின் வம்சத்தில் வந்த அரசர்கள் பலர் சூழ்ந்திருக்கும் இச்சபை தன்னிலே எத்தனை பெரியார்கள் அவ்வக் குலத்திலுயர்ந்தவர்களாகி விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் விட்டு ஓர் இடையனை அக்ர பூஜைக்குரியா ரென்று நன்றாகப் பகர்ந்தீர்! பூமிக்குள் பெருமையும் பழமையுமுடையவர்கள் பொதுவர்களாகிய இடையர்கள்தாம் போலும்! அன்றிப் பூபாலர் சபையிற் கோபாலருக்குத்தான் அக்ர பூஜையளித்தல் வேண்டும் என்று நமது பெரியோர் மனு விதித்திருக்கின்றாரோ? அக்ரபூஜைக்குரியான், பரமசிவன் நெற்றிக்கண்படாத மன்மதன் போன்றுள்ள வனுகி யாவராலும் வெல்லப்படாத சிசுபாலன் இதோ இருக்கின்றேன். இவற்றைக் கவனிக்காமல், பராசர முனிவன் மகன் சொன்னது வெகு அழகாயிருக்கின்றது. பிறந்த நாட்டொடங்கி, மாறு வேடங்களும் வஞ்சனையும் களவும் பெண்களின் மயக்குமாகிய பற்பல மாயங்கள் செய்து, அரசருக்குரிய ஆண்மை, வீரம் ஓர்ப்பு, நிறை, கடைப் பிடிப்பு என்று மிவற்றி லொன்றினும் சிறிதெனுமமையாத ஓரிடையனை யக்ர பூஜைக்குரிய னென்று இவர் எங்ஙனம் மொழிந்தார்? நீங்கள் எப்படிக் கேட்டிருந்தீர்கள்? அவன் பிறந்த பிறப்பிற் பெருமையா? ஒருத்திக்கு மகனாகப் பிறந்து ஒருத்தி வீட்டிற் பிள்ளையாக வளர்ந்தது பெருமையா? கோபர்களுடன் மாடு மேய்த்தது பெருமையா? கோபிகைகளைக் கட்டிப் புரண்டது பெருமையா? மதுரையை விட்டுத் துவாரகையிலொளிந்துக் கொண்டது பெருமையா? இந்திரனுக்குரியதாக அமைத்த பாலடி சிலைத் தானுண்டது பெருமை யாகுமா? இவற்றில் எது பெருமையான காரிய மென்றெண்ணியவனை யக்ர பூஜைக்குரியவனென்று வியாதர் கவனித்தார்? இவனது தந்தையும் தாயும்



சிறைப் பட்டவர்கள்; இவனே சிறையிற் பிறந்தவன். தான் பிறத்தற்கு முன் அறுவரைக் கொல்லுவித்தான். தன் தமைய னுக்கு இருதாய்களாக்கினன். இவன் செய்யாத இந்திர ஜால மகேந்திர ஜாலங்கள் கிடையா'' என்று இப்படி வசைகளே யாகப் பல சொல்லி யேசினன் சேதிபதி சிசுபால மன்னன்.

சிசுபாலன் ஏசிப் பேசிய ஒன்றினுக்காகிலும் எதிர் மாற் றங் கூறாமல், கண்ணபிரான், அவையை நோக்கி, "மன்னர் களே! வீரர்களே!! இன்று சேதிபதி யுரைத்த வார்த்தைகளைக் கேட்டீர்கள்!!! இதற்கு மறுமாற்றமாக நான் சொல்வதென்ன வெனில், இன்று நடக்கும் போரில், எங்களிருவருடைய பலா பலங்களைச் சபையோர் காண வேண்டுமென்பதே'' என்று சொல்லிப் போர் குறித்துத் தேர் மீதேறி வில்லில் நாண் தெறித்து நின்று கர்ஜித்தார். சேதிபனும், விதிவசத்தை மறுக்க வொண்ணுகிப் போருக் கமைந்து நின்றான். இவரது சேனைவீரர்களும் எதிரெதிர் முட்டினர்கள். இருவரது போரும் தேவாஸுர யுத்தம் போன்றிருந்தது. வேலினலும் வாளின லும் வரி வில்லினலும் பாணங்களினலும் நீண்ட நேரம் போர் செய்தனர்.

''வெஞ்சின முடுக வொருவருக் கொருவர்
வெல்லலுந் தோற்றலு மின்றி
வஞ்சின முரைசெய் துள்ளமுமெய்யும்
வாகு பூதரங்களும் பூரித்
தெஞ்சினர் தமைப்போலிலைப் பின்
இனிவா னேற்றுதல் கடனெனக் கருதி
கஞ்சனை முனிந்தோனிவன் முடித்தலைமேல்
கதிர் மணத்திகிரி யேவினனே"

முடிவில், சிசுபாலனைக் கொல்வது கருதிக் கண்ணபிரான் சக்ராயுதத்தை யவன் மேல் ஏவிவிட்டார். அஃது உடனே

சென்று அவனது சிரத்தைக் கொய்து, எறிகடற் புகுந்து நீராடிக் கண்ணன் திருக்கையில் வந்து பொருந்தியது. சிசுபாலனுடைய முடி யறுபட்டவுடனே, அவ்வுடலினின்றும் ஜோதி யொன்று கிளம்பிக் கண்ணனது திருவடி பணிந்து மேலேறி இரு சுடர்களையும் பிளந்துகொண்டு திக்கெல்லாம் ஒளியுறப் பிரகாசித்துத் திருவடியி லொளித்ததை ஸபையிலிருந்த மன்னவர் மறையோர் யாவருங் கண்டனர். கண்ணனைத் துதித்தார்கள். தருமனைப் புகழ்ந்தார்கள். வசைகள் பொறுக்கலாகுமோ என்றார்கள். பொறுமைக்கும் அளவு இல்லையோ என்றார்கள். இந்தத் துஷ்டன் எந்த அரக்கனது பிறப்போ என்றார்கள். இவனது வரலாறு தெரியவேண்டுமென்று வீடுமன் முதலோர் கேட்க வியாஸமாமுனி சொல்கிறார்.

சிசுபாலன் பிறப்பு வரலாறு

ஐவகை வடிவா யெங்குமாய் நின்ற அச்சுதனது வைகுண்டத் திருவினைக் காணும்பொருட்டுத் துருவாஸ முனிவர் வைகுண்டத்துக் கேகினர். அப்போது அங்குக் காவலாளராயிருந்த ஜயவிஜயர் என்னும் துவாரபாலகர்கள் முனிவரைக் கோபித்துத் தடுத்தார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் அவர்களது அகம்பாவம் அடங்காததைக் கண்ணுற்ற முனிவர், இவர் இம்மானிட வியற்கையைக் காட்டின தன்மையால், மானுடராக வென்று சபித்தார். உடனே, அவர்கள் பயந்து கதறினர்கள். பகவான் எதிர்வந்து, முனிவரை யுபசரித்து, இவர்க்குரிய சாபம் நீங்குமாறு என்னையோ என்று கேட்கப் "பகவானே! இவர்கள் நினக் கன்பராகிய ஏழு பிறப்பிலோ அன்றிப் பகைவராகிய மூன்று பிறப்பிலோ சாபம் நீங்கி யிப்பதமடைக" என்று சொன்னர். பகவான், துவாரபாலரை

நோக்கி "யெம்முறை பற்றுகிறீர்கள் ?" என்று கேட்க அவர்கள் பகைவாகிய முப்பிறப்பில் சாபத்தினையொழிப் போம் என்று வேண்டினர். அதனால், முன்யுகத்தில் ராவண கும்பகர்ணர்களாகவும் இவ்யுகத்தில் இந்தச் சிசுபால தந்தவக்கிரர்களாகவும் பிறந்து, இப்போது நாம் கண்டபடியே சாப மொழிந்து, ஜோதியுகுலமடைந்து, பகவானது திருவடி யிற் கலந்தனர் என்று குறித்தார். யாவரும் பக்தியுடன் கேட் டுக் கண்ணபிரானை மனமார மெய்யாரத் துதித்தார்கள். முடி வில், கண்ணபிரானை யக்ர பூஜைக்குரியவராக யாவருமே மதித்து எல்லோரும் பூஜித்தார்கள். அரசர்கட்கும் முறையே பூஜனைகள் நடந்தேறின. அருமறை முனிவர் ஆசிகள் பல கூறி வாழ்த்தினர். யாகம் நிறைவேறி யாகப் பிரசாதம் யாவ ருக்கும் அளிக்கப் பெற்றது. பாவையர் பல்லாண்டொலியும் பதினெண்வாத்திய வொலியும் வேத முழக் கொலியும் வேதி யர் ஆசிகளொலியும் மிகுந்து எல்லாம் சுபமாகவே முடிந்து மன்னரும் மறையரும் வேண்டிய பரிசுகள் பெற்றுத்தத்தம் நகரிபோயடைந்தார்கள். துரியோதன் யாகசேனன் விரா டன் சல்லியன் முதலியோரும் பாண்டு மைந்தரைவியந்து போற்றிப் போனார்கள். யாவரும் வியக்கப் பாண்டவர் பூமி யை நல் வழிதிருத்தி யாண்டிருந்தார்கள்.

"முன் குலத்தவர்க்கும் முனி குலத்தவர்க்கும்
மும்மதக்கைம் முகக்களிற்று
மன் குலத்தவர்க்கும் வான் குலத்தவர்க்கும்
வரம்பிலா வகைக்கலை தெரியும்
நன் குலத்தவர்க்கும் பொருளெலாம் நல்கி
நாடொறும் புகழ்மிக வளர்வான்
தன் குலக்கதிர்போல் தேய்ந் தொளிகிறந்தான்
தண்ணளித்தருமராசனுமே."

சூது போர்ச் சருக்கம்.

"ஞானமாகிய பரம்பர அமிழ்தமாய் நவிரறு மயக்காகி
வானமாயுடன் வாயுவாய் தேயுவாய் வனமுமாய் மண்ணாகித்
தானமாமறை முறைமையிற் பற்பல சரா சரங்களுமாகி
ஏனமாயிவை யனைத்தையு மருப்பினுலேந்தினு னெனையாண்டோன்"

துரியன் மனம் மாறுதல்.

தருமராஜன் இராஜசூய யாகமியற்றித் தாணியோர்புகழ யார்க்கும் பரிசளித்துயர்ந்த பின்னர், அரவக் கொடியோனு கிய தீமனத் துரியோதனன் செய்த செய்தியைக் குறித் திடுவோம்.

யாகம் முடிந்தவுடன், துரியனுதியர் பாண்டவரிடம் விடை பெற்றுக் கொண்டுத் தந்தைக்குத் தந்தையாகிய பீஷ் மருடனும் மற்றவருடனும் தமது சேனையுடனும் அத்தினு புரிக்கு வந்து சேர்ந்தார்கள். அவரவர் தத்தமது மனை சென்று தத்தம் நியமங்கள் முற்றி வேந்த னவைக் களத்து வந்து சேர்ந்தார்கள். வந்திறைஞ்சிய வேந்தர்க்கும் தம்பி மார்க்கும் தக்க தக்க ஆஸனமளித்துத் துரியோதனன், நினை வினேடிருந்தபோது, பீஷ்மன், மன்னனையும் மற்றவர்களையும் பார்த்து, "பார்த்தீர்களா? தருமமும் அறிவும் கருணையும் பொறுமையும் ஆண்மையும் வீரமும் பெற்றுளார்க்குச் செயற் கரியது ஒன்றுமில்லை யென்பதைத் தருமமே வடிவெடுத்தது போன்றுள்ள தர்மனும் தம்பிமார்களும் செய்து காட்டினுர் கள். இக்காலத்து அரசர்கள் யாவரும் நினைத்தற்குங்கூடாத இராஜ சூய யாகத்தை யழகுறச் சிறக்கச் செய்தார்கள். அத் தகைய மேம்பாடுற்ற வேள்விச் செல்வத்தை வேந்தர்களாக வுள்ளார் யாவர் பெற்றிருக்கின்றுர்கள்? அவனது உயர்ந்த வாழ்க்கையைத்தான் யார் பெற்றிருக்கின்றுர்கள்?'' என்று

மிகப் புகழ்ந் தோதினர். பாட்டன் சொன்ன வார்த்தை களைக் கேட்ட சுயோதனன், மகிழ்ந்து, தானுமதனையே ஆமோதித்துப் புகழ்ந்து போற்றிப் பேசினன். பாட்டன் மனமும் பேரன் மனமும் ஒத்திருந்ததைக் கண்ட சகுனி பொறுமை கொண்டு, "ஆமாம்! சிங்கம் வெளிச்செல் லாமல், மடங்கிக் குகையிலேயே பதுங்கிக் கிடக்குமாயின் மதயானைகள் துள்ளிக் குதித்திடாவோ?" என்று வசையாக வும் இசையாகவும் கூறினன். தீயகுறிப்புகளை யெல்லாம் தீவிரஉணர்ந்து, தீமையே இயற்கையாகித் தீங்கான யோச னையே கருதும், தம்பி துற்சாதனன், எழுந்து தனது முன் னவனைப் பார்த்துச் சொல்வானயினன். "அண்ணு! சந்திரன் இரவினில் தோன்றிப் பிரகாசிக்கு மாயினும், பகலிடை யிரவி முன் நிற்பதாமோ?" என்ற இக்குறிப்பான வார்த்தையை யும் சகுனியுள்ளத்தையும் தனது மானத்தையும் நன்கு கரு திய துர்யோதனன், அவையினைப் பார்த்துப் படபடப்புட னும் பாபரப்புடனும்,

"தமையனுந் தம்பிசொன்ன தன்மையை யுணர்ந்துநீதி
அமைதரு தந்தைகேட்ப அவன்பெருந் தாதைகேட்பக்
கமைபெறு விதுரன்கேட்பக் கார்முகக் கன்னன்கேட்ப
இமையவன் துரோணன்கேட்ப யாவருங்கேட்பச் சொல்வான்."

"இந்திரன் முதலிய தேவர்களும் வேந்தர்களும் சிறப்பும் ஏவ லும் செய்து கொண்டிருக்கவும் மந்திரும் மறையவரும் யாக காரியத்தை முறையிற் செய்யவும் பெருஞ்சேனை சூழும் படியாக இன்று தருமனே யாவர்க்கும் தலைவனாக நிற்கின் ருன். இனியவர்கள் சில நாட்கள் இப்படியே இருப்பாயின், எமது வாழ்வையும் கொள்வார்கள். திக்குகளிற் சென்று விஜயம் பெற்றுத் தம்பிகள் நால்வரும் இணையிலாச் சூர்க

ளென்று புகழும் பெற்று விட்டார்கள். இவர்களது வீரத்தை யழித்து இவர்களையின்றே களைந்திடாவிடின், நமது வாழ்வு ஓங்கி வளராது. முளையிலேயே முள்ளைக் களைந்தெறிய வேண்டு மல்லவா? வெகு சீக்கிரத்தில் முனைந்து நின்று தருமனது வாழ்வையும் செல்வத்தையும் புகழையும் நான்கவர்ந்து அவரை யடக்காமற்போனல், வேறு யார் செய்யப் போகின்றார்கள்? நேர்நின்று போர் செய்தோ அன்றிச் சொல்லொணாத வஞ்சனை செய்தோ, எவ்வகையிலோ அவர்களது சிறப்பழியச் செய்வது என் சிந்தை" யென்றான்.

சதி நினைத்தல்.

தமையன் துரியோதனன் மொழிந்த வார்த்தையைக் கேட்டவுடனே, மிகக்களித்து உற்சாகங் கொண்டு துற்சாதனன் எழுந்து, "அண்ணா! இன்றைக்கே படைகளுடன் எழுந்து போய்ப் பாண்டவர்களைப் போரில் வென்று வருவதே கருமமாகு மென்று எனக்குத் தோன்றுகின்றது; அன்றைக்கு ராஜ சூயயாகத்துக்குத் தாங்கள் சென்றிருந்தபோது, தங்களைப் பார்த்து வீமன் நகைத்ததும் எள்ளி நகையாடினதும் என் மனத்தை விட்டகலவே இல்லை; அன்றியும், அண்ணா! நினைக்க நினைக்க மனம் புண்ணாகின்றது; தங்கள் வரவைக் கண்டதும், அந்த பாஞ்சாலி கொக்கரித்து நகைத்தனளே! என்னசொல்வேன் அவள் இறுமாப்பை! அவள்கண்ணெதிரில், நாம் அந்தப் பஞ்சவரைப் பஞ்சைகளாக்கியவளைச் சிறை பிடித்து, நமது வேலைக்காரிகளைக் கொண்டு அவளைப் பார்த்துச் சிரித்துத் துப்பச் சொன்னாலல்லாமல் என் மனப் புண் ஆறாது. அதிருக்கட்டும், அந்த யாகமண்டபத்துக்கு எத்தனை யாசர்கள் வந்திருந்தார்கள்; அத்தனை பேரில் நம்மையுமொருவராகத் தான் எண்ணினார்களன்றி வேறு ஏதாகிலும்

மதிப்புக்காட்டினார்களா? இத்தனை யரசர்களில் அந்தக் கண்ணன் தானே, அக்ர பூஜைக்குரியனாகத் தருமன் கண்கட்குத் தோன்றினான் போலும். ஒரு கோபாலனுக்குப் பெரிய பூபாலர் கூட்டத்தில் மரியாதை நடத்திவைக்கப் பொறாமல் எத்தனை யரசர்கள் உள்ளூற மாழ்கி நின்றார்கள்; மங்கலத்திற் கலகம் விளைப்பதேனென்று மன்னவர்கள் அடங்கிநிற்க பொறுத்திருக்கமாட்டாமல், எழுந்து துணிவாக நியாயம் பேசிய நம் நண்பன் சிசுபாலனை அமங்கலமாகப் பட்டிறந்தொழியுமாறு போரையும் கிளப்பிவிட்டு வேடிக்கைபார்த்து நின்றார்கள். இந்த யாகம் எதற்காகச் செய்தான் தெரியுமா; தனது புஜபலமும் தம்பியர் போர்த்திறமும் கண்ணன் துணைவலியும் கொண்டு உலக மன்னர்களை வசப்படுத்தியடக்கியாள்வதற்காக வன்றோ தருமன் இந்தச் சூழ்ச்சிசெய்தான். பசுப்போல வேஷம் போட்டுச் செய்த சூழ்ச்சியும் பலித்து விட்டது. சிங்கம் போன்ற நாம் அடங்கி மானமழிந்து வந்தோம். ஆகையால் இழந்த மானத்தை நாம் காப்பாற்றி மீட்கும் பொருட்டு, இன்றே சென்று அவர்களைப் போரில் வென்று மீள்வதே கரும'' மென்றான்.

தம்பியின் வார்த்தையைக் கேட்டுத் துரியோதனன் கண்ணன் வந்து இவருக்குதவா முன்னம் சூழ்ச்சி செய்து வெல்வதே நன்று நன்று என்று சொன்னான்; கன்னன் எழுந்து நின்று, இந்தப் பஞ்சவரை போரில் வெல்ல யோசனையும் வேண்டுமா? சூழ்ச்சியால் அவரைவஞ்சிப்பது அரசர்க் கழகாகுமா? வேண்டாம். நான் வில்லைக் கையிற் கொண்டு போர் முனையில் நின்றால் யார் எதிர் நின்று பொருதவல்லார்? ஆகையால் வஞ்சனையும் வேண்டாம்; சூழ்ச்சியும் வேண்டாம்; இப்போதே போருக்குப் புறப்படுவோம் என்று அட்டகாசம் செய்தான். சகுனி மிகவும் கபடமாகப் புன்

சிரிப்புடன் எழுந்து "வெகு நன்று; நன்று; இந்தக்கன்னனே யன்றி மற்றும் தேவர்களும் கூடி எதிர்த்தபோதும் அர்ச்சுனனை வெல்லுதல் முடியாத காரியம்; இடிம்பனையும் பகாசுரனையும் ஜராசந்தனையும் தனது புயவலியால் வென்று கொன்ற வீமனுடன் போர்க்களத்தில் எதிர்த்து நிற்கவல்லார் யாரிருக்கின்றார்கள்? அன்று திரௌபதியின் ஸ்வயம்வரகாலத்தில், வில்லோடும்தண்டத்தோடும்படையோடும்போயிருந்தோமே; அவர்களுடன் போரும் புரிந்தோமே; வெற்றி யாருக்காயிற்று? இதெல்லாம் வீண்வார்த்தை. இந்தப் பிறப்பேயன்றி, எழேழு பிறப்பெடுத்தாலும் தருமராஜனைப் போரில் வெல்வதற்கு யாரால் முடியும்; ஒரு வார்த்தை சொல்லுகின்றேன்; அவர்களை வெல்ல வேண்டுமாயின், சூதுகொண்டு சதிப்பதே கரும" மென்றான்.

உடனே துற்சாதனன், "ஆமாம்; ஆமாம்; மாமா சொல்வதே சரி; நமது சேனைப் போருக்கு அவர்கள் அஞ்சப்பட்டவர்களல்லர்; மாயப் புன் சூதுகொண்டே யவர்களைப் பஞ்சைகளாக்கி யழித்திடல் வேண்டு" மென்றான். துரியோதனனுக்கு நெஞ்சும் நாவும் குளிர்ந்தன; பெருமகிழ்ச்சி கொண்டு, மாமனைத் தழுவிச் சிம்மாஸனத்திருக்க வைத்து, உபசரித்து, "உமது கைச்சூதால் அவர்களை வெல்லற்குத் தக்கதோர் யோசனை சொல்லல் வேண்டு"மென்றான். சகுனி சொல்வானாயினன்:—

"மன்னநின் செல்வக் கோயில் மண்டப மொன்று தேவர்
பொன்னுல கினுக்குமில்லை யென்பதோர் பொற்பிற்றாகப்
பன்னூற் சிற்பக் குன்றாப் பலதொழில் விளைஞர் தம்மால்
நன்னில விரிவுண்டாக நாளையே யியற்று விப்பாய்."

அரச! நாளையே, நல்ல சிற்பிகளைக்கொண்டு இந்திரலோகத்திலுமிதனைப்போலில்லை யென்னும்படியாக உனது

அரண்மனையில் ஒரு மண்டபமியற்றி, "மண்டபம் காண வரவேண்டுமென்று அவர்களை யழைத்துவந்து, விருந்தமைத் துபசரித்துப் போற்றி விளையாட்டினுக்காகச் சூதாடும்படித் தருமனை யீர்த்து, என்னிடம் விட்டுவிட்டால், பின்னர், அவர்களது அரசும் வாழ்வும் செல்வமும் எல்லாம் நின்னதே யாகும்படிச் செய்கின்றே" னென்று சொன்னான். "இது தான் சரி; இதுதான் சரி" யென்று தம்பியரும் கூறிக் கூத் தாடினர். துரியன் மனங்களித்து உடல் பூரித்திட்டான்.

துரியோதனன் உடனே திருப்பி, விதுரனைப் பார்த்து, "சிற்றப்பா! இப்போது, எனது அரிய மாமன் சொன்ன வற்றையெல்லாம் கேட்டிருந்தீரன்றோ? உம்முடைய அபிப் பிராயமென்ன?" என்று கேட்டான். விதுரனும் சொல்ல லுற்றான். "துரியோதனா! உலகத்தையும் அரசையும் வாழ் வையும் தர்மனுதியரிடமிருந்து கொள்ளவேண்டுவது அவ சியமாயின், அந்த சாதுக்களைப் பொய்யினாற் சூதுசெய்து கொள்ளவேண்டிய அவசியமே யில்லை; முறையுமில்லை; புகழுமில்லை. உனது தகப்பனிடமிருந்து ஒரு ஓலைவாங்கி அவர் கட்கு அனுப்பினால், தந்தையைக் கவுரவிக்கும் கண்ணியம் பொருந்திய மக்களாகையால், 'தந்தை சொன் மிக்க மந்திர மில்லை' யென்று வணங்கி யேற்று உடனே, ராஜ்யமும் வாழ்வும் அரசும் உங்கள் வசம் ஒப்பித்துவிட்டுக் காடு சேர் வார்; இதில் ஐயமே யிராது" என்று சொன்னார்.

"வெகு நன்றாயிருக்கின்றது! இந்த யுக்தி! ஒருவரு டைய செல்வத்தை வாங்கி மற்றொருவர்க்குக் கொடுப்பதா னால், அதனால் என் தந்தைக்குப் புகழும் எங்கட்கு நற்பெய ரும் உண்டென்று நினைக்கின்றீர் போலும். இரு புத்திரர் களில் அவர்க்கு ஒத்த அன்பன்றோ? உமது புத்தியும் யுக்தியும் வயதும் இருந்தபடி யென்னே! உமது சொற்

படிச் செய்தால், உன் தந்தைக்கும் நிந்தை வந்து சேரும்; எங்கட்கும் வெற்றியில்லை; அந்தச் சொத்தையும் மத்யஸ்தர் நியாயப்படி வாதித்து மறுபடியும் அவர்களிடமே சேரும்படிச் செய்வார்; முடிவில் நிந்தைதான் எங்கட்கு மிஞ்சும். நல்ல யுக்தி சொன்னீர். உமக்கு எப்போதும் அவர்களிடம்தான் பிரியம்; எம்மைக் குறைத்துப் பேசுவதும் எமக்குத் தோல்வியும் நிந்தையும் தோன்றும்படியான யுக்தி சொல்வதுமே வழக்கமாயிற்று. உமக்கும் உம்மைச் சேர்ந்தவர்க்கும் தினமும் உணவும் வாழ்வு மிங்கே; பிரியம் மாத்திரம் அங்கே'' என்று சொன்னான். "நீங்களும் அவரும் நேசத்துடனிருத்தல் வேண்டுமென்று நினைத்துச் சொன்னதே யொழிய, ஒருவர்பா லன்பும் ஒருவர்பால் வன்பும் கொண்டு இது புகன்றதில்லை. நீங்கள் ஒன்றுபட்டு வாழ்ந்தால் பாரினில் அரசரெல்லாம் உமக்குள் அடங்கி இந்தச் சந்திர குலப் பெருமை என்றும் குறைந்திடாதிருக்கும். அன்றி எதிர்த்து நின்றீரானால், 'குருகுலத் தலைவர் தங்கட்குள் எதிர்த்துப் போராடுகின்றனர்' என்னும் தாழ்வுரை வந்திடும்? ஆதலால் உறுதியை நான் எடுத்துச்சொன்னேன். ஆகவேண்டிய முறைகளை யினி நீயே தெரிந்து கொள்வாய்; இனி, நான் உனக்கொன்றும் சொல்வதில்லை; தீமையல்லாது வேறொன்றுமுணராத வஞ்ச மனமுடையவர்க்குப் புத்தி கூறல் குற்றமேயாகும்'' என்று கூறி விட்டார். "சரி! போதும் போதும்!! நிறுத்தும்!!! தருமன் நெஞ்சில் தருமமும் நீதியுங் கொண்டு பெரியோ ரேவலைச் செய்வான் என்பதையும், நான் அதற்குமாறாக இருப்பவன் என்பதையும் நீர் அளந்து பார்த்துக்கண்டு விட்டீர்; உம்முடைய அபிப்பிராயத்தை நான் விரும்பிக் கேட்டதே பிழையன்றோ? என்னை மன்னிக்க வேண்டுகிறேன்'' என்று துரியன் துணிவுடன் பட

படத்துக் கூறினன். விதுரன் கோபித்து, "உனது சூழ்ச்சி யும் நீயும் உன் சுற்றத்துடன் வாழ்ந்திடுவாய்; எனக்கும் இந்த ஸபைக்கும் பொருத்தமில்லை" என்று சொல்லி வெகுண்டெழுந்து தனது அரண்மனை போய்ச் சேர்ந்தார். விதுரனேகலும் வஞ்ச மனமுடையார் சிறிதும் திருந்ாதவர் களாகித் தாம் நினைத்த வஞ்சச் செயலே விசாரமாக்கொண்டு, சகுனி குறித்தபடியே அழகிய மண்டபமொன்றை யியற்று வான் ஏவி விட்டார்.

புதிய மண்டபம் காணல்.

உடனே, துரியோதனனுடைய ஏவலால், மன்னர் சென்று அவர்களது தொல்குல மூதாதையர் இருந்து வாழ்ந் தமையைக் குறித்தற்குப் பேரடையாளமாக இருந்த பழைய பெரிய அரண்மனைகளிலிருந்துள்ள பொன்களை யெல்லாம் வாரிவந்து இப்புதிய மண்டபத்துக்குப் பெருஞ் சுவர் எழுப்பி விட்டார். சிற்ப நூலில் தேர்ச்சியடைந்த தபதிகள் பலர் வந்து, நூல் முறைப்படியே அழகிய மண்டப மியற்றினர் கள். அழகிய சித்திரத் தூண்களும் மணிகள் பதித்த உத்தி ரங்களும் முத்துச் சரங்களும் வைத்துச் சிறக்கச் செய்தார் கள். எங்கு பார்த்தாலும் பொற்சுவர்களில் சிறப்பான சித்தி ரங்கள் பல எழுதச் செய்தார்கள். தம்பியரும் சகுனியும் இடையிடையே திருத்தங்களாகச் சொன்னவற்றை யெல் லாம் சுயோதனன் கேட்டுத் திருத்தப் பாடுகளும் செய்து, நாயகக் கோயிலாக, அதனை யழகுறச் சமைத்து, நகரத்தார் அறியச் சாற்றினன். அந்தரங்க மறிந்திடாமல், மன்னவை யாசப் புதிய மண்டபமொன்றியற்றி யிருக்கின்றார்களென்று உணர்ந்த மாநகருள்ளார்கள், கூட்டங் கூட்டமாக வந்து கண்டு வியந்து போனர்கள்.

பாண்டவருக்குத் தூதனுப்பல்.

துரியன், தம்பியுடனும் மாமனுடனும், தந்தை தன் அரண்மனை சேர்ந்து வணங்கி, "பிதா! தக்க சிற்பிகளைக் கொண்டு, பொன்னும் மணியுமிழைத்துப் புதியதோர் அரச மண்டபம் இயற்றி யிருக்கின்றோம். அதிற் கிரஹப் பிரவேசமும் செயல் வேண்டும்! நம் பெரியோர்களும் நமது உறவினர்களும் அதனை வந்து பார்த்து மகிழ்ந்து எங்களைக் கவுரவிக்க வேண்டுகிறோம். தாங்களும் பிதாமகரும் தங்கள் தம்பியுமாக வந்து பெருமைப் படுத்த வேண்டும். மற்றும், இந்திரப் பிரத்தத்திற்குச் சொல்லியனுப்பித் தருமனுதியரையும் வரும்படிச் செய்தல் வேண்டும்." என்று சொன்னான். அறிவு வளர்ந்தேருத தந்தையர்க்கு, நியாயமே யில்லாதிருப்பினும் தம் மக்களிடத்து அன்பும் ஆதரவும் நியாயமே பொருந்தி யிருப்பினும் தாயாத மக்களிடம வன்பும் தீச் செயலும் நிகழ்வது இயல்பு. இவனே, இரண்டு புறக்கண்களும் அகக் கண்ணும் அற்றவன். பாண்டவரிடத்துஇக் குருடன் வஞ்சனையுள்ளவன் என்பதை வாரணவத நகர நிகழ்ச்சியிலேயே அறிந்துளோமன்றோ? ஆகவே, இவனது அபிப்பிராய மின்னது தானென்பதை அறிவோம். மகன் சொன்ன வார்த்தையைக் கேட்டவுடன், திருதராட்டிரன் என்ன செய்தான் என்பதைப் பார்ப்போம்.

"குழந்தாய்! தக்க யோசனை செய்தீர்கள்; இந்த வஞ்சச் செயலாலன்றி, பெருவலியுடைய பாண்டவரை யெப்போதும் வெல்ல முடியாத காரியமே யாகும்! உங்கட்குச் சகுனி மாமாவன்றி வேறு தக்க துணைவரும் கிடையாது; நானே ஒன்றும் செய்திட இயலா திருக்கிறேன். நீங்கள் செல்லுங்கள்; நான் விதுரனையழைத்து அவனுக்குத் தக்கபடி சொல்லி

ஐவரையும் அழைத்து வரும்படிச் செய்கின்றேன்'' என்று புத்திரர்களேயும் மைத்துனனேயும் அனுப்பிவிட்டு விதுரனே யழைத்துவரச் செய்து, "தம்பி! விதுரா!! உன் வார்த்தை யைத் தட்டிப் பேசுவார் உலகில் யார் இருக்கின்றார்கள்? அந் தப் பாண்டவரோ, உன் சொல்லே வேதமென நம்புவார்கள். ஆதலால், ஆண்டுச் சென்று, என் மைந்தர் புதியதாக இயற்றி யுள்ள மண்டபத்தைக் கண்ணுற்று விருந்துண்டு போகும்படி ஐவர்க்கும் நான் சொன்னதாகச் சொல்லியழைத்து வரவேண் டும்'' என்று சொன்னன். கையில் பின்வருமாறு ஒரு ஓலேயும் எழுதிக் கொடுத்தனுப்பினன்.

"தம்பியர் விழைவாற் கூடம் சமைத்த பேரழகுகாண
இம்பர்வந் தெமையுமெய்தி எகுக விரைவினென்ன
பைம்பொனின் ஓலே மீது டண்புற எழுதியின்னே
எம்பி நீயேகு கென்ருன் ஏவலினவனும் போனன்."

தமையன் சொல்லேத் தட்டிப் பேசிப் பழக்கமில்லாத் தம்பி யரிற் சிறந்த விதுர மன்னன், இது முழுவஞ்சனே யென்ப தையும் இதனல் பாண்டவர்க்குக் கேடுறும் என்பதையும் நன்கு அறிந்திருந்தும் ஒன்றும் சொல்லவும் செய்யவும் இய லாமல், விதியே மதியாக் கொண்டு, "நான் போகிறேன்; ஆயி னும் பெரு வலியுடைய பாண்டவர் மதியே விதியாக் கொண்டு வெற்றி பெருக; அன்றேல், சுடச் சுட ஒளிர்ந்து காட்டும் பொன் போற் புகழ் பெறுக'' என்று மனத்துள் தீர்மானங் கொண்டு மலேகளுங் கடந்து, விரைந்து போய் இரண்டு நாட் களில் இந்திரப் பிரத்தம் சேர்ந்தார்.

விதுரனும் பாண்டவரும்

மணிகளின் கதிர்களினுற் பொன்னுலகம் போலவும் காந்திபெற்ற பொருள்களின் சிறப்பினுல் குபேரனுலகம்

போலவும் அன்பும் தருமமும் குடியிருப்பதால் சத்திய லோகம் போலவும் விளங்கியிருக்கும் நகரினைக் கண்டு களித்தார். எங்கும் பொய்கைகளும் குளங்களும் விளங்கி, மலர் நிறைந்து கொட்டும் பூங்காக்களாற் பொலிந்து, பாண்டவர் மனம்போற் பரந்து மலர்ந்து தண்ணென்றிருக்கும் அந் நகரின் சுற்றுப்புறக் குடிகளையும் அலங்கரித்துக்கொண்டிருக்கும் பிரஜைகளையும் பார்த்து மனம் பூரித்தார். அகமெலாம் மணிமண்டபங்களும் புறமெலாம் செந்நெல் வயல்களும் பொய்கையெலாம் தாமரை முதலிய மலர்களும் பொலிந்து மன்பதைகட்கு மனமும் தேகமும் இன்புற்றிருக்குமாறு செய்திருக்கும் தருமனது அரசியலை வியந்து சென்றார். எங்குப் பார்த்ாலும் கொடை முரசொலிகளும் அன்னமிடும் பேரிறைச்சல்களும் மணமுழக்கங்களும் சங்கீத ஸாஹித்ய குழாங்களின் இசை யொலிகளும் நிறைந்திருத்தலைக் கண்டானந்தித்து அரண்மனை புகுந்தார்.

வந்தனர் விதுரரென்று வாயிலோர் வந்து சொல்ல, தந்தை வந்துற்றாரென்ற தாங்கொணுக் களிப்புகொண்டு தருமன் தன் இளைஞரோடும் சென்று தந்தையை யெதிர் கொண்டழைத்துவந்து தக்க பொன்னாஸனத் திருத்திச் சிந்தையிற் பேரன்பினோடும் ஸோடச உபசாரமும் புரிந்து, வணங்கிப் போற்றி மகிழ்ந்தான். சிறிதும் முகமலர்ச்சி குன்றுமல் மனத்தெழும் பேரன்போடும் வணங்கி!ய மைந்தர்களைப் போற்றி எடுத்து மார்புடனணைத்து வாழ்த்திப் புகழ்ந்தனர் விதுரமன்னர். சென்று சேர்ந்து உபசரிக்கப்பெற்று விருந்துண்டு பகலில் தானு மைந்தரும், ஒரு புடையில் தனித்திருந்தபோது, "பெரிய மன்னன் ஓலை கொடுத்து உங்களை யழைத்துவரும்படி சொன்னர்; அந்தத் தூதுத் தொழி

லேத் தலையிற்கொண்டு, நானிவண் வந்தேன்" என்றார். மற்றும், "அங்ஙனம் உங்களை யழைத்ததற்குக் காரணமும் இருக்கின்றது; சொல்கிறேன்; கேளுங்கள்!" எனச் சொல்லலுற்றார். "நீங்கள் புரிந்து முடித்துப் புகழ்பெற்ற இராஜசூய யாகத்துக்கு வந்து திரும்பி நகர் சேர்ந்த பின்னர், அரவக்கொடியோனாகிய நின் தம்பி துரியோதனன் தம்பிமாரொடும் தகையிலாத் துன்மதிச் சகுனியுடனுமிருந் தாலோசித்துப் பொன்னும் மணியுங்கொண் டழைத்துப் பெரிய மன்னர் மண்டபமொன் றியற்றினான். அது, புவியிலுள்ள பூபாலரை யெல்லாம் ஒருங்கே அடக்கிக்கொள்ளும் அகலமும் அழகும் நிறைந்துள்ளதொரு பெருமண்டபம். மண்டபமியற்றி முடிந்த பிறகு, மகிழ்ச்சிகொண்டு, தம்மைப்பெற்ற தந்தையுடன் உள்ளுறுமுளவெலாம் சொல்லி, மண்டபம் தன்னில் கிரஹப் பிரவேசம் செய்யும்போது, உங்களையும் கூட்டிக்கொண்டு வந்து விருந்தாடிக் களித்த பின்னர், மாதுலன் சகுனியை வஞ்சமோ நெஞ்சமேல் மாயமோ வகுத்து உன்னோடுமவன் கற்ற சூதினை ஆடுறச் செய்வித்தல் கருதியது ஆகும் இதுவென்று நினைக்கின்றேன். இதுதான் என் வரவு. இவ்வுண்மை தெரிந்தவனாயினும், மன்னன் திருதராட்டிரனது ஏவலை மறுக்க முடியாத நிலையில் நான் வந்திருக்கின்றேன். இந்தச் சதியினை யவர்கள் அவையிற் கூடியாலோசித்தபோது, நான் அவர்கட்குப் புத்தி கூறியும் கேளாத் தன்மையால் வெகுண்டு 'இச் சபைக்கும் எனக்கும் பொருத்தமில்லை; உங்கட்குப் புத்தி சொல்லுதலில்லை' யென்று சூளுரைத்துக் கோபத்துடன் விலகி வந்திருந்தும், என் சொல்லாலன்றிப் பாண்டவர் நீங்கள் அங்கு வந்துசேருதல் கூடா தென்று சூழ்ச்சி செய்து என் தமையனைக் கொண்டு என்னையே யுங்களிடம் தூதாகவும் அனுப்பியுள்

ளார்கள். இதெல்லாம் அக்கெடுமனச் சகுனியின் சூழ்ச்சியே யன்றிவேறில்லை. இனிமேல் நடக்கும் செய்தியென்னவோ நானறியேன். இதோ இருக்கின்றது அப்பெரிய மன்னன் அருளிய ஓலை" யென்று சொல்லிமுடங்கலையும் கையினிற் கொடுத்தார்.

அறிவும் அமைதியும் குல கௌரவமும் உடைய பெரு மக்களாதலால், பாண்டுவின் மைந்தரைவரும், மூத்ததாதை அனுப்பிய முடங்கலை முறையுடன் வணங்கி வாங்கினர். வாங்கிப்படிப்போனிடம் கொடுத்துப் படிக்கக் கேட்டனர். கடிதச் செய்தியும் சிற்றப்பன் சொல்லும் ஒத்திருத்தலை யூகித்தறிந்து, உளம் கவன்று, ஒன்றும் மாருகச் சொல்லத் துணியாதவராய்க் குருகுலத்துக் கிது தகுவதோ? என்று பின்னரும் தருமன் சொல்லலுற்ருன்.

"அடியுமாண்மையும் வலிமையுஞ் சேனையும்
அழகும் வென்றியுந் தந்தம்
குடியும் மானமும் செல்வமும் பெருமையும்
குலமுமின்பமுந்தேகம்
படியுமாமறை யொழுக்கமும் புகழும்
முன்பயின்ற கல்வியுஞ் சோ
மடியுமால் மதியுணர்ந்தவர் சூதின் மேல்
வைப்பரோ மனம் வையார்"

சூதாட்டத்தினுல் ஆண்மை, வலிமை, சேனை குலத்தின் கௌர வம், செல்வம், பெருமை, ஆசாரம், புகழ், கல்வி, ஒளி இவை, யெல்லாம் ஒருங்கே மடிந்து போமே! பேரறிவையே அழகாக் கொண்ட பெரியோர்கள் கழகமாடவும் பெறுவரோ!! இதனி னும் கள்ளுண்டல் கொடிதாகாது. ஞானநூற் புலவரும் அர சியலறிவுளார்களும், இதனைப்பாதகத்தி லொன்றெனப் பல படப்பழித்திருக்கின்ருர்களே. இதனைச் சிந்தையின்றிக்

குருகுல மைந்தர்கள் ஆடமுற்படலாமோ? அன்றிச் சகுனியின் சூதினுக்கு என்னையா துணை கோரியிருக்கின்றார்கள்!" என்றிப்படித் தருமராஜன் கூறி "என் கருத்தினாற் பெறுவதென்ன விருக்கின்றது; எல்லாம் விதியின் கருத்தன்றோ? யாவரே விதியினை யெதிர் வெல்வார்? பெரிய மன்னன் கருத்தையும் அவன் மனம் போன்ற அவன் திருமைந்தன் கருத்தையும் உடன் நோக்கிய தாங்களே, நாங்கள் செய்யத்தக்கதொன்றினை யுரைத்திடல் வேண்டு" மென்று விதுரனை மெய்யுற வணங்கிச் சொன்னான்.

"உதிட்டிரா! இங்கு நீ யென்னிடம் சொன்ன நியாயங்களை யெல்லாம், நான், அப்போதே அந்த மன்ன ரவையிற் சொன்னேன். என் மொழியை யங்குக் கவனிப்பார் யாருமில்லை. ஆகையால் இதிலெனக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. உன்கருத்து எதுவோ அப்படியே செய்திடலா" மென்று விதுரர் சொன்னார். பீமன் சொல்லலுற்றான். "அன்றைக்கு ஆழ்ந்த நீரிடையே கழுமுட்களை நிரைத்துவைத்து வஞ்சனைசெய்தான். வாரணவத நகரத்திடை மனையில் வாழும்போது அம்மனையைத் தீக்கொளுத்தினான். இன்று சூதினில் வென்று யாவையும் கவர்ந்திட நினைத்திருக்கின்றான். என்று தான் அவன்நமக்கு நன்மையைநினைந்திட்டான். இனிநமக்கு அவருடன் உறவும் நட்பும் வேண்டவே வேண்டாம்; அவர்களை வேரொடு களையப் போர் குறித்தால்தான் நமக்கு இருப்புண்டாகும்" என்று சொன்னான். மூவருமொழிந்தநிலைமையில் வீமன்வார்த்தையை நன்குறமதித்து வில்விஜன்கூறுகின்றான். அண்ணலே!

"தேறலார் தமைத்தேறலும் தேறினர்த் தேறலாமையுமென்றும்
மாறலாருடன் மலைதலும் மாறுடன்மருவி வாழ்தலுமுன்னே

ஆறலாதன அரசருக்கென்று கொண்டரசநீதியிற் சொன்னார்
கூறலாதன சொல்வதென் செல்வதென் கொடியவனருகென்றான்."

"உள்ளத் தெளிவில்லாதவரை நம்பலும் தெளிந்தவர்களை நம்பாமையும் என்னும் மாறுபாடில்லாதவரிடம் பகை கொள்ளலும், மாறுபட்டவரிடம் மருவி வாழ்தலும் இவை அரசர்க்கு வழக்காறல்லவென்று அரச நீதி பகர்கின்றது. ஆகலின், நம்மிடம் என்றும் பகைமையைப் பாராட்டிக் கொண்டிருக்கும் துரியோதனுதியரிடம், நாம் மருவி வாழ்தல் கூடாது; பலப் பல பேசியென்; அக்கொடியவனருகே செல்வது என்? நாம் போதல் வேண்டா" மென்று அர்ச்சுனன் சொன்னான்.

விஜயன் இவ்வகை மொழிந்திட்டபோது, வீமன் முன்னரே சொன்ன மாற்றமும் மனத்திற் கொண்டு, நகுல சகாதேவர்கள், "அங்குநாம் செல்லுதல் தகாத காரியமேயாகும்" என்று தமது அபிப்பிராயத்தையும் சொன்னார்கள். "துணைவர்களே! இன்று நீங்கள் சொன்னதே நல்வார்த்தை யாயினும், அதுவே இதஞ்செய்யுமாயினும், நமது மூத்த தகப்பனிட்ட கட்டளையை எப்படி மறுத்துரைத்தல் கூடும்? அன்றியும் நம்மை யழைத்தேக நம்மில் மிக்க அன்புடைய சிற்றப்பனையன்றோ அனுப்பியிருக்கின்றார்கள்: நாம் அங்கு எகாதிருப்பின், அவ்விருவர்க்கு மன்றோ நிந்தை வந்து சேரும்; அன்றியும் உலகோர், பின் விளைதலை யறியமாட்டாதவர்களாகிப், 'பாண்டு மைந்தர் ராஜசூய யாகஞ் செய்து, உலக மன்னர்களால் வணங்கப் பெற்றுப் பெருமையை யடைந்தவுடன், உரிய தகப்பன் போன்ற பெரியப்பன் சிற்றப்பன்மார்களையும் மதியாதிருக்கின்றார்கள்' என்று நம் மீது பழியுஞ் சுமத்துவார்களன்றோ? ஆகையினால், வருவது எதுவாயினும், விதிவலி தென்றெண்ணி நாம் நம் தலைவர்க்குப் பெரு

மையீவதே கடனாகும்; நாளையே நாம் அத்தினபுரிக்குப் புறப்படுவோம். இதனை மன்னர்களும் நம் படைகளும் தெரிந்து கொள்ளுமாறு பறை சாற்றிடச் செய்யுங்கள்" என்று தருமராஜன் கட்டளை பிறப்பித்து விட்டான்.

அத்தினபுரம் புறப்படல்.

மன்னர்கள்வந்து குழுமினார்கள். சேனைகளும் செறிந்தன. மறுநாள் ஐவரும் அத்தினபுரம் நோக்கிப் புறப்பட்டார்கள். சதுரங்க சேனைகளும் கடல்போல் முழங்கின. படைகட்கு முன்னணியில் வீமன் தன்மெய்க் காவலருடனும் பெருத்த சேனையுடனும் போனான். பின்னணியில் இந்திரன் மதலையாகிய வில் விஜயன் அவ்வண்ணமே பின் புறம் காத்து வந்தான். இரண்டு சோதரர்களும் சேனைகளுடன் இருபக்கங்களிலும் சூழ்ந்து வந்தார்கள். தருமராஜன், நக்ஷத்திரக்கூட்டங்களினிடையே சந்திரனெனும்படி நால்வருக்கிடையே மெய்க்காவலுடன் போனான். மற்ற அரசர்களின் தேவியர் புடைசூழத் திரௌபதி சிவிகையிலேறிக் கொண்டு தருமனுக்கு அருகே சாயைபோலச் சென்று கொண்டிருந்தாள். ஆயினும் சகுனங்கள் நல்லனவாகக் காணப்படாதிருந்ததுடன் தீதாகவும் தோன்றின. இவற்றையும் கவனித்திடாமல் சென்று வழியிலுற்ற சோலையை யடைந்தார்கள். அற்றைப்பகல் கழித்து மன்னரும் மனைவியரும் சோலையில் பூக்கொய்து பொய்கைகளில் நீர்விளையாடி. யுண்டாட்டு முடித்த பின்னர்ப் பிற்பகலில் புறப்பட்டு மறுபடியும் குதூஹலத்துடன் வழி நடந்து இரவு ஒரு மலைப்பிரதேசத்தில் தங்கியிருந்தார்கள். கூடாரங்கள் அடித்து மணிவிளக்குகள் பொருத்திக் குடியேறியிருந்தார்கள். வீரர்கள் யானை யாளி சிங்கம் முதலிய வேட்டை யாடினார்கள். பொழுது

விடிந்ததும் தர்மனும் குமரர் நால்வரும் காலைக் கடன்கள் முடித்துப் பின்னரும் வழி நடந்து ஒரே நடையாய்ச் சென்று பிற்பகலில் அத்தினபுரத்துக்கு அணித்தான சோலையில் தங்கினார்கள். யானைகளைக் கோடுயர் மரங்களிற் கட்டினார்கள். குதிரைகளை பந்தியாய் நிறுத்தினார்கள். மன்னர்க்கும் மங்கையர்க்கும் படமாடம் வகுத்தார்கள். பாண்டவரைவரும் உடன் வந்த மன்னர்க்கும் வீரர்க்கும் சேனைகட்கும் தக்க பாசறைகளமைத் துள்ளமை பார்த்துக் களித்துத் தத்தம் உறைவிடம் நண்ணி விதுரனை யத்தினபுரிக்கு அனுப்பினார்கள். இரவு நிலா வெழுந்தது. மன்னிளங் குமரர் விளையாடி மகிழ்ந்தனர். பேரிரைச்சலுடன், அத்தினபுரிக்கு வெளியில் தங்கியிருந்த அச்சேனையின் தோற்றமானது, துரியனுடைய தீமை பொறுக்க மாட்டாமல், அத்தின நகரமே வெளிப்பட்டுறைகின்ற தென்றெண்ணும்படி யிருந்தது. மங்கையர்கள் உறக்கம் வரும்வரை யாடினர்.

"ஆடுவார் சிலர் சிலரைவர்வான் புகழ்
பாடுவார் சிலர் சிலர் பாயலின் புறக்
கூடுவார் சிலர் சிலர் கோதை மாதரோ
டூடுவார் சிலர் சிலரோகை வீரரே."

இங்ஙனமிருக்கவே, கீழ்த்திசையிற் சூரியனுதித்தனன். எழுந்து முறையினால் நித்திய கருமங்கள் முடித்துக் கொண்டு பயணமாகி பேரிகைகள் பேரொலி செய்யத் தெருக்கள் வழியே கடந்து ராஜ வீதி வழியாகப் போய்த் தமது மூத்த தகப்பன் வாழ் அரண்மனை யெய்தினார்கள்.

அளவளாவுதல்

பேரரண்மனையில் நுழைந்து, பெரிய தகப்பனாரை ஐவரும் ஒவ்வொருவராகப் பேர் சொல்லி வணங்கினார்கள். தம்பி

மைந்த ரைவரையும் அவன் தழுவிக்கொண்டு, "என் தம் பியைத் தழுவியது போலிருக்கின்ற" தெனச் சொல்லி, யடி யில் பணிந்து வணங்கிய திரௌபதிக்கும் ஆசிகள்கூறி மேலும் கூறுவான். "தருமா! கர்மம் நீதி கல்வி மந்திரம் பெருமை ஆண்மை தர்மம் இவைகளே நின் தன்மை யாதலால், அரு மையாகவே நின் அரசியல் நடந்தேறி வருகின்ற தென நம்பு கின்றேன்...நீ ராஜ சூயம் செய்து தான தர்மங்கள் மிகச் செய்து சிறந்தாயென்று கேட்டுமகிழ்ந்தேன். எட்டு திசைகளை யும் வென்று உலகத்தை யொரு குடைக்கீழ் ஆளுதல், நமது குரு குலத்து மகிபர் வழக்காருக இருந்தது. அத்தொல் மா பினை யின்று நீ தாங்கி நின்ருய். இத்துணைச் செல்விகளையும் கண்டின்புறுமாறு கண்கள் பெற்றிலேன். நீங்கள் நல்வாழ்வு பெறக் கடவீர்கள்; தந்தையாகிய பீஷ்மரையும் வணங்கிவா ருங்கள்" என்றுவிடைகொடுத் தனுப்பினுன். தந்தை யேவின படியே ஐவருஞ்சென்று தந்தை தந்தைதன் சோடி வணங்கி யவருக்குத் தங்கள் வரவின் காரியத்தை யுணர்த்தினுர்கள். அக் குருகுலேசனும், ஆசிகள் கூறி "கள்ள வஞ்சர் தீமை கருதிச் செய்தலுமுண்டு" என இரங்கி ஏங்கினுர். பின்னர், அருந்ததிக் கற்புடைய காந்தாரியை யறுவரும் சென்று வணங்கி யாசிகள் பெற்று திரௌபதியை யங்கு வைத்திட்டுக் குருவையடைந்து பணிந்து போரசீர் வசனங்கள் பெற்றுக் குருவின் மைந்தனையும் கிரிபாச்சாரியாரையும் வணங்கி வாழ்த் துக்கள் கொண்டு, மீண்டும் விதுரன் மாளிகைக்கே வந்து தங்கினுர்கள். சூரியாத்தமனமாயிற்று. மாலைக் கடன் முடித்து அமுதுண்டு அளவளாவிக்கண் துயிலுங்காலையில் திரௌபதியும் வந்து சேர யாவரும் இளைய தந்தையின் அரண்மனையிலேயே நித்திரை கொண்டனர். எழுந்து காலைக் கடன் முடித்து தான தருமங்கள் செய்து, தமது மன்னர்க்

கும் சேனைகட்கும் வசதிகளுள்ளனவா வென நன்கு விசாரித் தொழுங்குபடுத்திப் பஞ்ச பூதங்கள் போன்ற ஐவருமிருந் தார்கள். துரியோதனன் செயலைச் சொல்ல ஆரம்பிப்போம்.

சூது போராடுதல்

பாண்டவரைவரும் வந்துற்றனரென்று வகைகொண்டு, தான் வகுத்த மண்டபத்தில், தானும் மாமனும் தம்பிமாரும் கன்னனும் பீஷ்மனும் விதுரனும் துரோணாச்சாரி யசுவத் தாமர்களும் மற்றவரும் வீற்றிருந்தபோது துரியோதனன், பிராதிகாமியை நோக்கி, "நீ சென்று, மண்டபத்தின் அழகு காணவாருமென்று பாண்டவரை மண்டபத்துக்கு அழைத் துவா"வென்று ஏவிவிட்டான். பிராதிகாமி சென்று விதுரன் மனையில் தங்கியிருந்த தருமராஜனையும் தம்பிமாரையும் திரௌபதியையும் கண்டு வணங்கி, "உங்களனைவரையும் மன் னன் துரியோதனன், மண்டபத் தழகு காணும்பொருட்டு அழைத்துவரச் சொல்லி யேவினார்" என்று சொன்னான். உடனே, தர்மன் தம்பி நால்வருடனும் புறப்பட்டுத் திரௌ பதியைத் தாயுடனிருக்கும்படியாகச் சொல்லிக் காந்தாரியின் அந்தப்புரத்துக் கனுப்பிவிட்டு மண்டபம்போய்ச் சேர்ந்தான். தந்தையையும் வம்ச முதல்வனையும் ஞான விதுரனையும் முறையே வணங்கித் தமக்கென்றிட்டிருந்த ஆஸனங்களில் தம்பியும் தானு முட்கார்ந்தான். பின்னர் மண்டபத்தைப் புகழ்ந்து சில வார்த்தைகள் பேசினார்கள். துரியோதனன் மிகப் பொறுமையுடன் வீற்றிருந்தான். அவனது தம்பிய ரும் கன்னனும் அவனைச் சூழ்ந்திருந்தார்கள். சகுனி மாம னும் உடன் வீற்றிருந்தான். தருமனைப் பார்த்துச் சகுனி சொல்லலுற்றான். "தர்மராஜனே! இந்த அழகிய மண்ட பத்தை யியற்றியதன் நோக்க மென்னவெனில், மன்னர்கள்

கூடுங்காலங்களில், இங்கிருந்து இன்பமாகப் போதுபோக்க வேண்டுமென்பதேயாகும். அமுதமன்ன பெருவிருந்துக்கு ஏற்பாடாயிருக்கின்றது. அது ஆயத்தமாகி வருதற்கு இன்னும் சிலகாலம் ஆகும். விருந்துக்கு வரவேண்டியவர்களும் வருதல் வேண்டும். அதுவரையில், இங்கே நாம் ஏதேனும் விளையாடிப் பொழுது கழித்தல்வேண்டும். ஏன்! சூது விளையாடிச் சிறிது நேரம் உல்லாஸமாயிருப்போமே!! இது, மன்னர்க்குத் தக்கதோர் விளையாட்டுத்தானே" என்றனன்.

தர்மன் அவனைப்பார்த்து, "சூதுபோர் கூடாதென்று நீதி நூல்களெல்லாம் போதிக்கின்றனவே; மன்னவர் சூதாடப் புகுந்தால், அரசியலிற் கவனஞ் செல்லாது. முன்னொரு காலத்தில் நளன் என்னும் மன்னன் சூதாட்டத்தில் மனத்தைச்செலுத்தியரசிழந்த செய்தி கேட்டிலீரோ? அன்றியும்,

'மீதெடுத்த வஞ்சராகி வெகுளிசெய்தல் பிறர்பெருங்
கோதெடுத் துரைத்தல்நண்பு கொண்டயிர்த்தல் கொடியவெஞ்
சூதெடுத்து விழைதல்உற்ற சூள்பிழைத்தல் இன்னவே
தீதெடுத்த நூலின்முன்பு தீயவென்று செப்பினர்'

வஞ்சம் கொண்டு கோபித்துத் தீமை செய்தல், மற்றுாது குறைகளையே எடுத்துப் பேசுதல், நட்புக்கொண்டவனைச் சந்தேகித்தல் கொடிய சூதினை யாடுதல், சொன்ன சபதம் பிழைத்த லிவையெல்லாம் தீயன என்று நூல்கள் பேசியிருக்கின்றன. மாமனோடு சூதாடிப் பொருள் தோற்க வேண்டுமா? உமக்கு வேண்டுவதென்ன? அதனை யியம்பினால் இப்போதே அளிக்கின்றேன்" என்று சொன்னான். சகுனி தருமனைப்பார்த்து "இது தப்பிலாத விளையாட்டுத்தான். உருட்டுவதில் சாமர்த்தியமே யல்லாமல் வஞ்சனை யொன்றும் இதிலில்லை. வேண்டுமாயி னாடலாம்; இல்லை

யெனில் வேண்டாம். பந்தயம் வைக்கவேண்டிய பொருள் கட்கு லோபித்துக் கூடாதென் கிறீரோவென் றெண்ணுகின் றேன். இந்த ஆட்டத்தில் வெற்றியும் தோல்வியும் நம்மில் ஒப்பாக இருக்கட்டும். விளையாட்டுக்காடுவதாயினும், நீ தோற் ருல் வைத்த பந்தயப் பொருளினை நான் வாங்கிக்கொள் ளுகிறேன். நான் தோற்ருல் இரண்டு பங்கு தருகின்றேன். என்னைச் சூது செய்யும் கொலைக்காரனுக எண்ணிவிடாமல், விளையாட்டெனவே யெண்ணி யாடவரலாம்'' என்று சொன் ஞன். தருமனென்றும் பேசாதிருக்கவும், அர்ச்சுனனுக்குக் கோபம்வரும்படிக்கன்னன் கூறுகின்ருன்; "சூதுபோருக்குத் தான் அஞ்சி நிற்கின்றீர்கள்; பொதுப் போருக்காவது வாருங் கள்; இருநிறத்தாது வில் வலத்தையும் மல் வலத்தையுமே னும் விளையாட்டாகக் காண்போம். அப்படிக் கூடுமாயின் தம்பிகளோடு பயந்து நீங்கள் உங்கள் நகருக்கு ஓடும்படியாக அடிக்கின்றேன்'' என்று சொன்னுன். அப்போது அர்ச்சுனன் கன்னனைப் பார்த்து, "மண்டபம் காண வாருங்களென்று எங்களை வஞ்சகமாக அழைத்து வந்தவுடன், வேருெரு நன் மையான பேச்சுமின்றிக் கொடிய சூதுக் கழைத்ததனுல், என் தமையன் மறுத்தனர். அதனை யுணராது பேசிவைத வாயைத் துணிப்பே னிப்போதே'' என்றுரைத்துக் கன்னன் மேல் வீர வாளி தொடுத்திடக் கையில் வில்லெடுத்தனன். தர்மன் தடுக் கப் பொறுத்து நின்ருன்.

தம்பியைக் கோபித்திடாமல் அமையுமாறு சொல்லி, "கவுரவக் குறைவாக யாரும் பேசவேண்டாம்; அதற்காகப் போரும் வேண்டாம். இதுவே போதுபோக்கும் விளையாட் டென்று நீங்கள் துணிந்தீர்களாயின், அந்த மாயச் சூதினையே விளையாடுவோம் வாருங்கள்'' என்று தருமன் கோபித்துச் சொன்னுன். அதனையே வியாஜமாக வைத்துக் கொண்டு

சகுனி உடனே ஆடத் தொடங்கிவிட்டான். அப்போது துரியன், "உன்னை வென்றால் ஒட்டம் யாவும் நீ கொடுத்திடல் வேண்டும்; மாமனை நீ வென்றிடில் பந்தயம் யாவும் நான் கொடுக்கிறேன்'' என்று சொல்லத் தருமனும் விதி கூட்டி விட்ட தன்மையாய்ச் சகுனிக் கெதிரில் சூதாடற் கென்று போடப் பெற்ற ஆஸனத்தில் போய் உட்கார்ந்தான். இருவருக்குமெதிரில் பலகையையும் சூதாடு கருவிகளையும் கொணர்ந்து வைத்தார்கள். இசைந்த தர்மராஜன், பணயமாக முதன் முதல் தனது கழுத்திலணிந்திருந்த முத்தாரத்தை வைத்தாடத் தொடங்கினன். உடனே துரியன், தன் மாமனுக்காகத் தானும் பணயம் வைத்தான். இருவரும் கவற்றை யுருட்டியாடினர்கள். மாமனுக்கே வெற்றி கிடைத்தது. தருமன் மேலும் விருப்பங்கொண்டுசூதினை விடாமலாடினன். இதுவே சூதாட்டத்தின் மயக்க மென்பது. வெற்றி கிடைத்தால் பொருளாசையால் மேலும் ஆடச் செய்யும்; தோல்விகிடைத் தாலும் கோபத்தாலும் மானத்தாலும் ஆடச் செய்யும். ஆதலால், மானம் பொங்க ஆட ஆரம்பித்தான். மாயன் கொடுத்த தேரையும் முறை வைத்தான். தோல்வியே கிடைத்தது. மேலும் யானை குதிரை ஊர் முதலியவற்றையும் தோற்றுத் தோற்று மீளவும் ஆட்டத்தை நிறுத்த மனமின்றி மேலும் ஆடிக்கொண்டே இருந்தார்கள். பின்னும் தேர்ப் படைகள் குதிரைப் படைகள் காலாட் படைகள் இவைகளையும் தனித் தனியே வைத்துத் தோற்றுப் பின்னர்த் தம்பியர்க் குரியவற்றையும் தோற்றுப் பின்னர்ப் போக மாதர்களையும் தோற்று, இப்படி யாவையும் கொடுத் திளைத்திருந்தான் தருமமன்னன்.

என் இன்னும் யோசித்திருத்தல் வேண்டும்! தரும தேவதை போன்ற உன்னையும், வீரம், ஆண்மை, தீரம் சூரம் இவைகள் போன்ற தம்பிமாரையும் வைத்தாடினல் தரும

தேவதை யருளினல் வெற்றியே கிடைக்கலாம்; ஆடலாமே" என்ருன் கொடியனுகிய துரியன். தோல்வியும் கோபமுந் தோன்றின தன்மையால் மயக்கங் கொண்டு தருமராஜன், அப்படியே தன்னேயும் தம்பிமார்களேயும் வைத்து ஆடியும் அப்போதும் தோல்வியே பெற்ருன். துரியன் துள்ளினுன்; துற்சாதனன் குதித்தான்! கன்னன் கனேத்தான். சகுனி கர்ஜித்தான். பாண்டவரைவரும் மதி மயங்கி மனங் கலங்கி மாழ்கினுர்கள். அப்போது பாம்புக் கொடியனுகிய சுயோதனன், "ஐயோ, நீங்களேவரும் இப்போது எங்கட்கு அடிமையாகி விட்டீர்களே! இனி யென் செய்வது? உங்களே வென்று மீட்டுக்கொள்ள வேண்டுமாயின், உங்கள் பத்தினிக் கடவுளான திரௌபதியை வைத்தாடல்வேண்டுவதேகருமமாகும்" என்று பேசி, அவளே யொட்டமாக வைத்தாடும்படி வற்புறுத்தினுன்.

அப்போது, சபையிலிருந்த விதுரனுக்கு கோபம் பிறந்தது. தன் அண்ணனுகிய அந்தக்குருட்டு மன்னனேப்பார்த்து, "உன் பலமில்லாவிடில், பெரியோரடங்கிய இப்பேரவையில், மன்னர் சூதாட அமைப்பார்களோ? இது போதும்; வெகு நன்ருயிருக்கின்றது மதி மன்னர் சபை. தகப்பன் வேண்டாமென்று மறுத்தால், தனயர் மறுப்பார்களோ? திருகு நெஞ்சினராகிய இளேஞர் தீமைசெய்யப் புகுவாராகில், உருகுதாதை அதற்கு உடன் பட்டிருக்கலாமா? மிருகமல்ல; பறவையல்ல; இரக்க மின்றியே யிருக்கின்ற நின் அருகு வந்தணேந்தது எங்கள் அறிவிலாமையே யாகும். தம்பி மைந்தர் பெருமை யழிந்து இரங்கவும் உன் மைந்தர் வாழ்வுற்றிடவும் நல்ல யுக்தி செய்தாய். வஞ்சத்தினுல் ஐவரையும் அடிமைப் படுத்தியது மன்றி, அவர்கள் தேவியையும் வைத்தாடும்படியாகச் சொல்வது தருமமாக மாட்டாது. இதுகருமமன்று; உங்கட்கு நாச காலம் வந்து விட்டதுபோ லிருக்கின்றது" என்று உருத்துப்

பேசினர். விழியிலாதவன் இவனுக்கென்ன எதிர் சொல்லு கின்றதென்றெண்ணி ஒருமொழியு மிலாமலிருந்துவிட்டான். சகுனி சொல்லும் வஞ்சக வார்த்தைகளையும் பரிகாச வார்த் தைகளையும் கேட்கப் பொருமல், தருமன், மீளவும் ஆடப் புகுந்து அவர்கள் சொன்ன பணயமே பணயமாக வைத்து, அதனையும் தோற்றிழந்தான்.

தர்மன் வேறு செய்வதொன்றும் தோன்ருது மயங்கித் தன்னை மறந்திருந்தான். தம்பிமார்கள், அடிமைப் பட்டவர் களாகி வலியிழந்திருந்து நொந்தார். மன்னரவையிருந்தபேர்க ளும் மெய்குலைந்துள்ளம் வெம்பி, அருளினலழிந்து நொந் தார்கள்.

"குருமரபுடைய வேந்தன் கொடியனே கொடியனென்பார்
மருமகனு யிருக்கித்த மாமனே மறலி யென்பார்
தருமனித்தனை நாட்செய்த தருமமும் பொய்யோ வென்பார்
உருமினுங் கொடிய வீமனுருத்தினியெழுமோ வென்பார்."

"பாந்தளேறுயர்த்த வேந்தன் பார்த்திலனுறவு மென்பார்
மாய்ந்தலே அறமுந்தேசம் மனுநெறி வழக்கு மென்பார்
பூந்தழற் பிறந்தபாவை புண்ணியம் பொய்யா தென்பார்
சேந்தனன் இருகண்பாரீர் தேவர்கோன் மதலை யென்பார்."

"பழியுடைத் தந்தை யொன்றும் பகர்கிலா திருக்கு மென்பார்
விழியுடைய வரையன்றே மேன்மையோர் வெறுப்பதென்பார்
அழியுமே யிவனுன் மைந்தரும் பெருஞ் செல்வ மென்பார்
வழிவழியாகச் செய்யும் வசையிவன் புரிந்த தென்பார்."

என்றிப்படி யரசரும் மற்றையோரும் சொல்லிக்கொண்டி ருக்கத் துரியோதனனும் தம்பிமாரும் சகுனியும் கன்னனும் தமக்குள் எண்ணிக் கலந்தாலோசித்துக் கங்கை மகனுகிய பாட்டனை நோக்கி, கேட்போர் மனம் நடுங்கங்கூறுகின்ருன்.

"தருமன் செய்த பாவமோ சகுனிசெய்த புண்ணியமோ, அந்தப் பொது மகளாகிய திரௌபதி யாகசாலைக்கு நாயகி யாக வீற்றிருந்ததவளே மற்றை நால்வரும் எண்ணிய மதியோ யாதோ இங்ஙனம் விளைந்து விட்டது" என்று பரி கசித்துப்பேசினன். கேட்ட கங்கை மைந்தன் "இதுதகாது; நம்மில் நாம் இயற்கை குன்றிப் பரிகசித்துப் பேசல் அடுக் காது; மன்னர் இழிவுரைப்பர்; போதும் பகைமை காட்டி னது. இனியவரவர் தத்தம் பதியிற் போய்வாருங்கள்" என்றான்.

விதுரன் மறுத்துக்கூறல்

அந்த வார்த்தையைச் சிறிதும் செவியிலேற்றுக்கொள் ளாமல், துரியோதனன் கோபம் மிகுந்து, ஆங்கு ஐவர்க்கும் உருகிநிற்கும் சிற்றப்பனான விதுரனைப் பார்த்து, "தருமன் சூதாடி நம்மிடம் தோற்ற பொருள்களையெல்லாம் யானை தேர் குதிரைச் சேனைகளையெல்லாம் துறைகள்தோறும் சென்று கவரும்படியாகச் சொல்; பழைமையான நகர்களி லும் நாட்டிலும் நமது வெற்றித் தோரணங்களை நாட்டச் சொல்; எல்லையற்ற நிதிகளையெல்லாம் இப்பொழுதே வாரிக் கொண்டு வரச்சொல்; அந்த மாநகர்ப் பெண்களையெல்லாம் நமது நகர்க்கு வரும்படிச் சொல்; இளைஞர்களெல்லாம் நமது அடிமை வேலைசெய்ய வரச்சொல்; இவ்வைவர்கட்கும் உரிய வளாகி யாகபத்தினியுமான திரௌபதியை மன்னர் பலர் சூழ்ந்திருக்கும் இந்தப் பேரவைக்குள் அழைத்துவரச்சொல்" என்று சிறிதும் மனதிற் கருணையற்றுச் சொல்லிவிட்டான்.

அப்போது விதுரன், "சுயோதனா! கெட்டழிந்து விடாதே. அறம் வெல்லும், பாவந் தோற்கும்; தருமராஜ னைத் தர்மமல்லாத காரியத்தில் வஞ்சகமாகக் கட்டுப்படுத்தி,

அவனது செல்வத்தையெல்லாம் தீமையிற் கவர்ந்தாய். இது வீரமன்று; மங்கலவாழ்வுமன்று; கீர்த்திக்குரியதுமன்று; மேலோர் நெறியுமன்று; இவற்றையெல்லாம் செய்தனை யென்றாலும், கற்பிற்காசி போன்றுளாளை மன்னரவையில் அழைப்ப தென்பதைக் கருத்திற்கூட நினையாதே. அப்படியாயின் நீ நீடுவாழ்தல் கூடுமா? இவட்கு உவமையாகச் சொல்லவேண்டுமாயின், வடமீனாகிய அருந்ததியல்லாமல், மண்ணிடைப் பெண்களில் யாருமிலர்; அத்தகைக் கற்புக் கடவுளாகியவளைப் பழித்துக் கூறல் குடிக்குப் பழியாகும்" என்று இப்படிப் பல நீதிகள் சொல்லியும் கவனியாதிருக்கும் அரவக்கொடியோனையும் மற்றவரையும் பார்த்துப் பின்னரும் பேசுகின்றான்; 'முற்பிறப்பில் தானவராகியிருந்து தனித்தனி யிறந்தோர் யாரும் இப்பிறப்பில் மானுட மன்னவராக வந்திருக்கின்றார்கள்' என்று அவர் தீமைகளைப் பொறாத பூமிதேவியானவள், தாமரை யாதனனாகிய பிரமனைக்கண்டு வணங்கி முறையிடலும், பிரமன் அவளையும் அழைத்துக்கொண்டு மேகவண்ணனாகிய கடவுளிடம் சென்று வணங்கிக் கூறினார். அப்போது, இலக்குமி நாயகன் அவர்களை யாசீர்வதித்துப் பூமி தேவியைப் பார்த்து, 'உன்னிடை வந்து நிருபாகத் தோன்றியிருக்கும் நிருதரானவரை யெல்லாம் ஒருவர் மிச்சமிராமல் அழித்துக் காலன் வாயிற் சேர்ப்பிக்கின்றேன்' என்று சொல்லிச் சமாதானப் படுத்தியனுப்பினார்' என்று பெரியோர்கள் சொல்லுகின்றார்கள். அப்படியே அந்தத் திருமா மகன் நாயகனும் நம்மிடை யொரு அரசனுருவில் தோன்றியிருக்கின்றார்; சில ஆஸுரப் பிரகிருதியையுடைய மன்னவர்களையும் எமபுரத்துக் கனுப்பியிருக்கின்றார்; இது நாம் கண்கூடாகக் கண்ட விஷயமேயாகும். இந்த உலக

வார்த்தைக்கு ஏற்றபடியாகவே நீயும் செயலாற்றிக் கொண் டிருக்கின்ருய். ஒரு திறத்திற் பிறந்து, பூமி யெல்லாம் ஒரு குடைக் கிழாளும் நீங்கள், இருதிறத்தாரும் நுமக்குள் பகைமை முற்றிப் பொருவீராயின், அரசுகள் உலகில் தனித் தனியாகப் பிரிந்து கலகங்கள் ஏற்பட்டுப் பாவமுமதிகரித் திடும்; பின்னர், உலகோர் வதந்தியில் தோன்றியபடி, திரு மகள் நாயகன் வெகுண்டு, உலக மன்னர்களை யெல்லாம் ஒருங்கே யழித்திடும் காலமும் நேரும்போலிருக்கின்றது. ஆகையாற் பகைமையை யொழித்து, விளையாட்டுச் சூதினிற் கவர்ந்த பொருள்களை யவர்பாலுய்த்து அவர் தம் நகரினுக்கு அவரை யனுப்பித் தக்க நெறி வழாமல் வாழ்ந்திடுவா'' யென் னச் சொன்னர். துரியோதனன் மனம் வெதும்பிக்கோபத் துடன் இது உரைத்தான்.

திரௌபதியைச் சபைமுன் கோணரல்

ஆங்கு நின்றவனாகிய பிராதி காமியை அழைத்து, ''நீ போய் எனது தாய் காந்தாரி மனையிலிருக்கும் அந்தத் திரௌ பதியை யிந்த மன்னர் சபைக்கு அழைத்துவா'' என்று ஏவி னான். சென்ருன் பிராதி காமி; மனம் மிக வருந்தினான்; இது தகுதியற்றதென்று உள்ளத்தில் தீர்மானித்தான்; திரௌபதி வாழுமிடத்துக்குப்போக நாணினான். இடை வழி யிற் சிறிது நேரம் நின்று பின்னர் மீண்டு வந்து சொல்ல லுற்ருன்.

''என்னைத் தோற்ற மனுநெறி கூறிசையோன்
தன்னைத் தோற்றனனே
தன்னைத்தோற்றுத் தனது மனத்தளர்வால்
என்னைத் தோற்றனனே

முன்னைத் தோற்றுத் தோற்ற பொருள் முற்றும்
கவரு முறையன்றிப்
பின்னைத் தோற்ற பொருள் கவரப் பெறுமோ
நினைக்கப் பெறுதென்றான்"

"அரசே! மகாராணி திரௌபதியம்மாள், பின்வருமாறு கேட்டனுப்பினார்கள்; அஃதாவது, 'தருமராசன் என்னைப் பந்தயமாக வைத்துத் தோற்ற பிறகு தன்னைத் தோற்றாரா? அன்றி, முன்னர் தன்னைப் பந்தயமாக வைத்துத் தோற்று, அதனால் தோன்றிய மனத்தளர்ச்சியால் என்னைத் தோற்றாரா? மற்றும், முன்னம் அவர் தோற்றுள்ள பொருள்களையெல்லாம் முறையே கவர்ந்துகொள்ள மொழியாமல், பின்னர்த் தோற்ற பொருளாகிய என்னைக் கவர நினைப்பது தவறன்றோ?' என்னக் கேட்டார்கள்" என்று சொல்லி அப் பாவச் செயலினின்றும் தான் மீண்டு நின்றான்.

இவ் வார்த்தை யந்தச் செருக்குடையாள் தான் சொல்லியிருத்தல் வேண்டும் என்று துணிந்த துரியன், தனது தம்பி துற்சாதனனை நோக்கி, "தம்பி! ஐவருக் கொருத்தியாகிக் கர்வித்திருக்கும் செருக்குடைய திரௌபதியை யிழுத்துவந்து இச்சபையில் நிறுத்து" என மொழிந்தான்.

வெகுண்டெழுந்தான் கொடிய தம்பி; விரைந்து சென்றான் தாயிருக்கும் மனைக்கு; திரௌபதியை நோக்கியிது சொல்லுகின்றான்;

"தானே சூது பொருதழிந்து தலைவன் தனக்குள் பதியான
கோனே சொல்லிபாவையு முன்கொடுத்தான் கொடுத்த பின்னிசைவு
யானே யென்றும் வீமன் முதலிளையோ ரென்றுமென் வேள்வி
மானேயென்றங் குறித்திழந்தான் வழக்கால்வென்றோம்வருவாயே"

"பொன்னைச் சிரிக்கும் பூங்கோயில் புனல்வாவியி லென்றெங்கள் குல
மன்னைச் சிரித்த செங்கனிவாய் மாறாதிரங்கி யழுதாற்ற
மின்னைச் சிரிக்கும் நுண்ணிடையாய் வேந்தர்க்கெதிருன் மெய்க்
தன்னைச் சிரிக்க இருக்கின்ற சளம் நீகாணில்தரியாயே" [கணவன்

"பெண்ணே! திரௌபதி!! உன் கணவர்களில் மூத்தவனான தர்மன் தானே வந்து சூதாடி யழிந்து அரசு முதலிய பொருள்களெல்லாம் எமக்குக் கொடுத்தான்; பின்னர்த் தன்னை யொட்டம் வைத்திழந்தான்; பிறது தம்பியரைப் பணயம் வைத்துத் தோற்றான். முடிவில், உன்னையும் பந்தயமாகவைத் தாடி யெங்கட்குக் கொடுத்து விட்டான். நாங்கள், வழக்கு முறைதவறாமலே உங்கள் ஆறுபேர்களையும் வென்று பெற்றிருக்கின்றோம். அன்றைக்கு இந்திரப்பிரத்தத்தில் அரண்மனைக் கெதிரிருக்கும் தடாகத்தில், எங்கள் குல மன்னவனாகிய சுயோதனன் தோன்றியபோது சிரித்துப் பரிகசித்த உன் செங்கனிவாய் மாறாமல், இன்று கண்டு அழுது ஆற்றும் படியாக மன்னவையில் உன் கணவன்மார்கள் யாரும் சிரிக்க இருக்கின்றனர்; அந்த நடுக்கத்தைக் கண்டு நீ மனந் தரிக்கமாட்டாயோ? புறப்படு அச்சபைக்கு; எங்கள் அண்ணன் அங்கு அழைக்கின்றார்; புறப்படு" என்றான். இவ் வார்த்தைகளைக் கேட்டுத் திரௌபதி உளம்கூசித் தேகம் நடுங்கிச் செய்வதின்னதென்று தோன்றாதிருந்த வேளையில், துற்சாதனன், குதித்து, உலக தர்மத்துக் கிசையாதபடி ஐந்து பேரையுந் தழுவித் தனித்தனியே யநுபவித்துப் பொய்யை மெய்போல் நடித்துக் கற்புடையாளெனப் பொய்ப்புகழ்பெற்ற பேதாய்! உத்தம குலத்துப் பிறந்த துண்மையாயின் கூசாதென்பின் நடந்திடு; புறப்படு" என்று பலாத்காரத்தினால் அவள் கையைப்பிடித் திழுத்தான். தீண்டப்படாததன் மலர்க்கையைப் பாதகன் தீண்டிப் பிடித்

தலுமே, நங்கை நடுநடுங்கித் துன்பம் மிகக்கொண்டு பெரு மூச்செறிந்து, கொலைவாய் அம்புகொளும் வனவேடாது வலையினிடத் தகப்பட்டுக் கொலைக்களத்துக்குச் செல்லும் மான்போற் பதறித் தனது பெரிய மாமியாகிய காந்தாரியின் பாதத்தில் வீழ்ந்து கதறினாள். பல பாதகர்களைப் பெற்று வளர்த்த பெருங்கொடியவளாகிய காந்தாரி சற்றும் மன மிரங்காதவளாகி, "என், மன்னர் சபைக்குப் போனாலென்ன? அங்கு யார் இருக்கின்றார்கள்? உனக்கு அந்நியமானவர் யாருமில்லையே. அங்குப் போகலாம்; போ" என்று கூறித் தள்ளிவிட்டாள்; இச்செயலுக்குத் தன் கணவனைப்போ லிவளும் உடந்தை போலும்.

என்ன செய்வாள் பாஞ்சாலி; புகல் புகுந்த இடமும் புற்றிற் பாம்பாகத் தோன்றவே, அலைகடலிற்பட்ட மாக் கலம்போல் திசைதெரியா தறிவிழந்து தவித்திடும்போது, துற்சாதனன் அவள் தலைமயிரைப் பிடித்திழுத்து மண்மேல் புரளக் கொண்டுவந்து சபைமுன் சேர்த்தான். தெருவில் பிரஜைகள் நடுங்கிப் பார்த்தார்கள்; அந்தப்புரத்து மங்கையர் கள் ஆவென்றலறி யுடன்வீழ்ந்தார்கள். மண்டபத்து மன் னர்கள் மாழ்கிக் கண்கள் புடைத்தார்கள். இனி இக்குலம் அழிந்தது என்றார்கள். இது நெருப்பல்லவா இப்பெருங் குடிக்கு என்றார்கள். காந்தாரி பேயைக் காட்டிலும் கொடியவளென்றார்கள். அவள் குடி யழிய வயிறலைத்து அழுது கெடப்போகின்றா ளென்றார்கள்; இம் மாமனி தர்க்கு நெஞ்சு இரும்போ என்றார்கள்; இவர்கள் பெண் ணுடனே பிறந்தும் பெருமைபிழந்தோர் என்றார்கள்; வீமன் பொறுத்தாலும் விஜயன் பொறானே என்றார்கள்; போரசர் கள் தடுக்கப்படாதோ என்றார்கள்; நற்குடியிற் பிறந்தா

ருக்கு இனி இவ்வூர் நல்லிருப்பாகமாட்டாது என்ருர்கள்; நாம் போய் இது கூடாது என்று முறையிட்டாலென்ன என்ருர்கள். இப்படிப் பலவும் சொல்லி யொன்றுஞ் செய்யமாட்டாதவர்களாகிக் கண்புடைத் தழுதார்கள். ஆஹா! தரும தேவதையாகிய பாண்டவர் பத்நினி, யாம் காண இத்துன்பமோ படுவதென்று சொல்லிக்கொண்டார்கள் சிலபேர். இது பொய்ச்சூதென்றறிந்தும் தரும தேவதை வஞ்சச் சகுனியுடன் ஆடவும் ஒப்புக்கொண்டாரே என்ருர் சிலபேர்கள். விதிவலியால் இது நிகழ்ந்ததேயன்றி வீரர் தமக்கு இது வருமோ என்ருர் சிலபேர்கள். இப்படியாக சனங்களெல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கக் கொடிய துற்சாதனன், சற்றும் மனமிரங்காமலும் கூசாமலும் பொற்கொடி போன்றவளைப் பூமியூடே யிழுத்துவந்தான். மங்கையும் மன்னர் சபையில்வந்து தோன்றினள். கண்ணீர் ஆருகப் பெருகத் தன் குழல் குழைந்துசோரத் தடுமாறுகின்ற உள்ளந் தனியேயிருந்து நாணத் தழலில் மிதிப்பாள்போல் நடுங்கி நின்ருள். வாய்விட்டுக் கதறினள்.

மண்டபத்துற்ற மன்னர் நிலைமை

நாணம் முதலாகிய நாற்குணங்களும் பெற்றுக் கற்பிற் சிறந்த உத்தமி, சபையிலிழுத்துவரப்பெற்று அழுது ஆற்றின போது மன்னர்கள், இது காணப்பெற்ருேமென்று தலைகுனிந்தார்கள். குருடென்றுரைக்குங் கொடியோனுகிய திருதராஷ்டிரன் முகம் கோணுதிருந்தான். இந்தக் கொடிய குருட்டு மன்னனும் அவனது முரட்டு மக்களாகிய இருவரும் கர்ன சகுனிகளு மன்றித் துயரடையாதவர் வேறு யாருமில்லை. வீமன் கதைமேற் கை வைத்தான்; விஜயன் வில்லைப் பார்த்தான்; மற்ற இளையோரிருவருஞ் சினம்மூண்டார்; இதனைப் பார்த்த

தரும மன்னவன், அவரை நோக்கிக் குறிப்பாலிது உணர்த் தினன்.

"தேம்போதனைத்து மெய்சாயும் சில போதலரும் சிலபோது
வேம்போதங்கு வாழ்வவெல்லாம் வெங்கானுடனேவேவாவோ
ஆம் போதாகுமது வன்றி ஆய பொருள்கள் அம்முறையே
போம் போதனைத்தும் போம் முன்னம் பொறுத்தீர் இன்னம்
[பொறு மென்றான்."

"தம்பியரே! தேனுடைய பூக்களிற் சில மெய்வாடும்; சில மலரும்; சிலவேகும்; அதுவுமல்லாமல், ஒருமலரே சிலபோது மெய்வாடி நிற்கும்; சிலபோது அலர்ந்து நிற்கும்; சில போதில் வெந்து நிற்கும். வேகும் போது, அந்தக் கானில் வாழு பவை யெல்லாம் வேகாவோ? இதற்கேன் துன்புறுகின்றீர் கள்! ஆம் போது எல்லாம் ஆகும்; பொருள்களெல்லாம் போம் போது வந்தால் போய்விடும்; இது உலகியற்கை. ஏன் பதறுகின்றீர்கள்; இது வரையிற் பொறுத்தீர்கள், இன் னம் பொறுத்திடுங்கள்" என்று சொன்னான். தாழ்ந்த கூந்த லுடன் தரையினில் வீழ்ந்து அழுது கொண்டிருக்கும் திரௌபதியைப் பார்த்துக் கொடிய பாம்பினுங் கொடியனா கிய துற்சாதனன்சொல்லுகின்றான்:-இந்த மன்னர் சபையில் உன் பெரிய மாமன் இருக்கின்றார்; உன் கணவ ரைவரும் அதோ இருக்கின்றார்கள்! இவர்களிருக்க இங்கு உனக்கு என்ன கேடு வந்துற்றது? ஏன் அழுகின்றாய்? கண்ணீர் என்பது நீலிகளாகிய உன்னைப்போன்ற பொது மகளிர்கட்குக் குறைவோ—என்று சொன்னான். பொல்லாதவன்இக்கொடுஞ் சொற்களைச் சொல்லலும் திரௌபதி ஒன்றும் பேசாதிருந்த பேரவையைப் பார்த்துத் தொழுதாள்; அழுதாள்; சோர்வுற் றாள்; "மல்லார்தடந்தோட் பெரியமாமா! மந்தாகினி மைந்தா!

எல்லா நெறியு முணர்ந்த உங்கட்கிதுவோ தர்மம்!!! இது பூமியிலுள்ளார் இயற்கையாமோ?'' என்று கதறினுள். அதனைக் கேட்டுப் பொருது நெஞ்சிரக்கமுடைய பீஷ்மர், துற்சாதனனைப் பார்த்து "மன்னற்கிளையோய்! தவறுபேசுதல் வழக்காருக மாட்டாது; அருந்ததிக் கற்புடையாளை யிங்ஙனம் பேசுதல் மன்னர் குலத்துக்குத் தகாது; மண்ணில் எக்குலத்தாருக்கு மியல்பில்லாத வழக்கும் வார்த்தையும் எங்கிருந்து கற்றீர்'' என்று சொல்லித் திரௌபதியைப் பார்த்து, "நீ கேட்க வேண்டியதை மன்னரவையில் தலைமைக் கொண்டிருக்கும் பெரிய மன்னனைக் கேட்டுக் கொள்'' என்றிசைத்தான். அவள் எழுந்து, மன்னரவையைப் பார்த்து, "பெரியோரே!

"மன் தோற்றனன் வென்சூதாகில் வழக்காற்
கொண் மின் மன்னவையின்
முன் தோற்றனனே என்னையுந்தான்
முன்னே யிசைந்து தனைத் தோற்ற
பின் தோற்றனனே சரியாகப் பெரியோர்
உண்மை பேசுகென
மின் தோற்றனைய நுண்ணிடையாள் விழிநீர்
வெள்ள மிசை வீழ்ந்தாள்"

என் மன்னவர் சூதாட்டத்தில் தோற்ருராகில் வழக்காற்றின் படியே பெறவேண்டியவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்; அவர் தம்மைப் பந்தயமாக வைத்துத் தோற்பதற்கு முன் என்னைத் தோற்ருரா? அன்றி தாம் தம்மை முன்னர்த் தோற்றுவிட்டுப் பின்னே என்னைத் தோற்ருரா? பெரியோர்களாகிய நீங்கள் உண்மையை யுரைத்துச் சாக்ஷி புகலவேண்டுகிறேன்'' என்று அழுது கேட்டாள். மன்னர்கள் தலைகுனிந்து, இராக்

கத்துடன் அழுது கேட்கும் அவட்கு சாக்ஷி சொல்ல மாட்டாமல் கொடிய மனமும் செயலும் பொருந்திய துஷ்டனுந் துரியோதன னெண்ணத்துக்கு ஒப்பாதவர்களாகியும், அவனுக்குப் பயந்து ஒன்றுஞ் செய்யத் தோன்றுமல் தலைகுனிந்து சித்திரப் பதுமைபோலிருந்து விட்டார்கள். அன்று அப்போவையிலிருந்த காட்சி புகலத் தரமன்று; புகலுதலும் பாவமாகும். இங்ஙனம் ஊமைகள் கூட்டம்போலச் சபையிலுள்ளார் ஒன்றும் உண்மை யவட்கு உரையாமல் நடுங்கியிருந்தபோது, கொடிய நூற்றுவரிற்கடைக் குட்டியாகி சேற்றில் தாமரையாகி நன்மை தீமை யென்பதுணர்ந்துள்ள விகர்ணன் என்பான், முன் எழுந்து, "வாள்வேந்தரே! பொல்லா நெறியிற் போகாவண்ணம் உண்மையைப் புகலல் கூடாதோ? முறையோவென்று அவை முன்வந்து ஒரு பெருங்கற்புடைய மடமங்கை, கொடியோர் செயலுக்கு நடுங்கிப் புகல்புகுந்து கேட்கும்போது, ஊமையர் போலிருக்கின்றீர்களே! எடுத்துச் சொன்னல் மன்னவன் கோபிப்பானென்று அஞ்சுகிறீர்கள் போலும். இருந்தாலும் உண்மையில் தெரிந்த வொன்றைச் சமயம் நேர்ந்தபோது எடுத்துச் சொல்லல் முறைமை யல்லவோ? கடனன்றே? உத்தம குலத்துப் பிறந்தவர் கூறமாட்டார்களோ? பேசாமலிருப்பது இழிவன்றே?

"தன்னே ரில்லா நெறித்தருமன்
தனவென் றுரைக்கத் தக்கவெல்லாம்
முன்னே தோற்றுத் தங்களேயும்
முறையே தோற்று முடிவுற்றுன்
சொன்னே ருரைக்குத் தான்பிறர்க்குத்
தொண்டாய் விட்டுச் சுரிகுழலேப்
பின்னே தோற்க உரிமையினுற்
பெறுமோ வென்று பேசீரோ?"

தனக்குச் சமானம் யாரும் பெருத நல்ல நெறியுடைய தருமராஜன், இக்கொடியோர் வஞ்சனைக் குட்பட்டு தன தென்று சொல்லத்தக்க பொருள்களை யெல்லாம் முன்னே தோற்றுப் பின்னர்த் தங்களையும் முறையாகத் தோற்று முடிவானுன். ஒருவன் தான் பிறர்க்குத் தொண்டான பிறகு தன் மனையாளைத் தோற்ருனுதல் உரிமையினுற் கொள்ளத்தக்கதில்லை யென்று சொல்லமாட்டீர்களா?'' என்று துணிவுடன் எடுத்துரைத்தான். மன்னர் அவையி லிருந்த அந்தக் கொடிய நால்வரொழிய மற்றெல்லா ருடைய மனமும் மகிழ்ந்தது. முகங்கள் மலர்ந்தன. “இவனே தக்கோன்'' என எல்லாரும் மனத்துட் கொண்டார்கள். உரைக்கலும் செய்தனர். கண்டான் கர்ணன். நெஞ்சில் அழல் கொண்டான். அந்த இளவல் முகம் நோக்கிக் கூறு கின்ருன்:—“விகர்ண! என்ன இது!! இளங் கன்று பய மறி யாதென்பது உண்மையாயிற்று; இங்கு வந்திருக்கின்ற மன்னவரில் நீதான் அறிவா லுயர்ந்தவன் போலும்; ராஜநீதி களெல்லாம் ந்ன்கு ஆய்ந்தறிந்து உரைத்தனை போலும்; உன்னை யொழிந்தால், இவ்வழக்கையிங் கொருவரும் குறிக்க மாட்டாரென்று நீ சொல்லவந்தாயோ? விகர்ண? நீ தான் சொல்லல் வேண்டு மென்று உன்னைத்தனியே குறித்து யா ரேனும் கேட்டார்களோ? சொல்லவந்தாலும் பெரியோரைக் கேட்டுத் தெரிந்து கொண்டல்லவா சொல்லல் வேண்டும்; தருமன், தான் படைத்துள பொருள்களை யெல்லாம் தோற் றுப்பின் தம்பியருடன் தன்னையுந் தோற்ருனென்ருல், அவன் மனைவியாகிய இப்பெண்மகளும் அவன் பொருள்களி லொன்றல்லளோ? தான் தோற்ற பொருள்களாகிய அரசும் வாழ்வும் செல்வமும் அரண்மனையும் பிறவு மெல்லாம் வென் றவனுக்குக் கொடுப்பானுயின் அவனது பொருள்களில்

ஒன்ருகிய இம்மடமங்கையும் வென்றவனுக்குக் கொடுத்தாற் குரியானல்லனு? இல்லாளும் ஒரு பொருளெனவே கொள்ளு தல் மானுடரின் இயற்கையன்ரூ? மகிதலத்து வேந்தாகி இங்கே கூடியுள்ளவர்களில் யாரேனும் இப்போது யான் கூறிய மொழிக்கு எதிர் மாற்றம் கூடுமானுல் உரைத்திடலாம்'' என்று வெகுண்டு சொன்னுன்.

துகிலுரிதல்

கன்னன் கோபித்துச் சொன்ன வார்த்தைக்கு எதிர் வார்த்தை யாரும் பேசாதிருந்தனர். சபைக்கு நாயகன் நல்லவ ஞயின், சபையிலுள்ளார் என்றும் நல்லனவே சொல்லி, நன் மைகளையே புரிவார்; நாயகன் தீயனுயின், சபையில் நல்லவர்க ளிருப்பவராயினும் மானத்துக் கஞ்சி நல்லன சொல்ல முன் வர மாட்டாரன்ரூ? ஆகலின், மறு மாற்றங் கூறுவாரிலரா ஞர். அப்போது, துரியோதனன்,

"என்ன வெகுண்டிடுகின்ற வெல்லைதனில்
எழுவுறழ் தோளிராச ராசன்
தன்னனைய கொடுங்கோபத் தம்பியையின்று
உம்பிதனைத் தகவோனென்ற
மன்னவையினெதிரே யிம்மானமிலா
ஐவரையும் வழக்கு வார்த்தை
சொன்ன கிளிமொழி யினையும் துகிலுரிதி
எனவுருமிற் சொன்ஞன் மன்ஞே"

தன்போலும் கோபமுடைய தம்பி துற்சாதனனைப் பார்த்து, "தம்பி! இன்று, இச்சபையிலேறிப் பிதற்றிப்போன உன் தம்பி விகர்ணனைத் 'தக்கோன்' என்று சொன்ன இம் மன் னர்கட்கு எதிரே, இந்த மானமிலா ஐவரையும் வழக்கு வார்த்தை யாடிய அத்திரௌபதியையும் துகிலுரிந்திடுவாய்''

என்று சொன்னான். கொடியவனுடைய இவ்வார்த்தையைக் கேட்டலும் சபையிலுள்ள மன்னர்கள், தத்தம் மனம் மடிந் துருகித் தரும மன்னனது முகத்தைப் பார்த்து வருந்தித் தத் தம் முகத்தையும் பார்த்துக் கொண்டார்கள். வீமன் கதையைப் பார்த்தான்; விஜயன் வில்லைப் பார்த்தான்; மற்ற இருவரும் கோபித்து நின்றார்கள்; இவ்வெல்லாவற்றையும் பார்த்த தருமன், சபை மன்னர்களையும் தம்பி மார்களையும் குறிப்பின் அடக்கிவைத்தான். துஷ்ட துச்சாதனன் வன் பொடு வந்து, "தா, துகில்" என்று சொல்வதற்கு முன், தரு மன், "இந்தா! வஸ்திரம்" எனத் தன் வஸ்திரத்தைக் கொடுத்தான்; தம்பிமார்களும் பின் வாங்காது தங்கள் தங்கள் உத்தரீயங்களை வாங்கிக் கொடுத்தார்கள். அவற்றை யலக்ஷியமாக அவன் வாங்கிக்கொண்டு, அஞ்சாமல் மடமங்கை யிடம் சென்று துகிலுரிய நின்றபோது அப்பெண்தெய்வ மன்னாள் வேறு துணை காணாது, 'திக்கற்றவர்க்குத் தெய் வமே துணை' என்ற பழமொழிக் கேற்பத் தன்னிரண்டு கை களையுங் குவித்துக் கண் மூடி எம்பெருமானிணையடிக் கீழ் இருதயத்தை வைத்துத் தியானித் திருந்தாள்.

இரண்டு கண்களிலும் நீர் ஆறாகச் சொரிந்து கொண் டிருக்கவும் கூந்தல் சோரவும் சேலையைப் பிடித்த கை சோர வும், சரீரம் நடுங்கவும், வேறு ஓர் சொல்லும் கூறாமல், "கோவிந்தா! கோவிந்தா!!" என்று அரற்றிக் குளிர்ந்து நாக்கில் நீரூற உடலிற் புளகம் கொண்டு உள்ள முருகி நின்று விட்டாள்.

"அருமறை சொல்லிய நாமம் ஆயிரமும்
உரைத்தழைக்க அமரர் போற்றும்
திருமலர்ச் செஞ்சேவடியோன் திருச்செவியி
லிவண்மொழி சென்றிசைத்த காலை

மருமலர் மென்குழல் மானின் மனம் நடுங்காவகை
மனத்தே வந்து தோன்றிக்
கரிய முகிலனையானும் பிறரெவர்க்குத் தெரியாமல்
கருணை செய்தான்."

வேதஞ் சொன்னபடி அப்பெருமானது ஆயிர நாமங்களையுஞ் சொல்லி மெல்லியலாள் அழைத்தபோது, இவளது வார்த்தை செவிப்படு முன் கருணைப் பிரான், ஒருவருக்கும் தெரியாமல் அவள் மனத்தே வந்து தோன்றி, முகில் போலக் கருணையினால் உதவி செய்தார். எம்பெருமா னருளிருப்பின் எதற்கேனும் குறையுண்டாமோ? சபையிலுள்ளோர் யாவரும் ஆச்சரியப் படும்படியாக அங்கு என்ன நடந்தது? அவள் உடுத்த வஸ்திரத்தைத் துற்சாதனன் உரிந்தபோது வேறொரு வஸ்திரம் தோன்றிற்று. ஆஹா! அப்படியா வென்று சொல்லிப் பின்னும் உரிந்தான். மற்றொன்று தோன்றி நின்றது; அடா! என்ன ஆச்சரியம்!! முன்னரே அறிந்து சேலைகள் இரண்டு மூன்று கட்டி வந்திருக்கின்றாளே! என்று கூறி, பின்னும் உரிந்தான்; இன்னொன்று தோன்றிற்று; உடனே கோபம் பிறந்து வேகத்துடன் அதனையும் உரிந்தான்; வேறொன்றும், அப்பால் மற்றொன்றுமாக அடுக்கடுக்காகச் சேலைகள் வளர்ந்துகொண்டே வந்தன. சேலைகள் ஒன்றற்கொன்று உயர்ந்தனவாகப் பல நிறங்களாகக் கூடத்திற் குவிந்தன. கணக்கற்றவைகளாகக் குவிந்தவற்றை மன்னன் குறிப்பறிந்து பற்பல வீரர் அப்புறம் எடுத்தெடுத்தேக, உரிவோனாகிய துஷ்டனும் மெய்சோர்ந்து கை சலித்து இளைத்து நின்றான்.

பீஷ்மன்முதற் காவலர்கள்வரை எல்லோரும் மெய்நடுங்கிக் கண்ணீர்சொரிந்தார்கள். செங்கைகள் குவித்து அவளைப்

போற்றி, "இவளே கற்பினுக்கும் மாபினுக்கும் தெய்வ" மென்றார்கள். வானோரும் கூவிக் களித்து ஆசி கூறினார்கள். துற்சாதனன் கைசலித்தும் மெய் சலியாமல் நின்றான். துரியன், மானமும் கோபமும் பொங்க நின்றான். கன்னன் பிரமித்துநின்றான். சகுனி அகன்ற வாய்திறந்தபடியே நின்றான். மற்றுள்ளோர் பயந்து நின்றார்கள். சபையில் மூச்சுக் காற்றும் ஆடாமல் ஒலியற்றிருந்தது. அப்போது, வீமன், கதை மேல் கைவைத்துத் துஷ்டரைப் பார்த்து, "அருள் நிறைந்த தருமபூபதி 'ஆகாது ஆகாது' என்று அடிக்கடி அடக்கியதால் அடங்கி நின்றோம்; மருளால் மயங்கியேனும் நடுங்கியேனும் இருந்திடவில்லை; நீங்கள் நூற்றுவரும் ஒரு பொருளல்லவெமக்கு; பொருவதாயின், நூற்றுவரும் வருக" என்றான். நெடியோனை யழைத்தழைத்துக் கூப்பிடுவாளுடைய நெடிய கற்பும், சேலை மீளாது வளர்ந்து நின்ற அற்புதமும் வீமனது போர்வலியும் கண்டும், துஷ்ட நெஞ்சினனாகிய துரியோதனன் தந்தையைப்போற் குருடனாகித் துற்சாதனனைப்பார்த்து, "பைந்தொடியைக் கொணர்ந்து இனியென் மடியின்மேல் இருத்துக" எனப் பணித்திட்டான். மாமன்னவர் வாய்மென்றிட்டார்கள். தம்பியும் அருகுபோனான். அப்போது, தெய்வக் கற்பினாள், மாயனை நினைத்த மனத்துடனே, "அற்பன், நானிருப்பதற்காகக் காட்டிய அத்தொடை வழியே பட்சிகள் கொத்தித் தின்னும்படியாக ஆருயிர் விடட்டும்" என்று கூறிப் பின்னும், ராஜ ஸபையில் "என்னைக் கொணர்ந்து பயப்படாமல் என் வஸ்திரத்தையும் தீண்டி என் கூந்தலைத் தொட்டிழுத்துச் சபைதனிலே தகாதன சொன்ன இந்த அற்பத் துஷ்டர்களைப் போரிற் சிரங்கொய்து தேங்கும் குருதி கொப்பளிக்கும் போதல்லாமல் நான் என் விரித்த கூந்தலை முடித்திடே"னென்று சபதம் கூறினாள்.

"பாஞ்சாலிக்குப் பழுதுரைத்தவனுடைய உடலை எனது படையாலே மோதி நிணங்கள் சொரியத் துண்டம் செய்து அவனைத் துணைவருடன் மாளும் படியாகப் போரிற் கொல்லு கின்றேன்; அன்றியும், பெண்ணணங்கின் கூந்தலைப்பிடித்துத் துகிலுரிந்தோனுடைய உடலிரத்தத்தை வாரியள்ளித் தாகம் தீர்க்கும் வரை நான் என் கைகொண்டு நீர் குடிப்பதில்லை; இவர்களைக் கொலற்கென்று எடுத்த இச் சரீரம் சோராமலி ருத்தற்காகவே, எனக்குத் தாகம் மிகுந்தபோது இக் கதை கொண்டு நீரினை யேற்றி மீதேறிவிழும் திவலைகளையே குடி நீராகக் கொண்டு தாகம் தீர்ப்பேன்" என்று வீமன் சொன் ஞன். "என்னைப் பாலிய முதற் பகைத்து, எங்கள் ஐவருக் கும் பகையாகப் பாம்புக் கொடியோனைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்த இந்தக் கர்ணனது உயிர் கவர்வேன் நான்" என்று விஜயன் வஞ்சின முரைத்தான். நகுலனும் சகாதேவ னும், சௌபலனையும் சகுனியையும் வெஞ்சமாற் கொல்வோ மென்று வெகுண்டு சொன்ஞர்கள்.

இம் மொழி கேட்டு அரசர்கள் ஏங்கி நின்ரூர்கள். இனி உலகத்துக்கு உற்பாதமே வருமென்று பலர் சொன்ஞர்கள். பாஞ்சாலி கற்பு இப்பாதகுலத்தைத் தகித்துவிடுமென்று கூறி ஞர்கள். அந்த சமயத்தில் நூற்றுவரையும் பெற்ற அறிவும் வழியுமிலாத பெரிய மன்னன், எழுந்து துணை கொண்டு கற் பரசியின் அருகே வந்து, அவள் பாதம் பணிந்து "உத்த மியே! என் புத்திரர்கள் தெரியாமல் மைத்துனர் முறை கொண்டாடி இத் தீங்கிழைத்து விட்டார்கள்; எத்தனை தீமை யவர் புரிந்திருந்தாலும் அவற்றை மறந்து விடவேண் டுகின்றேன்" என்று ஒரு கோடிக்கணக்காகப் பிதற்றிப் பின் னும் ஐவர்க்கும் சமாதானம் செய்யவந்தான். தனித்தனியே ஐவர்க்கும் தக்க இச்சகவார்த்தைகள் கூறிக் கொடுங் கோப

மகற்றி "நீங்கள், இந்தச் சூது போரில் இழந்துள பொருள் களையும் சேனைகளையும் கைக்கொண்டு அருந்ததி போன்றாளை யும் அழைத்துக் கொண்டு இங்கே சிறிதும் நில்லாமல் உங்கள் நகருக்கு ஏகி விடுங்கள்; நானும் உங்கள் தந்தை பாண்டுவாகிய என் தம்பியும் இணை பிரியாது பகை கொள் ளாமலிருந்து வாழ்ந்தேம். எத்தனையோ விளையாட்டுகள் ஆடி யிருப்போம்; ஒருவர்க் கொருவர் செறுத்துக் கோபித்துக் கொண்டதில்லை. எனக்கு என் மைந்தரென்றும் அவன் மைந்த ரென்றும் வித்தியாஸமே கிடையாது. இனிமேலாயினும் நீங் கள் நூற்றைவரும் எங்களைப் போலிருந்து வாழ வேண்டுகின் றேன்'' என்றுசொல்லிப்படையும் பாரும் குடையும் குலமும் கொடுத்து விடையும் கொடுத்தான்.

நகர் நீங்கிக் காடேகல்.

அப்போது குடியைக் கெடுக்கத் தோன்றிய சகுனியா னவன், யாவரையும் பார்த்து, "எந்தக் கருமமானாலும் முன் னர்த்துணிந்து ஆலோசித்தே யாரம்பித்தல் வேண்டும்; எல் லாம் முடிந்த பின் உருகிப் பேசுதல் அழகன்று. தீயினாற் சுட் டபுண் உள்ளாறும். இது வாயினாற் சுட்டபுண்; ஆறவே மாட்டாது. பேயினாற் புடையுண்டவர் மறப்பரோ; வலிய கற்கள் விலகிப் பின் கூடிக் கொள்வது இயற்கை யன்று; இந்த உருக்கம் ஆரம்பத்திலிருக்குமாயின் நன்றாகவே முடிந் திருக்கும்'' என்று சொல்லிப் பரிகசித்தான். இதனை நோக் கிய துரியனும் கன்னனும் தம்மிற் பார்த்துத் துஷ்டதுற்சா தனனைத் தூண்டிவிட்டார்கள். அவன் தருமனைப்பார்த்து, "தரும சபையில் யாவரும் அறியத் தோற்ற பொருள்களில் ஒன்றும் தரமாட்டோம்; நீங்கள் அடிமைத்தனத்தை யொ ழித்துக் கொண்டு போவீராயின் விரதத்துக்கும் சபதத்துக்

கும் அழிவில்லையல்லவா? உங்கள் தொண்டொழிந்து தந்தையின் அருளால் இவ்விடம் விட்டேகி நாட்டையும் துறந்து கானில்போய் வாழக்கடவீர்கள்'' என்றுசொன்னான். கேட்ட திருதராட்டிரன், வஞ்ச நெஞ்சுடன் தம்பி விதுரனையும் குல முதல்வன்பீஷ்மனையும் கலந்தாலோசித்தான். ''கோபம்மூண்டு சபதஞ் செய்த நால்வரும் இனி நாமென்ன சொன்னாலும் கேட்க மாட்டார்கள்; மனுமுறைதவறலுமாகாது; குலமானமும் அழியப்படாது; அழியுமாயின் வசைவந்து சேரும்'' என்று கலந்தாலோசித்துப் பீஷ்மன் தருமனைப்பார்த்து ''உன் உணர்வு உனக்கே யுண்டு. வென்று கொண்டவற்றைத் தம்பியர் கொடுக்கமாட்டார்கள்; உமது பெருமைக் கேற்ப பின்னுற இழந்த வெல்லாம் பெறப்போகிறீர்கள். முன்னுளோர் செய்த முறைப்படி செய்யல் வேண்டும்'' என்று சொன்னான். துரோணாசாரியரும் அயோத்திமன்னன் அரிச்சந்திரன் கதையையுமெடுத்துக் காட்டி ''நீங்கள் உரை செய்தபடியே உலகத்தைச் சில நாட்கள் இழந்து காட்டில் வசித்திருந்து வருவதேவழக்காகும்'' என்றார். திரௌபதியுடன் ஐவரும் காட்டில் பன்னிரண்டாண்டுகள் வசித்துப் பின் ஓராண்டு ஏதேனும் ஒரு நகரில் மறைந்து வாழ்ந்து பின்னர் வந்து அரசும் வாழ்வும் பெற்றுக் கொள்ளுங்கள்; மறைந்து வாழும் நாட்களில் மறைந்து வாழும் உங்களையிவர்கள் கண்டிருப்பவரானால், மீண்டும் இவ்வாறே காடடைய வேண்டிவரும். ஜாக்கிரதையாயிருங்கள்'' என்று கின்னரும் குருபணித்திட்டார்; பீஷ்மர் முதலானோரும் ஆம் என ஒப்புக் கொண்டார்கள்.

அப்போது, திரௌபதி பெரியோரை வணங்கி, ''இன்று எமது அடிமையை நீக்கிக் கொள்ளுமாறு மற்றும் ஒரு முறையாடல் வேண்டும்'' என்றாள். தருமனும். ''தையல் சொற்

படியே செய்தல் வேண்டுகின்றோம். நாங்கள் தொண்டராகிக் காடேகமாட்டோம். ஒருமுறை யாடித் தொண்டினை நீக்கிக் கொள்வோம்" என்றான். இருதிறத்தாரும் ஒப்புக்கொள்ள மீளவும் ஆடலுற்றார். "இப்போது என்ன பந்தய" மென்றான் சகுனி. தருமராஜன், தனது தேவி சொல்ல மாயனைப் பத்தியால் வணங்கிப் பன்னிரு நாமம் ஏத்தி, "யான் செய் புண்ணிய மனைத்தும் பந்தயமாக வைத்தேன்" என்றான். உருட்டிய கவறு மாயன் அருளினாலே, சகுனி யெண்ணுந் தொகைக்கு வழிப்படாமல் தருமனுக்கே வெற்றி யளித்தது. குருடன் மக்கள் மனம் இருண்டு போயது. உடனே, அடிமைத் தனத்தை விலக்கிக் கொண்டு, தம்பியரும் மனைவியும் சுற்றித் தொடர்ந்து வரப் பெரியோர் பாதம் வணங்கித் தருமராஜன், தன்னை நோக்கி யழுது கொண்டிருக்கும் பிரஜைகட்கு ஆறுதல் சொல்லி, அமைச்சர் மன்னர்க்கும் அடைவே செய்து, யாவரும் விம்மி யழுது நிற்கத்தான், இன்பத்திலும் துன்பத்திலும் ஓரே வயத்தனாகிப் புறப்பட்டான். நகரத்தார் யாவரும் கண் புடைத்து அயர்ந்து நின்றார்கள். அந்தத் துஷ்ட நால்வரன்றி வேறு யாவரே மகிழ்ச்சி கொள்வார்? எல்லாரும் துக்கித்து நின்றார்கள்.

சபாபர்வம் முற்றியது.

ஆரணிய பருவம்

காமியவனச் சருக்கம்.


"மற்கொண்டு வகுத்தனைய சிகரத்தண்டோள்
வாளரக்கன் குலத்தோடும் மடியமுன்னம்
விற்கொண்டு சரந்தொடுத்துப் புரையில் கேள்வி
விண்ணவர்தம் துயர்தீர்த்த வீராமன்
கற்கொண்ட அகலிகைதன் உருவம்மீளக்
கவின்கொள்ளக் கொடுத்ததிருக் கமலபாதம்
சொற்கொண்டு துதித்தெழுந்து தள்ளிநாளும்
தொழுமவரே யெழுபிறவித் துவக்கற்றாரே"

பாண்டவர் வனமடைய மன்னர்வந்து காணல்

தங்கள் கௌரவத்தையும் பூமியையும் பகைவர்களாகிய தாயாதர்கள் வஞ்சத்தால் கவர்ந்துகொள்ளலும், மெய்யும் மரபுமே விரதமாக் கொண்ட தருமனும் தம்பிமாரும் திரௌபதியுடன், நாலாயிரம் முனிவர் தம்மைச் சூழ்ந்துவர நடந்து போய்க் காமியவனத்தைச் சேர்ந்தார். சந்தணமும் அகிலும் மணக்கின்ற அருவிகளும் சுனைகளும் பொருந்தி, மதயானைகள் பிடிகளுடன் திரிந்துகொண்டிருக்கும் வனவாரிகள் நிறைந்து, காட்டாறுகளின் ஈரமும் மர நிழல்களும் செறிந்து காயும் கனிகளும் மிகுந்து எப்போதும் மேகங்கள் நீர் சொரிந்துகொண்டிருக்கும் தன்மையுடையதாக இருந்தது அந்தக் காமியவனம். அவ்வனத்தில் ஐவரும் முனிவருடன் புகுந்தபிறகு, சாதாரணக் காட்டுத் தீயின் புகைகள் மாறி யாகத் தீயின் புகைகள் மிகுந்து புண்ணியம் வளர்ந்து தம் முள் பகைமைபெற்ற காட்டு மிருகங்கள் ஒற்றுமைகொண்டு வாழ ஆரம்பித்தன; இவர்கள் சென்று, தம்முடன் வந்த

முனிவர்க்கும் தமக்கும் குடியிருந்து வாழ்தற்கும் சென்று உலாவுதற்கும் சீர் செய்துகொண்ட தன்மையால் அவ்வனம் இமையமலைச் சாரல்போன் றிருந்தது.

துருபதராஜனும் திட்டத்துய்மனும் மற்றும் சோமகமன்னரானவர்களும் விராடமகாராஜனும் யாதவ குலத்துதித்த மாதவப்பிரானும் மற்றும் நட்பினர்களான மன்னவர்களும் அத்தினபுரத்தில் நடந்தேறிய அக்கிரமச்சூது போரையும் அறன் மைந்தன் தம்பியருடன் பாரிழந்து காடேகிய தன்மையும் கேட்டு மனங்கவன்று ஐவர்களையுந் தேடி யவரிருந்து வாழும் காமியவனத்திடைச் சென்று அளவளாவி யிருந்தார்கள். பாதகச் சூதின் சூழ்ச்சியையும் திரௌபதியை மன்னரவையி லேற்றி வேண்டுமென்றே அவமதித்த தன்மையையும் அரசும் செல்வங்களும் கவர்ந்து கொண்ட செய்தியையும் விவரமாக முனிவர் சொல்லக் கேட்ட மன்னவர் உளம் மாழ்கி வெகுண்டெழுந்து இப்போதே அத்தினபுரியின் மேற் படையெடுத்துச் சென்று, துஷ்டர் நால்வரையும் கொன்று மண்டபத்தைத் தரை மட்டமாக்கிக் கௌரவப் பூண்டே இல்லாமற் செய்திடுவோ மென்று கூறிப் படபடத்துப் பதறி நின்றார்கள். இவைகளைக் கேட்டு நின்ற கண்ணபிரான் யாவரையும்சினமாற்றி, "நடந்தது கடந்துபோயது! விதிவசத்தால் நேர்ந்த தன்மையிதுவாகும்; இவையெல்லாம் ஒரு நன்மையின் பொருட்டே முடிந்திருக்கு மென்றெண்ணுகின்றேன்! மன்னவர் ஐவரும் மங்கையும் விரதம் கொண்டுவனம் வந்துறைகிறார்கள்; மன்னவரும் மறையவரும் பெரியோரும் உரியோரும் சபையிற் பணித்ததைப் புரிந்து வருவோ மென்று ஒப்புக்கொண்டு வந்திருக்கிறார்கள். மற்றும் வஞ்சினமும் கூறி வந்திருக்கின்றார்களாகையால் அவைகளைச் செய்து முடிக்குமுன் நாம் வெகுண்டு கலகம் விளைத்திடல் கூடாது.


CVMorgan

பாவிகள் என்றேனும் அழிவர் என்பது திண்ணம். அறவோர்கள் வெகுண்டு தமது தருமம் கெடும் மார்க்கத்தைத் தேடிக் கொள்ளல்கூடாது. உங்கள் எல்லோருடைய துணையும் பாண்டவர்க்கு என்று மிருக்கின்றது உண்மையாகும். இவர்கள் விரதமிழைத்தும் மீளும் பதினன்காவது வருஷத்தில் பெரும் போர் மூளத்தான் போகின்றது; அப்போது நீங்கள் எல்லீரும் இவ் வைவரது பக்கத்துத் துணையாக நின்று வெற்றியிவர் வயினுறும்படியாக உதவுவீர்கள்; இப்போது கலகம் செய்திடல் வேண்டாம்'' என்று தக்க நியாயங்களுடன் பேசி, அவர் தம் கொதிப்பை யடக்கினர். மற்றும் தருமபுத்திரைப் பார்த்துக் கூறுவாராயினர்.

“தர்ம ராஜரே! உங்கள் உறவினர் வீடுகள் தோறும் உங்கள் உங்கள் புத்திரர்களை யிருந்து வாழும்படியாக ஏற்பாடுகள் செய்துக் காட்டிடை நீங்களிருந்து கழிக்க வேண்டிய நாள்களைக் கழித்து மீண்டு நாட்டை வந்து சேரலே தருமமாகும். உங்கள் தாயைச் சுபலன் பாவையருகுற அனுப்பி வையுங்கள். உங்கள் தனையர்களாகிய உப பாண்டவர்களை யாகசேனனிடம் ஒப்பியுங்கள்; பின்னையும் வேண்டுவோரிடம் அனுப்ப வேண்டியவர்களை யனுப்புங்கள். நீங்கள் ஐவரும் தனிமையிற் காடு சேர்ந்து வாழுங்கள். இதுவே செய்ய வேண்டிய காரியம்! இதுவே விரத பலனைப் பெறும்மார்க்கமாகும்'' என்று கிருஷ்ண பகவான் சொன்னர். மாதவன் வகுத்துச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு யாவரும் களித்தார்கள். உதிஷ்டிரரு மிசைந்தார். அங்ஙனமே தம்முறவினரை யவ்வவ் விடங்கட்கு அனுப்பச் சம்மதித்தார்கள். தாங்கள் பன்னிரண்டு வருஷங்களும் பல காடுகளில் திரிந்து வசித்திருக்கலை மேற்கொண்டார்கள். இரண்டொரு நாட்கள் கூடியிருந்து, மன்னவர் உறவினர் யாரும் தமக்குத் தமக்கு ஒப்பித்த கடமையுடன் தரும

னுக்கு அன்புரைகள் கூறித் திரும்பினார்கள். யாகசேனன் குழந்தைகளுடன் பாஞ்சால நகரம் சேர்ந்தான். கண்ணபிரான் துவாரகை சேர்ந்தார். மற்றவரும் தமது தமது நகரம் சென்று சேர்ந்தார். மன்னவ ரைவரும் மங்கையுடன் வனத்திடைத் தங்கினார்கள்.

வியாஸன் வரவு

அந்தச்சமயம், வேதங்களை வகுத்தவரும் முனிவர்களிற் பெரியவரும், பாண்டவர்கட்குத் துன்பமுற்ற விடத்து உதவுபவரும் அவர்கள் மூதாதையுமாகிய வியாஸ பகவான், அவரிருக்குமிடத்துக்கு வந்துசேர்ந்தார். அவரைக் கண்ட வுடன் யாவருமெழுந்து வணங்கிப் போற்றி யாஸனத்திருக் கச்செய்து, அவரது அநுமதியின்மேல் யாவரும் வீற்றிருந் தார்கள். அவரது நல்வரவினால் தாங்கள் இழந்த பாக்யங் களையெல்லாம் பெற்றனர்போலச் சந்தோஷித்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போது, அத்தினபுர மண்டபத்திற் கழைத்துத் துரியோதனன் தங்கட்குச் செய்துள்ள வஞ்சனை களையெல்லாம் சொன்னார்கள்; வருந்தினார்கள். முனிவர், அவர்களைப்பார்த்து, "வீரர்களே! நடந்து கழிந்துபோன வற்றை நினைத்தலும் பேசலும் வருந்துதலும் வீரர்க்கும் பெரியோர்க்கு மழகன்று. பிரிந்த மனமுடைய தாயத்தாரு டன்கூடி வாழ்தலினும் பகைகொண்டு நீங்கலே இனிதென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்கள். எல்லாம் விதியின் செயலே யாகுமன்றி வேறாக ஒன்றும் விளைந்திடமாட்டாது. இங்ஙனம் துன்பம் அநுபவித்து வருந்திய அரசர்கள் நீங்கள் மாத்திரம்தான் என்று எண்ணிவிட வேண்டாம். முன் கிருதயுகத்தில் செங்கோலுடன் அரசாண்டிருந்த நளமகா ராஜனென்பவன், வஞ்சனையாற் சூதுக் கிழுக்கப்பட்டுச் சூதாடி அரசும் வாழ்வும் செல்வமுமெல்லாம் தோற்று வன

மடைந்து வருந்தியிருந்தான் என்னும் கதையை நீங்கள் கேட்டிருக்கலாம். மேலும் உத்தமர்கட்குத் துன்பங்கள் அடுக்கடுக்காக வருதலினாலேயே, சுடச்சுட ஒளிரும் பொன் போல், கீர்த்திபெறுகிறார்கள் என்பதும் உலகங்கண்ட உண்மையாகும். இங்ஙனம் நிகழ்ந்தவெல்லாம் நன்மையின் பொருட்டாகவே கூடியிருக்குமென்று அறிவாளர்களாகிய நீங்கள் நினைத்தல்வேண்டும். மற்றும் ஒரு அரிய விஷயம் உங்கட்குத் தெரிவித்துப் போம்பொருட்டு நான் இங்கு வந்துத் தோன்றினேன். அதனைச் சொல்லுகிறேன்; கேளுங்கள்! இந்தத் துஷ்டர்களை வென்று என்றும் மீளாச் செல்வத்தைப் பெறுதற்கு உங்கட்கு இன்னும் பலமும் படைகளும் வேண்டும். சிவபிரானிடம் பாசுபதாஸ்திரம் பெற்று வருதல்வேண்டும். அந்த அஸ்திரத்தைக் கையிற் கொண்டுளாருக்கு எந்தப்போரிலும் தோல்வியென்பதே கிடையாது. அஸுரர் தானவர் ராக்ஷஸர் அமரர் முதலிய யாவரையும் வென்று கீர்த்திபெறற்குரியது. அதனைப் பெறுதல் சாதாரண காரியமாகமாட்டாது. அசஞ்சலமான பெருந் தவஞ்செய்துதான் சிவபிரானது தரிசனத்தைப் பெறமுடியும். தவத்துக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டு அப்பெருமான் பிரத்தியக்ஷமாகிவிடுவாரானால், பின்னர் அந்த அஸ்திரம் கையில் கிடைத்து விட்டதாகவே கொள்ளலாம். எல்லாம் தவத்தின் சிறப்பினால் தானிருக்கிறது. தவஞ்செய்து முடிப்பதற்குள் சோதனைகள் அநேகம் வரும்; அவற்றுக் கெல்லாம் ஈடுகொடுத்து மனந்தளராமல் நினைத்து கிடைக்கும் வரையில் உறுதியாயிருத்தல் வேண்டும். இப்பெருங் காரியத்தை முடித்து அந்த அஸ்திரத்தைப் பெறுதலில், உங்கள் ஐவரிலும் விஜயனே தகுதியுடையவன். இளைஞர் இருவரும் சிறுவர்கள். வீமனின்றி உங்கள் வனவாழ்க்கை கஷ்டமின்றி முடியாது.

அரக்கரும் துஷ்ட மிருகங்களும் பகைவர்களுடைய சூழ்ச்சி களும் இடையிடையே நேரக்கூடுமாதலால், வீமனது துணை இடையின்றிவேண்டியிருக்கும். ஆகையால் அர்ச்சுனனை மாத் திரம் தவத்துக்குத் தனியே அனுப்பிச் சிவபிரானது தரிசனத் தைக் கண்டு அந்தச் சிறப்புடைய பாசுபதாஸ்திரத்தைப் பெற்றுவரும்படியாகச் செய்யுங்கள். காலத்தைக் கழித்திடல் கூடாது. துணிந்த கருமத்தை விரைந்து செய்திடல்வேண் டும். சோம்பி யிருக்கவேண்டாம். இப்போதே அர்ச்சுன னைத் தவத்துக்கு அனுப்புங்க"ளென்று சொல்லி அவர்க ளால் வணக்கமும் பெற்று எழுந்து மறைந்தார். ஐவரும் ஆலோசித்துத் தேறி அர்ச்சுனனைத் தவஞ் செய்தற்கனுப்பி னுர்கள். வில்விஜயனும் நால்வரிடமும் நங்கையிடமும் அநு மதி பெற்றுப் புறப்பட்டு, இயக்கர்கள் வழிகாட்ட நெடு வனஞ் சேர்ந்தான்.

அர்ச்சுனன் தவ நிலை

மரவுரியும், சடைமுடியும் தரித்துக் கையில் வில்லும் தோளில் அம்பறாத்தூணியுஞ் சுமந்து, நெடுவனங்களும் சிறு மலைகளுந் தாண்டி, இமயத்தின் சாரலில்சென்று, "இதுதான் உலகுடைப் பேரம்மையாகிய பார்வதியைப் பெற்ற மலை" யென வணங்கிப் போற்றி, ஆங்குள்ள தபோவனங்கள் தோறுஞ் சென்று தவத்தினரை வணங்கி யாசிகள் பெற்று, மற்றும், சாரணர்கள், யக்ஷர்கள், வித்யாதரர்கள் முதலாகிய தேவதைக் கூட்டங்கள் இருந்து ஆடக்கூடிய பெரிய பர்வ தாடவிகளையும் கடந்து சென்றான். மலையின்மேலே ஏறிப் போகப்போகக் களிப்பு மிகக்கொண்டான். அங்கே நாராய ணன் நான்முகன் சிவபெருமான் முதலிய முத்தேவரையும் மற்றும் எத்தேவரையும் நோக்கித் தவஞ் செய்து கொண்டி

ருக்கும் முனிவர்களையும், யோகியர்களையும், ஞானியர்களையும் கண்டான். அவர்கள் அடிபணிந்து ஆசீர்வாதங்கள் பெற்ருன். பின்னும் நடந்து மேலே சென்ருன். சிங்கங்கள் கர்ஜித்தலையும், யானைகள் பிளிறுதலையும், புலிகள் முழங்குதலையும், நரியினங்கள் ஊளையிடுதலையும், கரடிகள் உறுமுதலையும் கேட்டு மானினங்களையும், காட்டானினங்களையும், பறவையினங்களையும் கண்டு ஆனந்தம்கொண்டு, விரைந்துபோய் மங்கைபங்கனிருந்து பக்தர்கட்கு அருள் செய்யும் இடமாகிய கைலைமலையை தரிசித்து நின்ருன்.

யானைத்தோற் போர்வையும் நஞ்சுடைப் பாம்பின் அணியையும் எலும்பின் மாலையையும் பிறையுடைச் சடைமுடியையும் சூலம் மழுக்கள் ஏந்திய கைகளையும் முயல்களை மிதித்தேறி யாடுகின்ற பாதங்களையும் நேரில் ஊனக் கண்களால் காணுனும் ஞானக் கண்ணுற் கண்டு நெஞ்சில் பக்தி மிகக்கொண்டு, "இதுவே நானிருந்து நற்றவஞ்செய்யு மிடமாகும்" என்னும் துணிவுகொண்டு, அம்மலைச் சாரலிலேயே நின்று மெய்த்தவஞ் செய்திடத் துணிந்தான். மலையென்ருல் அதன் சிறப்பினை யெம்போன்ருர் எடுத்துச் சிறப்பித்துச் சொல்லல் எளிதாகுமா? சூரியன் முதலிய நவக்கிரகங்களும் தினமும் வலஞ்செய்து போவார்கள். அமுதுண்டு என்றும் இளமையோடிருக்கும் மற்றைத் தேவர்களும் நாள்தவருமல் வந்து நற்பூஜை செய்து தரிசனம் பெற்றுப் போவார்கள். ஆங்கு, உருகிவீழும் வெள்ளிபோல, உயர்ந்த குகைகள்தோறும் வீழ்ந்தோடுகின்ற அருவிகளை யுடையதாகிய வாருணமலையுண்டு. அதற்குத் தென்புறத்தில், தருக்கள் நிறைந்து மறைவாக இருக்கும் பாங்கரில், சூரியனது தாபந்தோன்ருமல் எப்போதும் குளிர்ந்திருக்கும் இடத்தில், சரிவும், கற்

களும் இல்லாத சமநிலையான பாகத்தில் இருந்து, தனது வில்லையும் அம்பறாத் தூணியையும் கீழே வைத்துப் பெருந் தவஞ்செய்திட மனந்திருத்தி யுறுதி பெற்றான்.

"ஆசில் நான் மறைப்படியும் எண்ணில் கோடி
ஆகமத்தின்படியும் எழுத்து ஐந்துங்கூறிப்
பூசினன் வடிவமெலாம் பூதியாலப் பூதியினைப்
புரிந்த சடைப்புறத்தே சேர்த்தான்
தேசினு லப்பொருப்பின் சிகரமேவும்
சிவனிவனே போலுமெனத் தேவரெல்லாம்
பேசினர் வரிசிலைக்கை விஜயன் பூண்ட
பெருந்தவத்தின் நிலைசிலர்க்குப் பேசலாமே"

"ஒருதாளின் மிசைநின்று நின்றதாளின்
ஊருவின்மே லொருதாளை யூன்றியொன்றும்
கருதாமல் மனமடக்கி விசும்பினூடும்
கதிரவனைக் கவர்வான்போற் கரங்கள்நீட்டி
இருதாரை நெடுந்தடங்கண் இமையாதோர்
ஆயிரங்கதிரும் தாமரைப்போ தெனநோக்கி
நிருதாதிபரின் மனுவாய்த் தவஞ்செய்வாரில்
நிகரிவனுக் கார்கொலென நிலைபெற்றானே"

உடம்பெல்லாம் வேதவிதிப்படியும் ஆகமப்படியும் விபூதியினை உத்தூளினம்செய்து ஒருகாலில் நின்று, அப்படி நின்றிட்ட காலின் தொடையின்மேல் மற்றொருகாலை யூன்றி யழுத்திக்கொண்டு வேறே யொன்றையும் கருதாமல் மனத்தை யடக்கிக்கொண்டு, ஆகாயத்தையும் சூரியனையும் ஒருமிக்கக் கவர்ந்துகொள்வான்போற் கைகளைநீட்டி விரித்துக் கண்களை இமைத்திடாமல், சூரியனது ஆயிரங் கிரணங்களுடன் அச்சூரியனை ஆயிரம் இதழ்களுடைய செந்தா

மரை மலராக நினைத்து, அதுவே அவலம்பனமாகவும், அவ் விரவியில் அந்தர்ப் பூதனுக இருக்கும் பரம்பரனே லக்ஷ்யமாக வும், ஐந்தெழுத்தே த்யான மந்திரமாகவும் கொண்டு, ஸமாதி யில் நிலைத்து நின்ருன். இப்படிப் பலகாலம் தன்னை மறந்து உறுதியுடன் தவமியற்றினுன். காலமும் மாறித் தாபமும் தோன்றிக் காட்டுத்தீயும் புறங்களில் பரவி நின்றது. என்ரு லும், விஜயன் கண்கள் விழித்திட்டானிலன். தேகமும் அவ னுக்குக் குளிர்ந்து நின்றதே யொழியச் சூடு வெளியில் தாக்கவில்லை; ஆயினும், அவனிடத்தினின்றும் மூலாக்கினி பரவி வெளிப்பட்டது. தான் கொண்ட தாரணைக்குரிய மூர்த் தியை வலப் பாகம் செழும் பவளச் சோதியுடையதாகவும் இடப் பாகம் நீலச் சோதியுடையதாகவும் கொண்ட ஒரு கலப்பான ஆணுருவமும் பெண்ணுருவமுமான அற்புத வடிவாகக் கொண்டு, அவ்வுருவம் மனத்தை விட்டகலா வண் ணம் ஏகாக்ரப்படுத்தித் தவ வடிவாகவே நின்றிட்டான். அவனது உருவம் அசைந்திடாமற் கல்லைப் போலாயிற்று. கரையான்கள், மண்கொண்டு புற்றினை யொருபுறம் கட்டின. கொடிகள் மரமென அவன்மேல் ஏறிச் சுற்றிக் கொண்டன. வனமிருகங்கள் பாறையென உராய்ந்து போயின. பாம்பு கள் மேலூரின. வெயில் நாள் மழை நாள் பனி நாள் என் னும் நாட்கள் அவன் தேகத்திற் பேதங் காட்டில. மண் ணில், இதற்கு முன் அருந்தவம் புரிந்த பகிரதனே முத லோர் செய்த பெருந் தவங்களும் இவன் தவத்திற் கொரு சிறிதும் உவமையாகா.

இந்திரன் சூழ்ச்சி

தனது ஸ்வரூபத்தைத் தவவுருவமாக்கிப் பரஸ்வரூபத் தைச் சிவபரஞ்சுடராக்கி உபாயத்தைப் பாசுபதாஸ்திரமாக்கிக் கௌரவக் கூட்டத்தை விரோதி ஸ்வரூபமாக்கிப் புருஷார்த்

த்தை வெற்றியாக்கித் தன் புதல்வனுகிய வில்விஜயன் தவஞ் செய்து உறுதிகொண்டு நிற்றலைப்பற்றிக் குருவாகிய வியாழ பகவானிடம் கலந்து இந்திரன் ஆலோசித்தான். உண்மை யறிந்தான். உறுதியைச் சோதிக்க எண்ணங்கொண்டான். அதற்குபாயங் கருதினுன். ஊர்வசி மேனகை திலோத்தமை முதலிய தேவமாதர்களை யழைத்துக் "கைலைமலைச் சாரலில் அர்ச்சுனன் தவஞ் செய்கின்ருன். அத்தவத்தின் உறுதியை உங்கள் ஆடல்பாடல்களாற் கலைத்திடல் கூடுமா என்று சோதித்து வாருங்கள் ; போங்கள்" என்று ஏவினுன். அவர் கள் தமக்குத் துணையாக மன்மதனையும் வசந்தனையும் அழைத்துக்கொண்டு, அம்மலைச்சாரற்கு ஏகினுர்கள். அங் குள்ள மரங்களையும் கொடிகளையும் மலரும்படியாகச் செய்து, மலயமலைத் தென்றலோடு அட்தேன் துளிகளையும் கலந்து வீசும்படியாகச் செய்தார்கள். மரங்களைத் துளிர்க்கச் செய் தார்கள். வேணுக்களிலிருந்து கானத்தை யெழுப்பினுர்கள். இனிய குரலுடன் பாடிச் சூழ்ந்தார்கள். சதங்கைகள் ஒலிக் கும்படியாக ஆடிச் சுற்றிவந்தார்கள். கிட்ட நெருங்கிய போது, மூலாக்கினி வீசி நின்றதால், எட்டவும் தொட வும் நடுங்கினுர்கள். தங்கள் விளையாட்டிலும் வினையாட் டிலும் அவன் மனந்தளராமையையும் மேனி சலிக்காமை யையும் நெடுந்தவம் கலையாமையையும் கண்டு உளங்கலங்கி யவன் தேகத்தின் சீரொளியால் பேரழகால் தங்கள் உறுதி கலங்கி யாடல்பாடல்களை நிறுத்தி ஏக்கமுற்று வந்த கருமம் முடியாமல் இந்திர கோபத்துக்கு அஞ்சி ஏகிவிட்டார்கள். சூரியனும் மேலைக் கடலில் ஒளிந்துக்கொண்டான்.

தனது ஏவலாளர்கள் திரும்பினதையும் தனது சோதனை பயனற்றுப் போனதையும் நினைத்து இந்திரன் ஒருவாறு கவன்றனனுயினும், தனது மகனுகிய தனஞ்சயனுடைய

மன உறுதியையும் தவச்சிறப்பையுங் கருதி யுளம்பூரித்து, ஒரு கிழவேதிய உருக்கொண்டுவந்து, தனது சக்திகொண்டு அவன் கண்களைத் திறக்கும்படிச் செய்து அவனைப்பார்த்து "நீ யாரப்பா! என் இக்கடுந்தவம் புரிகின்றாய்!! யாரை நினைந்து இது செய்கின்றாய்!!! இக்கடுவனம் கொடுவனமா யிற்றே" என்று கேட்டான். அர்ச்சுனன், "நான் பாண்டவ ரில் இளையோன்; பார்த்தன் என்பேர்; பாசுபதாஸ்திரம் கிடைக்கும்வரை பரமசிவன் அருள் கிடைக்கும்வரை இத்த வத்தின் விலகமாட்டேன்; என்னையேன் தொந்தரை செய்கி றீர்; போம்" என்றுரைத்து உறுதியுடன் கண்களை மூடிக் கொண்டான். உடனே, இந்திரன், "அர்ச்சுனா! இதனைக் கேள்; கண் திறந்துபார்; சிவபரஞ்சுடர் தவத்தினோர்க்குத் தலைவராயிற்றே; கடுந்தவயோகியர்க்கும் கிட்டொணாக் கட வுளாயிற்றே; அரச குமாரனாகிய உனது அற்பத் தவத்தால் அவரைக் காணமுடியுமா? ஏன் இந்த வீண் முயற்சி; இதனை யொழித்திடப்பா!" என்றார். "போம்;போம்; அச்சிவ பரஞ்சு டரைக் காணுமலும் அஸ்திரம் பெருமலும் இத்தவநிலையினின் றும் விலகவே மாட்டேன்" என்று சொன்னான் அர்ச்சுனன். உடனே, இந்திரன் வேடம் மாறித் தன்னுருவங் கொண்டு மைந்தனைத் தழுவி, "உன் உறுதிக்கு மகிழ்ந்தேன்; உன் தவம் பயனளித்திடும்; பரம சிவனையும் தரிசிப்பாய், பாசுபதமும் பெறுவாய்" என்று வாழ்த்தி யாங்கு நின்றும் மறைந்து போனான்.

மூகாசுர வதம்

"என்றுரைத் தமரர்கோமான் ஏகியபின்னர் வெள்ளிக
குன்றுடைப் புனிதன்பாதம் குறிப்புறு மனத்தனாகி
நின்றகால் தவஞ்செய்கின்ற நெடுந்தகை நீர்மையெல்லாம்
சென்றுமைக் குரியரான சேடியர் செப்பினார்கள்."

இந்திரன் சென்ற பிறகும், அக்கடுந் தவச் செயலினை மேற்கொண்டு அர்ச்சுனன் நின்ற மனவுறுதியையும் அவன் சிவ பிரானையே உள்ளத்திற் குறிக் கொண்டிருக்கின்ற தன்மையையும் பார்வதி புணர்ந்து, தனது நாயகாது பாதத்தில் வீழ்ந்து வணங்கிப், "பூவுலகில் நமது பக்தர்களிற் சிறந்தவர்களாகிய பாண்டவ ரைவரையும் அப்பாதகக் கௌரவர் மாயச் சூதாடும்படி செய்து நாடு நகரம் வீடு தோட்டம் அரசு வாழ்வெல்லாம் அபகரித்துக் கொண்டு காடு துரத்தி விட்டன ரன்றோ? அப்பாண்டவர்களுள் நடுவனான பார்த்தன், நமது கைலையினருகே வந்து, இந்திரன் சூழ்ச்சியாலும் அழிவு படாத கடுந்தவத்தில் நின்று, நம்மைத் தாரணை செய்து பாசுபதாஸ்திரத்தை விரும்பி வருந்துகின்றான். இச் செயல் தாம் அறியாதது அல்லவே! பக்தனும் சுத்தனுமாகிய அவனையின்னுமா பரீக்ஷித்தல் வேண்டும்!! சென்று உதவவேண்டாமா?" என்று மன மிளகிப் பிரார்த்தித்து நின்றாள். சிவபாஞ்சுடர் தாயின் மிக்க அன்பு கொண்ட தனது நாயகியைத் தழுவிக் கொண்டு, "உயர்ந்த சேயினுக் கிரங்கிவாடும் நல்ல தாயே! அவசரப்படாதே!! கருணையுண்டு!!! காலமும் வந்துள்ளது. பக்தாது நினைவே தான் எப்போது மெனக்கு என்பதை நீ அறியாயோ? அதிலும் பாண்டவர் என்னுயிரனையாரன்றோ? எனினும், எல்லாம் காலத்தையே கருதி நிற்கும். காலத்தை யலக்ஷ்யம் செய்து, நாமே நமது பலத்தைக் காட்டி விடுவோமாயின், பிரபஞ்சத்தின் ஒழுங்கு மாறிடும். ஆதலின் தாமதித்தோம். அர்ச்சுனனுடைய தவமும் இப்போதுதான் சோதனையின் நின்றும் தேறி உறுதி கொண்டு பூர்த்தி பெற்றிருக்கின்றது. துஷ்ட கௌரவரால் ஏவப்பெற்றுச் சூழ்ச்சி கொண்டு அவனை யழிப்பதற்காக இம்மலையிற் பன்றியுருவுடன் திரிந்து கொண்டிருக்கும் மூகாஸுரனுடைய ஆயுட்

காலம் முடியுந் தருணமும் வந்து கொண்டிருக்கின்றது; இவ்விரண்டு காரியங்களும், அதாவது மூகாஸுரவதமும் அர்ச்சுனன் தவமும் ஒரே காலத்திற் பூர்த்தியடைய வேண்டியிருத்தலாலும் அவற்றுக்கு நாமே அதிகாரம் வகித்திருத்தலாலும் காலத்தை யெதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். இதோ புறப்படுவோம். ஆயின், அவனது பக்திக்கு மெச்சிய நாம், அவனுடைய அறிவிலும் ஆற்றலிலும் மயங்கியிருக்கின்றே மாகையால், அவனுடன் கைப்போரும் வாய்ப்போரும் செய்து விளையாடிடக் கருதியிருக்கின்றேன். அதன் பொருட்டு வேடன் உருவைக் கொள்ளப் போகிறேம். நீயும் வேட்டுவச்சி உருவைக் கொள்ளக் கடவாய். நாமிருவரும் சென்று அவனுடன் வாது செய்து பொருது அவனது அசஞ்சலமான சிவபக்தியையும் அவனது உருவத்தின் பேரழகையும் கண்டு வரலா" மென்று சொன்னர். அம்மையுமாதேவியும் சம்மதித்தார்கள். தேவன் குறிப்பறிந்த நந்தி பகவான், கணங்களும் தாமும் வேட்டுவக் கணங்களாகமாறியருகு நின்றார்கள். தேவனும் தேவியும் உடனே வேட்டுவக் கோலத்துடன் விளங்கினர்கள். யாவரும் ஒரு கணத்தில், அர்ச்சுனன் தவஞ்செய்து கொண்டிருக்கும் அம்மருங்கே தோன்றினர்கள். அவனைக்கண்டு மகிழ்ந்து, திரும்பி பன்றியுருக்கொடு நின்ற நன்றியில்லா மூகாஸுரனைத் தேடிப் புறப்பட்டார்கள்.

"ஓரேனந்தனைத்தேட ஒளித்தருளு
 மிருபாதத் தொருவன் அந்தப்
போரேனந்தனைத்தேடிக் கணங்களுடன்
 புறப்பட்டான் புனங்க ளெல்லாம்
சீரேனல் விளைகிரிக்குத் தேவசையாம்
 குழவியையுஞ் செங்கை யேந்திப்

பாரேனை யுலகனைத்தும் பணிவுடனே
புகழ்ந்திடத் தன்பதிபின் வந்தாள்.

பன்றியுருக்கொண்டு வந்த அந்த மூகாஸுரன், முழு வெண்ணீற்றுத் திருமேனியுடன் விளங்கியிருக்கும், அர்ச்சுனன்மேற் பாய்வதற்குரிய சமயம் பார்த்துக் கொண்டு அவனெதிரில் நின்றபோதுத் திடீரென அர்ச்சுனன் கண் விழித்துக் கொண்டான். தன்னெதிரில் நிற்கும் பெரும் பன்றியைக் கண்டான். தன்மேற் பாய்ந்து விடும் நோக்கத்துடன் அது இருப்பதையும் உணர்ந்தான். ஒருவேளை யிது தவத்தினைக் கெடுத்திடுமோ வென்றொரு நோக்கமும் உதித்தது. கெடுக்கா வண்ணம் ஒரு வலிய பாணத்தினாலதனைக் கொன்று பின், கவலை நீங்கி நிற்பேனெனக் கருதி, அருகிருந்த வில்லெடுத்து நாணேற்றி வலிய கணை யொன்றை யேவிக் குறிபார்த்துப் பன்றியின்மேல் விட்டு விட்டான். எதிர்ப் புறமாக மறைந்து நின்ற வேட்டுவ வுருவில் வந்த பரமனும், அச்சமயம் பார்த்துக் கொண்டிருந்தவராகலால் அர்ச்சுனன் வில்லெடுக்கும்போது தாமும் தம் வில்லெடுத்து அவன் நாணேற்றும்போது தாமும் நாணேற்றி, யவன் கணைதொடுத்த சமயம் பார்த்து தாமும் கணையொன்றைத் தொடுத் தெறிந்தார். எனவே, ஒரே சமயத்தில், இருவாது பாணங்களும் பன்றியின் உடலில் உருவி யோடின. ஆனாலும், அர்ச்சுனன் கணை முகத்திற் பாய்ந்து பின்புறமாகவும் சிவவேடன் கணை பின்புறம் பாய்ந்து முகத்தின் புறமாகவும் ஊடுருவிக் கொண்டு சென்றன. நான் கணை யொன்றுக்கே நிற்க முடியாத அப்பன்றி யரக்கனது, உடல், நான் பானகிய இருவாது கணைகட்கும் ஈடு கொடுக்கும் வலியற்று, ஒரு கணத்தே கீழ் வந்து சூவி யொடுங்கி அலறி மாழ்கி மாய்ந்து போனது.

சிவார்ச்சுனர் போர்.

உடனே, சிவவேடனுடைய ஆட்களும் நாய்களுமாகப் பன்றியைச் சூழ்ந்து அதனையிர்க்கப் போனார்கள். அப்போது சிவவேடன், தவஞ் செய்யும் தனஞ்சயனுக் கெதிரே வந்து, "ஒருவன் எய்து வீழ்த்திக் கொண்டிருக்கும் இலக்கின் பேரிற் கணை யேவி நீ யெய்தது ஊனமோ; இது வீரமாமோ; முன்னே நான் பாணமேவினேன்; அது பின்புறமாக ஊடுருவிப் புகுந்து முகத்தைப் பிளந்தது; அதற்குப் பின் உனது பாணம் முகத்திடைவீழ்ந்து சிரத்தைபிளந்தது. 'செத்த பாம்பினை யடிப்பதுபோல்' பன்றிக்குப் பயந்து இந்தச் செயலைச் செய்தாய் போலும்" என்று கோபங் காட்டிப் பேசினர். விஜயன் வேடனைப் பார்த்து, "ஏ! வேட!! நான் தவஞ்செய்து கொண்டிருத்தலால், ஆகாரம் விரும்பாமலிருக்கிறேன்; ஆகையாலிந்த இரையை நான் எடுத்துக் கொள்ளமாட்டேன்; நீ அஞ்சல் வேண்டாம்; நீ பெருத்த கூட்டத்துடன் இங்கு வந்திருப்பதால்,இப்பேரிரை யுனக்கு வேண்டியிருக்கலாம்;இதனை யெடுத்துக்கொண்டு போ; அஃதன்றி, உன் வேட்டுவக் குறும்போடு நின்று வழக்குரை பேசுவையானல், உன் தலை சிந்தும் படியாய்க் கணையேவி யுன்னையும் கொன்றிடுவேன்" என்று வீரத்துடன் பேசினான். "பன்றி வந்து மோதுமென்னும் பயத்தின லம்பேவி நின்ற நீ யொரு பெரிய தவத்தினன் போலப் பேசுகின்றாய்; தவத்தினருக்குப் பொறை வேண்டும். கவனம் குறித்த லக்ஷ்யத்தி லிருத்தல் வேண்டும்; இரண்டு மின்றிக் கோபம் கொண்டு அற்பப் பன்றியைப் பிணமான பின்னும் எய்து, வனப் பொருட்கு உரிய எம்மையும் நிந்திக்கின்றாய்! நீ உண்மைத் தவத்தினன் அன்று போலும்; மறையவனோ; மாநிலத்துக் கிறையவனோ யன்றி மற்றோர் வைசியனோ; மற்றுப் பொய்யாம் மாயவாழ்க்கை யுடைய அரக்கன் தானோ!

அவுணர் மாக்கள் புக்தெளிர் இவரிலோர் புறத்துளானோ; மெய்யிற் பற்றுக்கொண்டு பொய்யில் தவம் பூண்டு நிற்கின்ருய்? எந்த பொய்ப் பொருளைக் கருதி நீ இப் பொய்த்தவத்திலுழலுகின்ருய்'' என்று விஜயன் செவிகள் சுடச் சுடக் கேட்டு நின்ருர்.

தான் குருகுலத்தா னென்பதையும் பாண்டு மைந்தனென்பதையும் வில் விஜயன் என்பதையும் விளம்பி நின்ருன், அர்ச்சுனன். "ஓஹோ! அதனுல் தான் வேடனுகிய என்னுடன் வலிய வந்து வழக்காடுகின்ருய். உனக்கும் வேடர் குலத்துக்கும் பகை யுண்டென்பதை நான் அறிவேன். நல்லவேளையாக என் எதிரில் அகப்பட்டுக் கொண்டாய்; முன்னம் உன் குருவினை யேவி எங்கள் குலத்தலைவனுகிய வில்லுக்கொருவன் என நின்ற ஏகலைவனது பெருவிரலை வாங்கிப் பழி செய்தாய்; பின்னும், மற்ருேர் மறையவன் முறையைக் கேட்டு, இந்திரப் பிரத்தத்துக்கு அருகே இருந்த வேட்டுவக்குடியை யழித்து ஓட்டிப் பழிகொண்டாய். மற்றும் காண்டவத்தை யழித்து, ஆங்குக் குன்றுதோறும் வசித்திருந்த வேடுவர்களைத் தீங்கிழைத்து வேருெரு பழியும் பூண்டாய்; இன்றும் வேடுவனுகிய என்னை யிகழ்ந்து இன்னொரு பழியும் எய்தப் பார்க்கின்ருய்; உன்னைப் போரிற் கொல்லற்கெனக் குரிமையுமிருக்கின்றது. ஆண்மை யுடையையாகில், தவத்தினைவிடுத்து என்னேடும் போர் செய்யப் புறப்படு; நீயும் நானும் வில் வலியும் வேல் வலியும் வான் வலியும் காட்டிப் போர் செய்திடுவோம்'' என்று கூறினர்.


அர்ச்சுனன் வெகுண்டு, இவனை யழித்தாலல்லாமல் தவத்தினில் நிலைத்திட முடியா தெனக்கொண்டு, பன்றி சென்ற அந்த இடத்துக்கே இவ்வேடனையும் அனுப்புவே

னென்று எழுந்து வில் வளைத்துக் கணை தொடுத்தான். அதனை யவ்வேடன், தனது கணை கொண்டு தடுத்திட்டான்; மேலும் விஜயன் பேரிற் கணைகளைப் பொழிந்து நின்றான். அர்ச்சுனனும் உருத்து நின்று அக் கணைகளைத் தெளித் தெறிந்தான். போர் உக்ரமாக மூண்டது. ஜயாபஜயம் ஒருவர் பங்கில்லாமல் வெல்வதும் தோற்பதுமாகப்போர் செய் தார்கள். அர்ச்சுனன் சீறி, யிந்த அற்ப வேடனுடன், இத் துணை நேரம் பொருவதாவென அழன்று, நல்ல கணைகளைத் தேடி யெடுத்து இடை விடாமல் எய்து வேடனது ஜடை முடியையும் மயில் தோகையையும் எடுத் தெறிந்து சிரத்தின் மேலும் கணையேவ வரும் போது, வேடன் ;துணிந் தொரு பாண ;மேவி, அர்ச்சுனன் கைக் காண்டீபத்தின் நாணினை யறுத்துமேலும் அவன் மேற் பாண மெய்ய உருத்து நின் றார். அவ்வமயம், பார்வதியாகிய வேட்டுவச்சி யருகே வந்து, "இஃதென்னை; விளையாட்டு வினையாயிற்றே? பக்த னன்றோ?" என்று நினைவுறுத்தினள். அவ்வமயம் சினம் மிகுந்த பாண்டவன் நாண் அறுந்து நின்ற வில்லின் தண்டினை கையிலேந்தி ஓடிவந்து வேடனது சிரம்வெடித்து உதிரம் பெருகுமாறு ஓங்கித்தலைமே லடித்தான். வேடனும் இளைத்து அவசமுற்று மூர்ச்சித்தான். அப்போது, அந்த வில்லடி அவருடைய சிரத்தினில் மாத்திரமா பட்டது?

"விண்ணிலுறை வானவரில் யாரடிபடாதவர்
விரிஞ்ச னரியே முதலினோர்
மண்ணிலுறை மானவரில் யாரடிபடாதவர்
மனுக்கள் முதலோர்கள் தலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடிபடாதவர்
கட்செவி மகிபன் முதலோர்
எண்ணில்பல யோனியிலும் யாவடிபடாதன
இருந்து ழியிருந்து ழியரோ"

உலக மோருருவாக நின்ற ஒரு பரம் பொருளாகலின், வேடவுருவில் நின்ற பரமன்மேல் வீழ்ந்த வில்லடியானது, பிரபஞ்ச வுயிர்கள் எல்லாவற்றிலும் பட்டது. மூர்ச்சித்துக் களைத்தெளிந்தபின், வேட வுருவினர் வெகுண்டு, விஜய னெதிரே நின்று மற்போர் தொடுத்தார். இருவரு மெதிர் மோதித் தாக்கினார்கள். ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து எழுந்து பொருதார்கள். கட்டிப் புரண்டார்கள். எறிந்து வீசினார்கள். நெருங்கிப் பிணைந்தார்கள். இவ்வண்ணம் வெஞ்சமர் புரியும் வேளையில், வேடன் விஜயனைத் தள்ளிக் கட்டிக் கைகளாலெடுத்து விண்ணுற வீசி யெறிந்தான். பார்த்தன், மயங்கி யறிவிழந்தான். உடனே கர கரவென்று சுழன்று ஆகாய மளாவிச் சென்று பின்னர்க் கீழே வீழ்ந் தான். வீழ்ந்த போதும் முதுகின் புறமாக வீழாமல் மார்பு மண்ணிலுற வீழ்ந்தான். அப்போது அவனது முதுகின் புறத்துள்ள மச்சத்தழகினைத் தையலாகிய பார்வதிக்குக் காட் டிச் சிரித்து வேடன் நின்றதனைக் கண்ட விஜயன், உருத் தெழுந்து, "வா மறுபடியும் மற்போர்க்கு என்று எதிர் வரும் போது என்ன தோன்றியது அவன் கண்கட்கு? வேடனுரு வெங்கே; வேட்டுவச்சி எங்கே போனாள்? வேடர் கூட்டம் எங்கே ஓடியது? அவர்கள் எங்கும் போகவில்லை; வேடர்கள் ஓடவுமில்லை; அங்குத்தான் எல்லாரு மிருந்தார்கள். எப்படி யிருந்தார்கள்? உருத்தெழுந்து ஓடிவரும் அர்ச்சுனனுக் கெதிரே?

"வெய்ய கணநாதர் கணதேவர்விபு தாதிபர்
விரிஞ்சி சிவயோகி யரும்
செய்ய சுடரோன் அளகையாதிபதி கின்னரர்சள்
சித்தர் பலசாரணர் மணிப்



பையரவிஞடி புருகூதனிவர் சூழ்தரப்
பச்சை மயில்பாதி யுடனே
துய்யவிடை மீதொரு செழுஞ்சுட ரெழுந்தது
தொழுந் தகையதாகு மளவோ"

கணநாதர் கணதேவர் தேவர் முதலோரும் விரிஞ்சி முதலான சிவயோகிகளும் சூரியன் முதலான சுடர்க் கடவுளர்களும் குபேரன் முதலான திக்குப் பாலர்களும் இந்திரன் முதலான உயர்தரத் தேவர்களும் பக்கங்களிற் சூழ்ந்திருக்கப் பச்சைமயில் போன்ற உமையம்மைக்குப் பாதியருளிய சரீரத்துடனே, வெள்ளிய விருஷபமீதினில் ஒரு செழுஞ்சுடரெழுந்து தோன்றியதான காட்சியைக் கண்டான்.

"ஆடினன் களித்தனன் அயர்ந்து நின்றனன்
ஓடினன் குதித்தனன் உருகி மாழ்கினன்
பாடினன் பதைத்தனன் பவள மேனியை
நாடினன் நடுங்கினன் நயந்த சிந்தையான்."

விருஷபாரூடராகப் பகவான் மங்கை பங்கனுகிக் காட்சி தந்திடலும், கண் கொள்ளாத காட்சியைக் கண்டு, பூமியில் அஷ்டாங்கங்களும் படியும்படியாக வீழ்ந்தெழுந்து, பல தோத்திரஞ் செய்து, "ஐயனே! அமரர்க்கெல்லாம் தலைவனே!! நாயினேன் என் செய்யப் பெற்றேன்!! தரும மூர்த்திக்குத் தம்பியானதுண்மையால் தையல் பாகனைக் காணும் பாக்கியம் பெற்றேன். வேட்டுவ வுருவினில் வந்து என்னை மயக்க வேண்டுமா? உண்மை வேடனென்றே நினைந்து பொல்லாத சொல்லிப் பலவாறு ஏசினேனே; வில்லால் அடித்தேனே; என் அப்பனே; அருட் பெருங் கடவுளே! எல்லா வினைகளையும் பொறுத்து எளியனைக் காப்பது உன்கடமையேயாகும்" என்று தொழுது அடியில் வீழ்ந்து மூர்ச்சித்தான்.

16

எழுந்து நின்ற விஜயனை இரு கைகளாலும் தழுவி, "எமது அருமைப் பக்த சிகாமணியே! சூதினில் யாவையும் தோற்றுக் காட்டினில் ஏதுமிலாதவர்போல் உறைந்து வாழ்ந்து, வாதுசெய் புலன்களையடக்கி நீ தவம் புரிந்திருந் தமை நினைக்க வொண்ணுமோ? உன் பகைவனாகிய துரியோ தனன் ஏவலால், மூகன் என்னும் ஓரசுரன் காட்டுப் பன்றியி னுருவெடுத்து உன்னைத் தவத்தின்போது கொல்ல வந்த னன்; அதற்காக, நாம், காட்டு வேடனுருக் கொண்டு வந்து, அந்த அசுரனைக்கொன்று, உன் வில்வலியையும் மனோவலியை யும் உலகோர்க்குக் காட்டும் பொருட்டு வில்லால் அடிபட்டும் காலால் உதை பட்டும் இக்காட்சியை யளித்தோம். உன் தவத்துக்கு மகிழ்ந்தோம். வேண்டி வந்தது என்ன?" என லும், "தேவாதி தேவனே! பகைவரை யழித்து, எமது மானத்தையும் வாழ்வையும் அரசினையும் செல்வத்தையும் மீட்டுக் கொள்ளும் பொருட்டுத் தங்களிடம் பாசுபதாஸ் திரத்தை விரும்பி இந்நெடுந் தவத்தைச் செய்தேன்; அருள வேண்டும்" என்று வேண்டினான். பகவான், மகிழ்ந்து வில் லும் அம்பறாத் தூணியும் பாசு பதாஸ்திரமுங் கொடுத்து, அதன் பிரயோக உபஸம்ஹார மந்திரங்களையும் உபதேசித் தருளி, உமையும் தாமுமாக நன்கு ஆசீர்வதித்து மறைந் தருளினார்.

இந்திரன் தோன்றி மைந்தனை யழைத் தேகல்.

சிவபிரான், தமது கணங்களுடன் மறைந்தவுடன், தேவர்கள் சூழத் தேவேந்திரன் அங்குத் தோன்றித் தெய் வப் பொன் மலர் மாரிகள் பொழிந்து, வணங்கி யெழுந்த மைந்தனைத் தழுவிக் கொண்டு விமானத் தேற்றி, தேவ துந் துபி முதலிய வாத்யங்கள் கோஷிக்கத் தன்னுலகினுக்கு

அழைத்துப் போனன். "உனது தவமும், அதனால் நீ பெற்றுள பாசுபதாஸ்திரமும் வில்லும் தூணியும் நீடுவாழக் கடவன; அவற்றால், நீ போரில் நிலைத்த வெற்றியை யடையக் கடவாய்" என்று வாழ்த்திக் கொண்டேகிறான். மாதவி செலுத்துந் தேரின்மேல் தந்தையும் மகனுமேறி யிருந்த காட்சியானது, இரண்டு மரகத மலைகள் ஒரு வெண் மலையில் ஏறிச் செல்லும் காட்சியைக் காட்டியது. விண்ணவர் நகரை இருவரும் சேர்ந்தபோது, பல அமர மாதர்கள் வந்து கை கொடுக்கத் தேரினின்றும் இறங்கிப் பொன்னகர் காட்சியைக் கண்டு பூரித்துச் சுதர்மை யென்னும் தேவ சபையில் அமைத்த மண்டபத்திற் சேர்ந்தனன். மைந்தனைக் கண்ணுற வந்த இந்திராணித் தாயைச் சேயாகிய விஜயன் ஸாஷ்டாங்கப் பிரணாமம் செய்து துதித்திட்டான். "நீ மண்ணவர் செல்வம் மாத்திரமே யன்றி விண்ணவர் செல்வமும் பெற்று மகிழ்வாய்" என ஆசீர்வதித்து உச்சி மோந்து உவகை கூறினாள்.

அந்தா துந்துபியும் வேதகோஷமும் முழங்கு சங்கினொலியும் யானை கர்ஜித்திடு முழக்கமும் மேக கர்ஜனையுமாகி எங்கும் எப்போதும் ஒலி மிகுந்திருந்தது. கற்பகம் முதலிய தருக்களும் மலர்களையும் மகரந்தங்களையும் வீசிக்கொண்டிருந்தன. தும்புரு நாரதர்களும் கின்னர தேவர்களும் கானமிசைத்தார்கள். அகஸ்தியன் புலஸ்தியன் வசிஷ்டன் ஏழு வசுக்களாதியோர் வேதவொலி யிசைத்து வாழ்த்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். ஊர்வசி முதலிய வானமாதர்கள் தாளகதி தவறாமல் ஆடிக்கொண்டிருந்தனர். அவர்களில், ஊர்வசியின் நடனத்தில் உண்மையன்பு கொண்டவனாகிக் களித்தான். "இந்நடிப்பைப்போல் நடிப்பவர் எவ்வுலகத்திலுமிராரென்றே எண்ணுகின்றேன்" என்று இசைத்து அவள்

மேனி யழகையும் குரலிசையையும் ஆடல் சிறப்பையும் நினைத்து நினைத்து மகிழ்ந்தவனானான். இவனது வியப்பைக்கண்டு, இந்திரன், "மைந்த! இந்நாடகம் மிகப் புதிதானது; உனக்கென்றே நடிக்கப்பெற்றது; நீயேயன்றி மற்றும் இங்குள்ள ஏனையோரும் மகிழ்ந்து உளம் கனியத்தக்கது'' என்று உபசாரம் கூறித் தனியாக ஏற்படுத்தப்பெற்றிருந்த மண்டபத்துக்கு உரிய பணிமக்களுடன் அர்ச்சுனனை யனுப்பினான்.

ஊர்வசியும் விஜயனும்

அகில் மணம்பொருந்திய கூந்தலும் பேரழகும் இனிய குரலுமுடைய மாதர்கள் பலர் உடனிருந்தூட்டிய நல்விருந்துண்டு, உபசரித்த பணிமாதர்கள் ஏகியபின்னர் அம்மாளிகையிடையே தனித்திருந்து, சிறிது இளைப்பாற்றிக் கொண்டான். அவ்வமயம், சுதர்மையில், தானாடிக்கொண்டிருந்த போது, தனது ஆடலையும் பாடலையும் வியந்து பேசிய மரகத வடிவுடைத் தோன்றலாகிய விஜயனைக் கண்ணுற்ற முதல், மையல் மிகக் கொண்டு காதல்மீறிக் கருத்து மாறியிருந்த ஊர்வசி, களபகஸ்தூரிகளணிந்து அலங்கார நீல உடையுடுத்து ரத்நாபரணங்களணிந்து நீலநிற நாள்மலர் சூடி நயத்துடன் வந்து சேர்ந்தாள். பேரழகும் நீலவுடையும் மணிப்பூண்களும் மலர்மாலையும் கொண்டு தானிருக்கும் தனியிடத்துக்கு வந்துற்றவள், ஊர்வசிதானென்பதைத் தெரிந்து, தேவலோகத்தில் பாவசம்பவம் நேர்ந்திடுமோ வெனப் பயந்து, அவளை ஸாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, வணங்கி நின்று, இரு கைகளையுங் குவித்து, "எங்கள்குலத் தலைவனாகிய சூரியவென்பார் தம் தந்தைக்கு மனைவியாயிருந்து எங்கள் குலதெய்வமாக நின்று விளங்கும் என் தாயே! எளியேனிருக்கு மித்தனியிடத்திற்கு இப்பொழுதினில் வந்தவா

றென்னையோ! தனயன் ஏதேனும், தங்களது ஆடல்பாடலின்போது தவறிழைத்திருந்தபோதினும், தாயாகிய தாங்கள் பொறுத்துக் காக்கவேண்டுதல் கடனாகும்'' என்று பணிவுடன் மொழிந்து நின்றான்.

ஊர்வசி, தன் எண்ணம் முடிவுறாத நிலையில் அவன் தடுத்தமையைக்கண்டு, உளம் மயங்கிக் கோபம்கொண்டு, இதழ்மடித்து விழிகள் சிவப்பேற நின்று, விடம்போன்ற மொழிகளைக் கூறுவாளானாள். “பேதாய்! இந்தப் போதினில் தனியிடத்தில் ஓரழகிய ஆண்மகனிருக்கும் சமயம் பார்த்து, என்றும் நீங்காத அழகும் இளமையும் பொருந்திய ஒரு மடமாது, எத்தகைய காமப் பித்தேறித் தனித்து வந்திருத்தல் கூடுமென்பதனை யுணரும் அறிவிருந்தும், அதனைக் காட்டாமல், வந்துற்ற என்னை அவமதித்துக் காதல் தீயால் வெந்து போகும் வண்ணம், தாயைக் கண்ட சேயைப் போலும் வணங்கி வழங்கொணு வார்த்தைகள் பேசி என் எண்ணமெலாம் வீணாகும்படியாகச் செய்தனையே! இஃது எத்துணைப் பாவமென்பதனை யுணராய் போலும். பெண்கள் உறும் காதலும் காமமும், உள்ளூறக் கொழுந்து விட்டெரிந்து உடல் மெலிந்து உள்ளமழிந்து பொறுக்கக் கூடாத நிலையில் தான் வெளிக்குக் காட்டப் பெறுமென்பது ரஸிக சிகாமணியாகிய நீ உணர்ந்து கொள்ளாத ஒன்றல்லவே! இந் நிலையறிந்தும் நீ என்னை வெறுத்தது, உனது அச்சத்தாலும் பேதைமையாலுமே நிகழ்ந்திருத்தல் வேண்டும். வேண்டாம்; அந்த முறையினைப் பாராட்டாமல், உன் எண்ணத்தை மாற்றி, யுன்னை மிக்க ஆசைகொண்டு நாடிவந்த என் எண்ணத்தைப் பூர்த்தி செய்திடு. நான் கொண்ட காதல் தீர்ந்தொழிந்திடும் படியாக என்னைத் தாய் முறை கொண்டு நிந்திப்பையானால், நீ கொண்ட தவப்பயனை

யெல்லாம் வெங்தொழியும் படியாகச் செய்திடுவேன். பொது மகளிர்க்கு—ஆடல் மாதருக்கு—தாஸிகட்குத் தந்தை யென் றும் மைந்த ரென்றும் உறவு பார்த்திடல் வழக்காறல்ல" என்று கூறி யருகுவந்தாள்.

விஜயன், "தாயே! தெய்வப் பிறப்புடையாய்!! தந்தை யாகிய இந்திரன் விரும்புந் தையலே!!!. இந்தக் கேடுடை யெண்ணத்தை யொழித்திடு; மனமறிந்த தொன்றை மறத்த லும் மறைத்தலும் கூடுமோ? நான், துணியேன்; என் தவம் சிதறினும் என்நலம் ஒழியினும் என் குலம் அழியினும் தர்மம் தவறியகாரியத்தில் தலையிடமாட்டேன். எது வந்தாலும் வரட் டும்; ஏற்றுக் கொள்கின்றேன்; விடுங்கள்; இவ்விடம் விட்டுச் செல்லுங்கள்; மற்றொரு முறையுங்களை வணங்குகின்றேன்" என்று சொல்லிப் பின்னுமொரு முறை பணிந்திட்டான். என்ன செய்வாள் ஊர்வசி? "காதற்குக் கண்ணில்லை" யென் னும் பழமொழியையும் பொய்யாக்கினனேயென்று கனன்று, எண்ணம் மண்ணானதால் எழுந்த கோபத்தை மாற்ற முடியா தாளாகி யெதிர் நின்று, "தக்க ஆடவன் என்று நினைத்துத் தனியிடத்தைத் தேடி, எவ்வுலகமும் விரும்பத்தக்க அழகு முதலியவற்றை யுடைய நான் வலிய வந்தும், வலிய வந்த செல்வத்தை யுதைத்துத் தள்ளுவார் போல உதறிவிட்டு ஆடவர்க் கழகாகாத மாற்றமும் மொழிந்த நீ, இக் கணம் முதலே, ஆடவர் பெருமையும் உருவமும் அழிந்து நிற்கக் கடவாய்" என்று சபித்திட்டாள். உடனே, அர்ச்சுனனுக்குப் பேடி யுருவம் வந்துற்றது. பாவி யூர்வசியும் பார்த்தனது உரு வம் மாறிப் போனது கண்டு பதைத்து அவ்விடத்தினின்றும் நீங்கி மறைந்தாள். தன்னுருவம் மாறி யொரு பேடியுருவமா கத் தோன்றக் கண்ட விஜயன் மனம் நொந்து மாழ்கியிருந் தான்.

மற்றும், சுதர்மை யென்னும் பேரவை கூடியபோது, வேத வொலியும் கீத வோசையும் வாத்ய முழக்கமும் தோத்திர இறைச்சலும் மிக்கன. ஆடல் மாதரும் பாடல் மாதரும் வந்து குழுமினர். வசுக்களும் தேவர்களும் வந்துகூடினார்கள். முனிவரும் யோகியரும் தொக்கனர். யாவரும் வந்திருக்கவும் மைந்தன் விஜயன் வாராமைகண்டு மனம் புழுங்கி யிந்திரன், ஒரு கந்தர்வனை யருகழைத்து விஜயனைத் தருவாயென ஏவினான். வந்தவன் விஜயனதுருவங் கண்டு நடுங்கி மெய் வணக்கம் புரிந்து உண்மையுணர்ந்து திரும்பிச் சென்று, தேவர் கோனிடம் உற்றவா றுணர்த்தினான். கேட்ட இந்திரன் கண் கலங்கி நீர் பெருக விரைவில் தேவருடன் சென்று தனஞ்சயனைக் கண்ணுற்றான்; கலங்கினான். மைந்தனைத் தழுவிக் கொண்டான். "அஞ்சாதே! இது நீங்கும் வழி செய்கிறேன்" என்று தைரியம் சொல்லித் தேவருடன், அந்தத் தெய்வமாது ஊர்வசியிருப்பிடம் போய்ச் சேர்ந்தான். தேவானைவரொடும் தேவர் நாயகன் தனதிருப்பிடத்தை நாடி வந்தமைக்கு நடுங்கிய ஊர்வசி யெழுந்து இந்திரனை வணங்கி நின்றாள். அப்போது தேவர்கள், "ஊர்வசி! நீ பொது மகளாகலின், காதலொளியால் செய்வதறியாமற் சபித்த சாபமாயினும், அது பலிக்காமல் ஒழிந்திடாது; ஆகலின், தேவரும் விரும்பும் தேவேந்திரன் மதலையாகிய அர்ச்சுனனுக்கு, நீ கொடுத்த சாபத்தை, அவன் வேண்டும்போது வந்து ஓராண்டளவுமிருந்து கழியுமாறு மாற்றியருள் புரிவாய்" என்று மிக மிக வேண்டினார்கள். அங்ஙனமே, சம்மதித்து அநுமதித்தாள். சாபத்தால் வந்த பேடி யுருவம் மறைந்தது; முன்னைய உருவமே கொண்டு அர்ச்சுனன், ராகு பிடித்து விட்ட சந்திரன்போல் ஒளி மிகப்பெற்று விளங்கினான். சுதர்மை யெனும் சபைக்கேகி அன்றைய ஆடல் பாடல்களைப் பார்த்துக் களித்திருந்தான்.

நிவாத கவசர் காலகேயர் வதைச் சருக்கம்

"தொழுவார்தம் வினைதீரமுற் கோலமாய் வேலைசூழ் பாரெயிற்
றுழுவானை நன்ஞம மாயிரத்தி னென்றுயினுங் கற்றோருருவோதி
வழுவாத சுரராக நரராக புள்ளாக மரவாகபுன் [ஞோர்
புழுவாக வொன்றிற் பிறந்தாலும் நரகிற் புகார் காணுமே"

அர்ச்சுனன் முடிசூடல்.

இந்திரன், அர்ச்சுனனுக்குச் சமாஸனம் கொடுத்துச் சபையில் நடந்தேறும் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் களித்திருந்த சமயத்தில், தேவர் நாயகன், தேவர்களைப்பார்த்துக் கூறுகின்றான்: "தேவர்களே! நமக்குப் பகைவராக இருந்து நம்மை யடிக்கடிவந்து பயமுறுத்திக் கொண்டிருக்கும் நிவாத கவசர் காலகேயர்களைத் தனது தூணெனத் தகுந்த தோளாற்றல்கொண்டு போரில்வென்று, நமக்குப்பகைவரில்லாதவாறு செய்யும் பலமுடையவர் நமது இந்த விஜயனல்லாமல் யாரிருக்கின்றார்கள்? பெருந்தவஞ் செய்து சிவபிரானிடமிருந்து பாசுபதாஸ்திரமும் பெற்றிருக்கின்றானென்பதையும் நீங்கள் அறிவீர்களே. அந்த அஸ்திரம் கையிலுடையார்க்கு எந்தப் போரிலும் தோல்விகிடையாதென்பதும் உறுதியன்றோ? இவனது தோளாற்றலையும் போரில் மனந்தளராமல் நிலைத்து நிற்கும் உறுதியையும் கொண்டது முடிக்கும் கொள்கையினையும் இவன் காண்டவ வனத்தை யக்கினிக்குக் கொடுத்த அந்நாளிற் கண் கூடாகக் கண்டிருக்கின்றீர்களன்றோ?" என்றும் பலவும் பேசித் தேவர்க்கு இவனிடம் அன்புண்டாகும்படியாகச் செய்து, இவனைத் தேவராஜாங்கத்துக்கு இளவரசாக்குவதற்கும் சம்மதி வாங்கிக் கொண்டான். அண்டர் யாவரும் அகமகிழ்ந்து இந்திரன் வேண்டுகோட்க் கிசைந்தவுடனே, விஜயனை அபிஷேக நீர்

கொண்டாட்டி நீங்காத மணமுடைய மாலையுஞ் சூட்டி, ஆயிரக் கணக்கான சூரியருஞ் சந்திரரும் ஓரிடத்திலுதித்தாற் போன்று ஒளிவீசக் கூடியதாகிப் பிரமன் தனக்களித்த கிரீடத்தையும் புனைவித்துக் "கிரீடி" யென்னும் நாமத்தையும் இடுவித்தான். ஆடையாபரணங்களுங் கொடுத்து, மந்திரங்களுடன் போரில் வலிய ஆயுதங்களும் அருளித் தன்னுடன் பொன்னாஸனத் திருத்தி, என்றும் தேடற்கரியதாகிய தூய அமுதினை யொரு செம்பொன் பாத்திரத்தில் அவனுடன் கூட இருந்துண்டு, தேவர் தம் இளவரசன் என்னும் பட்டமுஞ் சூட்டினான்.

அப்போது, இந்திராணி ஐயமுற்று, "ஒரு பூலோக மன்னன் இப்பொன்னுலகுக்குவந்து, உங்களோடும் ஒரு பொற்கலத்தில் அமுதினை யுடனிருந்துண்ணல் தகுதியாமோ" என்று கேட்டாள். இந்திரன் நகைத்து, "பேதைப் பெண்ணரசே! இவன் யாரென நினைத்துச் சொல்லினை; விஷ்ணுவினுக்கு மைத்துனன்; எனக்கு மைந்தனென்பதை நீ அறியாயோ? கொன்றை மாலை யணிந்த சிவபிரானுடன் போர் புரிந்து வென்று பாசுபதாஸ்திரமும் பெற்றுச் சிறந்தவனன்றோ? இத்தகைப் பெருமையுடையானை மானுடனென் றிங்கு இகழலாமோ?" என்று சொன்னான். தேவர்கள் வணங்கி, "எந்தாய்! மாயனுக்கு மைத்துனனாகிய இம் மன்னன், இங்கு வருவதற்குக் காரணம் யாதோ" என்றார்கள். அப்போது, அர்ச்சுனன் தந்தையை அடி பணிந்து, "தந்தையே! மூவுலகத்தவரும் வணங்கிப் போற்றத் தகுந்த தங்களோடு ஓராஸனத்திருந்து, மேவருமிந்த முடியையுஞ் சூடிக்கொளல், எளியனுக்குத் தகுதி யேதென்பதை நானும் சிந்திக்கின்றேன்" என்று சொன்னான். "குழந்தாய்! தேவர்களும் இந்திராணியும் சங்கிதத்துக் கேட்டார்

களேயென்று நீயும் உன் பெருமையை அறிந்து கொள்ளாமல் இந்தக் கேள்வியைக் கேட்டுளாய் யென்று நம்புகின்றேன்; இப்புவன மூன்றினும் உன்னைப்போலொரு வீரனேனுமுண்டோ? சிவபிரானருளிய பாசுபதாஸ்திரமும் பெற்றிருக்கின்றாய்! அக்கினி பகவானளித்துள வெண்புரவி நான்கு பூட்டிய தேரையும் அம்பறாத் தூணியையும் வில்லையும் பெற்றுச் சுவேத வாஹனனென்னும் நாமமும் படைத்துச் சிறந்திருக்கின்றாய்; பிரமன் முதலாகிய முத்தேவரும் மற்றுமெத் தேவர்களும் அன்புடன் கொடுத்துள சீரிய படைகளையும் பெற்றிருக்கின்றாய்; அரிய வேதநூற் பிரமாணங்கொண்டு நோக்கின் நின்னிலும் தேவாகத் தகுதியுடையார் யாருமில்லரென்றே துணிந்துசொல்வேன். குழந்தாய்! மற்றுமொன்று உன்னை நான் கேட்க விரும்பியதுண்டு. நூல்கள் கற்றுக் கொடுத்தார்க்குக் குருதக்ஷிணையாகக்கொடுத்தல் வழக்குண்டு; உனக்கு நான் பலபடைகளுங் கொடுத்து உபதேசமும் செய்து தந்துள்ளமையால், உனக்குக் குருவாகவு மிருக்கின்றேன். நான் விரும்பியதொன்றைக் குருதக்ஷிணையாகக் கொடுத்தல் வேண்டும்; அதனைச் சொல்லட்டுமா" என்று இந்திரன் கேட்டான்; அப்போது, கிரீடியும் மகிழ்ந்து போற்றி, "எந்தையே! குருதக்ஷிணை யெதுவாயினும்கொணர்ந்து தால் கடமையேயாகும்; அளித்திடவும் துணிந்துளேன். ஆயின், மண்ணவர் வேண்டிய யாவுமெய்தி அளிக்கும் ஆற்றலுடைய விண்ணவர் நாயகனாகிய தங்கட்கு, அம் மண்ணவரினும் ஒதுக்கப் பட்டவரென்று மதிக்கப் பெற்ற எளிய பாண்டவருள் இளையனாகிய எளியேன், அளிக்கவேண்டிய பொருள் எதுவாகும்! அது தகுதியாமேல், இக்கணமே சென்று தருகின்றே"னெனப்பணிந்து சொன்னான். "மைந்த! அஃது உன் னொருவனாலேயே ஆகக் கூடிய காரியமாகும்;

பணிக்கின்றேன்; கேட்டுவருவாய்! பாதாளவுலகவாஸிகளாகித் தகாத வலிமை பெற்றுக் கந்தற்கும் கருதற் கொண்ணுப் போர்வலியும் வெற்றியும் மிகக் கொண்டு வாழும் முக்கோடி அஸுரர்கள் நீங்காத—அழியாத கவசம் பெற்றுடைமையால் நிவாத கவசரென்னும் பேருடையவர்கள், இத்தேவருலகத்தினையும் தேவரையும் என்னையும் அரசியலையும் அடிக்கடி வருத்திக் கொண்டிருக்கும் உபத்திரவம் பொறுக்கக் கூடவில்லை; அங்குச் சென்று அவர்களை யழித்து அவரால் உண்டாகும் தீங்கினின்றும் தேவரை விடுவிக்குமாறு வேண்டுகின்றே" னென்று சொன்னுன்.

போர் குறித்துப் புறப்படல்.

போரென்னும் வார்த்தையைக் கேட்டவுடனே பூரித்த மனங் கொண்ட புண்ணியச் செயலினேனுகிய பார்த்தன், தேகம் பெருத்து மேகம்போலெழுந்து, "இக்கணமே செல்லுகின்றேன்; அத் துஷ்டர் இருப்பிடம் காட்டும் படியாகச் செய்யுங்கள்; புண்ணியத்தைக் காக்கும் பொருட்டு எடுத்தது இச் சடலமன்ருே? அறத்தைக் காக்க முயல்வார்க்கு மறத்தொழி லுடையாரிடம் அச்சமேது! அம் முக்கோடி அவுணர்களும் இன்றே ஒழிந்து போனுரென்பதைத் திண்ணமாக எண்ணுங்கள்; என்னையப் பணிக்கு அனுப்புங்கள்'' என்று தொழுது நின்ருன். தேவர்கோன், அவனுக்குப் போர்க்குரியதாகிப் போர்க் குதிரைகள் ஆயிரம் பூட்டப் பெற்ற அழியாத இரதத்தையும், அதனைச் செலுத்தற்குத் தக்கவனுகி மனவலியுடைய தன் ஸாரதியாகிய மாதலியையுங் கொடுத்தருளி, "விஜயம் பெற்று மீள்க'' என்னும் ஆசீர் வசனங்களுந்தந்து அனுப்பினுன். விஜயனும் தனக்குரியதாகிய போர்க் கோலம் கொண்டு நின்ருன். தாக்கும் போர்க்குரிய

வலிவுடைய ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு, மாதலி செலுத்தி வந்த தேர் மீதேறி, அந்த வஞ்சக் கொடியராகிய முக்கோடியருமிருந்து வாழும் திசைக்கு ரதத்தைச் செலுத்தென ஆணையிட்டான். தேரும் சென்று கொண்டிருந்தது. வில் விஜயன் கேட்க, மாதலி, அம்முக்கோடியராகிய நிவாத கவசரது வலிமையெல்லாம் நன்கெடுத் துரைத்தான். பாதலத்துற்ற தோயமா புரத்தில் அக்கள்வர் வசிக்கின்றாரென்ப துணர்ந்து, சித்திரசேனன் அந்நகர்க்கு வழி காட்டத் தேரினைச் செலுத்திச் சென்றார்கள்.

"முப்பத்து முக்கோடி தேவர்களாலும் அழித்துத் தொலைக்க முடியாத முக்கோடி அஸுரரையும் ஒரு மனிதன் சென்று அழித்திடல் முடியுமா? இஃதென்ன பேதைமை யென்று தேவர்கள் பரிகசித்தார்கள். பின்னர்ச் சித்திர சேனனும் மாதலியும் அர்ச்சுனனது வரலாற்றையும் போராற்றலையும் இந்திரன் அனுப்பினமையையும் சொல்லக் கேட்டு அவனுருவத்தையும் நேரிற் கண்டு, ஐயம் நீங்கிய வனுக்கு உபசாரமும் வாழ்த்தும் கூறியனுப்பினார்கள். விஜயனும் தேவர்களை வணங்கிச் சூரியன்போல ஆகாய மார்க்கத்தில் போனான். அந்தத் தோற்றமானது, கரிய மலை யொன்றைச் செம்பொன் மலை யொன்று தாங்கிச்செல்வதுபோலிருந்தது. பெருங்காலம் தவம்புரிந்து பெற்ற நல்வரத்தால் மலைவலிகொண்டு தேவரை யெப்போதும் பகைத்துப் போர்செய்து புறங்கண்டு ஓட்டிவருகின்றவர்களாகிய அந்த முக்கோடி யசுரரையும் வெல்வேனென்று ஒரு தமியனாகச் செல்லும் அவனது மனோதிடத்தை யெண்ணித் தேவரெலாம் பிரமித்துப் "போமிடந்தோறும் வெற்றியே பெறுக நீ" என்று கூறிக்கொண்டிருக்கும் வாழ்த்தொலிகளே எங்கும் மிக்கெழுந்தன. விண்ணின்மேற் பரந்து செல்லும்

தேரினை மாதலி, மண்ணின்மீது, சித்திரசேனன் காட்டிய வழியே நடத்திக்கொண்டுபோனான். மண்ணுலகந் தாண்டிப் பாதலத்திடைச் சென்றபோது, வீரசிங்கமாகிய விஜயன், பகைவர் நடுங்கும்படி வில்லில் நாணொலி எழுப்பினான். அவ்வொலி யெங்கணும் பரவியது. அவுணர் தலைவரது செவிகளிலும் பட்டது. அவர் திகைத்தனர். தேவர்கள் போர்க்கெழுந்து வருகின்றார்கள்போலு மென்றயிர்த்தனர். அப்போது விஜயன் சித்திரசேனனைத் தூதாக அனுப்பிப் போருக்கெழும்படி யசுரருக்குச் சொல்லென ஏவினான்.

பயந்தோடு மியல்புடைய அமரர் தம்மீது பொரற்கு வலியவே வருதல் கண்டு, "ஏதோ நெடுந்துணை பெற்றிருக்கின்றார்கள்" என்று ஐயுற்றிருக்கும் அசுரர்களின் வாசஸ்தலத்துக்குப்போன தூதனாகிய சித்திரஸேனன், "ஒரு குலத்தாராலும் வெல்லற்கரிய பலமும் வரமும் தெய்வாஸ்திரங்களுமுடைய குருகுலத்து வீரனாகிய வில்விஜயன் தேவர்கட்கு வெற்றி தரற்பொருட்டுத் தமியனாகவே உம்மோடும் போர்புரிய வந்திருக்கின்றான்; அவனுடன் எதிர்த்துப் போர்செய்யக் கூடுமாயின் உமது சேனையுடன் வாருங்கள். இல்லெனில், பாதம் பணியுங்கள் என்று எதிரிகளாகிய உங்கட்குச் சொல்லிவர அனுப்பினான்; இதோ உங்கள் நகரக் கோபுரவாயிலில் நிற்கின்றான்" என்று சொன்னான். "நன்று; நன்று; முத்தேவரு மில்லையாம், மற்ற எத்தேவருமில்லையாம். புலியின் கூட்டத்து மத்தியில் வந்து நின்று ஒரு பூனையானது போர்க்கு அழைப்பதுபோ லிருக்கின்றது. ஒரு நரன், நம் நடுவில்தோன்றி யுத்தத்துக்கு அழைப்பது" என்று கோபாவேசம் கொண்டு, வெளி வந்தார்கள். இழந்த நாட்டையும் மானத்தையும் தாயாதர்களிடமிருந்து மீட்டுக்கொள்ள முடியாத ஒரு பேதை அசுர

நாட்டிடைவந்து போர்க்கு அழைப்பதா?'' என்று, எதிர் நின்று வாளிகள் தொடுத்தார்கள். அலக்ஷியமாக ஒருவர் இருவராக நின்று போர்புரிந்து, விஜயனது வலிமையையும் அஞ்சாமையையும் கரவேக சரவேகங்களையும் கண்டு, இவன் தக்க வீரன்தானென மதித்து முக்கோடியரும் போர்க்கோலம் பூண்டு அர்ச்சுனனைச் சூழ்ந்து போர்புரிந்தார்கள். வீரனாகிய விஜயன் தன்னை யசுரர்கள் சூழ்ந்து கொண்டார்கள் என்பது தெரிந்து, ரதத்தைச் சக்கராகாரமாகச் சுழற்றியேகொண்டிருக்கும்படியாகச் சொல்லிவிட்டு, தனது வில்லைக் கீழே யூன்றி மேல்முனையை முகவாய்க் கட்டையில் தாங்கிக் கொண்டு, இரண்டு கைகளாலும் பாணங்களையெடுத்து இடைவிடா தெய்துக்கொண் டிருந்தான். இவனே ஸவ்ய சாசி என்று மாதலியும் மற்றோரும் கொண்டாடினார்கள். அசுரர்கள் மிகவும் வெகுண்டு உக்கிரமாகப் போர்செய்யத் தொடங்கி, யர்ச்சுனனது வலனொடுங்கும்படியாக எப் பக்கங்களிலுமிருந்தும் பாணமழை பொழிந்துகொண்டிருந்தார்கள். அப்போது, விஜயன் இவர்களை யிப்படி விட்டிடப்படாதெனத் தேறி, பிரமாஸ்திரத்தைத் தொடுத்தேவிவிட்டான். அவ்வஸ்திரம் பல கோடிக்கணக்காகவும் பலவகைக் கணைகளாகவும் உருக்கொண்டு போய் எதிரே முன்னணியில் நின்ற அசுரப்படைத் தலைவர்கள் ஒரு கோடிப் பெயர்களையும் ஒரு கணத்திலே ஒருவரொழியாமல் உயிருண்டது.

முன்னர்ச் சென்ற ஒருகோடி வீரர்கள் மாண்டொழிந்தமை கண்ட மற்றுமொரு கோடிவீரர் எதிர்சென்று வீரம் பேசி முன்னவரினும் மும்மடங்கு வலியும் வேகமும் கோபமும் கொண்டவராகி, நரனைச் சூழ்ந்து ஏககாலத்தில் பல கணைகளையுந் தொடுத்து அவனைப் பாணங்களால் மறைத்து விட்டார்கள். தனஞ்சயன் "போரில் வெல்வது தேக வலியே

யன்று; மனேவலி மாத்திரமன்று; யுக்தியும் புத்தியும் வலி கொண்டு பொருதுந் தன்மையிலேயாம்'' என்று தெரிந்தவ னதால், அவர்கள் கணேகளே யெய்யும்வரையில் பொறுத் திருந்து, எப்புறமும் அக்கணேகள் வருதலே யுணர்ந்து, மாதலி யைப் பார்த்து, "ஏககாலத்தில் சுற்றுப்புறமிருந்துவரும் எக் கணேகளும் ஒரு லக்ஷியத்தையே பார்த்துவிட் டிருப்பதனல், அவைகள் லக்ஷியம் தவறிப்போகுமாயின், கணேகள் வேக மாகச் சென்று எதிர்ப்புறத்திற் தாக்குமென்ப துணர்ந் துளா யாகையால், ரதத்தைத் திடீரென்று ஆகாயத்தி லெழுப்பிவி''டென்முன். உடனே ரதம் மேலே சென்று விட்டது. அவர்கள் கணேகள், எதிர்ப்புறம் நின்ற அவர்க ளினத்தவரையே தாக்கின; அச்சமயம், ஆகாயத்தில் சென்ற ரதத்தைச் சக்கரமாகச் சுழற்றும்படியாகச் செய்து, நாராய ணஸ்திரத்தைக் கையிலெடுத்துக் கிரமப்படி பூஜை புரிந்து, மந்திரோச்சாடனத்துடன் விட்டுவிட்டான். அது பல கோடியாகப் பலவடிவ மெடுத்துக்கொண்டு, அசுரரைத் தாக் கியது. தம்மினத்தார் கணேகளால் வலியழிந்து அவ்வசுரர் நிற்கும்போது வந்து தாக்கிய நாராயணஸ்திரத்தால் அழிக் கப்பட்டு அவ் வொருகோடி யசுரரும் அமர்க்களத்துச் சாய்ந்து மாண்டனர். மற்றுமொரு கோடியையு மிவ்வழியே சூழ்ந்து மாருதாஸ்திரத்தினல் மாய்த் தொழித்தான். "ஒழிந்தனர் அவ்வொருகோடி யவுணர்களும் மற்றுமுள்ளா ரும்'' என்று மனங்களித்திருந்தபோது, அவர்களது அற்ற உடல்களின் குறைகளெல்லாம் வாயுவால் சுழன்று அவை யவை யொன்றுபட்டு எல்லோரும் உருவத்துடன் எழுந்து பொர ஆரம்பித்தார்கள். அர்ச்சுனன் திகைத்து நின்முன். அப்போது ஆகாயத்தில் எழுந்து சொன்ன அசரீரி யொன் ருல் உண்மை யறிந்து ஒன்றுந் தோன்ருதவன்போல் நிற்

கும்போது, அசுரர் வாயுடன் கைசேர்த்து ஆவலங் கொட்டி னர்; அவரது மரணத்துக்கு ஏதுவாகிய அச்சமயம்பார்த்து வேட வுருவில் பரமன் கொடுத்த தெய்வக் கணையாகிய பாசு பதாஸ்திரத்தை யேவி, யாவரையும் எழுந்திரா வண்ணம் தொலைத்திட்டான். முக்கோடியருமமாண்டார்கள். நகரம் பாழ்பட்டது. அவுணமங்கையர் அழுகையொலியே அந்நக ரைச் சூழ்ந்துகொண்டது.

"தத்திக் குருதிக் கடல்பொங்கத் தனித்தனிநின்
றெத்திக்கினும் வெம்பிணக்குன்ற மெழிலொடேங்கப்
பத்திப்படமேற் பருந்தின்குலம் பந்தர் செய்யக்
கொத்துறந் தண்டார்த்திறற் கோதண்ட வீரனின்றான்."

எங்கும், மண்ணில் ரத்த ஆறும் நிணச்சேறும் பிணக்குவிய லும் நிறைந்திருக்கவும், விண்ணில் பருந்துகள் பந்தலிட்டுக் கொண்டிருக்கவும், அந்த அமர்க்களத்தினில், ஒரு தேரும் ஒரு ஸாரதியும் ஒரு தூதுவனுமிருக்கத் தேரின்மேல் கோத ண்டவிஜய கோலாகலன் ஒருவனே வெற்றிக் களையுடன் நின்றிருந்தான். அவுண மங்கையர் பலகோடியர் அழுது இரங்கி நிற்றலைப் பொருதவனாகித் தேரினைப் பொன்னகருக் குச் செலுத்தச்சொல்லி, அமராவதிக்கே திரும்பி வந்துக் கொண் டிருந்தான்.

காலகேயர்வதம்

வந்துகொண் டிருக்கும்போது, வழியில் மற்றோர் நகரம் தோன்றக்கண்டு, அஃதியாவதென மாதலியை வினவினன். அவன், அந்நகருற்ற காலகேயரைப்பற்றிச் சொல்லலுற்றான்; "அரசிளங்குமரரே! தநுஜகுல மாதரில் காலகையென்பாள் பெற்ற முப்பதினாயிரம் அசுரர்கள் இந்நகரியில் வசிக்கின்றார் கள். இவர்கள் தேவர்களால் மொத்துண்டு தோல்வியுற்று

நடுங்குவதைப், பெற்ற தாயான காலகை சகியாமல் பிரம னைக்குறித்து நீண்டகாலம் கடுந்தவஞ்செய்து, அப்பெரியோ னது அருளால், "தனது மக்கள் முப்பதினாயிர வர்க்கமாகப் பொன்னின் ஒளிமேனியும், பொற்குண்டலங்களும், பொற் கவசங்களும் மற்றும் பொன்னாபரணங்களும், இப்பொன் போன்ற உருவினையுடைய அழியாத நகரத்தையும் பெற்றுத் தனது மக்களை வாழ்வுறுத்தினாள். அக்காலகேயர் இந்நகரில் வசிக்கின்றார்கள். இவர்களும் நேர் விரோதிகள்தாம். இவர்கள் உயிரோடிருக்கும் வரையும் தேவர்கட்கு நல்வாழ்வு இல்லை" என்று சொன்னான். கேட்ட இந்திரகுமாரன், "தேவர் துயர் தீர்ப்பே" னென்று கையில் வில்லெடுத்தான். "இன்னும் துன் பத்துக்குக் காரணமான இவ்வசுரரை யுயிரொடு விடுத்துப் போதல் நலமன்" றெனத் தீர்மானித்து, அந்நகரியின்மேல் தேரைச் செலுத்தச் செய்து, அசுரரிடம் சித்திரசேனனைத் தூதாகவும் அனுப்பினான். சித்திரசேனன் சென்று, அர்ச்சுன னது பிரதாபத்தையும் நிவாதகவசர்வதத்தையும் சொல்லிப் "போர் புரிவீராயின், வெளியிற் புறப்படுங்க" ளென்று சொன் னான்.

அம் முப்பதினாயிரவர்க்கும் ஆயுஸுக்கு முடிவுகாலமாத லால், உடனே யுத்த ஸந்நத்தராகி விஜயனுக்கு எதிரே நின் றார்கள். அர்ச்சுனன், அந்த முக்கோடியரெங்கே இந்த முப் பதினாயிரவரெங்கே யென்று அலக்ஷியமாய்ப் போர்புரிந்த அளவில், அவரது வலிமையையும் அழியாக் கவசத்தையும் தெரிந்து, மாதலி சொன்னதை மனதிற்கொண்டு, பிரமனது வரபலம் குறைவதற்கு நாராயணாஸ்திரமே போதருமெனக் கொண்டு, சக்கராகாரமாகத் தேரினைச் சுற்றச்செய்து, அரி நாமஸ்மரணைகொண்டு அவ்வஸ்திரத்தை யேவினான். அது முப் பதினாயிரக் கணைகளாக உருவெடுத்துக்கொண்டு, விரைந்து

சென்று, அம்முப்பதினுயிரவருடைய மெய்க்கவசங்களேயும் ஏககாலத்தில் அறுத்துக் கீழேதள்ளியது. கவசம் கழிந்த வுடன், காலகையர் பொன்னெனு மேனியும் பொன்னரை ஞாணும் பொன் முப்புரிநூலும் திகழ நின்ருர்கள். அர்ச்சுனன் அவர்களது மேனி யொளியிலும் முப்புரி நூலிலும் வைத்த சிந்தையனுகி யிவரை நாமழித்தல் பாவமென்று நினேத்துப் பாணமெடாமல் நின்று மூர்ச்சித் தான். அப்போது அசுரர்கள் ஒருங்கு கூடிவந்து அவனேச் சூழ்ந்து பரிகசித்துக் கொல்வேமென உடன் றெழுந்தார்கள். களே தீர்ந்தவுடன், கண் விழித்து நோக்க அவர் அருகு நின்றமையால், அவரிடம் அழகும் உருவமும் முப்புரி நூலு மிருந்தாலும், ஸத்யமில்லே யென்பதுணர்ந்து, ஸத்ய சௌசங்களில்லாதாரைக் கொல்லுதல் இழுக்காக மாட்டா தென்பதையுன்னி வில்லேக் கையிலேந்தி போர் தொடுத்தான். மீண்டும் வெம்போர் தொடங்கியது. உக்ர மாகப் பொருதான். அவர்கள் மலேத்தாராயினும் வெகுளி பொங்கி மிக வீரத்துடன் பொருதார்கள். முடிவில் பரமன் அஸ்திரங் கொண்டே அவரையும் ஒழித்துக் காலனுக்கு விருந்தளித்தான். அந்த முக்கோடி, இந்த முப்பதினுயிரம் என்னும் அசுரப் பூண்டுகளே வேரொடு களேந்து தெய்வப் பயிர்க்கு சுக வாழ்வாகிய நன்னீர் பாய்ச்சினுன். மாதலி மனம் கொண்ட மட்டும் வாழ்த்தினுன். சித்திர சேனன் குதித்தாடினுன். தேரை யமரார் பதிக்குத் திருப்பினுர்கள். ஒற்றர்களால் அறிந்த தேவேந்திரன், மகனே நல்வர வேற்க ஏற்பாடு செய்திருந்தான். அவ்வமயம் சித்திரசேனனும் வந்து வில் விஜயனது நல் வரவைக் கூறினுன். உடனே, அமரரெல்லோரும், தேவ வாத்ய வேத பூஜ்ய வாழ்த் தொலிகளுடன் சென்று எதிர் கொண்டார்கள். விஜயன்

தேரினின்றும் குதித்துத் தந்தை தாளிணைகளில் வீழ்ந்து வணங்கினான்.

வணங்கிய மைந்தனை வாரி யெடுத்து மார்புடனணைத்துத் தழுவிக் கொண்டு பல வாழ்த்துக்கள் கூறி, உன்னால் தேவர்கட்கு விடுதலை கிடைத்ததென்று கூறினான். உடனே தனது ஆணையினால் அலங்காரம் செய்யப்பட்டு வந்திருந்த ஐராவத மென்னும் யானையின் பேரில் அவனை யேற்றித் தேவ நகரியை வலம் வந்து உபசரித்து போமுது விருந்தளித்துச் சிம்மாஸனத்தி லிருத்தினான். தேவர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். முன்னம், "ஓராஸனமும் உடனுணவும் இந்நரனுக்குக் கொடுப்பதா" வென்று, ஐயமுற்றவ ரெல்லாம் இந்திரனை மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்- இவனது வெற்றிப் போரினைப் பற்றிச் சில பேசும்படி. மாதலியை யேவினான். அவன், ஐய! அமரர்களே!! என்று கூறலுற்றான்.

"மற்றவன் தொழுது போற்றி வானவர் குழுவுக் கெல்லாம்
கொற்றவ என்னலின்று கூறலாந் தகைமைத் தன்றால்
உற்றெதிர் மூன்று கோடி யசுரரு முடனேசேர
இற்றது கண்டேன் பின்னர் வில்லினாணிடியுங் கேட்டேன்."

"ஆயது நிகழ்ந்த பின்னை அயனருள் வரத்தினாலே
ஏயவாள் வலியின்மிக்க இரணிய புரத்துளோரைத்
தீயவெம் பகழியொன்றால் செற்றன னிமைப்பின் முற்றும்
மாயமோ மனிதன் வில்லின் வன்மையோ தெரிந்ததில்லை."

என்று வியந்து கூறினான். பின்னர் அந்நகரில் சின்னாளிருந்து தேவர்களிடம் வர பலமும் படைக்கலங்களும் மந்திரங்களும் மற்றும் பரிசுகளாகப் பெற்று, அர்ச்சுனன் இந்திரனது அநுமதி கொண்டு புறப்பட்டான். அதற்கு முன்

னரே, இந்திரன், ரோமச முனிவரைப் பாண்டவரிடம் போய், அர்ச்சுனனது தவநிலையையும் பரமனிடம் பாசுபதாஸ்திரம் பெற்றமையையும் இந்திரலோகத்துற்று இளவரசு கொண்டமையையும் கால கேய நிவாதகவசர்களை வதைத்தமையையும் திரும்பி வருதலையும் தெரிவிக்கச்சொல்லியனுப்பினான். அதனாலிவன் வரவின்போது தருமனாதியர் மிகுந்த குதூஹலத்துடன் அவனை நல்வரவேற்றுக் கவனிப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

புஷ்ப யாத்திரைச் சருக்கம்.

"மற்கொண்டு வகுத்தனைய சிகரத்திண்டோள்
வானரக்கன் குலத்தோடும் மடியமுன்னம்
விற்கொண்டு சரந்தொடுத்துப் புரையில் கேள்வி
விண்ணவர்தம் துயர் தீர்த்த வீராமன்
கற்கொண்ட அகலியைதன் உருவம் மீளக்
கவின் கொள்ளக் கொடுத்ததிரு கமலபாதம்
சொற்கொண்டு துதித்தெழுந்து துள்ளி நாளும்
தொழுமவரே எழுபிறவித் துவக்கற்றாரே"

ரோமச முனிவர் வரவு

வியாஸமா முனிவர் சொற்படியே பாசுபதாஸ்திரம் பெற்று வரும் பொருட்டு விஜயனை வழியனுப்பிய பிறகு தர்மனாதியர் பால் நிகழ்ந்த செய்தியைக் கூறுவோம்.

ஒரு வயிற்றிற் பிறந்தமை மாத்திரமன்றி யோருயிர் போற் பழகியிருந்த பஞ்சபாண்டவரில் ஒருவர் பிரிந்தாலும் மற்றையவர்தம் வாழ்வு சிறந்திடா தென்பது உண்மையல்லவோ? அதிலும் தருமராஜர் தம்பியின் பிரிவாற்றாமையைப்

பொறுக்க முடியாமல், தம்பி விஜயன் தனித்துச் சென்றிருக்கின்றானே! என்ன விபத்து சம்பவிக்குமோ; பகைவர் என்ன வென்ன சூழ்ச்சி செய்வார்களோ? என்று விஜயனது நினைவாகவே இருந்தார். அவ்வமயம்தான் இந்திரனால் அனுப்பப்பெற்ற ரோமச முனிவர் அங்குவந்துசேர்ந்தார். வந்த முனிவரைப்பாண்டவர்நால்வரும்பாஞ்சாலியும்வணங்கியாசிபெற்று நல்லாஸனத்திருத்தி உபசரித்தார்கள். தருமனுதியர் முக வாட்டத்தைக் கண்ணுற்ற மாமுனிவர், "இது அர்ச்சுனனது பிரிவாற்றாமையால் இருத்தல் வேண்டு" மென்று நிச்சயித்து, "அரசே! நீங்கள் அர்ச்சுனனது பிரிவை யாற்றாமல் வருந்தியிருப்பீர்கள் என்று நினைந்தே தேவர் கோமான் இந்திரன், தன் குமாரன் கிரீடியினது ஜய விஜயங்களை யெல்லாம் உங்கட்குச் சொல்லி மனோ வியாகூலத்தை யாற்றிவரும்படி என்னை யனுப்பினான். அவற்றைத் தெரிவிக்கும் பொருட்டே நான் இங்கு வந்திருக்கின்றேன். நீங்கள் துயருறல் வேண்டாம். வீரக் காளையாகிய அர்ச்சுனனுக்கு வெற்றியும் லாபமுமில்லாமல் தோல்வியும் நஷ்டமும் வருவதுண்டோ; ஒரு காலும் வாராது" என்று அர்ச்சுனன் தவச் சிறப்பையும் மூகாஸுர வதத்தையும் பரமனது தரிசனத்தையும் பாசுபதம் பெற்றதையும் இந்திரன் தன்னோடு ஓராஸனத் தமர்ந்து தேவர்கட்கு இளவரசென முடி சூடினமையையும் காலகேய நிவாத கவசர்களை வதம் செய்த தன்மையையும் ஒன்று விடாமல் எல்லாவற்றையும் நன்கு எடுத் தோதினார். யாவரும் கேட்டு உளம் பூரித்து மகிழ்ந்தார்கள்.

பின்னர், யாவரும் அக் காமிய வனத்தை விட்டுப் புறப்பட்டு, ரோமச முனிவரோடும் வழி நடந்து மதுகா தீர்த்தம் முதலாகிய நல்ல தீர்த்தத் துறைகளிலாடிப் புனிதராகி, இந்திர நீல பர்வதத்தின் சமீபமணைந்தார்கள். அங்குள்ள தபோ

தனர்கள் எல்லாரையும் வணங்கி யாசிகள் பெற்று, அங்குத் தான் விஜயன் ஆரம்ப தவத்தைச் செய்தான் என்று கேட்டு மகிழ்ந்து, அவனிருந்து தவஞ்செய்த இடத்தினைக் கண்டானந்தித்து, விஜயனைக் கண்டவர்போலாகிப் பின்னர் அடுத்துள்ள தசாங்க முனிவர் வனம்போய்ச் சேர்ந்தார்கள். அங்கும் தீர்த்தாடனமும் முனிவராசிகளும் பெற்று, அருகிலுள்ள மந்திர பர்வதத்தையும் தரிசித்தார்கள். “இந்த மலைதான் வானவரும் தானவரும் கூடிக் கடலைக் கடைந்தபோது மத்தாக இருந்தது” என்று சொல்லக்கேட்டு மகிழ்ந்தார்கள். உடனே அங்கிருந்து புறப்பட்டு கங்கைநதி குதித்துக் கொண்டு பாய்ந்துவரக்கூடிய காந்தர்ப்பம் என்னும் மலையையும் கண்டு சென்றார்கள். “இந்த மலையிலிருந்து கைலைமலை ஈரைம்பது யோசனையி லிருக்கின்ற” தெனக் கேட்டு, அத்திசைக்கும் அம்மலைக்கும் வணக்கம் செய்து போய், சுப்பிரமணியக் கடவுள்போல் எந்தக் கலைகளும் அறிந்துள்ள மகா ஞானியாகிய தேவமுனி விசாலயன் என்போரது ஆலயத்தைத் தரிசித்து, இவ்விடத்தில் ஓராண்டேனு மிருந்து வாழ்தல் வேண்டுமென முனிவர்கள் வேண்ட அம்மலைச்சாரலில் சாலை யமைத்துத் தங்கினார்கள். ரோமசமுனியு மாண்டிருந்தார். அவ்விடத்தில் தம்பியர் மூவரும் தர்மபத்தினியும் தம்மை வணங்கி யுபசரித்துவர, தெய்வபூஜை முனிவர் பூஜை நித்திய கர்மம் சத்திய விரதம் முதலான ஒன்றினும் ஒழுங்கு தவறாமல் செய்துகொண்டு தர்மராஜன் வாழ்ந்திருந்தார். அவ்விடத்து நிகழ்ந்ததொரு செய்தியைக் குறிப்போம்.

திரௌபதி தெய்வமலர் கண்டு மயங்கல்

ரோமச முனிவர் ஆணையிட்டபடியே, அவ்வனத்திடை வசித்துக்கொண்டிருந்தபோது, ஒருநாள் திரௌபதியினருகே

இந்திரன் பொன் முடியிலணியத்தகுந்ததொரு பொன்தாமரை மலர் வீழ்த்திடக்கண்டு, அவள் மயக்கமும் அன்புங்கொண்டவளாகி அம்மலரைக் கையிலேந்திக் கொண்டு, வீமனிருப்பிடம் சென்று, அவனுக்கு அம்மலரின் தன்மையைப் பேசி, இம்மலருக்குப் பூமியி லொருமலரும் உவமையாகக் காண முடியாது; ஆயிர இதழுடைய இம்மலர் போன்ற தொரு மலர் எங்கு இருப்பினும் கொணர்ந்து கொடுத்திடல் வேண்டுகின்றே னென்று கொஞ்சிக் கெஞ்சி வேண்டிக் கொண்டாள். வீமன் அந்த புஷ்பத்தைப் பெற்றுக் கொண்டு, ரோமசமுனிவரை வணங்கி யவரிடம் அதனைப் பற்றிய விவரமெலாம் வினவினன். "இந்தப் பூவினியற்கையையும் பெருமையையும் பார்த்தால் இஃது இயக்கர் பதியாகிய குபேரனது நந்தவனத்து மலராகத் தோன்றுகின்றது; இதனைப் பெற்று வருதல் அரிது; அங்குக் காவலர்களாக இயக்கரும் அரக்கரும் காத்திருக்கிறார்கள்; அன்று மாயன், தேவர் பதியிற் புகுந்து ஒரு மாதுக்காகக் கொணர்ந்து ஈந்தபின், இம்மலரையிப்புவியிற் கண்டாரில்லை; ஆதலால் இதனைப் பெறுதலென்பது அஸாத்தியமே யாகும்" என்றார் ரோமச முனிவர்.

வீமன் மலர்க்குப் புறப்படல்

"யக்ஷர் பதியி லம்மலர் இருக்கின்ற" தெனக் கேட்டவளவிலே மலர் உள்ளதாயின் அது எப்பதியி லிருந்தாலென்ன!" என்று துணிவு கொண்டவனாகி, விரைந்துசென்று தமையற்குந்தெரிவித்திடாமல் வில்லும் கதையும் அம்பறாத் தூணியுங் கொண்டு, வீர கோலத்துடன் புறப்பட்டு விட்டான். "பயப்படாதே! மயங்காதே!! கலங்காதே!!! கவலைப்படாதிரு; வெகுவிரைவில் இம்மலர் பெற்று வருகின்றேன்" என்று திரௌபதிக்குத் துணிவுரைத்து வழியிற் குறிக்

கொண்டு செல்கின்றான்; அவன் நடந்து செல்லும்போது நடையின் வேகக்காற்றினால், வழியிலுள்ள மரங்களும் கொடிகளும் அலையத் தலைப்பட்டன. விரைந்து சென்று காஞ்சன வனம்கடந்து, அப்பால் போனபோது, மதயானைகளும் துதிக்கைகொண்டு எட்டமுடியாக் குலைகளுடைய வாழைகள் நிறைந்துள்ள கதலிக்காடொன்றைக் கண்டான். அப்போது, அக் கதலிக்காட்டுக் காவலாக இந்த அரக்கர்கள் அவ்வழியே சென்றிடு மிவனை யெதிர்த்தார்கள். தோள் தினவுற்றுப் பொருதற்கு ஆட்கள் கிடைக்காமற் சோம்பியிருந்த வீமனுக்கு, அது, பெருவிருந்து கிடைத்ததுபோலாகவே, அவரோடும் மற்போர் புரிந்து, ஒரு கணத்தினில், அவர்கள் ஆவியைப் பிரித்து விண்ணிலேற்றி உடல்களைக் கட்டையென மண்ணின்மேல் உதிர்த்திட்டான்.

இருமாருதிகள்

காவலரக்கர்கள் கழிந்தவுடன் உக்ரம் மாறாமல், அவ்வனத்தை யழித்திட ஆரம்பித்தான். அன்று மாருதி இலங்கை சென்று அச்சோலையை யழித்த மாதிரியாக இச்சோலையை அழித்து வரும்போது, அந்த வனத்திலிருந்த பறவைகளும் விலங்குகளும் பேரொலிகொண்டு பயந்தோட ஆரம்பித்தன. இப்படியாகி யெங்கும் பெருத்த குழப்பமும் முழக்கமுங் கேட்டபோது, அங்கிருந்ததோர் தனியிடத்திற் றவஞ் செய்துகொண்டிருந்த மந்திரமலைபோலும் தோளுடைய ஆஞ்சநேயர் தவங்கலைந்து விழித்துப் பார்த்தார். மரங்களும் செடி கொடிகளும் அழிந்து வெட்டவெளியாயிருத்தல் கண்டார்; பறவைகள் விலங்குகள் பறந்து பாய்தலைப் பார்த்தார். யார் இங்குப் புதிதாக வந்திருப்பவரெனக் கண்விழித்துக் கவனித்தார். அப்போது வீமனும் தவத்தில்

வீற்றிருக்கும் அனுமனைப் பார்த்தான். நீண்ட வாலையும் கவனித்தான். ஆஞ்சநேயர் எழுந்து, வாலினையும் நீட்டிக் கொண்டு, வந்து கொண்டிருக்கும் வீமனைத் தடுத்து, "அண்டர் தானவர் அரக்கரும் வரமுடியாத இவ் விருள் வனத்தில் வந்து மரமெலாம் தகர்த்துச் சோலையை யழித்துப் பசுமையை நீக்கித் தனித்துத் திரிந்து கொண் டிருக்கும் மானுடன் நீயார்?" என வினவினர். அதனைக் கேட்ட வீமன் "என் முன்னாக வந்த நீயார்?" என்ன, அக் கேள்வியையே திருப்பி விட்டான். "நான் கேட்க மறு மொழி பகராது, என்னை யாரெனக் கேட்கின்றனையா? உனது சிலை வலியோ? தோள் வலியோ! எந்த வலிகொண்டு இத் துணிவுடன் வினவுகின்றாய்! மானுடா! வலியுண்டானால் இந்த வாலினைக் கடந்துபோ பார்ப்போம்" என்று தமது வாலினைப் பெருக்கவிட்டு நின்றார்.

அது கேட்டு வீமன், "வரங்கொள்வார் சிலையிராகவன் மாபெருந் தூதனாகித் தரங்கவாரிதியைத் தாண்டி நின்ற என் முன்னவனாகிய மாருதியின் வாலொன்றல்லாத மற்றெந்த வாலையுங் கடந்திடு மெனக்கு, அற்பக் குரங்காகிய உன் வாலொரு பெரிதாக மாட்டாது; இவ்வாலைத் தாண்டுதலு மரிதாக மாட்டாது" என்றான். அந்த வார்த்தையைக் கேட்ட அநுமன், சிரித்து, "போ! போ!! அற்பமானுடரிரு வரையும் தோளின்மேற் சுமந்து திரிந்ததோர் அற்பக் குரங் கான அந்த ஆஞ்சனேயனைப் பற்றியா என்னெதிரிற் புகழ் கிறாய்? சிற்றினக் குரங்குகளில் ஒருவனான அவன் புகழைப் பேசிக்கொண்டு இங்கு நில்லாதே! பெருத்த குரங்கரசர்களி லொருவனாகிய என்முன் வந்து, ஒரு அடிமைக் குரங்கைப் புகழ்ந்த உன் வாயைக் கிழித்திடுவேன்" என்று அநுமார் வீமனொடும் விளையாட்டாகப் பேசினர். "பேருலகம்

புகழும் பெருவலி கொண்டு இலங்கையைப் பொடிப்படுத்தி ராம பக்தியிற் சிறந்தோராகித் தவத்திற் சிறந்த தனது முன்னவனுகிய நைஷ்டிக பிரமசாரி அநுமனை யிகழ்ந்து பேசிய வார்த்தையைக் கேட்ட வீமன், கோபங் கொண்டு, பெருநகை செய்து, "அரக்கர் நாயகன் ஊரில் அழலூட்டி யழித்து, இவ்வகிலம் புரக்கும் நாயகனுகிய ஸ்ரீ ராமபிரானையும் அவர்தம் பக்தர்களிலுயர்ந்தவராகிய என் முன்னேன் ஆஞ்சநேயரையுமா நீ என் முன்னே இழித்துப் பேசுகிறுய்? தீயவழி செல்லாதே! தவத்துருக் கொண்ட உன்னைத்தொடப் படாதென்றெண்ணுகிறேன்; அன்றி, என் ஐயன் இராமனையும் என் அண்ணன் அநுமானையும் இழித்துக் கூறிய உன்னையும் உன் துணைவரையும் இப்போதே எமனூருக்கு அனுப்பி யிருப்பேன்'' என்று கூறப் பின்னும், ஸ்ரீ ராகவனது புகழையும் மாருதி பக்தனையும் வாயார வாழ்த்திக் கொண்டிருந்தான்.

உடனே அநுமான், அவனை மார்புறத் தழுவி யணைந்து கொண்டு, "தம்பி! நீ யார்!! நீ எப்படி யெனக்கு தம்பியாதல் வேண்டும்? பாண்டவரில் இரண்டா மவனுன—என் தந்தை வாயுவின் புத்திரனுகிய வீமன் நீ தானே!!! இங்கு என்ன காரியமாக வந்துளாய்!!!! அரசினையும் அண்ணன் அறன் மைந்தனையும் விட்டு என் பிரிந்து வந்தாய்?'' என அன்புடன் கேட்டார். உடனே வீமன், அவர் பாதத்தில் வீழ்ந்து வணங்கித் தான் வீமன் தானென்பதையும் அரசிழந்து வனவாஸமிருப்பதையும், தற்போது ஒரு மலர் நாடிக் குபேர பட்டணம் போவதையும் தெரிவித்துக்கொண்டான். மாருதிகேட்டு மனம் மகிழ்ந்து "உலகவாழ்க்கையில் வெற்றியும் தோல்வியுமுண்டு; என் நாயகன் ஸ்ரீ ரகுராமன் அடைந்த துயரைக்காட்டிலுமா இன்னெரு மன்னர் துயர் அடையப் போகிருர்; இரா

கவன் பெரும் புகழினை யார் சொலக் கேட்டனை" யென்றார். அதற்கு வீமன் சொல்லலுற்றான்:—

"வரத்தினலரு மறையினல் வார்சிலை - யிற்றும்
பரத்துவாசன் முன்பகர்தரக் கேட்டனன் பலகால்
திரத்தினுயர் இராகவன் சிலைவலியென்றான்
உரத்தினெலொருவீர மொப்பிலாவுரவோன்"

வரங்களிலுயர்ந்த பரத்துவாஜ முனிவர் சொல்லிக் கேட்டிருந்தோம், இராகவனது வில்வலியும் வீரமும் புகழும்'' என்று வீமன் சொல்லவே அநுமான் "தகும் தகும். அம்முனிவர் எனது பிரபுவினது பெரும்புகழினை நேரிற் கண்டவர்; ஆதலின் அவர் சொல்லக் கேட்டது நன்று, நன்று'' என ஆஞ்சநேயர் மகிழ்ந்தார்.

பின்னர், அம்மாருதி இம்மாருதிக்கு "குபேரன் நந்தவனத்திலிருக்கும் மலரைக் கொண்டு வரற்குபாயமே" தெனச் சொல்லுகின்றார்:—"தம்பி! அந்த வனத்தில் அழிவில்லாத அரக்கர்கள் கோடிக்கணக்காகக் காத்திருக்கின்றார்கள்; அவ்வனத்திடையே, பொய் பேசுவோர், தவமற்றவர், அருளிலாதவர் முதலியோர் போதல் கூடாது. ஆனால்,

"அறிவும் வாய்மையும் தூய்மையும் அன்பும் இன்னருளும்
பொறையும் ஞானமும் கல்வியும் புரிபெருந்தவமும்
நெறியும் மானமும் வீரமும் நின்னவாதலினல்
பெறவுனக்கரிதாயதே தென்றனன் பெரியோன்"

தர்ம சரிதனாகிய நீ அங்குப் போகலாம் எனினும், வெகு சிரமத்தினல்தான் அம்மலரினைக் கொணர்தல் கூடும்; பெரும் போர் நிகழும். அரக்கரழிந்து உன்னால் மாண்டனராயினும் இயக்கர் போரினில் உருத்தெழுவர்; மிகுந்த சாமர்த்தியத்தினல் அதனைப் பெற்று வருவாயாக; அது,

"அருநிதிக் கிழவன் தனதளகை மாநகரின்
மருமிகுத்த நீள்மஞ்சன வாவியின் கரையில்
தருமலர்ப் பெருஞ்சோலையில் தங்கும் அம்மலர்சென்
றுரிமையுற்றது கோடல்மற் றும்பர்க்கும் அரிதால்."

குபேரனது காபுரியில், அவனது நீராடு பொய்கையின் கரையில் தருக்கள் நிறைந்த சோலையிலிருக்கின்றது. அதனை யுரிமையுடன் கொணர்தல் தேவர்க்கும் முடியாத காரியம்; நீ சென்று வெகு சமர்த்துடன் பெற்று வருவா"யென மகிழ்ந்து அணைந்து ஆசீர்வதித்து வழிகளைக் காட்டி யன்புடன் அனுப்பினர். "உங்கள் ஆசியும் தர்ம மன்னவன் அருளும் எனது வீரமும் திரௌபதியின் ஆசையும் எனக்குத் துணையிருக்கின்றன. தேவரோ மூவரோ மற்றெவரோ யாரிருக்கினும், அந்த இயக்கர்தம் பதியினிற் சென்று, அம் மலர் கொணர்வே" னென்று உறுதி கூறினன் வீமன்.

"இத்தகை உறுதியுடைய நீ, என் பின்னவன் என்பதைக் கேட்டுப் பெரு மகிழ்வு பெற்றேன்; உனக்கு ஏதாகிலும் வரம் வேண்டுமாயின் கேள்" என்றார் இராகவன் தூதன். "நாங்கள் வனவாழ்க்கையை யொழித்து நாடேகிய பின் துஷ்டக்கௌரவருடன் போர் தொடங்குமாயின், அப்போது, எங்கட்குப் பலமும் எதிரிகட்குப் பயமும், எங்கட்கு வெற்றியும் எதிரிகட்குத் தோல்வியும் கிடைக்கும் படியாக எனது தம்பி அர்ச்சுனனது நடந்தேர்க் கொடியில் நின்று உங்கள் உருவம் காட்டிக் கூத்தாடிட வேண்டுகிறேன்" என்றான்; "ஆம்; அதனை யளித்தனன், சம்மதித்தேன். மற்றும் வேண்டுவது கேள்" என்று மொழிந்தார் அநுமார். "தங்களது விசுவரூபத்தினைக் காணவிரும்புகின்றேன்" என்று வீமன் கூறியபோது, ஆஞ்சநேயனுருவம் நெடுக வளர்ந்து பருத்து அண்ட முகட்டைத் தொட்டு நின்றது. அது கண்டு வீமன்

அகமகிழ்ந்து வணங்கிக் கைகுவித்து நின்ருன். உடன் உடலினைக் குறுக்கிக்கொண்டு அநுமார் வீமனையன்புடன் தழுவி யாசிகள் கூறி, "இங்கிருந்து இருநூறு யோசனை சென்ருல் அப்புறம் சில யோசனையில் சோலையும் குளமுந் தோன்றும். அரக்கர் காவலையுடைய அச்சோலையைச் சென்று அரக்கரை வென்று உட்புறம் போனல் அந்த மலரினைக் காணலாகும். அல்லது; அளகாபதியும் மனைவியும் அச்சோலைக்கு வந்தபோது நல்லுறவிற் சென்ருல் அம்மலரினைச் சுலபமாகப் பெறலாம்" என்று சொல்லி வழிகளையும் வழிகளினது அருமைகளையும் அதில் நேரக்கூடிய தடங்கல்களையும் அவை மாற்றிக் கொள்ளற்குரிய யுக்திகளையும் சொல்லித் தம்பியை வழியனுப்பிக் கொடுத்துத்தான் தனி நின்று பின்னர்த்தவத்தினிலிருந்தார்.

வீமன் அங்கிருந்து விரைந்து சென்று சக்கர நாகத்துக்குப் போய்ப் பெரியோரது ஆசிகள் பெற்று அவ்வழியே நடந்து திவாகரமலையினைச்சேர்ந்தான். அம்மலையினருகுபோம்போது, அம்மலையில் வாழும் பெருவலியும் பேருருவும் திண்டோளும் உடைய ஓர் அரக்கன் எதிர்ப்பட்டான்.

பங்கஜாஸுரனெடு போர்.

மேகம் போலும் சரீரத்தையும் செக்கர் வானம் போன்ற சிரோரோமங்களையும் குகை போலும் வாயையும் இரு சூரியர் போன்ற கண்களையும் இருபிறை யென்னக் கோரைப் பற்களையும் கொண்டு எதிர்ப்பட்ட அவ்வரக்கனைக்கண்டு, வீமன் "அருகே வா" வெனச்சொல்லி நகைத்தான். "வானவர் தானவர் யாரும் யான் வாழுமிவ்வனத்திடை வருதற்கு அஞ்சுவர்; நீயொரு மானவன் வந்தனை; என்ன மெய்த் துணிவு உனக்கு!" என்று கூறிக்கொண்டு, அருகே வந்

தான். இடிம்பனையும் பகனையும் வென்ற பெருவலியுடைய வீமன், அவனது பிதற்றலுக்கு ஏதும் மறுமொழி கூறாமல், அவனது தோள்களை யிறுகக்கட்டி வாரிப் பூமியில் மோதினான். அவன் எழுந்து வந்து வீமனைப் பற்றினான். வீமனும் இடித்துத் தள்ளிக் கதையினைக் கையிற் கொண்டு நின்றான். அவன் தனது கையிலொரு மரத்தொடு வந்து எதிர்த்தான். மலையும் மலையும் பொருவது போலச் சண்டை செய்தார்கள். பல நாழிகைகள் போர் புரிந்தும் ஒருவரும் இளைத்திலர். இதுவரை யாரும் இத்துணை நாழிகை தன்னோடு எதிர்த்து அழியாமல் நின்றதில்லை யாகலின், இவனோடும் இதென்ன விந்தை! இதிலொரு மர்ம மிருத்தல் வேண்டுமென்று சிந்தித்த வேளையில், ஆங்கொரு அசரீரி பேசிற்று; "அவனுக்குத் தோளிடத்துத்தான் உயிர் நிலையிருக்கின்றதாகையால், உன் கதை கொண்டு அவன் தோளிற் புடைத்து அவனை வதைப்பாய்" என்று கூறிய அவ்வசரீரியின் மொழியைக் கேட்டுப் பீமன், தனது வலிய கதையைச் சுழற்றி யாக்கன் தோளிடை மோதினான்.

"தொட்ட கொடுங்கதை தோளுறு முன்னர்ப்
பட்டுளம் நொந்து பதைத்தடல் வஞ்சன்
வட்ட நெடுங் கடலூடு மருத்தன்
றிட்ட பெருங்கிரி யென்ன விழுந்தான்."

தோளிற் கதைவந்து தாக்கவே, அரக்கன் உளம் நொந்து, காற்றினாற் கடலிடைத் தள்ளப்பட்ட மைந்நாகமலை போலப் பூமியில் வீழ்ந்து சாய்ந்தான். அவனுடலைப்பேய்க்கும் பருந்துக்கும் உணவாக் கொடுத்துப் பின்னர், வீமன் தனது நெறியைக் குறிக்கொண்டு நடந்தான். வழியிலுற்ற இந்து சயிலத்தைக்கண்டு யாங்குத் தவஞ்செய்து கொண்

டிருக்கும் அறவோர் ஆசிகளும் பெற்று விரைந்து நடந்து புண்டரீகன் நாடு கடந்து பின்னர்த் தெண்டிரைக் கடலெனத் தோன்றிய தெய்வ நிதிகள் ஓங்கியிருக்கும் அழகிய அளகாபுரியைக்கண்டு, உளம் மகிழ்ந்து உடல் பூரித்துச் சென்றான்.


சோலை காக்கு மரக்கரோடும் போர்.

அவ்வகையே போய்த் தன் முன்னவனாகிய அநுமன் சொன்ன வழி யெலாம் நினைத்து, அளகாபுரியின் தெற்குப் பக்கத்தில் சென்று விரைந்து ஆங்கிருந்து கந்தம் நாறும் சோலையையும் அதன் அருகே உள்ள மலர்ப் பொய்கையை யுங் கண்டான். சோலைக்குள் நுழைந்து அந்த மலரினைக் காண்பேன் என்னும் துணிவுடன் சென்றபோது, அச்சோலை யைக் காக்கும் அரக்கர் பலர், வீமனைச் சூழ்ந்து கொண்டார்கள். போர் என்று சொல்லவே அந்தக்களிப்பினால் மலைபோல் பெருக்கும் தோள்களையுடைய வீமன், இவர்களது கூட்டத் தைக்கண்டால் மனம் தளருவனா? மனக்கிளர்ச்சி கொண்டு, கதையைக் கையிலேந்திச் சக்கராகாரமாகச் சுழன்று திரிந்து, அவ்வரக்கர் பிரமித்துப் பயந்து ஓடு மாறு போர் செய்தான். அரக்கர்களோ வில்லும் அம்புங் கொண்டு பொருதார்கள். கைத்தண்டினால் அவர்கள் விட்ட அம்புகளை யெல்லாம் தாக்கி நொறுக்கி யொரு நொடிவரையிலழித்தான். வில்லும் அம்பறாத்தூணியும் இழந்தும் இறவாமலிருந்த பலர் நேர் வந்து மற்போர் செய்தார்கள். வீமன் தனது பெருவலி கொண்டு,

"பிடித்தனன் சிலரையள்ளிப் பிசைந்தனன் சிலரைமண்ணில்
அடித்தனன் சிலரையங்கம் அசைத்தனன் சிலரையெண்ணம்
முடித்தனன் சிலரைப்போக முகிழ்த்தனன் சிலரைக்கண்டம்
ஒடித்தனன் சிலரை யஞ்ச உறுக்கினன் சிலரைமன்னே"

இங்ஙனம், விற்போர் வாட்போர் வேற்போர் செய்து வந்த அரக்கர்களை யெல்லாம் தனித்தனியும் கூட்டமாகவும் போர் செய்து கொன்றிட்டான். மற்றும் பல பேர்கள் வந்தனர்; அவர்களோடும், வில்லுக்கு வில்லும் வாளுக்கு வாளும் மல்லுக்கு மல்லுமாகப் பிணை கொடுத்துப் பல்லோர்க்கு ஒருவனாக நின்று போர் செய்து அழித்து இன்னும்மேல் வருமோ வென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த வீமனைக் கண்டு பயந்தோடிச் சில காவலர்கள், இயக்கர் நாயகனுக்குச் சொன்னார்கள்.

யக்ஷராஜன் "இஃதென்ன புதுமை! ஒரு மனிதன் யக்ஷ லோகத்துக்கு வருதலாவது; சோலைகாக்கும் அரக்கரைக் கொல்லவாவது, ஆச்சரியமா யிருக்கின்றது" என்று சொல்லி சேனா நாயகனாகிய சங்கோடணனை யழைத்துப் "போய்ப் பார்த்துப் போர் தொடுக்க வேண்டியது அவசியமானால் தொடுத்து, அம்மனிதனைக் கொன்றுவிட்டால் பிடித்துவாருங்கள்" என்று அனுப்பினான். பெருத்த சேனையுடன், அந்த சேனாநாயகன் அச்சோலையின் பாங்கர் வந்து, ஒரு தனி மானுடனைக்கண்டு, விலாப்புடைக்கச் சிரித்து "இந்த ஒருவனுக்காகவா இத்துணைப் படையையுங் கொணர்ந்து யானும் வந்தேன்" என்று அலக்ஷியம் மிகக் கொண்டு, வில்லை வளைத்துச் சில பாணங்களை யேவினான். அவற்றை வீமன், தனது பாணங்களால் அறுத்துத் தள்ளிக் கூடவந்த சேனைகளைப் பகழி யாயிரங்கொண்டு வீழ்த்திச் சேனா நாயகனது, தேரையும் குதிரைகளையும் அழித்து சாரதியைக் கொன்று நின்றபோது, சங்கோடணன் பயந்து ஓடி யக்ஷகுல திலகன் காலில் வீழ்ந்து, "அம்மானுடன் அலக்ஷியம் செய்யத் தகுந்தவனல்லன்; மிக்க வலியுடையான். யுகாந்த காலத்து உருத்திரன்போல் சலியாமல் நிற்கின்றான்.



சென்ற நம் வீரரைத் திரும்பாமல் மலைந்து கொல்கின்றான். ஆகையால், வேண்டிய நிதி பலவும் காணிக்கையாகக் கொண்டுபோய் அவனைக் கண்டு நட்புக்கொண்டு உபசரித்தா லல்லாமல், யக்ஷ நகரமே தப்பாதுபோலிருக்கின்றது'' என்று சொன்னான்.

யக்ஷகுல திலகன், இவ்வாய்மையைக் கேட்டுக் கவலை கொண்டு, தன்னருகு நின்ற ருத்திரேசனை யழைத்து, "நீ போய், வந்தவனின்னா னென்பதையும் அவன் வேண்டுவ தின்னதென்பதையும் தெரிந்து, கொடுக்கக்கூடிய வஸ்துவா யின் கொடுத்துவா'' என்று அனுப்பினான். சேனை யாது மின்றி, ருத்திரசேனன் வந்து, வீமனைப்பார்த்து, "நீ யார்! உனக்கு என்ன வேண்டும்? வீணில் எனிந்தக் காவலரை யெல் லாம் அழித்தாய்?'' என்று கேட்க, வீமன், "முன் உங்கள் இயக்கர் குல நாயகன் புத்திரர்களாகிய நள கூபர்களைச் சாபம் தொலைவித்த வித்தகனான கிருஷ்ணனுக்கு மைத்துனன்; பாண்டு புத்திரர்களில் ஒருவன்; வாயுவின் மைந்தனாகிய வீமன் என்பது என்பேர்; அதோ அந்த மலர் கொய்துபோக வந்தேன்; அரக்கர் தடுத்தார்கள்; என்னைக் கொல்லவந்தார் களை நான் வதைத்தே'' னென்று சொன்னான். "இந்த மலரின் பொருட்டு இத்தனை யரக்கரைக் கொல்ல வேண்டுமோ?'' என்று கூறி, மலரைப் பறித்துக் கொடுத்து விடையும் கொடுத்தனுப் பினான். மலர் பெற்ற வீமன், அப் பொய்கைக் கரையிற் சிறிது நேரம் இளைப்பார உட்கார்ந்திருந்தான். ருத்திரேசன் திரும்பிப் போய் நிகழ்ந்ததைக் குபேரனுக் குணர்த்தினான்.

தருமனிடம் கடோத்கசன் வரல்

மங்கையின் வாய் மொழி யொன்றே கொண்டு தரும னிடம் தெரிவியாமல், வீமன் புறப்பட்டவனாகையால், வீம

னைக் காணாது வருந்திய தர்மராஜன் மனம் நொந்து, திரௌபதிமூலம், பொற்றாமரை மலரின் பொருட்டு யக்ஷ நகரம் சென்றிருக்கிறானென்று தெரிந்து, கலங்கி அவனுக்கு என்ன நேருமோ வென்னப் பயந்து, வீமனுக்கு இடிம்பி வயிற்றிற் பிறந்தவனாகிய கடோத் கசனை நினைத்தார். அவனும் தேரோடும் படையோடும் தோன்றிப் பெரியப்பனை வணங்கி நின்றான். வந்தவனுக்குத் தந்தை வீமன் செய்தியைச் சொல்லி, நாம் உடனே யக்ஷ லோகம் போக வேண்டுமென்று சொன்னார். தந்தைக்கு எதிர்மாற்றம் கூறும் சுபாவமில்லாத கடோத்கசன், தந்தையும் தானும் தனது ரதத்திலேறிக் கொண்டு விரைவில் ஆகாயமார்க்கமாக யக்ஷலோகம் சேர்ந்து, தென்பாற் சோலையை யணுகிப் பல அரக்கர் இறந்திருத்தலையும் வீமன் ஆங்கு வீற்றிருத்தலையும் உணர்ந்து, வீமனிடம் சென்றார்கள். கடோத்கசன் தந்தை வீமனை வணங்கினான். அவனை வாரி யணைத்துப் பின், தமையனை வணங்கி மலரையும் கொடுத்தான். கோபம் பிறவாத தருமன் இடத்திலும் சிறிது கோபம் தோன்றிற்று. 'என்னேவலும் பெறாமல் உனக்கு ஏவல்செய்ய உன் தம்பிய ரிருவரிருக்கவும் அவரையும் ஏவாமல், ஒரு மங்கையின் பேச்சைக்கேட்டு, நெடுந்தூரமும்பெருங் காவலுமுடைய அளகேசன் சோலைக்கு வந்தது அழகாகாது' என்று சொல்லித் தேரின் மீது யாவரு மேறிக்கொண்டு, தம்பியரும் தையலு மிருக்கும் தமது வனஞ் சேர்ந்தார். சென்றவுடன் வீமன் திரௌபதியிடம் அந்த மலரைத் தந்து ஆசிகூறித் தான் சென்றது முதல் நடந்தனவெல்லாம் யாரு மறியச் சொல்லிக் கடோத் கசனை யிடிம்பவனத்துக்கு அனுப்பிவிட்டு, அவ்வனத்திலேயே தங்கினார்கள். வீமன் ரோமச முனிவரை வணங்கித் தனது புஷ்ப யாத்திரைக் கதையைத் தெரிவித்துக் கொண்டான். அவரும் மகிழ்ந்து, "ஆற்றலுடை

யாருக்கு ஆகாத கர்மமில்லை" யென்று உத்ஸாஹ வார்த்தை கூறினர்.

சடாசுரன் வதைச் சருக்கம்.

"அழுதும் வாள்முறுவல் அரும்பியும் களித்தும்
ஆடியும் பாடியும் மகிழ்ந்தும்
தொழுதும் ஆகரித்தும் விழுந்தும் மேலெழுந்தும்
துதித்திடத் தன்பதம் தந்தான்
முழுதுமாய் எங்கும் முச்சுடராகி மூலமாய்
ஞாலமாய் விண்ணய்
எழுதொணு மறைக்கும் எட்டொணு வடிவத்
தெம்பிரான் உம்பர் நாயகனே."

திரௌபதியைச் சடாஸுரனிடமிருந்து மீட்டல்

இந்த வனத்தில் பாண்டவர் நால்வரும் திரௌபதி மின்னெடும் மேகமெனும்படி வாழ்ந்து கொண்டிருந்தபோது, அடுத்த வனத்திருந்த மாமுனிவர் கூட்டத்துடன் வந்து, "அநியாயமாக எங்கள் ஆச்ரமங்களிலுள்ள ஆடு மாடுகளைக் கொடிய விலங்குகள் வந்து கவர்ந்து கொண்டு போய் விட்டனவே; அவைகளது துன்பம் பொறுக்க முடியவில்லை. நாங்கள் என்ன செய்வோம்? எங்களை நீங்கள் தான் காப்பாற்றல் வேண்டு" மென்று முறையிட்டார்கள். தர்மராஜன் அம்முனிவர்களை வணங்கிச் சமாதானங் கூறி, வீமனைப்பார்த்து, "இவ்வந்தணர்களுடன் அடுத்த வனம் புகுந்து, அவர்கட்குறும் துயரினைத் தீர்த்து வா!" என்று அனுப்பினர். வந்த வேதியரும் வீமனும் அகன்று போனர்கள். தர்மராஜரும் அநுஷ்டானத்துக்கு எழுந்து போனர். நகுல சகாதேவர்கள்

காட்டினிடையே வீட்டுக்கு வேண்டிய பொருள்களைத்தேடிக் கொணரச் சென்றார்கள். திரௌபதி மாத்திரம் ஆச்ரமத்தில் தனியே இருந்து கொண்டிருந்தாள்.

அவ்வமயம், ஒரு இராக்கதன் அந்த ஆச்ரமத்துக்கு வந்து சேர்ந்தான். ஆனால், ஒரு வேதியனுருவம் தாங்கி வந்திருந்தான். முன், திரேதாயுகத்தில், அவதரித்தருளிய ஸ்ரீராமன் பஞ்சவடியில் வாழ்ந்து கொண்டிருந்தபோது அவரும் அவர் தம்பி லக்ஷ்மணனும் இல்லாத சமயம் பார்த்து, ஸ்ரீராமபத்தினி சீதாதேவி தனித்திருக்கும் போது ஒரு ஸந்யாஸி வேஷத்துடன் ஆச்ரமத்துக்கு வந்து சீதையை அபகரித்துப் போன ஒரு ராக்ஷஸன் போலவே இவனும் திரௌபதியை யபகரித்துக் கொண்டு போகும் எண்ணத்தால் ஒரு பிராம்மணர் உருவத்துடன் அங்குத் தோன்றினான். இவ்வரக்கனது ரோமங்கள் அரக்கினால் உருக்கிக் கம்பிகள் செய்து வைத்துள்ளன போன்றிருக்கும். ஜடாஸுரன் என்பது இவன் பெயர். தர்மங்களை யெல்லாம் அழிக்கும் திறலுடையோன். அதனால் தான் தருமராஜன் மனைவியை யபரிக்க வந்தானோ என்று சொல்லலாம் போலும். கர்வங் கொண்டு அமரர் யாவரையும் வென்று அவர்கட்கு எப்போதும் துன்பம் தந்து கொண்டிருப்பவன், ஆதலால், முடிவு காலம் நேர்ந்து விட்டது போல, அமரர் காவலராகிய தர்மமூர்த்திகளைப் பகைத்து அறிந்து போவதற்காக அங்கு வந்தான்.

ஆச்ரமத்தின் கண் ஆண்மக்கள் யாருமில்லாதிருப்பதையுணர்ந்து கொண்டு, மெதுவாக உள்ளே போய் ஏதேதோ வேத மந்திரங்களைப் பிதற்றிக்கொண்டு வெளியில் நின்றான். திரௌபதிகற்றறிந்தவளாகையால் அவனது பிதற்றலையுணர்ந்துகொண்டாளேனும் "அதிதியாயிற்றே; பிராம்மண உருவத்

துட னிருக்கின்றானே; ஆதித்யம்செய்வது இல்வாழ்பவருடைய தர்மமல்லவா' என்றெண்ணி, அவனுக்காக பிக்ஷையெடுத்துக்கொண்டு வெளியே வந்து அவனருகிற் சென்றபோது, அவ்வரக்க வேதியன், சுற்றும் முற்றும்பார்த்துயாரும் வாராமை தெரிந்து, தனது நீண்ட கரங்களால் திரௌபதியை வாரி யெடுத்துத் தோள்மேற் சார்த்திக்கொண்டு ஓடினான். ஓடும்போது, இது மோசமென்றுணர்ந்த மங்கை, "பாண்டவர்களே! வீமதேவரே; அர்ச்சுனா!! நகுல சகாதேவர்களே!! இங்கு ஓடிவாருங்கள்! என்னை யொரு அரக்கன் அபகரித்துக்கொண்டு போகின்றான்" என்று உரக்க வாய்விட்டுக் கதறிக்கொண்டு போனாள். அந்த வனத்தில் ஒரு பாங்கரில் வீட்டுக்கு வேண்டிய காய்கறிகளும் வேய் விறகுகளும் சேகரம் செய்துகொண்டிருந்த நகுல சகாதேவர்களுடைய செவிகளில், திரௌபதியின் கூக்குரல் வீழ்ந்தது. மைந்தர் உற்றுக் கேட்டார்கள்; ஏதோ திரௌபதிக்கு ஆபத்து வந்துவிட்டதென்று அறிந்தார்கள். வேகமாக ஓடிவந்தார்கள். அந்த சப்தம் வருமிடத்தை நாடிப்போய், அரக்கனை வேதியர் உருவமென்று மதித்திடாமல், தடுத்துக் குத்தினார்கள். தாக்கினார்கள். மோதினார்கள். இரண்டு வீரர்கள் வந்து பொருதலைத் தாங்காதவனாகிய அரக்கவேதியன், திரௌபதியைக் கீழே யெறிந்துவிட்டு ஒரு மரத்தை வேரொடும் பறித்து மோதவந்தான். அப்போதுதான், இவன் பிராம்மணன் அல்லனென்றும் அரக்கன்தானென்றும், ஒருகால் அர்ச்சுனனைக் கொல்ல மூகாஸுரனை யேவினதுபோலத் துரியோதனனால் ஏவப்பட்டுத் திரௌபதியை யபகரிக்க வந்திருப்பவனோ என்றும் எண்ணத்திற் கொண்டார்கள். வீரர்களாகையால், அவனால் எறியப்பெற்ற மரங்களையும் கற்களையும் வில்லில் தொடுத்து எய்யப்பெற்ற அம்புகளைக் கொண்டே

தடுத்துக் கடும்போர் செய்தார்கள். அரக்கனும் தனது ஸ்வயரூபத்தை யெடுத்துக்கொண்டு, பெருந் தேகத்தைக் காட்டிப் பயமுறுத்தி உக்கிரமாகப் பொருதுக்கொண்டிருந் தான். வீரராக இருந்து சண்டைபிடித்தார்கள் என்றாலும் வெற்றி யொருபக்கமும் தோன்றாமலிருந்தது. நகுல சகா தேவர்களும், அவ்வரக்கனை விரைவினில் அழித்திட முடியாம லிருந்தும், தங்களது தோல்வியைக் காட்டாமல் யுத்தம் செய்துக்கொண்டே யிருந்தார்கள். மழைவருஷம் போல் பாணவருஷங்களைக் கொட்டிக்கொண்டிருந்தார்கள். அரக்கன் சிறிதும் தளர்ந்தானல்லன்.

வீமனால் அவ்வரக்கற்கு அழிவென்று விதித்திருக்கும் போது, எத்துணை வீரர்களாயினும் நகுலசகாதேவர்களால் அவன் அழிந்து விடுவானா? இவ்வுண்மை யறிந்தல்லவா, கண்ணபிரான் ஜராஸந்தனைக் கொல்லும் ஆற்றல் தமக்கிருந் தும், ஜராஸந்தனுடன் வீரன் தொடுக்கவேண்டிய போரை யும் அந்தக் காலத்தையும் எதிர்பார்த்தவராக, அந்த ஜரா சந்தனுடன் எதிர்த்துத் தாம் போர் தொடுக்காமலே பன் முறை யவனுக்கு முதுகுகாட்டி யோடினார்! இதுவே இயற்கையினுண்மை. அரக்கன் தளராமலே அச் சிறு வர்களுடன் மலைகொண்டு மரங்கொண்டு போர் புரிந்த வண்ணமிருந்தான். அவ்வமயம், உடனழைத்துப்போன அடுத்த வனத்து வேதியரின் துயரகற்றி விலங்கு களை வதைத்து அரக்கர்களை யோட்டி, அழிக்கப்படாம லிருந்த அம்முனிவரது ஸ்தாவர ஜங்கமப் பொருள்களை மீட் டுக் கொடுத்து அந்த வழியே திரும்பி வந்து கொண்டிருந் தான். தம்பியர் போரினையும் திரௌபதியின் நிலையையும் பார்த்துக் குறிப்பினால் விஷய முணர்ந்து தம்பியரிருவரை யும் அப்புறம் விலக்கி நிறுத்தி விட்டு, அரக்கனுக் கெதிரிற்

சென்று, நேரில் தாக்கி மல் யுத்தம் செய்து, அவன் வலியையடக்கி வாரி யெடுத்துக் கீழே போட்டு மிதித்து அடித்துக் குத்தித் துகைத்துக் காலினுலுதைத் துருட்டினுன். மறுபடியும் ராக்ஷஸன் எழுந்திருந்து உக்ரத்துடன் மலையும் போது, வீமன், தளர்ந்துபோன அரக்கனுக்கு இத்துணைத் திமிராவென்று கோபம் கொண்டு, மற்போரின் வலிமையாலவனை மறுபடியும் கீழே வீழ்த்தி, இரண்டு கோரைப் பற்களையும் பற்றி யொடித் தெறிந்துக் கழுத்தையும் பின்புறமாகத் திருப்பிக் கீழே தள்ளிக் காலினுல் அவன் மார்பிடை யுதைத்தான். "அப்பா! நான் செத்தேன்" என்று அண்ட கடாகம் வெடித்திடும் குரலுடன் அவன் கத்தியது கொண்டு, வீமன் கோபித்து, அவனுடலை வாரி ஆகாயமுற வீசினுன். மேலே சென்ற அரக்கனுடல், வானுலகுக்குத் தன் ஆவியின் வருகையை முன்னெச்சரிக்கை செய்வதுபோல விண்ணுலகம் வரையிற் சென்று, அங்கேயே அவன் ஆவி பிரியத் தனியுடல் மாத்திரம் மண்ணில் வீழ்ந்து சிதறிப்போயது. மூவரும் பாவையும், வினையொழிந்ததென வீடுபோய்ச் சேர்ந்து, முன்னரே வந்து கவன்று கொண்டிருந்த தமையற்கு வினைவெலாம் உரைத்தார்கள்.

ரோமச முனிவர்க்கும் சமாசாரத்தைத் தெரிவித்துச் சின்னுள் அந்த வனத்திருந்து பிறகு முனிவருடன் புறப்பட்டு நாராயணுச்ரமம் அடைந்தார்கள். நாராயண முனிவரை வணங்கி யாசிகள் பெற்று விடை பெற்றுப் பல நாட்கள் பின்னும் பற்பல காடுகளிலும் ஆச்ரமங்களிலும் வசித்துப் பலப்பல முனிவர் யோகிகளின் அருளெலாம் பெற்றுப் புனிதராகி ஞானமும் மிகுந்து, பின்னர் எண்ணற்ற மலைகளையும் வனங்களையும் கடந்து அஷ்ட கோண முனிவனம் சென்று குறுகினுர்கள். முனிவருடன் அளவளாகி யவ்வாசிர

மத்துக்கு அணித்தாகத் தாமும் ஆச்ரமம் அமைத்து வசித்துக் கொண்டிருந்தார்கள். பல சரித்திரங்களையும் புராணங்களையும் சாஸ்திரங்களையும் அம்முனிவரிடம் ச்ரவணம் செய்திருந்து காலங்கடத்தி வந்தார்கள். இங்ஙனம் அங்கு மிங்குமாக ஒன்பது வருஷங்களைக் கழித்துவிட்டார்கள். பின்னர் நிகழ்ந்த செய்தியைக் கூறுவோம்.

மணிமான் வதைச் சருக்கம்

"ஈரொரு பிறப்பில் ஒரு சிறு குறளாய் யாவருந் தேவரும் வியப்பக்
காரொரு வடிவு கொண்டெனச் சென்று காவல் கூர்மாவலியளித்த
நீரொருகரத்தில் வீழுமுன் தரங்க நீல் நிறமகர நீருடுத்த
பாரொருகணத்தில் அளவிடுங்கமல பாதனூர் நாதனூர் நமக்கே"

அந்த வனத்தில் வாழ்ந்துகொண் டிருந்தபோது, ஒருநாள் திரௌபதி, மற்றைய முனிபத்தினிகளுடன் சேர்ந்து கொண்டு, புது நீர் வந்துகொண் டிருக்கும் ஆற்றில் ஸ்நானம் செய்யச் சென்றிருந்தாள். அப்போது, அந்தப் புது வெள்ளத்தில், ஒரு அழகிய தாமரை மலர் மிதந்துகொண்டு வந்தது. கண்டாள்; கையில் எடுத்துப் பார்த்தாள். மணமும் அழகும் ஒழுங்கும் உறுதியுமுடைய அம்மலரினைக் கண்டு வியந்தாள். இது இந்த லோகத்திற் கிடைக்கும் மலரல்லவென்பது மனத்துட் கொண்டாள். இது நமக்குக் கிட்டாது என்று அதனை யொதுக்கித் தள்ளத்தக்க குலத்திற் பிறந்திருக்கவில்லை யாதலாலும், கிட்டாப் பொருளையும் கிட்டும்படி செய்யும் போாற்றல் வகுத்த பாண்டவர் பத்தினியாகையாலும், தான் நினைத்ததை யெல்லாம் எவ்வகையினும் நிறைவேற்றிக்கொடுக்கும் வீர சூர சிகாமணியாகிய வீமசேனனு

டைய வீர பத்தினி யாகையாலும், சமீபத்தி லொருமலரை யங்ஙன்மே பெற்றிருக்கின்றன ளாகையாலும், இம்மலரை யெங்ஙனமேனும் பெறல் வேண்டும் என்று, ஸ்நானுதிகளை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பும்போது, அம்மலரை யும் கைக்கொண்டு சென்றுள். நல்லுடையுடுத்து நற்சாந் தணித்து லோகநாதனையும் குடும்ப நாயகனையும் முறையே வணங்கிப் பின் வீமனிருப்பிடம் சேர்ந்தாள்.

மறுபடியும் வீமன் அளகாபுரி செல்லல்.

"வனவாஸம் ஒன்பது ஆண்டுகள்தாமே ஆயிருக்கின் றன; இன்னும் மூன்றும் ஒன்றும் மிகுந்திருக்கின்றனவே; இவை யெப்போது தொலையும்; பகைவர்களை யெப்போது ஒழிப்போம்; வீரபத்தினி திரௌபதியின் விரித்த கூந்தலை எப்போது முடிப்போம்" என்னும் கவலையிலிருந்துகொண் டிருந்தான் வீமன். போர் யாதுமின்றித்தான் சோம்பி யிருத்தலையும் தருமதேவதையாகிய தமையன் தனிவன முறைந்து வாழ்தலையும் பிரிந்து சென்ற தம்பி விஜயன் வாரா திருத்தலையும் நினைந்து நினைந்து மனம் வெதும்பி யிருந்தான். எத்துன்பம் எப்படி யிருப்பினும், அடிக்கடி திரௌபதியின் வீர நினைவுதான் எப்போதும் வீமனுக்கு முன்வந்து நிற்கும். "நாங்கள் ஐவரும், அன்று சபையில் பஞ்சைகள்போல் அடிமைகளாகித் தலைகுனிந்து பொறுத்து அடங்கியிருந்த மையாலன்றோ, திரௌபதிக்கு அந்த அவையோர் நடுவில் நீங்கா அவமானம் நேர்ந்தது! என்றென்று மனம் குன்றி னவனுதலால், எத்துன்பம் எப்படி யிருப்பினும், அவள் எதி ரில் தோன்றுவளாயின், மனம் குளிர்ந்து முகம் மலர்ந்து இன்னுரையாடியவன் சொன்னபடி யெல்லாம் செய்து அவட்குக் கவலை தோன்றாத வண்ணம் செய்துகொண்டிருப்

பான். இத்தகைய மனமும் செயலும் தன்பால் பேரன்பும் கடமையுமுடைய தனது வீரநாயகன் வீமசேனனிருப்பி டம் சென்றுள் வீரபத்தினியாகிய திரௌபதி.

கையும் மலரும் மெய்யும் மகிழ்ச்சியும் செய்ய வாக் கொண்டு, மலர்ந்த முகமும் தளர்ந்த நடையும் குளிர்ந்த பார் வையும் இனித்த குரலும் உடையவளாகத் தன்னருகே வந்த தன் அருமை நாயகி திரௌபதியை அகங்குளிர்ந்து கண்ட வீமன், "புதுமலர் புதுமணம் புதுமனம் புதுப்போர். அல் லவோ" என்றுன். தையல், "ஆம்" என்றுள். "சரி; இம் மலர் எது" என்றுன் வீமன்: "அன்பரே! இது ஆற்றில் மிதந்துவரக் கண்டெடுத்தேன்; என்ன அழகு! என்ன மணம்!! பாருங்கள்!!!" என்றுள் நங்கை. "ஆமாம்; அதற் கென்ன! இம்மலர்போன்றதொரு மலர் வேண்டுமா?" என்றுன் நம்பி. "ஆமாம்; இஃது இவ்வுலகத்தில் கிடைக் காதுபோலிருக்கிறதே" என்றுள் பாஞ்சாலிமாது. "எவ் வுலகத்திலிருந்தாலென்ன! உன் கையில் இதுபோன்ற மலர் வந்து சேரவேண்டியதுதானே!" என்றுன் பாண்டவவீரன். "சுலபத்தில் முடியுமோ?" என்று புன்னகையுடன் புகன்றுள் பூவையருள் உயர்ந்த பூவையாகிய பாவை.

"இந்தமலர் இந்திரபுரத் தெனினும் இன்றுன்
அந்தமில் சுருங்குழல் தனக்கருள் கிலேனேல்
முந்தரவுயர்த்தவன் முதற்பகை முடிக்கும்
மைந்துடைய அன்றெனது வாகுகிரி யென்றுன்."

"இந்தமலர் இந்திரலோகத்திலுளதாக விருப்பினும், இப்போது சென்று கொணர்ந்து, உனது அழகான கூந்தலில் முடித்திடாம விருப்பேனுயின், அரவக்கொடி யுயர்த்திய அந்தத் துஷ்டனது பகையை முடித்திடும் வலியுடையன

வாகுமோ எனது புஜங்களாகிய மலைகள்? நீ பயப்படாதே; கவலைப்படாதே; போ! இதோ புறப்படுகிறேன்" என்று சொல்லித் தையலைக் கையில் தாங்கி யனுப்பிவிட்டுத் தன் மெய்யிலும் கையிலும் வீரப்படைகள் தாங்கி மலரை நோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

வீமன், அம்மலரைக் கொண்டுவந்த அந்தமாநதியின் கரையின்மேல், அந்த மாநதியின் வழியாகவே போய்க்கொண்டிருந்தான். பலயோசனை தூரவழியைக் கடந்துபோய்க் கடைசியாக ரத்நகிரியைச் சேர்ந்தனன். அந்த கிரியில், மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் முத்து மண்டபங்களும், ரத்நாலயங்களும் தேவாணரிசைகளும் மாதராடிடங்களும் தேன்மலர்ச் சோலைகளும் திகழ்ந்திருந்தன. அவற்றைக் கண்டானந்தங்கொண்டு, அங்குத் தேடியும் அத்தெய்வமலர் இருப்பிடம் காணுதவனுகி, யாங்கே நடந்து பலதூரங் கடந்துபோய் மற்றுமொரு முறையாகக் குபேரனது அளகாபுரிக்கே போய்ச் சேர்ந்தான். அந்தப் பட்டணத்தின் கோபுர வாயில்கள் நான்கையும் கடந்து, வடமேற்குத் திசையிற் போய் நின்றான். அங்கு யாரையுங் காணுமல், தனது சங்கைக் கையிலெடுத்து, அந்த நகரியின் நாற்புறமும் கேட்டிடும்படியாக ஊதினுன். அப்போது, நான்குவாயிற் காவற் சேவகர் பலரும் பிரமித்து, இந்தத் தொனியைச் செய்தவன் யாவனே என நடுங்கிப் படைகளுடன், சத்தம் வந்த வழியாகவே எல்லோரும் வீமனிருக்குமிடம் வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களில் துணிவுடையவன் ஒருவன் வீமனது சமீபம் வந்து பார்த்து நடுங்கித் திரும்பிப்போய்ச் சேனுபதியான மணிமான் என்பவனிடம் இது சொன்னுன். முன்னம், ஒரு மலரின் பொருட்டாக இந்த நகரத்துக்கு வந்து காவலாக

இருந்த அரக்கர்களை யெல்லாம் கொன்று சென்றானே, அதே மானுடன்தான் இப்போதும் வந்திருக்கிறானென்று சொன்னான்.

மணிமான் வதம்

சிவ நண்பனாகிய குபேரனுக்கு மிக நண்பனாகிய சேனாதிபதி தலைவனாகிய மணிமான் என்பவன் முன்னமொரு முறை வீமன்வந்து தப்பிப்போனது முதல் அவனிடம் கறுக்கொண்டிருந்தவனாதலால், இச்செய்தியைக் கேட்டவுடன், மிகவும் கோபமும் வீரமுங் கொண்டு, "நல்ல வேளையாக அந்த மானுடன் நம்மிடம் அகப்பட்டுக்கொண்டான்" என்னும் களிப்புடன், வேறு யாரையும் அவனோடு போர் செயற்குரிய சேனாபதிகட்குத் தலைவனாக அனுப்ப விரும்பாமல், தனக்குரிய எண்ணாயிரம் இயக்கர் சேனையையும் உடன் கொண்டு, தானே சேனாபதித் தலைவனாயிருந்து செலுத்திக் கொண்டு வீமனெதிர் வந்தான்.

வந்த வீரர் எண்ணாயிரவரும், மந்தரகிரியை இழுத்துக் கடைவதற்குமுன் அதனைச் சூழ்ந்து நின்ற ஸுராஸுரர்கள் போல வீமனைச் சூழ்ந்து நின்றார்கள்; வீமன் அந்த நெடு மந்தரமலைக்கு ஒப்பாக இருந்தான். தனது வில்லில் வாளிகள் தொடுத்து, நடுவினில் நின்று, சுழன்று திரிந்து, அக் கணைகளைப் பகைவரின்பேரில் எய்தான்; ஒரு கணத்தில் இயக்கர் சேனை பல அழிந்தது கண்டு, சாலேந்திரன் என்பான், தனியே வீமனெதிர் வந்து சொல்லலுற்றான்:—

"சிவனோ திசைமுகனோ அதிர்திரை யாழியிற் றுயில்கூர்
பவனோ பருவரை மார்புறப் பகிருஞ் சுடர்வடிவேல்
அவனோ திறநர வாகனன் அளகாபுரி வருவோன்
எவனோ உனதுயிர் சிந்துமுன் யார்நீயுரை யென்றான்"

"குபேரனது அளகாபுரிக்கு அஞ்சாது வந்து இக்கொடுந் தீவினை புரியும் நீ யார்! சிவனோ நான்முகனோ விஷ்ணுவோ, முருகவேளோ இவர்களில் யாராயிருக்கலாம்? அவர்களும் குபேரனது நட்பைப் பெற்றாலல்லாமல் வரமுடியாது; நீ யார்? உன் உயிர் போகுமுன் உண்மையை யுரைத்தி" டென்றான். "அவர்களில் ஒருவனுமல்லேன் யான்; முன் னொரு முறை இம்மலர் நாடிவந்து காவலரக்கரைக் கொன்று மலர் கொண்டுபோனதொரு மானுட வீரனாகிய, அவனே தான் நான். மறுபடியும் அம்மலரின் பொருட்டே வந்திருக்கி றேன். இன்னொரு முறையும் அம்மலர் தருவீராயின், உங்க ளது உயிரையும் தருவேன். இல்லையாயின், போர்க்களத்தில் நீங்கள் மடிந்து விழச்செய்வேன்" என்றான் வீரப்ரதாப வீமஸேனன்.

"அடா! மதியற்றோய்!! தெய்வமலரை விரும்பி மானு டர்கள் வருவார்களோ!!! இது அறியாமையல்லவா! இந்த வீரர் வெகுண்டு உன்மேல் வீழ்ந்து பொருதற்குமுன் இவ் விடம் விட்டு ஓடிப்போ" எனச் சொன்ன சேனாபதியை நோக்கிக் குலுங்க நகைத்து, சுற்றிநின்ற இயக்கச் சேனை மீது கணைகளைப் பொழிந்தான். மறுபடியும் உக்ரமாகப் போர் தொடுக்கப்பட்டது. பல இயக்கர்கள் அழிந்து வீழ்ந்தனர். தமது சேனைகளிற் பல அழிந்து, மற்றும் சில சிதறுண்டு போவதை யுணர்ந்த சாலேந்திரனும் வீரர்களும் வில்லைக் கீழே போட்டுவிட்டுக் கதையைக் கையிலேந்தி எதிர்த்து வந்தார்கள். கதைக்கொப்பற்ற நாயகனாகிய வீமன், மிகவும் களித்துத் தானும் தனது கதைகொண்டு உடனெதிர்த்தான். இயக்கரும் பல அரக்கரும் போரில் மாண்டுழி மாண்டுழி யெல்லாம், மற்றும் பல இயக்கரும் அரக்கரும் வந்து கூடி னார்கள். வந்தவர்கள் வந்தவர்களை யெல்லாம், வீமன் தன்

கைத்தண்டினைக் கொண்டே துமித்துத் தொலைத்தான். சாலேந்திரன் முதலிய சேனாபதிகளும் மாண்டனர். சென்ற சேனைகள் யாவும் திரும்பிவாராமை கண்டு உளம் கொதித்து மணிமான் என்னும் சேனாதிபதிகட்கு ஈசனும் குபேரனும் மிக நண்பனுமாகிய போர் வீரன் வீமனுக்குநேரே வந்து சேர்ந்தான்.

மாயப் போரில் மிக்க வல்லவனான மணிமான் என்னும் யக்ஷ வீரனது பெயர் கேட்டவுடனே அரக்கரும் அவுணரும் நடுங்கிப் பதைப்பார்; அத்தகைய மணிமானுடன், ஒரு மானுடன் பொருதுதல் என்னே பயன் என்று இயக்கர் யாரும் சிந்தை களித்து நின்றனர். வீரர்க்கு வீரர் வன்மையை விரைவில் அறிந்து கொள்வார்களாகையால், மணிமானுடன் போர் செய்யப் புகுந்த ஒரு சிறு நேரத்துள் வீமசேனன், எதிரியின் திறத்தையுணர்ந்து கொண்டு அதற்கேற்றத் தன் வலியைக் காட்டி அந்த இயக்கனைத் தாக்கினான். விற்போர் வாட்போர் வேற்போர் எனும் பல்வகைப் போர்களிலும் வீரரிருவரும் சளைக்காமற் போர் செய்தனர். வீமனது திறத்தை நன்குணர்ந்த மணிமான், இனி இவனை மாயப் போர் செய்து மாய்க்கலாமன்றி மெய்ப் போரில் வெல்ல முடியாதெனும் உறுதி கொண்டு, தனது மாயப் போரினை யாரம்பித்தான். ஆகாயத்தில் சென்று நின்று மாயாஸ்திரத்தை யெடுத்து ஏவிப் பூமியிலெங்கும் புகையும் மண்மாரியும் பெய்து, ஒன்றும் தோன்றா வண்ணம் மறைத்து விட்டான். அதனைக் கண்டு வீமன், திருமாலருளிய தெய்வப் படைகொண்டு அம் மாயாஸ்திரத்தை யறுத்து, மாயையை விலக்கிக் கொண்டான்.

மாயை விலகவே, வெகுண்ட யக்ஷன், வீமன் மேற்சூல மொன்றை எறிந்தான். வீமன் அதனைத் தனது சூலாயுதத்

தால் அழித்து வெற்றியோடு நின்றான். மற்றொரு மாயாஸ்திரம் கொண்டு மாயப்போர் தொடங்குதற்குமுன் இவனை யழித்திடல் கருதி வீமன், பிரமாஸ்திரத்தைக் கையிலேந்தி உபசாரம் செய்து விட்டு விட்டான்; அது சென்று மணிமானைத் தேர் குதிரை ஸாரதியுட னழித்துக் கீழே வீழ்த்தியது. எஞ்சி இருந்த இயக்க வீரர்கள், தலைவனிறந்தது கண்டு பயந்து தமது சேனைகளுடன் நகரத்துக்குத் திரும்பி ஓடினார்கள். வீமன் வெற்றிச் சங்கு ஊதியிருந்தான்.

தருமன் அளகாபுரி வருதல்

வீமன் அளகாபுரியில், இங்ஙனம் வெற்றியுடனிருக்கட்டும். அங்கு அஷ்டகோண முனி வனத்தில் நடந்த செய்தியை விரிப்போம். தரும ராஜன் நாளெல்லாம் தனதுயிர் போன்ற தம்பி வீமனைக் காணாமல் மயங்கித் தம்பிய ரிருவரையும் வினவிட, அவர்களும் அறியாதிருப்ப தறிந்து, திரௌபதியைக் கேட்டார். "இன்று காலையில், நான், நதிநீர் ஆடிவரும் போது, அந் நதியில் மிதந்து வந்ததொரு தாமரை மலரைக் கொணர்ந்து, அதன்மேல் விருப்பம் காட்டி நின்றேன்; அதனைக் கொணர்தற்கு மீண்டும் அளகாபுரிக்கே போயிருக்கிறார்" என்று சொன்னாள்.

"திரௌபதியின் வார்த்தை யெனும் நஞ்சே என் அநுஜனை வீமனைக் கொன்றிட்டது; என் செய்வேன்? யாருடைய துணையினாலே, பூமியிற் பகைவரையும் அரக்கரையும் வென்றிட நினைப்போமோ அத்தகைய தேவதைகளுடைய பகையைத் தேடிக் கொள்ளப் பலகாலும் முயன்று வருகின்றானே" என்று தம்பியைக் குறித்துத் தருமன் வருந்தித் துக்கித்துக்கொண் டிருக்கும்போது, ரோமச முனிவர் தோன்றித் தருமனுக்குச் சமாதானம் கூறினார். "அஞ்ச

வேண்டாம்; வீமனுக்கு இதுவரை யாதும் கேடு ஸம்பவிக்க வில்லை. மலரின் நிமித்தம், வீமன், மறுபடியும் அளகாபுரிக்கே போய், அங்குப் போர்தொடுத்து, மணிமான் என்னும் இயக்கத்து சேனுபதித் தலைவனைக் கொன்றுவிட்டான். இனிமேல் வீமன்மேல் யக்ஷகுல திலகனுன குபேரன் பெருஞ்சேனை திரட்டிக் கொணர்ந்து போர் தொடுத்தல் கூடும். அதற்கு முன் நாம் சென்று வீமனை யழைத்துவருதல் நலமாகும்'' என்று ரோமச முனிவர் கூறினுர்.

உடனே புறப்பட்டுக் குபேரன் நகர் போகவேண்டும்; தக்க பலத்துடனே போதல் வேண்டுமாதலால், வீமன் மகன் கடோத்கசனை நினையென்று, நகுலனுக்குத் தருமன் அநுமதி கொடுத்தான். அங்ஙனமே, நகுலன் நினைத்தவுடன், கடோத்கசன் ஒரு தேரின்மேல் வந்து தோன்றிப் பெரிய தாதையைப் பணிந்து, "செய்ய வேண்டிய காரியம் என்னவோ?" என்று கேட்டான். உடனே செய்தியைக் குறிப்பாற்சொல்லி இருவரும் அத்தேர்மேல் விரைந்து சென்று, குபேரனது நகர்சென்று, வீமனிருப்பிட மறிந்து அவ்விடம் போய்ச் சேர்ந்தார்கள். அப்போதுதான், வீமன், மணிமானைச் சேனையுடன் தொலைத்து வெற்றிச் சங்கம் ஊதி நின்றுன். தமையன் வந்ததை யுணர்ந்து, மலர்கொண்டு பாதங்களை யர்ச்சித்து வணங்கி நின்று, தன்னை வணங்கிய தனது தனயன் கடோத்கசனையும் தழுவி நின்றுன்.

"அப்பா! வீம!! ஏனிப்படி ஒரு மங்கையின் வார்த்தையைக்கேட்டு, என்னிடம் தெரிவித்துக்கொள்ளாமல் இங்ஙனம் சதி செய்கிருய்? குபேரனுக்கு உயிர் நண்பனுன மணிமானைக் கொன்றிட்டாயே? குபேரனுக்கு முன்னுளே உன் மேற் கோபமிருந்தது. பின்னும் இச்செய்தி தெரிந்து பெருங்

கோபம் கொள்வானே! தேவர் கூட்டத்தாருடன் நாம் பகைமை விளைவித்துக்கொண்டால் பிறகு நமக்குப் புகலேது?" என்று தருமன் வருந்தினான். "மணிமான் சேனைகளுடன் பட்டனன். வலிவில் இந்நகரிற் கள்ளத்தனமாகப் புகுந்த அந்த மானுடனே வெற்றியுடன் நிற்கிறான்" என்னும் செய்தியைக் கேட்ட அளகேசன் மிகவும் வெகுண்டு,

"ஒருவனும் மானு -ன் ஓதை மாநகர்
வருவனும் விறல்மணி மானெடுஞ் சமர்
பொருவனும் அவனுயிர் பொன்ற வென்றிடர்
தருவனும் என்பெயர் தனதன் ஆகுமாம்"

"ஒருமானுடன், கள்ளத்தனமாய் என்னகர் வந்து, எனது உயிர் நண்பனான மணிமானையும் கொன்று வெற்றிச் சங்கையும் ஒலித்து நிற்கின்றான்; நான் இன்னும் பொறுத்திருப்பேனா? என் பெயர் குபேரனா!! வெகு நன்றாயிருக்கிறது!! சித்தர் இயக்கர் கந்தர்வர் முதலிய படைகளை யெல்லாம் திரட்டுங்கள்; போருக்கெழுவோம்" என்று சேனைகளைத் திரட்டிக்கொண்டு குபேரன் போருக்குப் புறப்பட்டுவிட்டான். அப்போது, அவன் மகனாகிய ருத்திரசேனன், முன்போல். மறுபடியும் தந்தைக் கெதிர்வந்து வணங்கிக் கூறுவான்: "எந்தையே! இவனை மானுடன் என்று கருதல் வேண்டாம். முப்புரத்தையும் தகித்த மூர்த்தியாகிய சிவபெருமானது சிந்தையால் ஐந்து இந்திரர்களைப் பூமிக்குச் செல்லும்படியாகச் சொல்ல, அவ்வைவரும் இவ்வைவராக வந்திருக்கிறார்கள். பாண்டவர் ஐவரும் ஐந்து இந்திரர்களே யன்றி, மானுடர் அல்லர். இவர்களில் மூன்றாமவனான அர்ச்சுனன்தான் இந்திரலோகம்சென்று இளவரசுங்கொண்டு, இந்திரதேவனுக்குத் துணை நின்று காலகேய நிவாத கவசர்களைக் கொன்றிருக்கிறான். வேடமோ மானுடவேடம்; அவர் வெகுண்ட

போது, தேவரும் தைத்தியரும் தாங்க முடியாத வலியும் திறலுமுடையவராவார். மானுட வேடங்கொண்ட தேவர்களின் பலத்தை நாம் அறிந்திலோமா? ஒரு மானுடக் குறளுருவமாகிய வாமனந்தானே, நெடு முகடிற்றுப் போகும் படியாக ஓங்கியுலகளந்த உருவத்தை யெடுத்தது! மூவரையும் தேவரையும் தானவரையும் வென்று ஈசனது கைலையை ஆணிவேருடன் எடுத்துப் புகழில் நின்றிருந்த தசமுகனென்பானை ஒரு மானுடன்தானே அழித்தனன்!! மணிமானுக்கு அவனது தீயசெயலால், 'மனிதனல் சாவுவரும்' என்று கொடுக்கப்பெற்றதொரு முனிவரது சாபமிருந்தது; அதனல் அவன் இறந்தொழிந்தான். அதற்கு நாமினிக் கவல்வதிற் பயனில்லை. ஆகையால், அவர்களைச் சமாதானத்துடன் இங்கு வருவித்து, அவர் வேண்டிய மலரை முன்போற் கொடுத்து நட்புக்கொண்டனமாயின், நாம் நம் நகரொடும் வாழலாம்; அஃதின்றிச் சேனையைக் கொண்டுபோயெதிர்த்தியேல் நாம் அழிவது நிச்சயம்'' என்று சொன்னன்.

தனது உரிமை மகன் சொல்லையும் மறுத்துத் தனது உயிர் நண்பனைக் கொன்றவனைக் கொல்லாதிருப்பேனே? எனச் சொல்லித் தன் புட்பக விமானமீ தேறிக்கொண்டு, சதுரங்க சேனையும் புடைசூழ்ந்துவர, விரைந்து போனன் குபேரன். எங்கும் இயக்கர் சேனையானது பெருத்த ஒளியுடன்வந்து, மானுடர் மூவரையும் சூழ்ந்துகொண்டது. அதுகண்ட தருமன், தேவர்களைப் பகைத்தல் கூடாதெனும் குறிப்புடன் குபேரன் எதிர்வந்து வணங்கி யெழுந்து நின்று,

"அனகனே அமலனே அளகை வேந்தனே
தனதனே சங்கரன் தன் சகாயனே
புனிதனே குபேரனே புலத்தியன் குல
ஜனகனே செல்வனே தேவ தேவனே"

என்று பலவாறு துதித்துப் போற்றி, "அறியாமல் என் தம்பி செய்தது பெரிய குற்றமாயினும் பொறுத்திடல் வேண்டும்" என்று கூறி மன்றாடினன். உடனே குபேரன், முனிவும் முரணும் மாறித் தருமனை மார்போடு அணைத்துத் தழுவிக்கொண்டு, "அஞ்சாதே! தரும!! நிலத்தில் நீயே தரும தேவதையாகையால், உன்மேல் எனக்கு வயிரம் இல்லை. என் நகரம் உன் நகரம் என்னும் வேற்றுமையே கிடையாது; இங்குள்ள பொருளெல்லாம் உனக்குஞ் சொந்தமே" என்று சமாதானங் கூறி யவர்களை யழைத்துக்கொண்டுபோய்த் தன் நகரமும் தன் நிதியும் தன் பொழிலும் தன் வாவியும் எல்லாம் காட்டி, நல்லாஸனங் கொடுத்து, உபசாரங்கள் மிகவும் செய்தான்.

"நேற்றையதினம், அமராபுரிக்குப் போயிருந்தேன்; அங்கு நினது தம்பி விஜயன் இந்திரனொடும் எங்களொடும் சமாசனத்திருந்து உபசரிக்கப்பட்டான். அதனையும் பார்த்து வந்தேன். இன்று உங்களையும் பார்க்கப் பாக்கியம் செய்து வைத்திருந்தேன். விஜயனும் நாளை நின்னிடம் வந்து சேர்குவன். நீங்கள், எல்லா இடரும் நீங்கி, உலகுக்கெல்லாம் காவலர் என்னும் கீர்த்திபெற்று வாழப்போகிறீர்கள்" என்று மனனுற வாழ்த்தினன். தருமன், குபேரனது பெருமையை வியந்துகூறி வணங்கி யநுமதி பெற்றுச் சகோதரனுடனும் சகோதரன் மகனுடனும் புறப்பட்டு நகரின் வாயிலுக்கு வந்தான். கடோத்கசன் கொணர்ந்திருந்த ரதத்தின் மீதேறிக்கொண்டு பயணமாகி இடையில் நந்திசேன முனியைத் தொழுது நொடிவரையில் தபோவனம் சேர்ந்தார்கள். அங்கு தங்கள் வரவினை யெதிர்பார்த்திருந்த முனிமன்னவர்கட்குத் தக்க உபசாரமும் பரிசும் கொடுத்து வாழ்ந்திருந்தார்கள். அரக்கர் நாதனாகிய கடோத்கசனுக்கு நல்லுபசாரங்கள்கூறிக்

குபேரன் பரிசாகக் கொடுத்தவற்றை யெல்லாம் கொடுத்து, அனுமதியும் கொடுத்து ஊருக்கனுப்பினர்கள். அப்போது, இந்திர லோகத்தினின்றும் விஜயன்வந்து சேர்ந்தான். அவனை நால்வரும் தக்க மரியாதை செய்து வரவேற்றார்கள். ரோமச ரும் நல் ஆசிகள் கூறினர்.

இங்ஙனம் ஐவர்களும் தேவியுடனும் முனிவனுடனும் அத் தெய்வ வனத்திலிருந்து, நித்திய கர்மங்களைச் செவ்வெ னச் செய்து வாழ்ந்திருந்தார்கள்.

துருவாச முனிச் சருக்கம்.

"போராறு மூழ்கிமறை நூல் பிதற்றி மிடறும் பிளந்து பிறவித்
தூராறு மாறுவினை யாமலுங்கள் தொழிலே புரிந்த சமடீர்
ஓராறு பேத சமயங்களுக்கும் உருவாகி நின்ற வொருவன்
ஈராறு நாமம் உரைசெய்து மண்கொடிடுவார்கள் காணும்இமையோர்"

பாண்டவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த அந்த வனத்துக்கு அவரைச் சோதிப்பதற்காக வந்து சேர்ந்தார் ஒரு முனிவர்; அவர் யாரெனிற் சொல்வோம். சாபத்தினலும் சாபமொழி சொல்லச் சொல்ல வளர்ந்து பெருகும் தவத்தினலும் மிகுங் கோபத்தினலும் சிறப்பான பேர் படைத்த தூர்வாச முனிவர் தான் அங்கு வந்து சேர்ந்தார். எதற்காக வந்தார்? அரவக் கொடியோனுகிய துரியோதனனுக்குக் கொடுத்த வாக்குப் பிழையா திருத்தற்காகவே தரும மூர்த்திகளாகிய பஞ்ச பாண்டவர்களைப் பரீக்ஷித்தல் கருதி அந்த வனம் அடைந்தார்.

மாமுனிவர் தமது தரிசனம் தமக்கு வலியக் கொடுத்தார் என்னும் களிப்பு மிகுதியால்,பாண்டவரைவரும்பாஞ்சாலியும், பாதாரவிந்தங்களில் பணிந்து வ்ணங்கி நின்றார்கள். முனிவ ரும் முறைப்படி ஆசிகள் அளித்துச் "சூரியன் உச்சிவரும்

போது, எனக்கும் என்னுடன் வந்திருக்கும் இம் முனிவோர்க்கும் பெருவிருந்தளித்து எமது திருப்திவாக்கைப் பெறல் வேண்டும்" எனக் கூறி முனிவருடன் நியமங்கள் செய்து வருதற்காக நதிக்கரைக்குச் சென்றிட்டார்.

"முனிவர் குளித்து முறைசெய்து வந்தவுடன், முனிவருடன் அவருக்கு நல்விருந்தளித்தல் வேண்டுமே! நாமென் செய்வோம்? காய் கனி கிழங்கு சருகுகளுடன் சிறிது உணவு கொண்டு திருப்திகொண்டு, நமது நண்பினர்களாகிய முனிவர்களும் நாமுமிருந்தோமே. இக்கோப முனிக்குக் குறித்தபடியும் அவர் திருப்தி வாக்களிக்கும்படியும் பெரு விருந்து எப்படி நாமிடமுடியும்?" என்று வருந்தித் தன் இளைஞர்களுடன் ஆலோசித்தான் தருமராஜன். வீமன், "அண்ணா! இது வஞ்சக் கொடியனான துரியோதனன், நாம் கெட்டழியுமாறு செய்த சூழ்ச்சியேயன்றி வேறில்லை; நம்மால் ஆகாத காரியத்துக்கு நாம் வருந்திப் பயனில்லை; இந்திரனும் நடுங்கும்படியாகப் போருக் கெழுந்து சண்டை செய்து அவரை யொழித்திடலன்றி நாம் வேறு சிந்தித்திருத்தல் காரியமாகமாட்டாது" என்று சொன்னான். விஜயன் கேட்டு நகைத்து, "வெகு நன்றாயிருக்கிறது; சாபச் சொல்லில் இசைபெற்ற கோபமுனியை யுச்சிவேளைக்கு விருந்துக்கு வாச்சொல்லிவிட்டுப் பின் அவர்க்குத் தாபம் தோன்றும்படியாக, நாம், வேறொரு கருமத்தைக் கருதி இவ்விடத்தைவிட்டுப் போதல், ஒழுங்குமில்லை; கடமையுமாக மாட்டாது; பின்னர்க் கேடும்வரும்" என்றான். "பின்னர்ச் செய்வதுதான் யாது?" என்று கவன்றிருந்தபோது, நகுல சகாதேவர்கள், தமையன்மார்களை வணங்கிப் "பெரியோர்களே! எல்லாம்வல்ல மாமாயன் எமக்குத் துணையாக உள்ளவரையில், ஒரு துன்பமும் நம்மை வந்து அணுகாது; நாம்,

இப்போது நாம் கண்ணபிரானை நினைப்போம்; அவர் தோன்றுவர்; அவர் சொற்படி செய்வோம்" என்று கூறினார்கள்; "நாழிகையோ பத்தாகிவிட்டது; முனிவரோ வந்து விடுவார்; நாம் என்செய்வோம்?" என்று திரௌபதி மிகக் கவலை கொண்டிருந்தாள்.

எல்லோரும் நன்மனங்கொண்டு கண்ணபிரானை ஏகோபித்துத் தியானித்து நின்றார்கள். "எப்போது எங்கே எந்த பக்தர்கள் நினைத்திடுவரோ!" என்று பக்தரைப் பாதுகாக்கும் முறையில் விரைந்து நிற்கும் விரகானபடியால், பாண்டவர்க்குப் பக்கத்துணையாகிய எம்பெருமான், அவ்வைவரும் மங்கையும் நினைத்தவுடனே அதேயிடத்தில், அவரது மனத்தில் இருந்து குதிப்பவர்போலத் தோன்றி முன்னின்றார். அறுவரும் வணங்கிப் போற்றி நிகழ்ச்சியைக் கூறினார்கள். திரௌபதி மிகக் கவன்று நடுங்கிக் கூறினாள். கண்ணபிரான், சிந்தித்து உண்மையறிந்து, ஐவரையும் தேற்றிப் பாஞ்சாலியைப் பார்த்து, "பெண்ணரசே! பதிவிரதையிற் சிறந்த உனது கைகள் எதனையும் பூர்த்திசெய்யுமே! இதற்கென்ன கவலை!! உங்கட்கு ஆதவன் அருளிய பாத்திரத்தில் ஏதேனும் சோற்றுத்துளிகள் இருக்கின்றதா பார்!!!" என்று சொன்னார். பாஞ்சாலி உடனே, பாத்திரத்தைப் பார்த்தாள்; ஒரு பருக்கை யிருந்தது; களிப்புடன் அதனைக் கண்ணனுக்கு அறிவித்தாள். "கொண்டுவா! அந்தப் பருக்கையை; அதனை நன்மனத்துடன் எனக்கு அளித்துவிடு; நான் முதலில் விருந்துண்டு திருப்தியளிக்கின்றேன்" என்று திருவாய் மலர்ந்தருளினார். மாதவன் கட்டளைக்கு மாறுகூறாமல் மாதரசியும் நன்மனத்துடன், அந்தச் சோற்றுப் பருக்கையைக் கைகளாலெடுத்து, எல்லாமாய எங்கும் பரந்த மாமாயனுக்கு விருந்திட்டனள்.

உலக முண்ட பெருவாயன், அந்த ஒரு துளிச்சோற்றை யுண்டு, அம்முனிவர் யாவருடனும் துர்வாஸரையும் மனத் துட் கொண்டு மிகக் களித்துத் திருப்தி கூறினர். அப்போது, அநுஷ்டானங்கள் முடித்து விருந்துக்காகப் புறப்படும் சமயத்திருந்த மாமுனிவர் துர்வாஸருக்கும் உடன் வந்த முனிவர்க்கும், பஞ்சபக்ஷ்ய பரமான்ன வகைகளுடன் பெரு விருந்துண்ட மணமும் ருசியும் மனத்திருப்தியும் தோன்றி, மேலே ஆகாரத்தில் தேட்டமில்லாமையும் தோன்றியது. களித்தார்கள்; பாண்டவர் தம் பக்தியை நினைந்து மகிழ்ந்தார்கள். பரமனது துணையைக் கருதி வியந்தார்கள்; பாம்புக் கொடியனைப் பரிகசித்தார்கள். அறவோர்களிடம் தீராப் பகை கொண்ட அம்மறவோன் மீளாமல் அழிந்திடுவான் என்று நினைத்தார்கள். விரைந்து ஆச்ரமத்துக்கு வந்து, வணங்கிய பாண்டவர் அறுவரையும் ஆசீர்வதித்து, "உண்டோம்; உண்டோம்; உம்பருக்கும் உதவா ஓதக்கடலமுதம்; கண்டோம் கண்டோம் எவ்வுலகுங் காணுதிருந்தன் கழலிணைகள்" என்று திருப்தி கூறித் தம்மருகே, ஓராசவுருவத்தில் நின்றும் தமது ஞானக் கண்ணுக்கு சங்கு சக்கரம் கதை ஸார்ங்கம் வாள் இவைகளுடன் தோன்றி நிற்கும் பச்சைத் துளபப் பெரியோனை மனத்தாற் பணிந்து துதித்துப்பின், "அறமே துணையாய்ப் பெற்று நின்ற அன்பர்களே! உங்கட்கு எக்குறையும்வாராது; கவலைப் படாதீர்கள்; நேற்று அத்தினபுரி சென்று அரவக் கொடியோனிட்ட விருந்துண்டு மகிழ்ந்தோம்; அம்மகிழ்ச்சியால் அவனைப் பார்த்து, 'ஏதேனும் வரம் கேட்டுக்கொள்' என்று மனத்திருப்தியுடன் கேட்டோம். அவன், அகங்கார மனத்துடன், எங்களைப் பார்த்து,

"எம்மில் துய்த்த ஓதனம்போல் எம்மோடி கலிவனம் புகுந்தோர்
தம்மிற் சென்று நாளை நுகர் இதுவே யெனக்குத் தரும்வரமென்
றும்மில் செல்வமுடையவன்போலுரைத்தான் அதனலுயர்ந்தோர்கள்
தம்மிற் சிறந்தோய் வந்தனம்யாம் என்றானந்தத் தவமுனியே."

எங்களிடம் உண்ட விருந்துபோலவே, எமது பகைவராகிய பாண்டவரிடமும் நாளை சென்று விருந்துண்ண வேண்டும்; இதுவே எனக் களிக்கும் வரமென்று அவன் கேட்டதனல் தருமத்துக்குக் கட்டுப்பட்டுத் தடுக்க முடியா திங்கு வந்தோம்; இப்பெரு விருந்துண்டோம்; திருப்தி யடைந்தோம். யாவரினு முயர்ந்த தர்ம பூபதியே! உம்மிலும் அவர் செல்வத்திற் சிறந்தவர் ஆய்விடல் முடியுமா? ஒரு போதும் ஆகாது. உனக்கு வேண்டிய வரங் கேட்டுக்கொள்; திருப்தியுடன் அளிப்போம்'' என்றனர். "ஸ்வாமி! தம்மில் மனம் பதைத்து எம்மைக் கெடுத்திடப் பெரியோராகிய தங்களை யித்தீச் செயலுக்கு ஏவித் தொந்தரை கொடுத்த எமது தாயாதர்களாகிய துரியோதனதியர்பால் தமக்குச் சீற்றம் தோன்றாதிருத்தல் வேண்டும்; இதுவே யாங்கள் வேண்டும் வரம்'' என்று தருமன் சொன்னன். தூர்வாஸ முனிவரும் இவர் தம் பெருந் தன்மையை மதித்துப் போற்றிப் போனர்கள். கண்ணபிரானும் கருணை பாலித்த முகத்தினராகத் துவாரகை சென்றனர். அறுவரும் அகங்களித்திருந்தனர்.

பழம் பொருந்து சருக்கம்.

"சங்கை யிலாவகை யமபடரா லுயிர்தளர் பொழுதத்தருகே
மங்கையர் சூழவிருந் தழுதள்ள மயக்கினும் யான்மறவேன்
கங்கையும் நான்மறையும் துளவுங்கமழ் கழலிணையுந் திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமுநேமியும் அஞ்சன மேனியுமே"

பின்னர், அந்த நெடு வனத்தில், ஐவரும் மங்கையும் சில நாட்களிருந்து வாழ்ந்திருந்தபோது ஒரு ஸம்பவம் நிகழ்ந்ததனைப் பேசுவோம்.

அவ்வனத்திலுள்ளதொரு நெல்லிமரம் நறுங்கனியொன்றுதருவதுண்டு; அக் கனியை யாண்டுக் கொருமுறை சுமித்திரன் என்னும் மாமுனிவர் உண்டு பசியாறுவது வழக்கம். அதுவே ஆகாரமாகவும் வேறு ஆகாரம் விரும்பாதவராகவும் அம் முனிவர் இருப்பதனால், அக் கனியிடம் யாரும் போவதுமில்லை, தொடுவதுமில்லை. ஒரு நாள், அவ்வனத்தில் விஜயனுடன் திரிந்துகொண்டிருந்த திரௌபதி, அக் கனியைப்பார்த்து அதன்மேல் ஆசைகொண்டு, அதனைப் பறித்துத் தரும்படியாக விஜயனைக் கேட்டாள். வீமன் போலவே விஜயனும், அவளை வீரபத்தினியாக மதித்து, "தமது பொறுமையாலும் அடிமைத்தனத்தாலுமே, அவட்கு இத் துன்பம் நேர்ந்திருக்கின்றது" என்னும் உண்மை யுணர்ச்சியால், அவள் மனங்கோணுமல் நடந்திடல் வேண்டு மென்னும் கொள்கையை யுடையவனுதலால், அவள் சொல்லக் கேட்ட அக்கணமே, வில்லில் அம்பைத் தொடுத்து அக் கனியை வீழ்த்தினுன்.

அருகிருந்து அதைக் கண்ட முனிவர்கள் பயந்து, அந்தக் கனியின் வரலாற்றினை யுணர்த்தி, "இக் கனியை வீழ்த்திவிட்ட தன்மையினுல், அதற்குடையவராகியசுமுத்திர முனிவருக்கு கோபம் வருமே! அவருக்குக் கோபம் நிகழுவே நிகழாது; நிகழுமாயின், தடுப்பா ரெவருமில்லையே; என்ன ஸம்பவித்திடுமோ!" எனப் பயந்து படபடத்துக் கூறிப் பரபரப்புடன் இருந்தார்கள். அர்ச்சுனனும் அணங்கரசியும் உண்மை யறிந்து, நடுங்கிப் பதைத்து ஒன்றுந் தோன்றுதவராகிக் கனியை யெடுத்துக் கொண்டு சென்று தமையன் தருமரா

ஜன் அருகு அந்தக் கனியை வைத்துவிட்டு அவர் பாதத்தில் வீழ்ந்து, பதறியென் செய்வோமென்று விம்மினார்கள்.

"காட்டு வாழ்க்கையிலிருந்து காய்கனி மூலங்களை யாகாரமாகக் கொண்டு திருப்தியுடனிருப்போ மென்றாலும், நம்மை வினைவிட்ட பாடில்லையே! நாம் என் செய்வோம்; பெரு முனிவரது கோபத்தை யாற்றிடற்கு வழியொன்றும் எனக்குத் தெரிய வில்லையே" என்று தரும பூபதி சொன்னார்.

"பழத்தை நம்பி யதன் பருவத்திலிங்கே வந்து, அதனைக் காணாமல், சுமித்திர முனிவர் கோபங்கொண்டு சபித்திடுதற்கு முன்னம், நாமே சென்று அவரை வணங்கி, உண்மையைக் கூறி மன்னிக்கும் படியாக வேண்டிக் கொள்வோம்; இந்திரியங்களை வென்று நின்ற உயர்ந்த தாபஸராகையால், மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பிறகும் பொறுமையிழந்து நம்மைச் சபித்திட மாட்டார்" என்று வீமசேனன் யுக்தி சொன்னான்.

"அண்ணா! பிழை ஒருவன் மேலிருக்கும் போது, அதற்காகப் பலர் சாபம் பெறுதலும் துன்பம் அடைதலும் ஒழுங்காக மாட்டாது; அம் மாமுனிவருக்காக வளர்ந்து கொண்டிருக்கும் அந்த அற்புதக் கனியை முன் பின் கருதாமல் எய்தி வீழ்த்தினவன் நான்; ஆகையால் நானே அந்தத் தண்டனைக்குரியவனாவேன்; அவரால் இடப்படும் வெஞ்சாபத்தை யேற்றுக்கொள்வேன் யானே; நீங்கள் ஏன் அஞ்சுதல் வேண்டும்" என்று விஜயன் விளம்பினான்.

"மங்கையின் பொருட்டு அறியாமல் செய்த குற்றத்துக்கு நீமாத்திரம் துயருழந்திருக்க, நாங்கள் விலகிப் போவதோ? அம்மங்கைக்குரிய நாம் ஐவருமே அத்துன்

பத்தை யனுபவித்திடல் வேண்டும்'' என்று தருமராஜன் மறுபடியும் கூறினர்.

"என் யோசிக்கின்றீர்கள்; அந்தத் துர்வாச முனிவரால் வரக்கூடிய சாபத்தை வரவொட்டாமற் செய்து நம்மைக் காப்பாற்றியருளிய துணைவராகிய நம் மாயனிருக்கும் போது நாம் துன்புறல் நியாயமாகமாட்டாது; ஆகையால் அவரை நினைத்திடுவோம்'' என்று நகுலன் கூறினன்.

"அம்முனிவர் கோபிப்பதற்குமுன், அவரிடம் நாம் சென்று பழத்தைக் காணிக்கையாக வைத்துப் பாதத்தில் வீழ்ந்து வணங்கிக் கேட்டால், அப்பெரியார் கனியையும் கைக்கொண்டு நம்மையும் மன்னிப்பாரன்றோ?'' என்று சொன்னன் பாண்டவரிற் சிறியோனுகிய சகாதேவன்.

"பெரியவர் பெண்புத்தி கேளார்'' என்னும் பழமொழி பொய்யோ? வினையேன் வார்த்தையைக் கேட்டே இவ்வல்லலெல்லாம் உழக்கின்றீர்கள். அறியாத பேதை நான் என்ன செய்வேன்—என்று சொல்லித் திரௌபதி கண்ணீருகுத்துக் கதறினள்.

அவளைத் தேற்றி, நால்வர் சொல்லிலும் நகுலன் சொல்லே நலம் பயக்குமென்றெண்ணி, நம்பினுரைக் கைவிடாத நாராயணனுகிய நந்தகோபன் மகனை நினைத்தார்கள். உடனே அவர் தோன்றி உற்றதறிந்து, மகிழ்ந்து, அவர்க்குச் சமாதானம் கூறி, "யஞ்சல்'' என்று அபயமுந் தந்து, "இந்தப் பழம் முன்போல் அம்மரத்திடையே பொருந்திடுமாயின், அம்முனிவர் கோபிப்பதற்கும் சபிப்பதற்கும் காரணமில்லையன்றோ? இந்த யுக்தியை நீங்கள் யாரும் என்

சிந்திக்கவில்லே? மறுபடியும் இப்பழம் அம்மரத்தில் பொருந் தக்கூடிய வழியை விரைவில் தேடி யப்படிச் செய்தலே இதற்கு விமோசன'' மென்று கண்ணபிரான் கழறினர். யாவரும் பிரமித்தார்கள். தர்மன் நகைத்தார். வீமன் "இது எப்படி'' யென்று விம்மினன். அர்ச்சுனன் "மறுபடியும் அம்புகொண்டே பொருத்தலாமோ'' என்று சிந்தித்தான். நகுலசகாதேவர், "இது தக்க வழிதான்; என்ருலும், இது செய்தல் மாயவற்கு ஆகுமல்லாது எம்மனோரால் முடிந்திடு வதோ?'' என்ருர்கள். நங்கை பிரமித்து நகைத்து நின் ருள்.

கண்ணன், அவ்வாறு நின்ற அவ்வறுவரையும் பார்த்து, "நீங்கள் ஐவிரும் இந்த நங்கையும் உங்கள் உங்கள் உள்ளத் தில் லக்ஷ்யமாகக் கொண்டுள்ள உயர்ந்த கொள்கையை உண்மையிற் பிறழாது உரைப்பீரானல், இக்கனி அம்மரத்தி னில் தானே போய்ப் பொருந்தும்'' என்று கட்டுரைத்து, லக்ஷ்யங்களைச் சொல்லும்படியாகக் கட்டளையிட்டார்.

தரும பூபன் சொல்லுகிருர்:—

"வெல்லுக அறமும் மெய்ம்மையும் பொறையும்
மேகமேனியனே வெல்லாமற்
செல்லுக பாவம் பொய்ம்மொழி சோபந்தயித்தியர்
குலமெனத் தெளிவுற்
றல்லும் வெம்பகலு மென்மன நிகழும்
அலகையா மன்னையை முன்னம்
கொல்லுதல் புரிந்தோய் என்றனன் முரசங்கோட்டிய
கொற்ற வெங்கொடியோன்."

"முன்னம் தாயுருக் கொண்டு வந்த அலகையாகிய பூதனை யைக் கொன்ற மேகமேனியனே! கண்ணு!! தருமம் மெய்ம்

மொழி பொறுமை இவைகள் என்றைக்கும் வெற்றி பெறட்டும்; பாவம்மிகுந்த அஸுரர்குலம் மடிவதுபோலப் பொய்ம் மொழி கோபம் இவைகள் வெல்லாமற் செல்லட்டும் என்னும் இவைகளையே தெளிந்து, என்மனம் இரவும் பகலும் நினைந்து கொண்டிருக்கின்றது'' என்றார்.

வீமன் விளம்புகிறான்:—

''பிறர்மனை யவரைப்பெற்ற தாயெனவும்
பிறர்பொரு ளெட்டியே எனவும்
பிறர்வசை யுரைத்தல் பெருமையன்றெனவும்
பிறர்துயரென் துயரெனவும்
இறுதியேவரினும் என்மனக்கிடக்கை எம்பிரான்
இவையென உரைத்தான்
மறலியும் மடியுமாறு மல்லியற்கை வலிமை
கூர்வாயுவின் மைந்தன்.''

''எம்பிரானே! கண்ணா!! பிறர் மனைவியரைப் பெற்ற தாயாகவும் பிறர் பொருளை எட்டிக் கனியாகவும் பிறரை வைதல் பெருமையாகாதென்றும் பிறர் படுந்துயரை யென் துயராகவும் கொண்டு, எனக்கு இறுதி வந்த போதும் இவற்றுக்கு மாறாக நடவாதிருக்கை என் மனக்கிடக்கை'' யென்று சொன்னான்.

விஜயன் கூறுகிறான்:—

''ஊனமேயான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்தும் ஒண்பூணை
மானமே புரப்பதவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தோற்றமும் மரபும்
ஞானமேயான திருவடி யுடையாய்
ஞாலமுள்ளளவும் நிற்றலினால்

ஈனமே உயிருக்கியற்கை யாதலினல்
என்றனன் வீமனுக் கிளையோன்."

"ஞானமே திருவடிகளாக உடைய ஞான நாயகனே! கண்ணு!! உயிருக்கு இழிவே இயற்கையாகக் கொண்டிருக்கும் உடம்பினிலிருக்கும் உயிரே அழிந்திட்டாலும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுதலே புகழும் விளக்கமும் மரபுமாகுமென்பது என் உள்ளக்கிடக்கை" யென்ருன்.

நகுலன் நவிலுகிருன்:—

"குலமிகவுடையர் எழில்மிக வுடையர்
குறைவில் செல்வமு மிகவுடையர்
நலமிகவுடையர் என்னினும் கல்வி
ஞானம் அற்பமு மிலாதவரை
வலமிகுதிகிரிச் செங்கையாய் முருக்கின்
மணமிலா மலரென மதிப்பேன்
சலமிகுபுவியி லென்றனன் வாகைத்தார்
புனை தாரைமா வல்லான்."

"பலம் மிகுதியும் உடைய சக்ராயுதத்தையுடையாய்! கண்ணு! குலம் அழகு குறைவில்லாத செல்வம் மற்றும் பல நன்மைகளும் பெற்றுள்ளவர்களாயினும், கல்வி யறிவு சிறிதேனுமில்லாதவர்களை மணமில்லாத முருக்கம் பூக்களைப்போல மதித்திடுவேன் இந்தப் பூமியிலே" என்ருன்.

சகாதேவன் சாற்றுகின்ருன்:—

"ஒருமொழி யன்னைவரம்பிலாஞான
முற்பவ காரண னென்றும்
தருமமே துணைவன் கருணையே தோழன்
சாந்தமே நலனுறு தாரம்

அரியதின் பொறையே மைந்தன் மற்றிந்த
அறுவரும் அல்லது ஆருறவென்
றிருவரிலிலையோன் மொழிந் தனன்தன்
பேரிதய மாமலர்க்கிடை யிடத்தே."

"என்தன் இருதய கமலத்தில் என்றுமுள்ள என் கண்ணு! சத்தியமே தாய்; அளவிலா ஞானமே தந்தை; தருமமே சோதரன்; கருணையே நண்பன்; சாந்தமே அழகுடைய பத்தினி; பொறுமையே புத்திரன் என்னும் இந்த அறுவகை உறவினர்களல்லாமல் வேறு இவ்வுலகினில் யார் உறவு என்பது என் மனக்கிடக்கை" யென்ருன்.

பாஞ்சாலி பகர்கிருள்:—

"ஐம்புலன்கள் போலவரும் பதிகளாகவு
மின்னம் வேருெருவன்
எம்பெருங் கொழுநு வதற்குருகு
மிறைவனே எனது பேரிதயம்
அம்புவியதனிற் பெண்பிறந் தவரெவர்க்கு
மாடவ ரிலாமையி னல்லால்
நம்புதற்குளதோ என்றனன் வசிட்டன்
நல்லற மனைவியே யனையாள்."

"இறைவனே! இன்பவுணர்ச்சியைப் பெறும் கருவிகளாகிய ஐம்புலன்களைப்போல ஐந்துபேரை நான் பதிகளாகப் பெற்றிருந்தும் என்மனம் இன்னம் வேறு ஒருவர் என் கொழுநராகப் பெறுதற்கு நாடுகின்றது; ஆகையினுல் பூமியில் பெண்ணுகப் பிறந்துளார்க்கு ஆடவர் கிடையாமையினுலன்றி அவர் மனம் கொண்டு நம்புதற்கு முண்டோ?" என்று சொன்னுள்.

இப்படி அவர்கள் அறுவரும் தத்தமது மனக்கிடக்கையை யொளியாமல் உண்மையே உரைத்தார்கள்; ஆகலினால், அந்த நெல்லிக்கனி படிப்படியாக மேலெழுந்து மரத்திலேறித் தன்னிடத்திற் பொருந்திக்கொண்டது. யாவருங் கண்டு அதிசயமுற்றனர். முனிவர்கள் கலக்கமும் பயமும் நீங்கினார்கள். கண்ணபிரானும் துவாரகை போய்ச் சேர்ந்தார்.

நச்சுப்பொய்கைச் சருக்கம்

"சேயபங்கயச் சிறுவிரலங்கையிற் றிரட்டிய நறுவெண்ணெய்
ஆயர்மங்கையர் இடஇட அமுதுசெய்தாடிய திருக்கூத்தும்
நேயமும் குறுமுறுவலும்புரிந்து பார்த்தருளிய நெடுங்கண்ணும்
மாயவன் திருவடிவமும் அழகும்என் மனத்தைவிட்டகலாவே"

பாண்டவரைவரும் யாக மடந்தையுடன் அக்காட்டைவிட்டகன்று, தேனும் மழைத்துளியும் சேர்ந்து தென்றல் வீசுஞ் சோலைகளையுடையதாகி, விண்டு சிந்தன் எனும் ஒரு பெருமுனிவருக் கிருப்பிடமாகவுள்ளதொரு வனத்தைப்போய்ச் சேர்ந்தார்கள். அந்த முனிவரை ஐவரும் நங்கையும் வணங்கியாசிகள் பெற்று, அவ்வனத்து ஓர் சாலை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்திருந்தார்கள். முனிமைந்தர்களும் முனிவர்களும், ஐவர்களது நல்வரவினாலும் நன்னட்பினாலும் கானவிலங்குகளின் கொடுமைகள் தீர்ந்து மிகு களிப்புடன் நட்பினராகி அளவளாவிக் கலந்திருந்தார்கள்.

துஷ்டர் நால்வரும் குந்திமைந்தரைக் கொல்ல நினைத்தல்

அஸ்தினாபுரத்தில் துரியோதனன் முதலிய நால்வரும் செய்ததோர் சதியினை யெடுத்துச்சொல்வோம். "பாண்டு புத்திரர் ஐவரும், நமது சூழ்ச்சிகட்கு அகப்படாமல் யாதும்

திங்கிலராகிப் பல வாண்டுகளையும் கழித்துவிட்டார்களே; இன்னும் சில மாதங்கள்தானே இருக்கின்றன. இவற்றையும் கழித்து, அஞ்ஞாதவாசத்தையும் முடித்துத் திரும்புவரானால் நாம் ராஜ்யத்திற் பகுதி கொடுத்தல் வேண்டிவருமே" யென்று யோசித்து, எச்சதி செய்தாயினும் அவர்களைக் கொல்லுதல் குறித்தார்கள். தக்க தூதுவனை யனுப்பிக் காளமாமுனியெனும் ஒருபெருமுனிவரை யருவித்தார்கள். ஒரு முனிவருடைய சூழ்ச்சியால் அக்காளமா முனிவரும் வந்து சேர்ந்தார். இது வரையில் எந்த முனிவருக்கும் செய்திடாத உபசாரங்கள் அனைத்தையும் அந்தக் காளமா முனிவர்க்குச் செய்து, அவரைத் திருப்தியுடையவராக்கித் தனியிருந்து செய்தி சொல்லலுற்றார்கள்.

முனிவர் ஆஸனத்திருந்தபோது, துரியோதனன் எழுந்து அம்முனிவரது இணையடிகளிலும் ஸாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கிக் கைகுவித்து, "மாமுனிவரே! உங்களது கருணையாலும் தவச் சிறப்பினாலும், இந்தப் பூமி யெங்கனும் எனது ஆணையே செல்ல நிற்கின்றது; இன்னம் என்னை யீடேற்றத் திருவுளத்து அருளல் வேண்டும்" என்று இரந்து போற்றினான். "என் அருள் உனக்கு மிகுதியுமுண்டு; உனது உபசாரங்களினால் மிக மகிழ்ந்துளேன்; என்னால் உனக்கு ஆகவேண்டிய காரியமென்ன; அதனை நான் அவசியம் செய்து முடிப்பேன்; என்னை யீண்டழைத்த காரணமென்னை? சொல்லுவாய்" என்று காளமா முனிவர் மிகவும் அன்புடன் வினவினார். "முனிவன் வாக்குக் கொடுத்திட்டான்; இனிப் பொய்க்கான்" என்னும் உறுதி கொண்டு துரியன், மாமனைப் பார்த்துச் சைகை செய்தான். சகுனி, அத் தவமுனிவனைப் போற்றிப், "பெருந் தவத்தோய்! தாங்கள் அருள வேண்டிய வரமாவது-

உதவியாவது யாதென்றால், தாங்கள் எங்கள் மன்னனது பகைவர்களை களைய வேண்டுவது தான்'' என்று சொன்னான். முனிவர், மெய்மை விளங்காமல், மாநில மெல்லாம் ''தியாகத்துக் கொருவன்'' எனப் புகழப் பெற்ற கர்ணனை நோக்கினர்; கன்னனும், முனிவரை வணங்கி, "பெருந்தவத்தீர்! பாண்டவர் ஐவரும் உயிருடனிருந்தால், எங்கள் மன்னவன் துரியனுக்குப் புவி நிலைத்திடாது. புவி நிலையாவிடில் தாங்கள் அவற் கருளிய வரம் பிழைத்திடும்! ஆதலால், அந்த ஐவரையும் கொல்லுமாறு தீய ஹோமங்கள் வஞ்சகங்களால் இயற்றல் வேண்டும்; அப்படிச் செய்து ஐவரையும் முடித்திட்டால், நீங்கள் அருளிய வரப்படியே, பாரெலாம் இப் பாம்புக் கொடியோற்கே ஆகிவிடும்; இதனைச் செய்தருளித் தங்கள் வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுங்கள்; இதுவே எங்கள் நால்வரது விருப்பம்; தங்களை மீண்டு அழைத்து உபசரித்தது இதற்காகவே'' என்று சிறிதும் நெஞ்சில் ஈரமிலாது சொல்லி விட்டான்.

"கருணைக்குக் கன்னன்'' என்பார்களே என்று நம்பியவனது அபிப்பிராயத்தை வினவிய முனிவர் கன்னனது கடுஞ் சொல்லையும் கெடு நினைவையும் கேட்டுக் காது கண் இரண்டினையும் பொத்திக் கொண்டு ஐம்புலன்களும் வெந்து போய் மயங்கினர். என்ன செய்வது! "வஞ்சச் சூழ்ச்சியால் இங்ஙனம் வாக்குக் கொடுத்தேனே'' என்று மாழ்கி, மாற்றமொன்றும் தடுத்துப் பேச முடியாமல், "எழ்பிறப்பினும் நான் செய்து வைத்துள நல்வினைகள் இன்றோடு முடிந்தன போலும்'' என்று வருந்தி உரை செய்வாராயினர். "நான் விண்ணகத்துக்கு ஏற்றினும் அழிவில்லாதவரை யழித்தல் கூடுமோ? உங்கள் யோசனை பயன் தரத் தக்கதில்லை; நானோ வாக்குக் கொடுத்து விட்டேன்; இனி மறுத்தல் கூடாது;

ஆயினும், ஆரம்பித்து நிறைவேற்றும் தீய ஹோமத்தால் நான் அழிவேனே யல்லாது,அவர்களை:யது அழித்திடும்என்று என்னால் துணிய முடியவில்லை; தன்வினை தன்னையே சுடும் என்னும் பழமொழி பொய்த்திடாது. ஐவருக்கும் தேவதைகளும் அத் தேவ தேவனும் துணையாயிருக்கிறார்கள். தர்மமும் சத்யமும் பொருந்தி யுள்ளார்க்கு சேதனு சேதனங்களும் சராசரங்களும் துணைபுரியுமென்பது உண்மை. கொடுமனமுடைய உங்கள் விருந்தினை யுண்டுமகிழ்ந்தே னுகையால் எனக்கு அப்பலன் இப்போதே கிடைத்துவிட்டது. நான் வஞ்சனையில்லாமல் என் ஹோமத்தைச் செய்யப்போகிறேன்; அதிலிருந்தெழும் சக்தி ஐவர்களைக் காணுவிடின் என்னையே கொன்றிடும்; இதில் ஐயமில்லை; நான் போய் வருகிறே" னென்று சொல்லிக் காளமா முனிவர் புறப்பட்டு விட்டார். துஷ்ட நால்வரும் முனிவனை வணங்கி வழி யனுப்பினுர்கள்-

தீய யாகம்

"தீய ரோடிணங்கலும் தீது" என்னும் பெரியோருரைப்படிக் காளமா முனிவர் வஞ்சச் சூழ்ச்சியிலகப்பட்டுக் கொண்டார். என்னசெய்வார்? வாக்குப்பொய்திடல் கூடாதென அவ் யாகத்தைச் செய்திட எத்தனித்தார். தமது தபோவனத்திடையே நெடியதொரு கள்ளிக் காட்டிலே, கழுகும் பேயும் நரிகளும் காகமும் துள்ளிடும் ஒரு புறத்திலே அண்டவர் யாவரும் முனிவரும் மானிடரும் வரல் முடியாத மறைவானதோர் குகைக்கருகினில், யாவரும் பயப்படும்படியான பலிகள் முதலியன ஆயத்தம் செய்துகொண்டு மாம்ச பலியால் தீய நாற்றமெடுத்து எங்கணும் கெடும் புகையே சூழும்படியான தமது தீய யாகத்தை யாரம்பித்து நடத்திவிட்டார். யாமளம் முதலிய கருமந்தி

ரங்களை யுச்சரித்து துஷ்டதேவதைகளைச் சூழ்வாச்செய்து, மந்திரங்களும் சடங்குகளும் தவறிலாது இயற்றினர். ஒவ்வொரு மந்திரத்துக்கும் ஓரொழு சுருவையில் அக்கெடுநெய்யை அவியாக அளித்து பூர்ணுகுதியும் கொடுத்திட்டார். அவரது இச்சையாலல்லாமல், துரியோதனனது இச்சையால் செய்ததாயினும், மந்திரங்களும் தந்திரங்களும் தவருது அதன் முறைப்படியே செய்யப்பெற்ற யாகமாதலினுல், அந்த யாக மத்தியிலிருந்து, காளமாமுனிவரும் கண்டு நடுங்கும்படியானதோர் பெரும்பூதம் எழுந்து நின்றது. இங்கு துஷ்டர் சொல்லுக் கிணங்கித் தீயதோர் யாகத்தைச் செய்த அம்முனிவர், அதன் பலனுகப் பெற்ற அப்பெரும்பூத தரிசனத்தைச் செய்துகொண்டிருக்கட்டும். நாம், இச்செய்தியைத் தற்போது விட்டுவிட்டு வேறு செய்தியைக் கவனிப்போம்.

தர்மதேவன் சூழ்ச்சி

பாலுந் திணையும் ஜாதியும் வகுப்பும் உயர்வும் தாழ்வும் நோக்காமல் எவ்வுலகத்தும் எக்காலத்தும் எப்பிரிவினிலும் இருக்கும் உயிர்களை ஒப்பக் காத்திடும் தப்பா வாய்மையை உடைய தர்மதேவன் இதுசிந்திக்கலுற்ருன். "தனது அருமை மைந்தனுகிய தர்மபூபனும் அவன் தம்பியர் நால்வரும் நாகக் கொடியோன் வஞ்சச் செயலால் மாண்டொழியாதபடி யவரைக் காத்திடல் எனது கடமையாதலின், காளமா முனிவருடைய யாகபூதமானது புறப்பட்டு வந்து ஐவரையும் காணும்போது, ஐவரும் பிணமாயிருக்கக் காண்பித்தால், அது வெகுண்டு திரும்பிப் போய்விடும்" என்று நினைத்து அதற்கொரு சூழ்ச்சி தேடினுன். தனது குமாரனும் தம்பியரும் வாழ்ந்திருக்கும் அவ்வனத்தில், காற்றுப்போல் பறந்தோடும் கடுவேக நடையுடைய மானுருக்கொண்டு வந்து,

ஐவர்க்கும் நண்பினனாகிய ஓர் முனி மைந்தனது மான்தோலுடையைக் கவர்ந்துகொண் டோடிவிட்டான்.

தனது உடை அபகரிக்கப்படவே, கவலைகொண்ட முனி மைந்தன், வில் மைந்தரான ஐவரிடமும் வந்து செய்தி கூறித் தனது மான்றோலைத் தேடிக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டான். வீரர்களாகிய ஐவரும் திரௌபதியிடம் விடைபெற்று, மான்சென்ற மார்க்கத்தைத் தெரிந்து மானைத் தேடிப் புறப்பட்டார்கள். அது மாய மானாகையால், அருகே நிற்பதுபோலவும், தொட வந்தால் ஓடுவதுபோலவும் போக்குகள் காட்டிக் காட்டி ஐவரையும் அவ்வனத்தைவிட்டு வெகு தூரத்திலுள்ளதொரு நீர் காணமுடியாத நெடுவனத்துக் கழைத்துப்போய் மறைந்துவிட்டது. வீரர் ஐவரும் நெடுங்காலம் தேடி நாடியோடிக் களைத்தவராக ஓரிடத்திற் கூடினார்கள். நால்வரும் தாகத்தினால் வருந்தினார்கள். அந் நெடுவனத்தில் கண்ணுக் கெட்டியவரையில், தண்ணீரே கிடையாது. எங்கும் வெறுக்கக்கூடியதாக இருந்தது; இருந்தாலும் தாகத்தால் வருந்தினார்கள். அப்போது இளையோனாகிய சகாதேவன், "நீர் தேடிநான் கொணர்கிறேன்'' என்றுசொல்லி யநுமதிபெற்றுப் புறப்பட்டான். நெடுந் தூரம் தேடினான். எங்கும் நீர் காணான். நகற்புறமும் மலை சூழ்ந்த தொரு இடத்தைக்கண்டான்; அதில் ஒரு கால் தண்ணீரிருக்கலாம் என்றெண்ணி அம்மலைச் சாரற் கேகினான்.

நச்சுப் பொய்கை.

எல்லாமாகி எங்கும் நிறைந்திருக்கும் அறக் கடவுள், அவ்விடமெங்கும் நீர் தோன்றா வண்ணம் செய்து, இந்த நான் மலைச் சாரலில் ஒரு சுனையைத் தோற்றுவித்து, அதன்

நீரை மிகு நஞ்சாகச் செய்து வைத்திருந்தான். அந்நீரைப் பருகினர் பருகின தருணமே மாண்டு போவர். அத்துணைக் கடு விஷமுடையது அந்நீர்; அத்தகைய பொய்கையை, நீர் தேடி வந்த சகாதேவன் கண்டான். ஆனந்தம் கொண்டான். களைதீர்ந்த தென்னும் களிப்பும் கொண்டான். தான் முதலில் அருந்தித் தாகத்தைத் தீர்த்துக் கொண்டு மற்றை நால்வர்க்கும் எடுத்தேகலா மென்றெண்ணிப் பொய்கையி லிறங்கி யொரு கை நீரள்ளிக் குடித்தான். நீர் வயிற்றினுள் சென்றவுடன், உள் வெந்து மேனி கருகி அவயவங்கள் சோர்ந்து அப்பொய்கைக் கரையிலேயே பிணமாகி வீழ்ந்து விட்டான்.

சென்ற இளையோன் நெடு நேரமாகியும் வராதிருந்தமை நினைத்து மூத்தோன் நகுலனை யனுப்பினன். அவனும் வன மெல்லாம் தேடி அடிச்சுவடுகளின் வழியே நான்மலைச் சாரற்கு வந்து பொய்கையைக் கண்டு, தம்பி வழியிளைப்பால் மூர்ச்சித்தனன் போலுமென்றெண்ணி, தாகத்துக்கு நீரருந் திப் பின்னர் அவனையும் தேற்றி அழைத்தேகவே தகுதியென நினைத்து, மிகுதாகத்துடன் அப்பொய்கையிலிறங்கி, யொரு கை நீரள்ளிக் குடித்து, உடனே உயிர் துறந்து வீழ்ந்தான். தருமன், பின்னர் விஜயனை யேவ, அவனும் அவ்வழியே வந்து, தம்பியர் கிடந்தமை கண்டு, "தாகமிகுதியால் மேன் மேல் வாரி வாரிக் குடித்துக் குடித்து இவ்வாறு ஆயினரோ" எனக்கவன்று, இச்செய்தியை யண்ணற்குச் சொல்ல வேண் டுமே யென மனந்தளர்ந்து, தாகத்தால் தானும் கைந்நீர் அள்ளி அருந்தி யாருயிர் நீத்தான். "சென்ற தம்பியர் மூவ ரும் திரும்பவே காணேனே; கௌரவராகிய பாவிகள் ஏதே னும் சூழ்ச்சி செய்தனரோ" வென்று வருந்தியழும் தமைய னைத் தேற்றிவிட்டு, வீமனும் தேடி வந்து, மலை யேறிச் சுனை

யையும் இறந்தொழிந்த தம்பியர் உடல்களையும் கண்டான். மூவரும் தனித் தனியே வந்தும் இறந்து போயினமை நோக்கி, "இது நஞ்சுடைய நீராகவே இருத்தல் வேண்டு" மெனத் தீர்மானித்து, மூவரும் இறந்தனரென்று முன்னவ னிடம் சொல்வது கூடுமோ வெனச் சோர்ந்து, "நானும் இங்கிதில்மாய்வேன்; ஆனால், அண்ணன் வந்து நீரையருந்தி மாய்ந்திடா வண்ணம் எச்சரிக்கை செய்திடல் வேண்டு" மென்று துணிந்து, "இது நச்சுப் பொய்கை; இந்த நீர் அருந்தல் தகாது," என மணலேட்டில் தன் கையாலெழுதித் தானும் அந்நீரை யருந்தி யக்கணமே மாண்டு போனான்.

சென்ற நால்வர் நெடு நாழிகையும் மீண்டாரில்லை. தரும னுக்குத் தாகம் விஞ்சியது. சோகம் மிகுந்தது. உட்புல னழிந்தது. உள்ளமோடு உணங்கி வீழ்ந்தான். மூச்சும் சுற்று முற்றும் உயிரே இழந்தானாகி, இருந்த இடத்திலேயே தரும பூபனும் சாய்ந்து போனான்.

காளமுனி யாகபூதம் செய்த கதை.

காளமா முனிவரது யாகத்திலிருந்தெழுந்த பெரும்பூதம், முனிவனை நோக்கி, "ஏன் என்னையழைத்தாய்?" என்று உக்ர மாகக்கேட்டது. "நீ இங்குத் தாழ்த்துநின்றிடாமல், விரைந்து போய்க் குந்தி மைந்தர் ஐவருமிருக்குமிடம் சேர்ந்து ஐந்து உடல்களையும் ஒன்றுயமைத்துச் சேரக்கொன்றுவா" என்று முனிவர் கூறினார். பூதம் முனிவரைப் பார்த்துச் சொல்லு கின்றது:—"வெங்கானிலெங்கும் தேடுகிறேன்; இன்று என் கண்கட்கு அவர்கள் கிட்டிலானால், திரும்பிவந்து உன்னையே கொல்வேன்" என்னும் உறுதிகூறிப் போய்விட்டது. கருத்த உடலும் சிவந்த கண்களும் கோரைப்பற்களும் செம்பாக சிகையும் மலைபோல் மேனியும் திசைகளைத் துழாவும் கைக

ளுங்கொண்டு, அப்பூதம் அந்நெடுங்காட்டின் வழியே, மண மறிந்து தேடிக்கொண்டும், வரும்வழியில் வேகத்தால் மரங் களை வீழ்த்திக்கொண்டும் தருமன் சாய்ந்திருக்கும் இடம் வந்தது.

"அந்தணன் கொல்லச்சொன்ன அரசர் ஐவரில் இவன் தான் மூத்தவன்போலும்; இக்காட்டின் வெப்பம் தாங்கா மல், வெப்பு நோய் கொண்டு, உளம் வெந்து இருதயம் உலர்ந்து இறந்துபோயிருக்கின்றான். இனி இச் சடலம் ஏனோ வென்று இவன் தம்பியர் நால்வரும் போனார்போலும்" என்று தீர்மானித்து, நடந்துபோய்ப் பொய்கைக் கரையில் மாண்டு வீழ்ந்திருக்கும் மற்றை நால்வரையும் கண்டு, "பச் சென்னும் நிறமுடைய அப்பொய்கை நஞ்சாகும் ஆதலால், இவர்கள் ஒருமித்து வந்து தாகமிகுதியால் நீர் அருந்தி ஒரு சேர இறந்துபோனார்கள். உயிரிழந்த இவர்களை நான் கொல் வது யாங்ஙனம்? கண்டக துஷ்டர் நால்வர் கருத்தினை முன்னி இந்தக் காளமாமுனி யாகத்தில் என்னைத் தோற்று வித்தான். என்னுலிறப்பதற்கு முன்னரே இவர் விதியா லிறந்துபட்டனர்; இனி நான் செய்யவேண்டியதைச் செய்கிறேன்" என்று நினைந்து மீண்டு விரைந்து முனிவ ரிடம் வந்து, ஐவரும் முன்னரே இறந்துபட்ட தன்மைகூறி, "யெனக்கு லக்ஷ்யப் பொருள், இனி, நான் முன்னே சொல் லிப் போனபடி நீதான்" என்று சொல்லிக்கொண்டே காள மாமுனியை வாரி யெடுத்துப் பூமியில் அறைந்து கொன்று ஓமத்தீக்குள் மறைந்துபோயது.

தர்மன் எழுந்து தம்பியரைத் தேடல்

வெப்பம் மிகுந்து தாகம் மேலிட்டதனால், நாவுலர்ந்து உட்புலம் வெந்து இருதயம் உணங்கி உயிரிழந்தான்போல்

மாழ்கித் தருமபூபன் வீழ்ந்து மூர்ச்சித்த இடம் சந்தனமா நிழலாகையால், இரவி தன் தாபம் அடங்கி நற்காற்று ஆரம் பிக்கவே, தென்றலூற்றிய தீங்காற்றினல், இருதயம் ஊறி உட்புலம் குளிர்ந்து மேனி தணத்து ரோமம் சிலிர்த்து வாய் புனல் வந்தூறச் சிறிது கண்விழித்தான் தருமபூபன். செத் துப் பிழைத்த தன்மையினுல், எம்பிரானது கருணையை நினைத்து ஞான மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு எழுந்து நடந்து சென்று நால்வரும் சவமாக்கிடந்த சாரலைக் கிட்டி ஞன். நால்வரது தேகத்திலும் ஊறு சிறிதேனும் இலாத தைக் கண்டு, "போர் மலைந்து இவர் உயிர்துறக்கவில்லை; பின்னை யிம்மரணக் காரணம் யாது? இச்சுனைநீருருந்தியே மாண்டனரோ? ஆம்; இச்சுனையை நோக்கின் நச்சுச்சுனை போல் தோன்றுகிறது; ஒருவராவது உணராமல் ஒருவர் பின் ஒருவராகத் தனித்து வந்தும் மாண்டமையை எப்படித் துணிவது" என்று சிந்தித்துச் சுற்றிப் பார்த்து, மணலேட் டில் வீமன் கையெழுத்தில் எழுதியிருந்த குறிப்பினைக் கண் டுளம் மருண்டான்.

"வஞ்சகன் செய்த வஞ்சனையே இது" என்று நினைத்து "நால்வரும் போயபின் நானிருந்து உயிர்வாழ்வனே" என்று நொந்து கூறி, "நானும் இச்சுனைநீர் குடித்தே மாள் வேன்" என்று தன்னெரு கையில் அந்த நஞ்சுநீரை யள்ளிக் கொண்டு அருந்தப் போனுன்; அப்போது அங்கோர் அசரீரி வாக்குத் தோன்றியது; "கருந்தடம் புனல் நஞ்சு; நுகர்வது கருதேல்" என்று எழுந்த அசரீரி "நால்வரும் நான் சொல்லக் கேளாமல் மாண்டார். உன்னை நான் கேட்கும் வினுக்கட்கு விடை பகர்ந்து பின்னை நீ நீர் அருந்து. அன்னைபோ லுயிர னைத்தையும் புரந்திடுமாசே! தாகம் விஞ்சினல் என்ன! தாங்க லியலாதோ; பொறுத்து வினுக்கட்கு விடையளித்திடுவாய்"

என்று அசரீரியாக வந்து, தரும தேவன் தன் மகனைக் கேட்டான். "அக் கேள்விகள் யாவை" யென்றான் தர்ம பூபன்; அசரீரி சொல்லலுற்றது.

அசரீரி:—சொல்லும் நூல்களிற் பெரியது எது?
தருமன்:—மெய் வேதம்.
அசரீரி:—இல்லறத்தினுக் குரியது எது?
தருமன்:—எண்ணுடை யில்லாள்.
அசரீரி:—மாலையில் மணமுளது எது?
தருமன்:—வண்சாதி மலர்.
அசரீரி:—நல்ல மாதவம் எது?
தருமன்:—தமது குலத்தவர் ஒழுக்கமே.
அசரீரி:—முனிகுலம் தொழும் கடவுள் யார்?
தருமன்:—மொய்துழாய் முகுந்தன்.
அசரீரி:—நங்கையர்க்கு இயற்கை எது?
தருமன்:—நாணம்.
அசரீரி:—தனம் மிக்கவர்க்கு அரண் எது?
தருமன்:—தகைபெறு தானம்.
அசரீரி:—இருசெவி கட்கும் இனியது எது?
தருமன்:—இளம் குழந்தையர் இன்சொல்.
அசரீரி:—நிலைத்து நிற்பது எது?
தருமன்:—நீடிய இசையே (புகழே)
அசரீரி:—கற்பது எது?
தருமன்:—கசடறக் கற்கும் கல்வி.
அசரீரி:—அற்பமாவது எது?
தருமன்:—அறத்திடு பிச்சை.

இவ்விதம் பல வினவலும் தருமன் தக்கபடியே விடையியம்பினான். தரும தேவன், தனது மெய்ம்மை யுருவைக்

கொண்டு நேரே வந்து, தன் மகனைக் கட்டித் தழுவிக் கொண்டு, உச்சி மோந்து, வந்தவாறெலாம் விளம்பினன். "உன் தம்பிமார் இறந்தமையை யொழிப்பதற்கு ஏது இருக்கின்றது; துயருருதே" என்ருன். "எப்படியேனும் என் தம்பியரை யெழுப்பித்தால் வேண்டும்" என்று சொல்லித் தருமன் தந்தையின் பாதத்தில் வீழ்ந்தான். வீழ்ந்த மைந்தனை யணைந்து கொண்டு, "உன் தம்பியர் நால்வரில் உன் அன்பிற் சிறந்தவனை யருகுசென்று இம்மந்திர மோதிக் கூவி யழை; வருவான்" என்று சொன்னன். உடனே தருமன் இளையோனிடம் சென்று "சகாதேவா! எழுந்திரு" என்று மந்திரம் ஓதிக் கூப்பிட்டான்; அவன் உடனே நித்திரை செய்து விழிப்பவன்போ லெழுந்தான்.

"குன்றுபோல் வலியுடைய வீமனிருக்க, வில் விஜயன் வீழ்ந்திருக்க, இவ்விளையோனிடம் மாத்திரம் என் பிரியம் காட்டுகின்ருய்!" என்று தந்தை கேட்க, "தந்தையே! குந்தி குமாரில் நானொருவன் உளேன்; மாத்ரிக்கு ஒருவன் வேண்டாமோ? அதனல்" என்ருன். மைந்தனது அன்பையும் பொது நோக்கையும் கண்டு ஆனந்தித்து, வில்லும் வாளும் வேலும் கோலும் மந்திரங்களுடன் கொடுத்துத் தனது இச்சையினல் தூங்கி எழுந்தவர்போ லெழுந்த அம்மூவருடன் இவ்விருவரையும் சேர்த்துத் தழுவி யாசிகள் அளித்து, அன்பும் ஆதாவுங் காட்டி, துரியன் முதல் நால்வர் செய்த சதியும், காளமாமுனி கபடமறியாது வாக்களித்து வேள்வி செய்து பூதமெழுப்பின செய்தியும், மானுருக்கொண்டு வந்து பார்ப்பனச் சிறுவனது தோற்புடைவையைக் கொண்டதும், நெடு வனம் பாலே வனமானதும், நச்சுப் பொய்கையும், பூதம் காள முனிவனையே கொன்றதும் ஒன்று விடாமற் சொல்லி,

"இன்றுடன், காடுறை; வாழ்க்கைப் பன்னீராண்டும் நிறைவேறின. இனி, மறைந்துறை வாழ்க்கை ஓராண்டுண்டு; பகைவர் கண்ணுரு வண்ணமிருந்து வாழ்ந்து, பின்னர் அரசு பெற்று நீடு வாழக்கடவீர்" என்று சொல்லித் தருமதேவன் மறைந்தான்.

மறுபிறவி யெடுத்த மன்னர் ஐவரும், நற்பெருந் தந்தையாகிய தரும தேவனை யுன்னி யுன்னி யுள்ளம் கசிந்து மெய்யுருகிக் கண்ணீர் சொரிந்து, "துஷ்டர் செயலுக்காக நம்மைத் தேவரும் மறைந்து காத்து வருகின்றனர்" என்று கொண்டு, போற்றிப், பெருவழி கடந்து போய்த் தங்களைக் காணாது வருந்தி நின்ற திரௌபதிக்கு நடந்த நிகழ்ச்சி யெல்லாம் சொல்லிப், "பன்னீராண்டும் கழித்து விட்டோம்; இனி மறைந் துறையும் ஓராண்டு கழித்திடத்தான் உறுதி வேண்டும்; பகைவர் பார்ப்பரேல் பின்னும் வனவாசம் வந்து கூடும்; ஆதலால், மறைந்துறை காலத்து, ஒவ்வொருவரும் வெகு கவனத்துடனிருத்தல் வேண்டும்; பதறக் கூடாது; சிதறப் படாது; இருந்து மறைந்து வாழ்ந்து கவனமாய்ப் பொழுது போக்கல்வேண்டு" மென்று துணிந்தார்கள்.

ஆரணிய பருவம் முற்றிற்று.

விராட பருவம்.

நாடு கரந்துறை சருக்கம்.

"அங்கையில் நேமிசங்குவாள் தண்டோ
டம்பினம் இவை வைத்தருள்வோர்
சங்கையில் மறைகள் ஆயிரங்களுக்கும்
சாற்றுதற்கரிய தத்துவத்தோன்

கங்கையினறலும் காளியன் முடியும்
காளிந்திக் கரையுமே கமழும்
பங்கய மலர்கள் இரவுநண் பகலும்
பணிந்து பாடுதும் அவன்புகழே"

வேடம் மாறி விராட புரம் சேரல்

அவ்வனத்தில், தம்மோடு இருந்து வாழ்ந்த மன்னரும் முனிவரும்சூழ்ந்திருந்தபோது, தர்மதேவதையின் குமாரராகிய தர்ம ராஜன், அவர்களைப் பார்த்து, "எங்களது பன்னிரண் டாண்டு வனவாஸங்களும் நிறைவேறி விட்டன; நாங்கள் அறுவரும் இனி யோராண்டு யாவர் கண்கட்கும் தோன்றா மல் மறைந்து வாழ்ந்திருத்தல் வேண்டும்; இது வரை உடலும் உயிரும் போல எம்மோடு கூடியிருந்தீர்கள்; இனி அவரவர் தத் தமது இருப்பிடம் சென்று வாழ்ந்தலே தகுதி; எங்கள் அஞ்ஞாத வாஸத்திலும் உடனுறைந்து வாழ்வது முடியாத காரியம்'' என்று பரிவுடன் சொல்லி யவர்களை யவரவர் விரும் பிய இடங்கட்கு அனுப்பிவிட்டுத் தானும் தம்பியரும் தையலு மாகத் தனித்திருந்தான்.

இனித் தாமதித்தல் கூடாதெனத் தீர்மானித்து, அறுவ ரும் வேடம் மாறியெங்கேனும் உறைந்து ஓராண்டைக் கழித் திடலாம் என்னும் முடிவுக்கு வந்த போது, "எங்கே போய் வசிப்பது?'' என்னும் யோசனை நிகழ்ந்தது. "நாமிருந்து வாழு மிடம் வளம் பெறு நாடாக இருத்தல் வேண்டும்; ஆள்வோன் அறநெறி வழாத மன்னனாக இருத்தல் வேண்டும்; நமக்கு எவ் வகையிலும் தீங்கு நேரக்கூடாத இடமாக இருத்தல் வேண்டுமே'' என்று தருமராஜன் தம்பியரை நோக்கி வினவினன். அப்போது அர்ச்சுனன், எழுந்து, "அறப் பெருங் கடவுளனைய அண்ணல்! இப்பேருலகத்தினில்,

நல்வளனும் தொல்புகழும் நீங்கா வாய்மையும் தூங்காக் காவலும், அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும் இயலும் இசையும் பெயலும் பயிரும் பொருந்தியுள்ள நகர்களிற் சிறந்தது விராட நகரொன்றே யாகும். மன்னனும் மனுநெறிவழாத பேரருளாளன். நீதிநெறி யோது மறை தீதிலாது அளிப்பவன்; நிதி நிறைந்து கதி சிறந்திருக்கின்றான். திக்கெங்கும் கீர்த்தியுடையவன்; அத்தகைய மச்ச நாட்டையடைந்து வாழ்தலே நமக்குத் தகுதியும் தருமமுமாகும்" என்று சொன்னான்.

யாவரும் ஒப்புக்கொண்டார்கள். "ஆம்! ஆம்!! அவ்விடமே தகுதியானது; அவ்வரசனே நம்மை நன்கு புரந்திட வல்லவன். நாம் யாவரும் உருமாறி யங்கே போய் வாழ்வோம்" என்று தர்மராஜனும் ஒப்புக்கொண்டான். உடனே அங்கிருந்து புறப்பட்டார்கள். மலைகளையும் வனங்களையும் கடந்தார்கள். மச்ச நாடடைந்து விராடனது நகரத்தெல்லையில் வந்து சேர்ந்தார்கள். ஆங்கு அந்நகரத்து மயானவனமிருந்தது. அவ்விடம் நின்று பார்த்தபோது, காளி கோயிலொன்றைக் கண்டார்கள். அக்கோயிலின் முன்னர் மிகப் பழையதான தொரு வன்னி மரமிருந்தது. நீண்டு அகன்று உயர்ந்து வளர்ந்திருந்தது. பல கிளைகளும் பரவி விரவியிருந்தது. பண்டைப் பழுமரமாகையால், அடி மரத்தில் பெரிய கோடரம் இருந்தது. ஐவரும் தத்தமது ஆயுத வகைகளையொரு சேரக்கட்டி ஒரு பெருஞ் சுமடாகச் செய்து, தமதரும் தரும தேவதையைக் காவலுக் கழைத்து, அம்மரப் பொந்தினில் திணித்து மறைத்து வைத்தார்கள். வன்னி மரத்தையும் கன்னிக்கடவுளையும் வலம்வந்து போற்றித் துதித்தார்கள். தங்கள் ஆயுதச் சுமையை யாருமறிந்திடா வண்ணம்

அரிய மந்திரங்களும் சொல்லியாண்டு நின்றும் விலகிப்பிரிந்து மாறு வேடம் தரித்துக் கொண்டார்கள்.

தர்மராஜன், தம்பியர் வணங்கியிருக்க ஓர் தாபஸவேடம் தாங்கிக் கங்கன் என்னும் நாமமும் புனைந்து செம்மை வடிவமும் முப்புரி நூலும் கொண்டு, வேதம் சொல்லிக் கொண்டிருக்கும் வாக்கும் பெற்று விராடனது பேரவை நண்ணி, வணங்கிய அரசனுக்கு ஆசியும் நல்கி ஆஸனத்து அமர்ந்தார். "யாரையா நீவிர், எங்கு நின்றெழுந்தருளுகின்றீர்?" என வினவினன் மன்னன். "பாரையாளுடைய பாண்டு மைந்தன் உதிட்டிரனிடத்திற் பாங்காய் வாழ்ந்திருந்தேன். மாயச் சூதினல் நாடிழுந்து அவர் வனம் புகுந்துறைந்த போதும் உடனிருந்தேன்; இப்போது அவர் அஞ்ஞாத வாஸம் செய்யப் பிரிந்தமை கருதி நான் இவ்விடம் வந்தேன். சில காலம் இவ்விடம் வசித்தல் வேண்டுகின்றேன்; அவரைப் போல என்னை யேற்று அளித்தல் வேண்டும்" என்று கங்க முனிவர் சொன்னர். அவ்வாய்மையைக் கேட்ட மனுகுல மன்னன் விராடனும் மகிழ்ந்து, மனம் நெகிழ்ந்து, உணர்ச்சியும் தகுதியும் உணர்ந்து, "பெரியோராகிய தங்கள் வருகைக்கு யான் புண்ணியஞ் செய்திருந்தேன் போலும்" எனும் இனிய வார்த்தைகள் கூறி யவரை யன்புடனேற்றுத் தன்னருகே எப்போது மிருந்திடப் பணித்தான்.

தண்டினுக் கொருவன் புயவலிக் கொருவன் என்று உலகம் புகழும் வீமனும், சில நாட்கள் சென்ற பிறகு, அடு தொழிற் புரியோனுடைய வேடங் கொண்டு அதற்குரிய கருவியே துணையாக மன்னவன் அவைக் களத்து வந்து, முதலில் கங்க முனிவரை வணங்கி மன்னற்கும் மரியாதைகள் செய்தான். "யாவர் நீர்" என வினவியதற்கு, "அறுவகைச் சுவையுடன் ஐவகை யுணவுகளும் சமைப்பேன்; பாண்டு

மைந்தரில் உண்டியிற் சிறந்த விருப்பமுடைய வீமசேனரிட மிருந்தேன். மல்வலியும் அவரிடம் பெற்றிருக்கிறேன், அவரது வனவாசத்திலும் கூட விருந்து வாழ்ந்தேன்; அவரது அஞ்ஞாதவாஸ நிமித்தம் அவரைப் பிரிந்து வந்தேன்; அவர்களைப்போல் எம்மை வைத்துக் காப்பவர் தாங்கள்தா னெனத் தெரிந்து கொண்டு இங்கு வந்தேன். பலாயனன் என்பேர். அன்புடனேற்றுக்கொள்வீரா?'' என்று உரை பகர்ந் தான்; என்றவுடன் மன்னனும் மகிழ்ந்து இரு கைகளையும் சென்னிமேலிருத்திப் பரிசுகள் வழங்கி யெமக்குத் துணைவ ராக இங்கு நம் மாண்மனையிலிருக்கலாம்'' என்று அநுமதியு மளித்து அவருக்குத் தக்க இடமமைத்துக் கொடுக்கும்படி செய்து அனுப்பினான்.

மறுநாள், வில்லுக் கொருவன் எனுமிசை பொறுத்த பாண்டவரில் நடுப்பிறந்த பார்த்தன், இந்திர லோகத்தில் தான் வசித்திருந்தபோது, நாடக கணிகை ஊர்வசியின் காதல் நாட்டத்தைத்தான் விரும்பாத காரணத்தினால் தனக்கு வந்து சேர்ந்த சாபம் பேடியுருவத்தை யிந்த ஓராண்டினிற் பெற்று, ஆண்டையும் கழித்து அச் சாபத்தையும் தொலைத்திடலா'' மென்று எண்ணினான். நினைத்த மாத்திரையில் அப்பேடி வடிவம் வந்து பொருந்தி யது. அவ் வுருவுக்குரிய அங்கங்களும் அமைந்தன; அங்கங் கட்குரிய நாணம் முதலிய செயல்களும் சேர்ந்தன. தம்பிய ரும் தையலும் மகிழ நடந்து போய் மச்ச நாடாளும் விராடர் கோன் பேரவை புகுந்து, ஆங்கிருந்த கங்க வேதியரை முன் னர் வணங்கி, மன்னற்கு மரியாதைகள் செய்து நின்றான். மன்னன், "இவ்வடிவுடைய மங்கை நீயாவள்'' என்றான். "நாதமும் இயலும் நாடக விதமும் நன்குறப் பயின்றேன். நாட்டியம் பயிற்றவும் செய்வேன்; வீரரிலுயர்ந்த வில்விஜயன்


B.S
C V Morgan

பால் வேலையிலிருந்தேன். என்னை யவர் என்றும் விட்டொழிந்திடார் ஆயினும், 'மறைந்துறை வாழ்வின் இந்த ஓராண்டும் விலகி யிருந்திடு' என்றார். மறுத்திடாது யானும் அவரைப் பிரிந்து வந்தேன். நாட்டியல் நுட்பமும் பாட்டியல் பயனும் நன்கு அறிந்து அவர் தமைப் போற்றி யாதரித்திடுவீர் நீரெனக் கேட்டு இங்கு வந்துற்றேன். விஜயரைப்போல் நீரும் உமது அரண்மனையிலேற்று உதவு வீரன்றோ!" என்றனள் யாரும் கண்டவர் மகிழும் வடிவமும் வாக்கும் வாய்த்த நல்லறிவும் வீரமுமுடைய பேடியினுருவாள். "உனது நாமமேோ" என்ற அரசனுக்கும், "பிருகந்நளை" யென்றாள். அரசனும் மகிழ்ந்து, "அந்தப் புரத்தில் உத்தரைக்கு நாடகம் பழக்குவீர்" என அநுமதித்து, அருகினிலிருக்கும் காவலர் மூலம், அந்தப் பேடியுருவினள் பிருகந்நளையை யந்தப்புரஞ் சேர்த்திட அனுப்பினான். விராடர்கோன் மனைவி சுதீக்ஷ்ணா தேவியும் உத்தரை மங்கையும், பிருகந்நளையை யன்புடனேற்று நல்லுரை கூறி ஆதரவளித்தனர். அரசனது அநுமதியால் ஆடையும் ஆபரணங்களும் அருகில் வந்திருந்தன. உத்தரைக்குப் பாங்கியா யமர்ந்தாள். ஆடலும் பாடலும் பழக்குமா றிருந்தாள்.

சில நாட்கட்குப் பிறகு, மாநிலத்தெங்கும் வாம்பரி செலுத்தும் வீரரிலுயர்ந்த பாண்டவர் நான்காம் பார்த்திவன் நகுலன், பரிமாச் செலுத்தும் பாகரின் உருவம் பாங்குடனேற்றான். சிரத்தினிற் குஞ்சம்வைத்த நல்முடியும் கையினிற் கம்பியும் கயிறையும் கொண்டு, போழகனிவனெனக் கூறும்வடிவுடன், மன்னவனுக்குக் குதிரைகள் தேடும் பாகரிற் சிறந்தோன் இருந்திடும் பந்தியின் வாயிலிற் சென்றான். கண்டவர் விரும்பும் கந்தர்ப்ப வடிவமும் கையினிற் கயிறும் கோலும் மத்திகையும் தரித்து, அச்வபாலன்போ

லும் வந்தவன் யாவனோவென்று, அந்த அச்வாதிகாரி நினைத்து, அருகினில் வந்து, "ஆர் கொலோ நீ" என்று வினவினன். "நான் பாண்டவர் தம்முள் நகுல மன்னவர்க்கு பரிமாச் செலுத்தும் பண்பினி லிருந்தவன். குதிரைகள் குறிகள் முதலிய தேர்ந்த அவர் தமக்கு அன்பினிற் சிறந்தேன். அவர் இப்போது அஞ்ஞாத வாஸத்துக்காக என்னைப் பிரிந்தகன்றார். நானும் தனி நின்றவன் ஆனேன். அச்வங்களின் வடிவும், குணமும், சுழிகளும், ஒளியும், நிறமும், மணமும், குரலும், கதியும், நிலமும், வயதும், நோயும், மருந்தும் நன்குணர்ந்தறிவேன். மண்டலம் வீதி கோணம் முதலிய குதிரைகளைவிடும் தொழிலில் வல்லேன். தேர் செலுத்தும் திறமும் உணர்வேன். என் பெயர் தாமக்கிரந்தி யென்பார்கள். இந்நகர் மன்னர்தம்பெயர் கேட்டு இங்கிருந்து சிலகாலம் வாழலாமென வந்தேன்" என்றான். அசுவபதியும் அன்புடனேற்று, அரசன் தன் அநுமதி பெற்று, அந்நகர்க் குதிரையனைத்திலுக்கும் அதிபதியாக அமர்த்திக் கொண்டனன்.

பாண்டு மைந்தரி லிளையோன்; ஆனல் பாரின் மைந்தரில் இளையான். பக்தியிற் சிறந்தான்; பண்புடன் பிறந்தான். மகதேவர் விரும்பும் சகதேவன் என்பான், தன்னருட் குணத்தைத் தக்கதாக்கொண்டு, கோபால கிருஷ்ணனை மனத்திடைக்கொண்ட பான்மையினல், அக்கோபலகன் உருவமே தனக்குத் தகுமெனக்கொண்டு, இடையர்தம் வடிவினை யேற்றுத் திரௌபதி மகிழக் கையினிற் கோலும் மெய்யினிற் கம்பளமும் காதினிற் குழையும் கோதிலா மொழியும் கொண்டு, நடந்துபோய் விராடனது அவையினைச் சேர்ந்து மாதவர்ப் பணிந்து மன்னனை வணங்கி வாய்புதைத்திருந்தான். கங்கர், அவனைப் பார்த்து, "யாவன் நீ" என்றார். "மாபெருஞ் சூதில் மாநிலமிழந்து காடுறை வாழ்விற் கழித்த

பேரரசர், பாண்டுவின் மைந்தர் ஐவரில் இளையோன். சகா தேவ வள்ளலிடமிருந்த கோக்களைக் காக்கும் கோபாலன். என் பெயர் தந்திரிபாலன். மன்னவர் ஐவரும் மறை வாழ்வு கருதி மறைந்தனர் போனார்; என்ன செய்வேன் இவ்விடம் வந்தேன். கோக்களை வளர்ப்பேன் ஆக்களை யணைப்பேன்; பால் மிகும் பண்பும் பயன்தரும் வகையும் சால்புற அறி வேன். முரண்படும் பெற்றம் திறம்பட அடக்கி நலமுறச் செய்வேன். நானிலமதனில், என்வழி யடங்காக் காளைகள் இல்லை என்னவே சொல்வேன். குழலினை யூதிக் கோக் களைக் கூட்டுவேன்; பிரிப்பேன். மழவிளங் கன்றுகள் தாயினைக் கண்டாங்கு தழுவுறச் செய்வேன்; மச்ச நாடெங் கும் மிச்சமாம் பசுக்கள் என்றுரை கேட்டு இங்கு நான் வந்தேன்'' என்றனன். மன்னனும் மாதவர் அநுமதி கொண்டு, "ஆநிரைகட்கு அதிபதியிவனே'' என்று அன் புடனேற்று அவ்வதிகாரமும் வழங்கி, பரிசுகள் நல்கிப் பாங் குற அனுப்பினான்.

யாவரும் ஏகிட யாகமங்கைதான் தனிப்பட இருந் தாள். வேண்டிய உருவம் விதிப்படி கொள்ளும் விரகு மிக்கு உடையவள். பாண்டவர் ஐவருக்கும் ஆண்டுக்கோர் உருவம்கொண்டு அணிந்திருந்த பழக்கமுடையவள்; ஆதலி னால், திரௌபதியும் விரைவினில் ஒரு பணிப்பெண் உருவம் படைத்துக்கொண்டிருந்தாள். நாணமும் மடனும் மான மும் மகிழ்ச்சியும் கண்ணிய குணமும் நுண்ணிய இடையும் தாமரை விழியும் ஆமுரை மொழியும் அன்னமென் நடையும் சொர்ணமென் பொலியும் இயற்கையிற் பொருந்தி இறைவ னுடைய தேவி யிருக்கும் அந்தப்புரம் சேர்ந்து, கோமகளைக் கண்டு குவிந்த கைகளுடன் கோமுறை வணங்கி நின்றாள். அப்பணிப்பெண்ணை அருகு அழையுங்கள் என்று அநுமதி

செய்து அருகழைத்து, உபசாரத்துடன் அருகிருத்தி "நீ யாவள் அம்மை?" என்று அன்புடன் வினவினுள் அரசி. பணிப்பெண்ணும் பணிவுடன்சொல்வாள். "மாயைபுரி சகுனி சூதினல் மாநிலமிழந்த மன்னவர் ஐவர்க்கும் பத்தினியான திரௌபதியிடமிருந்தேன். என்பெயர் விரதசாரிணி. கானகத்திடையும் என்னைக் கைவிடாதிருந்தார். மறைந்துறை வாழ்க்கையாற் பிரிந்தோம். அவர் வெளிப்படும் வரை யானும் நல்லிடமிருந்து கழித்துப்போதல் கருதினேன். பூசுவன சுற்றுவன பூண்பன முடிப்பன, இவற்றை அழகுற அமைப்பேன். கௌரவமான தொழிலினில் அவர்கள் என் பணி கொண்டு காத்தார்கள். அப்பணியே விரும்பி யிவ்விடம் வந்தேன். என்னை யன்புடனேற்றுப் பண்புடன் காத்துப் பணியினைப் பணித்து ஆதரவு அளிப்பீர்களா?" என்ருள். 'ஆம்' என அரசி அவளை யேற்று ஆதரவும் அளித்து, அந்தப்புரத்தில் உயர்தரப் பணிப்பெண்களில் உயர்வுடை மதிப்பில் இருத்தி, "இன்னம் நீ வேண்டுவன என்ன?" என்றனள். "தாயே! நான் எந்தம் மனையில் இளம்பருவ நாளில் கந்தருவர் காவல்புரி கற்புடையவள்; ஆண்களென்பார் யாவரையும் நோக்கேன்; என் கற்புடன் என்னையும் காக்க வேண்டுகிறேன்" என்று சொன்னுள். "நீ கவலைப் படாதே. என் உயிர்போல உன்னையும் காப்பாற்றுவேன்" என்று சொல்லித் தன்னருகிலேயே எப்போது மிருக்கும் ஒரு கௌரவப் பணிப்பெண்ணுக அமர்த்திக்கொண்டாள். அவளைத் தாய்போலவே கருத, அரசி, தான் எது செய்வதாயினும் விரதசாரிணியின் சம்மதியின்பேரிலேயே செய்யக் கூடிய அளவு அன்பும் ஆதரவும் காட்டி வந்தாள்.

ஐவரும் அணங்கரசியும் போய்ச் சேர்ந்தபின் அந்நாடும் நகரங்களும் வளப்பம் மிக ஓங்கி பெருந் திருவுடன் பெருகி

வந்தது. யானை முதலிய சேனைகளும் செழித்தோங்கின. எவ்விளையும் குன்றாமல் ஒன்றுக்கு நாறாக ஓங்கி வந்தன. ஐவர்களும் அந்நகர்போய்ச் சேர்ந்தபின் நிகழ்ந்த செய லுரைப்பாம்,

---

மற்போர்ச்சருக்கம்

“சயம்படு மனத்தனுய கண்ணிலா வரசன் மைந்தன்
வயம்பட நினைந்து கங்குல் வகுத்ததோர் சூழ்ச்சி தன்னால்
பயப்படு மல்லரோடு பாதல மடிய நீண்ட
சயம்படு கமலத்தாளென் தலைமிசை பகல்கிலாவே”

நள்ளிருளில் வெண்மதி தோன்றினதுபோல அவ்விராட நகரில் அவர்கள் வாழ்ந்து வருநாளில், “வலிய மற்போருக் கொருவன் யானே” என்னும் விருதுடன் வாசவ னென்போனொருவன் வந்தான். வந்தவன், பெருத்த தலை யும் உரத்த தோள்களும் கறுத்த மீசையும் பருத்த மார் பும் விருத்த வயிறும் கொண்டு தேர்மீது வந்து, அர சற்கறிவித்துத் “தன்னோடு மற்போர் புரியும் மல்லர்களுளரா னால், நாளை அரசனவையிற் போய் வீரங்காட்ட வேண்டு கிறேன்” என்ன சொன்னான். அரசனும் சம்மதித்தான்.

அரண்மனையில், மற்கூடத் தலைவர்களாகி உண்டு கொழுத்துத் திரியும் மல் வீரர்கள் பலர்க்கு இம்மாற்றம் தெரிவித்து மன்னன், “நாளை நம்மவையில், விருதுடை வாசவனென்னும் மற்போரரசனுடன் மலைந்திடல் வேண் டும்” என்று அறிக்கை செய்தான். இது நகர மெங்கணும் எட்டிற்று. மறுநாள் அதற்குரிய இடமும் ஜனஸமுதாய வசதியும் அமைத்து வைத்தார்கள். பெருந்திரள் குழுமி

நின்றது. உள்ளே மல்லர் யாவரும் சல்லடம் கட்டி மல்லி னுக்குகன்று வந்து நிறைந்தார்கள். வாசவ மல்லன் வரவை யெதிர்பார்த்திருந்தார்கள். கூட்டத்தின் ஆரவாரம் அடக்க முடியாமலிருந்தது. வாசவ மல்லனும் வந்து சேர்ந்தான். மலைமேல் வேறொரு மலை வருவது போலத் தேரின் மேலேறி வந்தான். கண்டவுடன் ஜனக் கூட்டம் அமைதியடைந்தது. மன்னனும் கங்கரும் வரும் வரவை யெதிர் பார்த்திருந்தார் கள். அவர் வந்தவுடனே, மற்போர் தொடங்கிற்று. ஊர் மல்லரை வாசவப் பேர் மல்லன் உருத்து நோக்கினன். அவர்களைக் கொதுகென நினைத்தான். ஜனங்களும், வாச வனே வெற்றி பெறுவானென நினைத்துக் கலங்கினர்கள். மல் நூலிற் சொன்ன வகை யெல்லாம் சில காலம் நடத்திக் காட்டினர். பின்னர் ஒவ்வொருவரையும் அதிசுலபமாகவும் அலக்ஷ்யமாகவும் வென்றும் கொன்றும் வீழ்த்தி விட்டான். அநேகமாக உள்ளூர் மல்லரெல்லோரும் ஒழிந்து பட்டனர். வாசவன் கர்வித்துத் தோள்கொட்டியார்த்து நின்றான். மன் னன் வாசவனுக்குப் பரிசுகள் உதவிச் சில நாட்கள் தங்கி யிருக்கச் சொன்னன். கூட்டம் கலைந்தது. ஜனங்கட்குள் உத்ஸாகமிருந்த தானலும், வெளி மல்லன் வெற்றியுடன் திரும்புவதா என்னும் வெறுப்பும் உள்ளூர இருந்தது; என் செய்வர்; ஒன்றும் பேசாது திரும்பினர்.

மறுநாள், சபையில், மன்னன் வாசவனது தோளாற் றலை வியந்தபோது, கங்கர், "அந்த மல்லனை வெல்வான் இவ் வுலகத்திலேயே ஒருவன் தானுளன்; அவனும் எங்கும் தூரத்திலில்லை; நம் நாட்டிடையே, நம் நகரத்திடையே நமது அரண்மனையிலேயே இருக்கிறன்; ஆனல் மடைத்தொழிலில் இருக்கின்றன்; அவன்தான் 'மடைத் தொழிலுடன் மல் தொழிலுஞ் செய்வேன்' என்று நம் மரண்மனைக்கு வந்து

சேர்ந்த பலாயனன். அவனது மற்போரை நான் பலமுறை கண்டிருக்கிறேன். வீமன் இவனை மற்போருக் கென்றே வைத்திருந்தான். அவனையும் வாசவனையும் பொருத விடலாம்'' என்று சொன்னார். மன்னனும் பலாயனனை யழைத்துச் சம்மதங் கேட்டான். அவன் "ஆம்'' என்று ஒப்புக் கொண்டான். விளம்பரமுஞ் செய்தார்கள்.

அடுத்த நாள், அக்களம் அமர்க்களம் போலாயிற்று. முன்னிலும் பன்மடங்கு திரளிருந்தது. பலாயனனுடன் மன்னனும் கங்கரும் வந்திருந்தார்கள். வாசவனுக்குச் சொல்லியனுப்பினார்கள். அவன் மிகக் கம்பீரத்துடன் அதிகர்வத்துடன் வந்து சேர்ந்தான். ஜனங்கள் சிலர் மகிழ்ந்தார். சிலர் வெறுத்தார். சிலர் உருத்தார். மற்போர் தொடங்கிற்று. உதய கிரியும் அஸ்த கிரியும் பொருவதுபோலிருந்தது. மல் நூலில் இருவரும் தேர்ந்தவராதலினால், மல் நூலை முறைப்படி நடத்திக் காட்டினார்கள். இருவரும் கறுக் கொண்டு போர் செய்ய ஆரம்பித்தார்கள்.

> "தத்தியும் தோளுந் தோளுந் தாக்கியும் சென்னி கொண்டு
> மொத்தியும் பற்பல்சாரி முடுகியும் வயிரக் கையாற்
> குத்தியும் காலும் காலும் கோத்தும மற்கூறு தோன்ற
> ஒத்தியும் பாறையென்ன உரனுடனுரங்கள் சேர்த்தும்"

ஒருவருக் கொருவர் மேலாம் வீரங்காட்டி நெடுநேரம் பொருதார்கள். வெற்றி தோல்வி காணாமலே இருந்தது. நேற்று வெறுத்தவரெல்லாம் இன்றுக்களித்தனர்; நேற்றுப்பயந்தவர் இன்று உரம் கொண்டு உவகை காட்டினர். வாசவனுக்குமேலொரு வல்லவனும் இருக்கின்றான்; அவனும் நம் நகரிலேயே அரண்மனையிலிருக்கின்றானென மகிழ்ந்தார்கள். பலாயனன் பிடிக்கும் போதெல்லாம் வீரவாசகங்கள் பேசி உத்ஸாகம்

மூட்டினர். வாசவனுக்கு உக்ரமும் கோபமும் அதிகரித்தது. உண்மைப் போருக்காகவே உடன்று நின்றான். இருவரும் உண்மைப் போரில்,

‘உதைத்தனர் வீசிவன் போடுரங்கொடு கரங்களெற்றிப்
புதைத்தனர் விரல்கள் மெய்யிற் புருவமு மூக்கும் வாயும்
இதைத்தனர் புயங்களென்னும் சிலம்புகள் தாக்கத் தாக்கப்
பதைத்தனர் ஓடிஓடிப்பற்றினர் மீள மீள”

இங்ஙனம் கடும்போர் செய்து வரும்போது, பலாயனன் சமயம் பார்த்து வாசவனுக்கு வலியழியுமாறு போக்குகள் பல நாட்டி யவனுக்கு ஏமாற்றங் காட்டிப் பெருங் கோபத்தை மூட்டி அதனால் அவன் உடல் வலியை வாட்டினான். இப்படிப்போர் புரிந்து நின்ற போது, பலாயனனது தொடைகளிரண்டும் வாசவனது இடையை யிறுகப்பிடித்தன. இரண்டுகைகளும் வாசவனது கழுத்தைப்பற்றி யழுத்தி நொறுக்கின. வலியொடுங்கிய வாசவன் வாய்திறந் தலறிக் கொண்டு மண் மீது வீழ்ந்தான். ஏதோ பேசவாய் திறந்தான். பலாயனன் அவனது வாயைப்பிடித்து அழுத்திவிட்டான். வாசவன் மாண்டேபோனான். வெற்றி பெற்ற பலாயனன் தோள் தட்டி நின்றான். ஜனத்திரளில் ஆச்சரியப்படாதவர் இல்லை. இறக்கும் போது வாசவன் என்ன சொல்ல நினைத்தானென்பது விளங்காமலே போயிற்று. இதிற் சிலர் ஐயங் கொண்டும் உண்மை தோன்றாது சென்றனர். பலாயனனுக்கு மன்னன் மற்போரரசன் என்னும் விருதும் மன்னர்க்குரிய பரிசு மளித்து இனி எப்போதும் தனக்கெதிரில் மன்னவையிலேயே இருந்து வாழும்படி அநுமதியும் அளித்தான். அன்று முதல் பலாயனன் என்றால் பயப்படாதாரில ராயினர்.

கீசகன் வதைச் சருக்கம்.

"அராவணை துறந்து போந்தன்றசோதை கணகளிப்ப நீடு
தராதலம் விளங்க வெண்ணெய்த்தாழி சூழ்தா நின்றாடி
முராமணம் கமழுங் கூந்தல் கோவியர் குரவை கொண்ட
புராதன்னதனையே யேத்தும் புனிதர்தாள் போற்றி செய்வாம்"

விரதசாரிணியைக் கீசகன் காணல்.

விராட மன்னனது பட்டமஹிஷியான சுதேட்சணா தேவிக்குத் துணைவர் நூற்றுநான்கு பேருளர்; அவர்தம்மில் கீசகன் என்பன் மூத்தவன்: இவன் விராட நகர்ச் சேனையின் நாயகர்கட் கெல்லாம் தலைவன்; கீசகனது ஆண்மையினாலும் ஆற்றலினாலுமே விராடன் ஒரு மன்னனாக நிலைத்திருக்கிறான். விராடன் அறிவாளி வள்ளல்; ஆனாலும் ஆண்மையும் திறலும் அத்துணையதிகம் பொருந்தினவன் அல்லன்; ஆகையால் சேனைகளை யெல்லாம் தன் கைக்குள் அமர்த்திக் கீசகன் மச்சநாட்டைக் காத்து வருகின்றான். கீசகன் அழகும் வீரமும் பொருந்தியவன். அடிக்கடி வெளியிற் சென்று பிற மன்னரோடு போர் செய்து, மச்சநாட்டைப் பெருக்கிக் கொண்டிருக்கிறான். பாண்டவரும் பாஞ்சாலியும் மாறுவேடம் பூண்டு மன்னன் அவையிலும் மடைப்பள்ளியிலும் பிற இடங்களிலும் போய்ச் சேர்ந்த போது கீசகன் நகரிலில்லை; எங்கோ திக்விஜயத்துக்குச் சென்றிருந்தான் போலும்.

கீசகன் நகர் வந்து சேர்ந்த அன்று தனது தமக்கை சுதேட்சணையைக் கண்டு வணங்கித் தன்னரண்மனைக்குத் திரும்பும்போது பூங்காவின் வழியே போனான். அப்போது விதிவசமாகப் பூக்கொய்யும் பொருட்டு அரசியால் அனுப்பப்பெற்று விரதசாரிணி மலர் கொய்து கொண்டிருந்தாள். கண்டான்மங்கையைக் கீசகன். காதல்கொண்டான். அருகுநின்ற

தாதியர்மூலம், அவள் இன்னளென்று தெரிந்துகொண்டான். தன்னதிகாரம் தனிச்செலுத்தும் தன்மையனுகையினுலும், தடுக்கொணுக் காமுகனுகையினுலும், ஏதும் அச்சமின்றி விரதசாரிணியி னருகேவந்து, வணங்கி வினயத்துடன், தன்னை யணையும்படி வேண்டி நின்றான்.

"பேதாய்! மன்னனுக்கு மைத்துனன் நீ யென்பது அறிந்தேன். மன்னன் புகழும் அரசும் கெடுமாறு ஏன் நினைந்தாய் நீ! அறிவும் வயதும் பெருத்த நீ, மற்றொருவன் தாரத்தை யிச்சித்தல் தகாதென உணர்ந்திலைபோலும்! மன்மத பாணத்தா லழிந்து போவதானுலும், உயர்குடிப் பிறந்தோர் பிறர்தாரத்தை விரும்புவரோ? தகாது; இதனையொழித்திடு நீ. என்னைக் காப்பவர் என்னுடை யுயிர் நேயராகிய கந்தர்வர் ஐவர். அவர் இங்கும் எங்கும் ஸஞ்சரித்திருப்பவர்; என் அருகு வருவாயெனில், அவர்களால் நீ அழிந்து படுவது நிச்சயமாகும்; தீதாம் காதலை யொழித்து, உன்னையும் உன்குலத்தையும் காத்துக்கொள்" என்று சொன்னாள் விரதசாரிணி.

வலியும் கர்வமும் உடையார்க்குத் தமது புத்தியே மந்திரியல்லால், ஏனையோர்கூறும் மதியுரைகள் செவிப்புலன் நுழையா; கெட்டொழிந்தே போவர். அதுபோல், கீசகனும் பேதைசொல்லை வாங்காதவனுகிக் காதல்நோய் தலைக்கேறிடத் தடுமாற்ற மடைந்து, அருகு சேர்ந்து பிடிக்க வந்தனன். விரதசாரிணி, அரசியைக் கூவியழைத்துக் கொண்டே அரசியின் அந்தப்புரத்துக் கோடினுள். மெய்ந்நடுங்கி உடல் குறுகி கண் சுழன்று கைகால் பதறி யரசியை நோக்கி, "தாயே! நான் விரதசாரிணி யென்றும் என்னைக் காப்பவர் ஐந்து கந்தருவர் என்றும், ஆண்களைக் காணக் கூடாதென்றும் சொல்லியிருந்தேனே; அதோ தங்கள் சோதரன் என்னைக் கண்டு,

பின்பற்றி வருகிறார்; பாருங்கள்; நெறிதப்பினல், கந்தர்வர்களால் அவருயிரும் உங்கள் அரசும்போ யொழியும்'' என்றனள். அரசி தன்னருகு வந்த தன் சோதரனை முனிந்து, விரதசாரிணியை மறைத்து அவனை யரண்மனைக்கு அனுப்பினுள்.

கீசகன் காமநோய்

தனது அரண்மனைக்குப் போனபின்பு, கீசகன் விரதசாரிணியின்மேல் வைத்த காதல்மீறி, எங்கும் அவளையே உருவெளித் தோற்றத்திற் கண்டு, தேகமெல்லாம் வெப்பு நோய் மிகுந்து பிதற்றிக்கொண் டிருந்தான். அவனுக்குப் பாலுணவு விஷம்போலாயிற்று. மலரணை நெருப்பணையாயது. சந்தனக்குழம்பு அக்கினிக் குழம்பா யிருந்தது. இப்படி மருந்தாக நினைத்துச் செய்யும் உபசாரங்கள் எல்லாம் மாருக நோய் மிகுந்து, தீயில் வீழ்ந்த புழுப்போலத் தவித்துக் கொண் டிருந்தான். அந்த இரவெல்லாம் அவன் பட்டபாடு அவனல்லாமல் வேறு எவராலும் எடுத்துச் சொல்லமுடியாது. அவனுக்கு இரவெல்லாம் நூற்றுக் கணக்கில் தாதியர் இருந்து உபசாரம் செய்தார்கள். அவர்கள் உபசாரம்,மேலும் அவனுக்கு நோயையே அதிகப் படுத்தின. இரவெல்லாம் "ஏ! விரதசாரிணி!!'' என்னும் கூக்குரலும், அவளைக் கண்டதுபோல் எழுந்து கட்டியணைந்து ஏமாறிப்போய்க் கிழ் வீழ்ந்து அழலுமே யல்லாமல் வேறொன்றுமில்லை. அதனல் தாதிமார்கள் அலுத்துப்போய்ப் பொழுது விடிந்தவுடன் மகாராணியிடம் வந்து கூடினர்கள்.

"தாயே! தங்கள் அருமைச் சகோதரர்க்கு வந்திருக்கும் நோய் சாதாரண நோயல்ல; அதற்கு வேறு மருந்தேனும் மாறேனும் பரிகாரமேனும் தேடுதலிற்பயனில்லை. அதற்குரிய

மருந்து ஒன்றேதான். அதனைத் தக்ஷணம் அனுப்பித் தாரமற்போனால், இன்றிரவு அவருடலில் உயிர் தங்கி நிற்குமென்றெண்ணுதற் கிடமில்லை. அவருக்குப் பொருளெல்லாம் விரதசாரிணியாகவே காணப்படுகின்றன ; பேரெல்லாம் விரதசாரிணியின் பெயரேதான்: சந்தனம் மலர் பனிநீர் சீதளச் சந்திரன் முதலிய உபசாரங்கள் வெப்பு நோயை அதிகரிக்கச் செய்துவிட்டன ; அவ்வண்ணமகளைக் காண்பது போல் அடிக்கடி எழுந்து, கட்டியணைந்து ஏமாற்றமடைந்து விழ்ந்து மேலெல்லாம் புண்ணாக்கிக்கொண்டார் அல்லாமல் வேறு ஒன்றும் செய்திலர் ; ஆகையால், அந்த விரதசாரிணியும் ஒரு வண்ணமகள்தானே ; அவர்க்குரிய மருந்தாகிய அந்த விரதசாரிணியை யெங்ஙனமேனும் அவரிட மனுப்பிக் கண்ணொருமுறை காணும்படியாகச் செய்தாலும் உயிரை உடலில் தங்கவைக்கலாம் ; இல்லை யென்றால் அவர் இறந்துபடுவார் ; தங்களுடைய வாழ்வும் அரசும் அவரது ஆண்மையினாலும் ஆற்றலினாலுமே நிலைத்திருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலே நாங்கள் ஒன்றும் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை" என்று வெகு நயமாக மகாராணிக்குச் சொன்னார்கள்.

சுதீட்சணை சூழ்ச்சி

என்செய்வாள் ? மகாராணி. செல்வமும் வாழ்வும் சிறப்பும் மேன்மையும் எல்லாம் அவனாலே என்பதும் உண்மை. அவனழிந்தால் அன்றே பகைவர் எல்லாவற்றையும் அபகரித்திடுவர் என்பதும் உண்மையே. செல்வம் அழியப் பார்த்திருப்பது பெண் இயற்கையன்று ; எது அழியினும் விட்டுக் கொடுத்துச் செல்வத்தைப் போற்றுவதே முக்யமாகக் கொள்வது சாதாரணப் பெண்ணியற்கை. விரத

சாரிணி பதிவிரதம் பூண்டிருக்கின்றுளென்பதும் திண்மை; அவளை யொரு அன்னியன் தீண்டினுல், அவளது காவற் கடவுளர்களாகிய கந்தர்வர் ஐவரால் அவன் மாண்டொழி வான் என்பதும் திண்மையே. விரதசாரிணியின் கற்புக் கெட்டாலல்லாமல், கீசகனது நோய் கெடாதென்பது உறுதி; அவன் விரத சாரிணியைத் தொட்டவுடனே அழிந்து படுவானென்பதும் உறுதியே. என்ன செய்வாள் பாவம்! எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்த்து விரதசாரிணியின் கற் பும் அழியப்படாது; கீசகன் உயிரும் அழியப்படாது; தனது செல்வமும் வாழ்வும் அழியப்படாது; இதற்குத் தக்க யோசனை யென்னவென்று நினைந்தாள். கவலையுடைய வர்கள் மந்தமதிகளாக இருந்தாலும்கூட, கவலை யதிகப்பட, அக்கவலையை யொழித்துக்கொள்ளற்கு ஏதேனும் ஒரு யோசனை முடிவினில் தோன்றல் கூடும். அதனுல் வெற்றி கிடைத்தாலும் கிடைக்கலாம்; தோல்வி கிடைத்தாலும் கிடைக்கலாம்; எனினும், தற்கால சாந்தியாக அந்தக் கவலை நோயினின்றும் நீங்கிச் சிறிது தேறுதல் அடைவார்கள்; இஃது உலக இயற்கை. அதுபோல மகாராணிக்கும் ஒரு யோசனை தோன்றிற்று. அந்த யோசனைப்படியே காரியம் செய்திடத் தீர்மானித்துவிட்டாள்.

"விரதசாரிணி, எங்ஙனமிருப்பினும் நமது வண்ணப் பெண்தானே; நாமாக அவட்கு உயர்வும் கவுரவமும் உபசார மும் கொடுத்திருக்கிருேமேயன்றி, மற்றைய வண்ணப் பெண் கள்போல் ஊழியம் செய்யவேண்டிய கடமையில் உள்ளவள் தானே. மற்றைய வண்ணப் பெண்களிற் பலபேர்கள் கற்பு டையவர்கள் இல்லையா? அவர்களெல்லாரும் கொண்ட ஊழி யங்களை நிறைவேற்றிட அந்நிய புருஷர்களைக் காண்ப தில்லையா? பேசுவதில்லையா? அதனுல் அவர்கள் கற்பழிந்தார்

கள் என்று கூசாமல் சொல்லிடலாகுமா? ஆகையால், நாம் மகாராணி என்னும் பெருமையால், அவளிடம் பழம் சிற்றுண்டி முதலியன அடங்கியதொரு பொன் வட்டிலை யீந்து சகோதரனிடம் கொடுத்துவரச் செய்வோம்; அவன் இவள் முகத்தைக் கண்டவுடன் நோயின்வேகந் தணிந்திடும். பிறகு எந்த யுக்திகொண்டேனும் அவளைப் பிழைத்திடச் செய்யலாம்; இவள் வட்டிலை யவனருகு வைத்திட்டு விரைந்து வந்து விடுவளாயின், இவளது கற்புக்கும் அழிவில்லை; அவனது நோயும் சிறிது தணியும்; நமது செல்வமும் வாழ்வும் சீரிற் குலைந்திடாது" என்னும் முடிவான தீர்மானத்தைக் கொண்டனள்.

தனது தீர்மானப்படியே பொன்வட்டிலில் சிற்றுண்டிகளும் பழங்களும் ஆயத்தம் செய்து கொணரச் சொல்லித் தன் கையில் வைத்துக் கொண்டாள். விரதசாரிணியை அழைத்துத் தனியே இருத்திக் கொண்டாள். "அம்மா! விரதசாரிணி!! அரண்மனையில் கீசகன் உனது நினைவாகவே இருந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் செய்தியை நீ மற்றைய பணிப் பெண்களால் அறிந்து கொண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன்; எங்களுடைய வாழ்வுக்கும் செல்வத்துக்கும் அரசுக்கும் என் சோதரன் கீசகன் தான் துணையென்பதையும் நீ அறிவாய். அவன் எவ்விதத்திலேனும் அழிந்து படுவானானல் எங்கள் வாழ்வே முடிந்து விடும் என்பது திண்ணம். அவன் அழியாமல் நிற்றலுக்கு உனது உதவி தான் முக்யமாகவேண்டியிருக்கிறது. நீ அவனைக் காணமலிருந்தாலும் அவன் உனது காப்புக்கடவுளர்களால் அழிந்திடுவான் என்பதும் நான் அறிவேன்; இருவிதத்திலும் அவன் அழியாதிருத்தலுக்கு உன் உறுதியும் கடமையுமே இப்போது துணையாகவேண்டி யிருக்கின்

றன. எனக்குச் செய்யும் உதவியாக, என் வார்த்தையையும் மறுக்காமல், இதோ, இந்தப் பொன் வட்டிலைக் கொண்டு அவனிருப்பிடம் சென்று, அவனைக் கண்டு, அவனிடம், 'இவற்றையுன் சகோதரி யனுப்பினான்' என்று கொடுத்திட்டு உடனே திரும்பி வந்து விடு; இதனால் உன் கற்பின் அழிவிலாவது உன் காவற் கடவுளால் அவன் உயிர் சுழிவிலாவது எனக்கு எண்ணமில்லை யென்பதும், அதற்காக இந்த முயற்சியில்லை யென்பதும் நீ அறிவாய். ஆகையால், மறுக்காமல் நீ இதைச் செய்திடுவாய்'' என்று அந்தப்பொன் வட்டிலை விரதசாரிணியிடம் கொடுத்தாள்.

"தாயே! மகாராணி!! உங்கள் ஆதரவை நான் மறக்க முடியாது; உங்கள் பணியை நான் மறுக்கவும் முடியாது; ஆனாலும், எனது விரதத்தையும் என் கற்பின் உண்மையையும் என் காவலர்கள் திறத்தையும் அவர்கள் கொள்கையையும் நீங்கள் அறிவீர்கள். ஒரு காமுகனிடத்தில், அவன் காதல் கொண்ட தொரு கற்பினளை யனுப்புவது முறைக்கும் இயற்கைக்கும் பொருந்தா தென்பதை நீங்கள் அறிந்திருந்தும், உங்கள் வாழ்வு செல்வங்களை மாத்திரம் கருதி என்னை யங்குச் செல்லத் தூண்டுகிறீர்கள். இதனால், இந்தக் கணம் முதற் கொண்டு, என் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளற்கு உங்கள் துணையை நான் மறந்து விட வேண்டியதாகின்றது; ஆகையால் எனது காவலர்களாகிய அந்தக் கந்தர்வர்கள் துணை கொண்டே என்கற்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டி யிருக்கிறது. பெண்கட்குக் கற்பே பூஷணம் என்பதனைப் பெண்ணிற் பெரியவராகிய உங்கட்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமில்லை; காமுகன் குருடன் தான் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்; நான் போகுமிடம் அவனன்றி மற்றோர் ஆண் துணையில்லாத இடமென்பதும்

நன்கு உணர்ந்திருக்கிறீர்கள். உங்கள் எண்ணத்துக்கு மாருக வும், நான் செல்லும் பணிக்குமாருகவும் அவன் நடந்து கொள்வானுயின், அவன் அழிந்துமாய்வான் என்பதை நிச்சய மாய் உணர்ந்துகொள்ளுங்கள். துணையற்ற அபலை நான் உங்களைத் துணையாகப் பற்றினேன். இப்போது அத்துணை யும் போய்விட்டது; நீங்கள் இடும் கட்டளையை நிறை வேற்றவேண்டிய கடமையையும் உடையேன். கடமையை இதோ செய்கிறேன். எக்கடமை எப்படி யிருப்பினும் என்னையும் என் கற்பையும் காத்துக்கொள்ள எனக்கு உரிமை யுண்டு; வருவது வந்தேதீரும்; விதியை யாவர் விலக்கவல் லார்கள். இதோ போகின்றேன்'' என்று சொல்லிக் கண் களில் தாரை தாரையாக நீரைப் பெருக்கிக்கொண்டு, மெது வாக அச்சத்துடன் நடந்துபோனுள்.

இத்துணையும் கேட்ட அரசி, இருதலைக் கொள்ளியி லுள்ள எறும்பைப்போல், ஒன்றும் செய்யத் தோன்ருது பிரமித்து நின்று, “இவள் யாரோ உத்தமி; உயர்தர மாதரசி யாகவே இருத்தல் வேண்டும்; வெளியில் நமக்குத் தோன்று மாறு ஒரு சாதாரணமான பணிப்பெண் அல்லள்; ஏதோ காரணுர்த்தம் மாறுவேடத்தில் மறைந்து வாழ்கின்ருள்போ லிருக்கின்றது.'' என்று எண்ணிக்கொண்டாளல்லாமல் விரத சாரிணியை நிறுத்த இஷ்டப்பட்டாளல்லள்.

விரதசாரிணி கீசகனிருப்பிடம் செல்லல்

பட்டாரணியும் விரதசாரணியும், இவ்வண்ணம் வெகு நேரம் வாதம் செய்துக்கொண்டிருந்தபடியால் வெகு நேரம் கழிந்து போய் இரவும் விடியும் நேரமாயிற்று. முடிவில் விரதசாரிணி அந்தப் பொன்வட்டிலைக் கையிலேந்திக் கொண்டு, கண்ணும் கண்ணிருமாகப் புறப்பட்டபோது,



கீசகனது அக்கிரமச் செயல்களை யாவர்க்கும் அறிவிப்பான் போல, சூரியன் உதயகிரியில் வந்து தோன்றி, யாவர் கண்களையும் மலரவைத்தான். கண்ட விரதசாரிணி "ஆதித்திய தேவனே! உன்னையும் சந்திரனையும் தலைவர்களாகப் பெற்றுள்ள உங்கள்குலத் தரசர்களுடைய ஒழுக்கத்தைப் பார்த்து உன்னாலும் சகிக்க முடிகின்றதா என்பதை நீயே கவனித்துக்கொள்; இரவில் அடைந்திருக்கும் எல்லா உயிர்களினுடைய இருளாகிய இடரை நீக்குவாய்போல எனக்கு நேர்ந்திருக்கும் இடரை நீக்குதற்கென்றே வெளிப்பட்டாயாகில், உன்னை நான் வணங்குகிறேன். நீ சாக்ஷியாயிருந்து, என்னை முற்றும் காப்பாற்றுவது உன் கடமையாகும்" என்று துதித்திறைஞ்சிப் போனுள். மெள்ள மெள்ளக் கீசகனது அரண்மனை வாயிலை நண்ணினுள்.

அப்போதும், அப்பாதகன், இரவு முற்றும் நித்திரையில்லாது கலங்கி வருந்தி விரதசாரிணி நினைவாகவே இருந்து எங்கும் விரதசாரிணியின் உருவத்தையே கண்டவனாகப் பிதற்றிக்கொண் டிருந்தான். பல மாதர்கள் சுற்றும் நின்று உபசரித்துக்கொண் டிருந்தார்கள். அவ்வுபசாரங்களெல்லாம் அவனுக்கு அபசாரங்களாகவே இருந்தன. பணிப்பெண்களைக் கோபித்துக் கொண்டிருந்தான். காம நோய் மேன்மேலும் பெருகி வருத்தவே, எங்கும் நோக்கிக் கொண் டிருந்தபோது, ஒரு பக்கம், தன் மனத்தினளாகிய உரு வெளியில் தோன்றிக்கொண் டிருந்தவளாகிய விரதசாரிணி, தன் எதிரில் நிற்கக்கண்டான்; கண்களை மலரவிழித்து,

"வந்தனள் என்னுடை மாதவப் பயன்
வந்தனள் என்னுடை வழிபடுந் தெய்வம்
வந்தனள் என்னுடை ஆவி வாழ்வுற
வந்தனள் என்னுடை வண்ண மங்கையே."

என்று சொல்லிக் கொண்டே, அமளி விட்டெழுந்து, வழியிலிருந்த மாதர்களையெல்லாரையும் தள்ளிக்கொண்டு, இரண்டு கைகளையும் அகல விரித்துத் தழுவுவான்போல, எதிரிற் சென்று,

"வருகநீ அருகுற மதுர வாசகம்
தருகநீ இருசெவி தழைக்க உள்ளநின்
றுருகநீ தழுவுக உடலம் தேமுறப்
பருகநீ வழங்குக பவள வாயெனு"ப்,

பிதற்றல்களுடன் மேல் விளைவு நோக்கும் அறிவில்லாதவனாகி ஓடி வந்தனன். அவன் ஓடிவருதலைக் கண்டு உள்ளம் கலங்கி மெய் நடுங்கி அவளும் திரும்பியோடிப் போய் காவலனாகிய அரசனும் மந்திரியரும் கங்கவேதியரும் பலாயனப் பெருந் திறலோனும் வீற்றிருந்தருளும் அரசனது சபை சேர்ந்து வாடிய கொடியைப் போல் கதறி வீழ்ந்தனள். காமத்துக்குக் கண்ணில்லை யாதலால் கீசகன் குருடனாகவே சபையிலிருப்பார் யாவரையும் நோக்காதவனாகித் தொடர்ந்துபோய் அச்சமில்லாமல் அவளைத்தன் கையினால் தீண்ட எண்ணினான். அப்போது "ஒரு கந்திருவன் இவ்வக்கிரமச்செயலைக் காட்ட மற்றொரு கந்திருவன் விரைவினில் ஓடி வந்து அந்தப் பாதகனை யப்புறம் தள்ளினான்'' என்றெண்ணும்படிச் சூரியன் ஒளி கொடுத்துக் காட்ட வாயுதேவன் பெருங்காற்றாக வந்து கீசகனை வேறொரு இடத்தில் தள்ளிவிட்டான். தள்ளாடித்தள்ளாடி ஓடி வந்த கீசகன் மற்றொரு இடத்தில் வீழ்ந்து, பிறகு கண்ணும் மனமுந் திறந்து சபையோரைப்பார்த்து, வெட்கினவன் போல் தன்னிருப்பிடந் திரும்பினான்.

அவையோர் செயல்.

அழுது கொண்டு ஓடி வந்து அவையில் வீழ்ந்த விரதசாரிணியையும், அவளைத் தொடர்ந்து ஓடி வந்து, வெறியன்

போல் தள்ளாடி வந்து வேறொரு புறத்தில் உருண்டு வீழ்ந்த கீசகனையும் கண்ட பலாயனன் மிகு கோபங்கொண்டு ஆயுதம் வேறு பெறுதவனாகி அருகில் நின்றதொரு மாமரத்தைப் பறித்து எறிய மனங்கொண்டு அதனைப் பறித்தெடுக்கப் போனான். அப்போது கங்கர், "அடா! பலாயனா!! இது தழைத்துக் கிளையுடன் ஓங்கிய பசுமரம். இதுவிறகுக்காகாது; நன்றாய் எரியாது; ஆதலின் சமையல் விரைவில் ஆகாது; வனத்துக் கருகிற் சென்றால் காய்ந்த கட்டைகள் உண்டு; நெருப்பு நன்றாய்ப் பற்றும்; உன் எண்ணத்தையும் முடித்துக்கொள்ளலாம்" என்றார். அவன் அதனைக் குறிப்பின் உணர்ந்து உள்ளடங்கிப் பொறுத்து நின்றான். வீழ்ந்த கீசகன், வெட்கி யோடிவிட்டான். விரதசாரிணி, மன்னனைப் பார்த்து, "மன்னரரே! வேதியரே!! சபையோர்களே!!! அரசனது தேவியினிடம் அன்புடைத் தோழியாய் அமைந்துள்ளேன், யான்; இவ்வரசனது அரண்மனையே எனது கற்புக்கும் அரண்மனையாகுமென் றெண்ணிப் புகுந்துள்ளேன். என் பெரும் வினையின் பயன்போல், இன்று, இவ்வரசன் மைத்துனன், தனது புயவலியின் கர்வத்தினால் என்னைத் தழுவிப் பின்தொடர்ந்தான்; நான் வேறு துணை காணாமல், இவ்வரசவையில் வந்து வீழ்ந்து அடைக்கலம் புகுந்தேன்; இவ்வுண்மைகளைக் கண்ணாரக்கண்டும், பாதகன் தூர்த்திவந்த துணர்ந்தும் அரசனாவது சபையோராவது ஒன்றும் பேசாதிருந்துவிட்டீர்கள்; இது தருமமா? நீதியா? மரபா? இப்படி யரசு நடத்தினால் செங்கோல் வழுவி யாட்சி அழிந்து படாதோ?" என்று சொல்லிப் புலம்பிக் கொண்டு, திரும்பிப்போய், மாலைமாலையான கண்ணீர்ப் பெருக்குடன், மகாராணி பாதம் சேர்ந்தனள். கங்கவேதியர், மன்னனைப் பார்த்து, "அரசே!

"பூதலம் ஆண்மையால் புரக்கும் மன்னவர்
தீதொழில் புரிஞரைத் தண்டியார் எனில்
நீதியும் செல்வமும் நிலைபெறுங் கொலோ
எதிலர் தமரென இரண்டு பார்ப்பரோ?"

"யாருமில் ஒருத்தியின் இல்லில் வைகினுல்
ஆர்வமுற் றவள்வயின் அன்பு கூர்வது
வீரமோ தர்மமோ விருப்பமோ இவை
பூரியர் அலாதவர் புரிதல் போதுமோ?"

பூமியைத் தமது ஆண்மையைத் துணையாகக் கொண்டு காத்திடும் அரசர்கள், கெடுதொழிலைச் செய்வார்களைத் தண்டியாது விடுவாராயின், நீதியும் செல்வமும் நிலைபெற்றிடுமோ? அரசர்க்கு—நீதிமன்னர்க்கு—தர்மக் காவலர்க்கு, குற்றஞ் செய்தவரைத் தம்மவர் என்று ஒரு நோக்கும் பிறர் என்று மற்றொரு நோக்கும் கொள்ளுதல் கூடுமோ? ஆருந் துணையற்ற ஒருத்தி, உனது அரண்மனையை யடைக்கலமாகக் கொண்டு, அடிமைசெய்து வாழ்வாளானல், அவள்மேல் காதல்கொண்டு தொடர்ந்து தூர்த்திவருவது வீரச் செயலாகுமா? இச்செயலைத் தாழ்ந்தவர் செய்தல் தக்கதாகுமா?" என்ன மன்னன் செவிகள் சுடச்சுடச் சொன்னார்.

வேதியர் அறிவிற் சொன்ன வார்த்தையும், விரதசாரிணி அழுது கூறிய வார்த்தையும் செவிகளிற்படவே, மன மழிந்து ஒன்றும் சொல்லத் தோன்றாதவனாகியும், அச்சத்தினல் கீசகனை யொன்றும் செய்திடத் தோன்றாதவனாகியும் எழுந்துபோய்த் தன்னிருப்பிடம் சேர்ந்தான்.

கீசகன் செயலைப் பார்த்த கண்களில் நெருப்பும் அவனைப் பிசைந்திடச் சேர்ந்த கைகளில் நெருப்பும், அஞ்ஞாதவாச காலமாகலால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்

னும் உள்ளத்தில் நெருப்பும், இவற்ருல் வெந்த தனது உடலில் நெருப்பும், இவ்வனைத்தையும் கொண்ட தன்னைத் தாங்கியிருக்கும் மண்ணில் நெருப்பும் கொண்டு, கோபத்துடன் எழுந்து பலாயனன் தன்னிருப்பிடம் சென்ருன். மற்றவரும் பிரிந்து போயினர்.

அன்று இரவு வீமனும் திரௌபதியும் ஆலோசித்தல்.

இச்செய்தி, அரண்மனை யெங்கும் பரவியது; மெள்ள மெள்ள வெளியிலும் பரவிவிட்டது; குந்திமைந்தர் ஐவரும் மனங்கொதித்துக் கண் சிவந்தார்கள். நகரமாந்தர்கள் எல்லோரும் நராதிபனை வெறுத்து வாய்சிவந்தார்கள். மன்னன் விராடன் தனது மானமழிந்தது கண்டு மனஞ் சிவந்தான். மகாராணி தனது பிறந்தக மாபு அழிந்ததெனப் பெரிதுஞ் சோர்ந்தாள்; சூரியன் என் குலமன்னரொழுக்கம் இப்படிக் கெட்டதாவென ஓடிப்போய் மேற்கு மலையைப் புகலாகக் கொண்டு மேனியெல்லாம் சிவந்து போனன். கீசகன் காமத்தாலும் நாணத்தாலும் வெந்துபோய் உள்ளேயே பதுங்கியிருந்தான்; விரதசாரிணி கோபத்தாலும் நாணத்தாலும் கொதித்து உள்ளடங்கியிருந்தாள். இரவு வெளிப்பட்டு இருள் வந்து மூடிக்கொண்டது. யாவரும் உணுக்கொண்டு உறக்கத்தில் புக்கனர். அந்தப்புரத்தில் எங்கும் ஒலியடங்கி யிருக்கிறது. விரதசாரிணிமாத்திரம் விழித்துக் கொண்டிருந்தாள். ஒளி நன்ருயடங்கி உறக்கமே எங்கும் நிலைத்துள வேளையில் மெல்ல மெல்ல நடந்து சென்று விரதசாரிணி பலாயனனிருக்குமிடம் சென்று அங்கு நித்திரை பெருமல் கலங்கியிருந்த வீமனைப் பார்த்து "வீரநாயகரே! இப்பகையை இப்போதே முடித்து எனது துன்பங்களைந்து என் மானத்தைக் காக்கவல்லவர், நீங்களல்லாமல் வேறுயாருமிலர். இவ்விரவில் நாம்

செய்ய வேண்டுவதென்ன?'' என்று சொன்னாள். அதற்கு வீமன் "கோபத்துடன் புருஷர்க்குப்பொறுமையென்பதுபூஷணமேயாயினும் அவமானம் வந்தபோதும் பொறுத்திருத்தல் ஆண்மையுடையார்க்குப் பூஷணமாகமாட்டாது; அன்றைக்குச் சூதாட்டத்தின்போது, அவமானம் பலநேர்ந்திருக்கவும்பொறு பொறு என்றுகூறி நம் மானமும் வாழ்வும் அரசும் அழித்துக் காட்டிடைப் புகுத்தினர்; இன்றைப் பகலிலும், இப்படி மானம் கெட வந்த இடத்தும் பொறு, பொறு என்று சொல்லி எமது முரண்வலியை யழித்தார். என் செய்வேன்? ஒரே பிடியில் கீசகனைக் கசக்கியிருப்பேன்'' என்றான். "வீரரே! அஞ்ஞாத வாசத்தின் நாட்களை யநேகமாகக் கழித்து விட்டோம்; இன்னம் சில நாட்களே உள்ளன; அதற்குள் யாவரேனும் கண்டு கொண்டால், மறுபடியும் வனவாசத் துயரம் வந்திடுமே என்றெண்ணி நம் தலைவர் தடுத்தார்; அதற்கு நாம் வருந்தல் வேண்டாம்; இன்னொரு பகலும் கழிந்தது; நாளை யொரு பகலும் கழிப்போம்; நாளையிரவு எங்ஙனமேனும் ஒரு யுக்தி தேடி யொழிப்போம். நீங்கள் பதறப்படாது. இரண்டு நாட்கள் கழித்து அவன் இறந்து படுவனாயின், காவற் கடவுளாகிய கந்தருவர் அவனை யழித்து விட்டார்கள் போலும் என்று உலகம் கூறும்; நம்மை உலகம் அறிந்திடாது. நமது வேலையும் முடிந்து, நமது துயரமும் முடிந்திடும்; ஆகையால் நமது காரியத்தை நாளையிரவு வைத்துக் கொள்வோம்'' என்று தங்கள் தீர்மானப்படி சங்கேதம் செய்து கொண்டு வீமனிருப்பிடம் விட்டுத் தனதிருப்பிடம் வந்து சேர்ந்தாள்.

கீசகன் விரதசாரிணியை மறுபடி சந்தித்தல்.

அன்றிரவு கழிந்து, மறுநாள் உதயமாயிற்று. அரண்மனையிலெங்கும் முன்போல அவரவர் கருமங்களை யவரவர்

ஒழுங்காகச் செய்து கொண்டிருந்தார்கள்; பலபேர் இவ்விஷ யத்தை மறந்தனர். விரதசாரிணியும் தனது கடமைகளைச் செய்தற்குக் கோமகளிருப்பிடம் சென்றாள். மகாராணியும், விரதசாரிணியைப் பயத்தோடும், ஆனால், அன்புடனும் நல் வரவேற்று உபசரித்தாள். விரத சாரிணி, புன்னகை காட் டிப் பூங்காவிற் சென்று மலரெடுத்து வரச்சென்றாள். விதி யின் செயலோ வினையின் பயனோ எனும்படி யவ்வழியே கீசகனும் வந்தான். பணிப்பெண்ணைக் கண்டான். புகைந்து கொண்டிருந்த காதல் தீ மூண்டெரிய ஆரம்பித்தது. மனம் மாறினான்; துணிவு கொண்டான்; அவளது கதியைத்தடுத்து நின்று, "பெண்ணே! அரசன் அவையிற்போய் வீழ்ந் தனையே! என்னையிந்த இரண்டு நாட்களாக யார் என்னசெய் தார்கள்? அரசனால் என்ன முடியும் என்று எண்ணியிருக் கிறாய்? இவ்வரசனது வாழ்வும் செல்வமும் அரசும் என்னொரு வனது ஆண்மையினாலேயே நிலைத்திருக்கின்றன என்பதனை யுணர்ந்து கொண்டாயல்லவா? அஃதிருக்கட்டும். 'எனக்குக் கற்பின் காவலராக ஐந்து கந்திருவர் இருக்கின்றார்கள்' என்று எல்லாரையும் அச்சுறுத்திப் பிதற்றிக் கொண்டிருந்தனையே! அவர்களைவரும் இவ்விரண்டு நாட்களாக என்னை என்ன செய்து விட்டார்கள்? என் ஆற்றல் கேட்டவர், அறிந்தவர், என்னருகு வரத்துணிவார்களா? நீயொரு சாதாரண வண் ணப் பெண் தானே; உன்னை நான் விரும்புவது உயர்வென நீ மதிக்கவில்லை போலும்; உன் நிலைமையை நான் அறிந்து கொண்டேன்; ஒரு துணையும் பெறாததொரு பேதைதான் என்பது தெரிந்தேன். இவ்விராஜ்யத்தில், நான் செய்வது நன்மையே யாயினும் தீமையே யாயினும் என்னைத் தடுத்துரைப்பாரும் கெடுத்துச் செய்வாரும் யாருமிலர் என்பதை நீயும் அறிந்து கொண்டாய் அன்றோ?

இனி யாகிலும் என் எண்ணத்துக்கு இசைந்திருந்தால், இன்பவாழ்வு பெற்று இவ்வரசினுக்கே ஒரு பேரரசியாக வாழ்ந்திடலாம்; அப்போது என் சகோதரி யுனக்குப் பணிப் பெண்ணாக மாறுவதையும் நீ காணலாம். இல்லை; முன்போல் மறுத்துரைத்தனையோ நீ உய்ய மார்க்கமில்லை. தக்க ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன்; உன்னைப் பலபேரும் அறிய, நீ கதறக் கதறத் தூக்கிக்கொண்டு போவார்கள். அப்போது, நான் உன்னை வலியப் புணர்ந்து, ஏதோ கற்பென்று சொல்லிக்கொண் டிருக்கிறாயே, அதனை யழிப்பேன்; அப்போதும் அன்புகாட்டாமல் வம்பு செய்வாயெனில், உன்னையே அழிப்பேன்; தகுந்தபடி மறு மாற்றம் தரும் வரையில் நான் விடமாட்டேன்'' என்று தடுத்து நின்றான்.

இவனது காமம்போல், கருமமும் துணிவும் மீறிவிட்டதென உணர்ந்தாள். "இவனைக் கொல்லாதவரையில், என்னைப்பற்றிய துன்பம் ஒழியாதுபோலிருக்கின்றது. அஞ்ஞாதவாசகாலமாக இருக்கின்றது; துணிந்து வெளிப்படையில் யாதும் செய்வதற்கில்லை; ஐவரும் துணியார்; அவனை வஞ்சித்தேனும் கொன்று என் கற்பழியாமற் பாதுகாத்துக் கொள்வது தருமத்துக்குப் புறம்பாகவும் மாட்டாது'' என்று, அவன் பிதற்றிக்கொண்டிருந்தபோதும், அதற்கு முந்தினநாளிரவும் சிந்தித்துக் கலந்து ஆலோசித்து முடிவு செய்துகொண்டவளாகையால், அப்பேதை பிதற்றி முடிந்தவுடன், சிறிதுநேரம் இப்புறமும் அப்புறமும் போவாள் ஓடுவாள்போலப் போக்குக்காட்டி ஸாஹஸம் செய்து, "என்னை விடுங்கள்'' என்று புன்னகையோடு நின்றாள்; விரதசாரிணியின் புன்னகையைக் கண்டு கீசகன் மனந்துணிந்து, "நீ மறுமாற்றம் சொன்னால்தான் விடுவேன்'' என்றான். "மறு

மாற்றம் கூறுவிட்டாலோ?" என்றாள்; "உன்னை ஒரே தூக்காக நானே தூக்கிக்கொண்டு செல்வேன்" என்றான்; "ஆமாம்; தூக்கு வீர்கள்; அடப்பா! என்ன தைரியம் ஒரு ஆண்பிள்ளைக்கு! சரிதான் வழிவிடுங்கள்; நாழிகையாயிற்று; தேவபூஜைக்கு மலரெடுத்தல் வேண்டும்; மகாராணி கோபிப்பார்கள்" என்றாள். "ஆமாம்; மகாராணியாவது கோபிப்பதாவது; கீசகன் மறித்தான் என்று சொல். ஆமாம் தூக்குவீர்கள், என்று பரிகசித்தாயே; இதோ தூக்கட்டுமா!" என்று அருகில் கைவிரித்துக்கொண்டு வந்தான். "நானே உங்கள்பின் வந்துவிட்டாலோ!" என்றாள் புன்னகையுடன்; "வெகு இன்பமாயிற்று; சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது; ஏன்! வரலாமே; இருவரும் கைகோத்துச் செல்வோம்" என்று பின்னும் அருகில் வந்தான்.

விரதசாரிணி, சற்றுவிலகி நின்று, "சற்று பொறுங்கள்; ஆண்மக்கள்போல் பெண்மக்கள் தமக்கு அவ்வளவு துணிவு இயற்கையாய் உண்டாய்விடுமா? கற்பழிந்தவளாயினும் நாணமென்பதுபெண்பிறந்தார்க்கு இயற்கைக் குணமன்றோ? அரசர்க்கும் பேரரசு ஆக்குவிக்கும் ஆற்றலும் அறிவும் அழகும் அதிகாரமும் ஆதிக்கமும் அகங்காரமும் உடைய உங்கட்கு, கேவலம் ஒரு சாதாரணமான பணிப்பெண்ணாகிய என்னிடம் தோன்றிய காதலென்பது, உண்மைதானா? உறுதிதானா? நிலைத்திருக்குமா? என்று சோதித்துப் பார்த்தேன். இப்போது தான் அறிந்தேன் அக்காதலின் உண்மையையும் உறுதியையும்; என்னிடம் அற்பக் காதல் கொண்டு ஆசை வார்த்தை காட்டிய கந்தருவரும் எனது துணையற்ற நிலையைக் கண்டோ, உங்களது ஆண்மைக்குப் பயந்தோ எனக்கு உதவி செய்ய வாராமல் ஒளித்துக் கொண்டார்கள். அவர்கள் என்னை யொழித்து விட்டார்கள்போலும்;

நான் இனி என்மனதின் படிச் செய்வது அவர்கட்கும் சம்மதம் தான் போலும். ஆகையால் நானும் இப்போது உங்கள் முடிவுக்கே வந்திருக்கிறேன். இருந்தாலும் பெண்ணியற்கையையும் என் வார்த்தையையும் உங்கள் பெருமையையும் இவ்வரசின் கௌரவத்தையும் கண்ணியப் படுத்துதற்காகவே ஒத்தமனங்கொண்ட நாமிருவரும் இப்போது பிரிந்து, இச்செய்தி வெளிப்படாதிருத்தி இப்பகலொருபோதே பொறுத்திருப்போம். இன்றிரவு அவசியம் எண்ணத்தை முடிப்போம். வீரருக்குப் பொறுமை பூஷணமல்லவோ? நீங்கள் வீராகையால் பொறுத்துப் பிரிந்து போய் வெளிப்படாமலும் வெளிப்படுத்தாமலும் இருந்து, இன்றிரவு பாதிநாழிகைக்குமேலூர் ஒலியடங்கின பிறகு நமது— அதாவது உமது அரண்மனையை அடுத்த பொழிலிலுள்ள இருட்டில் நிலவு காட்டக் கூடிய வெண்மண்டபத்துக்கு வந்திடுங்கள். நினைத்தபடி இருந்து எண்ணம் முடித்துக் கொள்வோம். பின்னர்ச்சில இரவும் அப்படியே அந்தமண்டபத்திற் சந்தித்திருந்து சிறுகச்சிறுக நாளடைவில் ஸங்கோசம் மாறிய பிறகு வெளிப்பட்டிருப்போம்" என்றனள். கேட்ட கீசகன் மனம் மகிழ்ந்து முகம் மலர்ந்து, கண்களில் ஒளிமிகுந்து, வாய்புனலூற ஒரு காதற் பார்வை பார்த்துப் புன்னகை காட்டி, "ஆனால் நான் வழிவிடுகிறேன்; நான் அங்கு அவசியம் அச்சமயம் காத்திருப்பேன்; தெரியுமா!" என்று சொல்லிவழிவிட்டுத் திரும்பித் திரும்பிப் பார்த்துப் போனான்.

கீசகன் வதம்.

கீசகன் அன்றைப் பகலைக் காதல் மிகுதியாலும் ஒத்த அன்புடன் இன்பம் அநுபவிக்கப்போகின்றோம் என்னும் களிப்பு மிகுதியாலும் நீண்ட வருஷ காலக்கணக்கைப் போல

மிகுந்த சிரமத்துடன் கழித்தான். விரதசாரிணி அன்றைப்பக லைக் கோபமிகுதியாலும் துணிவு மிகுதியாலும் வெகுபரபரப் புடன் தனது கடமைகளைச் செய்துகொண்டே வெகு சுலபத் துடன் கழித்தாள். தன்மேலாசைகொண்டே அந்த விரத சாரிணி அன்பின் மிகுதியால் ஒரு கால் தன்னிருப்பிடத் துக்கே வந்தாலும் வருவளோ என்னும் ஆசை மேலீட்டால் பகலெல்லாம் தன் அரண்மனைவாயிலைப் பார்த்துப் பார்த்துக் கீசகன் ஏமாறிய வண்ணமாகக் கழித்தான். தான் அவன்பால் காட்டிய பொய்யன்பை மெய்யாக நம்பிக் கொண்டு ஆசை கொண்ட அந்தப்பாதகன் மேலெழுந்த காமத்தினால் அறிவி ழந்து கருமத்தினுக்கும் அஞ்சாத தனது கொச்சையாண் மையையே துணையாக் கொண்டு எங்கே வந்துவிடுவனோ என் னும் பயத்தால் தனது அறையின் வாயிலைப் பகலெல்லாம் விரத சாரிணியும் பார்த்தவண்ணமாகவே இருந்து கழித் தாள். அரசி அரசன் முதலியோர் இந்நிகழ்ச்சியை மறந்து விட்டன ரென்றே சொல்லலாம். குந்திமைந்தர் நால்வரும் நெஞ்சு குமுறிக் கொண்டே யிருந்தார்கள். வீமன்மாத்திரம் எங்கே இன்னும் திரௌபதிக்கு அப்பாதகனால் தீங்கு விளை யுமோவென்றும் விரதசாரிணிவருகிறாளோ எனவும் பரபரப் புடன் அடிக்கடி தனது அறைவாயிலைப்பார்த்துக் கொண்டே இருந்து பகலைக்கழித்தான். சூரியன் அந்தத்துஷ்டபாதகனை யழிக்களண்ணியிருக்கும்வீரருக்குஇரவான சமயத்தைத்தந்து உதவ வேண்டு மென்றெண்ணி, விரைவில் தன் பகற் கரும மாற்றி மேலைமலைக் குகையில் ஒளித்துக்கொண்டான். விரை வில் இரவும் வந்தது. கீசகன் மனம் களித்து நாழிகையை ஒன்றுஇரண்டென எண்ணிகொண்டிருந்தான். விரதசாரிணி, போது பட்டவுடன், இரவு தோன்றிய வேளையில், யாருமறி யாமல் பலாயனனைச்சந்தித்து, கீசகனுக்கும் தனக்கும் நடந்த

சம்பாஷணை முற்றும் ஒப்பித்துக் கீசகன் அரண்மனைக்கடுத்த பொழிலிலுள்ள வெண் மண்டபத்துக்கு வருமுன்னரே போயிருத்தல் வேண்டுமென்பதையும் சொல்லிவந்தாள்.

இரவு பன்னிரண்டு நாழிகைக்குமேல், ஊரொலி யடங்கின பிறகு பலாயனனும் விரதசாரிணியும் சங்கேதப்படி சந்தித்து, இருவரும் இரண்டு பெண்களாகி யாரும் அறியாமல் சென்று, அம்மண்டபம் சேர்ந்து, ஒரு பெண்ணுருவம் வெண் மண்டபத்திலும் ஒரு பெண்ணுருவம் பொழிலிலும் இருக்கும்படித் தங்களை வகுத்து அப்படியே இருந்தார்கள். கீசகன், தனது சஞ்சாரத்தில் ஆங்காங்கு உயர்தரமாக வாங்கிச் சேர்த்து வைத்திருந்த கந்த கலவைக் கஸ்தூரி மணப் பொருள்களை வாரித் தன்மேல் பூசிக்கொண்டு, நல்லுடையுடுத்து நல்லலங்காரம்செய்து புறப்பட்டுக் குறித்த நாழிகைக்குக் குறித்த இடத்தில் வந்து சேர்ந்தான். "ஒருகால் விரதசாரிணி மோசம் செய்திடுவளோ" எனும் துணுக்கமும் உதித்தது; அந்த உதயம், உடனே, "அப்படி மோசம் செய்வளானல், மறுநாள் தூக்கிக் கொணர்ந்து விடமாட்டேனு!" எனும் துணிவு மறைக்கவே, மறைந்தது; இது வல்லாமல், "வேறு தன்னுயிருக்கு அழிவு வருமோ" எனும் யோசனை யவனுக்கு உதிக்கவே இல்லை. வீரனும் துஷ்டனுமாகையால் இருட்டில், வெண்மண்டபத்தில் ஒரு பெண்ணுருவம் படுத்திருந்ததைப் பார்த்தான்; ஒருகால் மனத்தின் பிரமையினல் தோன்றும் தோற்றமோ எனும் சந்தேகத்துடன் கையால் தொட்டுப் பார்த்தான்; உருவெளித் தோற்றமல்ல; உண்மையுருவமே எனக் கண்டான்; களிப்பு மிகவும் கொண்டான்; உள்ளம் கிளர்ந்தான்; உடல் புளகித்தான்; நாக்கை ஊறும் நீரில் நனைத்தான். காதல்மீக்கொள்ளப் பாவசனுகிக் "காதற்

கண்ணே! சொன்னவண்ணம் செய்த சொற்கிளியே; பொன்னே! பூவே! மங்கையே! நங்கையே! மடந்தாய்! எனக்கும் இடந்தா" என்று சொல்லிக்கொண்டு, அவ்வுருவத்தின் மேல் வீழ்ந்து, கட்டியணைந்து, "என்! பேசாதிருக்கின்றாய்! நான் நாழிகை தவறி வந்தனனோ? நீ முன்னரே வந்து இத் தனியிடத்தில் தவித்திருந்ததனால், பயங்கொண்டு, அதனால் என்மீது கோபம் கொண்டிருக்கின்றாயோ; சொன்ன நாழிகைக்கே சரியாய் வந்தேன்; நாழிகை தெரியாமல் என்மேல் வைத்த அன்பின் மிகுதியால் காதல் மீக்கொண்டு முன்னரே வந்து விட்டாய் போலும்; அந்த உணர்ச்சி எனக்கில்லாமல், தாமதித்து வந்தது என்பால் பிழைதான்; மன்னித்துக் கொள்; எழுந்திரு; ஒரு முத்தம் கொடு" என்று பிதற்றித் தன் கைகொண்டு அவ்வுருவத்தின் கையைப் பிடித்து மிகு சிரமத்துடன் தூக்கிஉட்கார்த்தினான்.

அவ்வுருவம், இவனது கைகள் வசமாக அகப்பட்டுக் கொள்ளும் வரையில், உடலைப் புரட்டிக்கொடுத்துப் பின்னர் எழுந்து, வசப்பட்ட அவனது இரண்டு கரங்களையும் பிடித்துக்கொண்டு, தனது வலிகொண்டு தூக்கிக் காகா வென்று சுழற்றிப் பாறையில் ஓங்கி யடித்தது. எழுந்து பார்த்தபோது, "பெண்ணுருவமன்று; ஆணுருவம்" எனத் தெரிந்து, வீரனாகையால், "மோசம் போனேமே" எனத் தோற்றமெழுந்தும், மனங்கலங்காமல், அவனோடு எதிர்த்துப் போர் செய்தான். மலையும் மலையும் போல மலைந்தார்கள். அடித்தார்கள்; இடித்தார்கள்; பிடித்தார்கள்; கடித்தார்கள்; மோதினார்கள்; தாக்கினார்கள்; வலம் இடம் வந்தார்கள்; விழுந்தார்கள்; எழுந்தார்கள்; வெகுநேரம் வரையில் சண்டை செய்து இருவரும் களைத்தார்கள். இருவரும் ஒத்த பலமுடையவர்களாகையால், வெற்றி தோல்வி தோன்றவில்லை.

எனினும், பலாயனனைவிடக் கீசகன் மிகத் தளர்ந்து போனான்.

ஏனெனில் ''கீசகன் தன்னை மயங்கவும் கலங்கவும் அடிக்கக்கூடியவன் வீமன் ஒருவன்தானே; ஒருகால் இவன் பீமன்தானோ; பலாயனனை வீமனாகத்தானிருத்தல் வேண்டும்; இந்த வண்ணப்பெண் திரௌபதியாகத்தானிருத்தல் வேண்டும். ஐந்து கந்தர்வர் என்பார் பஞ்சபாண்டவராகத் தானிருத்தல் வேண்டும்; இவனைத் தவிர இன்னம் நால்வரும் இவ்வரண்மனையில் தானிருத்தல் வேண்டும். அஞ்ஞாத வாசத்தைக் கழித்திடுதற்கு இந்நாட்டினையா தேடினார்கள்; நாளையே வெளிப்படுத்தி விடுகிறேன்'' என்று மனத்தில் துணிந்தானாலும், அம்மனத்தில் சிறிது பயமும் கூடவே உதித்தது. அது என் எனில், பகன், இடிம்பன், ஜராசந்தன், வாசவ மல்லன், கீசகன், துரியோதனன், வீமன் இவ்வெழுவரும் சமவலியுடையவர்கள்; இவர்களை இவர்களே அழித்தல் கூடுமே தவிர ஏனையோர் அழித்திடல் முடியாது; அதினும், அழித்தவர்க்கு அழிபட்டவரது பலமும் சேர்ந்து விடும்; இந்த உண்மை கொண்டு பார்த்திடும்போது, பகன், இடிம்பன், ஜராசந்தன், வாசவ மல்லன் இந்நால்வரையும் வீமனே கொன்றிருத்தலால், அவர்களது வலியையும் வீமனுடையனாதல் பற்றித் தனக்கும் இவனால் மரணம் சம்பவித்திடுமோ என எண்ணினான்; எண்ணினபோதே மனம் தளர்ந்தது. உடல் வலியுமொழிந்தது; தளர்ந்து போனான். உடனே பலாயனன், அப்பாதகனைப் புரட்டிப் புரட்டி யடித்துக் குத்தி மோதி உடலெலும்புகளை நசுக்கி, அடிப்பட்ட மலைப்பாம்பு போலாக்கி, நொறுக்கிக் கைகளைச் சுருட்டி வயிற்றில் திணித்து ஒரு பிண்டமாக்கித் தலையை நிமிர்த்தி வைத்துக் கால்களை மடக்கி யுட்காரவைத்து, ஒரு உருப்பிண்டம்போல்

செய்து, இதனை விரதசாரிணி காணும் பொருட்டுக் காட்டுக் கட்டைகளைச் சேகரித்துத் தனது கைவலி கொண்டு தேய்த்து நெருப்பெழுப்பிக் கட்டைகளைக் கொளுத்தி, அந்த உருப்பிண்டத்துக் கெதிரே எரியவிட்டு விரதசாரிணிக்கும் காட்டிக் குளத்தில் மூழ்கித் தேக சுத்தி செய்து கொண்டு, "சனி தொலைந்தது; இனிப்போவோம் வா" என்று அவளை யும் அழைத்துக் கொண்டு, விரதசாரிணியுடன் புறப்பட் டான்.

உபகீசகர் வதம்.

"தோட்டு மென்மலர்ச் சோலையின் ஓதையும்
மோட்டு வன்கர முட்டியின் ஓதையும்
மாட்டு வண்சுதை மண்டபத் தோதையும்
கேட்டு ணர்ந்தனர் கீசகன் தம்பிமார்."

பாதியிரவில், தங்கள் அரண்மனைக் கடுத்த பொழிலின் வெண் மண்டபத்திலிருந்து, சோலையில் நடக்கும் ஓசையும் கையொடு கைபுடைக்குமோசையும், தோள்கொட்டு மோசை யும் மண்டபத்தினோசையும், அடிக்கடி வெகு நாழிகையாகக் கேட்டுக்கொண்டிருக்கவே, அண்ணன் கீசகன் அந்த வண் ணப் பெண்ணின்மேல் வைத்த ஆசையால் வருந்தியிருந்தா னென்பது தெரிந்தவர்களாகையால், "ஒருகால் அவளது காவற்கடவுளர்களாகிய கந்திருவர்க்கும் கீசகர்க்கும்தான் போர் நடக்கின்றதோ" என்று பரிந்து அண்ணனை அரண் மனையிற் பார்த்துவரச் செய்து அவன் இல்லாமை தெரிந்து சந்தேகித்து, உடனே அந்தப் பாழ்மண்டபத்துக்கு வந்து பார்த்தார்கள். குண்டத்தீ வெளிச்சத்தில் கீசகப் பிண்டத் தைக் கண்டார்கள். மனங் கொதித்தார்கள்; கந்தர்வர்களே இவனை யிப்படிச் செய்திருத்தல் வேண்டுமென்று தீர்மானித்

துத் தங்கள் சகோதரிக்கும் சங்கதி சொல்லியனுப்பி யிவளை யும் கொண்டுவந்தார்கள். காட்டினார்கள். கலங்கினார்கள். அவள் வந்து பார்த்து அழுதாள். என் செய்யலாம்? இனி இப்பாதகன் செய்தொழில் உலகு தெரியாவண்ணம் இவ் வுருப்பிண்டத்தை யிந்த நெருப்புக் குண்டத்திலேயே போட்டு எரித்திடுங்கள் என்று சொல்லிப்போக, ஆம் என்று தீர்மானித்தார்கள். அதற்குள் ஒரு யோசனை வந்தது; "இந்த வண்ணப்பெண்தானே இதற்கெல்லாம் காரணம், இவனுடன் அவளையும் உயிரோடு சுட்டுக் கொளுத்துவோம்" என்று யோசித்துத் தீர்மானித்து, சிலர் வியந்து சென்று விரதசாரிணியைத் தேடினார்கள்.

அப்போது, வீமன் பிரிந்து மடைப்பள்ளியேக, விரதா சாரிணி தனித்து அந்தப்புரம் போய்க்கொண்டிருக்கும் தருணமாகையால், கோயிற்குள் அவள் சென்று நுழைந்திடு முன்னரே பாதகர்கள் பற்றிக்கொணர்ந்து விட்டார்கள். வாய்விட்டுக் கதறினாள். பாவிகள் விடவில்லை; பதைத்த நெஞ்சினளாகி, அவர் சூழ்ச்சியை யுணர்ந்து, பலாபலனை மனதிலெண்ணிக்கொண்டு,

"வெருவருங் கருங் கங்குலில் வெங்கொலை
நிருபரென்னை நெருப்பிடை வீழ்த்து வான்
கருதினார்கள் மெய்காக்குங் கடவுள் காள்
வருதிரென்று கண்வார் புனல் சோரவே"

என்று வாய்விட்டுக் கதறினாள். மடைப்பள்ளியிற் புகுந்த போது பலாயனன் இந்தக் குரலைக் கேட்டு ஓடிவந்து, பொழி லிற் புகுந்து, மாமரம் முதலிய மரங்களை வாரி மோதி யடித் துக்கொண்டேவந்து, தன்னை யுருவறியா வகைசெய்து, ஓட ஓட அவர்களை விடாது துரத்தி யடித்து, நூற்று மூன்று

பேரையும் ஒழித்துக் கீசகப் பூண்டேயில்லாமற் செய்து, எல்லாப் பிணங்களையும் குண்டத்தில் தள்ளி எரித்துவிட்டு, மற்றுமோர்முறை குளத்தில் மூழ்கித் தேகம் சுத்திசெய்து கொண்டு, விரதசாரிணியையும் அழைத்துக்கொண்டுபோய், அவள் பயம் நீங்கிய இடம்வரைத் துணைசென்று வழி யனுப்பித் தனதிருப்பிடம் புகுந்து, "இனி இவர்களாற் பய மில்லை; சகோதரர்கள் என்ன சொல்வார்களோ? தமையன் கோபிப்பரோ?" என வருந்தியிருந்தான்.

பொழுதும் விடிந்தது; கீசகர் நூற்று நால்வரும் விரத சாரிணியின் காவற் கடவுளர்களாகிய கந்தர்வரால் மாண் டொழிந்தார்கள் என்னும் செய்தி எங்கும் பாவிற்று; பலர் வந்து மண்டபத்தைப் பார்த்துப்போயினர். விராடனுக்குக் கந்தர்வரிடம் பயம் தோன்றிற்று. பாதகக் கீசகன் தொலைந் தானெனக் களித்தார்கள். தம் பலம் போயிற்றே என்று மன்னனும் அரசியும் வருந்தினார்கள். விரதசாரிணியைக் கண்டால் ஆண்களும் பெண்களும் நடுங்கினார்கள். பாண்ட வர் ஐவர் மாத்திரம் மனம் துணுக்குக் கொண்டிருந் தார்கள். இன்னும் கொஞ்ச நாளும் வெளிப்படாமலிருத் தல் வேண்டுமே என்று கவன்றார்கள்.

நிரை மீட்சிச் சருக்கம்.

"தொழுவார் தம்வினைதீர முற்கோலமாய் வேலைசூழ் பாரெயிற்
றுழுவானை நன்றுமை மொன்றாயினுங் கற்றோருரு வோதினோர்
வழுவாத சுராக நராக புள்ளாக மாவாகபுன்
புழுவாக வொன்றிற் பிறந்தாலும் நரகிற்புகார் காணுமே."

இது வரையிற், சூதாடி நாடிழந்து காட்டு வாழ்க்கை யைக் கையேற்றுத் திரிந்த பாண்டவர் தம் சரிதம் கேட்

டோம்; இனி, மாயச் சூதினால் அரசினைக் கவர்ந்த அரவக் கொடியோன் முதலிய அறனிலாதார் திறத்தைக் கேட்போம்; அவர் செய்த சூழ்ச்சியைப் பேசுவோம்.

பாதக வஞ்சகர், பாண்டவர் தம் வனவாச நாளை, நாளுங் கணக்கிட்டறிந்தே வருபவராகலின், "பன்னிரண்டாண்டும் கழித்து விட்டார்கள்; பாக்கியோராண்டிலும், பன்னிரண்டு 'திங்கள் முடிதற்கு இன்னம் சில நாட்களே தாமிருக்கின்றன; இவையும் முடிவு பெறுதற்குள், நாம், அவரை வெளிப்படுத்தாவிடின் அரசு கொடுக்க வேணும் அல்லது அமர் தொடுக்க வேணும் வேண்டியிருக்குமே; இரு வகையிலும் நமக்கு நஷ்டந்தானே; ஆகையால், அவரிருப்பிடத்தை யறிந்து வரச்செய்வோம்" என்று நான்கு திசைகட்கும் தக்க வீரர்களையனுப்பியிருந்தார்கள்: வீரர்கள் நாடு காடு மலை கடல் வனம் குகை முதலிய ஒன்றேனும் விடாது, எங்கும் தேடி யொரு புலத்திலும் அவரைக் காணமுடியாதவராகித் திரும்பிவந்து விட்டார்கள். அரவக் கொடியோனை வணங்கிப் புகலுகின்றார்கள். "அரவக் கொடி படைத்த அரசே! ஆண்மைச் சிங்கமே!!

"காடென்று மலையென்று நதியென்று கடலென்று கடலாடைசூழ்
நாடென்று நகரென்று நாடாத திசையில்லை நாடோறும்யாம்
தோடென்று தாதென்று தெரியாது மதுமாரி சொரிமாலையாய்
நீடென்று வலமேவு மவனிக் குளவரில்லை நின்பாதமே."

காடோ மலையோ கடலோ கடலாடை சூழ்நாடோ நகரோ நதியோ இவற்றில் நாங்கள் நாடிப்பாராத இடங்களில்லை. இந்தப் 'பூமிக்குள் அவரில்லை யென்றே துணிந்து சொல்வோம்" என்று வணங்கிச் சொன்னார்கள். அப்போது பீஷ்மர் சொல்லுவார்:—"துரியோதனா! 'யுக்தி புத்தி பலம் விரகு

முதலிய எவற்றிலுஞ் சிறந்த உத்தமர் இருக்குமிடத்தை உன் ஒற்றர் கண்டு வரல் முடியுமா? அவர்கள் வாழ்ந்திருக்குமிடம், நாடோங்கி நதி யோங்கி மலை யோங்கி மர மோங்கி மழை யோங்கி வளனோங்கி விளைவோங்கி, அந்நகாமோ நாடோ நன்றாய்ச் செழித்திருக்குமே; இந்த நற்குறியைக் கண்டல்லாது அவருறை விடத்தை நாடல் வகையேது" என்று சொன்னான்.

இக்குறிப்புகளைக் கேட்டவுடன், அந்த ஒற்றர்களில் அறிவாளியாகிய ஒருவன், அரசனை நோக்கி, "அரசே! ஆம்! ஆம்! அது உண்மையாயிருக்கலாம்; பெரியவர்கள் சொல்லிய குறிகளெல்லாம் பொருந்தியுள்ளது ஒரு நாடு; அது மச்ச நாடாகிய விராட தேசம்; மற்றும் அந்த விராடன் நகரத்திற் போம்போது, ஒரு செய்தியையுங் கேட்டோம்; அஃதென்னவெனில், விராடனுக்கும் விராடன் நகர்க்கும் விராட நாட்டுக்கும் வீறளித்து வீரத்துடன் காத்து வந்த, விராடன் மைத்துனனாகிய வீரன் கீசகன் தம்பியர் நூற்றுமூவருடனும் கொல்லப்பட் டொழிந்தானென்பதும் கேட்டோம். கீசகன் ஒரு வண்ண மகள் பேரில் வைத்த காதலினாலே, அவ்வண்ண மகட்குரிய காவலரால் கொல்லப்பட்டான் என்பதும் கேட்டறிந்தோம்; இதனுண்மையைக் கண்டு தாங்கள்தான் தெரிந்து சொல்லல் வேண்டும்" என்று சொன்னான். அதனைக் கேட்டுக் கர்ணன், விராடன் நகர் சென்று, அந்நாட்டிலுள்ள மாடுகளைக் கவர்ந்தோமாயின், அக்குறிப்பறிந்த பாண்டவர் அங்கிருப்பின், அவர்கள் விடாது ஆநிரைகளை மீட்பர்; ஆநிரை மீட்க அங்கு வலியாரில்லை யெனில், பாண்டவ ரங்கில்லை யென்பதை நாமறிந்துகொள்ளலாம். இதுதான் தக்க யோசனை யென்றனன்.

தென்திசை நிரைமீட்சி

உடனே துரியோதனன் ஏவலினால், மாடுபிடிக்கும் பெருஞ் சண்டையில் வல்லவனும் கீர்த்தி பெற்றவனுமான திரிகர்த்தன் என்பவன், ஒரு அக்ஷௌஹிணி சேனைகளுடன் புறப்பட்டுச் சென்று, விராடன் நகரைச் சூழ்ந்து நின்று அந் நகர்த் தென்புறத்துற்ற ஆநிரைகளை யெல்லாம் கவர்ந்து கொண்டான். இச்செய்தியை விராடர்கோன் இடையர்களாலும் ஒற்றர்களாலும் தெரிந்து, "நம்மை மதியாமல் திரிகர்த்தர்கோன் சதியாகவந்து நமது நகர் மாட்டுக்கூட்டங்களை யபகரிப்பதா?" என்னும் கோபங்கொண்டு, தானும் தனது படைகளை அழைத்துக்கொண்டு, வழியெல்லாம் தூளிகள் கிளம்பும்படியாக விரைந்து சென்றான். அந்தப்புரத்தில் பேடி யுருவந் தாங்கி நிற்கும் விஜயன்தவிரப் பாண்டவர் நால்வரும், விராட மன்னர்க்குத் துணையாகப் புறப்பட்டார்கள். ஆநிரைகளை வளைத்து மீட்டுக் குருசேனையெனக் கண்டு, குறிப்பறிந்த நால்வருந் தூண்ட, வெம்போர் விளைத்துக் குரு சேனையைத் தோல்வியுறச் செய்தான் விராடன் என்னும் மச்சவள நாடன்.

தன் சேனை நில்லாமல் முதுகுகாட்டி யோடுவதைக் கண்ட திரிகர்த்தன், கோபம்மீறி நேரே விராடனெதிர் நின்று மீண்டும் வெம்போர் தொடுத்தான். இருவரும் ஓயாமல் மலைந்தபோது, திரிகர்த்தன், விராடனது தேர் சாரதி குதிரைகளை யழித்து, வடம்கொண்டு அவனைத் தன் தேர் மீது கட்டிச் சிறைபிடித்தான். விராடனைத் திரிகர்த்தன் போரில் வென்று சிறைபிடித்துத் தேரிற் கட்டப் போவதைப் பார்த்து நின்ற கங்கர், உடன்றெழுந்து, பலாயனனை விளித்து, "உடன்சென்று போர்விளைத்துத் திரிகர்த்தன்

சேனையைத் தாக்கி விராட மன்னனையும், விராடநகர் ஆநிரைகளையும் மீட்டுவா! நம்மை யிதுகாறும் காப்பாற்றிய மன்னவர்க்குதவும் சமயமிதுவேயாகும்" என்று ஏவினான். குதித்தெழுந்தான் வீமன்; தோள்தட்டினான்; கதையைக் கையிலேந்தினான்; தனது பிதா வாயுபகவானைப்போல் வேகங்கொண்டு, போரிற் புகுந்து, குரு சேனைகளை மடக்கியடித்து, ஆநிரைகளை மீட்டு, விராடனையும் மீட்டுக் கட்டவிழ்த்து, ஒரு தேரின்மேல் அவனை யேற்றி, மீட்ட பசுக்களைக் காத்துப் போர்செய்யும்படி சொல்லித் தானொருவனே தனி நின்று பெரும்போர் செய்து, குருசேனை ஒரு அக்ஷௌஹிணியையும் முறியடித்துக் கொன்று, திரிகர்த்தனை யுயிரோடு பிடித்து, வடத்தினாற் கட்டி மீண்டு வந்து, விராடனிடம் நிறுத்தினான். கங்கர் மனம் குளிர்ந்தது. தாமக் கிரந்தியும் தந்திரிபாலனும் சிவந்த கண் ஆறினார்கள். "பலாயன! நீ செய்துள்ள இந்த உதவிக்குக் கைம்மாறு யாதுசெய்வேன்?" என மிகவும் அன்புடனும் விநயத்துடனும் விராடன் விளம்பினான்.

"இச்செயல் உரிமையும் கடமையும் ஆகுமே யன்றி, ஒரு பேருதவியாகமாட்டா" தென்று நால்வரும் கூறி யுளம் மகிழ்ந்தனர். உடனே நகர் திரும்பினர்; கங்கரும் மன்னனும் மணித்தேரேறினார்கள். தாமன் குதிரைப் படைகளைச் செலுத்திப் போனான்; தந்திரிபாலன் கோக்களைக்கொண்டு போனான். "இனி, இந்தத் திரிகர்த்தனை நாம் விடுதலை செய்தலே நமக்குப் புகழாகும்" என்று சொன்ன கங்கவேதியர் வார்த்தையைக் கௌரவித்து, அந்தப் பாதகர் தோழனை மெய்யுறப் பிணித்தவடம் நீக்கி விடுத்து, ஒரு தேரும் கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

வடதிசை நிரைமீட்சி

உத்தரன் தேரேறல்

விடுபட்ட திரிகர்த்தன், நேரே ஊர் திரும்பிடாமல், சங்கேதப்படிக் குருகுலப் பெரு மன்னனது பெருஞ்சேனையும் வருமென்று எதிர்பார்த்திருந்தனன். திரிகர்த்தனது சேனை தோல்வியுற்றது எனத் தெரிந்தவுடன் அரவக் கொடியோன், தனது வீரர்களையும் பெருத்ததொரு சேனையையும் அழைத்துக்கொண்டு, விராடன் நகரின் வடபாரிசத்துக்கு வந்து, பசுமந்தைகளை யெல்லாம் குழம்பும்படி அவற்றைக் கலைத்து வளைத்துத் தன் காவலில் வைத்துப் போனான். பசுக்காவலர்கள் இச் செய்தியை விராட மன்னற் கறிவிக்கச் சென்றார்கள். நகரில் மன்னனில்லாமல் தென்பாரிசத்திற் கவர்ந்த பசுக்களை மீட்பதற்குச் சென்றிருக்கிறானெனத் தெரிந்து, அந்தப்புரம் சென்று மகாராணியைப்பார்த்து, "மகாராணியே! தென்பாரிச நிரைமீட்க மன்னன் சென்றிருக்கின்றானெனத் தெரிந்து, குருகுலச் சேனைகள் வடபாரிசத்தில் வந்து வளைத்துக்கொண்டு, நமது ஆநிரையெல்லாம் கவர்ந்துபோகின்றார்க" ளென்று சொன்னான். "மகாராணியே! பாம்புக்கொடி படைத்த குருகுலப் பெருமன்னனும் அவன் தோழரும் உறவினர்களும் உயர்தர வீரர்களும் வந்து நமது நாட்டின் வளங்களையும் அபகரித்து, விளைபயிரெல்லா மழித்து, வனத்திலும் நகரத்திலுமுள்ள சுரபிகள் யாவையும் கவர்ந்துகொண்டார்களே! இந்தப்பழி யெப்போதேனும் உண்டா!" என்று பின்னரும் கதறினர்கள். அப்போது, சுதீட்சணை, மைந்தன் உத்தரனைப் பார்த்து, "குழந்தாய்! தெற்கே உங்கள் தகப்பனார் நிரைமீட்கச் சென்றிருக்கின்றார்; வடக்கிலோ பெரும் பகைஞராகிய குருகுல மன்னர்கள் வந்திருக்கிறார்கள்; உங்கள் மாமன்மார் கீசகன் முதலியோர் காவலாக

இருந்தவரையில் பயந்து அடங்கியிருந்த மன்னர்கள், கீசகன் இறந்தொழிந்தனன் என்னக் கேட்டவுடன், நாடு கவரத் தலைப்பட்டுவிட்டனர்; என் செய்வது? நீயோ சிறுபிள்ளை! கூட்டினுள் அடைபட்டிருக்கும் கெருடக்குஞ்சுபோ லிருக்கிறாய்!! இச்சமயம் வந்தபோதும் வீட்டினுள் வந்திருக்கலாமா?'' என்று சொல்லிப் பெண்களைப்பார்த்து, “அரசனில்லாத சமயம் நகரில் பகைவர் புகுவாரானால், க்ஷத்திரியப் பெண்களாகிய நாம் வாளாவிருந்திடல் தகுமா? புறப்பட்டுச் சென்று, பகைவருடன் போர்புரிந்து, மன்னவன் துணைக்கு வரும்வரையில் காக்கவேண்டாமோ? புறப்படுங்கள்; ஒரு பெண் சேனை யிப்போதே சேரட்டும்!'' என்று வீரத்துடன் சொன்னாள்.

சொன்ன தாயை, உடனே, உத்தரகுமாரன் வணங்கித் “தாயே! என்னை ஆண்மகனெனப் பெற்றுவளர்த்து, சமயம் வந்தும், நானிங்குப் பதுங்கியிருக்கப் பெண்களைப் போருக்கு அனுப்பலாமா? நன்று! நன்று!! இதோ புறப்படுகிறேன்; குருகுலப் பெருமன்னவராக இருந்தாலென்ன? தேவராக இருந்தாலென்ன? ஒரு நொடியில் கொன்று வீழ்த்தி நம் ஆநிரைகளை மீட்டு வருகின்றேன்; ஆனால், எனக்குத் தக்கபடியாக ரதம் செலுத்தச் சாரதி வேண்டுமே'' என்றான். இதனைக் கேட்டிருந்த ஒப்பனைக் குரியமாது, பேடியை அருகு அழைத்து வந்து காட்டி, “இதோ! இவள்!! நன்கு சாரத்தியம் செய்வாள்; பாண்டவரில் விஜய மன்னனும் விரும்பத் தேர் செலுத்திக் கொண்டிருந்தவள்'' என்றாள். உடனே இருவரும் சம்மதித்தார்கள். மகாராணி உத்தரவு பெற்று, பிருகந்நளை, குதிரைப் பந்தியிற் சென்று, நன்கு நாடி நான்கு குதிரைகளைத் தேடிப் பெற்று, நல்லிரதத்திற் பூட்டி, விற்களும் அம்பறாத் தூணிகளும் பல குவித்து, பல பெண்களும்

போற்றத் தேர்மீதேறிச் செலுத்த சுதேட்சணை மகன் உத்தானும் தேரேறி வடதிசைப் போருக்குப் புறப்பட்டான். பெண்கள் வெற்றி கூறினர்கள். தேர் ஆகாய விமானம் போற்பறந்து போயிற்று; நகர மதில்களையும் கோபுரங்களையும் கடந்து சென்று நகர்ப் புறத்தின் வடது பக்கத்திற் சேர்ந்தது. தங்கள் நகரத்து ஆள் நிரைகளுடன் குருகுல மன்னனது பெருசேனை மிகுந்த ஆரவாரத்துடன் நிற்பதை உத்தர குமாரன் கண்டான்; யுத்தம் என்பதைச் சித்திரங்களிற் கண்டவனேயல்லாமல், நேரிற் போராட்களையாவது போரை யாவது கண்டிராதவன்; அன்றிப் போரில் "கத்தி வெட்டும் குத்துச் சண்டையும் ஈட்டிக் குத்தும் அம்பு கொண்டெய்தலும் அடிக்கடி மரணமும் தான் என்னும் இவற்றைக்கேட்டிருந்தவனாதலால், "நமது பசுக்கள் போனாற் போகட்டும்; சண்டையும் வேண்டாம்; சச்சரவும் வேண்டாம். சேனைகளைப் பார்த்தால் பயமாயிருக்கிறது! நாமோ சேனையுடன் வரவில்லை; தேரை யூருக்கே திருப்பு" என்று கட்டளை யிட்டான்.

உத்தர குமாரன் பயந்தோடல்.

"பயப்படாதே! மைந்தா!! க்ஷத்திரிய குமாரர்கள் போரிற்குப் பின் வாங்கலாமா? போருக் கென்று புறப்பட்டு விட்டால், வெற்றியாவது மரணமாவது நிச்சய மன்றோ? போர்க் களத்துக்கென்று ஒரு ராஜ குமாரன் புறப்பட்டு மார்பில் காயம் கூடப்படாமல் திரும்பினால், அந்தப் புரத்திலிருக்கும் க்ஷத்திரியப் பெண் மக்கள் நகைக்க மாட்டார்களா? அஞ்சாதே! தைரியம் கொண்டு வில் வளைத்துப் போர்புரி; தைரிய லக்ஷ்மியே ஜயத்தைத் தரக்கூடியவள்; ஒரு க்ஷத்திரிய வீரன், தைரியத்தைக் கைக்கொண்டு, எதிர்த்து நின்று,

வில்லில் வாளிகளைத் தொடுத்து உக்ரத்துடன் போர் புரிவனு யின், அவன் எதிர் நின்று போர் புரிவதற்கு யாராலும் ஆகுமா? ஆகையால் பயப்படாமல் வில்லை வளைத்து டங்காரம் செய்'' என்று பிருகந்நளை மன்னன் மைந்தனுக்குப் பல தைரிய வார்த்தைகள் சொன்னுள்.

''இல்லை யில்லை; எனக்குத் தேர்ப்படை குதிரைப் படை காலாட்படை யிவைகட்கு ஒரு வித்யாஸமும் தெரியவே யில்லை. நான் யுத்தத்தைப் பார்த்ததும் கிடையாது; எனக்கு யுத்தமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்; நாம் திரும்பிப் போவதுதான் எனக்குத் திருப்தி'' என்று பின்னருஞ் சொன்ஞன்; அவனது முகமெங்கும் வியர்வை தோன்றியிருந்தபடியால், அதைத் துடைத்து முதுகு தட்டிக் கொடுத்து, ''வில்லில் அம்பு தொடுத்து நீ போருக்கு ஆரம்பித்து விடு; நான் இருக்கிறேன் உனக்கு வெற்றியுந்தந்து, ஆநிரைகளையும் மீட்டுத் தருதற்கு; பயப்படாமல் போர் செய்'' என்ருள் பின்னும் பிருகந்நளை.

பார்த்தான் உத்தரன். ''இதேது இவள் விடமாட்டாள் போலிருக்கிறது; இனி இங்கிருப்பதில் பயனில்லை'' யென்று நினைந்து, திடீரென்று தேரிலிருந்தும் குதித்து நகரை நோக்கி யோடலுற்ருன். விஜயன் கண்டு, ''இதேது மோசமாயிருக்கிறதே'' யென்று உடன் குதித்து ஓடிப்போய் அவனைப் பிடித்து வந்து தேர்த் தட்டின்மேல் கட்டி வைத்தான். தேரைக் காளி கோயில் வன்னி மரத்துக்குச் செலுத்திக் காளியை வணங்கி, முன்னம் கருதி வைத்திருந்த மந்திரம் சொல்லிப் படைகள் வேண்டுவ எடுத்துத் தேரேறி வந்தான்.

''இந்த ஆயுதங்களெல்லாம் யாருடையன'' என்று பிருகந்நளையைக் கேட்டான் அரச மைந்தன். ''இவைகளா?

பாண்டவரில் நடுவனான அர்ச்சுனனுடையவை'' என்று சொன்னாள்; "அவர் இப்போது எங்கிருக்கின்றார்'' என்று கேட்டான்; "சொல்லுகிறேன் கேள்; சுமார் ஒரு வருஷத் துக்கு முன், ஒரு பெரியவர் ரிஷிவேஷத்துடன் உங்கள் ராஜ ஸபையில் வந்து சேர்ந்து, உன் தகப்பனோடு அங்கு எப் போதும் வீற்றிருக்கின்றாரே, அவர் வந்த இரண்டு நாட்கட் கெல்லாம், அர்ச்சுனனும் பேடியுருவுடன் வந்து சேர்ந்து, உங்கள் அந்தப்புரத்தில் தான் வசித்துக்கொண்டு, உன் சகோ தரி முதலானவர்கட்கு நாட்டியம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றானே; அவனை நீ அறியாயோ? அவர்களது அஞ்ஞாத வாஸகாலம் இன்னும் நான்கே கடிகைகள் தான் பாக்கி யிருக்கின்றன; அந்நாழிகைகளும், கழிந்து போனால், அர்ச்சுனனை நீ இங்கேயே பார்க்கலாம்; கலங்காதே; நீ தேரைச் செலுத்து; நான் பகைவருடன் போர் புரிகிறேன்; வெற்றி நமக்குத் தான் கிடைக்கு"மென்று பிருகந்நளை வேஷத்தவன் சொன்னான். உத்தர குமாரனது கட்டையும் அவிழ்த்து விட்டான்.

அர்ச்சுனன் சுய உருவம் பெறல்.

"பேடி யுருவிலிருப்பவன் அர்ச்சுனன்தான்'' என்று தெரிந்தவுடனே, பயமும் சந்தோஷமும் தோன்றி எழுந்து வணங்கிக் கடிவாளங்களைப் பிடித்துக்கொண்டு தேரினைப் போர் முனைக்குத் திருப்பினான். எதிரிற் புறத்திலிருக்கும் துரோணர் முதலோர் இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண் டிருந்தவராகலின், "கீழே குதித்து ஓடினவன் இப்போது எத்துணை வேகத்துடன் ரதஞ்செலுத்தி வருகின்றான் பார்த் தீர்களா? அது பேடி யுருவம் உண்மை வடிவமல்ல'' என்று சொல்லிக் கொண்டார்கள். தேரினை விரை வினிற் செலுத்

திக் கொண்டு அர்ச்சுனன் எதிரிகள் முன்னர் அணுகி வந்து, வில்லில் அம்புகளைத் தொடுத்து மழை வருஷம்போல் பாண வருஷங்களைப் பொழிந்தான். "ஆஹா! முன்னைய அர்ச்சுனனு! இவன், அம்பிகாபதியாகிய பரம சிவனிடம் பாசு பதாஸ்திரம் பெற்று, இந்திர லோகத்தின் இளவரசனுகிக் காலகேய நிவாத கவசர்களைக் கொன்று வந்திருக்கும் புதிய கிரீடியாகிய அர்ச்சுனனன்றே!" என்று பெரியோர் வியந்தார்கள். இளையோர் பயந்தனர்; துஷ்டர் உக்ரம் கொண்டனர்.

"தன்னிடத்தினில் சிறு முயலும் யானை போற்பல முடையதாகும் என்றபடி நமது பூமிக்கே அவன் வந்திருக்கிறுன், இப்போது போர் தொடுத்தல் நலமாகு"மென்று விதுரன் கூறினுன். "தேர் வருகின்றது; போர்செய்யலாம்" என்று எண்ணிய கர்ணன், "இது பேடியுருவம்; இதற்கேன் நாம் அஞ்சல் வேண்டும்" என்று சொன்னுன், "சரி! பசுக் கூட்டங்களைக் காத்து நாங்கள் போகிறேம்; போர்புரிந்து மீண்டு வாருங்கள்" என்று துரியோதனன் தம்பிமாரொடும் பசுக் கூட்டங்களை வளைத்துக்கொண்டு போனுன். பேடி ஒரே விரைவாகப் பசுக்கூட்டங்களின் அருகு தேரைச் செலுத்தச் சொல்லி, பல காரணங்கள் தூவித் தடுப்பாரையெல்லாம் விலகிக்கொண்டு, பசுக்களை மீட்டுத் தங்கநகர்க் கோபாலரிடம் ஒப்பித்து, ஊர் போகும்படியாகச் சொல்லிவிட்டுப் போர் செய்யத் தொடங்கினுன்.

கிரீடி வெளிப்பட்டான்

அந்த நான்கு கடிகைகளும் கழிந்துபோய்விட்டதனுல், அந்தப் பேடி யுருவம் தானுகவே நீங்கி, அழகிய அர்ச்சுன் வுருவத்துடன் நின்றுள் கிரீடி. அக்கினிபகவான் கொடுத்த தேரும் அனுமக் கொடியுடன் முன்வரக் கண்டான். தேரி

னைச் செலுத்தச் சொல்லி யெதிரிகள் முன் போய் நின்ற போது, திரும்பிப்பார்த்து அர்ச்சுனனைக் கண்டு திடுக்கிட்டார்கள். தேரினை வட்டமாகச் சுழற்றிக்கொண்டிருக்கும் படியாகச் சொல்லி, தான் ஒருவன், அவர்கள் பலபேர்கள் என்பதனால் ஒருகை போதாதென்று நினைத்துப் போலும், காலிற் கட்டையாலும் முகத்திற் கட்டையாலும் வில்லினைப் பிடித்து இரண்டு கரங்களாலும் பாணங்களைத் தொடுத்து எதிரிகளை வீழ்த்திக்கொண்டே யிருந்தான். எதிரிகளிற் புண் படாதார் யாருமிலர். துரியோதனன் ஏறிவந்த குதிரையும் இரதமும் அழிந்துபோய் அவன் மண்ணில்மேல் நிற்பதைக் கண்டு நகைத்தான். வேறொரு தேரிலேறிக்கொண்டு ஓடுகின்ற துரியோதனனைப் பார்த்துத் தோள்தட்டி அர்ச்சுனன் சொல்லுகிறான்.

"மன்னர் மன்னரே! ராஜாராஜரே!! கையில் வில்லும் கொண்டு தேர்மீதேறிப் போர்முகத்தில் முதுகுகாட்டி யோடினால், நகர்வீதிகளில் அலங்காரமாய் உலாவரும்போது பேதைப் பெண்கள் நகையாடமாட்டார்களா? சாமரங்கள் இருபுறமும் வீசவும் வெண்கொற்றக் குடைபிடிக்கவும் மந்திரிப் பிரதானிகள் உடன்வரவும் மிகக் கோலாகலமாகப் பவனி வரலாம் என்று எண்ணி அரசு கொடுக்கும்போது, முன்னணியில் வந்து நிற்கும் தாங்கள், போருக்கென்றால் எப்போதும் என் பின்வாங்கி நிற்கிறீர்கள். உங்களைப் போகவிடமாட்டேன்; உன் துணைவருடன் உன்னையும் உன் சேனையையும் ஒரு கணத்தினில் முறியடிக்கிறேன்! பார்!!" என்று சொல்லி யவனைப் போகவிடாமல் தடுத்துப் போரில் நிறுத்திப் பாணங்களைத் தொடுத்து நூறு ஆயிரங்களாகத் தொடுத்தான். "எங்களை வஞ்சனையால் காடனுப்பியாசாங்கம் பெற்று மகிழ்ந்திருக்கின்றனையோ? என்று பின்னரும் பரிகசித்துப்

பேசும்போது, தனித்திருந்த துரியோதனனுக்குத் துணை யாகக் கன்னன் முதலான வீரர் வந்து குழுமினார்கள்.

கர்ணன் முதுகிட்டு ஓடல்

"அர்ச்சுனனே! போதும் பேச்சினை நிறுத்து!! இனி மன்னனோடு உனக்குப் பேச்சேதற்கு; என்னுடன் போர் செயற்குவா!" என்று சில பாணங்களைப் போட இரு வர்க்கும் போர் நிகழ்ந்தது. கர்ணனுடைய தேரினை யழித் தான் அர்ச்சுனன்; மற்றொரு தேரிலேறி மறுபடியும் நேர் பொருதான்; போர் உக்ரமாக நடந்தது; அந்தத் தேரையும் அர்ச்சுனன் அழித்துவிட, மூன்றாந் தேரிலேறினான்; விடு வானா கர்ணன்! மறுபடியும் போர்புரிந்தான். இம்முறையில் நன்றாக உடல்களிலும் பாணங்களைச் செருகி, வில்லொடு அம்புறாத் தூணியையும் பறித்தெறிந்து, தேரையு மழித்து விடக் கர்ணன், பயந்து முதுகுகாட்டியோட ஆரம்பித்தான். அப்போது, அச்வத்தாமன், கர்ணன் எதிரில் வந்து தோன்றி "மும்முறையும் கிரீடியுடன் பொருது வெற்றி பெற்று ஓடு கிறீர்களோ?

"தேருமொன்று ஒருவனே தேரிலாளு மிங்கி
யாருமஞ்சு திறென விகழ்ந்துரைத்த நீ
போருடைந் தோடுதல் போதுமோ நறும்
தாருடன் பொலிதரு தாம மார்பனே."

"அழகிய மீசையும் மாலையும் உடைய கர்ணா! இப்போது மாப்பிள்ளைக் கோலம் உனக்கு நன்றாய்ப் பொருந்தி யிருக் கின்றது; பெண்தானில்லை; 'தேரொன்று சாரதியும் ஒன்று தானு மொருவனே; ஏன் பேடியைக் கண்டு பயப்படுகிறீர் கள்?' என்று எல்லோரையும் பரிகாசம் செய்தனையே! இப்

போது 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று ஓடு கின்றாயே" என்று புண்ணிற் கோலிட்டதுபோற் பேசி ஏசவே, கர்ணன் வெட்கித் தலைகுனிந்து மறைந்துபோனான்.

"சொல்லலாம் இருந்துழிச் சொன்ன சொற்படி
வெல்லலாம் என்பது விதிக்கும் கூடுமோ
மல்லல் ஆளியைப் பலவளைந்து கொள்ளினும்
கொல்லலாய் இருக்குமோ குஞ்சரங்களால்" என்று

அசுவத்தாமன் கூறி நின்றான்.

பெரியோர்க்குக் கணைகளால் வணக்கம் கூறல்.

அவ்வமயம், பார்த்தன் விரைந்து ரதத்தைச் செலுத்திக் கொண்டுவந்து, வித்யா குருவுக்கும் குலகுருவுக்கும் எதிரே நின்று, இருவரது பாதங்களின் அருகிலும் இரண்டு கணைகளை விழச்செய்து ஸாஷ்டாங்க வணக்கம்கூறித் துரோணரைப் பார்த்து, "ஆசாரியரே! வித்யா குருவே!! என்பதிக்கு உரிய பெரியவரே!!!"

"யாதுமொன் றறியாவென்னை இவனலாதிலை யென்றிந்த
மேதினி மதிக்குமாறு வில்முதற் படைகள்யாவும்
தீதறத்தந்த உண்மைத் தெய்வம்நீ என்றாற்பஞ்ச
பாதகந்தன்னி லொன்றன்பதயுகம் பிழைப்ப தையா!"

ஏதுமறியாப் பாலனாக விளையாடிக் கொண்டிருந்த என்னை "வில்லுக்கு இவனன்றி மேதினியில் இல்லை" என்று உலகத் துள்ளோர் மதிக்கும்படி செய்த என் காட்சிக் கடவுள் நீங் களே யன்றோ? அங்ஙனமிருக்கத் தங்கட்கு எதிரில் நின்று தங்களுடன் போர் செய்தல் பாதகங்களில் ஒன்றாக மாட் டாதா? என்னசெய்வேன்?" என்று விநயத்துடன் கேட் டான். "ஐயா! பெரியவர்களே!! கபடப் பெருமைகொண்டு

காசினியை வஞ்சித்துத்திரியும் பாம்புக்கொடியனை யிடிபோல் எதிர்த்துக் கோபித்து நின்று சண்டை செய்வதல்லாமல், உங்களுடனும் பாட்டனுருடனும் கிருபருடனும் உங்கள் குமாரனுடனும் போர் புரிய வந்ததில்லை'' என்று பின்னுங் கூறினன்.

அப்போது, குரு, அவனைப் பார்த்துக் ''குழந்தாய், அர்ச்சுன!! நாங்கள் செஞ்சோற்றுக் கடனுக்கு உழைப்பதே கடமையாகக் கொண்டதல்லாமல், தர்மா தர்மம் நோக்கி யிவன் திறத்தில் நிற்கின்றோமில்லை; பேசிப் பயனில்லை; பகைவரைப் போர்முகத்துமதியாத வீரசிகாமணியே! வீரப்போர்க் களம் வந்து நிற்கின்றோ மாகையால், வீரர்களின் பேச்சல்லாமல், இங்கு உறவின் பேச்சுக்கள் பலிக்கமாட்டா; ஆகையால் நீ தேவருடைய பகைகளை— அதாவது காலகேய நிவாதகவசர்களை யொருவனுகவே நின்று வென்ற போர்த்திறத்தை யெம்மிடமுங் காட்டிட உன் வில்லை வளைத்திடலாம்'' என்று சொன்னர். உடனே இரண்டு பெரியவர்களும் வில்லில் அம்புகளைப்பூட்டிப் பார்த்தன்மேல் ஏவிவிட்டார்கள். ''இந்தக் குறியானது, போருக்கே உத்தரவாகும்'' என மதித்து அர்ச்சுனன் தானும் வில்லில் கணை தொடுத்து மாரியாகப் பொழிந்து விட்டான். அவ்விருவரும் இவ்வொருவனும் எதிர் நின்று பல கணைகளை விட்டனரேனும், போர்க்கள நடுவில், இருதிறப் பாணங்களும் பொருதழிந்தனவே யல்லாமல்,இருதிறத்தினர் பேரிலும் ஒரு கணையாவது பட்டதில்லை; ''என்ன ஆச்சரியம்! அர்ச்சுனனது கைவேகந்தானென்ன; வில்திறந்தானென்ன!! நம்மிட மிவன் கற்றவெல்லாம் எங்கோ காணேன்; இவனிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியபடிப் புதிது புதிதாகவன்றோ திறங்காட்டிச் சமர்செய்கின்ருன்'' என்று குரு, வாய் விட்டுச் சொன்னர். இப்படிக்கூறி யிவர் மனந்தளருந் தன்

மையில், அர்ச்சுனன் உக்ரமாக வீரா வேசம் கொண்டு, தேரி னைச் சுழற்றியும் எழுப்பியும் தாழ்த்தியுஞ் செலுத்தச் செய்து, அவர்கள் கணைகள் ஒன்றேனும் தன்மேலாவது சாரதிமேலா வது தேரின் மேலாவது படாமற் செய்துக் கொண்டு, கீழும் மேலும்நேருமாகப்பாணங்களைக்கொட்டிக் குருமார்க ளிரண்டு பேரையும் பாணத் தொகைகளால் மூடி, தன்னையும் அவர் தம்முள் ஒருவர்க்கொரு வரையும் மற்றவரையும் பாராவண் ணம் செய்து, அவர்களது தேர்க் கொடியைக் கீழே தள்ளித் தேரும் சாரதியும் கீழ்விழச் செய்து, வில்லின் நாணினையறு த்து மேலும் பாணங்களைத் தொடுத்துக் கும்பிட்டு நின்றான். "அவன் நம்மைக் கொள்ள நினையாதிருந்தது மேல். "இனிப் பெரும்போரிலாவது எதிர் நின்று இன்னொருமுறை இவனது காவேக சரவேகங்களைப் பார்த்திடுவோம்" என்று முதுகு காட்டி யோடினார்கள். உத்தரனுக்கு எதிரிகளைக்காணும் போது அடக்க முடியாத நகைப்பும் ஆனந்தமும் அர்ச்சுன னைக் காணும் போது அடக்கமுடியாத நாணமும் பயமும் தோன்றி நின்றன.

தந்தை போரழிந்து போகின்றானெனத் தெரிந்த அசு வத்தாமன், கோபத்துடன் விரைந்தோடி வந்து அர்ச்சு னன் எதிரே வந்து, பாணங்களை யெய்து, அர்ச்சுனனது வில்லின் நாணை யறுத்து விட்டான். மந்தரம் போலும் தோளுடையவிஜயன் மற்றொரு வரிவில்லையெடுத்து நாணேற் றிச் சிவன் கொடுத்த அஸ்திரத்தைப் பூட்டிப் பூஜித்துக் குறி பார்த்துத் தொடுத்தான். இந்த ஒரே அஸ்திரத்தால், வில்லும் அம்பும் தேரும் சாரதியும் அழித்து தன்வலியும் அழிந்தபோ ய்த்தான் தப்பினாற் போது மென்று பின்புறங் காட்டியோடி விட்டான்; மற்றை யோரைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

சொல்லத்தான் வேண்டுமா? கிருபன் துணை மன்னர் யாவரும் ஓடத்தலைப்பட்டார்கள். பொழுதும் உச்சிக்கு வந்தது.

மறுபடியும் பெரும் போர்

"இன்னம் பொழுது மிருக்கின்றது; கவர்ந்த பசுக்களும் மீட்கப்பட்டுப் போயின; போரில் நாம் புறங்கொடுத்தோடுதல் அழகாக மாட்டாது; யாவரும் வாருங்கள்; அவனைச் சூழ்ந்துநின்று போர்செய்வோம்; எப்படியிருந்தாலும் அவன் ஒருவன்தானே! பலருக்கு ஒருவன் எப்படிப் இணையாகு மென்று பார்ப்போம்" என்று விதுரன் சொல்லப் பீஷ்மனும் துரியனும் சிந்து தேசபதியும் ஒப்புக்கொள்ள, யாவரும் திரும்பிவந்து, பற்குணனைச் சூழ்ந்துகொண்டார்கள். தேரைச் சுழற்றியும் எழுப்பியும் தாழ்த்தியும் தனது நினைவின்படியே ரதத்தைச் செலுத்தக்கூடிய சாரத்தியத் திறம் உத்தர குமாரனிடம் இருப்பதை முன்னரே யுணர்ந்துகொண்ட சுவேத வாகனனாகிய அர்ச்சுனன், மிக உற்சாகம் கொண்டு, உத்தர குமாரனுக்கும் உற்சாக மூட்டித் தேரைச் சக்காகாரமாகச் சுழற்றச் செய்தும் மேலும் கீழும் உயர்த்தவும் தாழ்த்தவும் செய்தும், எல்லார்பேரிலும் நாற்புறங்களிலிருந்து பாண வருஷங்களைக் கொட்டிப் போர்த்திறங் காட்டி நின்றான். மேற்கில் இந்திராஸ்திரத்தையும் கிழக்கில் வருணாஸ்திரத்தையும் வடக்கில் யமாஸ்திரத்தையும் தெற்கில் குபேராஸ்திரத்தையும் கோடிகோடியாகத் தொடுத்து எதிரிகள் படைகள் படப்படத் தணியாமல் எறிந்துகொண்டே இருந்தான். நாகக் கொடியோன் தன்னைச் சூழ விருந்த தனது மெய்காவற் படைகளழிந்து தேரழிந்து மாவொழிந்து சாரதியும் வீழ்ந்திடத் தன் வில்லழிந்து வலியுமழிந்து தானும் மூர்ச்சை போய் வீழ்ந்துவிட்டான். மற்றவர்களுமப்படியே வீழ்ந்து

இறந்தவர்போல் ஆனார்கள். எதிர் பொருவார் யாரும் காணாத பார்த்தன் சிறிது பொறுத்தும் பார்த்தான். "எதிரிகள் வலி யடங்கினார்கள். மூர்ச்சை தெளிந்து கண்விழித்தெழுந்து இவர்கள் ஓடுதற்குமுன் வெற்றிக்கு அறிகுறியாகச் சில கவர்ந்துபோதல் வேண்டும்" எனச் சிந்தித்துத் தேர்விட்டிறங்கி, தானும் உத்தரனுமாகத் துரியன் கர்ணன் முதலியோருடைய மேனியிலுள்ள ஆடையும் ஆபரணங்களும் களைந் துருவியெடுத்து, "இவை உத்தரைக்கு விளையாட்டுப் பொருள்களாகும்" என்று எடுத்துக்கொண்டு திரும்பிவந்து தேரிலேறிக்கொண்டான். அப்போது எல்லாரும் மூர்ச்சை தெளிந்து எழுந்து தத்தம் தேரில் ஏறிக்கொண்டு, அர்ச்சுனனைப் பார்த்துத் தொழுது போற்றித் துதித்துப் போனார்கள். துரியனும் எழுந்து தேரின்மேலேறி நிற்றலையுணர்ந்த வீர வில்விஜயன், "பாம்புக்கொடியுடைய பயங்கொளியரசே! இந்தா! முடிவாக ஒரு கணை வருகின்றது உனது முடிக் கிரீடத்தைத் தள்ளுதற்கு, கூடுமாயின், தடுத்துக்கொள்; நான் கீழே இறங்கி வந்தது, உனது முடியை எனது காலால் இடறுவதற்காகவேயாயினும்மெய்ம்மறந்து மூர்ச்சித்து கிடக்கும்போது அது செய்தல் வீரமாகமாட்டாதென வெண்ணித் துணியும் ஆடையும் அடையாளத்துக்காகக் கவர்ந்து திரும்பினேன். மாயச்சூதை வகுத்துக் கபடத்தால் எம்மை அடிமையாக்கியபோது தருமத்துக்கு கட்டுப்பட்டு நாங்கள் தலைகுனிந்திருக்கின்றோமென்று முணராமல், எங்கள் வஸ்திரங்களை யுருவச் செய்த பாவிகளினும் கொடிய கடைப்பட்ட பாவியாகிய உன் பொருட்டு எத்தருமமும் பார்த்தல் கூடாதெனினும், எங்கள் குல தர்மத்தையும் வீர தர்மத்தையும் பாது காத்தற் பொருட்டு அது செய்யாது வந்தேன். இப்போது எச்சரிக்கை செய்தே இக்கணை யேவுகிறேன். வல்லையாகில்,

உன் முடியைக் கீழ் விழாமல் தடுத்துக்கொள் பார்க்கலாம்" என்று சொல்லி ஒரு கணையைச் சுழலச் செய்து வேக மடங்கா வண்ணம் சென்று கவரும்படிக்காகப் பார்த்து எய்து விட்டான். வேகமும் சுழற்சியும் கொண்டு வரும் அந்த விசித்திர பாணத்தை யாரும் முயன்றும் தடுக்க முடியாமல் ஏமாற்றமடைந்தனர். கணையும் சென்று, துரியனது மகுடத்தைக் கீழே தள்ளியது. "மன்னன் மகுட பங்கமானன்" என்று எங்கும் கூக்குரலெழுந்தது.

காவலரை நேற்றே கடந்தது.

எதிரில், நகைத்துப் பரிகசித்து நின்ற பற்குணனைக் கிட்டி வருவார் யாருமிலரானார். மதயானைகள் சூழ நடுவில் நிற்கும் பிரசண்ட சிங்கம்போல் நின்றான். மகுட பங்கமான மன்னன், மகுடத்தை யெடுத்துக் கொள்ளவாவது, இன்னொருவரை யெடுத்துக் கொடுக்கச் சொல்லவாவது மனமெழாமல், மகுடங் கெட்ட தலையுடனின்று, வெட்கங் கெட்ட வாய் திறந்து பாட்டனாரைப் பார்த்து இது பேசலானான்; "சொல்லிய காலம் செல்லா முன் இவர் தோற்றம் செய்தார்; ஆகையால் பின்னும் இவர் காடு புகும்படியாகச் சொல்வீர்" என்று நேரில் பார்த்தனிடம் பேசுவதற்கும், அவனைப் பார்த்தற்கும் நாணிப், பீஷ்மனைப் பார்த்துக் கூறினான். பாட்டனார் பதில் கூறுகின்றார்; "பயித்தியக்காரா! தலைமுடியிழந்ததைச் சற்றும் யோசியாது, காலில் முள்தைத்திருக்கின்றதா பாருங்கள் என்பது போலப் போலிக் கணக்கைப் பார்த்துச் சொல்லுகின்றாயே! இன்னலுழந்த இவர்-இவ்வளவு வலிமையையுடைய இவர்-அவ்வளவு அறமுடைய இவர்-யாருக்கும் தோலாத இவர்-கணக்கில் தோற்பார்! கணக்கு முடியு முன் தோன்றுவாரா? இஃதென்னே யோசனை; வலியப் போர்க்கு

வந்து வஸ்திரம் இழந்து நின்றாய்; நினக்கு இதுவு மொரு யோசனை பேறாலும்; சந்திர வியக்கத்தினால் காலம் நேற்றே முடிந்து நின்றது; ஒரு நாள் மிச்சம் கொடுத்தே இவர் வெளிப்பட்டு நிற்கின்றார்கள்'' என்று இழித்துச் சொன்னார். யாவரும் பாசறை சேர்ந்தனர்.

வில்லிலும் சொல்லிலும் வீரமிழந்து தோல்வி பெற்ற வெட்கமே பூஷணமாகக் கொண்ட வீரமாசுணக் கொடி படைத்த வேந்தர் தம் வேந்தனான இராஜாதி ராஜ துரி யோதன மகாராஜன், மீசைகளை முறுக்கிக்கொண்டு தலையை வாரிக்கொண்டு, பகலெல்லாம் வெளிக்கிளம்பாமல் கூடாரத்திற் படுத்திருந்து, இரவு யாருமறியாமற் புறப்பட்டு நகரம் போய்ச் சேர்ந்தான். வேந்தனை முதுகு கண்ட வெந் திறல் விஜயன், வெற்றியுடன் திரும்பிப், பின்னரும் காளி கோயில் வன்னி மரத் தடியிற் சென்று படைகளை யெல்லாம் சேமித்து முன்போல் மந்திரஞ் சொல்லிக் காவலில் வைத்து, அர்ச்சுனவுருவம் மாறிப் பேடியுருவே தரித்துக் கொண்டு, கவர்ந்த ஆடையாபரணங்களையும் தேர்த்தட்டில் வைத்து உத்தர குமாரனையங்கு உட்காரக் கட்டளையிட்டுத்தான் முன் வந்தது போலவே கயிற்றையும் கோலையும் கையிலேற்றுக் குதிரைகளைச் செலுத்திக் கொண்டு நகரின் பக்கம் திரும்பி வருகின்றான். தேரினை வேகமாகச் செலுத்தி வந்து, நகருக் கணித்துள்ள பூங்காவி லிறங்கிக் குதிரை களையவிழ்த்துக் குளிப்பாட்டித் தூசுகளைத் துடைத்து அவற்றின் களைப்பாற்றி மேயவிட்டுத் தாங்களும் கால் கைகள் சுத்தம் செய்துகொண்டு, "பேடி தேர் செலுத்தச் சென்றபிள்ளை யுத்தரன், கோடி கோடியான பகைவருடைய தேர் முதலிய படைகளை யழித்துக் குருகுலப் பெரு வீரரை

யும் முதுகு கண்டு ஆநிரைகளையும் மீட்டுக்கொண்டு வருகின்ருன்' என்று மச்ச நாடுடை மன்னர்பிரானுக்குச் சொல்லுங்கள்'' என்று தூதரை யனுப்பிவிட்டுப் பணிவுடனும் பயத்துடனும் நின்ற உத்தர குமாரனை வீற்றிருக்கும்படியாக வற்புறுத்தி அருகிருத்தித் தங்கள் கதைகளை யொருவாறு குறித்து, "பன்னிரண்டு ஆண்டுகள் வனத்திற் கழித்து, உன் தகப்பனாரது உண்மை யறிவையும் உயர்ந்த குணங்களையும் நம்பியே அஞ்ஞாதவாஸம் ஓராண்டும் உங்கள் நாட்டில் வதிந்து நாங்கள் கழித்தோம்; அந்த ஓராண்டும் நேற்ருேடு முடிந்துவிட்டது; இனி நாங்கள் வெளிப்படலாம்'' என்று உத்தர குமாரன் அறியும்படியாகச் சொன்ஞன்.

கங்க (தரும) னும் விராட மன்னனும்

இங்கே இவர்களிருவரும் இவ்வாறிருக்கட்டும்; நாம், முற்பகல் தென்திசை சென்று ஆநிரையை மீட்டு வெற்றி பெற்று வந்த விராடமன்னனைப் பற்றிப் பேசுவோம்.

தென்திசையில் வெற்றிகொண்டு, கவர்ந்துபோன ஆநிரைகளையும் மீட்டுத் திரிகர்த்தனையும் தேரிற்கட்டி வந்த விராட மன்னன், கங்கவேதியர் சொற்படித் திரிகர்த்த மன்னனை யவிழ்த்துவிட்டு, இடையில் ஒரு பூங்காவில் தங்கிக் களைப்பாறி இரவு கழித்து விடியப் புறப்பட்டு நகர்வந்து, நல்வரவேற்புடன் அரண்மனை புகுந்து, "உத்தரகுமாரன், பேடி தேர் செலுத்த வடதிசை நிரைமீட்சிக்குச் சென்றிருக்கின்ருன்''என்பது கேட்டுப் பெரிதும் வருந்தினனுயினும் "கூடச் சென்றது பேடியாகில் நமக்குப் பயமில்லை'' என்று கங்கர் தேற்றத் தேறியிருந்தான். மேலும் மேலும் ஒற்றர்களாற் செய்தி தெரிந்து, "குமாரன் வெற்றியுடன் திரும்பி வரு

வான்'' என்னும் திருப்தியும் கொண்டிருந்தான். அன்றிரவு கழிந்த பின்னர்ச் சூரியனுதயம் முன்னர் எழுந்து காலைக் கடன் முடித்துக்கொண்டு, மேலும் மேலும் நற்செய்திகள் கிடைக்க மகிழ்ந்து, பேடியுடன் மகன் மகரந்தச் சோலையில் தங்கியிருக்கின்றா னென்பதையும் ஆநிரைகள் யாவும் ஒரு கன்றும் ஒழியாமல் மீட்கப்பட்டன வென்பதையும் கேட்டு உளம் பூரித்துத் தக்க மரியாதைகளுடன் மகனை நல்வரவேற்கும்படியான ஏற்பாடுகள் செய்துவிட்டு, மகன் வருமளவும் பொழுது போக்குக்காகக் கங்கருடன் கவறுடல் செய்திருந்தான்.

கவறுடலில், முதலில் கங்கரே வெற்றிகொண்டார். கண்ட மன்னன், வேகம்கொண்டு, "குருகுல மன்னர் முன்னம் பசுக்களைக் கவர்ந்து போலி வெற்றியுடன் நின்றனராயினும், எனது குமாரன் உத்தரவீரன் சென்ற பின்னர் முற்றும் தோற்று முதுகுகாட்டித் தோல்வியுற்றதுபோலவே உமது முதல் வெற்றியுமாகும்; பின்னர் நானே வெல்வேன். பாருங்கள் என்று'' சொன்னான். அதனைக் கேட்ட கங்கர்; "மன்னா! அரவக்கொடியோன் தனது பெருத்த சேனைகளுடன் வலி யழிந்துதோல்வியுடன் முதுகுகாட்டித்திரும்பும்படியாகச் செய்தது பேடியின் திறமேயாகும்; குருகுலப் படையை முறியடித்து வெற்றி கொள்ளற்கு, உமது குமாரனுக்கு வலியேது" என்றார். மற்றும், "மன்னவா! பிருகந்நளையென்றேதும் பேடியைப் பேடியென்று கருதவேண்டாம். அவ்வுருவத்துள்ளிருப்பவன், முன்னர்க் காண்டவம் எரித்தகாளையாகும். தேவர்க்காகக் காலகேய நிவாத கவசர்கள் என்னும் அவுணர்களைக் களத்தில் கொன்ற வீரனாகும்'' என்பதை மனத்திற் கொள்ளவேண்டுகின்றேன்''னென்றுசொன்னார். மன்

னவன் சிறிது கோபம்கொண்டு, "கோடியான குருக்களையென் மகன் கொன்றான் என்று நான் சொல்லும்போது, பின்னும் பின்னும் பேடியையே புகழ்ந்துபிதற்றுகின்றீரே. அரசர்சபை யிலிருந்து வாழும் அமைதியின்னும் நீர் கற்றிலீர்போலும்; மன்னவர் சொல்லை மறுத்துச்சொல்வரோ மறைவலாளர்" என்று வீரத்துடன் பேசினான். பின்னரு மிடங்கொடாமல், "மன்னவா! மனம் மயங்காமல் கேட்பீர்!! கன்னன் வில் லாசிரியன் துரோணன் விதுரன் விடுமன் அசுவத்தாமன் கிருபன் என்றின்ன வீராதி வீரர் மனம் தம்மை உமது குமா ரனேவென்று புறங்கண்டான் என்று உமது உறுதி போலும்; இதனையுமது உள்ளம் சந்தேகிக்காமல் நம்புகிறதோ?" என்று பேசினார். அரசனுக்குக் கோபம் அதிகரித்து விட்டது; "என் மகன் வென்றுவரும் உண்மை யறிந்தும், சிறிதும் நடு நிலைமை பெறாது, எனக்கு எதிரே என் மகனையிழித்துப் பேசு கிறீர், நீர்; உம்மோடென்னை யுறவு? என்ன விளையாட்டு; போம்" என்று கோபத்துடன் பகட்டை வீசி யெறிந்தான். அது அகஸ்மாத்தாகக் கங்கர் தலையிற் பட்டுக் காயமுண் டாக்க ரத்தமும் கொட்ட ஆரம்பித்தது. அப்போதுதான் ஏதோ காரியமாக அங்குவந்து நின்ற விரதசாரிணி அதனைக் கண்டாள்; "ஆஹா! இவரது நெற்றி யிரத்தம் ஒரு துளி கீழே சிந்துமாயின், வீரர் நால்வரும் வெகுண்டு இம்மன்னவன் குலத்தையே வேருடன் அழித்து விடுவரே; இது குடியிருந்த இடமாயிற்றே"யென்று பயந்து, ஓடோடிவந்து நெற்றியிரத் தம் கீழே விழுமுன் துடைத்துத் துணி கொண்டு கட்டி விட்டாள். வண்ணமகள் கையால் கட்டிய காரிய முணர்ந்து, மன்னன், மயக்கமும் பயமுங் கொண்டு "என் செய்தேன்! என் செய்தேன்; கோபம் பாவம்" என்று சொல்லியிரங்கி யேங்கி நின்றாள்.

மகனைப் பேடியுடன் வரவேற்றல்.

அவ்வமயம், "பல வாத்தியங்கள் முழங்கிச் சூழ மகன், சகல வைபவங்களுடன் பேடி தேர் செலுத்த நகர் வலம் வருகின்றான்" என்ற செய்தி யெட்டியது. குமாரனை வீதிகள் தோறும் சிறப்பாக நல்வரவேற்று அயினி நீர் சுழற்றித் திருஷ்டி கழித்து மலர் மாரிபெய்து ஜயகோஷம் செய்தார்கள். எவ்வீதிகளும் சுற்றி நகரை வலம் வந்து, பெருங் கூட்டத்துடனும் நல்லுபசாரத்துடனும் அரண்மனைப் பெருங் கோயிலின் வாயிலில் வந்து சேரும் குமரனை மன்னரும் கங்கரும் எதிர் நின்று உபசரித்தேற்றார்கள். குமாரனுக்குப் பல்வகை நீராசன மெடுத்துத் திருஷ்டிகள் கழித்துத் தேர் விட்டிறங்கச் செய்தார்கள். குமரன் தேர் விட்டிறங்கியதும், தேரைப் பாகனிடம் ஒப்பித்துப் பிருகந்நளைப் பெண் மக்கள் கூட்டத்திற் கலந்து கொண்டாள். உத்தரன் இறங்கியவுடன் தந்தையை வணங்கினான். தந்தையும் மகனைத் தழுவிக் கொண்டான். அடுத்துக் கங்கரைக் குமாரன் வணங்கி, யவராலும் நன்கு தழுவப் பெற்றான். மன்னனாகிய தந்தையிடம் காட்டிய பக்தியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக மறையவராகிய கங்கரிடத்திற் காட்டிய மைந்தன், வணங்கிய முகத்துடன் அப்பெரியவரைப் பாதாதிகேசம்பார்த்து நெற்றியில் வடுவைக்கண்டு, மனம் பொங்கிப் பதைத்து, "பாவியார்" என்று ஆத்திரம் கொண்டு நின்றான். அப்போது, கங்கர், மிகு சாந்தமாக "இது விளையாட்டில் நிகழ்ந்தது அப்பா! நம்மால் வெறுக்கப்படக்கூடிய நம்மைப்பகைக்கக்கூடிய யாரும்செய்ததில்லை; இது நிகழ்ந்ததும் ஒரு பெரும் படிப்பினைக்காகவே தான்! நீ பதறாதே! உனது இப்புதிய உணர்ச்சியையும், கிளர்ச்சியையும், அச்சத்தையும், ஆத்திரத்தையும் காணும் போது, நீ எங்கள் உண்மையை யறிந்துளாய் என்

பதை யூகித்துக்கொண்டேன். நீ பதறவேண்டாம்'' என்று பணித்தனர். தந்தையைப் பார்த்தான்; நிகழ்ந்ததைத் தந்தையும் விவரமாகக் கூறினன். மைந்தன் மன்னனைப் பார்த்து, “ஆம்; உண்மைதான்; மற்று எனக்கா வெற்றி! குருகுலப் பெருமன்னர் சேனையெங்கே? நானெங்கே? அதினும் நாங்கள் ஒரு தேருடன் போயிருந்தோம்; இதில் அப்பெரியாருடன் உமக்கேன் வாதம் நிகழ்ந்தது? சென்றவர் போர்முனை வென்றவர் பகைவரைக் கொன்றவர், பேடிபோல் அதோ நின்றவர் எல்லாம் அந்தக்குருகுல வீரசிகாமணியாகிய வில்விஜயரே யாவர்; விண்ணவர்கோன் மதலையே யாவர்; இவ்வுண்மையை யறியாது வீண்வாதம் விளைத்துப் பிரமாதம் செய்துவிட்டீர்களே'' என்று தந்தைக்குச் சொல்லிக் கங்கரை மறுமுறையும் வணங்கிப் “பெரியோரே! பேருலகம் புகழும் பெருந்தவத்தீரே!!

“செறுப்பது பெருமையன்று சிறியவர் செய்ததீமை
பொறுப்பதே பெருமையென்று பூசுரன் பாதம்போற்றி
வெறுப்பது விளைத்ததாதை வீழ்ந்தபின் தானும்வீழ்ந்து
மறுப்பது புரியாஞானி மனத்துனி யகற்றினனே” என்றான்.

தந்தையும் அவரை வணங்கத் தானும் மூன்றும் முறையும் வணங்கித் துதித்துப் போற்றினன். சுதீட்சணை யிவற்றையெல்லாம் கண்டு மகிழ்ச்சிகொண்டு, வணங்கி நின்ற மைந்தனைத் தழுவிக்கொண் டுச்சிமோந்தாள். பேடியும் உத்தரைக்கு விளையாட்டுப் பொருள்களாகக் கொணர்ந்த தூசும் பூணும் கொடுத்துப் பெருமகிழ்வு கொண்டிருந்தாள்.

மகன், தந்தையுடன் தனித்திருக்கும்போது, பேடி தேர் செலுத்தத்தான் சென்றது முதலாகத்தான் குருகுலச்

சேனையைக் கண்டு பயந்து, இடையாக விஜயன் துரியனை மகுட பங்கம் செய்தது, இறுதியாக எல்லாவிவரமும் சொல்லி "பிதா! கங்கர் என்பார் தருமராஜன்; பலாயனன்தான் வீம வீரன்; பிருகந்நளையே பார்த்த மன்னன்; தாமக்கிரந்தியும் தந்திரிபாலனும் இளையோரிருவர்; விரதசாரிணியே திரௌபதி; அஞ்ஞாதவாசத்தின் பொருட்டு நம் நகர் நாடி வந்து காந்துறைந்தார்கள்; இவ்வுண்மை தெரியாது அவர்பொருட்டு நாம் எத்துணையோ பிழைகள் செய்துள்ளோம்; பிதா! நாம் செய்துள்ள பிழைகட்கெல்லாம் பரிகாரமாக நாம் ஒன்று அவசியம் செய்தல் வேண்டும். நமது உத்தர குமாரிக்கு ஏற்ற வீர மணமகன் வில்விஜயனென்றே மதித்தல் வேண்டும்" என்று மற்றும் சொன்னான். தாதையும் சம்மதித்துப் போனான்.

மகனுரைத்த உண்மை கேட்டு, மன்னன், கங்கரைப் பலகால் வணங்கிப் பிழைபொறுத்தல் பெரியவர் கடனேயாகும் என்று பெரும்போது பெரும் உரைகள் கூறிப் போற்றித் துதித்திட்டான். மற்றை நால்வரையும் நங்கையையும் கண்டு தனித்தனியே உபசாரங்கள் கூறிப் போந்தான். சூரியாஸ்தமனமானதும், நித்தியக் கடன் செய்து யாரும் மகிழ்ந்துரையாடி யிருந்தார்கள்.

அன்றிரவே, தகவுடைய பாண்டவர் ஐவர்களும் திரௌபதியும், தனித்திருந்து ஆலோசனைசெய்து, நேற்றோடு அஞ்ஞாதவாசகாலம் கழிந்து ஒரு நாளும் அதிகமாயிற்று. இனி ஐயமே யாதும் கொள்ளாமல், நாமறுவரும் நமது நமது சுயரூபம் கொண்டிருக்கலாம் என்று தீர்மானித்து, பரகாயப்ரவேசம் செய்வார்போலத் தத்தம் புனையுருவங் களைந்திட்டுப் பழைய வுருவத்தையே கொண்டிருந்தார்கள். உதயபானுவும் வெளிவந்தான். இவரும் வெளிப்பாடு காட்டினார்கள்.

வெளிப்படல் சருக்கம்.

"எக்கடலும் எக்கிரியும் எவ்வுலகும் உலகில்
தக்கபல யோனிகள் சராசரம் அனைத்தும்
மிக்கவிதி யால்விதிசெய் விதியினை விதிக்கும்
செக்கமல நாபிமுகில் சேவடி துதிப்பாம்."

ஐவரும் பாஞ்சாலியும் முன்னுருக்கொண்டு நிற்றல்.

காலையில் எழுந்து ஐவரும் பாஞ்சாலியும் கதிரவனைத் துதித்து, ஸ்நானாதி நியத கர்மங்களை முடித்துக்கொண்டு, சூரியனிலும் பதின்மடங்கு ஒளி மிகுந்தவர்களாகி அறுவரும் கங்க வேதியர்க்காக அமைத்துக் கொடுத்துள தனியிடத்தில், இருந்தார்கள். வாயு புத்திரனாகிய வீமனும் இந்திரன் மதலையாகிய அர்ச்சுனனும், அச்வினி தேவர்களின் புதல்வர்களாகிய நகுல சகாதேவர்களும் அடி தொழுதிறைஞ்சப் பாஞ்சாலியுடன் பாண்டுவின் முதற்புத்திரனாகிய அறன் மைந்தன் உதிஷ்டிரன் அலங்காரமாக வீற்றிருந்தான். அப்போது தமையனை ஏற இறங்க நன்றாய்த் தரிசனம் செய்த அர்ச்சுனன், அவரது நெற்றியிலிருந்த வடுவினைப்பார்த்து மனம் நொந்தவனாகி, "இஃதென்னை வடு?" என்றான். திரௌபதி, விவரமெல்லாம் மெதுவாக அவர்கட்குச் சொன்னாள். கேட்டவுடன், வீமனும் விஜயனும் மிகு கோபங் கொண்டவராகி, "இவ்வூரை யிப்போதே சுட்டுக் கொளுத்தி மச்சநாடொன்று இருந்ததில்லை யென்னும்படி, அரசும் குடிகளும் ஒழிந்துபடச் செய்வோம்" என்று எழுந்தபோது, தர்மராஜன், அவர்களிருவரையும், சமாதானம் செய்து,

"ஒன்று உதவிசெய்யினும் அவ்வுதவி மறவாமல்
பின்றை யவர்செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர்
நன்றி பலவாக ஒருநவை புரிவரேனும்
கன்றிடுவ ரன்றிமுதுகயவர் நினையாரே."

"சகோதரர்காள்! ஒரே உதவி செய்திருந்தாலும், அதனை மற வாமல் மனத்தில் வைத்திருந்து, பின்னர் அவர்கள் நூறு பிழை செய்வாராயினும், அப்பிழைகளனைத்தையும் பொறுத் திடுவது பெரியவரியற்கை; பல நன்றிகள் அடுக்கியடுக்கிச் செய்திருப்பினும், அவர் ஏதேனும் தவறியொருபிழை செய் திடுவாராயின், அந்தப் பல நன்மைகளையும் மறந்திட்டு, இவ் வொரு பிழைக்காகக் கோபித்துத் தீங்கு புரிந்திடுவது தீயவ ராகிய இழிந்தோர் செய்கையாகும். எரிவனத்திலிருந்து பன் னிரண்டாண்டுகள் துன்பம் அநுபவித்த நமக்கு, இந்த ஓராண்டு அஞ்ஞாதவாசத்தையும் வெகு சந்தோஷமாகவும் மிகு சுலபமாகவும் கழித்திடும்படியாக இடங்கொடுத்துதவிய மன்னவனையும் அந்நாட்டினையுமோ நாம் அழித்திடல்வேண் டும்!; பதறாது இருங்கள்; நம்மியற்கைக்கும் பெயர்க்கும் தான் தோஷம்படும்" என்று நல்லுரை பகர்ந்தான்.

"குந்தி மைந்தர் ஐவராகிய குருகுலம் விளங்கப் பிறந்த ஐந்துபேரரசர்களும் அழலிற் பிறந்த கற்பிற்கரசாகிய பாஞ் சாலியும் தம்முருக்கொண்டு விளங்கி யிருக்கின்றார்கள்" எனத் தெரிந்துக்கொண்ட விராட மன்னன், நல்ல சிந்தனை யுடனும் திறையாகும் மிகு செல்வ நிதியுடனும் தன்மைந்த னுடனும் வந்து அவர் மலரடிகளில் வணங்கித் துதித்து நின் றான். தருமன் விராடமன்னனை யெடுத்து மார்புறத் தழு விக்கொண்டு, "மன்னர்குல திலகனே! மச்சநாடாளும் வேந்தே!! ஓராண்டு உடனிருந்து உனது நீதிநெறிகளை நன்று யுணர்ந்திருக்கிறேன். உன்னைக்காட்டிலும் இப்பாரி னில் உயர்ந்தவர் கிடையாதென்பதை நான் பிரத்தியக்ஷ ஸாக்ஷியாக இருந்து நிறுத்துவேன். உன்னுடைய நட்பு இந்த அஞ்ஞாத வாஸகாலத்திற் கிடைத்துளது நாங்கள்

செய்துவைத்த பாக்யப்பேறே யல்லாமல் வேறெது?" என்று உண்மையான உபசாரவார்த்தைகளைச் சொன்னான். அதற்கு விராடமன்னன், "குருகுல சக்ரவர்த்தியே! பொறுத்தவர்க் கன்றி மற்றூர்க்குப் புகழேது? என்பதை நடத்திக்காட்டி யிருக்கிறீர்கள். தெரிந்தும் தெரியாமலும் குறைகள் பல செய்துள்ள என்னையும் ஆதரித்து உபசாரம் கூறுகின்றீர்கள்; நான் நேரில் வருதற்கே நாணமும் அச்சமும் கொண்டிருக் கின்றேன். எல்லாப் பிழைகளையும் பொறுத்திட வேண்டு கிறேன்" என்று பின்னரும் வணங்கினான்.

"மச்சபூபதி! அதிக உபசாரம் சொல்லத் தெரியாம லிருக்கிறேன்; 'நான் பொறுத்தேன்' என்னும் மாற்றம் வேண்டுமானாலும் இதோ தந்தேன். நீ நின்புத்திரர்களுட னும் பிரஜைகளுடனும் நீண்டகால வாழ்வுடையவனாக இரு ந்து, இந்நீள் நிலத்தவர்க்கு வேண்டிய உதவி செய்துக் கொண் டிருக்கும்படியாக எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராகுக" என்று பின்னரும் வாழ்த்தி, ஆஸனத்தில் அம ரச் செய்தான். அப்போது, மைந்தன் உத்தரகுமாரன், தரும ராஜனை வணங்கி, "எத்தரைக்கும் நிழலைத்தரும் தனிக் குடையையுடைய எந்தையே! தரும சக்கரவர்த்தியே! இந்த நிலமும் இந்தப் பிரஜைகளும் இந்தக் குடும்பமும் யாங்களும் உங்கள் ஏவலுக்கமைந்தவர்களே யாவோம்; என் சகோதரி உத்தரமங்கையும் இதோ, இவ்வில் விஜயற்கே யுரியவள். இவற்றை யங்கீகரிக்க வேண்டுகிறோம்" என்று பிரார்த்தித் தான். அதற்கு அர்ச்சுனன், மறுமாற்றமாக, "வீரம் கல்வி அறிவு முதலியவற்றை யுடைய காளைபோன்ற உத்தர குமாரா! உன் சகோதரி உத்தர குமாரியானவள் குடும்பப் பழக்கம் வயது இவற்றில் எனக்கு மிகவும் இளையாள்; மற்

றும் அவள் என்னை யாசிரி பதவியில் வைத்து உபசரித்திருக்கின்றாள்; ஆகையால், அவள் எனக்கு உரியாளாதல் எவ்வகையிலும் பொருந்தாது. என் மகனுக்குரியவளாகலாம்" என்று சொன்னான்.

நேயர் மன்னர்கள் வந்து சேரல்.

விஜயன் சொன்ன உறவே உரிமைக்கும் கடமைக்கும் பொருத்த முடையதாயிற்று. யாவரும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் யாவரும் ராஜஸபைக்கு வந்து சேர்ந்து, ராயஸக்காரர்களை வருவித்துத் தமது அஞ்ஞாத வாச மொழிந்து தாம் வெளிப்பட்ட செய்தியை மித்திர மன்னர்க்கெல்லாம் எழுதச் செய்து, தக்க தூதரையும் அனுப்பினார்கள். எட்டுத் திசைகளிலுமிருக்கும் நேய மன்னர்கள், பாண்டவரது அஞ்ஞாத வாஸகாலச் செய்தி யொன்றும் அறியாது கவன்று இருப்பார்களாதலின், வெகு விரைவில் அவர்கட்குத் தெரிவித்து வரும்படியாக விரைந்து அனுப்பினார்கள். சிலநாட்களிலெல்லாம், மித்திர மன்னர்களெல்லோரும் வந்து கூடினார்கள். துவாரகையிலிருந்து கண்ணபிரான், பாண்டு மைந்தர் அறுவருடனும் வந்து சேர்ந்தார். மற்றும், சிவேத குமாரனையும் உடனழைத்து வந்தார். கண்ணபிரானைக் கண்ட ஐவரும் எழுந்து வணக்கம் புரிந்து உபசாரம் கூறினார்கள். மறு உபசாரம் கூறிய மாதவப்பிரான், சிவேதன் சரிதத்தையும் உடன்கூற எடுத்து, சிவேதன் சிவனைக் குறித்துத் தவஞ்செய்து பல ஆயுதங்கள் பெற்ற வாலாறுகளையெல்லாம் சொன்னார். பாண்டவர் ஐவரும் தங்கள் புத்திரர்கள் அறுவரையும் தழுவி யணைந்து மகிழ்ந்தார்கள். மற்றும் பாஞ்சால போஜகுலத்தார் பாண்டி மன்னர்கள் மத்திரதேசத்

தார்கள், மாகதேயர்கள், கேரளர் பொன்னி நாடாகிய சோழர்முதலிய நேய மன்னர்களும்வந்துசேர்ந்தார்கள். வந்து வணக்கம்புரிந்த மன்னர்க்கெல்லாம் நன்கு ஆசிகளும் உபசார உரைகளும் கூறியிருந்தபோது, மன்னர்கள் யாரும், மூவுல கத்திலும் மேம்பட்ட பலவான்களும் வில்லாளிகளுமாகிய பாண்டவர் ஐவரும், பெரியோர் சொல்லைக் காப்பதற்காகவே பன்னிரண்டாண்டு வனவாஸம் புகுந்த தல்லாமல், யாவரா னும் இயற்றுதலில் தவறு படக் கூடியதாகிய நிர்ப்பந்த நிபந் தனையுள்ள அஞ்ஞாத வாசத்தையும் வெகு அருமையாக நடத்தி வந்தமைக்குத் துயரமும் களிப்பும் கொண்டவராகிப் புகழ்ந்து பேசினார்கள்.

அதற்கு உபசாரமாகப் பாண்டுவின் குலமுதல்வன், பரிந்து பேசி, "வன வாழ்க்கையால் நாங்கள் அடைந்திருந்த துயரமெல்லாம், அஞ்ஞாத வாஸமெனும் பேர்கொண்ட இவ் வோராண்டும் இந்த விராட நன்னகரிலிருந்து, விராட மன்ன ரால் உபசரிக்கப் பெற்றுக் கழித்தனுபவித்த சுகங்களால், ஒழிந்து போயின" என்று கூறினர். "மற்றும், நேய மன்னர்க ளாகிய நீங்கள் அனைவீரும் எங்கட்குத்துணைகளாக இருக்கின் றீர்கள் ; இருக்கும்போது எமக்கேது குறை! இசைக்கு ஆசைப்பட்டுப் போய்ப் பறையோசையால் வீழ்ந்திறந்து அவ் வேடர்க்கு இரையாகும் அசுணம்போல், நாங்கள், மண் ணுக்கு இறைவனாகிய எங்கள் பெரிய தந்தை திருதராஷ்டிர மன்னன் அழைப்பினை மறுக்க முடியாமற்போய், அவன் மைந்தன் அரவக்கொடியோன் செய்த சூழ்ச்சியினால் இம் மறுக்கமெலாம் அடைந்தோம்; விதிவலிது" என்று கூறி னான். இங்ஙனம் எல்லோரும் அளவளாவிச் சில நாள் இருந் தார்கள்.

உத்தர குமாரி மணவினை.

நட்புடை மன்னவர்களும், கண்ண பிரானும் கூடியிருக்கும் போழ்தே, தன் மகட்கு மணம் செய்திடல் வேண்டுமென்று விராட மன்னன், வேண்டிக் கொள்ளத் தரும பூபனும் ஒப்புக் கொண்டார். மன்னவர்க்கும் மாதவர்க்கும், மணச் செய்தியை விவரித்துச் சொன்னார், தருமராஜன். கண்ணபிரான் மருமகனும் காண்டீபன் மகனுமான அபிமனுக்கே, விராட மன்னன் மகள் உத்தர குமாரி மணத்துக்கு உரியவள் என்று பேசி முடித்திருக்கிறோமாதலால், மன்னர் எல்லோரும் கூட விருந்து, மன்றலை நடத்தி வைத்து மண மக்களை வாழ்த்திப் போதல் வேண்டுமென விராட மன்னர் பிரியப் படுகின்றாரென்று தரும பூபனும் தம்பிமாரும் பிரார்த்தித்தார்கள். வெகு விமரிசையாகக் கல்யாண மகோத்ஸவம் நடந்தேறியது. மன்னர்கள் தக்க பல பல பரிசுகள் அளித்தார்கள். அஷ்டதச வாத்தியங்களும் முழங்க, வேத கோஷம் மிகப் பாவையர் பல்லாண்டொலி சிறக்க, அபிமன் உத்தர குமாரியைப் பாணிக் கிரஹணம் செய்துகொண்டான். மறுமகிழ்ச்சி வரையில் ஸம்பந்திகள் கூடிக் குலவியிருந்தார்கள்; பிறகு, பாண்டவ ரைவரும் பந்துக்களும் மன்னவர்களும் விராட மன்னனிடம் விடை பெற்று, உபலாவியம் போய்ச் சேர்ந்து, மேல் நடக்க வேண்டிய காரியங்களைச் சிந்தித்தார்கள். இதற்குள், பாண்டவர்கள், விராட நகர்க் கன்னிக் கடவுளின் கோயிலருகுற்ற வன்னிமா மாத்துக்குப் போய், மந்திரங்கூறித் தத்தம் படைகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

பின்னர், அங்கிருந்தே மாயோனும் குரு மைந்தர்களும் மன்னர்யாரும், கௌரவக் குறும்பரிடமிருந்து நாடு பெற

வேண்டிய விஷயமாகச் செய்ய வேண்டிய காரியங்களெவை யென ஆலோசித்தார்கள். சூதாடித் தோற்ற பொருள்களைச் சூதாடியே பெறுவதா? அல்லது தூதாடிச் சொன்ன வார்த்தைப்படியே பெறுவதா? இல்லை; மோது போராடியே பெற வேண்டியதாவென்று கலந்தாலோசித்தனர்.

விராட பருவம் முற்றியது.

உத்தியோகபருவம்

உலூகன் தூது சருக்கம்

' மீனமாகியும் கமடமதாகியும் மேருவை யெடுக்குந்தாள்
ஏனமாகியும் நரவரியாகியும் எண்ணருங் குறளாயும்
கூனல்வாய் மழுத்தரித்த கோவாகியும் அரக்கரைக் கொலைசெய்த
வானநாயகனாகியும் நின்றமால் மலரடி மறவேனே."

மன்னவர் பலரும் மாதவப்பிரானும் பாண்டவர்களும் உபலாவியத்திற் கூடியிருந்தபோது, "இனி, நாங்கள் அரவக் கொடியோனிடமிருந்து எங்கள் நாட்டினையும் அரசியலையும் பெறுதற்கு வேண்டிய யோசனையை மித்திர மன்னரெல்லோரும் கலந் தாலோசித்துச் சொல்லல்வேண்டு'' மென்று தர்மராஜன் விண்ணப்பம் செய்துகொண்டார். அப்போது, கண்ணபிரான் எழுந்து, "மாயச்சூதாடி யபஹரித்த பொருள்களை அம் மாயச்சூதினாலேயே பெறவேண்டுமே தவிரப் போரினாற் கொள்வது வேந்தர் நீதியாகமாட்டாது'' என்று சொல்லி, இதனை யறிந்து வருவதற்கு ஒரு தூதனை யிப்போதே அஸ்தினாபுரத்துக்கு அனுப்பல் வேண்டுமென்றும் கூறினார்.

உலூகர் தூதுசெல்லல்

அப்போது சாத்தகி எழுந்து, "எங்கள் தமையனாருக்கு வடிவு கரியதே யொழிய உள்ளமெல்லாம் வெள்ளைதான் என்பது அறிந்தோம்; உதிட்டிரனை வஞ்சனை செய்து பலர் காணச் சூதாடி ராஜ்யத்தை அநியாய முறையில் அபகரித்தவனைப் போர்முகத்தில் முறியடித்து ராஜ்யத்தைக் கவர்வதை விட்டு இன்னும் தூதனுப்புவதாமே! இது சுத்த ஸாத்வீக மூர்த்திகள் காரியம்; அண்ணன் கண்ணன் சொன்னபடியே

செய்யுங்கள்; என்ன தூது அனுப்பினாலும், அதிஉத்கட மான பாவங்களைச் செய்துள்ள அந்தப் பாவி ஒருகாலும் வழிக்கு வரமாட்டான். அவன் போர் முனையில் அழிந்து ஒழிந்துபோதற்கு வேண்டிய பாவ மூட்டைகளைக் கட்டித் தன் தலைமாட்டில் வைத்துக்கொண்டிருக்கின்றானே; ஏது அவன் வழிப்படுவது? ஆனாலும் போருக்குமுன் தூது அனுப்புதலும் மனுமுறைதான்: ஒரு தூதுவரை யனுப்புங்கள்'' என்று சொன்னான். "இதோ, நமக்குத் துணைவராக வும் ஆசிரிய குலத்தினராகவும், பேசுதலில் வல்லவராகவும் இருக்கிற உலூகமா முனிவரைச் சிறப்புடன், உங்கள் பெரிய தந்தையிடம் தூதாக அனுப்பித் துரியோதனன் நினைவென்ன வென்பதை யறிந்துவரச் செய்யுங்கள். பின்னர் மேல் நிகழ வேண்டுவதைக் குறித்துப் பேசுவோம்'' என்று கண்ணன் பின்னும் கூறினார்.

"ஆமாம்; அதுவே சரி!! அந்தணர் தூது சென்று வந்தபின்னர் எங்கட்குச் சொல்லியனுப்புங்கள்; நாங்களும் வருவோம்; மேல் நடப்பைக் குறித்துப் பேசுவோம். இப் போது எங்கள் எங்கள் ராஜ்யங்களில் போட்டன போட்ட படியே வைத்து வந்திருக்கின்றோம்; இனி விரைவில், போரே நடக்குமென்று ஊகிக்கிறோமாகையால், அதற்கு வேண்டிய படி ராஜ்யத்தில் ஏற்பாடுகளும் செய்யவேண்டி யிருக்கும். போருக்காகப் படையும் திரட்டவேண்டியிருக்குமாகையால், நாங்களும் விடைகொள்கிறோ''மென்று வந்த மன்னர்களும் தத்தம் நகர்கட்குச் சென்றுவிட்டார்கள். கண்ணனும் சாத் தகி முதலானோரோடு புறப்பட்டுவிட்டார்.

அரசர்கள் யாவரும் அகன்ற பின்னர்த் தருமபூபதி கண்ணன் பணியைத் தலையேற்று, உலூகமாமுனிவரை

யழைத்து உபசரித்து, உண்மையை யவரிடம் சொல்லி, அஸ்தினபுரி வரையிற்போய்த் திரும்பல் வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவ்வந்தணர் பெருமானும் ஆமென ஒப்புக்கொண்டனர்.

அஸ்தி புரியில் சபையோர் தீர்மானம்.

மாமுனிவர், உலூகர், அஸ்தினபுரம் சென்று திருதராட்டிரன் அரண்மனை சேர்ந்து, தமது வரவைக் கண்ணிலா மன்னற்குத் தெரிவித்தார். அது தெரிந்து துரியோதனனும் வந்து மாமுனிவரை வரவேற்றான். மற்றும் பலரும் கூடினார்கள். கள்ள சகுனியரும் வந்திருந்தார்கள். "வந்த செய்தி யாவதோ?" என்று திருதராட்டிரன் கேட்க, முனிவர், சபையிலுள்ள யாவரையும் நோக்கி, "மன்னர்களே! யான் இங்குப் பாண்டு மைந்தர் விடுத்த தூதனாக வந்திருக்கின்றேன்; அவர்கள், அன்று அவையில் பெரியோரும் மன்னர்களும் அநுமதித்தபடியே பன்னிரண்டாண்டும் வன வாழ்க்கையை மேற்கொண்டிருந்து, மற்றோர் ஆண்டும் அஞ்ஞாத வாசமிருந்து வந்து வெளிப்பட்டிருக்கிறார்கள். இனிமேல், அன்று நீங்கள் எல்லோருமாகக்கூறி யொப்புக் கொண்டபடியே, அவர்களுடைய அரசையும் செல்வத்தையும் அளித்திடுவீர்கள் அல்லரோ? என்பதைத் தெரிந்து வரச்சொன்னார்கள். மற்றும், முன்னம் நீங்கள் செய்தது சூது போர்; அதனையே பின்னரும் கருதுகிறீர்களா? அல்லது, முற்றும் அழிந்தொழிந்து போம்படி மோது போர் கருதுகிறீர்களா? எது நும் அபிப்பிராயம் என்றும் கேட்டனுப்பினார்கள்" என்று கூறினர்.

அந்தணன் உரைத்த மாற்றம் கேட்ட சுயோதன மன்னன், "ஏன் வீண்பேச்சு அதிகம் வேண்டும்; போரே தொடுப்

போம்; ஆண்மையும் தோள்வலியும் படைவலியும் ஒரு கை பார்ப்போம்'' என்றனன். விதுரன் எழுந்து, ''சுயோதனா! அந்தணர் உரைத்தபடியே செய்யாமல், எதற்கும் விதூஷகன் போல ஆகாத காரியங்களிலேயே தலையிட்டுக் கெடுகிறாய்! உணர்விலாதவர் வாசகம் கேட்டு நெறியலா நெறி சென்றால், செல்வ நாயகியும் கைவிட்டோடிப் போவாள்; ஆதலால் செய்யப் போவதைத் தக்கவாறு யோசித்துச் செய்'' என்றான். ''அன்று அவையோரறியச் சொல்லிய வாய்மையை மறந்தோ மறுத்தோ உரைத்துப் போருக்கென்ன நிற்பையானால், அவ்வைவரை வெல்வார் நம்மில் யாரும் காணோம்; இவ்வுலகிலும் காணோம்; அன்றியும் தருமமே வெற்றி பெறும் என்பதும் கேட்டிருப்பாய்; ஆகையால், போர்க்கு எழுவதை விட, சொன்ன வாய்மைப்படி அவர் தம் நாட்டையும் செல்வத்தையும் மரியாதையொடு கொடுத்தலே நலம்'' என்று துரோணாச்சாரியர் சொன்னார்; கிருபாசாரியரும் அன்னதே யாமெனச் சொன்னார்.

குருகுலக் கிழவராகிய பீஷ்மர், திருதராட்டிரனைப் பார்த்து, ''நீ சொன்னபடி காடு போய்ப் பதின்மூன்றாண்டுகளும் கழித்து வந்த மைந்தர்கட்கு, அவர்க்குரிய நாடு பொருள்களைக் கொடாமல், போர் குறித்திடுவையானால், அர்ச்சுனனுக்குப் போர் முனையில் யார் எதிர் நிற்கப் போகின்றார்கள்?'' என்று கோபத்துடன் சொன்னார். அப்போது, கன்னன், எழுந்து, ''பல்லிழந்து நகமிழந்து வாழும் புலிபோலிருக்கும் நீர், உமக்குள்ள எந்த வலிமையைக் கொண்டு மற்ற மன்னரை யிகழ்ந்துரைக்கின்றீர்'' என்று மிகவும் கோபத்துடன் கூறினன். ''அதுவா! கூறுகிறேன்; கேள்'' என்று பீஷ்மர் வெகுண்டு கன்னனைப் பார்த்துச் சொல்லுகின்றார்;

"பாஞ்சாலி சுயம் வரத்தின்போது, வெஞ்சிலை விஜயனுடன் போர்புரிந்து வெற்றிபெற்று வந்தனையோ? மன்னனைத் தேவ லோக வாசிகள் சிறைகொண்டு போகாமல் அவர்கள் சிறை மீட்டுக் கொடுத்த நாளில் போர் முனையில் நின்று வெற்றி பெற்றனையோ! அதெல்லாம் கிடக்க, நேற்று விராட நகரின் ஆநிரை கவர்ந்துவரச் சென்றபோது, விஜயனுடன் போர் புரிந்து வெற்றிபெற்று வந்தனையோ? இனித் தான் புதுவலி கொண்டு அவனை வெல்ல நினைத்திருக்கிறாய்போலும்; வீண் வாயும் கையும் படைத்து ஏன் பிதற்றிக்கொண்டிருக்கிறாய்" என்று மீளவும் புண்படக் கூறினார். கங்கை மகன் கூறிய உண்மைக் கொன்றும் பேசாது வெட்கியிருந்த கன்னனைப் பார்த்து, அந்தணர் கைகொட்டி நகைத்திட்டார்; துரியோதனனுக்குக் கோபம் மிகுந்து, "ஓய்! அந்தணரே!! இப் பன்னிரண்டாண்டுகளும் ஆண்ட நாடு எமக்கே யுரியது; காடு அவர்க்கே யுரியது; கூடுமாயின், வெற்றிகொள்ளும் முறையில் வெற்றிகொள்ளட்டும்; போய் இதைச் சொல்லும்" என்று வெகுண்டு கூறி யனுப்பிவிட்டான்.

உலூகன் திரும்பிவந்து, பாண்டவர்க்கு, அந்த அநியா யர் சபையில் நடந்தவற்றை யெல்லாம் விவரமாகச் சொல் லித் துரியோதனனுடைய உள்ளக் கிடக்கையையும் வெளி யிட்டார். தருமபூபன், மற்றும், அந்த அந்தணரையே வேண்டிக்கொண்டு, இச்செய்தியைத் துவாரகையிற் போய்ச் சொல்லிவாருமென் றனுப்பினர்; அவ்வண்ணமே துவாரகை சென்று சொன்னார். மாயவனும் நன்றிதுவெனக் களித்துப் "பிராமணோத்தமரே; உபலாவியம் சென்று அர்ச்சுனனை யிவண் விரைந்து வரும்படிச் செய்யும்" என்று அனுப்பி விட்டார்; அந்தணர் திலகர் சென்று, தருமனுக்கும் விஜய

னுக்கும் அவ்விஷயத்தைத் தெரிவித்துப் போனார். விஜயன், தக்க யோசனைக்குத்தான் வரச்சொல்லி யிருத்தல் வேண்டுமென்று, அண்ணனிடம் விடைபெற்று விரைந்து துவாரகைக்குப் பயணமானான்.

வாசுதேவனைப் படைத்துணை யழைத்த சருக்கம்

"அராவணை துறந்துபோந்தன் றசோதை கண்களிப்பநீடு
தராதலம் விளங்கவெண்ணெய்த் தாழிசூழ்தா நின்றாடிக்
குராமணம் கமழுங்கூந்தல் கோவியர் குரவைகொண்ட
புராதனன் றனையே யேத்தும் புனிதர்தாள் போற்றிசெய்வாம்"

துரியன் துவாரகைக்குப் போதல்

உலூகமாமுனி தூதுவந்து போனபின்பு, அரவக்கொடியன், விதுரனையும் பீஷ்மனையும் கோபந் தணித்துத் துரோணன் முதலாகிய மந்திரி முதலானோரோடும் அவையிலிருந்தாலோசித்துத் தமது நேய மன்னரைப் போர்க்குத் துணை நிற்க வேண்டுமென்று தூதுவரை யனுப்பிவிட்டுத் துவாரகை போய், மாயவனைத் தானே அழைத்துவருவதாகப் புறப்பட்டனன். தன்னை மெய்காப்பதற்குச் சில படைவீரர்களையும் பின்னும் முன்னும் போகவிட்டுப் புறநகர் தாண்டி யாறும் கானும் பல கடந்து கடலுமேறித் துவாரகையில் நுழைந்தான். அந்நகர்க் கொடிகளெல்லாம் காற்றால் அசைந்துகொண்டிருக்கக் கண்ட மன்னவர் மன்னனான மாசுணக் கொடியன், தன் எண்ணமே வெளியிற் காண்பான்போல, "என்ன இக்கொடிகள் என்னை மறுத்துக் கூறுகின்றன போலும்'' என்று எண்ணினான்; அதாவது அவை அசைந்தாடுந் தோற்றமானது, "எங்கள் வாசுதேவன் பாண்டவர்க்

குத் துணைவராயிற்றே! நீங்கள் வந்து விரும்பி யழைத்த போதிலும் பாண்டவர்க்குத் துணை செல்வரே யொழிய நமக்குத் துணை வருவரா? மாட்டார்; போம்'' என்பது போலும் அவனுக்குத் தோன்றியது. அருளே வந்து குடி யிருந்ததோ என்னும்படியாக ஸர்வஜீவ தயாபரனுகிய திரு மால் வந் தவதரித்துக் கோல் செலுத்தும் புண்ணியபூமியாத லின், எங்கும் பூஜை புரஸ்காரங்கட்கும் புண்ணிய தானங்கட் கும் வேண்டும் சாலைகளும் சோலைகளும் அமைக்கப்பெற்று, அவ்வக் கருமங்களைச் செய்யும் புனித அநுஷ்டானபரர்களை யுங் கொண்டு விளங்கும், அந்நகர்த் தோற்றத்தை “மிகவும் கர்நாடகம் பெற்று நாகரீகம் பெரு நாடிது” வென மதித் தான்; ஏனெனில், அவனது நெஞ்சு சித்து அசித்து ஈச்வரன் என்னும் முப்பொரு ளுண்மையை அறியாதிருந்தமையினுல் என்பது தேற்றம்.

எல்லாம் உணரும் என்னப்பனுக்கு இவன் வந்துற்றமை தெரியாதா? நன்ருய்த் தெரியும்; தெரிந்தும் ஒரு மாயம் செய்தார்; வாயிலோரை யழைத்து, “அரவக்கொடியன் வரு வான்; வந்தவுடன் என்னை எழுப்பிடாமல், அவனை யுபசரித் தழைத்து உட்காரவையுங்கள்'' என்று கட்டளையிட்டுப் பொய்யுறக்கம் பூண்டிருந்தார்; சென்ருன் அரண்மனைக்குள் துரியோதனன்; கூடவந்த சேனையை யொருபுறத்து நிறுத்தி யுள்ளே புகுந்தான். பல கூடங்களையும் மாடங்களையும் மண்ட பங்களையும் கடந்து சென்று, கோபாலகிருஷ்ண மூர்த்தி யிருக்குமிடந் தெரிந்துகொண்டு சென்று, அவர் நித்திரையி லிருக்கின்ருரென்றுணர்ந்து, அங்கு உழையர்களால் உப சாரம் பெற்றுக் கண்ணபிரான் நித்திரிக்கும் பள்ளியறைக் குட்புகுந்து, அவரது தலைமாட்டிற் போடப்பட்டிருந்த ஆஸ

ன்த்தில், தனது முழு கௌரவத்துடனும் அமர்ந்திருந்தான். இச்செய்தியை யூகித்து, முன்னரே அர்ச்சுனனை வருவித்த மாயன், அவருக்குச் சில சூழ்ச்சிகள் சொல்லிப் படுத்தவ ராகையால், இன்னும் அர்ச்சுனன் நேரில் வாவில்லை யென்று திருக்கண்களை வளர்த்து மூடியிருந்தார்.

அரவக்கொடியன் வந்து தலைப்பக்கம் வீற்றிருக்கின்றானென்பது தெரிந்த பற்குணன், பள்ளியறை புக்குக் கண்ண பிரானது கழலிணைப் பக்கம் சேர்ந்து பாதம் வருடி நிற்பப் பொன்னெனக் கண்களைத் திறந்து நோக்கிப், "பொன்னுல கோன் மைந்தா! அர்ச்சுனா!! வருக! வருக!! ஏது இவ் வளவு சிரமம் எடுத்துக்கொண்டனை!! ஊரில் எல்லோரும் க்ஷேமம்தானே! என்னால் உங்கட்கு ஏதேனும் காரியம் ஆகவேண்டி யிருக்கின்றதோ?" என்று அவனையே பார்த்து அளவளாவியிருந்தார்; அர்ச்சுனன், "அண்ணலே! தங்கள் அருளினால் யாவரும் க்ஷேமமே; முன் சொன்ன குறிப்பை யுணர்த்தித் தங்களைப் பார்த்து வரும்படிக்குத் தமையன் அனுப்பினார்; வந்து தரிசனம் கண்டேன்" என்றான்; "அதற்கென்ன! அப்படியே செய்வோம்" என்றார்; "அதோ! அரவக்கொடியனும் வந்து தலைப்பக்கம் காத்திருக்கின்றானே; நீங்கள் அறிந்தில்லை போலும்" என்றான்.

உடனே திரும்பிப் பார்த்து, "ஆஹா! அப்படியா!! வந்தவுடன் என்னை யெழுப்பி யிருக்கப்படாதோ? வணங்கா முடிப் பெரிய மன்னர்கள் வந்தும் இப்படிக் காத்திருத்தல் கூடுமோ? நடந்தது நடந்து போயிற்று; வாருங்கள்! வாருங்கள்!! ஏதேனும் தாகத்துக்கு வேண்டுமா? வந்து வெகு நேரம் கடந்திருக்குமோ? ஆஹ! இத்துணை தூரம் இவ் வேழையை நினைத்து வந்தீர்களே! மிக்வும் சந்தோஷம்; எங்

தக் காரியமாயினும், ஒரு தூதுவனிடம் சொல்லி யனுப்பி யிருக்கலாமே; சக்கரவர்த்தியாயிற்றே; தாங்களே வந்திருக்க வேண்டாமே! என்ன ஆகவேண்டியது?'' என்று வெகு விந யங்களுடனும் அவன் நெஞ்சு குறுகும்படியும் கேட்டனர்.

"போர்த் தொடக்கம் ஆகப் போகின்றது; மித்திர மன்னர்களாகையால், நீங்களும் எங்கள் படைக்குத் துணையாக நிற்றல் வேண்டும்; மற்றை போர்க்கெல்லாம் தூதுவரைப் போக்கி யிருக்கின்றோம்; இங்கு மட்டும் நாமே வந்தோம்'' என்றனன். "அடடா! வெகு சிரம மெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்; இங்கும் தூதுவனையே அனுப்பியிருக்கலாம்; இவை நிபந்தனைக் குட்பட்ட நிர்ப்பந்த காரியங்கள் தாமே; தூதுவராலேயே ஆகக்கூடிய காரியந்தான்; என்றாலும், அது கடந்த செயலாகப் போயிற்றே! என் செய்வேன்? முன்னரே முரசக் கொடியோன் கேட்டிருந்தார்; 'அதற்கென்ன! அச்சமயம் பார்த்துக்கொள்ளலாம்' என்று உங்கள் திறத்தையும் மனத்திலெண்ணி ஐயமாகவே சொல்லி வந்தேன்; நீங்கள் இங்கு அர்ச்சுனனுக்கு முன்னதாகவே வீற்றிருந்தருளும் செய்தி தெரியாது; கண் விழித்தவுடன் நோக்கம்; இயற்கையாகக் கால் மாட்டுப் பொருளைக் கண்டது; அர்ச்சுனனைப் பார்த்தேன்; அறன் மைந்தன் குறிப்பில் அனுப்பிய தூதெனச் சொன்னான்; யானும் நீங்கள் பார்த்திருக்க, அவர்க்கே துணை போவதாக வாக்குக் கொடுத்திட்டேனே! என்ன செய்வேன்? வேறு ஏதேனும் ஆதல் வேண்டியிருக்குமோ?'' என்றார்.

துரியன் வெட்கமடைந்தும் வீரமும் விடாதுகொண்டு, "ஆனால், போரில் நீங்கள், கையில் படை யெடுக்காமலிருத்தல் வேண்டுகிறேன்,'' என்றான். "அப்படியா! இது சங்

கடமாக இருக்கின்றதே! அர்ச்சுனா! கையிற் படை யெடாமல் உங்கட்கு நான் துணை புரியும் கர்மம் ஏதேனுமுண்டோ? உண்டெனில் சொல்வாய்'' என்றார். "அங்ஙனமாயின், தாங்கள் எனக்குப் போரில் என் தேரைச் செலுத்த வேண்டுகிறேன்'' என்றான். "நல்லது! நல்லது!! இதுவே சரி!!! இருதிறத்தார்க்கும் துணை செய்த மாதிரியாயிற்று; ஏன்! சக்கரவர்த்தியவர்கட்கும் இது சம்மதம்தானே; அர்ச்சுனனுக்கு நான் சாரதியாகி நின்று விட்டால், போரில் படை யெடுக்க வேண்டிய அவசியமும் இராது; உங்கள் வேண்டு கோளும் பூர்த்தியாயிற்று; என்றாலும், மித்திரர் என்னும் முறைபற்றி யாதவப் படை யெல்லாம் உங்கட்குத் துணையாக வரும்; என்முன்னவரிடம் சொல்லி ஏற்பாடு செய்து போகலாம்'' என்றார். அவனும் உத்தரவுபெற்று வெளிக்கிளம்பினான். துரியோதனன் சென்று பலராமனையும் கிருதவன்மனையும் கண்டு போர்க்குத் துணையாக வரும்படி வேண்டிக் கண்ணபிரான் சொன்ன வார்த்தைகளையும் கூறினான். பலராமன் வந்த சக்கரவர்த்திக்கு வேண்டுவ உபசாரங்களைச் செய்து, உதவிக்கு வருவதாகவும் சொல்லி, அவனை அத்தினாபுரிக்கு அனுப்பினான். துரியோதனன் அகன்று போனபிறகு, விஜயனுடன் செங்கண்மாலும் துவாரகையை விட்டுப் புறப்பட்டு உதிஷ்டிரர் இருக்கையாகிய உபலாவியம் சேர்ந்தார்.

சஞ்சயன் தூது சருக்கம்

"ஒருதலத்திடை யவதரித் தணிபொதுவர் சிற்குடிலுறைவதோர்
மரகதப் புயறனை யெடுத்தொரு மகவெனத் தனதிறுதியால்
அரிது பற்றிய அலகை செற்றிட அணிமுலைப் பயநுகர்வுறு
மருநிடைத் தவழ்பொருவில் வித்தகன் மலரடிக்கண்வழுத்துவாம்"

அரவக்கொடியோன் அத்தினபுரம்போய்ச் சேர்ந்தபின் தான்போய்த் துவாரகையில் முடித்துவந்த செய்தியும், கண்ணபிரான் நடத்திய நாடகச் செய்தியும் தந்தையிடம் சொல்லிப்போனான். தந்தையும் மைந்தனைப் போலவே, பாண்டு மைந்தர்க்குப் பதியும் பதவியும் கொடுத்தலில் மனம் பொருதவனாதலால், பாண்டவர் அரசு பெருத வழியும், போரில் தன் புத்திரர் மடிந்தழியாத வழியுமாக ஒன்றுலோசித்து, ஸஞ்சயனை அழைத்துவரும்படியாகச் செய்தான். ஸஞ்சயன் என்பவர் குருகுலத்தவர்க்கு உறும் அவசியத் தொழிலைச் செய்தளிக்கக்கூடிய ஒரு முனிவரானாலும் திருதராஷ்டிரன் சொற்படி நடத்தக்கூடிய மனமுடையவர். பெரிய மன்னன் அழைக்கிறான் எனக் கேட்டவுடன், புறப்பட்டு மன்னவன் மருங்கு சேர்ந்தார். முனிவரை வணங்கிக் கண்ணிலா மன்னவன் எண்ணியொன்றுரைக்கின்றான். "முனிவரே! என் மக்களோ பாண்டு மக்கட்குப் பதியும் பதவியும் கொடுக்க ஒப்புக்கொள்ள மாட்டோமென்கின்றனர். ஆதலின், இனி, போர் நிகழ்ந்துதான் தீரவேண்டியிருக்கின்றது. போரில் ஜயாபஜயத்தை யாவர் பக்கமென்று நம்ப முடியும்? நம்ப முடியாது. மாயக் கண்ணன் பாண்டவர் பக்க மிருக்கின்றார். தருமதேவதையும் அவர் பக்கமே இருக்கின்றது; இவ்வியற்கைகளால் வெற்றியவரே பெறுவர் என்பது ஊஹிக்கக்கூடியதுதான். இருதிறத்தாரும் போருக்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. இப்போர் நடவாத வழி செய்தாலல்லாமல், என் மனம் திருப்தியடையுமாறு இல்லை. என் மக்கள் ஸத்யத்துக்கும் தர்மத்துக்கும் கட்டுப்படுவரா? இல்லை; பாண்டவர்க்கு நாடு கொடுக்காவிடிலோ, அவர் அவசியம் யுத்தம் குறித்தே எழுவார்கள்; ஆகையினால், நீர்,

இரண்டு திறத்தார்க்கும் பொதுவாகிக் குருகுலத்தார்க்குப் பொது ஆசிரிய முனிவராதலினாலும், பாண்டவர் உமது வாக்குக்குக் கௌரவம் தந்தருளுவர் ஆதலினாலும், என் பொருட்டு மறுக்காமல் ஒரு காரியம் செய்துதவவேண்டுகின்றேன். அதாவது, நீர்சென்று, ஞானோபதேசம் செய்து பாண்டவர்க்கு வனவாசமே உரியதாக வற்புறுத்தி, அவர்களை யரசு விரும்பாமல் வனவாழ்க்கையையே உசிதமாகக் கொண்டு வாழும்படியாகச் செய்துவாரும்; இந்த சாமர்த்தியம் உம்மிடத்திலிருப்பதனால்தான் உம்மை யேவுகின்றேன்; எங்ஙனமேனும் காரியவெற்றியுடன் வந்து சேரும்'' என்று சொல்லி ஸஞ்சய முனிவனை உபலாவியத்துக்கு அனுப்பினான். முனிவர், இதன் பலன் எதுவாகுமென்று கருதாதவராகிச் சொன்ன விஷயத்தைப் போய்த்தெரிவிக்க வேண்டிய கடமையையே தமக்குரிமையாக் கொண்டு புறப்பட்டு, மலைகளையும் வனங்களையும் தாண்டி உபலாவியம் போய்ச் சேர்ந்தனர்.

"ஸஞ்சய முனிவர், அஸ்தினாபுரியிலிருந்து தூதாக வந்திருக்கின்றனர்'' எனத் தெரிந்து, பாண்டவரைவரும் எழுந்து வந்து எதிர்கொண்டு உபசரித்து, ஆஸனத் திருக்கச் செய்து, வணங்கி யாசிகள் பெற்றுத்தாமும் ஆஸனங்களில் அமர்ந்திருந்தார்கள். "வந்த காரியம் எதுவோ? அவர்களது தூதாகவே வந்திருத்தல் கூடுமென்று தீர்மானிக்கிறோம்'' என்று தரும மகீபாலன் சொன்னான். "ஆமாம்! அவர்களனுப்பிய தூதுச் செய்தியை நான் சொல்லத்தான் வந்தேனாயினும், இருதிறத்தார்க்கும் இதம்நாடி யுரைத்தலாகிய கடமையையும் உடையேனாகலின், எனது அபிப்பிராயத்தையும் தெரிவித்துக்கொள்ளும் பொருட்டாகவும் வந்துளேன். தற்

போது இருதிறத்திலும் குமுறிக்கொண்டிருக்கும் மேகக் கூட்டங்களைப் பார்க்கும்போது போரென்னும் பெருமழை பொழிந்து குருகுலமென்னும் பூமி அழிந்தே போகும்போலத் தோன்றுகின்றது. அரவக்கொடியோன் முதலியவர்களோ, ஸத்ய தர்மநெறிகளைக் கைப்பற்றாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களிடை எத்துணை நீதிகளெடுத்துச் சொன்னபோதிலும், அவை செவிடன் காதில் ஊதியது போலாகின்றன. ஆதலாலும், நீங்களோ ஸத்யதர்ம மார்க்கங்களைக் கைக்கொண்டவர்களாகையினால், நீங்கள் பொறுத்து விலகிக் கொள்வீர்களாயின், கலகமும் போரும் ஏற்படாமல், குருகுலம் வாழ்வுறுமே யென்றெண்ணி, உங்களையேனும் வேண்டிக் கொள்ளலாமென் றெண்ணியதனாலும் நான் இங்கு வந்துளேன். உங்களது பெரிய தந்தையின் அபிப்பிராயமும் இதுவே'' என்று சொன்னார்.


"ஆமாம்! அதுசரி!! எங்களை யென்ன செய்யச்சொல்லுகிறார் எங்கள் பெரிய தந்தை யென்பது விளங்கவில்லையே! நியாயமான ஸமாதானங்கள் எவையும் எமக்குச் சம்மதமே!! அப்படி யிருக்க, 'நாடு தரமாட்டோம்! போர்புரிந்து கொள்ளட்டும்!!' என்பாராயின் நாங்கள் என்ன செய்வது?'' என்று சொன்னார்கள் பாண்டவர்கள். "சொல்லுகிறேன்; கேளுங்கள்!'' என்று சொல்ல ஆரம்பித்தார் ஸஞ்சயமாமுனிவர்.

"பாண்டவர்களே! நீங்கள் மன்னர்களாகவும் சக்கரவர்த்திகளாகவும் பிறந்து வளர்ந்தவர்களாயினும், முற்றந் துறந்த முனிவர்களைப் போலவும் பற்றற்ற யோகிகளைப் போலவும் வனவாசத்திலும் நன்கு பழகிவிட்டீர்கள்; சுக துக்கங்களோ வெளியில் மழைகளோ சீதோஷ்ணங்களோ இவ்வகைத் துவந்துவங்களைச் சம பார்வையில் கொள்ளக்

கூடிய பழக்கங்களையும் பெற்றிருக்கிறீர்கள். இவை பழகாத-நவ நாகரிகர்கட்குத்தான் நகர்வாசமும் நாட்டுவாசமும் அவஸ்யங்களாக இருக்கின்றன. நகர-நாட்டுவாசங்களைக் காட்டிலும் காட்டுவாசம்சுலபமாகவும் வைதிகசீலமாகவும் பாவமற்றதாகவும் மோக்ஷோபாய ஹேதுவாகவும் கழித்திடற்குரியது என்பதை அறிவாளிகள் மறுக்கமாட்டார்கள். திக்குகளின் எல்லைவரையில் கீர்த்தி படரும்படியாக அரசாட்சி செலுத்தினாலும், அரசவாழ்க்கை ராஜஸத்துடன் கூடியதாகலின், பாவ காரணமாகவே இருக்கின்றதென்பதும் உண்மை. மறுபடியும் பிறப்பைக் கோருமவரே, அரசவாழ்க்கை முதலிய கிரஹ வாழ்க்கை விரும்புவார்கள்; ஸாத்விகம் தலையெடுத்தவர்கள் வனவாழ்க்கையையும் பந்தம் முற்றும் அறுமானால் துறவின் வாழ்க்கையையுமே விரும்புவார்கள். இவை சரித்திரங் கண்ட உண்மைகளாகும். இங்ஙனம் வாழ்ந்த அரசர்கள் எத்தனைபேர்களினுடைய சரித்திரங்களைப் புராணங்களிற் கேட்டிருக்கிறோம். ஸாதுப்ரகிருதியுடைய ஸாத்வீக சீலர்களாகிய அரசர்கள் தாயாதர்களின் காரணார்த்தம் வனவாழ்க்கையைப் பெற்றாலும் அவர்கள் ராஜரிஷிகளா யிருந்து கொண்டு, உலகுக்கு வேண்டிய நீதிநெறிகளையும் செய்தமைத்துப் பாதுகாத்துத் தக்க பூஜ்யர்களாகவும் வாழ்ந்திருக்கலாம்; ஆகலின், சுகன்போலும் பிரமநிஷ்டரும் தர்மநிஷ்டருமாகிய தர்மராஜரே! உங்கள் இயற்கைக்குரியபடியே நீங்கள் அரசில் விருப்பம் கொள்ளாமல் மீண்டும் வனவாஸத்தையே விரும்பிப் பெறுவீர்களாயின், குருகுலத்தையே வேரொடு அழிக்கக் காத்திருக்கும் இந்தப் பெரும்போர் நின்றுபோய் உலகில் சாந்தம் நிலைத்திடும். எங்கிருந்தாலும் வீரர் வீரரே! தீரர் தீரரே!! சீலர் சீலரேயாவார்'' என்று விவரமாக எடுத்துச் சொன்னார். பாண்டவ இளைஞர் நால்வருக்கும் உள்ளம்

கொதித்தது. கைகள் பதறின. மீசை துடித்தன. பற்கள் நெறிந்தன. இவற்றைக்கண்டார் தருமராஜன். "தம்பியர்களே; சினங்கொள்ளாதீர்கள்; யாதும் விஞ்சிப் போகவில்லை; இது நியாயமுமாகலாம்; அவர் சூழ்ச்சியுமாகலாம்; தக்கவிடை சொல்லி யனுப்பவேண்டியது நமது கடமை; தூதுவர் என்ன செய்ய முடியும்; பாவம்!! அங்குச் சொன்னவற்றை யிங்குச் சொல்வார்கள்; இங்குச் சொன்னவற்றை யங்குப்போய் சொல்வார்கள்; உத்தம தூதர்கள் விஷயங்களை யிப்படி வகுத்து விரித்துச் சொல்வார்களன்றி யவர்களாலாவது வேறில்லை" என்று தம்பியர்க் குணர்த்திப் பொறுத்திருக்கச் செய்து, முனிவரைப் பார்த்துக் கூறலாயினர்.

"முனிவரே! நீங்கள் இதுவரையிற் சொல்லிக்கொண்டு வந்த யாவும் அறவோர்கட்கும் யோகிகட்கும் ஞானிகட்கும் உரிய நெறிகளேயாம். ஒருகால், காலமுள்ளளவும் நாடு காவல்புரிந்து செங்கோலாட்சியில் சிறந்து நின்று, தக்க மகனை கையேற்ற வுடன் வெறுத்துத் துறந்த மனமுடைய மன்னர்க்குமாகலாம்; பாலிய முதல், அரசில் வஞ்சிக்கப்பட்ட வீரர்களாகிய மற்றும் பல மன்னர் முன்னிலையில் வஞ்சத்தினுலேற்ற அடிமை நீக்கத்தின்போது வஞ்சினம் கூறிவந்த தீரர்களாகிய எமக்கு ஒருபோதும் உரித்தாகமாட்டாது; அப்படிப் போவோமாயினும் எமக்குப் பழிநிற்குமே; யொழிய க்ஷத்திரிய தர்ம சாஸ்திரங்கள் இடங்கொடுத்துப் பேசமாட்டா! மன்னவர்க்குரிய தர்மத்தைவிட்டு மறையவர் அறத்தைக் கொள்ளும்படி மனுமுறை பேசிடவில்லை; ஆகையால் எங்கள் அறத்தில் நாங்கள் வழுவாமல் நின்று, பகைவர்களைச் சுவர்க்க மேற்றுவதுதான் க்ஷத்திரிய முறையாகும்" என்று தர்மபூபன் சொன்னர்.


C V Morgan

"தமையனார், தன் கட்சியே பேசினார்" என்னும் உறுதி கொண்ட வீமன் முனிவரைப் பார்த்து, "முனிவரே! இரு குலத்துக்கும் ஒத்தவர் நீர்; எம்மைக் கானேகும்படியும் போதித்தலுக்கு எங்ஙனம் மனந் துணிந்தீர்! தீயகாரியங்கட்குச் சம்மதம் அளிப்பீர்; தீயன சொல்லுவீர்; அவை செய்யவும் முன் வருவீர்; ஏன் என்னும் கேள்விக்கு மறுமொழியாகச் 'செஞ்சோற்றுக் கடன்' என்று சொல்லி மழுப்பியும் விடுவீர்கள். நேற்று உலூகமா முனிவரிடம் போர்க்கு உறுதி சொல்லி யனுப்பி விட்டனரே; மேல் இன்னும் எதற்குத் தூதுச் செயல் வேண்டும்? போரில் வெற்றியாரதெனப் பார்த்திடுவோம்; தன் புத்திரர்களை வலக் கண்ணாகவும் தம்பி புத்திராகிய எம்மை இடக்கண்ணாகவும் இளமை முதலே நடத்தி வந்த அந்த இரண்டு கண்களுமில்லாதவன் இப்படிப் பேசி வரச்சொன்னான் போலும்! நாளைப் போரில் இதற்கு உத்தரம் சொல்வதாக வீமன் சொன்னான் என்று அந்த அந்தகனுக்குச் சொல்லுங்கள். எமக்குத் தவம் இனி பசுமரக் காட்டிலுறைந்து வாழ்தல் இல்லை; போரில், தாயாதர்களாகிய பகைவர்களது குடர் கிழிந்து பெருகி நிற்கும் செந்நிறத்தாக் காட்டிலே உறைந்து செய்தலேயாம் என்று போய்ச் சொல்லுங்கள்" என்று வீராவேசத்துடன் பேசினான்.

அப்போது, அருகிருந்த கண்ண பிரான், வீமனைச் சமாதானப் படுத்தி முனிவரைப் பார்த்து, "ஸஞ்சய முனிவரே! இனி இவர்கட்குப் பூதலமாளுதலும், அவர்கட்குப் போரில் மடிந்தேறி விண்ணுலக மாளுதலுமே தவமாகும் என்று அவர்கட்குப் போய்ச் சொல்லுங்கள்; நீங்கள் செல்லுங்கள்." என்று முனிவருக்கு விடை கொடுத்தனுப்பினார். அவர்

புறப்பட்டு அஸ்தினபுரஞ் சென்று மன்னவனிடம் உற்றது விளம்பி, நாம் என் செய்யலாம்; கிருஷ்ண பரமாத்மா சொன்னபடித்தான் நடந்தேறும்'' என்று சொன்னார்.

கிருஷ்ணன் தூது சருக்கம்.

"பேர்படைத்த விசயனுடன் மும்மை
நெடும்பிறவியினும் பிரியானாகிச்
சீர்படைத்த கேண்மையினால் தேரூர்தற்
கிசைந்தருளுஞ் செங்கண்மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் படையெடேன
மரிகுலனப் பணித்தகோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார்
பிறவாழிக் கரைகண்டாரே."

ஸஞ்சய முனிவர், தங்களிடம் தூதுவாராக வந்து செயலற்றுத் திரும்பிப்போன பிறகு, தர்மராஜன், பகைவர்களைத் தண்டிக்கப் புகுதற்கு முன் யோசித்தல் வேண்டுமென்று ஆராய்ந்து சொல்லிப் போந்த முன்னூறும் உபாயங்கள் மூன்றினாலும் முயன்று முடியும் அரசும் கிடைக்குமாயின், வீணிற்போருடன்று, நிரபராதிகளாக இருக்கும் ஜனங்களைக் கொல்லல் வேண்டாமென்னும் யோசனையினால், கிருஷ்ண பிரானை யிப்போது கௌரவரிடம் தூதாக அனுப்பி முடிவு தெரிந்து கொள்ளவாம் எனத் தீர்மானித்தான். "புருஷோத்தமரே! மாயப்பிரானே!! தூது வந்த ஸஞ்சய முனிவரிடம் யாமுரைத்த செயலும், தூதுபோன உலூகமா முனிவரிடம் அவர் உரைத்த செயலும் தாங்கள் அறிவீர்களன்றோ? இரண்டு செயல்களும் ஒரு போர்க் கருமத்தினையே குறித்து நிற்கின்றன; அக்கருமம் தொடங்கப் பெறின், வீணே மன்

பதைகள் மடிதல் கூடும்; அது நிகழா வண்ணம் ஒரு திறத் தார்தணிந்திடுதல் உறுதியன்றோ? ஆதலால், அதற்குத் தக்க யோசனை யொன்று சொல்ல வேண்டுகிறேன்" என்று தரும வேந்தன் கூறினன்.

அதற்கு மறுமொழியாகக் கண்ணபிரான் ஆலோசித்துத் தம்பியரையும் உடனிருத்திக் கொண்டு கூறலுற்றார். "தரும வேந்தே! உங்கள் ஐந்து பேர்க்கும் நினைவு எது என்பதை யுணர்ந்து கொண்டு தான் நான் மேலே பேச வேண்டி யிருக்கும். குருநாட்டை யுமதாகுமாறு பெறவேண்டி நினைக் கின்றீர்களா? காட்டுவாசமே மேலானதென்று கருதுகின்றீர் களா? போரில் எவர் மிகுந்து நிற்கக் கூடியவர் என்பதனை யறிய விரும்புகின்றீர்களா? உங்கள்நினைவை யெற்குத்தெரி யச் சொல்லல் வேண்டுகின்றேன்" என்று கேட்டார். தருமராஜன் கூறுகின்றார்; "கார் வண்ணப் பெருங் கடலே! நெஞ்சத்தில் வைரமாக்கி வளர்த்துக் கொண்டே இருந்து போரைத் தொடங்குவோமாயின், இருதிறத் தோரும் மாள்வது நிச்சயமாகும்; ஆகையால் தந்திரங்கள் தெரிந்த தாங்கள் தூதுசென்று ஒரு ஒழுங்கைச் செய்தருளு மாறு வேண்டுகின்றேன்." கண்ணபிரான் கழறுகின்றார்:— "தரும மகிபாலரே! அந்த அரவக்கொடியோனுடன், அடிமை நீக்கத்துக்காக நீங்கள் மறுசூதாடி விடுவித்துக் கொண்ட போது, அவனும் மற்ற அறிவாளிகளும் உடனிருந்து பணித் தபடியே, வனவாஸவிரதங் கொண்டு, அவ்விரதத்தை நிய மத்துடனிருந்து முடித்தீர்கள்; நீங்கள் உங்கள் வார்த்தையை நிறைவேற்றினது போல, அவனும், உங்கட்குரைத்த வாக்குப் படியேநாடு கொடுத்துத்தான் தந்தவாக்கினை நிறை வேற்றும விருந்திடுவனுயின், வெம் போர் தொடுத்து அவனைக்கொன்று

நாட்டைக் கவர்ந்து முடி சூடுதலே கடமையாகும்" என்று சொன்னார்.

தருமபூபன், பின்னரும் கூறுகின்றான்; "தேவர் தலைவா! போர்க்களத்தில் பெரியோர்களையும் பந்துக்களையும் நண்பர்களையும் கொன்று, அவர்களது இரத்தம் தோய்ந்திருக்கும் இந்தப் பூமியை யாள்வதைக் காட்டிலும், வனத்திற் சென்று கனிகிழங்குகள் உணவு கொண்டு காலங்கழித்திடலே மேலாகுமென்றெண்ணுகின்றேன்" என்று கசித்த மனத்துடன் கழறினான். கண்ணபிரான், தருமனைப்பார்த்து, "அறம்வளர்க்கும் அரசே! போருக்குப் பயந்து, முடிவேந்தர்களாகிய வீரர் நீங்கள், கானிலுறைந்து கழிப்பீராயின், பேரரசர் ஏச மாட்டார்களோ? நீங்கள்உரைத்துவந்த சபதங்களும்பொய்த்துப் போகாவோ? மனுநீதிதான் சம்மதிக்குமோ? சொல்லுங்கள்" என்னத்தருமன், கண்ணபிரானைப்பார்த்து, "பெரியீர்! நீங்கள் தூது நடந்தருளி எங்களது நினைவினை யவர்கட்குச் சொல்லிச் சமாதானப் படுத்துங்கள்; அவன் தண்ணிய நாடும் தாயபாகமும் தாராவிட்டால், பின்னர், போர் புரிந்தேனும் கொள்வோம்; அப்போது உலகோர் வசை கூற மாட்டார்கள்; முதன் முதலில் எங்கள் நாட்டினையும் செல்வத்தையும் எங்கட்குத்திருப்பும் படிவேண்டுங்கள்; மறுத்தானாகில் ஐந்து ஊர்களேனும்! கேளுங்கள்; அவையும் கொடுத்திட மறுத்தானாகில், ஐந்துமனைகள் விரும்புங்கள்; அவையும் மறுக்கப் படுமாகில் போர்வேண்டி வாருங்கள்" என்று தழுதழுத்த மனங் கொண்ட தர்மராஜன் சாற்றியிருந்தான்.

மூத்தவன் இம் மாற்றம் கூறி முடித்தவுடன், மூண்ட கோபமடங்காமல் மீறி யெழப் போர் வீமன் எழுந்து சொல்வான்:—" முகில் வண்ணா! ஊன மறியாதிவர் மானமிலா

உரைத்திடு வார்த்தைக்கு என்செய்வது? விரித்தகூந்தலையுடையவளாகி மன்னர் சபையில் பைந்தொடியாள் முறை யிட்ட நாளில், எங்களைப் பொறுத்திருக்கும்படியாகக் கட்டளையிட்டு, மன்னர்க்குள் என்றும் நீங்காத வசைச் சொல்லை நாட்டித் தந்தார்; எரி காட்டிற் சென்று ஏழைகள் போல் திரிந்துழன்று திரும்பிவந்தும், உரிமை கொடுக்க மறுத்தவனுடன் பொருது பகை முடிக்கவும் மறுக்கின்றார்; ஆஹா! உங்கட்கு அந்த அரவக் கொடியன் செய்துள்ள கொடுமையினும் இந்த முரசுயர்ந்த கொடி யுடையோன் செய்யும் கொடுமை மிக பயங்கரமாயிருக்கின்றது; அண்ணா! முரசக்கொடியோய்! உம்மைக் காடாள்வதற் கனுப்பிய அந்தக் கண்ணில்லாது அருளு மற்ற அப்பாதகப் பெரியோன் மைந்தர்கள் ஆள உன்னிய இத்தரணியை யெல்லாம் நீங்களே ஒரு குடைக்கீழ் ஆளும் படியாக இன்றே நான் உங்களுக்குத் தருவேன்; நமது நாணம் உரிமை முதலியவற்றை வஞ்சகமாகக் கவர்ந்து தன் மக்கட்கு அளித்த அந்த நாணமில்லா பெரிய தந்தை உம்மை வெறுத்திடாதபடி, நானே சென்று, அவன் மைந்தரை யெல்லாம் வானுலகையாளும்படியாக வைக்கின்றேன்; ஒரு நொடியிற் பாருங்கள். கார்வண்ணா! கண்ணா!! எங்கள் தமையனார் எங்கட்க்கு நிமிர்ந்து நின்ற போரினை முடித்துக் கொடுத்தார்; புலம்பிக் கொண்டிருக்கும் பூம்பாவை திரௌபதியின் விரித்த கூந்தலை முடித்துக் கொடுத்திட்டார்; சபைமுன்னர், வீரர்களாகிய வணங்கா முடியர்களாகிய—க்ஷத்திரியர்களாகிய நாங்கள் கூறிவந்த சபதங்களையும் முடித்துக் கொடுத்துவிட்டார்; எங்கள் பேரையும் முடித்தார். இவரைப்போல் எங்கட்கு எண்ணினவை முடித்துக் கொடுத்திட ஒரு மூத்தோனை நாங்கள் எழுபிறவி தோறும் வேண்டிக் கொள்வோம்; நன்று; நன்று; மிகநன்று; பட்ட பாடுகளை

யெல்லாம் மறந்து, இன்னும் — ஐந்து ஊர்களும் — ஐந்து நிலங்களும்— ஐந்து வீடுகளும் இவை யொன்றும் கிடைக்கா விடில் ஐந்து பிச்சை யெடுக்கும் மட்சட்டிகளும் இரந்து கேட்டிடுவார்போலிருக்கின்றது! நூற்றுவரையும் அவருக்குத் துணைவரும் மற்றவரையும் கடும்போரில் வென்று கொன்று மாய்ப்பதல்லால், பாட்டனென்றும், பெரிய னென்றும், குரு வென்றும் கூட்டென்றும் போர் முனையில், வீரர் பார்த் திருந்து பொறுப்பாரோ? பாவம்! பாவம்!!'' என்று மேன்மே லெழுந்த கோபத்தாற் பதறிப் பேசும் பீமனைக் கார்மேகம் போற் கடவுள் கையமர்த்தி, "காளையே! குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை. ஒருகுலத்திற் பிறந்தவர்கள் உடனிருந்து வாழ் தலே வாழ்வாகும். அவர்கள் தம்முள் நிலம் காரணமாகப் போரெடுக்கின் வசைமிஞ்சு மென்றது பொய்யன்று; உரிமை யால் தம்பியர்கள் ஒன்று செய்தால், அதற்கு, அறிவாளிக ளாகிய அண்ணன்மார் உடன்று பொருது அழிக்கலாமோ என்று தான் உலகம் சொல்லும்; கண்ணிற் கை பட்டால், அக்கையை யொடித்தெறிதல் கடமையாமோ? புலமைதா னுகுமோ?'' என்று சொல்லும்போது, மறுபடியும் வீமன் எழுந்து, "துழாய்முடியீர்! உங்கள் கால் சிவந்திட நீங்கள் தூது செல்லவேண்டாம்; நானே தூதுவனுகச்சென்று, வாடி நிற்கின்ற மடப் பாவைகூறிய சபதமும் நான் கூறிய சபதமும் வழுவாதபடி, எனது தூதை அவர்கட்கு எமதூதாக் கித் திரும்புகின்றேன்; சென்று என் கை மாத்தண்டாலும் சிலை விஜயன் சிலைத்தண்டாலும் பகைவரைக் கொலை கண்டு, இவள் விரித்த கூந்தல் முடித்திடுவதல்லாமல், அரவன் கொடிக்கிழிருக்கும் குடைக்கீழ்க் குடியிருக்க மனங்கொள் ளேன்'' என்று முரண்கொண்டு பேசும்போது, முகில் வண் ணன், முறையால் பார்த்து, "மூதறிவோய்! முன் பிறந்

தோர் அரசின் நெறிமுறை யுரைத்தால் பின்பிறந்தோர் மறுப்பரோ? இம் மூதுலகின் முறையாமோ? மூண்ட கோபம் தணிந்திடுக" என்று சொன்னார்.

சிலேவிஜயன் எழுந்துநின்று, இரண்டு பெரியோர்களேயும் வணங்கிச் சொல்லுகின்றான்:—"அண்ணா! கண்ணா!! அக்காலம் பொறுத்ததெல்லாம் போதாவென்று, இன்னமிருந்து அறத்தையே போதித்துக்கொண்டிருந்தால், எந்தக்காலத்தில் தான் நாம் பகையை முடிக்கிறது? எப்போதுதான் திரௌபதி கூந்தலே முடிக்கிறது? தேவராயிருந்தாலும் பழைய தைத்தியராக இருந்தாலும் மற்றும் யாவராயிருந்தாலும் அவர் எதிர்த்து வருவாராயின், அவரை யுண்ணக் காத்திருக்கும் பாணப் புட்டிலேச் சுமந்து நான் காத்துக்கொண்டிருக்கிறேன்; தீண்டாத கற்புடைய மங்கையர்க் கரசியைத் தீண்டி மன்னவையில் துகிலுரிய, நாங்கள் செயலொன்று மில்லாமலிருந்தபோது, அவள் மானமிழக்குந் தருணத்தில், நீங்கள் மறைவிலிருந்து காப்பாற்றினீர்கள்; அந்த ராஜசபையில் நாங்கள் அடைந்திருந்த மாசு தீரவேண்டிய காரியம் செய்திட வேண்டாமா? கண்ணா! தாங்கள் தூதாகப் போனாலும், பொறுமைக் கரசாகிய எங்கள் அண்ணன் சொன்னவெல்லாம் அங்குச் சொன்னாலும் அந்தத் துரியன் கேட்கப்போவதில்லே; அவன் கெடுமதி தலைக்கேறி அழிந்துபடவே காத்திருக்கின்றான்; உவர் நிலத்தில் எந்த நாளில் எந்தவித்திட்டாலும் விளேவுண்டாகமாட்டாது; பாம்புக்கு அமிர்தம் ஊட்டினாலும் விஷத்தைத் தானே அது கொடுக்கக்கூடும்" என்று சொன்னான்.

பின்னர், நகுலன் எழுந்து, இருவரையும் வணங்கிச் சொல்லுகிறான்; "பெரியோர்களே! இப்பூமி முழுதும்

ப்ாண்டவரே பெற்று வாழ்வார் என்று உலகம் சொல்லும் உரை பொய்த்தா போகப்போகின்றது! கண்ணன்போ யுரைத்தாலும் எந்த மணிவண்ணன் போ யுரைத்தாலும், அவன் நாடு கொடுத்திடமாட்டான்; 'பஞ்சவர்கள் இரந்து வேண்டித் தூதுஅனுப்பினர்கள்'என்னும் பழிவார்த்தை மட்டும் நம்மைவிட்டுப் போகாதவாறு நாம் ஏன் தேடிக்கொள் ளல்வேண்டும்? நமது குலத்து முன்னேரொரு அரசர், அவு ணரால் அபகரிக்கப்பட்ட ஒரு தெய்வப்பெண்ணை மீட்டுக் காத்தார்; நாங்களோ ராஜஸபையில், எங்கள் மனைவியை மாற்றான் பிடித்துத் தொட்டீர்க்க மானமிலாது பார்த்துச் செயலொன்று மாற்றாது இருந்தோம். இன்னும் அந்தப் பழிநீங்கினபாடில்லை; அப்படியிருக்க, அந்தப் பாவியிடமே இன்னம் சென்று இரந்து கேட்டு நிலம்பெற்று, அவன் குடைக்கீழ் நாமும் இருப்பதானால், உலகம் நம்மை வைதி டாதோ? சொன்னபடி. பதின்மூன்று வருஷகாலங்களும் கழித்துவந்திருக்கின்றோமென்று தெரிந்தும் நாடு கொடுக்க அவன் மனங்கொள்ளவில்லை; இன்னொருவர் தூதுபோய்ச் சொல்லி அவன் தரப்போகின்றானா? ஒருபோதுமில்லை; இது வீண் முயற்சியேயாகும்'' என்று கூறி யுட்கார்ந்தான்.

அப்போது, சகாதேவன் யாதும் சொல்லாமல் சும்மா இருந்திடக் கண்ணபிரான் அவனை நோக்கிச் "சகாதேவா! புகலரிய அறிவுடையோய்! புகழுடையோய்!! திறலுடை யோய்! நீ மட்டும் பேசாமலிருத்தல் என்னே! வீமனும் அர்ச்சுனனும் விளம்பியவற்றைக் கேட்டோம்; நகுலன் நவின்றதையும் கேட்டோம்; உன் அபிப்பிராயம் யாதோ? நாங்கள் அறியப்படாதோ? சொல்வாய்'' என்று சொன்ன கண்ணனை நோக்கிப் பாண்டவரிளையோன் பகர்கின்றான்:—

"கண்ணபிரானே! நீங்கள் சிந்தித்தபடியே தாங்கள் தூது சென்றுலென்ன; செல்லாம லொழிந்தாலென்ன! நூற்றுவர் முதல்வன் தருமனுக்கு நாடுகொடுத்தாலென்ன! கொடாமலிருந்தாலென்ன!!...திரௌபதி விரித்த கூந்தலை முடித்தாலென்ன! முடியாமலிருந்தாலென்ன!! தாங்கள் இன்னது தான் முடித்திடல் வேண்டுமென்று திருவுள்ளத்திற் குறித்த செய்கை அடியேற்குத் தெரியுமோ? முகில் வண்ணா! ஆதி மூர்த்தியாகிய உன் கருத்து இன்னதென்று நான் அறிவேன்! அதுதான் உண்மையை; ஆகையால், அந்தத் திருவுள்ளத்துக் குறிப்பு எதுவோ! அது தான் என் குறிப்புமாகும்" என்று சொன்னான்.

பகவான் பார்த்து, "ஐவரில் இவன், நால்வர்போற் புகலாமல், ஏதோ உபாயமாய்க் கூறுகின்றானே" எனச் சிந்தித்து, எழுந்து அவனைத் தழுவிக்கொண்டு, அவனொடும் ஒரு தனியிடம் சென்று, "அப்பா! சகாதேவா! நீ ஜோதிஷத்தில் வல்லானயிற்றே! பாரதப் போர் பயிலாதபடி ஒரு உபாயம் சொல் பார்ப்போம்" என்று சொன்னார். சகாதேவன் சொல்லுகின்றான்:—"ஆதிப்பரனே!

> "நீபாரத வமரில் யாவரையும் நீறாக்கிப்
> பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணா!
> கோபாலா!! போரேறே!!! கோவிந்தா! நீயன்றி
> மாபாரத மகற்ற மற்றார்கொல் வல்லாரே!"

என் அப்பனே! நீ, இப்பாரதப் போரினை மூட்டி இதனை யொரு வியாஜமாக் கொண்டு, பூபாரத்தைத் தீர்ப்பதற்கு யோசித்திருக்கின்றாய்! ஆமாம்! நீ யல்லாமல் வேறு யார் இதனைச் செய்யவல்லாரிருக்கின்றார்கள்? ஆனால், மாபாரதம்

வாராமல் காத்தற்கு ஒரு உபாய மிருக்கின்றது; அஃது என்னவெனில் சொல்லுகின்றேன். கன்னன் விஜயனைக் கொன்று, திரௌபதியின் கரிய கூந்தலைக் களைந்து, உன் காலில் விலங்கிட்டு நான் நேராக உன் கைகளைப் பிடித்துக் கட்டுவேனாயின், இப்பாரதம் வாராமற் காக்கலாம்" என்றான்; "பக்தர்சிகாமணியே! சகாதேவா! நீ கூறிய முன்னிரண்டினையும் முடித்தாலும், என்னை நீ கட்டுவது எப்படியாகும்" என்று கண்ணபிரான் கேட்டார். "மாயவனே! உன்னை நீ உணரமாட்டாய். பக்தர்களாகிய நாங்கள் அறிந்திடுவோம்; உன்னைக் கட்டிடுவோம்; உன் வடிவத்தை நான் தளைந்திடுவேன்" என்றபோது, இவனைப் பரீக்ஷித்திட எண்ணிக் கண்ணபிரான், வடிவு பதினாயிரம் கொண்டு நின்றார். மகா பரிசுத்த பக்தனாகிய சகாதேவன், அவ்வுருவங்களைக் கண்டு மயங்கிவிடாமல், மூலவுருவத்தைத் தான் கண்டு, அதன் திருவடிக ளிரண்டையும் தனது இரண்டு கரங்களினாலும் இறுகப் பிடித்துக் கொண்டான். பக்தனது பக்தியை மெச்சிக் கண்ணபிரான் அவற்குத்தனது திருமால் உருவத்தைக்காட்டிக் களிப்பித்தார். "உனக்கென்னவரம் வேண்டும்" என்று கேட்டார்; "வன்பாரதப் போரில் வந்தடைந்தோம் ஐவரையும் நின் பார்வையாற் காக்க வேண்டும் நெடுமாலே" என்று அவன் உரைத்தான். "அப்பா! அப்படியே நாம் காத்தருள்வோம்; ஆனால், நாமிருவரும் இங்கிருந்து ஸம்பாஷித்துக் கண்டருளிய இச்செய்தியைப் பிறரறிய ஓதாதே" என்று சொல்லிப்பின், இருவரும் எல்லோரு மிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அப்போது பாஞ்சாலி எதிர் நின்றாள்; அவளறியச் சகாதேவன் சொல்லுகின்றான்; "தூது செல்ல வேண்டுவது அவசியந்தான்" என்றான்; "ஆமாம்; அப்பா!! தருமனுக்கும் இதுதான் கருத்து;

எப்படியாவது பாரதப் போர் நிகழா வண்ணம் செய்திடல் வேண்டும்'' என்று கண்ணபிரானும், மங்கையின் செவியில் விழும்படியாகச் சொன்னார்; இதனைக் கேட்ட திரௌபதி திடுக்கிட்டு, கண்ணீர் பெருக்கிக் கூந்தல் சோரும்படியாகக் கண்ணன் பாதவிணைகளில் வீழ்ந்து, வணங்கிப்பேசுகின்றாள்.

"பக்தருக் கருளும் பரம தயாநிதியே! அன்று பிரஹ்லாதனுக்காகத் தூணிலிருந்து வெளி வந்தாய். ஆதி மூலமே எனக் கதறிய யானைக்காக வந்து பகை தீர்த்தாய்!! மன்னரவையில், துணை காணாது மானங்கெட வரும்போது அழுது கூவிய அடியாட்காகத் துகில்களை யருளிக் காத்தளித்தது நீயன்றோ? ராஜஸபையில், இவ்வைவரும் அறிய மானபங்கம் செய்யக் கருதிய பாவி கையால் இவர்கள் ஐந்தூர் பெற்று இனிது வாழ்ந்திருந்தால், அன்று கூறிய என் வஞ்சினம் முடித்தற் பொருட்டு கூந்தலை முடிப்பதும் என்றைக்கு முடியப் போகின்றது?'' என்று அழுது கொண்டிருந்தாள்.

அப்போது, கண்ணற்கிளைய சாத்தகி எழுந்து, "தண்டிருக்கின்றது வீமன் கையில்; பாசுபதமிருக்கின்றது பார்த்தன் கையில்; இந்தக் கற்புடையாள் பூங்குழல்மேல் மாசு படிந்திருக்கின்றது; இதனை முடிப்பிக்க வேண்டும்; இங்ஙனமிருக்கப் பாவிகள்பாற் செல்லுவதாம்; தூது சொல்லுவதாம்; ஐந்தூர் வேண்டுவதாம்; அழகு! அழகு!! ஜராசந்தனுக்குப் பயந்து மதுரையைக் கைவிட்டோடிக் கடலிடையிற் குடிபுகுந் தொளித்துக் கொண்ட கண்ணன் மதியோ! தருமபூபன் தண்ணிய மதியோ!! வெகு அழகாயிருக்கின்றது'' என்று எல்லோர்க்கும் மனம் கிளர்ந்திடச் சொன்னான். திரௌபதியோ! அழுது கொண்டிருந்தாள்; அப்போது, கண்ணபிரான், யாவருமறியத் திரௌபதிக்குச் சொல்லுகின்றார்.

“மேகம் போலும் கூந்தலுடைய திரௌபதியே! கேள்!! பகைவரது உடலாகிய நிலத்துப் புகுந்து உழலக்கூடிய கொழுப் போன்ற, உன் மாற்றவள் மகன் அபிமன், உன் கூந்தலை முடிப்பான், வருந்தாதே!! உனது கூந்தலை முடிப்பதுடன், பகைவர் குலத்தையும் முடித்திடுவான்” என்றுரைத்து அவளது கண்ணீரைத் துடைத்து, மனத்துயர் களைந்து, சமாதானமும் கூறினர். தருமராஜன், அப்போது சொல்லுகின்றார்:—

“துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர்
கன்றுசின மனத்தோர் கல்லாதவர் இளையோர்
ஒன்றும் முறைமை யுணராதவர் மகளிர்
என்றுமிவர் மந்தணத்தி னெய்தப் பெறுதாரே”

“கண்ணா! நோயாளர், துறவிகள், அடங்காதவர், மிகக் கோபமுடையவர், படியாதவர், வயதில் இளையோர்கள், முறைமை யுணராதவர்கள், பெண்கள் ஆகிய இவர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு உரிமையற்றவர் என்று நீதி நூல் கூறுகின்றது; ஆகலின்,இவரெல்லோரும் இருக்கட்டும். நீங்கள்போய்த் தூதுரைத்து வாருங்கள் என்று சொல்லி, அவர்க்குப் படைகளும் ஆயுதங்களும் கௌரவ ஆடையாபரணங்களும் நல்கி, அஷ்டாதச வாத்தியங்களும் முழங்க உபசரித்து, அத்தினபுரிக்கு அனுப்பினர்.

கண்ணபிரான் தூது செல்லல்

“சங்குமணி முரசும் சல்லரியுந் தாரைகளும்
எங்கும் முழங்களழில் வெண்குடை நிழற்றப்
பொங்கு கவரிப்புடை யிரட்ட வெண்ணிலா
அங்கமொரு நான்கும் அவனி பருந்தற்சூழ”

"கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமும் கான்யாறும்
நல்வரையும் நீர்நாடும் நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரைய கோபுரமும் நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கும்
மல்வரைய தோளான் வளமாநகர் கண்டான்"

ஸ்ரீ கண்ண பிரான், நான்கு பெரிய சேனைகளும் தம்மைச் சூழ்ந்துவரப் புறப்பட்டு, இரண்டு நாட்களில், கானும் மலையும் கடுஞ்சுரமும் கான் யாறும் கடந்துபோய் அத்தினபுரத்தைக் கண்ணுற்றார். ஊர்ப்புறத்துற்று அழகமைந்த கமுகம் முதலிய வளர்ந்த சோலைகளையும், அவற்றுளியற்கையிற் பொருந்தியிருக்கும் பொய்கைகளையும், நகர்க்கு இன்றியமையாத ஆழமுடையவனவாக வகுப்பட்டிருக்கும் போகழ்களையும் ஆகாய மளாவி நிறுத்தப்பட்டிருக்கும் கோபுரவாயில்களுடன் கூடிய மதில்களையும் கடந்து அந்நகர்க்குள் நுழைந்தார். ஆங்கு, எங்கும் இளவெயிலெறிக்கும் மணிகளழுத்தியழகாகச் சமைக்கப் பெற்றிருக்கும் நீண்ட கொடியுடை மாடமாளிகைகளையும் தோணி வீதி வேறணி வீதிகளையும் என்றும் எப்போதும் மத்தளம் முதலிய ஒலிகளுடன் திகழும் அறுகாலப் பூஜைகளுடைய கடவுளர் ஆலயங்களையும் கண்ணுற்றுக் கடந்து, போரசன் இருந்து வாழும் பெருங்கோயிற்குச் செலுத்தும் பெரிய ராஜ வீதிகளின் பிரவேசத்தில் அலங்காரமாகி அரசர்கள் முதலிய பெரியோர் தங்குவதற்கென்றமைக்கப் பெற்றிருக்கும் சோலையிலிறங்கி யிருந்தார். ஸ்ரீ கண்ணபிரான் பாண்டவர்தம் தூதாகவந்து அந்நகரச் சோலைகளில் தங்கியிருக்கின்றார் என்னும் செய்தி நகரெங்கும் பரவி, நாயக அரசர்க்கும் எட்டியது. உடனே ராஜ வீதிகளையும் வேறு மறுகுகளையும் அலங்காரஞ் செய்தார்கள். மன்னர் மன்னவனாகிய துரியோதனனும், பல சேனைகள் தற்சூழ எழுந்து கண்ணபிரானை யெதிர் கொள்வான் புறப்பட்

டான். அப்போது கண்ணிய மென்பதைச் சிறிது மறியாது பண்ணிய பாவங்களே உருக்கொண்டதெனத்தகுந்த சகுனி தடுத்து, "என்ன நீ அவனை யெதிர் கொள்வதோ?" எனச் சொல்லி நிறுத்திவிட்டான். அவன் நின்று விட்டான்.

கண்ணபிரான் விதுரன்மனை யேகுதல்.

ஆனாலும், பீஷ்மர் துரோணர் கிருபர் விதுரன் அசுவத்தாமன் முதலிய பெரியவேந்தர்களும் வேதியர்களும் அஷ்டாதசவாத்யங்களுடனும் புஷ்ப சந்தண தாம்பூல ஆரங்களுடனும் எதிர்வந்து கண்டு அளவளாவி நகர்க்குள் அழைத்துச் சென்று பவனி செலுத்தினார்கள். இரண்டு பக்கங்களினும் பெரு மன்னர்கள் புடை சூழ்ந்திருக்கவும் முன்னணியில் வேதமோதி யாசிகள்கூறி வேதியர் செல்லவும் பாவையர்கள் பல்லாண்டுகள் கூறி மனைதோறும் அயினி நீர் சுழற்றவும் சென்று, பேரரசன் பெருங்கோயிலிற்புகாமல், புத்தியும் அருளும் பத்தியும் பான்மையும் சிறந்த விதுரமன்னவன் மனை புகுந்திருந்தார். வேந்தரும் வேதியரும் மகிழ்ந்தனர். மற்றையோர் பிரமித்தனர். எதிர் கொளா மன்னவன் மனையில் இறங்கி யிருத்தல் எற்குமா? ஏலாது என்று பலரும் சொல்லித் துரியனைத் தூஷித்தகோஷம் மிகுந்தது. அந்நால்வரும் தம்பியரும் தவிர மற்ற நகர மாந்தர்களெல்லோரும் கூடியிருந்தனர். யாவர்க்கும் உபசாரம் சொல்லி மன்னவர் முதலிய மற்றவர்க்கு விடைகொடுத் தனுப்பினார் மாய மாதவப்பிரான். விதுர மன்னன் மிகக் களிப்புடையவனாகிக் கண்ணபிரானுக்குக் கைலாகுகொடுத்து, அன்புடன் அழைத்துக் கொண்டேகி, அழகே யுருவுகொண்டு, ஆச்சரியத்துடன் வகுக்கப்பெற்றதெனத் திகழும் மாமணி மண்டபத்தில் பெரிய மணிகளமைத்த அரியாஸனத்தில் அமர்த்திப் பூமி

யில் ஸாஷ்டாங்கமாகப் பணிந்து தண்டனிட்டு, மூவுலகு மீன்றருளித் தேவருக் கிறிலா அமிர்தினை விருந்தாக அளித்திட்ட உலகுடைய நாயகன், தன் சிறுமனைக்குப் பெருவிருந்தாகப் போந்த பாக்கியத்தை நினைத்து நினைத்துப் பெருமகிழ்ச்சிகொண்டான். உள்ள மடங்காத உவகையில் திளைத்தான். சொல்லில் அடங்காத தோத்திரம் செய்தான். "என் அப்பனே! கருணைமாமுகிலே!! இப்படி யெழுந்தருளுவது என் பெரும்பாக்கியமே!!! இதனை முன்னரே அறிந்து கொள்ளாதிருந்தேனே பேதையேன்! என்ன பேறு பெற்றேன்; என்ன பூஜ்யம் செய்தேன்" என்றென்றேத்தி மறுபடியும் வணங்கி யெழுந்து, இருகண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருகநின்று, "என் பிறப்பினைச் சிறக்கச் செய்த எழிலுடையாய்! இச்சிறு குடில், ஒரு பெருங் கடவுளாகிய உனக்கு,


"முன்னமே துயின்றருளிய முதுபயோ ததியோ
பன்னகாதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிஙீளய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடிலென்றான்"

"உலமோ ருயிராகிய ஒரு பெரும் மூர்த்தியே! தேவரீர் இங்கெழுந்தருதற்கு இச் சிறுகுடிசை யென்ன மாதவஞ் செய்ததோ? ஒருகால், தேவரீர் அன்புடன் அநேக பிரகாரங்களில் இருந்து வதிந்தருள நினைத் தேற்றுக்கொண்ட இடங்களிற் சிறந்தனவாகிய பாற்கடலும் பாம்பணையும் பச்சையாலிலையும் பாயிரமுடை நான்கு வேதங்களுமாகிய இப்பெரும் பொருள்கள் செய்து வைத்துள்ள பாக்கியங்களை யிச்சிறு குடிசையும் செய்து வைத்திருந்ததுபோலும்;

கண்ணன் விதுரன் மனையில் விருந்துண்டு துயிறல்.

என்று பக்தியின் பெருக்கெடுத்து, விதுர மன்னன் தன்னைமறந்து, ஸ்ரீ கண்ணபிரானது திவ்ய திருமேனியைக் கண்ணாரக்கண்டும், அவன் உரைக்கும் உபகாரவார்த்தைகளைக் காதாரக் கேட்டும், அவனது திருமேனியை மெய்பொருந்த வணங்கியும், அவரது புகழ்களைத் தம் வாயார வாழ்த்தியும், ஆயிர மலர்களைக் கைக்கொண்டு அப்பெரியோன் திருவடிகளை யர்ச்சித்தும், "நற்பேறு பெற்றேன்; நற்பேறு பெற்றேன்" என்று பன்முறை சொல்லி, அவர் அநுமதிக்க அருகு இருந்து சில பல வார்த்தைகள் பேசிப் பின்னர், ஸ்நாநாதி உபசாரங் களைச் செய்வித்து, இளைப்பாறியிருந்து, மாலையில் சிற்றுண்டி முதலியன உதவிப் பேசிக்கொண்டிருக்கும்போது, கருணைக் கடலே! "இங்குத் தாங்கள் தனியே வந்த காரணம் உரைத் தருளல் வேண்டு" மென்று கண்ணனைப் பிரார்த்தித்தார் விதுரமன்னன்.

"மன்னரே! நான் இங்குவந்தகாரியம், பாண்டவர் ஐவர் அனுப்பிய தூதுச் செய்தி சொல்லிப் போதலே, எனினும், பெரியோர்களாகிய நீங்கள் எல்லோரும் இருந்துவாழும் இந் தக் குருகுலம் மனுமரபு தவறிப் போதல் கூடாதாகலின், பெரியோர்களாகிய உங்கள் எல்லோரையும் கலந்து சமா தானத்தைச் செய்து போகலா மென்பதும் எனது நோக்கம். இன்றைக்கு பதின் மூன்றாண்டுகட்கு முன்பு, பத்தினியிற் பத்தினியாகிய திரௌபதியைச் சபையில் மானங் கெடப்பாத கர் கருதித் தீங்கிழைத்த அன்று, நிரபராத ஸாதுக்களாகிய அவ்வீரர் ஐவரும் விதிகுறித்த வழியாகப் பெரியோர் அநு மதித்த படியே வன வாழ்க்கையிலும் நில வாழ்க்கையிலும் வெளிப்பட்டும் மறைந்து மிருந்து கழித்து வந்த பின்னும்,


C.V. Morgan

அவர்க்குரிய நாடு பொருள்களைக் கொடோமென்று சொல்லி யனுப்பியது அழகாகுமா? ஆகலால் அதன் பொருட்டு முடிவாகத் தூது முடித்திட வந்தேன். ஒன்றும் சிட்டர்க்குரிய செயலாக இல்லை; சிட்டர் பலர் கூடியிருந்தும், திருத்தின பாடுமில்லை; முடிவாக அவன் கருத்து என்னவென்பதையும் தெரிந்து போக வந்தேன்" என்று கண்ணபிரான் எடுத்துரைத்தார்.

"முகிலுருவப் பெருஞ் சோதியே! மூடர் தமக்குச் சொல்வாரும் முன் வருவரோ? முன் வந்து சொன்னாலும் அம் மூடர் தாமும் கேட்பரோ? அவ்வாவுயர்த்த பாவி வழக்கினலறிந்து ஒன்றும் கொடுத்திடமாட்டான்; போர் முழக்கினற் பறித்திடுதலே முறையாகும்; எத்துணைகாம் அவை கூட்டி நாங்கள் நீதி கூறி, யவனும் அவனது துணைவர் மூவராலும் பரிபவம் அடைந்துளோம் என்பதை எப்படியெடுத்துச் சொல்லட்டும்; சொல்லித் தான் பயனென்ன? அவர்களைவரும் இக்கொடியரை விட்டு விலகித் துன்பமும் அகௌரவமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்; நாங்கள் ஐவரும், இங்கிருந்து அவற்றை யநுபவித்துக் கொண்டிருக்கின்றோம்; இவ்வளவே வித்யாஸம்; என்ன சொல்வேன்? வீரர்களாகிய - என் கண்மணிகளாகிய - அந்தப் பாண்டவர் போர் முகத்தில் வீரம் காட்டி நாடு பெறுதலே உரிமையிற் பெரிது என்பது என்னுடைய அபிப்பிராயம்; இதுவே முடிவு; இது தான் நடக்க விருக்கின்றது; துஷ்டர்கட்கு அழிவு காலம் கிட்டி விட்டதென்பதற்கு இன்னம் சாக்ஷியும் வேண்டுமோ?" என்று விதுரர் சொன்னார்.

ஸ்ரீ கண்ணபிரான் கூறுகின்றார்:—"இரந்து வேண்டினும் ஒரு பொருளீயாது, பொருது தாங்து நின்றபோது

பொருள் யாவையும் கொடுத்திட்டு விழுதலாகிய இது துஷ்டர் செயலாகும்; பாண்டவர் வீரமிலாதவரோ? அவரை யெதிர்த்துப் போர்முனையில் நிற்பவர் இந்நூற்றுவரிலாவது, இவர் துணைவரிலாவது யாரேனும் இருக்கின்றார்களோ? போர் தொடுக்கின், நிரபராதிகளாகிய போர்வீரர்கட்கும் மித்திரர்கட்கும் பெரியோர்க்கும் மரணம் சம்பவித்தல் கூடுமே யென்று யோசிப்பதே யல்லாமல் வேறு என்ன யோசனை? 'போர் ஒடுக்கி நின்று புவிபுரத்தலே புரவலர்க் கொழுங்காகும்' என்பதை யுணர்த்தலே இங்கு நான் வந்த காரியமாகும்'' என்று விதுரர்க் குரைத்து இருவரும் வேறு பல விஷயங்களைப் பேசியிருந்து பிறகு நித்திரைக்குச் சென்று கண் வளர்ந்தார்கள்.

யோகியர்க்கு நித்திரை நீண்டநேர மிராது; ஆகலின் இந்த இரண்டு யோகியரும், இரவு நீண்ட நாழிகைவரையிற் பேசியிருந்து, சிறிதுநேரம் சரீரங்களைப் பள்ளியிற் கிடத்தினவுடன், உதயகிரியில் பானுவின் கிரணங்களாகிய கைகள் விரிந்து, பாதம் வருடி யெழுப்பிட, மாயவன் துயிலுணர்ந்து, ஸ்நானுனுஷ்டானங்களை நியமமுற முடித்து, வந்திருந்த யாசகர் பெரியோர்கட்கு அன்புடன் தானுதி உரிய காரியங்களை நிறைவேற்றி அளவளாவி இருந்தார். விதுர மன்னனும், முந்தினநாளினும் பன்மடங் கதிகமாகப் பத்திமேலிட்டுப் பரந்தாமனுக்குப் பாலடிசில் முதலிய நறுமணங் கமழும் பேருண்டிகள் சமைத்திடச் செய்து, தக்க பெரியோர் பலருடன், போனகம் படைத்து, உபசரித்து அமுதுண்ணச் செய்திருந்தார்.

அரவக்கொடியோனது பேரவை

பொழுது விடிந்தபிறகு, துர்யோதனன் பேரவை கூட்டிய செய்தியைப் பேசுவோம். பாண்டவர் சொல்லி யனுப்

பிய தூதுச் செய்தியைப் போய், உலக மன்னவர்கள் கூடிய அவையிற் சொல்லல் கடமையாமென்று, ஸ்ரீ கண்ணபிரான், காலையிற் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தமைத்து, அறவோர்க்களித்து அந்தணரோம்பி இரவலர்க்கீந்து, விதுரனிட்ட நல்விருந்துண்டு, மன்னரவைக்கு வருதல் வேண்டிய மாண்புகள் செய்துக்கொண்டிருந்தார்.

துரியோதனன், காலையிலெழுந்து, போர்க்குதவியாக வந்து கூடியிருக்கும் காவலர்க்கெல்லாம் தக்க விடுதிகளமைத்தும், உபசரிக்கவேண்டிய முறைமையில் உபசரித்தும், தூது பேச வந்தவரும் மன்னவரும் மந்திரியரும் பெரியவரும் இருந்து பேசவேண்டியதற்காகப் பேரவை மண்டபத்தை யலங்கரிக்கச் செய்தும், மன்னர் யாவருடனும் பதினொரு அக்ஷௌஹினியின் சேனாபதியரும், தன்னைச் சூழ்ந்து காத்திருக்கத் தம்பியர் புடைசூழ மாமணிமண்டபத்து உயர் அரியாஸனத்தில் வீற்றிருந்தான். கங்கை மைந்தனும் துரோணாசாரியரும் கிருபாசாரியரும் உயர் ஆசனத்தில் இருந்தார்கள். கன்ன சௌபலர்கள் மன்னவனருகினில் மாட்சிமையுடன் இருந்தார்கள். துற்சாஸனன் அண்ணனது அடிக்கீழ் அமர்ந்திருந்தான். மற்ற மன்னவரும் தக்க ஆஸனத்திலிருந்தார்கள். சபை பெருத்த கோஷத்துடன் கூடிப் பெருங்கூட்டமாக இருந்தது. மன்னன் துரியோதனன் களிப்பற்றுக் கடுங் கோபத்துட னிருந்ததாகக் காணப்பட்டபடியால், சபையில் மன்னவரும் மந்திரியரும் கூட உற்சாகமற்றிருந்தனர். மன்னவர்களைப் பார்த்துஅரவக் கொடியோன் அறைகின்றான்:—

"சபையோர்களே! மன்னவர்களே!! மந்திரிகளே! வேதியர்களே! நம்பால் போரினை வேண்டி நிற்பவராகிய பஞ்சவர்

கட்குத் தூதுவனுகி, நம் நகர்க்கு வந்திருக்கும் அந்த இடையன் நம் அவைக்கு வரப்போகிருன்; அவன் வந்தானுயின், நீங்கள் ஒருவரேனும் எழுந்து எதிர் சென்று தொழுது உறவு கூறிப் பேசப்படாது; அப்படிப் பேசுவீர்களாயின், உங்கள் உங்கள் ஊர்களில் தீயை வலம் வரச்செய்து சுட்டு உங்களை அடர்ப்பேன்; இது நினைவி லிருக்கட்டும்'' என்று மிக்ககோபத்துடன் கூறினுன். சபையிற் பெரியோர் சிலர் புன்னகை காட்டினர்; சிலர் உருத்துப் பார்த்தார்கள்; சிலர் தலை நிமிராதிருந்தனர்; சிலர் உதடு காட்டினுர்கள். சிலர் ஊக்கங்காட்டினுர்கள். சிலர் வார்த்தைகள் வெளிவராதபடி பேசினுர்கள். உயர்மன்னவனுயினும், ஒழுங்கற்றதைச் சொல்லி, ஊர்வாயையடக்குதல் கூடுமோ? சபையிற்சிறிது கலக்கமும் உண்டாயிற்றென்றே சொல்லலாம். உள்ளத்தில் ஊற்றெடுத்துவரும் அன்பினைத் தடுத்திடல் அரசனுணையினுற் கூடுவதோ? தேகம் மனத்துக் கடங்கியது; மனம் அறிவின்வயப்பட்டது; அறிவு ஆன்ம பக்குவத்தின் வயப்பட்டது; ஆன்மாக்கள் பரமான்மாவுக்கு வயப்பட்டன; ஸ்ரீ கண்ண பிரானைப் பரமான்மாவென முழு உலகமும் நம்பியிருக்கின்றது; நம்பாத மூடவுலகத்தின் முழு முதல்வர்கள் துரியனும் தம்பியும் மாமனுமாகிய மூவரேயாவர்! இவ்விஷயத்திற் கன்னனையும் இவருடன் எப்போதும் சேர்ப்பது கூடாதிருக்கின்றது; ஆகையால் இம்முடமூவருள் இம்மூவுலக அறிஞர்களும் அடங்குதல் ஆன்ம உணர்ச்சியில் எப்படிக்கூடிடும்?

ஸ்ரீ கண்ணபிரானுக்கும் துரியனுக்கும் ஸபையில் வாதம்.

இங்ஙனம், ஸபையிலுள்ள மன்னர் முதலியோரைக் கட்டுப்படுத்திவிடலா மென்னும் வீண்டம்பத்தினுல் தனது அதிகாரத்தைச்செலுத்தி ராஜராஜனுகிய துரியோதனன் வாய்

முடி மனங் கொதித்துக்கொண் டிருக்கும்போது, ஏழை பங் காளனாகிய ஸ்ரீ கோபால கிருஷ்ணமூர்த்தி, தன்னையாதரித் தழைத்து விருந்தூட்டி மகிழ்வித்த விதுரரோடும், தமது சேனைகள் சூழ்ந்துவர மன்னர்பேரவைக் கண்ணெய்தியருளினர். உடனே, பீஷ்மரும் துரோணரும் அவர் மகனும் கிருபாச் சாரியரும் மற்றுமுள்ள மன்னவரும் சரேலென எழுந்து வந்து திருவடி வணங்கிப்போனார்கள். மன்னர் மன்னனாகிய துரியோதனன் தவிர மற்றை மன்னவர் வாராதிருக்க முடிய வில்லை. அவர் வந்தவுடன், எல்லாருடைய கைகளும் தலைபுக் கன; கருத்தும் உளதுமெல்லாம், அவரைத் தெய்வமென்று எண்ணின; உடல் சிந்தை வயமன்றோ! ஆகையால் யாவரும் எழுந்தனர். கன்னனும் தலைகவிழ்த்திருந்தனன் என்றால், வேறு சான்று கூறவேண்டுமோ? ஆனால், சகுனி இந்தக் காட் சியைக் கண்டு உளம் கருகியிருந்தான். முன்னே எழுந்து வணங்கி யுபசரித்த மந்திரியரும் பெரியோரும் மன்னவரும் இட்டு உபசரித்த ஆஸனத்திடை மொய் துழாய்முகில் வண் ணன் எய்தி வீற்றிருந்தார். அரவக் கொடியோன், மீசை முறுக்கிக் கொண்டு, கண் கொட்டாதிருந்தனன். துற்சாத னன் துணுக்குற்றிருந்தான். கர்ணன் மனம் வேறு, செயல் வேறாகஇருந்தான்; மனம் கண்ணன் வயப்பட்டும் உடல் துரி யன் வயப்பட்டு மிருந்தன. மாயன் வீற்றிருந்தருளியவுடன், மறை யோரும் பெரியோரும் மந்திரியரும் மன்னவரும் தத் தம் இடத்திற் சென்று வீற்றிருந்தார்கள். உடனே ஸபை சப்த மடங்கியிருந்தது. அப்போது, கோபத்துடன் துரியோ தனன் கண்ணனைப் பார்த்துக் கேட்கின்றான்:—

துரியோதனன் கேட்டல்:—"நான் துவாரகைக்குவந்து காத்திருந்தபோது, எனக்கு முகங் கொடாமல், என்னை யலக்ஷ்யம் செய்து என் அகந்தையை யடக்கியதுபோல இங்

கும் நேற்று இந்நகர்க்கு வந்து சேர்ந்தும், எனது அரண்மனை யில் தங்குவதை யொழித்து விதுரனில்லினிடைப் புகுந் திருந்து என்னை யவமதித்த காரணமென்னை?'' என்று அகங் காரத்துடன், கண்ணற்கு முகங் கொடாது கேட்டான்.

கண்ணபிரான் கூறல்:—“எனக்கும் உனக்கும் ஒருபேத மும் கிடையாது; இது என் உள்ளக் கிடக்கை; வேறான அது உன் உள்ளக்கிடக்கை யாகலாம்; என்னினும், நான் இந்நகர் வந்தபோது, வில் விதுரன், மற்றவரோடு வந்து எதிர் கொண்டு உபசரித்து அழைத்தேகினான்; நான் அங்குப் போக வேண்டியது கடமையாயிற்று; அன்றியும், இக்கக் கேள்விக்கு உத்தரமாக இன்னொன்று சொல்ல வேண்டி யிருக்கின்றது; நான் பாண்டவர் சொல்லை யுரைத்திட வந்த தூதன்; அந்தத் தூதுச்செயலோ, வேறுபட்டு நின்ற உனது மாற்றவன் உனக்குச் சொல்லியனுப்பியது; அதனை நீவெறுத் தல் கூடும். அதனால், உன் இல்லத்தில் இறங்கி, உன் அடி சிலையுண்டு பின் உன்னை வெறுத்துரைக்க வேண்டியதாகும்; என் காரியத்திற் கண்ணாக இருத்தல் கூடுமானால், தர்மசங்கட மாக நேர்ந்திடும் அன்றோ? என்? சொல்லுகிறேன்; கேள்!

“அரவமல்கிய பதாகையாய் மதியமைச்
சாராய சழிப்பினும்
குரவர்நல்லுரை மறுக்கினும் பிறர்புரிந்த
நன்றியது சொல்வினும்
ஒருவர்வாழ் மனையிலுண்டு பின்னும்
அவருடனழன்று போரவுன்னினும்
இரவியுள்ளளவும் மதிய முள்ளளவு
மிவர்களே நரகிலெய்துவார்.”

“அரவக் கொடியாய்! புத்தியுள்ள மந்திரிகளாக இருந்து அர சனையழித்தாலும், பெரியோர் சொன்ன நல்லுரைகளை மறுத்

தாலும், பிறர் செய்த நன்றியை மறந்தாலும், ஒருவர் மனை யில் விருந்துண்டு, பின், அவருடன் கோபித்து வேறு பட்டுப் போர் செய்ய நினைத்தாலும், இச்செயல் புரிந்தவர், சூரிய சந்திரர் உள்ளவரையிலும் நரகமெய்துவர் என்பது தர்ம சாஸ்திர உண்மையாம்.'' என்று சொன்னார்.

துரியன் கேட்கிறான்:- (இக்கதையைக் கேட்டுக் கொடி யோன் நகைத்து,) "இருக்கட்டும்: தூது வந்த கர்மத்தை—அப்பாண்டவர் அபிப்பிராயத்தைச் சொல்லும்'' என்றான்.

கண்ணபிரான் சொல்லுகிறார்:—"மாயச் சூதினால் அர சிழந்த பாண்டவர், அன்று பெரியோர் பணித்தது வழுவா மல் வன வாழ்க்கையும் மறந்துறை வாழ்க்கையுங் கழித்து வந்திருக்கின்றனர்; அவர்களது உரிமையை நட்பினோடு கொடுப்பாயன்றோ? ஆகையால், சதுரங்க சேனையுடன் நீ சென்று உன் சகோதரர்களாகிய அப்பாண்டவர்களை யழைத்து வந்து, அன்புடனும் ஆதரவுடனும் உபசாரத்துட னும் அவர்களது உரிமைப் பொருள்களை யெல்லாம் கொடுத் தருளி, அவருடன் நட்புக் கொண்டு வாழ்ந்திடுவாய்; அப்போது வாய்மை பொருந்திய அரசர்கள் நின்னை நாடோறும் புகழ்வர்; கொடுக்க மறுத்தியாயின், அறமு மாகாது; ஆண்மையுமாகாது; புகழும் பொருந்தாது; பாவமும் பழியும் பயமுமே முன்வந்து தோன்றும்'' என்று சொன்னார்.

துரியன் சொல்லுகிறான்:—"முன்னரே, அப்பஞ்சவர் சூதாடிப் பொருள்களை யெல்லாம் தோற்றோடிப் போயினர்; இன்றைக்கு, நீ, சாமர்த்தியமாக வந்து, அவற்றை யுபாயத்தி னால் கவர்ந்துகொண் டேகலாமென்று வந்திருக்கின்றாய் போலும்; அப்பஞ்சவர்க்கு நான் எவ்வகையிலும் எளிய

னல்லன். இன்னம், அவர் காட்டிற் சென்று திரியட்டும்; நான் கொடுக்க மறுத்ததனால்,

"நீவெறுக்கிலென் இருந்த மன்னவர்
திகைக்கிலென் பலநினைக்கிலென்
போய்நகைக்கிலென் உரைத்த உண்மைமொழி
பொய்த்ததென் றமரர்புகலில்என்
வேய்மலர்த் தொடையல் ஐவர் என்னுடன்
மிகைத்துவெஞ் சமர்விளைக்கிலென்
நீயிருக்குமிட மெனினு மிப்புவியில்
யானவர்க் கரசினிக் கொடேன்."

நீ வெறுத்துப் பேசிப்போனாலென்ன? இதோ இந்த மன்னவர் திகைத்தாலென்ன? பல நினைத்தாலென்ன? அப்புறம் போய் நகைத்தாலென்ன? உரைத்த உண்மையை யிவன் பொய்த்தான் என்று தேவர் என்னை யிகழ்ந்தாலென்ன? அந்த ஐவரும் என்னுடன் எதிர்த்துக் கொடும்போர் புரிந்தாலென்ன? நீ இருக்கு மந்த இடத்தளவுகூட இப்பூமியில் அவர்க்குக்கொடுக்கமாட்டேன்" என்று சொன்னான்.

கண்ணபிரான் கேட்கிறார்:—"அவரது பூமியைக் கொடுக்க மறுப்பையாயின், அதிற்பாதியாயினும் கொடுத்திடுவாய்" என்றார்.

துரியன் மறுத்துரைத்தான். கண்ணபிரான், "ஆயின், ஐந்து ஊராயினும் கொடுப்பையோ" என்று கேட்டார்.

துரியன் சொல்கிறான்:—"காடே கதியாகக் கொண்டு திரிந்தலையும் அப்பேதைகட்கு, இந்தக் கடலால் சூழப்பெற்ற நாடு அல்லது அவர்பேர் சொல்லப்பெற்ற ஐந்து நகர் அளித்திடலும் வேண்டுமோ? ஐந்து வீடு அளித்தால் அவை

வேண்டாமென்று மறுப்பரோ !'' என்று கூறிப் பெருநகை செய்திருந்தான்.

கண்ணபிரான் சொல்லுகிறார்:— ''அரவக்கொடியாய்! தமது தந்தை காதலில் விழைந்து ஒரு பெண்ணை வேண்டியிருக்க, அதனையுணர்ந்து, தமக்குரிய அரசுரிமை வேண்டாமென வஞ்சின முரைத்து, அப்பெண்ணின் வயிற்றுதித்த இரு தம்பியர்க்கே அவ்வுரிமையெல்லாம் அளித்துப் புகழேந்தி யிருக்கும் உங்கள் குருகுலப் பெரியோன் அதோ வீற்றிருக்கின்றார் ; அக்குலத்திலுதித்த நீயோ, இவ்வீரேழு உலகத்தினும் உயர்ந்து ஸத்யவாக்கும் தர்ம சரிதமுமுடைய மக்களாகிய அரசர் ஐவர்க்கும், அவர்க்குரிய நாடு அளித்திட மறுக்கிறாய்! நாடளிக்காவிடினும், ஐந்து நகரமேனும் நீ கொடுத்திடாவிடின், உன் அரசியல் என்னவாகும்? ஒரு குலத்திலே பிறந்த இரண்டு மன்னவர்க்கும் புதல்வர் பிறந்து உரிமை யெய்துவார்களாகில், அவ் விருகுலத்தவரும் ஒத்து வாழ்தல் எக்குலத்திலு மியற்கையாகும் ; ஆனால், இக் குருகுலத்தவர் இயற்கையோ இப்படி யிருக்கின்றது! நன்று ; நன்று'' எனச் சொன்னார்.

துரியன் முனிந்து சொல்கிறான்:—நாட்டின் அரசுரிமை கிடைப்பதென்பது, நாட்டிலிருந்து வீரம் காட்டி வெற்றி பெற்று வாழ்ந்த அரச குலத்தினருக்கே யல்லாமல், காட்டில் அலைந்து ஒளிந்து திரிந்து வயிறு வளர்த்த பேதை ஐவர்க்காகமாட்டாது.

கண்ணபிரானும் கனன்று மொழிகின்றார்:— "துரியோதனா! ஐவர் தங்களது அரசுங் கொடாமல் அடல் ஆண்மை கொண்டு எதிர் நின்று போர்புரிவதாயின், சத்திய க்ஷேத்திரமாகிய—தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில் வந்து வெஞ்

சமர் விளைக்கவாவது, உனது கைகொடுத்திடுவாய்! இது வேனும் தவருமல், பயங்கொளியாகாமல், வஞ்சனுகாமல் முடிவாகப் போருக்காயினும் சம்மதம் காட்டிக் கைகொடுத்திடுவாயோ? இதுவும் மறுத்திடுவையோ?" என்று கோபத்துடன் தன் கைகொண்டு அயல்நின்றதொரு தூணைத் தட்டினர் கண்ணபிரான்.

துரியோதனன் கோபித்துச் சொல்கிருன்:—

"அற்பப் பிறப்புடைய இடையர்களோடு, முல்லை நிலங்களில் பசுக்களை மேய்த்திடும் உன்பிறப்பையும், உரலோடு கட்டுண்ட உன் செயலையும் மறந்து போய், நீ, மன்னவர் குலத்துள் உயர்ந்த குரு குலத்தவரது வாய்மையையும் உணராமல், இந்த சபையில் இந்த வாசகம் சொல்ல வந்தனை யல்லவா? அந்தப் பஞ்சவர் போர்க்கு வருவராயின், நான் அவரெதிர் நின்று பொருத அஞ்சுவேன் என்பது உன் நினைவுபோலும்; காட்டில் யானையைக் கண்டு சிங்கம் பயந்திடுமோ? அம்பெய்தற்கு முன், போருக்காகக் கை அறைதல் வேண்டுமோ? இது நின்றது மேன்மை போலும்; வாக்கினுற் சொல்வது பொய்த்திடு மென்று எண்ணிக் கை யறைந்திடக் கேட்கிருய் நீ; நான் வீரனு? அந்த ஐவர் வீரரா? என்பதை யிவ்வவையிலுள்ளோர் சொல்லுவார்; அன்று இவ் வைவர்க் கொருத்தியாயவள் கூந்தலைப் பிடித்து, மன்னவையில் யாருமறியத் துகிலுரிந்த போது, என்ன வீரம் காட்டினர்களிவர்கள்! இவருக்கு மானம் வேருென்றுமுளதோ? இவர்கள் பிறப்போ வெகுதிறம்! தாய்மார் இருவராம்; இவ் வைவருக்கு தந்தையர் ஐவராம்; இவ்விசித்திரப் பிறப்புடைய இப்பேதைகள் இப்பெருங் குருகுலத் துரிமை பெறுவாராம்; அது மாத்திரமா? எவ்வுயர் குலத்திலு மில்லாத இவர் ஒழுக்கமோ மிகவும் நன்று;

நன்று; ஒரு பெண்ணை, இவர் ஐவரும் தனித்தனியாக விரும்பிக் கொண்டு மேவி யிருப்பராம்; இவரது பிறப்புக்கும், ஒழுக்கத்துக்கும் இப்பெருங் குரு குலத்துடன் தொடர்பு சிறிதேனு முண்டா? இஃதென்னை யாச்சரியம்" என்று சொல்லி, எள்ளி நகையாடி யிருந்தான்; மன்னவர் மறுகினர்; மறையவர் வருந்தினர்; பெரியோர் பெரிதும் உருத்தனர்; மற்றோர் மாழ்கினர். கண்ணபிரான் நகைத்து, இது போதும்; இவன் கருத்தறிந்தோம்; இனி இங்கு வேலை யில்லை, யென்று சபையை விட்டேகினர்; விதுரன் மனைபோய்ச் சேர்ந்தார்; சீலமில்லாதவர் முறை யிலாது முனித்திட்டால், தீதில்லாப் பெரியோர் கோபிப்பாரோ? கோபியார். கண்ணன் அகன்ற பிறகு, நாக வெங்கொடியவன், மாலை கருகிடவும், முகம் வெயர்த்திடவும், கண்கள் சிவக்கவும் இதழ்துடிக்கவும் வெம் கோபம் கொண்டு, விதுரனைப் பார்த்து, "இந்த இடையனுக்கு நீ விருந்து செய்தது எதற்காக? கொடுமையினால் என்னிடம் அரசினைக்கவர வேண்டுமென்று வந்தவன், எனது உணவை வெறுப்பானாயின், அவனுக்கு, அவன் சேனையுடன் பெருவிருந்து நீ அளிப்பதாவதென்ன? என் பிதாவுடன் பிறந்து, இன்றளவும் என் உண்டியையே தின்று, என்னிடத்தில் அன்புமில்லா திருக்கின்றனை; என் பகை உன்பகை யல்லபோலும்; ஆமாம்; பிறப்பின் அளவு தான் பெருமை; குலத்தின் அளவுதான் குணம்; ஒருவனிடம் பொருள்பெற்று அதற்காக அவனுடன் கூடி யிருப்பதாக ஸத்யவாக்குக் கொடுத்துப் பின், மற்றொருவன் அதிகப் பொருள் கொடுத்திடின், முன்னவனை விட்டுப் பின்னவனைப் பற்றும் ஒரு பொது மகளின் புத்திரனுக்கு இது புதுமை யாகுமா? இதனை வெறுப்பது என்" என்று இகழ்ந்து பேசினான்.

விதுரன், கோபித்து, "அடா! பேதாய்!! இங்ஙனம் என்னை யிழித்துக் கூறிய உன் வாயை ரத்தம் சொரியும் படியாகக் கிழித்துப் பற்களை யுடைத்து உன் முடியை யும் கொய்திடுவேன்; 'குருகுலத்திலே, ஒரு பிதா மைந் தனைக் கொன்ருன்' எனும் பழிச்சொல் நிற்குமே என நினைந்து இது பொறுத்தேன்; நீ இன்னம் நாவழிந்து படாமல் இருக்கிருயே! அவர்க்கு உதவியாக வந்த தூதுவனை யுபசரித்தேன் என்றும், அவர்க்கு உதவிபுரிந்தேனென்றும் கோபிக்கின்ருயே; நான் அந்தப் பாண்டவர்க்கே உதவியாக நின்றிட்டாலும் என்னை, உலகில் அறிவுடை மன்னர்கள் பழிப்பார்களோ? ஒருகாலும் பழியார்? இனிச் சொல்லி யென்ன பயன்? நான் இரண்டு சொற்கள் புகலேன். நான் இனிச் சமரில் நின்று வெம்கணை தொடுத்திடமாட்டேன்" என்று சொல்லித் தன் கைவில்லினை யொடித்தெறிந்தனர்; உலகில் உயர்ந்த வில்லிரண்டினில், இஃது ஒரு வில்; மற் ருெரு வில் அர்ச்சுனன் கையிலிருக்கின்றது. அத்தகைய— அர்ச்சுனன் வில்லுக்கு எதிர் நின்று பொரக்கூடிய வில்லை யொடித்திட்டார். உடனே வெகுண்டு அவையை விட்டுத் தமதில்லம் ஏகினர்.

விதுரன் வில்லொடிந்ததைக் கண்டிருந்த-கேட்டிருந்த மன்னவரும், மற்றவரும் திடுக்கிட்டு "அடடா! அரன் வில் அச்சுதன்வில்; இவ்விரண்டுக்கும் ஒப்பான வில் ஒடிந்து போயதா? அர்ச்சுனன் வில்லுக்கு எதிரான வில் உலகில் இல்லை; இனி, விற் போரில் விஜயனே வெற்றி பெறுவான் என்பது திண்ணம்; ஆகையால், போரில், பாண்டவரே வெல்வர் என்பதும் உறுதியாயிற்று" என்றனர்; பிதா மக ஞகிய பீஷ்மன், துரியனைப் பார்த்து, "ஒரு வில்வீரனைப்

பழுதுரைத்து ஒரு துணையை யிழந்தனையே! நீ, பகையை யெப்படி வெல்லப்போகிறாய்! பூமி எல்லாம் இனி, ஐவரே யாளும் வகைக்கு வழிசெய்து கொடுத்துவிட்டாய்! உன் போரு மழிந்தது; உன் பேரு மழிந்தது; போ!'' என்று அழன்று மனம் வெறுத்துப் பேசினர். அதற்குத் துரியோதனன், வெகுண்டு, "விதுரனைவிட வில்லாளர் நம் துணைவரில் இல்லைபோலும்; எனக்கு உதாரசீலன், என் நண்பன், அங்கர்கோன் கர்ணன் இருக்கின்றான்; பயமில்லை!! மற்றும்,

"நீயிருக்க நெடுவிற்கை யாசிரிய னவனிருக்க நிகரற்றவன்
சேயிருக்க விறல்மன்ன ரிப்படிதிரண் டிருக்க எதிர்சென்றுநீன்
வேயிருக்குமித ழிடையனுக்கு நல்விருந்து செய்தவன் வெறுக்கிலென்
போயிருக்கிலென் முறிக்கிலென்சிலை மலைந்து நம்மொடெவர் போர்
செய்வார்"

"நீங்களும், வில்லாசிரியனும், அவரது குமாரனும், இவ்வளவு அரசர்களும் துணையிருக்கும்போது, அந்த இடையனுக்கு விருந்திட்ட இந்தக் கடையன் வெறுத்தாலென்ன? போய் ஒழிந்தாலென்ன; வில் ஒடிந்தாலென்ன? எம்மோடு போர் செய்ய யாரால் முடியும்?'' என்று கூறினன்.

கர்ணன் சொல்லுகிறான்:—"ராஜராஜனே! மன்னர்களே!! நானிருக்கிறேன். வில்விஜயனைச் சென்று கோபித்துப் போரில் அவனை யுயிர்கொள்ளப்பட்டவர்கள் என்னைவிட யாரிருக்கின்றார்கள்? என்று நன்றாய்ச் சொல்லுங்கள்; பார்ப்போம்; ஒரு கன்றை யெடுத்து வீசி ஒரு விளாமரத்தை யழித்திட்ட இந்தக் கள்வனாகிய கண்ணனிருந்து தேர் செலுத்தினாலும் அந்த அர்ச்சுனனுடைய வில்லின் திறத்தையும், என்து வில்லின் திறத்தையும் அன்றைக்குப் போர்க்

களத்தில் நீங்கள் காணலாகும்; தேவர்களைத் துணைக் கொண்டு இந்த விஜயன் போர்முனையில் கோபித்து நின்றாலும், அந்தத் தேவர்களையும் போர்முனையில் வென்று திரும்புவேன்; இது திண்ணம்; நான் எனது கொடிய பாணங்களை யேவி நின்றால், அந்தப் போர்முனையில் இந்த விஜயனா எனக்கு எதிர் நிற்கத் தகுந்தவன்? இவ்வுலகத்திலும், அவ்வுலகத்திலும் மற்றெவ்வுலகத்திலும், வில்லில், எனக்கு நிகராக யாரிருக்கின்றார்கள்? எங்கே! உங்கள் விரலை மடக்கி யெடுத்துச் சொல்லுங்கள்; பார்ப்போம்" என்று கர்ணன் தீரத்துடனும் வீரத்துடனும் பேசினான். அதற்கு மாறாக, பீஷ்மர், எடுத்துக் கழறுகின்றார்; "கர்ணா! இந்த வீண்டம்பம் பேச்சுமாத்திரம் இல்லாமற் போனால் உனக்கு இந்த உலகில் வாழ்வே கிடையாது; மற்றும் இந்த ராஜ ஸபையில்லாமல் வேறு எந்த ராஜஸபையிலும் உன்னை யேறவும் விடமாட்டார்கள்; உன் வாயும் மேனியும் எப்போதும் வெறும் பேச்சிலும், முழு எச்சிலும் ஆடிக்கொண்டிருக்கின்றனவே யொழிய, ஒரு முறையாகிலும் காரியத்திலே காட்டினதே யில்லை; இதனை உன் மனதும் அறியும். இதோ, இந்த மன்னவனும் அறிவான்; மற்ற மன்னர்களும் தெரிவார்கள்; உலக முற்றுமே தெரிந்து கொண்டிருக்கின்றது; அப்படி யிருந்தும், வீண் பேச்சுக்களையே பின்னும் பின்னும் பேசிக்கொண்டிருக்கிறாய்; உன் பேச்சுப் பொய் யென்பதை இங்குள்ள ஒவ்வொருவரும் அறிந்திருக்கிறார்கள்; ஆனால், இந்த மன்னன் ஸபையாகையினால், எழுந்து சொல்லுதற்கு நாணி யிருக்கின்றார்கள்; என்னும் இந்த உண்மையையும் நீ அறிவாய்! நிறுத்து!! ராஜஸபையை அவமதிப்பதுபோல், உன்னை நீயே எப்போதும் புகழ்ந்துகொண்டு வீண் டம்ப வார்த்தைகளைப் பேசிக்கொண்டிராதே; உன்

கொடையின் பெருமை யெல்லாம், இந்த மடமையிலேயே மழுங்கி யாழ்ந்துபோ யிருக்கின்றது என்னும் உண்மையை இன்றைக்காகிலும் தெரிந்துகொள்; திக்குக்களை யெல்லாம் வளைந்து வந்த ஒரு மூன்றுகோடியும் முப்பதிநூயிரமுமான கணக்குடைய நிவாத கவசர் காலகேயர்களை யொருவனே யாகச் சென்று அவர் தம் ஊரிற்புகுந்து போரில் அழித்து வந்த அர்ச்சுனன் முன்னே போரில் நின்று போர்புரிய நீ சமர்த்தன்போலும்; அரண்மனைக்குள் நான்கு சுவர்க்கும் நடுவணிருந்துகொண்டு தற்புகழ் பேசுவதில் நீ சமர்த்தன்தான்; விடு! விடு!! நிறுத்து! நிறுத்து!!'' என்று சபை களிக்கவும் மன்னன்முதலிய நால்வரது மனமும் முகமும் சுளிக்கவும் கோபத்துடன் பேசினர்.

“ஆமாம்; நானும் அவ்யுத்தத்துக்குப் போயிருந்தால் அப்போது தெரிந்திருக்கும் எனது புகழே; எங்கே! மூன்று உலகத்தையும் என்னோடு போர்செய்ய அனுப்புங்கள் பார்ப்போம்; என்னுடன் சிவனும் எதிர் நின்று போர்புரிய அஞ்சுவரே'' என்று சீறிச் சொன்னான். கேட்ட பீஷ்மர், சீ! சீ!! இவன் காரியமில்லாமல், சொன்னவற்றையே மீண்டும் சொல்லிக்கொண்டு வீண்டம்பம் பாராட்டிக் கொண்டிருக்கின்றான்; ராஜஸபையும் அதற்கேற்றதாக இருக்கின்றது; கண்டித்தொதுக்கிக் கீழ் வீழ்ந்தோடிய செய்திகளே மறுபடியும் பேசப்படுகின்றன; இப் பொய் யுரைக்கு இச்சபையில் கேள்வியும் கிடையாது'' என நினைத்து, ‘இவனுடன் வாதம் செய்வதிற் பயனில்லை’ யென்று ஒன்றும் மாறு சொல்லாதவராகி, “சரி! சரி!! நாளைப் போர்முனையில் உன்வல்லமையை அறிந்திடுவோம்'' என்று சொல்லிவிட்டுக் கோபத்துடன் தனியே போய்விட்டனர். மன்னனும் சபையைக் கலைத்து ராஜர்களெல்லோரையும் அவரவர் இருப்பிடத்துக்கு அனுப்பி

னன்; அரசர்களும், இஃதென்ன சபை! பெரியோர்க்கும், புண்ணியர்க்கும் இச்சபையில் கௌரவம் இல்லை'' என வெட்கிப் போனார்கள். நாமும் இந்த டம்பப் பொய்ச் சபையை விடுத்து நீங்கி சத்தியமும், வீரமும், பக்தியும் சுதந்தரமுமே உருவெடுத்தது போன்று விளங்கும் விதுர மன்னனையும், அவரது நல்விருந்தினராக எழுந்தருளியிருக்கும் விமலனையும் எடுத்துப் பேசி, நமது வாக்கையும் கைகளையும் மாசுதுடைத்துப் பரிசுத்தமாக்கிக் கொள்வோம்.

விமலக் கண்ணனும் விதுர மன்னனும்.

விதுர மன்னன், சபையில் துரியனிடம் கோபித்து வில்லை முறித்துப்போட்டு வருதற்கு முன்னரே, விதுரன் மனையிலிருக்கும் ஸ்ரீ கண்ணபிரானுக்கு, அவ்விஷயங்களெல்லாம் ஒற்றர்களால் அறிவிக்கப்பட்டன; கபடக் கண்ணன், ''எண்ணிவந்த காரியங்களுள் இரண்டு நிறைவேறின; மற்றும் பார்ப்போம்'' என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்; அப்போது, வில் விதுரன் கையில் ஒடிந்த வில்லுடன் வீடு வந்து சேர்ந்தார். கண்ணன், எழுந்துபசரித்து, அவரையுட்காரும் படியாகச் செய்து, குன்றிய முகக்கடுப்பால், அவரது கன்றிய மனத்தையு முணர்ந்து, ''பெரியவரே! சபையில் என்ன நடந்தது? ஏன் வில்லை யொடித்து விட்டீர்கள்; இந்த வில் ஒன்று தானே உலகில் அர்ச்சுனன் வில்லுக்கு எதிர் நின்று பொரக் கூடியது!'' என்று விநயமாகக் கேட்டார்.

விதுர மஹாராஜன் சினத்த முகத்துடன் சொல்கிறார்:-

''ஆவது கருதானுகில் அமைச்சர் சொற்கேளானுகில்
வீவது குறியானுகில் விளைவதும் உணரானுகில்
நாவது காவானுகில் அவனுக்கா நடந்து போரில்
சாவது பழுதென்றன்றே சந்ததுமோர் சாற்றுகின்றார்''

"ஒரு மன்னன், தனக்கும் பிரஜைகட்கும் ஆகவேண்டிய காரியங்களைச் சிந்தியாமலிருப்பானாகில், அவை தெரிந்து சொல்லும் மந்திரிகள் சொற்களையும் கேளானாகில், தனது கேட்டையு முணர்ந்து கொள்ளானாகில், மேல் விளைவதை யெடுத்துச் சொன்ன பின்னும் உணர்ந்து கொள்ளானாகில், தனது நாக்கையும் அடக்கிப் பேசானாகில், அந்த மூட அரச னுக்காகப் போரிற் போய்ச் சாவது பழுதென்றல்லவோ உல கிற் பெரியோர் ஓதுகின்றார்கள்; இப்படிச் செல்வச் செருக் குடையார்க்கு, இனி, இவ்வுலகில் வாழ்வேது?

"செல்வம் வந்துற்ற காலைத்தெய்வமும் சிறிதும் பேணார்
சொல்வன அறிந்து சொல்லார் சுற்றமும் துணையும் நோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்."

இப்பூவுலகிற் பொருந்தியிருக்கும், அறிவிலா மாந்தர் கள், தமக்குச் செல்வம் வந்து கூடி விடுமானால், அச்செல் வத்தைச் சேமித்துக் காலமறிந்து விதிப்படி யுதவிய தெய் வத்தைச் சிறிதும் போற்றமாட்டார்கள்; சொல்ல வேண்டிய விஷயங்களேனும் காலமும் இடமும் ஏவலும் பார்த்துச் சொல்லவும் மாட்டார்கள்; பந்துமித்திரர்கள் கௌரவத் தைப் பார்க்கவும் மாட்டார்கள்; தமது வெற்றியிலேயே எப் போதும் நம்பிக்கை வைப்பதல்லாமல், தமக்கு நேர் நிற்கும் பகையின் வலிமையை யெண்ண மாட்டார்கள்; வலியதாகிய வினையின்மேல் விளைவையும் கவனித்திட மாட்டார்கள்; என் றும் செல்வச் செருக்கின் எல்லா இயற்கைக் குணங்களையும் இத்துரியன் படைத்திருக்கின்றான். இவற்றினும் நான் கோபம் கொள்ள வில்லை; இவை, இவனது ஆட்சியில் எங் கட்கு ஸஹஜமாகப் போயின; மற்றும், என்ன சொல்வேன்? என்னாற் பொறுத்திடவே கூட வில்லை; நன்றறியாக்கன்

மனத்துப் புன்மகன்; நாப்பழக்கம் நன்கு பெருப் பேதை மகன்; சொல்வது தெரியாத துஷ்ட வஞ்சகன்" என்று மனம் பொங்கிக் கைகளை முறுக்கிப் பிசைந்து கொண்டார்; இடையில் எழுந்து அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு, மாயக் கண்ணபிரான், "என்ன! என்ன!! என்ன நடந்தது மேலே; சொல்ல வேண்டும்" என்று பரபரப்புடன் கேட்டார்.

விதுரர் சொல்லுகின்றார்:—"உலகம் போற்றும் அவதார மூர்த்தியாகிய உங்கள் நல்வரவு இந்நகர்க்குக் கிடைத்திடக் கூடியதா சுலபத்தில்? தங்களை யென்னென்ன பேசி விட்டான்: நாவடக்காத அறிவிலி;

"நினைக்கவும் தொழவும் எட்டா நீயெழுந் தருளப் பெற்றும்
தனக்கிது தகுதியென்று தமருடன் வாழ வெண்ணான்
மனக்கடுங் கனலினன் தன்மனத்தினு லுரைத்தபுன்சொல்
எனக்கிசையாமல் யானும் இருஞ்சிலே யிறுத்த தென்றான்."

நினைத்தற்கும் தொழுதுரைத்தற்கும் எட்ட முடியாத பரம் பொருளாகிய தாங்கள் எழுந்தருளப் பெற்றும், தனக்கு இது தக்கதாகும் என்று ஆலோசித்து, தங்கள் சொல்லைக் கௌரவப் படுத்தித் தன் பந்துக்களுடன் வாழ்ந்திட வெண்ணாமல், மனத்திற் கடுங்கோபத்தைக் கொண்டு தனது மனம்போன போக்கேபோய், அவன் இழித்துச் சொன்ன புன் சொற்கள் என் மனதுக்கு இசையவில்லை; அதனால் அவனுக்கு உதவப் படாதென்னும் நோக்கத்துடன் எனது சிலையை நான்ஒடித்து விட்டேன்" என்று சொன்னார்.

கண்ணபிரான் மிகவும் மகிழ்ச்சி கொண்டு கூறுகின்றார்; 'விதுரரே! பாம்புக் கொடியன், சேனையுடன் போர்க் களம்

போகும் போது, நீங்கள் உங்கள் வில்லுடன் அவனது பக்கத்தில் நில்லாமல் நீங்கி விடுவீர்களானால், உங்களது நேயமுள்ள புத்திரர்களாகிய பாண்டு மைந்தர் ஐவரும் அவசியம் தவறாமல் தங்களது வெற்றியைக் காட்டித் தாயபாகத்தையும் அரசையும் கைக்கொண்டிடுவார் என்னும் இது உறுதியேயாகும்; மிகுதியும் நெய் சொரிந்து விறகுகளைக் குவித்துக் கொட்டினாலும், காற்றுவந்து சோதிருக்குமாகில் கனல் எழுந்து வீசி யெறிந்திட மாட்டாது; இப்போது உங்கள் கையில் ஒடிந்து போனதே, துஷ்டத் துரியன் சேனைகள் போரில் அழிந்து பாண்டவர் வெற்றி பெறுதற்குத் தக்க காரணமாயிற்று; என்றாலும், கல்வி கேள்வியுடைய பெரியோரே! மன் அவையில் உங்களை அம்மன்னவன் பேசியவெல்லாம் பொறுத்துக் கொள்ளுங்கள்; நாம் எது காரணமாகவேனும் நமது மனத்தைக் கன்றிப் போம்படி விட்டு விடுவோமாயின், நமது ஆத்ம முன்னேற்றம் தடைப்படுமன்றோ?" என்று பேசினார்.

"கண்ணா! கார்முகில் வண்ணா!! எங்கள் நாட்டில் எங்கள் நகரில் எங்கள் அரண்மனையில், எங்கள் முன்னிலையில் எங்கள் குழந்தைகள் வாக்கினால், எங்கள் தெய்வமாகிய தங்கட்கு இழிவுரைகள் நிகழ்ந்திருக்கும்போது, 'அவ்விழிவுரைகளைப் பொறுத்துக் கொள்ளுங்கள்' என்று உங்கட்கு நாங்கள் சமாதானம் சொல்ல வேண்டிய சமயம் நேர்ந்திருக்கவும், எனக்குச் சமாதானம் தாங்களா கூறல் வேண்டும்; நன்று; நன்று; என் காலம்!" என்று விதுரன் நகைத்திடப் பரந்தாமன், சின்னாழிகையவருடன் வேறு பல விஷயங்களைப் பேசியிருந்தார். அதே நாள் மாலைக்குமேல், பாண்டவர்தம் காரிய ஸித்தியின் பொருட்டு வேறு பல காரியங்களைச் செய்

திடுதற்குச் சமயம் நோக்கிக்கொண்டிருந்தார். "எம்பெருமான் என்னென்ன கருதியிருக்கின்ருர்" என்பதை யாரே அறிய வல்லார்?

கண்ணபிரானும் குந்திதேவியும்.

இவ்வண்ணம், கண்ணபிரான், விதுர மகாராஜனுக்கு வேண்டிய உபசார வார்த்தைகள் கூறிச் சமாதானஞ் செய்திட்டுப் பாண்டவரைப் பெற்ற குந்திதேவி யிருப்பிடம் போய்ச் சேர்ந்தார். மருமகனை வரவு கண்ட மகிழ்ச்சியால், குந்திதேவி, எழுந்து இனிது உபசரித்து மேலும் இன்னுரை பலவும் கூறி, ஓர் ஆஸனத்திருக்கச்செய்து, அருகிருந்து வினவலுற்ருள். "எது! இத்துணை தூரம் இப்படி வந்தது; மைந்தர் ஐவரையும் பார்த்ததுண்டோ?" என்றென்று வினவியபடியாயிருந்தாள். "அத்தை! உன் மக்களைப் பார்த்தேன்; அவர்களைவரும் திரௌபதியுடன், பன்னிரண்டாண்டு கானவாழ்க்கையுங் கழித்து, ஒருவருஷம் மறைந்தும் வாழ்ந்து இப்போது, உபலாவியத்திலிருக்கின்ருர்கள். பெரியோர்கள் பணித்தபடி, இவர் வனத்தில் வாழ்ந்து திரும்பிவந்தவுடன் நாடும் அரசும் தந்திடல் வேண்டும்; ஆனுல், தூதுவர் அனுப்பிக் கேட்டும், அரவக்கொடியோன், நாடும் செல்வமும் தர மறுத்ததல்லாமல் ஆண்மை காட்டிப் போரில் வென்று பெற்றுக்கொள்ளும்படியும் சொல்லிவிட்டான். கடைசி முறையாகக் கேட்டுவரச் சொல்லி யென்னை ஐவர்களும் தூது அனுப்பினுர்கள். நானும் இன்று கண்டு பேசியாயிற்று; அப்பாதகன் ஒரே பிடிவாதமாக இருக்கின்ருன். ஆகையினுல், இனி வேறு யோசனையில்லை; இருதிறத்தாரும் போரில் முனைந்து நிற்கின்ருர்கள். இன்னம் சில நாட்களில் குருக்ஷேத்திர பூமியிற் போர் நடந்திடும்" என்று குந்திதேவிக்குக் குறித்துச் சொன்னுர் கண்ணபிரான்.

என்னவே, குந்திதேவி மிகவும் துயரங்கொண்டவளாகப் "போர் நிகழுமானால், யார் வெல்வரோ? யார் தோற்பரோ? யார் தோற்றாலும் வென்றாலும், குருகுலப் பணமும் குருகுலச் சேனையும் குருகுலக் கௌரவமும்தானே அழியப் போகின்றன; இதற்குச் சமாதானம் செய்திட யாருமில்லையா அவையில்" என்றாள். "எல்லோரும் இருக்கிறார்கள்; எல்லோரும் சொன்னார்கள்; அரவக் கொடியோன் கேட்டால் தானே; அதுமாத்திரமா! பாண்டவர்கள், போர் வேண்டாமென் றெண்ணி, நாடும் வேண்டாம் பொருளும் வேண்டாம்; ஐந்து ஊர் கொடுத்தாலும் போதும் என்று கேட்டு வரச் சொல்லித்தான் என்னை யனுப்பினார்கள்; நானும் கேட்டேன்; ஊசி குத்தும் இடங்கூடக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டான்; கெடுமதி கண்ணுக்குத் தோன்றாதல்லவா? அவன் போரில் மடியப்போகும் காலம் வந்து விட்டது; பிடிவாதமாக இருக்கின்றான். செய்த பாவங்களின் பரிபக்குவ காலம் வந்துவிட்டால், ஒரு பிறப்பிலேயே பலனளித்திடுமல்லவா? அது துரியனிடம் பலித்துவிட்டது; போர் சூழவேண்டியதுதான்; துரியன் தம்பியரோடும் மடிய வேண்டியதுதான்" என்று கண்ணபிரான் சொன்னபோது, குந்திதேவி, "ஆனால் என் மக்கட்கே வெற்றி திண்ணமாகக் கிடைக்கும் என்கிறீர்களா" என்றாள்; "அதில் தடையென்ன? 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பது பொய்க்குமா? தெய்வ பலமுடையவர் அன்றோ பாண்டவர்கள்? அவர்களுக்குத்தான் வெற்றி கிடைத்திடல் வேண்டும்; ஆனால்—" என்ற கண்ணனைப்பார்த்துக் குந்திதேவி, "என்ன! என்ன!! ஆனால் என்ன?" என்றாள். "கர்ணனையும் அர்ச்சுனனையும் பற்றித்தான் எனக்குக் கவலையாயிருக்கிறது" என்றார்; "ஏன்! கர்ணனும் அர்ச்சுனனும் என்ன" என்றாள் குந்தி. "கர்ணனும்

அர்ச்சுனனும் வில்லில் சமவீரர்கள் ; அர்ச்சுனனைக் கொல்வ தாகக் கர்ணன் சபதம் கூறியிருக்கின்றான் ; இவனும் கர்ண னைக் கொல்வதாகச் சபதம் கூறியிருக்கின்றான் ; என்றாலும், அர்ச்சுனன் காண்டவ வனத்தை யழித்தபோது தப்பிப் பிழைத்துச் சென்றதொரு நாகம், அர்ச்சுனனிடம் கறுக் கொண்டு, கர்ணனிடம் நாகாஸ்திரமாக வளர்ந்து வருகிறது ; இந்த நாகாஸ்திரத்தைப்பற்றித்தான் எனக்குக் கவலை சிறிது இருக்கின்றது; அது நீங்குதற்கு ஒரே யோசனையுண்டு; அது வும் உங்களால்தான் ஆதல்வேண்டும் ; அதற்காகவே நான் உங்களைக் காணவந்தேன்" என்று சொன்னார்.

"அஃதென்ன காரியம்? என் மகன் பொருட்டு நான் அவசியம் செய்யவேண்டிய கடமை யுள்ளவள்தானே" என்றாள் குந்தி; "ஆமாம் ; கதை முற்றும் கேட்டபிறகு மலைத்திடல் கூடாது ; அவசியம் அந்தக் காரியத்தைச் செய் திடல்வேண்டும்" என்றார்; "அஃதென்ன? அவசியம் செய் கிறேன் ; சொல்" என்றாள். கண்ணபிரான், ஒரு பழங் கதையைச் சொல்லிக் குந்திதேவிக்கு நினைவுறுத்துகின்றார்.

"அத்தை! நீங்கள் உங்கள் கன்னிப்பருவத்தில், உங் கள் தந்தை யகத்திலிருந்தபோது, உங்கள் நந்தவனத்தில் வந்து தங்கியிருந்த தூர்வாஸ முனிவர்க்கு உபசாரமும் சிச் ருஷையும் நீங்கள் பணிவுடன் செய்தமைக்காக, அப்பெரி யார், ஐந்து தேவதா மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்துப் போனவுடன், நீங்கள் கன்னிகையாக இருந்தகாலத்திலேயே அம்மந்திரங்களில் ஒன்றைப் பரீக்ஷிக்க ஆரம்பித்தீர்களே! நினைவிலிருக்கிறதோ?" என்றார் கிருஷ்ண பரமாத்மா.

"அப்பா! நீ பரமாத்மாதானப்பா! அவ்விஷயம், சூரிய பகவானுக்கும் எனக்கும் பரமாத்மாவுக்கும் மாத்திரம்தான்

தெரியும்: இதுவரையில் வேறு யாரும் அறிந்திலர்; நீ பரமாத்மாவாகலின் அறிந்திருக்கிறாய்; ஆமாம்; அதற்கென்ன! இப்போது!!" என்று கேட்டாள்; "அதுவா! உங்களது கன்னிப்பருவத்திற் பிறந்த குழந்தையை, ஊர்வம்புக்குப் பயந்து, ஒரு மிதவையிலடக்கம்செய்து, உங்கள் நகர் ஆற்றில் விட்டுவிட்டீர்களே! அது என்னவாயிற்று தெரியுமா?" என்றார்; "தெரியாதே! அதனைப்பற்றி நான் ஏன் விசாரிக்கப் போகின்றேன்" என்றாள்; "அதனை அந்த நதி எடுத்துக் கொண்டே போய்க் கங்கையில் சேர்த்தது; கங்கையில் மிதந்துவந்ததைக்கண்ட சூதன், மகப்பேறில்லாது வருந்தியவன், தனது தேவியுடன் அக்குழந்தையையெடுத்து வளர்த்துத் தான்பெற்றதுபோற் பாவித்துச் சூரியன் அசரீரியிற் சொன்னபடியே கர்ணன்எனும் நாமத்தையுமிட்டு வளர்த்து வந்தான்" என்று சொல்லிவரும்போது, "அக்குழந்தையா கர்ணன்" என்றாள்குந்திதேவி. "ஆம்; ராஜவம்சக்குழந்தையாகையால் ராஜபதவிக்கே வந்து சேர்ந்து விட்டது; இப்போது கர்ண மகாராஜனாக இருக்கின்றான்" என்று சொன்னார். "ஆமாம்; இதில் நான் செய்ய வேண்டியதென்ன விருக்கின்றது?" என்றாள். "இன்றோ, நாளையோ, நீங்கள் கர்ணனிடம் சென்று இந்தக் கதையின் விவர மெல்லாம் சொல்லி, நீங்கள் அவனுக்குப் பெற்றதாய் என்பதையும் மெய்ப்பித்து, அன்பு காட்டி அன்பு பிறக்கச் செய்து, 'தம்பியர் ஐவருடனும் கூடி வாழ்ந்து முடி சூடிக் கொள்ளலா' மென்று அழையுங்கள்; அவன் வருதற்குப் பிரியப் படான்; ஆனால், அந்த நாகாஸ்திரத்தை யிரண்டாம் முறை எய்யாதபடி உறுதி கேட்டாயினும் வாருங்கள்" என்று கண்ணபிரான்சொன்னார்.

"மாயக் கண்ணா! இந்த உண்மையை யன்றே சொல்லியிருந்தால், என் மகன் கர்ணனை, அந்தத் துஷ்டர்களுடன்

சேராமற் செய்திருப்பேனே; இத்துணை நாட்களும் சும்மா இருந்துவிட்டுப் போரையும் இருவருக்குள் மூட்டி விட்டு, இப்போது வந்து இதனைச் சொல்லுகிறாயே! என்ன செய்வேன்? இரண்டு வகையிலும் மகன் இறந்த துயரங்கேட்டு நான் மாழ்கும்படியா யிருக்கிறதே'' என்றாள். "அத்தையே! ஸத்ய சீலர்களாகிய ஐவர்மாள்வதா? அஸத்ய சஹவாசத்தை யுடையஒருவன் கர்ணன் மாள்வதா? எது நல்லது? சொல்லுங்கள்'' என்றார். குந்தி யென்னசெய்வாள்! ஐவர் இறந்து படப் பிரியப்படாமல் கர்ணனைக் காண்பதாக வாக்குக் கொடுத்திட்டாள். கண்ணபிரான், அவளிடம் உறுதி பெற்று விதுரன் மனைவந்து சேர்ந்தார். அன்றைய இரவு கழிந்து மறுநாள் சூரிய உதயமாயிற்று.

துஷ்டர் கண்ணனைக் கோல்ல உபாயம் சேய்தல்.

தந்தையும் தம்பிமாரும் கர்ணனும் சகுனியும் மற்றமன்னரும் அமைச்சரும் சூழவிருந்து ஆலோசனையி லமர்ந்திருந்தான் அரவக்கொடியோன். சபையோரைப் பார்த்துச் சொல்லுகின்றான்; "காட்டிலிருந்த பாண்டவரை யழைத்து நம்மிடம் நாடு கேட்கச்செய்து, அவர்க்குத் துணையாயிருந்து, நம்மிடமிருந்து நாட்டைக் கவரும்படியான யுக்திகளெல்லாம் செய்து கொடுக்கும் யாதவக்கள்ளன், நம் நகருக்குத் தனியே வந்திருக்கும், இந்த நற்சமயத்தை விட்டிடலாமா? அவனைப் பாண்டவருடன் சேரவிடாமற் செய்தாலல்லாமல், நாம், பாண்டவரை வெல்லமுடியாதே; இதற்கு இப்போது என்ன யுக்தி செய்யலாம்'' என்று கேட்டான்.

அப்போது, [1]தந்தை மகனைப் பார்த்து, "இதற்கென்ன இனியும் யோசனை! புலி வலையிலகப்பட்டால் வேடர் விட்டு

விடுவாரா? நமது பெருஞ் சேனைகொண்டு, அம் மாயனை வளைத்துக்கொண்டு, இருள் நீங்குதற்குமுன் கொல்வதுதான் தக்க யோசனை" என்று சொன்னான். அதனைக் கேட்ட கடைசி மகனாகிய விகர்ணன் கூறுகின்றான்:—"பிதா! பூமியில் இதற்கு முன் எந்த மன்னரேனும் வந்த தூதுவனைக் கொன்றிருக்கின்றார்களா? எங்கும் இல்லாத இந்த யுக்தியை அரச குலத்தினராகிய நீர் எங்கிருந்து கற்றுளீர்!

"மூத்தவர் இளையோர் வேதமுனிவரர் பிணியின் மிக்கோர்
தோத்திரம் மொழிவோர்மாதர் தூதர் என்றிவரைக் கொல்விற்
பார்த்திவர் தமக்கு வேறுபாவ மற்றிதனினில்லை
பூத்தெரி தொடையாய் பின்னும் நரகினும் புகுவரென்றான்."

"பழியுடைப் பகைஞரேனும் தன்பெரும் பதியில் வந்தார்
அழிவுறக் கோறல் பாவம் ஆண்மையுமல்ல வென்பார்
கழிகடற் சேனைசூழக் கங்குலின் வளைந்திட்டாலும்
எழிலுடைக் கொண்டல் வண்ணன் அகப்படா ரெவர்க்கும்
[என்றான்."

பெரியோர்களே! வயதில் மூத்தவர் இளையவர்கள், வேதியர் முனிவர் நோயுடையோர், தோத்திரம் கூறுவோர், மாதர், தூதர் என்னுமிவரைக் கொன்றால், அரசர்க்குப் பாவமும் பழியும் சேரும்; ஆண்மையுமில்லை யல்லவா? மற்றும், பகைவாயினும், தமது பதிக்கண் வந்துளாராயின், அவரை யுபசரித்து அனுப்ப வேண்டியிருக்க, இருளில் அழைத்துக் கொல்வதா? இஃது ஆண்மையாகுமா? நீங்கள் எத்துணை சேனை கொண்டு வளைத்திட்டாலும் உங்கட்கு அகப்பட்டு நிற்கமாட்டான் அந்தக் கொண்டல் வண்ணன்" என்று சொன்னான்.

துரியன், அவனைவைது, "சிறு பிள்ளை, நீ, ஆலோசனைக் குதவாய்; போ?" என்று சொல்லி மீண்டும் தனது யோசனை யைச் சொல்லுகின்றான். "அதிரதவீரர்கள் சேனையுடன் சென்று விதுரனது அரண்மனையைச் சூழ்ந்து நின்று, அவ் விருவரையுமே கொன்றிடுங்கள்" என்று சொன்னான். "கர் ணன் எழுந்து, "இவனைக் கொல்ல வீட்டில் நெருப்பு வைத் திடல் வேண்டுமோ? நான் ஒருவனே சென்று, என் வில்லில் அம்பைப் பூட்டி அவ்விடையனைக் கொன்றுவருகின்றே" னென்றான்.

சகுனி, எழுந்து நின்று, "இம்மாயன் நம்பதி விட்டுப் பாண்டவரிடம் சென்றிடுவனாகில், நம்மை வெல்ல வொட் டான்; வேறு யோசனை வேண்டாம்; சிறைப்படுத்துவதே தக்க யோசனை; கொல்லுதல் இயற்கையுமாகாது; பள்ளம் தோண்டி அதனுள் மல்லர்களையும் மறவர்களையும் மறைத்து வைத்து, அப்பள்ளம் தெரியாம லலங்கரித்து, அதன் மேலா சனமிட்டு, அவனை யுபசரித்து அழைத்து வந்து உட்காரச் செய்து, அக்குழியில் தள்ளிச் சிறையிடுதலோ கொல்லு தலோ செய்ம்மின்; இது தக்கதாகும்" என்று சொன்னான். மாமனுரைக்கு மாற்றுரையில்லாத மருமகனாட்சியாதலில், அதுவே தக்க யோசனை யென்று, அவ்வண்ணமே, பள்ளந் தோண்டச் செய்து, பள்ளரை வைத்து, மேல் மணிகள் பல வால் அலங்கரித்து அன்றிரவை யங்ஙனம் கழித்தார்கள்.

கண்ணபிரான், முன் சொன்னபடி சூரியோதயமான வுடன் நித்ய கர்மங்களையும் தானாதி காரியங்களையும் முடித் திருக்கும்போது, மன்னன் தூதுவர் வந்து வணங்கித் "தங் களை மன்னர் மன்னன் அவைக்கு அழைக்கிறார்" என்று சொன்னார்கள். கண்ணனும் உள்ளங் களித்து விரைந்து

தமது மெய் காவற்படையுடன் ஏகினர். காவற்படையை விடாமல், மாயவனை மாத்திரம் அவையில் விடும்படியாக ஏற்பாடு செய்திருந்தமையால், வீரர் தடுக்கப்பட்டு நிற்பத் தாம் மாத்திரம் உட்சென்றார்; மெய்வீரர் தடுக்கப்பட்டமை யுணர்ந்து. இங்கு ஏதோ மாயம் நடக்கப் போகின்றது" என்று எண்ணினர் மாயக்கள்வ மாதவப்பிரான். மாயவரை வஞ்சிக்கு மொருமாயமு முண்டாமெனக் கருதுவார் மூடக்கூட்டத்தார்.

கண்ணிலா மன்னனும் பீஷ்மனும் மற்றுமுள்ள மன்னவரும் இருக்கும் மண்டபத்துள் எழுந்தருளும்போது, தனது கொடியைப்போலும் மனமுடைய மன்னர் மன்னவனை துரியோதனன், எழுந்துவந்து உபசரித்து, "இந்த ஆஸனத்திலிருங்கள்" என்று அம்மாய ஆனத்தைக் கையாற் காட்டினன். இச்செயற் புதுமையையுங் கண்டு, இங்குத்தான் அந்தப் புதுமை யுள்ளதுபோலும் என்று, தமது பரந்த உருவையும் அவயவங்களையும் ஆயுதங்களையும் ஆற்றலையும் தமது பெரிய உள்ளத்திற் சிந்தித்துக்கொண்டே, அவ்வாஸனத்தமர்ந்தார். ஆஸனம் நெறு நெறென்றது; அறிந்தார் அறிவுருவனாகிய, அன்று உலகத்தை யடியளந்த மாயவன்; சிந்தித்த உருவத்தையும் அவயவங்களையும் ஆயுதங்களையும் காட்டி நின்று ஆற்றலுடன் விளங்கினர். அவர் தம் முடிகள் அண்டமுகட்டை யெட்டின; பாதங்கள் பாதலத்தைத் தொட்டன; கைகளெல்லாம் ஆயுதங்கள் பலவற்றுடன் திக்கனைத்தும் செறிந்து நின்றன. வலமும் இடமும் முன்னும் பின்னும் மேலும் கீழுமாக வளர்ந்த அப்பேருருவத்தைக் கண்ட தேவரும் பிறரும் நடுங்கித் துதித்தனர். பள்ளத்திலிருந்த மல்லரும் மறவரும் அப்பேருருவத்தில் நசுக்குண்டு போயினர் என்பது சொல்லல் வேண்டுமோ! பரம்பொருளி

னது விசுவரூபத்தைப் பார்க்கப் பாக்யம் பெற்றிருந்தார் போல, யாவரும் திகைத்துக் கைகள் குவிந்திருந்தனர். சிலர் பயந்தார் ; சிலர் வியந்தார்; சிலர் எழுந்தார்: சிலர் விழுந்தார்; சிலர் தொழுதார் ; சிலர் அழுதார் ; சிலர் மதித்தார் ; சிலர் துதித்தார்.

"ஆரணனே அரனே புவனங்களனைத்தையும் அன்றுதவும்
காரணனே கருணாகரனே கமலாஸனி காதலனே
வாரணமே பொதுவேயொரு பேரிடவர் தருளும்புயலே
நாரணனே முனியேல் முனியேலென நாகர்பணிந்தனரே"

"மாதவனே முனியேல் எமையாளுடை வானவனே முனியேல்
யாதவனே முனியேல் இதயத்திலிருப்பவனே முனியேல்
ஆதவனே முனியேல் மதிவெங்கன லானவனே முனியேல்
நீதவனே முனியேல் முனியேலென நின்று பணிந்தனரே"

பீஷ்மன் கர்ணன் துரோணன் அவன் மகன் மற்ற நராதிபர் கள் எல்லோரு மடைவே யெழுந்து கரங்கள் குவித்துச் சிரங் களில் வைத்துத் துதித்தார்கள்.

"கண்ண பொறுத்தருள் வெண்ணெ யருந்திய
கள்வ பொறுத்தருள் கார்
வண்ண பொறுத்தருள் வாமபொறுத் தருள்
வாத பொறுத்தருள் நீ
திண்ண மனத்துணர் வொன்று மிலாதவர்
செய்த பெரும் பிழையென்
றண்ணல் மலர்க்கழல் சென்னியில் வைத்
தெதி ரன்று துதித்தனரே"

தேவர் நாகர் முனிவர் முதலியோரும் ஸபையிலுள்ளோரும் துதித்துக்கொண் டிருந்தது கண்டும், அரவக் கொடியுடைப்

பாரி யரக்கமனத்தினன், அஞ்சவுமில்லை; நெஞ்சு அயரவு மில்லை; ஆஸனத்திருந்து பெயரவுமில்லை; சென்னியிற் காம் வைத்தது மில்லை; சிறிதும் ஒன்றும் மொழியவுமில்லை யாம் படி யிருந்தான்.

கண்ணுயிர முடையா னவனைப்பார்த்து, "துஷ்ட நாதிப! துன்மதியா லெனைக்கொல்ல நினைத்தனையே; முடிந்திட்டதா? மாறாக உன்னைக் குலத்தொடும் கொன்றிடவெண்ணிற் கொன்றிடுவேன் என்பதை யென்னுருவத்தால் நிச்சயிக்கலாம்; பாண்டவ வீரர் சபதம் பொய்த்திடு மாதலால், அவர்களைக்கொண்டே நாளைப்போரில் உன்னையும் உன் துணைவரையும் உன் குலத்தையும் நானே கொல்விக்கப் போகிறேனென்பதை நிச்சயமாக இன்றேநினைத்துக்கொள்" என்று சொல்லிப் புறப்பட்டு உருவைக் குறுக்கிக்கொண்டு முன்னைய கண்ணனுருவுடன் செல்லும்போது, எல்லோரும் வந்து வணங்கி விடைபெற்றுப் போனார்கள். கண்ணபிரான் கன்னனை மாத்திரம் உடனழைத்துக் கொண்டு போனார்.

கண்ணபிரானும் கன்னராஜனும்

கர்னமகாராஜன், தம்மைப் பின்தொடர்ந்துவர ஆங்கோர் தனியிடத்தில் நின்றுகொண்டு, சபையிலுள்ளார் யாவரும் பார்த்திருக்கும்படியும், ஆனாலும், தாங்களிருவரும் பேசிக்கொண்டிருக்கும் விஷயம் இன்னதென்பதை யாரும் அறிந்திடாதபடியும் சில விஷயங்கள் பேசினார்கள்.

கர்ணன்:— மாயமாதவப்பிரானே! திருவுள்ளத்திற் சினங்கொண்டிடப்படாது; அறியாதவர் தெரியாமையினால் செய்த குற்றமிது; பொறுப்பது சீரியோர் கடமை.

கண்ணபிரான்:— கர்ண! அஃதிருக்கட்டும்; நன்மன முடைய உன் இயற்கையும் இத்துன்மதிகளுடைய கூட்டத்தின்—மாயச் சகுனியினுடைய இயக்கத்தின் மயக்கத்தினால் திரிந்து கன்மனமாயிற்றே; உன்மனத்தை நான் நன்றா யறிவேன்; ஆஹா! பிறப்பின் குணம் செயற்கையினால் கெட்டுப் போவ தென்பது உன்னில் நன்றாய்ப் பலித்துவிட்டது; பார்!

கர்ணன்:-"மாதவ! என்ன செய்வேன்? பாலியம்முதல் அதாவது அந்தப் படிப்புக்கால முதல், பாண்டவரிடம் அவர்களிலும் அப்பார்த்தனிடம் புத்தியும் யுக்தியும் வீரமும் தீரமும் கண்டது முதல் இயற்கையில் என்னிட மெழுந்த அசூயை காரணமாகவே, இத்துன்மதிகளின் சேர்க்கை எனக்குப் பலமாயிற்று ; பலசமயம் இவர்களது, தீய செயல்களில் மனம் பற்றாமல் விலக எண்ணினதுண்டு ; ஆனால், அரவக்கொடியோன் காட்டி யுதவிய அன்பும் ஆதரவும் பாண்டவர்மே லெழுந்திருந்த அசூயையும் என்னை இப்படிச் செய்திட்டன. எல்லாம் அறிந்தும் விளைவெலா முணர்ந்தும், என்னை நான் மீட்டுக்கொள்ள முடியாமல், ஜன்மம் இப்படியே கெடும்படியான நிலைமைக்கும் சித்தனாகி விட்டேன்" என்று சொல்லிக் கண்களில் தாரை தாரையாக நீர் சொரிந்தான்.

கண்ணன்:— கர்ண! கவலைப்படாதே! மனம் தெளிந்திருந்தாலும் போதும்: உனது பிறப்பின் குணத்தியற்கை வெளிப்பட்டது பார்! பாண்டவரை நீ யாராக எண்ணியிருக்கிறாய்!! உன் பிறப்பை நீ உணர்ந்திருக்கிறாயோ? பாண்டவர் உனது சகோதாத் தம்பியர்கள் என்பதை இவ்வியற்கைக் குணத்தினாலாவது நிச்சயித்துக் கொள்.

"வண்மையினு லுயரங்கர்குலாதிப மதிகுலம் வாழ்வுறவக்
துண்மையினு லுயர்மன்னவ ரைவருமுன்னி லுனக்கிளையோர்
பெண்மையினு லுயர்குந்தி வயிற்றிடை பெருமையினுலியத்
திண்மையினு லுயர்கின்னையு மன்பொடுதினகரன் நல்கினனே"

வள்ளன்மை யுடையாய்! கர்ணு!! இம்மதிகுலம் சிறப்புறும் படியாகக் குந்திவயிற்றிற் பிறந்து வீரதீரர்களாகியும் சத்ய தர்ம சரிதர்களாகியு மிருக்கும் பாண்டவரைவரும் உன் தம்பியரேயாவர்; அவரைப் பெறுதற்குமுன், சூரியனது அருளினுல் கன்னிப்பருவத்தே, மந்திர பரீக்ஷையின் நிமித் தம் உன்னைப்பெற்று, கன்னியாதலின், ஊர் வம்புக்குப் பயந்து, ஒரு மிதவையில் அடக்கம்செய்து, கடவுளையும் அச் சூரியனையுமே நம்பி ஆற்றில் விடுத்தாள்; சூரியதேவன் உன்னைக் காத்துக் கங்கைக் கரையிலொதுக்கிச் சூதனும் ராதையும் எடுத்து வளர்க்கும்படியாகச் செய்து, தானே அச ரீரியில் உனக்குக் கர்ணனெனும் நாமத்தையும் பொறித்திருக் கின்முன்; இவ்விஷயம் நீ உணர்வையோ? பிறப்பறியாது ஒருவர் தம் பிறவியை யொழித்தல் நல்லதன்றெனச் சொன் னேன்" என்று விவரமாகச் சொல்லி, "இப்போதும் விஞ்சிப் போயிடவில்லை; இப்போது நீ மனம் வைத்து இத் துஷ்ட ரிடம் நின்றும் விலகினுல், நீயே இக்குருகுல சக்ரவர்த்தியா யிருந்து, பாண்டவரைவரும் அடிவணங்க வாழ்ந்திருக்கலா" மென்றும் சொன்னுர்.

கர்ணன்:—மிகவும் துக்கித்து, கண்ணபிரானே! யார் பெற்ற பிள்ளை நான் என்பது உணராதிருந்த எனக்கு எனது இயற்கைக்கு மாருகச் சூதன் மகன் என்று உலகம் சொல் லும் பழியினின்றும் நீங்கும்படியாக என் மனம் களிக்கும் படியேனும் என் பிறப்பினை யுணர்த்தினீர்கள்: இது ஒரு

விஷயத்தில் மாத்திரம் நான் களித்திடலாமன்றி, இனி இவர் களைப் பிரிவதோ; அவர்களைச் சேர்வதோ இப்பிறப்பில் இல்லை; விஜயனைக் கொல்வது எனும் சபை யறியும் சபதமும் எழுந்து நிற்கின்றது; இப்போது என் தம்பியரிடம் நான் போய்ச் சேர்ந்தால், மன்னர் பரிகசிப்பர்; உலகமும் நகைத் திடும்; அன்றியும் அந்த அரவக்கொடியன் என்பால் வைத் திருக்கும் அன்பையும் செய்திருக்கும் ஆதரவையும் மன மறிந்து வஞ்சித்தவன் ஆவேன்;

"ஆரென்றறியத் தகாதவெனை யரசுமாக்கி முடிசூட்டிச்
சீருந்திறமுந் தனது பெருந்திருவு மெனக்கே தெரிந்தளித்தான்
பாரின்றறிய நூற்றுவர்க்கும் பழிதீர்வென்றிப் பாண்டவர்க்கும்
போரென்றறிந்துஞ் செய்ந்நன்றி போற்றாதவரிற் போவேனோ?"

கண்ணா! உள்ள நாளெல்லாம் உடனிருந்து உண்டியும் கொண்டு போர்முனைந்திருக்கும் இத்தருணம் விலகுவ தென்பது செய்ந்நன்றி கொன்ற குற்றமாகும். இனி யெனக்கு வழி யெதுவுமில்லை; துஷ்டனோ துன்மதியோ இவனுடன் கூடியிருந்து போர்க்குதவித் தோற்றேனும் இவன் களித்தப் போரிலேயே அழிவது கருமமாகும்; என் செய்வேன்? என் இயற்கை மாறிய கடமை யிதுதான்'' என்று உரைத்து மாழ்கினன்.

கண்ணன்:—என் செய்வது? விதிவலிது; நெருங்கிக் கலந்தவரைக் கைவிடுதல் விலங்கிற்கும் கூடுவதில்லை; அறி வுடை மக்களைப்பற்றிப் பேசுதல் கூடுமோ?'' என்று கூறிப் பிரிந்துபோயினர்.

அசுவத்தாமனும் கர்ணனும்

"சரி! சபையிலிரண்டாயின; குந்தி ஒன்றாயிற்று; பிந்தியும் இதுவாயிற்று; மற்றும் முடித்துக்கொண்டு, உப

லாவியம் செல்லவேண்டியதுதான்'' எனச் சிந்தித்துக் கொண்டே போம்போது, அசுவத்தாமன் தென்பட்டான். "வரவேண்டும்! வரவேண்டும்!; ஆசிரியகுமாரா; அசுவத் தாமா! அவையில் நடந்த வெல்லாம், உன் பிதாவுக்கும் உனக்கும் சம்மதமா யிருந்திருக்கமாட்டாதென் றெண்ணு கின்றேன்; 'தினைவிதைத்தார் தினையறுப்பர்; வினை விதைத்தார் வினையறுப்பர்' என்னும் பழமொழி பொய்த் திடுமா? எல்லாம் நாளைப் போரில் நன்கு விளங்கிடும். தீயோர்கள் வாழ்வுடனே முடிந்தது சரித்திரங்களில் காணப் படவில்லை. இவன் செய்யும் தீமையை உலகம் பொறுத்திட மாட்டாது; உடனே பலனையளித்திடும்'' என்று சொன்னார்.

அசுவத்தாமன்:—உடனே வெட்கித் தலை வணங்கிக் கண்ணபிரானை மனம் பொருந்தத் துதித்து, "மாதவா! நீ அறியாததா? பாவவினையாலோ விதிப்பயனாலோ, இத்துஷ் டன் செய்த உதவிகளையும் அளித்த உண்டியையும் கருதி நாங்கள் இவற்றை யெல்லாம் பார்த்திருக்கின்றோமன்றி, அறி வுடையோராக இருந்து, மனமறிந்து இவற்றுக் குடன்படு வோமா? கண்ணன், அசுவத்தாமனை நோக்கி, யாவரு முண ரும்படியாக

"போயோ கானம் பலதிரிந்து புகன்ற
விரதம் பொய்யாதோர்
ஆயே வந்த பாண்டவர் களைந்தூர்
வேண்ட மறுத்ததற்குச்
சேயே யனைய சிலை முனிவன்
சேயோனாளைச் செருக்களத்தில்
நீயே கரியென் றெடுத் துரைத்தான்
நெடியோன் தனபமுடியோனே."

புகன்ற விரதம் பொய்யாதவராகிய பாண்டவர்கள், கானம் பல திரிந்து வந்து, குறித்த நாடு கொடுக்க மறுத்தானே "ஐந்து ஊர்களாயினும் கொடு" என்றதற்கும் மறுத்துரைத்த மன்னவன் வார்த்தையை, வில்லாசிரியனாகிய துரோண முனிவர் குமாரனான அச்வத்தாமா! நீயும் மன்னவையிற் கேட்டிருந்தாயன்றோ? யுத்த களத்தில் இதற்கு நீ யொரு சாக்ஷியாக இருப்பாய்; மற்றும் ஒன்று சொல்லுகிறேன்; இங்ஙனம் துன்மதியே படைத்த ஒருவனுக்கு நன்மதியே படைத்துள்ள நீங்களும் துணையாயிருப்பதை உலகம் பொறுக்க மாட்டாதென்பதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? நீங்கள் மனதாரத் துணை புரியவில்லை யென்பதுண்மையானால், நாளை கூடும் போர்க் களத்தில்,

"ஆனா உனதாண்மைக்கு நிகா வனிதலத்தில் வேறுண்டோ
ஞானதிபனே போர்க்களத்தில் நாகக்கொடியோன் பணிந்துன்னைச்
சேனாபதியா கென்றாலுஞ் செலுத்தேனென்று நீமறுத்தி
யானாலுய்வரை வருமற்றவர் பாலுனக்கு மன்புண்டே."

முனி குமாரனே! இப்புவியில் உன்னுடைய ஆண்மைக்கு நிகரானவரிலர்; உனக்குப் பாண்டவர் பால் அன்புண்டென்பதை நான் அறிவேன்; உன் மனமறிய அஃது உண்மையாக இருக்குமானால் - பாண்டவர் எவ்விதத்திலும் பழிப்பற்றவர் பிழைப்பற்றவர் என்று நீ கூறுவது உண்மையானால், அரவக் கொடியன் என்னதான் வற்புறுத்தின போதிலும், போர்க் களத்திற் சேனாபதியாக இருந்து சேனையைச் செலுத்த ஒப்புக்கொள்ள மாட்டா யென்று நம்புகிறேன்; அப்படியானால் தான் உன்மனதுக் குகந்த ஐவரும் வெற்றி பெறல் முடியும்" என்று, யாவரும் கேட்கும்படியாக உரத்துச் சொன்னார்.

என்றிப்படிச் சொல்லித் தந்திரமாகத் தனது விரல் மோதிரத்தைக் கீழே நழுவவிட்டார்; அசுவத்தாமன் அதனை யெடுத்துக் கொடுக்கவே வாங்கிக் கொள்வார் போற்கைகளை நீட்டி யவன் கைகளோடு பொருத்தி மோதிரம் பெற்று, "அதோபார்! சூரியனையும் பரிவேடம் சூழ்ந்திருக்கின்றது" எனச் சொல்லிச் சூரியனை யவன் பார்க்கும்படியும் செய்து விட்டார். அவனும் பார்த்தான். கண்ணன் பிரிந்தார். இந் நிகழ்ச்சியைக் கண்ட அவையோர்கள், "ஆஹா! ஸ்ரீ கண்ண பிரான், அசுவத்தாமற்கும் உண்மையைச் சொல்லிப் பாண்டவர்க்கே உதவும்படி யாகவும், அதன் பொருட்டுச் செருக்களத்தில் சேனபதித்வம் வகிக்கப் படாதென்றும் வற் புறுத்தினர்; அதற்கு முனி மகனும் ஒப்புக்கொண்டு, அம் மோதிரம் தொட்டுச் சூரியனையும் பார்த்துச் சூளும் உரைத் திட்டான்; இனி யெங்கே அவன் அமரில் மன்னனுக்கு உதவுவது" என்று சொல்லிக்கொண் டிருந்தார்கள்.

அப்போது, துரியோதனன் வெகுண்டு மன்னரைப் பார்த்து,

"தனிவந் தகலுந் தூதனைப் போய்த்
தானே அணுகித் தடஞ்சாப
முனிவன் புதல்வன் மோதிரந் தொட்
டருஞ்சூள் முன்னர் மொழிகின்றான்
இனிவந் துறவாய் நின்றாலும் எங்கன்
தெளிவ திவனை யெனத்
துனிவந் தரசர்முக நோக்கிச் சொன்ன
னிடியே றன்னனே."

பார்த்தீர்களா! மன்னவர்களே! முனிகுமாரன் அசுவத் தாமன், மாயன் காட்டிய மாயவித்தைக்கு வசப்பட்டு, அவ

னிடம் நேரே சென்று, பாண்டவரிடந் தனக்கிருக்கு மன்பைம் மோதிரந் தொட்டுச் சூரியனைப் பார்த்துச் சூளுரைத்திட்டான். இவர்களை யெப்படி நான் நம்புவது; இவர்களெல்லோருமே உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கப்பட்டவர்கள்; இவர்களை நான் எப்படித் தெளிவது'' என்று கோபித்துக் கூறினான்; ஆகையால், அவன் வசம் சேனைகளை யொப்பித்திட மன்னவனுக்கும் பிரியமில்லை யென்று யாவரும் தெரிந்து கொண்டார்கள்.

இவற்றை யிப்படியாக்கிப் பேதோபாயம் செய்துபோய் கண்ணபிரான், விதுரன் மனையிற்போய்ச் சேர்ந்து, "இன்னொரு உபாயம் பாக்கி யிருக்கிறது; அதனையும் நிறைவேற்றிச் செல்வேன்; குந்திக்கும் கர்ணனுக்கும் நிகழும் ஸம்பாஷணையையும் அறிந்து செல்வேன்'' என் றெண்ணி அமரர் தம் நாயகனான இந்திரனை நினைந்திட்டார்.

கண்ணபிரானும் தேவேந்திரனும்.

தேவகி நந்தனன் நினைத்த மாத்திரையில் தேவேந்திரனும் அவ்விடம் தோன்றி நின்றான். இருவரும் மிகக் களிப்புடன் உபசரித்துக் கொண்டார்கள்; அப்போது கண்ணபிரான் இந்திரனைப் பார்த்துத் "தேவர் தலைவா! உன் ஆன்ம புத்திரன் விஜயனுக்கு மாறாக ஒரு பாம்பானது காண்டவ வன தகனத்தின்போது தப்பிப் பிழைத்துப்போய்க் கர்ணனிடம் அஸ்திரமாக இருந்துகொண்டு, போர்க்களத்தில் அர்ச்சுனன்பேரிற் பாய்ந்தழித்தற்குக் காத்திருக்கின்ற தென்பதை யுலகமெல்லாம் அறியும்: நீயும் அறிவாயன்றோ? போர்க்களத்திற் கர்ணன் தளர்ந்தோ மடிந்தோ ஒழியானாயின், இந்திர குமாரனாகிய விஜயன் இறப்பா னென்பதும் திண்ணமாகும்;

விஜயனிறந்தால் மற்ற நால்வரும் ஒழிவார்கள். பாண்டவர் ஒழிந்திடின், பாருலகம் பின்னும் இப்பாவி வசமே யாய் விடும். அங்ஙனம் வசப்படுமாயின், பாரில் தவமேது? தான மேது? யாகமேது? தேவர்க்கு அவிசேது? ஆகையினால் மூவுலகும் வாழும்பொருட்டு இப்போது கர்ணனை நாம் வஞ்சித்தல்வேண்டி யிருக்கின்றது; அதற்காக, நீ ஒரு பிராம்மணன் உருக்கொண்டுபோய்க் கர்ணனைக் கண்டு ஸத்யவாக்குப் பெற்று, அவனுடைய தேகத்தைப் பாதுகாக்கும் கவசகுண்டலங்களைக் கவர்ந்துவா வேண்டுகின்றேன்'' என்று சொன்னார். மற்றும், "இந்திரா! ஒன்று சொல்கின்றேன்; கர்ணன் தானத்திற் சிறந்தவன்; யார் சென்று எதைக்கேட்டாலும் கொடுத்தருளும் கொடைச் சிறப்புடையான்.

"வல்லார் வல்லகலைஞருக்கும் மறைநூலவர்க்கும் கடவுளர்க்கும்
இல்லாதவர்க்கும் உள்ளவர்க்கும் இரந்தோர்தமக்கும் துறந்தவர்கும்
சொல்லாதவர்க்கும் சொல்பவர்க்கும் சூழுஞ்சம யாதிபர்களுக்கும்
அல்லாதவர்க்கும் இரவிமகன் அரியதானம் அளிக்கின்றான்"

இங்ஙனம், காலம் இடம் குலம் குணம் உயர்வு தாழ்வு என்னும் பேதம் பாராட்டாமற் கொடுப்போனுகையால், நீ பிராம்மண வடிவுடன் சென்று யாசித்துக் கவச குண்டலங்களைப் பெற்று வரவேண்டிய தவசியமாக இருக்கின்றது; இந்த இரண்டும் உன்னாற் கவரப்படுமாயின், பின்னர், இவ்வுலகில் விஜயனை வெல்வார் யாருமிலர்; உலகம் திரண்டே வரினும், உன் மகனுக்கே ஜயம் நிற்கும்; ஆகையால் காலம் தாழ்த்திடாமல் இதனைச் செய்திடு'' எனச் சொல்லிவிடுத்தார்; அவனும் "ஆம்'' என்று ஒத்துப்போய் மறைந்தான்.

கண்ணபிரான், பாண்டவர்க்குத் தூதுபோதல் என்னும் வியாஜத்தைக் காட்டிப் புறப்பட்டுப் பாண்டவர்க்கே

போரில் வெற்றி கிடைத்தற்கு வேண்டிய உபாயங்களை முடித்திடச் சென்று அத்தினபுரம் வந்தவராகையினால், தாம் கருதியிருந்த உபாயங்களையும் பிறவற்றையும் நிறைவேற்றிவிட்டனராதலின் மனக்களிப்புடனிருந்தார். அவரை விட்டு விலகிப்போந்த இந்திரன், தன் மதலைக்கு வெற்றி கிடைத்தற்கும், தருமமூர்த்திகளாகிய பாண்டவர் ஐவரும் அரசுபெற்றுப் பூமண்டலத்தைச் செலுத்தற்கும், பிரபஞ்சத்தின் ஏகநாயகனாகிய பரமாத்மா ஸ்ரீ கோபால கிருஷ்ணமூர்த்தியின் பணியைத் தலையேற்று நடத்தற்கும் திரிலோகாதிபதியாகிய தனக்கு உரிமையும் கடமையுமுண்டாகையால் உடன் பட்டுச் சென்றான்.

கர்ணனும் இந்திரனும்

"தண்டுதா னெனக்குனிந் துடலலமரத் தாளிணை
  தளர்ந்து தள்ளாடக்
கண்டியாவருங் கைதொழக் கவித்தகைக்
  குடையுடன் கங்கைநீர் நுரையை
மொண்டு மேலுறச் சொரிந்த தாமென
  நரைதிரையுடன் மூப்பொரு வடிவம்
கொண்டதாமென ஒரு முனியாகியே
  கொற்றவன் வாயில் சென்றடைந்தான்."

கையிற்பிடித்துள்ள தண்டத்தையே உறுதியுள்ள காலாகக்கொண்டு முதுகு கூனித் தேகம் நடுங்கத் தள்ளாடித் தள்ளாடித் தன்னைக் கண்ட யாவரும் கைதொழுதிறைஞ்சும்படியாகக் கைக்குடையுடனும் நரைதிரையுடனும், மூப்பெனும் பருவானது ஒரு வடிவைக் கொண்டுவந்துளதோ என்னும்படி ஒரு முனிவர் வேடம்கொண்டு, கர்ணனது அரண்மனை வாயிலை யடைந்தான் இந்திரதேவன். தானமும் பரிசிலும்

இரவலர் முதலியோர்க்குக் கொடுத்து அனுப்பிக்கொண்டு கர்ணன் இருந்திடும்போது, இம்முனியுருவமுடையோன் போய்ச் சேர்ந்தனன். பகற்பொழுது மிகுந்துவிட்டதால், நாளை வாருமென்று வாயிற்காவலர் இம்முனிவரைத் தெழித்துக்கொண்டிருந்ததைக் கர்ணன் கண்டு அழைத்துவரச் செய்தான். முனி வரக்கண்டு எழுந்து வணங்கித் துதித்தனன். தக்க ஆஸனத்திருத்தி யுபசார வார்த்தைகள் கூறிப் பூஜையும் முறையினிற் செய்து, "தங்கட்கு வேண்டியதென்ன? கேட்டதைக் கொடுத்திடுவேன்; சங்கோசப்படாமற் சொல்லிடுங்கள்" என்று மிகவும் விநயத்துடனும் அன்புடனும் கேட்டான்.

முனிவன், நகைத்து, "விரும்பியது எதுவாயினும் கொடுத்திடல், சுரதருவாகிய கற்பகத்துக்குத்தான் உரிமையென்பர்; அது அதற்கும் அருமையென்பர் சில்லோர்; அப்படியிருக்க, ஒரு மானுடன், நீ, எங்ஙனம் அப்படிச் சபதம் செய்திடலாகும்?" என்றான். "அப்படியா! உள்ளதொன்று எதுவாயினும் கேட்டு விட்டால் தந்திடுதலே எனது கொள்கை யென்பதே அதன் கருத்து" என்றான் கொடையிற் சிறந்த கர்ணன். "உன்னிட முற்றது எதுவாயினும் கேட்டாற் கொடுத்திடல் கூடுமா? கொடுக்கத் தக்கது இது, தகாதது இது என்று ஒரு வரம்பு ஏற்படுத்திக் கொள்ளாமலா கொடுத்திடல் முடியும்?" என்றான் முனி வேஷதாரன். கர்ணன் நகைத்து, "விருத்த வேதியரே! நீர் மெய்யுயிர் விரும்பி யிரந்தாலும், கருத்தினோடு உமக்கு அளித்திடுவேன்; அளிக்க மறுத்தேனாயின், பார்த்தவர் நகைக்கச் செறுத்த போர்க் களத்தில் எதிரியிடம் அடிபட்டு முதுகு காட்டி யோடும் வீரர் போகும் நரகிடைப் போவேனாக" என்று சொன்னான். "அப்படி

யாயின், உனக்கு மெய்க் காவலாக இருக்கும் இக்கவச குண்டலங்களைக் களைந்து கொடுத்திடுவையோ'' என்று இந்திரன் கேட்டான். "இவ்வளவு தானே! உயிரைக் கேட்பினும் கொடுப்பதாக நான் ஒப்புக்கொண்டிருக்க, அழியும் உடலைக் காக்கும் இவைகளைத் தருதற்குத் தடையா? இதோ கொடுக்கிறேன்'' என்று அவற்றைக் களைந்தெடுக்கும்போது, ஒரு அசரீரி வாக்குத் தோன்றித் தடுத்தது. அசரீரி, "கர்ண! இந்த வேதியன் இந்திரன்; மாயக் கண்ணனால் ஏவப் பெற்று வந்திருக்கின்றான்; அவற்றைக் களைந்து கொடாதே'' என்று உரைத்தது. என்றாலும், மனத்திலோர் கலக்கமும், உறாமல், கர்ணன், "தருவனென்று சொன்னது எதுவாயினும் தந்திடலே என் விரதம்'' என்று சொல்லி யவைகளை யவ்வேதியன் கரத்திற் களிப்புடன் நல்கித்தானும் களித்தனன்; ஈந்துவக்கும் இன்பம் அறிந்தவர்தான் இக்கொடையின் இன்பத்தை யறிந்திடக் கூடியவர்கள். எல்லா வின்பத்திலும் மேலான இன்பம் இதுவே யெனக் கண்டிருக்கின்றனர், இயற்கைக் கொடையாளிகள்; அவர்களிற் சிறந்தவன் கர்ணன்; ஆகலின், கவச குண்டலங்களைக் கழற்றி யீந்துக்களித்திருந்தனன். தேவர் பூமாரி பொழிந்தனர். இந்திரன் வேதியர் உருவினை நீக்கித் தன் சுய உருவுடன் காட்சி தந்து நின்றான். காட்சியைக் கண்டு மனமுருகி நின்ற கர்ணனைப் பார்த்து, இந்திரன், "கர்ண! நெருங்கிய போரில் வெற்றி தரும் இதனைப் பெற்றுக்கொள்'' என்று ஒரு வேலைக் கொடுத்தனனாகிக் கூறுகின்றான்; "கர்ண! நாளைப் பாரதப் போரில், வெஞ்சமரில் நீ தலைமை வகித்திடும்போது, உன்னால் வெல்லற்கரியவனாகி ஒருவன் தோன்றப் போகின்றான். அவன் தான் வீமனுக்கு இடிம்பி வயிற்றிற் பிறந்தவனாகிய கடோற்கசன்; அவனை ஒருவாற்றானும் வெல்ல முடியாமலும், அவ

ணலேற்படும் அமர்க்களத் தவதியைப் பொறுக்க முடியா மலு மிருந்திடும் சமய மேற்படும்; அத்தருணம், இந்த வேலினை யவன்மேலெய்து அழித்திடுவாய்'' என்று கூறி யவ் விடம் விட்டகன்று, கண்ணபிரானிடம் போய்த் தான் சென்றதும் கேட்டதும் அவன் மனம் ஒப்பினதும் அசரீரி கூறினதும், கர்ணன் கவலாது கொடுத்ததும் எல்லாம் சொல்லி யாச்சரியப்பட்டான். கண்ணன், இயற்கைக் கொடையாளி களித்தகையரே!

''உண்மையாக வெஞ்சமர் முகத்தெறிபடை
யொன்றும் வந்துடலுற வொட்டாத்
திண்மையாலுயர் கவச குண்டலங்களைச்
சென்றிரந்தவர்க் கிவன்கொடுத்தான்
எண்மையாயினும் கிளைஞரே யேற்பினும்
இயல்பிலாப் புன்செல்வரீயார்
வண்மையாளர் தம்மாருயிர் மாற்றலார்
கேட்பினும் மறுக்கிலாரன்றே.''

என்று புகழ்ந்து இருவரும் பிரிந்தனர். இந்திரன் மறைந் தான்.

கர்ணனும் குந்திதேவியும்.

இந்திரனுக்கு விடை கொடுத்து அனுப்பின பிறகு, விரைந்து உபலாவியம் ஏகவேண்டுவதை யுன்னிக் கண்ண பிரான் குந்தியை யணுகி, இன்றே சென்று கர்ணனிடம் பேசி வருகென அனுப்பினர். அவளும் திருமா லேவலினல் தனது திருமாமதலை கர்ணனது அரண்மனை வாயிலை யடைந் தான்.

"குந்திதேவி, வாயிலில் வந்து காத்திருக்கிருர்கள்; தங் களைக் காணவிரும்புகிருர்கள்'' என்று வாயிலோர் உரைத்

திடக்கேட்ட கர்ணன், தானேஎழுந்து முன்சென்று தொழுது எதிர்கொண்டு வந்து முறைமையால் ஆஸனத் திருத்தி நன்கு உபசரித்தும் பின்னர் சில வார்த்தைகள் சொல்கின்றான். "தாயே! தாங்கள் எனது இச் சிறு குடிசையை நாடி வந்தது எனது அருந்தவப் பயனென்றே யெண்ணுகின்றேன்; வந்த விஷயம் என்னவோ? அஃது என்னாற் கூடுமாயின் இயற்றித் தருகின்றேன்; இசைந்து மொழிந்தருளல் வேண்டும்" என்று மிக விநயத்துடன் பணிந்துருகிக் கேட்டனள்.

"அப்பா! கர்ணா!! நீ எனது வயிற்றிற் பிறந்த குழந்தை யாவாய்! அதிபால்யத்தில், குரு உபதேசித்த மந்திரத்தைப் பரீக்ஷித்திட நான் உருச் செபித்தபோது, சூரியன் என் எதிர்த் தோன்றி எனக்குப் பருவமுமளித்து, உன்னையும் அளித்திட்டான்; அவன் ஏகினதும், எனது முன்னைய கன்னிப் பருவமேவந்தமைந்திடக் கையிலிருக்கும்குழந்தையாகிய உன்னையும் எனது கன்னிமை நீங்காப் பருவத்தையும் பார்த்து ஊர் வம்புக்கும் பயந்து, ஒருவரும் அறியாமல் எனது ஒரு சேலையைப் படுக்கையாக்கிக் கூடையிற் கிடத்திச் சூரியனையே காவலாகத் துதித்து ஆற்றில் விட்டிட்டேன்; அக்குழந்தைதான்,இப்போது என்னெதிரில் ராஜாங்கத்துடன்வீற்றிருக்கும் இந்தக் கர்ண மஹாராஜன்" என்று சொன்னாள். இது மாயனார் உபாயம் தான் என்று தெரிந்தனனாலும், வந்து கேட்பதை விரைவிலாது அளித்திடும் வள்ளலாகையினால், மனம்வெறுத்திடாமல் "தாயே! எனைப்பயந்தவள்நீதான் என்னினும், உன்மொழியைத் தேறுவது நான் எப்படி? ஏன் என்றால், நான்தாயற்றவனென்றும், இன்னார் தாயெனத் தெரியாதவனென்றும் உலகம் அறிந்துள்ளபடியால், பல பெண்கள் என்னை மகனுறவுகொண்டாடி யென்னை ஏமாற்ற

வந்தார்கள்; அப்போது நான், என் குழந்தை யுருவோடு என்தாய் என்னைச் சுற்றிப் படுக்கையாக வைத்திருந்த எனது தாயின் துகிலையுடுத்திக் கொள்ளும்படி சொல்ல, அவர்கள், உடுத்து விஷமேறி மாண்டு போயினர்; அப் பரீக்ஷையில் தாங்கள் தேறினால் நான் நம்புவேன்" என்று சொன்னான். உடனே, உண்மைத் தாயாகலின், உள்ளத்திற் கலக்கமொன்றும் கொள்ளாமல், "எங்கே! அத்துகிலை யெடு; என்னிடம் கொடு" என்றனள் குந்திதேவி. கர்ணனும் அத்துகிலினைக் கொடுத்தான். அதனைக் குந்தி வாங்கி, அது தனது துகில் தானென்றுணர்ந்து, அத்துகிலைப்பார்த்து, "ஏ! துகிற்பாம்பே!! இக்கர்ணனைப் பெற்றவள் நான் அல்லளாயின், நீ, என்னைத் தீண்டலாம்" எனச் சொல்லி, அத்துகிலைத் தன் மேனி மறைந்திடப் போர்த்துக் கொண்டாள். உடனே, இவட்குக் குழந்தையின் நினைவும் கர்ணனுக்குத் தாயின் நினைவும் உதித்தன. மகனன்பு இவனிடத்திலும் தாயின் அன்பு அவளிடத்திலும் தோன்றின; இஃது இயற்கை; எதிர் நிற்பவனைக் கர்ண மகாராஜனாக மதித்திடாமல் அன்றைத் தோன்றிய சிசுவெனவே மனதிற்கொண்டனள். பருவம் வந்து தர்மனாதியரைப் பெற்றுப் பால்கொடுத்து வளர்த்தும் காலத்திலெல்லாம், குந்தி, தனது கன்னிப்பருவத்தில் ஆற்றில் விடப்பட்ட சிசுவைப்பற்றி நினைந்து நினைந்து, அச்சிசுவுக்குப் பால்கொடாதிருந்தனனே என்று வருந்தி யுருகி மாழ்கியிருந்ததுண்மையாதலால், அந்த நினைவும் இப்போது உதிக்கவே, தனங்களின் வழியே பால் சோர்ந்து கர்ணன் முகத்தில் தெறித்தது.

காட்சியைக் கண்டான்; மனங்கசிந்தான்; உளத்திற் களிகொண்டான்; மெய்புளகித்தான்; காலிடை வீழ்ந்து வணங்கித் "தாயே! என்னைப்பெற்ற ஆயே!! தாயின்று

ரெனத் தெரியாமலும் தெளியாமலும் இருந்த என் மயக் கத்தை யறவே யொழித்திட்டாய்!!! இதற்கு மாருக நான் என்ன உதவி செய்யப்போகிறேன். என்னைத் தேர்ப்பாகன் மகன் என்று சொல்லிக்கொண்டிருக்கும் உலகோரது அப வாதச் சொல் இன்ருேடொழிந்தது" என்றென்று எத்தி ஞன். "தாயே! என்னை யாசிர்வதித் தருள்வாய்" என்று தழுதழுத்த குரலுடன் காலில்வீழ்ந்து பணிந்து, எழுந்தான்.

குந்திதேவி, கர்ணனைப் பார்த்து, "குழந்தாய்! உன் தம்பியராகிய பாண்டவரைவரும், உன் இணையடி வணங்கி டக் குருகுலத் தலைமையை ஏற்றுக்கொண்டு, இவ்வுலகை யின்ஞெரு குடைக்கீழமர்த்திச் செங்கோலோச்சிப் பல் லாண்டு நீ ஆண்டிருக்கக் கடவாய். துன்மதியாருடன் சூழ்ந்து தருமமே தமது செயலாகக்கொண்ட, உன் தம்பி யரைவரையும் உடன்று கொலை சூழ்தல் அழகாகாது; இத னைக் கேட்டவுடன் என் வயிறெரிந்ததை யாரிடம் சொல் வேன்; உன்னிடம்தான் சொல்லவேண்டியது; அதனல் சொன்னேன்; உன்னை மன்ருடி வேண்டுகின்றேன்; நீ, இவ் விடம் விட்டுப் புறப்பட்டு அவசியம் வந்து உன் தம்பிய ருடன் சேர்ந்து வாழ்ந்திடுவாய்; அப்போதுதான் என் வயிற்றின் கொதிப்படங்கும்" என்று சொன்னுள்.

"தாயே! அன்று என்னைப்பெற்ற தாங்கள், என்பேரில் அன்பு தோன்ருமையினலோ, உலகப் பழிக்கு நாணியோ விலக்கி விடுத்துவிட்டீர்கள்; அன்று முதல் இன்றளவும் ஆருயிர்த் துணையெனக் கருதி அங்கர்கோன் என்னும் நாம முஞ் சூட்டி மகுடமும் புனைந்து தன்னெடு ஓராஸனத்திருத்தி யும் ஓரிடத்துண்டும், அவனது தம்பியரும் சுற்றமும் என் னடி வணங்கும்படியாகச் செய்தும், உயர் தோற்றமும் புகழ்

ஏற்றமும் கொடுத் துள்ளவனை யினி எங்ஙனம் பிரிந்து வர முடியும்? சாவே யெனினும் அவனுடன் சாதலோ; அவ னுக்காகச் சாதலோ செய்ய மனங்கொண்டுளேன். இனி, எவ்வகையாயினும் அதனை மாற்ற முடியாதவனாக இருக்கி றேன்; அன்றியும், அவன் என்னொடும் மிக நம்பிக்கையுடன் பழகிய பழக்கத்துக்கு இவை மாத்திரம் காரணமன்று; இன் னொரு அதிசயத்தையும் கேட்பாய்; அவனது மனையாளு டன், அவனுடன் அன்றி யவனிலாதபோதும், தனியிருந் தாடுதலுமுண்டு; ஒருநாள், அவளொடும் தனியிருந்து நாடு டிக்கொண்டிருந்த சமயம், 'கணவன் வந்தா'னென அவள் எழுந்தபோது, அதனையறியாத நான், அவளை யுட்காரச் சொல்லி மேகலை பிடித்திழுக்க, அம்மேகலை யறுந்து மணி யெலாம் சிதறிக் கீழே வீழ்ந்தன; அதுகண்ட மன்னன், துரி யன், என் ஆருயிர்த் துணைவன், சிறிதும் மனம் வேறுபடா மல், என்னைப்பார்த்து, அன்புடன் பேசியிருந்து, 'வீழ்ந்த மணிகளை யெடுக்கவா கோக்கவா' என்றானே! இந்த நம்பிக் கையும் விசுவாசமும் அன்பும் ஆதரவுங் கொண்ட மன்னனை யெங்ஙனம், இந்தக் கொடும் போர்கூடிய சமயத்தில் வஞ் சித்து விலகுவேன்? ஆகையால் அவனுடனிருப்பதே தருமம்.

"மடந்தை பொற்றிருமேகலை மணியுகவே
மாசறத்திகழு மேகாந்த
இடந்தனிற் புரிந்தே நானயர்ந்திருப்ப
எடுக்கவோ கோக்கவோ என்றான்
திடம்படுத்திட வேலிராச ராசனுக்குச்
செருமுனைச் சென்று செஞ்சோற்றும்
கடன்கழிப்பதுவே யெனக்கினிப் புகழுங்
கருமமுந் தருமமு மென்றான்."

மற்றும், சொல்லுகின்றான்; "பல பலப் பேசியினி ஆகப் போவது ஒன்றுமில்லை; போருக்கோ ஆயத்தமாகிவிட்டது. ஆகையால், தாங்கள் இங்கு வந்த காரியம், என்னவோ, அதனை யொளிக்காமல் உண்மையை உரைத்திடுங்கள்." என்று துணிபுடன் சொன்னான்.

மைந்தனுரைத்த துணிவும் கடமையும் நிர்த்தாக்ஷிண்யமும் பொருந்திய உரைகளைக் கேட்ட தாய், இரண்டு கன்றினுக்கு இரங்கிவாடும் ஒரு தாய்போல் மிகவும் நெஞ்சழிந்து, கண்களில் நீர் சொரிய அலறிவாய் குளறி நொந்தழுதாள். அப்போது, மகன், அவள் கண்களைத் துடைத்து அன்பினால் பல வார்த்தைகள் பேசித்தேறுதல் செய்து, "தாயே! இவையெல்லாம் வினையின் விளைவேயல்லாமல் வேறுண்டோ? நமது முயற்சியால் ஆவதென்ன இருக்கின்றது? இச்செயல் தவிர வேறு நீங்கள் வேண்டியன வேண்டியபடியே தருகுவன்; விளம்பியிடுங்கள்." என்று அன்புடன் கேட்டான். பாண்டுவின் மனைவி குந்திமாதேவி இதனைப் பகர்வாளாயினாள்.

"மைந்தா! ஆனால் இருவரம் கேட்கிறேன்; அருள்வாய்! விஜயன் நின்னொடும் வெஞ்சமர் கோத்து நின்றபோது, அவனுக்குப் பகையாகிய அந்த நாகாஸ்திரத்தை, நீ அதற்களித்துளவாக்குப்படியே யெய்து, அது பிழைத்திட்டால், இரண்டாம் முறையாக எய்திடா தொழிவாய்! பார்த்தன் தவிர, மற்ற சகோதரர்களுடன் மலைந்து போர் செய்யாதே! இந்த இரண்டு வரங்களையும் நீ எனக்குக் கொடுத்து, வள்ளல் எனும் பெயர் வழுவிடா தருள்வாய்" என்றனள். தம்பியர்மேல் கருணை கொண்ட கர்ணன் மொழிவான்:—

"தெறுகணை யொன்று தொடுக்கவும் முனைந்து
செருச்செய்வோன் சென்னியோ டிருந்தால்
மறுகணை தொடுப்ப தாண்மையோ வலியோ
மானமோ மன்னவற் கறமோ
உறுகணை யொன்றே பார்த்தன்மேல் தொடுப்பன்
ஒழிந்துளோ ருய்வரென் றுரைத்தான்
தறுகண ரலர்க்கும் தறுகணு னவர்க்கும்
தண்ணளி நிறைந்த செங்கண்ணன்."

"தாயே! செருக் களத்தில், நின்று போர் செய்யும் பகைவன் முடியைக் கொய்திட, அதற்கென்றிருக்கும் ஒரு கணையைத் தொடுத்தும், அவன் அழியாது தலையோடிருப்பனுனல், மறுபடியும் இரண்டாம் முறை அக்கணையையே தொடுத்தல், போருக்கு அழகாக மாட்டாது; ஆண்மையாகவும் மாட்டாது; வலியுடையான் செய்யவும் மாட்டான்; கௌரவமுமன்று; மன்னவர் தருமமுமன்று; பார்த்தன்மேல் அக்கணையை யொருமுறையே தொடுப்பேன்; மற்றவர் என்னுல் போரில் துன்பமடையாமல் பிழைத்துப் போவார்; நீ, இவ்வரமிரண்டும் பெற்றுக்கொள்; ஆனுல், இதற்கு மாருக, நீங்கள் எனக்கு இரண்டு வரங்கள் தரவேண்டுகின்றேன்; அவற்றை யவசியம் எனக்குத் தந்தருளவேண்டும்'' என்ருன்; மங்கையும் "சரி" யெனக் கர்ணன் சொல்லலுற்ருன்.

"என் அரிய தாயே! பயங்கரத் தகுந்த போரில் பார்த்தனு லடியேன், பாணத்தா லடிப்பட்டிறந்து வீழ்ந்தபோது, மற்றெல்லா மன்னரும் அறிந்து கொள்ளும்படியாக, விரைவினில் வந்து என் உடலின் மேல்வீழ்ந்து, 'மகனே' என்று சொல்லிக் கதறிப் புலம்ப வேண்டுகிறேன்; இஃது ஒருவரம்; மற்ருெரு வரமாவது:— இந்தப்போர் முடியுமளவும், உமக்கு

நான் மகனெனு முண்மையைத் தம்பியர் ஐவருங்கூட அறிந்துக் கொள்ளாதபடியாக மறைத்துவைத்திடவேண்டுகிறேன். ஏனெனில், தம்பியர் அறிந்திடுவாராஞல், அவர் தம் இயற்கைக் கிணங்க, உடனே என்னிடம் வந்து என்னடி வீழ்ந்து என்னிடமே இப்பூவுல காட்சியைக் கொடுத்திடுவர்; நானே, என் இயற்கைக் கிணங்க, எனக்கு மிக நண்பினனான துரியோதனனுக்கே அந்த ஆட்சியைக் கொடுத்திடுவேன்; ஆதலால், போர்முடியு மளவும் இதனை வெளியிடா திருங்கள்; இவ்விரண்டு வரங்களையும் அவசியம் தங்களிடம் வேண்டி நிற்கிறே" னென்றான்.

குந்தியும் "ஆம்" என அதற்கிசைந்து, அவ்விரண்டு வரங்களையும் அவனுக்கீந்து, மேன்மேல் துயரம் மிகவளர்ந்திட, "மகனே! இனியுன்னை யுயிருடன் என்று காணப் போகின்றேனே?" என்று அழுது கண்ணீர் சொரிய அவ்விட மகன்று யாதவ மாதவன் இருப்பிடம் சார்ந்தாள்.

கண்ணபிரான், குந்திக்கும் கர்ணனுக்கும் நிகழ்ந்த ஸம்பாஷணைகளைக் கேட்டு மிக மகிழ்ந்து, வந்த காரியங்கள் முடிந்தன என்று களித்தவராகக் குந்தியை யவ்விடமே நிறுத்தித் தன்னை யுபசரித்த மன்னவர் பிறர்க்கும் உபசாரங்கள் சொல்லிப் புறப்பட்டு, விரைவினில், அன்றே பாண்டவர் உறைவிடம் சேர்ந்தார். கண்ணன் வந்து சேர்ந்தமையறிந்து பாண்டவ ரைவரும் உபசரித்தேற்று, அவரால், அத்தினபுரத்தில் நடந்தவெலாம் கேட்டுக் களித்தார்கள்; ஆனல், கண்ணன் அவர்க்குக் "குந்திக்கும் கர்ணனுக்கும் நடந்த ஸம்பாஷணை" யொழிய மற்றவற்றைத்தான் சொன்னர்; ஆகையால், கன்னனைத் தமையனென்று, ஐவர் மன்னரும் அறிந்திடவில்லை. பாண்டவ ரைவரும், முன்னரே போர் குறித்து

அதற்குவேண்டிய உபகாரணங்களையும் ஆயுதங்களையும் உணவுக்கு வேண்டியவைகளையும் சேகரித்துக்கொண் டிருந்தார்கள்; மற்றும், போர் நிகழ்வது தீர்மானந்தான் என்று நட்பினர்க்கெல்லாம் ஓலை போக்கியிருந்தார்கள்; ஆகையினால், உபகாரணங்களும் ஆயுத வகைகளும் உணவுப் பொருள்களும் வந்து குவிந்துகொண்டிருந்தன. மித்திர மன்னர்களும் தத்தம் படைகளை முன்னனுப்பித் தாங்களும் வந்துகொண் டிருந்தார்கள். எங்கும் போர் முழக்கமே மிகுந்திருந்தது.

படைகள் எழுதற் சருக்கம்.

"படர்ந்த கானகந் திரிந்துமீண் டன்புடன் பணிந்த பஞ்சவர்க்காகக்
கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக் கழலிணை சிவப்பேறத்
தொடர்ந்த நான்மறை பின்செலப் பன்னகத் துவசன் மாநகர்த்தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணம் என் நயனம்விட் டகலாவே."

பாண்டவர் பக்கப்படை.

பாண்டவர்களுடைய ஓலைவரப் பெற்றவுடனே அரச மித்திரர்கள் தத்தம் படைகளுடன் புறப்பட்டு வந்துகொண் டிருக்கிறார்கள். எட்டுத் திக்கிலுமுள்ள மன்னவருடன் யாகசேனன் வந்தான். அவனுடன் திட்டத் துய்மனும் திட்ட கேதுவும் சிகண்டியும் வந்து சேர்ந்திட்டார்கள். உத்தமோசா உதாமனும் உடன்வந்தார்கள். பாஞ்சாலரும் வந்து சேர்ந்தார்கள். விராட பூபனும் சதானீகனும் சிவேதனும் வராக கேதுவும் உத்தரகுமாரனுமாகிய மச்சநாட்டவர் வந்தார்கள். சேர செம்பியரும் பாண்டியரும் வந்தார்கள். கேகயத் தலைவரும் குந்திபோசரும் வந்தார்கள். கடோற்

கசக் காளையும் அபிமன்னனும் இராவானும் விந்தசோமர்களும் வீர கீர்த்தியும் புண்டலனும் செபசனனும் திரௌபதரைவரும் வந்தார்கள். சினர் சாவகர் மாளவர் தெலுங்கர் கலிங்கர் சோனகாதிபர் கன்னடர் மாகதர் துலுக்கர் குச்சரர் ஒட்டர் என்னும் மன்னரும் வந்திருந்தார்கள். இவருள் மகுடவர்த்தனர்களும் பட்டவர்த்தனர்களும் அரசிளங் குமாரர்களும் மண்டலீகரும் மந்திரிகளும் தந்திரிகளும் உள்ளார்கள்; இப்படி வந்து கூடிய கணக்கில் பாண்டவர் பக்கம் வந்துள்ள சேனைகள் ஏழு அக்ஷௌஹினி யென்பார்கள். வந்த மித்திர மன்னர்களைப் பாண்டவரும் கண்ணபிரானும் எதிர் கொண்டு அழைத்துவந்து தக்க விடுதிகள் அமைத்துக் கொடுத்தார்கள். தாம் வணங்கவேண்டியவர்களைத் தாம் வணங்கியும் தம்மை வணங்குவார் தம் வணக்கத்தை யேற்றும் தருமராஜன் யாவரும் மனங்களிக்குமாறு மரியாதைகள் செய்து, அவர்களைப் பார்த்து, அரவுயர்த்தோனிடம் தூது அனுப்பிக் கேட்டதுமுதல், அவன் கண்ணனைக் கொல்ல நினைத்ததுவரையிற் சொல்லி, "உங்கள் துணைப்பலங்கொண்டு தான் இந்தப் போரை ஆரம்பித்திருக்கின்றேன்; நீங்கள் பக்கத்துணையாயிருந்து, வெற்றி நம் பக்கல் வரும்படியாகச் செய்ய வேண்டுகின்றே"னென்று பிரார்த்தித்துச் சொன்னர். "எங்கள் சேனையும் எங்கள் உறவினரும் எங்களாயுத பலங்களும் எங்கள் ஆருயிரும், தங்கட்கே அர்ப்பணம்; தெய்வ பலத்தையும் தர்மபலத்தையும் முன்னிட்டுப் போர் புரிய நிற்கின்றோமாகையால், வெற்றி நமக்கே கிடைத்திடு" மென்று, மன்னவரெல்லோரும் கூறினர்கள். தருமபூபன் உற்சாக மிகக்கொண்டு, "இனி நம் சேனைகளைச் செலுத்தி நடத்துதற்குச் சேனபதியாகச் சிவேதனை வேண்டுகின்றே"னென்று சொன்னர். அவனும் அப்படியே ஒப்புக்கொண்டு

மற்ற மன்னருடைய சம்மதியுங் கேட்டுச் சேனைகளை வகுத்துக்கொண் டேற்றனன். அப்போது, உலூபி மகனுன இராவான் என்பவன், "எனக்கு அநுமதியளியுங்கள்; நான் ஒருவனே சென்று நின்று எதிரிகள் படைகளை ஒரே அம்பினுல் ஒரே தினத்திற் கொன்று, குருகுல ஆட்சியை நமதாக்கிக் கொண்டு வருகின்றேன்" என்று சொன்னுன். இனி, அரவக்கொடியோன் பக்கத்துப் படைகளை விளம்புவோம்.

அரவக் கோடியோன் பக்கப் படை.

கண்ணபிரானைப் பள்ளத்திடைப் படுக்க வெண்ணின அன்றே அரவக்கொடியன், மித்திர மன்னர்க்கெல்லாம் ஓலையெழுதிப் "பாண்டவருடன் போர்குறித்தோம்; படையுடன் பக்கத்துணையாக வரக்கடவீர்" எனத் தூதரும் ஓலையும், அனுப்பி யிருந்தானுகையால், மன்னர்கள் வந்தார்கள். மத்திர தேசத் தரசன் தமது மருகர்களாகிய பாண்டவரில் இளையோருக்கு உதவுவான் வந்து கொண்டிருந்தபோது, அரவக் கொடியன், அவரை வஞ்சித்து விருந்திட்டுத் தன் பக்கத் துணையாக்கிக் கொண்டான். சகுனி மாகதபதி விந்தரன் விரதன் என்பவரும் படையுடன் வந்தார்கள். கலிங்கர்கோன் சோமதத்தன், கௌசிகன் காம்பிலீசன் தெலுங்கர்கோன் போஜன் கேகயன் திகத்தராயன் கவுண்டராஜன் மாளவன் வளவன் சேரன் நீரோகநீகன் எனும் பல வேந்தரும் வந்து சேர்ந்தார்கள். வங்காளம் குகுரம் சீனம் பப்பரம் கொப்பம் சிங்களம் துளுவம் அங்கம் ஆரியம் சேதி கொங்கணம் கடாரம் கொங்கம் கூபகம் இரட்டம் ஒட்டம் என்னும் தேசத்து மன்னரும்வந்து சேர்ந்தார்கள். அச்வத்தாமா யாதவ குமாரர் பூரி கௌரி குமாரர்கள் இவர்களும் படைகளுடன் வந்தார்கள். தம்பியர் அனைவரும், பீஷ்மன் கிருபன் துரோணன்

விகர்த்த சேனன் பகதத்தன் ஆகியஎல்லாத்துணைமன்னரும் படைகளுடன் வந்து சேர்ந்தார்கள். இங்ஙனம் கூடிய கணக்கில் கௌரவர் பக்கம் வந்து கூடிய சேனைகள் பதினொரு அக்ஷௌகினி யென்பர். யாவர்க்கும் உபசாரங்கள் சொல்லி விடுதிகள் அமைத்துக்கொடுத்தான். கூடிய சேனைக்கெல்லாம் சேனாபதியாக நின்று போரினை நடத்த வேண்டு மென்று கங்கை மைந்தனை, தங் குலமுதல்வன் வீடுமனைவேண்டிக் கொள்ள, அப்பெரியோனும், "ஆம்" எனச் சொல்லிச் சேனைகளை யேற்றுக் கொண்டார்.

முகூர்த்தம்—களப்பலி சருக்கம்.

"கயம்படு மனத்தனை கண்ணிலாவரசன் மைந்தன்
வயம்பட நினைந்து கங்குல் வகுத்த தோர் சூழ்ச்சி தன்னால்
பயம்படு மல்லரோடு பாதல மடிய நீண்ட
சயம்படு கமலத்தா னென்தலை மிசைய கல்கிலாவே."

துரியோதனன், சேனைத் தலைவராகி நின்ற பாட்டனை வணங்கிக் "களப்பலிக்கு யாரைக்கொள்வது,களப்பலி கொடுக்கும் முகூர்த்தம் பார்த்தல் வேண்டுமே" என்று கேட்டான். "முகூர்த்தம் வைப்பதிற் சிறந்தோன் வஞ்ச மனமிலாப் பாண்டவரில் இளையோன் சகாதேவன்தான்; அவனை நேரில் நீயே சென்று கண்டு முகூர்த்தம் வைத்துவா" என்றும், "அர்ச்சுனன் மகனான உலூபி மகன், இராவான், நமது சேனையை யொரு பொழுதிற் கொல்லும் திறமுடையானாகையினால், அவனை வேண்டிக் களப்பலிக்கு அழைத்துவா! போய்க்கேட்டால் அவன் ஒப்புக்கொள்வான்" என்று சொல்லி யனுப்பினார். உடனே, ராஜ ராஜ துரியன், ஒரு விசைத் தேரிலேறி

யாங்குச் சென்று சகாதேவனைக் கண்டு, முகூர்த்த நாள் தமக்கு வெற்றிகிடைக்குமாறு வைத்துக் கொடுக்கும்படிக் கேட்டான். கள்ளமிலா நெஞ்சுடையவனாகலின், அவன் "சூரியனைச் சந்திரன் கூடுந்தினத் திராவில் களப்பலியூட்டி னல்லால், வெல்லுதற்கிடமில்லை" யென்று சொன்னான். உடனே வெட்கமில்லாமல், அர்ச்சுனன் மகன் இராவானிடம் சென்று, களப்பலிக்கு வேண்ட, அவனும் ஒப்புக்கொண்டு, "என்னைப் பலி ஊட்டுக" என்று சொன்னான்.

இங்ஙனம், "இராவான் தன்னைத் துரியனுக்குக் களப் பலிக்கு ஒப்புக் கொடுத்திட்டான்" என்று கண்ணபிரான், தெரிந்து, அகடித கடனா சாமர்த்தியம் வகித்தவராகையால், அவர்கட்குக் களப்பலிக்காகச் சகாதேவன் வைத்துக் கொடுத்த நாளை மயக்க வேண்டு மென்றெண்ணி, முனி வர்க் கெல்லாம் கணனத்தில் மயக்க முண்டாக்கிப் பன் னான்கு தினத்தன்றே அமைதிதி யென்று திதியைப் புரட்டி விட்டார்; இருசுடர்களும் அடுத்துவந்து, "இன்றேன் அமை திதி யென்றீர்" என்று கேட்டார்; "நீங்களிருவரும் சேர்ந்து காணப்படுதலினால் தான்" என்று அவர்க்குச் சரியாகச் சமா தானம் கூறி யனுப்பிவிட்டார். ஆகையால், நாளும் கோளும் மாறவே பலனுமாறிய நிலையாயிற்று. கண்ணபிரான், தரும னைப் பார்த்து, "நீர், அரவக் கொடியனுக்கு முன் சென்று களப்பலி கொடுப்பின் அல்லால் வெற்றி நமதாகாது. இரா வானோ, அவர்க்குக் களப்பலிக்கு ஒப்புக்கொண்டான்; ஆகை யால், உங்கட்கு வெற்றியுண்டாகும் பொருட்டு, என்னைக் களப்பலி யாக்குங்கள்" என்று கூறினர். பாண்டவரைவ ரும், "உங்களைக் களப்பலியாக்கி நாங்கள் வெற்றி பெறவேண் டிய போரே வேண்டியதில்லை" என்று தொழுது கூறினர்

கள். அப்போது, இராவான் வந்துற்று, "அப்போது அரவக் கொடியனுக்கு நேர்ந்தேன்; இப்போது உமக்கு நேர்ந்தேன்; என்னைக் களப்பலிக்காகக் கொள்ளுங்கள்'' என்று வேண்டினன். அப்போது, கண்ணபிரான், இராவானைப் பார்த்துப், "பூமியில் எனக்கு நிகர் நின்னை யொப்பாரிலர்; ஆதலால், நம்மிருவரில் ஒருவரே நிற்றல் போதுமாதலால், நீ விலகி நில்; நான் களப்பலிக்கு இருக்கிறே"னென்றார். இராவான், "பிரபு! நீர்உயிரோடிருந்து, எந்தை பாண்டவர்க்கு வேண்டியனசெய்யுங்கள்; நான் செல்லுகிறேன் களப்பலிக்'' கெனச்சொல்லிச் சமாதானப் படுத்திப் பின்னும் ஒரு வரம் கேட்டுக் கொண்டான்; "என் அங்கங்களைப் பலி தந்திட்டாலும், சின்னாட்கள் உயிருடனிருந்து போரினைக்கண்டு களிக்கும்படியாய் வரம் அருள்'' எனக் கேட்டு வாங்கிக்கொண்டு, குறித்த நாளில், அங்குச் சென்று, காளி முன்னர்த் தனது அங்கங்களை யெல்லாம் கொய்து பலியிட்டனன் என்று சொல்லுகிறார்கள். பிறகு, பாண்டவர், யாமள மந்திரஞ் சொல்லி மற்றும் பற்பல பலிகளும் ஈந்து, காளியை வணங்கி வந்தார்.

அணிவகுத்தல் சருக்கம்.

"குன்றெடுத்தாயர் மாதர்குரவை கொண்டொரு விளாவில்
கன்றெடுத்தெறிந்து வெய்யகாளியற் கிருதாள் நல்கி
அன்றெடுத்திறுத்த வில்லேயனைய வில்விழவு காண்பான்
சென்றெடுத்திறுத்து நின்றசெங்கண்மா லெங்கள் கோவே."

தர்மன் படை வகுப்பு.

களப்பலியூட்டிய மறுநாளே, கண்ணபிரான், சேனாபதித் தலைவனாகிய சிவேதனையும் மண்டலீகர்களையும் மன்

னரையும் பார்த்து, அதிரதர் சமரதர் மகாரதர் அர்த்தரதர் ஆகிய எல்லோரும் தமது தமது சேனைகளுடன் வஞ்சி சூடிப் போர்க்களமாகிய குரு க்ஷேத்திரத்துக்குப்போக வேண்டுகிறேன் என்று சொன்னர். வீமன் விஜயன் அபிமன்னன் இவர்கள் அதிரதாதிபர்; சிகண்டி சாத்தகி திட்டத்துய்மன் விராடர்கோன் தர்மராஜன் மகாரதர்; யாக சேனன் உதாமன் உத்தமபானு இவர்கள் சமரதர்; நகுல னும் சகதேவனும் கடோற்கசனு மிவர் அர்த்தரத நாயகர். இப்படி ரதாதிபர்களை வகுத்துக்கொண்டு இவர்கட்குள் தரம் தரமாக மன்னர்களையும் சேனைகளையும் வகுத்துக்கொண்டார் கள். இதில் இவர்கட்குத் தலைவனாகிய சேனாபதி சிவேதன் சேனையைப் பார்த்து நின்றான். இங்ஙனம் வகுத்து நிற்கும் சேனா வெள்ளத்தினைக் கண்டு, கண்ணனுக்கு முன்னவராகிய பலராமன், என்ன நினைந்தனரோ! "இந்தப் போர் முடியு மளவும் நான் தீர்த்தயாத்திரை போய்வருகிறேன்; ஒரு பக் கத்திற்கும் துணையாகப் போர்க்குள் கலந்துகொள்ள நான் பிரியப்படவில்லை"யென்று புறப்பட்டு விதுரனுடன் கலந்து கொண்டார்; இருவருஞ் சேர்ந்து யாத்திரை புறப்பட்டுப் போய்விட்டார்கள். இங்ஙனம் தக்க வீரர்கள் இருவரும் இரண்டு கட்சியிலும் கலந்துகொள்ளாமல் விலகினதும் ஒரு நன்மைக்காகத்தான் என்று கண்ணபிரான் திண்ணமாக எண்ணிக்கொண்டனர். பாண்டவரைவரும்கூட மனஞ் சலித் திடவில்லை; மற்ற மன்னவர்கள் சிறிது வருந்தினர்களென்ன லாகும் அன்றி வேறில்லை. சேனை குரு க்ஷேத்திரம் நாடிச் செல்கின்றது.

ரதப்படை கஜப்படை அசுவப்படை பதாதிப்படை யென்னும் நான்கு படைகளையும் அதாவது சதுரங்க சேனை

களையும் முறைப்படி வகுத்துச் சிவேதன், சங்கத்தொனி கொடுத்துச் செலுத்திக்கொண்டு போகிறான். ஏழு அக்குரோணி சேனைகளும் ஏழு கடல்களும் திரண்டு வந்தன போலப் பெருங்கோஷத்துடன் போய்க்கொண்டிருந்தன. நான்குவிதப் படைகளும் நான்கு திசைகளையுமே அடைத்துக்கொண்டன. எங்கும் கொடிகளே ஆகாயத்தை மூடி விட்டதென்னலாம். மன்னர்களது கிரீடங்களும் வாள்களும் வேல்களும் பிரகாசித்து எங்கே திரும்பிப் பார்த்தாலும் விளக்குவைத்தது போல் ஒளி மயமாகவே இருந்தது. வீரர்களின் ஆர்ப்பும் வேழங்களின் பிளிறலும் குதிரைகளின் கனைப்பும் தேர்களின் சப்தமும் கத்தி கேடயங்கள் முதலிய ஆயுதங்களின் இடிபடும் ஒலியும், சேர்ந்து பேரொலியாகி, இவை இவ்வண்டத்தையே எதிர்த்துப் போகின்றனவோ என்னும்படியாக இருந்தன. பேரிபடகம் சில்லரி பாண்டி முதலியபோர் முழக்கங்களையும் முழக்கினார்கள். இச்சேனா சமூகத்தைப் பார்த்தவர்கட்கு, கண்ணன் உயிராகவும் தர்மராஜன் மார்பாகவும் சிவேதன் முகமாகவும் வீமனும் விஜயனும் தோள்களாகவும் நகுல சகாதேவர்கள் கண்களாகவும் மற்ற அரசர் மற்ற அவயவங்களாகவும் அமைந்துள்ள ஒரு மனிதவடிவம்போலத் தோன்றியது.

துரியோதனன் படைவகுப்பு

"நாம், போர்க்குப் பார்த்துவைத்திருந்த திதியை மயக்கி நமக்கென ஒப்புக்கொண்ட உாக கன்னியின் மகனான இராவானைத் தமக்கெனக் கொண்டு, முதலிலேயே காளிக்குக் களப்பலியும் கொடுத்திட்டார்கள் எதிரிகள்" என்னக் கேள்வியுற்ற துரியோதனன், சேனாபதித் தலைவராகிய பீஷ்மரைப் பார்த்துச் சொல்லுகிறான்; "நமக்குப் பயந்தே எதிரி

கள், நிதியை மயக்கி யிங்ஙனம் களப்பலியும் கொடுத்திட்டார்கள் என்னும் தன்மையாலேயே நமக்கு அவர் தக்க எதிரிகள் அல்லரென்றும், நம்மோடு எதிர்நின்று போர் செய்யப் பொறுப்பில்லாதவரென்றும் நான் அறிந்துகொண்டேன்; நீங்களும் அப்படி யறிந்தீர்களோ?" என்று சொல்லி, "நமது சேனையை, அதிர தர்மகாரதர் சமரதர் அர்த்தரதர்கள் வகுப்பாக வகுக்கவேண்டும்" என்று பணித்தனன். பீஷ்மரும், அவ்வண்ணமே வகுத்தார். துரோணர் அசுவத்தாமா பூரிசிரவா என்னுமிவர்கள் அதிரதர்கள்; சோமவரதத்த பகதத்தர்களும் துன்மருஷனும் மகாரதத் தலைவர்கள்; கிருதவன்மன் கிருபன் சகுனி சல்லியன் சயத்திரதன் இவர்கள் சமரதத்திபர்கள்; கர்ணன் விருஷசேனன் தம்பியர் இவர்கள் அர்த்தரதாதிபர்களென்று வகுத்துக் கொடுத்தார். கர்ணனுக்குக் கோபம் பிறந்து, பீஷ்மனுடன் பல கூறி வாது செய்து, "உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று வாளுருவிப் பின்னர் மன்னன் தடுக்கச் சமாதானமாகிய பீஷ்மன் "உயிர் கொண்டு சேனையில் நின்று போர்புரியுமளவும் நான் படையைக் கையால் தொடமாட்டேன்" என்று சபதமும் செய்து விலகி நின்றுவிட்டான். மற்ற மன்னர்கள், சேனைத் தலைவரால் வகுக்கப்பட்டபடியே நின்று அணிவகுப்பாகக் குருக்ஷேத்திரத்தை நாடிப் புறப்பட்டார்கள். பதினொரு அக்குரோணி சேனைகளும் பதினொரு நதிகளும் புறப்பட்டன போல உலகமழிக்கும் பேரோசையுடன் சென்றுகொண்டிருந்தன. குடைகளும் கொடிகளும் வாள்களும் வேல்களும் முடிகளும் தடிகளும் எங்கும் நிறைந்து விளங்கின. முழவம் முரசம் முதலிய ஒலிகள் எழுப்பினார்கள். வீரர்களின் கொதிப்பும் கதிப்பும் குதிரைகளின் குதிப்பும் சதிப்பும் பேரொலியை எழுப்பி அவ்வொலியை யடக்கின. சேனாமுகங்களின் நடை

யினுலெழும்பிய பெருந் தூசுகள் ஆகாயத்தை மறைத்தன. இங்ஙனம் சென்று குருக்ஷேத்திர பூமியைக் குறுகி நின்றனர். முன்னரே பாண்டவர் படைகளும் வந்து நின்றன. ஒரு யோசனை யளவுள்ள அப்போர்க்களத்தினிடை இரு திறப்படைகளும் இரு புறங்களிலும் நிற்பதைக் கண்ட அமரர் முதலோர், உலகம் என்னவாகி முடியுமோ எனக் கண் கலங்கி நின்றுர்கள். ஏனையோரைப்பற்றிப் பேசல் என்?

இப்படி நின்றுள்ள இருதிறத்துப் படைகளான பதினெட்டு அக்குரோணிப் படைகளையும் பார்த்து, மீசைகளை ஒருதாம் முறுக்கிக்கொண்டு, அரவக்கொடியன் கங்கை மைந்தன் பீஷ்மனை நோக்கி, "ஐய! இவ் விருபடைகளையும் எந்தெந்த வீரர்கள் எத்தனை எத்தனை நாட்களில் வெல்லுவார்கள்; அறிந்து கூறுங்கள்!" என்று கேட்டான். பீஷ்மர் கூறுகிறுர்:—

"ஒருபகலில் யான்மலைவன் முப்பகலிலே மலைவன்
உபநிடத விற்கை முனியும்
வருபக லொரைந்தின் மலைவன் பரிதிமைந்தன்முனி
மைந்தனெரு நாழிகையினில்
பொருபடை யடங்கமலையாம் புவியும் வானெடு
புரந்தரனிருந்த வுலகும்
வெருவாமுனைந் தொருகணத்தி னிடையே மலைவன்
வில்விசயன் என்றனரோ"

இப்பதினெட்டையும் யான் ஒரு பகலிலும் துரோணர் முப்பகலிலும் கர்ணன் ஐந்து பகலிலும் வென்று கொன்று ஒழிப்போம். முனி குமாரனுகிய அசுவத்தாமன், இவற்றையொரு நாழிகை யளவினில் வானேற்றுவான்; ஆனுல்

நமக்கு எதிராக நிற்கும் வில்விஜயனோ, இந்தப் பதினெட்டு அக்குரோணி சேனைகளுடன் மற்றும் உலகமும் வானும்கூடி நின்றாலும் வெருவரும்படியாக வீரத்துடன் மலைந்து, ஒரு கணத்திடையி லொழித்திடுவன் என்று சொன்னார். என்றதைக்கேட்ட துரியோதனன் முதலில் களிகொண்டானாலும் முடிவில் கனன்று கோபித்துப் பாட்டனாரை யுருத்துப் பார்த்து நின்றான்.

உத்தியோக பருவம் முற்றிற்று

பீஷ்ம பருவம்.

முதற் போர்ச் சருக்கம்.

"மேவரு ஞானனந்த வெள்ளமாய் விதித்தோனுகி
மூவரு மாகியந்த மூவர்க்கு முதல்வனுகி
யாவரும் யாவுமாகி இறைஞ்சுவா ரிறைஞ்சப்பறப்பல்
தேவருமாகி நின்ற செங்கண்மா லெங்கள்கோவே"

அர்ச்சுனனுக்குக் கீதோபதேசம்.

இரண்டு திறத்தார் சேனைகளும் கூடிய பதினெட்டு அக்ஷௌஹிணிகளும் கடல்போல் இருபக்கங்களிலும் பொங்கிக் கூடிக்கொண்டிருக்கும் சமயம், கண்ணபிரான் தேர் செலுத்த அத்தேர்மீதேறிக்கொண்டு, போர்க்கள நடுவில், அர்ச்சுனன் வந்து நின்ருன். இரண்டு பக்கங்களிலும் திரும்பிப்பார்த்தான். இவ்வளவு சேனைகளும், போர் ஆரம்பித்தவுடன் என்னவாகுமென்று மதித்தான்; அவன் கண்கட்கு எல்லோரும் உருண்டு புரண்டு மடிவதுபோன்ற காட்சி தோன்றிற்று. பாட்டனும் குருவும் நண்பரும் உறவினரும் ஆகிய எல்லோரும் போர்க்களத்தில் மாய்ந்திடும் தோற்ற முதிக்கவே, தேகம் நடுங்கிற்று. மனம் குழம்பிற்று. கால்கள் விலவிலத்தன; கைகள் தளர்ந்தன. காண்டீபம் தான் அறியாதபடியே தேர்த் தட்டின்மேல் வீழ்ந்தது. கண்களில் நீருகுத்து நின்று, "கண்ணு! நான் போர்புரியமாட்டேன்; என் மனம் தளர்ந்திருக்கின்றது; இத்துணைப் பெரியோர்களையும் கொன்று அடையப்போகும் சுகமென்ன? இந்த ராஜ்யம் பெற்று வாழ்ந்தாலும், நினைவும் உலகமும் இப்பழியை மறந்திடுமா? நான் வணங்கின-வணங்கிக் கொண்டிருக்கிற பெரியோர்களைக் கொன்று, அதனுல் அடையும் வாழ்வும் ஒரு

வாழ்வாகுமா? உலகமழியும்வரை அழியாததொருநிந்தையை யேற்று நான் உயிரோடிருக்க நினைக்கவில்லை.' இந்த அரசினை விட வன வாழ்க்கையே மேலாகத் தோன்றுகின்றது'' என்று உட்கார்ந்து விட்டான். சிறிதும் தைரியமடையாது, போர் வேண்டாமென்றே புலம்பினான். கண்டு கண்ணபிரான், அவனுக்கு மனம் தெளியக் கூறுகின்றார்.

அர்ச்சுனா! நிந்தைக் குரியதாகிய இந்த யோசனை எங்கிருந்து உனக்குத் தோன்றிற்று. ஒரு க்ஷத்திரிய வீரனுடைய மனம், தனது தர்மமாகிய போரினின்றும், துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனத்தினின்றும் பின்வாங்கலாமா? உனது தர்மத்தைச் செய்திட வேண்டியதை விட்டு, உலகப்பொருள்களின்—உயிர்களின் அழிவைப்பற்றி நீ கவன்றுகொண்டிருக்கிறாயே! இவற்றை யழிப்பவன் நீயா? உன்னால் ஒருவனை யழிக்கவாவது ஆக்கவாவது முடியுமா? இன்று உன் மூலம் இவர்கள் அழியாமல் போனால், என்றைக்கும் உலகிலிருக்கப் போகிறார்களா? முன்னிருந்த மாந்தாதா முதலான பேரரசர்க ளெல்லோரும்இப்போது இருக்கின்றார்களா? அவர்களை நீதான் அழித்துக் கொன்றனையோ? தோன்றுவதும் மறைவதும் மாறுவதும் உலகியற்கை யன்றோ? அது அது அதன் இயற்கைப்படியே தோன்றுகின்றன மாறுகின்றன மறைகின்றன. அவற்றை யொருவன் தோன்ற வைக்கவாவது மாறவைக்கவாவது மறையவைக்கவாவது முடியுமா? தோற்றத்துக்கும் மாறலுக்கும் மறைதலுக்கும் இடையிலிருக்கும் கருவிகளே நாமெல்லோரு மன்றி, நமக்கு இவற்றில் தொடர்பு ஒன்றுமே இல்லையே. குரு, பாட்டன் என்கிறாய்! தேகத்தை யங்ஙனம் குறிக்கின்றாயா? அதற்குள்ளிருக்கும் உயிரை யங்ஙனம் குறிக்கின்றாயா? தேகத்தை

பென்றால், போர்க்களத்தில் அவர் தேகம் வீழ்ந்த பிறகும் அத்தேகத்தைக் குருவென்று சொல்லி உன் மனையில் வைத் திருப்பாயோ? உயிரைத் தான் குறிக்கிறேனென்றால், உயிரை நீ எனக்குக் காட்டு பார்ப்போம்; அதை நீ பார்த்ததே யில்லையே! அதிருக்கட்டும்; உடலின் தன்மை யென்ன? தோன்றி மாறி மறையும் இயற்கை யுடையதுதானே; குரு வின் தேகத்தை நீ இன்று அப்படியே விட்டாலும், நாளை யதுமாறி மறையத்தானே போகிறது; மறைந்துபோகு மியற் கையையுடைய அத்தேகம் மறையுமே என்று வருத்தப்படு கிறாயே; இது மடமையல்லவா? உயிரைத்தான் குருவாக நினைக்கிறேனென்றால், உயிரின் இயற்கை யென்ன; அஃது அழிவதொன்றல்லவே; அழியாத ஒன்றை அழிந்துபோகுமே என்று வருத்தப்படுவதும் மடமையல்லவா? மயக்கப்பட வேண்டாத இரண்டினையும் பார்த்து நீ மயங்குகின்றாய்! இஃது அறிவிலாதவர் செய்கை. ஆனால், நீ அறிவுடையவன் போற்பேசி நிற்கிறாய்; இதுஆச்சரியமாகவும் நினைத்துப்பார்த் தால் அறியாமையாகவும் க்ஷத்திரியனாகிய உன்னுடைய ஸ்வ தர்மத்தை நோக்கும்போது அவமானமாகவும் தோன்ற வில்லையா? உலகிற் பொருள்களைத் தோற்றுவிப்பதும் மாற்று விப்பதும் மறைவிப்பதும் ஒரு பெரும் சக்தியின் காரியம்; அதற்கு நாமெல்லோரும் கருவிகள்; நம்மைக் கருவியாகக் கொண்டு அந்த சக்தி ஏவுகின்றது; அதற்காக அந்தந்த தர் மங்களைக் கொடுத்து அந்தந்த ஜாதிகளில் நம்மை அது தோற் றுவித் திருக்கிறது. அந்த சக்தியின் கட்டளையை நாம்மறுக்க முடியுமா? அறிவு தெளிந்து பார்க்கும்போது, காண்பன கேட்பன வெல்லாம் மனத்தால் ஏற்படுத்திக்கொண்ட தோற் றந்தானே! அம்மனத் தோற்றத்தை நீக்கிவிட்டால், நமக்கு உறவு யார்? பகை யார்? அழிவார் யார்? இருப்பார் யார்?

கொல்வார் யார்? கொல்லப்பட்டார் யார்? இப்படிக்கொள்வ தெல்லாம் மாயை யாகும்.

நம்மில் மாயையென்று ஒருசக்தி தோன்றி யிருக்கிறது; அதனிடமிருந்து மனம்என்பது தோன்றுகிறது; அதுதோன் றினவுடன் நமது இயற்கையாகிய ஞானத்தை மறைத்துவிடு கிறது. மெய்ஞ்ஞானம் மறைந்து போகவே, தாய் என்றும் தாரமென்றும் தனயர் என்றும் உறவினர் என்றும் மயக்கம் தோன்றி, நாம் உழலுகின்றோம். மனத்தால் தோன்றிய ஐம் பொறிகளையும் கொண்டு ஐந்து உணர்ச்சியால் உண்டு, மூன்று குணங்களோடும் ஆறுவகைப் பகைகளோடும், ஆளுகிற அம் மனத்து ஆட்சிக்குக் கட்டுப்பட்டு, நமது இயற்கையான சுதந்தரத்தை யிழந்து, மயங்கி உழலுகின்றோம். ஞான விசாரணை செய்து, தோற்றக் காரணமாகிய மனதை மறைத் தோமாயின், அதன்பிரிவான தோற்றங்களெல்லாம் மறைந்து போய், நமது இயற்கையாகிய ஞானசுதந்தரம் தோன்றி விளங்கி நிற்கும். அந்த நல்லறிவை அறிந்தவரே அறிஞ ராவார்; இங்ஙனம் நம்மறிவால் நம்மையும் நம் தந்தையாகிய பரமனையும் அறிந்து நின்றால், பால் நெய்போல் எங்கும் கலந் திருக்கும் "அவனே யெல்லாம்" என்னும் மெய்யுணர்வு தோன்றும்; அப்போது நமக்குப் பகையேது உறவேது? இந்த அறிவு எனக்கு முண்டு; உனக்கு முண்டு; அந்தப் பெரிய சக்தியாகிய பரமனே உனக்குள்ளும் இருக்கின்றான்; எனக்குள்ளுமிருக்கின்றான்; உனக்குள்ளிருந்து கேட்கின் றான்; எனக்குள்ளிருந்து சொல்லுகின்றான்; இப்பேதமும் ஆத்ம பக்குவத்தாலும் பழக்கத்தாலும் தோன்றியிருக்கின் றது; நீயும் நானுமாகச் சேர்ந்திருந்து இத்தொழிலையியற்று வது இந்த ஒரு பிறவியில் மாத்திரமல்ல. ஒரு பிறப்பில், நா

னும் நாராயணனுமாயிருந்தோம்; பின்னொரு பிறப்பில் லக்ஷ்மணனும் ராமனுமாக இருந்தோம்; இப்பிறப்பில் நீயும் நானுமாக இருக்கின்றோம்; ஒவ்வொரு பிறப்பிலும், பரமனிட்ட கட்டளையால், நமது ஸ்வதர்மத்தை யாற்றிக் கொண்டு வந்திருக்கின்றோம்; இப்போது எடுத்துக் கொண்டு நிற்கிற இதுவும் ஸ்வதர்மம் தானே; பகைத்தவர்களை - எதிரிகளை - துஷ்டர்களைக் கொல்வது க்ஷத்திரியவீரனுக்கு ஸ்வதர்ம மன்றோ? ஒருவன் ஸ்வதர்மத்தைச் செய்வது பாவமாகமாட்டாது; பரதர்மம் கைக்கொள்ள பாவமாகவும், எதிரியிடமும் சாந்தம் காட்டுவதுஞானியின் தர்மம்;எதிரியாகியதுஷ்டனைக்கொன்று பிரஜைகளைத் துன்பத்தினின்றும் விடுவிப்பது க்ஷத்திரிய தர்மம்; நீ உன் தர்மத்தைக் கை விட்டால், இன்னும் இப்பிரஜைகள் இந்தத் துஷ்டன் வசப்பட்டுத் துணிவுறுவார்களன்றோ? உன் தர்மத்தையும் இழந்து பாவ மூட்டையையும் கட்டிக் கொண்டு என்றும் அழியாப் பழியைப் பெறுதற்கு வழி தேடுகின்றாயே! இது ஞானமா? அஞ்ஞானமா? யோசித்துப் பார்'' என்று ஞானோபதேசம் செய்தார்.

அர்ச்சுனன் மனந்தெளிந்து, உண்மை யறிந்து, ஸ்வதர்ம நிஷ்டனாகி வில்லைக் கையிலேந்திக் கொண்டு, எழுந்து கண்ணபிரானை வணங்கி, "ஸ்வாமி! தேவரீரைத் துணையாக அடைந்ததன் பயனைப் பெற்றேன்; அஞ்ஞானத்தால், ஒரு கணத்தில் தலை கவிழ்ந்து போகக் கூடிய நிலையிலிருந்த அடியேனை யாதரித்து, சத் உபதேசம் செய்து அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தைப் போதித்து நான் எனது தர்மத்தைக் கைவிடா திருக்குமாறு செய்தருளினீர்கள்'' என்று துதித்துப் போற்றினான். "இது வரையில், தேவரீரைச் சாதாரணத் துணைவனாக மதித்து அநேக அபராதங்களைச் செய்திட்



டேன்; மன்னித் தருளவேண்டுகிறேன்" என்று சொன்னன். கண்ணபிரான், களித்துப் புன்னகை காட்டி நண்பனை யங்கீகரித்துத் தேரைச் செலுத்திப் பிறபாண்டவரை யழைத்துக் கொண்டு போய்க் கங்கை மைந்தனுன பீஷ்மனைக் கண்டார்கள். பாண்டவர் வணங்கி நிற்கப் பிதாமகன் அவர்களை யாசீர்வதித்து, வந்தவாறென்ன வென்றுகேட்டார்; கண்ண பிரான் சொல்லுகின்றுர்.

பீஷ்ம துரோணரிடம் உத்தரவுபெறல்.

"பீஷ்மரே! குருகுலத் தலைவராகிய தாமே இப்படித் தருமாதர்ம விவேசனம் செய்யாதவர்போல், அதார்மிகனுக்குத் துணை நின்று அவன்செய்யும் எல்லாப் பாவச் செயல்களுக்கும் சம்மதிகாட்டிச் சேனபதியாகவும் நின்று போரினை நடத்தப் புகுந்தால், பெரியோரிடத்தன்பும் தர்மத்தில் சிந்தனையும் செல்வத்தில் வெறுப்பும் உடைய பாண்டவர் எப்படி வென்று வஞ்சினம் முடிப்பர்; இவ்வரசாட்சியை யென்றும் பாவி கையிலேயே இருக்கும்படிச் செய்து, பிரபஞ்சத்தை மயக்கிப் பிரஜைகளைத் துன்பக்கடலு ளாழ்ந்திருக்கும்படியாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றீர்களே; இது தர்மமாகுமா!" என்று கேட்டார். பீஷ்மன் கூறுகிறுர்:— "பரந்தாமா! என் இந்த வேஷம் போடுகிறீர்கள்? இந்தப் போரின் முடிவும் விளைவும் தாங்கள் முன்னமே அறிந்திராதனவோ! அடியேன் அறிவேன் தேவரீரது உள்ளக்கிடக்கையை; அடியேங்கள் சுதந்தரம் அற்றவர்கள்; என்ன செய்தல் கூடும்; வேண்டுழி வேண்டுழி இனியன சொன்னேம்; அவன் கேட்டபாடில்லை. பாவியாகலின், அழியும் காலத்துக்கு அணித்தாக இருக்கின்றுன்; என்றும் அறம்தான் வெல்லுமே யொழியப் பாவம் வெல்லாதன்றே? அவசியம்

தர்மபுத்திரனுக்கே எவ்வாற்றானும் வெற்றி கிடைக்கப்போ கின்றது : இது தாங்கள் அறியாததொன்றல்லவே! நாங்கள் செஞ்சோற்றுக் கடனை முடித்து, அவனது சோற்றாற் கெட்ட இச்சரீரத்தை யவனுக்காகவே இப்போர்க்களத்தில் அர்ப்பணம் செய்யத் தீர்மானித்துத்தான் இதனை யொப்புக் கொண்டிருக்கிறோம் ; என்னைக் கொல்வதற்கென்று, அம்பை யென்னும் பெண்ணானவள், தவஞ்செய்து, யாகசேனன் மகன் சிகண்டியாக வந்திருக்கிறாளே! தேவரீர்க்குத் தெரி யாதா? பத்தாம்நாட் போரில், அந்தச் சிகண்டியை யென் முன் காட்டி நிறுத்தினால், யான் எப்படையையும் தீண்டாது நிற்பேன் ; அப்போது அவன் வெகுண்டு செய்யும் பெரு மிதங்கண்டு மீள்வேன் ; அப்போது அர்ச்சுனன் பாணம் என்மீது விழும் ; உடனே களத்திடை வீழ்ந்துவிடுவேன் ; மாயமாதவ! முடிவில் இவர்கட்கல்லாமல், துரியோதன னுக்கு ஒருபோதும் வெற்றிவரப்போவதில்லை ; நீங்கள் கவ லைப்படாமல் செல்லலாம்'' என்று சொல்ல அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, வில்லாசிரியாகிய துரோணரிடம் வந்து வணங்கி நின்றார்கள். முனிவரும், கண்டு களித்து ஆசீர் வசனங்கள் கூறி வந்த காரிய மென்னவென்று கேட்டார் ; கண்ணபிரான் சொல்லலுற்றார்.

"ஆசிரியரே! உமது உத்தம சீடர்கள் போர் ஆரம்பிக் கப்போகிறார்கள் ; உங்கள் அநுமதி கேட்க வந்திருக்கிறார் கள் ; அவர்கள் வெற்றி பெறும்படி ஆசீர்வதித்திடல் வேண் டும் ; உங்கள் அநுமதியும் ஆசீர்வாதமும் அநுக்ரகமும் இல்லாவிடில், அவர்கள் இந்தப் போரினை வெல்லல்கூடுமோ?'' என்று சொன்னார். "விளைவினை யறிந்தே பேசும் விமல நாய கனே! விளைவினை யென் வாக்கினின்றும் கேட்க விரும்பு

கின்றாய்போலும்; . சொல்லுகின்றேன்; தரும புத்திரனே வெற்றி பெறப் போகிறான். பாவிகள் கூட்டுடன் மடியப் போகின்றார்கள்; வேண்டும் தருமங்களை யுணர்ந்தும் போதித்தும் பயன்பெறாத நாங்கள், பாவியின் சோறுண்டதன் பயனாகச் செஞ்சோற்றுக் கடனை முடித்து, இப்போர்க்களத்திடை மடிந்து போவது நிச்சயம்; பீஷ்மரைக் கொல்லற்கு வரம் பெற்று வந்த சிகண்டி உங்கள் கட்சியிலிருத்தல் போலவே, என்னைக் கொல்லப் பிறந்த எனது சீடனாகிய திட்டத் துய்மனும் உங்களது சேனாபதியாக வரப்போகின்றான்; இந்திரன் போலும் தர்மராஜனுடைய சத்யவாக்கினின்றும், என் மகன் அச்வத்தாமன் இறந்தான் எனும் சொல்லைக் கேட்டு மாழ்கி நான் சாயப்போகும் தருணம் திட்டத் துய்மன் எனக்குக் கூற்றுவனாக வந்து கொடுஞ்சமர் புரிந்து என்னை வீழ்த்தப் போகின்றான்; ஆகையால் வெற்றி தரும ராஜனதே யொழிய வேறில்லை; கவலை வேண்டாம்; ஏகலாம்" என்று ஆசீர்வதித்து விடை கொடுத்தனுப்பினார்; அவர்கள் அனைவரும் வணங்கிப் போய்த் தங்கள் சேனைதங்கி யிருக்குமிடம் சேர்ந்தார்கள்.

வ்யூகம் வகுத்துப் போர் புரிதல்.

தமது எழு அக்குரோணி சேனைகளையும் அசல வ்யூகம் வகுத்து, விஜய லக்ஷ்மியை வணங்கித் தூசி முனையில் வந்து கூடினார்கள். இருதிறப் படைகளும் கைகலந்து போர் புரிய ஆரம்பித்தன. இருதிறத்திலும் வெற்றிச் சங்கங்களும் போர் முரசங்களும் முழக்கினார்கள். குதிரை வீரரோடு குதிரை வீரரும், யானைப் படையுடன் யானைப்படையும், தேர்ப் படையுடன் தேர்ப்படையும் கலந்து மலைந்தார்கள்; மந்திரியர் மந்திரிய ரோடும், பட்ட வர்த்தனர் பட்ட வர்த்தனரோடும்,

மகுட வர்த்தனர் மகுட வர்த்தனரோடும் மலைந்து வாளி தூவிப் பொருதார்கள். மண்டலீகர் சாமந்தர் சேனபதிகள் தந்திரிகள் இவர்கள் அத்தகையாருடனே கலந்து சண்டை செய்தார்கள். தோளறுந்தவரும் தாளொடிந்தவரும் தலையற்றவரும் கை வீழ்ந்தவர்களுமாக இருதிறப் படை வீரர்களும் அழிந்தார்கள். பல யானைகளும் அநேக தேர்களும் வெகு குதிரைகளும் இருதிறத்திலும் அழிந்து வீழ்ந்தன. ஆகாயத்திற் கழுகு முதலிய பறவைகள் வட்டமிட்டுச் சுற்ற ஆரம்பித்தன. பேய்களும் கூத்தாடி நின்றன.

பீஷ்ம விஜயர்க்கும் வீமதுரியர்க்கும் போர்.

நெருங்கியிருந்த எதிரிப் படைகளைத் தகர்த்துக்கொண்டு அர்ச்சுனன், கௌரவர் படைக்குத் தலைவராகிய பீஷ்மரை நேர் வந்து தாக்கலுற்றான். பாட்டனும் பேரனும் பலமாகப் போர் புரிந்து நின்றார்கள். துரியோதனன் சமயமுணர்ந்து, பீஷ்மருக்குத் துணை போகும்படிச் சகுனி சல்லியரையும் பல தம்பியரையும் ஏவினான். இதனைக் கண்டு வீமனும் அபிமன்னனும் விந்தானும் ஓடி வந்து விஜயனுக்குத் துணை நின்றார்கள். வந்தவுடனே வீமன் வில்லிற் பல கணைகளைத் தொடுத்துச் சகுனியும் துஷ்டன் தம்பியர்களும் விலகியோடும்படியாக அடித்தான். விஜயன் பல வலிய கணைகளைத் தொடுத்துப் பிதாமகன் ஏறியிருந்த தேர் சாரதி கொடியிவை களையழிவு கண்டனன். உத்தரனும் மத்திராதிபனும்எதிர்த்துப் போர் புரிந்துகொண்டிருந்தார்கள். எதிர்த்து நின்ற உத்தரன், அம்பெய்து சல்லியனது தேர் முதலியவற்றை யழித்தனன்; உடனே கோபித்துச் சல்லியன் ஒரு வேலை யெடுத்து, போர் புரிந்த வண்ணமிருக்கும் உத்தரன் மார்பின்மேல் அவன் அறியாவண்ணம் ஏவி அவனைக் கொன்று வீழ்த்தினன். மச்

சர்கோன் மகன் இறந்துபட்டான் என்னும் ஒலி எங்கும் கிளம்பவே, வீமன் ஓடிவந்து, பகைவர் படையைத் தாக்கினன். கதையைக் கையிலேந்திக்கொண்டு உக்ர நாசிம்மம் போலக் கர்ஜித்து வீமன் அடித்துப் பல வீரர்களை யழித்துக் கொண்டு, எதிரே யொருவரையும் காணமல், தூர நின்று படைகளை யேவிக்கொண்டிருக்கும் அரவக்கொடியனைக் கண்டு, சீற்றங்கொண்டு, அவனருகு சென்று, "வா போருக்கு" என்று அழைத்து, கதைகொண்டு மோதி யவனது தேர் முதலியவற்றைப் பொடி செய்திட்டனன். இருவரும் கதைப்போர் புரிந்து நின்றூர்கள். துரியன், கதையைக் கீழே வைத்து மற்ருேர் தேரிலேறி வில்லைக் கையிலெடுத்தனன். வீமன் அவ்வில்லை யொரு கணையால் அறுத்து, உடனே ஒரு கைகொண்டு அவனது தேரை யெடுத்து உயர வீசினன். அச்சு வேறு ஆணி வேருகி அந்த வச்சிரத் தேரழிந்திட மன்னன் போரழிந்து சேனை புறமிடக் கண்டு, பல மன்னர்கள் துணையாக வந்து கூடினர்கள். கண்டு வீமன், ஆவேசங்கொண்டவன்போல் கதை வீசித் தனது தந்தையைப்போற் சுழன்று எதிரிகள் படைகளை நொறுக்கிக்கொண்டிருந்தான்.

சல்லியனும் சிவேதனும்

தம்பி உத்தாகுமாரன், சல்லியனல் அதர்மமாகக் கொல்லப்பட்டானென்பது தெரிந்த, பாண்டவ சேனபதியாக நின்றிருந்த சிவேதன், கோபம்மீறி எதிரி படைகளைத் தாக்கிக்கொண்டே, "எங்கே மத்திரத்தாசன்; எங்கே அந்தச் சல்லியன்" என்று தேடிவந்து சல்லியனெதிரில் நின்று தாக்கிப் போர்புரிந்தான். இருவரும் சம வலிவுடையவராகப் போர்புரிந்துகொண்டிருக்கையிலும் அவனுக்குத் துணையாக

மன்னன் தனது தம்பியர்களாகிய ஆறு வீரர்களை யனுப்பினான். சிவேதன் ஒருவனே நின்று அந்த எழுவரும் மயங்கும்படியும் கலங்கும்படியும் போர்புரிந்தான். சல்லியன் முதலிய எழு பேரும் சிவேதன் ஒருவனுடன் நிற்கமாட்டாமல் அழிகிறார்களென்று, மன்னன் துரியன் வேண்டினபடியால், குரு சேனைத்தலைவராகிய பீஷ்மர் சிவேதனுக்கு எதிரே வந்து நின்று எதிர்த்தார். உடனே, சிவேதன் அந்த மத்திர தேசாதிபனை விடுத்துச் சேனாபதியாகிய வீடுமனோடு போர் புரிந்தான்.

வீடுமனும் சிவேதனும்

சேனாபதியும் சேனாபதியும் இப்போது நின்று போர் செய்துக்கொண்டிருந்தார்கள். பீஷ்மன், ஒரு கணைகொண்டு சிவேதனது வில்லை யொடித்திடவே, அவன் கோபம்கொண்டு, புலிபோற் பயந்துவந்து, பீஷ்மனது தேர் குதிரை சாரதி முதலியன அழித்துத் தரையாக்கினான். மற்றொரு தேர்மீதேறிவா அதனையும் சிவேதன் அழித்தான்; மூன்றும் முறையும் ஒரு தேர்மேலேறி, கடுஞ்சமர் புரிந்தபோது, சிவேதன், குறிபார்த்து வில்லின் நாணினை யறுத்துத் தள்ளி மற்றோர் வில்லினை பீஷ்மன் எடுக்குமுன்னரே அத் தேர் குதிரைகளையும் அழித்துவிட்டான்; இவனுடன் எப்படிப் போர் புரிவதென்று, கிழவன் தளர்ந்தபோது துரியன், பல மன்னரை ய்னுப்பிக் கொண்டிருந்தான். வந்த பல மன்னர்களையும் வாாதபடி தடுத்து, எதிர்வரு முன்னே அவர் விழும் படியாகச் சிவேதன் அழித்துக் கொண்டிருந் தான். பின்னரும் வந்த குருாாசனும் வேறு ஐவரு மப்படியே யானர்கள். அப்போது வீஷ்மன் களைப்பு நீங்கி, மற்றோர் தேரிலேறி இன்னொரு வில்லைக் கையிலேந்திச் சிவேதனுடன்

மறுபடியும் அமர் தொடுக்கும்போது, அந்த வில்லையும் அவன் இறுத்தது கண்டு, வீடுமன் மலைத்தான். தேவர்கள் சிவேதனை மதித்தார்கள். இவனுடன் இனித் தர்ம யுத்தம் கூடாது, வஞ்சித்தே கொல்ல வேண்டுமென்று தீர்மானித்த பீஷ்மர், "சிவேதன் கையிலிருக்கும் வில்லானது, அவன் தபசுக்குக் களித்துப் பரமசிவன் அருளிய வில்லாதலினால், இவன் வெற்றி பெறுகின்றான்! இவனை வஞ்சிக்கிறேன்" என்று எண்ணிக் கொண்டே, அவனைப் பார்த்து, "கொடிய சிவேத! உனக்கு விற்போர் தவிர வேறு போர் தெரியாது போலும்" என்று பரிகசிக்கவே அவன் வீரந் தோன்றி வில்லைக் கீழே போட்டு ஒரு வாளைக் கையிலேந்தி, "வாரும் வாள்கொண்டு பொருவோம்" என்று வந்தபோது, வீஷ்மன், அதர்ம மாகவே, வில்லில் கணை யொன்றைத் தொடுத்து, சிவேதனது வாளை பிடித்த கையினைத் துணித்திட்டான். மற்றொரு கையால் அந்த வாளினை யெடுக்கக் குனிந்தபோது, மற்றும் பல கணைகளை வீஷ்மன் தொடுத்து, அவனது ஆவியைக் கவர்ந்தான். "பாண்டவ சேனாபதியாகிய சிவேதன் கௌரவர் சேனாபதியாகிய பீஷ்மனால் அழியப்பட் டுயிர்துறந்தான்" எனும் ஒலி எங்கும் பாவியது. களமெங்கும் ரத்த ஆறு ஓட ஆரம்பித்தது. பல கவந்தங்கள், ரத்த வெள்ளத்தில் எழுந்து கூத்தாடின. கழுகுகளும் காகங்களும் களத்திற் கூடின. சூரியனும் மேலை மலையைச் சார்ந்தான். பாண்டவர் கட்சியைவிடக் கௌரவர் கட்சியிற் சேத மதிகமானாலும், பாண்டவர்க் குயிர்த்துணைவனான விராடமன்னனது இரண்டுகுமாரர்களும் முதனாட்போரிலேயே மடிந்தமைபற்றித் துரியனாதியர் களிப்பும்தருமனாதியர் கலக்கமும் அடைந்தார்கள். அதுவுமன்றி, முதற்போரிலேயே சேனாதிபதியாக நின்றவன் ஒழிந்தான் என்பதனால், பாண்டவர் பக்கம் கலக்கம் பெரிதாக மதிக்கப்பட்டது.

கண்ணபிரானும் பாண்டவரும், விராட மன்னன் அருகு சென்று, வேண்டிய உபசாரம் சொல்லி, மக்களிருவரையும் இழந்த துக்கத்தை யாற்றினார்கள். "மக்களிருவரும் காட்டிய போர் வலிமையைத் தேவரும் புகழ்கின்றார்கள்; ஆனால் எதிரிகள் முதனாட் போரிலேயே தமது இயற்கைக் கேற்ப அதர்ம யுத்தம் செய்தே இருவரையும் அழித்தார்கள்; ஆதலினால், அது ஒரு வெற்றியாகமாட்டாது. பாண்டவர்க்கு அஞ்ஞாத வாசத்துக்கு இடமும் வாழ்வும் தந்து, குமாரியை அபிமன்னனுக்குத் தந்து, இன்று போரில் இருகுமாரர்களுயிரையும் தந்தீர். உம்மைப்போல் பாண்டவர்க்கு உதவி செய்தார் யாரிருக்கின்றார்கள்" என்று கண்ணபிரான் சொல்ல, விராட மன்னன் தருமனைப் பார்த்து,

"உன்னுயிர் போனிவளர்த்த உத்தரன் தனுயிரும்
உருத்தெழுஞ் சிவேதன்
தன்னுயிரும் போரரசர் தாமிருந்து
கொண்டாடச் சமரிலீந்தார்
என்னுயிரும் நினதன்றி யாரதினிச்சது
முகத்தோனீன்ற பாரின்
மன்னுயிருக் குயிரனையாய் எனஉரைத்தான்
வளமலிச்சீர் மச்சவேந்தன்."

யாவரும் அன்று நியமமுடித்து உணவெடுத்து நித்திரை செய்தெழுந்தார்கள்.

இரண்டாம்போர்ச் சருக்கம்

"எந்த எந்த யோனிபேதம் எங்கும் எங்கும் உள்ளன
அந்த அந்த யோனிதோறும் ஆவியான தன்மையைச்
சிந்தையின்கண் ஒருகணத்தில் நிகழுமாறு தேவர்கோன்
மைந்தனுய்ந்தி டப்புகன்ற வள்ளல்தான் வணங்குவாம்"

காலையிலெழுந்து, இருதிறத்தவரும் தத்தம் மனோபக்குவத்துக்கு ஏற்ப நித்ய நியமங்களை முடித்துக்கொண்டு, இரண்டாம்நாட் போரினைத் தொடங்கினார்கள். கண்ணபிரான், தருமனுடனும் ஆலோசித்து, முன்னாட்குச் சேனாபதியாயிருந்து இறந்தொழிந்த சிவேதனினும் மேம்பட்டவனான, திட்டத்துய்மன் என்னும் யாகசேனன் மகனை சேனா நாயகனாக்கினான். திட்டத்துய்மன் யாகாக்கினியில் நின்றும், வில்லாசிரியனாகிய துரோணரைக் கொல்வதற்கே பிறந்துள்ளவனாகலான், இயற்கையிற் பொருந்திய போர்க்குறிகளுடையவன். போர்க்களத்தில் சோனைமாரிபோலக் கணைகளைத் தூவிக்கொண்டே இருக்கும் தனு வித்தை பயின்றவன் ஆகலின், இவனே கடைசிவரையில் நின்று சேனையை நடத்துவான் என்று தீர்மானித்தார்கள் இருவரும். ஆகையால், சேனா நாயகன் எனும் புது வலிகொண்ட திட்டத்துய்மன், நகுலனும் அபிமன்னுனும் வீமனும் மன்னரும் இரண்டு பக்கங்களிலும் துணையாகச் சூழ்ந்துவரச் செருக்களம் வந்துற்று நின்றான்.

கௌரவர் சேனைத்தலைவராகிய பீஷ்மரும், மன்னர் மண்டலீகர்களும் மன்னன் தம்பியர்களிற் பலரும் இரு பக்கங்களிலும் சூழ்ந்து நிற்கச் செருக்களத்துற்றார். இரு திறத்தாரும் உக்ரமாகப் போர்த்திறம் காட்டிப் பொருதார்கள். துருபத குமாரனாகிய திட்டத்துய்மன் வில்லாசிரியராகிய துரோணரை வளைந்துகொண்டு, அம்புகளை மாரிபோற் பொழிந்தான். துரோணர் கோபித்து, பல கணைகள்கொண்டு, அவன் எய்தவற்றையெல்லாம் அழித்து மேலும் வலிய பாணங்கள் ஏவித் திட்டத்துய்மனுடைய தேர் குதிரை சாரதிகளை யழித்து அவனைக் கீழே வீழ்த்தினார். மற்றோர் தேர்

தேடிச் சேனாநாயகனாகிய திட்டத்துய்மன் ஓடி வருதலைக் கண்ட வீமன் தனது தேரைச் செலுத்திப் பெரும்படையுடன் ஆசிரியனைச் சூழ்ந்துகொண்டு கடும்போர் விளைத்தான். அப்போது ஆசிரியன் தளர்ந்திருப்பதறிந்து, துரியோதனன் ஏவிவிடக் கலிங்கர்கோனாகிய சக்ரதேவனென்பவன், தனது பெரிய யானைப்படைகளுடன், வீமனைச் சூழ்ந்துகொண்டு கணைகளை யேவினான்; வேழப்படையைக் கண்ட வீமன் உற்சாகங்கொண்டு, தனது வலிய கதை கொண்டடித்தும் வீழ்ந்த யானைகளை யெடுத்துச் சுழற்றி யானைகளை மோதியும் வெகுநேரம் வரையிலும் போர்க்களத்தில் நின்று கலிங்கனுடைய யானைகளையெல்லாம் அழித்தான். வந்த வந்த களிறுகளை யெல்லாம் வாரிவாரி மோதி மோதிக் காலன் வாயிற் பெய்து கொண்டிருக்கும் வீமனது உக்ரத்தைக் கண்டு, கலிங்க மன்னவன் எதிர்நிற்க முடியாமற் களைத்துப் போனான். சேனையாகிய யானையும் அற்று வீரரும் வீழ்ந்து தேருமின்றித் தான் நின்ற தனிமையையுன்னி முதுகிடப் பார்த்தான். சகாதேவனுடைய தளர்ச்சியைக்கண்டு, சேனாநாயகராகிய பீஷ்மர், துணைக்கு வந்துநின்று வீமனோடு பொருதார்.

கலிங்கர் அழிவு.

வீமனிப்புறம் திரும்பிக் கலிங்கனையும் அவனது புத்திரர்களையும்விட்டு யொரு தேர்மே லேறிக்கொண்டு பீஷ்மனுடனும் பொருது கணைகளை யேவிப் பீஷ்மன் பிடித்தவில்லை யொடித்துத் தேரை யழித்து, ஒரு தேரு மாத்திரனாற் சாடிச் சாரதி யுயிரையும் முடித்திட்டான். அப்போது, களை நீங்கிக் கிளர்ச்சிபெற்ற கலிங்க மன்னனும் புத்திரர்களும், தங்கள் யானைப் படையின்றியே வந்து, பீஷ்மனது தளர்ச்சியைக்

கண்ட வீமன், "இவர் கிழவர்" என்று அவரை விடுத்துக் கலிங்கனையும் புத்திரரையும் கவனித்தான். "முன்னரே அழித் திருப்பேன்; களைத்துப் பிழைத்து ஓடினீர்; பின்னரும் வந்து ளீர்; இம்முறை யமலோகம் காட்டுகின்றேன்" என்று சொல்லிப் பெருவலிகொண்டு, வில்லை வளைத்து அம்புகள் ஏவி யும் வாள்கொண்டு வீசியும் தேர்மரத்தா லடித்தும் கதையால் மோதியும் கலிங்கனைப் புத்திருடன் ஒழித்து உயிர் கவர்ந் தான். களை நீங்கிய சேனு நாயகன் வீடுமன், கலிங்க ரொழிந் ததைக் கண்டு கலங்கிப் பீமனைத் தனது சரக்கோட்டைக் குள் நிறுத்திவிட்டார். உடனே அபிமன்னன் பீமனுக்குத் துணையாகத்தோன்றி, அச் சரக்கூட்டைத் தனது கணை களா லொழித்துப் பீமனுகிய பெரிய பிதாவின் சிறையை விடுவித்துக் கண்களுக்கு முன் காட்சி தந்தான். துணை வலி யாகவந்த தம்பி மகனை மெச்சிக்கொண்டு வீமன் மேலும் உற்சாகம் மிகுந்து, பகைவருடைய படைகளைமோதி யுகாந்த காலத்து ருத்திரன்போல் நின்று எதிரிகளோ அவர் சேனு பதியோ அவர் மன்னனுகிய துரியனே அவர் தம் வில்லாசி ரியனுகிய துரோணனே யாரும், இன்னது செய்வதென்று யோசிக்கவும் இடங்கொடாமல், தனது பெருவலிகொண்டு எதிரிகளைப் பிணமலையாக்கிக் கொண்டிருந்தான். களமும் எதிரிபடை யொடுங்கி வெளியாயிற்று. இந்த சமயத்தில் நாமிருந்தால், நம்மையும் பீமனும் அபிமனும் அழித்து விடு வார்களென்று பயந்தவன்போல் சூரியன் மேலைக் கடலிற்போ யொளித்துக்கொண்டான். பகைவர்கள் இன்று பிழைத்தோ மென்று ஓடிப் பாசறையிற் புகுந்து கொண்டார்கள். வீம னும் அபிமனும் வெற்றிமாலை சூடிப் பெரு முழக்கத்துடன் சகோதரர்கள் எதிர்வந்து உபசரிக்கப்பாடி வீடு சேர்ந் தார்கள்.

முதல் நாள் அவர்கட்கு முற்றும் தோல்வியும் இரண்டாம் நாளாகிய இன்று நமக்கு முற்றும் தோல்வியு மென்றாலும், வீமனுக்கும் அபிமனுக்கும் நம் படை புறமிட்டு வந்த தன்மை மனத்தைக் களேக்கச் செய்திருக்கின்றதென்று மன்னர் மன்னன் துரியன் துக்கிக்க, "மூன்றும் நாளாகிய நாளேப்போரில், நாம் பெருத்த வெற்றியைப் பெறலாம்" என்று சேனைத்தலைவன் பீஷ்மன் தேற்றத்தேறி நியமம் முடித்து, இரவு நித்திரையிற் கழித்தார்கள். பாண்டவர் மிகுந்த குதூகலத்துடன் அளவளாவி யிருந்து அனுஷ்டானங்கள் பெற்று இரவினைக் கழித்தார்கள்.

மூன்றும்போர்ச் சருக்கம்

"தந்தம் உறியிலவர் வைத்ததயிர் பால்வெண்ணெ யெட்டாமற்
குந்தியுரவின் மிசையேறி யிளங் கோபியர்முன் கூத்தாடி
நந்தன் மனேயில் யசோதையிரு நயனங்களிக்க விளேயாடும்
மைந்த னிருதாள் ஒருநாளும் மறவாதாரே பிறவாதார்"

மூன்றும்நாட் காலேயில், இருதிறத்து வீரர்களும் ஸ்நானாதி யநுஷ்டானங்களும் உணவு வகையும் முடித்துக் கொண்டு போர்க்களம் குறுகினர்கள். நேற்று அடைந்த தோல்வியை யின்று பெறும் வெற்றியால் மறைக்கவேண்டுமென்று கௌரவ வீரர்கள் மிக்க ஊக்கத்துடன் களம் குறுகினர்கள். சேனு நாயகராகிய, பீஷ்மர், இன்று சேனேகளே வேருெரு வ்யூகத்தாற் பாண்டவர்க்குப் பயம் தோன்றும்படிச் செய்யவேண்டுமென்று, தமது படையைக் காருட வ்யூகமாக வகுத்துச் சேனேகளே நிரம்பக் காட்டினர். "நேற்று எதிரிகள் முழுத்தோல்வி பெற்றிருக்கின்றூர்கள். ஆகையினுல்

இன்று பெரு வலியும் மிகு கோபமுங்கொண்டு நம் படையைச் சாடிப் பெரு வீரர்கள் யாரையேனும் நோக்குவார்களென்றெண்ணிக் கண்ணபிரான், அதிரத வீரர்களைப் போரின் முன்னணியில் நிற்கச் செய்து, சேனை நாயகனைக்கொண்டு தம் சேனையை அர்த்த சந்திர வ்யூகமாக வகுக்கச் செய்து தாமும் தேருடன் முனையில் நின்றார்.

கண்ணபிரான் எண்ணியபடியே, பீஷ்மரும் துரோணரும் முதலாம் அதிரதவீரர்களும், பல மன்னர்களுடனும் காவலருடனும் தோன்றி, அர்ச்சுனனையும் கண்ணபிரானையும் சூழ்ந்துகொண்டார்கள். துரியோதனனும் தம்பியரும் காந்தாரர் முதலிய மன்னவரும் சிங்கம்போலும் வலியுடைய வீமனைச் சூழ்ந்துகொண்டார்கள். இருதிறத்தாரும் இளைத்தலில்லாமல், நீண்ட நேரம் மலைந்தார்கள். துரியோதனன் தன்னொடும் எதிர்க்கவந்திருக்கின்றானென்பது தெரிந்தால், வீமனுக்குத் தனி வீரமும் ஒப்பற்ற கோபமும் ஊக்கமும் உறுதியும் வந்திடுமன்றோ?

துரியோதனன் மயங்கி வீழ்தல்

இன்றே இத் துரிய ராக்ஷகனை யொழித்திட்டால், நீண்ட நாட் போரை நீடிக்க விடாமற்செய்து சேனைகளையும் அழிக்காமல் அரசு கொள்ளலாம் என நினைத்து வீமன், தானும் தன்னொடும் துணைநின்ற தன் மகன் கடோத்கசனுமாகச் சேர்ந்து மிருக பலமும் யானை பலமும் கொண்டு உருத்து நின்று உக்ரத்துடன் போர் செய்து காந்தாரத்தவரைக் காலனுக்குக் கேற்றினார்கள். தனக்குத் துணையாக வந்த காந்தாரர்கள் பல்லோர் மாய்ந்த திறம் நினைத்துத் துரியன் பெருங்கோபம்கொண்டு தம்பியரை யேவித் தானும் சமயம் பார்த்து

வீமன் மேனியில் சரமழை பொழிந்த வண்ணமாக இருந் தான். துரியனைப் போடுக்க வந்த வீமனுக்கு அந்தக் காந்தாரர்களே யல்லாமல், துரியன் தம்பியரும் தடையா யிருந்தபடியால், பெரும் பலம் கொண்டு கதையைக் கையி லேந்தித் தம்பியரிற் பலரை அழித்தும் பலரை யோட்டியும் மன்னர் மன்னனாகிய துரியோதனனுக்கு எதிரில் வந்து நின் றான். இருவரும் சமவீரர்களாகையால், நீண்டநேரம் நெடுஞ் செரு விளைத்துத் திறமை காட்டினார்கள். வீமன் துரிய னுடனும் கடோற்கசன் மற்றைத் துணைவருடனும் எதிர்த்து வகுத்துக் கொண்டு சமர் செய்தார்கள். வீமன் வீரம் கொண்டு எய்த பாணத்தால், துரியன் நடுங்கித் தளர்ந்து போனான்; அப்போது அப்புறத்தில் நின்று தன்னைவளைத்துக் கொண்ட பீஷ்மன் துரோணன் முதலானவர் சுளைமுறி யடித்து, எதிர் ஒருவருமில்லாமையால் அர்ச்சுனன் திரும்பிப் பார்த்து, வீமனொருவனே துரியோதனனுடன் பொருத்துக் கொண்டிருத்தலைக் கண்டு, இப்புறத்துக்கு வந்து கொண் டிருந்தான். அப்போது தான் வீமன் கணையால்களைத்துத் தளர்ந்து மன்னன் நடுங்கியிருக்கும் சமயமாக இருந்தது; உடனே பல கணைகள் தொடுத்துத் துரியனேறி வந்த ரதத் தின் சாரதியை யுருட்டி ரதத்தைப் பின்னமாக்கினான். அடி மேலடி யடித்ததைப்போல் துரியோதனன், களைப்புடன், தோற்றுப் போய்ப் பூமியில் வீழ்ந்தான். வீமனெய்த அம்பு மார்பில் மருமத்தானத்திற்பட்டு ஊடுருவிப் போயிருந்தபடி யால், உயிரிழந்தான்போல் மன்னன் கீழே வீழ்ந்து விட் டான். மன்னர் மன்னன் உயிரிழந்தான் என்றே யாவரும் சொன்னார்கள். கேட்டிருந்தவர் எல்லோரும் அருகு ஓடி வந்தார்கள். சேனா நாயகனாகிய பீஷ்மர் ஓடி வந்து, தேரி னின்றும் இறங்கி மன்னனை வாரி யெடுத்துத் தேரிற் கிடத்

திக் கொண்டு போய்க் கவனித்துப் பார்த்து, உயிர் அழிந்து போகவில்லை யென்னும் உண்மை யுணர்ந்து, தக்க மருந்து கொடுத்து உயிரை மீட்டுக் களையாற்றிச் சேனையின் பின்புறம் இருக்க வைத்து அர்ச்சுனனுடன் பொருதற்கு ஓடி வந்தார்.

கண்ணன் சக்கரத்தைக் கையில் தாங்கினர்.

விஜயனையே குறிக்கொண்டு பெருங் கோபத்துடன் வரும் பீஷ்மர், பார்த்தனைச் சூழ்ந்திருந்த பாண்டவசேனையை மருமங்களினும் புயங்களினும் வதனங்களினும் கண்களினும் வெங்கணைகள் பல பொழிந்துப் பிணக் குவியலாக்கி, விஜயன் எதிரே நின்று, மிக உக்ரமாகப் போர் முனைந்து, பல பகழி களைத் தூவினர். பாட்டன் வந்த உக்ரத்தையும் கோபத்தை யும் பார்த்துத் துரியனுக்கு ஏதோ கேடு சூழ்ந்தது போலும் என்றெண்ணிப், பாட்டனர் மனம் பின்னும் புண்படும்படி யாகச் செய்யலாகாதெனத் தீர்மானித்துப் பார்த்தன் தன் மேல் விழும் கணைகளைத் தடுத்து நின்றானேயல்லாமல், பீஷ் மன் பேரில் படும்படியாக ஒன்றேனும் தொடுக்காமல், விளை யாட்டுப் போர் விளைத்துக் கொண்டிருந்தான். என்றாலும், பீஷ்மர் கோபம் அடங்காமல் விஜயன் பேரில் கணைகளையேவி யவனையின்று அமரிற் கீழே தள்ளி விடலாமெனும் ஊக்கத் துடன் சரமாரி பொழிந்தார். கண்ணன், அர்ச்சுனன் நிலைமை யறிந்து, "ஏன் இப்படிப் போர் புரிகின்றாய்! ஆரம்ப நாளைப்போல் இன்னும் பாட்டன் 'பூட்டனென்று மயக்கம் கொண்டனையோ! யுத்த வீரர் சுத்த வீராகிய உன் பாட்ட னைப்பார்! நீ விளையாட்டாகப் போர் புரிகின்றாய் என்ப துணர்ந்தும், போரை நிறுத்தினாரா? கோபம் ஒழிந்தாரா? உக் ரந்தணிந்தாரா? உன்னைக் கொல்லவே 'கருதி நிற்கிறார்; போர் முனையிற்பந்துமுறை பார்க்கலாமா?" என்று சொல்லித் தேரை

இடசாரி வலசாரியாகத் திரித்து, அவர் எய்யும் அம்புகள் அர்ச்சுனன்மேற்படாவண்ணம் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தார்; கண்ணபிரானது குழ்ச்சியை யுணர்ந்த பீஷ்மர் கண்ணன் பேரிற் கோபம் மூண்டு, அவர்மார்பிற் படும்படியாக ஒரு கணை தொடுத்துவிட்டார் ; அறிந்தார் கண்ணன் ; தேரினைச் செலுத்தும் சாமர்த்தியத்தால், அக்கணை தன்மேற் படா வண்ணம் தடுத்திட்டுத் தன் தேரினின்றும் பீஷ்மர் தேரிற் பாய்ந்து கிழவனருகிற் சென்று, கையில் சக்கரத்தை யேந்திச் சுழற்ற ஆரம்பித்தார்.

உடனே, அர்ச்சுனன் தேரைவிட்டுக் குதித்துக் கண்ணனருகே வந்து, "கண்ணபிரானே ! கடவுளே!! இப்படி முனியப்படாது ; தேவரீர் துணிந்து நிற்பதாயின், இந்தப் போரினை நாங்கள் ஆரம்பித்திருக்கவேண்டியதில்லை ; மற்றும், களத்தில் படையெடுப்பதில்லை யென்று வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள் ; அவரோ குருகுலத்தவர் யாவரும் வணங்கிப் போற்றத் தக்க பெரியவர் ; பொறுத்தருளல்வேண்டும்" என்று மிகப் பிரார்த்தித்தான்; அப்போது, "அர்ச்சுனா! நீ சொல்வதெல்லாம் சரி ; தர்மப் போர் நடத்துவாருடன் தர்மமாக இருத்தல் வேண்டும் ; ஆரம்பமுதல் அதர்மப்போரே நடத்திக்கொண்டிருக்கிறார்கள் ; உத்தர குமாரனும் சிவேதனும் மடிந்தது இவர்கள் செய்த அதர்மப்போரினால் அல்லவோ ? அதிருக்கட்டும் ; நீ உறவுமுறை கொண்டாடி, அவர் மார்பில் பாணம் எய்யாதிருக்கும்போதும் இந்தக் கிழவன் உன்மேற் கோபம்கொண்டு பாணமெய்ய மறந்தானிலன் ; அன்றியும் என்மேலும் கணையெறிந்து என்னைக் கொல்லவும் கருதினனே ! இவை யெல்லாம் தருமம்போலும். நாம் தருமம் பார்த்திடல் வேண்டுமோ?" எனச் சினந்துரைத்த

போது, பீஷ்மர், அறிவு தோன்றிக் கோபம் நீங்கி, யிப்பெரியார் கோபத்தைத் தணிக்காவிடின் தாம் அழிவது நிச்சயமென்றுணர்ந்து, தேர் விட்டிறங்கிக் கண்ணனை வணங்கிப் பலவாறு துதித்தார்.

"ஆரண கற்பித மாதவ அச்சுத ஆழியிடைத் துயிலும்
காரண சிற்குண ரூபமலர்க் கொடி காதல் மனத்துறையும்
நாரண அற்புத வானவருக் கொரு நாயக நிற்பணியும்
வாரணம் முத்தி விசாலத் திடை வாழ்வுற வைத்தவனே."

"ஆவி யழித்தனை தூணி லுதித்தடல் ஆடகனைத் தலைநாள்
மாவலி யைச்சிறு மானுருவத் துடன் வார்சிறை வைத்தனையால்
ஏவில ரக்கனை வீழவ டர்த்தனை யானெறி லக்கெனவோ
நீவலி யிற்சின மூளுமனத்தொடு நேமி யெடுத்ததுவே."

"யான் நரகிற்புகு தாமலெனக் குயர் வானுலகைத் தருவான்
நீவினை வுற்றது போன பிறப்பிலென் நீடுதவப் பயனே
யானும் னிப்பிற வாமல் அளித்தருள் ஈசவெனப் பரவா
ஞான மனத்தொடு நாகுழறப் பல நாடியுரைத் தனனே."

என்றிப்படி துதிசெய்திடக் கண்ணபிரான், கோபம் மாறியவனை யன்புடன் அங்கீகரித்து, "சலவருட் சாலச்சபமே நலவருள் நன்மை வரம்பாய்விட லன்றோ வாழ்க்கையின் நோக்கமென்பதை யுணர்ந்து, இனித் தர்மப்போரே நடத்தும்படியாக உங்கள் படையைத் தூண்டுங்கள்" எனச் சொல்லித் தேரேறி மறுபடியும் முனைந்து பொருதார்கள்; பீஷ்மரால் பாண்டவர் சேனையிற் பலரும் விஜயன் கணையால் பகைவரிற் பலரும் மாண்டொழிந்தனர். இரவியும் மேலைக் கடலில் மறைந்தான். அவரவர் பாடி வீடேகினர்.

நான்காம் போர்ச் சருக்கம்.

"தேடிய அகலிகை சாபந் தீர்த்ததாள்
நீடிய உலகெலாம் அளந்து நீண்டதாள்
ஓடிய சகடிற உதைத்துப் பாம்பின்மேல்
ஆடியும் சிவந்ததாள் என்னை யாண்டதாள்."

தங்களது வெற்றியைக் குறித்துப் பாண்டவர் சந்தோஷத்தை யடைந்து, வீமனையும் விஜயனையும் கடோற்கசனையும் அபிமன்னுவையும் போற்றிச் சிறிதுநேரம் நித்திரை செய்து பொழுதைக் கழித்தார்கள். கௌரவரோ இறந்து போன அரசர்க்கட்காகத் துக்கமும் துயரமும் காட்டி யழுதிரங்கிப் பொழுதைப் போக்கினார்கள். பொழுது விடிந்தது. போராரம்பித்த நான்காம்நாட் காலையில் இருதிறத்தாரும் தங்கள் நியமங்களை முடித்து உணவெடுத்துக்கொண்டு போர் முனைக்கு வந்தார்கள்.

"முன் நாளைப்போலவே இன்றைக்கும் வ்யூஹத்தை வகுத்திடு" என்று கண்ணபிரான் ஆஞ்ஞாபிக்கச் சேனாபதியும் அங்ஙனமே வகுத்தார். எதிரிகளும் கண்ணன் வகுத்தபடியை யுணர்ந்து, தங்களது சேனைகளையும் அந்த வியூகமே வகுத்துக் கொண்டார்கள். இருதிறத்தாரும் போர்செய்ய ஆரம்பித்தார்கள். ஆரம்பத்திலேயே பகைவர்கள் பலர் வீமனைச் சூழ்ந்துகொண்டு போர் செய்தார்கள். அடல்வீமனும் மிகக் களிப்புடையவனாகிப் பகைவரை நன்றாய் மோதித் தாக்கிக்கொண் டிருந்தான். முன்னாளில், வீமன் ஒரு யானைப் படையை யழித்துவிட்டமை காரணமாக இன்று யானைப் படையைக் கொண்டே வீமனை யழித்திடுவம் என்று வந்துளார் போலப் பெருத்த யானைக் கூட்டங்களைக்கொண்டுவந்து

வீமனைச் சூழ நிறுத்திக்கொண்டு போர் செய்தார்கள். வீம னுக்கு யானைகளுடன் விளையாடுவதென்றால் மிகப் பிரிய மானபடியால், இத்தனை யானைகளையும் கண்டவுடன் களித் தானே யல்லாமல் பயப்படவில்லை. கதைகொண்டும் தோம ரங்கொண்டும் வீழ்ந்த யானைகளைக் கொண்டும் யானைகளை மோதி யடித்துத் தாக்கி வீழ்த்தினான். யானைகள் அழிந்து போகவே அதிலேறிவந்து போர்செய்த மன்னவர்கள் கலக் கங்கொண் டிருந்தார்கள்.

அது கண்ட துர்யோதனன் பல தம்பியர்களைத் துணை யனுப்பி யம்மன்னர்களைக் காத்திடச் செய்தான். மன்னன் தம்பியரும் மற்றை மன்னர்களும் பின்னரும் வந்து வீமனைச் சூழ்ந்துகொண்டார்கள். யானைப் படையைக் கண்டவுடன் எவ்வளவு சந்தோஷமோ, அவ்வளவு சந்தோஷம் துரிய னுடைய தம்பியர்களைக் கண்டவுடனே வீமனுக்குத் தோன்று மாதலால், மன்னன் துரியன் மற்றை மன்னவர்க் குத் துணையாக அனுப்பிய தம்பியர்களை, வீமன், எமனுல குக்கு அனுப்ப விருப்பமுற்றான். தான் ஏறி வந்த தேர் ஒரு முறை இருமுறை அழிந்ததானாலும், வீமன், தளர்ச்சி யடையாமல், மற்றும் தேரில் ஏறி வீரத்துடன் போர்புரிந்து கொண் டிருந்தான். மன்னர்களைத் தாக்குவதும் தேரைச் சிதைப்பதும் யானையை யழிப்பதுமாகி உக்ர நரசிம்மன் போல் வீமன் போர்புரிவதைக்கண்ட சகுனி சல்லியன் முதலியோர், “அப்பா! என்ன வீரம்!! முன்னாள் இவன் மகன் கடோற்கசன் வீரம்காட்டிப் பொருதான்; இன்றைக்கு இவனது தவணைபோலிருக்கிறது; இவனுடன் எதிர்த்து நம்மால் நிற்க முடியாதுபோலிருக்கிறதே” என்றென்று உடைந்து ஓடினார்கள். இம்மன்னர்கட்குத் துணையாகத்

தம்பியருடன் தானும் வந்து போர்செய்தான் துரியோதனன். துரியோதனனைக் கண்ட வீமன், மற்றவரைவிட்டு அவன் பக்கம் திரும்பிப் பலகணைகளால் மிகப் போர்செய்து, அவனது தேர் குதிரைகளை யழித்து, மன்னனையும் மயங்கச் செய்திட்டான்.

தமையன் தளர்ந்த நிலைகண்டு தரியாதாராகித் தம்பியர்கள் வீமனைச் சூழ்ந்து கொண்டார்கள். அங்ஙனம் வந்து சூழ்ந்துகொண்ட அரவக்கொடியன் தம்பியர் ஐவரையும் இன்று விண்ணுலகில் எல்லாக் கௌரவர் வருகைக்கும் தூதாக அனுப்பல் வேண்டுமென்று எண்ணினவன் ஆதலால், வீமன், அந்த ஐவரையும் பார்த்துக் கணைகள் ஐந்து ஏவி, அவர்களது மார்பில் தைக்கும்படிச் செய்தான். மற்றும் பல பாணங்கள் கொண்டு, அவர்கள் ஏறிவந்த தேர் சாரதிகளை யொழித்திட்டான். "சேனாவிந்து சதட்சணன் பிங்கலசன் சலாசந்தன் பீமபாகு என்னும் காந்தாரி புத்திரர்கள் ஐவரையும், வீமன், விண்ணுடாள அனுப்பிவிட்டான்" எனும் செய்தி பரவிற்று. துரியோதனன் தம்பியரில் ஐந்துபேர் இன்றைப் போருக்குப் பலியானார்கள் என்று கேட்கவே, "சரிதான் இன்றைய வெற்றியும் பாண்டவர்க்கேதான் கிடைக்கும்போ லிருக்கிறதே" என்று மன்னர் பொருமினார்கள். ஒரு பக்கம் வீமனும் மற்றொருபக்கம் விஜயனும் வேறொருபக்கம் நகுலனும் இன்னொருபக்கம் அபிமனுமாகத் துணித்துத் துணித்து தள்ளிடவே, மன்னர் மன்னன் சேனை தளர்ந்துபோய்க் கலக்கமடைந்தது. இப்படிக் கலக்கமடைந்து, ஓடுதற்கெதிர் பார்த்திருக்கும் சேனைகளைத் திருப்பிக்கொண்டு பகதத்தன் என்னும் அசுரகுல திலகன் சேனையுடன் ஓடிவந்து, அவர்க்குத் துணைநின்று போர்செய்தான். அப்போது, தகப்பனுக்

குத் துணையாகத் தக்க சமயத்தில் உதவவேண்டுமென்று ஓடிவந்து, கடோற்கசன், "அரக்கனும் அரக்கனுமாகப் பொருவோம் வா" வென்று பகதத்தனுடன் போர் தொடுத்தான். பகதத்தன் யானைப் படையையுடைய மகாவீரனுன தால், கடோற்கசன் ஏறிவந்த தேர் குதிரைகளை யழித்து, அவன் மார்பின் மேலும் அம்பெய்யத் துணிந்தான். கடோற்கசன், இந்தப் பகதத்தனுடன் இப்படிப் போர்செய்யப் படாதென்று, தானே பல வுருக்களாக மாறி யானைப்படையுடன் யானைப்படைகளாகவும குதிரைப்படையுடன் குதிரைப்படைகளாகவும் ஆட்படையுடன் ஆட்களாகவும் அநேக உருக்களைக்கொண்டு, எதிரி சேனை தளர்ந்துபோம்படியாகப் பொடிசெய்தான். இங்ஙனம் மாயப்படைகள் பலவற்றைச் சிருஷ்டி செய்துகொண்டு வீமன்மகன் போர் செய்வதைக் கண்டு தேவரும் பிரமித்தார்கள். பகதத்தன் சேனை புறமுதுகிட்டு ஓடிற்று; அவனும், "இவ்வப்பனும் மகனும் நம்மை யொழித்து விடுவார்கள்போ லிருக்கின்ற" தென்று ஓடி மறைந்தான். கதிரவனும் மேலை மலைக்குகையில் போயொளிந்து கொண்டான். போர் நின்றது. இருதிறத்தாரும் ஸநானுனுஷ்டானங்கட்குச் சென்றனர். ஐந்து தம்பியரையும் இழந்த துரியனைத் துயாகற்றி யழைத்துக்கொண்டு பாடி சேர்ந்தார் சேனுபதியாகிய பீஷ்மர். மக்களைவர் இறந்த செய்தி கேட்டுக் காந்தாரி கதறிக் கதறியழுதாள். "குந்தி மைந்தர் தாமிருக்க முந்தி நீங்கள் மாண்டீரோ?" என்று புலம்பினுன். இங்ஙனம் துரியன் பாசறை அழுகையறையாக இரவெல்லாம் இருந்தது. மறுநாள் சூரியன் உதயமானுன்.

ஐந்தாம் போர்ச் சருக்கம்.

"கருமாமுகில்போல நெஞ்சத்திருத்தும் கருத்தெய்து மேல்
அருமாதவன் தானுமவன் முத்திதருகைக்கும் அவனேகுருத்
தருமாலை மணநாறு தாளானைவண்டேறு தண்ணந்துழாய்
மருமாலை புனைகின்ற திருமாலை யல்லாது வல்லார்கள்யார்?"

காலைக் கடன்களைக் கதிபெற முடித்துக்கொண்டு கௌரவர் சேனா வெள்ளமும் பாண்டவர் சேனா வெள்ளமும் இரண்டு வகை மேகக் கூட்டங்கள் எதிர்த்து நின்றனபோல், போர்க் களம் புகுந்து வீரங் காட்டின. சங்கங்களும் தாரைகளும் சின்னங்களும் எக்காளங்களும் முரசங்களும் துந்துபிகளும் இடி முழக்கங்கள் போலொலித்தன. வாளும் வேலும் மின்னலைப்போல் பிரகாசித்தன. மழை வருஷம் போலப் பாண வருஷங்கள் வீழ்ந்தன. இது பூமி தானோ ஆகாயவீதியோ வென்று ஐயுறும்படிப் போர்க்களமிருந்தது. சேனை வீரர்கள் அழிந்து வீழ்ந்த ரத்தப் பெருக்கம் சொக்கர் வானம்போல் சிவந்து திகழ்ந்தது. அசுரர்க்கும் அமரர்க்கும் நடந்த போரெனவும் இலங்கை யரக்கனுக்கும் அயோத்தி யிறைவர்க்கும் நடந்த போரெனவும் உக்ரமாக இருதிறத்தாரும் வீராவேசத்துடன் மலைந்தார்கள். வில் விஜயனும் குரு குலப் பிதாமகனும் ஒருவர்க் கொருவர் வீரங்காட்டிக் கணைகளைப் பொழிந்து யுத்தம் செய்தார்கள். பீஷ்மனுக்குத் துணைப்பலமாகக் கலிங்க மன்னர்கள் வந்து கூடினார்கள். அர்ச்சுனன், பாட்டனாரை விடுத்திந்தக் கலிங்கேசரை எதிர்கொண்டு பொருதான். கலிங்கர்கள் தளர்ந்தார்கள். அவர்கட்குத் துணையாக அசுவத்தாமனை அரவக் கொடியோன் அனுப்பினான். அசுவத்தாமனும் அர்ச்சுனனும் முனைந்து மலைந்தார்கள். செல்லும் பாணங்கள் ஐந்தெடுத்து விஜயன் செலுத்த

அவை சென்று அசுவத்தாமனுடைய வில்லும் நாணும் அதிற் பூட்டப் பெற்றுள்ள அம்பும் துணித்து வீழ்த்தன. துரோண குமாரன் மிக முனிந்து இந்திர குமாரனைப் போர் முனைவீழ்த் துவேனென்று சபதங்கூறி மற்றும் வில்லெடுத்து வந்தான். அவனுக்குக் குறைந்தவனா அர்ச்சுனன்! அசுவத்தாமன் கலங் கும்படி பொருது கொண்டிருந்தான்.

மற்றோர் புறம், வீமனைப் பல மன்னர்கள் வந்துமொய்த் துக் கொண்டு, "மீளாத வகையாக இன்று இவனைக் களத் தில் தள்ளித்தான் செல்லுவது" என்னும் கோபவெஞ் சொல்லுடன், மன்னர்கள் இருபத்தையாயிரம் பேரும் வீர மாகவே மலைந்து நின்றார்கள். அவர்களுடைய சபதம் பலித்திடுமாறு செய்திடத் துரியோதனன் துற்சாதனனை யும் மற்றும் தம்பிமார்களையும் சகுனி சல்லியர்களையும் துணைப் பலமாக அனுப்பினான். இவ்வளவு பேர்களையும் எதிர்த்துத் தானொருவனாகவே நின்று கோபத்துடன் சண்டை செய்யும் வீரத்தைப் பார்த்துநின்ற நாகக்கொடி யோன், பொறுமை மேற்கொண்டு தானும் அவனுடன் எதிர்சென்று போர்விளைத்தான். துரியோதனன் ஏவிய பாணங்களினால் வீமன் மார்பில் அணிந்திருந்த கவசம் பிளந்து போயது; வீமன். உக்ரங்கொண்டு ஐந்து கணை களைக் கையிலெடுத்து, துரியோதனன் மார்பிற்கு லக்ஷ்யம் வைத்துத் தொடுத்திடவே, வீரம் பேசிவந்த பாம்புக்கொடிய வன், பதைத்துக் கலங்கி ரதத்தின்மேற் சாய்ந்தான். உடனே தம்பியர்களும் சகுனி சல்லியர்களும் ரதத்துடன் துரியோ தனனை யப்புறப்படுத்திச் சிகிச்சை செய்துக்கொண் டிருந் தார்கள். வீமன் எதிர்ப்பாரில்லாமல், தோள்தட்டி நிற்கும் போது, பூரிசவா வென்பவன் எதிர்வந்து நின்றான். இரு வரும் சிறிதுநேரம் ஒத்த போர் நடத்திக்கொண் டிருந்தார்

கள். இருவர் வில்லையும் பரஸ்பரம் பாணங்கொண்டு ஒடித்துக் கீழ் வீழ்த்தி, இருவோரும் வாளும் கேடகமும் கையிலேந்தி நின்று பொருதார்கள். இருவோரது சேனைகளும் பரஸ்பரம் போர்புரிந்து கொண்டிருந்தன. பூரிசவாவுக்குத் துணையாக நின்ற இருபத்தையாயிர முடிமன்னர்களும் எதிர்த்துத் தனது சேனைகளைச் சிதற அடித்துக்கொண் டிருப்பதைக்கண்ட வீமன் தன்னோடெதிர்த்து நிற்கும் பூரிசவாவுக்குத் தளர்ச்சி யுண்டாகும்படிப் பாணவர்ஷங்களைக் கொட்டிப் பின்னர் "இருபத்தையாயிரவரையும் இன்றைக் கணக்குக்கு லக்ஷ்யமாக்கல்வேண்டும்; இரவியோ மேலைத் திசையிற் சாய்ந்துவிட்டான்; இன்றைய அஸ்தமனத்திற்குள் இவர்களது உருவங்களை இந்நில வுலகத்தினின்றும் மறைத்திடுவேன்" என்று உக்ரமாக மலைந்தான். வீமனுடன் எதிர்நின்று பொரும் வீரர்களா அம்மன்னவர்கள்! கணைகளாலும் கதையினாலும் வாள்கொண்டும் வேல்கொண்டும் வீமன் தனது திறமெல்லாம் காட்டி, ஒருவர் இருவர் பதின்மர் நூற்றுவர் ஆயிரவராக அவர்களைக் களத்திடைத் தள்ளியழித்து வீரந்தோன்ற நின்றான். சூரியன் மேலைத்திசையை அடைந்தான். எதிரிகள் யாரையும் காணோம்; "இன்று இவருடன் போகட்டுமென்று பகைவர் பாடிக்குத் திரும்பிவிட்டார்க" ளென்று பாண்டவர், வீமனுக்கு ஜயகோஷம் கொட்டி ஆரவாரம்காட்டிப் பாசறை புகுந்தனர். ஸ்நானுனுஷ்டானங்கள் முடித்து நித்திரைக்குப் போனார்கள். துரியோதனன், இந்த ஐந்து நாட்களுக்குள்ளேயே மனம் தளர்ந்து போனான். மேலைத்திக்கி லொளித்த கதிரோன், ஆறும்நாட் போரைக் காண ஆதரம் கொண்டவன்போலக் கீழ்த்திசையில் தோன்றினான்.

ஆரும் போர்ச் சருக்கம்.

"கோயி லாளுடைய மைக்கொண்டலார்கண் துயில்
பாயலாய் வாழநீ பாக்கியம் செய்ததென்
தீயலா துவமை வேறில்லெனத் தீயநின்
வாயெலாம் நஞ்சுகால் வாளெயிற் றுரகமே"

பாண்டவர், அன்றுகாலைத் துயிலுணர்ந்து வழக்கப் படியே கண்ணபிரா னடிபணிந்து, ஸ்நானனுஷ்டானதிகளை யும், ஆகார நியமங்களையும் முடித்துக்கொண்டு, போர்க்களம் குறுகினர். "இன்றைக்கு வ்யூகத்தை மாற்றி யமைத்தல் வேண்டு"மென்ற ஸ்ரீகண்ணபிரானுடைய ஆணையின்படியே, சேனையைத் துருபத குமாரனாகிய திட்டத்துய்மன் மகர வியூக மாக வகுத்தனன். நாகக்கொடியுடைய நாதிபன் படைக ளும் போர்க்களம் வந்துற்றன. கௌரவர் படை கரிஞ்ச வியூகமாக இன்று நின்றது. இருதிறப் படைகளும் போர் புரிந்து நின்றன. "இன்று வீமனுடன், நேர் நின்று விற்போர் புரிகின்றே"னென்று சொல்லிக்கொண்டு, வில்லாசிரியனாகிய துரோணன், தனது நால்வகைப் படைகளையும் நடத்திக் கொண்டு, வீமனைச் சூழ்ந்துகொண்டனன். வில்லுக்கு உயர் வாகப் புவனி சொல்லும் புகழுடைய தனது ஆசிரியனே, இன்று விற்போரைத் தன்னுடன் நடத்த வெண்ணிவந்தமை யுணர்ந்து, களித்து, மனத்துள் இருவர்க்கும் பகைமை யின் மையினால், வீமன், ஆசிரியனைத் தன்மனமார வணங்கித் துதித்திட்டுப் பின், வில்லிற் கணைகளைப் பூட்டிப் பூசுரன்மீது எறிந்தான். கூடவந்த நிருபர்களையும் அவரது சேனைகளை யும், சிறிதுநாழிகையிற் புறமுதுகிட் டோடும்படியாகவும் வேறு பல கணைகளான் மோதினான் வீமசேனன். துரோண ரும் படைகளும் துணை மன்னவர்களும் அமர்தொலைந் திளைத்

திருப்பதை யுணர்ந்து சல்லியன் வீமனெதிரே யோடிவந்து நின்று போர்புரிந்தான். "ஆஹா! அப்படியா!! மத்திரத் தவனு!!! வா நீ; என்னுடன் போரியற்றவல்லையோ? சிறுவருடன் நின்று, அவரை யதர்மத்தில் கொல்லச் சமர்த்துள்ளவனே யன்றிப் பெரிய வீரருடன் எதிர்நின்று தர்ம யுத்தம் செய்திடவல்லையோ?" என்று பரிகசித்து, அவனுடன் போர் செய்து, அவன் எய்த கணைகளை யெல்லாம் கணைகொண்டு அழித்துத் தன் புயபலத்தினுல், அந்தச் சல்லியன் ஏறிவந்துள்ள தேரினை யெடுத்துப் பூமியில் எற்றினுன். சல்லியன் தளர்ந்துபோய் விழுந்தமை கண்ட அரவக்கொடியோன், "வீமா! என்னுடன் இன்று நின்று வென்றுபோ பார்ப்போம்" என்று பேசித் தன் துணைத் தம்பியருடனும் தறுகணுளனுகிய துரியோதனச் சழக்கன் சமர் செய்யத் தொடங்கினுன்.

தம்பியரும் தானுமாக வீமனைச் சூழ்ந்து வில்லிற் பாணங்களைத் தொடுத்து ஆயிரமாயிரமாகப் பொழிந்தார். பல மன்னர்களும் துரியனுக்குத் துணையாக வந்து வீமனுடன் எதிர்த்தார்கள். சிங்கக்கொடியனுகிய வீமனும், தனது மைந்தரும் தம்பியரும் படைமன்னரும் தனக்குத் துணையாகப் புடைசூழ்ந்துவர அத் துரியனுடன் எதிர்த்தான். அவன் தம்பியரோடு இவன் தம்பிகளும் மைந்தர்களும் அந்த மன்னர்களுடன் இந்த மன்னர்களும் பொரும்படிவிட்டு, வீரனும் சூரனுமாக இருவரும் விற்போர் விளைத்தார்கள். அவனுமிவன் மார்பிற் பாணங்கொண்டு ரத்த சித்திரமெழுதினுன்; இவனும் அவன் மார்பினில் அப்படி யெழுதினுன். பூமி யெங்கும் நெருப்புப் பொறி பறக்கும் படியாகப் போர்செய்தனர். வாயுபகவானும் அக்கினி தேவ

னும் மலைந்ததைப்போ லிருந்தது; வில்லின் திறமும் மல்லின் திறமும் கதையின் திறமும் கத்தியின் திறமும் காட்டி நின்று சண்டை செய்தார்கள். முடிவில், வழக்கம்போலவே சர்ப்பக் கொடியோன் தளர்ந்து விலகினான்; பின்னர், அசுவன் தம்பி யர்களிடம் சென்று, வில்லின் கணைகள் தொடுத்துத் தாக்கி யவர்களையும் புறங்காட்டும்படியாகச் செய்தான். அதனால், யாவரும் தேர்கள் போய்ச் சிலைகள் போய்ப் புயவலிகள் போய் ஓடிவிட்டனர்.

இந்தச் சமயம், அங்கோர் புறத்தில், அபிமன்னனும் நூற்றுவரில் ஞானவானான விகர்ணனும் போர்செய்து கொண் டிருந்தார்கள். இருவரும் சிறுவர்களாயினும் போரிற் பெரியவர்களாகவே நின்று நன்று பொருதார்கள். வெகு நேரம் போர் உடன்றபின், அதிரத வீரனாகிய அபிமன்னு வுடன் பொருது நிற்க முடியாமல், விகர்ணன், தேர்முத லற் றுத் தோற்றுக் களைத்துப் போதலும், சித்திரசேன னென் பான் அபிமன்னனை வளைத்துக் கொண்டனன். மற்ற இளைஞ ரும் 'பகதத்தனும்கூட அவனுக்குத் துணைவந்து சேர்ந்தார் கள். இளைத்த விகர்ணனும் முளைத்து இவர்களொடுங் கூடிக் கொண்டான். அதிரதனாகலின், அபிமன்னன் இத்தனைபேர்க் கும் தான் ஒருவனே நின்று சமர்த்துடன் தாக்கிக்கொண் டிருந்தனன். அன்றைப்போர் அபிமன்னன் போராகவே முடிந்தது. பல மன்னர்களையும் சித்திரசேனன் முதலிய தம் பியரையும் பகதத்தனையும் முதுகிட் டோடும்படிச் செய்த அபிமன்னனது வில்திறத்தையும் ஆற்றலையும் அமருக்கிளைக் காத மனோபலத்தையும் கண்டு, அரவக் கொடியனும் அதி சயித்தான் என்றால், மற்றோரைப்பற்றிச் சொல்லல்வேண் டுமோ? போரில், பகைவரும் ஓடினார்கள். வானில் சூரியனும்

ஓடினான். சூரியன் ஓடி மேலைமலையில் ஒளித்துக் கொள்ள லும், எதிரிகளும் ஓடிப்பாடி வீட்டில் ஒளித்துக் கொண்டார் கள். கண்ணபிரானும் பாண்டவரும் வந்து, வில் அபிமனைப் புகழ்ந்து, உத்ஸாஹங்காட்டிப் பாசறைக்கு அழைத்துச் சென்றார்கள். அன்றிரவெல்லாம், இருதிறப் படைகளிலும் அபிமன்னனைப் புகழாதவ ரில்லையென்றே சொல்லலாம். நிய மங்களுடன் இரவைக் கழித்தனர்.

ஏழாம் போர்ச் சருக்கம்.

> "ஊலும் வேதமுந் தொடா நந்தகோனுட
> னசோதை கண்டுருக வாழ்வுகூர்
> தாணிமீது செங்கையு மாமுழந் தாளும்
> வைத்து வைத்தாடு மாயனார்
> விரவிநின்ற மாமருதினூடு தாமெத் தெனத்
> தவழ்ந் தருளி மீளவும்
> புரியும் நீள்கடைக் கண்ணும் வண்ணமும்
> போற்றுவார்கள் மெய்ப்புகை மேறுமே."

இருதிறத்தாரும் ஏழாம் நாட் போருக்கு அமர்க்களம் வந்து நின்றார்கள். பாண்டவர் சேனை ஸர்ப்ப வியூகத்திலும், கௌரவர் சேனை சகட வியூகத்திலும் நின்று அமர் மலைய ஆரம்பித்தன. வீமன் மைந்தனாகிய கடோற்கசக்காளை யின்று அமரில் வீரத்துடன் தோன்றி நின்றான். வீம சேனன், தன்னுடன் எதிர்த்து நின்ற சல்லியனும் சகுனியும் துணை மன்னர்களும் பயந்தோடும்படியாகப் போர்க் களத் தெற்றினான். வில் விஜயனும் வீடுமப்பெரியனும் போர் குறித்து நின்றெதிர்த்துப் பொருதனர். இருவரும், தமது

இருசேனைகளையும் பரஸ்பரம் மலைய விட்டுத் தாமிருவரும் தமது தமது தனி வில்லாண்மையைக் காட்டிப் போர் முறுக் கினர். ஒருவர் எய்த அம்பு ஒருவர் மேற்படாதபடி யிரு வரும் பாணங்களை யேவிப் பாணங்களைத் தடுத்துச் சமபல மும் சமவீரமும் சமவேகமும் சம சதுரமும் காட்டினார்கள். "இராம ராவண யுத்தம் போலும்" என்று சொல்லும்படி யிருந்தது. இவரது துணை மன்னரிற் பலரும் அவரது துணை மன்னரிற் பலரும் அழிந்தொழிந்தார்கள். யானைப் படை யில் எல்லா யானையும் புண்பட்டு நின்றன. தேர்ப்படையி லெல்லாத் தேர்களும் இலக்கழிந்து கலக்க முற்றன. குதி ரைப் படைக்குள் எக்குதிரைகளும் தலையிழந்தன. பாகர் களுமப்படியே. இங்ஙனம் இருவரும் சபலங் கொண்டு தோல்வி காணு வண்ணம் சமர்க்களம் சமகளமாக இருந்த தைக் கண்டு வெறுத்து, "இனி இந்தப் போர் போதரும்; நாளை நல்ல சந்தப் போர்கொண்டு சொந்தப் போர்புரியுங்கள்" என்று சொல்வான்போல இரவி மேற்கடலில் மறைந்தான்.

எட்டாம் போர்ச் சருக்கம்.

"பூத்த நாமியங் தாமரைப் பூவில்வந்து பல் பூதமுஞ்
சேர்த்த நான்முகப் புனிதனும் முனிவர் யாவருந் தேவரும்
எத்த நாலுவேதங்களும் தேடநின்ற தாளெம் பிரான்
பார்த்தன் மாமணித் தேர்விடும் பாகனை தெப்பான்மையே."

அனுட்டானம் முடித்து அமர்க் களத்துற்றார்கள் இரு திறப் படைஞரும். "நேற்று இருபடைக்கும் வெற்றி தோல்வி காணவிடினும், சேனைகள் மிகத் தளர்ந்துபோயிருக் கின்றன: அது தீர இன்றைப் போரில், எதிரிகளை வென்று

வெற்றி பெறுவாம்'' என வெண்ணிப் போலும் தரும ராசன் சமர்க்களத்துத் தோன்றினன். வீடுமர் சேனையைத் தூசி வியூகமாக வகுத்து நின்றார்: திட்டத் துய்மன் தன் சேனையைச் சகட வியூகமாக வகுத்து நின்றனன். தனது துணைவரையே துணைவராகக் கொண்டு, வலம்புரி மாலை யணிந்த மன்னனாகிய துரியன், தனக்கு லக்ஷ்யமாக என்றும் போரில் எதிர்த்து வந்து அழிவு செய்யும் வீரனாகிய வீமனையே சூழ்ந்து கொண்டு பல மன்னருந் துணை நிற்கக் கடுஞ்சமர் செய்து நின்றான்.

தம்பிமாருந் தானுமாக வந்து துணிவுடன் எதிர்த்து நிற்கும் துரியன் மனம் ஒடியும்படியாக இன்றைக்கு அவன் தம்பிகளில் எட்டுபேருக்காவது சுவர்க்கலோக பதவியை யளித்தல் வேண்டுமென்று சிந்தித்துக்கொண்டே வீமன் கோபித்தெதிர்நின்று கடுங்கணை பலவற்றை யேவி அவர் வலிகெட்டழியும்படிச் சோனைபோலும் தூவிக்கொண்டே யிருந்தான். துரியன் தம்பிகளாகிய சுந்தரன் விசாலாக்ஷன் வீரவாசி பௌதுண்டன் மகோதரன் மாகபிந்து அபயன் ஆதித்தகேது என்னும் எட்டுப்பேரும், வீமனது சரங்களுக் காற்றமாட்டாமல், போர்க்களத்தி லுருண்டு போயினர். தேருடனும் வில்லுடனும் பேருடனும் பெருமையுடனும் தம்பியர் எண்மர் அழிந்திடக் கண்டு மயங்கிய காந்தாரி மூத்தமகன், குருகுலக் கிழவனாகிய பீஷ்மனைச் சேர்ந்து துன்பமுழன்று சொல்லுகின்றான்.

பீஷ்மனும் துரியனும்

''பிதாமகரே! இப்படி யொவ்வொருநாளும் நம்படைதான் விசேஷமாக மாய்ந்து போகின்றன. இன்றைப் போர்

ஆரம்பித்தவுடனே, வாயுமைந்தன் வீமசேனன், என் தம்பியர் எட்டுப்பேரை யிரும்போரில் உயிரழித்தனனே! என்ன செய்வேன்! முதல்நாட் போரில் ஒரு சிறு வெற்றிபெற்றேமேயன்றி, பிற்றைப் போர்களில், யாதும் வெற்றிபெறாதிருப்பதுடன், தம்பியரிற் பதின்மூவர் மாளவும் தவமழிந்து போயினதே'' என்று புலம்பினான். "குருகுலத் தலைவராகிய நீர் சேனைத் தலைமை வகித்தால், எனக்கு வெற்றியன்றி வேறிராது என்று எண்ணிக் களித்த என் மனம் புண்ணாகும் படியாயதே'' என்று புலம்பும் பேரனைப் பார்த்துப் பீஷ்மர் கூறுகின்றார்:

"துரியோதனா! வருத்தமுறாதே!! போர் புரிவதென்பது எதிரிகளைக்கொன்று தான்மாத்திரம் சாகாதுயிருடன் வாழ்வதற்குத்தான் என்று யாரேனும் கூறுவார்களா? பாணங்களாலும் வேல்களாலும் வாள்களாலும் பகைவர்களை யழிப்பதும், தமது படையுடன் தாமும் அழிவதும் கருதித் தான் போர் குறித்தல் க்ஷத்திரியர் கடனாகும்.

"இருந்தனம் படைத்த மாக்கள் இன்பமும் அறனும் அஞ்சா
விருந்தெதிர் சிறிதும் அஞ்சார் மேம்பட வாழும் இல்லார்
பொருந்திய இறப்பை அஞ்சார் போதம்மெய் யுணர்ந்த மாந்தர்
அருந்தவ முனிவர் அஞ்சார் அரசரும் அடுபோர் அஞ்சார்."

பணம் படைத்த பேர்கள் தர்மத்துக்கும் சுகானுபவத்துக்கும் பயப்படமாட்டார்கள்; நற்குடியிற் பிறந்த இல்லறத்தோர் எதிர்வரும் விருந்து எத்தனையாயினும் பயப்படமாட்டார்கள்; போதங்கொண்டு தத்துவ முணர்ந்த மாந்தர்கள் மரணத்தை யஞ்சார்கள். அருந்தவத்துக்கு முனிவர்கள் பயப்படமாட்டார்கள்; அரசர்கள் போர்முனைக்கு அஞ்சமாட்டார்கள்.

இன்னமொன்று உனக்குச் சொல்லுகின்றேன் ; கேட்டுக் கொள்வாய் ; உனது இருசெவிகளிலும் அது ஏறமாட்டாது; என்றாலும், உனக்கு உணர்த்துகின்றேன் ; முன்னம் அரசாண்ட வேந்தன், முறைமையில் திறம்பினது கிடையாது ; நீயோ! முறைமை யென்பதற்கு மரியாதையே கொடாமல் வாழ்ந்தவன்; அன்று மன்னவர்கூடிய சபையில், மாசு ஏதுமில்லாத அருந்ததிக் கற்புடைய திரௌபதி தேவி, துணையற்று மானங்கெட வரும்சமயத்தில் அழுத கண்ணீரானது,— இந்தத் துன்பங்களை மாத்திரமல்ல - இன்னம் பலவிதத் துன்பத்தையும்தரக் காத்திருக்கின்றது; கர்ணனும் சகுனியும் துற்சாதனனும் உனக்குப் போதித்த அதர்மங்களெல்லாம்,— அதன்படி செய்த உன்னுடைய அதார்மிகச் செயல்களெல்லாம், இன்னம் பத்துநாட்கட்குள் பலனை யளித்துவிடப் போகின்றன; அதுவுமன்றி உனது மரியாதைகெட்ட தன்மையினால், அர்ச்சுனன் வில்லுடன் சமமாக நின்று போர் புரியும் வில்லுடைய விதுரனும், உனது கொடுஞ் சொல்லையும் கெடுஞ் செயலையும் பொறுக்காதவனாகித் தனது வில்லையுமொடித்துப் போர்முகத்து வாாமல் நின்றுவிட்டான்; உனக்குற்ற துணைவனும் உன்னைத் தீயவழிக்குத் துணையிருந்து தூண்டினவனும், 'எந்த வீரர் போனாலும் போகட்டும்; விதுரன் போனாலென்ன? பீஷ்மன் போனாலென்ன? நான் ஒருவனிருக்கின்றேன், உனக்குப் போரில் வெற்றி தருதற்கு' என்று தன் சிறப்பையே பேசும் அகங்கார வீரனும் உன்னுயிர் போன்றவனுமாகிய கர்ணனும் அதிரத னுலன்றிப் போருக்கு வருவதில்லை. போரில் முதிர்ந்த பயிற்சியுடைய விஜயனும் வீமனும் எதிரில் நிற்க, அவர்களை வெல்லத்தக்க சமபலம் படைத்தார் நம்திறத்தில் யாரிருக்கின்றார்கள்? நீயும் நானுமிருக்கின்றோம். வெற்றி நமக்குக் கிடைப்பது எப்படி?

மற்றும், தர்ம தேவதைக்குக் காப்பாளனாகிய தர்மனும் நமக்குப் பகையாக அங்கிருக்கின்றான்; எவராலும் தொழப்பெறும் அவதார மூர்த்தியாகிய அகடிதகடனா சாமர்த்தியமுடைய கண்ணபிரானும் நமக்குப் பகையாகி, நீ செய்த தீமை காரணமாக உன்னையும் உன் துணைவரையும் அழிப்பதற்குரிய வைரத்துடன் அங்கே யிருந்து யுக்தியும் புத்தியும் சொல்லிக்கொண்டிருக்கிறார். இங்கு வலியற்ற நாம் கூட்டங்கூடி யிருந்தென்னபயன்? இறப்பதல்லால் வேறுண்டோ? நீ கேட்டபடியால், இருப்பினையும் நடப்பினையும் உணர்த்தினேன்; போர்முனையில் ஒரு பக்கமே வெற்றி நிலைத்திடும் என்று சொல்வதற்கில்லை; இன்றே நாளையே நாமும் வெற்றி பெறலாம்; கவலைப்படாதே! போர்க்களத்தின் நடுவில் எதிரிகள் போர்குறித்து நிற்கும்போது, நாம் தர்மோபதேசத்தில் நாழிகையைக் கடத்தினால், பகைவர் ஏசுவார்; படைவீரரும் பலம் குன்றுவர்; சேனையும் அழியும்; ஆகையால், போர்முனைக்குப் போ!'' என்று சொல்லிவிட்டுத் தாமும் தேரேறினார்.

கடோற்கசன் அன்று பல வுருவுடன் மாயமாக வந்து பொருது மாய்த்ததுபோல, இன்னும், பலமாய உருவங்களைப் படைத்துக்கொண்டு, ஒரு பக்கம் நின்று கௌரவர் படைகளை யழித்துக்கொண் டிருக்கிறான். உரகக்கன்னி உலூபகியின் வயிற்றில் பிறந்த அர்ச்சுனன் மகனாகிய இராவான், களப்பலியாகத் தன் தசைகளை யறுத்துக்கொடுத்தும், கண்ணன் அளித்த வரபலத்தால் உருவங்கொண் டிருந்தவனாகலின், அவனும் ஒரு புடை நின்று எதிரிகளாகிய கௌரவப் படைகளை மோதி யழித்துக் கொண்டிருக்கிறான். “இப்பகல் முடியுமுன்னே யாரையும் முடித்துவிடுகிறே'' னென்று பகைவர் கூட்டத்தை வேரறுத்துக்கொண் டிருக்கும் வீமனுடன்

போர்புரிதற்காக வந்தான். அலம்பசன் என்னும் அரக்கன், அவனைப் பொருது அழித்தற்காகப் பெரியப்பனுக்குத் துணையாக அர்ச்சுனன் மகனாகிய அந்த இராவான் வந்து நின்றான். அரக்கனுக்கும் அரவனுக்கும் பெரும்போர் விளைந்துகொண்டிருக்கு மெல்லையில், அராவானுடன் அமர் செய்ய ஆற்றாதவனாகி யரக்கன் ஓய்ந்து போனான். அவன் களைத்து நீங்கினானென்று, அரவான் வேறு படையொடும் பொருதுகொண்டிருக்கும் சமயம் பார்த்து, அலம்பசன் களைப்பு நீங்கி யோடிவந்து, வாளோச்சி யரவானைத் துண்ட மாக்கினான். முன்னரே களப்பலிக்குத் தன் உறுப்புக்களை யெல்லாம் குறைத்துக்கொடுத்த தேகமுடையவனாகையினால், மேலும் வாள்படத் தாங்காமல், மைந்தன் அராவான் மாய்ந்து பூமியில் வீழ்ந்தான். “அர்ச்சுனன் மகனை யரக்கர்கோன் கொன்றுவிட்டான்” என்னும் வார்த்தை பேரொலியாகக் கிளம்பிற்று. கௌரவர் சிறிது சந்தோஷம் பெற்றார்கள். என்றாலும், “அராவான் அன்று செய்த போரினை யாவரும் இதுவரையிற் செய்யவில்லை” யெனும் ஒலியும் உடனெ ழுந்தது.

பாஞ்சால நாட்டவரும் துரோண அசுவத்தாமர்களும் ஒருபுடை நின்று போர்புரிந்துகொண்டிருந்தார்கள். துணைவ னாகிய அராவான் இறந்துபட்டான் எனும் வார்த்தையைக் கேட்டதும், அபிமன்னன் வெகுண்டோடிப் பகைவரைச் சாடி நின்றான். துரியன் படை மன்னவர் பலர் அபிமன்னு வின் கடுங்கோபக் கணைகளால் மாண்டுபோயினர். களத்தில் தம்பி மைந்தன் மடிந்தான் எனக் கேட்ட வாயு மைந்தனாகிய வீமன், வெகுண்டு, சிங்கம்போற் கர்ஜித்துக்கொண்டு வந் தான். வெகு கோபத்துடன் பீமன் வருகின்றானெனக் கண்டு துரியோதனன் பல தம்பியரைத் துணைகொண்டு

பீமன் எதிரே வந்து நின்றான். தம்பியரும் தானுமாகி நின்று ஒவ்வொருவர் ஒவ்வொரு பாணமாக ஏவிப் பீமனைப் பாணக்கோட்டைக்குள் நிறுத்தினார்கள். கண்டு வீமன் கைகொட்டிச் சிரித்து, "வாகுடைய மன்னாதி மன்னா! வந்து பொரும் ஒருமுறையாகிலும் என்னைத் தோற்கடித்துப் போனாயில்லை. நீ தனித்து வருகிறாயுமில்லை; தம்பியரைத் துணைகொண்டு வருகிறாய்; அவரைப் போர்முனையிற் பொருத விட்டுத் தப்பிப் பிழைத்து ஓடிவிடுகின்றாய்; இந்தத் தம்பியர் உள்ளவரையிலுந்தானே இப்படிச் செய்வாய்; இந்தா! இதோ பாணமெய்கிறேன்; இந்தக் கணைகளால், இப்போது ஏழுபேர் உன் தம்பிமார்கள் உருண்டு விழப்போகிறார்கள்; வில்லில் கணை தொடுக்கும் ஆற்றலுண்டானால் அவரை யழி யாமற் காப்பாற்றுவாய்!" என்று கூர்ங்கணைகள் பல எடுத் தெடுத்து, அந்த எழுவர் பேரிலும் பொழிந்துகொண்டே யிருந்தான். தாங்கள் விட்ட கணைகளையும் தனது மார்பிற் படாவண்ணம் அழித்துத் தங்களையும் அவன் வாக்கினால் வீரம் பேசி யழித்திட அம்பெய்யவும் தடுக்கிலாராய்த் தமையன் துணையும் பெறாதவராகி, ஒவ்வொருவராகத் தரையிற் சாய்ந்தார்கள். குண்டல போஜன் அனுத் யக்ஷன் தீர்க்கநயனன் திம்மபாகு குண்டலன் குண்ட தாரன் கனகத்துவஜன் என்னும் எழுவோரும் மாண் டொழிந்து போயினார்கள். தம்பியர்கள் ஏழுபேரும் வீழ்ந் திறந்தமை கண்டு மெய்குன்றி யிருந்த துரியோதன னைப்பார்த்து, "மண்டலாதிபதி! நீ செய்த தர்ம காரியங்க ளின் பலனை யிதுவரையிற் கண்டது போதுமென்று, இன்றே விண்ணுலகம் போகிறாயா? இல்லை; இன்னும் பாக்கிப் பலன் களையும் இன்னம் சிலநாட்களிற் பார்த்துவிட்டுப் போகின்றே னென்கிறாயா? இன்றுவரை கண்டது போதுமென்றால்,

இதோ உன் மேலும் கணைகள் ஏவுகின்றேன்; உன் தம்பியர் இருபதுபேர்களையும் பின் தொடர்ந்து சுவர்க்கலோகம் போ! இல்லை; இன்னும் சில நாட்கள் இருக்கப் படுவையாயின், அதோ அதுதான்வழி யுன்பாசறைக்கு; அப்படியே தலை குனிந்து போ; நாளைக்கு வந்து மறுபடியும் போர்க்களத்தை யுன் புண்ணியக் கண்கள் கொண்டு கடாக்ஷிக்கலாம்'' என்று வீமன் பரிகசித்தான். எல்லாவற்றையும் கேட்டும் கேளாத வன்போல் துரியோதனன் தலைகுனிந்து திரும்பிப்போனான்.

"இங்ஙனம் மறமன்னவன், சேனையும் தம்பியரும் களத்திற்பட மானமிழந்து போகின்றான்; மற்றார் யாரும் பார்த்து நகை செய்யாதபடிக் தன்பாடி வீடு மன்னன் போய்ச் சேரட்டும்'' என்பான்போல அருக்கனாகிய சூரிய தேவனும் மேல்பால் திசைசேர்ந்து மறைந்துபோனான். பாண் டவர் முழு வெற்றியுடன் இன்று சென்றார் என்றாலும், இராவானை யிழந்த நினைவுமாத்திரம் நீங்காதிருந்தனர். "முன் னரே களப்பலிக்குயிர் கொடுத்தவனாகலின், அவனழிவைப் பற்றி நாம் துக்கிக்க நியாயமில்லை; களப்பலியில் அங்கமழிந்த வன், தனது குறைந்த சரீரத்துடன் இன்றெல்லாம் நன்றா கப் பொருதான்'' என்று நாம் களித்திட நியாயமுண்டு என்று கண்ணபிரான் தேற்றிட யாவரும் தேறி யிரவைக் கழித்தார்கள்.

ஒன்பதாம் போர்ச் சருக்கம்.

"போராறு மூழ்கி மறைநூல் பிதற்றி மிடறும் பிளந்து பிறவித்
தூராறு மாறு நினையாமல் உங்கள் தொழிலே புரிந்த சமயர்
ஓராறு பேத சமயங்களுக்கும் உருவாகி நின்ற வொருவன்
ஈராறு நாமமுரை செய்துமண் கொடிடுவார்கள் காணு மிமையோர்."

போரில் உடைந்துபோய்த் தம்பியர்களைக் களத்தி விழந்த துக்கத்துடன் பாடிசென்ற அரவக்கொடியோன், சகுனி மாமனோடும் தம்பி துற்சாதனனொடுங் கருதி யோசித்துக் கன்னனை யழைத்துவரச் செய்தான்; அவனும் வந்து சேர்ந்து தம்பியர்கள் இறந்துபோன துக்கம் விசாரித்திருந்தான். அப்போது மன்னன் பகர்கின்றான்:— "என் இளையோர்கள் வில்லெடுத்துப் போர்புரிந்தா லென்னபயன்? வீமன் முன்னால் நிற்கமாட்டாமல் ஒழிந்து போனார்கள். சேனாபதியாக நிற்கும் எம்பாட்டனார் வில்லெடுத்து நின்றும் பயனில்லை; வில்லாசிரியன் வில்லெடுத்து நின்றாலும் யாதும் பயனில்லை; நீ வில்லெடுத்துப் போர்க்களத்தில் நின்றால்தான் நாங்கள் உய்யமுடியும்" என்று சொன்னான்.

"நண்ப! மன்னர்பிரானே!! அன்று உனது பாட்டன் உரைத்த உரையை நீ மறந்து விட்டனைகொல்? அவர் கையில் வில்லிருக்கின்றது; ஏறிச் செல்லத் தேர் இருக்கின்றது; அம்புப் புட்டிவில் பாணங்கள் விசேஷமாக இருக்கின்றன; நாளையவரே, நீங்கள் உலகாளவும் அவர் வானமாளவும் செய்விப்பர்; பாண்டவரெதிரே நின்று பாணம் எய்வதற்கஞ்சி யவற்பூமியில் விழுவாரானால், இருள் விடிவதற்கு முன்னம் நான் வந்து பொருது உனக்கு வெற்றியை வாங்கித் தருவேன்; அஞ்ச வேண்டாம்; இது பொய்யான வார்த்தையல்ல" என்று சொல்லிக் கர்ணன் விடைபெற்றுப்போனான். உடனே, மன்னன், தம்பியை யழைத்து, "இச்செய்தியைப் பீஷ்மருக்குச் சொல்லிவா" என அனுப்பினான்; துற்சாதனன் போய்ப் பீஷ்மருக் கிதை யுரைத்திட்டான்.

கேட்டார் பீஷ்மர்; புன்னகை செய்தார்; "வீரவார்த்தை பேசுதலில் என்ன இருக்கின்றது? விஜயனை வெற்றி கொள்

ளல் முடியாத காரியம்; நான், அமர்க்களத்தில் உரைத்த உண்மை நாளை நிறைவேறிடும். ஒரு நாள் பொறுங்கள்; உம்மையிவ்வுலகாளுவிக்க வரப்பட்டவர்கள், அடுத்த நாள் தொடங்கியமர் செய்து பகைவரை மடிவித்து விடுவார்கள்; பின்னர்க் குரு நாட்டையும் மற்ற நாடுகளையும் பெற்று உங்கள் பந்துக்களுடன் உறவாடிப் பெரு நாள் அரசாண்டு வாழ்ந்திடலாம்'' என்று பரிகாச விடை கொடுத்தனுப்பினர். பிறகு நித்திரை செய்தெழுந்து காலைக் கடன் முடித்துக் கொண்டு, போர் மன்னர்கள் சூழ்ந்து வரப் போர்க்களம் புகுந்தார். பெருங் கோஷத்தால், ஆகாயம் துகள்களால் மறைபட்டது. அமர்க் களத்தில், அரவக் கொடியோனை நடுவே நிறுத்தி, முறையாகப் பாகங்களில் ஒரு கோடியாசரைப் பகதத்தனுடன் நிறுத்தி, அலம்பசன் என்னும் அரக்கனை முன்னணியில் நிறுவிச் சேனையை ஸர்வ தோபத்திர வியூகமாக வகுத்துப் பெரும் போர் குறித்து நின்றார்.

நேற்று, அவ்வரக்கன் அலம்பசன், தன் தம்பி மகனைக் கொன்றனெனக் கோபம் மிகுந்து, அரவக்கொடியோன் தம்பியர்கள் எண்மரோடு எழுவரை வானுலகேற்றி மகிழ்ந்த வீமனும் விஜயனும் மற்றைத் தம்பியரும் அரசனுமாகத் துணை மன்னருடன் போர்க்களம் புகுந்தார்கள். திட்டத்துய்மன் சேனை பகுளத்தை யசல வியூகமாக வகுத்திட்டான். போர் ஆரம்பமாயிற்று; வீமனும் அலம்பசனும் மலைந்து பொருதார்கள். வில்லெடுத்தபோரில் வீமனுடன் எதிர்க்கமுடியாத அலம்பசன், உடனே வாளைக் கையிலெடுத்து, உருத்துக் கர்ஜித்தான்; வீமனும் வாளெடுத்திட, இருவர்க்கும் வாட் போரே மிகுந்து நடந்தது. கத்தியும் கேடகமுங் கொண்டு, இருவரும் சலிக்காமற் பொருதாரானும், வீமன் எறியும்

வாளினுல் பல வெட்டுக்கள் பட்டு உதிர வெள்ளம் மிக நின்ற அலம்பசன், அந்த வாட்போரை நிறுத்தி, மற்போர் தொடுக்கும் பொருட்டு வீமனுடைய கையைப் பற்றினுன். "ஓஹோ! இந்தப் போரில் வெற்றி கொளலாமென்றிருக்கின்றனே போலும்" என்று நகை பேசி, யவ்வரக்கனுடன் வீமன், தனக்கே யுரியதாகிய மற்போர் புரிந்தான். இருவரும் குத்தி மோதித் தாக்கியிடித்து அடித்து, எறிந்து பற்றியிங்ஙனம் உக்ரமாகச் சண்டை செய்தனர்.

"மற்போர் போதரும்; இனி விற்போர் தொடுப்போம்" என்று அரக்கன், தேரிலேறி வில்லைக் கையிலெடுத்துக் கொண்டான். வீமனும் தேர் மீதேறி வில்லில் நாணேற்றி வளைத்து நின்ருன். இருவரும் கணைகளைத் தொடுத்தார்கள். இருவரும் சலிக்காமல், இந்த விற்போரில் நீண்ட நாழிகை நின்றிருக்கும் தன்மைகண்ட மன்னர்கள், இரண்டு திறச் சேனைகட்கும் இவ்விருவரும் சமஜோடி யென்று வியந்து புகழ்ந்தார்கள். அரக்கன் கீழிறங்கி மற்போர்க்கிழுக்க, இருவரும் மற்போர் புரிந்து வரும்போது, அவ்வரக்கன் திடீரென ஒரு கற்சிலையை யெடுத்து, வீமன்பேரி லெறிந்தான். சமீபத்திலிருந்த விஜயன் மகன் அபிமன்னன் வில்விற் கணைகளைத் தொடுத்து அக்கற்சிலை சிதறுமாறு அடித்து, இனி இவ்வரக்கனைக் கொன்றிடுதலே மேலெனக் கருதி, ஒரு வட்டவேலை வாங்கி யவன் மார்பைக்குறித்து எறிந்திட்டான். வேல் மார்பிற்பட்டு அவன் வீழு முன்னே, இருபாலும் அரக்கர் சேனைவந்து சூழ்ந்துகொண்டது. இதுகண்ட வீமன், கதையைக் கையிலேந்தி அவ்வரக்கர் படையை மோதினுன். "முற்பகலில், தம்பியைக்கொன்ற அரக்கனைப் பிற்பகலில் அபிமன் அழித்து விட்டான்" என்று புகழ்ந்தார்கள்.

மற்றும் வந்த காசியர் சேதியர் கலிங்கர் மாளவர் முதலிய துணை மன்னர் படைவீரர் பதினுயிரவர் வந்தவரை விஜயன் விற்பணிகொண்டுப் புடைத்தழித்தான்.

இப்படி யொருபக்கம் விஜயனும் ஒரு பக்கம் வீமனுமாக நின்று, தமது கௌரவப் படைகளை யழிப்பதைக் கண்டு பொருது நின்ற பீஷ்மர், கடுங்கோபங்கொண்டு பாண்டவர் படைமேல் வருதல் நோக்கித் திட்டத்துய்மன் சிகண்டி முதலிய பாஞ்சாலர் எதிரே தோன்றி, பீஷ்மரையும் சூரியன் தம்பியர்களையும் வளைத்துக்கொண்டு விற்போர் செய்தார்கள். கடுங்கோபத்துடன் சிலைக் கணைகளை வாரி வாரிப் பீஷ்மன் பொழிந்துகொண் டிருக்கப், பாஞ்சாலப் படைவீரர்கள் பலர் மாண்டு போனார்கள். உடனே சிகண்டிவந்து பீஷ்மன் எதிரே நின்று, “நீயும் விண்ணுலகத்துக் கேகும்படியாக உன்மேற் பாணமெய்து பொரக்கூடிய சிகண்டி இதோ வந்திருக்கின்றேன்” என்று சொல்லிக்கொண்டே பல பகழிகளைப் பீஷ்மன்பேரில் ஏவினன். பீஷ்மன் கலங்கி நின்றான். சிகண்டியின் கணைகள் வந்து தாக்கியும், எதிர்க்கணைகள் வந்து தாக்கியும், எதிர்க் கணைகள் எய்யாமல் நிற்கும் பாட்டன் நிலைமையைக் கண்டு அருகே நின்ற துற்சாதனன், வில்லிற் பகழிகளைப் பூட்டிச் சிகண்டியுடன் எதிர்த்து நின்றான். “இந்தப் பயலா எனக்கு இலக்காக நிற்கப் போகிறான்” என்று வீரம் பேசித் துற்சாதனன், சிகண்டி யேறி யிருந்த தேர் முதலியவற்றை யழித்து அவனை மலங்கச் செய்தான்.

தூரத்திநின்று இதனைப் பார்த்திருந்த பார்த்தன் ஓடி வந்து, துற்சாதனனையும் அவன் துணைப் படைகளையும் அம்புகளாற் சாடினன். துற்சாதனன் மறைந்தான். பல படைகள் மாண்டு வீழ்ந்தன. இதனை யுணர்ந்த சேனு

பதியாகிய பீஷ்மன் உருத்துத் தேர் செலுத்தி யோடி வரும் போது, விராட மன்னர்க் கிளையோனாகிய ஸதாநிகன் படைகளுடன் வந்து பீஷ்மனுடன் பொருது நின்றான். இருவர்க்கும் பலமான போர் நடந்தது. முடிவிற் கங்கை மகன், ஸதாநீகனைத் தலை துணித்துக் கொன்று வீழ்த்தினான். சூர்யாஸ்தமனமாயிற்று. முன்னொரு நாள் சிவேதனை யுயிரழித்தான். இற்றை நாள் ஸதாநீகனைக் கொன்றான்; இந்தப் பீஷ்மன்; மச்ச நாட்டார் நம் குலத்துக்கு எமன் போலும் என்றார் பல்லோரும். அவரவர் தத்தம் பாடி வீடு சேர்ந்தார்கள். விராடனுச்கு உபசாரம் கூறினார்கள். இராக் காலத்தாற்றும் நியமங்களாற்றி இருதிறத்தாரும் நித்திரை கழித்தெழுந்தார்கள். சூரியோதயமுமாயிற்று.

பத்தாம் போர்ச் சருக்கம்.

"வலியிலன்று தந்தை செற்ற மைந்தனுக்கு வந்தபேர்
நலிவெலா மகற்று நாமம் நாலிரண் டெழுத்துடன்
பொலியும் நாமமறைகள் சொன்ன பொருள் விளக்கு நாமம்முன்
கலியனெங்கள் மங்கையாதி கண்டு கொண்ட நாமமே."

பத்தாம் நாட் போராகிய இன்றைப் போர், இந்தப் பாரதப் போர்ச் சரிதத்துள் குறிப்பிடத்தக்க நாளாகும். இந்த நாள், குருகுலத் தலைமையும் குடும்பத் தலைமையும் சேனைத் தலைமையும் வகித்த வொரு பெரியாருடைய வீழ் நாளாகும்; மற்றும், பிரம சத்ய ச்ரேஷ்டராக நின்று, தமது பிதாவின் சிற்றின்ப சுகத்துக்காகவே, போகமும் பெரு வாழ்வும் தமக்கு வேண்டாமென அவையறியப் புவியறியத்திவியறிய அறை கூவிச் சபதமிட்டு, அந்த விரதத்தைப் பல துன்பங்கள்வந்து

தோன்றிய காலத்தும் கெடாது காத்துச் செலுத்திய ஒரு உத்தம க்ஷத்திரிய பிரமசரிய வீராது உருவம் மறையும் நாளாகும். ஒரு அழகிய ராஜ கன்னிகை தமது பிரமசரிய விரதத்தை கெடுத்திடப் பல வழிகளிலும் முயன்று, அது பலிக்கா தழியத்தவம் கிடந்து ஆணுருவம் பெற்றுத் தன்னைக் கொல்வதற் கென்று, எதிர்க்கட்சியிற் றோன்றியிருக்க, அவ்வுருவத்தின் பார்வை யம்பினலும் கை அம்பினலும் உயிர் துறந்த கண்ணிய புண்ணியருடைய காட்சி நீங்கும் நாளாகும்; அதாவது பீஷ்மர் போர்க் களத்தில் வீழ்ந்து, உத்தராயணம் தோன்றும் வரையம்புக் களத்திற் படுக்கை கொண்ட நாளாகும் என்பதாம்.

பாண்டவரும் கௌரவரும், அநுஷ்டானதிகளை முடித்துக்கொண்டு, தத்தம் பெருஞ் சேனையுடன் அமர்க்களம்புக்கனர். பாண்டவர் சேனை முந்திய நாள் வியூகமேவியூகமாக வகுத்துக் கொண்டு நின்றது. ஸர்வாலங்காரச் சேனதிபதி கோலத்துடன், வாயிலில் வந்து நின்ற மன்னர்களையும் அழைத்துக் கொண்ட பீஷ்மர், தமது சேனையையும் முன்னை நாள் வியூகங் கொண்ட வண்ணமே வகுத்து நின்றனர். கண்ணபிரான், அர்ச்சுனனைப் பார்த்து, "இன்று கங்கை மைந்தன் பீஷ்மனுக்கு வாள் உதவும் நாள்; இதனை மறந்து விடாதே" என்று நினைவுறுத்தினர். துர்நிமித்தங்கள் பல தோன்றியவாயினும், பீஷ்மர், அவற்றைத் தமக்கு நன்னிமித்தங்களாகவே கருதிப் போரை யாரம்பித்திட உத்தா வளித்தனர். துருபதேயரும் மகத நாடரும் குலிங்க சோனகர்களும் கர்னடகரும் சிங்களரும் கடாரப்பர் கௌசலர்களுமாகிய தருமன் சேனை முதுகிடும்படியாகப் பாணம் எய்து வெய்துறுக்கி நின்றார். இன்றைப் போரில் ஆரம்பத்திலே பீஷ்மர், இப்படி வீரம் காட்டுகின்றாரே என்று யாவ

ரும் பிரமித்தார்கள். மன்னர் பலரும் அவர் தம் சேனைகளும் பட்டொழிந்தனர். மிகுந்த மன்னர்கள் பலமழிந்து ஓட நினைத்தலை யுணர்ந்த விஜயன், விருத்தனுக்கு எதிரே வந்து நின்றான். பீஷ்மனைப் போர்க்களத்திடை மடித்திடும் பலங்கொண்டு, விஜயன் உருத்துவந்தமை கண்ட துரியோதனன், அவர்க்குத் துணையாகப் பல வீரர்களையும் ஏவினான். கிருபன் துரோணன் அசுவத்தாமன் ஜயத்திரதன் சகுனி சல்லியன் பகதத்தன் மற்றும் தம்பியராமிவர்களை யனுப்பினான். இத்தனை வீரர்களும் தத்தம் படைகளுடனும் சேனாபதி பக்கம் நின்று விஜயனை வளைத்துக்கொண்டார்கள். சாரத்யம் செய்வதிற் சிறிதும் பழக்கம் பெறாத உத்தரகுமாரனைச் சாரதியாகக்கொண்டு, நிரைமீட்சிக் காலத்தில் பல வீரர்க்கும் தானொருவனே நின்று, தனது தேரைச் சுழற்றச் செய்து, இருகரங்களாலும் பாணங்களை யேவிப் பகைவரைத் தூக்கியடித்த வீரனாகிய விஜயனுக்குத் தேர்செலுத்தலில் திறமையுடைய கண்ணபிரானைச் சாரதியாகக்கொண்ட இச்சமயம் தளர்ச்சி யெய்துமோ? இல்லை; வெகுவீரம் காட்டி தேரைச் சுழற்றச் செய்து, இருகரங்களாலும் கணைகளைப் பொழிந்து சூழ்ந்து நின்று பகைவர் தொடுத்த பாணங்களை யெல்லாம் தடுத்து, மற்றும், அவர் மேலும் பாணவருஷங்களைக் கொட்டினான். இந்த சமயத்தில், மாருத பலமுடைய மாருதியாகிய வீமனும் கதைகொண்டு, பகைவர் சேனையின் நடுவண் புகுந்து, நொறுக்க ஆரம்பித்தான். தேரை யெடுத்தெறிவதும், யானைகளை வீழ்த்துவதும் குதிரைகளைச் சாடுவதுமாகப் பகைவர் சேனைகளைச் சிதற அடித்துக்கொண்டிருந்தான். வீமற்கும் விஜயற்கும் எதிர்நிற்க முடியாதவராகிப் படைகள் ஓடத் தலைப்படுதலைக் கண்டு, துரியோதனன் பொங்கி, அர்ச்சுனனுக்குச் சமானமான வில்வீரர் ஆயிரவரை யேவினான்.

அவர்கள், சரமழைகளைச் சிந்தினார்கள். அம் மழைத்துளிக ளைச் சண்டமாருதம்போல் வாயுக் கணைகள் கொண்டு விஜ யன் தடுத்தனன்.

"பாண்டவர் ஐவரையும் இன்றைப்போரில் ஒழித்திடு வோம்" என்று வந்த துற்சாதனன் முதலிய மன்னன் தம்பி யர்கள் வீமற்கும் விஜயற்கும் சிறிதேனும் நின்று எதிர் கொடுக்க முடியாமல் தளர்ந்து நிற்றலைக் கண்ட பீஷ்மர், களிப்புக்கொண்டனராயினும், தமது தொழிலை யுன்னினவ ராகலின், அவ்விருவர் மீதும் விடாமல் கணைபொழிந்து கொண்டே யிருந்தார். தக்க வீரர்கள் பலரும் ஓரிடத்திற் கூடி எதிரிகளாக நின்று பொருவார்களாயின், அந்தப் போர்க் களத்தை யெடுத்துக் கூறுதல் சாத்தியமாகுமோ? எத்தனை முடித்தலைகள் எத்தனை புயக்கிரிகள் எத்தனை கரங்கள் எத் தனை யுடற்சுமைகள் எத்தனை யுறுப்பினங்கள் எத்தனை கொடிக்குடர்கள் எத்தனை நிரைத்தடிகள் எத்தனை நரம்பு வகைகள் எத்தனை யெலும்புகள் எத்தனை மணித்தொடைகள் எத்தனை மலர்க்கழல்கள் களத்திடை வீழ்ந்தன என்போம். அத்தனையும் மலைகளாகக் குவிந்திருந்தன. சோமகர்கள் மச்சர்கள் துளுவர்கள் துருபதர்கள் குலிங்கர்கள் சேரர்கள் செஞ்சியர்களிவர்களில் மாமகுட வர்த்தனர்களும் பட்ட வர்த்தனர்களும் மண்டலீகர்களும் பல்லோர் மாண்டொழிந் தார்கள்.

பாண்டவ சேனாபலத்துக்கே இன்று போழிவு என்னும் படிப் பீஷ்மர் செய்துள்ள யுத்த விபரீதத்தைப் பார்த்துப் பரந்தாமன், "பார்த்தா! பார்த்தனையா!! பாட்டனார் பலத்தை!!! அவியும் விளக்குப் படர்ந்தெரிந்து ஒளிவிஞ்சிக் காட்டுவதுபோலப், பீஷ்மர், இன்று தமது முழு பலமும்

காட்டி மலைகிறார். இத்துணை நாளும் இப்படிக் காட்டி யிருப்பாராயின், பாண்டவச் சேனைகள் பண்டே யொழிந் திருத்தல் கூடும். இனி யிவரை யிக்களத்தில் நிறுத்தி வைத் தல் அழகாகமாட்டாது. நமக்கு வெற்றியும் தாாது பீஷ்ம ரைக் கண்டவுடன், உனது வீரமும் குன்றி நீ மயங்கி நிற் பதை நான் பலமுறையும் கண்டிருக்கின்றேன். இத் துணை வீரமும் சமர்த்தும் படைத்திருந்தும், உனக்கு உற வினர்களிடத்துப் போர்முகத்தும் அன்பும் கோழை நெஞ் சும் தோன்றுவதால், வீரம் அழிந்தே போகிறாய் என்பது எனது அபிப்பிராயம். போர்புரிவதிற் பந்துக்களெனப் பார்ப் பாருண்டோ ?" என்று கூறியவனுக்கு உத்ஸாகம் மூட்டிப் பல கணைகளை யேவும்படியாகச் செய்து, பெரும்போர் விளைத் துக்கொண் டிருக்கும்போது, சிகண்டியை யழைத்துப் பீஷ் மன் கண்ணெதிரில் நிறுத்தினர்.

"காதிவெங்கொடும் பகழிமோதுதிண் சிகண்டிதலை
 காணலும் குனிந்து நகையா
ஆதியம்பை யின்று பகை மீளவந்த தென்றுதன
 தாயுதம் துறந்து விரை தேர்
மீது கங்கை மைந்தன் ஒரு தான்வெறுங்கை நின்றளவில்
 மேடைந்து சென்று பொருதுச்
சாதனஞ் சரங்கள்பல தூவினன் பரிந்தெதிரி
 சாபமுந் துணிந்து விழவே"

சிகண்டியின் தலையைக் கண்டவுடனே, பீஷ்மர், ஆதியம்பை யென்னும் பெண்ணின் பகை மீளவும் வந்துவிட்டதென்று, குனிந்து நகைத்துத் தமது ஆயுதமும் துறந்து, தேர்மீது வெறுங்கையுடன் நின்றுவிட்டார்; இந்தச் சமயம்பார்த்து, உலகை யழிக்கவந் தருளிய கண்ணபிரான், தூண்டிடத்

தள்ளமாட்டாத அர்ச்சுனன், மனங்கொள்ளாமலே, கணை தொடுத்து எதிரியின் வில்லைத் துணித்திட்டான்.

இந்த விந்தையை யுலகோர்க்குக் காட்டிடுமாறு சிகண்டி சிறிது நேரம் அப்புறம் விலகி நின்றிடவே, கண்கள் திறந்து தலை நிமிர்ந்து பார்த்த கங்கைமகனாகிய பீஷ்மர், மறுபடியும் வேறொரு வில்லெடுத்துச் சரங்கள் தொடுத்துப் போர் செய்யத் தொடங்கி விட்டனர். பாணங்கள் பட்டமையால், விஜயனது கண்களும், சாரதியாகிய கண்ணனது கண்ணிணைகளும் கோபத்தாற் சிவந்து போய் விட்டன. விலகி நின்ற சிகண்டியை மறுபடியும் அழைத்து வந்து எதிரே நிறுத்தி, அவனது கை வில்லினாற் பாணங்களெய்யச் செய்து, விஜயன் சரங்கள் பெய்தான். சிகண்டி பாணமொன்றும் நம்மைச் செய்திடாது, விஜயன் கணைகளே உயிர் வாங்கிடுமென்று, பீஷ்மர், அருகு நின்ற மன்னன் தம்பியர்களுடன், இங்ஙனம் கூறினர்:—“அர்ச்சுனனது பாணங்களினால் நாம் நொந்திருக்கின்றோம்; போரை நாம் நிறுத்தி விட்டோம்; நீங்கள்போய் நும் தமையனுடன் துணை நின்று யுத்தம் செய்யுங்கள்; இவையல்லாமல் இனி யென்ன செய்தாலும் ஆகக்கூடியது ஒன்றுமில்லை; எமது தனியாண்மை யிதனுடன்போய் விட்டது” என்று சொல்லி விட்டுப் பரந்தாமனைப் பார்த்த வண்ணமே யவன் நாமங்களை நவின்று நாடி நெஞ்சழிந்து, நாக்குழன்று, மேனியில் ஓடுகின்ற அம்பு மாத்திரமில்லாமல், கீழே வீழ்ந்து நின்ற அம்புகளும் மேனி யிற்படும்படித் தேரில் வீழ்ந்து விட்டனர்.

“போர்க்களத்தில் வலியழிந்து வீழ்ந்து விட்டார் குரு குலேசராகிய பீஷ்மர்,” என்ற செய்தி யெங்கும் பரவிற்று; கண்ணனும் காண்டீபனும் அருகு நின்றவர்களாதலால்,

உடனே தம் தேரினின்றுமிழிந்து, அவரையணுகி நின்றார்கள். கண்டு, கண்ணில் நீர்சிந்தியழுதார்கள். மற்றும் எல்லாரும் வந்து சேர்ந்தனர். இரண்டு திறப்படையிலும் அங்கு வாராதவர்கள் இல்லை யெனும்படியாகவே, பெருங் கூட்டம் கூடி விட்டது. மார்பில் அம்பு உருவவும் கண்களில் அம்பு பெருகவும் அம்புகளின்மேல் வீழ்ந்தும் பீஷ்மர் தாம் வீழ்ந்த காலம் தக்ஷிணாயனமாகலின், உத்தராயணம் வந்த பிறகே, தமது தேகத்தினின்றும், உயிரைப் பிரிக்கும் துணிவுகொண்டு யோகபலத்தினால், உயிர் போகாதவாறு தடுத்திருந்தார். அதனால் தமது உறவினர் யாவரையும் காணக்கண் விழித்திருந்தார். தருமன் முதலாகிய பாண்டவர் திறத்தார்களும் துரியோதனன் முதலிய கௌரவர் திறத்தாரும் வந்து பாட்டனைக் கண்டு கண்ணார நீர் விட்டுக் கதறினார்கள்:—

"மறமும் வாகுவலியும் வல்வில் முதலைப் படையின்
திறமும் தேசும் வாழ்வும் சீரும்கேள்விச் செலவும்
நிறமும் உண்மை யறிவும் நெறியும் புகழுந் திகழ்பேர்
அறமும் பொன்றும் நின்னோடையா அந்தோ அந்தோ."

"தந்தையின்ப மெய்தத் தவமே யின்பமாகச்
சிந்தை தெளியும் ஞானச்செல்வா செஞ்சேவகனே
முந்தை மரபுக்கெல்லாம் முதல்வா ஞாலமுழுதும்
எந்தை யாளவைப்பார் இனியார் கோவேயென்றார்."

இங்ஙனம் வாய் கொண்டு அழுது அரற்றினார்கள்.

அழுத புத்திரர்களை "யஞ்சாதேயுங்கள்" என்றுசொல்லி யாற்றி, "குழந்தைகாள்! பழைய வினைப்பயனை யநுபவிக்காமல் யாரால் விலக்கமுடியும்? நீங்களெல்லோரும் பார்த்திருக்

கவே, வேறொரு வினையால் விதியால் நோயால் பேயால் வீழ்ந்ிடாமல், க்ஷத்திரிய தர்மத்திற் கேற்ப மார்பில் பாணம் ஏற்று வீழ்ந்திருக்கின்றேன்! என் பிறப்பினுல் இது வல்லாது வேறுபயனில்லை. இச்சரப் படுக்கையை பஞ்ச சயனத்தின் மேலாகக் கொள்வேன்; ஆனல் எனது தலையை அர்ச்சுனு! உனது சரங்களால் தூக்கி மேலெழ நிறுத்திவை; இப்படியே யிருந்து உத்தராயணம் பிறந்த பிறகே இவ்வுடலி னின்றும் நீங்கிப் போகிறேன்" என்று சொன்னுர். உடனே, அர்ச்சுனன் தனது கணைகள் கொண்டு அவரது தலையை யுயர்த்தி வைத்தான், பின்னர், பீஷ்மர், கண்ணில் நீர் சொரிந்துகொண்டிருக்கும் துரியோதனனை யழைத்து, கண் ணீரைத் துடைத்து ஆற்றி, "சுயோதனு! கர்ணன், வில்வில் வல்லவன், போர்க்குச் சிறந்தவன்; அவனை யழைத்துச் சேனுபதித்துவம் கொடுத்து நாளையே புரியவேண்டியதாக நினைத்துள போரினைப் புரிவாய்!" என்று சொன்னுர்.

தருமராஜன் செய்துகொடுத்த இடத்தில், பாணப் படுக் கையையே படுக்கையாகக் கொண்டு, நோயினுல் அயர்ச்சியும், தக்ஷிணுயனத்தில் உயிர் துறந்தால் முக்தியில்லையே யெனும் உணர்ச்சியும் கொண்டு. உயிர் நீக்காது யோகி போன்று இருந்துகொண்டிருந்தார் பீஷ்மர். "உன் மைந்தன் பீஷ்மன் இன்று போர்க்களத்தில் இறந்து வீழ்ந்து கிடக்கிருன்" என்று வருணனுக்குச் சொல்வான்போற் சூரியன் வருண திசையில் சென்று வருணனுடைய ஆகாமாகிய வேலையில் மூழ்கினுன். சூரியன் அஸ்தமித்தான் என்று போரை நிறுத்திவிட்டு இரு திறத்தார்களும் தத்தம் பாசறை சேர்ந்தார்கள். பாட்டன் பட்ட செய்தியை நகரத்திற்போய்த் தந்தைக்குச் சொல்லும் படியாகத் துரியோதனன் சஞ்சயனை யனுப்பினுன். முனி

வனும் விரைந்துபோய்த் திரிதராட்டிரனுக்குப் பீஷ்மன் இறந்துபட்டதையும், உத்தராயண காலத்தை யெதிர்பார்த் திருத்தலையும் சொன்னான். அவன் மண்ணில் வீழ்ந்து ஆற்றி, "இன்றுதான் நான் கண்ணிழந்தவன் ஆனேன்" என்று கதறினன்.

பீஷ்மர் சொன்னபடியே, கர்ணனைச் சேனபதியாக்க எண்ணின துரியன், பின்னர் மாறுபட்டுக் கர்ணனைச் சேன பதியாக்கிவிட்டால், சேனைக்கு அரசா யிருக்க யாருமில்லை யென நினைந்து, "பனைக்கொடியுடைய பாட்டனுக்குப் பதி லாக மறைக் கொடியுடைய மாதவன் சேனபதியாகட்டும்" என்று சொல்லித் துரோணச் சாரியரைச் சேனபதியாக்கி, "ஆசாரியரே! நாளைமுதல் தாமே சேனபதியா யிருந்து போரை நடத்தல் வேண்டு" மென்று அறிவுறுத்தினன். பின்னர்த் துக்க மொழிந்து கௌரவ குலத்து வீரர் யாவரும் துயின்றார்கள். பாண்டவரும் பாட்டன் நினைவே நினைவாகக் கதறியிருந்து பேசிக் காலங்கழித்து இரவை யோட்டினர்கள்.

பீஷ்ம பருவம் முற்றிற்று.

துரோண பருவம்

பதினோரும் போர்ச் சருக்கம்

"காயமும் புலனுமந்தக் கரணமு மாகியெல்லாத்
தேயமும் பரந்து நின்று மீளவுஞ் சித்துஞ்சுத்த
மாயமு மாகிநீங்கி வருபெரு ஞானனந்தம்
ஆயஎம் பெருமான் என்னை யாண்டரு ளாழியானே"

இதுவரையிற் பாகீரதி மைந்தன் சேனைத் தலைமைப் பதவி வகித்து நடத்திய பத்து நாட் போரினைக் கேட்டோம்; இனித் துகளறு கேள்வி பொருந்திய துரோணுசாரியர், அத் தலைமை வகித்து நடத்தும் ஐந்து நாட் போரையும் கேட்போம். பொழுது விடிந்தவுடன், பாட்டனைக் கண்டு வணங்கித் தருமன் ஸ்நானனுஷ்டானதிகளை முடித்துக் கொண்டு போர்க்களம் புகுந்தான். சேனைகளும் திரண்டு நின்றன. "பாகீரதி மைந்தன் பீஷ்மனுக்குப் பிறகு, சூரியன் குமாரன் சேனுபதியாவான் என்று எண்ணியிருந்தோம்; அதுமாறி அந்தணர் சேனைத்தலைமை வகிக்கின்றூர்; ஆகையால் வெற்றி நமதேயாகும்" என்று கண்ணபிரான் பாண்டவர்க்குச் சொன்னூர். சேனுபதியாகிய துரோணுசாரியரையும் மன்னர்களையும் அழைத்துக் கொண்டு, அரவக் கொடி படைத்தவன் அமர்க்களம் வந்து சேர்ந்தான். பெருஞ் சேனையேனும்

"மதியிலா விசும்பும் செல்வி மணமிலாமலரும் தெண்ணீர்
நதியிலா நாடும் செம்பொன் நரம்பிலா நாதயாழும்
நிதியிலா வாழ்வும் தக்க நினைவிலா நெஞ்சும் வேத
விதியிலா மகமும் போன்ற வீடுமனிலாத சேனை."

பீஷ்மனில்லாதபடியால் விளக்க மற்றே இருந்தது. துரோணுசாரியார் தமது சேனையைச் சகட வியூகமாக வகுத்திட்டார்.

திட்டத்துய்மன் தனது சேனையை கிரவுஞ்ச வியூகமாக வகுத்தான். இருநிறத்தாரும் போர் செய்ய ஆரம்பித்தார்கள். மாரிபோற் கணைகளைத் தூவினார்கள்.

சகாதேவனும் சகுனியுமாக ஒரு புறமிருந்து தம்மில் வெற்றி காட்டிச் சண்டை செய்து கொண்டிருந்தனர். பெருத்த போருக்குப் பின்னர்ச் சகாதேவன், சகுனியைத் தளரச் செய்துப்பின் ஒரு கணையாற் பாகனை உயிர் கவர்ந்து கொடியை யிரண்டு பாணங்களால் வீழ்த்தி நான்கு கணைகளால் குதிரைகளை யழித்து ஆறு பாணங்கொண்டு சகுனியின் மார்பைத் தொளைத்துத் தளரச் செய்து வெற்றி பெற்றான். தேரினின்றும் நிணச் சேற்றில் வீழும் சகுனி கைக்கு ஊன்றுகோல் கொள்வான்போல ஒரு கைத்தண்டமேந்தி நிற்கச் சகாதேவன், தானும் ஒரு தண்ட மேந்திச் சண்டை செய்து சகுனி புறங்காட்டி யோடவே தான் வெற்றியில் நிலைத்து நின்றான்.

ஒரு புறத்தில் துரியோதனனும் வீமனும் சண்டை தொடுத்து நின்றார்கள். சிறிது போழ்திலேயே, துரியோதனன் கொடியற்றுத் தோற்று வில்லொடிந்து தளர்ந்து போனான். மன்னர் பெருமான் நிலைமை கண்ட மற்ற மன்னர்கள் பலர் அவனுக்கு உதவியாக வந்து வீமனை யெதிர்த்தார்கள். வீமன் அவர்களைப் பிரிந்தோடும்படியாகக் கணைகளை யேவிப் பொருதான். மன்னர்களும் பட்டுப் போகப் பிழைத்தாற்போது மென்று ஓடுகின்ற மன்னர் மன்னவன் நிலைமை கண்டு, சல்லியன் வீமனை வளைந்து நின்றான். அவனை நகுலன் வந்து மடக்கிக் கொண்டு என்னோடு மலைய வல்லையானல், நின்று போர் செய்யென்று வீரவாசகம் பேசிக் கணைகளை யவன்மேல் தொடுத்து விட்டான். ஒன்று இரண்டு

மூன்று நான்கு ஐந்து என்று கணைகளை யேவி நிசையார யுருட்டிக் கொடியைப் புரட்டி வில்லை யொடித்து விடவே, சல்லியன் முதுகு காட்டி யோடினன்.

தூரியன் குமாரனுகிய இலக்கண குமாரனும் விராட மன்னனுமாக ஒருபுறம் பொருது நின்ற காட்சி மிகவும் பயங் கரமாக இருந்தது. அந்த இடத்தில் ஆகாயத்தில் அம்புகளே நிறைந்திருந்தன. இருவரும் பரஸ்பரம் அம்புகளால் மறைத் துக்கொண்டு போர்செய்தபோது, அருகிலிருந்தவர்களும் கூட அறிந்து சொல்லமுடியாத அந்தப் போரை நாமெப்படி எழுதமுடியும். யாகசேனனும் பகதத்தனும் யானைப்போர் நடத்தினர்கள். சிகண்டியும் சோமதத்தனுமாக எதிர்த்துச் சண்டை செய்தார்கள்.

ரதப்படை கஜப்படை தூரகப்படை ஆட்படை கொண்டு இலக்கண குமாரனும் பற்குண குமாரனுகிய அபிமன்னனும் கடும்போர் புரிந்தார்கள். இருவரும் விடும் பாணங்கள் ஆகா யத்தை மறைத்தன. இலக்கண குமாரன் விட்ட பாண மொன்றினல் அபிமனது வில் நாணற்றுத் துணிந்து வீழ்ந் தது. உடனே வேறொரு வில்லெடுத்து, உருத்து நின்று எதிரி மேற் பற்பல கணைகளை யேவிப் பாகனையும் குதிரைகளையும் வீழ்த்தி, அபிமனன், தன் தேரினின்றும் இறங்கித் தேர் முதலிய யாவுமற்று நிற்கும் இலக்கணகுமாரனுடைய சிகை யைப் பிடித்திழுத்துவந்து தன் தேரின்மீதேற்றி யுயிருடன் சிறைப்படுத்திப் போய்க்கொண்டிருந்தான். அதனைப் பார்த் திருந்த சிந்து பூபதியாகிய ஜயத்திரதன், அபிமனைத் தடுத் தமர்செய்தான். அவனையும் கணைகளைக்கொண்டு தோற் கடித்துத் தான் பற்றிக்கொண்ட மன்னவன் குமாரனெடு எகும் அபிமன்னனைக் கர்ணன் முதலிய அதிரதர்கள் வந்து

சூழ்ந்து கொண்டார்கள். அவர்களையும் எதிர்த்து நின்று அசுரர் பலருக்கு ஒருவனாக நின்று பெரும்போர் செய்து, அவர்களை வெற்றிகொண்ட தனது தந்தைபோலவே, அத்தனை யதிரதர்களையும் அதிரத வீரனாகிய அபிமன்னன் ஆயிரக்கணக்கான பாணங்களினால் சிதைத்து அவரையும் முதுகுகண்டு மன்னர் பெருமான் குமாரனோடு தேர் செலுத்திக்கொண்டு போனான். போகும் அபிமனைச் சல்லியன் கண்டு எதிர் நின்று மடக்கிப் பொருதான். "ஓ! மத்திராசனே! வாருங்கள்!!" என்று எதிரே நின்று சண்டையை விளைவித்துத் தோளிரண்டினும் நடுத் தோளில் படும்படியாகப் பாகனை யம்பால் தள்ளி, ஓர் வீர வேலேவிச் சல்லியனையும் தேரினின்று கீழே தள்ளினான். மலை வீழ்வதேபோற் கீழே வீழ்ந்த சல்லியன், மறுபடியும் கோபித்து அபிமன்மேல் வரும்போது, வீமன், கண்டு, ஒருதண்டு கொண்டு மோதினான். அடிபட்டுக் கீழே சல்லியன் விழுந்திட, அபிமன்னன், வீமனைப் பார்த்து, "இக்காரியம் ஏன் செய்தீர்கள்; இவ்வளவு நாழிகையும் பல வீரர்களிடம் நான் காட்டிவந்த வீரம் என்னவாயிற்று? பலனற்றுப் போயிற்று" என்று கதித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, அபிமன் தேரிலிருந்த இலக்கணகுமாரன் கீழே குதித்துத் தன் தேரேறிக்கொள்ள, இடையில் கிருதவன்மா ஓடிவந்து, கீழே வீழ்ந்து கிடக்கும் சல்லியனைத் தூக்கித் தன் தேரின்மேல் வைத்துக்கொண்டு, இலக்கண குமாரன் தேரையும் தன் தேரையும் செலுத்திக்கொண்டு, "செத்தோம் பிழைத்தோம்" என்று இருதேரவர்களும் ஓடினார்கள். பல்வகைச் சேனையுடனும், துரியோதனன், "தன் மகன் உயிரொடும் பிழைத்துத் திரும்பியதே" ஒரு பெரும் வெற்றியாக்கொண்டு திரும்பிவிட்டான். படையிலுள்ள பல தேர்களையும் வீமன் அழித்து வேறு தேர்ப்படை காணாது பார்த்

திருத்தலைக்கண்ட சூரியன் தனது ஒற்றை யாழியங்தேரையும் வீமன் ஒடித்துக் கலக்கி விடுவானோ எனக் கருதிப் பயந்தான் போற்கடலில் குதித்துவிட்டான். அஸ்தமன காலமானதினுல் இருதிறத்தாரும் போரை நிறுத்திப் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பாண்டவரும் அவரை யாண்டவனும் அபி மன்னன் திறத்தைச் சொல்லிப் போற்றினுர்கள். அரவக் கொடியோன், அவமானம் பொறுக்க மாட்டாமல், தலை குனிந்த வண்ணம் பாசறையிலிருந்து, யோசித்துச், சேனுபதி யையும் மன்னவர்களையும் தனியிடத்திலழைத்துப் பேச ஆரம் பித்தான்.

பாதியிராச் சதியோசனை.

"ஆசாரியரே! மன்னர்களே!! மேற் சென்ற பத்து நாட் களினும் நான் பெற்ற தோல்வியாற்பட்ட அவமானத்தைக் காட்டிலும், இன்றைப் போரில் எனக்குத் தாங்க முடியாத அவமானம் நிகழ்ந்துவிட்டது; தம்பியர்களும் துணை மன்னர் களும் எதிரிகளால் அழிந்து பட்டதைக் கண்ட அவமானத் தைக் காட்டிலும், இன்று என் மகனை, யென் பகைவன் மகன் உயிருடன் சிறைபிடித்துத் தன் தேர்மீதேற்றிப் பலரு மறியத் தைரியத்துடன் வென்று சென்றதைக் கண்டதுந் தான் எனக்குப் பெருத்த அவமானமா யிருக்கிறது: என் மகன் சிறை மீட்கப் பட்டானுனலும் என் அவமானம் மீட் கப் படவில்லை. ஆகையால், இதற்குப் பரிகாரமாக நாளைப் போரில் ஒரு பெருங்காரியத்தைச் செய்யாமலிருந்தால் நாம் நம்மை வீரரென்று சொல்லிக்கொணற்கே தகுதி யில்லை; ஆசா ரியரே! நாளைப் போராகிய பன்னிரண்டாம் நாட்போரில் நீர் சேனைத்தலைமை வகித்து நடத்தியதற்கு அறிகுறியாக ஒரு பெருங் காரியம் செய்து கொடுப்பீரா? நாளைச் சமரில் உதிட்டி

ரனையுயிருடன் சிறைபிடித்துக் கொண்டுவந்தால் இந்த மனே வியாதி தீரும் போலிருக்கிறது; அதைச் செய்துகொடுப் பீரா? மன்னவர்களே! இதற்கு நீங்கள் உதவி செய்வீர் களா?'' என்று கேட்டான். ஆசாரியர் சொல்லுகிருர்:—

"பெற்ருேன் தனினும் சதமடங்கு வலியோன் வீமன் பின்னிற்கப்
பொற்ருேன் விசயன்முன்னிற்கப் பொரும்போர் முனையில்போருதவி
அற்ருேர்போல வில்வலியால் அறத்தோன் தன்னை யகப்படுத்தல்
மற்ருேர் பிறப்பிற் றெரியா திப்பிறப்பில் முடிக்க மாட்டேமால்."

வீமனும் விஜயனும் பின்னும் முன்னும் காத்து நிற்கத் தருமனைப் போர்முனையிற் சிறைப்படுத்துவதென்பது, இப் பிறப்பில் முடியாத காரியம்தான்; ஆனல், திருமாலூரும் தேரோடு விஜயனைத் தருமனுக்குக் காப்பாக அணுகவிடா மல், தூரத்தே அவனை நாளைப்போரெல்லாம் விலக்கிவைத்தல் கூடுமாயின்—வீமனையும் அப்படியே அறன் மைந்தனிடம் அணுகவொட்டாமற் செய்வித்தல் கூடுமாயின், உதிட்டிரனைச் சிறைப்பிடித்தல் கூடும்'' என்ருர்.

இதனைக்கேட்ட மன்னர்பிரான், மற்ற மன்னவரைப் பார்த்து, "இந்த நிபந்தனைக்கு நீங்கள் உதவிசெய்ய முடியுமா?'' என்று கேட்டான்.

திரிகர்த்தராயன் சம்சத்தகன் முதலான வீரர்கள் எழுந்து, "ஜகத்துக்கொருவன் வீரனிவன் என்னும் விஜயனைத் தனது தமையனருகு போகாவண்ணம் போருக்கிழுத்து நாளெல்லாம் விலகிவைத்துக் காத்திடுவோம்; அங்ஙனம் தடுக்காமற்போனல்,மருள்கொண்டு தன்னரசின்குடிகள் வருந்தும்படி மனுவழக்கிழந்து பொருளைக் கவரும் அரசர்கள் போகும் நரகம் புகக்கடவோம்''என்று சபதமும் கூறினர்கள். மற்றும்,

பலத்திற்சிறந்த வீமனையும்அங்ஙனமே தருமராஜனுக்கு உதவி செய்ய முடியாமல் தூரத்தே விலக்கித் தகைந்திடுவோம் ; அது செய்ய மாட்டாதிருப்போமாயின், தருமம் துணையாகத்தான் கொண்ட மனையாள் படுக்கையில் தனியாயிருந்து அழுதிரங்கப் பிறன் மனையாளோடு மினிதிருக்கும் பெரும்பாவிகள் பெறும்பேறு நாமும் பெறுவோம்'' என்றார் ; மற்றும், "இம்மூவரையும் உதிட்டிரனுக்குத் துணை வாராதபடி தகைதற்பொருட்டு எமக்கு மரணம் நேரினும், உயிர் கொடுப்போம் ; அப்படியல்லாமல் உயிர்க்கு அஞ்சிப் பின்வாங்குவமானால், செய்ந்நன்றி கொன்றவனுடைய பெரும்பாவத்துக்கு இலக்காவோ''மென்று, மன்னர்கள் சபதம் கூறினார்கள்.

என்று இந்த சபதங்களையும் துரோணர் வாக்கினையும் வாங்கிக்கொண்டு, அரவக்கொடியோன் நித்திரைக்குப் போனான். பொழுதும் விடிந்தது.

பன்னிரண்டாம்போர்ச் சருக்கம்

"பொய்யாத தவமுனி பின் போயருளித் தாடகைதன்
மெய்யாவ நிகரென்ன வெஞ்சரத்தா லழுத்தியபின்
மையாழி முகில்வண்ணன் வாங்கியன பூங்கமலக்
கையாலு மொருசாபம் காலாலு மொருசாபம்."

காலை யெழுந்தவுடனே காலைக்கடனெல்லாம் முடித்துக் கொண்டு தருமராஜன், கண்ணபிரானோடு கலந் தாலோசித்தான். முந்தினநாளிரவில், அரவக்கொடியோன், ஆசாரியனோடும் மற்ற மன்னருடனுமிருந்து தீர்மானித்த சதியெல்லாம், ஒற்றரால் அறிந்துள்ளபடியே, கண்ணபிரானுக் குரைத்து, இதற்கோ ருபாயம் செய்திடலாமெனக் கலந்தார். சரி

யெனக் கண்ணபிரான், தமர்களையும் மன்னரையும் பெருஞ் சேனையுடன் அழைத்துக்கொண்டு போர்க்களம் குறுகினர். பெருங்களத்துக்குப் போனபிறகு, பகைவர்கள்கண்டு வெருக் கொள்ளும்படியாக வரூதினியை மண்டலமாக வகுத்திட்டார். வீமசேனனைப் பின்னேயும், அவனோடும் அணியணியாக மன்னர்களை நிறுத்தி, இரண்டு பக்கங்களிலும் நகுல சகாதேவர்களை நிறுத்தி சேனைகளையும் உடனிருத்தி விஜயனையும் அவன் குமரனையும் முன்னிறுத்திப் படைகளையும் புடை நிறுத்தி, முரசுக் கொடியுடைய தருமனை நடு நிறுத்திச் சேனைகளையும் வளைவுற நிறுத்தி மண்டல வியூகங் கண்டார்.

சபதம் சிதைந்து பின்னிடல்

அரவக்கொடியோனும் அவன் படைவீரரும் மன்னர்களும் திரிகர்த்தராயன் ஸம்சத்தகரும் துரோணன் முதலிய வீரரும் ஆலோசித்துத் தமது சேனையை மகா வியூகமாக வகுத்துக்கொண்டார்கள். திரிகர்த்தர்களும் நாராயண கோபாலநராதிபரும், விஜயனைப் போருக்கு அறைகூவிக் கார்முகம் வளைத்து எதிர் நின்றார். ஆர்ப்பரித்துக்கொண்டுவரும் அவர் நிலைமையைக் கண்டு, விஜயன், மற்றைத் துணைவரைப் பார்த்து, "அரசனை நீங்கள் காத்திருமின்; இவரொடும் நான் பொருவேன்" என்று சொல்லி, அண்ணனிடமும் அநுமதி பெற்றுக் கோதண்டமுற வளைத்து அவர்களெதிர் சென்று பல வாளிகளை மழையாகப் பொழிந்து நின்றான். இவனையங்கு நின்றும் பிரித்தொதுக்கிடும் கருத்தொடும் வந்து, அறைகூவிய அந்த அரசருடன் கடும்போர் விளைத்திடும் போது, அவர்களும் சபதம் கூறி வந்தவர்களாகையினால், தமது உயிரினும் வாக்கே விசேஷமாகக் காட்டுதற் பொருட்டுக் கொடும்போர் குறித்திட்டார். இருதிறமும்

போரிற் சலிக்காமல் அம்புகளை எய்தியவண்ணமாக இருந் தது. விரைவில், அப்போர்க்களத்தில் கவந்தம் எழுந்து கூத்தாடும்படியாயிற்று. ஜயத்திரதன் செலபயன் குண்ட லன் முதலிய முப்பதினாயிரவரும் சூழச் சேனைத்தலைவ ராகிய துரோண மாமுனிவர் தருமராஜனை நாடி வந்தார். வருகின்ற குரு முனிவன் தனைக்கண்டு, திட்டத்துய்மன் தன்னொடும் பாஞ்சாலர் பல் பதினாயிரர் சூழ வந்து முனிவனை எதிர்த்து நின்றான். சேனாபதியும் முரண்போர் விளைத்து நின் றார்கள். பல நாழிகைப் போதளவில், இருகட்சியிலும் வெற்றி தோல்வி காணப் பெறாதிருந்தமையால், திட்டத்துய் மன் கோபித்துப் பெரும் பகழிகள் பல தூர்த்துப் பல மன் னர்களை மடிவித்தான். துன்முகன் முதுகு காட்டி யோடி விட்டான்; துன்மருடன் போர் முனையிற் சாய்ந்து போனான். காந்தாரர் கலிங்கர் கௌசலர் நிடதர் ஆகிய மன்னவர் பலர் இளைத் தோடினார்கள். போர் புரிந்து அழிந்து ஓடின பெருஞ் சேனை துரோணரிடம் போய்ச் சேர்ந்தது.

தனது சேனையும் மன்னரும் பொருதழிந்து ஓடி வந்த தைக் கண்ட அந்தணராகிய துரோணர், மிகக் கோபம் கொண்டு, கோதண்டத்தை வளைத்துப் பல் பதினாயிரக் கணை கள் தொடுத்துத் திட்டத் துய்மன் துணைப்படைகளையழித் துப் பின்னும், துருபதன் கைச்சிலையறும்படியும் செய்திட் டார். சத்தியகேதுவின் வில்லையு மிரண்டாக்கிச் சிகண்டியை யும் சிலை முறித்து உத்தமோஜா முதலிய வீரரை யோடும்படி யாச் செய்து சேனை யெல்லாம் படிவித்தார். நகுல சகா தேவர்களும் உடைந்து போனார்கள்; பாண்டியரும் பாஞ்சால ரும் முதுகிட்டோடினார்கள். எத்தனையோ ஆயிரம்பேர் களத் தவிந்து போனார்கள். இப்படிக் காப்புச் சேனைகளை யெல்

லாம் கழித்துக் கொண்டு, துரோணர் தருமராஜனுக் கெதிரே தோன்றி நின்றார்; தருமராஜனும் மனங் கொதித்து எதிர் நின்று உடன்று போர் செய்யத் தொடங்கினர். சேனையும் சேனையும் யானையும் யானையும் குதிரையும் குதிரையுமாகப் பொர விட்டு ரதவீரரிருவரும் நேர் நின்று உக்ரமாகச்சண்டை செய்தார்கள். ஊழிகலங்கும் காலம் வந்ததோ எனும்படி, அந்தப் போரில் மடமடெனக் கடகடெனச் சேனைகள் இரு திறத்திலும் பட்டு வீழ்ந்த க்ணக்கை யெடுத்துச் சொல்ல வல் லார் யார்? சதுரங்க சேனைகளும்பட்டு வீழ்ந்தன வென்று குறித்திடலாம். செருக்கள மெல்லாம் செங்களமாகத் தோன்றியிருந்தது. யானைத் தலைகள் குதிரைத் தலைகள் சேனைத் தலைகள் ரத்தப்பெருக்கில் குதித்தோடின. கைகளும் கால்களும் மனித வர்க்கம் மிருக வர்க்கம் என வேறு பிரிக்க முடியாமல் மிதந்தன.

இங்ஙனம் சேனை குறையக் குறையத் தனக்கு விளக்கங் கொண்டவன்போல் தருமராஜன், முனிவரைச் சிறிது மயக் கம் காணும்படிச் செய்ய வேண்டுமென்று நினைந்து, தகுந்த லக்ஷ்யம் வைத்துப் பல பக்குவப் பகழிகள் ஏவி, அந்தணரது தேரின் கொடியை யறுத்துச் சாரதியைச் சாய்த்து, உருளை களையுடைத்துத் தேரினைக் கலக்கி யைந்து பகழிகளை யந்தணர் மேலே விட்டான். விஜயனையும் வீமனையும் புகழ்ந்த தமது வாக்குப் பொய்க்கும்படியாகத் தருமன் மலைந்த தைரியத் தையும் கரவேக சரவேகங்களையும் கண்ட துரோணமுனிவர், "ஜகத்தினில், வாய்மைக்குமிவனே தூய்மைக்கு மிவனே யென்றிருந்தேன் இது வரையில்; இன்று முதல் ஆண் மைக்கு மிவனே தோண்மைக்குமிவனே வாண்மைக்கு மிவனே யென்பதன்றி வின்மைக்கு மிவனே வேள்மைக்கு

மிவனே யெனச் சொல்வேன்" என்று கூறிப்பின்னடைந்து விலகினர். வீமனையும் விஜயனையும் விலக்கி வைத்தால், தருமனைச் சிறை பிடிப்பேன் என்று தைரியம் கூறி வந்த சிலை முனிவன், தனது சேனையழிந்து பல மழிந்துவாக்குமழிந்து, தான் அவன் கையிற் சிறைபடாததே பெரு வெற்றி யெனக் கொண்டு தருமனைப் பார்க்க நாணி முதுகு காட்டி யப்புறம் போயினர்.

துரோணர் பின்னரும் வந்து பொருதல்.

உடைந்து பின்னிடைந்தாராயினும், வீரவில்லி யாகையினல் மற்றொரு தேர் மேலேறிக் கொண்டு மற்றும் தர்மராஜனை நாடி வந்தார் துரோண முனிவர். தங்கள் மன்னவராகிய தருமராஜன், தனித்து வெற்றி பெற்ற தன்மையையும் சிலை முனிவர் முறிந்தோடிய தன்மையையும் மீண்டும் அம் முனிவர் பொர நினைத்துவரும் தன்மையையும் கண்டு அருகு நின்ற சிறுவர்கள் சீறி முனி யெதிர் நின்றார்கள். விராடன் திட்டத் துய்மன் குந்தி போசன் முதலிய மகீபர்களும் யானை மீது செல்லும் சிங்கங்கள்போல் முனிவரை நாடி வந்தார்கள். பெருங்கூட்டம் அம்மறையவரை யெதிர்த்து நிற்றலைக்கண்ட கர்ணன் முதலான வீரர்கள் துணைக்கேகினர்கள். முனிவன் சேனையில் கர்ணன் சகுனி கலிங்க மன்னன் முதலியோரும் கூடியிருந்தனர். தருமன் சேனையில் பாண்டியன் நகுலன் திட்டத் துய்மன் அபிமன்னன் முதலியோர் கூடி யிருந்தனர். வேல் கொண்டும் வாள் கொண்டும் வில்லைக் கொண்டும் பாணங்களைக் கொண்டும் பொருத தன்மையினல், முனிவர் சேனையிற் சதுரங்கப் படைகளிலும் பல பேர் அழிந்துபோயினர். ஓடுவாரும் ஒருங்கு நின்று கூடுவாரும் புகலிடம் தேடுவாரும் போயொளிய நாடுவாருமாகக் கௌரவ சேனைபடும்

அவஸ்தையைப் பார்த்து, பாண்டவர் சேனுவீரர், பரிகசித்து, "உங்கள் சேனை கெட்டது" என்று கூறினர்கள். அதற்கு, அவர்கள் "எங்கள் சேனை கெட்டதும் பட்டதும், உங்கள் மன்னன் கை வின்மையினுலே" என்று பதில் கூறினர்கள்.

இங்ஙனம் முனிவர் சேனை மற்று மொருமுறை போரிற் பட்டொடிந்து போயிருக்கப் போதாக் குறைக்கு, வீம சேனன் கையில் தண்ட மேந்தித் துரோணன் சேனைக்கு முன்னே வந்து நின்ருன். மற்றும், கடோற்கசனும் அபி மன்னனும் மன்னர் யாவரும் சேர்ந்து முனிவர் சேனையைத் தொடர்ந்தார்கள். முனிவரது படைகள் சூரியனைக் கண்ட பனிபோற் பதுங்கிக் காணுமலொளித்தன. போரில் மடிந்த தொழிந்தவர்போக நின்றவர் யாவரும் உயிருக்குப் பயந்து ஓடிப்போய், அரவக்கொடியோன் நிற்குமிடத்திற் புகுந்தனர். நடந்த செய்தியையுரைக்கக் கேட்டான்; கடுங்கோபம் கொண்டான். "சரி; பாண்டவர்க்கே இப்பூமி சொந்தம் என்று பிரதிஷ்டித் தாய் விட்டது" என்று துயரத்துடனும் பொருமலுடனும் சொன்னுன். தான் நேரே சென்று பொரலாமென் றெண்ணியோ, பொருதழிந்த மன்னரைக் காணலாமென்றெண்ணியோ, மன்னன் துரியன் சேனைகளை விரட்டிக்கொண்டு ஒரு தேர்மீதேறித் தருமனிருக்கும் பக்க மாக ஓடிவந்தான். துரியன் வருதலைக் கண்ட அபிமன்னன், அவனைப் பின்னிட்டு முன்னம் வரும் சேனையெல்லாம் துணி படும்படியாகக் கணைகளைத் தூர்த்து நின்ருன். வந்த சதுரங் கப் படைகளும் சிந்திப்போம்படியாக மலைந்தவன் ஒருவனே தான்; ஆனுல் அவனுலழிந்த படைகளோ எண்ணற்றன வாக இருந்தன. துரியன் போனவிடம் தெரியாம லொளிந்து எங்கோ போய்விட்டான். அவனைத் தொடர்ந்து வந்த முனி

வரும் மற்றொரு முறையும் அபிமன்னனால் முறியடிக்கப்பட்டுத் தோழிந்து சிலையழிந்து ஓடினார்.

அசுரன் பகதத்தன் அழிவு

அரவக்கொடியோன் முதலோர்க்குத் துணையாக அவ்விடத்து வந்து நின்றான், அசுரருக்குக் குலபதியாகி ஆனைப் படை மிகவுடைய பகதத்தன். ஓடிய மன்னர்கள், திரும்பித் தமக்குத் துணையாக அசுரகுலேசன் வருவதுணர்ந்து, அவனைத் துணைகொண்டு மறுபடியும் தருமனை நாடி வந்தார்கள். கண்ட தருமனும் அபிமன்னனும் நகைத்துக் கைகொட்டினர். இருபடையும் மறுபடியும் பூசல் விளைத்து நின்றன. வலிய பகதத்தன் தமையன்மேல் வருவதுகண்ட வாயு குமாரனாகிய வீமன், விரைந்து பகதத்தன் எதிரேவந்து, "நில் நில்" எனச் சொல்லி, "எனக்கு வகை சொல்லிப்போ" என்று அவனை நிறுத்தித் தனது வலிய கைகொண்டு பகதத்தன் மார்பு சுழிதரக் குத்தினான். கதைகொண்டு அவனேறி வந்த யானையின் துதிக்கையை யொடித்து நெற்றிப்பட்டத்தைத் தகர்த்து யானையை வீழ்த்திட அவன் அருகு நின்றதோர் ரதத்திற் பாய்ந்திட, வீமன், விடாதுபற்றித் தொடர்ந்தனன். அப்போது பகதத்தன், வில்லைக் கையிலேந்தி வளைத்துக் கணைகள் பல தொடுத்து வீமனைக் குறிக்கொண்டு எய்து விட்டனன். அவன் விட்ட பாணங்கள் ஒன்று பத்து நூறாக வந்து தனது கைத் தண்டத்தைத் தகைந்து கீழே தள்ளிவிடவே, வீமன், கோபம் மிகுந்து, தானும் ஒரு தேரின்மீதேறி வில்லை வளைத்துச் சமமாகப் போர் விளைத்து நின்றான். இருவரும் பல நாழிகைகள் வெற்றி தோல்வி காணப்பெறாமல், போர் செய்து, ஆகாயத்தைப் பாண வகைகளால் மூடிவிட்டனர். விற்பணியால் வெற்றி தோல்வி

தோன்றுமை கண்டு, இருவரும் மற்பணிகொண்டு பொருமாறு உடன்று தேரினின்றும் குதித்துக் கொதித்துக் கையொடு கையும் தாளொடு தாளும் தோளொடு தோளும் பற்றிக் குதித்து மிதித்து பிடித்து அடித்து மோதினார்கள். மறுபடியும் பகதத்தன் தெளிவடைந்து நின்ற தனது யானை மீதேறி யானைப்படைகளைப் பீமன் படையின்பேரிலும் தருமன் படையின் பேரிலும் மோதவிட்டுப் பொருது பலம் காட்டினான். பகதத்தனும் வீமனும் மலைந்துகொண்டிருந்தாராலும், அவனது யானைப்படையினால், தமது சேனை பலங்குன்றிப் போயினதறிந்து, தருமராஜன், இப்பகதத்தனை யின்றைப் போருக்குக் கணக்காக்க வெண்ணிக் கண்ண பிரானையும் விஜயனையும் அழைத்திட் டுதவி நின்றார். எங்குமான அப்பிரானைத் தம் மனத்தில் நினைந்தார். தம்மைத் தரும மகீபாலன் நினைத்ததையும் அவனது சங்கின் ஒலியையு முணர்ந்த சதுராகிய கிருஷ்ணமூர்த்தி, அர்ச்சுனனைப் பார்த்து, "பார்த்தா! இவன் வந்து நின்னுடன் போர் செய்தார் மடியும்படியாகச் செய்து பலரைத் தூத்திட்டாய். இனி யிவண் முரண்பட்டாரைக் காணோம்; அதோ! அங்கே உன்னுயிரொத்த தமையன் போர் செய்துகொண் டிருக்கும் முனை புகுந்து உதவவேண்டும்; அங்கே போவோம்! வா!" எனச் சொல்லி யவனுடைய சம்மதியும் பெற்று ரதத்தை யப்புறம் திருப்பித் தாம் வருதற்கு அறிகுறியாகத் தமது சங்கத்தை யெடுத்து பிரதித்வனியும் செய்து விரைந்து ஏகினார். சூரியனுதித்ததுபோல் திடீரெனப் பகதத்தன் எதிரே வந்து தோன்றினார்கள். வீமனுடன் மலைந்துகொண் டிருந்த பகதத்தன் ஒரு புன்னகைகாட்டி, "இன்று புகழுக்குரிய நற்போர் செய்வோம்! வா!!" என்று அர்ச்சுனனைப் பார்த்துக் கூறி, வீமனை விடுத்திட்டு, விஜயன் மேற்பல பகழிகள் தூவி நின்றான்.

அசுரன்விட்ட சுடுகணைகளை யெல்லாம் தனது பகழிகள் கொண்டு துணித்திட்டு அவன்மேலும் பல பகழிகளைத் தூர்த்து நின்றான். இவனது வில்திறத்தை யறிவோமென அவ்வசுரனும் கொதித்துப் பல பகழிகள் தொடுத்து, அர்ச்சுனனது ரதத்தின் குதிரைகளையும் பலமாகக் காயப்படுத்திப் பற்குனனது மார்பின் கவசத்தையும் அழித்திட்டதுடன் நில்லாமல், சாரிதிரித்துத் தேரினை விஜயற்கு வெற்றி தரு மாறு சாரத்யம் செய்யும் கிருஷ்ணன்பேரிலும் பலகணைகளைப் போக்கி நின்றான். அதனால் மிகு தளர்வுற்ற விஜயன் மறு படியும் வலிகொண்டு, உரம்மிக்க தனது சிலையை வளைத்துத் தக்க பாணங்கள் தேர்ந்தெடுத்துத் தொடுத்து அசுரனேறி வந்த யானையையும் பல பகழியாற் கதிதடுத்துப் பின்னும் ஒரு கணையினால் அவன் மார்பிற் கவசத்தையு மழித்துக் கணைகளை யேவி யேவி, அவனது அருகினின்றும் விலகவே, அசுரன் கோபம்கொண்டு, தேரினை விலக்கி நிறுத்திய சாரதி யாகிய கண்ணன்பேரிற் படும்படியாக ஒரு வேலினை யெடுத்து மிகுந்த ஒலியுடன் சுழற்றி விட்டான். தனது சாரதி பேரில் வரும் வேலினைப் பகழியினாற் சிதறச் செய்து, புன்னகை புரிந்து, மழை வருஷம்போல் பாண வருஷங்களைப் பொழிந்து, அவனது யானையின் நெற்றிப் பட்டத்தை நொறுக்கித் தள்ளினான். மற்றும் பல பகழிகள் தூவி அவனது யானைப்படையும் சிதறும்படியாகப் பொழிந்துகொண்டிருந்தான். அர்ச்சுனன் பகழித் தொகுதிகளால் தனது யானைப்படைகள் மடிந்து பிணமாகக் குவிக்கப் படுதலையுணர்ந்த பகதத்தன், மிகு கோபம்கொண்டு, முன்தான் சக்ரதரனைக் குறித்துத் தவஞ்செய்து பெற்றதொரு வடிவேலினை யெடுத்து அர்ச்சுனன்மே லெறிந்தான். அந்த உக்ரமான வேல் வருதலையுணர்ந்த பரந்தாமன், அது தன்னாலளிக்கப்

பட்ட தாகலின், அதனை யளித்த உருவுடைய சக்ரதானகத் தம்மை யதற்குக் காட்டி யதனைத் தமது மார்பிலேற்றுக் கொண்டனர். கண்ணன் மார்பில் அந்த வேல், அவரது வடிவத்துடன் மறைந்து பலமணிக ளழுத்திய மாலையாக மாறிய மார்பை யலங்கரித்து நின்றது.

இது நிற்க, "யமனை நிகர் பகதத்தனை யுயிர்கவர இதுவே சமய" மென்று குறித்துச் சொல்லி, "உறுதி கொண்டு, ஒரு சுடு கணையை யவனுடல் எலாம் எரியும்படி விடுவாய்" எனவும் கண்ணன் உபாயம் சொன்னர். உடன் விஜயனும், பிரத்யக்ஷமாக நிற்கும் கடவுளாகிய விமலக் கண்ணனைக் கை தொழுது ஒரு அக்கினியஸ்திர மெடுத்துத் தியானித்து, அசுரன் மீது விட்டு விட்டனன். அது அவன் மார்பிற்பட்டுத் தேகமெலாம் எரி கொளுத்தி யவனை யலமரச் செய்து விட்டது. அவன் அரசனகி யுயிர் அழிந்து, மலை மீதிருந்து மலை கடலில் வீழ்வது போலத்தான் ஏறியிருந்த பகட்டின் மேலிருந்து ரத்தப் பெருக்கிடைப் பிணமாக வீழ்ந்து விட்டனன். யானையும் உயிரிழந்து வீழ்ந்து விட்டது.

மூன்றும் முறையும் அரசர் புறங் கோடுத்தல்.

"பகதத்தன் பட்டொழிந்தான்; அவனது பகடும் கெட்டொழிந்தது" என்று எங்கும் ஒலிபரவும் அமரர்கள் விஜயனையும் விமலனையும் புகழ்ந்து மலர்மாரி தூவினர்கள். "பகதத் தனைக்கொன்றழித்த பார்த்தனை விற்போரில் வென்றல்லது இன்று திரும்போம்" என்று தன்மேலுருத்து வந்த காந்தாரர்களைப் பார்த்தன் பல கணைகொண்டு போர் செய்தான். வந்தவுடனே சகுனிமைந்தர்களாகிய விஷஜயன் ஜயன் என்னும் இருவரும் மாண்டொழிந்தார். மற்றுள்ள காந்தாரர்

கள் பிழைத்தோ மென்றோடி விட்டார்கள். போம் போது, விஜயனைப் புகழ்ந்து போகிறார்கள். பகைவராயினும் வீரனைப் புகழாதிருத்தல் கூடுமோ? கூடாது.

"சஞ்சத் தகர்வின் குடியேறத் தானே யடர்த்தான் பகதத்தன்
விஞ்சைக் கடவுள் சிகரிகர் வேழத் துடனே விழப் பொருதான்
வஞ்சச் சகுனி மைந்தரையும் மலைந்தான் விஜயன் வடிக்கணையால்
எஞ்சப் பொருத நரபாலர்க் கிலக்கே தன்றங்கெண்ணுதற்கே."

என்று சொல்லிக்கொண்டு போனார்கள். இங்கிப்படி வலி யொழிந்து இறந்தா ரொழிய இறவாதவரை யெல்லாம் திரட்டிக்கொண்டு, தருமராஜனைப் பொருதழிக்கச் சகுனி புறப் பட்டான். தன்னோ டெதிர்க்கவந்த சகுனியைப் பார்த்துத் தருமராஜன், "மாயச் சகுனி மாமாவே! சோரத்துடன் நீ பொருதழித்திடும் சூதுபோ ரல்லவிது; மெய்துளைத்துருவும் வீரப்பகழிகொண்டு மோதும் போராகும்; இதில் நிற்க வல்லையோ?" எனப் பேசிக் கணைகள் பலவும் ஏவிவிடச் சகுனி தாங்கமாட்டாமல், பின்னிட்டோடு மவர்க்கெல்லாம் முன்னிட்டோடி முரணழிந்தான். மற்றும் மன்னர் பலரை யும் காந்தாரர்களையும் சிலரை யழித்தும் சிலரை யொழித்தும் சிலரைப் பழித்தும் சிலரை யிழித்தும் சிலரைத் தெழித்தும் அனுப்பிவிட்டான் தருமபூபன். ஆசாரியனும் அசுவத்தாம னும் அங்கர் பெருமானும் துரியோதனனும் தம்பியரும் மற் றும் பல மன்னருடன் கூடிவந்து சேர்ந்து வீமனுடன் போர் செய்து ஓடிப் போனார்கள். முப்புரத்தைச் சிரித்தெரித்தவா வனைய வீமனும் பகைவர் ஓடுதலைக்கண்டு நகைத்தும், மேல் நிற்பாரைப் பகைத்துத் துகைத்தும் அனுப்பிவிட்டான். இதனைப் பார்த்து அரவக்கொடியோன் பொங்கிக் கொதித் துத் தம்பியரோடும் பின்னும்வந்து போர்செய்தான். வீமனும்

பாணங்கள் ஏவி எதிரிகளுடையவில்லும் நாணும் அறுந்து திரும்படியாகப் பொருதழித்தான். அவர்களும், இனி, "விதித் தான் வரினும் வீமனுடன் விற்போர் பொருதல் கூடாது" எனச் சொல்லிக்கொண்டோடினர்கள். பின் நின்ற அரசன் கொதித்துக் குதித்தான்; என் செய்யலாம்? வீரத்தைப் புக ழாதாருண்டோ? தருமராஜனைப் பிடிப்பதாகச் சபதம் கூறி வந்த துரோண முனிவரும் துவக்கற்றார்; "பாம்புக் கொடி வேந்தன் பரிபவம் மிகவும் பட்டான்" என்று சொல்லிக் கொண்டு அரசர்கள் பாசறையிற் போய்ச் சேர்ந்தார்கள். சூரியன் அஸ்தகிரியிற் சென்றொளித்தான்.

கௌரவர் பாசறையிற் பேச்சு.

"அப்பா! தருமற்கும் வீமற்கும் விசயற்கும் அபிமற்கு மே உலகில் வெற்றி யென்பது நிற்குமொழியப் பிறர்க்கினி யேது? மற்றும், இன்று பகதத்தன் காட்டிய வீரமும் தீர மும் காட்டிப் பிராணனை விடுதலேனும் வீரமாகும்!" என் றென்று மன்னர்கள், போரில் வந்தார், வாாதவர்க்குச் சொன்னார்கள். மன்னர் மன்னனாகிய துரியோதனன், துரோண முனிவரைப் பார்த்து, "நீர், நேற்றுச் சொன்ன வார்த்தையை யிற்றைக் களத்திற் காட்டி நிறுத்தி விட்டீரே" என்று சொல்லும்போது, அங்கிருந்த கர்ணன், "ஆமாம்; அந்தணர்க்கு ஏது கட்டாண்மை?" என்னச் சிரித்திட்டான். துரோணர்க்குக் கோபம் மிகுந்தது; "கர்ண! நீயே அல்ல; மற்றெவர் கூடிவந்தாலும் தர்மராஜனை வெல்லுவோர் இப் புவியிலில்லை யென்பதை யின்றறிந்தேன்; துரியோதன! இன்றல்ல நாளைக்கும் உனது சபைக்கண் ணிருப்போரில் யாரேனும் சென்று தர்மனை வெல்வாருளராகில், அவரே உலகிற் புகழுற்றார். வில்லாண்மையாற் சிறந்த யாவரும்

போர் மலைந்து தோளாண்மையால், அறன்மைந்தனை வென்று கொண்டு வாருங்கள் பார்ப்போம்; வீணே வாயாற்கொட்டி யளப்பதுதான் காரியமென நினைப்பது மன்னர்க்கழகன்று. வாய்பேசா தெதிர்த்துக் கொணர்வது வீரர் செயல்; வினையிற் காட்டாது வீணிற் பரிகசித்துப் பேசி யேசுவது வீரமாக மாட்டாது.

"வன்மைக்கு வயவீமன் வின்மைக்கு
முகிலூர்தி மகனன்றிவே
றின்மைக்கு மாவிந்தைகிரி கன்னிகரி
யென்பரெம் மன்னரும்
வின்மைக்கும் வன்மைக்கு மிளையோரை
யனையாரை மிகவெண்ணலாம்
தன்மைக்கு நிலையான தருமற்குநிகர்
யார்தனித் தெண்ணவே."

"உலகில் வீமனுக்கும் விஜயனுக்கு மாகிலும் நிகர்காணலாம் போலிருக்கிறது; தருமனுக்கு நிகராக இத்தரணியில் யாருமிலர்" என்று வீர முனிவார், வில்லெடுத்துப் பொருவாரில் மேலாக எடுத்தெண்ணப்பட்டவர், நேரில் தர்மராஜனது விற்றிறத்தைக் கண்டனுபவித்தவ ராதலால், உண்மையாகப் புகழ்ந்து பேசினர். கர்ணன் முதலிய யாவர்பேச்சு மடங்கிற்று. இப்புகழ்ச்சியைக் கேட்க மனமில்லாத துரியோதனன் யாவரையும் அவரவர் பாசறைக்கு அனுப்பித் தானும் கண் துயின்றான்.

மகதத்தரிற் சூரரான சஞ்சத்தகரையும் பகதத்தனையும் காந்தாரத் ததிபனாகிய மாயச் சகுனி மைந்தரையும் வெங்களத்து வென்றிட்ட விஜயனும் மற்றுமுள்ளோரும் பாசறை

யிற் களித்துத் தூங்கினார்கள். இறந்த வீரர்கள் ஆவியெல்லாம் சொர்க்கம் ஏறுதல் கண்டுகளித்த திங்கள் அஸ்தமிக்கவே, பதின்மூன்றும் போரை நடத்தப் பரிதியு முதயமானன்.

பதின்மூன்றும் போர்ச் சருக்கம்

"சங்கையிலாவகை யமபடராலுயிர் தளர்பொழுதத் தருகே
மங்கையர்சூழ விருந்தழுதுள்ள மயக்கினும் யான்மறவேன்
கங்கையும் நான்மறையும் துளவுங்கமழ் கழலிணையுந் திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமும்நேமியும் அஞ்சனமேனியுமே"

இந்நாட்போர் மிகக் கடும்போர் : இருதிறத்துத் தலைவர்களுடைய குமாரர்கள்அழிந்த போர். விஜயன் மகன் அபிமன் மிகு விஜயங்காட்டிப் பகைவர்களால் வஞ்சகமாகக் கொல்லப்பட்ட வஞ்சப் போர்; யாவராலும் பேதிக்கப்படாத சத்துருக்களமைத்த சக்ர வ்யூகத்தைச் சமர்த்துடன் பேதித்துட் சென்ற சக்ரதான் மருகன் வெற்றிகொண்டு வஞ்சிக்கப்பட்ட வெங் கொடும்போர்; மாமாயன் தன் மருகனை மருளவிட்ட மாயப்போர்; விஜயன்மகனுக் கிரங்கி வஞ்சினமுரைத்த வலிய போர்.

பாம்புக்கொடி யுயர்த்த பார்த்திவன் ஏவலினால், மன்னவர் பலரும் விஜயனை மலைந்து எதிர்க்க விரதங்கொண்டு மேவினார்கள்; முன்னிரண்டு நாட்களும் வென்னிட்டு வெட்கிப் போன சேனாபதி முனிவர், கடுங்கோபத்துடன் தருமனைப் பொருதழிக்கும் நினைவினெடும் போர்முகத்துற்றார். மன்னர் மன்னன் குமாரனான இலக்கண குமாரனும் மன்னவன் தம்

பியரும் கலிங்க மன்னர்களும் மற்றும் காவலர்களும் சிந்து பதியாகிய ஜயத்திரத மன்னனைச் சிரமாக்கொண்டு படைகளை நடாத்திப் போர்முகம் குறுகினர்கள். சில முனிவர் துரோணர், அசுரசேனைகளை நடத்தும் சுக்கிரன்போலச் சேனையின் தூசி முனையில் நின்று, தமது பெருஞ் சேனையைச் சக்ரவியூக மாக வகுத்தமைத்தார்கள்.

முன்னுட்களில் சின்னுட்கள் போகப் பன்னுட்களும் வெற்றி வாகை புனைந்திட்ட பாண்டவர் காலைக்கடன்களைக் கதிபெற முடித்துக் கண்ணனைக் கைதொழுது, உணுக் கொண்டுவந்து, பெரும்படையுடன் போர்க்களம் குறுகி நின்று, எதிரிகள் சக்ரவ்யூகம் வகுத்ததனை யுணர்ந்து நெஞ்சினிற் சிறிது துணுக்கங்கண்டு, தமது படைகளை மகரவியூக மாக வகுக்கச் செய்தனர். இதுவரையில் வகுத்த வ்யூகங்கள் இன்றைய வியூகத்துக்குச் சமானமில்லை யெனும்படியாகத் திட்டத் துய்மன் வகுத்திட்டனன்.

இங்ஙனம் வகுத்து நின்ற இருதிறத்துச் சேனைகளையும் பார்த்து நின்ற தேவர்கள், இன்றைக்கு, இருதிறமும் வெற்றியும் இருதிறமும் தோல்வியும் இருதிறமும் களிப்பும் இருதிறமும் வெறுப்பும் இருதிறமும் துக்கமும் இருதிறமும் வெட்கமும் நிகழுமென மதித்துப் போர்க்களம் புகுந்து ஆகாய வீதியில் நின்றனர். பாம்புக்கொடியன் ஆணையினுல் முன்னுளைப் போலவே ஸம்சத்தகர் கூடிப் பெரும்படையுடன் அர்ச்சுனனை அறைகூவி எதிர்த்து நின்றனர். மாமாயன் விடு தேருள்ளிருப்பவனும், இன்றுெடு ஸம்சத்தகர் என்னும் பெயரையே உலகினின்றும் அழித்திடல் வேண்டுமென்று, உருத்து அவருடன் பொருது, தேர் யானை குதிரை பதாதிகளைச் சிதற அடித்து வெம்போர் புரிந்திட்டான்.

"பட்டவர் எத்தனையாயிரர் நின்றுபடாமல் உயிர்ப்புடன்வென்
னிட்டவர் எத்தனையாயிரர் அஞ்சலினேகுக வென்றமர்வாய்
விட்டவ ரெத்தனையாயிரர் தங்குலமேன்மையும் வெந்திறலும்
கெட்டவ ரெத்தனையாயிரர் அன்றுகிரீடி தொடுங்கணையால்"

இப்படிக் களத்தைச் செங்களமாக்கிப் பொருதுக்கொண்டிருந்தான் கிரீடி. மற்றும் இருதிறப்படைகளும் வெம்போர் புரிந்துகொண்டிருந்தார்கள். இரண்டு திறச் சேனுபதிகளும் ஒத்த போர் புரிந்து கொண்டிருந்தனர். துரோணமா முனிவர்க்கு, முன்னாளிரவு அரவக் கொடியனுரைத்த வெறுப்புரையும் கன்னன் கழறிய சிரிப்புரையும் சிந்தையில் இருந்தபடியால், கடுங்கோபத்துடனும் வீரத்துடனும் கணைகளையேவிப் போர்த்திறம் காட்டிக் கொண்டிருந்தார். அவர் இன்றைப் போரில் காட்டிய திறம்போல் என்றைப் போரிலும் காட்டிட வில்லை யென்று எதிரிகளும் மகிழ்ந்தார்கள். பாண்டவ சேனுதிபதி திட்டத்துய்மன், துரோணரது ஆவேசங்கண்டு மலங்கியிருந்தான். முனிவர், திட்டத்துய்மனுடைய பற்பல தேர் முதலானவற்றை யழித்து, அவன் முதுகிட்டு ஓடும்படியாகச் செய்தனர். பாண்டவ சேனுபதி எதிர் நிற்கமாட்டாதவனுகி மறையவனுக்கு முதுகு காட்டி யோடிப் போய்த் தருமனிடம் புகுந்தான். தர்மன் இளைத்து வந்த சேனைத் தலைவனைத் தழுவிக் கொண்டு, "நீயே இளைத்து முதுகிட்டு ஓடி வருவையானல், மற்றும் நம் சேனைகள் நிலைத்திடுமா?" என்று சொல்லியவனுக்குச் சில உபசார உரைகளும் கூறி, எதிர் நின்ற தம்பி மகன் அபிமனை யழைத்து, "குழந்தாய்! போரினில் உனக்கெதிராக நிற்பவரில்லை; ஆனாலும் அவர்களின்று வகுத்திருக்கும் வியூகம் சக்ர வ்யூகம்; அதனைப் பேதித்தாலன்றி நாம் இன்று வெற்றி பெற முடியாது. சக்ர வியூகத்தைப் பேதித்திட நீயும் நின் தந்தையுமன்றி வேறு

யாரும் சமர்த்தரிலர்; ஆகையினல், வியூகத்தின் முன்னணி யில் நிற்கும் அதிரத வீரர்களைப் பேதித்துக் கொண்டு மிகு பக்குவமாக உட்சென்று வென்று திரும்ப வேண்டும்; கண் ணனை நினைத்து கடுகினிற் சென்று போர் புரிவாய்'' என்று ஊக்கம் காட்டி யனுப்பினர்.

அபிமன் சக்ர வியூகம் பேதித்தல்.

வீர கவசமும் வீர அணிகளும் வீர உடைகளும் வீர உரைகளும் கொண்டு வீரர்களிற் சிறந்த வீர விஜயன் மக ஞகிய வீர அபிமன் பல வீரர் சூழ்ந்துள சக்ர வியூகத்தைத் தகர்த்திடும் உறுதியுடன் புறப்பட்டனன். துருபதேயன் முதலினேர் சங்கினெலி முழக்கிச் சமர புங்கவனை யுற்சாகப் படுத்திச் சமர் முகத்தனுப்பினர். சக்ர வியூகத்தை இதற்கு முன்னலெப்போதும் பேதித்திலனயினும், அவ்யூகத்தின் முறைகளை மாமன் உரைகளால் தெரிந்துள்ள வீரனகையால், மனத்துணிவு கொண்டு, ஒற்றைத் தேருடன் உட்புக வெண்ணி, முனைவட்டத்து நிற்கும் அதிரதர்களுடன் முனைந்துபொர நின்று எதிர்த்தான். தூசி முனையில் நின்ற துரோண முனிவரே முன்னின்று எதிர்த்தனர். ஒவ்வோர் ஆரையாகப் பேதித்துச் செல்ல வேண்டிய முறைப்படி முன் னரையில் நின்ற முனிவரை மன வணக்கங் கொண்டு, வில் விஜயன் மகனகலின், எதிரிகள் வலியிலும் வில்லிலும் லக்ஷ் யம் வைக்காமல் தனது வில்லின் திறமே திறமாககொண்டு பாணங்களை யெய்து பொழிந்தான். முனிவர் கடும்போர் புரிந்தும் எதிர் நிற்க முடியாமற் பின்னடைந்தார்; மாமுனி வர் விறலழிந்தது; குருவெனும் சொல்லழிந்தது; வில்லழிந் தது; தேரழிந்தது; அவர் போரழிந்து முதுகிட்டு விலகினர்;

அபிமன் அவ்வாரையைக் கடந்து அடுத்த ஆரையில் நிற்கும், ஆசிரியன் மகன் அசுவத்தாமனைக் கண்டனன்.

தந்தை முதுகு காட்டி அழிகின்றார் என்பதைக் கண்ட அசுவத்தாமன், அபிமன்னன் எதிரே வந்து, வீரம் பேசினான். "குழந்தாய்! நீ வீராதி வீரனாக விளங்குகின்றாய்! என்னைப் போர் தொலைக்கவல்லையாகில், வீராதிவீரன் என்னும் பேர் உனக்கு நிலைத்திடும்" என்று சொன்னான். "வில்லாசிரியர் குமாரராகிய நல்லாசிரியரே! இது அமர்க்களமாயினும் எங்கள் குலதர்மத்தை மறக்காமல், உமக்கும் இதோ வணக்கங் கூறுகின்றேன்; நமக்குள் வாய்ப்பேச் செதற்கு? உருவத்தின் சிறுமை பெருமை பேசலெதற்கு? போரில் நின்று நிலைத்திடுவார் யாரெனப் பார்ப்போம்!" என்று சொல்லிக் கடுங்கணைகளைத் தூர்த்திட்டான். தானொருவனே நின்று அவனொருவனுடன் பொருது கணைகளை வாரி யெறிந்து, முனி குமாரன் துணிவும் நுணிவும்மாறி முனிவுகொள்ளும்படி முரண்கெடுத்து, அவனைப் பாணக்கோட்டைக்குள் கொண்டு செலுத்திப் பாணச் சிங்காதனத்திலிருக்கவைத்துப் பாணுபாரங்களைப் புனைவித்துப் பாணமுடியினைச் சூட்டுவித்தான். அசுவத்தாமன் கண்விழிக்கமாட்டாமல் கையெடுக்கமாட்டாமல் கால்பெயர்க்கமாட்டாமல், பாணச்சிறையி லகப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்தான்: முனிவனைப்போலவே முனி குமாரனையும் பூஜை செய்துவிட்டு, பொன்னுலகாள்வோன் மைந்தன் குமாரன் போர்முனையில் மற்றோர் ஆரைக்குச் சென்றான்.

மூன்றும் ஆரையில் நிற்பவன், மூவுலகும் போற்றும் கொடையிற் சிறந்த கர்ணன். கன்னல் வில்லினனாயினும் என்னுடைய வில்லுக்கு எதிர் நிற்கமாட்டான் என்று என்

றும் தற்புகழ் பேசும் தருக்குடையோன். தியாகத்தில் எத்துணைச் சிறந்த பேருடையவனோ அத்துணையும் அகங்காரத்திற் சிறந்தவன்; இவனது அகம்பாவம் இவனது கொடையை முழுக்கி மூடிவிட்டதென்னச் சொல்லிவிடலாம்; அத்தகையவன் எதிர்நின்று, "குழந்தாய்! உன் தந்தைதான் என் வாளிக்கிலக்காக இருக்கின்றான்; நீயாகிலுமிருந்து அவன் வமிசத்தைப் பெருக்கிடுவா யென்பதில்லாமல், இன்று என்னால் அழிந்துபட நேர்ந்துவிட்டனையே"யென்றான். "கொடையிற் சிறந்தோய்! வீண்பேச்செதற்கு? உன்னை என்பிதா கொல்வதாகச் சபதம் கூறியிருக்கிறார்; ஆகையால் நான் உன்னைக் கொல்லப்போவதில்லை; இந்தா, இந்தப் பாணத்தை வல்லையாகில் தடுத்துக்கொள்" என்று ஒருபாண மேவி மார்பினிற் பாய்ச்சி, அவர் தளர்ச்சி நீங்குதற்குள், தேர் குதிரை சாரதி வில்லென்னுமிவற்றை யழித்துத் தள்ளிவிட் டப்புறம் போனான்; கன்னன் கண்விழித்தபோது, அபிமன்னன் அடுத்த ஆரையில் நிற்பது கண்டான்; மெள்ளத் தட்டி யெழுந்து நின்றான்.

அடுத்த ஆரையில் கிருபாச்சாரியர்; அவருக்கும் வணக்கங் கூறியவரையும் வென்று தள்ளி, அடுத்து நின்ற கிருதவன்மாவெனும் யாதவனைப் புறங்காட்டி விழும்படிச்செய்து, பின்னர்த் தொடை நடுக்கத்துடன் நின்ற சகுனியையும் அவன் மகனையும் அழித்து வென்று, பின் நின்ற விகர்ணனுடன் சிறிது நேரம் நின்று போர்செய்து, "சிற்றப்பா! உன் குணத்துக்கும் மேன்மைக்கும் உன் பிறப்பும் சேர்க்கையுமான குலம் ஒத்திருக்காததற்கு வருந்துகிறேன். என்ன செய்யலாம்? என் கடனை நான் ஆற்றித் தீர்க்கவேண்டும்" என்று பக்குவக் கணைகளால் அவன் கரங்கள் நெக்குவிடும்

படிச் செய்தழித்து, இங்ஙனம் அந்தச் சக்காத்தின் முதல் வட்டத்து ஆரைகளை யறவே முறியடித்து அதனைக் கடந்து இரண்டாம் வட்டத்துக்குள் கால் வைத்தான். அங்குத் துன் முகன் தலையாக நின்ற மன்னன் தம்பியர்களிருந்தார்கள்; அவர்களையும் மன்னவர்களையும் வென்று இங்ஙனம் புறவட் டங்களை யெல்லாம் கடந்து, உள் வட்டம்போய்ச் சேர்ந் தான்.

"மற்றுமற்று முனைந்து வந்துமலைந்த வெஞ்சின மன்னர்மெய்ம்
முற்றுமுற்று மிவன்கைவாளிகள் மூனைபுதைந்திட மூழ்கலால்
இற்றவிற்ற படைக்கலங்களும் எய்த்த வெய்த்த பதாதியும்
அற்றவற்ற விதங்களாகியும் ஆகியேகினர் அடையவே."

வீமசேனன் துணை வரல்.

தூரத்தில் நின்று போர் புரிந்து கொண்டிருந்த வீம சேனன், திடீரென்று திரும்பிப் பார்த்தபோது, விஜயன் மகன் அபிமன்னன் விஜயத்துடன் கடந்து சென்று சக்ர வியூக மத்தியில் நிற்பதைக் கண்டான்; அவன் வெற்றியுடன் உட்சென்றிருக்கின்ருனென்பதை யுணர்ந்தானுயினும், சக்ர வ்யூகமானதனுலும், எதிரிகள் வஞ்சகர்களாகையினுலும், இரண்டு நாட்களாகவே பஞ்சவர்களில் யாரை யேனும் சிறை பிடித்திட முயன்றிருந்தவர்களாகையினுலும், சில நாட்க ளாகவே, அபிமன்னனது போர்த்திறங் கண்டு பொருமை கொண்டவாாகையினுலும், மற்றும், மன்னன் மகனைச் சிறை பிடித்தவன் அபிமனே யென்று கறுக்கொண்டிருந்தவராகை யினுலும் உட்சென்ற அபிமன்னனுகிய தனது அபிமானச் சிறுவனுக்கு என்ன விபத்து ஸம்பவித்திடுமோ எனப் பயந்து, அண்ணனிடம் வந்து வணங்கி, "இப்படிச் சிறு வனைத் தனியே சக்ர வியூகத்திலனுப்பலாமா?" எனக்கேட்டுத்

தான் துணைபோ யுதவுதற்கும் அநுமதி பெற்று, ஒரு பெருந் தண்டைக் கையிலேந்திக் கொண்டு தேர் மீதேறி விரைந்து சென்று, "பகைவரை விலக்கிக் குழந்தையை யணுகுவம்" என்று முனைக்கு வந்து சேர்ந்தான்.

தான் கொண்ட லக்ஷ்யத்தையே மனத்தில் வைத்து, வீரத்துடனும் வேகத்துடனும் தேரைச் செலுத்திச் சென்று, இடை நின்ற மன்னர்த் தொகுதியையும் வாள் கொண்டும் வேல் கொண்டும் சக்ராயுதங் கொண்டும் வில் கொண்டும் விலக்கிக் கொண்டு, கலிங்கர் சோனகர் மகதர் கன்னடர் கங்கர் கொங்கணர் கௌசலர், தெலுங்கர் ஆரியர் துளுவர் பப்பரர் சீனர் சாலகர் சிங்கனர், குலிங்கர் மாளவர் களமர் ஒட்டியர் குருரர் கொப்பனர் கூபகர் என்னும் இம்மன்னர்களை யெல்லாம் தகர்த்துக் கொண்டு சென்றான். யாவரும் நிகரில்லாமல், மன்னர்களை முறியடித்து வ்யூகத்தின் முதல் வட்டத்தைக் குறுகி நின்றனன்; இவனது வலியையும் வேகத்தையும் வெற்றியையும் நோக்கத்தையும் உணர்ந்து கொண்ட பன்னகக் கொடியன், வீமனது லக்ஷ்யத்தை யுணர்ந்து கொண்டு, "இவனை அபிமனோடு சேர விடப்படாது; இருவரும் கூடி விட்டால், நமது சேனை காண்டவ தகனமே யாகும்" என்று யோசனை செய்து, மன்னர்களைப் பார்த்து, "சகுனி அசுவத்தாமன் விகர்ணன் முதலாகியோர் வீமனுடன் மலைந்து அவனை யபிமனிடம் அணுக வொட்டா வண்ணம் செய்திடுங்கள்; இருவரும் சேர்ந்திருக்க விடாமற் செய்வது உங்கள் பொறுப்பு" எனப் பணித்துத் தானும் மிகு கவனத்துடன் இருந்தான்.

உள்ளே அபிமனுடனும் வெளியே பீமனுடனும் நின்று பொருதும்படி மன்னர்களையும் வீரர்களையும் தம்பியர்களையும்

அடிக்கடி தூண்டிக் கொண்டே யிருந்தான் துரியோ தனத்திறலோன். என்றாலும், இம்மன்ன ரனைவரையும் வீமன் லக்ஷ்யம் செய்யாமல், பலரை யழித்தும் சிலரைக் கழித்தும் முரண்கொண்ட போரில் முடுகி நிற்கவே, துரி யன் வீமனால் உயிரற்று அறிவற்று வீழ்ந்த படைகட்குப் பதிலாக மற்றும் பல சேனைகளை யனுப்பி வீமன் அவ்விடம் நகராவண்ணம் வேலை கொடுத்துக்கொண்டே யிருந்தான். விஜயன் மகனும், உள்ளேசென்றனனாயினும் நடுத்தட்டை மிதித்துத் தகர்த்திட்டு மறுபடியும் ஆரைகளைக் கழித்து வட் டங்களைக் கடந்தே வெளிவர வேண்டியவனாக இருத்தலின், மேல்மேல் வரும் சேனைகளைக் கழித்துக்கொண்டே தனக்கு நெறி செய்துகொள்வதில் திடமாக இருந்தான். அதனால் பெரும்போர் விளைக்கவேண்டியதாயிற்று; சேனைகளைச் சோனைமாரி போன்ற பாணங்களினால் தொலைத்துக்கொண் டிருந்தும், மேலும் மேலும் சேனைகளைத் துரியன் அனுப்பிக் கொண்டிருந்தபடியால், ஓய்வில்லாமல் யுத்தம் செய்து கொண்டே யிருந்தான். நடுத்தட்டும் சிதறாமல், நண்ணலரும் வந்து பெருகிக்கொண்டிருந்தபடியால், நின்ற நிலையி லேயே பன்னாழிகை போர்புரிந்துகொண் டிருந்தான்.

துரியன்நடத்தும் வஞ்சப்போர்

இரண்டு வீரர்களும் அப்பனும் மகனுமாக இருந்து, உள்ளும் புறமும் ஒழிலாமல் காட்டி வரும் திறமையினால், இருவர்க்கும் எதிர்நின்று தாக்கும்பொருட் டனுப்பிவரும் படைகளெல்லாம் நிர்மூலமாகிக்கொண்டிருப்பதைக் கண்ட துரியோதனன், "இவர்களிருவருக்கும் பலிகொடுத்திடச் சேனைகளோ குறைந்திருக்கின்றது. இன்னும் சிறு நாழிகை யினில் இரண்டு வீரர்களும் கலந்துவிடுவார்கள்போலிருக்கின்

றது; என் செய்திடுவோம்" என யோசித்து, ஒரு யுக்தி தோன்றச் சரேலெனச் சிந்து தேசபதியை யழைத்தொரு வார்த்தை பேசுகின்றான்.

"மறனுடையை செம்பொன் மேருகிரி நிகர்
வலியுடையை வென்றீ கூறுமரசியல்
அறனுடையை பஞ்ச பாணனென
வடிவழகுடையை நின்ற சேனையரசரில்
நிறனுடையை திங்கள்சூடி வியனதி
நிறைபுனல் பரந்துலாவு மௌலியர்
திறனுடையை மன்றல் நாறுமலரடி
தெளிவொடு பணிந்த ஞானமுடியினை"

என்று துதித்து, அபிமனும் வீமனும் கலந்துகொள்ளப் படாது; கலந்துகொண்டால் நமக்கு வெற்றி கிடையாது; படைவலி கொண்டும் அவர்களை விலக்கிவைக்க முயன்று பார்த்தேன்; முடியவில்லை; எத்தனை படைகள் அனுப்பினும் களைந்துகொண்டே யிருக்கிறார்கள்; ஆகலின், சிவபக்தி யிற் சிறந்த வீமனுக்குத் தடையாகக் கொன்றை மாலையை நடுவே கிடக்கும்படிச் செய்திடுவையாயின், அவன் அபிமனுடன் கூடமுடியாமல் மயங்கி நிற்பான்; அந்த சமயம் பார்த்து, உனக்குச் சிவனருளாற் கிடைத்திருக்கும் பெருங் கதைகொண்டு, சிறுவனென்றும் பாராமல் அபிமன் தலையில் மோதிக் கொன்றிடல் வேண்டுகிறேன்" என்று சொன்னான். பெரிய மன்னவன் வேண்டி நிற்றலால் என்ன செய்ய முடியும்? ஆம் என ஒப்புக்கொண்டான். அவ்வண்ணமே, வீமனது வழியைத் தடுக்கும்படியாகத் தான் பூசித்த கொன்றை மாலையை யிடையே கிடக்கும்படியாக வீசி யெறிந்தான்.

இலக்கண குமாரன் அழிவு

உற்றபகைவரை முறியடித்துப் பின் புறப்படலாமென்று அபிமன் திரும்பி மாலையைக் கண்டு, "தந்தைக்குத் தனித் தெய்வமாகிய எந்தை சிவபரஞ்சுடர் சென்னியிலணிந்திடும் கொன்றைமாலை எதிர் கிடக்குதே" யென்று வழிமறிக்கப் பட்டுப் பின் உட்புறப்போருக்கு நின்றிட்டான். வீமனும் எதிரிகளது படைகளையெல்லாம் முறியடித்திட்டு உட்புறம் புகும்போது, வழியில் மாலையைக்கண்டு பக்தியால் வணங்கி விலகி நின்று, "இன்றமரில் யாரு முயிர், பொன்றிடினும் ஈசன் அணி, கொன்றை கடவேன் என முன் நின்றனன் நராதிபனே;" இன்று போரில் யாரிறப்பினும், ஈசன் அணிந் திடு கொன்றை மாலையைக் கடந்திடேன் என்று விலகியிருந் தான்.

வீமன் வெளி நின்று பற்பல அரசருடன் போர் பொரு துக் கொண்டிருந்தான். அர்த்தரதர் பலர் வீமன் போரில் மடங்கி வீழ்ந்து மாய்ந்தனர். அங்குக் கன்னனை யபிமன்ன னோடு போர் புரியும்படியாக மன்னன் ஏவி விட்டதனால், அவ் விருவரும் போர் புரிந்துக்கொண்டிருந்தார்கள். அபிமன்னன் விட்ட பகழித் தீயினால், கன்னன் கலங்கி வலியழிந்து நின் றான். உடனே, மன்னன் தம்பியர் பலர், அபிமன்னனுடன் நின்று எதிர்த்துப் பொருதார்கள். இவர்கள் எம்மாத்திரம் வில் விஜயன் குமாரனுக்கு? ஆகையால் அவர்களும் அடியுண் டேகினார்கள்; மன்னன் கட்டளையை மறுக்காமல் துரோணா சாரியரும் அபிமன்னனுடன் போர் செய்து, பின்னுமொரு முறை புறங்காட்டி யோடினார்; முனிவர் மகன் அசுவத்தாம னும் தந்தைக்குத் துணையாக வந்து, அவனும் அபிமனால் புறங்கொடுத் தேகினான். "இவனது கரவேகமும் சரவேக

மும் லக்ஷ்யம் தவறுமையும், என்னே! ஆச்சரியமாயிருக்கின் றது? அதிரத வீரர்களும் நிலைத்து நிற்கமுடியாமல் இப்படி யடித்துக் கொண்டிருக்கிறனென்று" துன்முகன் சித்திர வீரன் மத்திரராஜன், அவன் மக்களில் உருமித்திர மென் பானும் கூடி வந்து தனித் தனியாகப் போர் செய்து புறமிட் டோடினர்கள்; இவர்களில், மத்திரன் மகனாகிய உருமித் திரன் உயிர் விட்டொழிந்தே போனான்; இப்படிக் கெட்டவர் இன்னாரென முட்டவுரைத்திட முடியாமல், கௌரவச் சேனை மன்னவர், அபிமன் கணைக்குப் பலியாகிக் கொண்டே இருந் தார்கள். அபிமன் தனது தேரைச் சுழற்றி வ்யூகத்தின் எல் லாப் பக்கங்களிலும் நின்ற வீரர்களைத் தகர்த்துக் கொண்டே வந்தபோது, தகப்பனால் அனுப்பப் பெற்று இலக்கண குமா ரனும், அதிரத அபிமன் முன்னே அமர் செய்வான் வந்து நேர்ந்தான். மன்னன் மகனுக்குத் துணையாக மன்னர் பல ரும் அனுப்பப்பட்டார்கள். பல மன்னரும் விடும்பகழி யொன்றும் தன் மீதுபடாதபடி கணை கொண்டு தடுத்திட்டு அம்மன்னர் சேனைகளை யம்பு வருஷங்களாற் சிதற அடித் திட்டிருந்தான். தனக்குத் துணையாக அனுப்பப்பட்ட மன்னிளங் குமாரும் அவர் படைகளும் அபிமனால் தொலைத் தழிக்கப்பட்டிருத்தல் கண்ட இலக்கண குமாரன், அர்ச்சுன குமாரன் எதிர் வந்து நின்று போர் செய்தான். "நீ யொரு குழந்தை; மன்னர் மன்னன் புத்திரன்; ஏன் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டாய்; ஒரு கணத்தினில் உன் உயிர் அழிந்திடுமே" என்று அபிமனு கூறி யம்புகளை யேவினான். "உன்னையிம் மன்னரெல்லாம் பார்த்து நகைக்கும்படியாக இவ்வொரு கணத்திலே விண்ணில் ஏற்றுகிறேன்பார்" என்று அவனும் அம்புகளெய்து போர் புரிந்தான். சில நேரம் ஆன வுடன், மைந்தனைத் தளரச் செய்து, அவன் ஏறிவந்த தேரை

யழித்துச் சாரதியை யுருட்டினன் வில் விஜயன் மகனுகிய திறல் அபிமன். இலக்கண குமாரன் மற்ருேரிலக்கணத் தேரிலேறி, சரவர்ஷங்களை யபிமன் மேலெறிந்து நின்று கர்ஜித்தான். "இனி, இவனைக் கீழே வீழ்த்த வேண்டியது தான்" என்றெண்ணி யபிமன்னன், பல பக்குவப் பகழிகளை யிடை விடாமலெய்துக் கொண்டே யிருந்தனன். பையன் நிற்க முடியாமல் திணரிப்போய்ப் போரொழியலாமென் றிருந்தபோது, மேலும் மேலும் பாணங்கள் வீழ்ந்து கொண்டே யிருந்தன. அதனல், குருபதி மகன் அவயவத்தினிற் சென்ற அப்பகழிகளால், கழலற்று இரு தொடையும் நழுவிப் போய்க் கவச மற்றுப் புயங்களற்றுப் பிணமாகக் கீழே வீழ்ந்தான். மன்னர் மன்னனுகிப்பாம்புக்கொடி படைத்துள்ள துரியோதனனது அழகுடைப் புதல்வன் மகன் அழிந்துபட்டான் எனக் கேட்டுத் துரியன், மண்ணில் வீழ்ந்து மாழ்கிக் கண்ணீர் சொரிந்து கவலை மிகக் கொண்டனன். எதிரி மகனை யழித்திட மனத்தாலெண்ணினன்; தன் மகன் அழிந்துபட்டானென்று காதாற் கேட்டான். "தீய நினைத்தால் தீயவை வந்துறும்" என்பது இயற்கை நூல் துணிபு. என்ருலும், வஞ்சநெஞ்சன் விட்டிடுவனே அபிமனை; ஏதேனும் மோசம் செய்து நாசமாக்கிட முயல்வானன்ருே?

அபிமனுடன் அரசர் கடும்போரியற்றல்

துரியோதனன் துக்கத்துடன் சொல்லுகின்ருன்:—

"மன்னவர் மைந்தரோ டென்மைந்தனைக் கொன்ற மைந்தன்
தன்னையு மிமைப்பிற்சென்று சயமுறச் செகுத்தி லீரேல்
பின்னையிவ் வரசும்வேண்டேன் பெருமித வாழ்வும்வேண்டேன்
என்னுயிர் தானும்வேண்டேன் என்றனன் இராசராசன்."

மன்மைந்தர்களேயும் என் மைந்தனேயும் கொன்ற வின் மைந் தன்மைந்தனே யிற்றைப்போது அழிக்காம லிருப்பீராயின், எனக்கு அரசும் வாழ்வும் உயிருமெதற்காக? ஒன்றும் விரும்பமாட்டேன்" என்று சொல்லி, "ஓ" வென்று கத றும்போது, அரசர்களெல்லோரும், "இதோ சென்று, அவ னெடும் பொருது ஆவி யழித்து வருகின்றோம்" எனப் புகன்று, படைகளைத் திரட்டிக்கொண்டு, மன்னர்களெல்லோ ரும் அபிமன்னனைச் சூழ்ந்துகொண்டு வளைந்து போர் செய் தார்கள். வல்லவனொருவனாயினும், மன்னவர் பல்லோரை யழித்திடும் வலனுண்டன்றோ? "எல்லோரையும் எதிர்க்க எங்கிருந்துதான் பலம் பெற்றானோ?" என்று மன்னவர் துதிக் கும்படியாகவே, வந்த மன்னவரெல்லாரும் மயங்கும்படி யாகத் தேரினைச் சுழற்றிப் பகழிகளைத் தூவிப் பிணங்களைக் குவித்துக்கொண்டிருந்தான், சிறுவன்.

"சிலையழிந்தவ ரநேகர் தேரழிந்தவ ரநேகர்
தலையழிந்தவ ரநேகர் தாளழிந்தவ ரநேகர்
நிலையழிந்தவ ரநேகர் நெஞ்சழிந்தவ ரநேகர்
துலையழிந்தவ ரநேகர் தோளழிந்தவ ரநேகர்"

ஆகித் தொலைந்தனர் வந்த மன்னரெல்லாம். இம் மன்னரு டன், சகுனியும் சகுனி மைந்தர் எழுவரும் வந்திருந்தார்கள். சகுனி யொருவன் பிழைத்தோட, ஏழு புத்திரர்களும் மாண்டு போனார்கள்.

மனங்கருகிப் பார்த்துக்கொண்டிருந்த மன்னவன், கர்ணனை யருகே அழைத்து, "நண்ப! இஃதென்னை வேடி க்கை! ஒரு சிறுவன் இப்படிக் களத்தைப் பாழ்படுத்துவதா? அவனுக்கு எதிராக இப்புவியில் வீரரில்லை யெனும்படியல்

லவோ இருக்கின்றது ; இன்னும் இவன் உயிருடனிருந்தால், கிரீடியும் வந்து இவனுடன் கூடுவானாயின், நமக்கு ஆண்மை யேது? மானமிழந்தன்றோ திரும்பவேண்டி யிருக்கும்'' என்று சொல்லக் கர்ணன், "இதோ! நான் போய் அவனைக் கொன்று வருகிறேன்'' என்று போனான். "அது என்ன காரணமோ? அபிமன்னனுக்குத் தான் என்ன வலியோ? என்ன சமர்த்தோ? என்ன தந்திரமோ? என்ன தந்திரமோ? யாமறியோம்; அதிரதர் முதல் எந்த வீரர் சென்றாலும், சிறிது நேரம் கூட நிலைத்துப் போர் செய்ய முடியாமல் அழிந்தோ புறங்கொடுத்தோ ஒழிகின்றனர்'' என்னும் வார்த்தை கர்ணன் விஷயத்தில் இம் முறையும் உண்மையாக முடிந்தது. "சென்றார்; போர் முனையில் நின்றான்; அபிமன்னன் வென்றான்; கர்ணன் திரும்பிச் சென்றான்'' என்னும் அளவிலே முடிந்தது. துற்சாதனன் கடுங் கோபத்துடன் வந்தான்; எதிர்த்து நின்றான்; தேரும் வரி வில்லும் கவசமும் அழிந்து முதுகு காட்டிச் சென்றான். களை நீங்கிய கர்ணன் மறுபடியும்மேல் வந்து, விற்குனித்துப் பாணம் பூட்டிப் பகழிகள் பலவும் ஏவப், பற்குணன் மைந்தனாகிய அபிமன்னுவின் திண்ணிய தேரின் குதிரைகளும் பாகனும் அழிந்து கீழே வீழ்ந்து விட்டனர். முன்னிருந்து பொருது கொண்டிருந்த வில்லு முரிந்தது; மூரித்தேரும் நிலைமை கலங்கி யழிந்தது; அதன் உருளைகளும் நெரிந்து போயின; இத்தனைய மங்கல சூசகம் தோன்றின போதிலும், மைந்தன் கலங்காமல், கையில் கொண்ட வாளுடன் பூமியில் பாய்ந்து நின்றான்.

இது வரையில், விற்பணியே கொண்டு, பகைவரை வென்றவன், இப்போது வாட்பணி கொண்டு மாற்றாரை

மலங்க அடித்தான். வாளைக் கையிலேந்தி இடசாரி வலசாரி யாகவும் சுழன்றும் வரிசைகள் எல்லாம் காட்டிப் பகைவரை யழித்து நின்றான். துச்சாதனன் மகனொருவன் வந்து நின்று வில்விற்றொடுத்த கணைகளை வாரி யெறிந்து கொண் டிருந்தான். அந்தக் கணைகளை யெல்லாம், அபிமன் வாள் கொண்டே துணித்தெறிந்தான். துரோணாசாரியர் மீண்டும் வந்தார். சிறுவன் சிரித்து வாள் கொண்டு சுழற்றி வீசியவர் அருகே வரவிடாமல் தூரத்தினான். தேரினின்ற ஆசிரியர், மிகக் கோபம் கொண்டு, கடுங்கணைகள் எடுத்து, அபிமன்ன னது வாளுடைய கைக்குக் குறி பார்த்து எய்து விட்டார்; அக்கணை சென்று அபிமன்னனுடைய கையை வாளுடன் துணித்து வீழ்த்தி விட்டது. மைந்தன், ஒருதோள் அறுந்து போகவும், மற்றொரு தோள் கொண்டே பொரு தற்கு உன்னினான். முன்னம் தனக்குத் தன் மாமன் உப தேசித்திருந்த மந்திரத்தை ஜபித்து, ஒரு மணிச் சக்கரத்தைச் சக்ராயுதமாக்கி யுச்சாடனம் செய்து விட்டு விட்டான். அச் சக்கரம் மந்திர வலியுடையதாகையால், பாய்ந்து சென்று சேனைகளைச் சிதற அடித்துக் கொண்டிருந்தது. மன்னர் மயங்கினர்; மறையவர் ஒதுங்கினர்; கர்ணனும் கலங்கினான்; கருதலர் புறமிட்டோடினார்கள்.

அபிமன்னன் அழிந்து வீழல்

"என்ன! ஆச்சரியமிது!! ஒருவனே; அதிலும் சிறு வனே; இந்தச் சக்ர வியூகத்தைத் தாண்டி வந்து, இன்றைப் போரில், குறிப்பிட்ட மலரைக் கொன்றழித்துக், களமெலாம் பிணக்களமாக்கி அதிரதர் என்னும் கௌரவமே யார்க்குமில் லாதபடி செய்து, இன்றெல்லாம் இவனது போரே யெனும் படி மலைந்திட்டானே; தவிர, வில்லும்போய்த் தேரும்போய்

வாளைக் கையிலேந்தி நின்றும், வில்லபிமன் என்றெண்ணி யிருந்த நமக்கு, வாளபிமன் எனும்படி அவ்வாளைக் கொண்டும் அப்போரே நடத்தினன்; முடிவில் வாளொடு ஒரு தோளு மற்ருன் என்றெண்ணினேம்; ஒரு தோளும் ஒரு சக்ரமும் கொண்டு உலகத்தையே அழித்திடுகின்ருன். இனி இவன் என்னென்ன கற்றிருக்கின்ருனே? மாமனுக்குத் தக்க மருகன்தான்" என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கப் பொருத துரியன், முன்னம் சதி கூறி வைத்தபடி செய்யச் சிந்து ராஜனை யழைத்து வரும்படி யேவினன். அவனும் வந்து சேர்ந்தான்.

"சிந்துபதி! உனக்குச் சிரமம் கொடுக்கப்படாதென எண்ணி எத்துணை யுக்திகள் செய்தாலும், இச்சிறுவன் அழியாமல் வீரங்காட்டி நம்மையெல்லாம் வெட்கும்படிச் செய்து, நம் மைந்தர் பலரையும் கொன்று திரிகின்ருன். தோழிந்து வில்லழிந்தும் வாளைக்கொண்டே பல ஆளைக் கொன்ருன்; பின்னர், அவ்வாளுடன் ஒரு தோளும்போ யொழிந்தும், மற்றொரு தோளும் உருளையும் துணைகொண்டு, மன்னரை வீழ்த்துகின்ருன்; ஆகையினுல், நீ, இன்று சிரமம் பாராமல், தேருடன் சென்று உனது முழுவலியும் காட்டி, உனக்குச் சிவபிரான் அருளிய அக்கதையினுல், அபிமனை மோதி யந்தகனுலகுக்கு அனுப்பவேண்டுகிறேன். இஃதின்றெனில், இன்று நமக்கு வெற்றியேயில்லை; உன்னை மிக வேண்டினேன்" என்று சொன்னன் இராஜாதிராஜ ராஜகம்பீர துரியோதன ராஜன்.

"மன்னவர் மன்ன! இத்தொழிலுக்கு இத்துணை யுபசாரவார்த்தைகளும் வேண்டுமா? போர்க்குத் துணைபுரிய வந்த எங்கட்கு இது கடமையே யன்ருே? முன்னமொரு

முறை யிது ஒப்புக்கொள்ளப்பட்டதுதானே! இதோ இப் போதே போகிறேன்; நீங்கள் கவலைப்படல் வேண்டாம்" என்று சொல்லி, நான்கு குதிரைகள் பூட்டிய ரதத்தின்மீதே றிக்கொண்டு, மைந்தனிருக்குமிடம் சேர்ந்தான்.

அபிமனே, "நாம் பகைவரால் வஞ்சிக்கப்பட்டிருக்கின் றோம். நமது சிற்றப்பனை நம்மிடம் வரமுடியாதபடியும் நாம் அங்குப் போகமுடியாதபடியும் கொன்றை மாலையைக் கிடத்தித் தடுத்திருக்கின்றார்கள். சக்ர வ்யூஹ முறையைக் கடந்து அதர்மப் போரும் கண்டார்கள். அன்றியும், நான் ஒரு வாளோடு நிற்கும்போது, பலபேர்கள் தேர்கள்மீதேறி விற்கொண்டு கணைபொழிந்தார்கள்; தோளும் வாளும் அற் றுப் போம்படிச் செய்த மறையவரும், தனுமறையை மறந் தவரானார். மன்னன் முதல் மறையவர்வரை யாரும் முறை பிறழ்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இது வஞ்சப்போரில் என்னை மடிப்பதற்கென்றே செய்த சூழ்ச்சியாகத் தெரிகின் றது. கண்ணன் கழலிணைதான் இனி நமக்குக் கதி; இது வரையில் நின்ற முறையிலிருந்து யோசித்துப் பார்க்கும் போது, இன்றே நமக்கு முடிவுநாளெனத் தெரிகின்றது; ஆகையினால், மற்றொன்றும் நினைவில்லாமல், மாயன் கழ லிணைகளே பற்றாகக்கொண்டு, முடியும்வரையில் இப்பகைவர் படையை யொழித்து மாள்கிறேன். பின், இவரை வெல்லல் என் பெற்றோர்க்குச் சுலபமாகும்" என்று எண்ணித் தீர் மானித்திருந்தான். அப்போது அதிவேகமாக ஒரு ரதம் தன்னை நாடி யோடித் துணிவுடன் வருதலைத் தெரிந்தான். வருபவன் சிந்துபதி யென்பது முணர்ந்தான்.

எமனுடைய கைத்தண்டம்போல் கையிலொரு தண் டத்தை யேந்திக் கொண்டு வந்திருக்கும் சிந்துபதியாகிய

ஜயத்திரதனைப் பார்த்து, உள்ள ஒரு கையில் சக்கரமேந்தி நிற்கும் அபிமன்னன், சக்கரத்தைக் கீழே வீழ்த்திக் கையில் தண்டமேந்தி கர கரவென்று சுழற்றி ஜயத்திரதனை யடித்தான். இருவரும் சிறிது காலம் தண்டப் போர் செய்தார்கள். மலை போன்ற தமது புஜவலிமை கொண்டு இருவரும் கதை கொண்டடித்துக் கொண்ட ஒலியானது, ஆகாயத்தில் இடி இடித்ததுபோ லிருந்தது. சிந்துபதியின் உடம்பெலும்புகளெல்லாம் ஒடிந்து போகும்படியாகவும், அவனுடைய குடலாகிய வளைகொடியானது நிமிர்ந்து போகும்படியாகவும் தனது கைக்கதையினால் அபிமன்னன் அடித்துக் கொண்டிருந்தலால், சிந்துபதி தளர்ந்து போய்த் தனது தேரின் மீதிருந்து கொண்டே வில்விற் கணைகளைப் பூட்டிப் பாணங்களை மழையைப் போற்பொழிந்து கொண்டிருந்தான். அபிமன் கதையைக் கீழே போட்டு விட்டு, மறுபடியும் அந்தத்திகிரியையே யெடுத்துக் கொண்டு, அதனையே தனக்குக் கத்தியாகவும் கேடயமாகவும் தனக்குள்ளதாகிய ஒரு கையிலேயே பிடித்துக் கொண்டு, சிந்துபதி விடும் பாணங்களைத் தடுப்பதும் ஒடிப்பதும் செய்து தன்னைக் காத்துக்கொண் டிருந்தான். வெகு நேரம் இப்படி இவனுடன் போர் செய்த ஜயத்திரதன் வெட்கிப்போய், "இவ்வபி மன்னனை மனித வலி கொண்டு புயவலியால் மாத்திரம் வென்றுவிட முடியாது. தெய்வ வலிகொண்டு வஞ்சனையாகிய பலத்தால்தான் வெல்ல வேண்டும்; இவனே தக்க வீரன், எப்போரினும் வல்லவன்; அதிரதரிற் சிறந்தவன்; பிதாவின் திறத்தையும் மாமனது சூழ்ச்சியையும் கொண்டு விளங்குகின்றான்; கபடச் செய்கையினால் அப்போது நான் சிவபிரானது கொன்றை மாலையைக் கொண்டு கோட்டையாக வளைத்திராவிட்டால், அப்போதே இவன் எல்லாப் பகைவரையும் வென்று தன் கூட்டத்

தாரோடு சேர்ந்து, தனது கட்சியை வெல்ல முடியாத நிலைமையில் ஆக்கியிருப்பான்; அப்போதும் ஒரு வஞ்சத்தினாலும் தெய்வ வேஷத்தாலும்தான் தோற்கடித்தோம்; இப்போதும் இவனைக்கொல்லாது விட்டால், இவன் தப்பிப்போய்த் தனது பக்கத்துக்குப் பக்கத்துணையாக நின்று, பாண்டவரை யொருவராலும் வெல்ல முடியாதவராக்கி விடுவான்; நம்மரசனுக்கோ வெற்றிதான் குறியே யொழிய தர்மா தர்ம விவேசனம் வேண்டாம்; ஆகையால் நாமென் செய்வது? இது வரையில் இவனுடன் தர்மப் போர் நடத்திப் பார்த்தோம்; அது பலிக்கவில்லை; மன்னனிடமோ வாக்குக் கொடுத்து வந்தாய் விட்டது; இனிப் பின்னின்று பலனில்லை; புண்ணிய பாவம் மன்னனைச் சேர்ந்தது; ஆகையினால் என் வலியிழந்த யான், பரமசிவன் கொடுத்த கதை வலியைக் கொண்டே இவனை யொழித்து விடுகிறேன்" என்று எண்ணி, முன்னம் போர் செய்த கதையை யெடுக்காமல், பரமசிவனருளிய கதையை யிரண்டு கைகளாலு மேந்திப் பூசித்து வணங்கி மனவெறுப்புடன் தேரினின்றும் கீழிறங்கி அபிமன்னன் பேரிலெறிந்து விட்டான்; அது கர கரவென்று சுழன்று போய்ச் சிறுவன் மேற் பாய்ந்தது; விற்போர் நடத்திக்கொண் டிருக்கிறான் என்று எண்ணியே, தனக்குள்ள ஒரு கையிற் சக்கரமேந்தி நின்ற அபிமன்னன், எதிரி கபடமாக அப்போரை மாற்றித் தண்டப்போர் எடுத்த தன்மையை யுணராதிருந்த போது, அந்தச் சிவதண்டம் வந்து, சிவபக்தியிற் சிறந்து, சிவனது கொன்றை மாலையில் வஞ்சிக்கப்பட்ட சிறுவனது மற்றொரு புஜத்தையும் மார்பையும் தாக்கித் தகர்த்தது; வஞ்சனை யறிந்த அபிமனன் கீழே விழுந்தருணம் வந்த போதும் மனவலி குறையாமல், தனது தண்டத்தைச் சுழற்றி யருகு நின்றிடும் சிந்துபதியின்மே லெறிந்துவிட்டுத் தானும்

உயிரழிந்து கீழே வீழ்ந்துவிட்டான்; சிறிதுநேரம் சரீரம் புரண்டு பின் உயிர்ப்படங்கிப் போயது; அபிமன்னன் கதை பட்ட சிந்துபதியும் கீழே வீழ்ந்து மூர்ச்சித்தனன்; ஆயினும், தெளிந்து எழுந்து கொண்டான். இங்ஙனம் பல்லிலக்கம் மன்னர்களிற் பல்லாயிரவரைப் பலிகொடுத்துப் பின் ஒருவர் தேரை யழித்திடவும் ஒருவர் வில்லை யழித்திடவும் ஒருவர் ஒரு தோளறுத்திடவும் இன்னொருவர் மற்றொரு தோளறுத்திடவும் இங்ஙனம் அச்சிறுவனை வஞ்சத்தாற் கொன்று வீழ்த்தினர்கள்.

அபிமன்னன் மாண்டு வீழ்ந்தனனாயினும், அவனது பெயரும் வீரமும் புகழும் மாண்டுபோகவில்லை; துரியோதனன் வஞ்சத்தால் வெற்றிபெற்றனன் ஆயினும், அவனது போர் வெற்றிபெறவில்லை; வீரம் வெற்றி பெறவில்லை; துணை மன்னர் வெற்றி பெறவில்லை; துரியன் பக்கமுள்ள மன்னர் மறையவர் துணைவர் யாவரும் அபிமன்னனைப் புகழ்ந்தார்களே யன்றிச் சிந்துபதியையாவது துரியோதனனையாவது புகழ்ந்தார்களிலர்; துரியோதனன் முதல் அந்நால்வரே யன்றிப் பீமனைப் புகழாதவர் அந்தத் திறத்திலும் யாருமில்லையென்றால், மற்றவரைப்பற்றிச் சொல்லவேண்டுமோ?

"ஓரிரண்டு வயவர் முனைந்துடன் பொருத
லுலகியற்கை ஒருவன் தன்மேல்
போரிரண்டு புறமும் வளைந் தொருகோடி
முடிவேந்தர் பொருது கொன்றார்
தேரிரண்டு கிடையாத குறையன்றோ களத்த
விந்தான் சிறுவ னென்றென்
றீரிரண்டு பெய ரொழிய மற்றுள்ளார்
அழுதிரங்கி யென்பட் டாரே."

தருமனுதியர் கேட்டயர்தல்

"மகனிறந்துபட்டான்; அபிமன்னன் பட்டொழிந்தான்; பகைவரால் வஞ்சிக்கப்பட்டிறந்தான்; மாலையினுல் மயக்குண்டு மைந்தன் அழிந்தான்; ஒருகோடிப் பெயரோடும் பொருது உயிர் நீங்கினுன்; அதர்ம யுத்தத்தால் அடிபட்டான்" என்று தருமராஜன் கேட்டவுடனே, இடிவிழுந்தாலென மயங்கி மனமழிந்து உடல்பிளந்து மூர்ச்சையாகி உடம்பெல்லாம் வியர்வை விட்டுத் தேருது, "அப்பா! அபிமா!! ஆற்றலே யுருக்கொண்ட தேசார் அறிவே!

"பிறந்த தினம் முதலாகப் பெற்றெடுத்த
விடலையினும் பீடும்தேசம்
சிறந்தனே யென்றுனைக் கொண்டே தெவ்வரை
வென்றுலகாளச் சிந்தித்தேனே
மறந்தனையோ வெங்களையும் மாலையினுல்
வளைப்புண்டு மருவார் போரில்
இறந்தனையோ என்கண்ணே யென்னுயிரே
அபிமாவின் றென் செய்தாயே"

இப்போரில் வெற்றி கொளற்கு மூத்தோராகிய உன்தகப்பன் விஜயனும் மலைபோலும் தோள்பெற்ற வீமனுமிருக்க தந்திரத்திற் சிறந்த தம்பியரிருக்க, யாவர்க்கும் மூத்துள்ள யானிருக்க, உன் மாமனுகிய மாகதமலை யிருக்க மற்றுமுள்ள மன்னவர்கள் தாமிருக்க வினையறியாத இளஞ்சிங்கம்போன்ற நீ யொருவன் வஞ்சகர் தம் வஞ்சனையா லிறந்து மாளுவதோ! அப்பா! என்னருமைப் புதல்வா!! ஐவர்க்கு மோருயிரே! அபிமன்னு! ஐயோ! என்னை யிங்குக் காத்து நின்றனையே! 'நெடுந்தே ரூர்ந்து போய் வா' வென்று நான் சொல்ல உடன் சென்றனையே!! உடையாத சக்ரவ்யூகத்

தையு முடைத்துப் பலபேரை வென்றனையே! வஞ்சமன்னன் மகன் முதலாய மன்னர்கள் மக்களையும்கொன்றனையே! உனது ஆண்மையையும் வெற்றியையும் நேரேவந்து சொல்லற்கு வெட்கமடைந்து மண்ணில் வீழ்ந்து விண்ணுலகுக் கேகினையோ! என்னப்பா!! என்னுயிரே! என் செய்வேன் யான்! பற்குணனுக்குப் பதிலென்ன சொல்வேனே? பாரதத் தனி வீரச்சிங்கமே'' என்றென்று ஆற்ருமல் அழுது கொண்டே யிருந்தார்; ஆற்றுவார் ஒருவரில்லை; யார் ஆற்றுவார்? எல்லோரும் அழுதுகொண் டிருக்கிருர்கள். இளையோர்கள் இடியேறுண்ட நாகம்போ லேங்கி வீழ்ந்தார்கள்; வீமனே நாகவிடம் தலைக்கேறிய யானைபோல் வீழ்ந்து விட்டான்; மூர்ச்சை தெளிந்து, அறிவுவந்து புலம்புகின்றான் வீமன்.

"சங்க லாரிடை வளைத்த சக்கரத்தை
யுடைப்பதற்குத் தமியே னெய்தி
அங்கு லாவரு மிரதத் தாசரையுந்
தொலைத்துன்னை யடுப்பான் வந்தேன்
பங்குகலாம் மரகதமாம் பவள நிறப்
பொருப்புதவு பைம்பொற் கொன்றைத்
தொங்க வாற் கோறுவித்த சூழ்ச்சியை
யின்றறிந்திலனே தோன்றலே நான்."

"அந்தோ! மின்னும விடித்ததுபோ லாயிற்றே! என் செய்வேன்? வில்விஜயன் பெற்றெடுத்த வாள் அபிமா!! பாண்டவர் தம் குலக் கொழுந்தே!!! பஞ்சவர் தம்மாருயிரே! சிவன் தலையிற் சூடிய பொற்கொன்றை மாலையாலும் சிவன் கொடுத்த கதையாலுமன்றி, அபிமனை யமரில் வென்ருர் யாரே! அந்தோ!! எனது சேனை போன்றதொரு

ஆனையைப் பெரும் பூனையெல்லாம் சிறுவஞ்சத்தாற் கொன் றனவே, என்ன செய்வேன்? உயிரழியாமல் யான் இன்னம் மிங்கு இருக்கின்றேனே!" என்று அழ இளையவரும் அழுது மாழ்கினார்கள்.

கௌரவர் தமது மிகுந்த சேனையுடன் பாடி சேர்ந்தார் கள். பாண்டவரும் நடவாமல் நடந்து பெருந் துக்கத்துடன் விஜயற்கென் சொல்வதெனப் பாசறை போய்ச் சேர்ந்தார் கள். சூரியனும் மிகவும் துக்கத்துக்கு ஆற்றாதவனாகித் தனஞ் சயனுக்குப் பயந்தவன்போல் தன் ஒளி குன்றிக் கரங்களை யெல்லாம் ஒடுக்கிக்கொண்டு சென்று திசையெல்லாம் சிவப் பேற அஸ்தகிரியிற்போ யொளித்துக் கொண்டான்.

கண்ண னியற்றிய கரவு.

இங்கே செய்தி இப்படியிருக்கத், தென்திசையில் வந்து தன்னோடு போர் தொடுத்தாரை யெல்லாம் தென் திசைக்கே அனுப்பிவிட்டு அஸ்தமன காலமாகி விட்டபடியால், விஜயன் பரந்தாமன் தேர் நடத்தப் பாசறைக்குத் திரும்பினான். கண் ணன் முக்காலமும் உணர்பவ ராகையால், தாம்தெற்குத் திக்கி லிருந்துகொண்டு விஜயனுக்குத் தேர் நடத்தினாலும், எங்கு நடப்பதும் அவர் மனத்துத் தங்கி நிற்குமாகையால், இங்கே நடந்த அபிமன் செய்தியையும் அறிந்துள்ளவர்தாம். ஆனால், அபிமன் தனியே இருந்து வஞ்சத்தாற் கொல்லப்படு வதை யறிந்திருந்தும், அர்ச்சுனனுக்கு உணர்த்தாம லிருந்தமாயம் அவர்தாமறிவர்; என்னவோ உணர்த்தா மலே இருந்துவிட்டார்; எனினும், தேர் செலுத்திக்கொண்டு விடுதிக்குத் திரும்பும் காலையில் மாத்திரம் யோசனை செய்து கொண்டே வருகிறார்; "பாசறைக்குப் போய்ச் சேர்ந்த

வுடன், பார்த்தனுக்குச் செய்தி தெரிந்திடுமே ; தெரிந்த வுடன், உயிரனைய புத்திரனிறந்ததற்கு ஆற்ருமல் உயிர்விட வும் துணிந்திடுவான் ; அவன் உயிர்விடின், பாண்டவர் சபதம் நிறைவேருது அழிவர். பாருலகும் பாலிப்பும் துஷ்ட கௌரவரிடமே சேர்ந்து அதர்மமே தலையெடுத்திடுமே'' யென ஓர்ந்து, ஒரு யுக்தி செய்தார். மனத்தின்கண் இந்திரனை வாச்செய்தார் ; அவனும் வந்தான் ; "இந்திரா ! உன் மகன் அர்ச்சுனன் மைந்தனிறந்த ஆருமையால் இறந்துபடா வண்ணம் மாயச் சூழ்ச்சி செய்திடுவாய்'' என்று மனத்தின் கண் குறிப்பாலுணர்த்தினர். அவனும் அப்படியே ஆகவென உணர்த்திப் போனன்.

அழுகிழவனும் அர்ச்சுனனும்

இந்திரன், கண்ணன் கட்டளைப்படியே ஒரு கிழ முனிவனுக உருத் தாங்கிக்கொண்டு, இறந்த தன்னெரு மகனைக் கையிலேந்தி யிவ்விருவரும் காணும்படியாகத் தீயிலிட்டுத் தானும், புத்திரசோகம் பொருமல் அப்புத்திரனுடன் அத்தீயில் வீழ்ந்திடுவதாகச் சோகித்து அழுது அரற்றித் தீயைச் சுற்றிவந்துகொண்டிருந்தான். அதனை யர்ச்சுனர்க்குக் கண்ணன் காட்டி, "அர்ச்சுன, விதி யாரைவிட்டது ? விதியினல் மகனிறந்திருக்க இந்தக் கிழவன் தானு மிறக்கப் பார்க்கிருன்; இது சுபம் ருத்யுவாகும்; இதை நாம் பார்த்துச் சும்மா இருத்தல்கூடாது ; நீ, அரசனுகலின், சென்று தடுப்பாயாக''என்று வற்புறுத்தினர்.

அறிவும் இளகிய நெஞ்சும் உடையவனுகலின், அர்ச்சுனனும் தேரிழிந்து குதித்தோடிக் கிழவனருகு சென்று, "ஓய் ! விப்பிரரே !! என்ன காரியம் செய்கிறீர் ? எல்லா

முணர்ந்தும் யாவர்க்கும் போதித்தும், புத்ரசோகத்தால் அறிவு இழந்து இதனைச் செய்கிறீர்போலும்; தாய் ஆர் தந்தை ஆர் தாரம் ஆர் மக்கள் ஆர்? இவையெல்லாம் சந்தியிற் கூட்டமன்றோ? அவரவர் வினைவழி அவரவர் அடைய இருக்கின்றார்கள்; தேக சம்பந்தம் உள்ளவரையில், இவ்வுலக நடப்புக்கு உறவுதான்; தேகமொழிந்தால் கூட அழிவாருண்டா? அறிவிலாதவனும் இதனைச் செய்யானே? எல்லாந் தெரிந்தும் ஏன் பரிதபிக்கிறீர்? பீள் பிதுக்கிப் பிள்ளையைத் தாயலறக் கொள்ளும் எமனுடைய கள்ளத்தை யாம் முன்னே உணர்ந்திருத்தல் எப்படிக்கூடும்? 'சட்டி சுட்டது கை விட்டது' எனும்படித் தொடர்பொழிந்தால், எல்லாம் ஒழிந்தது என்றிராமல், இவனுடன் வீழ நினைக்கிறீரே! அப்படி வீழ்ந்துவிட்டால் இறந்தவன் எழுந்து வருவனோ? எடுத்த பிராரப்தத்தை யொழித்துவிட்டான், அவன்; ஒழிந்து வேறொரு தாயையும் தந்தையும் தேடிப் போகிறான்; பிராரப்தம் நீங்குதற்குமுன், நீர் இறந்தால், எரிவாய்ப் பேயாக இருந்தல்லவோ உழலவேண்டும்; அஃது உமக்கும் உலகத்துக்கும் கேடல்லவோ? அதைச் செய்யாதேயும்; நீர் உயிருடனிருந்தால் பின்னும் புத்திரரைப்பெற்றுப் பிதுர்க்கடனையுமொழிந்திடலாம்" என்று தடுத்து முனிவனைத் தழுவிக் கொண்டான்.

தன்னைத் தடுத்து நின்ற விஜயனை நோக்கி, அந்தக் கிழவன், "ஐயா! என்னை யேன் தடுக்கின்றீர்! தலைவலியும் நோவும் தனக்கு வந்தால் தெரியுமென்பார்கள்; நானும் பிறர்க்கு இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தேன்; இப்போது தெரிகின்றது புத்திரனை இழந்த துயரம்! என் மகன் இறந்தானென்று நான் சாகத்துணியும்போது தடுக்கின்

றனையே! உன் மகனிறந்து நீ உயிர் விடத் துணியும்போது நான் தடுத்தால் நிற்பாய் போலும்" என்று கோபத்துடன் கேட்டான். நகைத்து, விஜயன், "அந்தணரே! அப்படியே யாகட்டும்; என் மகன் இறந்து நான் உயிரிழப்பதாகத் துணிந்தபோது, நீர் வந்து தடுத்திடும்; இறவாதொழிகின்றேன்" என்று சொல்லி யக்கிழவனுயிரை மீட்டுக் கொடுத்துப்பின் தேரிலேறித் திரும்பினான்.

பாண்டவர் பாசறைச் செய்தி.

கிழவேதியனுக்குச் சமாதானம் செய்து அவனதுயிரை மீட்டுத் திரும்பிப் பாசறைக்குச் சமீபமாய் வரும்போது, பாசறையிலிருந்து, கடலொலிக்கு மேலான அழுகையொலி இருவர் செவிகட்கு மெட்டியது; இஃதென்னே யென்று பிரமித்து விஜயன் அணுகும் வேலையிற் கண்ணன் கீழிறங்கி அர்ச்சுனனுடைய வில் அம்புப் புட்டில் கதை வாள் முதலிய ஆயுத வகைகளைத் தேரினின்றும் எடுத்துக் கொண்டுபோய்ப் பாசறை சேர்த்தனர். கையால் வயிறலைத்து யாவரும் அழுங் குரல் கேட்டுக் கண்ணனை வணங்கி, "ஏன் இந்த அழுகை; நமது சேனையிற் சிறந்தவர் யாரேனும் மாண்டனரோ? பஞ்சவரில் யாருக்கேனும் தீதுண்டோ?" என்று வினவினான். கண்ணன் யாதும் பதிற்சொல்லாது, கண்களில் முத்து முத்தாக நீரைச் சொட்ட விட்டுக் கொண்டிருந்தார். மிகுந்த துக்கங் கொண்டு, அர்ச்சுனன், "கண்ணா! இஃதென்ன விந்தை! ஒன்றும் சொல்லாமல் நீரும் கூட இப்படி யழுகின்றீரே! பெரிய நஷ்டம்போல் தோன்றுகின்றதே! என் துணைவர்களில் யாராவது அழிந்த துண்டோ? அன்றிப் புத்திரர்களில் யாரேனு முண்டோ?" என்று வணங்கிக் கேட்டான்.

"ஐயோ! அர்ச்சுனா!! திங்கள் மரபினிற்குரிய செல்வா!!! என் மருமகன்; அபிமனன்; உன் அருமை மகன்; சக்ர வ்யூகத்தைச் சமர்த்தாய்க் கடந்து சென்றவன்; பகைவரால் வஞ்சனையிற் கொல்லப்பட்டிறந்தான்" என்று கண்களில் தாரையாய்ப் பெருக்கி வாய் குழறி மெய்ந்நடுங்கி வீழ்ந்தார்; "அந்தோ! என் மகனே! அபிமனு! வாளபிமனு! போர்ச்சிங்கமா! ஐயோ என்ன செய்வேன் மகனே" என்று அழுதான்; அதற்குமேற் பேச்சில்லை; தேரிலிருந்தே பூமியின்மேல் வீழ்ந்து விட்டான். மூர்ச்சையாகி வீழ்ந்த அர்ச்சுனனைக் கண்ணன் தடங்கைகள் கொண்டு தழுவி யெடுத்து, வாசப் பூசுநீர் தெளித்து மாற்றி யுயிர்ப்பித்தார்.

விஜயன், உயிர்த்தெழுந்து, "அந்தோ! என் மைந்தா!!! அபிமா! நான் இனி யென்ன செய்வேன்? என் ஆருயிரே!

"போரினிற் றுணைவரோடு புயங்க கேதனனை வென்று
பாரெனக் களித்திநீயே யென்றுளம் பரிவு கூர்ந்தேன்
நேருனக் கொருவரில்லாய் நிகளம் பட்டாயாகில்
ஆரினிச் செகுக்க வல்லார் ஐவருக்குரிய கோவே."

துணைவர்களுடன் பாம்புக் கொடியனை வென்று எமக்குப் பாரினைத் தருவாய் நீயே யென்றெண்ணி யிருந்தேனே! அப்பா! அபிமா!! அதிரதர்களில் அதிரதனே! நேர் யாருமில்லாத நிறையுடையாய்! ஐவருக்கும் உயிர் போன்ற நீ இங்ஙனம் இறந்துபட்டால், இனிப் போரில் வெல்வார் யாரிருக்கின்றார்கள்! புத்திரனாகவா உன்னை நான் மதித்திருந்தேன்; எனக்கொரு காப்புக் கடவுளாக மதித்திருந்தேனே; மாயவஞ்சகப் பாவியர், மாலையாலுனை வஞ்சித்தனரா? ஆகா! என்ன செய்வேன்! உனது போர்த்திறத்தை யெல்லாம் எனக்கு முன்வந்து உனது வாயாற்



சொல்ல நான் கேட்கவேண்டாமா? கண்ணே! யென் கண்ணின் மணியே! சூரியனுதிக்குமுன்னே யென்னைக் கண்மலர்த்தி ஸ்நானம் முதலிய செய்வித்துப் போர்க்குரியனவெல்லாம் அமைத்து வைப்பாயே! போர் முடிந்து நான் வரும்போது எதிர்வந்து அழைத்து வருவையே! இன்று உன் முகம் காணுத பாவியானேனே'' என்றென்று அழுதாற்றி யேங்கினுன்; எழுந்தான்; நிற்க முடியாமல் விழுந்தான்; கைலாகு கொடுத்துப் பாசறைக்கு அழைத்துச் சென்ருர்கள்.

பார்த்தன் தீயிற்பாய நினைத்தல்.

அங்குத் தமையன் முதலியோர் ஒன்றும் சொல்ல முடியாமல் தலைகவிழ்த்து தேம்பித் தேம்பி யழுதுகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டவுடன்; "அண்ணு தருமப்பிரபு!! நான் இனி யென்செய்வேன்! அபிமனனை, என் அருமை மகனைக் கண்டீர்களா? என் கண்முன் கொணர்ந்து காட்டினீர்களா? ஐயோ! நான் என்ன செய்வேன்? எனக்கு இனிமேல் உலகில் வாழ்க்கை வேண்டாம்; என் அருமைக் கண்மணியை யிழந்தும் இனி நானுயிருடன் வாழ்வேனு? என் இளஞ்சிங்கம் மறைந்துவிட்டதே! இனி எனக்கு எதற்கு வாழ்வு!'' என்று தலையில் கைவைத்து ஓவென் றலறிக்கொண் டிருக்கும்போது, வியாஸமுனிவர் வந்து சேர்ந்தார். அர்ச்சுனனைப் பார்த்துச் சமாதானம் கூறி, "மன்னு! அர்ச்சுனு! அழவேண்டாம்! அழுது பயனென்ன? மாண்டார் திரும்புவரோ மானிலத்தில்—

"தாயரொடு தந்தையர்கள் தாரமொடு தனையோர்
தூயதுணை வோர்களொடு சுற்றமென நின்றோர்
மாயையெனும் வல்லபம் மயக்குறு மயக்கால்
ஆயவுற வல்லதவ ரார்முடிவில் யாமார்?"

எல்லாம், இந்த உடலின் பந்தமேயல்லாமல், வேறில்லையே; இஃது ஒழிந்துபோனபிறகு, உறுந் துயரிற் பயனேது? நாம் பிறவாத மனையுண்டா? கொள்ளாத பாலுண்டா? அணையாத மக்களுண்டா? யாரைத் தந்தையென்றும் யாரைத் தாயென்றும் யாரைக் களத்ரமென்றும் சொல்வது? எல்லோரும் தந்தையரே; யாவரும் தாயரே; அனைவோரும் களத்திரர்களே! முன் பிறவிகளும் பின் பிறவிகளும் எண்ண முடியுமா? ஆகையாற் பிறப்பதும் இறப்பது மியற்கையன்றோ? வீணே, இயற்கை நட்பைக்கண்டு அறிவாளிகள் துக்கப்படுவார்களா! விடு விடு! எழுந்திரு! மேல் ஆக வேண்டிய காரியத்தைக் கவனி!'' என்று சொன்னார்.

விஜயன், அதனைச் செவிக்கொள்ளவே இல்லை; புத்திர சோகம் பொறுக்க முடியாமல், இனி உயிர் வாழ்தலில்லையென்றே தீர்மானித்துச் சகாதேவனைக் கொண்டு பெருந்தீ வளர்க்கச் செய்து, அதில் விழுவதாகத் தீர்மானித்து விட்டான்; யாரும் தடுக்க முன் வரவில்லை; தர்மன் நடுங்கி நின்றுவிட்டார்; பீமன் பிரமித்து நின்றான். கண்ணபிரானும் ஏதுமியற்ற மாட்டாதவராகி, யிந்திரனாகிய வேதியரை நினைக்க, உடன்வரப் பார்த்தார்; அந்தக் கிழப் பிராம்மணன் அருகே வந்து, “அர்ச்சுனா! என் புதல்வனோடு நான் இறப்பதைத் தவிர்த்த நீ, உன் புதல்வனோடு நீ எரியில் வீழ்ந்திடுதல் நெறியோ? முன் எனக்குச் சொன்ன வழக்குப் படியே நீ இப்போது அக்கினியை விட்டு இப்புறத்து வந்திடுதல் வேண்டும்'' என்று சொல்லிக் கையைப் பிடித்துக் கொண்டு நிறுத்தி விட்டார்.

விஜயன் வஞ்சினம் மொழிதல்.

அர்ச்சுனன், மறுவார்த்தை சொல்ல முடியாதவனாகி, ஆனால், துக்கமும் அதனால் எழுந்த கோபமும் தணியாதவ

ஞகித் தமையன் மாரிருவரையும் பார்த்துப், "போர்க்குத் தனியே செல்ல விட்டதற்கும், அருகு சென்றும், மாலே மயக்கிஞற் காவாது தவறினதற்குமாகக் கோபித்துக் கொண்டு, இளேயோரையும் பார்த்துச் சுளித்துக் கொண்டு, கிழ வேதியர் செய்தி மாயக்கண்ணன் செய்த சூழ்ச்சி தான் என்று தெரிந்து, கண்ணனேயும் ஒருவகையாகப் பார்த்து விட்டு, நாளே, சூர்பாஸ்தமனத்திற்குள் அபிமனேக் கொன்ற அந்த சிந்துபதியைக் கொன்றிடுவேன்; கொல்லேனுயின், இந்த அக்கினியிலேயே வீழ்ந்து மாள்வேன்" என்று சூளுரைகள் கூறினுன்.

சூளுரைகள்.

"சிந்துபதியாகிய செயத்திர த்னேத்தேர்
உந்த மரிஞளே யுருமேறென வுடற்ரு
அந்திபடு மவ்வளவின் ஆவிகவரேனேல்
வெந்தழலின் வீழ்வனிது வேதமொழி யென்ருன்."

"இன்றபிமன் வாளமரினின் றுயிரிழக்கக்
கொன்றவனே நாளேயுயிர் கோறல் புரியேனேல்
மன்றிலொரு சார்புற வழக்கற வுரைக்கும்
புன்தொழிலர் வீழ்நரகு புக்கு ழலுவேனே."

"மோதமரினென் மகன் முடித்தலே துணித்த
பாதகனே நானெதிர் படப்பொருதி லேனேல்
தாதையுடனே மொழி தகாதன பிதற்றும்
பேதைமகனெய்து நெறிபெற் றுடையனு வேன்."

"சேயனேய வென்மதலே போன்ற அமர் செய்தோன்
மாயமுனடர்த்து வயவாகை புனேயே னேல்
தாயர்பசி கண்டும் நனிதன் பசிதணிக்கும்
நாயளேய புல்லருறு நரகிலுறு வேனே."

"வஞ்சனையி லென்மகனை யெஞ்சமுன் மலைந்தோன்
நெஞ்சமெரி யுண்ண அமர்நேர் பொருதி லேனேல்
தஞ்செனஅடைந்தவர் தமக்கிடர் நினைக்கும்
நஞ்சனைய பாதகர் நடக்கு நெறிசேர் வேன்."

"வினையிலென் மகன்தனுடல் வேறுசெய் வித்தோனைக்
குனிசிலையில் நாளையுயிர் கோறல் புரியேனேல்
மனைவியுயிர் வீயமன் மகன் மனைவி கையால்
தினையளவு மோர்பொழுது சீவித்தவனாவேன்."

என் மகனைக் கொன்ற அந்தப் பாதகச் சிந்துபதியை நாளைப் போது போவதற்குள் போரிற் கொல்லாமலிருந்தேனாகில், அக்கினியில் வீழ்ந்திறந்து, மன்றோரம் சொன்னார் புகும் நாகிலும், தகப்பனை யெதிர்த்துப் பேசியமகன் ஏறு நாகிலும், தாய்பசித்திருக்கக் கண்டும் தன்பசி தணித்த நாய் மகனுறும் நாகிலும், தஞ்சம் புகுந்தார்க்கு வஞ்சகம் நினைக்கும் நஞ்சனையானுக்குரிய நாகிலும், தன் மனைவி யுயிர் நீங்க, வேறு மனைவியைக் கொண்டு இல்லறத்து நிற்றலோ, இல்லறம் வெறுத்துத் துறவறங் கொள்ளலோ பேரறமாக இருக்க, அவ்வறத்தை மதியாது, மகன் மனைவியிடம் உபசாரமும் உணவுங்கொண்டு, சொற்ற சொல்லுக்கும் பெற்ற மகனுக்கும் உற்ற உலகினுக்கும் பழிவிளைத்திடும் பேதை புகும் நாகிலும் கிடந்து உழலுவேனாக" என்று கொடிய சபதம் செய்திட்டான்.

"ஏதேது; இச்சபதம் முடிவது; பகைவர் செயத்திரதனைக் காத்தேந்தி காப்பாற்றிடுவர்; நாளை யிவன் தீப்புகுவது நிச்சயம்! இன்றைக்கு இம்முனிவர் தக்க காரணங்கொடு தடுத்தார்; நாளை தடுப்பாரில்லை; அவசியம் அக்கினியிற் புகுந்து அழிந்திடுவான்; கூட நாம் நால்வரும் அழியவேண்

டுவதுதான்'' என்று மற்ற நால்வரும் நொந்து கூறினார்கள். அப்போது, அவர்களைக் கண்ணன் நோக்கிக் "கவலைப் படாதீர்கள்! நாளை யவசியம் அர்ச்சுனன் அந்தப் பாதகச் செயத்திரனைக் கொன்றே வீழ்த்துவான்;

"இந்திரன் காக்கினும் ஈசன் காக்கினும்
சிந்துவின் தலைவனைத் தேவர் காக்கினும்
கந்தனிற் சிறந்தநின் கனிட்டன் நாளையே
மைந்துறப் பொருவதன் மகுடங் கொள்ளுமே"

இந்திரன் காத்தாலும் ஈசன் காத்தாலும் நாளையச் சிந்துபதியை யர்ச்சுனன் கொல்வான் என்று உறுதி கூறினர். "இப்போதே நான் விஜயனுடன் புறப்பட்டு இரவோடிரவாய்ச் சென்று கைலையை யடைந்து கண்ணுதற் பெருமானைக் கண்டு இரவி தோன்றுமுன் இங்குவந்து உங்களைத் துயிலெழுப்புவோம்'' என்று சொன்னார் கண்ணபிரான்.

கைலைசென்று கண்ணுதலைக் காணல்

உடனே, நால்வரையும் சமாதானப்படுத்திப் புறப்பட்டார்கள். வழியில் விஜயன் மயங்கிக் கீழே வீழ்ந்துவிட்டான். "இது பசியினால் வந்த இளைப்பினாலுண்டான களைப்பாகும்; இக்கனிகளை யுண்பா'' யெனக் கொடுத்தனர்; அர்ச்சுனன் "ஸ்நானஞ் செய்யாமலும் சிவபூஜை புரியாமலும் அருந்தேன்'' என்றான்; அங்கோர் சுனையைக் காட்டி "யிதில் மூழ்கிச் சிவபூஜை செய்து, இவற்றை நிவேதித்து உட்கொள்'' என்றனர்; ஸ்நானம் செய்துவிட்டுச் "சிவசொரூபம் ஒன்றுமில்லையே'' யென்றான். மாதவன் அவனைப் பார்த்து,

"மருவரு கானக மலரினு லெமைப்
பொருவரு பூசனை புரிதி யையநீ
இருவரு மொருவரே யென்ப தின்றுபோ
யருவரை யவனடி யடைந்து காண்டியே"

காட்டு மலர்களை யெடுத்துவந்து, என்னையே சிவசொரூபமாக நினைத்துப் பூசித்திடு; நாங்க ளிருவரும் ஒருவர்தாம் என்ப தைக் கைலையிற் சென்று அவனடிவணங்கும்போது காண்பாய்" என்று சொன்னார். அப்படியே அவன் பூசைசெய்து நைவேத்யம் கண்டருளி, அப்பிரசாதத்தைத் தானும் கொண்டான். சிறிதுதூரம் சென்றவுடன், கண்ணபிரான் கருடனை நினைத்தார்; அப் பறவை வேந்தன் வந்து சேர்ந்ததும், தம்மிருவரையும் கைலை சேர்த்துத் திரும்பக் கொண்டுவந்து விடும்படி சொல்லக் கருடன் திருமாலைத் தோள்களிலும் சுவேதவாஹனனைக் கைகளிலுமாக ஏந்தி விரைந்து சென்று கைலை சேர்த்தனர். இருவரும் இறங்கிக் கோயிலுட் சென்றனர். திருமாலைக் கண்டவுடன் நந்தி தேவன் உள்ளே ஏகவிட்டனர். நானும் நாரணனு மணுகிய தன்மைக்கு மிகவும் களித்துக் கண்ணுதற் கடவுள் இருவரையும் உபசரித்தனர். தான் அருச்சித்த மலர்கள், கண்ணபிரான் சொன்னபடியே அந்தந்த இடங்களிலிருக்கக்கண்டு, மகிழ்ந்து வணங்கித் துதித்தான். வந்த காரியம் வினவக், கண்ணபிரான், பரம சிவக் கொழுந்தைப் பல படத்துதித்து, "அர்ச்சுனற்கு அன்று நீங்கள் அளித்த அப்படை கொண்டு தானவர் பலரை அழித்தனன்; தானவர்க்குரிய படைகொண்டு மானவர்ப் பொருதல் மாண்பன்று; பாணம் குறையிலா தளித்துத் தூனிறத்தடம் கொடும்" என்று வேண்டினார்.

உடனே, சிவபெருமான், அர்ச்சுனனை, அங்குள்ள ஒரு பொய்கையிற் சென்று படியச் சொன்னார்; அவன் அப்

படி மூழ்கியபோது, அப்புனலினிலிருந்து ஒரு பாம்பு தோன்றிற்று; அதன் வாயிலிருந்து ஒரு பிரமசாரி முனிவர் தோன்றினர், அவர், நீரில் மூழ்கிச் சிலையும் பாணங்களும் தூணியும் எடுத்துக் கொடுத்தார். அவற்றை யர்ச்சுனன் கையிற் கொடுத்து, அவற்றுக்குள மறைகளும் உபதேசித்து, "நீ செயத்திரதனைத் தேறும் பொருட்டு எப்போது நினைப் பாயோ, அப்போது இவை வரு" மென்று கூறினர். திருமா லுக்கும் உபசாரம் கூறிப் "பூதலமாதின் பிரார்த்தனைப்படியே அவளிடர் தீர்த்தபின் சீக்கிரம் வைகுண்டம் வந்திடுங்கள்" என்று கூறி விடுத்தனர். பிறகு கருடன் மீதேறி இருவரும் பாசறையின் சமீபம் வந்தபோது, சூரியனுதிக்கும் திசையில் சுக்கிரன் உதித்திருந்தான்.

தர்மன் செய்த நற்கருமம்.

கண்ணபிரானும் தனது தம்பியும் கைலையை நாடிப்புறப் பட்ட பிறகு, தருமராஜன், தம்பியரொடும் கலந்தாலோசித் துக் கடோற்கசனை யழைத்து, "மகனே! நீ பகைவருறை விடத்துக்குச் சென்று, இங்குற்ற செய்தியை யவரிடம் சொல்லி வா! அதாவது, 'தன் மகனைக் களத்திடை வீழ்த் திய செயத்திரதனை நாளை அஸ்தமனத்துக்குள் கொன்றிடுவ தாகவும் கொல்லாவிடில் அக்கினியில் வீழ்ந்து இறந்திடுவதாக வும் அர்ச்சுனன் சபதம் செய்திட்டுக் கண்ணபிரானெடும் கைலை சென்றிருக்கின்றான்' என்று துரியோதனனிடம் நேரே சொல்லி வா" என்று சொன்னர்; கடோற்கசன் நகைத்து, "வஞ்சம் படக்கொன்ற மாபாவியரிடம் உண்மை யைச் சொல்ல வேண்டுவது ஆண்மையோ அறிவோ? நல்ல வர்க்கு உரைப்பதுபோல இக்கொடியவர்க்கும் போ யுரைத் தல் அறனுமில்லை; அழகு மில்லை" யென்றான். "நீ மாருதி மக

ஞகலின், உனக்கு அப்படித் தோன்றுகிறது; எதிரிகள் வஞ்சகரோ வானவரோ? நாம் நெறிதவருமல் நடத்த வேண்டியதும் நடக்கவேண்டியதும் நமது கடமையாகும். தர்ம மார்க்கத்தில் வெல்வதுதான் வெற்றியாகும். அவர் அது செய்யத் துணிதல் அவர்களது இயற்கை; நாம் அறத்நின்படியொழுகல் நமது இயற்கை. கூர்த்து நாய் கௌவிக்கொளக் கண்டு, பேர்த்து நாய் கடித்தார் இவ்வுலகிலுண்டோ? நாய்க்குக் கடித்தல் இயற்கை; மாந்தர்க்குப் பொறுத்த லியற்கை; அதுபோல தீயவர் தீமை செய்வது இயற்கை; தூயவர் தூய்மையோ டிருத்தலே இயற்கையாகும். நாளை யுலகம் நம்மை யிகழாதிருக்குமாறு நாம் செய்திடல்வேண்டும்'' என்ருன். "இருதிறத்தாரும் சரிதான்; கௌரவர் வஞ்சமாகவே கைலேசென்று வந்து, முன்னறிவிப்பில்லாமலே சயத்திரதனைக் கொன்ருர்கள்; இருதிறத்தாரும் வஞ்சனையாளரே' என்று உலகம் பழியாதவாறு, நீ இப்போதே போய்ச் சொல்லிவா'' என்றனுப்பினுர்.

கடோற்கசன் தூது

பெரிய தந்தை சொன்னதற்கு மாறுபட மனமில்லாதவனுகிக் கடோற்கசன் அவருடைய தர்ம உரைகளைக் கேட்டு நகைத்து, ஒரு கணத்தில் பகைவாது பாசறைக்கு வந்து சேர்ந்து, ஆங்குற்ற அவையோர் யாரும் கேட்கும்படியாக, உரத்த குரலுடன் கூறலாயினுன்.

"அரவக்கொடியரசே! மற்றுள்ள மன்னவர் மந்திரியர் மறையவர்களே! கேளுங்கள்!! நான் வீமன் மகன் கடோற்கசன்; பாண்டவர் விடுதூதாக இங்கு வந்திருக்கிறேன்; எங்

கள் தருமப்பிரபு சொல்லிவிட்ட செய்தி இதுவாகும்; கவனத்துடன் கேளுங்கள்;

"தன்திரு மைந்தனை மௌலிதுணித்த சயத்திரதன் தனைவாளால்
வென்றிகொள் காவலர் காவல்மிகுப்பினும் வெயிலவன் வீழ்வதன்முன்
கொன்றிடு வேனது தப்பினருங்கன லூடுகுதித் திடுவேன்
என்று மொழிந்தான் வாழ்கயிலாயமு மெய்தினன் வில்விஜயன்"

"தன் மகன் அபிமன்னனது முடியைத் துணித்துத் தள்ளிய செயத்திரதனை நாளை யமரிற் சூரியன் மேலைத் திசையில் மறைவதன்முன் கொன்றிடுவேன்; அது தப்பினால் அக்கினியிற் பாய்வேன் என்று வில்விஜயன் கூறிவிட்டுக் கைலாயம் சென்றிருக்கிறான்' என்னும் செய்தியை நீங்கள் அறியுமாறு எங்கள் தர்மப்பிரபு உங்கட்கு எச்சரிக்கை சொல்லி யனுப்பினார். ஏனென்றால் வஞ்சனையா லமரிற் கொல்வது பாதகமென்று அஞ்சினார்; ஆதலினால்இத்தூது அனுப்பிவிட்டார்; ஏ! துரியோதனா!! நாளை நிச்சயமாக உன் மைத்துனன் இறந்தான் என்றே கொள்ளக்கடவாய்" என்றும் கூறினான், நெஞ்சில் அச்சம் என்பதே யில்லாத கடோற்கசன்.

இதனைக்கேட்ட துரியோதனன், "பல மன்னர் மைந்தர்களுடன் என் மகனும் போர்க்களத்திலுருண்டு மாண்டான் என்றிருந்தும், ஒன்றும் பேசாமலிருக்கின்றேன்யான்; தன் மைந்தன் இறந்தனனும்; தான் தழலில் மூழ்குவனும்; சபதம் கூறிவிட்டனனும்; பயந்து இரவிற் கரந்து போய்க் கைலை புகுந்து, அவன் கொடுத்த படையும் வாங்கிக்கொண்டு, அந்த மாமாயன் செலுத்தும் ரதத்திலேறி, நாளைப் போருக்கு விஜயன் வருவனாகில், ஜயத்திரதன் அந்த விஜயனை அதே போர்க்களத்திற் கொன்றிடுவான்" என்பதைப் போய் மறுமொழி

யாகச் சொல்லிடு. சயத்திரதன் போருக் கெளியனா? என்னைக் காட்டிலும் இப்பாருக்குரியன் அந்த சயத்திரதனே. சிலைக்குருவிலும் மிக வலியன்; தண்டைக் கையிலெடுத்தால் உன் தகப்பன் வீமனிலும் வலியன்; உன்னைக்காட்டிலும் தோளாமுடையான்; அவனை மதியாமல் இப்படி யுரைக்கலாமோ? ஆளை ஆள் யறியலாமே; நாளை யார் போரில் வெல்வர் என்பது சொல்லக்கூடுமோ?'' என்று நகைத்துச் சொல்லிட்டான் ராஜராஜனாகிய நாகக்கொடி மன்னன். கர்ணன் சொல்லுகிறான்:— "ராஜராஜன் மகன் துற்சாதனன் மகன் சல்லியன்மகன் சகுனி மகன் மற்ற மன்னர் தம் மக்கள் முதல் எத்தனைபேர் இறந்தாலும் பெரியதில்லை; பாராளுதற்கிருந்த பார்த்தன் மகன் ஒருவன் இறந்தானாகில், அரசுக்கினி ஆர் உரியார் என்று அழுகின்றார்கள்போலும்'' என்று கடோற்கசனுக்கு உரைத்துவிட்டு மன்னனைப் பார்த்து, "மன்னரேறே! சயத்திரதன் ஆவியை யழித்திடப் பாமனிடம் சென்றான் பார்த்தனாகில், உன் குடைக்கீழ் இது காலம் கூடியிருந்த நாங்களெல்லோரும் என் செய இருக்கின்றோம்? இதிலென்ன அதிசயமிருக்கின்றது'' என்று இகழ்ந்து கூறினான். இவன் மொழிந்த இழிவுரை கேட்ட கடோற்கசன், "ஏ! அறிவிலிகாள்!! அவனிதலமெல்லாம் அரசாள நினைந்திருந்தீர்கள்; இன்று நடத்திய அக்கிரமத்துக்கிடாக, உங்கள் பாசறையெல்லாம் தீ மடுத்துச் சிவன் சிரித்த புரமாகச் சாம்பராக்கிடுவேன்; உங்கள் தலைகளைத் தனித் தனியே சிந்துதற்கு விஜயன் வரவேண்டுமோ? மற்றுள்ளார் திரண்டு வரவேண்டுமோதான்; பொழுது விடிவதற்குள் நீறாக்கிப் புதைத்திடுவேன்; எங்கள் தருமமூர்த்தி சொன்ன அறவுரையை மறுத்திடலாகாதென இருக்கின்றேன்; அதர்மப் பேய்களே! கேட்டிடுங்கள்; போர்க்களத்தில் இரண்டு

பேர் எதிரெதிர் நின்று போர்புரிவது உலகியற்கை; நீங்கள் யாவரும் கூடிப் பருவம் பெறுப்பாலகன் அபிமனுக் காற்ருமல் பறந்து போனீர்கள்; பின்னர் வஞ்சகத்தால் அவனைத் தடுத்து, ஒருவன் தேரழிக்க ஒருவன் கைதுணிக்கப் பின்னொருவன் முடிதுணித்தான்; இதுதான் உங்கள் தர்மம் போலும்;" என்று சொல்லத் துரியோதனன் வெகுண்டு, மன்னரைப் பார்த்து, "இவன் அரக்கி மகன்; இவன் சபையறியான்; நாகரிகம் அறியான்; பேசும் தர்மம் அறியான்; அவனுடன் ஒன்றும் பேசவேண்டாம்" என்று கூறினன்; கடோற்கசன் கோபித்து,

"அந்த உரை மீண்டவன் கேட்டாங்கவனை
நகைத்துரைப்பான் அரக்கரேனும்
சிந்தனையில் வீரகெண்ணுர் செரு முகத்தில்
வஞ்சகமுஞ் செய்யாரையா!
வெந்திறல் கூர் துணைவருக்கு விடமருத்தார்
நிரைக்கழுவில் வீழச்செய்யார்
உந்துபுன லிடைப் புதையார் ஒருரில்
இருப்பகற்ருர் உரையுந்தப்பார்"

"செழுந்தழல் வாழ்மனைக் கொளுவார் செய்ந்நன்றி
கொன்றறியார் தீங்கு பூணுர்
அழுந்து மனத்தழுக்குருர் அச்சமுமற்
றருளின்றிப் பொய்ச் சூதாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங் கானம்
அடைவித்துக் கொல்ல வெண்ணுர்
எழுந்தமரின் முதுகிடார் இவை யெல்லாம்
அடிகளுக்கே ஏற்ப என்ருன்."

நீங்கள் செய்துள்ள இவ்வகைப் பாதகங்களைப் போலப் பாதகங்கள் எந்த அரக்கரும் செய்ததில்லை; செய்யவும் மாட்டார்.

இவை யெல்லாம் மகாகனம் பொருந்திய தங்களுக்கே இயற்கையாம். நாளை, உன் மைத்துனன் வில் விஜயன் கை எரிவாயம்பால் உயிரழிகை தப்பாது; சொன்னேன்; சொன்னேன் முக்காலும் சொன்னேன்'' என்று அறிவுறுத்தி மீண்டு வந்தான்.

துரியோதனன் துரோணற்குக் கூறல்.

“கொடிகளையுடைய சேனைகளை நன்கு வகுத்து, நாளை முப்பது நாழிகையும் நன்றாய்க் காத்திட வல்லீராஞல், சிந்துபதியும் உய்ந்து போவான்; விஜயனும் அக்கினியில் வீழ்ந்து படுவான்; ஆகையால் நாளை யொருபகல் தான் நமக்கு சிரமம்; அதனைக் காத்துக் கழித்தனமாயின், நமதே வெற்றி; நமதே இப்பார்; நமதே புகழ்; இதனை யோர்ந்து கடைப்பிடித்துச் செய்யுங்கள்; மன்னர்களே! உங்களையும் வேண்டுகின்றேன்; நாளை யொரு நாள் நின்று உதவுங்கள்'' என்று யாவரையும் மன்ருடி வேண்டிக் கொண்டான் நரபதித் தலைவன். “நமது சேனையை மணியுடைய மதிலரண் போலவே வரிசைப்பட நிறுத்தி நான் காத்திடுவேன்; புண்ணிய பாவ பலன்களின் விளைவை யெம்மால் துணிந்திடல் கூடுமோ? முப்பது நாழிகையிற் சொன்ன சூளுரை தப்பாது உறுமெனில், தனஞ்செயன் வில்லினுக்கு நிகராக வேறொன்றில்லை; சொன்னபடியே செய்திடல் பிரமனுக்கும் முடியாத காரியம்தான்; திருமாலே அங்கு அவனுக்குத் துணையாக இருப்பாரென்னினும், சிந்துபூபனை வில்லினல் வெல்லலரிதுதான்'' என்று துரோணர் மாவாகவும் பணியாரமாகவும் சொன்ஞர். மற்றும், அரசர்களைத் தனித்தனியே வேண்டிக்கொள்ளவே, அங்க தேசாதிபதி கர்ணன் சொல்லுகிருன்:—“நாளைப் பகல் சயத்திரதன் உயிரினை யான் காத்தளிக்கின்றேன்'' என்று வெகு நிச்சய

மாகக் கூறி விட்டான். "நாளை இருள்வரும் வரையில் சிந்து வேந்தனை யென் சக்கரம் துணையாக் கொண்டு காத்திடு வேன்" என்று துன்மருஷணன் சொல்லினுன். அசுவத் தாமன் கூறுகின்ருன்:— "விற்பணியிற் சமர்த்தர் வெடிபடச் சொற்களைச் சொல்லித் தம் பெருமையைக் கூறுவார்களோ? சாற்கால மேகம் இடித்தலே செய்யாது போர்த் தொழிலைப் பலவிதமாகப் புரிந்த காலையில், இவனது வில் திறத்தையும் பகைவனது வில் திறத்தையும் நாளையே காணப்போகிருய்" என்று சொன்னுன்; மற்ற மன்னர்களும் தாங்கள் தாங்கள் காத்திடுவதாகச் சொல்லிப் போனுர்கள்.

கைலைக்குச் சென்றவர்களும் கடோற்கசக்காளையும் பொழுது விடியு முன்னர்த் தரும பூபனைக் கண்டு துயி லுணர்த்தித் தாங்கள் தாங்கள் சென்று திரும்பிய வெற்றி களைக் கூறினுர்கள். இருதிறத்தாரும், அன்று, இங்ஙனம் நித்திரைக்குப் பொழுதில்லாமற்படியே காலம் கழித்தார்கள்.

பதினுன்காம் போர்ச் சருக்கம்.

"அரியதண்கலை வாண்மதியமும் கொதிகொள்
ஆலமுந் தனதிடத் தடக்கி
உரியவொண் கங்காநதிக் கொரு பதியாய்
உரைபெறு முயர் மகோததியில்
பரியதிண் சிலையோ டம்பெலாம் முகந்து
பற்குணப் பொருப்பிடைப் பொழியும்
கரியபைம் புயலைக் கைதொழு மவரே
கருவிலே திருவுடை யவரே"

இந்தப் பதினுன்காம்போரும், ஒரு குறிப்பிட்ட போரே யாகும். இந்தப் போர் அர்ச்சுனனது வெற்றியைப் பாண்ட

வரும் துணைவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த போர்; அர்ச்சுனனது தோல்வியையும் தீக்குதித்தலையும் எதிரிகள் எதிர்பார்த்திருந்த நாட் போராகும்; இந்தப் போரில்தான், கண்ணன் தம் கைச்சக்கரத்தையெடுத்துக் கதிரவனை மறைத்தார்: பல மன்னவரும் காவலரும் போற்றி வந்தும், சிந்து பதி தலையினை யர்ச்சுனன் சிதறி யுருட்டிய நாட் போர் இதுவேயாகும்.

தருமராஜன், காலைச் சூரியனைக் கைதொழுது, தின கருமங்களை யினிதுற நிறைவேற்றி, வேதியர்க்குத் தானம் முதலிய அருளி, இம்மாலையளவுக்குள்ளே, விஜயன் தான் சொன்ன சபதம் முடித்திடல் வேண்டுமே யென்னும் கருத்துடன், பல பேரிகைகள் வழங்கப் புறப்பட்டுப் போர்க்களம் வந்துற்றார். ஸ்ரீ கண்ணபிரானுடன் அர்ச்சுனன், இருபுறமும் வீமனும் இளைஞரும் சேனையுடன் சூழ்ந்துவா அமர்க்களம் குறுகினான். அன்றைப் பெருத்த சேனையை முதற் பெரிய அணியாக, திட்டத்துய்மன், தேவர்களும் யாவர்களும் வியக்கும்படி வலிவுற வகுத்தான்.

அரவக்கொடியோன், துரியோதனனது கட்டளைப் பிரகாரம், சேனாபதியாகிய துரோணர், இடையில், ஜயத்திரதனை நிறுத்தி அவனுக்கு எட்டுத் திக்குகளிலும், தக்க காவலர்களை, ரதகஜதுரகபதாதி யெனும் முறைப்படி அணியணியாக நிறுத்தி, தூசியின் முனையில், முந்தினநாள், சயத்திரதனைக் காத்திடுவேனென்று சபதம்கூறிய துன்மருஷணனை நிறுத்தி, ஊசியும் இடையே நுழையாதபடியாக அரண் செய்திருந்தார். மற்றும், குதிரையில் யானையில், தேரில் விசேஷராக எண்ணப்பட்ட மன்னரையும் சுற்றுற வகுத்து, வஞ்சினம் பேசிய கர்ணன் சகுனி சல்லியரையும் போணியாகப் புறம்

வகுத்திருந்தார். இங்ஙனம் சேனைகள் ஐந்து ஐந்தாக வகுக்கப்பட்டிருந்தன; இவற்றின் முடியினில் சிரோமணியாக வலம்புரி மார்பனாகிய துரியோதனனை நிறுத்திவைத்தார். இவற்றுக்கெல்லாம், முதன்மையாக, அசுரசேனையை வகுத்து நிற்கும் சுக்கிராச்சாரியர்போலத் துரோணாசாரியார் நின்றார். இரவு ஆலோசனை சபையிற் கூறியபடியே, ஜயத்திரதனைக் காப்பதற்குத் துரோணர் வகுத்துள்ள அணிவகுப்பைப் பார்த்துத் தேவர்களும் ஆச்சரியப்பட்டு, இவ்வணிவகுப்பைக் கடந்து, விஜயன், எங்ஙனம் சயத்திரதனைக் கொல்வனோ வென்று பயந்திருந்தார்கள்.

விஜயன் மன்னரைக் கடத்தல்

இங்ஙனம் நன்றாக வகுக்கப்பட்ட இப்போரணிமேல், விஜயன் தனது தடந்தேரினைச் செலுத்திவந்தான்; இவனுக்கு இருபுறமும் உத்தமோஜாவும் உதாமனும் வந்தார்கள். பனிக்கூட்டங்கள், அணியணியாகவும் அழகாகவும் நெருக்கமாகவும் வகுக்கப்பட்டிருந்தாலும், சூரியன் உதித்து ஏறி வருவனாயின், எல்லாம் உடைந்து கலங்கி விலகிப்போவது போல, அர்ச்சுனன் எதிரிகளின் எதிரே சென்று, பாண வருஷங்களைத் தூவினவுடனே, துரியோதனன் தம்பிமார்கள் முதலிய மன்னவர் உடைந்துபோய்த் துரோணனிருப்பிடம் சேர்ந்தார்கள். பல குதிரைப்படைகள் கொண்டு எதிர்த்து வந்த கிருதவன்மாவும் யானைப் படைகள் பலவற்றுடன் வந்து பொருத துற்சாதனனும் அர்ச்சுனன் கணைகட்கு எதிர் நிற்கமாட்டாமலோடிச் சேனைக் காவலன் இருப்பிடம் சேர்ந்தார்கள்.

ஓடி வந்த மன்னர் படைகளெல்லாம் தனக்குத் துணையாக நிற்கும்படிச் செய்து, துரோணன் தன் சொந்தப்

படைகளுடனும் நின்று அர்ச்சுனனுடன் போர் தொடுத்தான். இருவரது சேனைகளும் மலையும் மலையும் மலைந்தது போல் போர் செய்துக் கொண்டிருந்தார்கள். முட்டியினுலும் நிலைமையினுலும் வில்லின் தன்மையினுலும் ஆசிரியனும் மாணவனும் போர் யுரிந்தபோது, ஒருவர் விட்ட பகழி யொருவர் மேற்படாதபடி பரஸ்பரம்த்வந்துவ யுத்தம் செய்துக் கொண்டிருந்தார்கள். இருவரும் தேர்களை வலம் இடம் திரித்துக் கோடி கோடியாகப் பாணங்களைத் தொடுத்துக் கொண்டு, பல நாழிகைகளைக் கடத்தி விட்டார்கள். அப்போது, துரோணர் விஜயனைப் பார்த்து, "அர்ச்சுன! உன் பகைவனுகிய சிந்துபதியிருக்குமிடம், உன்னுலெட்ட முடியாத, யோசனைக் கணக்கிலிருக்கிறது; பொழுதோ மிகக் கடந்து விட்டது: நீ யாங்ஙனம் வெற்றி பெறப்போகின்ருய்!" என்று பரிகசித்துப் பேசினர். இதனைக் குறிப்பிலுணர்ந்த கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குச் சைகை காட்டி இருவரும் ஒருமித்த மனமுடையவராகத் தேரை முன்னடத்திக் கொண்டு போனர்கள். தம்மை யெதிர்த்த குருவினுடைய தேரை ஒரு நிமிஷத்தில் எப்படியோ கடந்து, மாயம் என்று தோன்றும்படியாக, அத்தேர் முதலிய படைகளை யெல்லாம் கடந்து அப்புறம் வெகு தூரம் தாண்டிப்போய் விட்டார்கள். திரும்பிப்பார்த்த குரு வெட்கம் கொண்டவராகித் தமது தேரைச் செலுத்திக் கொண்டு தொடர்ந்து வந்தபோது, அர்ச்சுனன் கொதித்துச் சொல்லுகிருன்:—"ஸ்வாமி! ஆசாரியரே!! உம்மோடு எதிர்த்து நிற்றல் தேவருக்கும் அரிதாகும். நானெம்மாத்திரம், எனது சபதம் வழுவுறப்படாது; தயவு செய்யுங்கள்" என்று புன்னகை காட்டிச் சென்ருன். பரமசிவனது அருளைப் பெற்ற வில் விஜயன், அங்ஙனம் புன்முறுவல் காட்டிக் குருவை ஏமாற்றி விரைந்து சென்று, காம்

போஜன் முதலிய மன்னர்களையும் படைகளையும் சிதற அடித்துக் கொண்டு, கன்னன் இருக்குமிடம் கிட்டி விட்டான். இங்கு இவனையும் ஏமாற்றிச் சுலபமாய்ச் சிந்துபதி இருக்குமிடத்துக்குச் சேரலாமாயிருக்க, எதிரி கர்ணன் நிற்கும் வீராவேசங்கண்டு, அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்து இது கூறுகின்றான். "கர்ணனையும் விரைந்து கடந்து போய்விட வேண்டாம்; இங்கே தான் சுதக்ஷணன் அவந்தி மன்னன் அவன் மகன் முதலானாேடும் மிகவும் கர்வத்துடனிருக்கும் கர்ணனுடன் சிறிது போர் நடத்திப் பிறகு செல்ல வேண்டுமென்றெண்ணி யிருக்கிறேன். தாங்களும் இதற்குச் சம்மதி கொடுத்தல் வேண்டுகின்றேன்" என்று சொன்னான்; கண்ணனும் அஃதே ஒக்குமென்று ஒப்புக் கொண்டார். இரண்டு திறத்தாரும் போர் தொடுத்தார்கள். வந்து போர்செய்த மன்னவர்களின், வில்லும் அம்பும் சிரங்களும் கரங்களும் அழிந்து போய் விழும்படியாக விஜயன் தனது பாணங்கள் கொண்டு, கன்னன் படை வீரர்களைக் கலக்கி விட்டான். கர்ணனுக்கும் விஜயனுக்கும் கடும் போர் நடந்தது. இருவரும் முனைந்து நின்றனர். வில்லின் வலிமையினாலும் தங்கள் சமர்த்தின் தன்மையினாலும், வில்லின் ஓசையால் ஆகாயத்திலுள்ள இடியோசையும் வெட்கும்படியந்தப் போர் செய்து வரும் போது, இவனுடன் இத்துணைக் காலமும் தாழ்த்தல் கூடாதென்று நினைத்து அர்ச்சுனன் உறுதியான பாணங்களை யேவிக் கர்ணன் ஏறிவந்த தேரையும் அவன் கைவில்லையும் துணித்து மார்பின் கவசத்தையும் பிளந்தெறிந்தான். மற்ற துணையரசர்கள் வந்தவர்களும் ஒய்ந்துபோம்படியாக அடித்திட்டான்.

அர்ச்சுனன் எய்த பாணங்களால் நொந்துபோய்க் கர்ணன் தளர்ந்துபோனது தெரிந்த வருணராஜன் மகன், மிக

வும் கோபித்தவனுகி, அர்ச்சுனன் எறிந்துகொண்டிருக்கும் பாணங்களையெல்லாம் தனது பாணங்கள்கொண் டழித்திட்டு, ஓர் தண்டையெடுத்து அர்ச்சுனன் மார்பின்மேலெறிந்தனன். கண்ணன் அந்தத் தண்டத்தைத் தமது மார்பில் ஏற்றுக்கொண்டுவிட்டார். இஃது, அர்ச்சுனன் உய்ந்து போதற்காகச் செய்த காரியமாகும். கண்ணன் மார்பில் அந்தத் தண்டம் தாக்கினவுடன், கண்ணனுக்காவது விஜயனுக்காவது யாதொரு மாறுபாடும் இல்லை; ஆனுல், அந்தத் தண்டத்தை யெடுத்து வீசியவன் தன்னுடைய நினைவுமாறி முடிதுளங்கிப் பூமிமேல் சோகம் கொண்டு வீழ்ந்துவிட்டான். அம்மயக்கம் மிகக் கொள்ளவே அந்த துஷ்டன் இறந்து போனுன். கண்ணனை யாவரும் வாழ்த்தினுர்கள். தேவர்களும் பூமழை பொழிந்தார்கள்.

சுதாயு கதை வரலாறு

அர்ச்சுனன் கண்ணனை நோக்கிப் பின்வருமாறு, கேட்கின்ருன்:—"ஸ்வாமி! உங்கள் மார்பில் அந்தக் கதையை யேற்றுக்கொண்டவுடன், அதனை யெறிந்தவன் அழிந்திறந்துபோதல் காரணம் யாது இதனை யியம்பல் வேண்டும்" என்று விநயத்துடன் கேட்டான். "அர்ச்சுன! இவன் பெயர் சுதாயு; இவன் தாய்பெயர் வர்ணவாதை; இவன் தகப்பன் வருணன்; தனது தகப்பனது அருளால் இந்த கதையையும் ஒரு வாக்தையும் பெற்ருன். அஃது யாதெனில் கூறுகின்றேன்; போரில் வெல்ல முடியாத சமயம், இந்தக் கதையை எதிரிமேலெறிந்தால், எதிரிமாள்வன்; ஆனுல், கதை நிராயுதன் மார்பில் தாக்குமாயின், 'எறிந்த நீ மயங்கி மண்ணின் மீது விழுந்து மாய்ந்து போவாய்' என்று சொல்லியிருந்தார்; இந்த உண்மை யெனக்குத் தெரியுமாகலான்,

நான் ஏற்றுக் கொண்டனன்" என்று சொன்னர். சுதாயு இறந்து பட்டவுடன், அவன் தம்பியாகிய சதாயு என்பவனும் விஜயனே டெதிர்த்து விண்ணுலக மெய்தினன். விஜயனே டெதிர்த்தவர் யாவர் தாம் பிழைத்துளார்? பிறகு ஸஹஸ்ரபாகு என்பவனும் எதிர்த்தான். தொடுக்கும் போது ஒன்ருகவும் விடுக்கும்போது ஆயிரமாகவும் பாணங்களை அர்ச்சுனன் மேலேவி விட்டான். அர்ச்சுனன் அவற்றை யெல்லாம் தனது வலிய பாணங்களால் தகர்த்துவிட்டு, மேலும் அவன் மேற் பாண வருஷங்களைப் பொழிந்து, அந்த ஸஹஸ்ர பாகுவையும் ஒழித்து விட்டான். உடனே மலை விழுவதுபோல் மண்ணின்மேல் அவன் வீழ்ந்து விட்டான். முப்பது நாழிகைக்குள் சிந்துபதியைக் கொல்ல வேண்டுமாகலான், "இவர்களுடன் விளையாட்டெதற்கு?" என்று முன் கொண்டு தேரைச் செலுத்திக் கொண்டு போனபோது, மற்றும் உள்ள பட்டவர்த்தனர் மகுட வர்த்தனர்களுள்ளா ரெல்லாரும் எதிர்த்து வந்தார்கள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சரமாகப் பாணங்களை யவர்கள் மேற் பொழிந்து, எதிர்த்தவரை யெல்லாம் முறிபடக் களத்திடைத் தள்ளினன். யானைப் படை குதிரைப் படை தேர்ப் படை காலாட் படை முதலிய எப்படைகளும் வந்தவை யெல்லாம் களத்திடை மடியும்படி வில் விஜயன் பாணங்களைத் தொடுத்துக் கொண்டிருந்தபோது, அந்தக் களமெல்லாம் அர்ச்சுனனது வில்லின் ஓசையே ஓசையாக இருந்ததன்றி வேறு ஒலிகள் யாவும் காணப்படவில்லை. சூரிய தேவன் வானத்துச்சியிற் சேர்ந்தான்.

தெய்வீகப் போய்கை.

"பகலில், நடுப்பொழுது ஆகிவிட்டபடியினல், குதிரைகள் தாகத்தினல் நாவுலர்ந்து தளர்ந்திருக்கின்றன; அவற்

றுக்குத் தாகசாந்தி செய்தாலல்லாமல் மேலே செலுத்த முடியா''தென்று, கண்ணபிரான் உரைத்திட, அவர் கட்டளை யினால் அர்ச்சுனன், பரமசிவனருளிய வாத்தை நினைத்து வாருணாஸ்திரத்தை யெடுத்துவிட்டான்; அது வில்லின் நின் றும், வெளிப்பட்டவுடன், அங்கோர் தெய்வப் பொய்கை தோன்றியது. கடலைக்காட்டிலும் பெரிதாம்படி யிருந்த அப் பொய்கையில் குதிரைகட்கு நீர் அருத்தலாமென்று, கண் ணன் தேரினின்றும் கீழே குதித்துக் குதிரைகளின் வார்களை நெகிழச் செய்து, அவைகளின் தாகத்தைச் சாந்திசெய்து, இருவரும் தமது கால் கரங்களைச் சுத்தம் செய்துகொண்ட னர். குதிரைகளுடன் தாமும் இளைப்பாறி யிருந்தனர். எதிர் வந்து பொருவார் யாருமற்றிருந்தார்கள்.

இங்ஙனம், "எல்லா வீரர்களையும் முறையே வென்று கொண்டு போய் விஜயன் யாரொருவரும் எதிர்ப்பாரின்றித் தடமொன்றினைத் தானே யுண்டாக்கிக்கொண்டு, அத்தடத் தினில், குதிரைகட்கு நீர் அருத்தித் தாங்களும் நீர் அருந்தி, யிளைப்பாறி யிருக்கின்றார்கள்'' என்று தூதர்கள், துரியோ தனனிடம் ஓடிச் சொன்னார்கள். அரவக்கொடியோன் மிகக் கோபம் கொண்டு, விரைந்து துரோணாச்சாரியரிடம்போய்ச் சிறுமையுடன் பேசுகின்றான்:—"ஐயரே! மிக்க விறலுடைய அர்ச்சுனனோடு எதிர்த்து மன்னவர்களில் யார் பிழைத்திருக் கிறார்கள்? ஆகையால், என் தங்கையாகிய துச்சளை கணவன் சிந்துபதியின் முடி சிதறுவதல்லாது, இன்று நமக்கு வெற்றி கிடைத்திடாதுபோ லிருக்கின்றதே! மன்னவரெல்லாரும் அர்ச்சுனனைக் காணாதவிடத்துக் கர்வமாகப் பேசிக் குதிக் கின்றார்களேயல்லாமல், அவர் எதிர் நின்று நிலைத்துப் போர் செய்யும் திறமை வாய்ந்தவர் நமது சேனையில் யாரும் இல

ரென்பது உண்மையாயிற்று. ஆகையால், நானே இனி அர்ச்சுனனுக்கு நேரே எதிர்த்துப் பொருதலல்லாமல், வேறொரு வழியைக் காணேன்" என்று கோபத்துடனும் துக்கத்துடனும் பேசினன்.

துரோணனும் துரியனும்.

அப்போது துரியோதனைப் பார்த்துத் துரோணுசாரியர், கூறுகின்றார்:—"மன்னர்மன்ன! துரியோதன!! மிக்க பலத்துடன் ஒரு தேரினில் ஒரு சாரதியாகவும் ஒரு வில்லாளியாகவும் தோன்றி, நம்மில் இருந்த இத்தனை தேர்களையும் இத்தனை வில்லாளிகளையும் அழித்துச்சென்றவரை யாரென்று எண்ணுகின்றாய்! அறிவிற் சிறந்தோர்கள் இவரைத்தான் நாநாரணர் என்பார்கள்; மற்றும் இந்நரனென்பான், பரமசிவனிடம் வரம்பெற்ற பாணங்கள் பெற்று வந்திருக்கின்றான்; மந்திரங்களும் பிற தந்திரங்களும் பரமசிவன் உயர்வாக அருளியிருக்கின்றார். ஆகையால் விஜயனுடன் போர் முகத்தில் எதிர்த்து நிற்றல் விதிக்கும் முடியாத காரியமாகும். மற்றும், அவனது தேரினைச் செலுத்தும் சாரதியோ, அவதார மூர்த்தி; அவர் கருதியது யாதோ! யாம் அறியோம்; இவ்விருவரையும் வெல்லுவதென்பது சிந்திக்கக்கூடிய காரியமன்று; தம் பந்துக்களுடன் அதிகம் பகையாகாதென்று எவ்வளவு சொல்லியும் நீ கேட்காமல், மேலும் மேலும் தகாதனவெல்லாம் செய்து அவரது பகையை முற்றவிட்டுக்கொண்டாய்! அவதார மூர்த்தியாகித் தேவர்களும் முனிவர்களும் பெரியோர்களும் வணங்கும் தெய்வமாகிய நாராயணனை யேசி ஏதேதோ பேசிவிட்டாய்; விதுரன் சாந்தத்து உருப்போன்றவன்; அவனது மனம் நொந்துபோம்படியாக எத்துணைத் தோஷமான தூஷணைகளைப் பேசி, அவன் தானே

வில்லை யொடித்திடச் செய்தாய். புத்திமான்களும் கிழவர்களும் பெரியோர்களும் பேசிய உண்மை யுரைகளையும் நீ மதித்துப் போற்றிடவில்லை; விதி மூண்டதுபோல் போரோ விளைந்திருக்கின்றது; ஜயாபஜயம் யார் பங்கெனத் தெளிதற்கில்லை. ஆயினும், இவ்வொரு பகலிலேயே, இத்தனை வீரர்களையும் வென்று, இக்கடுங்காவலிலிருக்கும் சிந்துபதியைக் கொன்றிடுதலென்பது விஜயனுக்கும் முடியாத காரியமேயாகும். நீ, இதோ இந்தக் கவசத்தினை யணிந்து கொண்டு, பல மன்னர்களையும் படைகளையும் அழைத்துக் கொண்டு போய்ப் போர் புரிந்து வா! இந்தக் கவசத்தின் வரலாறு சொல்கிறேன்; கேள்; இது பிரமனால் இந்திரனுக்குக் கொடுக்கப்பட்டது; இந்திரன் இதனை அங்காரவுக்குக் கொடுத்தான்; அங்கார எனக்குக் கொடுத்தனன்; பாணங்களினாலும் எந்த ஆயுதங்களினாலும் அழிந்து படாதது இது; இதனையணிந்து கொண்டு போ'' என்று சொல்லியக் கவசத்தையும் அவன் மார்பில் அணிவித்து அனுப்பினார். துரியோதனன், கவசமணிந்து, பட்ட வர்த்தனர் மகுட வர்த்தனர்களுடன் அர்ச்சுனன்மேல் முனைந்து சென்றான்.

கவசம் வரலாறு.

எட்டுத் தேர்கள் பூட்டிய இரதத்தின்மேல் வருபவன், இராஜ ராஜனாகிய துரியோதன மகாராஜன் தானென்று யாவரும் நடுங்கி, மன்னனே போர்க்குப் புறப்படுவதால், இனி நாம் தாழ்த்திடல் கூடாதென்று தோற்று வீழ்ந்த மன்னர்கள் பலரும் துணைவந்து கூடினார்கள். அர்ச்சுனனும் அச்சுதனும் அருந்தி யிளைப்பாறிய தெய்வீகப் பொய்கையின் கரையில் வந்து சேர்ந்தார்கள்; அவர்களும் தமது தமது வாஹ

னங்களாகிய குதிரை யானைகட்கு நீர் அருத்தித் தாங்களும் அருந்தினார்கள். அந்தப் பொய்கையின் செழுமையையும் நீரின் சுவையையும் நோக்கிச் சுவைத்து, ''இது, இது வரையில் நாம் அருந்தும் பொய்கையின் நீர்போலில்லையே; இது தெய்வீகத் தன்மை வாய்ந்திருக்கின்றது. இதன் அதிசயம் ஒன்றும் விளங்க வில்லையே'' யென்று அதன் கரையில் இருந்து இளைப்பாறினார்கள். துரியோதனன் சேனையாவும் அப்பொய்கையை வளைத்து முற்றுகை போட்டது போற் சூழ்ந்து கொண்டன. இவர்களையும் இவர்களது பெருங் கூட்டத்தையும் இவர்களது குறிப்பையும் விஜயன் கண்டறிந்து கொண்டான். கண்டவுடன் கோபம் மிகக் கொண்டவனாகி வில்லினில் அம்புகள் தொடுத்து மழை வருஷம் போற் சர வருஷங்களைப் பொழிந்து, விட்டுக் கண்ணனைப் பார்த்து, ''கண்ணா! இங்கு நம்மை எதிர்த்து வந்திருக்கும் இச்சேனைக் கடலை யொழித்துத் தள்ளின பிறகு, நாம் இரதத்தில் ஏறுவோம்'' என்று சொல்லி மேலும் மேலும் பாணங்களைப் பொழிந்து கொண்டிருந்தான். கிருபன் கிருதவன்மன் அசுவத்தாமா மற்றும் உள்ள வீரர்கள் பலரும், உடனே தமது தமது வில்களை நாணேற்றி யம்புகளைப் பொழிந்து, அவர்கள் எய்த பாணங்களை யெல்லாம் அழித்திட்டு, அவ்வீரர்கள் மேலும் பாணங்களைப் பெய்து, தேர் வில் சாரதி முதலியவற்றையும் அழித்துக்கொன்று கொன்று வீழ்த்திக் கொண்டிருந்தான். தேரில் குதிரையில் யானையில் இருந்தவர்கள் எல்லோரையும் விஜயன் தானொருவனே பாரினின்று எய்து கொன்று கொண்டிருந்தான். இப்படிப் பல படைகளையும் கொன்ற பின்னர், தாங்களும் இரத மேறிக் கொண்டார்கள் அர்ச்சுனனும் அச்சுதனுமாகிய நர நாரணர்கள்.

இருவரும் இரத மேறிப் பொருது அழித்தபோது, கர்ணன் சகுனி துற்சாதனன் கிருத வன்மன் கிருபாச்சார் முதலானவர்களும் முதுகு கொடுத்து ஓடினார்கள்; ஆனால், துரியோதனன் மாத்திரம் சிறிதும் களைப்பில்லாமல் அர்ச்சுனன் எதிர் நின்று போர் புரிந்து கொண்டிருந்தனன்; இந்த ஆச்சரியத்தைக் கண்ட அர்ச்சுனன், "கண்ணா! அவக் கொடியன் தனது சொந்த பலம் கொண்டு போர் புரிகின்றானென்று நான் எண்ணவில்லை; எந்த வலியைக்கொண்டு இங்ஙனம் என்னெதிரில் சலிக்காமல் நின்றிருக்கின்றானென்றும் தெரியவில்லை; இதற்கு முன் போர் முனைக்கு வருவனாயின், வந்தவுடன் முதுகு காட்டி யோடிடுவனே! தணியாத பலமுடைய கிருபனும் அசுவத்தாமனும் தாங்கமாட்டாமலோடியும், இவன், மாத்திரம் களைப்பு சிறிது மில்லாமல் நின்று போர்புரிதல் எதன் பலன் கொண்டோ? எனக்குத் தெரியுமாறு உணர்த்தல் வேண்டும்? வில் வலியோ பாணத்தின் வலிமையோ கவசத்தின் பெருமையோ எனக்கு அறிவித்திடல் வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்; கண்ணன் ஆலோசித்துத்தெளிந்து, விஜயனை நோக்கி, "விஜயா! இன்று துரியோதனன் அணிந்துகொண்டு வந்திருக்கும் கவசம் மிகப் பழையதொன்று; பழைய இந்திரனுக்குப் பிரமனால் அருளப்பட்டது; அதனை யிந்திரன் அங்காரவினுக்குக் கொடுத்திட, அவனிடம் துரோணாசாரியர் பெற்றிருந்தார்; இன்று, அவர் அதனை யிவனுக்கு அணிவித்து அனுப்பி யிருக்கின்றார் ; அதனால், இவ்வற்பன் சலியாம லிருக்கின்றானே யொழிய வேறில்லை; இது பாணங்களினாலும் மற்ற ஆயுதங்களினாலும் அழியத் தக்கதன்று; இன்று நீ அதனை யழித்திடலாம்" என்று சொன்னார்.

கவசத்தைக் கபடத்தால் அழித்தல்.

இறைவன், இன்னும் விஜயனைப் பதம்பார்த்திட நினைத்தனரே யன்றி யக்கவசத்தை யெதனைக்கொண்டு எப்படி யழித்திடலாம் என்று சொல்லவே யில்லை; விஜயன் வீராதி வீரனுகையால், மறுபடியும் பலகணைத் தூவித் தூரியன்மேல் எய்துக்கொண் டிருந்தான். தூரியன் சிறிதும்சலித்தானிலன்; அவன் மெய்க்கவசமும் சிறிதும் துளைபடவிலது; சலித்து நீங்கிய கர்ணன் சகுனி அசுவத்தாமன் முதலிய வீரர்கள் திரும்பவும் பலங்கொண்டு முனைத்து முனையில் வந்து கூடி விட்டார்கள். எல்லோரும் போர் செய்துகொண் டிருக்கிறுர் கள். விஜயன் மனந்தளர்ந்து போனுன். மீண்டும் மனவலி கொண்டு, சுப்பிரமணியக் கடவுள் கைவேலினும் மேம்பட்ட தொரு வேலினை யெடுத்து, வன்மைகொண்டு, அக்கொடிய னது மார்பின் கவசம் கிழியும்படியாக எறிந்தான். அந்த வேலும் முனை மழுங்கிக் கீழே வீழ்ந்திட்டதன்றி தூரிய னுக்கு யாதும் தீங்கில்லை; கவசமும் ஒளிகொண்டு விளங்கி யிருந்தது. பார்த்தான் விஜயன்; பரிபவம் மிகவும் கொண்ட வனுகிக் கண்ணன் அருகே வந்து, அவரை வணங்கி, "உலக மோருருவாகி விளங்கும் லோக நாதனே! நீர் அறியாத துண்டா! என்னைப் பரீக்ஷித்திடல் வேண்டாம்; இந்தக் கவ சத்தினை அழித்திடல் வேண்டுகின்றேன்; கிருபை செய்யுங் கள்" என்று துதித்துப் போற்றினுன். தீன தயாபரனுகிய பரந்தாமன், பக்தர்கட்குதவும் பண்ணவன் ஆகலின், அர்ச் சுனன் அகம்பாவ மொழிந்து, வணங்கிப் பிரார்த்தித்த தன் மையைக் கண்டு, மனமிளகித் தமது வலம்புரிச் சங்கை யெடுத்துத் தமது திருப்பவள வாயில்வைத்து ஊதினுர். இறைவன் ஊதிய சங்கத் தொனியைக் கேட்டெல்லோரும் மயங்கித் தமது உணர்ச்சியற்றுப் பிரமித்து நின்றனர். அந்த

சமயம்பார்த்துப் பரம கிருபாநிதியாகிய பரந்தாமன், பற்குண னுக்கு, முன் நரகாஸுரனுடைய உயிரைக் கவருதற் குதவி யாயிருந்த தமது வேலாயுதத்தை தருவித்துக் கொடுத்து, “அர்ச்சுனு! அஞ்சாதே!! உனது அகம்பாவம் ஒழிந்திடற் காகவே இத்துணை நேரம் பொறுத்திருந்தேன்; அஃதொழி ந்து இப்போது நீ வணங்கினபடியால், நான் அருள் செய வேண்டியது கடமையாகலின், இந்த என் கைவேலை யுனக் குக் கொடுக்கின்றேன் ; இதனைக்கொண்டு வீசி யவன் கவ சத்தை மாத்திரம் அழித்திடு: அவன் அழிந்துபடும் எண் ணத்துடனுவது வேகத்துடனுவது எறிந்திடாதே! ஏனென் ருல், வீமன் கூறிய சபதம் முடியாமல் அவனுக்கு நிந்தை யேற்படும்” என்று சொல்லி வேலையும் கொடுத்தார். பகைவர் களும் மயக்கம் ஒழிந்து மீண்டும் போருக்கு முந்தினர். கர் ணன் சகுனி துற்சாதனன் கிருபன் கிருதவன்மன் முதலிய எல்லா வீரர்களும் மிகவும் தைரியத்துடன் போர்புரிய வந் தார்கள். விஜயன் தனது சொந்தவலிகொண்டு, மிகு பாணங் களை யேவியவர்களை யோடும்படியாகச் செய்து, பின், பரந் தாமனை மனனுறவழுத்தி, நல்லசிந்தனையுடன், துரியனது மார்பின் கவசம் துணிந்திடுமாறு, அந்த வேலாயுதத்தை யெடுத்துக் காகாவென்றுசுழற்றிவிட்டான். அஃது உடனே, எதிரியின் மார்பிற் பாய்ந்து எண்ணின வண்ணமே செய்து கவசத்தை மாத்திரம் அழித்துவிட்டது; கவசம் அழிந்து படவே, கண்ணில்லாதவன் மூத்தமகனுன துரியன், கடு நடையுடன் இரதத்தை விட்டுக்கொண்டு கர்ண சகுனி யரும் சல்லியன் முதலினேரும் பின்தொடர ஓடிவிட்டான்.

சாத்தகி சண்டை

இப்படி விஜயன் நின்ற போர்க்களத்தில் அதிரதரும் மாரதரும் அர்த்தரதரும் மற்றுள்ள வீரர்களும் அடிபட்டு

இடிபட்டு ஓடியிருக்க, ஆங்கு, முரசக்கொடி யுயர்த்தவாகிய தருமராசன், அருகுநின்ற சாத்தகியை அழைத்து, "நண்பா! நமது நண்பரும் உமது தமையனுமாகிய லோகநாயகன் பார்த்தசாரதிப் பெருமாள், வாளாவாயில் சங்குவைத் தூதவே மாட்டார்; ஏதோ விஜயனுக்கு விபத்து நேர்ந்திருக்கும்போ லிருக்கின்றது; நீயும் அங்கு ஏகிப் போர்முனை யொழித்து அவருக்குத் துணைபுரிந்து வருக" என்றான். சாத்தகி, வணங்கி, "தருமபூபனே! விஜயன நின்ற களத்துப் பகைவர் அழிவரேயன்றி, அவற்கு ஏதும் தீங்குநேராதெனச் சொல் லிப் பணியாற்றுவேன்" என்று புறப்பட்டான். பல படைக ளும் துணை வந்தன. படையொடும் சாத்தகி பகைவரது போர்முனையில் நுழைந்து, கிருதவன்மன் சகுனி சல்லியனாதி யர் முதுகு கொடுத்தேகும்படியாகப் பொருதழித்தான். எதிரிகள் முதுகிட்டோடும்போது எதிர்ப்பாரின்றி யேகும் சாத்தகியைச் சேனாபதியாகிய துரோணாச்சாரியர் நிறுத்தி, "என்னோடும் போர்செய்து வென்றுபோகலாமே" என்றார். "வேதியருடன் போர் தொடுப்பது தகுதியல்ல" வென்று கூறியும், அவர் எதிர்த்துப் பகழிகளை யேவினபடியினால், சாத்தகியும் வீரமுனையில் விரதமேதெனப் பாணங்களைத் தொடுத்திட்டான். இருவரும் இளைக்கும்வரையில் போர் புரிந்தார்கள் எனினும், சாத்தகி, இளைப்பாறித் தேரூர்ந்து, புறப்படும்போது, பல படைகொண்டு எதிர்வந்து துற்சாத னன் தடுத்து நின்றான். சாத்தகி, கண்ணனது ஆசியும் விர கும் வித்தையும் பெற்றவனாகலான், பல பகழிகள் சோனை போல் தூவித் துற்சாதனப்பேயைத் தூத்நி யடித்திட்டான். மற்றும் இடையில் வந்தெதிர்த்தவர் யாவரையும் தனிவீர னாகியே நின்று போர்புரிந்து விலகிக்கொண்டு, மேலேறிப் போய் விஜயனும் விமலனுமிருக்குமிடம் சேர்ந்தான்.

வீமன் வெற்றி

தருமராசன், மனம்பொறுமல், விஜயனையே மனம் கருதி யணித்து நின்ற வீமனை யழைத்து, "நீ போய் விஜய னுக்குத் துணைபுரிந்திடுவாய்" என்று அனுப்பினர். தமையன் பாதகமலங்களைத் தரையுற வணங்கி யுடனே, தன்னிரு மருங்கும் மன்னர்களும் படைகளும் சூழப் புறப்பட்டு வீமன் எதிரிகளது சேனையைக் கிட்டினன். எதிர் வந்து தடுத்த கலிங்கர் மாகதர் மாளவர் கௌசலர் கடாரர் தெலுங்கர் கன்னடர் யவனர் சோனகர் சீனர் குலிங்கர் ஆசிரியர் பப்பரர் கொப்பளர் முதலிய தேசத்துப் படைகளைப் போர்முகத்து முறுக்கி யடித்துக்கொண்டு முன்னேறி வேகத்துடன் போகும்போது, தனக்குரிய எதிரிகளாகிய, துரியன் தம்பியர் பலர் தன்னெதிர்வந்திடக் கண்டான். பீமனுக்குக் கண்ணிலான் புத்திரர் என்னில், அவருயிர் கற்கண்டுகட்டியன்றோ? அவரைச் சும்மா விடுத்திடுவனு? எதிர்த்தவரை யெற்றினன். கணைகொடு பொருதான். போர்முனைந் தெதிர்த்தான். அவர் தாமும் வீரராயினும் வீரசூரதீரனான வீமசேனன் முன் நின்றிடுவரோ? அன்றியும் சிறிது சிறிது அளவிலும் அப்பகைவரைக் கொல்லவேண்டிய கடமையுள்ளவனாகலின், அவர்களது அழிவையே கருதிப் பாணங்களை யேவிப் பாம்புக்கொடி படைத்த பாவியிவன் தம்பிகள் முப்பத்தைந்துபேர்களை யுயிரொழித்துவிட்டான். விந்தன் விந்தரன் குண்டலபோசி தீர்க்கலோசனன் சித்திரசேனன் ஆகியோரும் மற்றும் முப்பது பேர்களும் ஒழிந்தார்கள் இன்று, என்னும் ஒலியெழுந்தது.

வெற்றியுடன் வீமன், தமது சேனையைக் கடந்து போவதைக்கண்ட துரோணுசாரியர், படையுடன் எதிர்வந்து

தடுத்து நின்றார். வீமன், அவரைப்பார்த்து, "என் என்றனுக்குப் பாவத்தைச் சுமத்துகின்றீர்கள்; நான் வணங்குதல் அல்லாது வேறொன்றும் செய்ய இயலாத பூஜிதையுடைய நீர் எதிரி முகத்திருக்கின்றீரே யென்று கருதி நான், உமது போர்முகத்துக்கே குறுகிடாமல், ஒதுங்கி நீங்குகின்றேன்; போர்முனையில் தாம் வலியவந்து பொருது, எனது கணைகளால் அழிந்தோடி எனக்கு பாவமூட்டையைச் சேர்க்கின்றீர்களே" என்று சொன்னான். எனினும், அந்தணர் அஃதொன்றும் நினையாது சரமழைகளைப் பொழிந்திடலால், பீமனும் எதிர்க்கணைகளைப் பொழிந்து அவரெறிந்த பாணங்களை யழித்திட்டு, "இவரிடம் நீண்ட நாழிகை கழித்திடின், அண்ணன் சொற்படி அர்ச்சுனனை யணுகிடல் முடியாதென நினைத்து, அந்தணர் ஏறி வந்த ரதத்தினை அங்கையினால் எடுத்தேந்தி, ஆகாயத்திற் கா கா வென்று சுழற்றித் தரையில் வீழச் செய்தான். வேதியர், நடுங்கினார்; அவரது தேகத்தில் எலும்புகள் முறிந்தன. தேரும் சிலையும் கலங்கி யொடிந்தன. துரோணாசாரியரை வென்றுமேல் நடந்திரும்போது, அவனது அடல் கண்டு ஆரும் எதிர்ப்பட பயந்து நின்றிட்டார்கள். எதிரொருவரில்லாமற் போய்க் கொண்டிருக்கும், வாயு மைந்தனாகிய பீமனைக் கண்டு வெறுப்பொடும் கொதித்து, ஆதபன் மைந்தனாகிய கர்ணன் பல படைகளோடும் எதிர்தோன்றி நின்றான்.

வீமனும் கர்ணனும்.

கோபம் விஞ்சித் தாபம் மிகுந்து, இருவரும் விற்பணி கொண்டு நற்பணி யாற்றினர். கணைகள் தூவிப் புணை கொடு பொருதனர். வில்லிற் கோத்துச் சொல்லொடு தொடுத்தனர். ஒருவர்க் கொருவர் ஓயாது தூவினர். இவருள், வீமன்

கோபம் விஞ்சி யெய்திடும் அம்பினால், சூதன் மகன் கர்ணன் ஏறிய ரதமும் பாகனும் சிந்தி யழிந்தார்கள். கவசமும் வில் லும் பிளந்தன. குடையும் கொடியும் கிழிந்தன. கன்னன் அழிந்து நின்றமைகண்டு, அருகு நின்ற அவன் மகன் விஷ சேனன், என்பவன், ஓடி மூர்ச்சித்து வீழ்ந்த கர்ணனைத் தனது தேரின் மேலேற்றிக் கொள்ள முயன்றபோது, கர் ணன் தடுத்துப் பின்னரும் போர் வலிகொண்டு வீமனெதிர் வந்து நின்றான். வீமன், நகைப்பும் கோபமுங் கொண்டு, "துரோணனுக் குரியதே இவனுக்கும் தக்கது; இவனை விஜ யன் அழித்திடல் வஞ்சினக்கூற்று; நான் அழித்தல் கூடாது" என்று நினைத்து, அவன் ஏறி வந்த தேரினைக் கையாலேந்திப் பூமியில் மோதினான். குன்று போன்ற தேரும் அழிந்து நண்பனாகிய கர்ணனும் கலங்கியதை யுணர்ந்த துரியோ தனன், அருகு நின்ற தன தாருயிருக்கு உறுதுணையாகிய தன்னிருவரையும் துணையனுப்பினான். மதுகைடவர் எனத் தகுந்த பலமுடைய மன்னவன் தம்பியரிருவரும் வீமனுக் கெதிர் தோன்றி வில்லேற்று நின்றனர். துரியன் தம்பியர் யாரையும் துரும்பென நினைத்திடும் வீமன், பகழிகள் பல தூவியவர்களது அழிவையே நினைத்து ஏவி விட்டபடியால், அவ்விரு தம்பியரும் ஒருகணத்தினில் வானுலகடைந்தார்கள்.

சென்ற தம்பியர் வீமனாலிறந்தமை கருதிக் கோபம் கொண்டிருக்கும் மன்னர் மன்னவன் துரியன்பாற் சென்ற கர்ணன் மற்றொரு தேர் மீதேறி, "மன்னா! கலங்கல் வேண் டாம்; உன் தம்பியர் இருவரையும் கொன்றவனையின்று கொல்லாவிடில் எனது தலையை யவன் கையிற் கொடுத்து வருகின்றேன்; பாரிப்போது" என்று சொல்லி வீரவாசகம் பேசி வீமனெதிர் மீண்டும் ஓடி வந்தனன்; எதிர்த்து நின்றான்.

கோபத்துடன் பாணங்களைப் பொழிந்தான். இருவரும் ஒரு வயிற்றிலிருந்தவராகலால், இருவரும் ஒத்த வலியுடையரா கவே இருந்தார்கள்; தோலாது பொருது கொண்டிருந்தார் கள். அப்போது, வீமன் கன்னனைப் பார்த்து, "சூதன் மாமகனே, நீ என்னுடன் முனைந்து நின்றனையானாலும் உன்னை நான் கொன்றிட நினைத்திலேன்; நான் உன்னைக் கொன்றிட்டால், சபையின் முன் தனஞ்சயன் கூறிய சபதம் பொய்த்திடுமாதலால், மேனி குருதி கொப்புளிக்க நின்று என் முன் ஏன் நீ வருந்த வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டு, அவன்மேற் பகழிகளைத் தூவிக் கொண்டிருந் தான். கர்ணன் கோபித்துக் கணைகளால் வீமன் கணைகளை யழித்திட்டு மேலும் பக்குவப் பகழிகள் தூவித் தேரையும் சாரதியையும் சிதைத்தும் வில்லையும் ஒடித்தான். வச்சிரத் தேரும் குதிரையும் கொடியுமழிந்து போகுமெனக் கருதிய வீமன், முன்னரே, மண்மிசைக் குதித்துக் கால் மிசை நடந்து காலைப்போற் கடுகிக் கதிரவன் சிறுவனுன கர்ணன் மேலோடிவந்தான். இதுகண்ட கர்ணன், கடுங்கோபத் துடன் ஒரு வேலாயுதத்தை யெடுத்து வலிகொண்ட மட்டும் சுழற்றி வீமன்மேலெறிந்திட்டான். அந்த வேலினைத் தனது வேலினுல் தூளாக்கித் தன் நெடுங்கதையினைக் கையிலேந்திப் புன்னகையுடன் பேசிக் கர்ணன்மேல் வீசி யெறிந்திட்டான். அந்த நான்குமுழத் தண்டு சுழன்று வந்து கர்ணன் ஏறி யிருந்த தேர் முதலியவற்றை யழித்திட மற்றொரு தேரின்மே லேறிக்கொண்டான். அதனையும் அக்கதைகொண்டே வீமன் துணித்திட்டனன். இவ்விருவரும் மலைந்திருந்த போரினைக் கண்ணுற்ற துரியோதனன், துன்முகனென்னும் தன் இளைய தம்பியை ஏவிநின்ருன். துன்முகன் கடிதின்வந்து வீமனை வளைத்துக்கொண்டு, வார்சிலையை வளைப்புற வாங்கி நெடும்

பகழிகள் தொடுத்து நின்றான். வீமன், துரியன் தம்பியர்க்கு வைத்திருந்த ஒரு செயலாவது, அவர் எதிர்த்தவுடன் திரும்பப்போயிடாமல், வானுலகேற்றுதலாகலின், அப்படியே செய்திட்டான்.

விகர்ணனும் வீமனும்.

தேரிழந்து தாளின் ஓடிக்கொண்டிருக்கும், கன்னன், துன்முகன் வீழ்ந்ததைக்கண்டு, கோபங்கொண்டு, ஒரு தோமரத்தைக் கையிலேந்தி வீமன்மே லெறிந்திடவே, வீமன் ஒரு சில கணைகள்கொண்டு அஃதனைப் பொடிசெய்திட்டான். மன்னன், மற்றும் இருவர் தம்பியரை மாருதியின்மே லேவினான். அவ்விருவரையும் வீமன் உடனே, தனது வழக்கம் போலவே, வானுலகினிற்கு ஏவிவிட்டான். பின்னும் மன்னவன் பொறாமல், விகர்ணன் முதலிய ஐவரையும் வீமன்மே லேவி நின்றான். வீமன், அவர்களுள் நால்வரைக் கொன்றிட்டு, விகர்ணனைப் பார்த்துக் கூறுகின்றான்; விகர்ண! என் அறிவுடைத் தம்பியே!!

> "சுடுவுரைக் கனலன்ன துற்சாதனன்
> வடுவுரைக்கவும் மன்னுறை மன்றிடை
> நடுவுரைக்கு நன்னாவுடை யாயுனைக்
> கொடுவுரைக்கணை யேவினுங் கொல்லுமோ?"

மன்னவர் கூடிய அப்பேரவையில், உன் அண்ணன் துற்சாதனன், சுடு சொற்கள் சொல்லி நின்றபோது, அவனது தம்பியா யிருந்தும், உன் அண்ணன் துரியனுக்குப் பெரியோரும் பயந்து வாய்பேசாதிருக்கவும், நீ பயமின்றி எதிர் தோன்றி யெழுந்து, நின் நல்ல நாவைக்கொண்டு நடுவு சொன்னையே! அப்பா!! உன்மேல் நான் பாணத்தை யெய்தாலும் அது உன்னைக் கொல்லுமோ? கொன்றிடாது; என்

சபதம் கெட்டாலும் கெடட்டும்; உன்னை நான் கொல்லத் துணிந்திலேன்; உன்பேரில் பாணம் விடமாட்டேன்; நீ போகலாம்'' என்முன். வீமன் இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தாலும் விகர்ணன், தன் பணியாற்ற வந்தவனுக்கலின், அந்தப் பொது உரைகளைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே, வீமன்மேற் கணைகளைப் பொழிந்திட்டனன். பின்னும் எதிர் கூறுகின்முன்:—

"எம்முனோர்கள் எனைவரும் உம் கையில்
வெம்முனைக் கணையால் விளிந் தேகவும்
உம்முன் யானொருவேனும் உய்வேன் கொலோ
வம்மின் வார்சிலை வாங்குகென் ரேதினன்."

இருவரும் போர் புரிந்தார்கள். பரஸ்பரம் பகழிகள் தம்மீது படாது தடுத்துக்கொண்டிருந்தனர். விகர்ணன்விட்ட நெடுங்கணை வீமனது தேர் கொடிகளை யழித்திட்டது. வீமன், ஒரு சுடுகணை யேவி, மனமில்லாதவனுயினும், கடமையை யாற்றிட நினைத்து, விகர்ணனது மகுடத்தைத் தள்ளினன். பின்னும் ஒரு கணையால், விகர்ணனது ஆவியையும் மெல்ல மெல்லக் கவர்ந்தனன். விகர்ணனும் பட்டொழிந்தான் எனலும், கன்னனும் பொருதுமீண்டும் ஓடி விட்டான். செருக்களமெங்கும், பேய்களும் கழுகுகளும் காகங்களும் மோகங்கொண்டு உலாவின. கவந்தங்கள் பல நின்ருடின. எதிரொருவரின்றி வாயுவின் மைந்தன் வீமன் தேரைச் செலுத்திக்கொண்டு போய்ச் சாத்தகி நின்றவிடம் சார்ந்தான்.

சாத்தகியும் பூரிசவாவும்.

எதிரியின் அமர்க்களத்திற் பேய்கள் நின்று ஆடும்படியாகச் செய்துவிட்டு, வீமனும் சாத்தகியும் கூடிக்கொண்டு

விஜயனும் விமலனும் இருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். இனி அவர் நின்ற போர்க்களம் எப்படியிருக்கு மென்று சொல்லவும் வேண்டுமோ? காற்றும் நெருப்பும் சேர்ந்ததைப் போலத்தானுயிற்று, என்று சொல்வ தல்லாமல் வேறில்லை. அம் மூன்று வீரர்களும் நின்ற இடத்தை நோக்கி எதிரிகள் யாவரும் பின்னரும் கூடிப் போர் செய்வான் வந்து சேர்ந்தார் கள். வீரரும் நின்றுபோர் தொடுத்தார்கள். சாத்தகியும் பூரிச வாவும் கலந்து போர் செய்தார்கள். முதன் முதலில் வில்போர் தொடுத்து நின்றூர்கள்; பிறகு மற்போரிற் கலந்துநின்றூர்கள். மல்யுத்தத்திற் பூரிக்குச் சாத்தகி இளைத்துப் போனுன்; ஆகை யினல், சாத்தகியைக் கொல்ல முயன்றபோது, இதனைப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணபிரான், அவ்விருவர் போரி னையும் அர்ச்சுனனுக்குக் காட்டிப் "பூரியைக் கணை தொடுத் துக் கொன்றிடுவாய்" என்று சொன்னூர். அர்ச்சுனன், அவ் வார்த்தையைத் தடுத்து, "இருவரும் முனைந்தபோரில் இளைத் தவற் குதவியாகப் பொருவது கடன்தானே?" என்று விஜ யன்கூற, விஜயனைப்பார்த்து மாமாயன் கோபித்துக் கட்டளை யிட்டவுடனே, அர்ச்சுனன், கண்ணனது திருவுள்ளத்தை யுணர்ந்து பூரிசவாவின் திண்ணிய புயங்கள் துணிந்து விழும் படியாகப் பாணங்களை யெய்து விட்டான். புஜம் துணிந்து வீழ்ந்த பூரிசவாவினைத் தள்ளித் தலை துமித்துக்கொன்று சாத்தகி வெற்றி கொண்டு நிற்க, அரவக் கொடியோன் அத னைப் பார்த்து, "இதுமன்னவர் தருமமாகாது" என்று சொன் னூர்; அப்போது கண்ணபிரான், அவனை நோக்கி,

"நென்னல் நீர் அபிமன்தன்னை நேரற வென்ற போரும்
முன்னமே சிவேதன் தன்னை முன்னமே முடித்த போரும்
மன்னற முறைத வறுமல் மலைந்தனிர் என்று நக்கான்
தன்னை வந்தடைந் தோர்க்குற்ற தளர்வெல்லாம் ஒழிக்குந்தாளான்."

'ஆமாம்; நீங்கள் அபிமன்னனைக் கொன்றதும், முதல் நாளிலேயே பீஷ்மன் சிவேதனைக் கொன்றதும், மன்னற முறை தவறாத காரியங்கள் அன்றோ?'' என்று இடித்துக் கூறினர். மறுபடியும் விஜயனும் மற்றை யிருவரும், எதிர்த்தவர்களை வானிலேற்றிவிட்டு, மேலே நடக்கவேண்டிய போரினை நடத்த வேண்டிப் பகைவாது இருப்பிடம் புகுந்து நின்றார்கள். தக்க வீரரும் தனஞ்சயனும் வந்துற்றதைக் கண்ட எதிரிகள், ''சூரியன் அஸ்தமிக்கும்வரையில், எங்ஙனமேனும் காப்பாற்றி விட்டோமாயின், பின்னர், விஜயன் தீயில் வீழ்ந்து மாள்வான்; நமக்குப் போர்ச்சிரமம் நீங்கும்; பாண்டவர் ஒழிந்தே தீர்வர்'' என்று ஆலோசனை செய்து சிந்துபதியாகிய ஜயத்திரதனை நிலவரையில் ஒளித்து வைத்து விட்டு, அணி யணியாக நின்று, எதிரிகளைத் தாக்கினர்கள்.

கதிரவனைச் சக்கர மேவி மறைத்தல்.

விஜயன் முதலிய மூவரும் மிகவும் துணிவுடனும் வேகத்துடனும் எதிரிகளுடன் போர்புரிந்து கொண்டிருந்தபோது, எல்லாம் உணர்ந்த எம்பெருமான், சூரியனது பொழுதினையும் பார்த்துக் களமெங்கும் சிந்துபதி தலையெங்கே எனவும் பார்த்தார்; ''சூரியன் இன்னும் சிறு போதில் அஸ்தமித்து விடுவன்; ஆனல், ஜயத்திரதனை யமர்க்களத்தில் காண வில்லையே எதிரிகள், அவனை யமர்க்களத்திலேயே நிற்க விடாமல், எங்கோ ஒளித்து வைத்திருக்கிறார்கள்; இதனை எப்படி; யேனும் அறிந்திட வேண்டுமென்று, உள்ளத்தில் ஓர் உருதி கொண்டு'' கபடமும் வஞ்சமும் கொண்டுள்ளாரை அவற்றைக் கொண்டே வென்றிடுதல் வழக்காறுகும்; ஆதலால், அம்முறையைக் கைப்பற்றி யின்றைய வெற்றியை விஜயனுக்கு ஆக்கிட

வேண்டுமென்று தீர்மானித்து, ஒரு மாயம் செய்தார்; அஃது என்ன வெனில்,

"பாராழி யவலமறப் பாண்டவர் தம்மிடர்
தீரப் பார்த்தன் வாழப்
பேராழி யணை துயிலும் பெருமிதமும்
உடன்மறந்து பிறந்த மாயோன்
ஓராழி யெழுபரித் தேருடையானை
மாயையினு லொழிக்கத் தன்மைக்
கூராழி பணித்தலு மக்கனம் போலச்
சிவந்தன அக்குடபா லெங்கும்."

பூமிபாரந் தீரவும், பாண்டவர் தம் துயரம் நீங்கவும் பார்த்தன் வாழவும் அவதரித்த மாமாயன், சூரியனை மாயையினுல் மறைத்திடற் கெண்ணித் தனது கைச்சக்காத்தை யேவினர்; அது சென்று சூரியனை மறைத்து விட்டபடியால், மேற்குத் திக்கெல்லாம், அந்த அமர்க்களம் போலவே சிவந்து போயது; செர்க்கவான மென்று யாவரும் நினைத்திடும் படியாகவே இருந்தது; சூரியன் அஸ்தமித்தகாலையில், மேல்வானஞ் சிவந்ததைப்போலச் சிவந்திருக்க, யாவரும், அவருள் பகைவரும் மிக நிச்சயமாய்ச் சூரியன் மறைந்துவிட்டான் என்றே எண்ணினுர்கள். எதிரிகள் உளம் பூரித்தார்கள்; மன்னர் மன்னன் மனக் களிகொண்டான்; பகைவர் யாவரும் போரை நிறுத்தி விட்டு, அர்ச்சுனன் கூறிய சபதத்தை முடித்திடும்படி வற்புறுத்தற்குக் கூடி நின்றூர் கள்; சூரியன் அஸ்தமித்து விட்டபடியால் இனிப் பயமில்லை யென்று, நிலவறையில் மறைத்து வைத்திருந்த சிந்துபதியை வெளிப்படுத்தி யுடன்கூட்டி வந்தார்கள். எல்லாருமாக அதாவது ஜயத்திரதனையும் அழைத்துக்கொண்டு, அருச்சுன னிருக்குமிடத் தெதிர்வந்தார்கள்.

சிந்துபதியும் மகன் சயத்திரதனும் அழிதல்.

மறைந்திருந்த சிந்துபதி வெளிப் பட்டதனை யுணர்ந்த மாமாயன், அர்ச்சுனனைத் தூண்டிச் சைகைசெய்து, சிந்துபதி தலையைக் காட்டி "யதனை கொய்து, கீழே வீழ்ந்து படாமல், சரங்களால் தள்ளிக்கொண்டு ஆகாய வழியேசென்று, சமந்த பஞ்சகத்தின் கரையில் தர்ப்பித்துக் கொண்டிருக்கும், ஜயத்திரதனது தகப்பன் கைகளில் வீழ்ந்திடும் படியாகச் செய்யப்" பணித்திட்டார்,

"எண்சிறந்த மகன்தலையை நிலத்திலிட்டான்
தலை துகளாகென்று நாடித்
தண்சமந்த பஞ்சகமென் றொருமடுவி
லிவன்தாதை தரிப்பிக் கின்றான்
ஒண்சரங்கொண் டிவன்தலைமற் றவன்காத்திற்
போய்வீழ நீயுடற்று கென்று
திண்சயங்கொள் விஜயனுக்குச் சிந்துபதிதனைக்
காட்டிடத் திருமால் சொன்னான்."

"என் மகன் தலையை யெவன் நிலத்திலிடுகின்றானோ; அவன் தலை துகளாதல் வேண்டுமென்று, ஒரு மந்திரங் கொண்டு, சமந்தக பஞ்சகம் என்னும் மடுவினில், ஜயத்திரதன் தந்தை நீர்மொண்டு தரிப்பித்துக்கொண்டிருக்கிறானதலால், 'தன் வினை தன்னையே சுடும்' என்பதற் கிணங்கவே, சரங்கொண்டு கொய்யப் பெற்ற ஜயத்திரதன் தலையை நிலத்திடாமல் அவன் தந்தை கையிலிடும் படியாகச் செய்திட்டால், அவன் பயந்து அத்தலையை நிலத்திட்டுத் தன் தலை துகளாகித் தானும் சாவான்" என்னும் ஆலோசனையுடன், கண்ணபிரான், அர்ச்சுனனுக்கு அங்ஙனம் பணித்திட்டார்.

சூரியன், சக்கரத்தினுல் மறைப்புண்டிருக்கும் அச்சமயத்திலேயே, பகைவர் யாவருங்கூடி விஜயனைத் தீயிற் குதித்திடும்படியாக வற்புறுத்தக் கூடியிருக்கும் அச்சமயத்திலேயே, கண்ணபிரான் தமக்கு ஜயத்திரதனைக் காட்டிச் சைகை குறித்த அச்சமயத்திலேயே, விஜயன் சரமொன்றினையேவி சிந்துபதி தலையைக் கொய்து, மற்றும் சரங்களால் அதனைச் செலுத்திக்கொண்டேபோய்ச் சமந்த பஞ்சகத்தில் அவன் தந்தை கரத்தில் வீழும்படி செய்திட்டான். அங்ஙனமே அவன், தன் கையில் வீழ்ந்த தலையை நிலத்திட்டு அவனும் மாய்ந்தான்.

துர்யன் கோபம்.

"முன்பட்டான் அருக்கனென வெளிப்பட்டான்
வெளிப்பட்டு முடிவிற் சிந்து
மன்பட்டான் மாமாயன் மாயமிதென்
றறியாமல் மகன்போய்ப் பட்ட
பின்பட்டா னவன்தந்தை யினிப்பட்டா
ரெவருமெனப் பிழைப்பட்டான் போல்
என்பட்டான் அரவுயர்த்தோன் எரிப்பட்டான்
விஜயனென எண்ணி நின்றான்."

சூரியன் அத்தமித்துவிட்டான் என வெண்ணிச் சிந்துபதி வெளியில் வந்தான்; வந்தவுடன் அச் சிந்துபதி ஜயத்திரதன் அழிபட்டான்; அவன் தந்தையும் மகன் வழியே இறந்து பட்டான். விஜயன் நெருப்பில் வீழ்ந்து விட்டானெனக் களித்து நின்ற பாம்புக் கொடியனுன துரியன் என்னபாடு பட்டானே? "சூரியன் அஸ்தமித்தும் அர்ச்சுனன் சொன்ன சபதம் பிழைத்திட்டுச் சிந்துபதியைக் கொன்று விட்டான்" என்று குறித்துக் கர்ணன் சகுனி துரியோதனன் துற்சாத

னன் முதலியோர்கள் பொங்கிக் குதித்துக்கொண்டிருக்கும் போது, எம்பெருமான் பணியால், அவர் கைச்சக்கர மானது, சூரியனை வெளிப்படுத்தித் தனதிருப்பிடம் வந்துசேர்ந்தது. இன்னம் ஒரு பனைப் பொழுது இருக்கின்றதென்று யாவருக்கும் சூரியதேவன் சொல்லுவதுபோல், தனது ஆயிரங் கரங்களையும் காட்டிப் பிரகாசித்துநின்றான். யாவ ரும் பிரமித்து நின்றார்கள். பகைவர் நடுக்கமும் நாண மும் கோபமும் கொண்டார்கள். பெரியோரெல்லாம் இஃது என்ன மாயமோஎன்று நினைத்தார்கள். சூரியனைப் பாம்புதான் முன் விழுங்கிப் பின் உமிழ்ந்தானோ? என்றார்கள் சில பேர் கள்; விஜயனாகிய தன் மகன் இறந்து விடுவானே என இந்தி ரன் தான் மாயமாக மறைத்து விட்டானோ? அல்லது எல்லாம் பாண்டவர்க்கே நன்மை யாக்கும் பார்த்தசாரதிதான் கைத் திகிரியினால் மறைத்து வெளிப்படுத்தினரோ; எனப் பலரும் பலவிதமாகச் சொல்லிக்கொண் டிருந்தார்கள். பகைவர் யாவ ருங்கூடி நின்று, இந்த மாமாயங்களைச் செய்துகொண்டு கள் ளக் கண்ணன் பஞ்சவர்க்குத் துணையாக நின்றிருக்கும் வரை யில், அர்ச்சுனன் வெற்றியடையாமல் யார்தான் வெல்லப் போகிறார்கள்?

"உந்திரதத்த னிவலவன் உபாயத்தால்
வருணன்மகன் உயிரை மாய்த்தான்
மந்திரமொன் றறிவித்து வயப்புய
மாயிரத்தோனை மடிவித் திட்டான்
தந்திரம்மெய் மயங்கிவிழத் தன்சங்க
முழக்கினான் தபனன் மாய
இந்திரஜாலமுஞ் செய்தான் இந்திரன்சேய்
வெல்லாமல் யார் வெல்வாரே."

என்று கோபித்துச் சொல்லிப் பொங்கிக் கொதித்துக் குதித் துக் கொண்டிருந்தார்கள். அரவக்கொடியன் மிகப் பொங்கி,

"முடையெடுத்த நவநீதந் தொட்டுண்டும்
கட்டுண்டும் முதனாள் நாகக்
குடையெடுத்து மழைதடுத்தும் வஞ்சனைக்கோர்
கொள்கலமாம் கொடிய பாவி
படையெடுத்து வினைசெய்யே னெனப்புகன்ற
மொழிதப்பிப் பகைத்த போரின்
இடையெடுத்த நேமியினால் வெயில்மறைத்தா
னின்னமிவன் என் செய்யானே."

இம்மாயக் கள்ளனாகிய இடையன், "போரில் நான் படையெடுப்பதில்லை" யென யென்முன் சொல்லிப் பின், இப்போது தனது படையை யெடுத்துச் சூரியனை மறைத்துவிட்டானே; இன்னமிவன் என்ன தான் செய்யமாட்டான்; ஆகையினால், "இத்தச் சூரியன் மறைவதற்குள் ஐவரையும் உடனே கொன்று வீழ்த்திடுதல்; அல்லது இறந்து படுதல்; இரண்டிலொன்றைச் செய்திடுகிறே"னென்று தன் சேனைகளுடன் சென்று பஞ்சவரையும் வளைந்து கொண்டான். மன்னர் மன்னன் புறப்பட்டது கண்ட துணை மன்னர்களும் உடன் கூடிச் சூழ்ந்து கொண்டார்கள். மன்னர் மன்னன் புறப்பட்டது கண்ட துணை மன்னர்களும் உடன்கூடிச் சூழ்ந்தார்கள். இருதிறத் தாரும் தனித்தனியே நின்று போர்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

மறுபடியும் போர்.

துருபதனும் சாத்தகியும் திரௌபதி மைந்தரும் சேர்ந்து, சேனாபதியான துரோணருடன் போர் புரிந்தார்கள். தம்பிகளுடன் துரியோதனனும் துணை வேந்தர் ஒரு பதினாயிரவரும் வீமனோடு எதிர்த்து நின்றார்கள். துரியோதனன் முதலியோர் கோபமும் உறுதியும் கொண்டு பொரு பகழிகளை மாரியாகப் பெய்த தன்மையால், வீமனுடைய தேர் சாரதி குதிரைகள்

அழிந்துபோக, வீமன், கைவில்லு மிழந்து வெறுங்கை கொண்டு போர் செய்தான். குதிரைகளைக் கொண்டு குதிரைகளை யழிப்பது ரதங்களைக் கொண்டு ரதங்களைச் சிதறுவதும் யானைகளையே யெடுத்து யானைகளை மோதுவதும் காலாட்களை வாரிக் காலாட்கள் மேலெறிந் தொழிப்பதுமாய்ப் பகைவர் சேனைகளை யுடன்று உழக்கிச் சிங்க நாதம் செய்துக் கொண்டிருந்தான். வீமனுடன் இப்படிப் போர் செய்துகொண்டிருந்தவர்களாகிய துரியோதனன் தம்பியர்களில் இருவர் மாத்திரம் விடாமல் உக்கிரத்துடன் வெகுநேரம் நின்று பொருதுக்கொண்டிருந்தார்கள். அவராவார் பிருகன் சூசி என்னும் பெயருடையார்; அவ்விருவரையும் முடிவினில் வானுலகேற்றி வெற்றியுடன் நின்றிட்டான் வீமன் என்பான்.

அஞ்சனபன்மன் அழிதல்

போரினிற் சிறந்த கடோற்கசனும் அவன் மகனும் குருவின் மகனாகிய அசுவத்தாமனுடன் வெகுநேரம் நின்று போர் செய்துக்கொண்டிருந்தார்கள். அஞ்சனபன்மன் என்னும் கடோற்கசன் மகனை அசுவத்தாமன் கொன்றிட்டான். தன் மகன் இறந்த கோபத்தாற் கடோற்கசன் அசுவத்தாமனோடு பெரும்போர் மலைந்து நிற்கும்போது, அசுவத்தாமன், கடோற்கசனையும் ஒரு கதையா லடித்துக் கீழே வீழ்த்தி விட்டான். மோஹித்துக் கீழே விழுந்த கடோற்கசன் பின்னும் வெகு கோபத்துடன் எழுந்து, வீராவேசங் கொண்டு அசுவ்த்தாமனை நாடிவரும்போது, அரவக் கொடியோன் கர்ணனை நோக்கி, "கர்ணா! நீ விரைந்து சென்று கடோற்கசனைக் கொன்றிடுவாய்" என்று சொன்னான். "தண்டால் அடிபட்டுச் சோகித்து வீழ்ந்திருக்கும் ஒருவனை நான் தொடமாட்டேன்; என் கணைக்கு விஜயனுயிர்

மேல் தாகம் அதிகரித்திருக்கின்றது; இதோ இப்போதே சென்று விஜயனைக் கொன்று உனக்கே அம்முடியை நிச்சயமாகச் சூட்டி விடுகிறேன்'' என்று மறுமொழி கூறினான். கர்ணனுரைத்த உரையைக் கேட்டுக் கொண்டிருந்த கிருபாசாரியார், "கர்ண! நல்ல உரை கூறுகின்றாய்; அவன் எதிரே கிட்டி வருவனானால், முதுகிட்டு ஓடிடுவாய்; அவன் எதிரில்லாதபோது கிரீடியைக் கொன்றிடுவேன் என்று சொல்வாய்; போர் வெல்லும் அரசர்கள் தம் பெருமை கூறுவரோ'' என்று இடித்துப் பேசினான். இச் சுடு சொல் செவியிற்படலும், மிகவும் கோபத்துடன் விஜயனுடன் போர் புரிதற்கேகி நின்றான். சொல்லின் மிக்க கிருபாசாரி சொன்னவார்த்தை பொய்யோ? அர்ச்சுனனை யெதிர்த்திட வந்த கர்ணன், விஜயன் விடு கணைகட்கு எதிர் நிற்க மாட்டாமல் தேர் முதலிய அழிந்து ஒழிந்து முதுகிட்டோடி விட்டான். கர்ணன் மாத்திரமா? எத்தனை யரசர்கள் அர்ச்சுனனுடன் அமர் செய்து புஜபல மொழிந்து முதுகிட்டார்கள் என்பதைச் சொல்வோம். அத்தனை யரசர்களில் கர்ணனு மொருவனாகத்தான் ஓடிப் போனான்.

அசுவத்தாமன், மீண்டு வந்து தன் தந்தை யொடும் பொருதுக் கொண்டிருந்த குந்தி போசன் மைந்தர் இருபேருடனும் உக்ர யுத்தம் செய்து அவ்விருவரையும் மாய்த்தொழித்தான். இன்றெல்லாம் குருமகனும், தன் பேராற்றல் காட்டிப் பல படைஞரைப் பொருக்ழித் திட்டான். அந்தணரும் அமர் முகத்தில் நின்றபோது, அறம் பார்த்தல் குறித்திடுவரோ? போர்த் தருமம் யாவர்க்கும் ஒத்ததுதான். அந்த சமயம், மாயவன் கைத்திகிரியினால் தன் கிரணங்கள் மறைக்கப் பட்டமைக்கு நாணினன் போலச் சூரிய தேவன்

குடபாற் சாய்ந்தான். எங்கும் இருள் வந்து மூடிக் கொண்டது.

இரவிற் போர்.

இன்று அம்மாயக் கண்ணன் பகலை யிரவாக்கினான்; நாமும் இன்றே இரவைப் பகலாக்கி, இன்று இராப் போதினும் போரினை நிறுத்தாமல் மலைந்து பஞ்சவர் உயிரையும் மடித்திடல் வேண்டுமென்று, யானை முதலிய சேனைகட்கும் மற்றும் போர்க் களமெங்கும் பிரகாசிக்கும்படியாக விளக்கேற்றும்படித் துரியோதனன் கட்டளையிட்டான். உடனே எங்கும் பகலைப் போற் பிரகாசப் படுத்தினார்கள். இருதிறத்தவர்களும் தனித்தனியே நின்று போர் செய்தார்கள். விஜயனும் கர்ணனும் பொருது நின்றார்கள். கிருதவன்மனும் தருமராஜனும் உடன்று யுத்தம் செய்தார்கள். துரோணனும் திட்டத் துய்மனும் சண்டையிட்டுப் பகழி தூவினார்கள். பொருது அழிந்தேனும் பேர்வேன் எனத் துரியன் வீமனுடன் எதிர்த்து நின்றான். சல்லியனும் சுதாநீகனும் கதித்துக் களத்தில் நின்றார்கள். அசுவத்தாமனும் கடோற்கசனும் அமர் புரிந்தார்கள்.

விஜயன் கர்ணனை வழக்கம் போலவே, தனது பக்குவக் கணைகளினால் தேர் முதலியன அழித்து மீளவும் முதுகு தரும்படியே செய்திட்டான். தருமராஜன், ரகு குல வீர சிகாமணியாகிய ஸ்ரீராமனைப்போல் நின்று, கடும் போர் புரிந்து, கிருதவன்மனை போர் கெட்டுப் போம்படியாகச் செய்து விட்டான். மறுபடியும் வேறொரு தேரின் மீதேறிக் கொண்டு சூரியன் மகனைத் தேர் முதலியவற்றை யழித்துத் தள்ளிடக் கர்ணன் வெகுண்டு, ஒரு கை வேலினை யெடுத்து

விஜயன்மே லெறிந்தான்; அதையும் அருங் கணைகள்கொண்டு துகளாகச் செய்து விட்டான். சதாநீகன் வலிகொண்டு செய்யும் போரினில் நிற்க முடியாமல் சல்லியன் ஓடியே போனான். கடோற்கசன் அசுவத்தாமன்மேல் ஒரு வேலைக் கொண்டெறிந் திட்டான். துரோணனையும் அவனொடு நின்ற துணை மன்னர்களையும் பொரு முகத்தில் நின்று ஓடியொளி யும்படியாகத் திட்டத்துய்மன், தனது சர மழைகளைப் பொழிந்து வெற்றி பெற்று நின்றான்.

அந்தச் சமயத்தில், கர்ண சவுபலர்க்கு நண்பனும், இருட்டைப் போலவே நிறமும் தேகமுமுடையவனுமாகிய அலாயுதன் என்னுமோரரக்கன் அநேகாயிரம் அரக்கருடன் வந்து, மன்னர் மன்னனை யடிவணங்கி, "இன்று இராவொழி வதற்குள், நான் வெஞ்சமர் விளைத்துப் பஞ்சவரைக் கொன்று, நாளை யுங்கட்கே முடி சூட்டி வைக்கின்றேன்" என்று சபதங் கொடுத்துப் போர் முகத்தின் வீமனெதிர் வந்து கிட்டினான். எல்லாம் கறுத்ததன்மையையுடைய இராக் கதர் பல்லாயிரம் பேர் வந்து போர் முகத்தில் அட்டகாசம் செய்துக் கொண்டிருந்தார்கள். வீமன் நெடிய சிலையை வளைத்து பற்பல பகழிகள் தூவி நிருதரைக் கலக்கினான். அலாயுதனும், வீமனெறிந்த கணைகளை யெல்லாம் தனது வலிய கணைகளைக்கொண்டு அறுத்தெறிந்துவிட்டு, மேலும் கணைகளை யேவி நின்றான். வீமன் தனது கணைகளும் வாளா போவதோவென முனிந்து, வலிய பகழிகள் பல தூவி அரக்க னுடைய தேர் முதலியவற்றை யழித்து அவனை நிலத்தினிற் குதித்திடச் செய்திட்டனன். கீழே குதித்தவன் மிகு கோபம் கொண்டு, ஒரு பெரிய வேலாயுதத்தை யெடுத்து வீமன்மேல் வீசினான். அவ்வேலாயுதத்தை வீமன் தனது கதையினால் தாக்கிப் பொடியாக்கி விட்டான்

கடோற்கசன் அழிதல்.

அசுவத்தாமனை முறுக்கி வென்றிட்ட கடோற்கசன் தனது தந்தைக்குத் துணையாக வந்து நின்று, "அரக்கனுக்கு மற்றொரு அரக்கனே எதிர், அலாயுதனை நான்தாக்கிப் பொருகிறே"னென்று, சொல்லி யுத்தரம் பெற்றுக்கொண்டு, அலாயுதனுடன் நேர் நின்று பொருதான். இருவரும் கலந்து தனியாக நின்று செய்தார்கள். அப்போது அலாயுதன், தனது அரக்கப் படை யெலாம் கொண்டு கடோற்கசனைச் சூழ்ந்து மோதியடித்திடவே, கடோற்கசன், தனது மாயா சிருஷ்டியைக் கொண்டு பலவகையாகச் சதுரங்கப் படைகளை யுண்டாக்கிக் கொண்டு, அப்போர் முகத்தில் நின்ற அலாயுதனுடைய அரக்கப் படைகளை யெல்லாம் முறுக்கி யழித்துக் கொண்டிருந்தான். ஒரு சமயம் சண்டமாருதம்போல் உருவெடுத்துக் கொண்டு, அரக்கப் படைகளைச் சிதற அடித்திடுவான்; ஒரு சமயம் பல அலாயுதங்களாகவே உருவெடுத்து மழை வருஷம்போல் வந்து, பகைவர் திக்குத் தெரியாமல் முட்டிக் கொண்டு தாமே இறந்திடும்படியாகச் செய்திடுவான். இப்படி யாகத் தான் கற்ற மாயைகளை யெல்லாம் கடோற்கசன் காட்டி நின்றான். அரக்கர் படைகளெல்லாம் சிதறி யோடும்படியாகக் கடோற்கசன் செய்து கொண்டிருக்கும் அமர்க்களத் திறத்தினைக் கண்டு பொறுதவனாகித் துரியோதனன் அருகே நின்ற கர்ணனை நோக்கி, "நண்ப! நீ இந்திரனிடம் பெற்ற வேலாயுதத்தை இக் கடோற்கசன்மேலெறிந்து இச்சமயம் இவனைக் கொன்றிடுவாய்" என்று சொன்னான். அப்போது சூரியன் மகனாகிய கர்ணன், மன்னனைப் பார்த்து, "இது மாயப்போர்; இரவு இப்போதே அகன்றிடும்; அகலுமாயின், நாளைப் பகற்போதில், இவ் வேலினை யெறிந்து அர்ச்சுனனைக் கொன்று உனக்குப் பட்

டம் அளித்திடுவேன்'' என்று மறுமொழி கூறினன். அப்போது அரவக் கொடியோன் வெகுண்டு, "இன்று இரவின் ஒரு போதுதனில் யாங்கள் பிழைத்திடும்படியாக இக்கடோற்கசனைக் கொன்றிட்டு, நாளை விஜயனையும் கொன்றிடுவாய்'' என்று சொன்னன். உடனே, கர்ணன் அச்சொல்லைக் கேட்டுப் பொருமல், அவ்வேலினை யெடுத்துக் கடோற்கசன் மேல் ஏவி யெறிந்து விட்டான். அங்ஙனம் எறிந்த வேல், கடோற்கசன் மார்பினைத் துளைத்துப் பின்புறமேகி இந்திரனிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. மறிந்த மால்வரை போற் கடோர்கசன், உயிர் நீங்கிக் களத்திடை வீழ்ந்து விட்டான். சேனையும் உறவினரும் கலங்கிநின்றூர்கள். பாண்டவர் அருந்துயரடைந்தனர். அப்போது, கண்ணன், அவரைப் பார்த்து, இந்த வேல், கவச குண்டலங்களை இந்திரன் கர்ணனிடம் பெற்றுக் கொண்டபோது, இந்திரனுற் கர்ணனுக்கு அளிக்கப்பட்டது. யாவராயினும் மார்பினிற் பாய்ந்திடின் அவரது உயிரைக் கவர்ந்து போதல் நிச்சயம்; இந்திரனிடம் கவச குண்டலங்களைக் கொடுத்திட்ட கர்ணன், தனக்கு விஜயனுடன் நேரும் போரில் தளர்வு வந்த போது, விஜயனைக் கொல்வதற்கு முடிவு பெற்ற ஆயுதமாக இதனை வைத்திருந்தான். இனி அவனிடம் அந்த வேலாயுதம் இல்லை; அதனுல், கர்ணனுல் அர்ச்சுனனது உயிழித்திடாது என்பது நிச்சயம்; "இன்றே, கர்ணன் உங்கட்கு குருகுல முடியை தந்திட்டான் என்பது இதன் பொருளாகும்.'' என்று சமாதானம் கூறி ஆற்றினுர். மற்றும், "இதனைக் கடோற்கசக்காளையால் தாங்கள் ஆவியழிந்து படாமற் பிழைத்திடற் காகத் துரியன் ஏவினபடியால் எறிந்தனன் கர்ணன்'' என்ற உண்மையையும் எடுத்துச் சொன்னுர். "அர்ச்சுனனது உயிரழியாமற்பெற்ருேமே'' என்று தர்மனும் பீமனும் துக்கம் நீங்கி நின்றூர்கள். துரியோதனனது ஏவலினல் துரோணர் சென்று விராடனுடனும் துருபத

னுடன் வெம்போர் புரிந்து, துருபதனைக் கொன்று வீழ்த்திட்டான்; இதனை யறிந்த திட்டத்துய்மன், துரோணனைப் பார்த்து, "நீ இன்று என் பிதாவைக் கொன்று விட்டாய்; நாளைப் பகலுக்குள் உன் மகன் கதறும்படியாக உன்னைக் களத்திடைக் கொன்று வீழ்த்துகின்றேன்" என்று வஞ்சினம் கூறினான். மாமனை முனிவன் கொன்று விட்டான் எனும் கோபத்தினால், விஜயன் துரோணன் முதலிய மன்னர்கள் பல்லரையும் போரினில் முதுகு காட்டும்படியாகப் பொருதழித்தான். சாத்தகியும் தன்னுடன் எதிர்த்தோரை யெல்லாம் வலியடக்கி யோடும்படியாகச் செய்திட்டான். பகைவர் அனைவரும், பாண்டவ வீரர் தம்படைகட்கு ஆற்றுமல், போருடைந்து ஓடிப் போனார்கள். பகைவர் யாவரும், தம் பாசறை போய்ச் சேர்ந்தார்கள். பாண்டவரும், தமது பாடிக்குப் போனார்கள். முன்னாள் சக்ராயுதத்தால் மறைக்கப்பட்டொளியிழந்த நாணம் நீங்கித் தனது ஆயிரம் கரங்களையும் விரித்துக் கொண்டு ஒளியுடன் சூரியன் தோன்றி நின்றான்.

பதினைந்தாம் போர்ச் சருக்கம்.

"சித்து அசித்தொ டீசனென்று செப்புகின்ற மூவகைத்
தத்து வத்தின் முடிவுகண்ட சதுமறைப் புரோஹிதன்
கொத் தவிழ்த்த சோலைமன்னு குருகையாதி நெஞ்சிலே
வைத்த முத்தி நாதனன்றி வானநாடர் முதல்வன் யார்!"

காலைச் சூரியனைக் கடன் முறை கடவாமற் பணிந்துபோற்றிப் பாண்டவரும் போர்க்களம் குறுகி நின்றார்கள். இரண்டு சேனையரசர்களும் உளங் கறுத்து முகஞ் சுளித்து கண்சிவந்து போர்செய்யத் தொடங்கினார்கள். பாண்டவர்கள்ஐவரும் தத்தம் சிலை முதலிய அங்கங்களுடன் வந்து நின்றார்கள். அர்ச்சு

னன் தனது முழுத்திறலும் காட்டிநின்று சிலையிற் பாணங்களைக் கோத்து எறிந்த வண்ண மிருந்தபடியினால், எதிரி பக்கத்து வீர மன்னர்கள் அழிந்துகொண் டிருந்தார்கள். பாலபீமன் என்பவனும் சோமதத்த மன்னனும் விஜயனது போர் வலி யால் விண்ணுல கடைந்து நின்றார்கள். நான்முன்னே நான் முன்னே யென்று மன்னர்யாவரும் போரிடை வந்து, கிரீடி யோடு போர்செய்து மடிந்து போயினர். துரியன் பக்கத்துச் சேனாபதியாகிய துரோணாசாரியார், தமது வில்லின் திறம் காட்டி முனை முகத்து நின்ற காலையில், யாவரும் எதிர் நிற்க மாட்டாமல் ஓடிப் போனார்கள். குந்திபோஜ மன்னன் மர்த்தி ரம், பலதேர்ப் படையுடன் முனிவருக்கு எதிர் சென்று போர் செய்துக் கொண்டிருந்தான். சல்லியன் தன் மருமகனாகிய நகுலனுடன் பொருதுக் கொண்டிருந்தான். மானவ மன்னன் சாத்தகியொடும் எதிர்த்துச் சண்டை செய்தான். அசுவத்தா மனும் அர்ச்சுனனும் நேர் நின்று சமர் புரிந்தார்கள். கர்ண னும் பீமனும் மலைந்து நின்றார்கள். சகுனியும் பாண்டியனும் ஜயாபஜயம் தோன்றாமல் பகழிகளைத் தூவிக்கொண் டிருந் தார்கள்.

சண்டைசெய்துகொண் டிருந்த இருதிறத் தரசர்களும், இந்தப் பதினான்குநாட் போர்களிலும் ஒழிந்துபோனவர்க ளில் சமரில் நின்று போர்செய்யும் திறத்தினரில், சாமான்ய ரல்லாமல் சிறந்தவர்களாகவே மிகுந்துள்ளவர்களாதலால், அவரவர் ஆண்மைகள் காட்டிப் போர்செய்துகொண்டிருந் தார்கள் என்னலாமே யன்றி, அவரவர் செய்த போர்த்திறம் இன்னின்ன வகையென்று எடுத்தியம்பல் ஆவன அல்ல. ஆக்னேயாஸ்திரம் வாருணாஸ்திரம் வாய்வாஸ்திரம் முதலிய அஸ்திரங்கள் கொண்டு தருமன் சேனைகள் மிக உக்ரமாகப் போர்செய்து வெற்றிகாட்டிக் கொண்டிருந்தன.

துரோணர்முன் முனிவர்கள் தோன்றிநிற்றல்

அரவுயர்த்த நாதிபனான துரியோதனன் பக்கத்துப் படைகளும் மிக்க திறத்துடனே போருடன்று வெற்றியும் தோல்வியும் மாறிமாறி பெற்றுக்கொண்டிருந்தார்கள். குருவாகிய துரோணாசாரியர், சேனாபதி யென்னும் நிலையைக் கைக்கொண்டவராகையால், சேனைகளை நன்கு செலுத்திய பாவியாயினும், பார்த்திவனுயிற்றெனத் தம் மனத்து யாதும் கபடமின்றியே போரை வெற்றிபெற நடத்திவந்தார். அவ்வமயம், சுவர்க்கலோக முனிவர்களும் மற்றுமுள்ள முனிவர்களும் துரோணாசாரியருக்குத் தரிசனம் கொடுத்து நின்றார்கள். மரீசி முதலான சப்த ரிஷிகளும் அகத்தியன் முதலானவர்களும் வரக்கண்ட சில முனிவனாகிய துரோணர், அவர்களைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து போற்றி நின்றார். வந்த முனிவர் யாவரும் நின்ற முனிவரைப் பார்த்துக் கூறுகின்றார்கள்: "துரோணரே! வேதஞானமும் தபோவ்ருத்தியும் யோக நிலையும் முனிவர்கட்கு முறையேயல்லாமல், போரிடை நின்று உடலுள்ள வரையும் போர்செய்துகொண்டிருத்தல் முறையாக மாட்டாதே. யாவும் உணர்ந்துள உமக்கு நாங்கள் மிகைபடச் சொல்லல் வேண்டாமன்றே. இந்த வில்லையும் வாளையும் மற்றுள்ள ஆயுதச் சுமைகளையும் உடம்பினின்றும் கீழே இறக்கிவிட்டு, மனத்துற்ற காமம் க்ரோதம் முதலான சுமைகளையும் விட்டொழித்து, உமது பிறப்பினுரிமை தோன்றும்படியாக நிவ்ருத்தியைப்பெற்று நிற்பதே மேன்மையாகும்" என்று ஞான நினைவைக் கொடுத்து நிவ்ருத்தி மார்க்கத்தைக் காட்டிப் போனார்கள். அப்போது, ஆசாரியர்க்கு இயற்கையாகவே நெஞ்சிலூறி நின்ற ஞானமானது முதிர்ச்சி யடைந்து, போரில் வெல்ல வேண்டுமென்னும் ஆசை யொழிந்துபோய்விட்டது. அத

னல், உக்ரம் நீங்கிச் சௌமியம் அடைந்து நின்றுவிட்டார். வாகனமாவது விமானமாவது தேராவது பெறவேண்டும் என்னும் ஆசையே யில்லாமல் நின்றுவிட்டார். கோடையால் வற்றிப்போன ஓடைகள், மீண்டும் தண்ணீர் பெற்று நின்றனபோல, ஞானமுதிர்ச்சியாலே, தமது பிராரப்த காரண மாக நின்றுள்ள தேக விடுதலையைக் கருதி வாளா நின்று விட்டார்.

துரோணர் நிலைகண்டு கண்ணன் தருமற்குச் சொல்லல்.

அப்போது யாவரது இடுக்கண்களையும் தீர்ப்பதொன்றே தமது கொள்கையாக்கொண்டு அவதரித்துள்ள பரமனாகிய ஸ்ரீகண்ணபிரான், ஆசாரியனுடைய மனத் திடுக்கணையு மொழித்து அவரது பிராரப்த சரீரத்தை யொழித்து, அவரது பரிசுத்த ஆன்மாவுக்கு விடுதலையைக் காட்டவேண்டிய கடமையும் உடையவர் ஆகையால், இவ்விதம் செய்யலாயினர். பாண்டியனுடன் உடன்று போர் செய்துகொண்டிருந்த திட்டத்துய்மனைத் துரோணன்மேலேவிவிட்டுத் தரும ராஜனிடம் சென்று இவ்விதம் சொல்லலானர். "தர்ம ராஜரே! மந்தர பர்வதம்போன்ற தோள்களை யுடைய நமது பீமசேனன், மாளவ மன்னனுடன் போர் செய்துக் கொண்டிருந்தபோது, அந்த மாளவத்தானுடைய பட்டத்து யானையாகிய அச்வத்தாமாவை அழித்து ஒழித்துவிட்டான்; என்னும் இச்செய்தியைத் துரோணசாரியன் காதில் வீழும்படியாக உனது வாக்கினல் உரத்துச் சொல்லிடும்" என்று வற்புறுத்தி மற்றும் சொல்கிறார்:—"தனது மகன் பெயரைக் காதில் கேட்டவுடன், ஞான முதிர்ச்சி பெற்று தற்போது நிவ்ருத்தி மார்க்கத்திலிருக்கும் துரோணசாரியர், தமது கையில் வில்லெடாமல் நின்றிடுவார்; அப்போது அவர்

அழிந்து படுவது திண்ணமாகும். முதல் நாட் போரிலேயே, நாம் முனிவரைக் கண்ட காலத்தில், தமது தேக வீழ்ச்சிக்கு உபாயமாக இதனைத்தானே அவர் நமக்குச் சொல்லியிருந்தார்; ஆகையினால், அந்த வில் லாசிரியனது மாணுக்கராகிய நீர், இதனை யிப்போது செய்து, அவரது தேகவிடுதலைத் தரல் வேண்டும்'' என்றும் வற்புறுத்திக் கூறினர். மெய்யே சரீரமாகக் கொண்ட தருமராஜன், இது செய்தற்கு மனம் பொருந்தாமல், ''கண்ணபிரானே! இந்தப் பொய்வார்த்தையைக் கூறி போரில் வெற்றி கொண்டா நான் இந்தப் பூமியை யாளல் வேண்டும்? எனக்கு அத்தகைய செல்வம் வேண்டவே வேண்டாம்;

''நண்ணிய கிளையும் இல்லும் அரும் பெருமகவும் அன்பும்
திண்ணிய சீரும் மிக்க செல்வமும் திறலும் தேசும்
எண்ணிய பொருள்கள் யாவும் இயற்றிய தவமும் எனைப்
புண்ணியம் அனைத்தும் சேரப் பொய்யினுற் பொன்று மன்றே."

கிட்டிய உறவினரும் வீரும் அருமைக் குழந்தையும் புகழும் மிகுந்த செல்வமும் வன்மையும், ஒளியுமாக எண்ணிய பொருள்கள் யாவும், மற்றும் இவற்றைப் பெறுதற்கு முன்னும் பெற்ற பின்னும் இயற்றியுள்ள தவங்களும் ஆகிய எல்லாம் பொய் யொன்றினுல் அழிந்துவிடு மல்லவா? அத்தகைய பொய்யையன்றோ என்னையிப்போது சொல்லச் சொல்லுகின்றீர்கள்'' என்று மறுத்தார்.

கர்ணன் தருமனுக்கு நீதி யுரைத்தல்.

அப்போது கண்ணபிரான் தர்மராஜரைப் பார்த்துத், ''தர்மரே! ஸத்யம் தர்ம மென்பவை நூல்களில் வகுத்துள்ள முறைமையினுல், அந்நூல்களிற் சொல்லியிருக்கும் அவற்

றின் உண்மைகளை முன்னும் பின்னும் ஒப்ப ஆராய்ந்து, காலம் இடம் இவற்றை நோக்கி மன்பதையுய்யும் பொது தர்மத்தைக் குறிக்கொண் டியற்றும் தன்மையால் கிட்டும்; இவையே ஸத்ய சூக்ஷ்மங்கள் என்றும் தர்ம சூக்ஷ்மங்க ளென்றும் அழைக்கப் படுகின்றன:—

"உம்மையின் மறுமை தன்னில் உறுபய னிரண்டும் பார்க்கில்
இம்மையில் விளங்கும் யார்க்கும் அவரவர் இயற்கையாலே
மெய்ம்மையே ஒருவர்க்குற்ற விபத்தினை மீட்குமாகில்
பொய்ம்மையும் மெய்ம்மைபோலப் புண்ணியம் பயக்குமாதோ."

முன் பிறப்பு பின் பிறப்பு ஆகிய இப்பிறப்புக்களில், மக்கள் பெறும் பயன்களைக் கவனித்துப் பார்ப்போமாயின், இப் பிறப்பில் அவரவர்கள் உற்று நின்ற இயற்கைகளாலேயே விளங்கி நிற்குமன்றோ? மெய்ம்மை யென்பது, ஒருவர்க் குற்ற விபத்தினைப் போக்குதலாம் என்பது நீதிநூலுண்மை யாகுமானல், அதனையே பலனாகக் கோரிச் சொல்லும் பொய்மையும் மெய்ம்மையாக மாட்டாதோ? மக்களின் நன் மையைக் கோரிச் சொல்லும் அந்தப் பொய்ம்மையும் புண்ணி யத்தைத் தானே தந்தருளும்; இதனை நீங்கள் மறுத்திடல் கூடுமோ? ஞானிகள் அநேகம் பேர்கள், வேதம் முதலிய சாஸ்த்ரங்களை நன்கு ஆராய்ந்து சொல்லி யிருக்கும் போது ஒருவருடைய பெரு நன்மையைக் கோரிச் சொல் லும் இது பொய்யாகவும் மாட்டாது; ஆராய்ச்சியில் லார்க்கு இது பொய்யாகத் தோன்றுமானாலும், இதன் பலன் பாவமாகாதபடியால் பொய்யுடன் பெரியோர் களால் வைத்தெண்ணப் படுவதாக மாட்டாது. அன்றியும், நிறைந்த மெய்யே நிறைந்துள்ள மெய்யுடைய உம்மிடம், இந்தத் தீங்கற்ற நன்மையே தரக்கூடிய இச்சிறு பொய்யும் தீர்ந்து மறைந்து போகுமல்லாது வெளிப்பட்டு நிற்கமாட்

டாது; பெரு நெருப்புக்கு ஈரமில்லை யன்றோ? முதனாட் போரில், உமது ஆசிரியன் தெரிவித்துக் கொண்டபடியே தான் நீரிப்போது சொல்லப் போகிறீர்; அதனால் நீர் குரு வார்த்தையைப் பரிபாலித்தவராகிறீர்; அதனால் வரும் பயனே பெரும் பயனாகும் எப்படி யென்னில், ஆசாரிய குலத்திற் பிறந்து அருந்தவங்கள் மிகச் செய்து, அரிய கலைகளை யெல்லாம் நன்கு கற்றுத் தேறி யாராய்ச்சியில் தெளிந்த ஞான முடையவராயிருந்தும், உமது வில்லாசிரியர் இந்தத் துரோணர், இல்லறத்தை யேற்றுக் கொண்ட தமது வாழ்நாளின் ஆரம்பத்தில், யாகசேனனாகிய துருபதன் செய்த மோசத்துக்காக அவனிடம் ஒருவகை வைரத்தைக் கொண்டு, அவ் வைரம் காரணமாகத் தமது பிறப்புக்கும் ஞானத்துக்கும் புறம்பான இந்த வில்லா சிரியர் தன்மையை யேற்றுக் கொண்டு அந்த யாகசேனனைப் பழிவாங்கிப் பின்னும் கங்கை மைந்தனிடம் கூறிய நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு, பொய்யும் புனை சூதும் ஆசையும் துரோகமும் உருவெடுத்தன போன்றுள்ள மகா பாவியாகிய துரியனுடைய அந்நியாயமான கொடுங் கோலாட்சியில் தமது இயற்கைக்கு விரோதமாகக் கட்டுப் பட்டுக்கிடக்கும் இந்தப் பொய்யுடலினின்றும் விடுபட எத்தனித்து நிற்கும் உமது ஆசிரியரை இத்தகைய விபத்தினின்றும்நீக்கி, விடுதலையைத் தரக்கூடியதாகிய பெரிய பயனாகும்; இது எவ்விதத்திலேனும் பொய்யாகுமா என்பதை உமது ஆராய்ச்சி யுணர்ச்சியைக் கொண்டு தீர்மானமாகப் பாரும்" என்று விவரித்துச் சொன்னார்.

தர்மன் சொல் துரோணன் அழிவு.

என்ன இத்தகைய நியாயங்களை யெடுத்தோதித் தரும சூக்ஷ்மங்களை நினைவுறுத்தலே, மன்னன் தருமாசன் மா

புணர்ந்து இதனைச் செய்தல் கடமையாகும் எனத்தீர்மா னித்து, "ஆம்" என ஒப்புக் கொண்டனர். அங்ஙனமே தர்மாராஜன், பிழையறப் பேசுகின்றார்:—

"அத்தனே அடுவல் லாண்மை யச்சுவத் தாமாவென்னும்
மத்தவா ரணததுக் கையோ மாருதி சிங்கமானன்
எத்தனை கோடிசேனை யிக்களத் திறந்ததிந்த
வித்தகன் மலைந்து செற்ற விரகை யென்சொல்வ தென்றான்."

"போரில் வெல்லும் ஆண்மை மிகுதியுமுடைய அச்வத்தாமா வென்னும் ஆனையைச் சிங்கம் போன்ற வீமன் அழித்து விட்டான்" என்று சொன்னார். தீமையாதுமில்லாத தர்ம ராஜன் சொன்ன உண்மை காதில் வீழ்ந்தவுடனே, துரோ ணர், கையிலெடுத்த வில்லையும் அம்பையும் கீழே போட்டு இறந்தவர் போலப் பிரமித்து நின்று விட்டார். இந்த சமய மும் திட்டத் துய்மன் எய்த பாணம் தேகத்தில் வீழ்ந்த சம யமும் ஒன்றாக இருந்தபடியால், துரோணர் உயிரொழிந்து சாய்ந்து விட்டார். இச்செய்தி போர்க்களமெல்லாம் பரவி நின்றது. அசுவத்தாமன், இதனைக் கேட்டுத் தந்தையிறந்த இடத்துக்கு வந்து சேர்ந்து, தந்தையின் தேகத்தை நோக் கினவுடன் சோர்ந்து போனான்; தெளிந்தான்; உடனே அவர் பாதத்தில் வீழ்ந்து அரற்றினான். "எந்தையே! வீடு மன் நின்னை இப்பாருலகனைத்தினுக்கும் மன்னனாவாய் என்று சொல்லி நினக்கு அப்பெரும் பதவியையும் கொடுத்து நின் றான். அவ்வகையை ஒருவாறு செலுத்தி நின்றாயே; அதனை முற்றுப் பெறச்செய்தற்குக் கூடிய இச்சமயத்தில் நீ முடிந்து நின்றாயே! இத்துணை நாளும் உழைத்த வினையின் பயனைப் பெறாமல் ஒளித்திடவோ, பரதர்மமாகிய இச்செயலைச் சுயதர் மத்தைக் கைவிட்டுப் பெற்றுக் கொண்டாய். அந்தோ! எங்

தையே!! இருவிதப்பயன்களாகிய இம்மை மறுமை நலன்களை யும் விட்டொழிந்து ஜந்மம் ஈடேற வண்ணம் செய்துகொண் டொழிந்தோமே என் செய்வேன்;''

"வில்லாய்நீ வெம்போர்முனை வெல்லும் விறலாய்நீ
சொல்லாய்நீ தொல்வேதிய ருட்குந் தொழிலாய்நீ
வல்லார் வல்ல கலைகளனைத்தும் வல்லானே
எல்லாமின்றே பொன்றின உன்னோ டெந்தாயே."

என்று அழுதாற்றிப் பின்தெளிந்து, "ஆஹா! கடலுலகத்தை முடித்திட நின்ற கள்ளக் கண்ணன் கற்கறித்துப் பன்முறித் துப் பேசத் தருமன் பயந்து சொன்ன பொய்யாலே என் தந்தை யிறந்தானன்றி, ஒருவரது வில்வலியால் வாள்வலியால் இறந்தாரோ? இது மோசம் அன்றோ? திட்டத்துய்மன் என்னும் குருத்ரோஹி கொல்லவோ என் தந்தை யிறந்தார். இல்லை இல்லை; ஆகையினால், இதோ இப்போதே வில்வளைத்து மைந்தருடன் குந்தி மைந்தர் யாவரையும் தலைதுணித்து யாக சேனன் மகனாகிய அந்தக் குருத்ரோஹி திட்டத்துய்மனையும் கொன்றிடுவேன்'' என்று மிகக் கோபித்துச் சொல்லிட்டான். வில்லின் நாணை முறுக்கி யேற்றி நாராயணாஸ்திரத்தைத் தொடுத்து ஏவிவிட்டான்.

கண்ணன் சூழ்ச்சி.

இதுகண்ட கண்ணபிரான், யானைமேலேறித் தம் பக் கத்து வீரர் வீமன் ஒழிந்த ஒவ்வொருவரிடமும் சென்று, "வாகனம் ஆயுதம் ஒன்று மின்றி யாவரும் யோகிபோன்று நிற்கும்படி உத்தரவு'' செய்து வந்தார். யாவரும் அப்படியே நின்றிட்டார்கள். யாவரும் நிராயுதராக நின்றிட்டார்கள். அந்த நாராயணாஸ்திரம் நிராயுதனை யொன்று மியற்ற முடி

யாத தன்மையினுல், ஆயுதத்தோடும் வாகனத்தோடும் போர்க்களத்தில் நின்றுள்ள வீமன்மேலேகியது. வீமன் தனது தடந்தேரைச் செலுத்திக்கொண்டு, அந்த அஸ்திரத்தை மதியாமல், தனது வில்லிற் பலவிதப் பகழிகளைத் தூவி, அவ்வஸ்திரத்தினின்றும் தோன்றியுள்ள பகழிகளையெல்லாம் அறுத்துத் தள்ளிவிட்டான். அந்தக் கணையும் நாணத்தை யடைந்துபோய்விட்டது. தன்னுல் விடப்பட்ட அந்தக் கணை மீண்டதைக் கண்ட அசுவத்தாமன் கோபம் மிகவும் கொண்டு, தன் கையில் பாசுபதாஸ்திரத்தை யெடுத்துக்கொண்டான். அந்த சமயத்தில் வியாசமுனிவர் அவன் முன் தோன்றினுர். உடனே அசுவத்தாமன் அவரை வணங்கி நின்றுன். அவர், அசுவத்தாமனைப்பார்த்து, "குழந்தாய்! அன்று யாகசேனனது வரபலத்தினுல் யாகத்தில் தோன்றிய திட்டத்துய்மன் வந்ததுவும், விஜயனும் விமலனும் நரநாராயணர்களென்பதுவும் நீ அறியாதன அன்றே; உன் தந்தை வரத்தினுல் மடிந்தாரன்றி, ஒருவன் விடு சரத்தினுல் மடிந்தாரல்லர்; இதற்கு இங்ஙனம் நீ கோபிக்கலாமா? உலகின் இயற்கையை நன்குணர்ந்த அறிவாளியாகிய நீயே இங்ஙனம் இக்கொடுங் காரியத்தைச் செய்யப் புகலாமோ? எடுத்த பிறவிற்கேற்ப இவையொழிந்து சிவபிரானது திருவடியைப் பெறற்குரிய மார்க்கத்தைப் பற்றுவதுவிட்டு, இக்குரோதம் கொண்டு நிற்றல் உன்னியற்கையாகமாட்டாதே" என்று சொன்னுர். இங்ஙனம் வியாஸமுனிவர் சொல்லிப் போதலும் அசுவத்தாமன் முனிவாறி நின்றுன். சூரியனும் மேலைக் கடலில் போய் மறைந்தான். பாண்டவர்கள் குரு விறந்தமைக்கு ஆற்றுமல் துக்கத்துடன் பாசறைபோய் புகுந்தார்கள். "எல்லா வீரரையும் இப்படி நாள்தோறும் இழக்க நின்றேமே" என்னும் மயக்கம் பொருந்திய மனத்தினுடன்

மன்னர் மன்னனாகிய துரியோதனனும் தனது சேனைகளுடன் பாடி சேர்ந்துவிட்டான். உடனே, ஸஞ்சயனையழைத்துக் "கண்ணபிரான் வஞ்சனையினால் தர்மன் பொய்யுரைத்ததும் துரோணன் இறந்ததும்" தன் தகப்பன் திருதராட்டிரனுக்குச் சொல்லி சூரியோதயத்துக்குள் வரும்படியாக அனுப்பிவிட்டு, "நாளைமுதல் சூரியன் குமாரனாகிய கர்ணனே சேனாபதியாக நின்று போரை நடத்தட்டும்" என்று கட்டளையிட்டு இரவைக் கழித்தான். பாண்டவர் மாலைக் கடன்களை மகிழ்வுற முடித்துச் சிரமமாற்றிக் கண்ணனைத் துதித்துப் போற்றிப் பின் இரவைக் கழித்துப் பொழுது புலரக் காலைக்கடன்களைக் கதிபெற முடித்து நின்றார்கள்.

துரோணபர்வம் முற்றிற்று.

கன்ன பருவம்

பதினாரும் போர்ச் சருக்கம்.

"மாதலனாகியும் எதிலனாகியும் வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலையொழி பாலொடு போதர வுண்டபுயல்
மாதவ யாதவ வாசவ கேசவ மாயாவாயா மதுசூதா [வண்ணு
ஆதியும் அந்தமு மாகிய நின்புக ழல்லாதுரையே னடியேனே."

"காங்கேயனும் துரோணாசாரியரும் சேனை நடத்தி இறந்து போனார்கள்; இனி என் பக்கத்துசேனைகளை செலுத்தி போரை நடத்துதற்கு என்உயிர் நண்பனாகிய கர்ணனை யன்றி வேறியாரு மில"ரென்று மன்னவர்க்கும் மற்றவர்க்குஞ்சொல்லிக் கர்ணனைச் சேனைத் தலைவனாக்கி யவனும் தானுமாகப் போர்க்களம் குறுகினான் துரியோதன மன்னன். துரோணனை யுயிர்கொன்று வானுலகத் தேற்றிய திட்டத்துய்மன் என்று பெயருடைய பாண்டவசேனாபதியும் பாண்டவரைவரும் கண்ணபிரானும் தங்களது சதுரங்க சேனைகளுடனும் புறப்பட்டுப் போர்க்களம் புகுந்து நின்றார்கள். இன்றைப் போரையும் நமக்கே வெற்றி தரும்படி ஊக்கத்துடன் போர் செயல் வேண்டுமென்று கருதி நிலைத்துப் போர் செய்திட விரும்பினார்கள். கௌரவ சேனையைச் சேனாபதியாகிய கர்ணன் மகரவ்யூகமாக வகுத்து நிறுத்தினான். "சூரியகுமாரனாகிய- போரில் வல்ல கர்ணன் இன்று சேனாபதியாக நிற்கின்றான்'' என்னும் ஊக்கத்துடன் துணை மன்னருள்ளாரும் தம்பிகளில் மிகுந்துளாரும் தானுமாகக் கன்னனைப் பின் தொடர்ந்து நின்று தனது சேனா பலத்தை யுணர்ந்து வருவதற் பொருட்டுத் துரியோதனன், வழக்கம் போல், இன்றும் தனது சேனையை யொரு முறை சுற்றிப் போய்ப் பார்த்து வந்தான், மன்னர் மன்னன் என்னும் நாம

த்தை யென்றும் விரும்பியிருந்த நாதிபனாகிய பாம்புக் கொடி படைத்த துரியோதன மன்னன். சேனை மன்னவர்களும் ரதம் கஜம் தூரகமாகிய தமக்குரிய வாகனங்களிலேறிக் கொண்டு உற்சாகத்துடன் பகைவர் பேரில் பகழிகளைத் தூவிக் கொண்டிருந்தார்கள்.

வீமனால் காசிமன் இறத்தல்.

ஸ்ரீ கண்ணபிரானுடைய ஆணையைச் சிரசிற் கொண்டவனாகிய பாண்டவ சேனாபதி திட்டத் துய்மன், தனது சேனா பலங்களைத் திரட்டிச் சக்கர வியூகமாக வகுத்து நிறுத்தினான். வீமன் ஒரு தக்க போக்கினில் வல்லயானை மேலேறிக் கொண்டு போர்முகத்து நின்றிட்டான். அந்த யானை போருக்குரிய இலக்கணங்கள் யாவும் பொருந்தி யுற்றது. கௌரவ சேனையில் யானைப் போரிற் சிறந்துள காசிமன்னனும் தக்க போரிலக்கணம் பொருந்திய தனது யானையின் மீதேறிக் கொண்டு வீமனுக்கெதிரே வந்து நின்றான். இரண்டு யானை வீரரும் இரண்டு யானைகளைப் போலவே மலைந்து பொருதார்கள். இரண்டு மேகங்கள் இரண்டு மேகங்களின்மே லிருந்து பொருகின்றனவோ, அன்றி இரண்டு மேகங்கள் இரண்டு யானைகளின்மே லிருந்து யுத்தம் புரிகின்றனவோ, அன்றி இரண்டு யானைகள் இரண்டு மேகங்களின் மேலேறிச்சண்டை செய்கின்றனவோ என்னும் படியே, இருவீரும் மிகுவூக்கங் கொண்டு போர் புரிந்தார்கள். தாக்கலும் மோதலும் வலந்திரிதலும் இடந்திரிதலும், ஆகிய போர்ச் செயல்களில் இரண்டு யானைகளும் ஓரிடத்துக் கற்றனவோ எனும்படியே தனது தனது பாகர்களின் குறிப்பின் வழியே நின்று, தமக்குள் உண்மையிற் பகைத்தன போல மலைந்து கொண்டிருந்தன. அவற்றின் மீதிருக்கும் வீரர்களிருவரும், கைகளில் வில்லேந்தி

பாணங்களை யொருவர் மேலொருவர் தூவியார்த்துக் கொண்டிருந்தார்கள். வீமனது பாண வருஷங்களைத் தாங்கமாட்டாத காசிமன்னன் கோபித்து, வேலொன்றைக் கையில் வாங்கிச் சுழற்றி வீமன்மே லெறிந்து நின்றான். அதனை வீமனது பாணமொன்றெதிர்த்துப் பொடியாக்கி விட்டது. மற்றும் சில பாணங்களால் வீமன் காசி மன்னனுடைய யானையைக் கொன்று தள்ளினான். காசிமன், அந்தக் கரியினின்றும் திடீரெனக் கீழே குதித்துப் பூமியில் நின்று, கையில் ஒரு வைரத் தண்டத்தை யேந்திக்கொண்டு ஓடி வந்து வீமன் ஏறியிருந்த யானையைப் புடைத்துத் தள்ளி விட்டான். உடனே ஒரு பாய்ச்சலாக வீமன் பூமியிற் பாய்ந்து, தானும் ஒரு கதையைக் கையிலேந்திக் கொண்டு, அவனுடன் கதைப் போர் செய்தான். இருவரும் சாரிகைகள் பலவும் போர் வீரர்களும் பிரமிக்குமாறு திரிந்து காட்டி நீண்ட நாழிகை போர் செய்து கொண்டிருந்த காலையில், காசி மன்னன் வீமனது அடிகட்கு ஆற்றமாட்டாமல், குருதி கக்கிக்கொண்டு, பூமியில் வீழ்ந்து மாய்ந்தான். அவனுடன் வந்திருந்த சேனை யாவும் முறிந்தோடிப் போயிற்று. உடைந்துபோன சேனையைச் சேனாதிபதியாகிய கர்ணன் மீளவும் அணியாக வகுத்து ஓரணியாக வகுக்கப்பட்டு நின்ற பாண்டவ சேனையுடன் நின்று பொரும்படியாகக் கட்டளையிட்டான். அரசரும் அரசரும் யானை வீரரும் யானை வீரரும் குதிரைப் படையும் குதிரைப் படையும் ரதர்களும் ரதர்களுமாக நின்று, உலக முடிவுக் காலமோ வெனும்படி இருதிறத்தும் சேனைகளைக் கொன்று வீழ்த்திக் கடும்போ ரியற்றினார்கள்.

நகுலனும் கர்ணனும்.

கர்ணனும் நகுல சகாதேவர்களும் எதிர்நின்று பொருதுக் கொண்டிருந்தார்கள். இருவரும் கர்ணனும் குதிரை

வீரர்களாகவே நின்று உடன்று உழன்றார்கள். குதிரைகளும், மேற்சொன்னபடியே போர்க்குரிய இலக்கணங்களெல்லாம் பொருந்தி யிருந்தன. பல கதிகளையும் நன்கு காட்டிப் பாகர் குறிப்பறிந்து, தம்முள் பகை கொண்டன போலவே போராடின. குதிரைகள் எஜமான் பக்தியிற் சிறந்தன அன்றோ! அவை தத்தம் பாகர்க்குரிய வெற்றியையே நாடி நின்றன. இவருள் நகுலனும் கர்ணனுமே எதிரிகளாக நின்று சண்டப் போர் நடத்தினார்கள். இதே இரண்டு வீரர்களும் இதற்கு முன்னாட்களில் நடத்திய போர்களினும் மும்மடங்கு அதிகமாகப் போர் புரிந்தனரெனினும், கர்ணன் முன் நகுலன் சிறிது தளர் வெய்தினனும்படியாகக் கர்ணன் உக்கரத்துடன் பொருதான. நகுலன் இளைத்துநின்ற தன்மையில் கர்ணன் நகுலனைக்கொன்று விடலாமாயினும், தான் தன் தாயாகிய குந்திக்குக் கொடுத்த வாக்குத் தவறிப் போமென்றெண்ணிச் சில கணைகளினால், நகுலனது வில் முதலானவற்றை யழித்துப் போக என மீளவிட்டு விட்டான். மற்றும் நகுலனுக்குத் துணையாகி நின்றவர்களாகிய மகத பூபனையும் விடதரனையும், கர்ணன் போர்முகத்திற் கொன்று வீழ்த்தி விட்டு விஜயனுடைய போர்முகத்து எதிர் குறுகி நின்றான்.

நகுலனைத் தோற்கடித்துத் தன்மேல் வந்து நின்ற கருணனைக் கண்டு, விஜயன் மிகக் கோபங் கொண்டவனாகி, இரு கணைகளைத் தூவி யவன் மார்பின்மேல் ஏவி நின்றான். கர்ணார்ச்சுனர்கள் ஒருவர்க் கொருவர் சலியாமல் நின்றார்கள். எனினும், கர்ணன் சலித்திட அர்ச்சுனன் அவனை யதிகத் துன்பத்துக் காளாக்காமல், 'முதனாட் போரில் இராவணனுக்கு இராமன் கூறியனுப்பிய' மாதிரி யனுப்பி விட்டான். சல்லியனும் சாத்தகியும் போர் புரிந்து நின்றார்கள். கர்ண

னும் சோனும் மற்ருருபால் போர் செய்திருந்தார்கள். சகுனியும் பாண்டியனும் இன்னெரு புறத்தில் நின்று சண்டை செய்து கொண்டிருந்தார்கள். துற்சாதனனும் சகாதேவனும் அசுவத்தாமனும் வீமனும் வெகு நீண்ட நாழிகை நின்று அமர் புரிந்து கொண்டிருந்தார்கள். வீமன், அசுவத்தாமனது தேர் சாரதி குதிரைகளை யழித்துவிட்டனன். அவன் வேருருதேரி லேறிக்கொண்டு, வில்லிற் கணை பூட்டி வீமன் மேல் தூவினன். கேகயமன்னனும் சுருதி கீர்த்தியுமுடன் மலைந்து பொருதார்கள். கிருதவன்மனெடு நின்று போர் செய்த சிகண்டி, சிறு நாழிகையிற் போரொடுங்கி முதுகு கொடுத்து ஓடிவிட்டான். திட்டத்துய்மன் கிருபாசாரியனேடு மலைந்து தேர்முதலியவை யழிந்து தோற்று ஓடிப்போனன். இங்ஙனம் ஒத்த வீரர்களாகி இருதிறத்து மன்னரும் போர் புரிந்த போது அந்த அமர்க்களம் இருந்த தன்மையினை யெடுத் தியம்புதலென்ருல் சாமானிய காரிய மல்ல. எங்கும் தலை எங்கும் கரம் எங்கும் கால் எங்கும் தேர்ச்சில் என்னும் படியாகப் பல சிதைந்த வுறுப்புக்களே நிறைந்திருந்தன. அலகைகள் மிகுதியும் நின்று கூத்தாடின. கழுகுகள் பறந்து ஆகாயத்திற் பந்தரிட்டன. காகங்கள் எங்கும் தோன்றி நின்றன. அக்களத்தின் நிலை புலவர்க்கும் எடுத்து வர்ணித்துச் சொல்ல முடியாதவகையிருந்தது.

சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் அழிதல்.

போராண்மையுடைய சேனபதி பின்னிட்டிடு முன்னே அர்ச்சுனன் எதிர்ப்பட்டு நிற்க, சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் அணியாக நின்ருர்கள். சத்திய சேனன் என்பவன், ஒரு தோமரத்தை யெடுத்து விஜயன் வில்லின் மேல் மோதியடித்து நின்ருன். அர்ச்சுனன் அதனலடிபட்டும் புன்னகைக்

காட்டி, சத்திய சேனனும் துணை வரும் ஒடும்படியாக அவர்கள் மேல் தேர் செலுத்திச் சேன்றான். சித்திரசேனன் என்பானைக் கணைகளால் மோதி விஜயன் வானுலகுக் கேற்றிவிட்டான். மற்றும் பலகணைகளை யேவி, முதனாட் போரிலிருந்து, தன்னோ டெதிர்த்து நின்றும் இதுவரை யாரு மறியாமலிருந்த சஞ்சத்தகரையும் கண்ணபிரான் புத்திரர்களான நாராயண கோபாலர்களையும் இன்றைப் போரில் வானுலகேற்றி விட்டான். இதனைக் கண்ணுற்றுள்ள மன்னர்கள் பயந்து போய் விட்டார்கள். முதுகிட்டோடினவர்க ளெல்லோரும் துரியோதனனிடம் போய்ச் சேரவும், அவன், பல் குதிரைப் படைகளையும் யானைப் படைகளையும் கொண்டு அர்ச்சுனனுக்கு எதிரே வந்து நின்றான்.

தர்மனும் துரியனும்.

அப்படிவரும் துரியோதனனை மடக்கிக்கொண்டு தரும பூபதி போர்க்கு நின்றார். குருகுலத் தலை மன்னவனும் அக்குலப் போலி மன்னனும் நீண்ட நாழிகை போருடற்றிக் களத்தைச் செங்களமாக்கி விட்டார்கள். யானைகள் பல குதிரைகள் பலப் பல தேர்கள் பற்பல ஆட்கள் பல்லாயிரமாக இருதிறத்திலும் கொன்று வீழ்த்தி விட்டார்கள். துரியோதனன் தன் பகழி பல கொண்டு தருமனது மார்பிற் குருதி கொப்புளிக்கும்படியாக எய்து விடலும், பொய்யில்லாத மன்னவன், அவற்றை விலக்கி மறுகணைகள் பல எய்து தாக்கி மெய்யும் கண்ணும் இல்லாதவன் மைந்தனை பொய்யே யுருவாம் துரியோதனனது தேர் சாரதி குதிரைகளை யழித்து, அவனைப் பூமியில் நிற்கச் செய்து வளைத்துக் கொண்டு, ஒரு வார்த்தை கூறுகின்றான். "துரியோதனா!

மன்னவர் அவையில் உன் மாமனது மாயவஞ்சனைகளால் ஆடி வெற்றி யென்று பாராட்டிக்கொண்ட சூது போர் போலுமிது வென்று இங்கு வந்து விட்டாய் போலும்; இது, சதுரங்க சேனுபலமுங் கொண்டு வாள் வலியும் வில் வலியும் வேல் வலியும் மல் வலியும் காட்டிப் பொரும் போராகும். இஃது உண்மைப் பலமுடையார்க்குத்தான் வெற்றியைத் தர வல்லது. இனியும் என்னுடைய பகழிகள் வெளிவருமானல், உன்னை யழித்துக் கொன்றிடும்; அது செய்ய நான் பிரியப் படவில்லை; ஏனென்றால், உன்னைக் கொன்றிடுவதாகப் பீமன் வஞ்சினம் கூறியிருக்கின்றான்; ஆகையால், அவனுக்காக உன்னைக் காப்பாற்றி யனுப்புகிறேன. இனி இந்தப் போர்முகத் தெதிர் வந்து நில்லாதே, ஓடிப்போ'' என்று சில பாணங்களை யேவியவன் வரவைத் தடுத்து அனுப்பி விட்டார். தருமனால் தேர் முதலியவை யழிந்து வேற்படையால் கீழே வீழ்ந்து உயிர்தப்பினுற் போதுமென்று ஓடிவருகின்ற மன்னர் மன்னனைக்கண்ட சேனுபதியாகிய கர்ணன், மன்னனுக்குத் துணையாகத் தருமன்மேல் எதிர்த்து நின்றான். முன்னாட் போரில் தந்தை யிறந்ததற்குக் காரணமாக நின்ற தருமனை வெறுத்துள்ள அசுவத்தாமனும், மன்னனுக்குத் துணையாகத் தருமனை யெதிர்த்து நின்றான். வில்லாசிரியனாகிய கிருபாச்சாரியாரும் வந்து சேர்ந்தார். சல்லியனும் சேரவந்தான். இங்ஙனம் எக்காவலரும் சூழ்ந்து வந்து தருமபூபனை வளைத்துக் கொண்டபோது, அர்ச்சுனன் முதலான அப்படைவீரரும் தருமராஜனுக்குத் துணையாக வந்து கூடிக்கொண்டார்கள். எனவே, இருதிறத்தார் போரும் இன்றுதான் உண்மைப் போராக நின்று நிலவியது; என்றாலும் சில நாழிகைகளில், மெய்யுடை மன்னவன் சேனை பொய்யுடை மன்னவன் சேனையைப் புறம்காட்டி யோடும்படிச் செய்துவிட்டது.

இன்றும் நமக்குத் தோல்வியே கிடைத்ததென்று கறுவும் நாணமும் கொண்டவராகித் துரியோதனனும் அவன் பண்டயுளாரும் ஓடிவிட்டார்கள். பாண்டவர் மிகவும் களிப்பொடும் போர்க்களத்தில் நின்றும், எதிர் நின்று பொருதற்கு எதிரிகளில்லாமையாலும் பொழுதும் அத்தமிக்கும் நேரமானதாலும், இன்று போரினை யிதனுடன் நிறுத்திடுவோமென்று கருதும்போது, சூரியன் மேலைக்கடலிற் குளித்து மறைந்தான். இருதிறத்தோர்களும் பாசறைக்குச் சென்று தத்தம் கருமங்களைத் தங்கள் மரபுப்படி யாற்றியிருந்து இரவைக் கழித்தார்கள். மறுநாளைச் சூரியன், தனது குமாரனது இரண்டாம்நாட் சேவகத்தைக் காணும் ஆசையுடையான் போலக் கீழ்த்திக்கினை யலங்கரித்துக்கொண்டு, அருணன் என்னும் சாரதியை முன்னிட்டுக்கொண்டு தோன்றி நின்றான். தருமாதியர்கள் தங்களது காலைக்கடனைக் கடன்முறை கடவாவண்ணம் முடித்துக்கொண்டு கண்ணபிரான் பாத கமலந் தலைமேற்கொண்டு களித்து நின்றார்கள்.

பதினேழாம்போர்ச் சருக்கம்.

"ஈரொரு பிறப்பி லொரு சிறுகுறளாய் யாவரும் தேவரும் வியப்பக்
காரொரு வடிவுகொண் டெனச் சென்று காவல்கூர் மாவலி யளித்த
நீரொரு காத்தில் வீழுமுன் தாங்க நீனிற மகர நீருடுத்த
பாரொரு கணத்தில் அளவிடுங் கமல பாதனார் நாதனார் நமக்கே."

முன்னாட்போரில் அமருடைந்துபோன அவனிபரும் அரவக்கொடியோனும், இற்றைநாட் பெரும்வெற்றி பெறுதற்கெண்ணிச் சங்கங்களும் பற்பல வாத்தியங்களும் முழக்கிக்கொண்டு தனித்தனிக் குடைகள் சூழ்ந்த தமது படைகளுடனும் வந்து கலந்தார்கள். இந்த பதினாறுநாட் போர்களி

லும் அழிந்துபோன சேனையெல்லாம் திரண்டனவோ யெனும்படியாகப் பெருங்கூட்டத்துடன் கூடியிருந்தார்கள். மண்ணகமும் விண்ணகமும் தெரிவுருவண்ணம் சேர்ந்து நெருங்கியிருந்தார்கள். அன்று சேனுபதியாகிய கன்னன் மிக்க அலங்காரத்தோடும் விளங்கியிருந்தான். தம்பியர்களும் மற்றை மன்னர்களும் புடைசூழ்ந்திருக்க மன்னர் மன்னனும் அலங்காரம் மிகக்கொண்டு பொன் தேர்மிசை யேறிவந்து தம்மவருடன் கூடிக் கலந்து நின்றான். யாவருமாகக் கூடிப் பெருங் கோஷத்துடன் போர்க்களம் குறுகினர்கள்.

கண்ணனும் தருமராஜனும்.

பாண்டவர்களும் ஸ்ரீ கண்ணபிரானை முன்னிட்டுக் கொண்டு குருக்ஷேத்திரம் வந்து கூடினர்கள். அங்கு வந்து கூடி நின்றபோது, தர்மராஜன், அர்ச்சுனன் தேர்மேல் நின்ற அச்சுதனை யடிபணிந்து, "பெரியோய்! இன்றைப் போரில் கர்ணன் ஒழிந்துபடுவனே?" என்று கேட்டான். அதற்குக் கண்ணன், "தர்மபூபதியே! இன்றைக்குக் கர்ணன், விஜயன் பாணத்தினுற் களத்தினிற் பட்டு வீழ்ந்திடுவான்; நாளைப் போரில், அரவக்கொடியோன், வீமன் கதையினல் மாண்டொழிவான்; பின்னர் அவனி நுங்களதேயாகும்: இனி, இரண்டுநாட் போர்க்கள்தாமுண்டு. இனி உங்கட்குச் சிரமம் அதிக மிராது" என்று விளைவினை யறிந்துப் பாண்டவர் இருதயத்தினைத் தேற்றி நின்றார். அப்போது, தர்மராஜன் மனங் களிகூர்ந்து, கண்ணபிரானை நோக்கி, "யாதவகுல திலகனே! மாதவப்பிரானே!! அறவாழி யந்தணனே!!! உம்மை யல்லாமல் எங்கட்கு உற்ற துணையேது? தாம் செய்த உதவிகளை யெங்களாற் கணித்துரைத்தல் கூடுமோ? அன்று எங்களது விளையாட்டுப் பருவத்தின்போது, சுயோதனன், வீமனை

வெங்கழுமுனையில் நீரில் வீழ்த்தியபோது, அளிக்கூட்டங்களாக வந்து அவனுக்கு அறிவுறுத்தி உயிரைக் காத்தளித்தீர்கள்; மன்னரவையில், எங்கள் அடிமை யிருப்பின் பொது துணையற்று மானமிழக்க நின்ற திரௌபதிக்குத் துகிலும் மானமும் கொடுத்தீர்கள்; கானகத்தில் கடும்பசியும் கொடுங் கோபமுமுடைய துர்வாஸ முனிவருடைய கோபத்துக்கும் சாபத்துக்கும் ஆளாக்காமல் காத்தீர்கள்; தூதுசென் றருளினீர்கள்; கர்ணனிடமிருந்து கவசகுண்டலங்களை யகற்றினீர்கள்; களப்பலிக்கு இராவானும், என்னை யொழிப்பதற்கு நன்னுளியம்பிய சாதேவனும் ஒத்து நிற்க, அவற்றினின்றும் எம்மைக் காப்பாற்றினீர்கள்; பார்த்தசாரதியாகவும் விளங்கி நிற்கிறீர்கள்; கீதாசாரியனுனீர்கள்; விஜயன்மேல் வந்த வேலினை யேற்றுப் பகைவனை யொழித்தீர்கள்; அர்ச்சுனன் தீயில் வீழ்ந்திட்டழிந்திடா வண்ணம் இருமுறையும் காத்தீர்கள்; அசுவத்தாமன் கணைக் கிலக்காகாமல் யாவரையும் சிறு நாழிகை யளவேனும் யோகியராக்கினீர்கள்; வஞ்சின மறந்து இருமுறை சக்கரத்தையும் வலம்புரியையும் ஏந்தினீர்கள்; இங்ஙனம் எம்மைக் காப்பதே கடமையாகக்கொண்ட தங்களை யல்லாமல் எங்கட் குறவினரும் கடவுளரும் யாவரிருக்கின்றார்கள்?" என்று துதித்துப் போற்றி யிருந்தார். கண்ணன் தருமனைத்தழுவிக்கொண்டு, "இவையெல்லாம் என் காரியங்களாகச் செய்துகொண்டதே யொழிய உங்கட் கென்று ஒன்றும் செய்ததில்லை" யென்று உபசார வார்த்தைகள் சொல்லிவிட்டுத் திட்டத்துய்மனை நோக்கிச் சேனையை யணிவகுத்திடச் சொன்னார். அவனும் அவ்வண்ணமே செய்தான்.

கர்ணன் சல்லியனைச் சாரதியாக வேண்டல்.

பாண்டவர் சேனை யணிவகுத்து நின்றிடக் கண்டு, கௌரவசேனபதியான கர்ணனும், துர்யோதனனைப் பார்த்து

மன்னவர் யாவர்க்குங் கேட்கும்படியாகச் சொல்லுகின்றான்: "பாண்டவர் திறத்தில் பார்த்தனுக்குச் சாரதியாக ஸாரத்யத்தில் வல்ல கண்ணன் அமைந்திருக்கின்றான்; அவற் கொப்பாகச் சொல்லற்கு நம் சேனையில் மத்திரத் தகிபனையல்லாமல் வேறு யாருமிலர்; அந்தச் சல்லியமன்னன், என் தேரினைச் செலுத்தி நிற்பதாயின், இன்றே விஜயனைக் கொன்று பாண்டவரை வென்று நாளை நீயே மன்னனென்னும்படியாக முடிசூட்டிவிடுவேன்; எனக்கு ஆதிமுதல் துணையே புரிந்து என்னை யுறுதியான நண்பனுக்கிக்கொண்ட உனக்கு இன்று எனது செஞ்சோற்றுக் கடனை முடித்திடுவதாகத் துணிந்துள்ளேன்."

"ஓருரு மொருகுலமு மில்லா வென்னை
உங்கள்குலத் துள்ளோரி லொருவனுக்கித்
தேரூரு மவர்மனக்கே வளர்ந்த வென்னைச்
செம்பொன் மணிமுடி சூட்டி யம்புராசி
நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினும் சீர்பெற வைத்தாய் நினக்கே யன்றி
ஏருருங் கதிர்முடியா யுற்ற போரில்
யார்க்கினி யென் னுயி ரளிப்ப தியம்புவாயே."

என்று கர்ணன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு வந்த துரியோதன மன்னன், ஓரிமைப் பொழுதில் மத்திராசனை யணுகி, "மத்திரத்தார் பேரரசே! யான் ஒன்று உன்னைக் கேட்கின்றேன்; அதனை மறுத்திடா தளித்திடல் வேண்டும்" என்று இருகரங்களையும் பிடித்துக்கொண்டு இறைஞ்சினன் போல நின்றான். சல்லியன், மன்னர் மன்னனை நோக்கி, "பூபாலர் பெரும்பதியே! என்னையும் என்னைப் போலும் பல் வேறு மன்னரையும் காத்து நிற்கும் தலைமை மன்னவராகிய தங்கட்குரியன புரிதல் எம்போன்றார்க்குக் கடமையே

யன்றி, ஈதொரு வரமாகலாமோ? ஏன் இப்படிச் சொல்லுகின்றீர்கள்? அஃது யாதெனக் கூறின் அவசியம் செய்திடுகின்கின்றேன். மறுத்துரைக்க மாட்டேன்; சொல்லலாம்'' என்று உத்தரம்சொன்னான். "பாண்டவர் குலத்துக்கொரு துணையாயிருந்து பார்த்தசாரதியாகி நிற்கும் கண்ணனைப்போல் நீயும் எங்கட்குத் துணையாயிருந்து அருள் புரிய வேண்டும்'' என்று சொன்னான். அதனைக் கேட்ட சல்லியன் திடுக்கிட்டுச் சொல்லுகின்றான்; "மன்னர் மன்னரே! என்ன சொல்லுகின்றீர்!

"வாவுமா மணிநெடுந்தேர் அரசர்க் கெல்லாம்
வாய்ப் பானநீ யெனையும் புரப்பதன்றி
ஏவுமா தொழில் புரிந்து உன்குடைக் கீழ்வைகும்
என்போல் வாருனைப் புரத்தலிசைவ தொன்றோ
தேவுமாய் மானுடமாய் மற்றும் முற்றும்
செப்புகின்ற பலகோடி சராசரங்கள்
யாவுமாய் விளையாடு மாதிமூர்த்தி
யாதவனுக்கு யானெதிரோ எதிரிலாதாய்!"

அரசர்க்கரசே! அரசர்க்கெல்லாம் வாய்ப்பான நீங்கள் என்னையும் புரப்பதல்லாமல், நான் தொழில் புரிய நீங்கள் ஏவி நிற்பதன்றி என்போல்வார் உங்களைப் புரத்தல் இசையுமோ? அதுவுமன்றி, தேவருமாகி மானுடருமாகி மற்றும் முற்றும் சராசரங்களாகி நின்ற யாவுமாய் எங்கும் நின்று விளையாடும் ஆதி மூர்த்தியாகிய யாதவகுலத் தவதார மூர்த்தியாகிய கண்ணனுக்கு யானொப்பாவேனோ? நன்றாய்ச் சொன்னீர்கள்? அதிருக்கட்டும்; நான் செய்ய வேண்டிய ஊழியம்தான் என்னவாகும்? அதனை யியம்புங்கள்'' என்று கேட்க துரியோதனன் கூறுகின்றான்:—"அங்கே வில் விஜயனுக்குச் சாரதியாகி நின்று என்றும் அவர்கட்கு வெற்றி

யையே தந்து கொண்டிருக்கும் கண்ணனைப்போல், நீயும் இன்றைப் போரில், விஜயனுக்கு எதிரியாகிய எமது நண்பன் கர்ணனுக்குச் சாரதியாயிருந்து, எமக்கும் வெற்றி யளித்திடும்படியாக வேண்டுகின்றேன்'' என்று சொன்னான்.

சல்லியனும் துரியனும்.

அதனைக் கேட்டவுடன் சல்லியன் சிறிது சினம் காட்டிச் சொல்கின்றான்:—"மன்னர் மன்ன! புன்மையான சொல்லிது என்பதனை மதியாமற் பேசி விட்டீர்கள், மானுக்குத் தொழில் புரியப்புலி யொப்புக் கொண்ட மாதிரி யிருக்கின்றது இது, "கன்னனுக்கு நீ சாரதியாகுவாய்'' என என்னைப் பார்த்துச் சொல்லும் வாக்கு மற்றொருவனதாக இருந்தால் இத்துணை நேரத்திற்குள் துணிந்திருக்கும்; சொன்னது நீங்களாதலினாற் பொறுத்திட்டேன்; சதுர்வித்த் தேர் வீருக்கும் சமயம் பார்த்துத் தேர் செலுத்தும் சாரதியின் மைந்தனுக்கு நான் சாரதியாதல் எனக்கு மதிப்பாமா? மன்னர் மன்ன! இன்று நம்பாலுள்ள சேனைகளை யிருகூறாக்கி, எனக்குங் கன்னனுக்கும் பங்கிட்டுக் கொடுத்து, எங்களிருவரையும் எதிரிகளாகப் போரில் நிறுத்துங்கள்; நாங்கள் மலைகிறோம்; அவன் வென்றால் அப்போது நான் அவனுக்கு சாரத்தியம் செய்திடுவேன்; அல்லாமல் ஒரு சூதன் மகனுக்கு நான் சூதனாதல் தகுதியாக மாட்டாது.'' என்று உருத்துச்சொன்னான். துரியோதனன், "மத்திரத் தலைவ! சல்லிய மன்ன!! இதனைச் செவியுற வேண்டும்; சினங்கொள்ளப்பட்டது; பிரமன் சிவபிரானுக்குச் சாரதியாக வில்லையா? விஜயனுக்கு இப்போது கண்ணன் சாரதியாகி யிருக்க வில்லையா? இவர்களும் ஒத்த வீரர்கள் தாமே, இதனால் இகழ்ச்சி யுண்டாமாறு எங்ஙனமாகும்; கன்னன் பெற்றோன் சூதனனது, அவனுடன்

நின்று போயது; கன்னனோ பிறந்த முதல் மன்னனாகவே விளங்கி நிற்கின்றான்; ஓர் அதிரதனுமாவான்; ஆகையால் அவனுக்கு சாரதியாக நிற்பதில் தீங்கென்ன வந்தது; கண்ணபிரானைப்போற் சாரதியம் செய்தற்கு நீயொருவனன்றி வேறொருவர் இப்புவியிலேது? அதிரதர்களிற் சிறந்தவனென்றும்போர் வில்லிகளிற் சிறந்தவனென்றும் உலகம் மதித்திடும் வில்விஜயனுக்கு எதிராக நின்று இன்றெல்லாம் போர்புரிந்திட ஒப்புக்கொண்டிருக்கும் நண்பன் கன்னனுக்கு உயர் சாரத்தியம், வில்விஜயனிலும் விற்போர்க் கன்னன் சிறந்தவன் என்னும் சிறப்புப் பெயர்பெற நிற்பதுபோல் நீயும் சாரதிகளிற் சிறந்த கிருஷ்ணனிலும் சல்லியன் சிறந்தவன் என்னும் பெயரையும் பெற்று, இன்றெமக்கு வெற்றியும் தந்து, கோபியாமல் எமைப் புரந்திடுவாய்" என்று வேண்டி யிறைஞ்சிக் கேட்டான். முடிவில் அவனும் ஒப்புக்கொண்டான். இச்செய்தியெங்கும் பரவியது.

சல்லியன் சாரதியாதல்.

"விஜயனுக்குக் கண்ணன் சாரதியானதுபோல் கர்ணனுக்குச் சல்லியன் இன்று சாரதியாயினான்; ஆதலினால் இன்றைப்போர் நமக்கே வெற்றிதரும்" என்று கௌரவசேனை ஆர்ப்பரித்தது. சல்லியனை யழைத்து வந்து துரியோதனன் கர்ணன் முன்னர் நிறுத்தி இருவர்க்கும் நேசமும் உறவும் காட்டி நின்றிட்டான்; கர்ணன், இழந்த கவச குண்டலங்களைப் பெற்றவன்போல் மிகக் களித்து, "மற்றொரு வீரல் முடக்க முடியாத சாரத்யத்திற் சிறந்த சல்லியனை நான் பெற்றேன்" என்று மகிழ்ந்து சொல்லி யவனைத் தழுவிக்கொண்டு மணித்தேரேற்றினான். மத்திரபூபனும், அஸ்வங்களின் மர்மங்களை யுணர்ந்தவனானதால், தான் செலுத்தும்

ரதத்தினுக்கு வேண்டிய நான்கு குதிரைகளையும் தேடி யெடுத்து ரதத்திற்பூட்டி நின்ருன். கர்ணன் சேனையை யணிவகுத்தான். நடுவில் துரியோதனனையும் அவனை விடாத தம்பியரையும் போரசர்களையும் அணிபட நிறுத்தி சகுனி முதலானோர் தம்மை அணியின் நுனி நிறுத்தித் தூசி முனை யில் பவளமேரு நின்றதைப்போல தானும் நின்றிட்டான். போர் ஆரம்பித்தற்குமுன் கன்னன் தனது வண்மைக் கை யால், அந்தணர்க்கும் அறவோர்க்கும் மற்றுள்ளோர்க்கும் வாரிவாரித் தனங்களை யீந்து, போருக் குரியனுகிச் சாரதி யாகிய சல்லியனைப் பார்த்துக் கூறலுற்ருன்.

சல்லிய கர்ணர் வெறுத்து நிற்றல்

"சல்லிய நண்ப! நான் இந்திரனல் வேலளிக்கப்பெற்று ளேன்! அவன் அங்கி முனிவருக்கு அளித்து, வில்லும் பெற்றிருக்கின்றேன்; நாகாஸ்திரமும் பெற்றிருக்கின்றேன்; கண்ணனுக் கொத்த வுன்னைச் சாரதியாகவும் பெற்றிருக்கின் றேன்; இது என் பாக்கியமல்லாமல் வேருமோ? எனக்கெதிர் விஜயனல்லாமல் வேருெருவர் இல்லை; அந்த விஜயனுக்கெதிர் என்னையல்லால் வேறில்லை; இன்று தான் எனக்கும் அவ னுக்கும் பெரும்போர் நடக்கப்போகின்றது; இன்று பார்க்க லாம் என்னுடைய ஆண்மையை; எனக் குயிர்த்தோழனுகிய மன்னர் மன்னனுக்கு மகிதல் முழுதும் எதிரொருவரில்லாத படி முடிசூட்டுகின்றேன்; இதனைக் காண்பாய் இப்போது!" என்று சொல்லித் தன்னைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருந் தான்.

இதனைக் கேட்டவுடன், சல்லியன் புன்முறுவல்செய்து, "கர்ண! நீ நின்று விற்பெருமையையும் கல்விப் பெருமையை யும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டாம். ஒருவருடன் ஒரு

வர் தோள்கோத்து போர்முனையில் நின்றபோது சேவகம் தெரியுமன்றோ? மற்றும், ஒருவரை யொருவர் ஒவ்வாத நீங்களிருவரும் நேர்நின்று போருடற்றும்போது, நாங்களும் பக்கத் துணையாக நின்று பார்த்திருக்கின்றோம்; சிறிதேனும் அச்சமென்பதனை யறிந்திடாத அர்ச்சுனன்முன் போர்முனையில் ஒரு போதத்தும் நீ நின்று நிலைத்துப் போர்புரிந்திட்டதையே நாங்கள் கண்டிலோம்; நீங்கள் இருவோரும் செயிர்த்து இன்று உங்கள் போரில், நீங்கள் கூறிய வஞ்சினத்தை முடிக்கப்போகிறீர்களே; இதில் இன்றுத்தான் நாங்கள் உண்மையை அறியப்போகின்றோம்; இதுவரையில், உன் வெற்றியை யாரும் கண்டதில்லை'' என்று சிறிதும் முகதாக்ஷண்யமின்றிச் சுடசுடப் பேசி விட்டான்.

சல்லியன் சுடச் சுடப் பேசிய வார்த்தையைக் கேட்டவுடன், கர்ணனுக்கு மிகவும் கோபந் தோன்றி விட்டது; நெடு மூச்சு விட்டுக்கொண்டு பேசுகின்றான்:—‘பார்த்தனுக்கு நான் எதிராக மாட்டேன் என்று, இந்தச் சேனை காவலர்க்கு முன்னால் என்னை யிகழ்ந்து பேசல் வேண்டாம்; நீ சாரதி; நன்கு சாரத்யம் செய்ய வல்லையாகில் செய்வாய்; வெந்திறல் விளக்கும் வெம்போர்ச் செயற்குத் திறம் பார்த்துச் சொல்ல நீ யார்?'' என்று வெகுண்டு பேசி விட்டான். இந்த வார்த்தையைக் கேட்டான் சல்லியன்; மனம் மிகவும் கொதித்திட்டான்; திடீரென்று தேரை விட்டுக் கீழிறங்கி நின்று கொண்டு கையிலொரு வாளினை யேந்தி நின்று, “உனக்கு நான் சாரத்யம் செய்வேனோ?'' எலிப் போர் பூனைக்கு எதிர்ப்பட்டால் என்னவாகும்'' என்று சொல்லிச் சீறிக் கத்தியை வீசி நின்றான். கர்ணனும் கோபம் கொண்டு தானும் ஒரு வாளேந்திப் பூமியிற் குதித்து நின்று வாளை வீசிட ஆரம்பித்தான். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த துரியோதனன் ஓடிவந்து,

இருவர்க்கும் நடுவில் நின்று சமாதானம் கூறி இருவரையும் முன்போற் சாரதியும் வீரனுமாகத் தேரிலேற்றிக் கிருபன் கிருத வன்மன் சகுனி சாலுவன் திரிகர்த்தன் மற்றும் மன்னர்கள் தம்மையும் உடன் போக்கினன். இவரெல்லோரும் போர் முனையிற் கன்னனைக் காத்து நின்றார்கள். இங்ஙனம் தம்படைஞர் சூழ நின்ற கன்னனைக் கண்டு துரியோதனன் களிப்பு மிகவும் கொண்டு; "இன்றைப்போர் நமக்கே வெற்றி தரும்; விஜயன் விண்ணுலகுக் கேகினனென்றே சொல்லல் வேண்டும்;" என்று கன்னனை யுற்சாகப் படுத்தி மற்றும் சில பேசுகின்றான்:—

துரியன் அறவுரை.

"நமக்குத் துணைவராயிருக்க வந்து ஒழிந்துபோன சிலரையும், துணைவராக இருந்து போரிற் சேர்ந்தும் மனமெல்லாம் அங்கே வைத்துச் செஞ்சோற்றுக் கடனை முடித்திடவே நம் பக்கலிருந்தவரையும் நான் நினைக்காமலும் கூறாமலுமிருக்க முடிய வில்லை. கன்னன் கேண்மையால் விதுரன் வில்லை யொடித் தெறிந்து சென்று விட்டான்; யதுகுலத் தலைவனான பலராமனும் யாது கருதியோ போரினுக்குதவிடாமல் தீர்த்தாடனம் சென்று விட்டான். எங்கள் குலத்தலைவனான பீஷ்மனாகிய என்பாட்டன், ஏதோ சேனாபத்யம் வகித்துப் பத்து நாட்போரும் நடாத்திப் பரமபதம் அடைய நின்றுள்ளான்; தொல்லாசிரியனாகிய வில்லாசிரியனும் ஐந்து நாட்போரினை நடத்தியந்தரம் புகுந்திட்டான்; இனி எனக்கு உறுதி காட்டி வெற்றியும் தரக்கூடியவர், என்பால் உண்மை நண்பினைக்கொண்ட நீயல்லால் யாரிருக்கின்றார்கள்? மித்திரனென்னும் நோக்கினால், என்னுடைய இனிய நண்பனாகிய மத்திரத் ததிபதி உனக்குச் சாரதியும் ஆகியிருக்கின்றான்; அவனோர் குத்திரனல்லன்; செம்மையான கொள்

கையை யுடையவன்; வில்லாண்மையிற் சிறந்தவன்; இவ னெடு அமர்புரிதற்குச் சமானமானவரில்லை; நன்மொழி பேசப்பழகினவனேயன்றி நவை பேசத்தெரியாதவன்; நினக் கும் உறுதி பயக்கும் தன்மையான்; இவனெடும் புன்மொழி யாதும் பேசிடாமல் இருவரும் ஒத்து நடத்தல் வேண்டும்; உங்கட்குள் போர்புரிய நிற்பது அழகாகமாட்டாது;'' என்று கன்னனுக்குச் சொல்லியும், சல்லியனையும் நோக்கிக் கூறு கின்றான்:—

"இதயமும் வலியுந் தேயத்தியற் கையும் வினையும் பற்பல்
கதிகளு முணர்ந்து பூணுங் கவனமாத் தெரிந்து பூட்டல்
எதிரிதன் விஜயங்கூறல் இடிக்கு நண்பாதல் வெம்போர்
முதிரிடங் காலமெண்ணல் சூதர்க்கு முறைமை கண்டாய்."

"சல்லிய நண்ப! சூதர்கள் முறைமையிது வாகுமா? குதிரை களின் இதயமும் பலமும் அவை பிறந்த தேசத்தினியற்கை களையும் அக்குதிரைகள் செய்வினைகளையும் செல்லும் கதிகளை யும் தெரிந்து கொண்டு, தனது தேரினுக்குரிய வேகமுள்ள வற்றைத் தெரிந்து பூட்டுதலும் எதிரி தன்னுடைய தோல்வி வெற்றிகளை யெடுத்துக் காட்டலும் போர் மூதிரக் கூடிய இடம் காலங்களைக் கூறுதலுமே சூதர்களுக்கு முறைமை யாகும்'' என்று இவ்வாசகங்களைக் கூறி இருவரையும் நட்பின ராக்கு வித்துப் போர் முழக்கம் செய்யச் செய்திட்டான். இரண்டு திறச் சேனைகளும் போர் கலந்து உடற்ற ஆரம்பித் தன.

கர்ணனும் வீமனும்.

பாண்டவ ஸேனாபதியாகிய திட்டத் துய்மனும் சோமகேசர்களும் கௌரவ ஸேனாபதியாகிய கர்ணனுடன் நின்று போர் செய்தார்கள். இருதிறத்தார்களும் ஒருவர்

மேல் ஒருவர் வெம் பாணங்களை யெய்துக் கொண்டு வெற்றி தோல் விகளே தோன்ற வண்ணம் நீண்ட நேரம் பொருது கொண்டிருந்தார்கள். இரண்டு திறத்திலும் போர் வீரர்கள் தோழிதலும் குதிரையொழிதலும் யானை விழுதலும் வில்லழிந்து சாரதி யொழிந்து போதலாகிய தோல்வித் தானங்களைப் பெற்றிருந்தார்கள். இரு திறச் சேனை வீரர்களில் இறந்தார்களும் பலர்; சிறந்தார்களும் பலருண்டு. இங்ஙனம் இருக்கும்போது, கர்ணனுடைய தேர் திட்டத்துய்மனுடைய தேரை மிக உக்ரத்துடன் துணைச் சேனைகளுடன் வந்து சூழ்ந்துகொண்டது. இரண்டு சேனுபதிகளும் தோழிவதும் வேறு தேரேறுவதுமாக ஜயாபஜயம் ஒருவர் பங்கெனத் தோன்றுமலே மலைந்துகொண் டிருந்தார்கள். சோமகேசர்க்குள் இறந்தொழிந்து மிக்கவர்களுடன் அசுவத்தாமன் சென்று போர்செய்து வென்றுகொண் டிருந்தான்; தமையனது ஏவலை மேற்கொண்டு, வீமசேனன் எதிரியாகிய விஜய சேனனுடன் போர்புரிந்துகொண் டிருந்தான். பின்னர் வீமனும் கர்ணனும் உடன்று பொர ஆரம்பித்தார்கள். தேரினின்று வேலெறிந்து வாளை வீசியும் வில்லின் கோலெறிந்தும் நெடுநேரம் வெற்றி வீரங்காட்டிப் பொருதுக்கொண் டிருந்தனர். மற்றொருபுறம் கர்ணன் மைந்தனும் வீமன் மைந்தனும் இம்மாதிரியாகவே சண்டை செய்துக்கொண் டிருந்தார்கள். இருவர் தாமும் அவ்விருவர் மக்கள் தாமும் நேர்படச் சமர் புரிந்து ஒருவரை யொருவர் வெல்வதும் தாம் தோற்பதுங் காட்டியும் யுக்ரமாகச் சண்டை செய்துக்கொண் டிருந்தபோது, கர்ணன், வீமனை மார்பிலும் தோள்களிலும் லக்ஷ்யம் வைத்துப் பாணங்களை யேவிவிட்டான். வீமன் ஈரிரண்டு கணைகளை யேவி யவன் ஏவிய பாணங்களைச் சிதற அடித்து மேலும் கணைகளை யெறிந்து, கர்ணனது தோள் மார்பெல்

லாம் மூடிவிட்டான். கர்ணன் வீமன் வில் வேகத்துக்கு ஆற்றமாட்டாமல் நடுங்கினபோது, சல்லியனைப் பார்த்து வீமன் கூறுகின்றான்; "சல்லிய! இவனுக்கு நீசாரத்யம் செய்துக்கொண் டிருத்தல் புதுமைதான்; இதுவும் ஒரு பாக்யந்தான்; தம்பி இக்கொடியனைக் கொல்வதாக வஞ்சினம் கூறியிருப்பதால் இதனொடும் இவனை விட்டிடுகின்றேன்; இல்லாவிடில் இவனை யொழித்திடற்குச் சமயமும் சமரமும் இது வல்லது வேறில்லை" யென்று சொன்னான்.

ஒரு புறத்தில் கண்ணற் கிளையவனாகிய சாத்தகியுடன் விட சேனன் எனும் கர்ணன் மகன் நெடுநேரம் பொதுவிற் பொருதுக் கொண்டிருந்தவன், பின்னர்த் தாங்கமாட்டாமல், தேர் சாரதி குதிரைகளிழந்து முதுகுகாட்டி யோடிவிட்டான் மகதாதிபனும் சோழனும் உக்ரமாகப் போர் செய்துக் கொண்டிருந்தபோது, சூரிய வம்சத்துதித்த கீர்த்தி மிக்கவனான சோழ நாட்டரசன் மகத நாட்டரசனைப் போரில் வென்று, அவன் வலியடங்கும்படியாகச் செய்து, மேலும் அவனது உக்ரத்தைக் கண்டு மனம் பொறாமல் வாளிகள் தூவி உயிரழித்துவிட்டான். "மகதபதி உயிர் துறந்தான்; சோழனுக்கு நிகர் யாரிருக்கின்றார்கள்" எனும் சொல் போர்களத்திலெழுந்தது. இங்ஙனம் தங்கள் படை மன்னனாகிய மகதபதி இறந்து பட்டது கண்ட துரோணன் மகனாகிய அசுவத்தாமன், வெகுண்டு பாண்டவர் சேனைத் துணை மன்னர் மேற்பாய்ந்து வரும்போது, எதிர் நின்ற அர்ச்சுனன், அவனை யெதிர்த்துநின்று அம்புகளை யேவி. அவன் ஏறி வந்த தேர் முதலியவற்றை யழித்துப் பூமியில் நடந்தோடும்படியாகச் செய்துவிட்டான். இது கண்ட சுதக்ஷிணன் என்னும் துரியோதனன் தம்பியரி லொருவன் ஓடிவந்து அர்ச்சுனனைக் கிட்டி நின்றான். இவன் ஓடிவரும் ஓட்டத்தைக் கண்டு விஜ

யன் தம்பியாகிய நகுலன் சிரித்து, எதிர், சென்று தடுத்துப் போர்க்கு நின்ருன்.

கர்ணனும் தர்மனும்

இங்ஙனம் பாண்டவவீரர்கள் எங்கும் முட்டுப்படாமல், வெற்றி பெற்று நிற்கும்போது, சேனைத்தலைவனுகிய கர்ணன் வெகுண்டு, "இப்படி இவர் உக்ரப் போர் நடத்துவராஞல் நமது சேனைபட் டொழியுமே" என்றெண்ணிப், போரில் முனைந்து சென்ருன். பாண்டவர் தம் துணை மன்னவர்களாகிய பாஞ்சாலர் கேகயர் முதலியோர்களிற் பலர்பட்டு விழும்படியாக வெம்போர் நடத்தி வெகுண்டு வலிகாட்டி நின்ருன். இதனை யறிந்த தர்மாராஜன் கர்ணன் எதிரே வந்து, "நாமிருவரும் இப்போது பொருதுவோம்" எனச் சொல்லி, யவன் கதியைத் தடுத்துத் தனது சேனையும் அவன் சேனையும் எதிர் பொரும்படிவிட்டுக் கர்ணனும் தானுமாக நின்று வில்வளைத்து அம்புகளைப் பூட்டி எய்தான். இருவர் சேனைகளும் "பட்டொழிந்தன சில; கெட்டு ஓடின சில; முட்டித் தாக்கின சில; தொட்டு உடன்றன சில" என்னும்படியாக வெற்றி தோல்வி யின்றியே பொருதுக்கொண் டிருந்தன. இவ்விருவர் பூசலையும் குறித்துச் சொல்லுதல் தேவர்க்கும் ஆகாதபடி யிருந்தது. இருவரும் வில் வேதத்தை நன்கு உணர்ந்தவராதலால், இரண்டு வீரரும் தனியே நின்று பொருது வீரம் காட்டினுர்கள். இருவரது தோள்வலியையும் வில் வன்மையையும் அம்பின் வேகத்தையும் கண்டு அமரரும் ஆச்சரிய முற்று வாழ்த்தினுர்கள். தருமராசன் வெகுண்டு, கர்ணன் மார்பில் எட்டும் தோள்களில் எழுமாகப் பாணங்களைத் தொடுத்து ஏவி விட்டான். அவை சென்று கர்ணனை மயக்கத்தி லாழ்த்திவிட்டன; எனினும், அவன் சிறிது களைப்பு

மாறிப் பல பகழிகளைத் தர்மன் மார்பு தோள்களைக் குறிவைத் தெய்தனன்; அங்ஙனம் வருமவற்றை யம்புகள் கொண்டு துணித்திட்டு அறக்கடவுள் மைந்தனாகிய தர்மராஜன், வேறு சில கணைகளைக்கொண்டு கர்ணன் கையிலிருந்த வில்லை யொடித்துவிட்டான். கர்ணன் உடனே வேறொரு வில்லை யெடுத்துக்கொண்டு, மிகு கோபம் கொண்டவனாகிப் "பாண்டவர் சேனைகளையே யின்று ஒழித்து விடுகின்றே" னென்று சபதம் கூறிக் கூரிய அம்புகளை யொன்று பத்து நூறு ஆயிரமாகத் தொடுத்துப் பாண்டவர் பக்கம் வந்துநின்ற சாதேவன் தண்டதரன் தண்டகன் சித்திரசேனன் சாத்தகி சித்ரகீர்த்தி மற்றும் நகுல திட்டத்துய்மன் முதலிய போர்வீரர்களை யுடைத்துப் பலம் குன்றவிழ்த்திப்பொரக் கண்ட தருமராஜன், "இந்தக் கர்ணன் என்னோடும் போர்செய்தலைத் திடீரென விட்டொழித்துப் பராமுகமாக நின்றிருந்த அம்மன்னவர் தம்மை மயக்கங்கண்டனன்; பார்" என வெகுண்டு, தன் தேரைச் செலுத்திக்கொண்டு கர்ணனுக்கு எதிரே நின்றான்; தருமன் முனைந்து வருதல்கண்ட கிருபனும் கிருதவன்மனும் சகுனியும் தங்களது படையுடன் கர்ணனுக்குத் துணையாக வந்து நின்றார்கள்.

இங்ஙனம் மூன்று துணைவருடனும் பல படைமன்னர்களுடனும் நின்ற கர்ணனைத் தருமராஜன் குறுகிப் பலபல கணைகளைத் தூவிச் சரமழை பொழிந்து அப்படைகளையும் வீரமன்னர்களையும் சிலரை யழித்தும் பலரை யோடச்செய்தும் வீரங் காட்டி, மற்றும், இரண்டிரண்டு கணைகளைத் தனித்தனியாக வெய்து, கர்ணனது வில் கொடி இரதம் குதிரைகள் இவற்றை யறுத்துத் தள்ளிவிட்டான். படை சிதறிப் பாறியோடின. பல மன்னர்கள் வானுலகுக் கேறிவிட்டார்கள்; தர்மராசன் சங்கத்தை வாயில் வைத்து வீர

கோஷம் செய்து நின்றான். கீழே குறித்த வீரனும் சாரதியு மாகிய கர்ணனும் சல்லியனும் வேறு தேர்மீதேறிச் செலுத் திக்கொண்டு எதிரே வந்து தர்மன்மேலும் அவ்வக் கணைகளை யேவி, அவனது தேர் குதிரைகளின் அழிவு காண நின்றான். தருமராஜனும் வேறொரு தேர்மீதேறி நின்று ஒரு கையில் வெற்றிபெற்றிடு வில்லையும் ஒரு கையில் கூறிய பாணங்களை யும் ஏந்தி நின்றபோது, கர்ணன், வெறும் வலிகொண்ட பகழிகள் தூவி அவனது வில்லையும் கணைகளையும் ஒடித்துத் தளர்ந்து முதுகிட்டோட நிற்கும் தருமராஜனைப் பார்த்துக் கூறுகின்றான்:—"தர்ம! நல்ல சொல்லுடையாய்! கலை ஞானமுடையாய்; புத்தியுடையாய்; மிக்க பந்துக்களுமுடை முடையாய்; சத்பகுணமுடையாய்; தீங்கில்லாத புகழுடை யாய்; இளைஞர்கள் வணங்கும் மதிப்புடையாய்; உலகைத் தனியரசாளும் உயர் தலைமையுடையாய் என இவையெலா மிருந்தும் போரில் நின்று அமர் புரியும் நிலையுடையாயிலை; புறமுதுகிடப் பார்க்கிறாய்" என ஏளனம் பேசி நின்றான். இதனைக் கேட்டுச் சிறுநகை செய்து தருமன் நிற்குமளவில், இவ்வுண்மை யறிந்த திறல் வீமசேனன், ஒரு வலிய கதை யைக் கையிலேந்திக்கொண்டு தர்மனுக்குத் துணையாகக் கர்ணனுக் கெதிரே வந்து நின்றான். வீமன் வந்து நின்ற தைக் கண்ட, கர்ணனது சாரதியாகிய சல்லியன், வீமனும் கேட்கக் கர்ணனைப் பார்த்துப் பகை தோன்றும்படியாகச் சொல்லுகின்றான்:—

வீமனால் கர்ணன் மயங்கல்

"காமனே யென்ன நின்ற கன்னன்வில் கையில் வாங்கில்
வீமனே யாக வென்றி விஜயனே யாக வெற்றித்
தாமனே காண்டி யிற்றைச் சமரிலென் றழல்வா யொற்றைத்
தூமரோ் பகழிக் காற்றார் தூண்டுதி யிரத மென்றான்."

என்று பரிகசித்துப் பேசியபோது, அவ்வார்த்தை செவிப் படுதற்கு முன்னே வீமன், "இதோ! இக்கணைகள் கர்ணன் சொல்லுக்குக் கதிகாட்டும்" என்று சொல்லி யேவிவிட் டான். எதிரி கர்ணனும் கணைதொடுத்து அக்கணைகளைச் சிதறவிட்டுப் பன்னிரண்டு பாணங்களை யெய்து வீமன் மார் பிடை யேவிவிட்டான். வந்த அப்பன்னிரண்டையும் பிடித் துக் கைகளா லொடித் தெறிந்துவிட்டு வீமன், கொடுங் கடும்பகழி யொன்றினால், கர்ணனது இருதயத்தை யிலக்கு வைத்து எறிந்துவிட்டான். அந்தக் கணை மார்பிற் பாய்ந்த வுடன் கர்ணன் மூர்ச்சைபாகித் தேர்த்தட்டிற் சாய்ந்துவிட் டான். சேனாபதியாகிய கர்ணன், மூர்ச்சித்து வீழ்ந்தான் என்னத் தெரிந்து, துரியோதனன் படைகள், வீமனுக்கு ஆற்ற முடியாமல் முதுகிட்டு ஓடின. சல்லியன் கர்ணனைத் தேற்றி யுபிர்ப்பித்தான். உடனே, உக்ரத்துடன் கர்ணன் எழுந்து, வில்லைக் காத்திலெடுத்து, தர்மன் படைவீரர்களிற் பலர் விழும்படியாகச் செய்துவிட்டான். இந்தக் கடும் போரில் மாண்டவர்கள், பாண்டவர்களின் துணை மன்னர்க ளாகிய சதுரங்கப் படைவீரர்களாகிய பாஞ்சாலர்களில் சிங்க சேனன் முதலிய எழுவராவார். தனது சேனையு முறிந்து வீமனும் முதுகிட்டோடக் கண்ட, கார்முகில் வண்ணன், விஜயனுக்கு உண்மை யுணர்த்தித் தேரைக் கடிதினிற் செலு த்தி வந்தார். எனவே இந்திரன் மைந்தன் விஜயனும் சூரி யன் குமாரன் கர்ணனும் எதிரெதிராக முனைந்து நின்றார்கள். கர்ணன் படைக்கும் விஜயன் படைக்கும் தொந்தப் போர் ஆரம்பித்தது. வெற்றி வீரர்களாகிய இருவாது சேனைகளும் தூவிய பகழிகளாலும், இரு வீரரும் ஏவிய பகழிகளாலும் விசும்பு தூர்த்து நின்றிட்டது.

பாண்டியனும் அசுவத்தாமனும்

கர்ணனுக்குத் துணையாக அசுவத்தாமா வந்து சேர்ந்தான். "கர்ணனை நேர் நின்று பொருதற்கு இடங்கொடுத்திடாமல் இவன் வந்து குறுக்கிடுவதே" னென்று விஜயன் அசுவத்தாமன்பேரில் கணைகளைத் தூவித் தேரைக் கலக்கிவிட்டனன். தாமனும் தன் கைத்தனுவில் பாணங்களைத் தொடுத்து விஜயனைத் தளர கண்டான். தளர்ந்த விஜயனைத் தேற்றிக் கண்ணன், "ஒரு அர்த்த சந்திராஸ்திரமெடுத்து அவன்மேலெறி" யென்றார்; அவன் அங்ஙனமே செய்ய, ஈசன் மதலையாகிய அசுவத்தாமன் மாழ்கிப் பெருமூச்சுடன் இரதத்தின்மேற் சாய்ந்துவிட்டான். அசுவத்தாமன் வீழ்ந்ததைக்கண்ட துற்சாதனன் ஓடிவந்து, அத்தேரோடும் அவனை யகற்றிக் கொண்டு போய்விட்டான். சென்ற அசுவத்தாமன், தெளிந்து மற்றும் தேரினைச் செலுத்திக்கொண்டு, சதுரங்கசேனையோடும், போரிடைவந்து தோன்றிப் பாண்டவர் துணை மன்னர்களாகிய சித்திரவாகன பாண்டியன் சோழன் இவர்களையுடைத்துத் தள்ளினான். பாண்டியன் கோபித்து, அசுவத்தாமனது தேரின்மேலும் சாரதிமேலும் குதிரையின்மேலும் நெருங்கிய பாணங்களை யேவி அவன் கைவில்லையும் துணித்து வீழ்த்திட்டான்; உடன் முனிமகன் மற்றொரு வில்லை வாங்கிப் பாண்டியன் அஞ்சும்படி யாகப்போர் உடற்றினான். அசுவத்தாமன் விட்ட கணைகளை யெல்லாம் பாண்டி மன்னன் கூறிய கணைகள்கொண்டு ஒடித்தெறிந்து உருமி நின்றான். மற்றும் மூன்று கணைகளை யேவி அசுவத்தாமனை முதுகிடச் செய்தான்; முன்னும் இவன் தந்தையாகிய துரோணனை முதுகிடச் செய்த பாண்டி மன்னன் இவனை விட்டிடுவனோ? அசுவத்தாமனை முதுகிடச் செய்து பின்னும் சமாரி பொழிந்து, அவன் துணைச்சேனைகளை யெல்லாம்

பறக்கடித்தான். கண்ட அசுவத்தாமன் கடுஞ்சினம்கொண்டு, மற்றொருவர் வில் வாங்கிக் கூரிய பகழி தூவிப் பாண்டியன் தேரை யழித்திட்டான்.

பாண்டியன் அந்தத் தேரினின்றும் குதித்து ஒரு யானைமே லேறிக்கொண்டு எதிர்த்து நின்றான். அசுவத்தாமன் தேரிலும் பாண்டியன் களிற்றிலுமாக நின்று போர் செய்தார்கள். பாண்டியன் ஏறிவந்த யானை காதுகள் கொண்டு வீசுங் காற்றால், அசுவத்தாமனுடைய தேர்க்கொடிகள் பின்னிட்டுச் சாய்ந்து நின்றன; அந்த யானையின் மதக் குழம்பாலுண்டான சேற்றில் அசுவத்தாமனது தேர்க்கால்கள் பூமியிற் பதிந்து நின்றன; இதனைக் கண்ட அசுவத்தாமன் கோபங்கொண்டு, வெய்ய பாணங்களேவி அந்த யானையை வீழ்த்திட்டான். பாண்டியன் கைவில்லோடும் தரையிடைக் குதித்து நின்றான். பின்னும் துரோணன் மைந்தன் பாண்டியன் பேரில் பகழிகளைத் தூவி யவன்தோளும் மார்பும் துணித்துப் பாண்டியனைப் பூமியிற் சாய்த்தான். பாண்டவர் துணை மன்னவனாகிய பாண்டியன் சாய்ந்து மாண்டானென்று, பாண்டவர் சேனையெல்லாம் உருத்து போர்புரிந்த போது, கௌரவச் சேனை வீரரும் கிளர்ந்து மேல் பொங்கி நின்றார். இரு சேனைகளும் பொங்கிப் போர் செய்தார்கள்.

அசுவத்தாமனும் சோழனும்

தமிழ் மூவேந்தருள் ஒருவனாகிய பாண்டியன், அப் பார்ப்பனன் பாணத்தால் வீழ்தலும் பொறாத மற்றொரு தமிழ் மன்னனாகிய சோழ பூபதி வெகுண்டு மேல்வந்து, அசுவத்தாமனுக்கு எதிரில் நின்று, இன்னன கூறுகின்றான்:- "தேர்ப்படை கொண்டு நீ, ஒரு கஜப்படை வீரனைக் காய்ந்தழிப்பதோ? இது போர் முறையாகுமோ? உன் பெற்றோ

னைக் கொன்ற வீரனைப் பொருது கொல்லாமல், வேறு பிற ரொடுந் திரிந்து மலைகிறாய்; வீரரொடும் போர் செய்தற்குப் பார்ப்பனர்க் குறுதி யேது?'' என்று இங்ஙனம் பரிகாச வார்த்தைகள் பேசிப் போர் முனைந்து, இருவரும் நிலைத்து நின்று சண்டை செய்தார்கள். பாண சாலங்களைப் பாரிலும் விண்ணிலும் நிறைத்து விட்டார்கள். பின்னர்ச் சோழன், துரோணன் மைந்தனுடைய தோளிலும் மார்பிலும் கூறிய கணைகளை யேவித் துளைகள் செய்து, அவன் நெற்றியிலும் ஒரு பாணம் பதியச் செய்திட்டான். கோபம் மிகுதி கொண்டு, முனிவன் மகன், கடுங்கணைகளை யேவிச் சோழன் மெய் யெல்லாம் கொத்தி விட்டான். மனங் கொதித்த சோழபூபதி, ''இனியிவனை யிங்கு நிலைத்திடச் செய்யப் படா''தெனக் கருதி வரம் மிகுந்த பாணமொன்றினால், அவனை மண்ணில் விழும்படியாகச் செய்து, மேலும் கணை கள் தூவியவன் படை வீரர்களைத் துரத்தியடித்துக்கொண் டிருந்தான். அசுவத்தாமன் மூர்ச்சித்து விழவே, சகுனியும் மற்ற மன்னர்களும் வந்து, அவனை யெடுத்துத் தேற்றினார் கள்; எனினும், அசுவத்தாமன் எழுந்து போர் செயற்காற் றாமலிருந்தனன். உடன்று போர் செய்த துன்மருஷணன் துன்முகன் சங்கன் முதலிய அரசிளங் குமாரர்கள் பலரை மடிந்து விழும்படியாகச் செய்தான். மற்றும், மன்னவர் பலரைச் சோழன் கணைகள் விண்ணகம்புகுந்திடச் செய்தன. முனிவன் மைந்தனும் சகுனியும் மற்றும் மன்னவர்கள், சோ ழன் போர்க்குடைந்து போம்போது, ''அப்பா! நீ போர்முகத் துக்கே ஓர் சென்னிதான்'' என்று சொல்லிச் சென்றார்கள்.

வீமனும் துற்சாதனன் முதலிய துரியன் தம்பியரும்.

அங்கோர் புறத்தில், துற்சாதனனும் அவன் தம்பியர் ஒன்பதின்மருமாகத் தம் படைகள் சூழ வந்து வீமனை

யெதிர்த்து நின்றார்கள். வீமன் கண்டு, கோபத்துடனும் மனத்தாபத்துடனும் சில வார்த்தைகள் கூறிப் பரிகசித்து அவன் மானமழியப் பேசுகின்றான்:—

"துச்சாதனனே யுனைப்போலும் சூரருளரோ சூரரெலாம்
மெச்சா நின்றார் வேத்தவையின் மேனாள் நீசெய்விற லாண்மை
அச்சாரிரதப் போர்க்கு முனைக்கார் வேறெதிருண் டம்பவிரைந்
திச்சாபோகமாக விருந்தின்னே மறலிக் கிடுநாளே."

"இன்றேஉன்றன் சென்னிதுணித்திழி செம்புனலிற் குளித்திடுநாள்
இன்றே அழலினுற்பவித்தாள் இருளாரளகம் முடிந்திடுநாள்
இன்றே தாகம் கெட நாவுக் கிசைந்த தண்ணீர் பருகிடுநாள்
இன்றே உரைத்த வஞ்சினங்கள் எல்லாம் பயன்பெற் றிடுநாளே."

"வென்றே யவனிமுழுதாளும் வீரோதயன் நின்தம் முனையும்
கொன்றே நாளையமரரெதிர் கொள்ளக் கடிதின் வரவிடுவன்
இன்றே நீ போயிடம் பிடிப்பாய் எண்ணாவெண்ணமெண்ணிமன்றில்
அன்றே கலகம் விளைத்தென்றும் அழியாவரசை யழித்தோனே!"

'எண்ணாத வெண்ண மெல்லாம் எண்ணிச் சொல்லி, அழியாத குருகுல அரசை யழித்திட்ட பாவி! துச்சாதனா!! உன்னைப் போலும் சூரர்கள் பூமியிலுளரோ? சூரரெல்லாம், அன்று சபையில் துகிலுரிந்து காட்டிய உன் சூரத்தனத்தை யின்றும் மெச்சிக் கொண்டிருக்கிறார்கள்; இப்போரிலும் சூரன் நீயே போலும்; இன்று உனக்கு அரம்பை மாதர் இன்பத்தை நான் காட்டுகின்றேன்; இன்றுதான் உன் தலையைத் துணித்து உனது ரத்தத்தில் நான் குளித்திடும் நாள்; இன்று தான், யாகத்திற் பிறந்தவள் கரிய கூந்தலை முடித்திடும் நாள்; இன்று தான், என் தாகம் கெட நாவுக்கிசைந்த நன்னீர் குடித்திடு நாள்; இன்று தான், நாங்கள் உரைத்த வஞ்சினங்களெல்லாம் முடித்திடு நாள்; நாளையே உங்கள் அவனிபனாகிய

விரோதயன் ராஜாதி ராஜனுகிய துரியோதன மகாராஜனைக் கொன்று, அமரர்கள் எதிர்கொள்ளும்படி யனுப்பப் போகின்றேன்; இன்று, நீ முன்னர்ச் சென்று அவனுக்கு இடம் பார்த்து வைப்பாய்'' என்று சொல்லிப் பரிகசித்துப் பேசி, மேலும் போர் தொடங்கி நின்ருன். இவற்றுக் கெல்லாம் துற்சாதனன் மறுமொழி சொல்ல நாணித் தலை குனிந்து போரிற் புத்தி செலுத்தினுன். தம்பியருடன் தானும் வெங்கணைகள் பல தூவி நின்ருன். வீமன் உக்ரத்துடன் பொருது நின்று, ஒவ்வொருவர் தேரையும் அழித்துத்தரையிடை பாயச்செய்து, ஒவ்வொருவர்க்கும் ஒவ்வோர் அம்பாக ஒன்பது கணைகள் ஏவித் துரியன் தம்பி ஒன்பதின்மரையும் கொன்றொழித்தான். தம்பிகள் ஒன்பது பேரும் உயிரொழிந்து வீழ்தலைக்கண்ட துற்சாதனன் கணைமாரி சிந்திக் கொண்டு வீமன்மேற் பொங்கிவந்தான். வீமனை மயிர்க்கால் தோறும் வருந்தும்படியாகக் கணைகள் தூவி யெறிந்திடலும், அவன் விட்ட கணைகளை யெல்லாம் பல கணைகளால் அறுத்தொழித்து எழு கணைகள் ஏவித் துற்சாதனன் ஏறிவந்த இரதத்தைக் கலக்கிக் குலுக்கி யழித்துவிட்டான். தேரொழிந்த துற்சாதனன், புவியிற் குதித்துக் கொதித்தவனுகிக் கதையொன்றைக் கையிலேந்தி வீமன் தேரைப் புடைத்திட்டழித்தான். தேரழிந்திட வீமனும், ஒரு நற்கதைகொண்டு பூமியிற் குதித்து அவனேடும் கதைப்போர் நடத்தத் தொடங்கினுன்.

துற்சாதனனை வீமன் உடல் துமித்தல்.

கறுவுகொண்ட வீமனும், தீமையுருகொண்ட துற்சாதனனும் கதைகள் கைகள் கொண்டு போர் நின்ருரெனில், அப்போரினை யெடுத்துச் சொல்லற்குப் புலவர் தமக்கும் உலகில் சொற்கள் போதா! கதைகளைக் கையிற்கொண்ட வீரர்

கள், சாரிகள் திரிந்தும் மோதுகள் புரிந்தும், தொடைகளிற் றட்டியும் புடைகளிற் கொட்டியும் சிகைகளை விரித்தும் புகைகளை யுயிர்த்தும் பற்களைக் கடித்தும் கற்களைப் பொடித்தும் எங்குந் திரிந்தும் தங்காது புரிந்து, கதை யிடி யொலியும் உதையிடி யொலியும் மார்பினில் தாக்கலும் வீரமொடு தூக்கலும் புரிந்து செய்த கதைப்போர் மற்போர்களைக் கண்டு, வானவரும் மானவரும் இன்று உலகு எப்படி முடியுமோ வெனக் குலைந்து போனார்கள். கோபம் காட்டியும் தாபம் மூட்டியும் இருவரும் கட்டிப் பிடித்து கெட்டித் தள்ளி, இடுப்புறப் பிணித்துத் தொடுத்திட மடுத்து, வாரி யெறிந்தும் காரினிற் செறிந்துற உரம்கொடு மலைந்து மரங்கொடு தாக்கி யொருவர்க்கொருவர் தோலாது உடன்று கர்ஜித்துக் கொக்கரித்து மற்போர் புரிந்தார்கள். முட்டிப் போர்க் கெட்டியாய்ப் பொருதனர்; சினங்கொடு பிணித்து இளங்கொளக் குத்தினர்; கால்கொடு கால்களைப் பின்னினர்; காதலங்களும் காதலங்களும் பிசைந்து நின்றனர். சிவந்த கரங்களும் சிவந்த கண்ணுமா மலைந்து நின்றனர். நெஞ்சும் கழுத்தும் நிமிரத் தொடுத்தனர். இங்ஙனம் இருவரும் எதிர் மலைந்திடும்போது, துற்சாதனன், விரல்களைந்தையும் குவிவுறப் பிடித்து, நகம் புதைந்திடும்படியாக வீமன் மார்பிற் குத்தினான். அவனது அழிவுக்காலத்தை யெதிர்பார்த்திருந்த வீமன் மன்னர் மன்னனாகிய மடையர்க்கொரு குடித்தலைவனாகிய துரியோதனனுக்கு அடுத்த தம்பி துற்சாதனன் என்னும் மத்தகக் கரியை வலங்கொடு பிடித்துச் சிங்கம்போற் சீறிக் கொதித்துத் தாவிப் பிடித்து, சிரத்தைக் கரங்களாற் கொட்டியவன் மத்தகம் போன்ற தலையிலிருந்து ரத்தம் குதித்திடும்படிச் செய்து, கவுள்கள் நெரிந்து செவியுட் காந்ிடச் செய்து, மார்பு துடித்திடவும் வார்த்தை தளர்ந்திடவு மிடித்து விழிபிதுங்கிடக்

கழுத்தைத் திருகிக் கீழே தள்ளி, மார்பின்மேலேறி மலையிடைச் சிங்கம்போல் வீற்றிருந்து, முகத்தைத் திருப்பி வைத்து விசி நரம்புச் சந்துகளிலிருந்து ரத்தம் செறிந்து தெரித்திடும்படியாகச் செய்து, அவன் வயிறெனும் தாழியுடைந்திடும்படியாகத் தன் கால்களால் துகைத்துச் சினம் அடங்காமல், அவனது தொடை நரம்புகளை நீட்டிப் பிடித்திழுத்து நாற்புறங்களிலும் அவ்வுடல் மேற்புறம் கீறும்படியிழுத்து, தனது நகங்களென்னும் வாள்கள்கொண்டு அவனது உரமெனும் மாத்தைக் கீறி வெளிவரும் குருதிப் புனலிற், கங்கையில் மூழ்கி யெழும் தேவர்கள்போல், மூழ்கியெழுந்து, தனது தேகமும் உடையும் அணிகளும் ஆயுதங்களும் சிவப்பேற நின்றிட்டனன்.

"மன்னற் கிளையோனை வாள்தருமனுக் கிளையோன்
துன்னப் பிளந்து சுரருலக மேற்றுசலும்
கன்னற்கு மற்றுள்ள காவலர்க்கும் நில்லாமல்
வென்னிட்ட தம்மன்னன் வீரப்பெருஞ்சேனை."

வீமன் நின்ற வெறி கண்ட விஜயனும் விமலனும் மற்றுள்ள காவலரும் கை கலந்து நின்றார்கள். உறவினரைக் கண்டும் வீமன், உரமடங்கி நில்லாமல், அந்தத் துற்சாதனனுடலை மற்றும் பார்த்து, "திரௌபதியின் குழலும் துகிலும் தொட்டனவாமிவை'' யென்று அந்தத் துஷ்டனது உடலிற் கைகளின் விரல்கள்பத்தையும் திருகிப் பறித்தெறிந்தான். மற்றும், தாக மடங்காதவன்போல், வீமன், அந்த உடலில் வாய் வைத்து உதிரத்தை நாவின் வலிகொண்டு கொள்ளுமளவு இழுத்து அதனைப் பருகிட் செலுத்தியபோது, கண்ணபிரான், விலக்கிடக், கொப்பளித்திட்டு அங்கு நின்று சிங்கம் போற் கர்ஜித்துக் கூத்தாடினன். ஓடித் தமையன்பாற்

சென்றணுகித் "தம்பியர் ஒன்பதின்மரையும் தொலைத்துத் துஷ்டத் துற்சாதனனையும் இன்று உயிர் குடித்திட்டேன்" என்று கூத்தாடிக் கொக்கரித்து ஆர்த்து நின்றான். பாண்டவர்கள் சேனை சந்திரனைக் கண்ட கடல்போல் ஆரவாரித்து நின்றன. உற்சாகம் மிகக்கொண்டு, கௌரவச் சேனை மீது உருத்து அடர்க்க வந்து நின்றன.

பாண்டவர் சேனைவரக் கண்டும் கன்னன், ஒன்றும் தோன்றாமலும், சேனைகளை எதிர் ஊன்றாமலும் நின்றிருந்தான். அப்போது சாரதியாகிய சல்லியன், "பாண்டவர் சேனைப் பரப்பைக் கண்டவுடன் மாண்டாய்போல் நிற்கின்றாய் ஈதென்னை" என்று கேட்டான்; "சேனைக் கொதுங்கி நிற்கவில்லை; தாரணிக்கு மன்னன் நண்பன் துரியோதனனுக்கு அடுத்த உயிரனைய துற்சாதனன் ஒழிந்துயிரழிந்த நிலை கண்டு உயிர் மறந்தேன்" எனச் சொல்லி, முன்னம் முதுகிட்ட மன்னரையும் மற்றுள்ள படைகளையும் ஒருசேரக் கூட்டி ஓரணியாக்கித் தன் சேனையோடும் தாக்கற்குக்கொடி பிடித்தான்; பாண்டவர் சேனாபதியான திட்டத் துய்மனும் தனக்குத் துணையான மன்னனையும் தருமன் தன் படைகளையும் கூட்டி யணிவகுத்து, வானகமும் மண்ணகமும் கலங்கும்படியாகப் போர் முனையத் தொடங்கி நின்றான்.

கர்ணன் மகன் விஷசேனன் களத்தவிதல்.

கர்ணன் சேனையும் தரும மன்னன் சேனையும் கலந்து பெரும் போர் தொடுத்துக் கொண்டிருந்தார்கள்; அப்போது கர்ணன் மகன் விஷசேனன், நகுலன் எதிர் நின்று மலைந்தான். பல பகழிகளைத் தூவி நகுலன்மேலெறிந்து நின்றான்; நகுலன், பக்குவக் கணைகளேவிக் கன்னன் மகனேவிய வெம் பகழிகளைத் தொலைத்திட்டான். விஷசேனன் மற்றும் பல

கணைகள் கொண்டேவித் தருமன் தம்பி நகுலனது தேருருளை களைச் சிரழித்தான். மற்றொரு தேர்மீதேறிய நகுலன், இரண்டு பாணங்களை யெய்து விஷசேனனது வில்லை நாணறுத்திட்டான். வில் அழிந்தால் வீரன் ஒதுங்குவனோ? வேறொரு வில் கைக்கொண்டான். அம்புகளை வெம்புகைகள் தோன்றத் தொடுத்திட்டான். நகுலன்மேலேவினன். மார் பில் அம்புகள் வீழத்தாளுற்ருமல், நகுலன் தேர் மீது வீழ்ந்த வனைக் கண்டு வீமன், அருகோடி வாரி யெடுத்துக் கொண் டேகி விட்டான். செருக்கண்டு, வீழ்ந்த தம்பியின் உருக் கண்டு ஆங்கு உறுமி நின்ற அர்ச்சுனன், நெஞ்சில் கறுக் கொண்டு, அருகோடி, "அருக்கன் மைந்தனுக்கு மைந்தனான அந்த விஷசேனனை, அமர்க்களத்தே இன்று அழித்திடுவே" னென்று சொல்லி, அம்புகளைப் பூட்டி அவன்மேல் எறிந்திட் டான்; "தம்பி கண்ட துன்பம் தமையனுங் காண்பான்" என்று சொல்லி விஷசேனன், தானும் கணைகள் பல தனஞ்ச யன்மேல் விட்டெறிந்தான். பார்த்தனையும் பாகனையும் அம்பி ஞல் மறைத்திடலும், விஜயன் வெகுண்டு விஷசேனன் வில் லொடிந்து நாணறுந்து வீழ்ந்து விடச் செய்தான். மற்றொரு கணையினுல் அவன் தலை துமித்து மண்ணினிடை வீழ்த்து விட்டான். "வீழ்ந்தான் விடசேனன், விற்போர்க் கன்னன் மகன், வில் விஜயன் அம்பாலே" என்னும் வெஞ் சொல்லை யெல்லோரும் கேட்டதுபோல், கன்னனும் கேட்டு மனங் கசிந்திட்டான்.

அரவக்கொடியோனுக்கு அசுவத்தாமன் கூறுமதி

தனது அருமை மகனைத் தன் கண்ணெதிரே தனஞ் சயன் கொன்றனன் என்று கர்ணன் கருத்தழிந்து கண் ணிழந்து தன் தேர்மிசை நினைவில்லாமற் சாய்ந்துவிட்டான்.

தேர் செலுத்திவந்த சல்லியன் அவனைத் தேற்றிப் பற்பல உரைகளாற் சமாதானம் செய்துக்கொண்டிருந்தான். அப்போது, ஆசிரியன் மகனாகிய அசுவத்தாமன், அரவக்கொடியனாகிய துரியோதனனிடம் சென்று சேர்ந்தனன். அவனைப் பார்த்துச் சில வார்த்தைகள் கூறுகிறான்:—"துரியோதனா! நீயும் தருமனும் மனம் வேறுபட்டுப் போர் குறித்து நின்றீர்கள்; அதனால், புத்திரர்களும் நின் குருக்களும் உன் மித்திரர்களும் மற்றுமுள்ள நிரபராதிகளும் இந்தப் பதினேழு நாட் போரிலும் மாண்டொழிந்தார்கள்; முடிவில் வெற்றி பெற்றாலும், உறவினரும் உழையர்களும் உற்றவரும் கற்றவருமில்லாமல் அரசாட்சியில் என்ன அலங்காரம் இருக்கப்போகின்றது;

"வளையிலாதன மங்கல விழவும் நல்வரம்பிலா மரபுந் தொல்
விளைவிலா வரும்புலமும் முத்தீயிலா வேதியர் மனைவாழ்வும்
துளையிலா மணிமுத்தும் அந்தண்புனற் றுறையிலா வளநாடும்
கிளையிலா அரசியற்கையும் நன்றெனக் கேட்டறிகுவ துண்டோ?"

உறவினர்களிலாத அரசியற்கையும் ஓரரசியலாகுமா? ஆகையினால் இப்போது இருதிறத்திலும் மிகுந்திருக்கும் சதுரங்கப் படைகளையும் மிகுந்திருக்கும் உறவினர்களையும் வைத்துக்கொண்டு இருபேரும் சமாதானம் பெற்றுத் தருமன் மாமனாகிய உதிட்டானுடன் கலந்திருந்து உலகாளுதலே சிறப்பாகும்; இதுவே உலகுக்கும் உபயோகமாகும்" எனச் சில நல்லுரை கூறினான். இதனைக்கேட்ட நாகக்கொடியவன், நகைத்து, "இனி இவ்வுலகிலிருந்து அரசாட்சி புரிவார்க்கன்றோ நீ காரியம் புகல்வது; ரணபேரிகை யொலிக்க இப்போரினை முடித்து, உயிர் பிரிந்து, சுகருலகாளவேண்டிய வீரியமும் விருமுடைய எனக்கு ஈது உரிய மாற்றமன்று"

என்று சொல்லிப் பல வாத்தியங்களையும் ஒலித்திடப் பணித்துக் கர்ணனிருக்குமிடம் வந்து, அவனது கண்ணீரினைத் துடைத்து உபசாரவார்த்தைகள் பல கூறி, "மலை கலங்கினும் மன நிலை கலங்காத நீ, இங்ஙனம் போர்முகத்தில் உளம் கலங்கினையே !" என்று சொல்லினன். கர்ணன் மனந்தேறி, "என் மகன் தலையை என்னெதிரே துணித்தவன் தலையை இன்றைப்போரில் துணித்திடுகின்றேன் ; பார்" என்று மன்னர் மன்னற்கும் மத்திரத் தாசர்க்கும் ஆசிரிய குமாரனுக்கும் கூறிச் சீறி யெழுந்திட்டான். அர்ச்சுனனும் கர்ணனும் போர் முனையில் எதிர்த்து நின்றார்கள்.

கர்ணவிஜயர் பெரும்போர்.

இருதிறப் படைகளும் நெருங்கி மலைந்தன. குதிரைப் படையுடனும் குதிரைப்படையைப் பொர விடுத்தார்கள் ; ஆனைப்படையும் ஆனைப்படையும் எதிர்த்து நின்றன ; தேர்ப் படைகளைத் தேர்ப்படைகள் நின்று தகர்த்தன ; அங்ஙனமே ஆட்படைகளுமாயின ; சதுரங்கப்படைகளும் எழுப்பிய வாத்திய வொலியினால் உலகமெங்கும் செவிடுபட்டது. இந்தத் தொனியினால் பகிரண்டங்களும் வெடித்திடுமோ வென்று பிரமன் பயந்தனன் ; இச்சேனைகள் நெருக்கினால் எல்லாக் கிரிகளும் சிதறிவிடுமோ வென்று கிரீசன் நடுங்கினன் ; இச் சேனைகளா லெழுந் தூளிகள் மிகுந்து சென்று எல்லாக் கடல் களும் வற்றிடுமோ வெனப் பாற்கடற் பரமன் படபடத்தான். வீரர்கள் யாரும் தமது திறத்துத் தலைவர்களைப் போலவே பரஸ்பரம் வஞ்சினம் கூறிக்கொண்டு சமர் செய்தார்கள். வீமனும் விஜயனும் இளைஞர்களும் பல படைகளும் தம்மைச் சூழ்ந்திருக்கப் போர்முகத்துச் சிங்கங்கள் போல் நின்று கர்ஜித்துக்கொண்டிருந்தார்கள். அசுவத்தாம

னும் கிருபனும் கிருதவன்மாவும் சகுனியும் முதலிய வீரர்கள் தன்னைச் சூழ்ந்திருக்கக் கர்ணன் ஆளியேறெனநின்று ஆர்த்தான். இரண்டு வீரர்களும் தத்தம் தோள்வலியும் துணைவலியும் வாள்வலியும் வில்வலியும் வேல்வலியும் கோல் வலியும் காட்டிப் பொருதுகொண்டிருந்தார்கள். விஜயனும் கர்ணனும் காட்டும் வில்திறமை கண்டு விஞ்சையரும் மெச்சினார்கள்.

இரண்டு வீரர்களும் உலகிற் சிறந்த வில்வீரர்களே; இருவர் சாரதிகளும் உலகிற் சிறந்த சாரதிகள்; இருவர் வில்களும் வரத்தினாற் பெற்ற சிறந்த வில்களே. இருவர் கைகளிலும், உலகில் யாரும் பெற்றிட முடியாத வரம்பெற்ற தனித்தனிச் சிறப்புடைய பாணங்களும் படைகளுமுள. இருவரும் வஞ்சினம் கூறிக் கறுக்கொண்டு நின்றவர்கள். இருவரும் அரிய புத்திரரைக் களத்தினிலிழந்ததால் தோன்றிய கடுங்கோபம் உடையவர்கள்; என்றால், இவ்விருவரது வில்லின் திறத்தையும் சொல்லின் திறத்தையும் வெல்லும் திறத்தையும் கொல்லும் திறத்தையும் எடுத்தியம்பல் யாரால் முடியும். இருவரும் பரஸ்பரம் எய்த கணை மழையால், இரண்டு சாரதிகளும் வித்யாசம் தெரியாமலிருந்தார்கள். கண்ணனையும் சல்லியனையும் கடவுளர்களும் பேதம் காண முடியாதிருந்தனர். வீரமும் குற்றமற்ற சுழிகளுடைமையும் பற்பல கதி காட்டும் திறமுடைமையும், வெகுவாக நிறங்களும் பருமை நீளம் முதலிய புறமும் ஒத்திருந்தபடியால், இரண்டு வீரர்களுடைய குதிரைகளையும் பேதம் காண முடியவில்லை; நிலையிலும் ஒத்துப் போர் செய்யும் மலைவிலும் அலையிரண்டெனத் தாவி யலையும் அலையிலும் இருவர் கைச்சிலைகளும் வேறு காண முடியாமலிருந்தன. இங்ஙனம் போர்த் திறத்துக் கொத்த வீரர்களிருவரும் பொருதுகொண்டிருக்கும்போது,

கர்ணன், அர்ச்சுனன் விட்ட சரங்களை யொன்றன்பின் ஒன்ருகப் பொழிந்து ஒன்று பத்து நூறு ஆயிரமாகத் தொடுத்து, அழித்துவிட்டுச் சூரியன் கொடுத்திட்ட பாரபரமென்னும் வலம்புரிக் கைக்கொடு குறித்துப் பின்னும் சில சாயகங்கள் ஏவி மாயன்விடு தேரினை யசையாமலிருக்கும்படியாகச் சரக் கூடு கட்டித் தடுத்திட்டான்.

மாயா சரக்கூடம்

இதனையறிந்த கண்ணபிரான், தனது மாயையினுல் கர்ணன் தேரினையும் சரக்கூட்டினுல் மறைத்துவிட்டனர். மாயா சரக்கூடம் மறைத்ததினுல் வலைக்குட்பட்டுக் கிடக்கும் சிங்கம்போல் சூரியன் மகன் யாதும் செய்ய முடியாது கலங்கியிருந்தான். தனஞ்சயனும் மெய்தளர்ந்து கலங்கி யிருந்தனன். கண்ட கண்ணபிரான் அர்ச்சுனனைப் பார்த்து, "நண்ப! இஃதென்ன? முனைந்து போர்செய்யாமல் சித்திரம் போல் அசையாமலிருக்கின்ருய்?" என்று கேட்கக் கிரீடி கூறுகின்ருன்:—"கண்ண! அந்தச் சரக்கூட்டி லடைந்து கிடக்கும் வீரன், என் கண்கட்குக் கர்ணனுகத் தோன்ற வில்லை; என் மூத்த தமையன் தர்மன்போல் தோன்றுகின் றதே யென்று மயங்கி யிருக்கிறேன்; ஆகையால், இனிமேல் அவனுடன் போர்செய்ய மனம் ஒருப்படவில்லை" என்று கவன்று சொன்னுன். உடனே, கண்ணபிரான், ரதத்தினை விரைவினிற் கடத்திக்கொண்டு தருமனிருக்குமிடம் நிறுத்தித் தருமனுருவத்தைக் காட்டி யருளினர். இருவரும் வருதல் கண்ட தருமராஜன், அர்ச்சுனனைப் பார்த்து, "தம்பி! இன்னும் கர்ணனை யொழித்திடவில்லையா? நீ! உன் கை வில்லிது என்ன வில்?" என்று சினந்து கூறினுன். அச்சினவுரையைக் கேட்டவுடன், அர்ச்சுனன் வெகுண்டு, "கூர்மை

பொருந்திய வாளிகளைக் கொள்ளும் இந்த வில்லைக் குறை கூறுபவர், யாவராயிருப்பினும், அவர் தலையைக் கொய்திடு தல் என் விரதமாகலின், இதோ! இந்த அம்பால் உமது சிரம் கீழ் வீழ்ந்திடும்; பாரும்;" என்று ஒரு கணையைப் பூட்டி விட்டான்; அப்போது, அச்சுதன் இடையே புகுந்து விலக்கிச் சமாதானம் கூறிப் "பெரியோரை இவ்வுரை கூறினாலே, கொன்ற குற்றம் வந்திடுமே! இது என்னை, நீ, செய்தவாறு!" என்று நீதிகொண்டு திருத்தினார். உடனே, விஜயன் மனந் தெளிந்து, தான் செய்தது குற்றமெனத் தெரிந்து, தமையனை யிரண்டு கைகள்கொண் டிறைஞ்சி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்; தர்மன், ஓர் வார்த்தையும் உறையாமல், "இனித் துறவெய்திடல்தான் எனக்குத் தகுதியாகும்" என் றெண்ணிக்கொண்டு, தேரைவிட் டிறங்கிக் காடேகத் தலைப் பட்டு நின்றான். கண்ணனும் விஜயனும், வழிமறித்து வேண்டும் உரைகள் கூறிச் சமாதானப் படுத்தி மறுபடியும் ரதத்தின் மீதேற்றிப் போற்றித் துதித்து, "இப்போதே சென்று கர்ணன் உயிரைக் கைக்கொண்டு வருவோம்" எனக் குறித்து விடைகொண்டு திரும்பினார்கள்.

தெய்வாஸ்திர யுத்தம்

கண்ணனும் விஜயனும் வரும் போதே சங்கோசையும் நாணோசையும் காட்டித் கடங்தேர் செலுத்தித் தருமனிட மிருந்து திரும்பிக் கர்ணன் நிற்குமிடங் தேடி வந்து கொண் டிருந்தார்கள். மாயா சரக்கூடத்தையோ யாவாளிகள் தொடுத் தொதுக்கி விட்ட, கர்ணன், விஜயன் நின்ற இடத்தில் வந்து நின்ற வீமனுடன் எதிர்த்துப் பொருகின்ற தன்மையையும் கண்டார்கள். கர்ணனுக்கு எதிர் விஜயன் நின்று ஆர்த்திட லும், வீமனை விட்டு விஜயன்மேற் குறித்துக் கர்ணன் அம்பு

களை யெய்து போர் விளைத்தான். விஜயன், "இனிப் போரை நீட்டித்தல் கூடாது; தமையற் களித்த வுரையும் தவறப் படாது; ஆகலின், இவனை இன்றைப் போரில் எமனுலகுக் கனுப்பல் வேண்டும்" எனக் கருதி, அக்கினி பகவான் அளித்த வில்லைக் கையிலெடுத்து, அவன் கொடுத்த ஆக்கினே யாஸ்திரத்தை யதிற் றொடுத்துப் பூஜையாதிகள் புரிந்து, எதிரி கள் படைகள் மேலெறிந்து விட்டான், வில்லை விட்டு விலகி வெளிப்பட்ட அந்த நெருப்புக்கணை, இரவில் தோன்றும் நக்ஷத்திரக் கூட்டம்போல் எங்கும் நெருப்புப் பொறிகளைத் தூர்த்துக்கொண்டு கனன்று எரிந்து கொண்டு வந்து, ரதம் வேல் முதல் எப்படையும் கணையும் சிலையும் கவனப் பரியும் யானையும் என்று சொல்லப் பெறும் எல்லாச் சேனைகளையும் எரித்துக் கொண்டு வந்தது. இதனைக் கண்ட கர்ணன், புரு வங்கள் துடித்திடக் கோபித்து வருணன் கொடுத்த வாரு ணாஸ்திரத்தை யெடுத்து பூஜை புரங்காரம் கண்டு வீசி விட் டான். அது வில்லினின்றும் புறப்பட்டுச் சப்த மேகங்களும் உடன் வந்து பொழிந்தாற்போல எங்கும் நீர் வெள்ளமாகப் பெருக்கிப் பெருமழை பொழிந்து, அர்ச்சுனன் விட்ட அக் கினிக் கணையின் ஆற்றலையெல்லாம் அடக்கி விட்டது. பின் னர், அர்ச்சுனன், வாயவ்யாஸ்திரம் தொடுத்தேவி விட்டான் அதனைக் கர்ணன், நாகாஸ்திரமொன்றனை யெடுத்தெறிந்து, அக்காற்றுப் படலங்களை விழுங்கிடச் செய்தான். "இவ்வம் புக்கு என்ன செய்வாய்" என விஜயன் கூறி ஓர் இருளம்பு தொடுத்தேவிவிட்டான்; கர்ணன், கதிரவன் குமாரனுதால், பதினாறு கலைக் கதிரவன் கணை யொன்று தொடுத்து வந்த இருட்டையு மழித்து விட்டுக் கொதித்து நின்றான். இந்திர குமாரன் ஓர் இந்திராஸ்திரத்தைத் தொடுத் தேவினான், சூர்ய குமாரன் கர்ணன், ஓர் சூர்யாஸ்திரத்தைத் தொடுத்து விட்

டான். இரண்டும் சமமாக நின்று போர் புரிந்தன. மேலும் மேலும் கணைகளை யேவிச் சமமாகவே நின்று சண்டை புரிந்தார்கள்.

நாகாஸ்திரம் தவறுதல்

இங்ஙனம் தான் எறிந்த வாளிகளெல்லாம் அவனெறிந்த சமவாளிகளுடன் சமமாக நின்று யாதும் புரியாதிருந்திடவே, வெகுண்டு, கர்ணன், பிரமன் கணை யேவினன்; அத்தனைப் பாமன் கணை கொண்டு பார்த்தன் தடுத்திட்டான். இவ்விருவோரும் இங்ஙனம் தெய்வக் கணைகள் பல தொடுத்து ஆச்சரியமாகப் போர் புரிந்திடுதலைக் கண்ட இரு திறத்து மன்னர்களும், தாம் போர் புரியாமல் மயங்கி நின்றிட்டார்கள். ஆனாலும், இரு திறத்திதும், இக்கணைகளால் அழிபட்டவர் அநேகரானார்கள். பூமி யெல்லாம் ரத்தக் காடாக மாறி விட்டது. "இனிக் காலம் தாழ்த்திடாமல், இந்திர குமாரனை யழித்திடல் வேண்டு"மெனக் கருதி, தன்பால் வந்து அடைக்கலம் புகுந்து, தனஞ்சயனைக் கொல்வதற் கென்று, காத்திருக்கும், நாகாஸ்திரத்தைக் கையிலெடுத்துக் கர்ணன் பரிமள சந்தன தீபமும் கமழும் தூபமும் கொடுத்துப் பூசையும் புரிந்து கையிலெடுத்து வில்லில் தொடுத்து, விஜயனது கழுத்தைக் குறி வைத்து விடுக்கும் தருணத்தில், சாரதியாக நின்ற சல்லிய மன்னன், "மாயன் அங்கிருக்கின்றான்; ஆகையினால், கணையைக் காண்டீபன் மார்பிற் குறி வைத்துப் போக்கிடுவாய்" என்று சொன்னான்; அகம்பாவத்தினால், அவன் சொல்லை மதித்திடாமல், பரசிராமன் கொடுத்த அந்த வில்லில் அதனைப் பூட்டித் தான் கருதியபடி, விஜயன் கழுத்தையே குறிக்கொண்டு விடுத்து விட்டான். பழைய நாகம் - கறுவுடைய நாகம் - காண்டவ வனதகத்தின்போது தப்பிய நாகம் - விஜயனைக் கொல்வதற் கென்று வளர்ந்து வந்திருக்

கிற நாகம் - இரண்டாம் முறை விடப்படாதென்று குந்தி வாக்கு வாங்கிய நாகாஸ்திரம், கர்ணனால் ஏவப்பட்டு வருதலைக் கண்ணன் கண்டார், உண்மை யறிந்தவாதலினால், “இக்கணையினின்றும் இம்முறை தப்புவித்தால், விஜயனைக் கர்ணன் கொல்ல முடியாதவனாவான்'' என்னும் நினைவுடன், அந்த அஸ்திரம் அர்ச்சுனனுடைய கழுத்தை நோக்கி விடப்பட்டதாதலினால், அது அர்ச்சுனனிடம் வரும் சமயம்பார்த்து, இரதத்தைப் பன்னிரண்டு விரற்கடை யளவுக்குப் பூமியிற் பதிந்து விடும்படியாகச் செய்து விட்டார். அதனால், அர்ச்சுனன் தலையைக் குறித்துவந்த அந்தப் பாம்பு தலை மேற் படாமல், கிரீடத்தின் மேற்பட்டுக் கிரீடத்தைத் தள்ளிப் போயிற்று; நாகத்தால் தலை தப்பிய இந்திர குமாரன், இதன் உண்மையை யொருவாறு அறிந்தவனாகி; “அந்த நாகம் முன்னரே, காண்டவ தகனத்தின்போது, தீயினால் வாலிழக்கப் பட்டுள்ளதாகி யிருந்தது; இப்போது உடலுமிரண்டாகும் படியாகக் கணையை எய்கிறேன்'' என்று பகழியை யேவி உடலத்தின்மீது விட்டான்; உடலின் பாய்ந்த பாணத்துடன் பாம்பு, கர்ணனை நோக்கி, இன்னொருமுறை விட்டிடும்படியாக வேண்டி நின்றது. கர்ணன் குந்திக்குக் கொடுத்த வாக்குப் பொய்த்திடுமென்று எண்ணி, யதன்வேண்டுகோளுக்கு ஒப்பாமலிருந்தான். அஃது என்செயும்? அவனை விட்டு எமனையே புகலிடமாகக் கொண்டு உயிர் துறந்தேகியது.

சல்லியன் சாரத்யத்தினின்றும் விலகுதல்.

நாகாஸ்திரம் தவறிப்போய் விஜயன் உயிர் தப்பிடவே, பாம்புக் கொடியோன் படைகள் கலைந்து போயின. மற்ற மன்னரும் அவமானமும் கிலேசமும் அடைந்தார்கள்; சல்லியன், கர்ணனை வெறுத்துக் கூறித் தேரினின்றும் கீழிறங்கி,

"அருமார் பிலக்காக எய்யென்ன எய்யா அகங்காரமும்
வருமாசு ணங்தன்னை மறுகாலு மேவாமல் மறைசெய்ததும்
பொருமாறு நினைவற்றதும் கண்டு நாஞெத்த போர்மீளியைத்
திருமாலொ டொப்பானும் உளநொந்து நொந்தம்ம சிலகூறுவான்."

"என்னாலு மரிதித்தடங்தேர் விரைந்தூர் தலினியென்றுமற்
உன்னாலு மரிதந்த விசயன்ற னுயிர்கொள்ள லுன்னித்தபோர்
பன்னாக துவசற்கு மரிதா லுனைக்கொண்டு பாராளுமா
றென்னா விழிந்தானவன் தேரின்மிசை நின்றும் இசை நின்றுளான்."

கர்ணனைப் பார்த்து, "நண்ப! கர்ணா!! விஜயன் மார்பிற்கிலக்காக நாகாஸ்திரம் விடு என்றேன்; அகம்பாவத்தால் செய்யா திருந்தாய்; அந்தப் பாம்பும் மறுமுறை விடச்சொல்லிக் கேட்டது; அதனையும் மதிக்கவில்லை; ஆகையினால், உனக்குத்தேரூர்தல் இனி என்னாலுமாகாது; விசயனுயிர் கொள்ளல் இனி உன்னாலுமாகாது; நினைத்த இந்தப் போரினை முடித்து உன்னால், பாராளுதல் அரவக் கொடியோனாலுமாகாது; இனிப்போர் நடத்திப் பயனென்ன?" என்று அத்தேர் விட்டிறங்கித் தன்னிரதத்தின் மீதேறி வில்லும் அம்பும் கைக்கொண்டு நின்றான். 'கர்ணன் பரசுராமன் சாபம் பலித்துவிட்டது போலு'மென் றெண்ணி வெட்கினவனாகி அந்தத் தேர் விட்டிறங்கி வேறொரு தேரேறிக் கண் சிவக்க மேனி வெயர்க்கத் தேரைச் செலுத்திக்கொண்டு, விஜயற் கெதிர் சென்று, கோடி கோடியான பாணங்களை யேவி நின்றான். விஜயன் அக்கணைகளை யெல்லாம் தன் கணைகளினால் ஒடித்தெறிந்து பல பகழிகள் தூவிச் சூரியன் மகனான கர்ணனுடைய தேகத்தில் மயிர்க்கால் தோறும் அம்புகளை யேற்றியவன் வலி கவர்ந்தான். தேர்மிசைச் சாய்ந்து வீழ்ந்தான்; எனினும் அவனுயிரை, அவன் செய்துள்ள தர்மங்கள்

கடவுளுருக்கொண்டு காத்து நின்றன. சூரியனும் மேல்திசை மலையில் வீழ்தற்கு இன்னும் இரண்டு விற்கடையுண்டெ. னும்படி யிருந்தது.

கர்ணவள்ளலும் கண்ணவேதியனும்

"கர்ணன் மயங்கித் தேர்த்தட்டில் வீழ்ந்துவிட்டான்; நீ இனிப் போரை நிறுத்து;" என்று விஜயனுக்குக் கண்ணன் சொல்லிவிட்டு, உடனே ஒரு வேதியர் உருவைக்கொண்டு, மயங்கி வீழ்ந்து கிடக்கும் கர்ணனிடம் வந்து தோன்றி, "கர்ணவள்ளலே! நீ, இக்கடலுடுத்த பாரதனில் வாழும் மக்களுக்கு, வேண்டி யார் வேண்டி யாங்குக் கொடுத்தருளி னாய் என்று கேட்டேன்; மிக்க வறுமைப் பிணியால் மாழ்கி யிருக்கின்றேன்; இதுவரையில் மேருமலைக் கருகில் தவம் பூண்டு காலங் கழித்தேன்; என் பிணி நீங்கி உன்னிடம் பெறவந்தேன்" என்றுரைத்தான். தன்னை நேர்ந்து இல்லை யென்பார்க்குத் தானும் இல்லை யெனும் வார்த்தையைத் திரும்பச் சொல்லிடாமல், அவர் கேட்பது எப்பொருளாயி னும் அப்பொருளையே உவந்து கொடுத்தருளும் உறுதியை யுடைய உயர்ந்த வள்ளற் பெருமானாதலினால், கர்ணன்தான் உயிரிழக்கும் தருணத்தில் அவ்வேதியன் வந்துளனாயினும், இல்லை யெனுஞ் சொல்லைச் சொல்லுதற்கு அஞ்சினவனாகித் தன்னிடமுள்ள தெதுவாயினும் கொடுத்தற்குத் துணிந்து, "வேதியரே! உமக்கு யாதுவேண்டும்; யான் தற்போது தரத்தகும் பொருளைக் கேட்டருளும்" என்று கேட்டான். வேதியன், "வள்ளலே! உன் மனத்தில் நினைத்தபடியே நின் புண்ணியம் அனைத்தையும் தந்துதவுக" என்று கேட் டனர்: கர்ணன், களித்து முகம் மலர்ந்து பார்த்து,

"ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஓவிலா தியான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ?"

"வேதியப் பெரியீர்! எனது உயிரோ நிலைகலங்கி யிருக்கின்றது; இது சரீரத்திற்கு வெளியே யிருக்கின்றதோ உள்ளே யிருக்கின்றதோ அறிய முடியவில்லை; உலகப் பொருள்களை ஒரு பொருளாகப் பாவித்திடாதவனாகிய நான், வேண்டுவோர் வேண்டும் பொருளெல்லாவற்றையும் உவந்து அளித்திடும் பக்குவ காலத்தில் நீ வந்திருக்கவில்லையே; தக்கபடியாய் இப்போது நீ என்னிடமிருக்கும் நற்பொருளையே கேட்டனையே; மிக மகிழ்ந்தேன்; இதுவரையிலும் என் மனமறிந்து எந்தச் சொல்லொன்றை வாக்கினாற் சொல்லப்படாதென்று காத்துப் புரந்தேனோ, அந்தச் சொல்லை நான் இம்மரணத் தறுவாயில் என் வாயினாற் சொல்லும்படியாகக் கேட்டிடாமல், என்பாலுள்ள தொன்றையே கேட்டு என் மனத்தைக் களிப்பித்தாய்; இவ்வுதவி யெனக்குச் செய்த உனக்கு அழகிய தாமரையில் வஸிப்பவனாகிய பிரமனும் நிகராகமாட்டான்; அத்தகைய உன்னைக் காட்டிலும் யான் செய்துவைத்திருக்கும் புண்ணியங்கள் பெரிதாகமாட்டா; ஆகையினால் அவற்றை இன்றே உமக்குத் தந்தளித்தேன்" என்று சொன்னான்; என்று கைகுவித் திறைஞ்சும் வள்ளற்பிரானை நோக்கிக் கண்ணபிரான், "அவற்றை யுன் கைப்புனலுடன் தந்திடுவாய்" என்றார்; அவனும் "ஆம்" எனச் சொல்லிப் புன

வில்லாதபடியால், தனது மார்பிற் பாய்ந்திருக்கும் அர்ச்சுனனது அம்பின் வழியே பெருகிவரும் ரத்த நீரையே கையிலேந்தித் தனது புண்ணியமனைத்தையும் வேதியர்க்குத் தாரை வார்த்துக் கொடுத்திட்டான். கண்ணவேதியரும் தமது இரு கைகளையும் கன்னனுடைய இருகைகட்கும் கீழே தாழ்த்திப் பிடித்து, அந்த ரத்தநீருடன் அவனது புண்ணியமனைத்தையும் ஏந்தி வாங்கிக்கொண்டனர்.

பிறகு, வேதியர், கர்ணனை நோக்கி, "நன்மனமுடையாய்! உதாரகுணமுடையாய்! உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்; தருகிறேன்" என்று சொன்னார். அதற்குக் கர்ணன், சொல்வான், "அல்லல் வேல்வினையால் இன்னும் பிறவிகள் உண்டாகுமானாலும் அந்த ஏழெழுபிறப்பிலும் என்னை வந்து யாசிப்போர்க்கு அவர் சொல்லும் அந்தக் கொடுஞ் சொல்லையே யானும் திரும்பச் சொல்லிடாத நன்மனத்தையே எனக்கு அளித்திடுவாய்; இவ்வரம்தான் யான் வேண்டுவது" என்று சொன்னான்.

கர்ணன் கண்ட காட்சி.

கண்ணபிரான், கன்னனைக் கட்டித் தழுவிக்கொண்டு, கண் மலராற் குளிரப் பார்த்து, "எத்தனை பிறவி எடுக்கினும், நீ, அப்பிறப்புக்களிலெல்லாம் ஈகையும் செல்வமும் எய்தி, இரப்போர்க்குக் கொடுத்து, முடிவில் முக்தியும் பெறுதி" என்றுரைத்தருளித் தன்னுருவம் மாற்றித் தன் முகிலுருவம் காட்டிக் கரங்களிற் சங்கு சக்கரம் முதலிய பஞ்சாயுதங்களுடன் இலக்குமி நாரணனும் உருக்கொண்டு கருடாரூடராக நின்றார். அன்று முதலே வாய்ப்பட்டுக் கதறியபோது, அவ்யானை முன் தோன்றிய அந்தப் பரமனுருவே உருவமாகிய அவ்வுருவினைக் கண்டு கைகுவித்து உளங் குளிர்ந்து வினைகள்

விலகிப் பேரின்பப் பெருங் கடலுள் திளைத்துப் பெரும் பேறு பெற்றிருந்தான் கர்ணன்; அப்போது, அவன், தனது புண்ணிய வாக்கினைக் கொண்டு துதிக்கின்றான்:—

"நீலநெடுங் கிரியும் மழைமுகிலும் பவ்வ
நெடுநீரும் காயாவும் நிகர்க்கு மிந்தக்
கோலமும் வெங்கதை வாளஞ் சங்குநேமி
கோதண்டமெனும் படையும் குழைத்த வாச
மாலைநறுந் துழாய்மார்பும் திரண்ட தோளும்
மணிக்கழுத்தும் செவ்விதழும் வாரி சாதக்
காலைமல ரெனமலர்ந்த முகமும் சோதிக்
கதிர் முடியும் இம்மையிலே கண்ணுற் றேனே."

"மருதிடை முன் தவழ்ந்தருளும் செங்கண்மாலே! நான், தருமராஜன் முதலாகிய மிக்க காதலுடைய என் தம்பிமார்களுடன் மலைந்து, கேவலம் எனதுயிரனைய நண்பனாகிய அந்தத் துரியோதனனுக்காகச் செஞ்சோற்றுக் கடன் கழித்திடவே துணிந்து நின்றேன்; இந்திரனுக்குக் கவச குண்டலங்களையும் கொடுத்துள்ளேன்; உற்ற நல்வினையின் பேற்றையும் பெற்றேன்; அதனை யுனக்கே இப்போது தந்திட்டேன். தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் யோகியர்க்கும் முனிவர்க்கும் எத்தவத்தாலும் தேடிக் காணாத அப்ராக்ருத திவ்ய தேஜோ மயமாகி நின்று பிறவிப் பிணியறுக்கும் பெரும் பேறு பெற்ற நித்யர்க்கே தந்தருளும் உனது அழகிய உருவமும் அபய ஹஸ்தமும் கூடிய உன்னுடைய,

"வான்பெற்ற நதிகமழ் தாள்வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாயலங்கல் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்

ஊன்பெற்ற பகழியினு லழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன் நின்திரு நாமம் உரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெரும் தவப்பே றென்னை யன்றி
இருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற்ருரே."

திவ்ய பாதார விந்தத்தை வணங்கப் பெற்றேன்; உமது திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்; உமது களபமார்பும் தோள்களும் என்னைத் தீண்டப் பெற்றேன்; பாணத்தினுல் அடிபட்டு வீழ்ந்தும், நல்லுணர்வுடனே உமது நன்னுமமாகிய நாராயண நாமத்தை நவிலப் பெற்றேன்; இங்ஙனம் யான் பெற்ற பெரும் பேறு இந்நிலத்திற் பிறந்தாருள் யார் பெற்றிருக்கின்ருர்கள்?" என்று மனம் மகிழ முகம் மலர புந்தி களிக்கச் சித்தம் சுத்தியாக மேனி புளகிக்க அந்தத் திவ்ய சொரூபத்தை வணங்கினுன், வள்ளற் பெருமானுகிய கர்ண ராஜன்.

கண்ணன் கன்னற்கு நிகழ்ந்தன கூறல்.

கர்ணனது துதியைக் கேட்ட கண்ணன், அவனைப் பார்த்து, "கர்ணு! "இந்திரனைக் கொண்டு நின்னிட மிருந்து கவச குண்டலங்களைக் கவரும்படியாகச் செய்தவனும், குந்தியைக் கொண்டு நாகாஸ்திரத்தை இரண்டாம் முறை தொடுத்திடாமலிருக்கும்படியாகச் செய்தவனும், உன் பிறவியை யுனக்குத் தெரிவித்தவனும் தக்ஷகப் பாம்பின் மகனுன அந்த நாகாஸ்திரத்தினுல் அர்ச்சுனன் இறந்துபடாமல் இரதத்தைப் பன்னிரண்டங்குலம் நிலத்தி லழுத்திச் சாய்வித்தவனும் நானேதான்; இவையெல்லாம் உன்பொருட்டுச் செய்த காரியங்களாகும்; ஜீவர்கள் புறச் சேர்க்கையால் தமது உள்ளக் கிடக்கைக்கும் ஆன்ம இயற்கைக்கும் மாருகச் செய்யத் தூண்டப்படுவாராயின், அவர்க

ளது இயற்கைக்கு அநுகுணமாகவும் பிற்பயனுக்கு ஒத்த படியாகவும், அவர்களது கர்மங்களைச் சீர்திருத்தவேண்டியது கடமையாகலின், இவைகள் இங்ஙனம் திருத்தப்பட்டன. குந்தியிடம் சொல்லியனுப்பினபடியே நீ உன் தம்பியருடன் அன்றே வந்து கூடியிருந்திருப்பையாயின், இவை நிகழ்ந்திருக்கமாட்டா; ஆட்சியும் நின்னதாக அமைந்திருக்கும். ஆயின், இவ்வுலகுள்ளளவும் நீ, செய்ந்நன்றி மறந்தவன்என்னும் நிந்தைக்கும் மித்திரத்துரோஹி என்னும் தீமைப்பெயரினுக்கும் தீராப் பழிபூண்டு வாழ்ந்திருக்க நேரிட்டிருக்கும்; ஆகையால் உத்தம தியாகியான நீ உன் இயற்கையின்படியாகச் செய்ததே சரி; அதனல் தோன்றும் சீர்கேடுகளைத் திருத்தவேண்டிய கடமையும் நிறைவேற்றப்பட்டது; உன்னைத் தேகத்தைவிட்டுப் பிரித்திடாது காத்திருந்த புண்ணிய பலன்களும் சேரவேண்டிய இடத்தைச் சென்று சேர்ந்துவிட்டன; ஆதலினல் உன்னைப்பற்றிய பாசங்கள் எல்லாம் நீங்கிப்போயின; இனி உனக்குப் பிறப்பில்லை; உனது மனம் பற்றிய மூர்த்தியை யினித் தியானித்துக் கொண்டிருப்பாய்'' என்று சொல்லித் தனது காட்சியையவனுக்கு நன்கு அருளி மறைந்து, பின்னரும் கண்ணனுருவே கொண்டு அர்ச்சுனன் தேரின்மீதேறிக் கர்ணன் மீது அஞ்சரீகமெனும் கணையைத் தொடுத்து அவன் ஆவியைக் கவர்ந்திடும்படி யாணையிட்டார். விஜயனும் அப்பாணத்தை யெடுத்து வில்லினில் தொடுத்துக் கர்ணனது உயிரினை லக்ஷ்யம் வைத்து ஏவிவிட்டான்; கணையும் சென்று அவனது உயிரை வாங்கிவிட்டது; சூரியன் மேலைத்திசையில் வீழ்தற்குமுன்னே அவன் உயிர் நீக்கப்படவேண்டிய கடமையின்படியே நீக்கப்பட்டது; கர்ணவள்ளற்பிரானும், தான் கடைக்காலத்திற் கண்ட கார்மேகக் கண்ணனுருவை

யே தன் மனத்துக்குரிய காட்சியாக்கொண்டு, இதயத்து டிருத்தியிரு கண்களையும் மூடி "ஓம் நமோ நாராயணாய" என்று வாக்கிற் சொல்லிக் களித்த உள்ளத்திற் கறிகுறியாகிய மலர்ந்த திருமுக கமலங்களுடன் இரதத்தின்மேற்கிடந்தான்.

குந்திதேவி புலம்பல்

"கருடனது திருத்தோளில் கண்ட கோலம்
கண்ணினும் நெஞ்சினும் நிற்கக் கருணையாதி
புருடனது திருநாமம் தனது நாவில்
போகாமல் நனிவிளங்கப் புதைந்து வாளி
வருடஉடல் விளிர்விக்கச் செம்பொன் தேர்மேல்
மன்னரெலாம் புடைசூழ வையங் காக்கும்
கருடன்மகன் அருகிருந்து சோகம் கூரக்
குற்றுயிருடன் கிடந்தான் கொடையால் மிக்கோன்."

"வில்விஜயன் எய்த பேரம்பினால் இன்று கர்ணன் முடி சாய்ந்து தேர்த்தட்டில் வீழ்ந்திருக்கின்றான்; சூரியாஸ்த்தமனத்துக்கு முன்னே ஆவிபோய்விடும்" என்று அசரீரிஎடுத்துச் சொல்லத் தாயாகிய குந்திதேவியானவள், தனது மனம் நெக்குருகிக் கண்ணீரைத் தாரைதாரையாகச் சொரிந்துகொண்டு கூந்தல் அவிழ்ந்து சரியக் "கோ; கோ" என்று அலறிக்கொண்டு போர்க்களத்தில் வந்து சேர்ந்து, கர்ணன் உடல், மலைபோற் சாய்ந்திருத்தலைக் கண்டு, இரண்டு கைகளையும் தலைமேல் மோதி, "அந்தோ! அருமைப் புதல்வா!! என் ஆருயிரே!!! கர்ணா!" என்று கர்ணனது சரீரத்தின்மேல் வீழ்ந்து அரற்றினாள். "அப்பா! என் அருமைத் தலைமைப் புதல்வா!! கர்ணா!!! எனது கன்னிப் பருவத்தில் சூரியனது திருவருளால் எனக்குதித்திட்ட சூரக்காளையே! உன்னைப் பெற்ற அன்றே, ஊர் வம்புக்குப்

பயந்து ஓர் பெட்ட கத்திலிட்டு அன்பில்லாதவள் போலக் கங்கை யாற்றிற் கடத்தி விட்டேனே! என் அப்பா!! என் கருவிழியே!!! அன்று முதல் உன் நினைவே நினைவாக அயர்ந் திருந்தேனே! என் கண்மணியே! பின்னர், நீ, மன்னர் மன் னனுக்கு மித்திரனுகி "வீரக்கர்ணன்" எனும் நாமம் பெற்று அங்க தேசத்ததிபதியாகி யிருக்கின்ருய் எனக் கேட்டு உளம் மகிழ்ந்திருந்தேனே; இது வரையில் உன் நல் வாழ்வை யுன்னி, என் நல்வினைப் பயனே இச்செயலை யளித்த தென்று இறுமாந்திருந்தேனே! என் அப்பா! என் முன்னே! நீ எங்ஙன மேனும் இந்தக் குருகுலத்தாட்சி கைக்கொண்டு உலகம் போற்ற வாழ்ந்திடுவாய் எனக்கனவு கொண்டிருந் தேனே! என் ஆருயிரே! ஐயோ! என் முன்னே வானு டானச் சென்றனையோ! அந்தோ! நான் என் செய்வேனே!

"ஓரைஞ்சு பேருளரால் அறந்தவராத உதிட்டிரனு
தியர் உரகக் கொடியோனுதி
ஈரைஞ்சு பதின்மருளர் தம்பிமார்கள் இங்கிதங்கள்
அறிந்தடைவே ஏவல் செய்யப்
பாரஞ்சும் ஒருகுடைக்கீழ் நீயேயாளும் பதமடைந்தும்
விதிவலியாற் பயன் பெருமல்
காரஞ்சு காதலத்தாய் அந்தோ! அந்தோ!! கடவுளர்தம்
மாயையினுற் கழிவுற் ருயே!"

அப்பா! குருகுலப் புதல்வா!! மேகமும் நாணும்படி யாகக் கொடையிற் சிறந்தோய்! உனக்குத் தம்பியர்களாக நூற் றைந்து பேர்களும் இருந்து ஏவல் செய்யக் காத்திருக்கக் கொடுத்திருந்தும் உலகமெலாம் ஒரு குடைக்கீழ் ஆண்டாருக் கப் பதம் பெற்றும், விதிவலியால் அப்பயன் பெருமல், ஐயோ! ஐயோ!! கடவுளர் செய்மாயையினுல் மாண்டு ளாயே!!! என் செய்வேன்? என் அப்பா!! என் கர்ணு!!!

என் உயிரே! என் மகனே!!" என்றென்று அமர்க் களத்தி லிருக்கும் வேந்தர் யாவரும் கேட்டதிசயிக்கும்படியாக ஏங் கித் தேம்பி யெடுத் தழுதுச் சோகித்துத் தரையில் வீழ்ந் தாள்.

துரியோதனன் புலம்பல்.

தாயின் மடிமேலும் கைமேலும் கர்ணனது தலை கிடக்க பொன்னின் தூண் வீழ்ந்து கிடப்பதுபோல் வீழ்ந்திருக்கும் அவன் பொன்னுன் மேனியைக் கண்ட மன்னரும் மறையவ ரும் கண்க்ளில் நீர் பெருக்கிக் கசிந்து நின்ருர்கள். கடல் போலும் மலை போலும் காட்டைப் போலும் பெருங் கூட் டத்துடன் இருந்த துரியனுடைய சேனைகள், யுகாந்தத்தில் சண்ட மாருதத்தாலும் ஊழித் தீயினுலும் ஒளி கொண்ட யுகமுடிவுச் சூரியனுலும் வற்றிப் போய்ச் சுவறிக் கிடக்கும் கடல்போல், எல்லாம் ஒழிந்து குறைந்திருந்தன. எங்கும் வெளியாய்ச் சேனையுமிழந்து பல தம்பியரையும் பலிகொடுத் துத் தன்னொரு தங்கையான துச்சளையையும் கைம்பெண் ணுக்கி, பாட்டனை யிழந்து ஆசிரியன் அகன்று தமியனுகி வருந்திய துரியோதனன், கடைசியில் உயிர்க்குயிராய் உடற் குடலாய் பொருட்குப் பொருளாய் உறவிருந்த ஒருவனுன கர்ணனையும் இழந்தானென்னில், அவனுற்ற பெருந்துயரம் இவ்வளவென்று சொல்லும் வாக்கும் மனமும் யார்படைத் திருக்கின்ருர்கள்? கனக மலைபோல் வீழ்ந்து கிடக்கும் கர்ண னது உருவைக் கண்டான்; கருத்தழிந்தான்; கண்ணிழந் தான்; சொல்விறந்தான்; சோர்வுற்ருன்; மண்மேல் வீழ்ந் தான்; மூர்ச்சையானுன்; பின்னர் அம் மயக்கந் தீர்ந்து, எழுந்து, அந்த எழிலுடலைப் பார்த்துப் புலம்புகின்ருன்:— "அண்ணு! கர்ணு!! அங்கதேசத் ததிபதியே! என் ஆருயிருக் குறுதுணையே!

"அணையார்தம் படைக்கடலின் அருநிலைக்குக்
கரையேறல் ஆனகோலப்
புணையாய்எத் திறங்களினும் பகிராமல்
உற்றதெலாம் புகலத்தக்க
துணையாய்என் உயிர்க்குயிராம் தோழனுமா
கியவுன்னைத் தோற்றேனாகில்
இணையாரும் இலாவரசே யாரைக்கொண்
டரசாள இருக்கின்றேனே."

"சூழ்வேலை யுலகாளும் சூழ்ச்சியுமிப்
பெருஞ்செல்வத் துவக்கும்நெஞ்சால்
வீழ்வேனோ அமராட வீமனொடு
தலைநாளில் விளைந்த செற்றம்
தாழ்வேனோ யுனையொழிந்து தம்பியரை
யொழிந்துமினித் தனித்து நானே
வாழ்வேனோ வாழ்வேயென் மனவலியே
வருகின்றேன் வருகின் றேனே."

என் அரிய பகைக்கடலைக் கடந்தேறத் தக்க துணையாயிருந்து விளங்கிய நண்பா! கர்ணா!! எவ்வகையிலும் மனமும் சொல்லும் பிரியாமல் உற்றதெல்லாம் உரைக்கத்தக்க உறு துணையே! என் உயிரே!! உன்னையும் நான் தோற்றுவிட்டேனாகில், இணையாருமிலாத அரசே! அங்கபூபனே!! இனி யாரைத் துணைகொண்டு அரசாளப்போகின்றேன்; இக்கடலாற் சூழப்பட்ட இப்பேருலகை யாள்வதற்கு என்றும் எவ்வகையிலும் நீங்காத பேராசைகொண்டு, அதற்குரிய சூழ்ச்சியையும் அச்செல்வத்தின்மேலாசையையும் விட்டு நீங்காத என் நெஞ்சால் இனி வீழ்ந்து போவேனோ? இளமைப் போதில் வீமனிடம் உதித்த பெரும் பொறாமையினால் அவனோடும் அமராடத் தோன்றி யுதித்தவென் உள்ளப் பகைமை

விட்டுத் தாழ்ந்திடுவேனே? உயிர்க்குயிராம் உன்னையு மொழிந்து உடன் தோன்று தம்பியரையுமிழந்து இனிமேல் தனித்து நான் வாழ்ந்திடுவேனே? என்ன செய்வேன்? என் வாழ்வே! கர்ணவள்ளால்!! என் மனவலியே!! என் ஆருயிரே!!! உன் பின்னே, இனி நானும் வருகின்றேன்; வருகின்றேனே'' என்று மிகுந்த இரக்கத்துடன், மன்னர் மன்னன் வாய்விட்டுக் கதறி யழுதகுரல் கேட்டு, மன்னர்களும் மற்றுள்ளாரும் மாழ்கி மனமிழந்து இருந்தார்கள். சூரியனும் மறைந்து போனான்.

பாண்டவரைவரும் புலம்பல்.

இங்ஙனம், மற்றை யொலிகள் எல்லாம் அடங்கிய அந்த அமர்க்களத்தில், அழுகை யொலியே எங்கும் செவிடுபட்டது. அழுகையிற் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் எங்கும் சென்று யாவருக்கும் தனித்தனியாகக் கேட்டது. தரும ராஜன் முதலாகிய பாண்டவர் ஐவரும், தமது தாயாகிய குந்திதேவியின் பேரழுகைக் குரலைக் கேட்டுப் பதைத்து மனம் மாழ்கிச் சரீரம் நடுங்கினவர்களாகி யுண்மை யறியாதவர்களானபடியினால், பிரமித்துக் கண்ணனிடம் ஓடோடியும் வந்து, விநயத்துடன் வினவிக் கேட்டு, உண்மையறிந்து, "கர்ணராஜன், தங்களெல்லோர்க்கும் ஒருவயிற்றுதித்த மூத்தோன்'' என்ற சொல் செவியிற் சேர்ந்தவுடனே, இடியுண்ட நாகம்போற் புரண்டு பூமியில் வீழ்ந்து, ஒன்றும் தோன்றாதவராகி ஓடிப்போய்த் தம் முன்னோன் கொடைக் கையன் கர்ணவள்ளல் வீழ்ந்து கிடக்கும் இடம் சேர்ந்தார்கள். அண்ணன் தலையை மடிமீது கிடத்தித் தலை கவிழ்ந்து புலம்பிக்கொண்டிருக்கும் தாயை நோக்கி, அன்பும் வன்பும் கொண்டவாய்ப் புலம்புகின்றார்கள்:—"அந்தோ! தாயே!!

இவ்விரகசியத்தை முன்னம் அறிவியாமலிருந்திட்டாயே!!! இத்துணை ரணகளம் ஆகியிருத்தல் வேண்டாமே! இவ்வளவு பிரமாதத்தை ஈன்ற தாய் தன் புதல்வருக்கு ஆக்கிடலாமா,

"கன்னியிளம் பருவத்தில் அரியமா வெனும்
கடவுள் காதல் கூர
மன்னிய மந்திர மெமக்கும் இன்றளவும்
உரைத்திலையால் மறந்தாய் கொல்லோ
பின்னியசெஞ் சடைக்குழலாய் ஈதென்ன்
பேறறிவு பெற்ற தாயின்
அன்னிபர்நன் ரூயிருந்த திப்படியே
பிழைப்பிப்ப தறிந்தி லேமே"

தாயே! குந்திதேவி!! உன் கன்னிப் பருவத்தில் நிகழ்ந்திருந்த இந்த ரகசியத்தை எங்களிடம் ஒரு நாளாயினும் சொல்லிவிடாமல் மறைத்துவைத்திருந்தனையே! அதனால், எங்களை யிப்பெரும்பாவத்தில் ஆழ்த்தினையே!! இதுவும் ஒரு பெரிய அறிவாகுமோ? ஆஹா! 'பெற்ற தாயினும் அந்நியத் தாய் நன்று' என்னும் புதுமொழியைப் பொறித்தனையோ? என்ன செய்வோம்? ஆஹா! கர்ணு!! எங்கட்கு மூத்த அண்ணு!!! உன்னைப் பெற்றும் வளர்க்காமல் தனியே விடுத்த உன் அருமைத்தாய், ஊற்று ஊற்ருய்ப் பெருகிக் கொண்டிருக்கும் கண்ணீரொடும் உருகிப் புலம்பி நிற்கவும், உன் தம்பியராம் ஐவோரும் உன் அடிவருடி அடிமைசெய்யக் காத்திருக்கவும், மனங்கொள்ளாமல், எமனிருக்கும் பதி தேடிப் போயினையோ! ஐயோ நாங்கள் அரும்பகைவென்று முடிசூடி யாசாண்டாலும், உலகோர், "ஒருவயிற்றிற் பிறந்த மூத்தோனைக் கொன்று முடி சூடினர்; பாண்டவர்" எனப் பழி கூறுவரே! எமக்கினி யெதற்கு இவ்வரசாட்சி என் றென்று புலம்பினர்கள்; அவர்களுள் வில் விஜயன் மிக மாழ்கி

இப்பாவம் எப்பாவத்தினும் மேலாக என்னைத் தான்பற்றி யிருக்கின்றது; நானே இக்கொடுமையைச் செய்தவன்," எனக்கூறி, அந்தோ! கர்ணா!! ஐவர்க்கும் மூத்தோனே!!! அரிய வள்ளால்!

"ஊன்தொடுத்த வயவாளி யெத்தனையா
யிரந்தொடுத்தேன் உரகத் தால்நீ
தான்தொடுத்த கடுங்கணைக்குத் தப்பினே
னெனமகிழ்ந்தேன் சஞ்ச ரீகம்
தேன்தொடுத்த மலரலங்கல் தினநாதன்
சேயேநின் திருமார் பத்தில்
யான்தொடுத்த நெடும்பகழி யெனைக் கெடுப்ப
தறிந்திலே னென்செய் தேனே".

ஐயோ! உன் மார்பில் எத்தனை வலிய பாணங்களைத் தொடுத்து வருத்தினேனே! எனக்காக உன்னிடம் வளர்ந்த நாகாஸ்திரத்துக்கு யான் தப்பினேன் என்றிருந்தேனே! ஆனால், உன் மார்பகத்தில் யான் தொடுத்த பாணம், 'அண்ணனைக் கொன்ற அரும்பழி' என்னும் பாவவுருக்கொண்டு, என் இதயத்தில் பாய்ந்திடும் என்று அறியாமலிருந்தேனே" என்று கதறி வருந்தித் தேம்பி நின்றான். பிறகு, அறுவரும், கண்ணபிரானைப்பார்த்து, மனநொந்து பேசலுற்றார்:—"மாயக் கள்வ மாமாயா! இப்பழிக்கெல்லாம் நீயே காரணம், இவ்வுண்மை நீ முன்னம் அறிந்திருந்தும், நாங்களறியாமல் எங்கள் தாய்க்குச் சொல்லியிருந்தும், எங்கட்குச் சொல்லாமலிருந்திட்டாயே! இதற்கு முன்னம் அறிந்திருந்தோமாயின், இந்தப் பிரமாதம் விளைந்திருக்க ஏதுவில்லையே! வஞ்சனையால் எங்களைக்கொண்டே எங்கள் மூத்தவனைக் கொலை செய்யத் துணிந்திட்டாயே! இதுவே உன் விரகாகப் போயிற்று;

முன்னும் பல கதைகள் இப்படிச் செய்தாய்! இப்போதும் யாமறிய இங்ஙனம் செய்திட்டாய்!!

"ஆடகனைப் புதல்வனைக்கொண் டழிப்பித்தாய்
இலங்கைநகர்க் கரசை யன்று
வீடணனைப் பகையாக்கிக் கிளையுடனே
வீழ்வித்தாய் வேலை சூழ்ந்த
நாடறியப் புகுந்தெமக்கு நாயகமாம்
கன்னனையும் நரன்கை யாலே
ஈடழியப் பொருவித்தாய் இமையோர்கள்
வல்லவிர கிபார்வல் லாரே."

முன்னுகத்தில் இரணியனை யவன் புதல்வன் பிரஹ்லாதனைக் கொண்டே யழிவித்தாய்; பின்னுகத்தில், இலங்கை நகர்க் கரசனும் இராவணனை, யவன் தம்பி விபீஷ்ணனைத் துணை கொண்டே அழித்திட்டாய்; இவ்யுகத்தில், இந்நாடறிய எங்கட்கு நாயகமாகிய கர்ணவள்ளற் பெருமானை, யவன் தம்பிகளில் ஒருவனுன இந்நானைக்கொண்டே அழிவித்தாய்; இவையெல்லாம் தேவர்செய்த உபாயத்தாலே தீர்ந்ததாயிற்று; எல்லாம்வல்ல சூத்திரதாரராகிய நீங்கள் இங்ஙனம் செய்யப் புகுந்தால், உங்களால் ஆட்டப்பட்டு ஆடும் பதுமைகளாகிய நாங்கள் என் செய்திட முடியும்? எங்களையும் எப்படியும் புரந்திடுவது உன் கடனே" என்று பாதத்தில் வீழ்ந்து வணங்கினுர்கள்.

கர்ணபர்வம் முற்றியது.

சல்லிய பருவம்

பதினெட்டாம்போர்ச் சருக்கம்

"மீனுமை கோலநெடு நரசிங்க மாகி
நிலம்விராகா லளந்த குறளாய்
ஆனாத சீறுமழு வல்வில்லு வெல்லுமுனே
அலமுற்ற செங்கை யவராய்
வானுடர் வந்துதொழ மண்ணுடர் யாவரையும்
மடிவிக்க வந்த வடிவாய்
நானு விதங்கொள் பரியாளாக நின்றருளும்
நாராய ணாய நமவே."

இந்த நாட்போர்தான் பாரதயுத்தத்தின் பதினெட்டாம் நாளான கடைசிநாட் போர்; இந்த நாட் போரில், மன்னர் மன்னன் துரியனும் மற்றுள்ள தம்பியரும் மடிந்தழிகிறார்கள்; சகுனி சல்லியரும் மாண்டுபோகிறார்கள்; அந்தணனாகிய அசுவத்தாமன் பேய்வெறி கொண்டு, ஐவர் அறியாதபடி இராவிற் பாசறை புகுந்து துருபதேயரையும் திரௌபதி மைந்தரையும் படுகொலை புரிந்திடுகிறான். துரியன் பக்கலில் யாவரும் ஒழிந்து கிருபன் கிருதவன்மா அசுவத்தாமா என்னும் மூவருமே பிழைத்திருக்கிறார்கள்.

சல்லியன் சேனுபத்யம்.

பதினேழாம் நாள் இரவெல்லாம் அரவக்கொடியோன், ஆருயிர் நண்பன் கர்ணன் இறந்தமைக்கு ஆற்றாது, கண்ணீர் விட்டழுதுகொண்டிருந்து, தன் அருகு நின்று ஆற்றிய மாமன் சகுனியுடன், ஆலோசித்திருந்து இரவினை யொரு வகையினிற் கழித்திட்டு, மறுநாள் சூரியன் உதித்தவுடனே,

மாமன் சொன்ன உறுதிப்படியே, மத்திர மன்னனாகிய சல்லி யனையே சேனாபதியாககிப் போரை நடத்துவதெனத் தீர்மா னித்து, அவனைத் தன்பால் அழைத்துவரச் செய்து கூறுகின் றான்:— "மத்திராதிபனே! சல்லிய நண்ப!! எனக்கினி யுதவு வாய் நீயே!!!

"நீயே எனக்குயிரும் நீயே எனக்குளமும்
நீயே எனக்கு நிதியும்
நீயே துணைப்புயமும் நீயே விழித்துணையும்
நீயே அனைத்து நிலையும்
நீயே முனைச்செருவில் அதிரதரின் மாரதரின்
நிகரற்ற கோவு மதனால்
நீயே முடித்தியென தெண்ணத்தை யென்று
வகை நிகழா மகிழ்ந்து புகழா."

அதிரதரில் மாரதரில் நிகரற்ற அரசன் நீயே ! உரிய நண்ப ! நீயே எனக்கு எல்லாமாய் நிற்கின்றாய்; அதனால் நீயே எனது எண்ணத்தை முடித்துக் கொடுக்கக் கூடியவனாக இருக்கின்றாய்; ஆகையினால், பட்டவர்த்தனர்கள் மகுட வர்த்தனர்கள் படை வீரர்கள் மிகுந்துள்ள படையைச் செலுத்திச் சேனாபத்யம் வகுத்து நீயே போரை நடத்திக் கொடுத் துதவவேண்டுகின்றேன்; மறுத்திடாமல் இவ்வரம் எனக்குத் தந்தருள்வாய்'' எனப் போற்றி வேண்டிச் சம் மதிக்கச் செய்து, சேனைத் தலைவனுக்கு அலங்காரங்களும் ஆட்களும் ஆயுத வகைகளும் அருளி, மற்றைத் துணை வீரர் கட்கும் சொல்லியறி வுறுத்தினான். கிருபாசாரியன் கிருத வன்மன் அசுவத்தாமன் முதலிய வீரர்களும் மற்றும் மிகுந் துள்ள மன்னன் தம்பியர்களும் யாவரும் கூடி மன்னற்கும் சேனை நாயகற்கும் உற்சாகம் தோன்றும்படியாக உபசார

வார்த்தைகள் கூறி, "இன்றைப் போருடன் பாரதப் போரை முடித்திடுவோம்" எனக் கூறி ஊக்கங் காட்டினார்கள். கர்ண னுடைய மைந்தர்கள் மூவரும் இன்றைப் போரில், எமது தந்தையைக் கொன்றவனை யின்று கொன்று வீழ்த்துவோம், என்று வீர வாசகம் கூறினார்கள். இங்ஙனம் இத்துணை வீரர்களொடும் கூடிய அந்தச் சேனாசமுத்திரம் புடை சூழ்ந்து வரப் பாசறையை விட்டகன்று, மன்னர் மன்னனும் மத்தி ரத்ததிபதியும் போர்க் களம் குறுகி நின்றார்கள்.

கர்ணனை யிழந்த அந்த நாள் இரவெல்லாம், பெரும் பொருளிழந்தவர் போலவும் பெரும் பாதகம் செய்தவர் போலவும் மனம் தாங்க மாட்டாமல், தனித்தனியே இருந்து விம்மி விம்மி யழுது கொண்டிருந்தார்கள். வில் விஜயன், தான் செய்த பாவச் செயலை நினைத்து, கண்ணனை வெறுத் தும், அன்னையை வெறுத்தும், அமரினை வெறுத்தும், ஆட் சியை வெறுத்தும், விதியை வெறுத்தும் மாழ்கியிருந்தான். அவர்கட்கு அன்றிரவு இப்படியே கழிந்துபோயது. காலையில் சேனை காவலனாகிய திட்டத் துய்மன் விதிப்படி செய்வன செய்து, சேனைகளைத் திரட்டிப் போர்க் களத்துக்குப் புறப் பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். தருமன் முதல் பாண்டவர் ஐவரும் யாதும் உற்சாக மற்றிருந்தார்கள். கண் ணன், கழறிய பல கட்டுரைகளாற் பின்னர்த்தேறி யெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, போருக் கென்று புறப்பட்டார்கள். கூட்டத்துடன் சென்று போர்க் களம் குறுகினார்கள்.

தர்மனுக்குக் கண்ணன் கூறல்.

மத்திராஜன், சல்லியன், பகைவர் சேனையில் நின்று தலைமை வகித்து நடத்துகின்றானென்றும், சேனையை அஸ்

திர வ்யூகமாக வகுத்திருக்கின்றுனென்றும், அச்சேனையில் மிகுந்துள்ளவர்கள், தக்க வீரர்களாகவும், மிக்க கறுவுடைய வர்களாகவும் வஞ்சினம் கொண்டு போர்க் களம் புகுந்திருக் கின்றூர்களென்றும் செய்திகளை யொற்றவரும் காவலரும் சொல்லக் கேட்டுத் தருமராஜன், யாவும் வல்ல வீராகியும், தன் இளைஞனுக்குச் சாரதியாகியும் நின்றுள்ள ஸ்ரீ கண்ண பிரானிடம் சென்று, "யாதவப் பிரானே! மத்திரத்ததிபதி யாகிய அதிரத வீரன் தலைமை வகித்து நடத்தும் அப்பெரும் பகைவர் சேனையை, யிற்றைப் போரில் வெல்லுதல் கூடுமோ" எனக் கேட்டு வணங்கினர்:—அயிர்த்து வினவிய தர்ம பூபனைப் பார்த்து, அச்சுதன் கூறுகிறூர்; "தர்மராஜனே! வெகு ஆச்சரியமாக இருக்கின்றது உமது கேள்வி; அண்ணன் இறந்தான், என்று கேட்டவுடனே நீர் அஞ்சும் இழந்து விட்டீர் போலும்; பகைவர் சேனையில் வீரர்க்கு அதிவீரராயிருந்தவரை யெல்லாம் செருக்களத்து வென்று அழித்த உமது இளைஞர்கள் உம் மருகே இருக்கின்றூர்கள். அப்பகைஞர் படையில், பெரிய பெரிய வீரரெல்லாம் மாண்டொழிந்தனரே யன்றிப் புதிய வீரர்கள் யாரும் வந்து கூடினரில்லை; இங்ஙனமிருக்க, இன்று உமக்கு இவ்வையம் உதித்திடற்குக் காரணம் என்னவோ அறியேன்:

"வீடுமனைச் சிலைக்குருவாம் வேதியனை
நம்முனைமுன் வீடுசேர்த்த
நீடுமணிப் பொலங்கழலோர் நின்னருகே
நிற்கின்றூர் நிகரிலாய் கேள்
ஆடுதிரைக் கடல்நீந்தி யேறினர்க்குக்
கழிகடத்தல் அரிய தொன்றே
தோடவிழ்தார்ச் சல்லியனுக் கிளைப்பரோ
எனமொழிந்தான் துளப மாலே."

பெருத்த வீரர்களைப் பொருதழித்த உமது தம்பியர்கள் இன்றைப் போரை நடத்தும், பகைவர் சேனா நாயகனாகிய இந்தச் சல்லியனுக்கு இளைத்திடுவாரோ? 'அஞ்சல் வேண்டாம்' வில்லியரில் வாளோரில் மல்லவரில் வேலாளில் சிறந்தோர் என்று உலகம் புகழ்ப் பெருவீரர்கள் நிகராகாத வில்வலியும் வாள்வலியும் வேல்வலியும் மல்வலியும் பெற்றுள்ள மைந்தரான உமது தம்பியர்க்கு, இம்மத்திரத்தான் நிகரென்றல் நகைப்புக் கிடம் ஆகாதோ? நிகரற்ற வீராகிய உமக்கு இந்த மெய்ந் நடுக்கம் ஏன் வந்தது" என்று சொல்லி மற்றும் சொல்வார்; "மத்திரத்ததிபன் நின்தம்பியராம் வீரர்கள் யாரையும் விட்டு உம்மேலே கறுக்கொண்டு வந்து பாய்வான். இருவரும் மாலைவரையில் முனைந்து பொருதாலும் ஒருவரையொருவர் வெல்ல முடியாது; பார்த்தனும் அசுவத்தாமாவும் நின்று போர்புரிவார்கள். சகாதேவன் சகுனியை வென்று கொன்றிடுவேன்; வீமனொடுங் கலந்து வெம்போர் முற்றி மத்திரத்ததிபனை நீர் கொன்றிடுவீர்" என்று சொன்னார். திட்டத்துய்மன் பாண்டவ சேனையை நெருங்கி அணிவகுத்து நின்றான்.

தர்மனும் சல்லியனும்

மாயவன் சொன்னபடியே, கௌரவ சேனைக்கு அதிபதியாகிய மத்திரத்தான் தர்மபூபன்மேல் முடுகிவந்தான். வில்லை வளைத்து வெஞ்சாயகம் பூட்டிச் சிங்கம்போற் கர்ஜித்துக்கொண்டு, தம்மேல் முனைந்துவரும் மத்திரபூபதியைக் கண்ட தர்மராஜன் தமது தடக்கையிற் பிடித்த வில்லை வளைத்துக் கடுமையான பகழிகளைத் தூவிக்கொண்டிருந்தார். இருவரும் தங்களிரண்டு சங்கங்களையும் ஊதிக்கொண்டு, விற்களை வளைத்துக் கணைபொழிந்து நெடுநேரம் முனைந்து போர் செய்

தார்கள்; ஆனாலும் ஒருவரை யொருவர் வெல்லாமலே இருந்துகொண்டிருந்தார்கள். பரஸ்பரம் எய்த வம்புகள் தங்கள்மேல் படாமலே வெகு நாழிகை போர்செய்து கொண்டிருந்தாலும், சல்லியன், மிகு கோபங்கொண்டு, வலிய கணைகளைப் பொழிந்து தர்மராஜனுடைய சாரதியைத் தலைதுமித்து, வில்லின் நாணினை யறுத்துக் குடையையும் தள்ளித் தருமனது மகுடத்தனையும் தள்ளிவிட்டான். தமையன் இங்ஙனம் பரிபவப்பட்டதை யுணர்ந்த, சிங்கக் கொடியனாகிய வீமன், கடுகிவந்து, மத்திரத்தானுடன் நின்று விற்போர் உடற்றினான். தம்பியும் சல்லியனும் நின்று போர்புரிதலைக் கண்டு, தர்மராஜன் சந்தோஷம் கொண்டிருந்தான். கண்ணன் சொன்னது உண்மையாக இருந்தது. வீமனும் சல்லியனும் ஒருவர்க்கொருவர் தக்க தக்க பாணங்களை யேவிப் பொருதுகொண்டிருக்கும்போது, மத்திரத்தானுடைய கைச் சரங்கட்கு மயங்கி, வீமன், தனது சித்திரத் தேரினின்றும் திடீரென்று குதித்துப் பூமியிற் கதையுடன் நின்றான். அக்கதையைக் கரகரவெனச் சுழற்றிப் பகைவனுடைய தேர் சாரதி சக்கரம் குதிரைகளை யழித்து, அவனைப் பூமியில் தள்ளினான். சல்லியன் கீழே குதித்து மிகக் கோபங்கொண்டு, கையில் ஒரு பெருந்தோமரம் வாங்கித் தனது பெருவலி கொண்டு, வீமனது நெற்றியில் மோதி அடித்தான். வீமன் சிறிது தளர்ந்தான்.

இருவர் சேனைகளும் இருதிறத்தினும் நின்று முனைந்து போர்புரிந்து கொண்டிருந்தன. கர்ணன் குமாரர்களாகிய சித்திரசேனன் சூரியவர்மன் சித்திரகீர்த்தி என்னும் மூவரும் முச்சுடர்போல் வீரரில் வீரரான நகுலனோடு எதிர்த்துப் பெரும்போது போர்புரிந்து, நகுலனுக்கு ஆற்றாமல், அவ

னூற் கொல்லப்பட் டிறந்துபோனுர்கள். அந்தச் சமயம் நகுலனை வந்து சூழ்ந்துகொண்ட சகுனியும் மக்களிருவோரும், நகுலனுல் தாக்கப்பட்டுப் பின்னிடைந்து ஓடினுர்கள். மற்ருெரு முறைத் தருமராஜன் சல்லியனேடு எதிர்த்துநின்று பெரும்போருடற்றினுன். சல்லியனேடும் வந்து போர்புரிந்த கேதுதான் சுமித்திரன் முதலாக வுள்ளவரைக் கொன்று வீழ்த்தினுன் தருமராஜன்; சல்லியனுக்கு அதனுற் கோப மதிகரித்தது; தருமபூபன் மயங்கும்படியாகக் கணைகளைத் தூவிக்கொண்டிருந்தான்; மறுபடியும் தருமராஜனைச் சல்லியன் அடர்த்து நின்ற தன்மையைக் கண்ட வீமசேனன், ஒரு கணத்தில் கதையொடும் வந்து சல்லியன் எதிரே நின்ருன். சல்லியன், இப்போது வீமனுல் நாம் தோல்வி யடையப்படாதெனக் கருதி மத்திரத்தான், கல்மழைபோற் பாணங்களைக் கொட்டி வீமனது உருவத்தை யெல்லாம் மறைத்துவிட்டான். வீமனும் தக்க தக்க பாணங்களை யேவி யவற்றை யெல்லாம் கண்டித்துக்கொண் டிருந்தான்; இங்ஙனம் இவ்விருவர்க்கும் நடந்த போரை யெடுத்தியம்பல் தேவர்க்கும் எளிதாகமாட்டாது. இந்தச் சமயம் வீமனுக்குத் துணையாக நகுல சகாதேவர்களும் சாத்தகியும் வந்து சேர்ந்தார்கள். ஆக எல்லோருமாகச் சல்லியனை வளைத்துக்கொண்டு போர்புரிந்தார்கள். சல்லியன் வெகுண்டு தக்க கணைகளை யேவித் துணையாக வந்த நகுலசகாதேவர்களைக் கலங்கிடச் செய்தான். தம்பிமார் தளர்ந்தது கண்டு சினங்கொண்ட வீமன், தொடுகணைகள் பலவாய்த் தூவிச் சல்லியனுடைய தேர்க்கொடி குதிரைப்பாகன், இவை சிந்தும்படியாக வீசிச் செருக்களத்திடைத் தள்ளினுன். சல்லியனும் அங்ஙனமே வீமன் முதலானவருடைய தேர்குதிரைகளை யறுத்துத் தள்ளினுன்: இதனைப்போலவே துருபதன் முதலாக வுள்ளவர்களும்

சோமகன் முதலாக வுள்ளவர்களும் எதிரிகள் மன்னவர்களுடன் பொருது பெரும்போர் புரிந்துகொண்டிருந்தார்கள்.

அசுவத்தாமன் அர்ச்சுனனுக்கு அழிதல்

சிலே விஜயனும் முனி குமாரனும் மற்றொரு புறத்துப் போர்செய்துகொண்டிருந்தார்கள். இற்றைநாள்தான் அசுவத்தாமனுக்கு இறுதியான நாளாகுமென்று, அர்ச்சுனன் ஒரு பத்துக் கணைகளைத் தொடுத்து, முனி குமாரன்மே லெய்திட, அவனும் அக்கணைகளைக்கொண்டே அவற்றை யறுத்தெரிந்திட்டு, வேறு பல கணைகளால், விஜயனது தேர் முதலியவற்றை யழித்திட்டான். உடனே, சாரதியும் தானுமாக வேறு தேரின்மீ தேறிக்கொண்டு பார்த்தன், வேகமும் கோபமும் கொண்டு பன்னூறு கணைகள் தூவி அசுவத்தாமனை வில் முதலியன ஒடித்திட்டு வெற்றி காட்டி நின்றனன்; அசுவத்தாமன் ஆண்மை யழிந்துபோயினனென்று, பெருஞ் சேனையோர் ஆர்த்து நின்றனர். உடனே, வேறு தேருமற்று வில்லுமற்று, ஒரு இருப்புலக்கையைக் கையிலெடுத்தோடி வந்து, அருகில் நின்று அர்ச்சுனன் மேல் வீசினன்; அர்ச்சுனன் அதனைப் பல பாணங்களால் தூள்படச் செய்திட்டான். உலக்கை பொடியானது கண்டு, அசுவத்தாமன், ஒரு தண்டத்தைக் கையிலேந்தி நின்றான். அதனை அர்ச்சுனன் தோளுக்குக் குறி பார்த்து எறிந்தான்; அந்தத் தண்டத்தையும் துண்டித்துப் போம்படியாகக் கணை கொண்டு அர்ச்சுனன் தாக்கினன். இங்ஙனம் விட்ட விட்ட கணைகளும் எறிந்த எறிந்த தண்டம் தோமரங்களும் அர்ச்சுனனது கணைகளாற் சிதறினமை கண்டு அசுவத்தாமன்; இந்தக் கண்ணன் சாரத்யம் செய்து கொண்டிருக்

கும் வரையில் அர்ச்சுனனெடு பொருதிடல் யார்க்கும் எளிய தாகமாட்டாது! என்றுபுறமுதுகு காட்டி யோடி விட்டான்.

சல்லியன் வெம் போர்.

மருமகன் விஜயனுக்குப் புறம் காட்டி யோடும் தன்மை கண்டு, கிருபாச்சாரியார் வந்து சேர்ந்தார்; அவரையும் முதுகிடும்படியாகச் செய்து, பின்னர் வந்த மன்னர்களையும் புறங் காட்டிடச் செய்து, விஜயன், தமையனும் சல்லியனும் பொருது கொண்டிருக்கும் இடம்போய்ச் சேர்ந்தான். அப்போது, சல்லியன், வீமனது கைத்தண்டினுல், தனது தேர் குதிரை சாரதிகள் அற்றுப்போய்த் திகைத்துக் கொண்டிருப் பது கண்டு அரவக்கொடியோன், சல்லியனுக்குத் துணையாக வந்து கொண்டிருக்கும் சமயமாக இருந்தது; இப்போது, திட்டத் துய்மன் விஜயன் நகுல சாதேவர்கள் சாத்தகி வீமன் தருமன் முதலியோர் ஒரு புறமும் சல்லியன் துரியோதன னிருவரும் பொருதுகொண்டிருந்தார்கள். சல்லியன், மறுபடி யும் உற்சாகம்கொண்டு சாத்தகியின் தேர் முதலியவற்றை யழித்தும், நகுலனை மருமகனென்று பாராமல் சில வாளிகள் எறிந்து போரழித்தும் தனது வீரம் காட்டி நின்ருன். ஒரு கடுங்கணையினுல் மற்ருெரு மருமகன் சகாதேவனையும் ஓட்டி விட்டான். இரண்டு பாணங்களினுல் வீமனது தோள்களைத் துளைத்திட்டு, மூன்று பாணங்களினுல் அர்ச்சுனனது புஜமும் மார்பும் புண்செய்து, நான்கு அம்புகளால் தருமனைக் கலங் கும்படியாகச் செய்திட்டான். தமையன் தருமராஜனது முகம், சல்லியன் பாணங்களால் ரத்தமுகமாகிச் சூரிய மண்ட லம்போ லிருப்பது கண்ட வீமன், கைக்கதையைக்கொண்டு வீசிச் சல்லியனது மகுடம் சிதறி விழும்படியாக அடித்திட் டான்.

வீமனும் துரியனும்

வீமனுல், சல்லியன் மணிமகுடம் தெறித்துத் தள்ளப் பட்டு மயங்கி மாழ்கி நிற்றலைக் கண்ட துரியோதனன், கடுங் கோபத்துடன் வீமனிடம் ஓடி நெருங்கி நின்றான். வீமன் மேல் ஒரு வலிய கணையை விசையுடன் ஏவினான். இவனது வேகத்தையும் கோபத்தையும் கண்ட வீமன் வெறுப்பும் நகைப்பும் கொண்டு, பல பாணங்கள் தூவி யவன் தொடுத்த கணையை அறுத்ததல்லாமல், அவன் மார்பிலும் புண்களை யுண்டாக்கிவிட்டான். அவனும் அக்கணைகளையே ஏவி, வீமனையும் துன்பம் கண்டான். இருவரும் வெகு தீரங் கொண்டு போர்புரிந்தார்கள். இப்போரில், இருவரும் தோற்று வில்லற்றுச் சாரதி யழிந்துக் குதிரைகள் மாண்டு, மாறிமாறித் தேர்கள் பல ஏறினதுகண்டு, ரணசூரனுகிய வீமன், மனம் தாங்காமல் நாணமுந் தலைக் கேறினபடியால், தேர்ந்து தெளிந்து ஒரு முாணுடைய வேலை யெடுத்துத் துரியன் மார் பினைக் குறிவைத்து விசையுடன் எறிந்து நின்றான்; அவ் வேல், துரியோதனன் விட்ட பகழிகளை யெல்லாம் அழித் திட்டு, எறிந்த குறிப்படியே, அவன் மார்பிலும் பட்டுப் போயது; அதனுல் அவன் முன்னர் மூர்ச்சையாகிப் பின் னர்த் தேறி முதுகு காட்டி யோடிவிட்டான். வீமன் உடனே தமையன் தர்மபூபன் இருக்குமிடம்போய்ச் சேர்ந் தான்.

சல்லியன் மாய்ந்து வீழல்.

அங்கு, கிருபாசாரியர் சாலுவன் சகுனி கிருதவன்மன் முதலானவர்கள் குதிரையிலும் யானையிலும் தேரிலுமாக நின்று தம்மை நான்கு படைகளும் சூழ்ந்திருக்கத் தரும

னிடம் போர்செய்துகொண்டிருந்தார்கள். தருமராஜனுக்குத் துணையாக வில்விஜயனும் நகுல சகாதேவர்களும் கண்ணற் கிளைய சாத்தகியும் கூடியிருந்தார்கள். இவர்களுடன் வீம சேனனும் போய்ச் சேர்ந்துகொண்டான். இருதிறத்தின ருக்கும் நடந்துகொண்டிருந்த போரானது, தானவ வானவர் யுத்தமோ என்னும்படி யிருந்தது. வீமன் அர்ச்சுனன் நகுல சகாதேவர்கள் சாத்தகி முதலியோர் கிருபாசாரியர் முதலாயி னோரை முறியடித்துக் கொண்டிருக்கும் அளவில், சல்லியன் புதுவலி கொண்டு, எதிர்நின்ற திட்டத்துய்மனை விலக்கிக் கொண்டு, தர்மனுதியர் இருக்குமிடந் தோன்றி நின்ருன். தர்மனுதியர் மாமனென்றும் பாராமல், தம்மொடு பொருது இளைத்து நின்ற கிருபர் முதலானோரை விடுத்துத் தைரியத் துடன் எதிர்த்துவந்த சல்லியனைப் பார்த்து, "வாரும்; வாரு மென்றழைத்துக்கொண்டே எதிரேபோய் வில்லை வளைத்து அம்புகளை யெய்து நின்றார்கள். மத்திரராஜனுகிய அச்சல்லிய னே, புது வலிகொண்டவனுகையாலும், முடிவில் படர்ந் தெரிந் தவியும் விளக்குப்போன்றவ னுதலானும், இவர்க ளெறிந்த சாயகங்களை யெல்லாம் கவளீகரித்துத் தானே முன்னின்று உடற்றும் தக்க மந்திரக் கணையொன்றை யேவிப் போர்க்கள வீரனெனும்படி நின்ருன். சுற்றுமிருக்கும் துணை வரையும் வீரரையும் மதியாமல் தர்மபூபனையே குறிக்கொண்டு வந்திட்டவனுதலால், வேறு சில பாணங்கள் தொடுத்துத் தர்மபூபன் எறிவந்த தேரினை யுருட்டிச் சாரதியைத் தள்ளிக் கொடியை யறுத்துக், கைவில்லினையும் துணித்திட்டுப் "பாண் டவர் குலபதியே! பாருலகுக்கோரரசே!! பார்த்தனையா சல் லியன் சூரத்தனத்தை!!!" என வீரவாசகம் கூறி நின்ருன். தர்மபூபனுக்கு இதுவரையில் தோன்ருத குலமானமும் நாண மும் தலையெடுத்துக் கோபத்தை யுண்டாக்கிவிட்டன; ஆகை

யால், வேறு ஒரு வலிய தேரின்மீதேறிக்கொண்டு, அருமை வில்லொன்றைக் கையிலேந்திக்கொண்டு, சிறிது நேரம் அவனோடும் வலிய போர்செய்து, உக்ர கோபத்தைப் பெருக்கிக்கொண்டு, அந்த மத்திரராஜனைப் பார்த்து, "சல்லிய மன்ன! மாமனெனும் உறவு ஒருவகையா யிருக்குமாயினும், போர்முகத்தினையும் உன் துணைமுகத்தினையும் ஒருங்கு கலந்து யோசித்து, உன்னை யிக்களத்தினின்றும் இப்பூமியினின்றும் ஒழித்திடக் கருதியே, இதோ-இந்த சக்தியை உன் தலைக்கு-உன் உயிருக்கு ஒரு லக்ஷ்யம் வைத்து எறிகின்றேன்; இதோ-எறிந்துவிட்டேன்; வல்லையாகில் உன்னைக் காத்துக்கொள்; இதுதான் உன்மேலெய்யும் முடிவான படையாகு"மென்று ஒரு மந்திர சக்தி பொருந்திய உயர்ந்த சக்தியையெடுத்துத் தன் பகைவனுக்கு உரிய துணைவனான-எதிரியின் போர்க்கட்டிடத்துக்கோர் உறுதித் தூணாகிய மத்திரராஜனும் சல்லியன் மார்பைக் குறிவைத்து எறிந்துவிட்டான்.

கடும்போர்.

ஸ்ரீராமனது பாணம்போலத் தொடுத்து எடுத்த சக்தியானது தவறிடாமல் மத்திர ராஜனுடைய மார்பிற் பாய்ந்து, உடன் உயிரைக் கவர்ந்திடலும், சல்லியன் மாணமுடிவின் பேச்சும் பேச முடியாதவனாகிப் பட்டு வீழ்ந்தொழிந்தான். கண்காண இப்பாவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பாம்புக்கொடியோன் படைகள் முதுகிட்டு ஓடிப்போயின. சந்திரனைக்கண்ட பெருங்கடலைப்போலத் தருமராஜன் படைகள் ஆர்ப்பரித்துக் களித்துக் கூத்தாடுதலையும், தனது சேனை நடுங்கியோடுதலையும் துரியோதனன் கண்டு, கடுங்கோபமும் பெருந்துக்கமுங்கொண்டு, தனது படைகளையும் துணைவரையும் வீரரையும் தம்பியரையும் முறுக்கிப் பார்த்தான். அச்

சேனுவீரர் யாவரும் அவனது உள்ளக்குறிப்பை யுணர்ந்து கொண்டு, பின்னிட்ட படைகளையும் திருப்பிமுன்னிட்டுக் கொண்டு, மத்திர மன்னனைக்கொன்று வீழ்த்திய தருமன் மேல் முடுகியோடினர்கள். துரியோதனனும் மாமனும் தம்பியரும் தன்னைச்சூழ்ந்துவரத் தர்மராஜனை நோக்கிச்சென்று போர்முனைந்து நின்றான். இங்ஙனம் வருதல்கண்ட தருமனுதியர், எதிரிகளைப் படைமுறுக்கிக் கணையேவி நின்றார்கள். தருமனுக்குத் துணையாகப் பீமனும் தம்பியரும் சேனைத் தலைவரும் சோமகர் முதலியோரும் நின்று பகைவர் மடக்கிய வீரச்செயல் எழுதி முடிவதொன்றன்று. அத்தனை வீரத்துடன் தருமனது சேனுவீரர்கள் பகைவரது சேனுவீரர்களைக் கொன்று வீழ்த்திக்கொண் டிருந்தார்கள். தன்தமையன் தருமராஜனை இந்தப் புன்மையோனுடைய தம்பிகள்மேல் வந்து பொருவது அழகாகுமோ என நினைத்து, வீமன், துரியோதனன் தம்பிமார்களாகிய எழுவருடனும் கடும்போர் செய்து, முடிவில்,ஜயகந்தன் ஜயவர்மன் ஜய்சேனன் சேனுபிந்து,ஜயத்திரதன் பிந்துவிக்கிரமன் என்னும் அந்த எழுதம்பிமார்களையும் கொன்று வானுடேற்றிவிட்டான். மன்னர் மன்னன் தம்பியர்கள் எழுபேரும் மாண்டார்கள் என்னும் பேரொலி எங்கும் பரவிற்று. கள்ளநெஞ்சக் காவலன் கேட்டான்; கலங்கிச் சோர்ந்துபோனுன். தம்பியர்மேல் அன்பு எவர்க்கும் மாற்றலாமோ? எழு தம்பியரும் இறந்தனரே யென்று வருந்தி நிற்கும் மன்னனது நிலைமை கண்ட கிருதவன்மன், சதுரங்க சேனையோடும், வீமனை வென்றிடுமாறு மேல்வந்து பொருதான். மற்றும் மன்னன் தம்பிமார் ஐந்துபேரும் கூடிவந்து வீமனேடும் போர்புரிந்தார்கள். வீமன் கிருதவன்மனை யொரு பொருளாகக் கருதிடாமல், எதிர்த்துவந்த பகைவன் தம்பியர் ஐந்துபேரையும் குறிவைத்து ஐந்து பாணங்களை யேவிவிட்

டான். சித்திரபாகு பலசேனன் ஜயசூரன் சித்திரன் உத்தமபிந்து என்னும் ஐந்துபேரும் வீமனுடன் கோபமும் வேகமும் வீரமும் கொண்டு போர்புரிந்தார்களாயினும் வெகு விரைவில், முன் எழுவர் சென்ற இடமாகிய பொன்னுலகத்துக்கே போய்விட்டார்கள். மன்னன் தம்பியருள் மற்றும் ஐவரும், வீமன் கையால் மாண்டுபோனார்கள், என்னும் பேரொலியும் உடனே படைக்களமெங்கும் பரவியது.

இங்ஙனம் பன்னிருவர் தம்பிமார்கள், அடுத்தடுத்து வீமன் கையால் ஒரு கணத்தினில் ஆவி துறந்தொழிந்தார்கள் என்னும் செய்தி காதிற் கேட்டவுடன், கோபம்கொண்ட துரியோதனன், வீமனை யெதிர்த்தோடிவந்து போர் செய்து வில்விஜயம் காட்டி நின்றான். அப்போது சகாதேவன் எதிர்ப்பட்டுத் துரியனை மடக்கியிட, அவன் தக்க கணைகளை யேவிச் சகாதேவனுடைய கைவில்லை யொடித்திட்டான்; சகாதேவன் கோபம்கொண்டு, பத்துக் கணைகளைத் தெரிந்தேவித் துரியோதனனுடைய கரங்களிலும் மார்பிலும் முகத்திலும் சேரும்படி செய்து, அங்கங்களைப் புண்ணாக்கி யாயிரங் கண்ணனாகிய இந்திரன்போ லாக்கிவிட்டான். துரியோதனன் களைத்தது கண்டு, முன்னர்க் களைத்துப்போன வீரர்கள், அக்களைநீங்கி முனைந்துவந்து சகாதேவன் முதலானோரோடு எதிர்த்து நின்று ரணக்களத்தை மற்றும் பிணக்களமாக்கிவிட்டார்கள். இதனை நோக்கிக்கொண்டிருந்த சகுனியும் அவன் தம்பியும் மற்ற மன்னருடனும் வந்து சகாதேவனைச் சூழ்ந்துகொண்டார்கள்; அப்போது அதனைக்கண்ட வீமசேனன், தம்பிக்குத் துணையாக வந்து, சகுனி முதலியோரைப் புறமுதுகிட்டோடும்படியாகச் செய்திட்டான். அந்தச் சேனைகள் அழிந்தும் ஒழிந்தும் ஒருதலைக்கண்ட, மிகுந்துள்ள

மன்னன் தம்பியர்களில் ஒன்பதுபேர் வீமன்மேல் முடுகிவந் தார்கள். உத்தமன் உதயபானு கீர்த்தி பலவர்மன் பலபீமன் பிரபலதானன் விக்ரபாகு சுசீலன் சீலன் என்னும் ஒன்பது பேரும், வீமனெடும் கடும்போர் புரிந்து மாண்டு போனார்கள்; இதனைக் கண்டு, மன்னன் தம்பிகள் என்று மிகுந்திருந்தா ரீரொருவரும் வந்து பொருது மாண்டுபோனார்கள். இங்ஙனம் தன் தம்பியர் தொண்ணூற்றேன்பதின்மரும் தன் பொருட்டாகப் போர்புகுந்து வீமன்கையால் மடிந்தொழிந்து வானுலகம்போன செயல் நினைந்து நினைந்து கைசோர மெய் சோரக் கண்ணீர்சோர அழுது மாய்ந்த மறமன்னன், துரியோதனன், "ஐயோ! எனக்கு உறுதி உரைத்தவர்களுடைய முறை கேளாமல் என் செய்தேன்? என் செய்தேன்? எப் பொருளும் இழந்தேனே" எனக் கதறிக்கொண்டிருக்கும் ஜீவனாகிய துரியோதனனும் பெரும்பாவிக்கு, ஆரவண சக்தி போன்ற மாமனாகிய சகுனி, அருகு வந்து ஒரு கோடி மாற் றங்களால் உறுதி கூறினான்.

சகுனி துரியன் துயராற்றுதல்

"மன்னர் மன்ன! 'பிறந்ததுமுதல் இதுவரையில் நிழல் போற் கூடியிருந்த தம்பியரை யிழந்தேனே' யென்று துக் கிக்கின்றாயே! நீ வீழ்ந்து வீழ்ந்து அழுது ஆற்றினாலும், மாண்டவர் திருப்பி வருவாரோ இம்மானிலத்தில் இந்தப் போரில் மடிந்து விழாத பூபாலர் பலர் உனக்குத் துணை யாக இருந்து, உனது வெற்றியையே கோரி வீரத்துடன் போர்செய்துக்கொண்டிருக்கும்போது, ஒரு யுத்த வீரனாகிய சுத்த வீரன் நீ, போரிற் பொருது மாண்டு வீரசொர்க்க மடைந்திருக்கும் உன் தம்பியர்கட்காக கண்ணில் நீர் சோர வாய்விட்டுக் கதறிக்கொண்டிருப்பது ஆண்மையும் அழகு



மாகமாட்டாது. வீரருள் வீரர்களாகிய கிருதவன்மன், நால் வேத முணர்ந்த கிருபாசாரியர், வில்வேத ஆசிரியன் மகன் அசுவத்தாமன் ஆகிய சுத்த வீரர்களொடும் சென்று, முரசக் கொடியனுடியரை முறியடித்துப் போரில் வெற்றிகொள்வதை முன்னிட்டு, இங்ஙனம் ஏன் கலங்கிக்கொண்டிருக்கிறாய்? எழுந்திரு! சென்று போர்செய்து வென்றுவருவோம்; அன்றி, நின்று மலைந்து அவன் படைகளைக்கொண்டு நாம் மடிவோம்'' என்று, எப்போதும் புத்திகூறும் மாமனே இன்றும் நின்று புத்திகூறித் துபரை யாற்றினன். சகுனி மாமனையே தன் மனதிற்குரிய ஆலோசனைக்காரனுகக் கொண்டிருந்தவனுதலால், துரியோதனன் அவனது, புத்தியைக் கேட்டலாலும், விதிவலிந்து நின்று உயிரை வேட்டலாலும், மன்னர் மன்னன் அழுகையை விட்டெழுந்து, நின்றுள்ள படைகளையும் அழைத்துக்கொண்டு, விரைந்துபோய் வீமனை யெதிர்த்து நின்று மோதினன். வீமன் புன்னகை பூத்து எதிர்த்து வந்த தம்பியாற்ற தனியனுன துரியோதனனை, யவன் மாமன் அழிந்தொழியும் வரை யவனியில் வைத்திருப்பதற் கெண்ணி, துரியோதனன் ஏறி வந்த தேர் சாரதி குதிரைகளை மாத்திரம் அழித்து அவனைத் தாணியானுக்கிப் பின், சகுனியை யழைத்து வந்திருக்கும் சேனைகளையழித்து வானேற்றிச் சகுனியையும் உடற்றினன். சகுனி வலியழிந்தானுயினும், வலியழிந்திருந்த மருமகனுக்கு மறுபடியும் பல நீதியும் வீரமுமான உரைகள் கூறிப் பின்னும் பல சேனைகளுடன் மீண்டு வந்துகொண்டிருந்தான்; அப்போது சகாதேவன், சகுனியைத் தடுத்து எதிர்த்து நின்று, பாணங்களைத் தொடுக்கக் கூட விருந்த மருகன் துரியோதனன், சகாதேவனுடன் பொருது நின்றுன்.

சகுனி மாமன் அழிந்துபடுதல்

தான், சபைமுன் சொன்ன சபதம் பழுதுபடாமல், நிறைவேறுதற்பொருட்டுச் சகுனியை முடித்து வெற்றி கொண்டு சபதத்தை நிறைவேற்றும் காலம் இன்றுதான்; அதிலும் இப்போதுதான், என்பதை யுன்னிச் சகாதேவன், அம்மாயச் சூதாடு சகுனி மாமன் பொரவந்த போது, மருகன் தடுத்து நின்றனனுதலில், அதுபொறுமல், தர்மன் தன் கடைத் தம்பியாகிய சகாதேவன் எதிர்த்து நின்ற துரியோதனன்பேரிற் பல கணைகள் தூவி யவனை மயங்கும்படியாகச் செய்து, சகுனியைப் பார்த்தான். அப்போது, துரியன் மயக்கந் தணிந்து சகாதேவன் மேற் பின்னும் காய்ந்தெழும்போது, வீமன் இடையே புகுந்து, துரியோதனனைத் தடுத்து வாளிகள் பல தூவிக் காவலனை முதுகிட் டோடும்படியாகச் செய்திட்டான். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த அசுவத்தாமன், ஒரு வேலை யெடுத்து வீமன்மே லேவ, அதனை வீமன் தன் கையாலேந்தி யொடித் தெறிந்துவிட்டு, இந்த அசுவத்தாமனை யுயிரொழித்திட வேண்டுமென்றெண்ணி, ஏழு கணைகளைத் தெரிந்தெடுத்துத் தாமன் மார்பினைக் குறிபார்த்து எய்துவிட்டான்; அசுவத் தாமன் மார்பினை யவ்வாளிகள் சென்று பாய்ந்து துளைத்து வலியொழித்தனவாயினும், தாமன் சிரஞ்சீவிகளில் ஒருவனுனதால், உயிரழிந்துபடாமல் வலியழிந்து தேரிற் சாய்ந்து விட்டான். மருகன் சாய்ந்ததை யுணர்ந்த மாமனுகிய கிருபாசாரியார், வந்து வீமனுடன் பொருது முதுகிட்டோடிப் போயினர். இங்ஙனம் தனக்குத் துணையாகவந்த இருவரும் தோற்றுப்போயிடவே, மன்னர் மன்னன் களைத்துத் தன் மாமனைக் காக்கமுடியாதவனுக இருந்தான். சகுனி மாத்திரம், விதி வலிதானபடியால், அதன் ஏவுதலினுல், முதுகிட்டு

ஓடிவிடாமல், வீரம் கொண்டு சகாதேவனுடன் உக்ரமாகப் போர்செய்துகொண்டிருந்தான். நெடுநாழிகை யிங்ஙனம் போர் நிகழ்ந்துகொண்டிருந்தபோது, சாதேவன், சகுனி மார் பகத்தில் பாய்ந்து அவனது ஆவியைக் கவர்ந்து போம் படியானதொரு வேலாயுதத்தை—மாயன் கொடுத்த வேலா யுதத்தை யவன் மார்பினைக் குறிவைத் தெறிந்துவிட்டான். வெய்ய வேல் தனது மார்பில் பாய்ந்தபோது, குத்திரங் கொண்டு குலத்தைக் கெடுத்த மாபாவியான—மாயச் சூதாடு விரகுடைய சகுனி மாமன், இதயம்பிளந்து கண் சுழன்று தலையாடி வாய்குழறி "ஐயோ முடிவில் நானும் இறந்து பட்டொழிந்தேனே" என்று தடுமாற்றக் குரலுடன் உயிர்ப்படங்கித் தேரிற் சாய்ந்து விட்டான். "மாமாயச் சூதாடி மாபாரத மாக்குவித்த மாமன் சகுனியும் மாண்டு போனான்" என்னும் வார்த்தை யெங்கும் சித்திரம் எழுதப் பட்டதுபோல். யார்க்கும் தெரியலாயிற்று. பார் முழு வதும் கொள்வதற்கு ஆசைப்பட்டுத் தம்பியரையும் தனை யரையும் பாட்டனையும் பந்துக்களையும் ஆசிரியரையும் அனை வரையும் இழந்து பறி கொடுத்தவனான அரவக்கொடியோன், கேட்டு மாழ்கி, ஆவி நீங்கிய உடல்போ லாகிவிட்டான். குதி ரைப்படை யானைப்படை யிரதப்படையாகிய நீண்ட பெருஞ் சேனையெல்லா மழிந்தும் யாதும் பலன் கைவரப் பெறாதவ னாகியும், கண் கண்டும் ஏதும் காணப் பெறாதவனாகியும் நின்று, நடுக்கடலில் நாவா யிழந்த மாலுமிகளின் கதியை யடைந்து திசைகாணாது துக்கித்தான்.

துரியன், அழிந்தவர் யாரும் மீள்வதற்குரிய அருந்தவம் செய்தல்.

துக்கத்தில் ஆழ்ந்திருந்த துரியோதனன், முடிவில் ஒரு ஆலோசனைக்கு வந்தான். தனக்கு ஒரு அரிய முனிவர் உப

தேசித்துக் கொடுத்திருக்கும் அரிய மந்திரவலியினுல், தவத்தைச் செய்து வலிபெறும் அந்த மந்த்ர விசேஷத்தால், இது வரையில் போர்க்களத்தில் மாண்டுள்ள தனது சேனு சமுத்திரத்தையும் தம்பியர் முதலிய உறவினர்களையும் உறுதுணையாக வந்துற்ற மன்னர்களையும் எழுப்பிக்கொண்டு, மீண்டும் போர்செய்து, பாண்டவர்களை யழித்து, வெற்றி பெற்று முடிசூடி உலகினெருகுடையாணை செலுத்தலாமெனத் தீர்மானித்தனன். அந்த மந்திர சக்தியைப் பிரமனிடமிருந்து அசுர குருவாகிய சுக்கிராசாரியர் பெற்றிருந்து, அவரிடமிருந்து கஜமுனிக்கு வாய்த்திருக்க, அதனை உபாயத்தினுல் சுர குருவாகிய வியாழபகவான் அடைந்திருந்தார். அந்த மறையை வியாழ பகவான் அருளப் பெற்றிருந்த அவாது சீடர் ஒருவரிடமிருந்து துரியோதனன் பெற்ருன். அதனைத் தற்போது உபயோகப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தனன். "இம்மந்திரத்தை, யாரும் அறியாமல் நான் சென்று, ஒரு குளத்தில் ஒரு ஆல மரத்தின் நிழலிடை நின்று உருவேற்றி ஜபம் செய்துத் தவமிருக்கிறேன்'' என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். இந்தத் தீர்மானத்தையும் வெளிவிட்டுச் சொல்லத் தனக்குரிய—அந்தரங்கப் பிரியர்களாகிய கர்ணன், துற்சாதனன், சகுனி மூவரும் மாண்டொழிந்தனர். நொதுமலாக இருந்த சல்லியன் முதலோருமில்லை; உள்ளவராகிய மூவருள் கிருபனும் அசுவத்தாமனும் பாண்டவர் பக்ஷபாதியென்று முன்னமே தீர்மானித்து வைத்திருக்கின்ருன். கிருதவன்மன் யாதவ குலத்தினன்; ஆதலால், அக்குலம் பாண்டவர் தம் மிக்க உறவுடைமை பற்றி அவனையும் சந்தேகித்துளான்; ஆகையினுல், தனது உள்ளக் கிடக்கையை யாரிடமும் சொல்ல முடியாமலே, சென்று, கங்கைக்குச் சமானமாகத் தேவர்கள் ஸ்நானம் செய்து புனிதராகக்

கூடியதொரு, தடாகத்தை யடைந்து, ஸ்நானதிகள் செய்து, அதிலிருந்து கடுந்தவம் செய்திட ஆரம்பித்தான். தக்க ஆஸனத்திருந்து, பிராணாயாமம் செய்து வாயுவைக் கும் பித்து பஞ்சேந்திரிய வாஸனையை மாற்றி, மூலக்கனலை யெழுப்பி உள்ளே ஞானதீபத்தை யேற்றிப், பன்னாளும் யோகம் பயின்று தேறினர். தமைப் போலவே, மனதை யே காக்ரப்படுத்தி யிதயத்தில் தனது குருவைத் தாரணைசெய்து, அவர் உபதேசித்த அந்த மந்திரத்தை யுருவேற்றித் தியான ஸமாதியி லிருந்தான். இருதயங் கலங்காமல் இவன் இப்படி யோகம் செய்துக்கொண்டிருக்கும் தன்மையை இம்மூவரா வது அவ்வைவராவது நெடுநேரம் அறிந்தாரலர். பின்னர் சம் பவித்ததென்ன என்பதைப் பார்ப்போம்.

கிருபன் முதலிய மூவரும் துரியனைத் தேடிக் கண்டு திரும்பியது.

துரியோதனன் தவத்துக்குச் சென்றபோது, மண்ட லீகர்களும், மத்தகஜம்போன்ற வளவனுக்கு முதுகுகாட்டி யோடினர்கள். மற்றொரு பக்கத்தில் போர் செய்துக்கொண் டிருந்த அசுவத்தாமனும் கிருபாசாரியனும் கிருதவன்மாவும் தமது போர்வலி தொலைந்து வரும்போது, சகுனி கொல்லப் பட்டு வீழ்ந்திருத்தலைக் கண்டு, அவன் ஆவிபோயினன் என்ப தோர்ந்து, கலக்கமடைந்து, மன்னர் மன்னனை துரியோத னனைத் தேடிப் பார்த்தார்கள்; காணக் கிடையாதவர்களாகி, "மூரக்கொடியோனுகிய தர்மனே, போரில் வெற்றிகொண் டான்" என்னும் எண்ணம் வந்து கோபம் மிஞ்சினர்களாயி னும், ஒன்றும் செய்த லியலாது, பகைவாது வீரத்தையும் மெச்சிக்கொண்டு, துரியோதனனைத் தேடிப் புறப்பட்டார் கள். எங்கும் காணாது தவித்துக்கொண் டிருந்தபோது, ஸஞ்

சய முனிவரைக் கண்டார்கள்; அவனை வணங்கி, "மன்னன் எங்குற்றான்; அறிந்து சொல்லுங்கள்;" என்று வினவினார்கள். அம்முனிவர், தனது யோகவுணர்வினால் அறிந்து, "மன்னர் மன்னனுக்கு இப்போது அழிவு நேர்ந்திடவில்லை; ஒரு மந்திரங்கொண்டு தவத்துக்குச் சென்றிருக்கின்றான்; அத்தவம் முற்றி வருவனாயின், இறந்த சேனைகளை யெழுப்பிக்கொண்டு மற்றும், பாண்டவரொடு போர் செய்திடுவன்" என்று உள்ளதை யுள்ளபடி சொன்னாராகி, மற்றும் கூறுகின்றார்; "என்னைத் துருபதேயனாதியர் கொலைசூழ நினைந்தார்கள்; ஆனால், என்னைக் கண்ணபிரான் காப்பாற்றி யருளினார்; யான் பிழைத்து வந்தேன்" என்றும் சொல்லி, "நடப்பெல்லாம் அறிவித்தற்குத் திருதாட்டிரானிடமும் காந்தாரியிடமும் போகின்றேன்" எனவும் கூறிச் சென்றார்.

ஸஞ்சயனிடம் உண்மை தெரிந்து, துரியனிருந்து தவஞ் செய்யும் ஓடை யிருப்பிடமும் தெரிந்து, மூவரும் அங்குச் சென்றார்கள். மூலக் கனலெழுப்பி மூச்சடக்கிப் பெருந்தவஞ் செய்து கொண்டிருக்கும், மன்னர் மன்னனையும் கண்டார்கள். கூவியழைத்தார்கள்; ஏதும் மறு மாற்றம் காணார்; அப்போது அசுவத்தாமன் கூறுகின்றான்:- "நண்ப! துரியோதன மன்ன!! என்ன கருதியிங்கே தனித்து வந்து தவங் கிடக்கின்றாய்? உனக்குப் போர்க்குத் துணைவந்த மன்னவரும் படைஞரும் போரில் மாண்டு விண்ணுலகேறினரென்று வருந்தித் தவங்கிடக்கின்றாயா? தனது வீரியத்தைத் தானெடுத்துச் சொல்லுதல் கூடாதென்பது உண்மையாயினும், எனது உள்ளக் கிடக்கையை யகம்பாவமின்றிக் கூறுகின்றேன்; நான் வில்லைக் கையிலெடுத்து உருத்து நின்றால் என்னுடன் பொருது நிற்பார் யாரிருக்கின்றார்கள்? ஆகையால், வில்லிற் கீர்த்திபெற்ற விஜயன் முதற்பாண்டவர் ஐவ

ரையும் என்பொரு கணைமாரியாலே கொன்றழித்து விடுகின்றேன்; இதனை யின்றே நீ காணலாம். சூரியன் அஸ்தமித்தற்கு முன்னல் யாவரையும் வீழ்த்திக் கடலாற் சூழப்பெற்ற இந்தப் பாரினை யுனக்கே சொந்தமாக அளித்திடாமற் போனுல், நான் வில்லாசிரியன் துரோணனுடைய குமாரனுகமாட்டேன்; வில்லென்று சொல்லப்படும் இந்த ஆயுதத்தையும் பின்னர்த் தீண்டவே மாட்டேன்; பரமசிவன் முதலிய தேவச்ரேஷ்டர்கள் அளித்துள்ள பாணங்களும் பொய்த்துப் போய்; அவ்வவற்றின் மந்திரங்களும் பொய்த்துப் போகட்டும்; மோதித் தாக்கிடும் போரில் வென்று பகைவரை முடிதொலைத்தல்; அன்றிப் பகைவரது கணைகள் மார்பிலேறப் போர்க்களத்தில் வான் கண்டு வீழ்ந்து விண்ணுலகேறல்; இவைதாம் மன்னவர்க்கு உறுதியாவன; இவை விடுத்து, இங்ஙனம் யாவரையுமிழந்து தனித்து வந்து தவம் புரிந்திடல், நின்போலும் மன்னவர் தமக் கழகாகுமோ? இதுவரையிற் பூண்ட புகழெலாம் போய்விடாதோ? நான் பாண்டவரைவரையும் அவரது கிளைகளோடும் துணைவரோடும் களத்திடைக் கொன்று வென்று நினக்கு நின் தனியரசைத் தந்து முடிசூடியபின்னர், இவ்வாறு நின்னுசிரியன் கொடுத்த மறை கொண்டு தவஞ்செய்து இறந்த தமர்களையும் தம்பியரையும் தனயர்களையும் மற்றும் அழிந்து வீழ்ந்தவர்களையும் எழுப்பிக்கொண்டு, ஆட்சி புரிதல் மன்னவர் தருமமும் உனக்குப் புகழுமாகும், ஆகையால் இவ்வுறுதி கைக்கொண்டு, இத்தடத்தை யொழித்து மேலேறிவா'' என்று இன்னேரன்ன நியாயங்கள் பலவும் எடுத்துப் பேசினுன்.

பாண்டவர் துரியனைத் தேடிக்காணல்

இவ்வார்த்தைகள் ஒன்றிற்காயினும் காதுகொடாமல் மன்னர் மன்னன் தவமே குறியாக இருந்துவிட்டபடியால்,

அவனது வலிமையையும் உறுதியையும் மனத்திற்கொண்டு, அம்மூவரும் மீண்டுபோயினர். அங்குக் களத்திடையிருந்த பாண்டு மைந்தர் ஐவரும், பகைவர்த் துணைக்கூட்டத்தை யெல்லாம் அழித்துவிட்டு, இப்பெரும் "போரினை மூட்டி விட்ட அப்பொறுப்பிலா மன்னன் துரியனெங்கே?" யென்று தேட ஆரம்பித்தனர்; பாடியிலும் களத்திலும் மற்றும் பக்கங்களிலும் தேடியும் காணப்பெறாதவராகி அலைந்து திரியும் போது, ஆங்கு வந்த வேட்டுவர் சிலர், "புவி முழுதாண்ட வேந்தன், அத் துரியமன்னன், கையில் தண்டத்தொடும், அதோ அந்தப் பொய்கையில் தவஞ்செய்துகொண்டிருக்கின்றான்" என்று சொன்னார்கள். அச்சொல்லைக்கேட்ட ஐவரும் அச்சுதப் பெருந்தகையும் அப்பொய்கையை நாடித் தேடி வரும்போது, கண்ணபிரான் தமது பரந்த அறிவின் சக்தியினால், உண்மை யறிந்து, "துரியனது தவத்தையும் அதன் விளைவையும் அதன் வரலாற்றையும்" உற்றவர்க்கு எடுத்துச் சொன்னார். "அப்பொய்யன், அவ்வரிய தவத்தை முடித்திடின், போரில் இறந்த பகைஞரெல்லாம் எழுந்திடுவார்கள்" என்னும் உண்மையைக் கேட்ட பீமன் முதலியோர் வெகுண்டு, "அத்தவம் முடிதற்கு முன்னால், அவனை யழித்திடுவோம்" என்று அப்பொய்கை யிருக்குமிடத்திற்கு விரைந்து சென்றனர்; தவஞ் செய்யும் துரியோதனனைக் கண்டார்கள். வீமன் துரியோதனனைப் பார்த்துக் கூறுகிறான்:—

வீமன் துரியனை நிந்தித்துப் பேசல்

"முடியுடைக் குடிகேடா! மாசுணக் கொடியுடைய மாபாதகனே!! இஃதென்ன தவம்!!! உனக்கும் தவம் வேண்டியிருக்கின்றதோ ஒரு கேடு? கங்கையாள் மகனாகிய பீஷ்மன்முதல் காந்தாரகுலக்காலனாகிய மாயச்சகுனிவரையில் உள்ள அரசர்களும் உறவினர்களும் துணைவர்களுமாகியுள்ளார்,

சேனையுடன் பதினேரு அகெஷௌஹினி ஜனங்கள் மாண்டு போர்க்களத்தில் மாய்ந்தொழிந்து போனதன்பின், மாபெருந் தவஞ் செய்திடச் சங்கற்பித்திருந்தாய்போலும்! இவ்வுலகில் நிலை நின்ற பழியாக, நீ, நெஞ்சறிய எமக்குச் செய்துள்ளப் பெரும்பழியும் வஞ்சகமும் பொய்ம் மொழியும் மனுநீதி தவறியதும் மறந்துவிட்டாய் போலும்! இறந்தொழிந்த சேனையெல்லாம் எழுப்பிட நீ செய்யும் இப்பெருந் தவத்தை யிப்போரினை முடித்த பின்னர் வைத்துக் கொள்வையாயின், அஃது ஓர் பெருங் காரியமாகலாம்; அப்போது அது வீரமுமாகலாம். அது மாறி, நீ, இப்போது உன் கொடிய நெஞ்சுடன் இத்தவத்தினைச் செய்தாலும் உன்னுடைய கொடிய போர்மாறிப் போயிடுமோ ? ஒருகாலுமில்லை. உலகாளும் முடியுடைவேந்தர், போரிடையே முதுகுகொடுத்து ஓடிப்புக்கு ஒளிந்து தவஞ்செய்தல் உரிமையாமோ? ஓது புகழாமோ? பார் அரசர் கேட்டாலும் பழிப்பரன்றோ? களத்திற் போர் செய்து படியில் வீழ்ந்து படுவையாயின், உன்னை அரம்பையர் சூழ்ந்திருக்க அப்பொன்னுலகை யாள வைப்பேனிப் போதே; எழுந்திடுவாய்! வெளிப்படுவாய்! அடகெடுவாய்! போர்க்களந்தனில் தேங்கி நிற்கும் ரத்தச் சேற்றில் எத்தனை வீரர்களினுடைய முடித்தலைகள் தவஞ் செய்கின்றன; அவற்றைப்போல், வீராதி வீரனாகிய நீயும் செய்தல்விட்டு, இக்குளந்தனில் தவஞ் செய்தற்காக? வீரத்தனமாகாது; என் கோபமும் எங்கள் சபதமும் வீண் போகாமல், போர்க்களத்திடை உன்னொடும் பொருது உடற்றுதல் அல்லாமல், இக்குளத்திடை, நீ, தவஞ்செய்திட விடுவேனே? மேல் எறிப் போர்க் குதிரைமேலேறு, வா, யிப்போது; உடன் புறப்படு. கூட்டத்துடன் நின்று, குடித்துக் குளித்து மடித்துத் திரிந்து, கொடுமையும் பாவமுஞ் செய்து, தருமமும் நீதியும்

பாராது, பாரோரும் பந்துக்களும் நகை செய்திட, இப்பதி னேழுநாட் போரிலும், போர்முனையில் நின்று உயர்ந்த வீரரைப்போல், உறுதியுடன் அமர் செய்யாமல் ஒளிந்து நின்று, அகம்பவித்து வாழ்ந்தனையே! அந்த அகம்பாவம் இப்போது எங்கொழித்து ஒளிந்துபோயது? முகம் பாராமல் அகங்குறைந்து முகங் கவிழ்ந்து மூடன்போ லிருக்கின்றாய்! போரிடைப் பொறிபறக்கச் செருச்செய்யாமல், பொய்கையிடைத் தவஞ்செய்யப் புகுவாரோ முடியுடை வேந்தர்கள்? மூன்றுகுந் தனிக்கோல் செலுத்திய நின் கீர்த்தி இந்தப் பொய்கை யிடை மறைந்தொளிந்து தவஞ்செய்தால் மறைந்தொழிந்து போகாதோ? எழுந்திரு! கொழுந்தெரியும் எறிவேலைப் பிடித்திடு!! போர்க்களத்தில் உன் கொடுமை முதலிய எல்லாவற்றினொடும் உன் பெயரையும் உருவையும் வாழ்வையும் முடித்திடு!!! இல்லையாயின், அன்று அமரர் துயர்நீக்கி யகிலங் காக்க அவதரித்துஅவனியெல்லாம் இன்றளவும் இன்னும் பலகாலும் நீங்காத புகழ்நிறுத்திய ரகுகுல வீரசிகாமணியாகிய ஸ்ரீராமபிரான் தீக்கணையால் எரிந்தொழிந்த பெருங் கடல்போல் இப்பொய்கை நீருடன் நீயும் எரிந்து புகைந்திடுவாய்'' என்று சொன்னான்.

வீமன் சொல்லிய வீர வாசகங்களும் வசைகளும் வஞ்சினங்களும் கேட்கக் கேட்க மனம் கொதித்து, ஜபித்த மந்திர மறந்து, மானம்பொங்கி மேலேறிவந்தான். கருத்த மேகம் பெருத்த கடலினின் றெழுவதுபோல், தனது கறுத்த உள்ளம் வெளிக்காட்டிக் கயத்தினின்றும் கரை சேர்ந்தான். நெடுங் கரையேறி யங்குச் சூழ்ந்து நின்ற பாண்டவரைவரையும் பார்த்தசாரதியையும் நெடுக நோக்கி, "ஏ! வீரர்களே!! நீங்கள் தேர் முதலிய சேனையுடன் நின்றீர்கள்; யானொருவனே இத்தண்டுடனே தனி நின்றேன்; எப்படிப் போர் உடற்

றுதலாகும்? நீங்கள் ஐவரில் இப்போது என்னுடன் அமர் பொருத உரியார் யாவராவீர்?" என்று கேட்டான். அதற்குத் திரு நெடுமால் சொல்லுகின்றார்: "என்னைப் பள்ளத்தில்வீழ்த்தி அவஞ் செய்திடப் பார்த்தன் ப்ரதிபலனாக இப்பள்ளத்தில் வீழ்ந்தொளிந்து தவஞ்செய்யப் பார்த்திட்ட தாணிவேந்தே! பாம்பிற்கொடியானே!! பாம்புக்கொடியனே !!! உன்னுடன் போர்செய்து உன் உருவை மறைத்து உன் பெயரையும ஒழித் தற்கு வஞ்சினம் கூறிய பீமசேனனல்லாமல் வேறொருவர் வருவாருண்டோ ?

"இளம்பருவ முதலுனக்கும் இவனுக்கும்
வயிர்ப்பெண்ணில் எண்ணொணாதால்
உளம்புகல அரசவையில் வஞ்சினமும்
பலபடநின் றுரையாநின்றான்
களம்புகுது நின்னொழிந்த துணைவரையும்
தனதுதடங் கையாற் கொன்றான்
விளம்புவதோ வேறொருவர் நின்னுடன்போர்
மலைவரோ வேந்தர் வேந்தே!"

நீங்கள் இருவீரும் தனி நின்று போர் பொருது நம்மில் வல் லார்கள் வாகைசூடிப் புவிபெறுதல் வழக்காகும்" என்று சொன்னார்.

விதுரனும் பலராமனும் வந்துசேரல்

கண்ணபிரான் சொற்கேட்டுக் கறுக்கொண்ட உளத் தவனாகிய துரியன், வீமனை நோக்கி, "வில் முதலாகிய படை கொண்டோ அன்றித் தண்டென்னும் நின் படைகொண் டோ? எதனால் நீ என்னுடன் இப்போது பொர்செய்வாய்" என்று கேட்டான்; வீமன் சொல்கிறான்:—"வாய் வீரம் காட்டி நிற்கும் வயவேந்தே! நின் காத்தில் நீ ஏந்தி நின்றது நின் கதையாயின், யானும் என் கதைகொண்டே உன்னைப்

பொருதழிப்பேன்" என்றான். "எவ்விடத்து வீமனும் யானும் போர்புரிவது?" என்று துரியோதனன் கேட்டான். கண்ணபிரான் கூற நின்றார்; அப்போது, தீர்த்தயாத்திரை சென்றிருந்த விதுரரும் பலராமனும் வந்து தோன்றினார்கள்; எல்லோருமாக அவ்விருவரையும் அழைத்துவந்து உபசரித்தார்கள். அவர் பிரிந்து எகினநாள் முதல் இன்றளவும் நடந்தவெல்லாம் இவர் எடுத்துரைத்தார்; அவரும் தாங்கள் சென்றிருந்த நாடும் நதியும் காடும் குளமும் குறித்துச் சொன்னார்கள். பிறகு அவ்விருவர்க்கும், கண்ணபிரான், சென்ற பதினேழு நாட்களிலும் நடந்தேறிய பாரத யுத்தத்தைச் சொல்லி, அன்றைப்போரில் அதுவரையும் நடந்ததையும் விவரமாகச் சொன்னார்; அதனைக்கேட்ட பலராமன் மனம் நொந்து, "ஆஹா! துரியோதனனுக்கோ போரில் தோல்வி வருவது?" என்று மனங் கசிந்து, "இனி மேலே நடக்க வேண்டியதென்ன" என்று கண்ணபிரானை வினவி நின்றார்; "வீமனுக்கும் துரியனுக்கும் தண்டப்போர் நடத்துதற்குத் தக்க இடமெதுவென்பதனைக் கருதிப் போகின்றோம்; தாங்கள் ஓரிடம் சொல்லுங்கள்" என்று தன் அண்ணனைக் கண்ணன் கேட்டார்; கண்ணபிரானது மாயையினாற் பல சமயம் பலராமன் அவமானம் அடைந்து அநுபவித்தவர்; ஆகையினால், கண்ணனுக்குக் குறுக்காகத் தனது எண்ணத்தைக் குறித்திட நாணி, "கண்ணா! எல்லாம் நீயே தெரிந்தவனாகலின், நீயே ஓரிடத்தைக் குறித்திடுவாய்" என்று குறித்திடவே, கண்ணபிரான் கூறுகின்றார்:— "பரசுராமன் மனத்திற் கறுக்கொண்டு, மூவேழு தலைமுறையும் மன்னர்களைத் தலைகொய்து நரமேதஞ் செய்த இடமாகிய சமந்த பஞ்சகமாமிடமே, இவ்விருவோரது வைரத்துக்குரிய இடமாகும்" என்றுரைத்தார். அத்தடத்தினை நோக்கித் துரி

யோதனனையும் அழைத்துக்கொண்டு தமது சேனையுடன் பாண்டவ ரைவரும் கண்ணபிரானும் விதுர பலராமருடன் புறப்பட்டுப் போய்க்கொண் டிருக்கிறார்கள். அப்போது தர்ம ராஜன் பேசுகின்றார்.

தர்மராஜன் துரியனுக்குக் கூறல்.

“மன்னர் மன்ன! துரியோதன!! என் தம்பிகளுடன் யானும் உனக்குப் பணிவிடை செய்துகொண் டிருக்க, நீ முடிசூடி அரசாண்டிருக்கப் பிரியப்படுவையாயின், இப்போதே அதனைச் செய்திடுவோம்; உன் மனந் திருந்தி முன் செய்த பாவச் செயல்கட்கெல்லாம் பச்சாத்தாபந்தோன்றிப் பெரியோர் முன் மன்னிப்பும் செய்துகொள்ளப் பிரியப் படுவையோ ? என் வார்த்தை தப்பாது; நீ தம்பியரையும் துணைவரையும் மைந்தரையும் சேனைகளையும் இழந்து வருந்தியிருக்கின்றாய்! நான் தருகின்றேன். ராஜ்ஜியத்தை; நீ பெற்றுக்கொண் டரசாள்வாய்; எங்கள் கண்ணபிரான் சாட்சியாகக் கூறுகின்றேன். எங்கள் சபதம் தவறினாலும் தவறட்டும்: நீ திருந்தினால் அதுவே எமக்குப் போதுமானது” என்று சொன்னார். துரியோதனன் அந்த வார்த்தையைக் கேட்டு நாணமும் கோபமுங்கொண்டு, “என் உறவினரும் துணை மன்னரும் என் பொருட்டால் உயிரிழந்து களத்தினில் வீழ்ந்திருக்க, இத்துயர் எல்லாவற்றுக்கும் காரணனான நான், என் பகைவரது அருள் பெற்று வாழ்ந்திருக்கமாட்டேன்; என் அங்கம் எல்லாம் வேறுபட அம்பேற்று அடியேற்று இடியேற்று ஆறுபோ லிரத்தம்பாயச் செங்களத்தி லழிவதல்லால் வேறு நினைத்து நும்முடன் வருகின்றேன் என்றெண்ண வேண்டாம்; மார்பில் அடியேற்றுவான் காண மாண்டிடுவேன்; அல்லது வீமனுடன் வெற்றிகொண்டு உங்கள் கூட்டத்தாரொடு உங்களையும் அழித்துத் தவப்பேற்றால் இறந்து

பட்ட என் துணைவர் முதலோரையும் எழுப்பிக்கொண்டு ஆண்டிடுவேன்; இவ்விரண்டி லொன்றைச் செய்வதல்லால் வேறு யோசனை யெனக்கில்லை'' என்று சொன்னான். யாவரும் சமந்த பஞ்சகம் நாடிவிரைந்து சென்றார்கள். காளிந்தியைத் தாண்டிச் சமந்த பஞ்சகத்தை யடைந்தார்கள்; வீமனையும் துரியனையும் போர்க்கு மூட்டிவிட்டார்கள்.

துரியோதனன் அழிந்து வீழ்தல்.

"இரண்டு மலைகள் மனிதர் உருக்கொண்டு போர்புரிகின்றனவோ'' என்னும்படி இருவரும் மலைந்து பொருதார்கள்; காந்தாரி மகனை நோக்கிக் குந்திமகன் வீமன் இகழ்ந்து பேசிக்கொண்டே மோதித் தாக்கி இடிக்கின்றான்:—

"இடிப்பதும் இன்று இருகதையும் ; என் கதையால் இடியுண்டு
துடிப்பதும் இன்று உன்உடலம் ; உயிர் துறக்கம் குடியேற
முடிப்பதும் இன்று அழற்பிறந்தாள் முகில்ஓதி ; பொழிநீர்
குடிப்பதும் இன்று ஒருவேன் நின்குருதி நீர் குடித்தாலே"

நமது இரு கதையும் முடிவாக இடித்துக்கொள்வதும் இன்றைக்கே; உனது உடலம் எனது கதையால் இடியுண்டு துடிப்பதும் இன்றைக்கே; உன் உயிர் சொர்க்கம் புக, திரௌபதி தன் அவிழ்த்த கூந்தலை முடிப்பதும் இன்றைக்கே; நான் உனது ரத்தநீரைக் குடித்துப் பின் நன்னீர் குடிப்பதும் இன்றைக்கே'' என்று இடித்துச் சொல்லிடவே, துரியன் வெகுண்டு, "விடுபேச்சை; நிறுத்து நினது சொற்பொழிவை; எடு உன் கதையை'' என்று சொல்லி, இருவோரும் உடன்று அமர் செய்துகொண்டிருக்கிறார்கள். தூக்குவார்கள்; தாக்குவார்கள்; அடிப்பார்கள், இடிப்பார்கள்; பேசுவார்கள்; ஏசுவார்கள்; பிடிப்பார்கள்; கடிப்பார்கள்; நீள


மும் அகலமும் மிகுந்த அவ்விடத்தைச் சுற்றிச் சுழன்று பற்றிப் பழகி எற்றுவார்கள்; சுற்றுவார்கள்; கதையால் அடிப்பார்கள், உதையால் இடிப்பார்கள்; இங்ஙனம் ஒருவர்க் கொருவர் தோலாது மாறிமாறிப் போர்செய்யும் போதில், வஞ்சநெஞ்சனாகிய நஞ்சங்கொண்ட நாகக்கொடியன், வஞ்சச் செயலால் வீமனை வீழ்த்தக் கருதி, "வீமா! உன் உயிர் நிலை எங்கிருக்கின்றது? இயம்புவையோ?" என்னக் கேட்டான்; உள்ளமும் உரையும் செயலும் ஒன்றுந் தன்மையுடைய வீமன் துரியனை நோக்கி, "என் உயிர் நிலை என் சிரசில் இருக்கின்றது" என்று உண்மையை யுரைத்திட்டு, "உன் உயிர் நிலை எங்குள்ளது? துரியோதனா? சொல்!!" எனக் கேட்டனன்; பொய்யுடைப் பழக்கமுடையார்க்கு எவ்விடத்திலும் எவ்விஷயத்திலும் உண்மையை மறைத்துப் பேசலே வரும்; ஆதலால், அந்த வஞ்ச நெஞ்சன், "எனது உயிர் நிலையும் என் சிரத்தில்தானிருக்கின்றது" என்று பொய்யுரைத்தனன்; அதனால், வீமனுடைய அடிகட்குத் துரியன், மாழ்கிடாமலிருக்கத் துரியனுடைய கதை யிடிகட்கு வீமன், மயங்கி அடிக்கடி வீழ்ந்திடுவான்; இதனைக்கண்ட கண்ணன் உண்மையறிந்து, வீமனைக் காத்திட மனங்கொண்டு, அண்ணனது தளர்ச்சியைக் கண்டு வருந்தி நிற்கும் அர்ச்சுனற்கு அவ்வுண்மையை யுணர்த்தித் "துரியனுடைய உயிர் அவனது தொடையிலிருப்பதாக வீமனுக்கு உணர்த்துவாய்" என்று ஏவிவிட்டனர். இருவாது சம்பாஷணையையும் குறிப்பிற் கவனித்துக்கொண்டிருந்த வீமன், அர்ச்சுனனை நோக்கி, யவனது கண்கள் சைகையினால் உண்மை யுணர்ந்து, வீமன், தனது பெருவலிகொண்டு கைக்கதையினால், துரியனுடையத் தொடையினில் ஓங்கி யடித்திட்டான். துரியோதனன் யழிந்து, கதறிக்கொண்டு பூமியில் வீழ்ந்தனன்; அப்போது,

தனது வலது கையை முட்டி சேர்த்துத் துரியன் மார்பினில் ஓங்கிக் குத்தினன்; பின்னும் கோபம் அடங்காமல்,

"கதுப்பும் வாயும் நெரியக் கதாயுத
காத்தினன் கலக்கினன்
எதிர்த்த யானையை அடர்த்த கேசரியெனப்
பொன் மௌலியை யிருத்தினன்
உதைத்து மேலிரு பதத்தினல் அவன்
உரத்த வாகுவை ஒடித்தநீள்
விதத்தினல் இரு நிலத்தின்மீ துடல்
விதிர்த்து வீசினன் வியக்கவே."

கதுப்பும் வாயும் நெரிந்து போம்படியாகக் கலக்கி, மத யானையை யடர்த்து முறிக்கும் உக்ரசிங்கம்போல் வீமசேனன், அத்துரியனுடைய பொன் மௌலியைத் தனது இரண்டு கால்களிலும் உதைத்து, அவனது உரமுடைய கைகளை யொடித்து, உடலை விதிர்த்துப் பூமியில் வீசி யெறிந்திட்டான்; என்றாலும் பெருமூச்சுடன், துரியன், கண்ணனைப் பார்த்து, "குறிப்பினல் என் உயிர் நிலையை விஜயனைக் கொண்டு வீமனுக்குக் குறித்திட்டாய்; இஃது அறமாக மாட்டாது; கண்ணா!

"மலைத்த போர்தொறும் எனக்கு நீசெய்பிழை
மற்றுளோர் செய நினைப்பரோ
குலத்திலே யிழி குலத்த ரானவர்
குறிப்பி லாதிவை பிறக்குமோ
சலத்தினல் வினை யியற்று வார்முடி
தரித்த காவலரோ டொப்பரோ
நிலத்தில் வாழ்பவர் பெறக் கொடாமல்
இனிநினைத்த காரியம் முடித்தியே."



ஒவ்வொரு போரிலும் நீ எனக்கு இவ்வண்ணமே பிழை செய்திருக்கின்றாய்! இப்பிழைகளை மற்றவர் செய்யத் துணிய மாட்டார்கள்; இது குலத்தின் சிறுமையேயாகும்; நீ நினைத்த காரியம் முடித்திட்டாய்; இனி, இந்த ஐவர்க்கே இந்த நிலத்தில் வாழ்வை யளித்திடுவாய்" என்று சொல்லி மறுபடியும் எழுந்திருக்கப் பார்த்தபோது, வீமன், அவனது மார்பில் தன் காலை யூன்றி மிதித்துக்கொண்டு, "உனக்கு வாழ்வு இனி யேது?" என்று சொல்லிக் காலாலுதைத்துக் கிரீடத்தை யுடைத்தனன்.

பலராமனது சீற்றம்.

இங்ஙனம், துரியனைத் துன்புறுத்தியது கண்ட பலராமன், மனம் பொறாமல் கையில் தமது உலக்கை யாயுதத்தை யேந்திக்கொண்டு கோபத்துடன் நின்று, வீமனையும் மற்றவரையும் பார்த்து, "இந்த நரேசனை உடல் நடுங்கிக் கீழே விழும்படியாகத் தொடையில் அடித்தபோது, எனது ஆருயிர் போனதுபோ லெண்ணினேன்; உலகில் வீரர்கள் கதை கொண்டு பொருவாராயின், இடைக்கு மேலே அடிப்பது மாபு; இங்ஙனம் தொடையி லடித்து வீழ்த்தினுரைக் கண்டிலேன்; கேட்டுமிலேன்; இன்றே நான், இவ்வக்கிரமத்தை யென்னெதிர் செய்த இந்த வீமனை யுயிரிழந்து ஒழியும்படியாக என் உலக்கையால் மோதி யிடிக்கிறேன்" என்று சொல்லி வெகுண்டு உலக்கையைச் சுழற்றிக்கொண்டு ஓடி வந்தான். கண்ணன், கண்டு கண்கலங்கித் தன் அண்ணனுக்கு எதிர்சென்று விலக்கிச் சமாதானம்செய்து, "அண்ணா! முன்னும் பின்னும் தெரிந்திருந்தால் நீங்கள் கோபித்திட மாட்டீர்கள்; துரியனைத் தொடையடித்திடல் வீமன் கூறிய சபதமாகும்; அவை யறியத் திரௌபதித் தேவியைத்

தன் தொடையில் உட்காரச் சொன்ன இக்கொடியோனு டைய தொடையைக் கீறலும், அக்கீறல் வழியே வரும் ரத் தத்தால் தலைசிவி விரித்த கூந்தலை முடித்துக்கொள்ளலும், வீமனும் திரௌபதியும் அன்று அவையோ ரறியக் குறித்த சபதங்கள்; அவைகள் முடிக்கப்படவேண்டாவோ? இதில் நாமேன் தொடரவேண்டும்; பொறுத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் இரு வீரரும் தீர்த்தயாத்திரை சென்றுவிட்டீர்கள்; போர்க்களத்திலிருந்து கண்ணாரக் கண்டிலீர்கள்; இந்தப் பதினெட்டுநாள் யுத்தத்தில், இன்றைப் போரில்தான், வஞ் சனை வழியிற் புகாமல், மறமும் வன்பும்கொண்டு போர்புரிந் தானே யன்றி, அப்பதினேழுநாட் போர்களிலும் வஞ்சனை தான் தலைநிமிர்ந்து நின்றது; சிவேதன் அழிவுற்றதோ; அபிமன்னனை வளைத்திருந்து அழித்ததோ; முதலிய எல் லாம் வஞ்சப் போரே நடந்தன; நாமேன் இதில் தலையிட்டுக் கொள்ளவேண்டும்'' என்று சொன்னார். பலராமன் ஒன்றும் சொல்லவும் செய்யவும் இயலாமல், அவ்விடத்தினின்றும் விலகிப் போய்விட்டான். துரியோதனன் கலங்கி வீழ்ந்திட் டான். வீமன் உக்ரத்துடன் வீரங்கொண்டு நின்றனன். வானவர் பூமழை பொழிந்தார்கள். சூரியன் மேலைக்கடலில் மூழ்கினான். அஸ்தமித்ததென்று பாண்டவர் மிகுந்த சேனை யுடன் தம் பாசறைப்போய்ச் சேர்ந்தனர்.

அசுவத்தாமன் துரியனைக் காணல்.

பாண்டவராகிய கௌரவர் போர்க்களத்திற்போ யொழி ந்து மாண்டு கிடந்திட, பாண்டவர் மாத்திரம் பாசறைக்கு மீண்டுபோவதா என்னும் கோபத்துடன், வில்லாசிரியன் மகனாகிய அசுவத்தாமன் வாள்வலிகொண்டு படுகொலை புரி வான் என்பதை யுணர்ந்ததுபோலும் பரந்தாமனாகிய கண்ண

பிரான், பாண்டவரை மாத்திரம் அழைத்துக்கொண்டு உபாயமாக அவ்விரவு ஒரு கானகத்திடையே தங்கி யிருந்தார். முன்னர்த் துரியோதனன் வாவியிடைத் தவஞ்செய்துகொண்டிருந்த காலத்தில் வந்து, பலநீதிகள் கூறியும் துரியோதனை விழிப்பூட்ட முடியாது ஒதுங்கிய அசுவத்தாமன், "பின்னரும் ஒருமுறை துரியோதனனைச் சென்று எழுப்புவோம்" என்று வந்துள்ளவனாகிய அசுவத்தாமன், அங்குள்ளவரால், "வீமனும் துரியனும் போர்புரிதற்பொருட்டுச் சமந்த பஞ்சகம் சென்றிருக்கின்றார்கள்" என்பதுணர்ந்து, சமந்த பஞ்சகம் நாடிச் சென்று, வீமனால் துரியன் கொலையுண்டு கிடத்தலைக் கண்டு தந்தை யிறந்துபட்ட அன்றைக் காட்டிலும் அதிகமாகக் கண் கலங்கி மனம் நொந்து உடல் வெயர்த்து குற்றுயிருடன் கிடக்கும் துரியோதனனைத் தன் கரத்திலேந்தி யவனைப் பார்த்து சொல்லுகின்றான்.

"துரியோதன மன்ன! நீ நினைத்த நினைவின்படியே பெரும்போர் செய்து பாண்டவரைத் தொலைத்து உனக்கு இப்புவியாட்சியைக் கொடுத்தற்கு அநுகுணமாக, எனக்குத் தலைநாளிற் சேனாதிபத்யம் கொடாம விருந்துவிட்டாய்; இது, அம்மாயவன் செய்த மாயா காரியத்தினால் நேர்ந்து விட்டது; கடந்ததைப் பேசிப் பயனென்ன? நல்லவர்கள் கூறிய அமுத மொழியைச் செவிக்கொள்ளாமல், அல்லவர்கள் பேசிய ஆரவாரங்களில் மயங்கி நன்று, தீது அறியாமல் இந்தப் பிரமாதத்தை வருவித்துக் கொண்டுவிட்டாய்; எனது பிதாவினைக்காட்டிலும் மூதறிவாளர்களாகிய பீஷ்மர் விதுரர் என்னும் பெரியோர்களை நிந்தித்துப் பாவம் விளைத்துக் கொண்டாய்; எல்லாம் முடிந்துவிட்டது; வினையின் பயனிதுவாகும்; என்ன செய்யலாம்? என்றாலும், உன் மனவலியால்

உயிர்போகாது வைத்திரு. இடி இடித்தமையாற் கலங்கி வீழும் கொடு முடிகளைப்போலப் பீமன் முதலியோர்களுடைய முடித்தலைகள் பூமியிலே உருண்டு வீழும்படியாக என் வாளாயுதங்கொண்டு வீசி உன் மனம் சாந்தியடைந்து, இந்த ஏழு புவிகளையும் நீயே பெற்றிடும்படியாக விடிவதற்குள் செய்து வருகின்றேன்; நீ இத்துயர் ஒழித்திடுவாய்'' என்று வீரத்துடன் துரியனிடம் சொல்லி யவனிடம் அநுமதி பெற்று அங்கிருந்தும் விலகிக் கிருபாச்சாரியர் கிருதவன்மன் என்னும் இருவருடனும் கூடிக்கொண்டு, "இந்திரன் பிரமன் பரமன் முதலியோர் எனக்கு அளித்திருக்கும் அஸ்திரங்களினுடைய — மற்றும் சஸ்திரங்களினுடைய பலங்களையெல்லாம் இன்றே காண்கின்றேன்; பாண்டவர் பூண்டே உலகில் இனி வாழ்ந்திராவண்ணம் செய்திடுகின்றேன்; நீங்கள் இருவரும், பாண்டவரது பாசறைக்கு என்னுடன் வந்து துணைபுரிந்து, எனது வீரச் செயலைக் காணுங்கள்'' என்று அவ்விருவருடனும், அன்றிரவிலே அதாவது பதினெட்டாம் நாட்போரின் இரவிலே பாண்டவரது பாசறையைப் போய்ச் சேர்ந்தார்கள்.

சல்லிய பருவம் முற்றியது.

ஸௌப்திக பருவம்.

"அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி யேத்துவாம்."

அசுவத்தாமன் முதலிய மூவரும் பாசறையில் பூதத்தாற் கலங்கி வலியழிதல்.

அசுவத்தாமன் கிருபன் கிருதவன்மன் ஆகிய மூவரும், தாம் துரியனிடமுரைத்த சூளுறையைக் காப்பாற்றற்கும், தமது வஞ்சினத்தை முடித்தற்கும், பாண்டவர்தம் பாசறையை யவ்விரவிற் சென்று சேர்ந்தார்கள். அந்தப் பாசறையின் புறத்தே நின்று அப்பாதி யிரவில் அம்மூவரும் யோசித்து நின்றபோது, ஆங்குள்ளதொரு ஆலமரத்தின் கிளையில், உறங்கி யிருந்த காகங்களை யொரு ஆந்தையானது, "தன்னைப் பகலில் துன்புறுத்திய இக்காகங்களை இவ்விரவிற்கொன்றிடுவேன்" என்று அழித்துக்கொண் டிருத்தலைக்கண்டு, "அதுவே தமக்கும் பாடமாகும்" எனக் கொண்டு, "நித்திரையி லிருக்கும் பாண்டவர் ஐவரையும் முடி தொலைப்போம்" என்றெண்ணிப் பாசறைக்குள் நுழையப்போனார்கள். அப்போது, கண்ணபிரான் முதலியவரால், அப்பாசறைக் காவற்காகச் சமைத்து வைக்கப்பட் டிருந்ததொரு பெரும்பூதம் வெளிவந்தேறி, அம்மூவரது தேர்களையும் ஆயுதங்களையும் அழித்துப் பயமுறுத்தியோடச் செய்துவிட்டது; அவர்களிலும் அசுவத்தாமனை மிகவும் வலிந்து குத்தி முரண் தோள்களும் வலனும் அழிந்து தசைகளும் நிணங்களும் ரத்தமும் சிந்தும்படியாக மலைந்து அழித்துத் தூரத்திவிட்டது. "மாயா மாதவன் ஏவலினல்வந்துள்ள திப்பெரும்பூதம்; இது எஃமை

வாட்டி விட்டதே; எனக்கனன்று அங்கு நின்று ஆலோசிப் பதற்கும் ஆற்றாகி அகன்று ஓடிப்போனார்கள்; என்றாலும், அசுவத்தாமன், மனக்கொதிப்படங்காமல், ஆலமரத்தடியில் தங்கியிருந்து யோசிக்கின்றான். "ஆஹா! என்ன செய்வேன்? உயிரழிந்து வலிகுன்றிப் படுத்திருக்கும் துரியோதனனை யுயிர் போகாமல் நிறுத்தச்செய்து, 'இவ்விர வொன்றினில், பாண்டவ ரைவரையும் முடிதொலைத்து, அவ்வைந்து சிரங் களையும் விடிவதற்குள் கொணர்ந்து காட்டிடுவேன்' என்று கூறி வந்தேனே; அவ்வார்த்தையைப் பரிபாலிக்காமல் எங் ஙனம் ஒழிந்திடுவேன்? மறுபடியும்போய் அப்பூதத்துடன் போர்செய்து அழிவதாயினும் செய்வேன்; அல்லாமல், விர தங்கெட்டுப் பயங்கொண்டு உயிர் வாழ்ந்திருக்கப் பெறேன்; எண்ணிய கருமம் முடிவதாயினும் முடியாம விருப்பதாயி னும் சரி; எனது இதய வாஸனாகிய பரசிவத்தைத் தியானித் துத் தவங்கிடப்பேன்" என்று மனத்திலோர் உறுதி யெண் ணிக் கிரமப்படியே மங்கைபாகனைத் தாரணை செய்துத் தியா னித்துக் கடுந்தவம் புரிந்து நின்றான்.

பக்தருள்ளத் தொடுங்கிப் பக்த பராதீனனாக இருக்கும் பரம கருணாநிதியாகிய பரசிவப் பெருமான், அசுவத்தாமனா கிய அந்தப் பக்தனுக்கு எதிர்வந்து காட்சிதந்து, "நீ கோரிய தென்னை?" எனக்கேட்டார். "என் துக்கம் நீங்க, என் வாக் குப் பொய்த்திடாமற் பலித்திட—நான் கூறிய வஞ்சினத்தை முடித்திடற் குரியதாகிய—எனக்கு வெற்றியே தரக்கூடிய தொரு படைக்கலத்தை யருளவேண்டும்" என்று அசுவத் தாமன் பரமனை நோக்கிக் கேட்டுக்கொண்டான். "அங்ங னமே யாக" வென்று, பார்வதீசனும் களித்து ஒரு படைக் கலத்தை யளித்து மறைந்திட்டார்.

அசுவத்தாமன் செய்த படுகோலை.

அந்தணப் பிறப்பினனாயினும், இயற்கைக்கு மாறாகக் கோபங்கொண்டு, வஞ்சினம் முடிப்பதற்கென்று வரங்கிடந்து பெற்ற ஆயுதத்தைக் கைக்கொண்டு, அவ்விருவரையும் துணையாக அழைத்துச் சென்று மீண்டும் அப்பாசறையைக் குறுகி நின்றான்; காவற்பூதம், வெகுண்டு மீண்டும் அம்மூவர் மேலும் பாயவரும்போது, அசுவத்தாமனிடமிருக்கும் ஆதிமூர்த்தியருளிய ஆயுதத்தைக் கண்டு நடுங்கிப் பயந்து, காவலும் செய்திடாமற் பறந்தோடி விட்டது. மூவரும் துணிவும் மூர்க்கமுங்கொண்டு, பாசறை யுட்சென்றனர்; அவருள் அசுவத்தாமனே தலைமை வகித்தவனும், துரியனுக்கு வாக்கருளியவனும் தந்தையைக் கொன்றவனைக் கொன்றிடற்குரிய வஞ்சம் கொண்டவனு மாதலால், உட்சென்று, யாவரும் அயர்ந்த நித்திரையி லிருக்கக் கண்டு, கோபங்கொண்ட நெஞ்ஞனுகையால், பாவம் பழி தர்மவிரோதம் ஒன்றையும் பாராது, முதன் முதலாகத் தகப்பனைக் கொன்றவனான திட்டத்துய்மனது முடித்தலையைத் துணித்திட்டான். "வில்லாசிரியன் மகன் அசுவத்தாமன், தனது தகப்பனைக் கொன்றவனைப் போர்க்களத்தில் எதிர்த்து நின்று கொல்லமாட்டாதவனாகி வீர தர்மத்துக்கு விலக்காக இரவில் நடுநிசியில் யாவரும் தூங்கும் வேளையில் யாதொரு எச்சரிக்கை யில்லாமல் பயங்கொளிகளைப்போல் தலை துணித்திட்டான்'' என்னும் செய்தி பாசறையிற் பரவுதற்குமுன்னே சிகண்டி முதலான பாஞ்சாலவீரர்கள் எழுந்து வந்தார்கள். உத்தமோஜாவும் உதாமனும் முதலான வீரர் அனைவரும் வந்து எதிர்த்து நின்று போர்புரிந்தும், அசுவத்தாமனாற் கொல்லப்பட்டுப் போயினர்; படுகொலையாளிகள் மூவரும் அவ்விரவில் பாண்டவரைத் தேடித் தலை துமிக்க வந்தவர்களாகையினால், பஞ்சவர் இருக்

குமிடத்தை நாடித் தேடிப்போய், உபபஞ்ச பாண்டவர்கள் நித்திரை செய்துகொண் டிருக்குமிடத்தைச் சேர்ந்தார்கள். பேய்போல் ரத்த வெறிகொண்ட அந்தணாதமன் அசுவத் தாமன், ஆங்குப்படுத்துத் துயின்று கொண்டிருக்கும் துரௌ பதேயர்களைப் பாண்டவ ரைவருமென்றே மதித்து, அவர் களைத் தனது கைவாளால் வீசிடத் துணிந்தான். அந்த உப பஞ்ச பாண்டவர்கள், தங்கள் மாமன் அசுவத்தாமனுற் படு கொலைப்பட்டான் என்பதைக் கனவு கண்டவர்போ லுணர்ந் தவ ராகையினால், அறுகுறையான நித்திரையுடன், அசுவத் தாமனது வரவினை யுணர்ந்து, எழுந்து போர்புரிதற்குப் படைகளைக் கையிலெடுப்பதற்குமுன், கைவாளால் வீசித் தலைகளைந்தையும் துணித்திட்டான்.

துருபதன் மைந்தர் அனைவரையும் பஞ்ச திரௌப தேயர்களையும் முனிமகன் அசுவத்தாமன் முனிந்து வாளால் முடி துணித்திட்டான் எனும் செய்தியைக் கேட்டுச் சூரிய வம்சத் தாசனான சோழன், அசுவத்தாமனுடன் போர் புரிந்து, பரமசிவன் அசுவத்தாமனுக்கு அளித்திட்ட படையி னால் மாண்டுபோனான். அவனது சேனைகளும் அப்படைக் கலத்தாலேயே மாண்டுபோனார்கள். "பின்னிய சடையோன் வழங்கிய படைமுன் பிழைத்தவர் யாவரே பிழைத்தார்?" இங்ஙனம், பெரும்போரில் அழிந்துபடாமல் மிகுந்திருந்த பாண்டவர் சேனைகளையும் பாஞ்சாலர்களையும் சோழனையும் அசுவத்தாமன் பாதியிரவிற் படுக்கையினிற் புகுந்து படுகொலை செய்திட்டு, மாண்டொழிந்த உப பாண்டவர்கள் தலைகளைந் தையும் பாண்டவ ரைவரது தலைகளெந்தென ஏந்திக்கொண்டு, குற்றுயிராக் கிடக்கும் துரியோதன மன்னற்குக் காட்டும் பொருட்டு, சமந்த பஞ்சகக் கரைக்குப் போய்ச் சேர்ந்தான்.

துரியன் அசுவத்தாமனை நிந்தித்து தவத்துக்கு அனுப்பல்.

"வந்தனேன் ஐய மாதவ னேவலான்
முந்துபூதம் முதுகிட மா முடி
சிந்த யாரையும் செற்ற கன் பாசறை
ஐந்து வீரர்தம் ஆவியுங் கொண்ட ரோ!"

"ஐய! துரியோதன மன்ன! பஞ்சவர் பாசறைக்குச் சென்று மாதவன் ஏவலால் வந்த பூதத்தையும் முதுகிடச் செய்து, மிகுந்திருந்த பாண்டவர் சேனைகளனைத்தையும் அழித்துப்பாஞ்சால வீரர்களையும் கொன்று, பாண்டவ ரைவர் களது முடித்தலைகளையும்— இதோ — கொணர்ந்திருக்கின்றேன்; உன்னிடம் சொல்லிப் போனபடி வஞ்சினமும் முடித்திட்டேன் ; என் பிதாவைக் கொன்றவனையும் கொன்று என் பழியையும் தீர்த்துக்கொண்டேன்'' என்று களிப்புடன் உரையாடிக் கூத்தாடி நின்றான். அசுவத்தாமனென்னும் அந்தணாதமன், தனக்கு முன்னர் அசுவத்தாமன் கொணர்ந்து வைத்திருக்கும் தலைகளிந்தையும் நன்கு கூர்ந்து கண்ணுற்ற துரியோதனன், திடீரெனத் திடுக்கிட்டுப், "பேதாய்! குலத்தைக் கெடுத்திட்ட மாபாவியே!! அசுவத்தாம!!! என்ன காரியம் செய்திட்டாய் ! அந்தணர்க்கு இப்படுகொலை யழகாமா ? அறந்தானுமா ? பாண்டவரைவரென்று உபபாண்டவரைவர் தலைகளையும் அரிந்திட்டாயே ! இது வெறிபிடித்த செயலாகவன்றோ முடிந்திட்டது !! குருகுலம் வளர்தற்கே யில்லாமற் கெடுத்திட்டாயே ! இவர்கள் குருகுலக் கொழுந்துகளன்றோ ? பாண்டவரைவரிடமும், அவரிலும் பாலியம் முதல் வீமனிடம் எனக்குப் பொறாமையும் கறுவுமேயன்றி, இவ்விளம்பாலர்களது கொலையால், எனக்குத் திருப்தி யுண்டா ? அதிகமும் அதிருப்தியையே செய்திட்டாயே !

அந்தணர்க் குலத்தினர் இவ்வநியாயப் படுகொலையைச் செய்யத் துணியமாட்டாரே! என்ன நினைந்து என்ன காரியத்தைச் செய்திட்டனை; என்னையும் பழிக்கு ஆளாக்கி உன்னையும் பெரும்பழிக்குப் பாத்திரனாக்கிக்கொண்டனையே! இத்தீவினை தீர்தற்குப் பரிகாரமே கிடையாதே! என்ன செய்யலாம்? இனி இங்கு நில்லாது சென்று, இப்பாவம் நீங்கிடப் பெருந்தவஞ் செய்வாய்! போ!! என் எதிர் நில்லாதே!!! என்று மனங் கசிந்து கூறினன். என்ன செய்வான் அசுவத்தாமன்! நாணித் தலைகுனிந்து, நாட்டமும் அங்குக் காட்டாமல், "ஒன்றினை நினைத்து ஒன்றினைச் செய்திட்டோமே" என வருந்திக் கிருபனையும் கிருதவன்மனையும் அழைத்துக் கொண்டு, அவ்விடம்விட்டு நீங்கிப்போனன்.

துரியன் தந்தையிடம் சஞ்சயனை யனுப்பித் துறக்கமெய்தல்.

அம்மூவரும் போனபின், மன்னர் மன்னன் துரியோதனராஜன், சஞ்சயனை யழைத்து, "வேதியரே! இனி நீவிர் விரைந்து அஸ்தினபுரம் சென்று, எந்தையும் தாயும் துயருறாதபடியாகச் சமாதானமான வார்த்தைகள் சொல்லித் தேற்றித் தம்பி மைந்தர்களாகிய பாண்டவர்க்கே பாரனைத்தும் முடி சூட்டி யொப்பித்து, அவரொடுங் கலந்து வாழ்ந்து வாழ்நாளைக் கழித்திடும்படியாக நான் கேட்டுக்கொண்டேனென்று, என் தந்தைக்குச் சொல்லிடும்; உம்மைத் தவிர அவரைச் சமாதானப்படுத்தும் உரையுடையாரும் உரிமையுடையாரும் இல்லை" என்று கூறி, யம்முனிவனை யஸ்தினபுரிக்கு அனுப்பிவிட்டுக் கூட்டினின்றும் ஆன்மாவைப் பிரித்துக்கொண்டு சூக்ஷ்ம சரீரத்துடன் பொன்னுலகம் போய்ச் சேர்ந்தான். முனிவன் ஸஞ்சயனும் மன்னர் மன்னன் மாண்டொழிந்ததைக் கண்ணுற்கண்டு கலங்கிக் கண்ணீர் சொரிந்து, கலக்கத்துடன் விரைந்து நகரம்போய்ச் சேர்ந்து,

திருதராட்டிரனிடமும் காந்தாரியிடமும் புத்திரர் நூற்றுவரது இழவோலையைப் படித்துத் துரியன் சொன்ன வார்த்தைகளையும் கூறினான். குருட்டு மன்னன், உண்மையிற் கண்ணிழந்தமை நினைந்து மிகக் கதறினான். காந்தாரி, தன் மக்கள் சேனாபிந்து முதல் ஐவரும் போரிடை யழிந்த நாள் முதலாக, ஒவ்வொரு நாளும் தன் புத்திரர்களது அழிவையே கேட்டுத் துக்கித்துக் கதறினவளாகையால், "இன்று முடிவாகத் துரியனும் மாண்டான்" என்றதைக் கேட்டுப் பூமியில் வீழ்ந்து கதறினாள். சஞ்சயன் இருவர்க்கும் தக்க சமாதானம் கூறினான்.

அசுவத்தாமன்முதல் மூவரும் வியாஸரைக் கண்டு தவத்திற்கேகல்.

அசுவத்தாமன் கிருபன் கிருதவன்மன், மூவரும் துரியோதனனிடம் விடைபெற்றுக்கொண்டு, நடந்துபோய் வியாஸமுனிவ ராச்ரமத்துக்குட் சென்று, அவரை வணங்கிப் பதினெட்டுநாட் பாரதப்போரின் விவரத்தையும் பார்த்திவன் துரியன் மரணத்தையும் பாண்டவர் பாசறைச் செய்தியையும், அம்முனிவரிடம் சொன்னார்கள். வியாஸ முனிவர் விதியின் காரியத்தை நன்கு உணர்ந்தவராயினும், அசுவத்தாமன் செய்துள்ள படுகொலையைக் கேட்டு, மனமுருகியவனை பொருவாறு உற்றுநோக்கிச் சமாதானமாகி, அசுவத்தாமனுக்கும் கிருபாசாரியனுக்கும் தவஞ்செயற் கிடமமைத்துக் கொடுத்துக் கிருதவன்மனுக்கு விடைகொடுத்தவனையவனது நகருக்கு ஏகும்படி யனுப்பினார்.

பாண்டவரும் பாசறைச் செயலும்.

பதினெட்டாம் நாளிரவின் செய்தி யிப்படியாகச், சூரியன் மறுநாளைத் தோற்றிக்கொண்டு கீழ்த்திசையை யலங்

கரித்து வந்துகொண்டிருந்தான். இனிப் பாண்டவர் ஐவரும் கண்ணபிரானும் புரிந்த செயலைச் சொல்லுவோம். ஐந்து பாண்டவ வீரர்களும் கண்ணபிரானுடன் ஆரணியம் புகுந்த பிறகு அங்கு இரவெல்லாம் இருந்து தீர்ந்து, அருணோதயத்துக்கெல்லாம் பாசறைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது, திரௌபதியானவள், தனது புத்திரர்கள் ஐவர்களாகிய உபபாண்டவர்களுடைய தலைகளைக் காணாது குறையுடல்களைத் தழுவி யழுதுக்கொண்டிருந்தாள். அச்செயலைக் கண்ணபிரான் முதலறுவரும் பார்த்துக் கலங்கி வருந்தினார்கள். தர்மனுநியர் வருத்தத்துடன், "இஃது எவ்வண்ணம் நடந்தது? பகைவர் யாவரும் ஒழிந்தனரே; இதனைச் செய்தவர் யார்? சேனைகளையும் உறவினர்களையும் புத்திரர்களையும் இங்குப் பாசறையில் தனியே விட்டு, எங்கள் ஐவரை மாத்திரம் நீர் வனத்துக் கழைத்தேகி யங்ஙன் இரவெல்லாம் தங்கியிருப்பானேன்?" என்று கேட்கக் கண்ணபிரான் சொல்லுகின்றார்:—"இஃது அசுவத்தாமன் செய்த படுகொலை; நமது சேனை வீரரில் ஒருவர் பாக்கியில்லாமல் யாவரையும் முடிதுணித்து, இரவில் யாவரும் தூங்கும்போது இப்படுகொலையைச் செய்திருக்கின்றான்" என்று கண்ணபிரான் சொல்லக் கேட்டலோடும், விஜயனும் வீமனும் வெகுண்டு, வில்லையும் கதையையும் கையிலேந்திக்கொண்டு நின்று, "இன்றைக்குள் அவ்வந்தணனுடைய ஆவியை யுண்டலது தவிரோம்" என்று வீரம் பேசிப் படபடத்து நின்றனர்.

கண்ணபிரான், அவ்விருவரையும் தடுத்துச் சொல்லுகின்றார்:— "நாம் ஒரு பூதத்தைப் பாசறையைக் காத்துப் பரிபாலிக்கும்படியாகக் காவல் வைத்துப் போயிருந்தோம் அன்றோ? போர்க்களத்தில் சமந்த பஞ்சகக் கரையில் வீமனது கதையினால் அடியுண்டு குற்றுயிராக் கிடந்த துரியோ

தனைக் கண்டு கலங்கிய அசுவத்தாமன், மன்னன் மனங் களித்திடுமாறு சூளுரைகள் கூறிவந்தான்:—'மன்னர் மன்ன! துரியோதன!! நீ யோசிக்கவேண்டாம்; உன் மனோவலி யால், உன் உயிரை யித்தேகத்தினின்றும் போகவிடாமற் காத்துக்கொள்; நான் சென்று, இன்று விடிவதற்குள், பாண்டவர் பாசறைக்குச் சென்று, பஞ்ச பாண்டவர்கள் ஐவர் தலைகளையும் கொய்து கொண்டுவந்து, தாணியெல்லாம் உன் குடைக்கீழ் ஆக்குகின்றேன்; உன் மனங்களிக்கச் செய் கின்றேன்' என்று கூறிவிட்டு, வெறியுடன் விரைந்து வந்து நமது பாசறைக்குள் நுழைந்தான்; அவனையும் அவனுடன் வந்த கிருபன் கிருதவன்மன் இருவரையும் நமது காவற்பூதம் வெருட்டி யடித்திட்டது; பிறகு அசுவத்தாமன், பரமசிவ னைக் குறித்துக் கடுந்தவம் செய்து, அவரால், உங்களை யெல் லாம் கொன்றொழிப்பதற்கென்று ஒரு படைக்கலம் பெற்று வந்து, பூதத்தைத் துரத்திவிட்டு, முதலில் திட்டத்துய்மனைத் தூங்கும்போது முடித்தலையை வாளால் வீசிக்கொன்று, பிறகு சிகண்டி உத்தமோஜா உதாமன் முதலிய பாஞ்சால ரைப் போரிற் கொன்று, பாண்டவர்களாகிய உங்கள் ஐவர் தலைகளென்று, நித்திரையிற் சிறிது விழிப்புடனிருந்த உப பாண்டவர்களாகிய உங்கள் ஐந்து புத்திரர்களுடைய தலை களையும் அந்தப் பாண்டவியம் என்னும் படைக்கலத்தால் வீசிக்கொய்து, ஈதறிந்து போருக்குவந்த சோழ மன்னனை யும் போரில் வென்றுகொன்று, அந்த ஐந்து தலைகளுடன் போய்விட்டான். உங்கள் ஐவரையும் காப்பதாக நான் உங் கட்கு வாக்குக் கொடுத்திருந்தபடியால், அது பிறழாவண் ணம், உங்களை மாத்திரம் வனத்துக்கு அழைத்துச் சென்று தப்புவித்தேன்; இவன் அருளிய அப்படைக்கலத்துக்குமுன் எவாது பலமும் நிற்கமாட்டா தென்பதை நான் அறிவேன்;

என்ன செய்யலாம்? விதிவலிது; தடுக்க முடியாதது; நடந்தேறிவிட்டது; நாம் இனி முனிந்து பயனுவதில்லை; அசுவத்தாமன் கொண்டுபோன தலைகளைந்தையும் பார்த்த துரியோதனன், மிகவும் இரங்கி அசுவத்தாமனைக் கோபித்து, "குருகுலக் கொழுந்துகளின் முடிகளைக் கிள்ளிவிட்டாயே, பாபி! பாதகஞ் செய்கை பார்ப்பன மக்களுக்கு ஏதம் ஏதம்!!" என்று வைது அவ்வந்தணனை யிப்பழி நீங்கச், சென்று தவஞ் செய்திடுமாறு ஏவியுயிர் துறந்துபோனான். தாமனும் நாணித்தலை குனிந்து திரும்பி வியாஸர் அருள் பெற்றுத் தவஞ் செய்துகொண் டிருக்கிறான்; இனி நாம் செய்யவேண்டியது பிதிர்க்கடமைகளும் உரிமைகளுமே யாம்; எங்ஙனமிருப்பினும், வெற்றியும் அரசுரிமையும் உங்களதே யன்றோ? போரில் இறந்து பட்டாரைக் குறித்துச் சூளுரையும் வீரச் சபதங்களு மினியேன்" என்று கூறித், திரௌபதியையும் "உன் கணவர் உயிருடன் வாழ்ந்திருக்க உன் மக்கள் முடித்தலை போகவேண்டியதாயத்"தென்று சமாதானப் படுத்தினர்.

பாண்டவர் பிரேத கர்மங்கள் செய்து திருதராட்டிரனை வணங்கி முடிசூடி அரசாளல்.

பிறகு பாண்டவர்கள், கண்ணபிரான் சொற்படியே, உலூகமாமுனிவரைப் புரோஹிதராகக்கொண்டு, இறந்துபோன கர்ணன் முதலான உறவினர்கட்கும் மற்றுமுள்ள துணைவர்கட்கும் விதிப்படியே பிரேதகர்மங்களும் பிதிர்க் கர்மங்களும் செய்து முடித்து, கழிவினைகளையும் நியமப்படியே நிறைவேற்றி யஸ்தினபுரத்துக்குச் சென்று, தங்கள் வரவினைத் திருதராட்டிரனுக்குத் தெரிவித்தார்கள். அந்தக் கிழட்டுக் குருட்டு மன்னனும், முன்னர்ச் சஞ்சயனால் துரியோதனன் சொல்லியனுப்பிய வார்த்தைகள்மூலம் சமாதானம் அடைந்திருத்தல் வேண்டுமானாலும், இயற்கைக் குணம் மாறாமல், மனத்தில் குரோதமும் வெளியில் அன்பும் காட்டி உபசரித்தேற்றான்; இதனைக் குறிப்பினுணர்ந்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, முன்னரே, வீமனைப்போன்றதொரு இருப்புச் சிலையைச் செய்து வைத்திருந்தார். வணங்கிய பாண்டவ

ரைவரையும் தனித்தனியே, பெரிய மன்னன் தழுவிக்கொள்ளும்போது, வீமனுக்குப் பிரதியாக அந்த இருப்புச் சிலையை மன்னன் சமீபத்தில் நிறுத்தினார்கள்; கிழவன் அதனை யழுந்தத் தழுவினான்; அஃது உடனே, நொருங்கிப் போயது மன்னனது உள்ளக்கிடக்கை வெளியாயிற்று; என்றாலும், தருமன், அதனை வெளிக் காட்டிக்கொடுக்காமல், அவ்விரு பெரியோரது துணைகொண்டே, மிகவும் அதிகமான மங்கள முழக்கங்களுடனும் வேதகோஷங்களுடனும் பல்லாண்டொலிகளுடனும், குருகுலப் பெருமுடியைச் சூடிக்கொண்டு, பாணப்படுக்கையிலிருக்கும் வீடுமனை வணங்கிப் பல நீதிமார்க்கங்களையும் தர்ம சரித்திரங்களையும் உரைக்கக்கேட்டு, விதுரனை வணங்கி யவரது ஆசீர்வாதங்கள் பெற்று, அவர்க்கும் காந்தாரி திருதராட்டிரர்க்கும் வானப்ரத்தத்துக்குரிய கடமைகள் அமைத்துக் கொடுத்து விதிப்படியே செங்கோல் ஏந்தி அரசுரிமையை யேற்றுக்கொண்டார்.

பலராமன். கண்ணபிரான் சாத்தகி மூவரும் தர்மராஜனுக்கு முடிசூட்டிச் சிறப்புச்செய்து, இனிது வாழ்த்திப் பரிசுகள்பெற்றுத் தமது நகரமாகிய துவாரகைக்குப் புறப்பட்டுப் போனார்கள். நான்கு தர்மங்கள்போல் நின்று நான்கு தம்பியர்களும் துணைபுரிந்து கொண்டிருக்க, ராஜாதிராஜனாகிய தர்மராஜன், குருகுலப் பெருமன்னனாக இருந்து பூவுலகை நன்கு பரிபாலித்துக்கொண்டிருந்தார்.

ஸௌப்திக பருவம் முற்றியது

வா ழி

ஏழ்பெ ருங்கடல் மாநிலம் எங்குநல் லறமே
சூழ்க வண்டமிழ் ஓங்குக தேங்குக சுருதி
வீழ்க பைம்புயல் விளங்குக வளங்கெழு மனுநூல்
வாழ்க அன்புடை அடியவர் மன்னுமா தவமே."

வில்லிபாரத வசனம்

முற்றியது.

"ஆனந்த விகடன்"

64 பக்கங்கொண்ட மாதப்பத்திரிகை

அந்தந்தக் காலத்திற் கொத்தவாறு அறிவைப் புகட்டக்கூடிய ராஜீயம், சமூகம், மதம் முதலிய விஷயங்களைப்பற்றிய அரிய கட்டுரைகள் பெரிய மேதாவிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றன. இன்னும் இல்லறத்திலீடுபட்டோர்க்கு இன்பந் தரக்கூடிய பல மர்ம விஷயங்களும், நாவலும், விகடத் துணுக்குகளும் சித்திரப் படங்களுடன் ஏராளமாக உண்டு. இப்பத்திரிகையானது ஜனங்களின் நன்மையைக் கருதியே பிரசுரிக்கப்படுகிறதென்பது இதற்கேற்பட்டுள்ள சொற்ப சந்தாவிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். நீங்கள் இதுவரை சந்தாதாரராகாவிட்டால் உடனே முன்பணமனுப்பிச் சேருங்கள். மாதிரிகாபி இனாம்.

வருஷ சந்தா—உள்நாடு ரூ. 1. வெளி நாடு ரூ. 1-4-0

"ஆனந்த விகடன்" ஆபீஸ்,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" டேலிபோன் 3311.